வந்தாரங்குடி

கண்மணி குணசேகரன்

வந்தாரங்குடி

கண்மணி குணசேகரன்

வந்தாரங்குடி

(நாவல்)

கண்மணி குணசேகரன்

Copyrights

வந்தாரங்குடி

நாவல்

கண்மணி குணசேகரன்

Vandhaarankudi

Novel

Kanmani Gunasekaran

© Kanmani Gunasekaran

All rights reserved.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the author(s)'s prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may b\e reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of author(s) of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the author(s) of this book.

நன்றி

அண்ணாச்சி

தமிழினி வசந்தகுமார்

மருத்துவர்

இரா. செந்தில்

ஆசிரியர்

இ. தங் கமணி

மின்னூலாக்கம்

ஸ்ரீநிவாச கோபாலன்

கண்மணி குணசேகரன்

அ. குணசேகர் (19.05.1971) எனும் இயற்பெயர் கொண்ட கண்மணி குணசேகரன், கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் மணக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்தவர். தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விருத்தாசலம் பணிமனையில் தொழிலாளியாக வேலை செய்து வருகிறார். முந்திரியின் புழுதி பறக்கும் தமது செம்மண் மொழியில் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக கதை, கவிதை, புதினம், அகராதி சேகரம் என தொடர்ந்து எழுதி வருகிறார். இவரது ‘ அஞ்சலை’ நாவல் கேரளா கள்ளிக்கோட்டை பல்கலைகழகத்திலும் ‘ நெடுஞ்சாலை’ நாவல் தற்போது வேலூர் திருவள்ளுவர் பல்கலைகழகத்திலும் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. இதுவரை சுந்தர ராமசாமி விருது, நடுநாட்டுச் சொல்லகராதிக்காக தமிழ்வளர்ச்சித் துறை விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் புனைவு விருது, கலைஞர் பொற்கிழி விருது ஆகியன பெற்றுள்ளார்.

மணக்கொல்லையில் வசித்து வருகிறார்.

தொடர்புக்கு: kanmanigunasekaran71@gmail.com

உள்ளே...

ஒன்று

1

2

3

4

5

6

7

8

9

10

11

இரண்டு

12

13

14

15

16

17

18

19

20

21

22

23

24

மூன்று

25

26

27

28

29

30

31

32

33

34

35

36

37

நான்கு

38

39

40

41

42

43

44

45

ஐந்து

46

47

48

49

50

51

52

53

54

55

56

57

58

59

60

ஆறு

61

62

63

64

65

66

67

68

69

70

71

72
73
74
75
76
78
79
80
ஏழு
81
82
83
84
85
எட்டு
86
87
88
89
90
91
92
93
94
95
96
97

98

99

100

ஒன்பது

101

102

103

104

105

106

107

ஒன்று

1

இருள் கவிந்த நிலம். ஊமைக்காற்றுக்கும் வழியின்றிச் சலனமற்று நின்றிருந்தன மரம் செடிகொடிகள். கனத்த வெண்திரையாய் இறங்கும் பனி. இலைகளில் கோர்த்து நுனிகளில் குவிந்து சன்னமாய் சொட்டும் துளிகள். சிற்றலைகளும் இல்லாது உறைந்த அமைதியில் குளம் குட்டைகள்... உயிரினங்கள் எல்லாம் உறங்கிக் கிடக்கும் பேரமைதி.

கிழக்கு வெளுத்து நிலம் தெளிந்துகொண்டிருந்தது. ஈன்ற பூங்குட்டியின் மேல் படிந்து கிடக்கும் நச்சுப்படிவைப்போல் மீத இருள். நக்கிச் சுத்தம் செய்ய விரையும் ஒரு குட்டித்தா ஆட்டின் அவசரத்தோடு கீழ்வானம் சிவந்து கொண்டிருந்த நேரம்... விழித்துக் கொண்டுவிட்டன பறவைகள். சேவல்களின் கூவல்கள், காக்கைகளின் கரைதல்கள், குருவிகளின் சிலும்பல்கள், கொட்டாப் புளிகளின் கெக்களிப்புகள்... இணைகளோடும் குஞ்சுகளோடும் கூடுகள்தோறும் விடியல் ஒலிகள்.

இழையான குளுங்காற்றில் சிறுகிளையின் இலையசைவில், உருளும் புல்நுனியின் பொன்னொளியில், விரியத் தொடங்கும் பூமொட்டுகளில், வளையமிடும் ரீங்காரங்களில், துள்ளும் நீர்ச் சலனங்களில்... மெல்ல சோம்பல் முறியும் இளங்காலை. பனிப்படலம் கரைந்து மறைந்தது. துலாம்பரமாய் பரவத் தொடங்கியது வெளிச்சம். ஏகத்துக்குமாய் பச்சைப் பசேல் என்று விரிந்த கம்மங்கொல்லைகள். எங்குமாய்த் தேற விளைந்த மணிக்கதிர்கள்.

தாய்மடிபோல இம்மண். உயிர்களை ஊட்டி வளர்க்கும் பரிவு.

பறவைகளின் விடியல் கீதங்கள் முடிந்து இனி இரை தேடும் படலம். குருவிகள் கூடுகளை விட்டு குஞ்சுகளோடு கம்மங்கதிர்களை நோக்கி இறங்கத் தொடங்கின.

“ந்தோ... ந்தோ...” திடுமென எழுந்தது குரலொலி. கூடவே விடாது அதிரும் தகரச்சத்தம். திடுக்கிட்ட குருவிகள் பறாச்சென்று பறந்தோடவும் கனம் விடுபட்ட அதிர்வில் தலையாட்டிக் கொண்டிருந்தன கம்மங்கதிர்கள். ஊடே ஆவேசமாய்க் குருவிகளை விரட்டியபடி பூமாதேவி ஓடிக்கொண்டிருந்தாள். ஓடுகிற வேகத்தில் அவள்மீது மோதிய தண்டுகளின்

உச்சியிலிருந்த கதிர்கள் விலுக்கென்று அதிரவும், இன்னும் உதிராத பூவின் பண்டாரத் துகள்கள் மேலே சிதறின. குறுக்கிட்ட ஒன்றிரண்டு தண்டுகள் ஒடிந்தன.

ஆனாலும் தெற்கே நெடுங்தொலைவு போவதுபோல் போக்குக் காட்டிப் பறந்த குருவிகள் படாரென்று திசையை மாற்றி பக்கத்திலிருந்த மாமரத்திலேயே சரசரவென கோடை மழையின் ஆலங்காய் அரசங்காய் போல் இறங்கின. அவளது விரட்டலும் சத்தமும் குருவிகளிடம் எடுபடாமல் போய்விட்ட ஆத்திரம் தாக்க அப்படியே விக்கித்துப்போய் நின்றுவிட்டாள்.

தலைக்கு மேலே நிமிர்ந்திருக்கும் கதிர்களைக் கடந்து மாமரத்தை நோக்கி ஆவேசமாய் எறியப்பட்ட கல்லைப்போல் பறக்கிறது அவளின் பார்வை. பச்சை மட்டைக் குடிலுக்குள் குந்திய படி எட்டி எட்டிப் பார்க்கும் வயதுக்கு வந்த பிள்ளைகளைப் போல் மாமர இலைகளுக்குப் பின்னால் குருவிகள் அவளைப் பொசுக் பொசுக்கென்று பார்த்துக்கொண்டு குந்தியிருந்தன.

ஓடிவந்த அவசரமும் ஆவேசமும் அடங்கமாட்டாமல் இன்னும் மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது அவளுக்கு. சில்லிப்பான அதிகாலையிலும் வேர்வைக் கசகசப்பு. முகம் கைகால்களி லெல்லாம் வார்வாராய் கம்மஞ்சோலைகள் கிழித்து கோடு கோடாய் எரிந்தன. போட்டிருந்த ஆம்பிளைச் சட்டையின் காலர் வறும்புகள், கழுத்தில் உரசும்போது திராவகத்தைப் பூசியதாய்ப் பற்றியது. கத்திக் கத்தி சத்தம் போட்டதில் காய்ந்துபோய்க் கட்டை போட்டது மாதிரி தொண்டை அடைத்தது. காறி எச்சிலைக் கொண்டுவந்து தொண்டையை ஈரப்படுத்திக் கொண்டாள். கிழக்கே கண்ணுக்கு எட்டின தொலைவிற்குமான கம்மங்கொல்லை களுக்கப்பால் செக்கச்செவேல் எனத் திரண்டு உயரும் காலைச் சூரியனை, வளையமாதேவி ரோட்டில் போன லாரி ஒன்று, ஒரு கணம் மறைத்து விடுவித்தது. மேற்கே ஊருக்குள் போகும் ஒழுங்கை யைத் தாண்டி தெற்குவெள்ளூரின் பரந்த கம்மங் கொல்லைகள் கூட அந்த அதிகாலையில் அழகாய் அமைதியாய்த்தான் கிடந்தன.

எல்லாக் கொல்லைகளிலும் முறுக்கித் தண்ணீரில் நனைத்த விறைத்த சாட்டைகளைப் போன்று விளைந்த கதிர்கள்தான். ஆனாலும் இவளைப்போன்ற அதட்டலும் அதாகுதமும் எந்தக் கொல்லையிலும் இல்லை. குருவிகள் எல்லாமும்கூடி கம்மம் பயிர்களோடு தன் கொல்லையை மட்டும் கொத்தித் தூக்கிக்கொண்டு போய்விடுமோ என்கிற பயத்தில் இப்படி அதிகாலையிலே வந்து இந்தக் குருவிகளிடம் அலமலண்டு நிற்கும் தன்னைப் பார்க்க, பூமாவுக்கே வெறுப்பாக இருந்தது.

இவளும் கூட மற்றவர்களைப் போல சூரியனைத் துணைக்கு அழைத்துக் கொண்டோ அல்லது கண்ணுக்குட்டிக்கு பில்லு பாக்க வந்த மாதிரி ஒப்புக்கோ வந்துவிட்டுப் போகலாம்தான். ஆனால் கிணற்றுமேட்டு மாமரமும் ஒட்டிய நாலைந்து தென்னைகளும், மள்ளாட்டைக் கொல்லைக்கு அங்காண்ட மறிச்சியில் நிற்கும் வேம்பு, நுணா, பொறிச்சி மரங்களும் அவைகளில் வந்தமரும் குருவிகளும் வைப்பது தான், அவளுக்கு இந்த அதிகாலை வில்லங்க வேலை. மற்றவர்கள் கொல்லைகளுக்கென்றால் குருவிகள் மெனக்கிட்டுதான் போக வேண்டும். மீறிப் போனாலும் ஆளிருந்து விரட்டிவிட்டால் வீச்சென்று வந்து குந்த அதிக மரங்கள் கிடையாது. தப்பித்தோம் பிழைத்தோம் என நெடுந்தொலைவு மரங்களைத் தேடிப்போவதற்குள் தின்ற மணிகள் செரித்துவிடும். வெட்டி அலைச்சலுக்கு எவையும் விரும்புவதில்லை. ஏதோ எட்டாக் கையில் ஒன்றிரண்டு மரங்கள் தென்பட்டாலும் இவள் கொல்லையைப் போன்று அதிக வசதிகள் வராது. ஆச்சலாய்க் குந்தவும், விரட்டினால் மறிச்சி மரங்களில் போய் ஒளியவும், அங்காண்ட அய்யனார் கோயில் ஆவாரங் குட்டையும் ரொம்ப வசதிதான்.

மாமரக் கிளைகளில் லேசாய் சலசலப்பு எழவும் திரும்பினாள். இவள் அசந்து நின்ற இடைவெளியில் பறந்தெழுந்த ஒன்றிரண்டு குருவிகள் மாமரத்திலிருந்து தென்னைகளுக்கும், மறிச்சி அடம்புகளுக்குமாய் நடைபழகுவதுபோல் பறந்து காட்டின. பூமா ஆத்திரத்தில் உடல் தெம்பையெல்லாம் திரட்டி எகிறி மரத்து உச்சிக்கே போகிற மாதிரி அதட்டினாள். குரல் மட்டுமல்லாது தகரத்தில் விழுந்த அடியும் இதுவரைக்கும் இல்லாதபடி வலுத்ததுதான். துள்ளிக் குதித்ததில் வலது பாதத்துக்கும் கீழே ஒரு ஓட்டாஞ் சில்லியில் குத்தல். அதேபோன்று வாய் கிழியக் கத்தியதில் மிளகாய்ச் சாந்தை விழுங்கியது மாதிரி எரிச்சல். ஏதோ அரண்டு ஓடாவிட்டாலும், போனால் போகிறது என்கிற மாதிரி குருவிகள் நுணாக்களை நோக்கிப் பறக்க ஆரம்பித்தன.

குருவிகளற்ற நிம்மதியில் கொட்டகைப் பக்கம் போனாள். கிணற்றில் ஏதோ அரவம் கேட்கவும், ஒற்றைச் செம்பருத்தியோரம் போய் வறும்பில் நின்று பார்த்தாள். செங்கல்கொண்டு கட்டப்பட்ட கிணற்றில் ஒரு ஆள் மட்டம் அளவிற்குத் தண்ணீர் தெளிவாய்க் கிடந்தது. மிதந்த தென்னைமட்டை ஒன்றின்மேல் நீள சாரைப் பாம்பு ஒன்று ஏறவும் வழுக்கவுமாய் இருந்தது. நீரில் சிற்றலை வட்டங்கள் விரிந்து மெலிதாய் அதிர்ந்து கொண்டிருந்தன. குனிந்து மண்கட்டி ஒன்றை எடுத்து எறிந்தாள். வெடுக்கெனத் தண்ணீரில் பாய்ந்து ஒடிந்துவிடுகிற மாதிரியான நெளிவுகளோடு கிணற்றின் அடிச்

சூறாவரியில் போய் ஒளிந்துகொண்டது.

கிணறு தோண்டிய மண்ணைப் பக்கத்திலேயே கொட்டி நிரவி மேடாக்கிக் கட்டப்பட்ட பழைய கொட்டகை. முன்னால் வாசல், களம். இஞ்சின், பம்புசெட் பள்ளத்தைத் தாண்டி கொட்டகை முன் வந்து நின்று ஒழுங்கையில் யாராவது வருகிறார்களா என வடக்கே ஊர்ப் பக்கம் பார்த்தாள். ஒரு ஈ காக்கைக் கூடத் தென்பட வில்லை. ஊருக்குப் பின்னால் தொலைவில் நெய்வேலி முதல் அனல் மின் நிலையப் புகைக்கோபுரங்களின் நுனிகள் மட்டும் சற்று மங்கலாய்த் தெரிந்தன. கிளம்பும் புகை பூதாகரமாய் உருவெடுத்து தாண்டவன்குப்பம், மந்தாரக்குப்பம் கடந்து அவள் ஊரான வேப்பங்குறிச்சியையே வளைத்து விழுங்கிவிட வருவது போல் தெரிந்தது. உண்மையில் அதற்கான வேலைகளும் ஏற்கெனவே தொடங்கிவிட்டன என்பது தெரிந்த கதைதான்.

நாலைந்து வருடங்களுக்கு முன்பே இரண்டாம் சுரங்கம் வெட்டுவதற்கு வேப்பங்குறிச்சியை எடுத்தே ஆகவேண்டும் என அதிரடியாய் நிலம் அளந்தார்கள், கொடி நட்டார்கள், குறி போட்டார்கள். எடுப்பு நோட்டிஸ்தான் கொடுக்க வேண்டும் என்கிற நிலையில் அப்படியே அக்கடாவெனக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். நில எடுப்பு விவகாரத்தில் திடீர் திடீர் என வேலை நடப்பதும் கிடப்பில் போடுவதுமான செய்கை, மக்களின் கொந்தளிப்பை, எதிர்ப்பைப் பிசுபிசுக்க வைக்க அரசாங்கத்தால் செய்யப்படுகிற ஒரு உத்தி. முதலில் நிலத்தை எடுக்கிற மாதிரி சேதியை மெல்ல கசிய விடுவார்கள். பகீர் என மக்கள் மனதில் ஒரு பீதி கிளம்பும். பிறகு எந்தவொரு சேதியும் இல்லாமல் கிணற்றில் போட்ட கல்லாய்க் கிடக்கும். மக்கள் மனத்தில் கிளம்பிய திகில் நாளாவட்டத்தில் மறையத் தொடங்கும்போது திடுமென நிலம் அளப்பார்கள். பழையபடி கிடப்பில் போடுவார்கள். ஆரம்பத்தில் கைப்பிடி மண்ணைக் கூடத் தரமாட்டேன் என்கிற மக்கள் நாள் ஆக ஆக ‘ சரி போ...’ என்ற மனநிலைக்கு அவர் களாகவே வந்துவிடுவார்கள்.

நாளைக்கு திடுமென நிலத்தை எடுத்துவிட்டால் என்ன செய்வது? எனவே கிணறுவெட்டுவது, நிலம் வாங்குவது, வீடு கட்டுவது என மண்ணில் எந்த ஆக்கபூர்வமான முயற்சியிலும் ஈடுபடாமல் மறைமுகமாகத் தாங்களாகவே நில அளிப்புக்கு மனதளவில் தயாராகியும் விடுவார்கள். வேப்பங்குறிச்சி ம க் க ள் ‘ முக்காலே மூணுவீசம்’ பேரும் இதே மனநிலைக்குத்தான் வந்திருந்தார்கள்.

ஆனால் பூமாவின் அப்பா ராஜபாக்கியம் மட்டும் நிலத்தை

விட்டுக்கொடுப்பது என்கிற பேச்சுக்கே இடமில்லை என்கிற மாதிரிதான் போய்க்கொண்டிருந்தார். பிறந்து வளர்ந்து உழன்று உழைத்துக்கிடந்த இந்த மண்ணை விட்டுப் பிரிவது என்பது அவரால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒன்றாக உள்ளுக்குள் கருகருவெனக் கனன்று கொண்டிருந்தது.

சுரங்கத்தில் காண்ட்ராக்ட் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிற சதாசிவத்திற்கு முற்றிலும் அப்பனுக்கு எதிரான மனநிலை. கொல்லையில் வேலை கிடக்கிறது என ராசோக்கியம் புலம்பும்போது குருட்டாம்போக்கியமாய் பேசுவான். ‘ இந்த நெய்வேலிக்காரப் பயலுவோ சீக்கிரம் இந்த நெலத்த எடுத்துக்கிட்டு வுட்டான்னா பரவாயில்ல. இவுரு வேற கொல்ல கொல்லன்னு எங்களப் போட்டுக் கொல்றாரு.’

‘ நெலத்த வுட்டுட்டு குடுக்கற நாலுரூவாய கொண்டுக்கிட்டுப் போயி ஓட்டலு கடையில உண்டமசால் வாங்கித் தின்னுட்டு, கடைசியில ஈய அடிச்சி வாயில போட்டுக்கிட்டு ரோட்டோரத்துல குந்தியிருக்கலாம்...’ குமுறலோடு கொட்டுவார்.

பூமாதேவி தான் குறுக்கில் வருவாள் ‘ அதலாம் எடுக்கறப்ப பேசிக்கலாம். ஏந்திரிச்சு போயி வேலய பாருப்பா.’

அவரின் எண்ண ஓட்டத்தைப் போலவே கிடப்பில் போட்ட நில எடுப்பு நீண்டுகொண்டேயிருந்தது. மற்றவர்களைப் போல் ‘ நாளைக்கு எடுத்துவிட்டால்’ என்ன செய்வது என யோசிக்காமல் முன்னைவிடவும் உற்சாகமாய்ப் பயிர் செய்தார். நாலும் முடிந்து ஐந்தாவது வருடத்தைத் தொட்டபோதுதான் எல்லோரும் நிலம் வெட்டியாய், கரம்பாய்க் கிடப்பதை உணர ஆரம்பித்து மெல்ல மாட்டாமல் விழுங்க மாட்டாமல் திரும்பவும் ஏர் ஓட்டினார்கள். விதைத்தார்கள். ராசோக்கியத்தைப்போல் பயிர் செய்தார்கள். அய்யனார் புண்ணியத்தில் கம்பு விளைந்திருந்தாலும் யேபாரியிடம் விலைக்கு காட்டிய ஆடு உடல் இளைத்துப்போவதுபோல், அளவு அளந்த நிலத்து மகசூல், குருவி ஓட்டக்கூட கொல்லைப் பக்கம் வர எவருக்கும் ஆர்வமில்லாமல் பாராமுகமாய்க் கிடந்தது.

இப்போதெல்லாம் நில எடுப்புச் சேதி என்பது மறந்து போன ஒன்று மாதிரிப் போய்விட்டது. எப்போதாவது டீக்கடையில் குந்தியிருப்பவர்கள் ‘ தா’ எடுக்கிறார்கள் ‘ தோ’ எடுக்கிறார்கள் என காபரா கிளப்புவார்கள். கிளம்பிய சூடு குறைவதற்குள் புரளி அடங்கிப் போகும். ஆனால் ராசோக்கியத்திற்கு மட்டும் அந்தச் சேதி காதில் விழுகிறபோதெல்லாம் உள்ளுக்குள் சுருக்கென்று ஒரு ஊசி இறங்கும். இரண்டொரு நாளைக்கு

முள் கிளைவதுபோல் வலி தெறிக்கும். பிறகு மாடு, மகசூல், வண்டிவாசி என அடுத்தடுத்த இடையறா வேலையில் அது தானாகவே அவருக்கு மறந்துபோகும்.

அப்பாவைப் போலவே பூமாதேவிக்கும் இந்த மண், பயிர் பச்சை எல்லாமும் ரொம்ப பிடிக்கும். ஆடு மாடு கோழி என அவளின் பற்றுபாச இழை இறுகலானது. ராசோக்கியம் உள்ளுக்குள் சொல்லிக் கொள்வார் ‘ கொல்ல குடின்னு இந்த மண்ணுமேல இம்மாம் பாசமா இருக்கே. இதுபோயி பொட்டப் புள்ளையாப் பொறந்து போச்ச. வித்து வாங்கித் தின்னுட்டுப் போவ நிக்கிற அந்தப் பயலுக்கு பதிலு இது ஆம்பளையாப் பொறந்துருந்தா நமக்கு தோளுக்குத் தொணையா இருந்திருக்கும்....’

சூரியன் மெல்லத் தலையை உயர்த்தியிருந்தான். மேற்கே தெற்கே வெள்ளூர் கொல்லைகள் பக்கம் தகரச் சத்தங்களும் விரட்டுக்குரலும் தேய்ந்த மாதிரி காதில் விழுந்தன. சற்று நேரத்தில் கிழக்கே கெங்கைகொண்டான் வெளிகள் பக்கம்கூட சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன. ‘ க்கும். இந்த தெக்கு வெள்ளூரானுக்கும் கெங்கைகொண்டானுவுளுக்கும் இப்பனாச்சும் விடிஞ்சிருக்கு. இந்த வேப்பங்குறிச்சிப் பயலுவுளுக்கு... ஊகூம்... ஒருத்தனுக்குக்கூட விடியில. கீச்சா ராமான்னு ஈ காக்காயக்கூட இந்தப் பக்கம் காணம். ஊர்ல திண்ணையில குந்திக்கிட்டு பேசறப்ப பாரன்... ராசோக் கியத்துக்கு கம்பு பரவாயில்லடா. மகட்ட சோளம் மாதிரி ஒரு கதுர உமுட்டனா கை கொள்ளாத கம்புடான்னு ஒவுரி கொண்டு போயிப் பேசறானுவோ. பூத்த இந்த நாலு கம்மஞ்சீட்டையையும் குருவிகிட்ட வுட்டுட்டு வூட்ல குந்தியிருந்தா தொம்ப தானாவா நொம்பும்!’

பூமா கொட்டகைக்குப் பக்கத்தில் நின்று மேற்கில் தரகுக்கார சித்தப்பன் கனகராசு கொல்லையைப் பார்த்தாள். அந்தக் கொல்லைக்கும் சேர்த்து இவள் போடுகிற சத்தமே போதும் என்கிற மாதிரி சித்தி அம்புஜாட்சி இவளுடன் கிளம்பிய மகள் தங்கத்தை மறித்து விட்டாள். சின்னவள் கசப்பை இட்டுக்கொண்டு வந்திருந்தாலாவது ஒரு பேச்சுத்துணையாக இருக்கும். ‘ போயி நாலு கொடம் தண்ணி மொண்டாங்க. அங்க ஒண்ணும் ஒப்பன் வூட்டு ஏக்கர்ல கம்மங்கருது முறுக்கிக்கிட்டு நிக்கில. பவுஞ்சி பவுஞ்சியா குருவிவோ வந்து வுழறதுக்கு.’ வழக்கம்போல சித்தியின் ஏக்கரிப்புக்கு அப்பா மட்டும் இல்லையென்றால் கடித்த வாய் துடைத்தமாதிரி அம்மா பாஞ்சாலை பதிலுக்குக் கெடாசியிருப்பாள். ‘ நித்தம் மடிப்பு கொலையாத சலவச் சட்டைய போட்டுக்கிட்டு மந்தாரக்குப்பம்

பஸ்டாண்டுல போயி நிக்கச்சொல்லு. கம்மங்கருது அப்பிடியே சாட்டவாரு மாதிரி முறுக்கிட்டு நிக்கும்.’

யோசனையில் நின்ற பூமாவுக்கு திடுமென செவுளில் அறைகிற மாதிரி கிழக்கே கிட்டக்க தகரச் சத்தம் கேட்டதும் ஆச்சரியமாய்ப் போய்விட்டது. பக்கத்துக் கொல்லைக்காரன் சிகாமணியின் தகரச் சத்தமும் குரலும்தான். ‘ என்னா திடீர்னு என்னைக்குமில்லாம இன்னைக்கி...’

அவன் விரட்டலுக்குப் பயந்து குபீரென்று கிளம்பிய குருவிப் பட்டாளம், இவள் தென்னைகளை நோக்கிப் பறக்கவும், சுதாரித்து “ ந்தோ...” என்று டின்னை தட்டிக்கொண்டு ஓடினாள். வேறு யார் கொல்லையிலிருந்து வந்திருந்தால் கூட கொஞ்சம் அசந்தர்ப்ப மாய் இருந்திருப்பாள். சண்டைக்காரன் கொல்லையிலிருந்து வந்த குருவிகள். கல்லெறிந்தமாதிரி இவளின் விரட்டலில் மிரண்டு, மடங்கி வந்த திசையையே நோக்கின. தகரப் பதிலடியில் விடாது அவனும் அடித்துக் கொண்டிருந்தான். பதிலுக்குப் பதில் எதிர்க் குரல் போடும் அக்காக் குருவியைப் போல, இவளும் எதிர்ச்சத்தம் எழுப்பிக்கொண்டேயிருந்தாள்.

நேரம் ஆக ஆக, அலண்டு அங்குமிங்குமாய் அலைக்கழிந்த குருவிகள் இனி இந்தத் திசைக்கே திரும்ப மாட்டோம் என்கிற மாதிரி வீறாப்பாய் எங்கேயும் திரும்பாமல் கொள்ளாமல் தெற்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தன.

சு ள்ளென்று எரிக்கத் தொடங்கியிருந்தது காலைவெயில். எசாகையில் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்த தகரச் சத்தங்களும் இரைச்சலும் இறங்கிக் கொண்டிருந்தன. பால்தெளி அன்று அடிக்கப்படும் ஒற்றை மேளமாய் தட்டிக்கொண்டிருந்த சிகாமணி கூட நிறுத்தியிருந்தான்.

நேரம் கடந்து கொண்டிருப்பதை உணர்ந்ததும், அவளுக்குள் ஒரு அவசரம் தொற்றிக்கொண்டது. ஆட்டு மாட்டுக்கு ஏதாவது பார்த்துக்கொண்டு போய்ப் போட்டுவிட்டு, நேரா நேரத்தில் பள்ளிக்கூடம் ஓடவேண்டும். பள்ளிக்கூட விஷயத்தில் மட்டும் அவளுக்கு எந்தத் தடங்கலும் இருக்கக்கூடாது. ‘ எட்டாவது தான்டி படிக்கிற! எனுமோ எம்மே பீயே படிக்கிற மாதிரி ஒரு நாளு தவறாம இந்தப் பறப்பு பறக்கற...’ பாஞ்சாலை திட்டுவாள். எதையும் காதில் வாங்காமல் பையை எடுத்துக்கொண்டு ஓடுவாள்.

தகர டின்னையும் கழியையும் கொட்டகையில் போட்டுவிட்டு, கொடிக்கழியில் கிடந்த துண்டை எடுத்து முகத்தை கழுத்தைத்

துடைத்துக்கொண்டாள். சடைப்பின்னலை வளைத்துச் சுருட்டி அழுந்த கொண்டை போட்டுக்கொண்டு, எரவாணத்திலிருந்த அரிவாளை எடுத்தாள். பூசாரியைப் போன்று இடுப்பில் துண்டைச் சுற்றிக் கட்டி அதில் அரிவாளைச் சொருகிக்கொண்டு கொல்லையில் இறங்கினாள். கம்மந்தண்டுகளின் கணுக்களில் கிளைத்திருக்கும் பூவிடாத தாழை பூத்த பயிர்களைத் தேடித்தேடிப் பார்த்து ஒடித்துக் கொண்டிருந்தாள். கை கொள்ளாது நிறைகிறபோது வரப்பில் கொண்டுபோய் பண்ணையாய் குவித்துவைத்தாள்.

பால் கறக்கிற மாட்டுக்கு இப்படி பச்சையைக் கொண்டு போய் போட்டால்தான் பின்னும் நாலைந்து பீச்சுக்கு மடி இறங்கும். வெறுங்கையால் முழம் போட ஆசைப்பட்டால், சவசவத்த காம்பை உருவி உருவி விரல்கள்தான் நோவும்.

கதிர்களின் நுனியில் தொற்றிக்கொண்டிருந்த சூரியன், சலாபத்தாய் மேலே ஏறத்தொடங்கியதும் முன்னை விடவும் மோசமாக வியர்த்து, உடலெங்கும் உரசிய சுணை எரிய ஆரம்பித்தது. வேலையும் முன்பைவிட அரக்கப்பரக்க நடந்துகொண்டிருந்தது.

கன்னுத்தா மாட்டிற்கு தாழை பூத்த இந்தப் பயிர்கள் போதும். இனி வழிபாட்டையில் வந்து மறிக்கும் கன்றுக்குட்டிக்குப் பார்க்க வேண்டும். பயிர்களின் காலடியில் நிற்கும் கம்மம்புற்களை அரிவாளால் சீண்டிச் சீண்டி எடுத்தாள். எல்லாமும் கன்றுக் குட்டியின் பிஞ்சுக்குடலுக்குக்குத் தோதான பசபசவெனப் பச்சைப் புற்கள். இப்படிச் சிறிது மெனக்கிட்டு புற்களைப் பிடுங்கிப் போடாமல், தாழை பூத்த பயிர்களை, கம்மஞ்சோலைகளைப் போட்டுவிட்டால் அவ்வளவுதான், சோலைகளின் சுணைகள் கன்றின் குடலை அறுத்து சீதஞ்சீதமாய் கழிய ஆரம்பித்துவிடும். பிறகு தஞ்சாவூர் மாத்திரை வாங்கி வந்து போட்டாலும், கன்றுக்குட்டியை ஒரு வதக்கு வதக்கிதான் விடும்.

பிடுங்கிய ஒரு பண்ணை கம்மம்புற்களையும் வரப்பில் கொண்டுவந்து வைத்துவிட்டு நிமிர்ந்தாள். வரப்பு நெடுக அடர்த்தியாய் அருகம்புற்கள். நேற்று இந்த கன்னுத்தா மாட்டிற்கு ஒரு பிடி அள்ளிப் போட்டதும், வண்டி மாடுகள் இரண்டும் வைக்கோலைச் சீண்டாமல், ஏக்கப் பார்வையோடு கைக்கயிற்றின் முறுக்காத்தி வளையங்கள் நெகிழ்ந்து போகிறமாதிரி இழுத்துக் கொண்டு நின்றது ஞாபகத்திற்கு வந்தது.

ஆட்டுக்குட்டிகளுக்குக் கூட போகும்போது வழிநடை நுணாவில் தழை

ஒடித்துக் கொள்ளலாம். வண்டி மாடுகளுக்கு இரண்டு பண்ணை அருகம் புற்கள், அறுத்துக்கொண்டு போகலாம் என்று வரப்பில் குந்தினாள். சாண் உயரத்திற்கு மேலாய் நன்றாக வளர்ந்துகட்டை பாய்ந்திருந்தன. வரப்பில் நடந்து நடந்து மையப் பகுதிப் புற்கள் மட்டும் குரங்கின் உச்சந்தலை முடிகளாய் அமுங்கிப் போயிருந்தன. வரப்பில் புற்களை ஒட்டி அறுத்தாள். இரண்டு மூன்று அறுப்பிலேயே கை கொள்ளாமல் பிதுங்கிப் புற்கள் வரப்பில் சிதறின.

அப்பாவுக்கும் சித்தப்பா கனகராசுவுக்கும் பாகம் பிரிக்கும் போதே இந்தப் பாகம் முழுவதும் இறுத்த அருவங்கட்டைகளாகத் தான் இருக்குமாம். எத்தனை முறை ஓட்டினாலும் அறா உழவாகத்தான் தெரியுமாம். களை வெட்டியும் மாளாதாம். இப்போது சித்தப்பா வைத்திருக்கும் ஒழுங்கை ஓரப் பாகம் வழிநடை என்பதால் முள் மொரட்டாக எருக்கு முளைத்தபடிதான் கிடக்குமே தவிர அருவங்கட்டையோ மற்ற புல்லுபொடியோ எப்போதும் இருக்காதாம். பாகம் பிரித்த கதையை அடிக்கடி ஆற்றமாட்டாமல் சொல்லிக்கொண்டிருப்பார் அப்பா.

காணிக்காரன் கணேசனின் அப்பா கோபால் படையாச்சி தான் நிலத்தைப் பாகம் பிரித்தார். கிணறுமட்டும் பொதுவு. கீழ்மேல் என நிலத்தை இரு பாகமாகப் பிரித்துப் பேசினார். ‘ எலேய் ராசோக்கியம், குடும்பத்துல நீதான் பெரியவன். மொறப்படி எந்த பாகத்த வைச்சிக்கிறன்னு ஓங்கிட்டதான் கேக்கணும். ஆனா இந்த தரவுக்கார பய ஒடம்பு வளைஞ்சி வேல செய்யாம சந்தைக்கி போறன், மாட்டப் புடிக்கிறன், விக்கிறன்னு நிக்கிது. இன்னம் குடும்பத்துல அடிபுடியில சிக்கல. அதனால அவங்கிட்ட கேக்குறன். நீ கோச்சிக்காத...’

மனைவியைப் பின்னுக்கு நிறுத்திக்கொண்டு குந்தியிருக்கும் கனகராசுவிடம் கோபால் கேட்கிறார் ‘ சொல்றா சின்னவன. நீ எந்தப் பாகத்த எடுத்துக்கற?’ மனைவியைத் திரும்பிப் பார்த்து அவளின் சைகையை உள்வாங்கியவராய் கனகராசு சொன்னார் ‘ எங்க அண்ணன் பாவம். குடும்பத்துல ரொம்ப கஷ்டப் பட்டவரு. அவரப் போயி வழிக்கர ஒழுங்க ஓரத்துல வுட்டு, காலத்துக்கும் முள்ளு மொரட்டு எருக்குன்னு கொத்திப் பொறுக்கிக்கிட்டு செரமத்தக் குடுக்க வேணாம். ஆடு மாடு அழும்பு இல்லாத உள்கை பாகத்த அவுருகிட்ட குடுத்துடுங்க. இந்த வழிநடய ஏங்கிட்ட வுட்டுடுங்க. ஆடுமாடு தொந்தரவுதான் அதிகமா இருக்கும். ஏதாவது கிளுவ வேலிய வைச்சிக்கிச்சி ஒப்பேத்தி பாக்கறன்.’

அப்பாவுக்கும் புரியாமல் இல்லை. உள்கை பாகத்தில் இருக்கும்

அருவங்கட்டைகளை என்னதான் களை வெட்டினாலும் எந்தக் காலத்திலும் எளிதில் அற வைக்கமுடியாது. ஆனால் வழிநடைக் கொல்லையின் முட்களை, எருக்கை எறியால் கொத்தி எடுத்துவிட்டு, ஒரு ஏரோட்டினால் பட்டென்று நிலம் பதத்திற்கு வந்துவிடும். இதுவெல்லாம் தெரிந்துதான். ஏதோ சகாயம் செய்கிற மாதிரி தம்பிக்காரன் பேசுவது புரிந்தது. இப்போது கூட வரப் பிலிருக்கிற இந்த அருவங்கட்டைகளைக் கொத்தி அலசி எடுக்கிற போது உண்டாகிற அசதியில் ராசோக்கியம் சொல்லிக்கொள்வார் ‘ அருகு மொளைச்ச அழகான கொல்லிய எங்க அண்ணங்கிட்ட குடுங்க. எருக்கு மொளைச்ச எழவெடுத்த கொல்லிய ஏங்கிட்டக் குடுங்கன்னு நெலம் பிரிச்ச மகராசன் ஏந் தம்பிக்காரன்.’

முகத்தில் வடிந்த வேர்வையைக் குந்தியவாக்கில், முட்டியின் பாவாடையில் தேய்த்துத் துடைத்துக்கொண்டு பூமா திரும்பிப் பார்த்தாள். துப்புரவாய் ஒட்டி அறுக்கப்பட்டு வெறிச்சோவென் றிருந்த வரப்பில், குறுக்குவசத்தில் அரி அரியாய்ப் புற்கள் வைக்கப்பட்டிருந்தன. கோடாலமாய் வயிறு பெருத்த வண்டி மாடுகளுக்கு இந்த நாலு பண்ணைப் புற்கள் பீச்சாங் குடலுக்குக் கூட பத்தாது. ஆனாலும் இதற்கு மேலும் அறுக்க முடியாது. நேரமாகி விட்டது. வீட்டிற்குப் போய்க் குளிக்க வேண்டும், தலைசீவ வேண்டும், பள்ளிக்கூடம் ஓடவேண்டும். கிணற்றில் பாம்பு விழுந் திருக்கவில்லையென்றால் கூட படிக்கட்டால் இறங்கிப் போய் கையோட கையாய் இங்கேயே குளித்துவிட்டுப் போகலாம்.

எழுந்தாள். இடுப்பில் இறுக்கமான துண்டுக்கட்டோடு குந்தி அறுத்துக்கொண்டிருந்ததில் சட்டையெல்லாம் நனைந்து கசகசப்பு. குறிப்பாய் திரளத்தொடங்கியிருந்த மார்புநுனிகளுக்கு நேர் இருபுறமும், திட்டாய் வேர்வைத் தடங்களைக் கண்டதும் அவளுக்கு என்னவோபோல் இருந்தது. அதேநேரம் உள்ளே அவிந்துபோவது மாதிரியும் எரிந்தது. நின்ற நிலையில் சட்டையின் கழுத்துப் பகுதியை முன்னுக்கு இழுத்து குனிந்து “ பூ...” வென்று இடைவெளி கொடுத்த சட்டைக்குள் வேகமாய் ஊதினாள்.

வியர்வையில் நனைந்த உடம்பு, காற்றுப் பட்டதும் சில்லென்று இருந்தது. அதுவும் அழகாய்த் திரண்டு மேடுகாட்டிய மார்புநுனிகளில் சிலீரென்று படுகிறபோது அவளுக்கு உடம்பெல்லாம் சிலிர்க்கிறமாதிரி கூசியது. மீண்டும் ஊதினாள். மீண்டும் கண்ணில் தெறிக்கிறமாதிரி கூச்ச அதிர்வு. திரும்பத் திரும்ப ஊதினாள். சின்ன மார்புக் காம்புகளின் நுனியில் படுகிற அந்தச் சிலிர்ப்பும் கூச்சமும் அவளுக்குத் தேவையாகவே இருந்தது. இது

வரையில் அறிந்திராத ஒரு புத்தம் புது அனுபவம். அந்தரத்தில் பறப்பது போல் சில்லிப்பாய் ஒரு பரவசம்.

மேலும் மேலும் ஊதி மிதந்து கொண்டிருந்தவள், ஒரு கட்டத்தில் மூச்சுக்காற்றையெல்லாம் ஒன்று திரட்டி ஒரே ஊதாய் சட்டைக்குள் ஊதினாள். பெருங்காற்று நிரம்பியதும் பட்டென்று பிடித்திருந்த சட்டையின் காலர் பகுதியை, கழுத்தோடு ஒட்டிப் பிடித்து காற்று வெளியேறாதவாறு மூடிக்கொண்டாள். பலூனுக்குள் சிக்கியதாய், காற்றுக் கவசத்திற்குள் சூழப்பட்ட மார்புநுனிகள். சிலிர்ப்பு, கூச்சம். தாங்கவியலாத் தகிப்பில் நிமிர்ந்தவளின் சொக்கிப்போன கண்களில் முத்துமுத்தாய் அழகான பொன்னிற மணிகளுடன் கூடிய கம்மங்கதிர்கள். ஒவ்வொரு கதிரின் நுனியிலும் குந்தி, குனிந்து குனிந்து குறிவைத்து மணிகளைக் கொத்துகிற குருவிகள். ஒவ்வொரு கொத்துக்கும் லேசாய் கதிர்கள் அதிர்ந்து அசைய, தன்னையே கொத்துவதாய், கிள்ளுவதாய், கிச்சுக்கிச்சு மூட்டுவதாய் நெளிந்தாள், தகித்தாள். குருவிகள் அடுத்தடுத்த கதிர்களுக்குத் தாவும்போது, லேசாய் தாழ்ந்து தலைநிமிர்ந்தாடும் கதிர்கள் போல் தானும் துவண்டு தள்ளாடினாள். எங்கும் கதிர்கள் தான். ஓயாத மணிக்கொத்து. கொத்துகளுடன் கூடவே சிலுசிலு வென மணிப்பேச்சு. குருவிகளுடனே சிறிது நேரம் குலாவிக் கொண்டிருந்தவளின் உள்ளுக்குள் திடுமென ஒரு விழிப்பு, யோசனை. ‘ கம்மங்கொல்லையில இம்மாங் குருவிவுள திங்க வுட்டுட்டு அப்பிடி என்னா நமக்கு வேடிக்க...’

“ ந்தோ...” மிக ஆவேசமாய்க் குருவிகளை விரட்டிக்கொண்டு பாய்ந்தாள். ரெண்டு அடி கூட எடுத்து வைத்திருக்கமாட்டாள். சடையைப்போல வளர்ந்திருந்த அருகம்புற்களில் கால்கள் சிக்கி... எதிர்பார்க்கவில்லை அவள், தவறி விழுந்து உருண்டாள்.

மறுகணம் அவளுக்கே அவமானமாகப் போய்விட்டது. நிலைகுலைந்து கால்களைப் பரப்பிக்கொண்டு, கம்மங் கொல்லையில் தொடைவரை பாவாடையை வழித்துக்கொண்டு... குந்தியிருந்தாள். பட்டென்று சுதாரித்து, விழுந்து உருண்ட வலியெல்லாம் மறந்து, யாராவது பார்த்திருப்பார்களோ என்னவோ எனச் சுற்றுமுற்றும் பார்த்தவளின் எதிரே பெரிய வரப்பில் அவன். கைலியை வளைத்துக் கட்டிக்கொண்டு முண்டாபனியனில், இறுக்கிக் கட்டிய தலைப் பாகையோடு சிகாமணி.

இவளுக்கு, திகைத்துப்போய் என்ன செய்வது எனத் தெரியாத தவிப்பு. ஒரு நொடி இவளை நேருக்கு நேர் பார்த்த அவன் கண்களில் ஏதோ பார்க்கக் கூடாததைப் பார்த்துவிட்ட மாதிரியான அதிர்வும் பதற்றமும். வெடுக்கென

தலைகுனிந்தவன், சாரையைப் போல் சரசரவெனத் திரும்பி தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

சண்டைக்காரனாக இருந்தாலும், பார்க்காததைப் பார்த்து விட்டதாக அவனது செய்கையும் படபடப்பும்... அவளுக்குள் ஏதோ இடறியது. திடுமென ஞாபகம் வந்தவளாய் அவசரமாய் குனிந்து பார்த்தவள் அதிர்ந்து போய்விட்டாள். விழுந்து உருண்டதில் சட்டையின் மேல் கொத்தான் தெறித்து, சட்டை ஆவென விரிந்து விலகி வெயில் பாடம் படாத வெளிர்ந்த, சற்றே திரண்ட மார்புப் பகுதி... வெடுக்கென கைகளால் குறுக்காய் மறைத்துக்கொண்டு குனிந்தவள் அப்படியே குன்னிப்போய்விட்டாள்.

அவன் காலடியோசை கடந்துபோய் வெகுநேரம் ஆன பின்னும் உள்ளுக்குள் அதிர்வு. அடங்காத அலையாட்ட மனசோடு மெல்ல தலை நிமிர்ந்தவள், தொப்பரையாய் நனைந்து போயிருந்தாள். நெஞ்சோடு அணைத்திருந்த கைகளின் கீழ் முட்டியில் வியர்வை வழிந்து சொட்டியது. பாவாடையற்ற வெற்றுக் கணுக்கால்களில் எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. நடுக்கத்தோடு திரும்பிப் பார்த்தாள். கோடுதுமாடுதாய் இவளைப் போலவே கம்மம் பயிர்கள் சில, தண்டுகள் ஒடிந்து கிடந்தன.

தனித்து தளர்ந்துபோய் தவிப்பில் கம்மம் பயிர்கள் சூழக் குந்தியிருந்தவள், அரவமற்ற கொல்லையைப் பார்த்தாள். குருவிகளும் இல்லை. கதிர்மணிகளில் கொத்தல்களுமில்லை. எல்லாமும் பருவ வயதின் வண்ணக் கனவுகள். கனவுகள் கொண்டு வந்த அடியும் வலியும்... அழுகையாக வந்தது அவளுக்கு.

அதைவிடவும் நெருப்பை மிதித்த மாதிரி தலைகவிழ்ந்து கொண்டுபோன அவன் செய்கையை நினைக்க நினைக்க ஆத்திரமும் அவமானமும், மாறி மாறி அவளை அறைய... காத்துச்சேட்டையிடம் சிக்கியவள் போல் நிலைகுலைவு. கைவளையலில் கோர்த்திருந்த ஊக்கை விடுவித்து எடுத்து சட்டையின் கொத்தான் பிய்ந்த பட்டியைக் கோர்த்தபடி எழுந்தாள்.

*

2

“ ஒ ண்ணு வுடாம இந்த நெல்லுவோ எனுமா மொளைச் சிருக்குது பாரன்.” ஒல்லியான தேகத்தில் ஏற்றிக்கட்டின புடவை. ஒடுக்கு விழுந்த முகத்தில் எண்ணெய் இறங்கிப் பொலிவு குன்றிய மூக்குத்திகள். அரக்குவைத்து செய்யப்பட்ட கல்தோடுகள். அன்ன பூரணியைப் போல நீட்டிய பாஞ்சாலையின் உள்ளங்கை நெல்மணிகளைப் பார்த்த ராசோக்கியத்தின் முகத்தில் திருப்தி.

முழங்கால் வரை சேறு கொண்டு, கதிர்கள் தலைவளைந்து கிடக்கும் வயக்காடுகள் உள்ள கருங்குழி போய் வாங்கி வந்திருந்த விதைநெல். ராசோக்கியத்திற்கு எப்போதும் விதைப்பதற்கு, நாற்று விடுவதற்கு முன்பு ஒரு கை அள்ளிப்போட்டு முளைக்க வைத்து விதையின் திறத்தைப் பார்த்துவிட வேண்டும். திருப்தியாக இருந்தால் விதைத்துவிடலாம். கொஞ்சம் பதக்குறைச்சலாகத் தெரிந்தால் மாற்றியோ அல்லது அதுக்குத் தக்கபடி கூட்டியோ விதைத்துக் கொள்ளலாம். விதைத்த பிற்பாடு சரியில்லையென சப்புக் கொட்டுவதும் விதைகளின் மேல் குற்றம் சொல்வதும் அறவே அவருக்குப் பிடிக்காது.

“ வெரநெல்லு எப்படியிருந்தாலும் ஓங் கை ராசிக்கி அப்பழுக்கில்லாம எல்லாம் மொளைச்சிடும் பாஞ்சால” சிரித்துக் கொண்டே சொன்னார்.

பாஞ்சாலைக்குள் பட்டென்று வெட்கம் சூழ்ந்த மௌனச் சிரிப்பு. ஆனால் அவர் சொல்வது உண்மையென்றும் அவளுக்குத் தெரியும். அவள் கையால் எடுத்துக் கொடுக்கச் சொல்லித்தான் விதைப்பார். அவள் கையால்தான் நடவு, களைவெட்டு, அறுப்பு என எல்லாமும் தொடங்கும். அதைவிடவும் அவருக்கு ஈடாக சளைக்காமல் கொல்லைக்காட்டில் வுழுந்து பறித்து... குடியாய் குடும்பமாய்... ஆனதெல்லாம் அவளால்தான்.

திடுமென வாசலில் படுத்துக்கிடந்த ஆட்டுக்குட்டிகளும் கன்றுக்குட்டியும் வழிப்படலை நோக்கி ஆவலமாய் ஓடின. தலையில் கம்மஞ்சோலைகள் நீட்டிய புல் கட்டோடு, மேலெல்லாம் கம்மம் பண்டாரங்களும் சுணைகளுமாக வேர்த்து விறுவிறுக்க படலைத் திறக்க பூமா சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள்.

“ இரும்மா வர்றன்...” ஓடி கன்றுக்குட்டியை ஒதுக்கித் தள்ளியபடி ராசோக்கியம் படலைத் திறந்தார். ஆனால், அவளால் ஒரு அடியைக் கூட எடுத்து வைக்க முடியவில்லை, ஆட்டுக் குட்டிகள் இரண்டும் எட்டி எட்டித் தாவுகால் போட்டு வாய்க்கு எட்டாமல் பாவாடையில் நழுவி நழுவி ஏமாற்றத்தில் கத்துகின்றன. கன்றுக்குட்டி பலம் ஒரு கழுதைக்குச் சமானம். ராசோக்கியத்தையும் மீறி ஓடி மறித்து கட்டிலிருந்து தொங்கிய ஒரு கம்மம் பயிரை அது வெடுக்கென இழுத்ததில், பூமாவுக்கு கழுத்து மக்கிளித்துப் போய் விட்டமாதிரி வலி. எல்லாவற்றிற்கு மேலாக, கொய்யாமரத்தில் கட்டியிருந்த குட்டித்தா ஆடு ஒரே சிம்பலில் காசராக்கு நார் கயிறையும் அறுத்தெறிந்துவிட்டு அதே வேகத்தில் வந்து மக்கென்று எட்டி நடுவயிற்றில் முன்னங்கால்களைப் பதித்துத் தாவிப் புற்களைக் கடித்தது. பூமாவுக்கு உயிரே போய்விடுகிற மாதிரியான அலட்டி. சட்டைக்கொத்தான் இருந்த இடத்தில் ஒப்புக்குப் போட்டிருக்கும் ஊக்கு பிய்ந்து கொல்லையில் நடந்தது போல் திரும்பவும் பங்கப்படுத்திவிட்டால்... பட்டென்று சட்டை கீழே இழுபடாத வாறு மேலே இறுக்கிப் பிடித்துக்கொண்டாள்.

“ அதான் சண்டக்காரனுவோ நிக்கிறமாதிரி மறிக்கித. அப்பிடியே போடன்டி. அப்பறமா எடுத்துக்கலாம்.” பாஞ்சாலை சத்தம் போட்டாள்.

“ எல்லா எனக்குத் தெரியும். ஓம் வேலயப் பாரு...” அடிக்கிற மாதிரி சொல்லிவிட்டு, எட்டி நடுவாசலில் கட்டைப் போட்டாள். அதது நாலாகடையும் நின்று பச்சையைக் கடித்து உதறுகின்றன.

கழுத்தை லேசாய் சொடுக்கியபடி, வேர்வையும் சாறுமாய் போய் ஸ்டூலில் குந்தினாள். வாசல் படியோரம் படுத்துக்கிடந்த துடுக்கன் எழுந்து வந்து உரசியபடி நின்றது, கூடுதல் விசுவாசத்துடன் வாலைக் கொஞ்சம் கூட்டி ஆட்டிக் கையை நக்கியது. கழுவுவதற்கு சோற்றுக்குண்டானோடு வெளியே வந்த பாஞ்சாலை நாயின் இழைசலைப் பார்த்துவிட்டு, குண்டோடு கையை நீட்டி மொத்தினாள். “ காலையில கூட வந்ததுக்கு ஓங் காத்தே ஆவாதுங்கற மாதிரி கல்ல வுட்டுக் கெடாசி தொருத்திட்டு போனா, அவகிட்ட போயி சங்க கெட்டமாதிரி கொழைஞ்சிக்கிட்டு நிக்கிற.”

“ ஆமா, தலகாணியாட்டம் இத இட்டுக்கிட்டு போவாதது தான் கொறைச்சலா இருக்கு. அங்காண்ட சண்டைக்காரங் கொல்லியில திங்கிற மள்ளாட்டையா இருக்கறதுக்கும் அதுக்கும், இதுபாட்டுக்கும் நோண்டி நளநளன்னு தின்னுட்டு வம்ப வளத்தி வுட்டுடும்.” எரிக்கிற மாதிரி சொன்னாள்.

ஆனால் எதைப்பற்றியும் பொருட்படுத்தாத துடுக்கன் சோற்றுக்குண்டான் மொத்தில் அப்பிய கரிப்பூச்சோடு, அவளின் காலடியிலேயே முடங்கிக்கொண்டது.

எகிறத் தொடங்கியது வெயில். எரிச்சல் பற்றியது. பச்சையைப் பார்த்த பதைபதைப்பில் கயிறு இற்றுத் தெறித்து விடுகிற மாதிரி இழுத்துச் செக்காடிக் கொண்டிருந்த பசுவையும் வண்டி மாடுகளையும் வெறித்துப் பார்த்துக்கொண்டு ஏதும் பேசாமல் குந்தியிருந்தாள். அவளின் இறுக்கத்தை சந்தேகமாய்ப் பார்த்தபடி கட்டை அவிழ்க்க நெம்பிக் கொண்டிருந்த பசுமாட்டுக்கும் வண்டி மாடுகளுக்கும் கொஞ்சம் அள்ளிக்கொண்டு போய் போட்டார் ராசோக்கியம்.

பாஞ்சாலையும், கட்டின்மேல் ஏறி நின்று குழப்பியபடி கடித்துக் கொண்டிருந்த குட்டித்தா ஆட்டின் கழுத்தில் தொங்கிய அறுபட்ட கயிறைப் பிடித்து இழுத்துக்கொண்டு கொய்யாமரத் தடிக்குப் போனாள். அவ்வளவு சாமானியமாய் அவளால் இழுக்க முடியவில்லை. “ எமப் பட்டறையாட்டம் எப்பிடியாப்பட்ட கவுத்த எனுமா அறுத்து வைச்சிருக்கு பாரு. இனிமே இத இரும்புச் சங்கிலியால தான் கட்டிப் போடுணும் போல்ருக்கு.”

வீட்டைக் கூட்டிப்பெருக்கி, அடுப்புச் சாம்பலை அள்ளிக்கொண்டுபோய் குப்பையில் கொட்டிவிட்டு வருகிறவரை பூமா அப்படியே இடித்த புளிமாதிரி குந்தியிருந்ததைக் கண்டதும் பாஞ்சாலைக்கு என்னவோபோல் பட்டது. “ ஏண்டி குந்தியிருக்கற. பள்ளிக்கொடம் போவுல? போயிக் குளி.”

அவள் சொல்லி முடிக்கவில்லை. பூமா தத்தளித்துக்கொண்டு சொல்கிறாள். “ ஒரு வயசிப்புள்ள, நானே தெனைக்கும் கொல்லிக்கி போயி குருவி ஓட்றதாருக்கு.”

வீட்டுக்குள் நுழையப்போன ராசோக்கியம் தேங்கி நின்று விட்டார். ஒன்றும் புரியாக் குழப்பத்தோடு பாஞ்சாலை திரும்பிக் கேட்டாள். “ என்னாடி... தே எட்டி கூப்புடுற தொலைவுல இருக்கற நம்ப கொல்ல. இதுல போயி குருவி ஓட்றதுக்கு இம்மாங் கத சொல்ற. என்னைக்கும் இல்லாம இன்னைக்கித்தான் அதிசயமா நீ ஒரு வயசிப் புள்ளன்னு ஒனக்குத் தெரிஞ்சிபோச்சி.”

“ ஒங்குளுக்கு என்னா, நா மட்டுந்தான் அங்க பொட்டப் புள்ள. செத்த காலையில கொல்லிக்கிப் போய்ட்டு வந்து அப்பறமா அண்ணன வேலைக்கி போவச் சொல்லக் கூடாதா?” அழுது விடுவாள் போலிருந்தது.

“ சரி நீ போவுலன்னா வுடு. அதுக்கு என்னா மூஞ்சியத் தூக்கி மோட்டுவள

மேல வைச்சிக்கிட்டு பஞ்சாயத்து” ராசோக்கியம் சொல்லிவிட்டு உள்ளே போனார்.

“ அட நீ வேற. அது கெடக்குது மொட்டராங்கி. அத யாரு கொல்லிக்கி போவச் சொன்னது. அது தானா போய்ட்டு வந்து மொட்டக் கொஞ்சல் கொஞ்சுது. ஏந்திரிச்சி போயி குளி புள்ள... ஊருப் பேயிலாம் ஒன்னாக்கூடி வந்தாலும், ஒன்னக் கண்டா அலறி அடிச்சிக்கிட்டு ஓடும். எனுமோ ஒன்ன வெத்தலையில வைச்சி முழுங்க கொல்லியில நிக்கிறமாதிரி இப்பதான் சிணுங்குற...”

“ என்னா... குருவி ஓட்டப்போன செல்லம் வந்து சிணுங்குது!” அங்காண்ட வீட்டில் தலையிலிருந்த குடத்தை இறக்கியபடி சிரித்துக் கொண்டே சித்தி அம்புசாட்சி கேட்டாள்.

பட்டென்று இவளுக்கு இன்னும் ஆத்திரம் கூடிவிட்டது. “ ஒங்க புள்ளிவோலாம் வூட்ட வுட்டு வெளிய போவக்கூடாதுன்னு உள்ள வைச்சிக்கிட்டு, ஒங்க கொல்லிக்கும் சேத்து ஒரு வயசிப்புள்ள நா போயி தனியா குருவி ஓட்றன். இதுல ஒங்குளுக்கு ரொம்ப எளக்காரமா இருக்கு போல்ருக்கு.” வெடுக்கென்று சொன்னாள்.

பட்டாப்பட்டி அண்டர்வேர் வெளியே தெரியும்படி வழித்துக் கட்டிய கைலி, போர்வையா சால்வையா எனத் தெரியாதபடி ஒரு துண்டு, சித்தப்பா கனகராசு கேட்டுக்கொண்டே வந்திருப்பார் போலும். படலுக்கும் அங்காண்ட பிளந்த பல்குச்சியால் ஒரு தடவைக்கு இரு தடவை நாக்கை வழித்துக் காறித்துப்பிவிட்டுச் சொன்னார் “ சரி வுடுப்பா. நாளையிலேர்ந்து நாம் போயி ஒங்க கொல்லைக்கும் சேர்த்து குருவி ஓட்டிக்கிறன். நீ பள்ளிக்கொடம் கௌம்பற வேலயப் பாரு.” சொல்லிவிட்டு வாய் கொப்பளித்தார்.

“ வேணாம் வேணாம். கோழி கூவாத எவனாச்சும் வந்து அந்த ஊர்ல மாடு இருக்கு இந்த ஊர்ல மாடு இருக்குன்னு ஒங்கள கூப்புட்டுக்கிட்டு பூடுவான். குருவி பூரா கொல்லிய மொட்ட அடிச்சிடும். நீங்க போனிங்கன்னாலும், படலத் தொறக்கறதாங் காட்டியும் வந்து பறந்துக்கிட்டு நிக்கிதுவுள, இதுவுளுக்கு யாரு கால நேரத்துல பச்சையக் கொண்டாந்து கண்ணுல காட்றது...” கன்று, ஆட்டுக்குட்டிகளைக் காட்டியபடி அதற்கும் ஒரு அணையைப் போட்டாள்.

பாஞ்சாலைக்கு எரிச்சலாகிவிட்டது. “ ஏண்டி, கல்லுக் குந்தானியாட்டம், சார்மண போட்டுக் குந்திக்கிட்டு யாரையும் போவவும் வேணாங்கற.

தனியாப் போய்ட்டு வந்தன்னு கதயும் வளத்துற.” வேகமாகப் பேசியவள், கொண்டுவந்து போட்ட புல்லில் தெரிந்த கதிர்களோடு கூடிய கம்மம்பயிர்களை பார்த்துக் கேட்டாள் “ என்னாடி அவுலு இடிக்கிற மாதிரி இம்மாங் கருதுவுள ஒடிச்சாந்துருக்க. இதுக்கு அந்த குருவிவுள வுட்ருந்தாலும் கம்மியா தான் தின்னுருக்கும். இதான் நீ குருவி ஓட்டப்போன லட்சணமா...”

பட்டென்று பூமாவுக்கு, முன்னயைவிட முகம் கூடுதலாகச் சுருங்கிக் கருவடைந்தது. ராசோக்கியத்திற்கு ஏதோ அறிகுறி தெரிந்திருக்க வேண்டும். கிட்டவந்து அவளின் தலையில் கிடந்த கம்மம்பூக்களை கையால் தள்ளிவிட்டபடி கேட்டார் “ ஏம்ப்பா... என்னா ஒரு மாதிரியா இருக்க?”

அவளுக்குள் பட்டென்று ஒரு உடைவு. “ வரப்பு தடுக்கி கீழே வுழுந்துட்டம்பா. கம்புல உருண்டு... கருதுலாம் ஒடிஞ்சி...” அதற்குமேல் அவளால் சொல்ல முடியவில்லை.

“ அப்பறம்... அடிகிடி பட்டுட்டுதாப்பா...” பதற்றமாகக் கேட்டார்.

“ அடிலாம் படுலப்பா...” சொன்னவளின் உள்ளே, ஒரு கணம் வரப்பில் சிகாமணி தலைகுனிந்து நடந்து போவது காட்சியாய் ஓடியது.

*

3

ஓங்கிய அதே வேகத்தில் இறங்கிய கையில் மூங்கில் சிம்புக்குப் பதில் கொடுவாள் மட்டும் இருந்திருந்தால், இந்நேரத்திற்கு தலைவேறு முண்டம் வேறாய் ஆகியிருக்கும் குட்டித்தா ஆடு. ஆனால் அவரின் இலக்கு ஆடு இல்லை, ஆட்டுக்கு உடையதாரியான ராசோக்கியந் தான். பழுப்பேறிய வேட்டியைக் கயிறாய் ஆட்டின் கழுத்தில் வளைத்து இறுக்கியபடி தனக்கான பலி இரையைத் தானே தேர்ந்தெடுத்து இழுத்துவரும் ஆவேச அய்யனாரைப் போல் செங்கல்ராவு. பொறி பறக்கிற கோபத்துடன் வந்து கொண்டிருந்தார். உச்சிவெயிலில் வேர்த்து விறுவிறுக்க, செம்பட்டை பாய்ந்து கிடந்த தலைமுடிகள் பறக்க புற்றிலிருந்து உருவப்பட்ட உடும்பைப் போல் ஒற்றைக் கோவணத்தோடு ‘ வேகுவேகு’ என்று வரும் அவரின் நடைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் முழிபிதுங்கிய குட்டித்தா ஆடு முரண்டு பிடித்தது. குட்டிகள் மிரண்டு பயத்தில் கத்தியபடி பின்தொடர்ந்து கொண்டிருந்தன.

ஒழுங்கையை விட்டு ஊரை நெருங்க நெருங்க கண்ணுமுண்ணு தெரியாத காந்தாளம். எடுத்தெறிந்து பேசுவதற்குத் தோதாய் இளம்போதை வேறு. பறக்கின்றன வார்த்தைகள். “ ஆவாதுன்னு ஆனப்பறம் ஆடு என்னா குட்டி என்னாடா கம்னேட்டி பயல. ஏங் கொல்லியில அடிய எடுத்து வைக்கிலாமா, வக்காள ஓழிவுளா... ஆட்ட ஓட்றதுக்கு இன்னைக்கி வாங்கடா... ஒங்கள...” பல்லைக் கடித்தபடி ஆத்திரத்தில் திரும்பி, சிம்பை வேகமாக வீசினார். வெடுக்கென்று மிரண்ட ஆடு, வேகமாகப் பின்னுக்கு இழுக்கவும், கவுந்தாங்கிடையாய் விழுந்தே போயிருப்பார்.

வீட்டை நெருங்க நெருங்க குட்டித்தா ஆட்டின் கதறலும், குட்டிகளின் அலறலும் பெருஞ்சத்தமாய் எகிற, வாசலில் அண்டாப் பானையில் நெல்லைக் கொட்டிக்கொண்டிருந்த பாஞ்சாலை கூட கவனிக்கவில்லை, கூரை நிழலில் படுத்துக்கிடந்த துடுக்கன் செவி மடுத்துவிட்டது. விலுக்கென்று எழுந்து வழிப்படல் சந்தால் நுழைந்து திரும்பிய வேகத்தில் குரைக்க ஆரம்பித்தது. ஆதரவுக் குரலோடு அபயக்குரல்களும் சேர்ந்த பெருத்த சத்தத்தில் திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்த்த பாஞ்சாலைக்கு மட்டுமல்ல, தொம்பை சொருவாயிலிருந்து பிடித்து வந்த நெல்கூடையோடு சுணைப் புழுதிக் கோலத்தில் நின்ற ராசோக்கியத்திற்கும் அதிர்ச்சி.

வெலவெலத்தமாதிரி படலைத் திறந்து வெளியே போனாள். ஒரே ஓட்டமாய் ஓடிவந்து இவளின் காலடியில் உரசிக்கொண்டு பரிதாபமாகக் கத்துகின்றன குட்டிகள். நொறுங்கிப் போய்விட்டாள் பாஞ்சாலை. இத்தனைக்கும் ஆட்டை மறிச்சியில் கட்டி வைத்து விட்டு வந்து, இரண்டு மூட்டை அளவிற்குக்கூட, நெல்லை அள்ளி வந்து அண்டாவில் ஊறவைத்திருக்கமாட்டாள். அப்படியே ஆடு அறுத்துக்கொண்டிருந்தாலும் இவள் மள்ளாட்டையில்தான் நிற்க வேண்டும். கம்பைத் தாண்டி அங்காண்ட எப்படிப் போயிருக்கும்? ஏதோ திட்டமிட்டு வம்பு வளர்த்த வேண்டும் என வலிந்து பிடித்து இழுத்து வருவதுபோல் தோன்றினாலும், எங்கு வாயைக் கொடுத்து திரும்ப ஏதாவது சிக்கலில் கொண்டு போய் விட்டுவிடுமோ என்கிற மிரட்சியில் என்ன சொல்வதெனத் தெரியாமல் நின்றிருந்தாள்.

நிலைமையைப் புரிந்துகொண்ட ராசோக்கியம் மட்டும், பதட்டத்தை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. அடித்துக் கொண்டே பின்னுக்குவாட்டத்தில் நகரும் சாவு மேளக்காரனைப் போல் குரைத்துக்கொண்டே பின்வாங்கிய துடுக்கனைப் பார்த்து சத்தம் போட்டார் “ ஏய் துடுக்கு... எட்டத்த வா...”

துடுக்கன் பொருட்படுத்தவில்லை. விடாத குரைப்பு. அதே நேரம் செங்கல்ராவும் நடையைத் தேக்கவில்லை. வழிப்படலுக்கு சற்றுமுன்பாகவே குட்டித்தா ஆடு, படாரென்று முன்னுக்கு இவளை நோக்கி இழுத்துக்கொண்டு ஓடிவரவும் தடுமாறி விழுந்து விடுகிறமாதிரி மறுபடியும் இடறிவிட்டது செங்கல்ராவுக்கு. ஆனாலும் வெட்டி இழுத்து ஆட்டின் வேகத்தைத் தேக்கியவருக்குக் குதறுகிற மாதிரியான ஆத்திரம் குபீரெனப் பொங்கியது. திரும்பவும் சிம்பு சீறியது. “ ஏமூட்டு பச்சப்பயிறு செடியத் தின்னு கொழுத்த திமிரா. இனிமே ஏங்கொல்ல இருக்கற தெசைகடையே திரும்பாதமாதிரி ஓந் திமிர நா இன்னைக்கி அடக்குல, எப்பங் கருத்தா படாச்சிக்கி நா பொறக்குல...”

தெருவில் யாரோ பார்த்துவிட்டு கிழக்கு நோக்கி ஓடினார்கள். பாஞ்சாலை பரிதாபமாகத் திரும்பி ராசோக்கியத்தைப் பார்த்தாள். அவர் பொறுமையாகச் சொன்னார் “ பெசாம இரு. எங்க புடிச்சிக்கிட்டு போயி என்னா பண்ணனாலும் பண்ணுட்டும்.” திரும்பவும் நாயை அடக்கினார் “ துடுக்கு எட்ட வா...”

பொசுக்கென்று எகிறிவிட்டது. இழுத்துக்கொண்டு நிற்கும் ஆட்டை விறைப்பாய்ப் பிடித்தபடி தலையை ஆட்டிக் கொக்கரிக் கிறார் செங்கல்ராவு. “ ஒண்ணும் பண்ண முடியாதுன்னுதான் ஆட்டையும்

குட்டிவுளையும் அவுத்து வுட்டுட்டு வேடிக்க காட்றிங்களா. இந்த தடவ கட்டாயம் பண்ணிக் காட்றன்...”

“ சும்மா வீணு வம்பு வளத்திகிட்டு நிக்காதீங்க ஆமா. ஒங்குளுக்கும் எங்குளுக்கும் ஆவுலன்னா அதோட வுட்டுடணும். அத வுட்டுட்டு ஆடு போச்சி மாடு போச்சின்னு கத கட்டிக்கிட்டுருக்க வேணாம். இப்பதான் எங்க மறிச்சி நொணாவுல கட்டிட்டு வந்தன். மீறி அறுத்துக்கிட்டாலும் எங்க கொல்லியிலதான் நிக்கும்...” ஆட்டைப் பிடிக்கிறமாதிரி பேசிக்கொண்டே பாஞ்சாலை கிட்டப் போனாள்.

பின்னுக்கு வேகமாக இழுத்துக்கொண்டே செங்கல்ராவு, விழுந்து பிடுங்கி விடுகிறமாதிரி கேட்டார் “ அப்ப என்னா வேணுமின்னு அவுத்துக்கிட்டு வர்றனா. போய்ப் பாரு அரங்க மொட்டையா அடிச்சி வைச்சிருக்கறத. மறிச்சியில கட்னாங்களாம் மறிச்சியில...” சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக இழுத்துக் கொண்டே போனார்.

ராசோக்கியம் படபடப்பை அடக்கிக்கொண்டு திரும்பவும் பாஞ்சாலையை எச்சரிக்கை செய்கிறமாதிரி பேசினார் “ சரி, அங்காண்ட மள்ளாட்டையில பச்சப் பயிறு செடி, போயிருக் குந்தான். இப்ப என்னா கழுத்துக்கு கத்தியா வருது. ஆடுதான, புடிச்சிக்கிட்டு போவுட்டம். வுட்டுட்டு வந்து நீ நெல்ல அள்ளிக்கொட்டு.”

“ என்னாடா எனுமோ பெரிய மயிர்மாதிரி அதுக்கு என்னா இதுக்கு என்னான்னு மொட்டப் பஞ்சாயத்து பேசிக்கிட்டு நிக்கிற... ஒரு வாய்க்கா பூரா பூவும் பிஞ்சுமா, பச்சப் பயிறு செடியத் தின்னு வைச்சிருக்கு. கழுத்துக்கு கத்தியான்னு கத மயிரு பேசற. அதாண்டா அது ஒண்ணுதான் நாஞ் செய்யாத வுட்ட பெரிய தப்பு. ஆனா இந்த கண வுடமாட்டான். ஓம் படைய அரிகெடையா பெரட்டி கிட்டே வா, நாம் பாக்கறன்...” அறுத்தெறிந்த மாதிரி பேசியபடி ஆட்டை இழுத்தார். வெட்டிப் போட்டாலும் நகர மாட்டேன் என்பதாய் கால்களை அகட்டி நின்று கடுமையாய்க் கத்தியது. துடுக்கனும் தாங்கமுடியாமல் எகிறிக் குரைத்தது.

“ அடங்கொக்காள ஓழித... நீனும் வர்றியா. வா... வா... எங் கொல்ல மள்ளாட்டையத் தின்ன கொழுப்ப ஏங்கிட்டயே காட்றியா...” சிம்பை துடுக்கன் மேல் வீசினார். அது பயந்தது போல் பதுங்கிவிட்டு எகிறி எகிறிக் குரைத்தது.

ராசோக்கியத்திற்கும் கடந்து கொண்டிருந்தது. ஆனாலும் வலிந்து பொறுமையாக இருந்தார். வழக்கம் போலவே குடியில் இருக்கிறான்.

வகைதொகை கெட்ட மாதிரி பேசுகையில் வார்த்தை கொடுத்து பழையபடி... ஒன்றுகிடக்க ஒன்று ஆகிவிட்டால்... நல்ல வேளை இந்நேரம் அங்காண்ட தம்பிக்காரன் கனகராசோ இங்காண்ட மகன்காரன் சதாசிவமோ இருந்துவிட்டால் சிக்கல் தான். ஓட்டிக்கொண்டு போகட்டும், சாயந்திரம் அறிவழகனிடம் விவரத்தைச் சொல்லி மீட்டுக்கொள்ளலாம்.

“ என்னா... என்னா கூத்துக் கட்டிக்கிட்டு நிக்கிற...” திடுமென அசலாம்பிகை தெருவுப்பக்கமிருந்து பதட்டமாய் ஓடி வந்தபடி கேட்டாள். தவிடு புடைத்துக்கொண்டிருப்பாள் போலும், மேலுகாலு எல்லாம் தவிட்டுப்புழுதி. “ என்னா கருமாந்தரமா இருக்க...” மூச்சிரைக்க கேட்டுக்கொண்டே வந்தவள் அவரிடம் கிட்ட நெருங்க அச்சப் பட்டுக்கொண்டு, எசாகையில் நின்று “ வுடு...” என்று ஆட்டை விடுவிக்க கையை நீட்டினாள்.

பட்டென்று அவள் மேல் திரும்பிவிட்டது செங்கல்ராவுக்கு. சிம்பை ஓங்கினார். “ ஒன்ன எவண்டி இங்க பஞ்சாயத்துக்கு கூப்புட்டான். அடிச்சி மாஞ்சிக்கிட்டு ஓடியாற. போய்ப் பாரு அந்த பச்சப்பயிறுவுள...”

மேலே படாமல் சற்றே பின்வாங்கியவாறு எச்சரிக்கை செய்கிறமாதிரி பேசினாள் “ இங்க பாரு ஒழுங்கு மதேரியா ஆட்ட வுட்டுட்டு எட்ட வா. அவன் வூட்ல இல்லாத சமயத்துல எதாவது வம்ப வாங்கியாந்து வைச்சி எங்கள ஒவுத்திரியத்துல வுட்டுடாத. அது எங்க மேஞ்சி அழிச்சாலும் அழிக்குட்டும் வுடு.”

அவன் என மகன் சிகாமணியைக் குறுக்கால போட்டதும், செங்கல்ராவுக்கு பொட்டென்று ஒரு தளர்வு. இதுதான் சமய மென்று, வேட்டியை உருவி, ஆட்டை விடுவித்தாள். அது குட்டிகளோடு ஓடி இன்னும் அகலாத மிரட்சியோடு கொய்யா மரத்தடியில் நின்றுகொண்டது. துடுக்கனும் வாலைச் சுருட்டிக் கொண்டு படலுக்குள் வந்தான்.

“ இந்த மாதிரியே வுட்டுக்கிட்டு போங்க. நீனும் ஓம் மொவனும் இந்த ஊர்ல குடும்பம் நடத்தி கிழிச்சிடுவீங்க.” முனறிக் கொண்டே நின்றவரை, கிட்ட நெருங்கித் தள்ளப் பயந்துகொண்டு “ சரிதாம் போ... நாங்க நடத்தற குடும்பம் சரியில்லாதவே இருக்கட்டும்.” அசலாம்பு சொல்லி நகர்த்திக்கொண்டிருந்தாள்.

“ காலம் பூரா ஆடுபோச்சி, மாடுபோச்சி... மரம் மட்டன்னு... இந்தக் கங்காட்சி கருமாந்தரமா இருக்கே. அந்தக் கொல்லிய எவங்கிட்டனாச்சும் வுட்டுட்டு அக்கடான்னு தலையில துணியப் போட்டுக்கிட்டு போனா தாம் நிம்மதியா இருக்கலாம் போல்ருக்கு” பாஞ்சாலை புலம்பியவாறு படலைச்

சாத்திக்கொண்டு உள்ளே வந்தாள்.

தெருவுக்குத் திரும்புகிற நேரம், அசலாம்பு காதில் விழுந்ததும். திரும்பி நின்று, சற்று கோபமாகச் சொன்னாள் “ நாந்தான் வந்து ஆள இட்டுக்கிட்டு வர்றன்னா அதோட வுட்டுட்டு வேலயப் பாக்கணும். எங்களால யாரும் தலையில துணியப் போட்டுக்கிட்டு போவ வேணாம்... மணியப் போட்டுக்கிட்டும் போவ வேணாம்.” சொல்லிவிட்டு நடந்தவள், என்ன நினைத்தாளோ மெதுவாக முனறியபடி போனாள் “ தலையில துணியப் போட்டுக்கிட்டுப் போவுணும்னு நேரம் வந்தா, ஒன்ன கேட்டுக்கிட்டு என்ன கேட்டுக்கிட்டா வரும்.”

*

4

கொ ய்யாமரத்தின் அந்திநிழல் மூங்கில் படல்மேல் விழுந்துகிடந்தது. “ வாங்க மூத்தவர, இப்பிடி வந்து குந்துங்க” ராசோக்கியத்தைக் கூப்பிட்டவாறு கக்கத்திலிருந்த கத்திப் பெட்டியைக் கையில் எடுத்தபடி ஒரு செங்கல்லை எடுத்துப்போட்டுக் குந்தினார் ரத்னவேல். ஆள் நரம்பு மாதிரிதான் என்றாலும் ஒரு செம்பு சாராயத்தைக் கூட ஒரே இழுப்பில் இழுத்துவிட்டு வெறும் செம்பை ஓசைப்படாமல் கீழே வைப்பவர்தான். ஆனால் அவரிடம் உள்ள ஒரு நல்ல பழக்கம், குடித்துவிட்டால் கத்தியை கத்தரிக் கோலைக் கையால் எடுப்பதில்லை.

ரத்னவேலுக்கு ராசோக்கியம் மீது ரொம்ப மரியாதை. ஊரில் எத்தனையோ பேர் அவசரத்திற்கு ஆள் கிடைக்காத வெறுப்பில், ‘ ஆமாம் போ... அப்படியே மழமழன்னுதான் வழிச்சி வுடுவான்’ என அவரின் வேலையைப் பற்றி மூஞ்சிக்குப் பின்னால் குறை சொல்லக் கூடியவர்கள்தான். ஆனால் ஒருநாளும் ராசோக்கியம் அவரின் வேலையைக் குறை சொன்னதேயில்லை. ‘ ஊருக்குப் போறன் சேதிக்குப் போறன் இந்த மூஞ்சிய செத்த வந்து தடவி வுட்டுட்டுப் போ’ எனச் சொன்னதுமில்லை. ‘ மனுசனால ஆவாதது மயிராள என்னா ஆவுது போயன்.’ எத்தனை நாளாக இருந்தாலும் ரத்னவேலாக வழியில் பார்த்துவிட்டு, ‘ வூட்டுக்கு வர்றன் போங்க மூத்தவர’ என்று வலிய வந்து செய்துவிட்டால்தான் உண்டு. இல்லை யென்றால் பாஞ்சாலையாக இன்று காலை மாதிரி வழியில் எங்காவது பார்த்து சத்தம் போட்டால்தான் ஆகும். ‘ ரத்னம், செத்த வூட்டப் பக்கம் வந்து அதுக்கு மொகசவரம் பண்ணி வுட்டா என்னா. தாடியும் தப்புமா மசக்கொறவனாட்டம் நிக்கறது நெல்லாவா இருக்கு.’

ராசோக்கியம் தோள்மேல் கிடந்த வேட்டியை கல்உரல்மேல் போட்டு விட்டு கூரையோரம் கிடந்த மணக்கட்டையை எடுத்து வந்து குந்தினார். பாஞ்சாலை உலை வைப்பதற்காகச் சோற்றுக் குண்டானைக் கழுவிக்கொண்டிருந்தாள். கழுவி நிமிர்ந்தவளுக்கு விலுக்கென்று இடுப்புவலி தெறிக்கவும் முகத்தைச் சுருக்கி சற்று மெதுவாக இயல்புக்கு வந்து, குண்டில் தண்ணீரைச் சாய்த்தாள்.

வேலிக்கும் அங்காண்ட அம்புசாட்சி மர நிழலில் அடுப்பைப் பற்றவைத்து

ஊதிக்கொண்டிருந்தாள். ‘ கனகராசு எங்க புள்ள?’ வாயைத் திறந்து கேட்டுவிட்டால் போதும், ‘ உம்... போற எடத்துக் குலாம் சொல்லிட்டுதாம் போறாரு. நீ வந்து ஏங்கிட்ட ரொம்ப பொறுப்பாக் கேளு...’ என்பாள். கனகராசுக்கு புதன்கிழமை விருத்தாசலம் சந்தை, வெள்ளிக்கிழமை மடப்பட்டு சந்தை, சனிக்கிழமை செட்டியந்தாங்கல் என வாரமுச்சுடும் சந்தைதான். துண்டில் மறைத்து விரல்களால் யேபாரம் பேசி லாபநட்டம் பார்க்கக் கூடியவர். கொல்லை குடி என விவசாய வேலையெல்லாம் அவருக்கு இரண்டாம் பட்சம்தான்.

ரத்னவேல் பித்தளைக் கிண்ணத்திலிருந்த தண்ணீரை அள்ளி மூஞ்சியில் தேய்த்தார். முதுகில் ஊர்ந்த எறும்பைப் புறங்கையால் தடவிக்கொண்டே சலிப்புடன் சொல்லிக்கொண்டார் ராசோக்கியம். “ மள்ளாட்டையில ரெண்டு வாய்க்கா தண்ணி கட்டாமக் கெடக்கு. வெய்ய தாழப் போயிக் கட்லாம்னு பாத்தன். நா எனுமோ பொண்ணு பாக்கப் போற மாதிரி நீனு புடியாதுண்டமாப் புடிச்சி ஒக்காருங்கற.”

“ பொண்ணு பாக்கத்தான் போய்ட்டு வாயன். தண்ணி எறைக்கிற வேல நின்னாலும் நிக்கட்டும். காலையில பனி நமுர்ல போயிக் கட்டிக்கலாம்...” அடுப்பைப் பற்ற வைத்துக்கொண்டே பாஞ்சாலை சொன்னாள்.

“ எங்க அக்கா சொல்றதும் நெசந்தான் ரத்னம். எங்க அக்காவாலயும் ஒண்ணும் முடியில. கஞ்சி தண்ணிய காய்ச்சிக்கிட்டு அக்கா வூட்ல இருந்தாலும் கொண்டார மகராசி கொல்ல குடி வேலய பாத்துக்கும்” அங்காண்டப் பக்கமிருந்து அம்புசாட்சியும் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

“ சரி புள்ள, ஓம் பிரியப்படியே ஏந் தம்பிக்காரனுக்கு ஒரு பொண்ணப் பாத்து முடிச்சிட்டாப்போவுது. இப்ப என்னா பொறாத குடிகாரனா ராசு!” திடுமெனக் குரல் கேட்டுத் திரும்பி னார்கள். வழித்துக் கொண்டிருந்த ரத்னவேல் கூட நிறுத்திவிட்டுப் பார்த்தார். படலைத் திறந்துகொண்டு கரிவரத படாச்சி வந்து கொண்டிருந்தார். வழக்கமான செம்மண் காவி ஏறிய தலைப்பாக்கட்டு இல்லாமல், வெறும் கோமணத்தோடுதான் வந்திருந்தார். புற்றி லிருந்து உருவி எடுத்த உடும்பு மாதிரி உடம்பெல்லாம் செம்மண் தீற்றல். கைகால்களில் பொட்டைமண் புழுதி. இடுப்பில் வெட்டிக் கிடந்த அண்ணாக்கயிற்றில் பொடிமட்டை செருகப்பட்டிருந்தது. கரி படாச்சிக்கு பெயரைப் போலவே நிறம். நெடுநெடுவென வளர்த்தி. வயது முதிர்வினால் தோலில் சுருக்கம் தெரிந்தாலும் கணீரென்ற குரல்.

கரி படாச்சி தெருவில் வருகிறார் என்றால் கேலியும் சிரிப்பும் தான். ‘

என்னா புள்ள, ஓம் ஆம்படையான் ஓங் களகட்டு எல சரியா இல்லன்னு ஏங்கிட்ட பஞ்சாயத்தம் வைக்கறான்.'

பதிலுக்குச் சளைக்காமல் பொம்பளை சனங்களும் வாயைக் கொடுக்கும் ' அவுரு காம்பு ஆடிப்போய் நிக்கிறாரு. ஆட்டங் கண்ட காம்புல எல எப்பிடி சரியா நிக்கும் மாமா.'

அறியாப் பசங்கள் கூட தப்பிக்க மாட்டார்கள். இரு தொடை இடுக்கில் பிடித்துக்கொண்டு கேட்பார் ' ராத்திரி ஒங்க வூட்ல எலியும் பூனையும் சண்ட போட்டுகிச்சாம். ஒனக்குத் தெரியுமாடா?' ' எனக்குத் தெரியாது தாத்தா...' அப்பாவியாய்ச் சொல்வார்கள். விடமாட்டார். ' ஒங்க அம்மாகிட்ட போயி கரியத் தாத்தா கேட்டார்னு கேட்டுட்டு வா... ஓடு' என்று விரட்டிவிடுவார். ஒன்றும் தெரியாத பசங்கள் ஓடிக் கேட்க சிரிப்பும் பொய்யான கோபமுமாய் வந்து பெண்கள் கேட்பார்கள் ' ஒனக்கு வேற பொழப்பு கிழப்பு இல்லியா மாமா...' தெருவே சிரிக்கும். பேச்சுதான் அப்படியிருக்குமே தவிர கரி படாச்சி ரெண்டாலங்கெட்ட மனிதர். தெருவில் குடும்பச் சண்டை என்றால் ராசோக்கியத்தைப் போலவே அமர்த்திவிட, ராசியாக்க முதல் ஆளாய் நிற்பார். ' சரி வுடுடா. பொட்டப் புள்ளிவோ கொல்ல குடின்னு அலஞ்சி ஆக்கப் புடிக்கன்னு குடும்பத்துல கெடக்கறதுவோ, எரிச்சல்ல அப்பிடித்தாம் பேசும். ஆளா இருக்கற நாமதான், கோபத்த பாராட்டாம சரின்னு போவணும்.'

" நெல்ல பொண்ணா சீக்கிரம் பாருங்க மாமா. ஆனா பாக்கப் போவும் போது மறக்காம எங்க அத்த முத்துக்கண்ணையும் கூப்புட்டுக் கிட்டு போங்க. பத்துப் பொருத்தமும் பாத்துப் பக்குவமா கொண்டாரு வாங்க." பாஞ்சாலை சிரித்தபடி சொன்னாள்.

முத்துக்கண்ணு பேரைக் கேட்டதும் கரி படாச்சிக்கு சிரிப்பும் பேச்சும் பட்டென்று கொஞ்சம் இறக்கத்துக்கு வந்தது. " ஏம் புள்ள இந்த நேரத்துல என்னக் கொண்டுபோயி கொந்தல்ல வுடற... பொண்ணு பாக்கவா போற... பொண்ணுன்னு என்னைச் சீவி சீலப் பேனு எடுத்துடும... அந்தக் கெழப்பொணம்..." பொடிமட்டை யிலிருந்து ஒரு சிட்டிகை எடுத்து உறிஞ்சிக்கொண்டார்.

முத்துக்கண்ணுக்கு குழந்தை ஏதும் இல்லாததினால்தானோ என்னவோ கரியர் மீது அலாதி பிரியம். எந்நேரமும் அவரை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாது கிழவிக்கு. ஒரு அரை மணிநேரம் கூடத் தடிக்கவிடாது. ' எங்க கெழம் அங்கியா நிக்கிது?' வழியே போகிற எல்லாரையும் மெனக்கிட்டு

நிறுத்தி விசாரிக்கும். நில பலம் ஏதுமில்லை. வீடு மட்டும்தான். ஒரு ஜதை வண்டி மாடும் கட்டைவண்டியும் தான் பிழைப்பு. ஏர் ஓட்ட, மண் அடிக்க சத்தத்திற்குப் போவார். வண்டிக்கு வேலை இல்லாத நாட்களில் ஏதாவது கூலி வேலைக்கும் போவார்.

" அப்பிடியாப்பட்ட அத்தை இருக்கக்குள்ளியே ஒனக்கு கிண்டலும் கீறூட்டும் அடங்குல. இன்னம் கொஞ்சம் கடபடாத அத்தையா இருந்தா ஊகூம்... ஒன்னக் கையில புடிக்கவே முடியாது மாமா..." சொல்லிக்கொண்டே அம்புசாட்சி கொதித்துக் கொண்டிருந்த குழம்புச்சட்டியை எடுத்துக் கொண்டுபோய் வைத்தாள்.

" அதுவோ கெடக்குது. வந்த சேதி என்னா அண்ண?" ராசோக்கியம் சூத்தாம்பட்டையில் ஏறிய எறும்பைத் துடைத்தபடி கேட்டார்.

" நம்ப கணக்கஞ்செட்டி, கடைக்கும் பக்கத்துல இருந்த கொட்டாயப் பிரிச்சிட்டு கல்லு ஊடு கட்றான். கடகால் நோண்டறதுக்குப் போனன். மேற்காலப் பக்கம் ரொம்ப இறுத்தலா இருக்கு..." வார்த்தையை முடிக்கவில்லை. பட்டென்று ரத்னவேலின் கத்தியைச் சற்று விலக்கியபடி, ராசோக்கியம் சந்தேகமாகக் கேட்டார். " என்னா அண்ண சொல்ற. ஊர்ல திடிச்சாப்ல நெய்வேலிக்காரன் எடத்த எடுத்துட்டா என்னா பண்றதுன்னு அவவன் வூட்டுக்கு கருப்பஞ்சருவு கூட அடிக்காம அவரப் பந்தலாட்டம் ஒழுவ வுட்டுக்கிட்டு நிக்கிறான். இதுல கடகால் நோண்டறாங்கற..."

" இதையேதான் வேடிக்க பாக்க வர்றவம் பூரா கேக்கறானுவோ. செட்டிகிட்ட கேட்டா சளைக்காம ' எடுக்கறப்ப பாத்துக்குலாமுங் கறான்" சொன்னவர் " சரி ஓங் கடப்பாரைய குடு. காலையிலேர்ந்து போட்டதுல ஏங் கடப்பாரை மழுங்கிப்போச்சி."

அந்தாண்டப் பக்கமிருந்து அம்புசாட்சி வெடுக்கென்று சொன்னாள் " நேத்துக்கூட முத்துக்கண்ணு அத்த ஏங்கிட்ட பஞ்சாயத்தம் வைச்சிது மாமா."

" என்னான்னு..." கரி படாச்சி கொஞ்சம் சந்தேகமாய்க் கேட்டார்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு சொன்னாள் " இந்த மாதிரி ஒங்க கடப்பார சுத்தமா மழுங்கிப் போச்சி, ஒண்ணும் புண்ணிய மில்லன்னு."

" மெ ல்லிசா ரவோண்டு மீச வைக்கிட்டுமா மூத்தவர..." முகச்சவரம் செய்கிற போதெல்லாம் ரொம்ப அக்கறையாய் ரத்னவேல் கேட்கிற

வார்த்தைகள்தான். எப்போதும்போலவே ராசுவும் சொன்னார், “ மீச வைச்சிருந்தாதான் குடுத்தனக்காரன்னு தெரியுமா...” கதை இப்படித்தான் கடைசியில் இருக்கும் என அதற்குள் ரத்னவேல் வலதுபுறத்தை முற்றிலுமாய் வழித்து விட்டிருந்தார்.

“ அத்த...” தெருவாசல்படியில் குரல் கேட்டதும் தோட்டத் திலிருந்தபடி பாஞ்சாலையும், முகத்தைத் திருப்பாமல் கண்களை மட்டும் சுழற்றி ராசோக்கியமும் பார்த்தார்கள். வடிவேல் பொண்டாட்டி தேவகிதான். பதில் குரலேதுமில்லாமல் போனதும் நடையைக் கடந்து வாசலுக்கு வந்தாள்.

நேராய் முடிவெட்டிக் கொண்டிருந்த இடத்திற்கே வந்து பஞ்சாயத்தம் வைத்தாள் “ நேத்து நடந்த கங்காட்சிய கேட்டியா மாமா. அத்தைய வேண்ணா கேட்டுப்பாரு. புழுத்த நாயி குறுக்க போவாதமாதிரி ஆளு பேசியாவுது. அட நா ஆயிரமே காகுழிக்கு வக்கு இல்லாதவளாக் கூட இருந்துட்டுப் போறன். இவுரு பெரிய நெலம்பலம் பெருத்த கம்பத்தமாவே இருந்துட்டுப் போவுட்டும். அதுக்காக பொடரியப் புடிச்சி வெளிய தள்ளிவுட்டு போன்னாவுது. போனா ஏந் தம்பிவோ உள்ள வராத, வெளியே நில்லுன்னா சொல்லிடப் போறானுவோ.”

நல்ல வாளிப்பான உடம்பை, பஞ்சத்தில் கிடப்பதுபோல் தோற்றங்காட்டும் பழைய புடவையின் சுற்றல். சண்டை முகாந் திரத்தால் சொடுங்கிய முகம். ஏகப்பட்ட குற்றச்சாட்டுகளை வடிவேல் மீது சொல்லிக்கொண்டிருந்தாள்.

பக்கிரி படையாச்சி மகன் வடிவேலுக்கு பத்து ஏக்கருக்கு மேல் நிலபுலம். சின்ன வயதிலேயே தாயை இழந்து, தகப்பன் வளர்த்த பிள்ளையாக இருந்தாலும் பொறுப்பாக தப்பு தண்டாவுக்கு போகாதவனாக வளர்ந்தவன்தான். கூலிக்கு களை வெட்ட பக்கத்தில் தெற்கு வெள்ளூரிலிருந்து வந்தவள்தான் தேவகி. பருவத்தில் கண்ணுக்கு லட்சணமாக இருந்ததும், அவளிடம் கொஞ்சம் ஆசை அன்பாக வடிவேல் பேசத்தொடங்கினான். வளரத் தொடங்கிய பேச்சு நாளாவட்டத்தில் வளைத்துக்கொண்டது. அவளே தன் சொந்தப்பொறுப்பில் ஆட்களை களைவெட்டுக்கு அறுப்புக்கு கொண்டுவந்து செய்தாள். பிறகு அந்தப் பத்து ஏக்கருக்கும் அவளே சொந்தக்காரியாய் வந்து குந்திக்கொண்டாள். வந்து பத்து வருடங்களைத் தொடப்போகிறது, நாளும் ஓயாத சண்டைதான் சச்சரவுதான். ஆனால் எந்தச் சண்டை எப்படியிருந்தாலும் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிவிட்டாள். இவளும் சாமானியப்பட்டவள் இல்லை. இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கிறவரை களைக் கொட்டும் தானுமாகத் திரிந்தவள்தான். வந்த பிறகு போக்கு மாறிவிட்டது. வெயில்

தாங்கவில்லையென்பது, சுணை ஒத்துக் கொள்ளவில்லையெனச் சலித்துக் கொள்வது. வடிவேலுக்குப் பொறி பறக்கும். ஏதோ வயசுக்கோளாறில் அவசரப்பட்டு வெறும் சில்லானைக் கொண்டுவந்துவிட்ட காந்தாளத்தை மறக்க முற்படும் போது இவள் திரும்பத்திரும்ப சீண்டவும், அவன் வைத்துவாங்கித் தவுடு தள்ளுவான். நேற்றும் நல்ல வளையம் போலிருக்கிறது. ராசோக்கியம் அவள் சொல்கிறதை வைத்து ஊகித்துக்கொண்டார்.

கழுவிய ஏனங்களின் தண்ணீரை வடித்துக்கொண்டே பாஞ்சாலைதான் சொன்னாள் " ஆமாண்டி. அப்பிடியே மாமஞ் சொல்ற ஞாயத்த கேட்டுகிட்டுப் போயி நூலு தவறாம குடும்பத்த நடத்தப்போற. இது ஆயிரத்தி ஓராவது தடவ. கேட்டுக் கேட்டு காதுதான் புளிச்சிப்போவுது."

" நா ஒண்ணும் ஓங்கிட்ட வல்ல. எப்பியும் மொவஞ் செய்றது தான் சரின்னு சாதிப்ப நீனு. நீ போயி வேலயப் பாரு. நா மாமங் கிட்டதான் சொல்லிக்கிட்டு இருக்கறன்." மறித்துப் பேசிவிட்டு ராசோக்கியம் பக்கம் திரும்பினாள். அவர் ரத்தினவேல் " உம்" என்றதும் எழுந்து என்ன ஏதுவென்று பிரித்துக் கேட்காமல் மோடாமொத்தமாக அவளிடம் சொன்னார் " சரி நா சாயந்திரமா வடிவேலு வந்தா விசாரிக்கிறன் நீ போ." அவளை ஆயக்கட்டினார்.

" சொல்லி வைய்யி மாமா. நானும் ரெண்டு புள்ளிவோ தெருவுல நின்னு தெவைச்சிடும்னு பாக்கறன். இல்லன்னா..." தேவகி வேகமாகச் சொல்லிவிட்டுக் கிளம்பியதும் நடையில் நின்றிருந்த பாஞ்சாலை " க்கும்.." என ஒரு முக்கு முக்கினாள். நொடிந்து போகிற மாதிரியான அந்த முக்கல் சத்தத்தில் தோட்டத்துப் படலைத் திறந்துகொண்டு தேவகி முனறியபடி போனாள் " தா தோங்கிற இந்த நெய்வேலிக்காரப் பயலுவோ பட்டுன்னு மெனக்கிட்டானு வோன்னா பரவாயில்ல. பல்லப் புடுங்கறமாதிரி இந்த பத்துக் காணி தரையையும் புடுங்கறப்பதான் தெரியும், இவுரு மெரட்டலும் மெப்பும். அதுவரைக்கும் இதுவோகிட்ட பஞ்சாயத்து கொண்டாந்து வைச்சிக்கிட்டு பங்கப்பட்டுத்தான் நிக்கணும்."

பள்ளிக்கூடத்துப் பையை ஆணியில் மாட்டிய சுருக்குத் தெரியாமல், வாசலில் வந்து நின்ற பூமா கேட்டாள் " சோறு இருக்கா எம்மா..." அதே அவசரத்தில் அங்காண்டப் பக்கம் அம்பு சாட்சி வீட்டில் வைரம், தங்கம், கசப்பு எல்லாரும் ஆளுக்கொரு தட்டை எடுத்துக்கொண்டு சோற்றுக்குப் பிரிகட்டி அடித்துக் கொண்டிருந்தார்கள்.

பாஞ்சாலை எரிபுரி என விழுந்தாள் “ ஏண்டி, ஒரு வயசிப் புள்ள... பள்ளிக்கொடத்துலேர்ந்து வந்தா, சட்டத்துணிய மாத்திகிட்டு கைகாலக் கழுவிட்டு, வூடு வாசல கூட்டித்தள்ளும்னு பேரு. வந்ததும் சோறு சோறுன்னு, பள்ளிக்கொடத்திலியே ஒனக்கு சோத்தும்பேர்லதான் ஓசன ஒடியிருக்கும் போல்ருக்கு. நீயிலாம் படிச்சிக் கிழிக்கப் போற...”

கத்திப்பெட்டியைச் சுருட்டிக்கொண்டே ரத்னவேல்தான் பொறுக்கமாட்டாமல் கேட்டார் “ என்னா பெரியாயி... பசியோட இருக்கற புள்ளையிட்ட போயி மூஞ்ச காட்டிக்கிட்டு. இருந்தா போட்டுச் சாப்புடச் சொல்லுங்க. இல்லன்னா ஆக்கி முடியுட்டும்னு சொல்லுங்க.”

“ ஒரு கை சோறு இருக்கு. ஓங்கிட்ட குடுத்து முத்தாலுகிட்ட தரச் சொல்லலாம்னு பாத்தன். நீனே சொன்னப்பறன் குடுத்துடறன், வெறுங்கையாப் போயன், எனக்கு என்னா கெடக்கு...” சண்டைக்காரனிடம் சொல்வதுபோல் சொன்னாள்.

பதறிப் போய்விட்டார் ரத்னவேல் “ அய்யய்ய... இங்க குடுங்க. அறியாப்புள்ள செத்த பசி தாங்கிக் கூட கெடக்கலாம். இன்னார் வூட்டுக்கு வேலைக்கி வந்துருக்கன்னு தெரிஞ்சாலே எதாவது வரும் புடியோடதான் வருவன்னு முத்தாலு எதுர்பாத்துகிட்டுக் கெடக்கும்.”

“ இந்தா யெக்கா... பெரிம்மா பொழுதுபோச்சினா அப்பிடித் தாம் பேசும்...” வேலிக்கும் அங்காண்டப் பக்கமிருந்து சோற்றுத்தட்டை நீட்டினாள் தங்கம். பூமா ஆவலமாய் வாங்கி வாயில் சூடு ஒட்ட ஒட்ட அள்ளிப் போட்டுக்கொண்டே வந்து வாசப்படிக்கல்லில் குந்தினாள்.

“ ஆறட்டும்டி. சோத்தையே பாக்காத மாதிரி அவட்ட மாட்டம் அள்ளிப் போட்டுக்கற...” பாஞ்சாலையின் பேச்சைக் காதில் வாங்காமல், பசி ருசியறியாது என்கிற மாதிரி அவசரம் அவசரமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

வாலை ஆட்டிக்கொண்டு அவள் காலடியில் துடுக்கு நின்றது. கண்ணில் ஆவலம். அவள் ஐந்தாம்வகுப்பு படிக்கும்போது கண் திறவாக் குட்டியாய் வந்தது. அப்போதிருந்து அவள் செல்லம். எந்நேரமும் காலை உரசிக்கொண்டு வாலை ஆட்டியபடி கூடவே நிற்கும். ஒரு கை சோற்றை அள்ளி கீழே கல்லில் வைத்தாள்.

ரத்னவேல் வேலை செய்த இடத்தில் கிடந்த முடிகளை கையால் அரித்து வேலிக்கு அப்பால் போட்டுவிட்டு வந்து கேட்டார் “ நாத்துலாம் வுடுலயா

மூத்தவர...”

“ எங்கடா... இந்த நெய்வேலிக்காரன் தெக்க நவுற நவுற கெணத்துல தண்ணி ஒண்ணும் எட்டிக்க மாட்டங்குது. ஒரு போரகீர போட்டுப்பாக்கலாம்னு பாத்தாலும் ஊருக்காரனுவோ மாதிரி நாம்பளும் யோசன பண்ண வேண்டிதாருக்கு. திடீர்னு நெய் வேலிக்காரன் ஏட்டக் கௌப்பிக்கிட்டு எட்டத்தப் போடான்னா என்னா பண்றது.” குரல் கரைந்து பெருமூச்சி விட்டபடி எழுந்தார். “ வூட்டுச் செலவுக்கு ஆவறமாதிரி திட்டமா ஒரு காகாணியாவுது நடணும்னு நாளைக்கி வெர வுடலாம்னு பாக்கறன்.”

“ நீ வேற! ஆரு சொன்னா மூத்தவர? இந்தப் பக்கம் கம்மாபுரம் ஏரியாவுல மைன்சு வர்லியாம். அப்பிடியே கெழக்க தெக்கு மேலூர், வானலாவரம் பக்கம்தான் போவுதாம். நீங்க பயப்படாம மேலைக்கி போரு போடற வேலயப் பாருங்க.” ஊர்த் தொழிலாளிக்கு, உள்ளூர் செய்தி மட்டுமல்ல உலகத்துச் செய்தியும் தெரியும் என்கிறமாதிரி ரத்னவேல் சொன்னார். அது ஓரளவு சரியாக இருப்பது போலவும் அவருக்குப் பட்டது. அதற்கு ஏற்றமாதிரி முதல் சுரங்கத்திற்குக் கிழக்கே தெக்குமேலூர், வானாதிராயபுரம் பக்கமெல்லாம் ஏற்கெனவே ஊரைக் காலி செய்து நிலங்கள், இடங்கள் வெறுமை யாகத்தான் கிடக்கின்றன. தெற்குப் பக்கம் வராமல், கிழக்குப் பக்கம் தள்ளிக்கொண்டு போய்விட்டால்... நல்லதுதான். மனத்திற்குள் அய்யனாரை வேண்டிக்கொண்டு முகம் கழுவுவதற்குப் போனார்.

ரத்னவேலும் பாஞ்சாலை கொடுத்த கிண்ணத்தை வாங்கிக் கொண்டு “ வர்றங்க...” என்று படலைத் திறந்தார். பூமா தட்டுக் கோப்பையைக் கழுவித் தண்ணீரை வாசலில் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

“ கொல்லிக்கா பெரிதம்பி...” ரத்னவேல் கேட்பது காதில் விழுந்ததும் பூமா திரும்பினாள்.

“ ஆமா ரத்னவேலு.” வேலிக்கும் வெளியே வழிநடையில் சிகாமணி. பூமாவுக்குள் படபடவென ஒருவார காலமாய் கொஞ்சிக் கொண்டிருந்த குருவிகள் சிறகசைக்கவும், தாங்க முடியாத மகிழ்ச்சி. அதேபோன்று ஏதேச்சையாய் திரும்பிய அவனது கண்களிலிருந்து ஓரிரு குருவிகள் அவளை நோக்கிப் பறந்து வருவதுபோல் தோன்றவும், யாரும் கவனிக்கவில்லையென்கிற துள்ளலில், ஆவலாய் இவளும் குருவிகளை அனுப்பிவிட்டாள்.

*

5

பா ரினில் கீர்த்தி பெற்ற தீரன்

நல்ல பலகலைவேதம் சாஸ்திரம் கற்றேன்

பலமுள்ள வில்லும் கைதனில் பெற்றேன்

பற்குணன் என்றிடும் மாறன்

இடுப்புச் செருகலிலிருந்து ஒரு வாலைப் போல இந்தாண்டப் பக்கம் தொங்கியபடி கோவணம். வீட்டுக்கு முன்னாலிருந்த சிமிட்டிக் கட்டையில் குந்தியிருந்த செங்கல்வராயருக்கு பாட்டு பறக்கிறது. தெற்கே மும்முடிச் சோழகன் பக்கம் போகிற டிப்பர்காரன் வாரியடித்த புழுதியில் கூட அசராத பாட்டு. தன்னைக்கடந்த போதையிலும் சுதிசுத்தம் குறையவில்லை. தலையில் கூட்டி அள்ளிக் கொண்டை போடலாம் என்கிறமாதிரி கனத்த முடி. ஒரு காரியங்கவைக்குப் போகிறபோது மட்டும் கோவணத்தின் மீது வேட்டி பாவும். மீறி சட்டையைப் போட்டாலும் போட்ட சுருக்கு மாறாமல் கழன்று தோளுக்குத் துண்டாய்ப் போய்விடும்.

அண்மைக் காலம் வரை கூத்தாடியவர்தான். வீரன், சூரன் போன்ற எடுப்பான துடிப்பான வேடங்கள்தான் அவரின் ஆட்ட வோட்டத்திற்குத் தோதாக இருக்கும். கிரீடத்தில் கோழி மயிர்ச் செருகல். முகத்தில் கரிப்பூச்சு, தாளக்கட்டில் பம்பரமாய்ச் சுற்றல். அதைவிடவும் கருப்புத்துணி கட்டிக்கொண்டு, கடைவாயில் பற்களோடு காளியாக வந்தால், தீட்டத்தடுக்கு உள்ளவர்கள், மாசமாய் இருப்பவர்கள், கைக்குழந்தைக்காரிகள் எல்லாம் எதற்கு வம்பு என்று வீட்டுக்குக் கிளம்பி விடுவார்கள்.

போகிற வருகிற இடத்திலெல்லாம் போதை. கூத்துப் பார்க்கிற பெண்களின் கண்களை வைத்தே, உள்நுட்பம் கண்டு போய், கதவு தட்டல்கள், கீப்புகள், சேர்மானங்கள். போடுகிற வேடத்தைப் போன்றே துடியான பேச்சு. முன்கோபம். வழியே போகிற வம்பைக்கூட வட்டியோடு வாங்கி ஊர் சிரிக்க வைக்கிற அவலம். வயதானதும் துடிப்பான வேடம் கொடுக்காமல், உப்புசப்பில்லாத தலைப்பு வேஷம் கொடுக்க ஆரம்பித்ததும் விடிய விடிய சில்லாந் தட்டிக்கொண்டிருக்காமல் கூத்தை விட்டு நின்று விட்டாலும், சதா போடுகிற போதையில் நித்தம் கூத்தும் பாட்டும்தான். நிக்கிற

இடத்திலெல்லாம் வம்புதான். சண்டைதான். இவர் ஆடிய ஆட்டத்திற்கு அசலாம்பு மட்டும் வீட்டுக்காரியாய் வந்து வாய்த்திருக்கா விட்டால், கருத்தா படையாச்சி வாங்கி வைத்துவிட்டுப் போன எல்லா நிலபுலங்களையும் விற்றுத் தத்தம் பண்ணி எப்போதோ தெருவுக்கு வந்திருப்பார்.

மந்தாரக்குப்பத்திலிருந்து வந்துகொண்டிருந்த சிகாமணிக்கு குடியிருப்பு வீடுகளைத் தாண்டி வரும் போதே அப்பனின் வசனமும் கவியும் காதில் விழுந்தது. தூரத்தில் டீக்கடையில் குந்தியிருப்பவர்கள் எல்லாமும் வேடிக்கை பார்க்கிறார்கள். பறக்கிறது அவனுக்கு. வேகமாய் வந்து வாசலில் சைக்கிளை நிறுத்தியதும், செங்கல்ராவுக்கு லேசாய் குரல் அடக்கத்திற்குப் போனது. சிகாமணி கோபமாக வீட்டிற்குள் நுழைந்தான். அருகாலுக்கு உயரே டாக்டர் அய்யா புகைப்படத்தில் சிரித்துக்கொண்டிருந்தார்.

“ எம்மா எம்மா...” கடை, பட்டாசாலை என அவனது குரல் எங்கும் எதிரொலிக்க, தோட்டத்து வாசல் அடுப்பில் ஊதிக் கொண்டிருந்த அசலாம்பு கொத்திப் பிடுங்காத குறையாய் எரிந்தாள். “ ஏண்டா இப்ப அவட்டமாட்டம் அடிச்சிக்கிற. என்ன என்னா வேதியா வாரிக்கிட்டுப் பூட்டுது.” அவளது பாய்ச்சலில் அவன் சொல்ல வந்ததைக் கூட மறந்துபோய் திகைத்து நின்றான்.

ஊதியதில் கனன்ற நெருப்பு கப்பென்று பிடித்ததும், திரும்பி கொஞ்சம் சாந்தமாகக் கேட்டாள் “ என்னாடா...”

“ அந்த ஆளு வாசல்ல போதையில குந்திக்கிட்டு மானத்த வாங்கறான். கூத்துப் பாக்கற மாதிரி போற வர்ற சனங்கள்லாம் வேடிக்க பாக்குதுவோ. செத்த உள்ள கூப்புட்டு ஒக்கார வைய்யின்னு சொல்லலாம்னு பாத்தா நீ எனுமோ இப்பிடி ஏம் மேல பாயற...” சொல்லிவிட்டு சுவரோரம், தண்ணீர் குடமிருக்கிற பூஞ்செடி அடம்புகள் எல்லாவற்றிலும் எதையோ தேடிக்கொண்டிருந்தான். தேடியது கிடைக்காமல் போனதும் திரும்பி அவளிடம் கேட்டான் “ ஏம்மா இந்த சுண்ணாம்பு கரைக்கிற வாளி எங்க...” அவளிட மிருந்து பதில் ஏதும் வராமலிருந்ததும், எரிச்சலாகத் திரும்பிப் பார்த்தவன் அப்படியே திடுக்கிட்டுப் போய்விட்டான். அசலாம்பு வின் கண்களில் கலகலவென்று இறங்கிக்கொண்டிருந்தது.

“ எம்மா...” பதறிப் போய்விட்டான்.

“ ரோட்டுல பங்கப் படுத்தறான்னு, நீ உள்ள கூப்புடுறங்கற. இங்க காரஞ்சாரமா கருவாட்டுக் கொழம்பு வைச்சிக் குடுக்கலன்னு, எட்டி

ஒதைச்சி ரணகளம் பண்ணிட்டு இப்பதான் வெளியில போய் குந்தியிருக்கான். நா, இந்த கூத்தாடிப் பயகிட்ட எப்பிடி கொற காலத்தையும் ஓட்டுவன்னு தெரியிலிய... கம்னேட்டி பய போதய போட்டுட்டான்னா கண்ணுமண்ணு தெரியாத பூடும் போல்ருக்கு." மூக்கைச் சீந்தி அடுப்பில் போட்டாள். பிறகு அதை ஏன் அவனிடம் சொன்னோம் என்கிற மாதிரி பேச்சை மாற்றினாள். " அந்த வாளி, மின்னால பட்டாசாலையில கெடந்துது பாரு."

அம்மாவைப் பார்த்துக்கொண்டே நின்றான். லேசான கனத்த உருவம். அடுப்புப் புகையோடு அப்பனின் அடாவடியும் சேர்ந்து காய்ந்து கருவடைந்து போய்க் குந்தியிருக்கிறாள். இந்த விஷயத்தில் அப்பனிடமும் சிகாமணி போய் எதுவும் கேட்டுவிட முடியாது. எதாவது ஒன்று பட்டு ஒன்று வளர்ந்து வார்த்தை தடிக்கும்போது, அம்மா சுவர்மாதிரி வந்து குறுக்க நின்றுவிடுவாள். " இன்னைக்கு நேத்தா பட்டுக்கிட்டு கெடக்கறன். இந்தக் கூத்தாடிப் பயகிட்ட கழுத்த நீட்னதுலிருந்து இதே கண்காட்சிதான். பொறந்த நோறு புளி ஊத்திப் பொங்கினாலும் போவாது.. வுட்டுட்டுப் போயி வேலயப் பாரு." இப்படி அணை போட்டுப் போட்டு, அம்மாவே தான் அவரைக் கெடுத்து இந்த அளவுக்கு வளர்த்துவிட்டது.

பட்டாசாலையில் கிடந்த வாளியை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். " தீரத் துரியோதன பூபதி நானே..." கொலுவுக்கு வந்தவர் இவனைப் பார்த்துவிட்டு நிறுத்திக் கூப்பிட்டார் " சிகாமணி..."

இவன் காதில் வாங்காமல் சைக்கிள் கேரியரின் கிளிப்பை இழுத்து வாளியை வைத்தான். தோளில் கிடந்த மஞ்சள்துண்டை எடுத்துத் தலையில் கட்டிக்கொண்டு, முன்னால் மாட்டியிருந்த பையில் சுண்ணாம்பு, வண்ணப்பொடிகள் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்துவிட்டு சைக்கிளை தள்ளினான்.

" டேய் தம்பி, நாம்பல்லாம் ஆண்ட பரம்பரடா. டாக்டர் அய்யாவ பயப்பட வேணான்னு சொல்லு. இந்தக் கர்த்தா படாச்சி மொவன் செங்கல்ராவு இருக்கற வரைக்கும் நம்பள எவனும் ஒண்ணும் பண்ண முடியாது" போதையில் கடந்து பேசிக்கொண்டிருந்தார்.

சைக்கிளில் ஏறப்போகிற நேரம், எதிரில் உள்ளூரில் வாக்கப் பட்ட வெள்ளைச்சி அத்தை தொளுக்க சதை விழுந்த உடம்பைத் தூக்கமுடியாமல் தூக்கியபடி வந்துகொண்டிருந்தாள். சிகாமணி தேங்கி நின்றான். தங்கையைப் பார்த்ததும் செங்கல்ராவுக்கு பேச்சு சற்று ஓய்வுக்கு

வந்தது. பஞ்சாயத்தம் வைக்கிற மாதிரி கிட்ட வந்து, சிகாமணியிடம் சொன்னாள் " கம்பு அடிச்சி எம்மாம் நாளு ஆவுது. அசலூர்ல இருக்கற அத்தைய வுடு. உள்ளூர்ல இருக்கற அத்தை யாச்ச. மூட்டக் கணக்குல குடுக்க மாட்டிங்கன்னு எனக்கும் தெரியும். அத வுடுங்க. ஒரு பத்துப் படியாவுது குடுத்தா ஒரு புட்டுகிட்டு சுட்டுத் திங்கமாட்டனா. ஊம்... ஏஞ் சங்கிலி அஞ்சி பவுன வித்து, அண்ணனாச்சேன்னு இந்த நெலத்த வாங்கி வுட்டன். அந்த கதலாம் இன்னைக்கி இங்க யாருக்குத் தெரியும். மீறிச் சொன்னாலும் எப்பிடி மேவும்" சொல்லிக்கொண்டே அண்ணன் குந்தியிருந்த கட்டையில் தானும் குந்தினாள்.

அத்தை வந்திருப்பது, அம்மாவுக்கு எப்படித் தெரிந்தது எனப் புரியவில்லை. அரவப்படாமல் நடையில் வந்து நின்று கொண்டிருந்த அவளுக்கு எரிச்சல். கேட்டுக் கேட்டு சலித்துப்போன நாத்தனாரின் பழைய கதைகள். பட்டென்று திரும்பிய செங்கல்ராவு அந்தப் போதையிலும் கல்லால் எறிவதுபோல் வெள்ளைச்சியிடம் பேசினார் " அந்த அஞ்சி பவுன குடுத்துட்டு ஆம்படையானும் பொண்டாட்டியும் நடையா நடந்து நடபோட்டுத் தேய்ச்சி, நெல காலுமேல நின்னு, நெத்தியில கல்ல வைச்சி வாங்கறமாதிரி பத்துப் பவுனா வாங்கிட்டுப் போன கதையையும் அப்பிடியேகூட சேத்துச் சொல்லு. எப்பவும் அஞ்சி பவுனு அஞ்சி பவுனுன்னு மொட்டையாப் பேசாத."

அத்தைக்கு முகம் சுருங்கிவிட்டது. சிகாமணிக்கும் ஒரு மாதிரியாகப் போய்விட்டது. அப்பாவின் கூடப்பிறந்த மூன்று பேருமே பெண்கள். உள்ளூரில் கொடுத்த இந்த வெள்ளைச்சி அத்தைதான் மூத்தவள். நடு அத்தை ராசாமணியை ஊத்தாங்காலில், பட்ராசு மாமாவிற்குக் கொடுத்தது. நல்ல வலுத்த குடும்பம் அது. அப்பாவின் கடைசித் தங்கச்சியைப் பற்றி இவன் யாரிடமாவது பேச்சுப்பெறாக்கில் கூட வாய்தவறி ' அத்தை' என்று சொல்லி விட்டால் போச்சி. ' அந்த ஓடுகாலியாடா ஒனக்கு அத்த?' ஓடிப் போய் கல்யாணம் செய்துகொண்ட கம்சலா அத்தை, நாலு வருடத்திற்கு முன்பு தாலியறுத்த துக்கத்திற்குக்கூட இங்கிருந்து யாரும் போகவில்லை.

ஆரம்பகாலத்தில் இவர்களுக்கு ஆடுகள் இருந்தபோது வெள்ளைச்சிக்குதான் மேய்ப்பு வேலை. மேய்ச்சக்காலில் உள்ளூர் மேய்ப்பர் காசி படையாச்சி அறிமுகம். நாளாவட்டத்தில் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்க முடியாத பாசமும் நேசமுமாக இழை பற்றிக்கொண்டது. காசிக்கு நிலபுலம் இல்லையென்றாலும் நூற்றம்பது உருப்படிக்கு மேல் ஆடு குட்டிகள். கல்யாணத்திற்கு சீதனமாகத் தான் மேய்த்துக் கொண்டிருந்த

ஆடுகளோடு போய் காசி படையாச்சிக்கு வாழ்க்கைப் பட்டாள். போன நேரம், ஆட்டு மந்தை பெருகிக்கொண்டேயிருந்தது. நிலபுலன்களை வாங்கியிருக் கலாம். ஆடுகளை வைத்துக்கொண்டு மாரடிக்க முடியாது என விவசாயம் பக்கம் போகவில்லை. இருப்பு கெட்டியாக இருக்கிறது. பையன் மணிமாறன் கடலூரில் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான். மகள் அமிர்தகலசம் வயதுக்கு வந்து ஆறுமாதம் ஆகிறது. தாட்டிகையான உடம்பு. ஆத்தாளும் மகளும் ஒன்றாக நின்றால் அக்காள் தங்கை என்றுதான் சொல்லவேண்டும்.

அத்தைக்கு வாய்த்த காசி மாமாவுக்கு நாள் முழுவதும் கோடு கோடாய்க் கிழித்துப் போடும் இந்த வெற்றிலை அடக்கலைத் தவிர வேறு எந்தப் பழக்கமும் கிடையாது. மழையோ வெயிலோ, தலையில் துண்டா வேட்டியா எனப் பிரித்தறிய முடியாதபடி ஒரு படுதாவைப் போன்று நிழலுக்கு கிடக்கும். கோவணச் சுருள் முட்டனத்தை மறைத்து வளைத்து இடுப்பில் துண்டு கட்டிக்கொண்டு சதா ஆடு பின்னால் கோட்டுக்கழியோடு நிற்பவர். சாயந்திரம் வரும்போது பெரும்பாலான நாட்களில் கட்டாயம் கையிலோ தோளிலோ மேய்ச்சக்காலில் போட்ட பூங்குட்டிகள் இருக்கும்.

சந்தைக்குச் சந்தை வியாபாரிகள் வந்து கிடாக்குட்டிகளை நிரைநிரையாக ஓட்டிப்போக, அத்தை நல்ல வசதி வாய்ப்பாக இருப்பவள்தான். ஆனாலும் ஆத்தாள் வீட்டிலிருந்து அண்ணன் கையால் வாங்கிப்போய்த் தின்பதில் அவளுக்கு அத்தனை நாட்டம்.

“ பத்துப் படி என்னா அத்த, அர மூட்டைக்கா நாளைக்கி கொண்டாந்து வூட்ல போடறன்.” சிகாமணி ஏறி சைக்கிளை மிதித்துக்கொண்டு அறிவழகன் வீட்டுப் பக்கம் போனான்.

*

6

“ **கா** சாம்பு, ஒரு சொம்பு தண்ணி மொண்டாடா சாமீ...” ரங்கநாத படையாட்சி ஆள் உயரம் அளவிற்குப் பின்னி முடித்த குடலியைப் பெருமிதமாகப் பார்த்துவிட்டு உள்ளே திரும்பிக் கேட்டார். குடலியைச் சுற்றிக் கிடந்த காட்டாமணிக் கழிகளை எடுத்து ஓரம் போட்டுவிட்டுக் குந்தினார். இடுப்பிலிருந்த அண்டராயர் வறும்பு மட்டத்தைத் தாண்டி நாடா தொங்கி மண்ணில் புரண்டது. மார்பு கொள்ளாது முடிகள்தாம். எல்லாம் வெளுத்துக்கிடந்தன. வழுக்கைத் தலையில் திவலை திவலையாக வியர்வை தேங்கி நின்று உருள்வதற்குத் தயாராய்த் திரண்டு கொண்டிருந்தது.

“ பின்னுன இந்தப் பத்துக் கொடலியிலும் கன்னு வச்சி மரம் உண்டாக்கனா போதும். பொழுது போவுது. வெந்நீர் போட்ருக்கன். வந்து குளி.” சொல்லியபடி தண்ணீர்ச் செம்பை நீட்டியவளுக்கு குரல் தேய்ந்து போயிருந்தது. கணுக்கால் வரை சுருங்கி மேலேறிய புடவை. நைந்த ரவுக்கை. காதிலும் மூக்கிலும் காயாம்பூ வாழ்க்கைப் பட்டு வந்த காலத்தில் செய்து போட்ட பழைய நகைகள்.

வாயில் ஆவலாய் ஊற்றிக் கொப்பளித்துவிட்டு தண்ணீரைக் குடித்தார். சிந்திய தண்ணீர் தாவாங்கட்டையிலிருந்து வழிந்து நெஞ்சில் இறங்கி வயிற்று மடிப்புகளில் குறுக்காய் ஈரம் கோர்த்தது. “ நம்ப என்னா அவ அவனாட்டம் பத்து ஏக்கரு பாஞ்சி ஏக்கரா நெலம் சம்பாரிச்சி வைச்சிருக்கறம். இருக்கறது நொள்ள நாலு ஏக்கரும், பன்னிக் குடிச மாதிரி இந்த கூரவீடுந்தான். இதுக்குமேல எங்க போயி வாங்கப்போறம். அதான் இருக்கறதுல நாலு மர மட்டய வைச்சி உண்டாக்கனா... காய்க்கிதோ இல்லியோ மெய்யா பொய்யா நாளைக்கி நெய்வேலிக்காரன், எடுக்கறதாயிருந்தாலும் கன்னுக்கராசி இருக்குன்னு பின்னம் பத்துரூவாய சேத்துக்குடுப்பான்.” எத்தனையோ முறை சொல்லுகிற வாய் வாக்கியந்தான்.

ரெங்கநாத படையாச்சி நினைத்திருந்தால் வேப்பங்குறிச்சியில் இவரும் பத்து ஏக்கருக்கு ஒழவடி பாத்தியம் உடையவராய் இருந் திருக்கலாம். இவருக்கு, பிள்ளைகளின் படிப்பு மேல் ஓடிவிட்டது யோசனை. மகள் ராஜவள்ளியை வாத்தியாருக்கு படிக்க வைத்தார். படித்து முடித்ததுமே நெய்வேலியில் வேலைசெய்கிற மாப்பிள்ளை, வாய்ப்பு வந்தது. கழுத்தில்

சரடு ஏறிய நேரமோ என்னவோ அவளுக்கும் வேலை வந்து இப்போது டவுண்ஷிப்பில் குடும்பம். முத்தாண்டிக் குப்பத்து அரசுப் பள்ளியில் வேலை. ஆண்டவன் புண்ணியத்தில், நடக்கிற பிள்ளை ஒன்று கையில் இருக்கிறது.

இப்போதெல்லாம் அவருக்கு ஒரே கவலை மூத்தவன் அறிவழகனைப் பற்றிதான். விருத்தாசலம் கல்லூரியில் எம்.ஏ. வரை படித்தவன். வயது 27க்கு மேல் ஆகிறது. வேலை கிடைத்த பாடில்லை. முதல் அனல் மின் நிலையத்திற்கு அவ்வப்போது அத்துக்கூலி சூப்பர்வைசர் வேலைக்கு ஓடுவான். பிறகு வேலை இல்லையென்று நிற்பான். ஆனாலும் வன்னியர் சங்கத்தில் இந்தப் பகுதியில் முக்கிய நபராக இருப்பதும், மாவட்டப் பொறுப்பாளர் குறள்மணி போன்றோர் வீடு வரை வந்துபோவதும் டாக்டர் அய்யா வரை பழக்கம் இருப்பதும் அவருக்கு, அவன்மீது பெரும் மதிப்பும் மரியாதையும் கொள்ள வைத்திருக்கிறது. அதைவிடவும் சுவரில் மாட்டப்பட்டிருக்கும் டாக்டர் அய்யாவுடன் நிற்கும் அவன் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் பெரிய பூரிப்பு.

வா சலில் சைக்கிளை கொண்டுவந்து காலூன்றியபடி சிகாமணி கேட்டான் " அண்ணன் வூட்ல இல்ல... பெரிப்பா..."

ரங்க படாச்சி சொல்வதற்குள் காசாம்பே சொன்னாள் " தம்பி இப்பதான் வெளியே எங்கியோ போய்ட்டு வந்து குளிக்குதுப்பா. இப்படி வந்து குந்து." சுவரில் சாத்தியிருந்த மடித்த நாற்காலியை எடுத்து வந்து போட்டுவிட்டு உள்ளே போனாள்.

" நாங்க ரெண்டு பேருந்தான் வடலூர் வரைக்கும் போயிருந்தம்."

உள்ளேயிருந்து அறிவழகன் கொஞ்சநேரத்தில் கூப்பிட்டான் " சிகா..."

" தே வர்றன் அண்ண." சிகாமணி உள்ளே போனான். வீட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் ஏகப்பட்ட விளம்பரத் தட்டிகள். டாக்டர் அய்யா படங்களுடன் கூடிய சுவரொட்டிகளும் மஞ்சள் கொடிகளும் தாறுமாறாய் இறைந்துகிடந்தன. " சுண்ணாம்பு வெளக்கமாறும் பிரஷ்சும் கெடக்கும் பார்டா." உள் வீட்டிலிருந்து அறிவழகன் குரல் அவசரப்படுத்தியது.

" சன்னல் கிட்ட செவுத்துமேல இருந்துதுப்பா..." காசாம்பு வாசலில் நின்று உள்ளே பார்த்துச் சொல்லிக்கொண்டிருந்த நேரம், வாசலில் எதுவோ

பொத்தென்று விழவும் திடுக்கிட்டார்கள். திரும்பினால், கீரையன். தலையிலிருந்த ஈச்சங்கழிகளின் கத்தையை நின்ற நிலையில் போட்டுவிட்டு, ரொம்பவும் கோபக்குறியில் இருப்பது மாதிரி காசாம்புவிடம் பஞ்சாயத்தம் வைத்தார் " இந்த நாயத்த நீனே கேளு பெரியாயி. நா, இந்த ஈச்சங்கழி, தட்டுக் கொடின்னு அறுத்து புட்டி, தட்டுக்கூடன்னு பின்னி வித்து பொழப்பு ஓட்ற பய."

இடையில் ஊசலாடும் கோவணத்துணியைப் போன்றே தலையில் சுற்றியிருந்த துணியை அவிழ்த்துத் தோள்மேல் போட்ட படி பேசும் கீரையனை கவனித்த காசாம்புக்கு புரிந்துவிட்டது. அதற்குத் தகுந்த மாதிரி பதிலுக்குக் கொடுக்க சரியாகப் பொருந்து கிற வார்த்தைகளையும் ரங்கநாது தேடிக்கொண்டிருப்பது போல் பட்டது. சிரிப்பை அடக்கியவாறு காசாம்பு கேட்டுக் கொண்டிருந்தாள்.

" போன வாரம் மறிச்சியில ஈச்சங்கழி கழிக்கக்குள்ள நெறையா தெரணிச் சிம்புவுள பாத்து வைச்சிருந்தன். சரி இன்னைக்கிப் போயி நாலு தட்டுக்கூடைக்கு ஆவறமாதிரி கழிச்சிக்கிட்டு வரலாம்னு போனா எல்லாம் மொட்டையா நிக்கிது. என்னாடா வேப்பங் குறிச்சியில நம்பளங்காட்டியும் வேற யாரு இருக்கற துன்னு அடி நடத்திக்கிட்டு வந்தா, நேரா இங்க கொண்டாந்து கொடலி பின்ற எடத்துல வுடுது. பெரிய கொறவரு இங்க கொடலி பின்னிக்கிட்டு கெடக்கறாரு."

கீரையன் வார்த்தையை முடிக்கவில்லை, கையில் இருந்த வாங்குக்கத்தியால் வீசிச் சீவிவிடுகிற மாதிரி எகிறினார் " அடங் கொக்காள... ஏமூட்டு மறிச்சியில போயி மொட்ட அடிச்சிட்டு, என்னியே... ஒன்ன..."

பொய்யாய் பயந்து ஒடுங்குவது போல் பாசாங்கு காட்டிச் சிரித்தார் கீரையன். காசாம்பும், எதேச்சையாய் வெளியே வந்த அறிவழகனும் சிரித்தார்கள். " இந்தப் பக்கம் வந்தா அவுரு வாயக் கிண்டி, வாங்கிக் கட்டிக்கிட்டாதான் ஒனக்கு பொழுதுபோன மாதிரி இருக்குமா கீரையா" சொல்லிவிட்டு காசாம்பு உள்ளே போனாள். வேப்பங்குறிச்சியில் கீரையனும் அவன் தம்பியுமாய் இரண்டே இரண்டு குடும்பங்கள்தான் குறவர் குடிகள். கூடைமுறம் பின்னுபவர்கள். தெற்கு வெள்ளூர் போகிற ஒழுங்கையை ஒட்டி வீடுகள். தாயாய்ப் பிள்ளையாய் ஊரோடு ஒட்டி ஓடுகிற பிழைப்பு.

*

7

“ எத்தினி தடவ சொன்னாலும் கேக்க மாட்டங்கற சின்ன பாப்பா. நெல்ல துணிமணிய கட்டிக்கிட்டு நில்லு. பிராயத்து புள்ள திடீர்னு வயசிக்கி வந்துட்டினா, அந்தப் பாவாட சட்டை ஏம் மொவளுக்கு ஆவும்னு சொன்னா எங்க கேக்கற. எனுமோ கரகாட்டக்காரி மாதிரி முட்டிக்கி மேல அரப்பாவாடயும் ஆம்பள சட்டையுமா நிக்கிற. இத நீ அவுத்துப்போட்டு, நா எடுத்துக்கிட்டுப் போயி இடுப்பு நோவ தொவைச்சி என்னா புண்ணியம். கரித்துணிக்கிதான் ஆவும்.” ஏகாலி அரசாயி கேட்டுக்கொண்டே படலைத் திறந்துகொண்டு உள்ளே நுழையவும், எதுவும் காதில் விழாதமாதிரி சாதாரணமாக பூமாதேவி விளக்கமாற்றைக் கையால் எடுத்து ஒக்கத்தட்டிக் கொண்டிருந்தாள். எதாவது வாயைத் திறந்து விட்டால் அரசாயியின் கேலியும் கிண்டலும் இன்னும் கூடிவிடும். மற்றபடி இந்த துணிமணி பற்றியெல்லாம் அவள் சொல்வது விளையாட்டுக்குதான் என்றாலும் லேசான எதிர்பார்ப்பும் அவளிடம் இருக்கத்தான் செய்தது. பூமா ஈட்டுப் பிள்ளைகள் எல்லாம் சமைந்து குந்தி தாலியைக் கொண்டா கொண்டா என்கிற மாதிரி நிக்கிறார்கள். இவள் மட்டும்தான் பாக்கி. வயசிக்கு வந்து உடன் மஞ்சத்தண்ணியும் வைத்துவிட்டால் அரசாயிக்கு கொண்டாட்டந்தான். ராசோக்கியத்துக்கு வண்ணார், பரியாரியார் என ஊர்த் தொழிலாளிகள் என்றால் ஏதோ கூடப்பிறந்த பிறப்பு மாதிரி. வஞ்சனை இல்லாமல் தாராளமாய் படி, மரியாதை, வெகுமதி செய்யக்கூடியவர்.

வயசுக்கு அது இதுவென அவளின் பேச்சு பூமாவுக்குள் லேசான வெட்கத்தையும் படபடப்பையும் தந்தது; ஆனாலும், ஏதோ கோபமாய் இருப்பதுபோன்று பொய்யாய் முகத்தை வைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

எதிரில் அம்மா முறத்தில் நொய்யரிசி எடுத்துக்கொண்டு வந்தவள் “ ஒனக்கு அவ வாயக் கிண்டலன்னா தூக்கமே வராதா” என்று சொல்லிக்கொண்டே விரித்துப்பிடித்த அரசாயியின் மடியில் கொட்டினாள்.

“ நீ சும்மா இரு பெரியாயி” இடதுகண்ணை அழுத்தி மூடி, பூமாவைப் பார்த்து சைகை காட்டியவள், வெறும் முறமாய்த் திரும்பக்கூடாது என்பதற்காக, மடிஅரிசியில் ஒன்றிரண்டை எடுத்துப் போட்டாள்.

அரசாயியிடமிருந்து தப்பித்தால் போதும் என்கிற மாதிரி விளக்கமாற்றோடு தெருவாசலுக்கு வந்தாள் பூமா. கோயில் சுவரில் யாரோ எழுதிக்கொண்டிருப்பது போல் பட்டது. ஊரில், நாட்டில் குறிப்பாய் வன்னியர் சங்கத்தில் என்ன நடக்கிறது என்பதை உள்ளூர்க்காரர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் இரண்டே இரண்டு இடங்கள்தான். ஒன்று மந்தாரக்குப்பம் குடியிருப்பு வீடுகளைத் தாண்டி ஊருக்குள் நுழைகிற இடத்திலுள்ள கம்மாக் கட்டை. அடுத்து இந்தக் கோயில் சுவர். தெருவைப் பார்த்தபடி இருக்கும் இந்தச் சுவரில் எப்போதும் ஏதாவது சேதிகள் எழுதப் பட்டிருக்கும். திண்ணையில் குந்தி நித்தம் பார்த்துப் பார்த்து மனப்பாடமே ஆகிவிட்ட அண்மைக்கால வாசகம்: " வன்னியர் சங்கம் **5**ஆம் ஆண்டு தொடக்கவிழா. இடம்: கலைவாணர் அரங்கம்" இப்போது வெள்ளை பூசப்பட்டு முழுதும் மறைக்கப் பட்டிருந்தது.

பக்கத்தில் நாலைந்து பேர் நின்றுகொண்டிருந்தார்கள். பெரிய தலையாக அறிவழகு மாமா தெரிந்ததும், பட்டென்று பூமாவிற்கு சந்தேகம் வந்துவிட்டது. அறிவழகு மாமா இல்லன்னா ' அப்ப எழுதறது யாரு?' எழுதுகிற நபரை ஊனாடிப் பார்த்தவளுக்கு, உள்ளுக்குள் லேசான சடசடப்பு. கம்மங்கொல்லை ஒரு கணம் அவளுக்குள் விரிந்து பெருகியது. குனிந்து பெருக்கினாள். தெருவில் படர்ந்த புழுதிப்படலத்துக்குள் சிக்கிய அவளுக்குள்... அவன் சிகாமணி.

" என்னா இன்னைக்கி ஒஞ் சட்ட போட்டுருக்க, ஒண்ணஞ் சட்ட எதுவும் கெடைக்கிலியா பூமா. போயி ஒரு சொம்பு தண்ணி மொண்டா..." நிமிர்ந்தவளுக்குச் கூச்சமாகப் போய்விட்டது. அறிவழகன்தான். " சும்மா ஊட்ல போட்டுக்கறதுக்கு மாமா..." விளக்க மாற்றைப் போட்டுவிட்டு ஒரு பட்டாம்பூச்சியைப் போல் உள்ளே ஓடினாள்.

வாசலில் நின்றுகொண்டிருந்த அறிவழகன், பின்னால் சத்தம் கேட்டுத் திரும்பினான். சதாசிவம் வேலைக்குப் போய்விட்டு வந்தவன் சைக்கிளை நிறுத்தியதும் நிறுத்தாததுமாகக் கேட்டான் " என்னா மாமா நின்னுட்டிங்க. திண்ணையில குந்த வேண்டிதான."

" சும்மா தண்ணி கொஞ்சம் வேணும் மாப்ள" சொல்லியபடி, திண்ணையை ஒட்டி நின்றவன், ஏதேச்சையாய் அருகால்படியின் மேல் சுவரில் மாட்டியிருந்த அய்யா படத்தைப் பார்த்தான். படத்தின் கீழ் பகுதியில் எதுவோ ஒட்டப்பட்டிருந்தது கண்டதும் நடையில் கிட்டப்போய்ப் பார்த்தான். ராசோக்கிய படையாச்சியின் உறுப்பினர் கட்டணம் செலுத்திய ரசீதையும் ஒட்டி, கண்ணாடி ஃபிரேம் போடப்பட்டிருந்தது. " என்னா மாப்ள,

ஒங்க அப்பா உறுப்பினரு ஆனதோட வுட்டுட்ட. சங்கம் கூட்டம்னு நீ எதிலியும் தலய காட்ட மாட்டங்கற. நம்ப எல்லாருக்கும் சேத்துதான் இட ஒதுக்கீடு வேணுமின்னு நம்ம அய்யா மாரடிச்சிக்கிட்டு கெடக்கறாரு.”

சட்டைக் கொத்தான்களை அவிழ்த்தபடி உள்வீட்டில் நின்று கொண்டிருந்த சதாசிவம் தயங்கித் தயங்கி இழுத்த மாதிரி சொன்னான் “ அப்படிலாம் ஒண்ணுமில்ல மாமா... இந்த வேலைக்கி ஓடறதால...”

அறிவழகனுக்கு ஒருகணம் என்ன சொல்வதென்று தெரிய வில்லை. தெருவுக்கு இறங்கியபடி சொன்னான் “ என்னா மாப்ள... ஒரு படிச்சவன், நாலு எடத்துக்குப் போறவன், நீனே இப்பிடி வேலகீலன்னு பாராமுகமா இருந்தா என்னா அர்த்தம். யாருக்குத்தான் வேல இல்ல?”

தெருவை அடைத்தபடி மேய்ச்சக்காலிலிருந்து திரும்பிய மாடுகள் கடந்து போய்க்கொண்டிருந்தன. ஒதுங்கி நின்றான். “ மாமா...” குரல் பின்னுக்கு இழுத்தது.

பூமாதேவி தண்ணீர் செம்பை நீட்டினாள். வாங்கி, வாயில் ஊற்றிக் கொப்பளித்துவிட்டுக் குடித்தான். ஆளுயுரம் அளவிற்கு உயர்ந்த மாட்டாங்கால் புழுதியைத் தாண்டி சுவரில் எழுதிக் கொண்டிருந்த சிகாமணியைத் திரும்பவும் பார்க்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது.

கடந்துபோன கும்பல் மாடுகள் போட்ட சாணியை எடுக்கிற சாக்கில் பார்த்தாள். நெற்றிச் சிவப்பை இழைத்துப் பூசிய வண்ணத்தில் ‘ அய்யா அழைக்கிறார். ஒரு வார தொடர் சாலை மறியல் போராட்டம் ஏன்? மாபெரும் விளக்கப் பொதுக்கூட்டம். நாள்: **05.10.86** மா லை **3.00** மணி. இடம்: கடலூர் மஞ்சை நகர் மைதானம்’. படிக்கிற சாக்கில் பார்வை, எழுதிக்கொண்டிருந்தவன் மேல் ஓடியதில் கை, சாணியைவிட்டு மண்ணைப் பிறாண்டியது.

“ ஒனக்கு தண்ணி வேணுமாடா...” கோயில் பக்கம் திரும்பி சிகாமணியைப் பார்த்துக் கேட்டதும் பூமாதேவிக்கு பக்கென்று போய்விட்டது. பதறி நிமிர்ந்தவள் எட்டிப் பிடுங்காத குறையாய் சாணிக்கையோடு செம்பை வாங்கினாள்.

சதாசிவம் வீட்டுக்குள் இருந்துவிட்டான். இல்லையென்றால் அவனுக்கும் இப்படி அறிவழகன் கேட்டது அதிர்ச்சியாய்ப் போயிருக்கும். அதேநேரம் வெடுக்கென்று திரும்பிய சிகாமணி கையில் பிரஷ்சோடு இந்த வீட்டுடன்

பேச்சுவார்த்தை இல்லை யென்கிற மாதிரி அங்கிருந்தபடி சைகையால் தலையை அசைத்ததும், அறிவழகனுக்கு ஞாபகம் வந்துவிட்டது.

பூமா பீச்சக்கையில் இருந்த சாணியைக் கூரையோரம் போட்டுவிட்டு செம்பிலிருந்த மீதித் தண்ணீரை ஊற்றிக் கையைக் கழுவிக்கொண்டிருந்தாள். சூழலை மாற்றுகிறமாதிரி அறிவழகன் பூமாவிடம் சொன்னான் " ஒங்க அண்ணன மாதிரி பட்டும்படாம இருக்காத பூமா. ஒங்க அப்பா மாதிரி நம்ப அய்யா மேலயும், நம்ப சங்கத்து மேலயும் ஆதரவா இரு. அடுத்த வாரம் கடலூர்ல பொதுக்கூட்டம். அய்யா வர்றாரு. ஒங்க சித்தி, அங்காண்ட வூட்டு அக்கா எல்லாம் வருவாங்க. கட்டாயம் நீனும் வரணும்."

ஒப்புக்குத் தலையாட்டி விட்டு வீட்டுக்குள் நுழைந்த பூமா, சற்றே தேங்கி, லேசாய் தலையை மட்டும் பின்னுக்குக் காட்டி, எழுதிக்கொண்டிருந்த சிகாமணியை மீண்டும் பார்த்தாள். உள்ளுக்குள் கம்மங்கொல்லைக் குருவிகள் சிறகடித்தன.

*

8

கூண்டைவிட்டு வெளியே வந்த கிளி, ரொம்பவும் தயங்கித் தயங்கி, கம்பி வேலிக்குள் இருந்த நீதிமன்ற வளாகத்தை ஒரு நோட்டம் விட்டது. அரக்கப்பரக்கப் பேசிக்கொண்டும் ஓடிக் கொண்டுமாய் காக்கிச் சட்டைகளும் கருப்புச் சட்டைகளும், வழக்கில் அல்லாடிக்கொண்டு கிடக்கும் அழுக்குச் சட்டைகளுமாய் மனிதர்கள். எல்லோருமே கிளியின் பச்சை மனதிற்கு குற்றவாளி களாய்த் தெரிந்திருக்க வேண்டும், இந்த வழக்கிற்கு இன்ன தீர்ப்பை எழுதுவது எனத் தெரியாமல் வழக்குக் கத்தைகளின் முன்னால் திகைத்துப்போய் குந்தியிருக்கும் ஒரு நீதிபதியைப் போல எந்தச் சீட்டை எடுப்பது என்கிற தெளிவில்லாமல் சீட்டு அடுக்குகளின் முன்னால் குழப்பமாக நின்றுகொண்டிருந்தது கிளி. கிளியின் இந்தத் தடுமாற்றம் ஜோசியம் சொல்பவனை விடவும் நாடு நகரம் யாவற்றையும் இழந்த தருமரைப் போல, விசனமாய் இடிந்துபோய் குந்தியிருக்கும் காசி படையாச்சிக்குத்தான் மிகவும் கலவர மூட்டுவதாய் இருந்தது.

“ செல்வராணி, என்னா தயக்கம்! காசி என்கிற பேர் ராசிக்கு, நாளு நட்சத்திரம், நடையா நடக்குற இந்தக் காரியம் செயிக்குமா. நெனைச்சது கை கூடுமா? விலாவரி கெடைக்குமா? பாத்து பட்டுன்னு சொல்றா ஏ செல்லக்குட்டி.” இந்தமுறை வெறும் பாடத்தோடு இல்லாமல் கூண்டின் மேல்அறைக் கிண்ணத்திலிருந்து ஒரு தெறிப்பான நெல்மணியையும் எடுத்து நீட்டினார்.

கொடுக்கு அலகால் வெடுக்கென நெல்மணியை வாங்கிய சுருக்கில் உமிகள் கீழே உதிர்ந்தன. கிளி, காசியின் வெற்றிலை அடக்கத்தால் திரண்டிருந்த உப்பல் கன்னத்தையும், காவி படிந்திருந்த உதட்டையும் ஊனாடிப் பார்த்துவிட்டு, பார்வையை மெல்லத் தாழ்த்தி, சீட்டுக்கத்தைகளின் மேல் இறக்கியது. போனால் போகிறது என்கிறமாதிரி மேலே கிடந்த ஒரு சீட்டை எடுத்து எட்டப் போட்டுவிட்டு அவரை இளக்காரமாகப் பார்த்தது.

அடுத்த நெல்மணி கிடைத்ததும், ஒன்று தள்ளி இரண்டாவது ஒரு சீட்டை எடுத்துத் தந்துவிட்டு கிளி கூண்டுக்குள் நுழைந்தது. சீட்டை கையில் எடுத்தபடி சுற்றும்முற்றும் போய்க் கொண்டிருந்தவர் களை, வேடிக்கை

பார்த்து நிற்பவர்களை நோக்கி கிளி ஜோசியன் மௌனமாய் ஒரு மந்திரப் பார்வையைப் படரவிட்டான்.

காசி படையாச்சிக்கு சீட்டின் மேலேயே ஓடிக்கொண்டிருந்தது. தூரத்தில் மதிலோரம் வேப்பமரத்தடியில் செம்பட்டை பாய்ந்த முடிகள் பறக்க நின்றிருந்த செங்கல்ராவு கூட கிட்ட வந்தார்.

கனத்த அட்டை உறையின் விளிம்புகளில் அழுத்தத்தைக் காட்டி, விரிந்த இடுக்கில் விரலை விட்டு துருப்புச் சீட்டை கிளிக்காரன் உருவினான். தூரத்தில் நீதிமன்ற வாசலுக்கு எதிரே வெகுநேரமாய் வாசலில் நிற்கும் டவாலியின் குரலுக்கு ஏற்ப உள்ளே போகவும் வரவுமாய் தூரத்தில் இருக்கிறவர்களைப் பார்த்தபடி மதிலோரம் சாய்ந்து குந்தியிருந்த ராசோக்கியம்கூட, ஊடறுத்துப் போகும் கால்களின் ஊடே சோசியகாரனை நோக்கிப் பார்வையை இறுத்தினார்.

ஒரு குறுஞ்சிரிப்பை உதிர்த்துவிட்டு சீட்டைப் பிரித்தான். மும்முடங்கலில் நைந்த சீட்டில் இடை அறுந்து பரிதாபகரமாக பிள்ளையார். அந்த வாக்கிலேயே உறைமேல் படத்தைப் போட்டு விட்டு, கையைக் குவித்து உதட்டுக்கு முன்னால் வைத்து செருமிவிட்டு சொல்லத் தொடங்கினான் " யோகத்தில் மிகுந்தவரே, நேர்மையில் சிறந்தவரே, எதிர்க்கும் எவரையும் நேர் நின்று செயிப்பவரே! ஆனாலும் எட்டில் இருக்கும் கேதுனாலே எதிர்பார்க்கும் காரியம் அவ்வளவு சீக்கிரத்தில் முடியாது. கை கூடுவது மாதிரி தெரியும் ஆனால் கூடாது. இழுத்துக்கொண்டுதான் கிடக்கும்." அருவிபோல், கேட்பவரையெல்லாம் திரும்பிப் பார்க்க வைக்கிற கம்பீரக் குரலில் சொல்லிக்கொண்டே போனான். நீதிமன்ற வாசலைத் தாண்டி அவன் குரல் கேட்டதும் அங்கிருந்தவர்களும் திரும்பிப் பார்த்தார்கள். அவன் மிரண்டமாதிரி, பட்டென்று குரலை அடக்கத்திற்குக் கொண்டுவந்தான்.

' இழுத்துக்கொண்டு கிடக்கும்' என்கிற அவனின் வாய்ப் பிறப்பிலேயே நொறுங்கி போய்விட்டார் காசி. மாதா மாதம் ஆடு மேய்க்கிற வேலையைப் போட்டுவிட்டு இந்தக் கடலூர் கோர்ட்டுக்கு ஒரு நடை. வெட்டிச்செலவு. நீண்டுகொண்டிருக்கிற வழக்கு. இன்னும் இழுவாய் இழுத்துக்கொண்டு போகும்தான் என்றால்... அவனை மறித்து வெளிப்படையாகவே கேட்டார் " அப்ப இந்த கேசு வைக்கோலு இழுத்த வழியாப் போய்க்கிட்டுத்தான் இருக்கும். சீக்கிரத்துல முடியாதுங்கற..."

இவராக வழக்கு என்று பிடியை விட்டதும், அவனுக்கு லேசான சங்கடமாகி விட்டது. நீதிமன்ற வளாகத்தின் எதிரில் குந்திக்கொண்டு பிழைப்பை

ஓட்டுகிறவன் இந்த வழக்கு இழுத்துக் கொண்டுதான் கிடக்கும் என்று சொன்னால்... நீதிமன்றத்தையே அவமதிப்புக்குள்ளாக்குகிற மாதிரி ஆகி, கடந்து யாராவது நீதிபதி யின் காதில் போட்டுவிட்டால் பிறகு கூண்டோடு கூண்டுக்குள் போகிறமாதிரிதான் இருக்கும். இருந்தும் சமாளித்தான். குரலை சுத்தமாய் இறக்கி ஏதோ சமாதானத்திற்கு வந்த மாதிரி பேசினான். படத்தைக் கையிலெடுத்து காசிக்கும், நின்று உன்னிப்பாய் கவனித்துக்கொண்டிருந்த செங்கல்ராவுக்கும் காட்டியபடி சொன்னான் " இவரு யாரு. விநாயகப்பெருமான். இவுர புடிக்கறதுக்கு எமன் ஒருநாள் வந்துட்டான். இவுரு பாத்தாரு. இன்னைக்கி கொஞ்சம் வேலயிருக்கு இன்று போய் நாளை வா அப்பிடியின்னு சொல்லி, அத அவரு முதுகிலயும் எழுத வைச்சாரு. மறாநாளும் எமன் வர்றான். முதுவக் காட்றாரு. இன்று போய் நாளை வான்னு எழுதியிருக்கு. நித்தம் வர்றான், படிக்கிறான் போறான். கடைசி வரைக்கும் அவுர எமனால புடிக்க முடியில. அதே மாதிரிதான் இந்த கேசும், இந்த மாசம் போய்ட்டு அடுத்த மாசம்னு... அதுக்கு அறிகுறியாதான் இந்த புள்ளையாரு."

" செங்கல்ராவு வகையறா... செங்கல்ராவு வகையறா..." கூட்டத்தைக் கடந்து உச்ச சுதியில் கெட்டித்துப் போன கட்டைக்குரல்.

அடித்துப் பிடித்துக்கொண்டு காசி எழுந்த வேகத்தில், கூண்டுக்குள் இருந்த கிளியே கொஞ்சம் அச்சத்தில் கம்பியோடு உள்ளொடுங்கியது. திரும்பிய சுருக்கில் சீட்டுக்கத்தைகளின் மீது கூட மண் சிதறியது. விழுந்தடித்துக் கொண்டு கூட்டத்தை விலக்கியபடி நீதிமன்ற வாயிலில் செங்கல்ராவும் காசியும் நிற்பதற் குள் மூன்றாம் முறையும் கூப்பிட்டுவிட்டான். ஒரு முறைப்பு முறைத்தபடி அவர்களை உள்ளே அனுப்பினான். எப்போதும் போல முதலில் " ராசோக்கியம் வகையறா..." என அவர்களைத்தான் கூப்பிடுவார்கள் என, கிளி ஜோசியக்காரனிடம் குந்தியதன் விளைவு. ஓடிவந்ததில் இருவருக்குமே மூச்சிரைத்தது.

நிறைய வக்கீல்கள் கருப்புக்கோட்டில், முன்னால் இறுக்கமாகக் குந்தியிருந்தார்கள். வேர்த்து விறுவிறுக்க இருகரம் கூப்பி நின்றிருந்த இருவரையும் பார்த்த நீதிபதி, ரொம்பவும் செறு வயதாகத் தெரிந்தார். குனிந்து முன்னால் படிந்துகிடந்த காகிதத்தைப் படித்தார் " செங்கல்ராவு..."

கும்பிட்ட கையோடு, இரண்டடி முன்னால் போய் செங்கல்ராவு குனிந்து கூடுதல் பணிவு காட்டியபோது அவரது பறந்து நீண்ட முடிகளுக்கு, தெருக்கூத்தில் தருமராசாவுக்கு பாதம் பணிகிற சகாதேவனைப் போல் தெரிந்தார். அடுத்தது காசி. அவரும் அதே பணிவு பாடந்தான்.

அதற்கடுத்து “ மணிமாறன்...” கூப்பிட்டார்.

பட்டென்று உடல்குறுகி இன்னும் தாழ்வாக காசி கும்பிட்டார் “ படிக்கிற பையங்க. காலேஜுக்கி போயிட்டான்...”

“ ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு தடவை வராம இருந்தா, விசாரண எப்படிப் பண்றது. அடுத்த தடவ வல்லன்னா வாரண்ட் இஷ்யு பண்ணிடுவன்.” கறாராகவும் கடுப்பாகவும் சொல்லிவிட்டு நீதிமான் திரும்பவும் கூப்பிட்டார். “ செங்கல்ராவு...”

செங்கல்ராவுக்கு பயத்தின் ரேகைகள் உடலெங்கும் பரவப் படபடத்தபடி கூண்டில் ஏறினார். ஏறிய அடுத்த கணமே மந்தாரக் குப்பம் ஸ்டேசனை சேர்ந்த போலிஸ்காரர் ஒருவர், மஞ்சள் பையி லிருந்து ஒரு கொடுவாளை எடுத்து நீதிபதிக்கு முன்னால் கீழே வழக்குக் கத்தைகள் சூழக் குந்தியிருந்தவரிடம் நீட்டினார். அவர் அதை ஏதோ துஷ்ட தேவதைக்குரிய ஆயுதத்தைப் போல் பயபக்தியுடன் வாங்கி உயரே நீதிபதி அய்யா முன்னிலையில் வைத்தார். ‘ ஏம் வயிசிக்கே இதவிட பெரிய வீச்சரிவாளெல்லாம் நாம் பாத்துருக்கறன்’ என்பது மாதிரி நீதிபதி அலட்சியமாக எடுத்துப் பார்த்தார். ஆள் வெட்டுகிற கத்தி இல்லை, மரம் வெட்டுகிற கத்திதான். இறுக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காக பிடிப் பக்கம் சுற்றியிருந்த துணியில் ஒரு வாலைப் போல் பாவாடை நாடா தொங்கிக்கொண்டிருந்தது.

செங்கல்ராவும் நீதிபதி கையிலிருந்த கத்தியைப் பார்த்துக் கொண்டிருந்த அதே நேரம், அடுத்த அழைப்பிற்காகத் தன் தம்பி கனகராசுவுடன் வாயிலில் நின்றுகொண்டிருந்த ராசோக்கியம் இடதுகைத் தோள்பட்டைக்கும் கீழே இருந்த காயத் தழும்பைத் தடவிக் கொண்டிருந்தார். காயம் ஆறிப்போயிருந்தாலும் சுருக் சுருக்கென குத்திக்கொண்டுதானிருந்தது.

மந்தாரக்குப்பத்தில் இறங்கியதுமே செங்கல்ராவு ஏற்றிக் கொண்டுவிட்டார். தலைமுடியை உதறிக் கோதிவிட்டபடி கூடுதல் உற்சாகம். “ தத்தத்தன... தத்தத்தன...” ஒரு திருப்புகழும் பாடினார். விட்டால் தாளக்கட்டில் சுழன்று புழுதி கிளப்பிவிடுவார் போலிருந்தது. நெய்வேலி முதல் சுரங்கத்திலிருந்து கரி ஏற்றிப் போவதும் வருவதுமாக நிறைய லாரிகள் பேருந்துகள். இந்தச் சந்தடியிலும் வழியில் எதிர்ப்படுவோரிடமெல்லாம் களரியில் தர்க்கம் பண்ணுவதுபோல் பாடிக்கொண்டும் அளப்பிக் கொண்டும்... அவரை அப்படியே விட்டுவிட்டுப் போவதற்கும் காசியால் முடியவில்லை.

நெய்வேலிக்காரன் அள்ளிக்கொடுக்கிற பணத்திற்கு கண்மண் தெரியாமல் கணக்கற்ற மோட்டார் சைக்கிள்கள். எவனாவது இடித்துத் தள்ளிவிட்டால் அசலாம்பு கூட இந்தக் கூத்தாடிப் பயலுக்கு இது வேணும் என விட்டுவிடுவாள். இவர் வீட்டிலிருக்கிற தொம்பச்சி வெள்ளைச்சி பிடித்துக்கொள்வாள். ‘ எங்க அண்ணன்னா ஒனக்கு அம்மாம் எளக்காரம். இங்க என்னா எல்லா ஆடுவுளும் இன்னைக்கி ஒரே நாள்ல குட்டி போட்ருக் குங்கிற மாதிரி, கொளம்பு கிள்ளிவுடுற அவசரத்துல வந்து நிக்கிற... செத்த நின்னு பத்தரமா இட்டுக்கிட்டு வந்தா ஆவாதா...’

“ சரி போவும் வா...” கையைப் பிடித்து இட்டுக்கொண்டு போகாத குறைதான். ரோட்டு மார்க்கமாக சுற்றிக்கொண்டு போகாமல், நேரே என்.எல்.சி. பஸ் ஸ்டாண்டால் கிழக்கே போய் தெற்கே திரும்பினால் குறுக்கிடும் ரோடு. ரோட்டைக் கடந்து அங்காண்டப் பக்கம் பள்ளிக்கூடம். அதை ஒட்டிக் கிழக்காலப் பக்கம் தெற்குமுகமாய்ப் போகிற சாலை. முதலில் மாந்தாரக்குப்பம் என்.எல்.சி குடியிருப்புகள் காலனி. அடுத்து ஓடையைத் தாண்டினால் வேப்பங்குறிச்சி.

மேற்கால இருக்கிற வெளியூர் பேருந்து நிலையம்போல், என்.எல்.சி. பேருந்து நிலையத்தில் அதிகக் கூட்டமில்லை. காசிக்கு இடுப்பு வேட்டி அவிழ்ந்து அவிழ்ந்து சிக்கல் படுத்திக் கொண்டிருந்தது. நிலையத்தை விட்டு வெளியே கிழக்குப் பக்கம் நாலைந்து தப்படிகள் கூட எடுத்து வைத்திருக்க மாட்டார்கள், பட்டென்று காசி இடுப்பு வேட்டியை உருவித் தலைக்குக் கட்டிக் கொண்டார். தோளில் கிடந்த துண்டை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டார். சற்று பெரிய துண்டுதான், முட்டி வரை தொங்கிக் கொண்டிருந்தது. வெற்றிலை பாக்குப்பை துருத்திக் கொண்டிருந்த மேல்சட்டையையும் கழற்றித் தோள்மேல் போட்டபடி அவரின் கையைப் பிடித்தார்.

செங்கல்ராவு அந்தப் போதையிலும் இடுப்பு வேட்டியை இறுக்கமாக வளைத்துக் கட்டிக்கொண்டே கடந்து பேசியபடி வந்தார். “ என்னியே கோர்ட்டுக்கு இழுத்திட்டியாடா கம்னேட்டி...” பிடித்திருந்த காசியின் கையை வெடுக்கென உதறி, தோளில் கிடந்த துண்டில் பறக்கும் முடிகளை வளைத்துத் தலைப்பாகை கட்டியபடி கொக்கரித்தார் “ நான் சூராதி சூரன்டா. ஒன்ன வதம் பண்ணாம வுட மாட்டன்டா. கேசாடா போடற. ஓங் கேச பனாலா பைசல் பண்றன். கத்தியால வெட்னனாம். தெம்பத்த பய. வுழுந்து பனங்கருக்குல கிழிச்சிக்கிட்டான். கத்தியால வெட்னனாம். அண்ணந்தம்பி ரெண்டு பேரும் சேந்தாடா வர்றீங்க. வாங்கடா

ராசவன்னியன் பெத்த சிங்கக்குட்டிவுளா... அந்தக் கத்தியாலயே, ஒங்கள ரெண்டு பேரையும் நெசம்மாவே கொத்துக்கட்டையில வைச்சி நா கொத்துல... எப்பன் கர்த்தா படாச்சிக்கு நா பொறக்கலடா...”

காசிக்கு பசிவேறு கண்ணை இருட்டியது. மூன்று மணிக்கு மேல் ஆகிவிட்டது. கோர்ட்டை விட்டு வெளியே வந்ததுமே செங்கல்ராவு கேட்கத்தான் செய்தார் “ சாப்புட்டுப் போவுமா...” ஆட்டின் மேல் ஓடிய யோசனையில் காசிதான் “ எல்லாம் வூட்ட போயி சாப்புட்டுக்கலாம். பட்டுன்னு கிளம்பு” என்றார். ஆனால் இங்கு வந்து இறங்கியதுமே ஒண்ணுக்கு விடப்போகிறமாதிரி மேற்கால கருவைப் புதருக்குள் போனவர்தான் செங்கல்ராவு, போன சுருக்கு தெரியாமல் திரும்பியவர் ஊறுகாயை நக்கியபடியே வெளியே வந்தார். ‘ உள்ளே’ போனபிறகு எப்படி சீக்கிரம் வீட்டுக்கு போக முடியும். வீட்டுக்கு வீடு நின்று குறி சொல்கிறவன் மாதிரி, தோணுகிற இடத்திலெல்லாம் நின்று காற்றைக் கையால் வெட்டி வீசி, சரணம் பாடி வழிநெடுக கூத்துக் கோலந்தான்.

“ சரி பெசாம வா...” நடந்துகொண்டே வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்து வாயில் போட்டபடி காசி சொன்னார்.

செங்கல்ராவுக்கு எல்லாமும் கணத்தில் மாறி, விசுக்கென்று காசி மீது திரும்பினார். “ எல்லா வேலையும் நீ எனக்கு குடுத்துட்டு, என்னப் போயி பேசாம வாங்கற...”

காசிக்கு சுருக்கென்று தைத்துவிட்டது. என்ன பதில் சொல்வதென்று அவருக்குத் தெரியவில்லை. லேசாய் முறைத்தபடி திரும்பிப் பார்த்தார். அவரது முறைப்பு செங்கல்ராவை மேலும் எரிச்சலூட்டியது. “ என்னா மொறைக்கிற. நீதான கொட்டா கட்றதுக்கு காலு வேணுமின்னு ஏங்கிட்ட அடி போட்டதுமில்லாம, காலு இருக்கற எடத்தையும் காட்ன...”

காசிக்கு பட்டென்று உள்ளுக்குள் ஒரு சொடுக்கம். குரல் தலைசேர இறக்கத்திற்கு வந்திருந்தது “ ஏம்பா, நாந்தான் திரும்பத் திரும்ப எத்தினி தடவ சொல்லியிருக்கன். இம்மான்லாம் வந்து வெளையுமுன்னா நா கண்டேன்.”

*

9

மகசூல் அற்ற கொல்லைவெளிகளெங்கும் குறுக்கும் நெடுக்குமாய் வண்டிப்பாட்டைகள். எருமுட்டுகள் குவியல் குவியலாய் கொண்டுவந்து கொட்டப்பட்டுக் கிடக்கிற ஆனி மாத வேசகாலம் அது. சாணித்தட்டால் வாரித் தெளித்து பக்குவமாய் ஏரோட்டி வைத்திருந்தால், ஆடிப் பட்டத்திற்கு விதைக்கத் தோதாக இருக்கும்.

காசி படையாச்சியின் குப்பை செங்கல்ராவு குப்பையைப் போல் செத்தை சென்னாறாக இல்லாமல், முழுவதும் ஆட்டாஞ் சாணி. வெட்டித் தட்டில் வைக்க வைக்க ஆவி பறக்கிறது. லத்தி லத்தியாய் வெள்ளை வெளேர் என குப்பைப் புழுக்கள் வெளியே வர வர மண்வெட்டி இலையால் தள்ளி எறிய எறிய காக்கைகள் வந்து பொறுக்கிக்கொண்டு போகின்றன. காசி வெட்டி வைக்கவும் செங்கல்ராவு தூக்கிக் கொட்டவுமாய் கடும்புடியாய் நடக்கிறது வேலை.

கையில் வாங்குக்கத்தியும் தலையில் கசங்குக் கத்தையுமாய் தெற்கே கொல்லைவெளிப் பக்கமிருந்து வந்த அறிவழகனின் அப்பா ரங்கநாதுதான் கேட்டார் “ என்னாடா செங்கல்ராவு, ஒண்டியா இந்த மாங்கு மாங்கற...”

“ மறுபடி என்னா பண்றது அண்ண. ஒம் மொவனுக்கும் ஏம் மொவனுக்கும் சங்கம் கிங்கம்னு ஏகப்பட்ட வேல இருக்கு. அப்பறம் ஒண்டியா நாம தான் நனைச்சி செமரணும். அதோட கூலிக்கு ஆளக் கூப்புட்டா வாய் கூசாம எடு ஐம்பதங்கறான். நாம்பளும் கூத்துகீத்துன்னு போனா பரவாயில்ல. வூட்லதான குந்தியிருக்கம்.” சாணித்தட்டைத் தூக்கி வண்டியில் கொட்டியபடி சொன்னார். வளைத்துக் கட்டிய தலைப்பாகையைத் தாண்டி பிடரி மயிரில் குப்பைமண் கோர்த்திருந்தது.

ரங்கநாதுக்கு தன் மகனையும் பொறுப்பற்றவன் மாதிரி பேச்சில் சேர்த்து இழுத்தது பிடிக்கவில்லை. ஒன்றும் பேசாமல் நடந்தவரை வழிமறித்தமாதிரி, அடுப்புக்கு விறகு எடுக்க வந்த வெள்ளைச்சிதான் சொன்னாள் “ ஆளுலாம் கூட வைச்சிப்பாரு. ஆனா பொழுதோட ஊத்திக்கிட்டு ராகம் பாடறதுக்கு எங்க அண்ணி அசலாம்பு கிட்ட முடிச்சி அவுருணும்னா இப்பிடி ஒண்டியா ஒரே ஆளா எருவு அடிச்சன்னு சொன்னாதான் கத மேவும். வேல நடக்கும். வண்டி மாடு கூட கரி படாச்சிது. சும்மா ரெண்ட

நட எரவ ஓட்டிக்கிட்டு வந்தது” சொல்லச் சொல்ல ரங்கராது சிரித்தார்.

அமிர்தகலசம் பூங்குட்டிகளை மட்டும் கொட்டகைக்குள் இறுத்திக்கொண்டு, பெரிய ஆடுகளைத் தோட்டத்துப்பக்கம் விரட்டிவிட்டாள். வெள்ளைச்சி தலையில் துணியைப் போட்டுக் கொண்டு ஆடு மேய்க்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். வண்டி நிறைந்த தெம்பில் வீட்டுப்பக்கம் திரும்பி காசி கூப்பிட்டார் “ எம்மா அமிர்தம்... கொஞ்சம் தண்ணி கொண்டாடா சாமி.”

வேலியில் படர்ந்த உத்தாமணிகளைக் கடித்துக்கொண்டிருந்த ஆடுகளை அதட்டியபடி வெள்ளைச்சி குப்பைக்குழியோரம் நின்றி ருந்தாள். காசி விசனமாய் ஆடுகளைப் பார்த்துக்கொண்டே அமிர்தம் கொண்டுவந்து கொடுத்த தண்ணீரைக் குடித்தார். அவரைத் தவிர வேறு யாரும் ஆடுகளை ஓட்டிப்போக சம்மதிக்க மாட்டார். அதற்குமேல் வெள்ளைச்சியும். ‘ இந்த சனியன கூட யாராள மாளும்.’ போக மாட்டாள். அண்ணனுக்காக, அண்ணன் வீட்டுக் கொல்லைக்கான எருவடிப்பு என்பதால் ஓட்டிப் போக ஒத்துக்கொண்டாள்.

“ ஒங்குளுக்கு வேணுமா மாமா.” எதிரில் போய் செங்கல்ராவிடம் கேட்ட அமிர்தத்தின் குரல் அதம்புவதுபோல் இருந்தது. “ வேணாம்மா...” சொன்னவருக்கு எதிரில் வெள்ளைச்சி நிற்பதுபோலவே பட்டது.

“ சரி வேலயப் பாருங்க. கெளம்பறன்...” ரங்கநாது போய்க் கொண்டிருந்தார்.

வண்டியில் ஏறிக் குந்தப் போகும்போதுதான் வெள்ளைச்சி அண்ணனிடம் வலிக்காத மாதிரி சொன்னாள் “ நெய்வேலி டவுன்ஷிப்புல பால்மாடு வைச்சிருக்கிறவன் வூட்டுத் தோட்டத்துல கூட இப்பிடி கதகதன்னு சொய எருவா கெடைக்காது. போன வருசம் எங்க மாட்டுக்கு வேணுமுன்னுட்டு பூரா மள்ளாட்டக் கொடியையும் நீங்களே வைச்சிக்கிட்டு சாங்கத்துக்கு ரெண்டு சுருண கொடியக்கூட எங்களுக்கு தரல. போன வருசத்தோட இந்த வருசம் ஆடும் அதிகம். பின்னம் ரெண்டு வண்டி எருவும் வரும். அதனால வருசம் பூரா குட்டிவுளுக்கு வர்றமாதிரி நெறமா ஒரு வண்டி மள்ளாட்டக்கொடி தருணும். அப்பிடி இல்லன்னா இந்த வண்டியோட கூட வுடு. இருக்கவே இருக்கறான் தெற்கு வெள்ளூர்க்காரன். உம்னு ஒரு வார்த்த சொன்னா போதும், கொடியோட நாலு மரக்கா மள்ளாட்டையும் கொண்டாந்து குடுத்துட்டு கண்டன் கண்டன்னு அள்ளிக்கிட்டுப் பூடுவான்.”

லேசாய் சிரித்துக்கொண்டு சொன்னாலும் எச்சரிக்கை விடுக்கிற மாதிரியிருந்தது, வெள்ளைச்சியின் பேச்சு. செங்கல்ராவுக்கு என்ன சொல்வதென்று தெரியாத மெளனம். “ என்னம்மா மாமங்கிட்ட போயி

கணக்கு பாத்துக்கிட்டு...” அமிர்தந்தான் பரிந்து பேசினாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு காசி வாயைத் திறந்தார் “ மள்ளாட்ட கொடி கெடக்குட்டும். இந்த ஆட்டுக் கொட்டாய சீர் பண்றமாதிரி நாலஞ்சி பக்கக் காலும் ரெண்டு நெடுங்காலும் குடுத்தாலே போதும்.”

ஒழுங்கையில் உச்சிவெயிலில் போய்க்கொண்டிருக்கிறது வண்டி. கானல் அலையைப்போல எழும்புகிறது புழுதி. இந்த நடையைக் கொட்டிவிட்டு வந்து மதியத்திற்கு செத்த நேரம் கிடந்தால் வெயில் தாழத் திரும்பக் கட்டலாம். வண்டி ஒழுங்கையை விட்டு இறங்கி குட்டையோரமாக கிழக்கு நோக்கித் திரும்பியது. எதிரில் மறிச்சியைத் தாண்டி அவருடைய நிலம். வலதுபுற மறிச்சியும் அதை ஒட்டியபடியுமாய் ராசோக்கியம் கொல்லை.

செங்கல்ராவு வண்டியோட்டியபடியே தன்னுடைய மறிச்சியில் கால்களுக்கு ஆகிறமாதிரி மரங்கள் ஏதும் தென்படுகிறதா என நோட்டம் விட்டார். எல்லாமும் கழித்து விடாமல் கிளைத்துக் கொண்டு பக்கக் கிளைக்கு ஆகிறமாதிரி ஆளுயுரத்திற்கு தான் நின்று கொண்டிருந்தன. அதே சமயம் வலதுபுறத்தில் முளைத்த நுணா, வேம்பு, கொன்றை என பூராவுமே கழித்து விடப்பட்டு சைசு சைசாக நின்று கொண்டிருந்தவற்றை, தலைமேல் முக்காடு போட்டபடி வண்டியில் குந்தியிருந்த காசியும் பார்த்துக்கொண்டே வந்தார்.

“ பக்கக் காலுவோ வேண்ணா தே, நம்ப மறிச்சியில வெட்டிக்கலாம். நெடுங்காலுக்கு வேணுமின்னா வேற எங்கயாவது பாத்துக்க.” மாட்டை அதட்டிக்கொண்டே செங்கல்ராவு சொன்னார்.

மறிச்சியிலுள்ள இடைவெளி வழியாக வண்டி உள்ளே நுழையப் போகிற நேரம், உயரே குந்தியபடி வலதுபுறம் கையைக் காட்டி காசி சொன்னார் “ இனிமே எங்க சீமைக்கா போறது மரத்துக்கு. தே இந்த பனங்கட்ட ஒட்டா நிக்கிற ரெண்டு கழியையும் கொத்திக்கிட்டாப் போச்சி.”

“ வம்பா இது. ராசோக்கியம் மறிச்சி அது. கழிச்சி வுட்டு வைச்சிருக்கான். அதப் போயி கையக் காட்ற...” திகிலுடன் சொன்னார் செங்கல்ராவு.

“ இந்த குட்டப் பொறம்போக்க தெக்கு வடக்குல பாத்தா அவன் அனுபோகத்துல தெரியும். அதே மாதிரி கெழக்கு மேற்குல பாத்தா நம்ப அனுபோகத்துல வர்றமாதிரி இருக்கும். நம்ப மறிச்சி ஒட்டாதான் நிக்கிது. கழிச்சிதான வுட்ருக்கான். கெரையமா வாங்கிட்டான். சும்மா ரெண்டு கழிதான். கேட்டா சொல்லிட்டுப் போறது.”

செங்கல்ராவுக்கு உள்ளுக்குள் லேசான இடறலாகத் தெரிந்தாலும்

புறம்போக்கு என்பதால் சரியாகவும் தெரிந்தது. தானாய் முளைத்த மரங்கள். தன் வசப்படி நின்று பார்த்தால், தனக்குத்தான் சேர வேண்டும். என்ன, கூடுதலாய் கழித்து விட்டிருக்கிறான். ‘ கத்தி கையிலிருந்து, ஓய்வு கிடைத்தால் ஊர்ப்பட்ட மரங்களைக் கூடத்தான் நாமளும் கழித்துவிடலாம்.’

எந்த பக்கத்து வீட்டுக்காரனும், எந்த பக்கத்து கொல்லைக் காரனும் ஒட்டி உறவாடி நகமும் சதையுமாய் இல்லாதது போலவே தான் செங்கல்ராவும் ராசோக்கியமும். இருவருக்குமே நிலபலம் கிணறு என சம பலமாய் இருந்தும் ‘ வரப்பு இந்தாண்ட இருக்கு, தென்னமட்ட அங்காண்ட விழுந்துட்டது’ என எப்போதும் கரைச்சல்தான். யோசித்தார். ‘ சரி என்னா சிம்பிடப்போறான். நாளைக்கி இந்த ரெண்டு வேப்பங்கழியையும் கொத்திக்குவம்.’

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. காசி மகன் மணிமாறன் கல்லூரி விடுப்பு என்பதால் வீட்டிலிருந்தான். ‘ புள்ளைக்கு வைச்சிக் குடுப்புமே’ என கோழி அடித்து வெள்ளைச்சி குழம்பு வைத்திருந்தாள். மறதியாய் குப்பைக்குழியிலேயே போட்டுவிட்ட சாணித்தட்டை எடுக்க வந்த செங்கல்ராவு, துப்புரவாய் எரு அள்ளிய இடத்தில் பிய்த்துப் போட்டிருந்த கோழி இறகுகளைப் பார்த்து விட்டார். “ என்னாடா பையா, தடபுடலாடா வூட்ல? வாசம் மூக்கத் தொலைக்கிது.”

அமிர்தம் வெளிய வந்து கூப்பிட்டாள் “ மாமா, வந்து ஒரு வா சாப்புட்டுப்போங்க... அம்மாவும் போயி இட்டுக்கிட்டு வரத்தான் சொல்லிச்சி. அதுக்குள்ள நீங்களே...”

“ வூட்டுக்குப் போய்ட்டு வரம்மா.” போன வேகத்தில் நின்ற நிலையில் வாசலில் சாணித்தட்டைப் போட்டுவிட்டு, நேரே மேற்கே தெற்குவெள்ளூர் ஓடைப் பக்கம் ஓடினார்.

அடித்த சரக்குக்கும் கோழிக் குழம்புக்கும் ஒரே தூக்காய் ஆளைத் தூக்கியது. சட்டியில் கிடந்த கோழித்தலையை கரண்டியால் எடுத்து இலையில் வைத்தபடியே வெள்ளச்சி கேட்டாள். “ அண்ண, கொட்டா கட்றதுக்கு காலுவோ வேணுமின்னு... நேத்து அமிர்தம் அப்பா சொன்னது...”

“ சாயந்திரம் தோட்டத்துல, நெடுங்காலு ரெண்டும் கெடக்கும். வுடும்மா, நா பாத்துக்கறன்” அண்ணன் சொன்ன தெம்பில் பின்னும் ரெண்டு எலும்பைப் பொறுக்கிப் போட்டாள்.

எவ்வளவு தலைதுள்ளுகிற போதையாக இருந்தாலும் நடையிலோ பேச்சிலோ, தேக்கமோ நடுக்கமோ செங்கல்ராவுக்கு தெரியாது. ‘ எத்தினி வருசமா குடிக்கிறன். எங்க அடிய வைச்சா எப்பிடிப் போவலாம்னு தெரியாது’ விவரமாகப் பேசுவார். சாயந்திர நேரம், வரப்பு வாய்க்காலெல்லாம் நெடுநிழல் ஓடிக் கிடந்தது. கையில் கனத்த கத்தி. ஒழுங்கையை விட்டு இறங்கித் தன் கொல்லை யோர மறிச்சியில் போய் நின்று திரும்பிப் பார்த்தார். நன்றாகக் கழித்துவிடப்பட்டு, உருவிவிட்ட மாதிரி அழகாய் இரண்டாள் உயரத்திற்கு மேல் போய், கவை கிளைத்த வேம்பு. அதற்குப் பக்கத்தில் அதைப்போலவே ஆனால் கனம் கொஞ்சம் குறைவான மற்றொன்று. இரண்டும் நெடுங்காலுக்குத் தோதானதுதான்.

“ இது ரெண்டும் போதும்.” குரல் கேட்டு நிமிர்ந்தார். தயாராய் எதிர்பார்த்து நின்றிருந்த மாதிரி காசி மறிச்சி கிட்ட வந்து கொண்டிருந்தார். ஆடுகள் மறிச்சியிலிருந்த நுணாத் தழைகளைத் தாவுகால் போட்டுக் கடித்துக்கொண்டிருந்தன.

வெட்டுகிறபோது கத்தியில் ஏதும் சிக்கி இடறாதவாறு நீட்டியிருந்த சிம்புகளை, கோவைக் கொடிகளை வாங்கால் அவசரம் அவசரமாக அறுத்துவிட்டு சல்லீசாக்கி ஊக்கப்படுத்தினார் காசி. “ நெல்லா கீழ எறக்கி அடிமரத்துல வெட்டு...”

மாறி மாறி விழுந்துகொண்டிருந்தது வெட்டு. செறாத் துகள்கள் செதில் செதிலாய்ப் பறந்துகொண்டிருந்தன. சுற்றி வந்து நாலாகடையும் வெட்டியதும், உச்சியிலிருந்த தழைக்கொத்துகள், வெட்டுக்கு வெட்டு அதிர ஆரம்பித்தன. கத்தியைப் போட்டுவிட்டு அவரும் காசியுமாய் மரத்தை நெட்டினார்கள். மடமடவென சாய்ந்து விழுந்த சத்தத்தில் ராசோக்கியம் தென்னையிலிருந்த குருவிகள் கூடுகளைவிட்டு அலறி அடித்துக்கொண்டு பறந்தோடின.

தேங்காய் நெற்று மூட்டைகளை வாசலில் போட்டுவிட்டு, கைகாலைக் கழுவிவிட்டு அப்போதுதான் சாப்பிடக் குந்தினார் ராசோக்கியம். அவரைவிட நாலைந்து வயதுதான் குறைவாக இருக்கும் அய்யாயிரத்திற்கு. பத்திருபது வருடத்திற்கு மேல் அவரும் அவர் மனைவி பூச்சியும் பண்ணைக்காரர்களாய் ராசோக்கியம் வீட்டில் வேலை செய்பவர்கள். நடையில் குந்தி அவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். தென்னை மரத்தில் ஏறி வழிபறிந்ததில் கையெல்லாம் எரிந்தது அய்யாயிரத்திற்கு.

“ கொழம்பு ஊத்துட்டுமா அய்யாயிரம்...” பூமாதேவி கேட்டாள். “ வேணாம் பாப்பா...” சொல்லிக் கொண்டிருக்கும்போதே “ மாமா... மாமா...” என பதட்டமாக வடிவேல் பொண்டாட்டி தேவகி வீட்டுக்குள் நுழைந்தாள். அய்யாயிரம் அவசரமாய் ஒதுங்கி வழியை விட்டார். “ போ பாப்பா...”

“ என்னா புள்ள...” வந்தவளின் அவசரத்தைப் பார்த்து வாய்க்குப் போன சோற்றைத் தட்டில் இறக்கியபடி ராசோக்கியம் கேட்டார்.

“ மாமா, ஒங்க மறிச்சியிலிருந்த வேப்பம் மரத்துவுற அந்த சிகாமணி அப்பா செங்கல்ராவு இல்ல அவுரும், அவுரு மச்சான் ஆட்டுக்காரரும் வெட்றாங்க...”

அவ்வளவுதான். “ இரு மூத்தவர நானும் வர்றன்” அய்யாயிரம் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ராசோக்கியம் ஓடிக் கொண்டிருந்தார். அய்யாயிரத்திற்கு தென்னையில் ஏறிஇறங்கி தொடையெல்லாம் அசந்துபோனதில் ஓடமுடியவில்லை. பெருநடையாகப் பின்தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார்.

“ அவன் குடிகார கூத்தாடிப்பய. ஒண்ணுகெடக்க ஒண்ணு வம்புல இழுத்து வுட்டுடப்போறான். மரம் போனாலும் போவுது. செத்த பொறுமையா இருக்கச் சொல்லு அவுர” உடல் இருக்கிற நிலவரத்துக்கு ஓடமுடியாது என்பதால், பாஞ்சாலை வாசலிலேயே புலம்பிக்கொண்டு நின்றாள். பூமாதேவி பாவாடையைச் சுருட்டி இடுப்பில் சொருகிக்கொண்டு தானும் ஓட ஆரம்பித்தாள். “ என்னா எக்கா...” பதட்டமாய்க் கேட்ட அம்புசாட்சி, விறுவிறுவென டீக்கடைப் பக்கம் கனகராசுவைத் தேடிக்கொண்டு ஓடினாள்.

இரண்டு மரங்களும் நெடுங்கிடையாய்க் கீழே கிடக்கின்றன. ராசோக்கியத்திற்கு ஆத்திரமான ஆத்திரம். இந்த வருசமாவது வண்டிக்கும் மாட்டுக்கும் சேர்த்து ஒரு கொட்டகை போடலாம் என்று கணக்குப் பண்ணி வைத்திருந்த மரங்கள். நடுங்குகிறது ரேகம் அவருக்கு.

“ டேய்... எவனக் கேட்டுட்டுடா மரத்த வெட்ன கம்னேட்டி பயல...” சாவகாசமாய் கிளைகளைக் கழித்துக்கொண்டிருந்த செங்கல்ராவு இதை எதிர்பார்க்கவில்லை. வந்த வேகத்தில் ராசோக்கியத்தின் வலுவான நெட்டில் சரிந்து கிளைகளின் அடம்பிற்குள் விழுந்தார். எசாகையில் நின்றுகொண்டிருந்த காசி “ டேய் வேணாண்டா வேணாண்டா. சும்மா மறிச்சியில நின்ன மரத்துக்கு என்னாடா இம்மாங் காவ கட்ற...” ஒப்புக்கு அதட்டினார்.

“ என்ன இப்ப மொதல் போட்டு வாங்கன கெரயத்துல நின்னத வெட்டிட்டன்னு இந்த நெட்டு நெட்ற... ஒக்காள ஓழி ஒன்ன...” கை தவறிய கத்தியை எடுத்துக்கொண்டு நிமிர்வதற்குள் மேலே பாய்ந்து சுருட்டி மடக்கியபடி அவரைப் பிடித்துக் கொண்டு, ராசோக்கியம் ஓங்கிக் குத்தினார். வேம்பஞ்சிமிடுகளும் தழைகளும் மறிக்க குத்து சரியாக விழவில்லை. தழைகளோடு உருள்கிறார்கள். காசி கிட்ட வந்து விலக்கவுமில்லை, மறிக்கவுமில்லை.

ஆளையே வெட்டிவிட்ட மாதிரியான ஆக்ரோஷம் ராசோக்கியத்துக்கு. உருண்டு புரண்டு ஒரு கட்டத்தில் வளைத்து செங்கல்ராவின் மேல் அழுத்தியபடி குந்தினார். ஆனாலும் ராசோக்கியத்தைவிட வலுத்த உடம்பு செங்கல்ராவுக்கு. அதுவும் கையில் கத்தி கிடைத்ததும் கூடுதல் பலம் வந்துவிட்டது. மூச்சை ஒரே இழுப்பாய் உள்ளுக்கு இழுத்து ‘ உம்’மென்று எழுந்தார். எழுந்த வேகத்தில் மேலே இருந்த ராசோக்கியம் நிலை தடுமாறி எகிறி பக்கத்திலிருந்த பனங்கட்டையில் விழுந்தார். காய்ந்த அடி மட்டை களை எல்லாம் சிக்கற அப்புறப்படுத்தி, இடரற்றுப் புதிய கருக்குகளுடன் சலாபத்தாய் நீண்டிருந்த பனம் மட்டையில் போய் விழுந்த வேகத்தில் மரவாடியின் வாள்தகடைப் போலிருந்த ஒரு கருக்கு மட்டை, இடது கையில் அம்மைக்குத்து தழும்புக்கு நேர் குறுக்குவசத்தில் ஆழப்பிளந்து, கொடகொடவென ரத்தம். ரத்தத்தைப் பார்த்த ராசோக்கியம் மயங்கி பனங்கட்டையில் சரிந்தபோதுதான் ஆவேசமாய் கத்தியோடு செங்கல்ராவு திரும்பினார். அவ்வளவுதான்.

ரத்தக்களறியோடு கிடக்கும் ராசோக்கியத்தை வரப்பில் ஓடிவந்தபடியே பார்த்துவிட்ட அய்யாயிரம் கத்த ஆரம்பித்தார் “ ஐய்யய்யோ... மூத்தவர கத்தியால வெட்டிட்டாங்க... மூத்தவர கத்தியால வெட்டிட்டாங்க...”

அதிர்ந்துபோன செங்கல்ராவு கத்தியைப் போட்டுவிட்டு மண்மேகம் மரமேகமாக ஊரை நோக்கி ஓட ஆரம்பித்தார். அய்யாயிரத்தின் அலறல், நடு ஒழுங்கையில் ஓடிவந்து கொண்டிருந்த பூமாவிற்குக் கேட்க அவளும் அடித்துக்கொண்டு கத்துகிறாள். “ எம்மா... அப்பாவ கத்தியால வெட்டிட்டாங்களாம்.” அதற்குள் பூமாவைத் தொடர்ந்து ஓடிவந்துகொண்டிருந்த கனகராசுக்கு ஆத்திரம் பறக்கிறது.

“ சித்தப்பா... அப்பாவ கத்தியால வெட்டிட்டாங்களாம்...” எதிரே அலட்டியாய் கொல்லைக்காட்டால் ஓடிவந்துகொண்டிருந்த செங்கல்ராவைப் பார்த்துவிட்டதும் கனகராசுவுக்குத் துடிக்கிறது. ஒழுங்கையில் நின்றிருந்த நுணாப் போத்து ஒன்றை மளுக்கென்று முறித்துக்கொண்டு அவரை நோக்கி

ஓடுகிறார். அய்யாயிரம் கத்திக்கொண்டே திரும்ப ராசோக்கியத்தை நோக்கிப் பறக்கிறார்.

ஆளுக்கு இருக்கிற காயத்திற்கு கையில் சிக்கினால் அவ்வளவுதான், கனகராசுவின் கையில் சிக்காமல் செங்கல்ராவு ஊரை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார். போதையெல்லாம் போன இடம் தெரியவில்லை. தலைமுடி உருவிக்கொண்டு போகிறமாதிரி காற்றில் பறக்கிறது. அவிழ்ந்த வேட்டியை உருவி எறிந்துவிட்டு கோவணத் தோடு ஓடுகிறார். ஆனாலும் வளைத்து மறித்துவிட்ட கனகராசு கையிலிருந்த போத்தால் ஒன்று வைத்தார். அடி சரியாக விழவில்லை யென்றாலும், கால் இடறிக் கனகராசுவின் கையில் சிக்கிவிட்டார். செங்கல்ராவுக்கு திடுமென சூழ்ந்துகொண்ட திகிலே பலமாக ஆனது. ஒரே சிம்பாய்ச் சிம்பி உதறினார். கனகராசு பிடி தவறிக் கீழே தடுமாறினார். கிடைத்த இடைவெளியில் நேராய் ஊருக்குள் நுழைந்து ஓடினார்.

சிட்டு தட்டுவதற்குள் தெருவில், கடையில் நின்றிருந்தவர் களுக்கெல்லாம் சேதி பரவிவிட்டது. " இருடா... இருடா..." வெள்ளச்சி சொல்வதைக் காதில் வாங்காமல் பறந்தான் மணிமாறன். பயந்து ஓடும் மாமனைப் பார்க்கத் தாங்க முடியவில்லை அவனுக்கு. துரத்திக் கொண்டு வந்த கனகராசுவை ஓடி மறித்தான். " வாணம் சித்தப்பா வுடு. எதாயிருந்தாலும் பேசித் தீத்துக்கலாம்."

" என்னடா கத்தியால வெட்டிட்டு ஓடறான். இப்பதான் சித்தப்பன் நொட்டுது." செங்கல்ராவு கையில் சிக்காத ஆத்திரத்தை, அவன்மீது காட்டினார். ஓங்கி முதுகில் விழுந்த ஒரு அடியில் விழுந்து சுருண்டான் மணிமாறன். விடாது கனகராசு ஓடிக்கொண்டிருந்தார்.

வீட்டிற்குள் நுழைந்து தோட்டத்தில் ஓடும் ஆம்படையானைப் பார்த்துவிட்டு அசலாம்பு அதிர்ச்சியோடு கூடவே கேட்டபடி ஓடுகிறாள். " என்னாடா... என்னாடா... ஏண்டா ஓடற..." தெருவுக்கு வந்தாள். கூடவே துரத்தியோடும் கனகராசுவைப் பார்த்ததும் அவளுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. " அய்யய்யோ... இந்தக் கூத்தாடிப் பய என்னா பண்ணான்னு தெரியலிய.... இந்த நேரத்துல அவம் வேற வூட்ல இல்லிய..." புலம்பிக்கொண்டே தெருவில் இறங்கி சிகாமணியைத் தேடிக்கொண்டு ரோட்டுப்பக்கம் ஓடினாள்.

வீட்டிற்குள் நுழைந்து ஓடிய செங்கல்ராவு அப்படியே வடக்குத் தெருவால் போய், மேற்குத் தெருவின் முனையில் இருந்த பெரியவீட்டில் நுழைந்துகொண்டார். பெரிய வீட்டில் தனபால் நடையில் சாவகாசமாய்

நாற்காலியில் குந்தி ‘ மாலை மலர்’ பார்த்துக் கொண்டிருந்தார். ஊரில் நான்கில் ஒரு பங்கு நிலம் அவருடையது தான். மூன்று பையன்களும் என்.எல்.சி.யில் காண்ட்ராக்ட் எடுத்து தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். வலுத்த கை. வேப்பங்குறிச்சி தனபால் என்றால் சுத்துப்பட்டு ஊர்களுக்கெல்லாம் தெரியும். அபயம் என்று அண்டிவிட்டால், காபந்து பண்ணக்கூடியவர்தான்.
தெருவே பின்னால் திரண்டு நிற்க வீட்டுக்கு முன்னால் நின்று கனகராசு அதம்புகிறார் “ அண்ண, அவன உள்ள வைச்சிக் கிட்டு வேடிக்க காட்டாத. கத்தியால வெட்டிட்டு வந்துருக்கறான். அவன அதே கத்தியால பதிலுக்குப் பதிலு நா வெட்டுல, எப்பன் ராசவன்னியனுக்கு நாம் பொறக்கல.”

தனபால் எழுந்து வந்து சொன்னார் “ அவன் எங்கியும் போய்டமாட்டான். மொதல்ல ஒண்ணன இட்டுக்கிட்டுப் போயி ஆஸ்பத்திரியில காட்டு. பதிலுக்குப் பதிலு வெட்டு குத்துன்னுதான் நாம இன்னும் விடியாமக் கெடக்கறம்.”

தெற்கில் கொல்லை வெளிப்பக்கம் திடுமென இரைச்சல் அதிகமாகக் கேட்டதும், அதற்குமேல் நின்று பேச முடியாமல் கனகராசு ஓடினார். பூமா புழுதியில் விழுந்து கத்திக்கொண்டு கிடக்கிறாள். பாஞ்சாலை மாரில் மாரில் அடித்துக்கொண்டு கதறுகிறாள். அம்புசாட்சியும் தேவகியும் ராசோக்கியத்தைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு கத்துகிறார்கள். டீக்கடைப் பக்கம் சேதியடி பட்டு ஓடிவந்த கரி படாச்சி துண்டை நனைத்துச் சுற்றுகிறார். அதையும் தாண்டி ரத்தம் கொப்பளிக்கிறது. ஓடி சைக்கிளை எடுத்துக்கொண்டு போய் ரோட்டிலிருந்து ஆட்டோவை கொண்டு வந்தார் கனகராசு. தூக்கிக் கொண்டுவந்து ஏற்றி நெய்வேலி பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். வலுவான காயம். நரம்பு துண்டாகாமல் இருந்ததே அதிசயந்தான்.

தகவல் கேள்விப்பட்டதும் அடித்துப்பிடித்துக்கொண்டு ஓடிவந்த சதாசிவத்தை பூமாதேவி கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள் “ நம்ம அப்பாவ கத்தியால வெட்டிட்டாங்க அண்ண.”

கையில் கனத்த கட்டுடன் கண்விழித்த அப்பாவிடம் கலங்கியது மாதிரி சொன்னான் “ ஏம்ப்பா இப்பிடி கொல்ல மரம் மட்டன்னு அடிச்சிக்கிட்டு கெடக்கற. மறிச்சியில நின்னதுதான, சந்தன மரமா அது. ரெண்டு கழி வெட்டிக்கிட்டுதாம் போவுட்டும.” வெட்டுக்காயத்தை விட அவன் பேசியது அதிகம் வலித்திருக்க வேண்டும். தலைதிருப்பிக் கொண்டார்.

அய்யாயிரத்தை சாட்சியாகப் போட்டு காசியும் மணிமாறனும் பிடித்துக்கொள்ள செங்கல்ராவு வெட்டியதாக கேசைக் கொடுத்் தார்கள். ஒரு வருடத்திற்கும் மேலாக வழக்கு நடையாய் நடந்து கொண்டிருக்கிறது.

“ நீ போய்க்கிட்டியே இரு அண்ண, வர்றன்.” முடக்கிலேயே நின்றுகொண்டார் கனகராசு. வாகனங்களின் புழுதியோடு பின் மண்டையில் வெயில் பிளந்து கட்ட, ராசோக்கியம் நடந்து கொண்டிருந்தார். வரிசையாக இருந்த கடைகளைத் தாண்டி, புளியமரத்தடி நேரில் இருந்த கடையில் மிக்சரும், பக்கத்திலிருந்த ஆயாவிடம் பூவும் வாங்கிக்கொண்டார். ஊருக்கு சேதிக்கு போய் வந்தால், அறியாப்பிள்ளை போன்று பையைப் பிரித்துப்பார்க்கிற பழக்கத்தை இந்தப் பூமாப் பிள்ளை விடவேயில்லை. வேப்பங்குறிச்சி திரும்புகிற முடக்கில்தான் பளீர் மஞ்சள் வண்ணத்தில் வன்னியர் சங்க அலுவலகம். வாசலில் புளியமரத்தடி நிழலில் ஒன்றிரண்டு பேர் நின்றுகொண்டிருந்தார்கள். உள்ளிருந்து கையில் ‘ கனல்’ இதழோடு வெளியே வந்த அறிவழகன் ராசோக்கி யத்தைப் பார்த்துவிட்டான். “ என்ன மாமா வெயில்ல எங்க போய்ட்டு வர்றீங்க...”

திடுமென அவர் நிழலுக்கு வந்ததும், கண்கள் இருண்டு போகிற மாதிரியிருந்தது. தொண்டை காய்ந்து போயிருந்ததில் குரலில் பிசிறு தட்டியது. “ கடலூருக்கு கோர்ட்டுக்குதாம்பா போயிட்டு வர்றம்.”

அறிவழகனுக்கு உடன் எல்லாமும் விளங்கிவிட்டது. அதோடு விட்டால் அவர் ஏதாவது நினைத்துக் கொள்வார் என்கிறமாதிரி மேலும் கேட்டான். “ கேசு எதோட இருக்கு...”

“ எதோட இருக்கு. புள்ளையார் கெடுவு வைச்சமாதிரி அடுத்த மாசம் ஈரங்கி.” ரொம்பவும் அலுப்பாக இருந்தது குரல்.

கொஞ்ச நேரம் மௌனமாக கனலைப் பார்த்துக்கொண்டிருந்த அறிவழகன், குனிந்த தலை நிமிராமல் சொன்னான் “ நாம மரத்த வெட்டிட்டான், வரப்ப நவுத்திட்டான்னு அடிச்சிக்கிட்டு கெடக்கறம். எதுக்கும் வேல இல்லங்கற மாதிரி, கூடிய சீக்கிரம் என்.எல்.சி.க்காரன் வேல வைச்சிடுவாம் போல்ருக்கு மாமா.”

திக்கென்று ராசோக்கியத்துக்கு ஒரு நெருப்புக்குண்டு உள்ளுக்குள் சுழன்றது போன்ற ஒரு அதிர்வு. ஆனாலும் எத்தனையோ முறை மிரட்சியோடு கேட்ட வார்த்தைகள்தான் என்பதால் அதிக நேரம் சூடு உறைக்கவில்லை. “ ம்... கெழக்க தெற்குமேலூர் எடுத்ததிலேர்ந்து பத்துப் பாஞ்சி வருசமா நம்ப

ஊரையும் எடுக்கப் போறாங்க, எடுக்கப் போறாங்கன்னு பேச்சிதான் ஓடுது. இம்மாம் பெரிய மெயின்ரோடு போவுது. இதத் தாண்டியா இங்காண்ட வரப் போறான். அப்பிடியே ஒரு விதிவசம் இருக்குன்னா, என்னா பண்ணிடப் போறம். சரி வர்றம்பா...” ராசோக்கியம் அதற்குமேல் வார்த்தையை வளர்க்காமல் நடந்துகொண்டிருந்தார்.

மேற்காலப் பக்கம் என்.எல்.சி மேல்நிலைப்பள்ளி. விளை யாட்டுக்கு விட்டிருப்பார்கள்போலும், நிறையப் பசங்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். “ எப்பா...” எதிரே ஓடிவரும் குரல் கேட்டு நிமிர்ந்தார். பூமாதான். பின்னாலேயே தம்பி மகள் வைரமும் வந்தாள்.

நீலப்பாவாடை. வெள்ளைச்சட்டை. அந்தி நேரத்துச் செடியாய் வதங்கியிருந்ததால் கிட்ட வந்த பூமாவின் தலையைக் கோதி விட்டார். நெஞ்சு மட்டத்திற்கு வளர்ந்துவிட்ட பிள்ளை. பெருமூச்சு விட்டுக்கொண்டார். பையிலிருந்த மிக்சரை எடுத்து பூமாவிடம் கொடுத்து, “ ஆளுக்கு கொஞ்சம் எடுத்துக்குங்க...” என்றார்.

பின்னால் ரோட்டுப் பக்கம் குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தார். செங்கல்ராவுதான் அறிவழகனிடம் கதையளந்து கொண்டு வருவது தெரிந்தது. “ சரி வா சித்தப்பா, ஊருக்குப் போவம்” செங்கல்ராவை, அறிவழகன் இழுக்காதகுறையாய் இட்டுக்கொண்டு நடக்கவும் ஆரம்பித்திருந்தான். ஆளை விட்டால்போதும் என்கிற மாதிரி, காசி வேகு வேகு என முன்னால் வந்துகொண்டிருந்தார்.

“ இருப்பா. நாங்க கொஞ்சம் அள்ளிக்கிட்டு தர்றம். அம்மா கிட்ட கொண்டுபோயி குடு. சோத்துக்குத் தொட்டுக்கும்...” பூமா பொட்டலத்தின் பின்னை நீக்க முயற்சி செய்துகொண்டு இருக்கும் போதே, இதுதான் சமயமென்று காம்பவுண்டு சுவரோரத்து புளியமரத்தடிக்கு நகர்த்திக்கொண்டு போனார் ராசோக்கியம். “ இப்பிடி வாம்மா...”

திரும்பிப் பார்த்த பூமாவுக்கு செங்கல்ராவு கதையளந்தபடி வருவது கண்டதும் ஒதுங்கி வந்ததின் விபரம் புரிந்துவிட்டது. மறைவில் பின்னை நீக்கப் பெரும்பாடு பட்டாள். “ ஊகும். இதுக்குப் பல்லுதான் யோக்யதை.” பின்னை பற்களுக்கிடையே வைத்த நேரம், புளியமரத்துக்கு நேர் அறிவழகனும் செங்கல்ராவும் வந்து விட்டார்கள்.

வந்துகொண்டேயிருந்த அறிவழன் மறந்துவிட்டவன் போல் கேட்டான் “ ஆமா நானும் கேக்காம வுட்டுட்டன். கோர்ட்டுல தான் அவனுக்கு வேல இல்ல. சிகாமணி வேற எங்கதான் போனான். காலையிலேர்ந்து ஆளக்

காணம்.”

“ சிகாமணி...” என்றதுமே உள்ளுக்குள் சொடுக்க, பின்னை கடிப்பதை நிறுத்தி காதைக் கூர்மைப்படுத்தினாள் பூமா. செங்கல் ராவு சிரித்துக்கொண்டே சொல்வது கேட்டது. “ ஓங்கிட்டக்கூட சொல்லுலியா அவன். ஒண்ணுமில்ல ஊத்தாங்கால்ல இருக்குத அவன் நடு அத்தை ராசாமணி அது பொண்ணு ஒண்ணு போன வாரம் வயசிக்கி வந்துருந்துது. ஆக்கிப் போடறதுக்கு ஆத்தாளும் புள்ளையும், கூட எங்க வெள்ளச்சியுமா ஊத்தாங்கால் போயிருக்காங்க...”

காதில் விழுந்த அந்தப் பேச்சில் அவளையும் அறியாமல் பூமா அப்படியே ஒரு கணம் திடுக்கிட்டாள். ராசோக்கியம் பதறினார் “ என்னம்மா பாத்து எடுக்கக்கூடாது. ஒதட்டுல பாரு ரெத்தம்.”

*

10

“ இ ந்த முட்ட சாமந்திப் பூவு முதனையிலியும் இருக்கும். ஊரு ஒலகத்துல எங்கியுமே கெடைக்காத அருபொருளுன்னு இப்பதான் அதிசயமா எடுத்துப் பையில வைக்கிற...” சதாசிவம் வயர்கூடையில் தேங்காய்களின் மேல் பிளாஸ்டிக் கவரில் இருந்த சாமந்திச் சரத்தை வெறுப்புடன் கீழே எடுத்து வைத்ததும், பூமாவுக்கு முகம் சொடுங்கிப் போய்விட்டது.

“ என்னா இம்மாம் வெயிட்டா இருக்கு. இத எப்பிடி சைக்கிள்ல வைச்சிக்கிட்டுப் போறது. நொள்ள நாலு தேங்காயும் கொய்யாக்காயும் அங்க கெடைக்காதுன்னு, ஒரு ஆளான ஆளு என்ன மெனக்கிட்டு எடுத்துக்கிட்டுப் போவச்சொல்றீங்க...” வயர்கூடையைத் தூக்கிப் பார்த்துவிட்டுத் திரும்பவும் புலம்பியபடி நின்றான்.

பூமாவுக்கு எரிச்சல். ஆனாலும் அவனிடம் காட்ட முடியாமல் அடக்கிக்கொண்டு நின்றாள். அண்ணன்காரனின் குரங்குக் குணம் அவளுக்குத் தெரியும். ஏதாவது நசுங்கலாய் கேட்டுவிட்டால் போதும், நொண்டிக்கு சறுக்கியது வாட்டம் என்கிறமாதிரி ‘ நா ஊருக்கும் போவுல, ஒண்ணுக்கும் போவுல’ என்று பேண்ட் சட்டையை உருவிக் கெடாசிவிட்டு மந்தாரக் குப்பம் பஸ் ஸ்டாண்டு பக்கம் கிளம்பிவிடுவான். காலையிலிருந்து அவனை ஊருக்குக் கிளப்பப் பட்ட பாடும் வெட்டியாய்ப் போய்விடும்.

பாஞ்சாலைக்குத் தாய்வீடு முதனைதான். அப்பன் செம்புலிங்கமும் ஆத்தாள் தைலம்மையும் போய்ச் சேர்ந்து வெகுகாலம் ஆகிவிட்டது. ஒரேயொரு அண்ணன் சின்னத்தம்பி, நெய்வேலியில் எம்பளாய்சாக வேலை செய்கிறார். அண்ணனுக்கு வாக்கப்பட்ட தங்கப்பழம், உள்ளூரிலேயே பிறந்தவள். பேருக்கேத்த மாதிரி தங்கக் குணம். பாஞ்சாலையை ‘ அண்ணி அண்ணி’ என விட மாட்டாள். ராசோக்கியமும் கூடப் பொறந்த பொறப்பாய் தங்கப்பழத்திற்கு நல்லநாள் பெரியநாளில் காசு கண்ணி கொடுப்பார். கொல்லையில் கிடைக்கற நல்லது பொல்லதைக் கொடுத்து அனுப்புவார். தங்கப் பழத்திற்கு கிளி மாதிரி ஒரேயொரு பெண் மலர்விழி. பூமாவை விட மூன்று வயது மூத்தவள்தான். ஆனால் தலையிலடிக்கிறமாதிரி ‘ மலரு மலரு’ எனப் பேர் சொல்லித் தான் பூமா கூப்பிடுவாள். அவளும் அதைப்

பெரிதுபடுத்தாமல் பூமா பூமா என உயிராய் இருப்பாள். உள்ளூரில் பத்தாவது படிக்கிறாள். வயதிற்கு வந்து இரண்டு வருசம் தாண்டப்போகிறது. சதாசிவத்தைத் தவிர அந்தக் குடும்பத்தின் மீது எல்லோருக்கும் பிரியந்தான். பாஞ்சாலை மகனை எப்போதும் சத்தம் போட்டுக்கொண்டே கிடப்பாள். ‘ ஏண்டா இதுமாரி கொல்ல குடி, மக்க மனசாளு சொந்தம் பந்தம்னு எது மேலயும் ஒரு புடிப்பு இல்லாம இருக்க?’ அவனுக்குப் பதிலுக்குச் சொல்வதற்கு நிறைய இருந்தாலும், யாரிடமும் வாயைத் திறந்து சொன்னதில்லை. குறிப்பாக அப்பா ராசோக்கியத்தின் மீது அவனுக்குத் தீராத வெறுப்பாகவே மனதில் பதிந்துவிட்டது. நெய்வேலிக்கு சுரங்க வேலைக்கு மண் வெட்டப் போவதென்பது மிகவும் ஆபத்தாகக் கருதப்பட்ட ஆரம்பகாலம். துணிந்தவர்கள் தொடர்ச்சியாக வேலைக்குப் போனார்கள். காலப்போக்கில் கைநாட்டு வைக்கக்கூட தடுமாறுகிற அவர்களை எல்லாம் நிர்வாகம், நிரந்தரப் பணியாளர்களாக்கி, கைநிறையச் சம்பளமும் கனத்த வசதிகள் கொண்ட வீடுகளும் கொடுத்து, அவர்கள் வாழ்க்கை முறையையே செல்வச் செழிப்பாய் மாறிவிட்டது வேப்பங்குறிச்சியையே சுத்தமாய் மறந்துவிட்டார்கள். டவுன்ஷிப்பில் நாகரிக வாழ்விற்குப் பழகி பிள்ளைகள் எல்லோரும் ஜவகர் பள்ளியில் படித்து டாக்டர் இஞ்சினியர்களாகப் போய்க்கொண்டே இருக்கிறார்கள்.

ராசோக்கியத்தையெல்லாம் சுரங்க வேலைக்குக் கூப்பிட்ட போது ‘ எப்பா, அது உள்ள போனா பொணம். வெளிய வந்தாதான் பணம். வெளிய வர்றதுங்கறது ஒண்ணும் நெகாயான காரியம் கெடையாது’ பூனை கண்ணை மூடினால் பூலோகமே இருண்டு விடும் என்கிற ரகத்தைச் சேர்ந்த புண்ணியவான் மறுத்துவிட்டார். அவரைப்போலவே நிறையப்பேர் திண்ணைத் தூண்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உயிரைக் காபந்து பண்ணிக் கொண்டார்கள். காலம் முழுவதும் இருக்கவே இருக்கு உழவும் மாடும். தாங்கள் உழப்பறித்ததோடு, தனக்குப் பிறந்தவர்களையும் உழப்பறித்துக் கிடக்கச் செய்துவிட்டார்கள்.

சதாசிவத்துக்கெல்லாம் படிக்கும் காலத்தில் கடுமையான வேலை இருக்கும். அதிகாலையில் எழுந்தால் பொழுது கொல்லை யில்தான் விடியும். களை வெட்ட தண்ணி கட்ட என அரிபிரியாய் வேலை இருக்கும். அ தி கா லை யி லே ‘ நா பள்ளிக்கொடம் போவுணும்’ வடக்கே பார்த்தவண்ணமாய் நிற்பான். ‘ என்னா சூத்துக்கும் பின்னால இருக்கற பள்ளிக்கொடத்துக்குப் போறதுக்கு, கோழி கூவாத போவுணும்னு ஒத்தக்கால்ல நிக்கிற. போயி அந்த கன்னுக்குட்டிக்கு நாலு பில்லு அரிச்சிக்கிட்டுப் போ.’ தப்பித்து பள்ளிக்கூடம் போய், ஓட்டமும்

பெருநடையுமாய் சாயந்திரம் வந்து வீட்டிற்குள் நுழை வதற்குள் அம்மா பாடமாய்ப் படிப்பாள். ‘ அப்பா ஒன்ன மாடு மேய்க்கறதுக்கு வரச் சொல்லிச்சி. சீக்கிரம் ஓடு.’

அதட்டிக் கேட்க ஆளில்லாத அரசாங்கப் பள்ளிக்கூடம் போன்று, நெய்வேலி நிலக்கரி நிறுவனமே நடத்துகிற மந்தாரக் குப்பம் பள்ளி. இப்படிக் கொல்லைக்கும் பள்ளிக்குமான பாரி விளையாட்டில், அவன் பத்தாவதில் தோற்றுப் போனான். ‘ ஒண்ணும் அவன மனம் பேதலிக்க வுடவேணாம்னு சொல்லு. நா என்னா பரம் பைசாவுக்கு வழியில்லாதவனா. நாலஞ்சி காணி சொத்துக்காரன். நாலு பேருக்கு நாம வேல குடுக்கலாம். வுட்டுக் கெடாசிட்டு அவனக் கொல்லிக்குப் போவச் சொல்லு’ என்ற ராசோக்கியத்தின் கதை செல்லுபடியாகவில்லை. அஞ்சாறு வருசத் திற்குமேல் காண்ட்ராக்ட் வேலைக்கு, முதல் சுரங்கத்திற்கு போய்க் கொண்டிருக்கிறான். மாதம் ரெண்டாயிரத்திற்கு கொடுக்கிறார்கள். குறுக்க நெடுக்ககூட கொல்லைப் பக்கம் போவதில்லை. ஒண்டியாய் சிரமப்படுகிறபோது ராசோக்கியம் மூஞ்சைக் காட்டுவார். இவனும் பதிலுக்கு முறைப்பான். என்னா என்றால் என்னா என்கிற மாதிரி தான் பேச்சுவார்த்தை. வீட்டில் இருப்பவர்களிடம் மட்டுமல்ல, உற்றார் உறவினர் எல்லோரிடமுமே இந்த இறுக்கமான போக்கு அவனுக்கு நிரந்தரமாகிவிட்டது.

“ இந்தா இந்தத் தண்ணியக் குடி...” தேங்காய்களையே வெறிக்கப் பார்த்தபடி நின்ற அண்ணனிடம் பூமா தண்ணீர்ச் செம்பை நீட்டினாள்.

சதாசிவம் மென்றுவிடுகிற கோபத்தில் அவளை முறைத்துக் கொண்டே கேட்டான் “ நா ஓங்கிட்ட இப்ப தண்ணியா கேட்டன்.”

தயங்கியது மாதிரி சட்டையின் காலர் நுனியைக் கடித்தபடி சொன்னாள் “ இல்ல. கோவமா இருக்கறப்ப தண்ணியக் குடிச்சா கோவம் கொறஞ்சிடும்னு எங்க டீச்சர் சொன்னாங்க.”

பட்டென்று அவனுக்கு கோபக்குறியெல்லாம் கணநேரத்தில் மறைந்துபோய் சிரித்துவிட்டான். செம்பைக் கையில் வாங்கிக் கொண்டு செல்லமாக அவள் தலையில் குட்டியபடி சொன்னான் “ ஒப்பன் வுட்டாலும் ஊருக்குப் போ ஊருக்குப் போன்னு நீ வுடமாட்டிய...”

“ ஐயோ... சீக்கிரம் எடுத்துக்கிட்டு கெளம்பு. அப்பா வேற அறுப்புக்கு வல்லன்னு சத்தம் போடுவாரு...” செல்லமாய்ச் சிணுங்கி வலிக்குப் பயந்து குனிந்துகொண்டே சொன்னாள்.

காலையில், நெல்லறுப்புக்கு அரிவாள்களை கருக்கு இழுத்துக் கொண்டு போனால் நன்றாக இருக்கும் என எறவாணத்தில் சொருகியிருந்த அரத்தை தேடிக்கொண்டிருக்கும் போதுதான் பார்த்தார். தொம்பையோரம் கொட்டிக்கிடந்தன தேங்காய்கள். ராசோக்கியத்திற்கு முதல்நாள் செல்லப்பாங்கி சொன்னது நினை விற்கு வந்தது. பூமாவைக் கூப்பிட்டுச் சொன்னார் " எம்மா இந்தத் தேங்காயில ஏழெட்ட எடுத்துக்கிட்டுப் போயி ஒண்ணங்காரர, அத்த வூட்ல முதனையில குடுத்துட்டு வரச்சொல்லு. எனுமோ செம்பையய்யா கோயில்ல செறப்பு குடுக்கப் போவுதாம். நேத்து மேலக்குப்பத்துல தண்ணி ஊத்தற காரியத்துல பாத்துட்டு அத்த சொல்லிவுட்ருக்கு. என்னைக்கின்னு தெரியில. இதுவேற அறுப்பு அறுக்கற அரிபிரியில மறந்துட்டம்னா, எதாவது தப்பா நெனைக்கும்."

அன்றைக்குப் பார்த்து சதாசிவத்துக்கு வேலை செய்கிற இடத்தில் பொருள் பற்றாக்குறையென லீவு விட்டிருந்தார்கள். இவனால் ஊருக்குப் போக முடியாது எனச் சொல்லிவிட்டால், அறுப்பு அறுக்கிற நேரத்தில் வெட்டியாய் வீட்டில் குந்தியிருக்கவும் முடியாது. மூஞ்சைத் தூக்கி வைத்துக்கொண்டு நிற்பார்கள். அதுவும் அம்மாவுக்கு, அவள் அண்ணன் வீட்டுக்கான சமாச்சாரம் என்றால் ஆப்பையும் டாப்பாக்கூடுமாகப் பறந்துகொண்டு நிற்க வேண்டும்.

கிட்டியில் அகப்பட்ட மாதிரி தயங்கித் தயங்கி நின்று கொண்டிருந்தவனை, பூமா தண்ணீர் கொடுத்துக் குளிரவைத்து விட்டாள். மெல்ல சிரமப்பட்டு பையை எடுத்து கேரியரில் வைத்தான். இதுதான் சமயமென்று திண்ணையின் மீது எடுத்து வைத்திருந்த பூப்பொட்டலத்தை எடுத்துக்கொண்டு கிட்டப் போனாள். " அப்பறம் அத எதுக்கு இங்க எடுத்தார?" கேட்டான்.

" அட பாசக்கார மாமனாச்ச, ஒரு மொழம் பூவு கூடுமா வாங்கியாரக்கூடாதுன்னு மலரு நெனைக்கும். அதுக்குன்னு மெனக்கிட்டு கட்டுனா... ரொம்ப சலிச்சிக்கிற" பொய்யாய்க் கோபத்தைக் காட்டி வெடுக்கென பைக்குள் வைத்தாள்.

மலர் பற்றிய பேச்சை எடுத்ததுமே, அவன் முகம் லேசாய் சுருங்கியது கண்டதும், பூமாவுக்கு ஒரு வாட்ட இழை முகத்தில் ஓடியது. ஒன்றும் சொல்லாமல் சைக்கிளில் ஏறி மிதித்துக்கொண்டு போனான்.

மலர் வயதுக்கு வருவதற்கு முன்பு கூட, அவளிடம் ரொம்பவும்

பிரியமாய் இருந்தவன்தான் சதாசிவம். வேலையில் இருக்கிற அப்பனின் செல்வீகத்தால் போடுகிற துணிமணிகளில், அணிகிற நகைநட்டுகளில் சற்றே மிதப்பாக அவள் காட்டிக் கொண்டாலும் கூட கொழுந்துவிட்டு, இலை பரப்பி, இதழ் விரிந்து பூத்து அவனுள் சிரித்துக் கொண்டிருந்தவள்தான். அவளுக்கு மஞ்சள் தண்ணீர் விஷேசம் நடந்த பின்புதான்...

அது போட்டிருந்த மள்ளாட்டை, பிடுங்கி ஆயப் போகிற நேரத்தில் அடைமழையாய் பெய்த நேரம். எல்லாமும் முளைத்து, கோம்பு அழுகிக் கிடந்து பொறுக்கிச் சேர்த்தவை கூட வாயில் வைக்க முடியாதபடிக்கு சொத்தையாய்ப் போய்விட்ட கஷ்ட காலம். சின்னத்தம்பி மலரின் மஞ்சள் தண்ணீர் பத்திரிக்கையை கொண்டுவந்து நீட்டினார்.

‘ என்னா அண்ண, கழுவித்தொடைச்சி வுட்ட மாதிரி வெறுங் கைகால வைச்சிக்கிட்டு நிக்கிற நேரத்துல போயி காரியத்த வைச்சிருக்கற...’ கேட்கலாம் என்றுதான் பாஞ்சாலை நினைத்தாள்.

ஆனால் ஒரேயொரு அண்ணன். இருப்பதும் ஒட்டிநாக்காய் ஒரேயொரு பொட்டப்பிள்ளை. அடைமழை பெய்யாமல் விட்டு, மள்ளாட்டையை ஆய்ந்து அடித்துக்கொண்டு போய் விற்றுவிட்டு வந்திருந்தாலும்கூட, ஒன்றும் உள்ளங்கை அளவு பதக்கத்தோடு ஐந்து பவுனில் தங்கச்சங்கிலி செய்துகொண்டுபோய் போட்டு விடப் போவதில்லை. அதிகபட்சம் அரைப்பவுனுக்கு மோதிரம் கீதிரம் எடுப்பாள். ஆனால் எதை எடுத்துக்கொண்டு போனாலும் அண்ணனோ அண்ணியோ எவ்வளவு செய்தார்கள் என ஏறெடுத்துப் பார்க்கப்போவதில்லை. சபை நிறக்க பத்து சனங்களை இட்டுக்கொண்டு வந்தால் போதும் என்கிற நினைப்புதான்.

பழம், சக்கரை, சீப்பு கண்ணாடி, துணிமணிக்கே கடன்கக்கி வாங்கித்தான் பார்க்க வேண்டிய இக்கட்டு. பாஞ்சாலை கடந்து தான் சதாசிவத்திடம் சொன்னாள். “ இந்தாடா எப்பா... நாளைக்கி ஒனக்கு வரப்போறவதான். துணிமணி பழஞ் சக்கரய நாங்க பாத்துக்கறம். அவளுக்கு எதாவது கால் அரையில நகநட்டு எடுக்கறது ஓம் பொறுப்பு.” சதாசிவம் வாங்குகிற சம்பளத்தில் ஏதோ தன் செலவுக்குப் போக, மாதாமாதம் பாஞ்சாலையிடம் கொடுத்து விடுபவன்தான். இப்படி அடைத்து விட்டதும், சைக்கிளுக்கு பஞ்சர் ஒட்டிய கடனைக்கூடக் கொடுக்காமல், இறுக்கிப் பிடித்தால்தான் கால் பவுனாவது எடுக்கலாம் என்கிற நிலை. பல்லைக் கடித்துக்கொண்டு கால் பவுனில் நெளி மோதிரம் எடுத்துக்கொண்டு போயிருந்தான்.

இவர்களின் நகை நந்தனத்தை தெரிந்துகொண்ட தங்கப்பழம் மலரின்

கழுத்தில் கிடந்த இரண்டுபவுன் ‘ வெந்தயவெரை’ செயினை கழற்றி பூமாவிடம் கொடுத்துச் சொன்னாள் “ மாமன கும்பல்ல மொதல்ல இந்த செயின போடச்சொல்லி அப்பறமா மோதரத்த போடச்சொல்லு...” சிரித்துக்கொண்டேதான் மலரும் தலை சாய்த்து கழற்றிக் கொடுத்தாள்.

‘ எம்பளாய்சு வூட்டு காரியம்’ என்பதால் நல்ல கூட்டம். ராசோக்கியம், ஊரிலிருந்து தெருவு சனங்களை வண்டி கட்டிக் கொண்டு அழைத்து வந்திருந்தார். உள்ளூர் சைவன்களை வைத்து தடபுடலாய் சாப்பாட்டு வேலை நடந்து கொண்டிருந்தது.

பட்டுப்புடவை சரசரக்க மலர், நாற்காலியில் வந்து குந்தினாள். தாய்மாமன் வரிசை சதாசிவம்தான் செய்யவேண்டும். மாலையை எடுத்து கிழக்கு பார்த்து கும்பிட்டு போட்டுவிட்டு, ஊர் மெப்புக்கு கழற்றிக் கொடுத்திருந்த கனத்த சங்கிலியை மலர் கழுத்தில் போட்டான். பிறகு தன் சம்பாத்தியத்தில் ஆசையாய் வாங்கிய நெளிமோதிரத்தை வரிசைத்தட்டின் மீதிருந்த சந்தன நிறப் பேழையிலிருந்து எடுத்தான். அவனாகவே விரலெடுத்தப் போடட்டும் என குறுஞ்சிரிப்புடன் மலர் குந்தியிருந்தாள். சதாசிவமும் மடிமீது கிடந்த அவளின் விரல்களை ஒரு பூவைப் போல் எடுத்து மோதிரவிரலில் நெளிமோதிரத்தைப் பொருத்தினான். ஒரு தோராயமாக, சற்று அளவு கூடுதல் வைத்து எடுத்து வந்திருந்ததுதான். ஆனால் விரலில் நுழையவில்லை. விரலின் நடுமூட்டில் எதிர்த்துக்கொண்டு நின்றுவிட்டது. சதாசிவத்திற்கு பொக்கென்று போய்விட்டது. வலிந்து நுழைத்துத் தள்ளினாலும் கீறலில் மலருக்கும் வலியில் முகம் கோணியது. இருவருக்கும் வெறுத்துவிட்டது. குறுக்கே பூமாதான் நுழைந்தாள் “ திட்டமா இல்லன்னா அடுத்த வெரல்லதாம் போடன். இப்ப என்னா...” சொன்னதோடு இல்லாமல் கழற்றவும் செய்தாள்.

மறாநாள் இவனை வேலைக்குப் போய்விட்டு நேரே முதனைக்கு வரச்சொல்லியிருந்தாள் பாஞ்சாலை. காரியத்திற்கு அழைத்து வந்திருந்த சனங்களை கொண்டுவிட கோழிகூவவே வண்டி கட்டி ராசோக்கியம் போய்விட்டிருந்தார். கையோடு கையாக எதையாவது நல்லது பொல்லது ஆக்கிப்போட்டுவிட்டுப் போகலாம் என பாஞ்சாலையும் பூமாவும் தங்கியிருந்தனர்.

நாட்டுக்கோழி அடித்து, வடை பாயாசத்துடன் நல்ல சாப்பாடு. வரிசையாய் மலர், பூமா, சதாசிவம் என குந்தவைத்து பாஞ்சாலைதான் பரிமாறினாள். எதுவோ பேச வாயெடுத்த பூமாவையும் அடக்கினாள் “ சாப்புடுறப்ப பேசாத... பெசாம சாப்புடு.”

சாப்பிட்டு முடித்து சதாசிவம் பல்லைக் குத்தியபடி, கருப்பு வெள்ளை டி. வி.யில் ஓடிக்கொண்டிருந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு குந்தியிருந்தான். முந்தானையில் கையைத் துடைத்தபடி வந்து குந்திய மலர்தான் சிரித்தபடி பூமாவிடம் கேட்டாள் " என்னா பூமா, ஒங்க அண்ணன் எடுத்தாந்த மோதரம் சுண்டி வெரலுலதாம் போட்டுக்கலாம் போல்ருக்கு..."

சதாசிவத்திற்கு ஒரு நிமிடம் திக்கென்று போய்விட்டது. பதறலோடு தங்கப்பழமும் திரும்பினாள். அவள் சிரித்துக்கொண்டே கேட்டதும் பாஞ்சாலை ஒன்றும் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் பூமாவிற்கு அவள் கிண்டலுக்குத்தான் கேட்கிறாள் எனத் தெரிந்தும் அண்ணங்காரனின் முகக்குறிப்பை வைத்து ஒரு மடக்கு போட்டாள் " இப்பிடி திடிச்சாப்ல ஒரு சுத்து பெருத்து போயிருப்பன்னா எங்க அண்ணங் கண்டுது. இதுக்கே அது, ஒரு மாசத்து சம்பளத்த புக்காம போட்டு ஆச ஆசயா வாங்கிக்கிட்டு வந்துது. அதுல போயி கிண்டல் கீநூட்டு பொளக்ற..."

ஆனால் பட்டென்று அவளைக் கண்ணடித்து சாடை காட்டி விட்டு மீண்டும் இறக்கினாள் மலர் " ஒங்க அண்ணனோட ஒரு மாச சம்பளத்த வைச்சி ஏஞ் சுண்டிவெரலுக்குதான் மோதரம் எடுக்க முடியுதா? வேணாஞ் சாமி... இந்த சம்பளத்த வைச்சிக்கிட்டு, அங்க வேப்பங்குறிச்சி வந்துலாம் என்னால குடும்பம் நடத்த முடியாது. இங்க எங்க அப்பாரு சம்பளமும் இருக்கு. பேசாம இங்க முதனையில வந்து வூட்டோட மாப்பிள்ளையா நாஞ் சொல்றதக் கேட்டுக்கிட்டு இருக்கச் சொல்லு ஒங்க அண்ணன."

சதாசிவம் அப்படியே நொறுங்கிப் போய்விட்டான். சீண்டி சித்ரவதை செய்தமாதிரி அவனின் சம்பளத்தை பற்றிப் பேசியதை அவனால் தாங்கிக்கொள்ள முடிவில்லை. அவள் கிண்டலுக்குச் சொன்னாளா இல்லை உண்மையில் உள்ளுக்குள் கிடப்பதை ஒளிவில்லாமல் சொன்னாளா...? எப்படிச் சொல்லியிருந்தாலும் அவனுக்கு அறுத்துக் கொண்டேயிருக்க உள்ளுக்குள் பூத்திருந்த மலர்ச் செடி, அன்றே வதக்கத்திற்கு வந்துவிட்டது.

*

11

கா ணிக்காரன் கணேசன் பொண்டாட்டி மொட்டைச்சி யால் கதவை இழுத்துச் சாத்தமுடியவில்லை. கனத்த பலகைகளும், கட்டை விரல் சோடு தடிமன் கொண்ட ஒண்டிகளும், நாதாங்கியு மான ஆதிகாலத்துக் கதவு. கதவுச் சட்டத்தை, மூச்சைக்கட்டி தரையில் உரசாதவாறு தூக்கியபடி இழுக்க வேண்டும். ஊகூம். கதவு நிலையில் முக்காத் தெக்கம் உயரம்கூட இல்லாத அவளால் அது முடியாத காரியமாகப் பட்டது. " இந்த கம்னேட்டி பயகிட்ட படற பாடு ஒரு பக்கம்னா, இந்தக் கதவுகிட்ட படறது எம பாடா இருக்குது."

இடுப்பில் சொருகியிருந்த அரிவாள், அறுப்புக்கு நேர மாகிறது என்று உறுத்திக்கொண்டேயிருந்தது. பெருமூச்சு விட்டபடி அருகால்படியை நிமிர்ந்து பார்த்தாள். இரு புறமும் வாயில் பூங்கொத்து ஒன்றைக் கவ்வியபடி அன்னப் பறவைகள் செதுக்கப்பட்ட சூரியப்பலகையின் நடுவில் குழிப்பகுதி சற்று ஆழமாக்கப்பட்ட சக்கரச் செதுக்கு. பதினைந்து வருடங்களுக்கு முன்பு அவள் வாக்கப்பட்டு வரும்போது, மாலையும் கழுத்துமாய் நிமிர்ந்து பார்க்கையில் தெரிந்த சற்றும் சிதைவுறாத அதே பொலிவுதான்.

அப்போதும் தரையில் இழுத்தவாறு கால்வட்டம் போட்ட படிதான் கதவு வரும். ஆனால் ஒரே மூச்சில் அலாக்காகத் தூக்கி, கதவு நிலை ஒண்டியில், நாதாங்கியைப் பொருத்துகிறமாதிரி நிறுத்துவாள். குள்ளமாக இருந்தாலும் நல்ல உடல்கட்டு, இடுப்பு வரை தொங்கும் அடர்ந்த முடி, ஒண்டியாய் அண்டாப்பானையை கூட உச்சந்தலை ஏந்தித் தூக்குகிற தெம்பில் இருந்தவள்தான். ' காணிக்காரன் பொண்டாட்டி செல்லப்பாங்கியா இவ.' பத்துக் காணிக்குமேல் நிலபலம் கொண்டு ' காணிக்காரன்' என ஊராரால் மதிக்கப்பட்ட குடும்பந்தான். ஒரு ஆள் படுத்துக்கொண்டு தாராளமாய் உருளலாம் என்கிறமாதிரி அகலமான சுவர்களைக் கொண்ட உயரமான துயிலபத்து வீடுதான்.

வண்டி மாடுகளும் உழவு மாடுகளும் கறவை வற்றாத பசுமாடுகளுமாய்க் கட்டுத்தெருவும் இருந்தது. கணேசனுக்கும் செல்லப்பாங்கிக்கும் கொல்லை வேலையும் வீட்டு வேலையுமாய் ஓய்வு ஒழிசல் இருக்காது. ஒன்றுக்குப்

பத்தாய், எதைத் தொட்டாலும் கூடிவருகிற ராசயோகம். ‘ செல்லப்பாங்கி அடியெடுத்து வைச்ச நேரம் பரவாயில்ல. ஏதாளங்கெட்ட கரம்புல கூட கம்பு எனுமா சோளக்கருதாட்டம் இருக்குது பாரு.’

நிலைத்து, மூன்று பசங்களுக்குத் தாயாகி, நிறைவாழ்வாய் நிற்கிற நேரம், அவனுக்கு எப்படித் தொற்றிக்கொண்டது என்று தெரியவில்லை அந்தக் குடி. சதாநேரமும் போதை. மந்தாரக்குப்பம் பக்கம் வந்தால் சீட்டுக்கட்டு. மள்ளாட்டையோ கம்போ நெல்லோ மார்க்கட்டுக்குப் போனால், நெய்வேலி ராதா ஓட்டலில், கூடுவாரோடு கூடிப்போய் அறை போட்டு குட்டி, கூத்து. தலைகீழாய் மாறி விட்டது இவனது பழக்கவழக்கம். கம்பு, மள்ளாட்டை, நெல் என மூட்டை முடிச்சுகளும், நிறைந்த தொம்பைகளுமாய் பெருச்சாளிகள் தின்று கொழுத்துக் கிடந்த வீடு. அப்பன் ஆத்தா திவசத்திற்குப் பிண்டம் பிடிக்கச் சேரை எள் கூட இல்லாத நிலைக்குப் போய், வெற்றுத்தொம்பையைக் கறண்டிப் பார்த்துவிட்டு பெருச்சாளிகள் கூட வீட்டை விட்டு வெளியேறிவிட்ட பரிதாபம். செல்லப்பாங்கி. உடல் ஒடுங்கி, உப்புக்கரிச்சான் குருவியைப் போல் குன்னிப்போய் விட்டாள். அவள் குரல் எதுவும் அவனிடம் எடுபட வில்லை.

ஏறுகிறபோது இருந்த சிரமம், இறங்குகிறபோது தெரிய வில்லை. ‘ கோயிந்தா... கோயிந்தா...’ என மும்முறை கூப்பிடலுக்குள் தேரிலிருந்து இறக்கிவிடப்படுகிற சாமி சிலையைப் போல், சரசரவென எல்லா நிலபுலங்களையும் தோற்று, குந்தியிருக்கிற வீடும் வீட்டுக்குப் பின்னால், பீக்கருவை முளைத்த கால் காணி தரையும் மட்டும்தான் பாக்கி என்கிற நிலைக்கு வந்துவிட்டான். பேருக்கு மட்டுந்தான் காணிக்காரன். இன்றைக்கு எதைக் குறி வைத்தால் ஊற்றிக்கொள்ள ஆகும், எனக் குறுகிய வட்டத்திற்குள் சிறுத்து விட்டான்.

பெரிய பையன் வேலு திருப்பூர் பக்கம் ஓடிவிட்டது. இந்த நிலையில் கூடப்பிறந்தவளுக்குச் செய்கிற ஒரே உபகாரம் இது தானென ரவி, ரமேசு எனச் சின்னது இரண்டையும் செல்லப் பாங்கியின் அண்ணன் சிவசாமி கூட்டிப்போய், வடக்குவெள்ளூரில் வைத்துக்கொண்டான். கூப்பிடுகிற தூரத்தில் இருக்கிற மந்தாரக் குப்பம் பள்ளிக்கூடம் வருகிற ரெண்டும், எட்டிக் கூட இந்தப் பக்கம் பார்க்காது. ‘ இந்தக் குடிகாரன் தலகடையில பாத்து நின்னு என்னா வாரியடிச்சிக்கப் போவுதுவோ. கெடக்குட்டும் வுடு.’ தெற்கு வெள்ளூர் பக்கம் கூலி வேலைக்குப் போகும்போது அப்படியே எட்டி வடக்குவெள்ளூர் போய்ப் பார்த்துவிட்டு வருவாள். கையில் மடியில் ஏதாவது வகைதொகை இருக்கும்போது நேராய்ப் பள்ளிக்கூடம் ஓடி

கொடுத்துப் பார்த்துவிட்டு வருவாள்.

தானியம் தவசம் போட்டு வைத்திருக்கிற தொம்பை உட்பட கையைக் காட்டிவிட்ட பிறகு காணிக்கார கணேசனுக்கு அடுத்த ஆகுமானம், அவளின் கூலி உழையல்தான். அடுக்குப்பானை, கடுகு டப்பாவை ஆராய்கையில் ஏதும் கிடைத்தால் எகிறி விடுவான். கிடைக்காதபோது மகாநாடுதான். ஆனாலும் அளவு கடந்த போதை யிலும் அவனுக்கு அந்த யோசனை ஓடும். காடை மாதிரியிருக்கிற அவள் உடம்புக்கு, ஓங்கி ஒன்று வைத்தால் எங்கு பொசுக்கென்று அடங்கி விடுமோ என்கிற பயம். ஒரே வழி அவளின் நீளமான முடிதான். அவனின் நல்ல வளர்த்திக்கு எட்டி அவள் முடியைப் பிடித்துக்கொள்வான். சிம்பலாட்டுவான். பருந்துக் கால்களில் சிக்கிய கோழிக்குஞ்சாய் கத்தி ஓய்ந்த ஒரு கணத்தில் ஒருநாள் அவனைப் போலவே அவளுக்கும் அந்த யோசனை வந்தது.

பதினைந்து நாள் மிஞ்சினால் ஒரு மாசம். அதற்கு மேல் தலை முடியை வளர விடமாட்டாள். ‘ பேனு அரிக்குது. சொடுவு புடுங்குது...’ காரணம் சொல்வதற்கு ஐயுருவாக இருந்தது. இருக்கவே இருக்கிறார்கள், விருத்தாசலம் கொளஞ்சியப்பரும், தெற்குமேலூர் அங்காளபரமேஸ்வரியும். ‘ என்னாடி அடிக்கடி மொட்ட போட்டுக் கிட்டு நிக்கிற?’ கேட்பவர்களுக்கு சாமர்த்தியமாக சமாளிப்பாள். ‘ கோயில் கோயிலா போயி வேண்டிக்கிட்டு மொட்ட போட்டுதாம் பாக்கறன். இந்தக் குடிகாரப் பயல அந்தச் சாமிவோ திருத்த மாட்டங்குது.’

“ அதுக்கு ‘ பூமுடி’ குடுத்துட்டுப் போறது. எதுக்கு தலையில அடிச்சாப்ல எப்பப் பாரு மொட்டன்னு...” கேட்பார்கள்.

“ அட நீ வேற... இவம் சம்பாரிச்சி போட்டு வைச்சி வாழற வக்கணைக்கி கூந்தல வளத்து, கொத போட்டுக்கிட்டு நிக்காதது தான் கொறச்சலா இருக்கு இதுல பூமுடி குடுங்கற.” முஞ்சியில் அடிக்கிறமாதிரி சொல்வாள்.

அடிக்கவும் முடியாமல், கைப்பிடிக்கு முடியும் கிடைக்காத வெறுப்பில், தெருவில் நின்றுகொண்டு அதம் பரப்புவான் ‘ நா வெறும் பய இல்லடி . காணிக்காரன். பத்துக் காணி நெலத்துக்காரன். என்ன அசைக்க முடியாது. என்னித ஆட்ட முடியாது.’

அடிக்கடி மொட்டை அடித்து அடித்து செல்லப்பாங்கி என்பதெல்லாம் மறைந்து போய்விட்டது. நேரில் பார்க்கிற போது மட்டும் ஏதோ போய்த் தொலைகிறது போ என அண்ணி, அக்கா, கணேசன் பொண்டாட்டி, காணிக்காரன் பொண்டாட்டி என்ப தெல்லாம். முளைத்து மூன்று இலை

விடாததுக்குக்கூட சூத்துக்கும் பின்னால். உச்சந்தலையில் ஆணியடிக்கிற மாதிரி மொட்டைச்சி தான். இல்லையென்றால் மரியாதை நிமித்தமாக மொட்டைக்கும் பின்னால் அண்ணியோ அக்காளோ... சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

“ தே மொட்ட அண்ணியோவ்...” முன்னுக்க மாரில் தழைத்த வாறு துண்டும் கையில் பிடித்திருந்த வாளியோடு அரிவாளுமாய் பூமா கிழக்கே திரும்பிக் கூப்பிட்டாள். ஏறத் தொடங்கியிருந்த எதிர்வெயில் பட்டு அவளின் ஒற்றை மூக்குத்தி பளிச்சிட்டது.

“ அட நீ வேற... இரு புள்ள. இந்தக் கதவ இழுத்துச் சாத்த முடியாம லோலுபட்டுக்கிட்டு நிக்கிறன். அதுக்குள்ள, சூத்துல வைக்கல நொழுந்திக்கிட்டுக் கத்தற...” நாலாவது வீட்டிலிருந்து மொட்டைச்சியின் குரல் எரிச்சலாக வந்தது.

இவளே தாமதம். இதில் கூலிக்கு அறுக்க வருபவளையும் தாமதமாகக் கூப்பிட்டுக்கொண்டு போனால், அப்பா முகத்தை ஏறெடுத்துப் பார்க்க முடியாது. எள்ளும் கொள்ளும் பொரியும். “ அம்மாம் பெரிய ஒடம்புக்கார அண்ணன, வாசல்லேர்ந்து உள்ள இழுத்துகிட்டுப் போயி போட்டு தண்ணிய ஊத்தி போதைய பொசுக்குன்னு எறக்கிடுற. இந்தக் கதவ இழுக்க முடியிலங்கற...” பூமா கேட்டுக்கொண்டே பூட்டிக்கிடந்த சித்தி வீட்டைக் கடந்து கிழக்கே போனாள். மூணாவது வீடு தேவகியுடையது. அரக்கப்பரக்க சோத்துக்குவளையையும் சாம்பார், ரச வாளிகளையும் வெளியே எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள் தேவகி. “ செத்த இரு பூமா. இந்த கொவள மேல, சாம்பார் வாளிய வைச்சி வுடு. ரசத்து வாளிய கையில எடுத்துக்கறன்...” தேவகி சொன்னாள்.

“ சீக்கிரம் வா அண்ணி. எங்க வூட்டு பெரியவர சிப்புக்கட்டி ஊருக்கு அனுப்பறதுக்குள்ள இம்மாம் நேரமாயிட்டுது. இதுல இந்த மொட்ட அண்ணி வேற இரு இருங்குது” பூமா சொல்லிக் கொண்டு இருக்கும்போதே கிழக்கில் ரோட்டிலிருந்து தெருவில் இறங்கி பேண்ட் சட்டையில் கையில் கனத்த நோட்டும் காகிதங்களுமாய் இருவர் வந்துகொண்டிருந்தார்கள்.

“ ஒனக்கு மேலடி நானு. இதுக்கே களத்துமோட்டுல இருக்கற ஒண்ணங்காரரு பாய்வாரு, இந்த நொள்ள சோறு ஆக்கறதுக்கு இம்மாம் நேரமான்னு. வகதொக தெரியாம, இந்த குடுத்தனக் காரங்கிட்ட நா மாட்டிக்கிட்டு படறது இருக்க...” ஒரு கதவிற்கு முட்டியால் முட்டுக்கொடுத்து மறுகதவை இழுத்துச் சாத்திப் பூட்டி சாவியை அருகால்

படியில் வைத்துவிட்டு வாசலுக்கு வந்தாள்.

சும்மாட்டைக் கோலித் தலையில் வைத்துக்கொண்டு குனிந்து சோற்றுக் குவளையைத் தூக்கினால் சுடுசோற்றுக்குவளை சுட்டது. தேவகி வெடுக்கென நிமிர்ந்து " இரு பூமா... சூடு ஒட்டுது... சும்மாட்டுத் துணிய தண்ணியில நெனைச்சிக்கிட்டு வர்றன்..." என்று தோட்டத்துப் பக்கம் ஓடினாள். பேண்ட் சட்டைக்காரர்கள், செல்லப்பாங்கி வீட்டிற்கு நேரே தேங்குவது தெரிந்தது. ' யாரா இருக்கும்...'

போன வேகத்தில் ஈரச்சும்மாட்டை தலையில் வைத்தபடி வந்தவள், நங்கென்று தானே சோற்றுக்குவளையைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு லேசாய் குந்துவதுபோல் குனிந்தாள். பேண்ட்டுக்காரர்களை பார்த்தபடி பூமா சாம்பார் வாளியைக் கையிலெடுத்து, குவளையின்மேல் எக்கி வைக்கப்போனாள். தாவிய மார்களில் சோற்றுக்குவளையின் சூடு, போட்டிருந்த சட்டையைத் தாண்டிப் பாவியது.

பேண்ட்டுக்காரர்கள் செல்லப்பாங்கி வீட்டுக்கு நேர் எதிரே வந்ததும் அவளைப் பார்த்துவிட்டு நின்றார்கள். " ஏங்க... இந்தாங்கம்மா..." நோட்டிசு ஒன்றைக் கையில் கொடுத்து எதுவோ சொல்வதற்கு வாயெடுத்தார்கள்.

கதவு இழுபடாத ஆத்திரம். நேரமாகி விட்ட அவசரம். விழுந்து பிடுங்காத குறைதான் செல்லப்பாங்கிக்கு. " அந்தக் குடிகாரன் எந்த நெலம்பலத்த வுட்டு வைச்சான், ஏங்கிட்ட வந்து வவுத்து எரிச்சல கெளம்புறீங்கள. தா, பக்கத்து வூட்டுக்காரங்க, தலையில சோத்துக்குண்டான வைச்சிகிட்டு நிக்கிறாங்க பாரு. அவுங்கதான் தாளடியில உளுந்து கிளுந்து வெரைப்பாங்க. போய் பாருங்க, மருந்து கிருந்து வாங்குவாங்க."

" நாங்க மருந்து கம்பேனிக்காரங்க இல்ல. நெய்வேலி நெலம் எடுப்பு அலுவலகத்திலேர்ந்து வர்றம். ஒங்க வூட்டுக்காரர் பேரு கணேசந்தானா?" அவர்கள் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னார்கள். பூமாதேவிக்கு திக்கென்று ஓர் அதிர்ச்சி. கையிலிருந்த வாளியைக் கீழே வைத்துவிட்டு கிட்டக்கப் போனாள்.

தேவகியும் தலையில் தூக்கி வைத்திருந்த சோற்றுக் குவளையைக் கீழே இறக்கினாள். செல்லப்பாங்கியும் பதட்டத்தோடு இறங்கி வந்தாள். " நீங்க வந்துட்டிங்க. நாங்கதான் இனிமே எங்க போறதுன்னு தெரியில."

*

இரண்டு

12

20.12.86

நி லம் கையகப் படுத்துதல் துறை,

தமிழ்நாடு அரசு,

நெய்வேலி.

தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம், வேப்பங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த தங்களின் வீடு மற்றும் நிலம் ஆகியவற்றை சுரங்கப் பணிகளுக்காக நில ஆர்ஜிதம் செய்ய மேற்படி துறையால் உத்தேசிக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இழப்பீடு மற்றும் மீள் குடியமர்த்தல் தொடர்பான வசதிகளுக்காக தங்களின் பாத்தியதைக்கு உட்பட்ட வீடு மனை, மற்றும் நிலம் ஆகியவற்றின் சர்வே எண், விஸ்தீர்ணம், உடைமை ஆவணம் போன்றவற்றின் விபரங்களையும் நிலம் அளிப்பதற்கான ஒப்புதலையும் இந்த நோட்டிஸ் கண்ட நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் மேற்படி துறைக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,

தனி தாசில்தார் (நில எடுப்பு)

அ றுப்பு மெனையில் குந்தியிருந்த ராசோக்கியத்திற்கு கண்கள் இருண்டு பூமி இரண்டாய்ப் பிளந்து இனி மீளவே முடியாது என்கிறமாதிரியான அதலபாதாளத்திற்கே போய்க்கொண்டிருந்தார். வாய் மட்டும் அரற்றிக் கொண்டேயிருந்தது " இனிமே தலையில துணியப் போட்டுக்கிட்டு போவ வேண்டிதுதான்." கையிலிருந்த அரிவாள்களைப் போட்டுவிட்டு பூச்சி, அய்யாயிரம், அம்புசாட்சி எல்லோருமே அதே சடசடப்பில் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். ஏற்கெனவே சேதி தெரிந்துவிட்ட செல்லப்பாங்கி மட்டும் இறுக்கமாய், கடைசியாய் வந்து பிடித்த மெனையில் விறுவிறுவென ஆவேசம் கொண்டவளைப் போல அறுத்துக் கொண்டிருந்தாள். மறுக் மறுக்கென்று பாய்கிற அவளின் அறுப்புச் சத்தம் மட்டும், பரவிக்கிடந்த மெளனத்தை ஊடறுத்துக் கொண்டிருந்தது.

பூமாவுக்குக் கண்களில் திரள்கிறது. படித்துக் கொண்டிருந்த நோட்டீசை பிடித்திருந்த விரல்கள் நடுங்குகின்றன. தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய இவ்வளவு காலத்தில் தனது அப்பா, இப்படி நொறுங்கிக் கண்கலங்கிக் குந்தியதை அவள் பார்த்ததே யில்லை. அதைவிடவும் அப்பாவை ஒட்டி மெனை பிடித்திருந்த அவளின் அம்மா பாஞ்சாலை... நெய் வற்றிக் கிடந்த அகலின் திரியை மேலும் பிழிந்ததுபோல் மெலிந்த தேகம். மொட்டை வெயிலில் அசைவற்று வெகுநேரமாய் எதிரில் தலைவளைந்து காய்ந்து நிற்கும் நெற்தாள்களையே வெறிக்கப் பார்த்துக்கொண்டே குந்தியிருந்த அவளை கவனித்த பூமாவிற்குப் பதறியது.

பாஞ்சாலைக்கு வெறித்திருந்த கண்களில் கலகலவென கண்ணீர்த்துளிகள் இறங்குகின்றன. உதடுகள் துடிக்கின்றன. தத்தளித்துக் கொண்டிருந்தவள், திடுமென அப்படியே இரண்டு கைகளாலும் பூமியை அறைந்து அறைந்து கதறுகிறாள் “ இந்த மண்ண வுட்டுட்டு எங்க போயி நாங்க பொழைப்பம்? வுழுந்து பெரண்ட இந்த பூமிய வுட்டுட்டுப்போயி, எங்க நின்னு நாங்க தெவைப்பம்? வாய் சோத்த புடுங்கிட்டா நாங்க எங்க போயி பிச்ச எடுப்பம் செம்பையய்யா... அய்னாரப்பா... கெழக்குப் பக்கம் சொரங்கம் போவுதுன்னு தெம்பா இருந்தன. இப்பிடித் தெக்க திரும்பி எங்கள தெவைக்க வுட்டா நாங்க என்னா செய்வம்?” அவளின் அழுகுரல் வெளியெங்கும் அதிர்கிறது.

“ பாஞ்சால... பாஞ்சால... நெலம்பலத்த எடுத்துக்கிட்டா என்னா, நம்ப கையிம்காலையுமா புடிங்கிக்கப் போறான். வேணாம் பாஞ்சால...” அழுதுகொண்டே அறைகிற அவளது கைகளைத் தடுக்கிறார். “ எம்மா... எம்மா...” பூமாவும் அவளை வாரியணைத்துக் கொண்டு மறிக்கிறாள். பூச்சிக்கும் செல்லப்பாங்கிக்கும் கலகல வென்று கண்களில் ஓடுகிறது.

குட்டைப் பக்கம் ஆடுமாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள், பக்கத்தில் சிகாமணி கொல்லையில் நெல்லடித்துக் கொண்டிருந் தவர்கள் எல்லாருமே பதறியடித்துக்கொண்டு ஓடிவருகிறார்கள். “ என்னாவாம்...”

“ நம்ப ஊரு, கொல்லக்காடு எல்லாத்தையும் எடுக்கறதுக்கு நெய்வேலிக்காரன் வந்து நோட்டிசு குடுக்கறானாம்.” குரல்கள் நடுங்குகின்றன.

“ வேல முடிஞ்சி போச்சா... எங்க குடுக்கறானாம்...” அதிர்கின்றன.

“ நோட்டிச பாத்துட்டுதாம் பூமா அம்மா அடிச்சிக்கிட்டு அழுவுதாம்.”

கிட்ட வரமுடியாத நிர்பந்தத்தில், அங்கிருந்தபடி சேதியைக் கேட்ட சிகாமணிக்கு திடுக்கென்றது. மேலே படிந்துகிடந்த சுணை, கூளங்கள் எதையுமே பாராமல் அவசரமாய் ஊரை நோக்கி ஓடினான். " டேய் சிகாமணி, இருடா நானும் வர்றன்..." தேவகி மூலம் ஏற்கெனவே சேதி போயிருந்த வடிவேலு, தெற்கு வெளிப் பக்கமிருந்து கூப்பிட்டுக்கொண்டே பின்னால் ஓடிவந்தான்.

அதற்குமேல் ராசோக்கியத்தாலும் கொல்லையில் குந்தியிருக்க முடியவில்லை. அழுதுகொண்டிருந்த பாஞ்சாலையை, அப்படியே பூமாவின் கால்களில் சாத்திவிட்டு, ஊரை நோக்கி ஓடினார். அவர் எட்டிக் கொட்டகையைக் கூடத் தாண்டவில்லை, பாஞ்சாலையின் அழுகுரல் பட்டென்று நின்றுவிட்டது. மாறாக அவள் வாய் கோணலாகியது. கைகால்கள் விறைத்துக்கொண்டு லேசாய் கோண ஆரம்பித்தன.

" எப்பா... எப்பா... ஓடியா எப்பா... ஓடியா... எப்பா..." பூமா கதறுகிறாள் கத்துகிறாள். வெடுக்கெனத் திரும்பி மின்னலாய் அவர் வந்து சேர்வதற்குள் பாஞ்சாலைக்கு கைகால்கள் கோணை கோணையாக இழுக்க ஆரம்பித்துவிட்டன. அரிகிடையில் விலுக்விலுக்கென்று உதைத்துக்கொண்டு கிடக்கிறாள். கோணலாகி யிருந்த வாயிலிருந்து எச்சில் நுரைத்துக்கொண்டு கடைவாயால் ஒழுகுகிறது. வழக்கமான பனி, மழை எனச் சில்லிப்பு கண்டால் மட்டுமே வருகிற இழுப்பு. இந்த மொட்டைவெயிலில், சேதியைக் கேட்ட அதிர்வில் வந்திருக்கிறதென்றால்... " தூக்குங்க ஆஸ்பத்திரிக்கு... நாம் போயி வண்டியப் பூட்றன்..." அய்யாயிரம் பறக்கிறார்.

" மொதல்ல கொஞ்சம் காத்த வுடுங்க. சும்மா எப்பியும் வர்ற இழுப்புதான். எட்ட வா புள்ள..." அம்புசாட்சி எல்லோரையும் விலக்கி விட்டு, இறுக மூடியிருந்த விரல்களை நீக்கி அரிவாளைக் கையில் கொடுத்தாள். மறுகையையும் விரித்து, தன்னுடைய அரிவாளைத் திணித்துப் பிடிக்கவைத்தாள் பூச்சி.

இழுப்பதும் உதைப்பதும் கூடிக்கொண்டே போகிறது. கடைவாயில் நுரைகப்பி கரகரவெனப் பொங்குகிறது எச்சில். இறுகப் பற்றியிருந்த கையில் அரிவாளின் கருக்குப்பாகம் அறுத்து, தரையிலும் அரிகிடைத் தாள்களிலும் சிதறியது ரத்தம்.

*

13

திறந்த கதவு முழுவதும் பின்னுக்கு வந்து மோதிவிடாத வாறு மரஉரலைத் தடுப்பாக்கி நிறுத்தியதில் ஒரு சிறிய அறையைப் போல் இருந்தது சந்து. மறைப்பிற்குள் கதவு நிழல் நெஞ்சுக்கு நேர் சாய்வாக விழுந்து கிடக்க, மங்கிய வெளிச்சத்தில், கோவில் மூலஸ்தானத்திலிருக்கும் பிசுக்கேறிய சிலையைப்போல சுவரில் சாய்ந்து குந்தியிருந்தாள் பூமாதேவி. நீட்டிக் குந்தியிருந்த கால்மாட்டுக்குப் பக்கத்தில் குறுக்கே உலக்கை வரப்பாய்க் கிடந்தது.

சாயந்திரமாய் தெருவுப் பிள்ளைகளும், தெற்குவெள்ளூர் பசங்களும் வந்து பார்த்துப் பேசிவிட்டுத்தான் போனார்கள். சேதி கிடைத்ததும் ஏகாலி அரசாயிக்குத் தாங்கமுடியாத சந்தோஷம். " என்னா சின்னப் பாப்பா... நா சொன்னமாதிரி நெல்ல துணி மணிதான கட்டியிருந்த?" ஏலம் போட்டபடி உள்ளே வந்தவள் இவளின் இறுகிய கல்கோலத்தைப் பார்த்துவிட்டு ஓசைப்படாமல் வெளியே போயேவிட்டாள். கொஞ்ச நேரத்திற்கு முன்பு கூட சித்தி வீட்டுப் பசங்கள் வைரம், தங்கம், கசப்பு எல்லாமும் வந்து " எக்கா... எக்கா..." என்று பாசத்தைப் பொழிந்து விட்டுத்தான் போயிருந்தார்கள். ஆனால் எதிலும் கரைத்துவிடமுடியாத இறுகிய மனத்தோடு பூமா குந்தியிருந்தாள்.

' இந்த மண்ண வுட்டுட்டு நாங்க எங்க போயி பொழைப்பம்' உள்ளுக்குள் அம்மாவின் கதறலும், நிலத்தைக் கைகளால் அறைதலுமாய் மாறி மாறி அவளைக் கலங்கடித்துக் கொண்டிருந்தன. அரிகிடையின் மேல் ரத்தமும் நுரையுமாய் வெட்டி வெட்டி அவள் இழுத்துக்கொண்டிருந்த காட்சியின் திகில் இன்னும் இடியாய் இறக்கிக்கொண்டேயிருக்க, திரும்பத் திரும்ப மனசுக்குள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். ' இந்த கங்காட்சியிலியா எனக்கு இப்பிடி வந்து தொலைக்கணும்.'

அவள் கண்களிலிருந்து மிதந்து கலங்கிய பார்வை, அடுப்படியில் காய்ந்த கருப்பஞ்சருகைப் போல் கிடந்த அம்மாவின் மேல் ஓடியது. அனல் குறைக்கப்பட்டதில் முற்றிலுமாய் அடுப்பிலிருந்த கூழ்பானையின் கொதிப்படங்கி, சாம்பல் பூக்கத் தொடங்கியிருந்த நெருப்பைப் பார்த்த வண்ணமாய் முடங்கிக் கிடந்தாள் பாஞ்சாலை. உள்ளொடுங்கி ஒட்டிப்

போயிருந்தது வயிறு. கண்ணீர் வடிந்துகொண்டேயிருந்தது.

‘ அரிஓம்’ என்று பூமா வயிற்றிலிருக்கும்போது திடுமென வந்த இழுப்புதான். தொடர்ந்து நாலைந்து வருசங்களுக்குமேல் மாத்திரை சாப்பிட்டு, போதும் என்ற பிறகுதான் நிறுத்தினாள். இடையிடையே ரொம்ப உடம்பு பலவீனமாக இருக்கிறபோது லேசாக நொடிப்பு மாதிரி வரும். சிலுக்குவதுபோல் உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டுப் போய்விடும். பாஞ்சாலையும் ஒன்றும் நடக்காதது மாதரி அடுத்து வேலையைப் பார்க்கத் தொடங்கி விடுவாள்.

அறுப்பு மெனையில் கிடந்தமாதிரி ரத்தமும் நுரையுமாய் எப்போதும் கிடந்ததே இல்லை. நிலம் எடுக்கிற நோட்டிஸ் அவளுக்குள் இரும்புப் பாரையாய் இறங்கியதில், அலமலண்டு போய்க் கிடந்தாள். பழைய மாத்திரையைத் தொடர்ந்து சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். உடம்பு பலவீனமாக இருப்பதால் அதிர்ச்சியான சேதி கேள்விப்பட்டால் இப்பிடித்தான் வரும் - பார்த்து வைத்துக்கொள்ள வேண்டுமாய் நெய்வேலி மருத்துவ மனையில் அறிவுரை.

ஊசிகளும் குளுக்கோஸ் பாட்டிலும் ஏற்றிய பின் அடித்து இழுத்துக் கெடாசியது மாதிரி உடம்பை அசைக்க முடியவில்லை. இந்த இக்கட்டில் பூமா வயசிக்கு வந்து குந்தியிருப்பது, அவளை மேலும் நிலைகுலையச் செய்ய, தன்னையும் அறியாமல் முனகிக் கொண்டு கிடந்தாள். ‘ சூத்து மண்ணத் தட்டிட்டு, பொடரியப் புடிச்சி நெட்டப்போற நேரத்திலியா, ஏம் பொறந்த பொண்ணுக்கு இந்தக் குடுப்பன.’

தோட்டத்து வாசலில், கயிற்றுக் கட்டிலில் சுருண்டு கிடந்தார் ராசோக்கியம். புலி வருது புலி வருது எனப் பயந்து பயந்து கடைசியில் பயந்தெளிந்த நேரத்தில் ஒரே பாய்ச்சலாய் விழுந்து குதறியதுபோல் நிலமெடுக்கிற ஓலை, அவரை விலாவில் சில்லாக் கோலைச் சொருகியது போன்று வீழ்த்திவிட்டது. அதைவிடவும் இந்தச் சேதி கிடைத்துச் சோர்கிறபோதெல்லாம், கிட்டவந்து ‘ கையக் கால கூடுமா புடுங்கிக்கப்போறானுவோ, எல்லாருக்கும் உள்ளது நமக்கு’ என ஆறுதலாய்ப் பேசி நிற்கும் அவரின் பாஞ்சாலையே இடிந்து விழுந்து நுக்கும்நுரையுமாய் இழுத்துக் கிடந்ததை அவரால் தாங்கமுடியவில்லை. நோட்டிஸ் சேதிக்கே இந்தப் பாடு என்றால் இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ, எங்கெங்கு கொண்டுபோய் விடப்போகிறார்களோ, தளர்ந்த நேரத்தில் இவளை வைத்துக்கொண்டு என்ன பாடுபடப் போகிறமோ? இந்தக் கங்காட்சியில் பூமா வேற... குன்னிப்போய்க் கிடந்தார்.

“ பூ மா...” கூப்பிட்டுக்கொண்டே சதாசிவம் வீட்டிற்குள் நுழைந்தான். குரலில் என்றுமில்லாமல் குதூகலம் கூடியிருப்பது மாதிரி தெரிந்தது. இழுத்து உதைத்துக்கொண்டு கிடந்த பாஞ்சாலையை பெரிய ஆஸ்பத்திரியில் காட்டி வீட்டுக்கு இட்டுக் கொண்டு வரவும் இவன் ஊரிலிருந்து வந்து சேரவும் சரியாக இருந்தது. ஒப்புக்குத்தான் கேட்டான் “ என்னாம்மா ஆச்சி?” அம்மாவின் உடல்நிலையைத் தாண்டி, நிலம் எடுக்கிற சேதி அவனை உற்சாகப்படுத்தியிருந்தது. ‘ அப்பறம் இந்தச் சனியன எவங் கட்டிக் கிட்டு அழுவான். இனிமேல்பட்டு எடுக்கிற ஊருக்குலாம் எப்பிடியும் வூட்டுக்கு ஒரு ஆளு வேல தந்துடுவானுவோ. நம்ப வூட்டுக்கு நமக்குத்தான் வேல.’ ஓட்டை மிதிவண்டியை, ஒப்பந்த வேலையை உதறிவிட்டு நிரந்தர வேலையும், மோட்டார் சைக்கிள் கனவுமாய் சதாசிவத்திற்கு தாங்கவியலாப் பூரிப்பு. வெகுகாலமாய் மனசுக்குள் ஓடிக்கொண்டிருப்பதுபடியே நடக்கிற ஆனந்தம்.

“ பசியெடுக்குது. வந்து சாப்பாடு போடு பூமா...” நடுவீட்டில் குந்திக்கொண்டு ரொம்பவும் உற்சாகமான குரலில் கேட்கிறான். தோட்டத்து வாசல் கட்டிலில், புரண்டு படுக்கிற அரவம், கயிறு இறுகுகிற சப்தம் மரமரவென்று கேட்டது. அடுப்படியில் படுத்திருந்த பாஞ்சாலையிடமிருந்து எந்த அசைவும் இல்லை. “ எங்க போச்சி. தே... பூமா..” கடுப்பில் சத்தமாகக் கூப்பிட்டுக்கொண்டே பார்த்தவன் கண்களில் கதவுச் சந்தின் குறுக்கே உலக்கை படவும் பட்டென்று உதைத்தது.

அதற்குமேல் அவன் ஒன்றும் பேசவில்லை. நேரே சாப்பாட்டுத் தட்டை எடுத்துக்கொண்டு சோற்றுப்பானையிடம் போனான். குறுக்கே கிடந்த அம்மாவிடம் ஏதோ கேட்கவேண்டும் என்பதற்காகத் தான் கேட்டான். “ எம்மா, எந்திரிச்சி மாத்திரய சாப்புட்டுட்டு படும்மா...” செம்பில் மறக்காமல் தண்ணீர் மொண்டுவந்து வைத்துக் கொண்டு அவன் பாட்டுக்கு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான்.

“ பூமா...” அம்புசாட்சி சித்தி கூப்பிட்டுக்கொண்டே வந்தாள். கையில் அள்ளிய சோற்றை வாய்க்குக் கொண்டுபோகாமல் திரும்பினான் சதாசிவம். அதற்குள் கதவுச் சந்திலிருந்து குரல் வந்தது “ என்ன சித்தி...” அழுது அழுது தொண்டை கனத்துப் போயிருக்கிற கண்ணீர்க் குரல். “ அம்மா சாப்புட்டுட்டாங்களா. ஒப்பாரு சாப்புட்டாரா. நீனு...” கேட்டுக்கொண்டே போய் சோற்றுப் பானை, குழம்புச் சட்டியைத் திறந்து பார்த்தாள்.

“ இன்னம் யாரும் சாப்புடுல சித்தி.” கதவுச் சந்து வழியாக, கீச்சா ராமா என எந்தச் சத்தமுமில்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சதாசிவத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

“ என்னாடி, நா ஆக்கி வைச்சிட்டுப்போன சோறும் கொழம்பும் அப்பிடியே இருக்கு...” கதவுச் சந்துப் பக்கம் வந்து பார்த்தாள். அவசரம் அவசரமாகப் பூமா கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

“ யாருக்குதான் வெசனம் இல்ல. நம்ப நெலம்பலத்த மட்டுமா எடுக்கறான். ஊரு பூராவுந்தான் எடுக்கறான். மோட்டுல வுட்டாலும் பள்ளத்துல வுட்டாலும் தலவிதியேன்னு போவவேண்டிதுதான். அதுக்குன்னு ஒடம்ப போட்டு முறிச்சிக்கிட்டு திரும்பவும் ஆச்சி போச்சின்னு அடிச்சி மாஞ்சிக்கிட்டா நிக்கறது. ஏந்திரு எக்கா. நீனும் மாத்திர கீத்தரய சாப்புடு. ஒரு வயசிக்கி வந்த புள்ள குந்தி யிருக்கற வூட்ல இப்பிடி இடிஞ்சிபோயி ஆளாளுக்கு கிடந்தா என்ன அர்த்தம். தீட்டு தடுக்கா இருக்கற புள்ளைக்கி நேரா நேரத்துல தண்ணி தளுப்ப குடுத்தாதான ஒடம்புல பெலம் கூடும். நா ஒரு இவ... மின்ன வந்தப்பயே ரவ போட்டுக் குடுக்காத பூட்டன்...” படுத்துக்கிடக்கும் பாஞ்சாலையிடம் சொல்லிக்கொண்டு நின்றாள்.

சாப்பிட்டு முடித்து தட்டைக் கழுவிக்கொண்டிருந்த சதாசிவம் ஏப்பம் விட்டபடி தெம்பாக வாயைத் திறந்தான். “ அதான் சித்தி, நானும் சொல்றன். நம்ப ஊரு மட்டுமில்ல, தெக்குவெள்ளூரு கூனங்குறிச்சிலாம்தான் எடுக்கப் போறாங்க. இதுவோ எனுமோ திட்டம் போட்டு நம்ப குடும்பத்த மட்டும் பொடரியப் புடிச்சி வெளியே போங்கிறமாதிரி அதுஅது வெசனம் வுழுந்துபோயி கெடக்குதுவோ. குடுக்கறத சேத்து இன்னம் பத்து ரூவா குடு. வூட்டுக்கு ஒரு ஆளுக்கு வேல குடுன்னு அதுல கவனம் ஓடுல எதுக்கும்...” இதுதான் சமயமென்று சதாசிவம் மனத்தில் கிடப்பதையெல்லாம் போட்டு உடைத்துவிட்டு, தட்டைக் கழுவி வெளியில் ஊற்றப் போனவன், சற்று அசந்திருந்தாலும் அவ்வளவுதான்... அவன் பேசியதையெல்லாம் கேட்டுப் பொறுக்கமுடியாமல் எழுந்து நின்றிருப்பார் போலும், கூரையின் மீது குழாய் வழி நீண்டு தொங்கிய குண்டு பல்பு வெளிச்சத்தில், ராசோக்கியத்திற்கு கண்ணில் பொறி பறந்தது. அவசரத்தில் நேருக்குநேர் அவர்மீது தாவிக் குதிக்கத் தயாராகி, வெடுக்கெனத் தேங்கிய அதிர்வில் தளும்பிய தண்ணீர் தட்டோடு நின்றவன், கோபக்குறியில் அவர் கோலத்தைக் கண்டு அப்படியே வெலவெலத்துப் போய்விட்டான்.

“ ஆமண்டா. நீனும் எப்ப எடத்தப் புடுங்குவான், வுட்டுக் கெடாசிட்டு குடுக்கற பத்து ரூவாய வாங்கிக்கிட்டுப்போயி மந்தாரக் குப்பம் மொடக்குல

வாணம் வுடலாம்னுதான் தொடையத் தட்டிக்கிட்டு நிக்கிற. குனிஞ்சி நிமுந்து குடும்பத்துல ஒழைச்சவனா இருந்தாதான, வுழுந்து கெடந்த வூடாச்ச, ஒட்டிக் கெடந்த வவுத்துக்கு உசுரு குடுத்த பூமியாச்சன்னு ஒனக்கு வலி வருத்தந் தெரியும். எவனோ எலும்ப முறிச்சி, பல்லுக் குத்தி ராவுன்னு இல்லாம பகல்னு இல்லாம வுழுந்து ஒழப்பறிச்சி சம்பாரிச்சிகிட்டு கெடந்தான். நீ பள்ளிக்கொடம் போறன், பள்ளிக்கொடம் போறன்னு மந்தாரக் குப்பம் நெய்வேலி கண்ட மட்டும் சுத்தி வந்த. அதுக்கப்பறம் ஆப்புட்டுகிச்சி காண்ட்ரேட்ல இந்த கலக்டரு உத்தியோகம். வேலைக்கிப் போறன் வேலைக்கிப் போறன்னு போயி வந்து சுடுசோத்துல கைய வைக்கிற ஒனக்கு என்னா கெடக்கு. ரொம்ப நாயம் பொளக்கறாரு. பத்து ரூவா சேத்துக் குடுங்க, வேல குடுங்கன்னு கேக்கணுமாம். போ... நெய்வேலிக்காரன் புலுத்துவான். போட்ட சட்டைய கயிட்டாம, நெவத்துல அழுக்குப் படாம வேல பாக்கலாம்.”

அடுப்போரம் சுருண்டுகிடந்த பாஞ்சாலை சடசடப்பில் எழுந்து குந்திவிட்டாள். கதவுச் சந்தை விட்டு வெளியே வரவும் முடியாமல், குந்தவும் முடியாமல் நின்றிருந்த பூமாவிற்கு உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. அம்புசாட்சி என்ன செய்வது எனப் புரியாமல் திகைத்துப்போனாள்.

சதாசிவத்திற்கு, குறிப்பாய் அவன் படிப்பைப் பற்றிப் பேசியதால் எகிறிவிட்டது. எந்நாளும் இல்லாமல் அவனும் கடந்து விட்டான் “ ஆமா. நா தொடயத் தட்டிக்கிட்டுத்தான் நிக்கிறன். நீ பல்லுக் குத்தி சம்பாரிச்சிய இந்தச் சொத்து, வூடு வாச எதியும் வுட்டுக்குடுக்காத அப்பிடியே வைச்சிக்கிட்டு ஒக்காந்து கெட. கடைசியில நெய்வேலிக்காரன் வந்து சமாதி கட்டிட்டுப்போவான்.” மூஞ்சியில் ஊற்றாத குறையாய்த் தண்ணீரை வாசலில் ஊற்றிவிட்டு, நின்ற நிலையில் தட்டை திப்பென்று கீழே போட்டான். கிணுங்கென்று விழுந்து சுழன்று ஓய்ந்தது. கொடியில் கிடந்த சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டிருந்தான்.

பாஞ்சாலை மெல்ல வாயைத் திறந்தாள். குரல் காய்ந்து போயிருந்தது “ ஏண்டா தம்பி, நீயிலாம் பேசறது நாயமாவா இருக்கு. நா என்னா கெதியில கெடக்கறன். ஒரு புள்ள வேற வயசிக்கி வந்து குந்தியிருக்கு. நாளைய பொழப்புக்கு வழி என்னான்னு தெரியாம வா சோத்த புடுங்கறான் இந்த நெய்வேலிக்காரன்...” இன்னும் ஏதேதோ சொல்லிக்கொண்டே போனாள். எதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் சதாசிவம் தெருவில் இறங்கினான்.

அம்புசாட்சிதான் மறித்துப் பேசினாள் “ அட வுடு எக்கா. எனுமோ கோழி

கூவாத நெலத்த எடுக்கப் போறமாதிரி. ஊருக்கு உள்ளது நமக்கு. அதுக்குன்னு திரும்ப திரும்ப அதியே போட்டு கொழப்பிக்கிட்டு. வுட்டுட்டு தண்ணி ஊத்தற காரியத்தப் பாருங்க. நாளைக்கே முதனைக்கிச் சொல்லி வுடுங்க. நாளை மறாநாளு வெள்ளிக்கெழம தண்ணி ஊத்திட்டுப்போவும். ஏ... புள்ள நீ சாப்புடு...” தட்டில் சோற்றைப் போட்டு, பூமாவிடம் கொண்டுபோய் வைத்தாள்.

தெருவில் போய்க்கொண்டிருந்த சதாசிவத்தை மறித்தது குரல். “ மாப்ள... எங்க கெளம்பிட்ட...”

அறிவழகனும், பின்னால் சற்றுத் தள்ளி பாராமுகமாய் ஒதுங்கி சிகாமணியும் நின்றிருந்தார்கள். உள்ளுக்குள் இருந்த இறுக்கத்தைத் தளர்த்தாமல் சொன்னான் “ தே மந்தாரக்குப்பம் வரைக்கும்...”

“ என்னாப்பா... ஊரு எடுக்கிற சேதியில சனம் கெதிகலங்கிப் போய்க் கெடக்குது. ஒரு ஆளான ஆளு நீ எனுமோ சாவகாசமா மந்தாரக்குப்பம் வரைக்குங்குற. சரி சீக்கிரம் போய்ட்டு வா. அங்கதான் ஒங்க வூட்டுக்கிட்ட கோயிலுக்கும் மின்னால ஒரு கூட்டம் ஏற்பாடு பண்ணியிருக்கறம்” அறிவழகன் ஆதங்கமாகப் பேசினான்.

“ சரி வர்றன்...” ஒதுக்கிவிட்டுப் போனவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தார்கள். பூமாவின் வீடு வந்ததும், சிகாமணி கோயில் பக்கம் ஒதுங்கினான். வீட்டுக்குள் பார்த்து அறிவழகன் கூப்பிட்டான் “ மாமா...”

வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த அம்புசாட்சிதான் சொன்னாள் “ மாமனுக்கு ஒடம்பு சரியில்ல போல்ருக்குப்பா. அங்காண்ட படுத்துருக்காரு.”

இறங்கி அவள் வீட்டுப்பக்கம் போனவளிடம் சொன்னான் “ எக்கா, ஒங்க வூட்டுக்குந்தான் நாங்க வருணும். தே... கோயிலுக்கு மின்னால ஒரு கூட்டம் நடக்கப்போவுது. மாமன வரச்சொல்லு.”

*

14

நிலம் எடுக்கிற சேதி உறுதியாகிவிட்டதிலிருந்து அறிவழகனுக்கும் சிகாமணிக்கும் தான் பேரலைச்சல். அதே நேரம் இருவருக்குள்ளும் இதை எப்படிச் சமாளித்து மக்களுக்கு சாதகமாக்கி மேடேறப் போகிறோம் என்கிற கேள்விகளும் படபடப்பும் உள்ளுக்குள் ஓடிக்கொண்டேயிருந்தது.

இதுபோன்று நிறைய நில எடுப்புகளைப் பார்த்திருக்கிறார்கள். தொடக்கத்தில் ஒப்புக்கு ஒரு எதிர்ப்பைக் காட்டியதோடு அசந்தர்ப்பமாய் இருந்துவிட்டு ஊரைக் காலி பண்ணுகிற கடைசி நேரத்தில் வந்து நிறைய அமைப்புகள், கட்சிகள் ஆதரவு கொடுத்தும் ஒன்றும் செய்யமுடியாமல் போய்விட்டிருக்கிறது.

அதுபோன்ற அவலங்கள் இதில் ஏதும் நடந்துவிடக்கூடாது. எடுமுனையிலேயே சங்கத்தின் முக்கிய பொறுப்பாளர்களின் ஆலோசனையோடு விபரமாக இறங்க வேண்டும். எடுக்கவிருக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் நிர்வாகம் யோசித்துத்தான் எடுக்க வேண்டும் என்கிற மாதிரி மக்களைத் திரட்டிக் கொண்டுபோய் நெருக்கடியைக் கொடுக்கவேண்டும்.

முதலில் இந்தப் பகுதியின் வன்னியர் சங்க முக்கியப் புள்ளியான விருத்தாசலம் ஜி.ஆர் டாக்டரைப் போய்ப் பார்த்தார்கள். மாவட்டப் பொறுப்பாளரான குறள்மணிக்கு போன் போட்டார்கள். அடுத்துச் செய்யவேண்டிய வேலை என்னென்ன என்பதைக் கேட்டார்கள். விவாதித்தார்கள். அதோடு வேப்பங் குறிச்சியோடு சேர்த்து நோட்டிஸ் கொடுக்கப்பட்டிருக்கும் தெற்கு வெள்ளூர், கூனங்குறிச்சி என்று நேரடியாகப் போய் முக்கிய மானவர்களைச் சந்தித்தார்கள். கடைசியாய் உள்ளூர் பெரியதலை தனபால் படையாச்சியிடம் வந்தார்கள். “ ராத்திரிக்கி நம்ப ஊர்ல ஒரு கூட்டம் போடணும், அவசியம் நீங்க வந்து கலந்துக்கணும்.”

புல்லட்டில் குந்தியபடி உதைக்கத் தயாராய் இருந்த தனபால் கேட்டார் “ என்னா ஒங்க சங்கக் கூட்டமா? அதுக்கும் நமக்குந்தான் ஆவாதுன்னு ஊரு ஒலகத்துக்கே தெரியும. ஆள வுடுங்க...”

பட்டென்று அறிவழகனுக்கு ஒரு எகிறு எகிறினாலும் இது அதற்கான

நேரமில்லை என்பதை உணர்ந்தவனாய் பொறுமையாகச் சொன்னான் “ ஏங்க... நெய்வேலிக்காரன் நெலத்த எடுக்கப் போறன்னு நோட்டிசு குடுத்துருக்கான். நீங்க எனுமோ என்னா கூட்டம் ஏது கூட்டம்னு...”

“ கூட்டம் போட்டு என்னா பண்ணப் போறீங்க. அவங்கிட்ட போலிஸ் இருக்கு. கொண்டாந்து எறக்கனா என்னா பண்ணுவீங்க... சரி படிச்சவுங்க. ஒங்குளுக்குத் தெரியாதது ஒண்ணுமில்ல. நா கூட்டத்துக்கு வருணும். அதான. வர்றன் போங்க...” உதைத்ததும் இவர்கள் மூஞ்சியில் புகையை வாரி விட்டு விட்டுப் பறந்துபோனது புல்லட்.

அறிவழகனும் சிகாமணியும் சங்கக் கிளை ஆரம்பிக்கப் பட்டபோது இதைவிடவும் எதிர்ப்புகளைச் சமாளித்தவர்கள். சளைக்காமல் சொந்தக் காரியங்கவைக்கு மெனக்கிடுவதுபோல் ஒவ்வொரு வீடாய்ப் போய்க் கூப்பிட்டார்கள். “ ராத்திரிக்கி அவசியம் கூட்டத்துக்கு வந்துட்டு வாங்க.”

வி ளக்குக் கம்பங்களிலிருந்து கசிந்துகொண்டிருந்த ஊமை வெளிச்சத்தில் தெருவே பொலிவிழந்து கிடந்தது. ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என ஊரின் நூற்றிப்பத்து வீட்டிலிருந்தும் முக்காலேமூணு வீசமும் ஒரே இடத்தில் கூடிப் பெருங்கூட்டம். ஒவ்வொரு மனசுக்குள்ளும் இடம் பறிபோகிற தவிப்பு. அடுத்து என்ன செய்வது எனத் தெரியாத திகைப்பு.

நேரம் கண தாண்டிப் போய்க்கொண்டிருந்தது. “ என்னாடா அவன் பெரிய கொம்புன்னு காத்துக்கிட்டுக் கெடக்குறீங்க. அந்தக் காலத்துல அவன் அப்பனுக்கு வடக்குவெளியில நாளு ஏரு ஓட்னன். இன்னம் பறம் பைசா குடுக்குல.” தனபாலை எதிர்பார்த்துக் குந்தி யிருக்கிற கடுப்பில் கரி படாச்சி பட்டென்று தாண்ட ஆரம்பித்து விட்டார். ‘ மொட்டை மரம் காத்துக்கு அஞ்சாது’ என்கிற மாதிரி எதையும் யாரையும் எடுத்தெறிந்து பேசக்கூடியவர் கரி படாச்சி.

சிகாமணிதான் சாந்தப்படுத்தினான் “ இரு மாமா. இன்னங் கொஞ்ச நேரம் பாப்பும். ஆத்தரப்படாதீங்க...”

“ என்னாடா மங்குணி, இன்னம் எம்மாம் நேரம்டா பாக்கறது. ஊரு என்னா கெதியில வந்து கூடியிருக்குது. நாம என்னாடா முதுவு மேலயா குடிச போட்டுக்கிட்டு இருந்தம், சேதி வந்ததும் பட்டுன்னு வாரிச் சுருட்டிக்கிட்டு எட்டப் போறதுக்கு. பொறந்த மண்ணுடா. வாழ்ந்த பூமிடா. எடுக்கறன்னு ஓல குடுத்துருக்கான். அதது என்னா பண்றது, ஏது பண்றதுன்னு கூட்டுல உசுரு இல்லாமக் குந்தியிருக்கு. இதுல வர்றாராம்...”

எல்லோருக்கும் ஆத்திரம். அடைக்கப் பேசிக்கொண்டிருக்கும் கரி படாச்சியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டென்று கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த அவர் மனைவி முத்துக்கண்ணு அவரை அடக்கினாள் " ஊருக்கு உள்ளது நமக்கு. அத வுட்டுட்டு சூத்துல சூரிக்கத்திய சொருவுன மாதிரி எதுக்கு இந்தக் கத்துக் கத்தற..."

" நீ சும்மா இருடி. ஒனக்கு என்னா தெரியும்" வார்த்தையை வெட்டிவிட்டு அறிவழகன் பக்கம் திரும்பினார். " டேய் தம்பி, இங்க பார்ரா. எனக்கு எத்தினி காணி இருக்கு, சொல்லு. கொழுவு குத்தறதுக்குக் கூட ஒரு கோமணத்துணி நெலம் இல்ல. குந்தி யிருக்கறது கூட நத்தம் பொறம்புக்குல கட்னது. நானும் ஏங் கெழவியும் எதுக்கு இங்க வந்து குந்தியிருக்கறம். நெய்வேலிக்காரன் பணங் குடுப்பான், வேல குடுப்பான்னா வந்துருக்கம். இந்த சனங்க கூடத்தான் பொறந்து வளந்தம். இன்னங் கொறகாலத்தையும் இந்த சனங்க கூடக் கெடந்துட்டு செத்துப் போவும்னுதான் வந்து நிக்கிறம். அதது நெலத்த வுட்டுட்டு திக்காலுக்கொன்னா ஓடிப் போச்சினா நாங்க எங்க போவம்? யார நத்தி இருப்பம்? செத்தா எங்கள எடுத்துப் போடறதுக்கு நாதி யாரு? இந்த ஊரு சனத்த வுட்டா எங்குளுக்கு வேற கெதி என்னா இருக்கு?" சொல்லி முடிக்கையில் கோவென்று அழுதே விட்டார். முத்துக்கண்ணு கிழவி " வீல்..." என்று கத்திவிட்டாள். சனங்கள் எல்லாமும் கண்கலங்கிப் போய்விட்டார்கள்.

எதிரே தெருவுக்கும் அங்காண்ட வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த ராசோக்கியத்திற்கும் தாங்க முடியவில்லை. ஏற்கெனவே சதாசிவத்தினுடனான வாக்குத்தத்தம். இப்போது கரி படாச்சியின் உருக்கம். எல்லாமும் போட்டு நெருக்க நளுர் கண்ட உடம்பு மாதிரி நடுக்க ஆரம்பித்துவிட்டது.

அறிவழகன், சிகாமணி, கனகராசு என முன்வரிசையில் குந்தியிருந்த எல்லோருமே கரி படாச்சிக்கு என்ன சொல்லித் தேற்றுவது எனத் தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்த நேரம், திடுமென சமாசம்பந்தம் இல்லாமல் கூட்டத்தில் நின்று கொண்டிருந்த வடிவேல் பொண்டாட்டி தேவகி பேசினாள் " அட வுடு மாமா. தலைக்கு மேல கூலி ஏறிப்போயி நிக்கிது. கெணத் துலயும் தண்ணி ஊற மாட்டங்குது. அங்காண்ட மைன்ஸ்காரன் உறிஞ்சி இழுத்துக்கறான். இதுல இந்த நெலம்பலத்த வைச்சிக்கிட்டு மாரடிக்கறதுக்கு வுட்டுத் தொலைச்சா போதும்னு நிக்கவேண்டிதா இருக்கு. ஒங்குளுக்கு என்னா வண்டியும் மாடும் கையில இருக்கு. இந்த ஓட ஒடப்புல வண்டிய அத்துக்கூலிக்கு

உருட்டிக்கிட்டு கெடக்கறதுக்கு அப்பிடி டவுண பக்கம் கடத்தெருவுல அடைஞ்சாப்ல இருந்தா, அத்தைக்கும் ஒங்குளுக்கும் ராசா மாதிரி பொழப்பு ஓடும்.”

நிலம் வீடு வாசல் மரம் மட்டை யாவற்றையும் எப்படி விட்டு விட்டுப் போவது, வாழ்வது என்று இடிந்து போய்க் குந்தியிருந்த அந்தச் சூழலில் திடுமென விட்டுத் தொலைத்தால் போதும் என நிலம் எடுப்புக்காகக் காத்துக்கிடந்த மாதிரி இருந்தது தேவகியின் பேச்சு. எல்லோருக்கும் செவுளில் அறைந்த மாதிரி போய்விட்டது.

கண்மண் தெரியாத கோபத்தில் வடிவேல் எழுந்தான். தேவகியை எரித்து விடுகிற மாதிரி பார்த்துப் பேசினான் “ என்னாடி, என்னா பேச்சிப் பேசுற. இந்தச் சேதி எப்ப வரும்னுதான் எதிர்பாத்துக்கிட்டு கெடந்தியா. வுட்டுத் தொலைச்சிட்டுப் போயி நாலுமூல ரோட்டுல முட்டாயி வாங்கி வாயில போட்டுச் சப்பிக்கிட்டு நில்லு... ஒன்னலாம்... ஏந் தல எழுத்திடி... நீயிலாம் நாலு காணி பயிரு வைக்கிற குடும்பத்துல பொறந்து வளந்த குடுத்தனக்காரியா இருந்தாதான்டி வலி வருத்தந் தெரியும். தலமாட்டுல களகட்ட வைச்சிக்கிட்டு, கூலிக்கு எவங் கூப்புடுவான்னு குந்திக் கெடந்த வளுக்கு என்னா கெடக்கு.”

“ ஆமா. நா களகட்ட தலமாட்ல வைச்சிக்கிட்டு குந்திக் கெடந்தவ தான். இவுரு பெரிய சீமான். ஓங் காணி பெருத்த பண்ணையத்தம் பெருமையப் பாரு. நொள்ள இந்த நாலு காணி தரையையும் புடுங்கிக்கிட்டு வுட்டப்பறம், ஓங் கெம்பலயும், தாண்டறதையும் பாக்கத்தான போறன்.” அவள் உள்ளுக்குள் கிடப்பதற்குப் பங்கம் இல்லாமல் பேசியதும், வடிவேலுக்கு எகிறிவிட்டது. குறுக்கில் குந்தியிருந்தவர் களையெல்லாம் ஒரே தாண்டாய்த் தாண்டி ஓங்கி ஒரே இழுப்பாய் கன்னத்தில் இழுத்தான்.

“ தேவுடியா... அதது குந்தியிருக்கற குடிச போவுத, வாழ்ந்த மண்ணு போவுதன்னு, இடிஞ்சி போயி நிக்கிது. ஒனக்கு மதம் மளுக்குங்குதாம், மண்ணப்போட்டு குலுக்குதான்னு நிக்கிறியாடி. ஒன்ன...”

கும்பலில் குந்தியிருந்த அறிவழகனின் அப்பா ரங்கநாது தான் சத்தம் போ ட் டா ர் “ டேய் முண்டம், வுட்டுட்டு ஆவ வேண்டிதப் பாக்குணும்னில்லாம பொட்டப்புள்ளை கிட்டப் போயி கையை நீட்டிக்கிட்டு...”

அடியை வாங்கிக்கொண்டு சும்மா நின்றவளுக்கு, ரங்கநாது பரிந்து பேசிய பிறகுதான் ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. திடுதிடுவென

தெருவில் அவள் வீட்டுப்பக்கம் கத்திக் கொண்டே ஓடினாள். “ கம்னேட்டி பயல... இம்மாங் கூட்டத்துல வைச்சாடா என்னை இந்தப் பங்கப்படுத்துற. பாக்கறண்டா. ஒன்ன ஒரு நாழி நேரமாச்சும் நா தெவைக்க வுடுல, எப்பன் பக்கிரி படாச்சிக்கிம் எம்மா மீனாட்சிக்கும் நா பொறந்தவ இல்லடா.” ஓடிய வேகத்தில் சுவரோரம் கட்டிக்கிடந்த கிடாவை அவிழ்த்துவிட்டு விட்டு அந்தக் கயிற்றை எடுத்துக்கொண்டு தோட்டத்துப்பக்கம் ஆவேசமாக ஓடினாள். கயிறு விடுபட்ட மகிழ்வில் கிடா பக்கத்தில் கட்டிக்கிடந்த கொராலை உரசியது.

கூட்டத்திலிருந்து செல்லப்பாங்கிதான் பதட்டத்துடன் ஓடினாள். “ தே புள்ள தேவகி, நில்லு புள்ள. அவஞ் சொல்ற மாதிரி ஒனக்கு மதமாடி?” கூடவே அம்புசாட்சியும் ஓடி அவளை மறித்து இட்டுக்கொண்டு வந்து திண்ணையில் குந்தவைத்தார்கள்.

கிழக்கே தெருவில் திடுமென அதம் பறக்கிறது. “ எலேய்... எவன் வூட்டு எடத்த எவண்டா எடுக்கறது. எவனாச்சும் வந்து ஊருக்குள்ள நொழைஞ்சி பாருங்கடா. நோட்டிசு குடுக்கறானாம் நோட்டிசு. ரெத்த வேர்வடா ரெத்த வேர்வ. சொட்டிச் சொட்டி உயிர உருக்கி வாங்கன காணி பூமிடா. பிச்சக் காசிய கெடாசனா வுட்டு வானுவோன்னு நெனப்பாடா ஒங்குளுக்கு. நெலம் கிலம்னு எவனாச்சும் ஊருக்குள்ள நொழைஞ்சிங்க நொக்காள ஓழீவுளா ஒருத்தனையாச்சும் கத்தியால குத்தி மல்லாத்தாம வுடமாட்டன்.” காணிக்காரன் கணேசன்தான். கம்மலான தெருவிளக்கு வெளிச் சத்தில் கருத்த நிழலைப்போல ஆடிக்கொண்டும் ஆணித்தரமாகப் பேசிக்கொண்டும் வந்தான். சின்னானை முன்னே விட்டுப் பின்னால் வரும் காத்தவராயனைப் போல, நாலு தப்படி தேங்கியது போன்று கூட செங்கல்ராவும் வந்துகொண்டிருந்தார். அவனைச் சாந்தப் படுத்துகிறமாதிரி சத்தம்போட்ட படி வந்த அவருக்கும் ஆட்டம் தான். “ டேய் அறிவுகெட்ட முண்டம், பேசாம இரு. நாம அவசரப் படக்கூடாது. ஊரு இருக்கு. அத மிஞ்சி நாம எதாவது செஞ்சா அதனால ஊரு குத்தம் வந்துட்டா அது மாளாத அவப்பேரா பூடும். ஏம் மொவன் இந்த செங்கல்ராவு பெத்த சிங்கக்குட்டி சிகாமணி இருக்கான்டா. இந்த ஊருக்கு அவன் ஒரே ஆளு போதும். நம்ப டாக்டர் அய்யாவ வைச்சி இந்த நெய்வேலிக்காரன் எலும்ப நா எண்ணுல...”

“ நிறுத்து நிறுத்து. நிறுத்து மாமா. நம்ப டாக்டர் அய்யாவ இதுக்கு நாம கூப்புடக்கூடாது. அவுருக்கு வேற வேல இருக்கு. சாலை மறியல் போராட்டம் வைச்சிருக்காரு. நாம பாத்துக்குவம் பெரிப்பா. வேற யாரும் வாணாம். நாம ரெண்டு பேரும் போதும். ஊர எடுக்கறன், நெலத்த

எடுக்கறன்னு எவனாச்சும் ஊருக்குள்ள நொழைஞ்சான்னா, அப்பிடியே கோழிக்குஞ்சிய திருவிக் கெடாசறமாதிரி முறிச்சிப் போடறம். செய்யறம். நீ வீமன் மாதிரி. நா அர்ச்சுனன் மாதிரி. நம்பள மீறி எவனும் உள்ள வரக்கூடாது... ஊரையாடா எடுக்குறீங்க...” போதையில் பொறி பறக்கிறது கணேசனுக்கு.

மொத்தக் கூட்டமும் திரும்பி வேடிக்கை பார்க்கிறது. சிகாமணிக்கு, அப்பனும் சேர்ந்து ராவுடி பண்ணிக்கொண்டு வருவது அறுத்துக்கொண்டு போனது. கூட்டத்தோடு அணைந்து நிற்காமல் கோயிலின் கொரணாசி நிழலில் நின்றுகொண்டிருந்த அம்மா அசலாம்புவைப் பரிதாபமாகத் திரும்பிப் பார்த்தான். தெருவில் ஆட்டம் போட்டபடி வந்துகொண்டிருந்த செங்கல்ராவை எரித்து விடுகிறமாதிரி பார்வை பார்த்துவிட்டு ‘ அந்தக் குடிகாரக் கூத்தாடிப் பய கெடக்கறான் வுடுப்பா’ கண்களால் கெஞ்சலாய் சிகாமணியிடம் சொன்னாள்.

ரொம்பவும் ஆரவாரமாய் முன்னால் வந்து கொண்டிருக்கும் கணேசனை தேவகி வீட்டு வாசலில் நின்றபடி பார்த்த செல்லப்பாங்கிக்கு பற்றிக்கொண்டு வந்தது. ஆனாலும் கிட்ட நெருங்க அவளுக்குப் பயம். எட்டிப் பிடித்துக்கொள்ள தலைக்குப் பிடிமயிர் இல்லாமல் அண்மையில்தான் மொட்டையடித்திருந் தாலும், கைப்பிடிக்கு ஜாக்கெட்டோ புடவையோ எது கிடைத் தாலும் பறம்படிதான். ஆனால் அவளால் எதுவும் கேட்காமல் இருக்கமுடியவில்லை. “ என்னா இந்தப் பாடு...” அவள் வார்த்தையை முடிக்கவில்லை...

“ செல்லப்பாங்கி... நம்ப ஊர எடுக்கப் போறாங்களாம். நம்ப நெலத்த எடுக்கப்போறாங்களாம் செல்லப்பாங்கி...” தன்னைக் கடந்த போதையில் ஓடிக் கட்டிப்பிடித்துக்கொண்டு கணேசன் கதறுகிறான். போதையில்தான் என்றாலும் அவன் கதறல் அவளுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. “ இப்ப எத்தினி காணி நெலம் வைச்சிருக்கற. எடுத்துக்கப் போறானுவோன்னு இந்த பொலம்பு பொலம்பற... எல்லாத்தையுந்தான் வித்துத் தொலைச்சிட்டு வெறுங்கழியா நிக்கிறம... அப்பறம் என்னா...”

“ வித்தாலும் என்னா செல்லப்பாங்கி. நம்ப நெலந்தான் அது. வாங்கனவம் பூரா இன்னம் காணிக்காரன் கணேசன் கொல்லதான்னு தான சொல்றானுவோ செல்லப்பாங்கி...”

போதையில் புலம்பியபடி பக்கத்தில் வீறாப்பாய் குந்தியிருந்த தேவகியைப் பார்த்தான். “ தேவகி... நம்ப ஊரை எடுக்கப் போறாங்களாம் தேவகி...”

அவள் ஏற்கெனவே வடிவேலிடம் வாங்கிய அறையில், கயிறை அவிழ்த்துக்கொண்டு ஓடிவந்து எரிச்சலில் குந்தியிருப்பவள். அவனை விழுங்கி விடுகிறமாதிரி பார்த்துவிட்டு, செல்லப்பாங்கியிடம் முறைத்தாள் " மொட்டச்சி, ஒழுங்கா இந்த ஆள எட்ட இட்டுக்கிட்டு பூடு. இல்லன்னா..."

அந்தப் போதையிலும் தேவகியின் இறுகிய வீறாப்பை ஊகித்துக் கொண்டவன் சுதாரித்து கூட்டத்துப் பக்கம் திரும்பினான். அதற்குள் சிகாமணியையும் கூடவே அசலாம்புவை யும் பார்த்துவிட்ட செங்கல்ராவுக்கு போதை கொஞ்சம் படிமானத் திற்கு வந்தது. கூட்டத்தை குறிப்பாய் சிகாமணியைப் பார்த்து அழாத குறையாய் சொன்னார் " இந்த நோட்டிஸ் குடுத்த சேதிய கேட்டதிலேர்ந்து எனக்கு மனசே ஆறுலப்பா. அதான் மனங் கெட்டாப்ல கொஞ்சம்... ஆனா இந்தக் கணேசம் பயல சும்மா தெருவு முக்கூட்ல தான் பாத்தன்." கடலில் பெருங்காயத்தைக் கரைத்த மாதிரி ஓசைப் படாமல் கூட்டத்திற்குள் நுழைந்துகொண்டார் செங்கல்ராவு.

தடுமாற்றத்தோடு வந்த கணேசன் பூமாதேவி வாசலில் தேங்கி நின்றுவிட்டான். திண்ணையில் சுருண்டு படுத்திருந்த ராசோக்கியத்தை உற்றுப் பார்த்துவிட்டு பெருங்குரலில் அழ ஆரம்பித்துவிட்டான். " ஏஞ் சாமி... இந்த மண்ணுல அல்லும்பகலும் அறுபது நாழியும் வுழுந்து கெடப்பியே. ஏ... மண்ணு பாலகா... இந்த மண்ணப் புடுங்கப் போறானுவுளாம் சாமீ. இந்த மண்ண வுடறதுக்கு ஓம் மனசு எப்பிடித் தாங்கும். குந்தியிருக்கிற இந்தக் கோட்டைய வுட்டுட்டு, எந்தக் காடு கரம்பு, பொறம்போக்கு புளியாமரத்த தேடப் போற சாமீ... ஏம் பெரியாயி பாஞ்சால சாமி... இந்த சேதிய கேட்டதும் ஏஞ் சாமிக்கி நுக்கும் நொரையுமா தள்ளிப்போச்சாமே... ஏ சாமீ..."

வாசலில் குந்தி ஒப்பாரி வைப்பதுபோன்று அழுது புலம்பு கிறான். திடுமென எழுந்து பூமாவின் வீட்டிற்குள் நுழைவதற்காக படிக்கல்லில் ஏறத் தடுமாறினான். அதற்குள் அவசரமாய் ஓடிவந்த செல்லப்பாங்கி அவனை மறித்து எட்ட இட்டுக்கொண்டு வந்தாள். " புள்ள வயிசிக்கி வந்த வூட்ல போயி நொழைஞ்சிக்கிட்டு... எட்டத்த வா"

" யாரு ஏம் பூமா புள்ளயா வயசிக்கி வந்துருக்கு. அய்யய்யோ... ஒனக்கு ஒரு நல்லது நடக்கிறப்பையா இந்த ஊரு இப்பிடி கெதிமோசத்துல நிக்கிது. ஒரு நிமிஷம் வூட்ல குந்தமாட்டிய. ஆட்டுக்குட்டிக்கும் மாட்டுக்கும்னு வரப்பு கண்டமட்டும் பில்லுக்கு அலைவிய. கம்மங்கொல்லையில ஒரு குருவிய குந்த வுடமாட்டிய. ஓங் கொல்ல போவப்போவுது சாமி. ஓங்

குருவி எங்க போவும் சாமீ. நீ துள்ளிக் குதிச்ச இந்தத் தெருவு போவப் போவுது சாமீ...”

கணேசன் புலம்பிக் கொண்டிருக்கும்போதே கிழக்கிலிருந்து கூட்டத்தை நோக்கி புல்லட் சத்தம். பட்டென்று அவனது அழுகை வெட்டி இழுத்தமாதிரி நின்றுபோனது. கூட்டமும் கொஞ்சம் ஆர்வமாய்ப் பார்த்தது. கொஞ்சம் எரிச்சலோடு கரி படாச்சி சொல்லிக்கொண்டார் “ எப்ப வர்றாம் பாரு.”

வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி வந்து நின்ற புல்லட்டைப் பார்த்து போதையிலும் நிதானமாக வணக்கத்தைப் போட்டான் கணேசன் “ வாங்க அண்ண.”

புல்லட்டிலிருந்து இறங்கியனைப் பார்த்த கணேசனுக்கு மட்டுமில்ல, அறிவழகன், சிகாமணி உட்பட எல்லோருக்குமே வெறுத்துவிட்டது. வந்திறங்கியது தனபால் இல்லை, தனபாலின் பெரியமகன் ராசேந்திரன். நெய்வேலியில் காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்பவன்.

“ அப்பாவுக்கு வேல இருக்குன்னு என்ன போய்ட்டு வரச் சொன்னாரு.” தயங்கித் தயங்கிச் சொன்னான். சொல்லி முடிக்கும் போது இரவு பத்து மணிக்கு அடையாளமாய் நெய்வேலி முதல் அனல் மின் நிலையத்தில் சங்கு ஊதியது.

“ நெனைச்சன். அவருலாம் வரமாட்டாரு. இது என்னா கல்யாணத்துக்கு மொய் எழுதுற யேபாரமா, அப்பனுக்கு பதிலு புள்ள வந்து பட்டம் கட்டிட்டு துணிமணி வாங்கிக்கிட்டு போறதுக்கு...” கரி படாச்சி கோபமாகச் சொல்லிவிட்டு அறிவழகன் பக்கம் வேகமாகத் திரும்பினார் “ அப்பறம் என்னாப்பா. இது சம்மந்தமா அந்த ஆள எதிர்பாத்தம்னா, தே ஊதிச்சி பாரு, சங்கு. அதே மாதிரிதான் நம்ப ஊரு நெலவரமும் ஊதிகிட்டுப் போய்டும்.” இதைச் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே என்ன நினைத் தானோ, புல்லட்டை உதைத்துக் கிளம்பி திரும்பிப் பார்க்காமல் போய்விட்டான் தனபால் மகன்.

“ சரி, வுட்டுட்டு வேலயப் பாருப்பா” ரங்கநாது மகன் அறிவழகனிடம் அனுமதி கொடுக்கிறமாதிரி பேசினார்.

முதலில் சிகாமணிதான் ஆரம்பித்தான். “ இந்த மண்ணுல எதுக்கு நாம வந்து பொறந்தம்னு நெனைக்க நெனைக்க ஆத்திரம் ஆத்திரமா வருது. ஒரு மனுசன் தாம் பொறந்த மண்ணுல, கோடி கோடியா பணத்த

சம்பாரிச்சி, கோட்ட மேல கோட்ட கட்டி, புள்ளகுட்டியோட வாழ்ந்தாங்கறது பெரிசு இல்ல, கௌரவம் இல்ல. குடிசையில கெடந்தாலும் கூழக் குடிச்சிக்கிட்டு ஓட்டனாலும் கடைசி காலத்துல தாம் பொறந்த மண்ணுலியே வாழ்ந்த மண்ணுலியே செத்துப் போவுணுங்கறதுதான் அவனுக்குப் பெருமை பேராசை கௌரவம்...”

ஏதோ சாதாரணமாய் வலுவிழந்த குரலில் ஆரம்பித்த பேச்சு படக்கென்று பிறந்து, வாழ்ந்து கொண்டிருக்கிற மண் பறிபோகிற அவலம்பற்றி நுழைந்ததும் எல்லோருக்குள்ளும் ஒரு இறுக்கமும் உருக்கமும். பிறந்த மண்ணிலேயே செத்துப்போக வேண்டும் என்கிற ஒவ்வொரு மனுசனுக்குள்ளும் ஒடுங்கிக்கிடக்கிற உயிராசையை அவன் தொட்டு நிறுத்தியபோது, ஊற்றோடும் மண்ணில் வேர்இளகி இலை கனத்து கிளை வளைந்து இனி சிறுகாற்றுக்கும் தாங்காத நெடுமழை மரமாய் தாங்கவியலாத கனத்த மனத்தோடு நின்றார்கள்... “ ஆனா அந்தப் பெருமையும் பேராசையும் கௌரவமும் இன்னைக்கி நமக்குக் கெடைக்குமா... சொல்லுங்க...” கூட்டத்தைப் பார்த்துத் தெறிக்கிற குரலில் திரும்பத் திரும்பக் கேட்கிறான் “ சொல்லுங்க... பொறந்த மண்ணுலியே செத்துப் போவுற அந்த புண்ணியம் நமக்கு வாய்க்குமா...” குரல் பிசிறி கண்ணீர்த்துளிகள் சிதறுகின்றன.

அதற்கும் மேல் கூட்டம் தத்தளித்து அழுது குலுங்குகிறது. “ இல்ல சாமி... பொறந்த மண்ணிலியே செத்துப் போவுற குடுப்பன நமக்கு இல்ல சாமீ..” “ நாம பாவஞ் செய்ஞ்ச சனம் எப்பா.” “ இந்த மண்ணுல வாழறதுக்கான பொசுப்பு இல்லாமப் போவுது சாமி...”

அதற்குமேல் சிகாமணி பேச முடியாமல் ஆத்திரத்தில் தேங்கி நின்றுவிட்டான்.

வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த பாஞ்சாலைக்கு அதற்குமேலும் வெளியே நடக்கும் காட்சியைக் காதால் வாங்கிக்கொண்டு கல்லாய்க் கிடக்க மனமில்லை. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து வெளியே வர கதவை நோக்கினாள். அருகாலின் பக்கக் கம்பியைப் பிடித்தபடி பூமாதேவி நின்றுகொண்டிருக்கிறாள். கூட்டத்தின் நடுவில் அழுகையில் தேங்கித் திகைமாறி நின்று கொண்டிருக்கும் சிகாமணியைப் பார்க்கப் பார்க்கப் பதறியது அவளுக்கு.

பாஞ்சாலை மெல்ல நடந்து கிட்டக்கப் போய் கூப்பிட்டாள் “ எம்மா...” சுரத்தின்றித் திரும்பிய பூமாவின் கண்களில் விழுதுகளைப் போல இறங்கிய

துளிகள் கூட்டத்தின் மங்கிய வெளிச்சம் பட்டு மெல்ல மின்னின. தாயின் முகத்திலும் வெளிச்சப் புள்ளிகள் மின்ன பரிதாபமாகப் பார்த்தாள்.

“ வாணாம்பா. தீட்டுக்காரப் புள்ள இப்பிடி நிக்கக்கூடாது. சந்துல போயி குந்துப்பா...” பூமாவை உள்ளே கூப்பிடும்போதுதான் திண்ணையைப் பார்த்தாள். ராசோக்கியம் இல்லை. அவரும் கூட்டத்தில் கரைந்துபோயிருப்பார் போலும்.

“ இல்லம்மா. ஊரே இப்பிடி தெவைச்சி தெக மாறி நிக்கறப்ப, தீட்டு என்னா தடுக்கு என்னம்மா...” திரும்பி சிகாமணியையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

தொடர்ந்து கொண்டிருந்தான் சிகாமணி. மெல்ல உருக்கமான மனநிலையிலிருந்து விடுபட்டு, அடுத்து உறுதியாய் எடுக்கவேண்டிய செயல்களுக்கு உணர்ச்சிபூர்வமாகத் தாவியது அவனது பேச்சு. “ இது நம்ம பூமி. காலடியில கெடக்கிற இந்த நெலம், நம்ப பாட்டன் பூட்டன்னு வாழ்ந்த எடம். இத வுட்டுக் குடுக்கறதுங்கறது நம்ப உசுர வுட்டுக்குடுக்கறமாதிரி. நெய்வேலிக்காரன் ஆத்தக் கட்றன் மலையக் கட்றம்பான். எதுக்கும் நாம அசைஞ்சி குடுக்கக் கூடாது. இவன் குடுக்கற நொள்ளக் காசுக்கு நாம தலையாட்டிட்டு அப்பறம் காலம்பூரா தலையெடுக்க முடியாத தரித்தரமா ஆவக்கூடாது. எல்லாம் தெக்குமேலூர், வடக்குமேலூர்னு இதுக்கு மின்ன குடுத்த சனங்க அங்கங்க படற பாட்ட நாம பாத்துக்கிட்டுதான் இருக்கறம். நாம வாழ்ந்த மண்ணுல, என்னா செண்டிப்புல நாம இருந்தமோ அதே செண்டிப்பும் வாழ்க்கையும் குடுக்கிறதா இருந்தா நெலத்துக்கிட்ட வா, இல்ல வராத. நம்ப அய்யா சொல்றமாதிரி படையை நடத்திப் பாராண்ட சமூகம் நாம. எதுத்து நிக்கணும்...” தொடர்ந்து பேசிக்கொண்டே போனான். விட்டால் இப்பவே போய், நெய்வேலி தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு விடுகிற மாதிரி ஆவேசமான பேச்சு. பேசி முடித்தபோது மழை பெய்து ஓய்ந்தமாதிரியாய் மௌனம்.

அருகாலைப் பிடித்துக்கொண்டிருந்த பூமாவுக்கு சிகாமணி பேசி முடித்ததும் திடுமென ஒரு வெறுமை. கொடியின் வேரைப் பிடுங்கியதும் கொழுந்தில் உண்டாகும் வதக்க சொடுக்கத்தைப் போல் தொய்வு. பட்டென்று திரும்பவும் சந்தில் போய்க் குந்திக் கொண்டாள்.

அடுத்து அறிவழகன் நிதானமாகப் பேச ஆரம்பித்தான். “ சிகாமணி சொல்ற மாதிரி இத தல எழுத்துன்னுதான் சொல்லணும். நாம பொறந்து வெளையாடிய இந்தப் புழுதி மண்ணுல நம்ம புள்ளைவுளும் பொறந்து வெள்ளாண்டு தூங்கற குடுப்பனய இல்லாம ஆக்கறானுவோ. இந்த வேலய

திட்டம் போட்டு தெறமையா ஒரு பக்கம் அரசாங்கமும் இன்னொரு பக்கம் நிர்வாகமும் செய்யிது. இதுலேர்ந்து நாம தப்ப முடியுமா, நம்ப ஊர எடுக்காம செய்ய முடியுமாங்கறதுலாம் முடியாத காரியம். ஏன்னா அரசாங்கம் இது நாட்டு நலன் கருதி செய்றதுங்கும். முன்னேற்றம் அடங்கி யிருக்குங்கும். மண்ணுக்குங் கீழ இருக்கறதுலாம் அரசாங்கத்துக்கு தான் சொந்தம்னு சட்டத்து மேல சட்டமா போட்டும் வைச்சிருக்கு. ஆக நாம செய்ய வேண்டியதுலாம் ஒண்ணே ஒண்ணுதான். நாம ஒத்துமையா இருந்து நமக்குச் சேர வேண்டிய நியாயமான நிவாரணத் தொகை, குடியிருக்கறதுக்கு நல்ல தண்ணீர் வசதியோட கூடிய மாற்றுக் குடியிருப்பு, அப்பறம் முக்கியமா நெலம் குடுத்தவங்களுக்கெல்லாம் நிர்வாகம் இதுவரைக்கும் தண்ணி காட்டிக்கிட்டு இருக்கு பாரு... வீட்டுக்கு ஒரு ஆள் வேல...”

தொடர்ந்து அறிவழகன் பேசிக்கொண்டே போனான் “ ஆனா, இதலாம் சும்மா டீக்கடையில குந்திக்கிட்டு தானா வரும்னு இருந்தா வேலைக்கு ஆவாது. அதே மாதிரி எதிர்த்து நின்னு போராடறங்கறதும் சாதாரண வேல இல்ல. அரசாங்கம்ங்கறது ஆயிரம் கைகள் கொண்ட ராட்சதன் மாதிரி. அந்தக் கைகள மீறி நின்னு நம்ப கோரிக்கைய, நமக்குச் சேரவேண்டிய உரிமைய அடையணும்னா மனம் தளராமக் களத்துல நிக்குணும். நிர்வாகம் ஏகப்பட்ட உள்ளடி வேலய குடுக்கும். நம்ப ஊருக்குள்ளயே நொழைஞ்சி நமக்குள்ளயே ஒரு ஆள உருவாக்கி, எலும்புத் துண்டக் காட்டி நமக்கு எதிரா நம்ம கண்ணையே நம்பள குத்திக்க வைக்கிறமாதிரி உருவாக்கும். அதலாம் முறியடிக்கணும்னா நம்ப ஊரு, தெற்கு வெள்ளூரு, கூனங்குறிச்சின்னு எல்லாமும் தெரளணும். தெரட்டணும். அந்த வேலய இந்த வேப்பங்குறிச்சியிலேர்ந்து நாமதான் தொடங்கி வைக்கணும்.”

குளிரெடுத்த இரவில் நேரம் கணதாண்டிப் போய்க் கொண்டிருந்தது. ஆனால் எதையும் பொருட்படுத்தாமல் கூட்டம் அறிவழகன் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தது. “ நம்ப அய்யா நாலாகடையிலுமா பிரிஞ்சி கெடந்த இந்த சமூகத்த ஒண்ணு சேத்து ஒரு வார சாலை மறியல் போராட்டத்த அறிவிச் சிருக்கிறாரு. இப்பிடி ஒண்ணா ஒரு இயக்கமா உருவாக்கறதுக்கு அவுரு பட்ட பாடு சாதாரணமில்ல. ஒரு பெரிய சமூகம் ஒண்ணா அதுவும் ஒருத்தர் பின்னால திரள்றத அரசாங்கம் எப்பியுமே ஏற்காது. எவ்வளவு கீழ்த்தரமான உள்ளடி வேலைக்கும் எறங்கிச் செய்யத் தயங்காது. அந்த உள்ளடி வேலையையெல்லாம் மீறி முறியடிச்சி, தொடர் போராட்டங்களை சளைக்காம நடத்தி, இப்ப முத்தாய்ப்பா மாநிலத்தில், மத்தியில் இடஒதுக்கீடு கேட்டு தொடர் சாலைமறியல் போராட்டத்த

அறிவிச்சிருக்கார். சாலை மறியல் போராட்டம் ஏன்னு தொடர் கூட்டங்களும் நடத்தி விவாதம் பண்ணி இந்த சமூகம் எப்படி ஏமாத்தப்பட்டுருக்குன்னு விளக்கம் குடுத்துக்கிட்டும் வர்றார்.”

அறிவழகனின் ஒவ்வொரு சொல்லையும் ஊனாடிக் கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்தில், கணக்கஞ் செட்டி மட்டும் பேச்சு டாக்டர் அய்யா பக்கம் லேசாய் திரும்பியதும் சற்று நெளிவது மாதிரி தெரிந்தார். ஆனால் கூட்டத்தின் விளிம்புப் பகுதியில் குந்தியிருந்த குறவர்களான கீரையன் குடும்பத்திற்கோ ஊர் தொழிலாளிகளான ரத்னவேல், அரசாயி குடும்பத்தாருக்கோ வேற்றுச் சமூகத்தவர்களாக இருந்தாலும் அவர்களின் வாழ்வு முற்றிலும் உள்ளூர்க்காரர்களைச் சார்ந்ததே என்பதால் அய்யாவைப் பற்றி நகர்ந்த அறிவழகனின் பேச்சு பெரிய சங்கடத்தை எதுவும் ஏற்படுத்தவில்லை.

அடுத்துப் பேச ஆரம்பிக்கையில் திடுமென குறுக்கீடாய் ஒரு சத்தம். அறிவழகன் திகைத்துப் பேச்சை நிறுத்திவிட்டான். கோயில் சுவரில் சாய்ந்து குந்தியிருந்த செங்கல்ராவுக்கு போதை கனிந்து தூக்கமாகி, குறட்டை கூடச் சேர்ந்துகொண்டது. சிகாமணிக்கு கோபமும் எரிச்சலும் பற்றிக்கொண்டு வர, நிலைகால் மேல் நின்று கொண்டிருக்கும் அம்மாவைப் பார்த்தான். கூட்டம் அப்படியே ஒரு கணம் நிசப்தமாகிவிட குறட்டை ஒலி மட்டும் தனித்து ஒலித்தது. “ க்கும்... முதல் கூட்டத்திலியே இப்பிடின்னா...?” ஒருவன் முக்கினான்.

முத்துக்கண்ணு கூட நின்றுகொண்டிருந்த அசலாம்பு தவளையைக் குறிவைத்த சாரையாய் குந்தியிருந்தவர்களை விலக்கி ஓங்கி நெட்டுகிற மாதிரி செங்கல்ராவை எழுப்பினாள் “ இங்க பாரு. என்னா நடக்குது. எனமனம் கெட்டாப்ல எங்க வந்து கொறட்ட வுடுது பாரு.”

“ ம்...” என்றபடி கண் விழித்த செங்கல்ராவு பறந்து பறட்டை யாய் தோள்வரை கிடந்த செமட்டை பாய்ந்த தலைமுடியை ஒதுக்கியவாறு சாதாரணமாய் சொன்னார் “ யாரிடி தூங்கறா... கண்ண மூடி கவுனிச்சிக்கிட்டு இருக்கறப்ப... சளி புடிச்சிக்கிட்ட மூக்குல கர்ருபுர்ருங்குது. அதப் போயி கொறட்டன்னுகிட்டு...” சொல்லிவிட்டு அறிவழகன் பக்கம் திரும்பினார் “ ஏம்பா நீ நிறுத்திட்ட? பேசு. எதோட வுட்ட... அய்யா ஏன் சாலை மறியல் போராட்டம்னு ஊர் ஊரா கூட்டம் போட்டுக்கிட்டு இருக்காரு. அதான. அதுக்கும் அங்காண்ட பேசு...”

சிகாமணி அறிவழகன் உட்பட எல்லோருக்கும் ஆச்சரியமாய்ப்

போய்விட்டது.

செங்கல்ராவு ரொம்பவும் பெருமையாய்த் தலைமுடியை மீண்டும் கோதியபடி சொன்னார் " எத்தினி ஊர்ல, தூங்கிக் கிட்டியே கூத்தாடிக்கிட்டு வந்துருப்பன். ஏங்கிட்ட வந்து கொறட்ட கிறட்டன்னு..."

நேரம் கடந்துகொண்டே போனதும், ரங்கநாது மகனிடம் கோரிக்கை வைக்கிறமாதிரி கேட்டார். " அப்பறம் என்னாதாம்பா முடிவு. விருத்தாலம் டாக்டர பாக்கப்போனிங்கள... என்னா சொன்னாரு? நோட்டிஸ் குடுத்துருக்கான. பதில் குடுக்கறதா வேணாமா..."

விருத்தாசலம் ஜி.ஆர். டாக்டர் மூலம் அய்யாவைத் தொடர்பு கொண்டு பேசியதாகவும், மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதை நிறைவேற்றப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல சங்கத்தில் அனுபவம் வாய்ந்த மாவட்டப் பொறுப்பாளர் கடலூர் குறள்மணியை அய்யா நியமித்திருப்பதாகவும் அறிவழகன் சொன்னான்.

ஏக்கருக்கு இரண்டு லட்சம், நெய்வேலியை ஒட்டிய புறநகர் பகுதிகளிலேயே மாற்றுக்குடியிருப்பு, முக்கியமாய் வீட்டுக்கொரு ஆள் வேலை என்கிற கறாரான தீர்மானங்களோடு கூட்டம் முடிவுக்கு வந்தது. உடனடியாகப் பொங்கல் கழித்து குறள்மணியை வைத்து அரசுக்கும், நிர்வாகத்திற்கும் கவன ஈர்ப்பு நிகழ்வாக நில எடுப்பு அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் எனவும், அதுவரை நோட்டிசு தொடர்பாய் எந்தவொரு பதிலும் அனுமதியில்லாமல் யாரும் கொடுக்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டதோடு கூட்டம் முடிவுக்கு வந்தது.

எடுத்த எடுப்பிலேயே பிரச்சனையை அய்யா வரையில் கொண்டுபோய், குறள்மணியைக் களத்தில் இறக்கியிருப்பதாய் சொன்னதால் எல்லோருக்குள்ளும் லேசான தெளிவு. சிறு நம்பிக்கை. அது அறிவழகன், சிகாமணி முயற்சிகளினால் நீட்டப்பட்ட ஆதரவுக்கரம். அதைப் பற்றி எப்படியாவது மேலெழுந்துவிட வேண்டும் என்கிற தீர்க்கமான முடிவோடு எழுந்தார்கள்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு வந்து வெளிச்சத்தில் நின்று அறிவழகனைப் பார்த்து கீரையன் ஒரு கும்பிடு போட்டார். " நெலபலம் ஏதும் எங்குளுக்கு இல்ல. குடிசையும் பொறம்போக்கு ஒதுக்குலதான். ஒங்கள நத்திதான் நாங்களும் இருக்கறம். கணக்கு வழக்கு எடுக்கறப்ப எங்கள வுட்டுடாதீங்க. சாமீ...." அதுவேதான் எங்களின் வேண்டுகோளும் என்கிறமாதிரி ரத்னவேலு " ஞாபகத்துல வைச்சுக்குங்க சின்னத்தம்பி" என்றார். தாண்டிய வயதில்

ஏகாலி அரசாயியும் தலையைச் சொறிந்தாள்.

“ பட்டா பொறம்போக்குங்கறதுலாம் அப்பறம். இந்த மண்ணுலதான நாம ஒழப்பறிச்சிக்கிட்டு கெடக்கறம். ஒண்ணும் பயப்படாமப் போங்க...”

கூட்டம் கலையத் தொடங்கி நகர ஆரம்பித்தபோது ‘ தம்பீ...’ எனக் கெட்டித்துப் போன கட்டைக்குரல். அறிவழகன் திடுக்கிட்ட மாதிரி திரும்பினான். கலைய ஆரம்பித்தவர்களையும் கலவரமான, ஆபத்தில் நிற்பது மாதிரியான அந்தக் குரல் திரும்ப வைத்து விட்டது. நெடுநாள் காயலாவில் கிடந்தவனைப் போல சொடுக்கம் பாய்ந்த முகம். இழுத்துப் போர்த்தியபடி ராசோக்கியந்தான், கூப்பிட்டது.

“ என்னா மாமா...” பதட்டமாகக் கேட்டான்.

திடுமென மின்சாரம் நின்று எங்கும் இருள். எல்லோரும் மௌனம் பரவிய கனத்த இருட்டில் கரிக்கட்டைகளாக நின்றிருக்க, வடக்கே தூரத்தில் முதல் அனல் மின் நிலையப் புகைக்கூண்டுகளின் உச்சி நுனியில் மின்மினிகளாக வெளிச்சம் துளிர்த்துக் கொண்டிருந்தது. இருட்டோடு இருட்டாய் ராசோக்கியம் கேட்டார் “ தம்பீ, அப்ப நெலம் எடுக்கறதத் தடுத்து நிறுத்தற மாதிரி ஒண்ணுமே செய்ய முடியாதா...”

அறிவழகனுக்கு மட்டுமல்ல, இருட்டில் நின்றிருந்த எல்லோருக்குமே திக்கென்று போய்விட்டது. எப்படியாவது காலடியில் கிடக்கிற தாய்மண்ணை விட்டுக்கொடுக்க இயலாத, விட்டுப் பிரிய இயலாத ஏக்கத்தில், தடுமாற்றத் தகிப்பில் விளைந்த கேள்வி. அறிவழகன் என்ன சொல்வதென்று தெரியாமல் இருட்டில் உறைந்துபோய் நின்றிருக்க... திடுமென வெளிச்சம்.

கண்களில் நீர்துளிர்க்க நின்றிருந்த ராசோக்கியத்துக்குப் பின்னால், அவரைக் கொத்திக் குதறி விடுகிற மாதிரியான ஆத்திரத்தில் சதாசிவம் நின்றுகொண்டிருந்தான். அறிவழகன் சூழலை மாற்று வதற்காக அவனிடம் பேச்சுக் கொடுத்தான் “ எப்படா மாப்ள வந்த...”

அவன் அறிவழகன் கேட்டதைக் காதில் வாங்காமல் தணியாத ஆத்திரத்தில் அப்பனை எரித்து விடுகிற மாதிரி பார்த்துப் பேசினான் “ ஒண்ணாம் பிளாக்ல இருக்கற கார்பரேட் ஆபிஸ் மின்னால போயி மண்ணெண்ணைய ஊத்தி கொளுத்திக்கிட்டா, நெலம் எடுக்கறத நிறுத்திடுவான். போய் கொளுத்திக்கன்.”

கும்பலில் வைத்து அவன் அப்படிப் பேசியதும் ராசோக்கியத்தின் எண்சாண் உடம்பு ஒரு சாணாய் குறுகிப் போய்விட்டது.

*

15

“ பூ வரசம்பூ பூத்தாச்சு. பொண்ணுக்கு சேதி வந்தாச்சு...” தோட்டத்துப் பூவரசில் கட்டப்பட்ட ஒலிபெருக்கிப் பாடலில், நில எடுப்பு சேதியால் நிலவிய ஊரின் சோம்பலை முறித்துக் கொண்டு சடுதியில் விழாக்கோலம் பூண்டது பூமாவின் வீடு. கடை கண்ணிக்கு ஓடுவதும், விசிப்பலகைகளை கொண்டுவந்து போடுவதுமாக கனகராசு பறந்துகொண்டிருந்தார். அதற்குமேல் அம்புசாட்சி. அம்மிக்கும் அடுப்படிக்குமாகப் பரபரப்புதான். பூச்சி யோடு ஆளுக்கொரு குடங்களை, தவலைகளை எடுத்துக்கொண்டு வைரம், தங்கம், கசப்பு என எல்லோரும் தண்ணீர் மொண்டுவந்து அண்டாக்களில் நிரப்பிக்கொண்டிருந்தார்கள்.

பூட்டவிடாமல் நின்றிருந்த வண்டியிலிருந்து அய்யாயிரம் விறகுகளைத் தூக்கி தோட்டத்திற்குள் போட்டுக் கொண்டிருந்தார். மாடுகள் நகர்ந்துவிடாதவாறு மூக்கணாங்கயிறு களைப் பிடித்துக் கொண்டிருந்த ராசோக்கியத்துக்கு வேர்த்து விறுவிறுத்திருந்தது.

கொல்லைவெளிப்பக்கம் தேவகி போவது போலிருந்ததும், வாசலுக்கு வந்த பாஞ்சாலை பார்த்துவிட்டு கூப்பிட்டாள் “ தே புள்ள, என்னாடி பாத்தும் பாக்காமப் போற. ஒரு தண்ணி தளுப்ப மொண்டா என்னா. ம்... போங்க. அவ அவ வூட்டுக் காரியத்துக்கு நானா போயி தலமானா நிப்பன். இன்னைக்கி ஏழூட்டு புள்ளைக்கி தண்ணி ஊத்தறதுக்கு ஒருத்திகூட திரும்பிப் பாக்க மாட்டங்குறீங்க...” ரேடியோ சத்தத்தையும் மீறி உரக்கப் பேசியதில் அவளுக்கு மூச்சு வாங்கியது.

“ முந்தா நாத்து கூட்டத்தன்னைக்கி நடந்த வாங்கல்லேர்ந்து இன்னம் கொணக்கு தீருல போல்ருக்கு. எல்லாம் வருவா. வராம எங்க பூடுவா...” சொல்லிக்கொண்டே மொட்டைச்சி செல்லப்பாங்கி வரவும் பாஞ்சாலைக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

கதவுச் சந்தில் இறுக்கமாகக் குந்தியிருந்த பூமா இப்படி யெல்லாம் சட்டென்று வீட்டுச் சூழல் தடபுடலாய் மாறும் என்று மதியம் வரை கூட நினைத்துப் பார்க்கவில்லை. நேற்றுக் காலையில் சித்தப்பா கனகராசுதான் சத்தம் போட்டார். ‘ என்னா ஒரு வயசிக்கு வந்த புள்ளய வூட்ல குந்த வைச்சிக்கிட்டு ஆளாளுக்கு மூஞ்சிய தூக்கி வைச்சிக்கிட்டு நிக்கிறீங்க.’

ராசோக்கியத்திடம் நேரடியாகவும் கேட்டார். ‘ என்னா அண்ண, தலைக்கி மேல வளந்த புள்ளை அவங் கிட்ட போயி வார்த்தைய வளத்திக்கிட்டு. ஊருக்கு ஆவறது நமக்காச்சி. வைச்சிருந்தாலும் அவனுக்குதான் வைச்சிட்டுப் போவப்போறம். நெய்வேலிக்காரன் எடுத்துக்கிட்டுப் பத்து ரூவாய குடுத்தாலும் அவங்கிட்டதான் குடுக்கப்போறம். மனச ஆயக்கட்டிக்கிட்டு ஆவ வேண்டித பாக்காம... அவனுகிட்ட போயி வேரு வெட்டிக்கிட்டு...’

அம்புசாட்சியையும் சும்மா சொல்லக்கூடாது. ‘ எக்கா, திரும்பத் திரும்ப கொல்லிய எடுக்கறான், குடும்பத்த எடுக்கறான்னு வாக்குத் தத்தம் வளத்திக்கிட்டு வெசனம் புடிச்சிப் போயி குந்தியிருந்தீங் கன்னா மேல மேல ஒடம்புதான் ஒண்ணுமில்லாமப் போவும். அவன வுடு. இது பொட்டப் புள்ள. ஒருத்தங் கையில புடிச்சிக் குடுக்கற வரைக்குமாச்சும் நம்ம ஒடம்புக்கு விண்ணங்கம் இல்லாம உசுருக்கு சேதாரமில்லாம இருக்கணும். சதாசிவத்தையும் கூப்புட்டு சண்டய போட்டு, புள்ளைக்கி தண்ணி ஊத்தற வேலையப் பாக்கச் சொல்லு...’ பாஞ்சாலையைத் தேற்றி, சதாசிவத்தையும் சமாதானம் பண்ண ஏற்பாடு செய்தாள்.

கையோட கையாய் அறிவழகன் அப்பா ரங்கநாதுவை இட்டுவரச் சொல்லி நாளு நட்சத்திரம் பார்த்து மறாநாளே தண்ணீர் ஊற்றுகிற மாதிரி கனகராசு ஏற்பாடு செய்தார். மறாநாளே என்றாலும் சரி என்று உம்மப்பட்டிருந்த பாஞ்சாலையிடம் அம்புசாட்சி தயங்கியது மாதிரி கேட்டாள். ‘ ஒரு யோசன எக்கா...’

ஒன்றும் புரியாமல் பாஞ்சாலை நிமிர்ந்தாள். ‘ இல்ல எப்பிடிக் கெட்டாலும் ஊர எடுக்காம வுடப்போறதில்ல. எடுத்தப்பறம் என்னாதான் மாத்துக்குடியிருப்பு குடுத்தாலும் எல்லோரும் அங்கியே தங்குவாங்கன்னு சொல்லவும் முடியாது. ஆளாளுக்கு சொந்தம்பந்தம் அங்கஇங்கன்னு நெலம் நீட்சின்னு வாங்கிக்கிட்டு திக்காலுக்கொண்ணா சனம் போனாலும் போவும். நாளைக்குப் போயி ஒரு காரியத்த வைச்சிக்கிட்டு சனத்த தேடி சிப்புக் கட்டி கிட்டு பத்திரிகையத் தூக்கிக்கிட்டு அலையிணும். அதுவோ வந்தாலும் போச்சி வராமப்போனாலும் போச்சி. இது குடும்பத்துக்கு தலப்புக் காரியம். ஏதோ நம்ம சத்துக்கு அங்க இங்க நூத்தப்பத்த செஞ்சி வைச்சிருக்கம். சூட்டோட சூடா ஒரு ஏழாம் நாளோ ஒம்பதாம் நாளோ கோயிந்தா ராமான்னு ஒரு மஞ்சத்தண்ணிய வைச்சி வுட்டுட்டமுன்னா நமக்கும் புள்ளைக்கி பொறந்த மண்ணுல ஒரு காரியம் வைச்சமாதிரி யிருக்கும். செஞ்சி வைச்ச காசிவோ பத்து ரூவா நெறமா வருமானம்

வந்தமாதிரியிருக்கும்..’

ரங்கநாதுவே ஒரு நிமிசம் அசந்துபோய்விட்டார். அந்த யோசனை கனகராசுவுக்கும் சரியாகப் பட்டது. ‘ மறுபடி எங்க இந்த சனஞ்சாதிய தேடிக்கிட்டு...’ எப்போதும் அம்புசாட்சி என்றாலே ஏதாவது தனக்கு போறாமையாய் பேச செய்யக் கூடியவள்தான் என நினைக்கும் பாஞ்சாலைக்குக் கூட பட்டென்று அவள் மீது மதிப்பும் மரியாதையும் வந்தது.

ரங்கநாதுவும் ஆமோதிப்பது மாதிரி சிரித்தபடி சொன்னார் ‘ தரவுக்காரன் பொண்டாட்டி சொல்றதும் நெல்ல யோசனையா தான் இருக்கு. அதுமாதிரியே செஞ்சிட்டுப் போங்க.’ ஏழாம், ஒன்பதாம் நாட்களுக்கான கிரக இருப்புகளை பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த யோசனை பிறருக்கு சரியாகப் பட்டாலும் பாஞ்சாலைக்கு மட்டுமில்லாமல் ராசோக்கியத்துக்கும் பொருத்தமாகப் படவில்லை. பெற்ற பிள்ளைக்கு மன சந்தோஷமாக ஒரு காரியத்தைச் செய்ய முடியாத சூழலில், வருமானத்திற்காக வலிந்து மஞ்சள் தண்ணீர் வைப்பது கொஞ்சமும் பிடிக்கவில்லை. வீடு வாசல் நிலபுலம் என எல்லாமும் கேள்விக்குறியாய் இருக்கிற நிலையில், காரியங் கவைக்குச் செய்திருக்கிற ‘ நூத்து பத்து’ ரூபாய் ஒன்றும் பெரிதாகவும் தெரியவில்லை. இருந்தாலும் மூஞ்சியில் அடித்த மாதிரி மறுத்துப் பேசி விட்டால் அம்புசாட்சி ஏதாவது நினைத்துக்கொள்வாள் என்று கொஞ்சம் சாந்தமாகப் பாஞ்சாலை சொன்னாள்.

‘ இருக்குட்டும். நம்ப சனஞ்சாதிலாம் எங்க பூடப்போவுது. காலஞ் செயிச்சா மேலைக்கி மஞ்சத் தண்ணிய வைச்சிக்குவம். அதுக்கும் வுடாம ஏழ்ர நாட்டான் புடிச்சி ஆட்டிக்கிட்டு இருந்தான்னா, நாளைக்கி ஒருத்தங்கிட்ட புடிச்சிக் குடுக்கறப்ப னாச்சும் ஒரு புட்டுகிட்டு சுத்தி சாங்கத்த கழிச்சிட்டுப் போவும் போ.’ சொல்லி முடிக்கையில் அவளையுமறியாமல் பாஞ்சாலைக்குக் குரல் இடறிக் கம்மியது.

‘ சரி. பாஞ்சால சொல்றதும் சரியாத்தான் இருக்கு. மனங் கெட்டாப்ல இருக்கறப்ப, ஒரு நெல்ல காரியத்த எதுக்கு இப்ப வைச்சிக்கிட்டு. இன்னைக்கே முதனைக்கி தகவல சொல்லி, நாளைக்கி சாயந்திரமா தண்ணி ஊத்தற வேலையப் பாருங்க.”

ரங்கநாது, கையோட கையாய் அரசாயி மகன் தாமோதரனை வரவழைத்து முதனைக்குச் சேதி சொல்ல அனுப்பிய பிறகுதான் பூமாவிற்குத் தண்ணீர்

ஊற்றும் சடங்கே உறுதிக்கு வந்தது.

சதாசிவம் சைக்கிளிலிருந்து இறங்கி மாட்டியிருந்த இரண்டு பெரிய பைகளையும் இறக்கித் தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டுபோய் வைத்தான். கதவுச் சந்து வழியாக, முக்கித் திணறிக் கொண்டுவந்து வைக்கும் அவனைப் பார்த்த பூமாவிற்கு அந்த நேரத்திலும் மெலிதாய் மனசுக்குள் ஒரு சிரிப்பு. இதே வேறு நேரமாக இருந்தால் சதாசிவம் இப்படி ஒண்டியாய் பைகளைத் தூக்கிக்கொண்டு வருவதற்கு வீட்டையே இரண்டாய் ஆக்கி யிருப்பான். ‘ சைக்கிள் சத்தம் கேட்டா வெளிய வந்து பாக்க மாட்டீங்களா.’ அதுவும் பூமா என்றால் இன்னும் ஒரு படி மேலே போய் நின்று புடிபுடி என்று நிற்பான்.

திரும்பவும் வெளியே போய் கேரியரில் சாக்குப்பையில் இருந்த சாமான்களை இறக்கிக் கொண்டுவந்து வைத்தான். அவன் முகத்தில் கொஞ்சம்கூடத் தெளிவு என்பதே இல்லை. வேண்டா வெறுப்பாய் ஏதோ கடமைக்குச் செய்வதுபோல் இருந்தது. இந்தக் கடமை வேலையைக் கூட நேற்று இரவு பாஞ்சாலை அவனிடம் கரையாய் கரைக்கவில்லையென்றால் குனிந்து நிமிர்ந்திருக்க மாட்டான்.

நேற்று வேலைக்குப் போய் வந்ததும் ராசோக்கியம் இல்லாத நேரம் பார்த்து பாஞ்சாலை தோட்டத்திற்கு அவனை இட்டுக் கொண்டுபோய் வைத்து மெல்ல இணுக்கினாள் ‘ ஏம்ப்பா, நீ செய்றதுலாம் நாயமா. அம்மாம் பெரிய கும்பல்ல பெத்த அப்பன வைச்சி எனுமோ மண்ணெண்ணய ஊத்தி கொளுத்திக்கிட்டா நெலம் எடுக்கறத நிறுத்தலாங்கற. இதுலாம் நீ பேசற பேச்சாப்பா...’

அவளை எரித்துவிடுகிற மாதிரி முறைத்துப் பார்த்தான். ‘ ஏம்மா, ஓம் வயிசிக்கி நெய்வேலிக்கு நெலம் எடுக்கறதா மெனக்கிட்டு கடைசியில சனங்க எதிர்ப்பு அதுஇதுன்னு சொல்லி எடுக்காம நிறுத்தியிருக்காங்களா?’

யோசித்துப் பார்த்து பதில் சொல்லத் தேவையில்லாத கேள்விதானென்றாலும், சற்றே தாமதமாய்த்தான் சொன்னாள் ‘ இல்ல...’

‘ இல்லல்ல. இந்த ஆளுக்கு எத்தினி வயிசி ஆவுது. இவுருக்குத் தெரியாது? எனுமோ இவுருதான் ஆச்சா வைரமா வேப்பங்குறிச்சி யில பொறந்து வளந்து இந்த மண்ணக் காபந்து பண்ணப்போற மாதிரி, இதத் தடுத்து நிறுத்தறதுக்கு வழியே இல்லியான்னு கேட்டா எப்பிடிம்மா?’

பெற்ற அப்பனை ‘ ஆளு அவுரு இவுரு’ எனப் பேசியது பாஞ்சாலைக்கு உச்சந்தலை மயிரைப் பிடித்து இழுப்பது மாதிரி இருந்தது. ஆனால் கடந்து பேசும் அவனிடம் எதுவும் ஆவப் போவதில்லை என்கிற மாதிரி இறங்கிப்பேசினாள். ‘ ஊருக்காரனுவோ மாதிரி பொழுது முப்பது நாழியும் மந்தாரக்குப்பத்து பக்கம் சுத்திட்டு ஓஞ்ச நேரத்துல கொல்லிய பக்கம் போறவரு இல்லப்பா. பொழுது போனா பொழுது விடிஞ்சா கொல்ல கொல்லன்னு கெடந்த மனுசன். எனுமோ உசுர ஒடம்புலேர்ந்து உருவுறமாதிரி இன்னைக்கி வூடு வாச நெலம்பலத்த எடுக்கறப்ப மனங் கேக்காம ஏதாவது பேசறது, ஒனக்கு அறுத்துக்கிட்டுப் போவுதுங்கிற.’

அவனும் சற்று இறங்கியதுமாதிரி பேசினான். ‘ நா எதுக்கு சொல்றன்னு யாருக்குமே புரியமாட்டங்குதும்மா. நெய்வேலிக் காரன் நெலத்த எடுக்கறதுன்னு முடிவு பண்ணனப்பறம், அது இதுன்னு நாம மறுப்பு சொல்லிக்கிட்டு இருந்தா, பட்டுன்னு இதான் சாக்குன்னு நம்பள அப்பிடியே கண்டுக்காம வுட்டுடுவான். கடந்து போயி நின்னாலும் பட்டாவுல சிக்கலு பணங் குடுக்க முடியாது, பொறந்த தேதியில விண்ணங்கம் இருக்கு வேல தரமுடியாதுன்னு இழுத்தடிச்சி, கடைசியில கழிச்சிக் கட்டிட்டுப் போய்டுவான்.’

கொஞ்சம் இடைவெளிவிட்டு அவனே பேசினான். ‘ இது வரைக்கும் நெலம் வூடு எடுத்தவங்களுக்குலாம் வேல தர்றன் தர்றன்னு ஏமாத்திக்கிட்டு இருக்கானுவோ. இந்தத் தடவ கட்டாயம் குடுத்து தான் ஆவணும்னு பெரிய அளவுல பிரச்சின நடக்கற மாதிரியிருக்கிற நேரத்துல இவுரு பாட்டுக்கு அது இதுன்னுக்கிட்டு இருந்தா என்னா அர்த்தம்மா... ஆனா ஒண்ணு சொல்றன். பின்னால இவுரு பாட்டுக்கு ஏதாவது மண்ணுகிண்ணுன்னு சிக்கல உண்டாக்கி எனக்கு வேல கீல கெடைக்கிறதுல தற்கொறச்ச வந்து போச்சின்னா நா, அப்பறம் மனுசனாவே இருக்கமாட்டன்...’

கடைசி எச்சரிக்கையாக அவன் கறாராகச் சொன்னபோது பாஞ்சாலைக்கே கொஞ்சம் மிரட்சியாகத்தான் இருந்தது. ‘ ஆமா, அவுருதான் இப்ப ஒனக்கு குறுக்கால நின்னு தற்கொறச்சல உண்டாக்கப் போறாரு. சரி அத வுடு. வூட்ல ஒரு புள்ள வயசிக்கு வந்து ஒக்காந்துருக்கன்னு ஒனக்கு எங்கியாவுது ஓசன ஓடுதா. நீ பாட்டுக்கும் வர்ற போற...’

‘ யோசன இல்லாமையா இருக்கு. இவுரு படுத்துற பாட்டுல தான் பாக்குட்டும் வுடுன்னு போவ வேண்டிதாருக்கு’ அடிக்கிற மாதிரி சொன்னான்.

‘ நாளைக்கி சாயந்திரம் தண்ணி ஊத்தறமாதிரி முதனைக்கிலாம் சொல்லியனுப்பியாச்சி. நீ பாட்டுக்கும் பந்தல்ல போட்ட செமையா காலையில ஏந்திரிச்சி வேலைக்கிப் பூடாத...’

“ இ ந்தா பூச்சி, சீக்கிரம் எடுத்துக்கிட்டுப் போயி அரைச்சா...”

குண்டான் நிறைய ஊற வைத்த உளுத்தம் பருப்பு. சும்மாட்டைக் கோலி வைத்துக்கொண்டு தோதாய்க் குனியவும், பாஞ்சாலை குண்டானைத் தூக்கி வைத்தபடி சொன்னாள் “ செட்டி வூட்டுக்குப் போவாத. அவ நாளைக்கி சுடறதுக்கு ஆவற மாதிரி பாஞ்சி ராத்திரிக்குதான் அரைச்சிக் குடுப்பா. பத்து தப்புடிய பாக்காத. ஓரே ஓட்டமா மந்தாரக்குப்பம் எடுத்துக்கிட்டு ஓடு. வட மாவுன்னு சொல்லி சீக்கிரம் அரைச்சிக்கிட்டு வா.”

“ பத்து தப்பிடியா. பத்து மைலா இருந்தாலும் சிட்டி தட்றதுக்குள்ள போய்ட்டு வர்றன். நம்ப வூட்டுப் புள்ள காரியம். எனக்கென்னா அதவுட வேல” பூச்சி ஓட்டமும் நடையுமாய்க் கிளம்பினாள்.

பூமா வயசிக்கு வந்த சேதி கேட்டதிலிருந்து, மற்ற எல்லோரையும் விட பூச்சிக்குத்தான் அதிகப்படியான வேலையும் பரபரப்பும். அவளுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. பூச்சிக்கு ஒரே ஒரு பையன்தான். பூட்டு போட்ட மாதிரி அடுத்ததுக்கு வாய்ப்பில்லாத சூழலில் அய்யாயிரம். படையாச்சி வீட்டில் பூமா பிறந்தபிறகு, அந்த நினைப்பே பிற்பாடு இல்லாமல் போய்விட்டது. மூக்கும் முழியுமாக பூமா மடியில் புரளும்போது பொட்டப் பிள்ளை இல்லையென்கிற நினைப்பே இல்லாமல் போகும்.

மாவுக் குண்டானோடு வாசலைக்கூட தாண்டியிருக்க மாட்டாள் பூச்சி, திடுமென நின்று வீட்டுப்பக்கம் திரும்பி சத்தமாய்ச் சொன்னாள் “ பாப்பா, முதன ஆயி, மலருலாம் வர்றாங்க பாரு.”

கதவுச் சந்தில் குந்தியிருந்த பூமாவுக்கு, மலர் என்கிற பேரைக் கேட்டதும் பட்டென்று துள்ளிக் குதிக்க வேண்டும் போல ஒரு துடிப்பு. அதே நேரம் எதேச்சையாய் வாசப்படி பக்கம் வந்த சதாசிவத்திற்கு அந்தப் பெயர் காதில் விழுந்ததும் பொட்டென ஒரு தயக்கம். ஏதோ மறந்து உடன் ஞாபகத்திற்கு வந்ததுபோல் போக்குக் காட்டி தோட்டத்துப் பக்கம் திரும்பியவனை, சந்து மறைவிலிருந்து பூமா கவனித்துவிட்டாள்.

தீட்டு மறைவு, சடங்கு சம்பிரதாயங்களையெல்லாம் மீறி மறைவிலிருந்தபடி முகங் காட்டாமல் பேசினாள் “ இப்ப எதுக்கு காதுல வுழுந்தும்

வுழாதமாதிரி தோட்டத்துப் பக்கம் போற? அத்தை, மலருலாம் வர்றாங்களாம். வாசல்ல போயி நின்னு வாயன்னு கூப்புடு.”

இதையும் காதில் வாங்காத மாதிரி “ எம்மா...” என எதையோ கேட்கிற சாக்கில் கூப்பிட்டுக்கொண்டே தோட்டத்துப்பக்கம் போயே விட்டான். பூமாவுக்கு ஏமாற்றத்தில் முகம் தொங்கி விட்டது.

“ பூமா...” சில்லென்று உள்ளத்து உவகையெல்லாம் ஒன்றாகக் கொட்டியது மாதிரி உச்சகதியில் பாசக்குரல். ஒரு பூஞ்செடியே வேரோடு நடந்து வீட்டுக்குள் நுழைந்தமாதிரி ஒரு அழகு. செட்டுப் பாவாடையில் மயில் சரிகை சரசரக்க உள்ளுக்குள் நுழைந்த மலருக்கு முன்பே நுழைந்தது குரல். மலரும் அவசரம் அவசரமாய்த் தேட, வெடிப்பிடை தலைகாட்டும் விதை முளைப்பாய் கதவுச் சந்திலிருந்து பூமா தலைநீட்டவும், கட்டியணைத்துக் கொண்டு உருளாத குறைதான்.

“ஏ... புள்ள, இருடி. தீட்டுக்காரப் புள்ளைகிட்ட போயி, கை கால் கழுவாத கூட...” அம்மா தங்கப்பழத்தின் எச்சரிக்கை யெல்லாம் மலருக்கு எடுத்துப் போட்ட கறிவேப்பில்லைதான்.

தாவி வந்த வெள்ளமாய் மலரின் ஆவல். பட்டென்று தடுப்பணையில் சுருண்டு நின்று விடுவதாய் மலர் ஒரு நிமிடம் தேங்கி நின்று திணறிவிட்டாள். பூமாவுக்குள் கிளம்பிய பூரிப்பு பொசுக்கென்று போன இடம் தெரியவில்லை. விரட்டலுக்குப் போக்குக்காட்டி மீண்டும் சூழ நெருங்கும் நெல்வாசல் கோழிகளாய் குடும்பச் சூழல் நினைவு பட்டெனச் சூழ்ந்துகொள்ள பூமா வதங்கிய கொடியாய்த் துவண்டு தலைகுனிந்து நின்றிருந்தாள். மலருக்கு என்ன சொல்வதென்று தெரியாத ஒரு படபடப்பு. எப்பவும் எந்தச் சூழலிலும் தலைதுள்ளிப் போகிற வேலையாக இருந்தாலும் தன்னைக் கண்டால் ஆட்டமும் பாட்டமுமாய் பிரிகட்டி அடிப்பவள். காலடியில் விழுந்த ஈரத் துளியைக் கண்டதும் மலர் அதிர்ந்து விட்டாள்.

“ என்னா பூமா, என்னா ஆச்சி...” பதறியபடி தாவாங் கட்டையைப் பிடித்து நிமிர்த்தினாள். கோடு கோடாய்க் கண்ணீர்த் துளிகள் உருண்டு இறங்கிக் கொண்டிருந்தன. “ ஏண்டி... என்னாடி ஆச்சி. எதுக்குடி அழுவுற...”

தேம்புகிறாள். தோட்டத்திலிருந்தவர்கள் எல்லாரும் ஓடி வருகிறார்கள். “ ஏன்னாடி என்னா ஆச்சி...” தங்கப்பழமும் அதிர்ந்து கேட்கிறாள்.

‘ அது மொட்டக் கொஞ்சலு கொஞ்சும்... வுட்டுட்டு வேலயப் பாருங்க...’ எப்போதும் பூமா என்றாலே பட்டென்று கிளம்பும் பாஞ்சாலையின் பேச்சு.

ஏனோ அவளையும் அறியாமல் ஊமையாய்ப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.

தோளில் சாய்ந்து குலுக்கியவளைக் கலங்கியபடி நிமிர்த்திக் கேட்கிறாள். " ஏண்டி என்னாடி ஆச்சி..."

அம்புசாட்சிதான் தயக்கமாய்ச் சொன்னாள் " ஒண்ணுமில்ல மலரு.. திடீர்னு ஊரை எடுக்கப்போறதா நெய்வேலிக்காரன் நோட்டிசு குடுத்துட்டான். அதக் கேட்டதும் அக்காவுக்கு பழையபடி அந்த இழுப்பு வந்து ஆச்சிபோச்சின்னு பூட்டுது." அதற்கடுத்தும் சொல்வதற்கு ரொம்பவும் தயங்கினாள். ஆனாலும் சொல்லித்தான் ஆகவேண்டும் எனச் சுற்றும்முற்றும் பார்த்து வீட்டுக்குள் சதாசிவம் இல்லையென்பதை உறுதிப்படுத்திக்கொண்டு சொன்னாள். " அதோட இந்த நெலம் குடுக்கறது சம்பந்தமா அப்பம் புள்ளைக்குள்ள கொஞ்சம் எரைச்சலு. இந்தக் கங்காட்சியில போயி நாம இப்பிடி குந்திட்டமுன்னு ரெண்டு நாளா அப்பிடியே மரப்பாச்சியாட்டம்தான் இருந்துது. அதான் ஒன்னக் கண்டதும்..."

பூமா கண்களைத் துடைத்துக் கொண்டாள். செல்லப்பாங்கி தான் அதட்டினாள் " அட... வுடு புள்ள. வந்து வராததுமா அந்தப் புள்ளைகிட்ட போயி அழுது களைக்கிற..."

மலருக்கும் கண்களில் துளிர்த்துக் கொண்டிருந்தது. " வுடு பூமா. இதுக்குலாமா போயி அழுவறது. ஊர எடுத்தான்னா எடுத்துட்டுப் போறான். நீங்க பாட்டுக்கும் குடும்பத்தோட முதனையில வந்து இருங்க. இதுக்குப்போயி அறியாப்புள்ள மாதிரி" கண்களைத் துடைத்துவிட்டாள்.

" ச்சீய்... அழுமூஞ்சி! சிரிடி... சிரி..." கன்னங்களைப் பிடித்துக் கிள்ளியபடி கிளுகிளுப்பாக்கினாள் மலர். ஊதும் காற்றில் பட்டென்று சாம்பல் விலக பூத்துச் சிவக்கும் நெருப்பாய் பழைய உற்சாகம் இருவருக்கும் கவ்விக்கொள்ள " ப்போ..." மலரின் சரிகை மின்னும் தாவணியின் முனைகளைப் பிடித்து இழை உருவியபடி பூமா சிணுங்கினாள்.

" இந்தத் தாவணி வேணுமா. இதே மாதிரி சரிகை, மயில் போட்ட தாவணி பாவாடதான் எடுத்துக்கிட்டு வந்துருக்கம். அப்பிடி இல்ல இதே தான் வேணுமின்னாலும் சொல்லு" எனப் பட்டென்று தோளில் போட்டிருந்த சைடு ஊசியை நீக்கியபடி, தாவணியை உருவியதும் பூமா பதறிவிட்டாள் " மலரு மலரு..."

இருவரும் சிரிக்கிறார்கள். இருந்தாலும் பூமாவின் முகத்தில் வலிந்து

அவிழ்க்கப்பட்ட மொட்டிதழின் விரிப்பு போல, சுரத்தில்லாத சிரிப்பு.

“ நீ வந்தப்பறந்தான் இந்தப் புள்ள சிரிக்குது” செல்லப்பாங்கி சொன்னாள்.

“ மஞ்சத்தண்ணி அவ தலையில எறங்கட்டும். அவள எப்பிடி சோடிச்சிக் கொண்டாரப் போறம் பாருங்க.” மலர் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே தெருவுக்குப் போக நடையால் சாரையைப் போல் போய்க்கொண்டிருந்தான் சதாசிவம். கண் இமைக்கும் நேரந்தான், அவன் முன் நின்றாள். “ என்னா மாமா, ஏங்கிட்ட பேசறதுக்கு ஒனக்கு வெக்கமா இருக்கா...” கைகளில் தாவணி முந்தானையைச் சுழற்றிக்கொண்டு மலர் துடுக்காகக் கேட்டதில் அவனுக்குத் திக்கென்று போய்விட்டது. “ அதுலாம் ஒண்ணுமில்ல. வேல அலைச்சல்ல அதான்...” நிமிர்ந்து கூடப் பாக்காமல் ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்தான். மலர் முகத்தில் ஏமாற்றம். கவனித்துக் கொண்டிருந்த பூமாவுக்கு அதைவிடவும் வருத்தம்.

“ வாம்மா மலரு...” தோட்டத்திலிருந்து உள்ளே வந்த ராசோக்கியம் தலைப்பாகையை அவிழ்த்துக்கொண்டே கேட்டார். வெற்றுடம்பில் வேர்வை வடிந்துகொண்டிருந்தது.

“ வர்றம் மாமா...” ரேடியோ சத்தத்தில் கேட்காதென்று கிட்டக்கப் போய்ச் சொன்னாள்.

“ அம்மாவும் நீனுந்தான் வந்துருக்கீங்க. அப்பா வர்லியா...” கேட்டுக் கொண்டிருக்கும்போது ஒலிபெருக்கிப் பாடல் நின்று வெறும் கொர் சத்தம் வந்துகொண்டிருந்தது. செட்டுக்காரன் ‘ கொர்’ரையும் நிறுத்தி வேறு பாட்டுக்கு மாறினான்.

ராசோக்கியத்தின் கேள்வியில் மலருக்கு பட்டென்று ஒரு வருத்தம் பரவியது.

“ என்னாம்மா அப்பிடியே நிக்கிற. அப்பா வல்ல...” ராசோக்கியம் திரும்பவும் கேட்டபோது ‘ ஈரமான ரோசாவே, என்னைப் பார்த்து மூடாதே’ பாடல் ஓடிக்கொண்டிருந்தது. “ பகல் ஷிப்ட்டு மாமா. தண்ணி ஊத்தறதுக்குள்ள வந்துருவாரு.”

“ கோயில் மோளத்துக்காரங்க வந்துட்டாங்க...” கனகராசு உள்ளே வந்து ஒரு பாயை விரித்துத் திண்ணையில் போட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் ஒலிபெருக்கியில் நாதஸ்வரமும் தவிலும் வேப்பங்குறிச்சியில் அதம் பரப்பிக்கொண்டிருந்தது.

தெருவே வீட்டிற்குள் நுழைந்துகொண்ட மாதிரி கூட்டம் திணறியது. இன்னும் ஊரை வேறு கூப்பிடவில்லை. ஊரும் வந்து சேர்ந்துகொண்டால் வீடு நெக்கு வாங்கித்தான் போகும். தார்ப் பாயை வாசல் கொள்ளாமல் விரித்து வைத்திருந்தார்கள். பழங்களும் துணிமணிகளுமாக தாம்பாலத்தட்டுகள் நிறைந்திருந்தன.

ரங்கநாது தாம்பாலத் தட்டுகளின் முன்னால் குந்தியிருந்தார். ஊரில் நல்லது கெட்டது என்றால் முதலில் ரங்கநாது, அப்புறம் கரி படாச்சி தான். பணத்தில், செல்வாக்கில் தனபால் பெருத்திருந்தாலும் எல்லாம் இவர்களுக்குப் பின்தான். “ நல்ல வெளக்க கொளுத்தியாந்து வையிங்க...”

ஒரு தாய்விளக்கும், இரண்டு குத்துவிளக்குகளுமாகக் கொண்டு வந்து வைத்து எண்ணெய் ஊற்றித் திரி பிழிந்து ஏற்றினாள் மலர். நெய்வேலியில் வேலை செய்கிற இடத்திலிருந்து தள்ளிக் கொண்டு வந்திருந்த குச்சி பல்புகள். நேரடியாய்க் கம்பிகளிலிருந்து கொடுக்கப்பட்ட இணைப்பில் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த வெளிச்சத்தில் மலரின் சரிகைகள் மின்ன, தேவதையாய் அடுத்தடுத்த விளக்குகளை ஏற்றிக்கொண்டிருந்தாள். விளக்குத் தண்டு நேருக்கு குனிந்த வாக்கில் சரிந்து விழுந்த கூந்தல் பின்னலில் பிசிறிய முடிகள் தீப ஒளியில் தங்க இழைகளாகத் தோற்றம் காட்டின. காதுத் தொங்கலுக்கும் பக்கப் பின்னலுக்குமாய் கோர்த்த மாட்டல் சரத்தின் பொன் முத்துகள் மின்னின. வந்தவர்கள் நின்றவர்கள் எல்லோர் கண்களுமே மலர்மீதுதான். ரங்கநாதும் ரசித்திருக்க வேண்டும். கரி படாச்சி யிடம் ரகசியமாகக் கேட்டார் “ ஏம் மூத்தவர, யாரு புள்ள அது?”

“ அது நம்ப பாஞ்சாலயோட அண்ண மொவ.”

“ யாரு... முதனையாரு சின்னத்தம்பி மொவளா.. கோரை வளந்தாப்ல பொட்டப் புள்ளிவோ பாத்தாப்ல பொம்மனாட்டி வுளா ஆயிடுதுவோப்பா...”

ஏகாலி அரசாயி நெல் கொண்டுவரச்சொல்லி நிரவி மேலே மாத்துத் துணியை விரித்துக்கொண்டிருந்தாள்.

“ ஏம்பா... ராசோக்கியம், நேரமாவுது பாரு. அப்பிடி இப்பிடின்னு சாங்கம் வளத்திக்கிட்டுப் பூடும். ஊரக் கூப்புட்டாச் சான்னு பாஞ்சாலைய பட்டுன்னு கேளு...”

“ தே பாக்கறன் மாமா...” சொல்லிவிட்டு வீட்டுக்குள் ஓடினார். உள்ளே பாஞ்சாலை எதையோ தேடிக்கொண்டிருந்தாள். “ ஊரக் கூப்புட யார்

போயிருக்கா...”

“ இனிமேதான் அனுப்பணும். ஒந் தம்பி பொண்டாட்டிய அனுப்பி வுடு...” திரும்பிக் கூடச் சொல்லாமல் மரப்பெட்டிக்குள் தேடிக்கொண்டிருந்தாள். “ இந்த சந்தனக் கிண்ணமும் பன்னீர் சொம்பும் எங்க போச்சின்னு தெரியில” புலம்பினாள்.

“ எம்மா போன வாரம் வீணங்கேணியாங்க வூட்ல, மஞ்சத் தண்ணின்னு வாங்கிக்கிட்டு போனாங்க...” மறைவிற்குள்ளிருந்து பூமா நினைவூட்டினாள்.

“ எங்கியாவுது குடுத்துட்டு இங்க பீறாஞ்சிக்கிட்டு கெட...” ராசோக்கியம் சொல்லியபடி வெளியே போனார்.

“ கசப்பு...” கிண்ணம், பன்னீர் செம்பை வாங்கி வர கனகராசுவின் சின்னமகளைக் கூப்பிட்டாள். “ எதுக்கு எக்கா கசப்ப கூப்புடுற...” அம்புசாட்சி கேட்டுக்கொண்டே வந்தாள்.

“ இந்த ரேடியாவ செத்த நிறுத்தச் சொல்லுங்க..” சலிப்பாய் உரக்கச் சொல்லிவிட்டு அம்புசாட்சி பக்கம் திரும்பினாள். “ இந்த சந்தனக் கிண்ணத்த வாங்கிக்கிட்டு வரச்சொல்லலாம்னு பாத்தன். சரி நீ என்னா பண்ற, அப்பிடியே வடக்குத் தெருவுலேர்ந்து ஊரக் கூப்புட்டுக்கிட்டு வரும்போது கையோட கையா வீணங்கேணியாங்க வூட்ல அந்த சந்தனக்கிண்ணம் இருக்கும், வாங்கிக்கிட்டு வந்துடு...”

“ சரி யெக்கா...” சொல்லிவிட்டு வந்தவள் வாசப்படிக்கு நேரே கதவைப் பிடித்துக்கொண்டு பட்டென்று தேங்கியபடி நின்றாள். “ யெக்கா...” ஏதோ சந்தேகமாய்க் கூப்பிட்டாள்.

“ என்னாடி...” கையிலிருந்த குண்டானை முந்தானையால் துடைத்துக்கொண்டே கொஞ்சம் கலவரமாய் கிட்ட வந்தாள். கதவு மறைப்பில் குந்தியிருந்த பூமாதேவியும் மௌனமாய் நிமிர்ந்தாள்.

அம்புசாட்சி ரொம்பவும் தயக்கமாய்க் கேட்டாள் “ ஊரு பூராவுந்தான சொல்லணும்?”

“ ஆமண்டி. நம்ப குடும்பத்துல தலப்புக் காரியம். ஊரு பூராவும் கூப்புட்டுத்தான ஆவணும்...” ஆர்வமாய்ச் சொன்னாள்.

“ இல்லக்கா. அந்தக் கூத்தாடி... அதான் அந்த சிகாமணி தம்பி வூடுலாம்..” தேக்கி நின்றாள்.

சிகாமணி என்கிற பேர் காதில் விழுந்ததும்தான், பட்டென்று பூமாவிற்குள் மின்னலாய் ஒரு பாய்ச்சல். உடம்பெல்லாம் பூரிப்பும் சடசடப்பும். ஏதோ தவறுதலாய் இதுவரை மறந்து இருந்து விட்ட ஒரு குற்ற உணர்வு. தகுந்த நேரத்தில் ஞாபகத்தில் வந்துவிட்ட குதூகலம். சில்லென்று ஒரு பரவசம். கம்மஞ்சோலைகள் காற்றில் ஆட கதிர்களெங்கும் குருவிகள் சிறகடிக்க... பறந்து கொண்டிருந்தாள்.

“ ஆமா, அது ஒரு சிக்கலு இருக்கு இல்ல... இரு மாமங்கிட்ட கேட்டுட்டு வர்றன்...” பாஞ்சாலை ராசோக்கியத்தைத் தேடிக் கொண்டு போனாள்.

பூமா குருவிகளை விரட்டிக்கொண்டு பறக்கிறாள். பறந்து கொண்டே விரட்டுபவளுக்கு கால் எப்படி இடறியது எனத் தெரியவில்லை. கம்மங்கொல்லையில் உருண்டு விழுந்தவள்... நிலைகுலைந்து குந்தியிருந்த காட்சிகள் வரிசையாய் ஓட எதிரே சிகாமணி. அப்புறம், குனிந்து பார்த்தால், கொத்தான் பிய்ப்பு. வெளிறிய மார்... நினைவுகள் சரசரவென நாவராஞ்சி முற்களாய் உரசிக்கொண்டு போயின. சிலுசிலுவென வலியும் பரவசமும் உடம்பெங்கும் ஊர அப்படியே குன்னிப்போய் சுவரில் சாய்ந்த நேரம், தொடையிடுக்கில் முன்பைவிட கசகசவெனப் பெருக்கெடுக்கிற ஈரம். அடிவயிற்றில் கூடுதலாய் மீண்டும் வலி.

“ பச்சத் தண்ணியே போதுமா... இல்ல வெதுவெதுன்னு கொஞ்சம் வெந்நீர் போடச் சொல்லுட்டுமா...” பூவாசம் சூழ வந்து குந்திக் கேட்ட மலர், அப்படியே திகைத்துப் போய்விட்டாள்.

தலைக்கு மேலாய் துயிலக்கழியில் குண்டு பல்பின் வெளிச்சம். சாய்ந்து குந்தியிருந்த அவளின் தலை லேசாய் நிமிர்ந்த நிலை. இமை தாழ்ந்த கண்கள். அசைவற்று அப்படியே சிலைபோல் பூமா. இமைகளுக்குள் கண்கள் ஊமையாய் அசைந்து கொண்டிருப்பது தெரிந்தது.

“ பூமா...” தோளைத் தொட்டாள்.

“ கம்பு... குருவி...” திடுக்கிட்ட பூமா உளறினாள்.

“ என்னாடி... கம்புங்குற குருவிங்கிற...” சிரித்தபடி மலர் கேட்கவும், பூமாவிற்குத் தாங்கமுடியாத வெட்கம்.

“ தோலே தோலு. அந்தக் கூத்தாடிப் பய வூடு அப்பறம் அவம் மச்சான் ஆட்டுக்காரன் வூடு. இந்த ரெண்டு வூட்டையும் வுட்டுட்டு மறுபடி எல்லார் வூட்டையும் கூப்புட்டுக்கிட்டு வா...” பாஞ்சாலை சொல்லிக்கொண்டே போனாள்.

பட்டென்று பூமாவிற்குள் குருவிகள் பறந்தோடி மறைந்தன. கம்மங்கொல்லை வெறிச்சோடிப் போனது.

மின்னலுக்கு ஆடை ஆபரணங்கள் பூட்டி, வாசலுக்கு அழைத்து வந்தமாதிரி பூமா. இலையும் சிம்புமாக நின்ற செடி, திடுமென பூவும் மொக்குமாகக் குலுங்கக் குலுங்க நிற்கையில், ஏற்படும் ஆச்சரியம் எல்லோருக்கும். நேற்றுவரை காலர்வைத்த ஆம்பளை சட்டையில் கீழ் வறும்பு நைந்த பழைய பாவாடையில் பார்த்தே பழக்கப்பட்ட பூமா பட்டுப்புடவையில் நூல் அளவும் குறையாத எடுப்பான ஜாக்கெட்டில் பளீரென்று புன்னகையோடு கூட்டத்தைப் பார்த்து கும்பிடு போட்டாள்.

“ அப்பிடியே மணப்பலவையில ஒக்காரச் சொல்லு...”

மின்னலை நோகாமல் குந்த வைத்த மலரோ நிலாதான். ஊரிலிருந்து தாவணியில் வந்தவள், பட்டுப்புடவைக்கு மாறி வனப்பு கூடியிருந்தாள். சின்னச் சின்ன அசைவிற்குக் கூட காதுத் தொங்கல்கள் ஆலவட்டம் போட்டு ஆடிக்கொண்டிருந்தன. நிலவுக்கும் மின்னலுக்கும் போட்டி நடப்பதாய் சபையில் குந்தியிருந்த எல்லோரும் மலரையும் பூமாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

“ நலுங்கு வைக்கிறவங்க வாங்க...”

முதலில் தங்கப்பழம்தான் போனாள். சந்தனம் தடவி, குங்குமம் வைத்து, அம்மிக்குழவியை ஒப்புக்கு முனைகளைத் தொடைமீது தொட்டு எடுத்து, வாய்க்கு வாழைப்பழம் கிள்ளிக் கொடுத்து ஒருமுறை ஏமாற்றி மறுமுறை கொடுத்து, அரிசியை அள்ளி வாழ்த்திப் போட்டு மாலையைக் கழற்றி, கிழக்கு பார்த்து செம்பையய்யனாரை வேண்டி கும்பிட்டு கழுத்தில் போட்டாள்.

“ மாமா, எங்க அம்மாவுக்கு தாம்பூலம் குடுங்க. மறந்துடாதீங்க.” தட்டில் வெற்றிலை பழம் வைத்துக்கொண்டு நின்ற சதாசிவத்தைப் பார்த்து பூமாவோரம் நின்ற மலர் சொன்னதும் எல்லோருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. சதாசிவம் என்ன சொல்லுவதெனத் தெரியாமல் தட்டை தங்கப்பழத்திடம் நீட்டினான்.

அடுத்தடுத்து நலுங்கு வைத்துக்கொண்டே இருந்தார்கள். உள்ளூர் கூட்டம் லேசாய் கலைகிற மாதிரியிருந்ததும் அம்புசாட்சி ஓடி படலைச் சாத்திக்கொண்டு மறித்தாள் “ இருங்க சாப்புட்டுட்டு தான் போவணும்.”

“ இல்ல புள்ள. கைய மோந்து வேண்ணா பாரன். வூட்ல சாப்புட்டுட்டுதான் வந்தன். ஒந்தன்னாண.”

“ வூட்ல புள்ளய ஏணையில போட்டுட்டு வந்துட்டன். போனாப்ல வந்துடறன்.”

மறிக்கவும், திமிறவுமாக சனங்கள் வெளியேறிக் கொண்டிருந் தார்கள். “ இந்தப் பசங்ககிட்ட இந்த முட்டாயிவுள குடுப்பா...”

“ அதுக்கு மின்ன வந்துருக்கிற எல்லாருக்கும் வெத்தல பாக்க குடு.” ரங்கநாது, கரி படாச்சி, வடிவேலு எல்லாரும் சரசரவென வெற்றிலை பாக்கு மிட்டாய் எல்லாமும் வைக்க, தாம்பூலத் தட்டை எடுத்து குந்தியிருப்பவர்களுக்கு கொடுக்கப் போனான்.

“ இந்தாடா சதாசிவம், மொதல்ல தாய்மாமனுக்கு குடுப்பா...”

பக்கத்திலிருந்த சின்னத்தம்பியிடம் கையைக் காட்டினார் ரங்கநாது. சின்னத்தம்பி கடும்புடியான போதையில் குந்தியிருப்பது தெரிந்தது. “ வாணாம் வாணாம். உள்ளூர்க்காரங்களுக்கு, போன வந்தவங்களுக்கு, மோளக்காரன் வண்ணாம் பரியாரி எல்லாருக்கும் குடுத்துட்டு அப்பறம் கடைசியா எனக்கு குடுக்கட்டும் அண்ண.”

வெகுநேரமாய் தட்டை நீட்டுகிறான் சதாசிவம். அவர் வெற்றிலை பாக்கை எடுக்கவில்லை. “ சின்னத்தம்பி, நாந்தான் தாய்மாமனுக்கு மொதல்ல குடுன்னுட்டன். அப்பறம் இதுல போயி குத்தம் கொற பாத்துக்கிட்டு இருக்கக்கூடாது.”

“ ஒங்க பேர்ல எள்ளுமொகனத்தினி கூட குத்தமில்ல அண்ண. ஏந் தங்கச்சி மொவனுக்குத்தான்...” வார்த்தையை வளர்த்துக் கொண்டிருந்ததும் எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

நேரே வேலையிலிருந்து வந்திருப்பார் போலும், போட்டிருந்த பேண்ட் சட்டையில் முதல் சுரங்கத்துப் புழுதி தெரிந்தது. தலை கொள்ளாத முடியில் ஆங்காங்கே ஒன்றிரண்டு நரை தென் பட்டாலும் பெயருக்கு ஏற்றமாதிரி சின்னத்தம்பியாய் மாப்பிள்ளை முறுக்கு குறையாமல்தான் இருந்தார்.

ஏதோ ஒப்புக்குத் தலைகாட்டிவிட்டுப் போகிறமாதிரி, தண்ணீர் ஊற்ற சற்று முன்னர்தான் வந்து குந்தினார். தங்கப்பழமும் எந்த காரியங்கவைக்கும் சின்னத்தம்பியை எதிர்பார்த்துச் செய்ய மாட்டாள். ‘ நா போயி பாத்துக்கிட்டு இருக்கன். முடிஞ்சா வா. இல்லின்னா நானே பாத்துக்கிட்டு

வந்தாலும் வந்துடுறன்’ எப்போதும் வழக்கமாய் சொல்கிற வாய் வார்த்தையை, இந்தக் காரியத்துக்கு அவளால் சொல்ல முடியவில்லை. ‘ நம்ப வூட்டுக் காரியம். நாம தான் மின்ன நின்னு காரியத்த பாக்கணும். தாய்மாமன்னு சொல்லிக்கிறதுக்கு நாமதான் இருக்கறம். இன்னைக்கு லீவ போடு. இல்ல நேரா வேலய முடிச்சிட்டு வேப்பங்குறிச்சிக்கி வந்து சேரு. எங்கையாவுது வழியில ஊத்திக்கிட்டு வந்து காரியத்த நங்கசோளம் பண்ணிடாத...’

ஊரே திரண்டு வந்து வாசலில் நின்றிருந்த அரிபிரியிலும் ராசோக்கியமும் பாஞ்சாலையும் வாய் நிறைய “ வா அண்ண...” “ வாங்க...” என்று கூப்பிட்டு உபசரித்துதான் குந்த வைத்தார்கள். ஆனால் இந்தத் தாம்பூலம் கொடுப்பதில்தான் சிக்கல் வந்துவிட்டது.

தாழ்த்தியே தாம்பாலத்தைப் பிடித்திருந்ததில் கை வலித்திருக்க வேண்டும். சதாசிவம் நிமிர்ந்தான். தங்கப்பழம் கண்ணால் எரித்து விடுகிறமாதிரி சின்னத்தம்பியைப் பார்த்தாள். மலருக்கு மாமன்காரன் சதாசிவம் கைவலிக்கத் தட்டைப் பிடித்துக்கொண்டு நிற்பது தாங்கவில்லை. “ மாமா, நீங்க எதுக்கு நீட்டிக்கிட்டே நிக்கிறீங்க. அடுத்து யாருக்காவது குடுங்க. அவுரு முறுக்கலாம் நா வூட்டப் போயி பேசிக்கிறன்.” பொரிந்தாள்.

“ வூட்டப் போயி என்னா பேசிப்ப...” சற்று கோவமாக சின்னத்தம்பி பேசிக்கொண்டு இருக்கும்போதே, கிடுகிடுவென பாஞ்சாலை கிட்டக்க வந்தாள். “ ஏந்திரிச்சி வந்து புள்ளைக்கி மால எடுத்துப் போடு அண்ண...”

சின்னத்தம்பிக்கு பட்டென்று முறுக்கு போன இடம் தெரியவில்லை. “ தே வர்றம்பா...” மறுப்பு ஏதும் சொல்லாமல் நேரே சனங்களை விலக்கிக்கொண்டு பூமாவிடம் போய் கழுத்தி லிருந்த மாலையை எடுத்து கிழக்கு பார்த்து கும்பிட்டார். “ எப்பா செம்பையனாரப்பா... உத்தண்டகாரா... ஏம் புள்ளைக்கி அதும் வாழுங்காலம் ஒண்ணும் லட்சமா இருக்கணும்.”

குனிந்து திரும்பவும் போடும்போது குப்பென்று போதை வீச்சம். பூமாவுக்கு குடலைப் பிரட்டுகிற மாதிரியிருந்தது. மென்று தின்று விடுகிற மாதிரி முறைத்த மலரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னார் “ ஒன்ன மாதிரி அப்பன எடுத்துப் போட்டன் கழுத்த முறிச்சங்கற மாதிரி பேசாது ஏந் தங்கச்சி புள்ள. அதான் ஒண்ணும் லட்சமா இருக்குணும்னு...”

“ எல்லாம் போதும். எட்டத்த வா.” கையைப் பிடித்து இழுக்காத குறையாய்த் தங்கப்பழம் அவரை எட்டக்க இட்டுக்கொண்டாள்.

நிகழ்வு நிறைவிற்கு வர, ரங்கநாது மனைவி காசாம்பு, தேவகி, மலர் மூன்று பேருமாய் ஆலங்கரைத்துச் சுற்றினார்கள். மலர், பூமாவை உள்ளே இட்டுக்கொண்டு போனாள். " இப்பிடி நில்லு பூமா... வெளிய பாய் கெடக்கு. எடுத்துக்கிட்டு வர்றன்." மலர் வெளியே ஓடினாள்.

தனித்த அறையில் பூமா. சுவரில் மாட்டியிருந்த கண்ணாடி யில் வட்ட முகம் தெரிய கிட்டக்கப் போனாள். அலங்கார ஆபரணங் களில் முகம் மின்னியது. புதிதாய்த் தோளுக்கு ஏறியிருக்கும் மாராப்பு. மாராப்பின் சரிகைப் பட்டையைக் கையால் தடவிப் பார்த்துக்கொண்டே கீழே இறக்கினாள். பொசுக்கென்று ஒரே நாளில் ஊட்டம் கொண்டுவிட்ட மாதிரியான மார்பு மேடுகளில் விரல்கள் படவும், பட்டென்று தீத்துளிரில் பட்டுவிட்ட சூடு உடம்பெல்லாம் பரவ, குருவிகள் பறக்க ஆரம்பித்தன.

" பூமா.. நம்ப நெலத்த எடுக்கப் போறானுவுளாம் பூமா. நம்ப வூடு வாசலப் புடுங்கப் போறானுவுளாம் பூமா..." வெட்டியது மாதிரி சுயநிலைக்கு வந்தாள். வெளியே காணிக்காரன் கணேசன் குரல்தான். தன்னைக் கடந்த போதையில் புலம்பிக்கொண்டே இருந்தான். " எல்லாம் எடுக்கறப்ப பாத்துக்கலாம். வந்து சாப்புடு மாப்ள..." ரங்கநாது சமாதானப்படுத்துகிற மாதிரி கூப்பிட்டார்.

தலையில் அடித்துக்கொள்ளாத குறைதான் செல்லப் பாங்கிக்கு. " நூறு காணி வைச்சிருக்கறவங்கூட ஊர்ல பேசாம இருக்கறான். இருக்கறத பூரா வித்துக் குடிச்சிட்டு இவம் படுத்தற பாடு..." கிட்டப்போனால், அடித்து விடுவான் என்று எட்டாகையில் நின்று புலம்பிக்கொண்டிருந்தாள்.

" சாம்பாரப் போடுங்க." " இங்காண்ட ரசம்," " வடையை எடுத்தா." " பூச்சி, எலய எடு" பந்தி பரபரப்பாய் நடந்து கொண்டி ருந்தது. சின்னத்தம்பி ஏதாவது சிக்கல் பண்ணிவிடுவாரோ என்கிற பயத்தில் கிட்டக்க நின்று ரங்கநாது பரிமாறிக் கொண்டிருந்தார் " தம்பிக்கி பாயாசத்த போடுங்க."

பூமா இருக்கிற உள்ளறையில் எதையோ வைத்துவிட்டு வெளியே வந்தான் சதாசிவம். எதிரே சந்தனக்கிண்ணம், பன்னீர் செம்போடு மலர். ஒரு கணம்தான், பட்டென்று யாரும் கவனிக்காத நேரம் பார்த்து விரல்களில் சந்தனத்தை எடுத்து சதாசிவத்தின் கன்னத்தில் பூசிவிட்டு பூடகச் சிரிப்போடு போனாள்.

*

16

“ ப டை நடத்திப் பாராண்ட இனத்தைச் சேர்ந்த நாமெல் லோரும் இன்று பஞ்சைப் பராரிகளாக கூலிக்குக் கையேந்து பவர்களாக, அரசியல்வாதிகளுக்குப் பல்லக்குத் தூக்குபவர்களாகத் தொடரும் இந்த அடிமை வாழ்வு இனியும் நமக்குத் தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரினம், கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில் மீண்டும் தலைநிமிர வேண்டுமானால் நமக்கான விகிதாசாரப்படி இட ஒதுக்கீடு தேவை. அதைப் பெற்றுத் தருவதற்கு நமக்கு இனமானக் காவலர் டாக்டர் அய்யாவை விட்டால் கண்ணுக்கு எட்டின தூரம் வரையில் வேறு எவரும் இல்லை. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் என வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப நம் அய்யாவின் தலைமை ஏற்போம். தொடர் சாலை மறியல் போராட்டத்தை வெற்றியடையச் செய்வோம். நமக்கான இட ஒதுக்கீட்டை வென்றெடுப்போம்.”

மாவட்டப் பொறுப்பாளர் குறள்மணியின் பேச்சில் சேத்தியாத்தோப்பு கலியபெருமாள் திருமண மண்டபமே அதிர்ந்தது. பேசி முடியும் வரை அறிவழகனும் சிகாமணியும் காத்திருந்தார்கள். மழை ஓய்ந்த மாதிரி கூட்டம் நிறைவுற்ற பிறகு மௌனம். நீரோட்டத்தின் எதிரே பாய்ந்து போகும் கெண்டைக்குஞ்சுகளாய், கலைந்த கூட்டத்தில் எதிர்த்து நீந்திப்போய் குறள்மணிக்கு ஒரு வணக்கத்தைப் போட்டார்கள்.

“ எப்பப்பா வந்தீங்க...”

“ ராமசாமி படையாச்சிய ஏமாத்தி காங்கிரஸ் கட்சியில சேத்து இந்த இனத்த ஏமாத்தன கதயப் பத்தி பேசிக்கிட்டு இருக்கறப்பியே வந்துட்டம் அண்ண.” அறிவழகன்தான் சொன்னான்.

உள்ளூர் தலைவர்கள்... எங்கும் மஞ்சள் துண்டும் பனியன்களு மாய்ச் சூழ்ந்துகொண்ட தொண்டர்கள்... எதையும் சரிவரப் பேச முடியவில்லை. “ சரி வாங்க. அறைக்குப் போயி பேசலாம்.”

திருமண மண்டபத்தின் மேலே அறை. சின்னதாய் ஒரு கட்டில். போட்டிருந்த சட்டையை அவிழ்த்து ஆணியில் மாட்டிவிட்டுக் குந்தினார். “

அப்பறம் நெய்வேலிக்காரன் என்னா சொல்றான்?" கூட்டத்தில் பேசிப்பேசிக் கெட்டித்துப் போயிருந்தது குரல். கனத்த உருவம். நல்ல உயரம். கருகருவென மீசை. அய்யனார் கருப்பு. நாற்பதைத் தாண்டிய வயது. எதிரில் நிற்பவர் யோசித்துதான் பேசவேண்டும் என்கிற மாதிரி ஒரு கம்பீரம்.

கடலூர் பக்கம்தான் சொந்த ஊர். குடும்பமே பெரியார் மீது பற்றுக் கொண்டது. ஈழ விடுதலைக்குத் தீவிர ஆதரவாளர். அதற்காகக் கூட்டங்கள், பேரணிகள் என்று முன்னிற்பவர். தமிழார்வம். பெயருக்கேற்றவாறு மேடைப்பேச்சிலும் நேர்ப்பேச்சிலும் திருக்குறள் மேற்கோள்கள் சரமாரியாய் வந்திறங்கும். அவரைப் போலவே அவரது தம்பி செல்வமணியும் டாக்டர் அய்யாவின் இந்த இட ஒதுக்கீட்டுப் போரில் ஒரு தளபதியாய் இருப்பவர்தான். இருந்தாலும் கீழ்மட்டத்தில் இறங்கிப் பேச, மக்களைத் திரட்ட, போராட, காவல்துறையினரை அதிரடியாய் எதிர்த்து நிற்க எனக் களப்பணியில் குறள்மணிக்கு அடுத்ததாய் அவர் வருவார்.

" நெய்வேலிக்காரன் நோட்டிஸ் குடுத்ததோடதான் இருக்கான்" அறிவழகன் சொன்னான். " நாங்களும் கையோட கையா ஊரக் கூட்டி ஒருநாள் கூட்டம் போட்ருக்கம்" சிகாமணியும் கூட சொன்னான்.

" இந்த நரி இருக்க... அது எரையப் புடிச்ச ஒடனே திங்காது. புழுக்க வைச்சி புழுக்க வைச்சித்தான் திங்கும். அதே மாதிரிதான் இந்த நிர்வாகம் பட்டுன்னு இன்னைக்கி நோட்டிசக் குடுத்து ஒடனே நாளைக்கு ஊர எடுத்துட மாட்டான். ஒண்ணொண்ணா குடுத்து, அதுஅதுக்கும் மக்கள்ட்டேர்ந்து என்னா ரியாக்ஷன் இருக்குன்னு பாத்துக்கிட்டுதான் அடுத்த கட்டத்துக்குப் போவான். சரி, கூட்டம் போட்டிங்களே சனம் என்னா சொல்லுது" கேட்டார்.

" சனம் என்னா சொல்லும் அண்ண. நாளைக்கி முட்டி மோதி பிரச்சன பெரிசா வந்து நிக்கிற நேரத்துல நெறைய அமைப்பு, கட்சிகள் வருவாங்க, பேசுவாங்க. ஆனா இன்னய சூழல்ல நம்பளப் பத்தி பேசறதுக்கு யாருன்னு யோசிச்சிதான், நம்ப அய்யாவ முழுமையா நம்புதுவோ. அதுவோ நம்பிக்கைக்கி பாதகம் இல்லாம நாம நடக்கணும். எதிர்காலத்துல பொறந்த மண்ணுல இருக்கற மரியாதையையும் நிம்மதியையும் முழுசாக் குடுக்க முடியிலன் னாலும் முடிஞ்ச அளவுக்குனாச்சும் கெடைக்கிறதுக்கு நாம செயல்படணும் அண்ண..." சிகாமணிக்கு சொல்லும்போது உணர்ச்சி வசப்பட்ட மாதிரி மொளுக்கென்று கண்களில் நீர்த்துளிகள் எட்டிப்பார்த்தன.

சங்கப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவை களினால் பொய்வழக்குகள் போடப்பட்டு சித்ரவதைகளையும் மக்களின் சீரழிவுகளையும் நேரில் பார்த்துப்பார்த்துப் பழகியவர் தான் என்றாலும் சிகாமணியின் கண்கலங்கலில் குறள்மணிக்கே என்னவோ போல் ஆகிவிட்டது.

“ தம்பி, இந்த காலகட்டம் அரசியல்லயும் சரி, பொருளாதாரத் திலயும் சரி நாம ரொம்ப பின்தங்கிக் கெடக்கற நேரம். எதயும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுங்கற மாதிரி செஞ்சிட முடியாது. உணர்ச்சி வசப்பட்டு ஏதாவது ஒரு காரியத்த செய்யப்போயி சிக்கல்ல மாட்டிக்கிட்டம்னா நம்பள வெளிய கொண்டாறதுக்கு அரசியல் அதிகாரத்துல மேல பெரிய ஆளுங்க யாரும் இல்ல. அதனால எதையும் நாம பொறுமையாத்தான் அணுகணும். மக்கள் கோபப்படலாம். உணர்ச்சிப் பிழம்பா நிக்கலாம். முன்னால நின்னு நடத்திக்கிட்டு இருக்கிற நாம நிதானமா இருக்கணும். உணர்ச்சி வசப்பட்டுகிட்டே இருந்தா பிரச்சினையை ஒரு கட்டத்துக்குமேல கொண்டுகிட்டுப் போவ முடியாது. நமக்கு மேல அய்யா இருக்காரு. அவுர வைச்சி இந்த விஷயத்த நம்ப சனங்களுக்கு எவ்வளவு சாதகமாப் பண்ண முடியுமோ அந்த அளவுக்கு நாம முன்னால இருந்து செய்வம்.” சிகாமணியைப் பார்த்து சாந்தப்படுத்துகிற மாதிரி சொன்னார்.

“ இல்ல அண்ண. இதுக்கு மேல நாம பொறுமையா இருந்தா வேலைக்கி ஆவாது அண்ண. தே தர்றன், தோ தர்றன்னு வூட்டுக்கு ஒரு ஆள் வேலைங்கிற வாக்குறுதிய நிர்வாகம் காத்துல வுட்டுட்டுக்கிட்டு இருக்கான். ஏகப்பட்ட ஊருவோ, குடும்பங்க இத நம்பி மண்ண வுட்டுட்டு இன்னைக்கு பிச்சை எடுக்காத கொறையா நிக்கிதுவோ. இதுல நாம எடுக்கிற முடிவும், திட்டமும் இதுவரைக்கும் இல்ல, இதுக்குப் பின்னால நெலம் பறி குடுக்குற மக்களுக்கும் ஒரு விடிவா இருக்கணும்...” அறிவழகன் சொல்லும்போது குரலில் உக்கிரம் தெரிந்தது.

“ அய்யாவ வைச்சி ஒரு பெரிய பேரணியாச்சும் இல்லன்னா ஒரு மாநாட்டயாச்சும் நடத்தி நிர்வாகத்துக்கு வலுவா ஒரு எச்சரிக்கைய குடுக்கலாம்னு பாத்தாலும், அய்யா சாலை மறியல் போராட்டத்துல ரொம்ப அரிபிரியா இருக்காரு. கடைசிக் கட்டமா அவுர பாத்துக்குவம். அதுக்கும் மின்ன பொங்கல் கழிச்சி ஜி.ஆர் டாக்டர்கிட்ட கலந்துபேசி நெய்வேலியிலியே ஒரு கண்டனக் கூட்டம் போடுவம். அது எப்பிடி இருக்குன்னு பாத்துக்கிட்டு அடுத்த கட்டம் யோசிப்பும்.”

குறள்மணியைப் பார்ப்பதற்கு வெளியே நிறையப்பேர் நின்றுகொண்டிருந்தார்கள்.

“ சரி அண்ண..” கிளம்பினார்கள்.

“ இந்த நெலம், வூடு பிரச்சினையில நம்ப சாலை மறியல் போராட்டத்த வுட்டுடாதீங்க. இது அய்யாவோட காலம். இந்தக் காலத்துலகூட நாம முழிச்சிக்கில்லன்னா எந்தக் காலத்திலியும் முழிச்சிக்க முடியாது. இந்த மாத ‘ கனல்’ல கூட அய்யா கட்டுரை எழுதியிருக்காரு. படிச்சிப் பாருங்க. சாலை மறியல் போராட்டத்த மக்கள்கிட்ட புரிய வையிங்க..”

*

17

மஞ்சள் வண்ணம் பூசி நிற்கிற சற்று பெரிய அறைதான் நெய்வேலி நகர வன்னியர் சங்கத் தலைமை அலுவலகம். கடலூர் சாலையில் போகிற வாகனங்களின் ஓயாத புழுதி வாரி அடிப்புகளில் வாயிலில் தொங்கவிடப்பட்டிருந்த திரைச்சீலையின் மஞ்சள் நிறம் மங்கியிருந்தது. ஓரத்திலிருந்த புளியமரத்தின் நிழலில் செத்தைகள் இறைந்து கிடந்தன.

உள்ளே தெற்குவெள்ளூர் சங்கக் கிளைத்தலைவர் உத்தண்ட ராயர் குந்தியிருந்தார். முன்னே ‘ தினப்புரட்சி’ விரிக்கப்பட்டு, கையை ஊன்றி ஊனாடிப் படித்துக்கொண்டிருந்தார். ஐம்பதைத் தொடும் வயது. ஆரம்பகாலத்திலிருந்து அய்யாவின் மீது பற்று. நேற்று வந்த இளைஞர்களுக்கு இணையாக, உற்சாகமாகக் களப்பணியாற்றக் கூடியவர். இதனால் அறிவழகனுக்குக் கூடுதல் பிரியம் அவர்மீது. அவர் ஊரின் மீதும் இந்த நெய்வேலிக் கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறது. எடுப்போலை தெற்கு வெள்ளூருக்கும் தான்.

திரைச்சீலை விலக்கப்பட்டு தினப்புரட்சியின் மீது துலாம் பரமாய் வெளிச்சம் பாய்ந்ததும் உத்தண்டராயர் நிமிர்ந்தார். “ வாப்பா அறிவு... எங்க போய்ட்டு வர்றீங்க.” வாய் நிறையக் கூப்பிட்டார்.

“ சேத்தியாதோப்புக்கு குறள்மணி அண்ணனப் பாக்கப் போயிருந்தம்...” சிகாமணி சொன்னதும் உத்தண்டராயருக்கு பக்கென்று போய்விட்டது. “ இன்னைக்கா சேத்தியாத்தோப்புக் கூட்டம்?” மறந்துபோனதிற்கு மெய்யாலுமே வருத்தப்பட்டார். சற்று இடைவெளியில் திரும்பவும் அவரே கேட்டார் “ அண்ணன் நம்ப விஷயத்த பத்தி என்னா சொன்னாரு?”

“ என்னா சொன்னாரு, நிர்வாகத்தோட எதிர்த்து நிக்கணும்னா மக்கள தெரட்டுணுங்கறாரு. பொங்கல் கழிச்சி கண்டன ஆர்ப்பாட்டம் ஒண்ணு போடணும்னு சொன்னாரு. அப்பறம் ஒங்க ஊரு நெலவரம் எனுமா இருக்கு..” அறிவழகன் கேட்டான்.

“ அடுப்புல எரியிற கொள்ளியில அடிக்கொள்ளி நுனிக் கொள்ளி எதுங்கறமாதிரி, இதுல ஒங்க ஊரு என்னா கெடக்கு எங்க ஊரு என்னா கெடக்கு. தெக்கு வெள்ளூர் வேப்பங்குறிச்சி யோட தாய்க்கிராமம். இங்க

நீங்க என்னா முடிவு எடுக்குறீங்களோ அதான் எங்க முடிவும்...” லேசாய் உணர்ச்சிவசப்பட்டவராய் உத்தண்டராயர் பேசினார்.

“ நாம எந்த அளவுக்கு மக்களத் தெரட்டி எதுத்து நிக்கிறமோ அந்த அளவுக்குப் பலன் இருக்கு. இதுல கொஞ்சம் அசந்தாலும் வழக்கம்போல நிர்வாகம் கூழ ஆத்திடும்.” சிகாமணி தீர்மானமாகச் சொன்னான்.

வாசலில் வெளிச்சம். திரும்பினார். விருத்தாசலத்திலிருந்து சுந்தரமூர்த்தி வந்திருந்தார். “ வாங்க அண்ண....” அறிவழகனும் சிகாமணியும் எழுந்து வரவேற்றார்கள். பையிலிருந்து கத்தையாய் துண்டறிக்கைகளை எடுத்து நீட்டினார். அறிவழகன் வாங்கிப் பார்த்தான். ‘ இட ஒதுக்கீடு ஏன்? விருத்தாசலத்தில் கருத்தரங்கு. ஜி.ஆர். தலைமை. கீரன் சிறப்புரை’. “ அவசியம் எல்லாரும் வாங்க...” கூப்பிட்டுக்கொண்டே குந்தினார். “ அப்பறம், நெய்வேலி சேதி எதோட இருக்கு?” அக்கறையாய் விசாரித்தார்.

“ நோட்டிஸ் குடுத்ததோட இருக்குது. இந்தத் தடவ ஏமாந்துடக் கூடாது அண்ண. வூட்டுக்கு ஒரு ஆளுக்கு வேல. இதுல உறுதியா இருந்து போராடணும். அதுக்கு ஒங்களமாதிரி சங்கத்துல முக்கியமான வங்க உதவியா இருக்கணும். குறள்மணி அண்ணந்தான் கிட்ட இருந்து பாக்கறாரு.” அறிவழகன் கொஞ்சம் இறங்கிப்போய் பேசினான்.

“ இல்லப்பா... அய்யாவும் இத உறுதியாச் சொல்லிக்கிட்டுதான் இருக்கறாருன்னு ஜி.ஆர். சொன்னாரு. ஆனா சாலைமறியல் போராட்டம் குறுகல்ல இருக்கற நேரம் பாத்து நிர்வாகம் இப்பிடி நோட்டிச குடுத்துருக்கான். இருக்கட்டும், அதனால ஒண்ணும் கவலைப்பட வேணாம். நம்பளா நிர்வாகமான்னு இந்தத் தடவ பாத்துடுவம் வுடு...” சுந்தரமூர்த்தியின் பேச்சு ரொம்பவும் உற்சாகப்படுத்துகிற மாதிரியிருந்தது.

கிளம்பினார்கள். “ சரி வர்றன் அண்ண...”

சிகாமணியைப் பார்த்துக் கேட்டார். “ ஒங்க அப்பா எப்பிடி இருக்காரு சிகா. செல்வராசு சமாவுல அவுரு இருக்கறப்ப எங்க ஊர்ல கூத்து. நளாயினி நாடகத்துல, கை காலு கொறஞ்ச மாதிரி வருவாரு பாரு. அப்பிடியே ரெத்தக்கண்ணீர் நாடகத்துல எம்.ஆர் ராதா கெட்டாரு.”

இந்தத் தெருக்கூத்தைத் தவிர தன் அப்பனிடம் சொல்லிக் கொள்ள எதுவுமில்லையென்கிறமாதிரி சிகாமணியுள் ஒரு அலட்சியமும் பெருமூச்சும்.

திடுமென ஏதோ யோசனை வந்தவராய் சுந்தரமூர்த்திக்குள் ஓர் அவசரமும் பரபரப்பும். “ சொல்ல மறந்துட்டம்பா. தெருக்கூத்து ஆடறவங்கள்ளாம்

சேந்து செயவர்த்தனாவுக்கு எதிரா வேடப்பர் கோயில்ல சீட்டி எழுதிக் கட்டி, சேவல் குத்தற போராட்டம் வைச்சிருக்காங்க போல்ருக்கு. நோட்டிஸ்ல ஒங்க அப்பா பேரு கூட இருந்தமாதிரி ஞாபகம்...” சொன்னதோடு அல்லாமல் தேடி, பையில் மடங்கிக் கிடந்த ஒரு துண்டறிக்கையை எடுத்து நீட்டினார்.

“ சீட்டு எழுதிக் கட்டி சேவல் குத்தற போராட்டமா... வித்தியாசமா இருக்கே.” குறள்மணியை போலவே எப்போதும் ஈழம், தமிழ்தேசியம் என ஆர்வமாய் இருக்கும் அறிவழகன் அதிசயித்தபடி சிகாமணியிடம் நீட்டிய துண்டறிக்கையை வாங்கிப் பார்த்தான்.

‘ தெருக்கூத்துக் கலைஞர்கள் சங்கம், விருத்தாசலம் - கிளை’ சார்பில் நடத்தும் - ‘ ஈழத்தமிழர்களைக் கொன்றுகுவிக்கும் கொடுங்கோலன் செயவர்த்தனாவை மாறுகால் மாறுகை வாங்கித் தண்டிக்கும் பொருட்டு, அருள்மிகு வேடப்பர் கோயிலில் சீட்டு எழுதிக் கட்டி, சேவல் குத்தும் போராட்டம்.’

தலைமை: முதுபெரும் தெருக்கூத்துக் கலைஞர் திரு. க.செங்கல்ராவு. வேப்பங்குறிச்சி.

அறிவழகனால் நம்ப முடியவில்லை. “ என்னடா சிகாமணி, ஒங்க அப்பா ஏதோ கூத்து ஆடுவாரு போவாருன்னுதாம் பாத்துருக்கன் கேட்ருக்கன். இங்க என்னடான்னா கூட்டத்துல தலம தாங்கற அளவுக்கு இம்மாம் பெரிய ஆளா இருக்காரு” வியந்தபடி சொன்னான்.

“ பெரிய ஆளா சின்ன ஆளாங்கறதுலாம் தெரியாது அண்ண. ஆனா ஈழப் பிரச்சினைய பத்தி ஒரு பாட்டு பாடுவாரு பாரு, அப்பிடியே கண்ணுல தண்ணி பொதுக்குன்னு வந்துடும்.” வெளியே காட்டிக் கொள்ளமுடியாத பெருமிதத்தோடு சொல்லிக் கொண் டிருந்தவன், உடன் பட்டென்று இறங்கிச் சலிப்பாகச் சொன்னான்.

“ என்னாத்த பாடியும் என்னா பண்றது அண்ண. வித்தைக் கிறுக்கு மாதிரி குடிச்சிட்டு வந்து ராவுடி பண்றதும், சண்ட வளத்தறதும் தான் தாங்கமுடியாத தலைவலியா இருக்குது.”

“ வுடுப்பா. கலைஞர்கள்லாம் அப்பிடிதாம் இருப்பாங்க. நாம்ப அவுங்க கிட்ட இருக்குற கொறையதான் பெரிசிபடுத்திப் பாக்கறம தவிர, நிறைய பாக்கறதும் இல்ல பாராட்டி நாலு வார்த்த சொல்றதும் இல்ல. அது கெடக்கட்டும். நாள மறாநாள் தான் நிகழ்ச்சி. ரெண்டு பேருமா வாங்களன்”

சுந்தரமூர்த்தி கூப்பிட்டார்.

சிகாமணி மறுத்துவிட்டான். " வேணாம் அண்ண. அவுருக்கும் நமக்கும் அதுவும் ஒரே எடத்துல... ஒத்துவராது. அறிவழகு அண்ணன் வருவாரு, பாத்துக்கிட்டு வாங்க..."

கிளம்பி வெளியே வந்தார்கள். வலது பக்கம் திரும்பினால் வேப்பங்குறிச்சி சாலைதான். நடந்து கொண்டிருந்தார்கள்.

அறிவழகனும் சிகாமணியும் பள்ளிக்கூடத்தைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கும்போது எதிரில் அதம்புகிற மாதிரி புல்லட் சத்தம் கேட்டதும் நிமிர்ந்தார்கள். கண்ணைப் பறிக்கிற வெள்ளை வேட்டியும் சட்டையும். பெரும் தோரணையாக தனபால் வந்து கொண்டிருக்கும்போதே சிகாமணி முக்கினான். " க்கும். நெல்ல மரத்துல பில்லொளி பாஞ்ச மாதிரி ஊர்ல இவன் ஒருத்தன்..."

ஒதுங்கித்தான் நடந்தார்கள். இவர்கள் நேருக்கு வேகத்தை மட்டுப்படுத்தி புல்லட்டை நிறுத்தினார். " என்னாப்பா ரெண்டு பேரும் எங்க போய்ட்டு வர்றீங்க..." குரலில் கரிசனம் தென்பட்டது.

அறிவழகனின் ரகசிய கையமர்த்தலையும் மீறி வெடுக்கென்று சிகாமணி பேசினான் " இதுலாம் ஒங்களுக்கு எதுக்கு. நாங்க எங்க சங்கக் கூட்டத்துக்குப் போய்ட்டு வர்றம்."

" நானும் ஒங்களவந்தாம்பா. எனுமோ அண கழிஞ்சாப்ல வுட்டுட்டுப் பேசுறீங்க." குரல் ரொம்பவும் நெருக்கமாக, எதையோ குறி வைத்தமாதிரி இருந்தது. இறங்கி மிகச்சிரமப்பட்டு வண்டியைத் தூக்கி இழுத்து நிறுத்தினார். வேட்டியை உதறியபடி பெட்டியைத் திறந்து, இரண்டு காலண்டர்களை எடுத்தார். தனலட்சுமியின் கைகளிலிருந்து பொற்காசுகள் கொட்டிக்கொண்டே இருக்கிற **1987**ஆம் வருட காலண்டர். கீழே ' தனபால் அண் சன்ஸ்.' ' நெய்வேலி நிலக்கரி நிறுவன அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தக்காரர்!' ஓரத்தில் கும்பிட்டுக் கொண்டிருந்த தனபால் நேரில் பார்ப்பதைவிட இள வயதாகத் தெரிந்தார்.

ஆளுக்கொன்றைக் கொடுத்தபடி சொன்னார். " இந்த வருசத்தி லியாவுது ஒங்குளுக்கு புதுவாழ்க்க, வாய்ப்பு கெடைக்கிட்டும்."

" இருக்குற வாழ்க்கையையே நெய்வேலிக்காரன் புடிங்கிக்க நிக்கறான். இதுல புது வாழ்க்க எங்க வந்து கிழிக்கப்போவுது..." சிகாமணிக்கு எப்பவும்

துடுக்கான வாய். பட்டுத் தறிக்கிற மாதிரி சொன்னான்.

“ அத பத்திதான் ஒங்ககிட்ட தனியாப் பேசணும்னு பாக்கறன். ஆளுவோ சிக்கவே மாட்டங்குறீங்க. நல்லவேள இன்னைக்காவுது பாக்க முடிஞ்சித. ஒண்ணுமில்ல. ந ம் ப ‘ பிள்ளை’ காண்ட்ரேட்ல சூப்ரைசர் வேலைக்கு ரெண்டு வேக்கன்சி இருக்குது. பிள்ளை காண்ட்ரக்ட பத்தி ஒங்களுக்குத் தெரியும். பிள்ளைகிட்ட சேர்றது நேரா என்எல்சியில சேர்ற மாறி. டேரைக்டா பிற்காலத்துல நிர்வாகம் ஆள எடுத்துக்கும். நா யோசிச்சி பாத்தன். பட்டுன்னு ஊர்ல ஒங்க ரெண்டு பேரு மேலதான் எனக்கு யோசன ஓடிச்சி. நம்ப சொந்தக்காரப் புள்ளிவுளா வேற இருக்கீங்க...”

சொல்லிக்கொண்டே போனவரை இடையில் வழிமறித்து அவர் தொனியிலேயே கையை ஆட்டி சிகாமணி பேச ஆரம்பித்தான் “... நம்ப சாதிக்காரப் பசங்களா வேற இருக்கீங்க. ஒங்குளுக்கு ஒரு ஒபகாரத்த செஞ்சி வைச்சா, ஊருக்கே உபகாரம் செஞ்சமாதிரி. அதனால நாளைக்கே, ஊர்ல கூட்டம் போடறது, ஓசன சொல்றது, சங்கம் எல்லாத்தையும் ஒழிச்சித் தலமொழுவிட்டு, ஒழுங்கா ஒங்க காலடியப் பாத்துக்கிட்டு வேலைக்கிப் போறதப் பாருங்க.”

அவரைப் போலவே உடல்நெளிவுகளுடன் பேச ஆரம்பித்த உடனே வெக்கி விளாங்காய் தின்றமாதிரி தனபால் பேச்சை நிறுத்திவிட்டார். தொடர்ந்து சிகாமணி பேசி முடித்ததும் அவர் முகத்தில் ஈயாடவில்லை.

அறிவழகன் சற்று காட்டமாகக் கேட்டான் “ இப்பிடிலாம் பேசி அசமடக்கச் சொல்லி ஒங்களுக்கு மேல ட்ரெய்னிங் குடுத்துருக்காம் போல்ருக்கு....”

“ அதுக்கில்லப்பா. எம்மாம் பெரிய நிர்வாகம், அரசாங்கம் இதலாம் எதுத்துக்கிட்டு நாம என்னா பண்ணமுடியும். ஒத்துக் கிட்டுப் போனா பின்னம் நாலு ஒதவிய கேக்கலாம்னு...” தனபாலுக்குக் குரல் பிசிறியது.

“ நாலு ஒதவிங்கிறது ஒங்களுக்கா, இல்ல ஊரு சனங்களுக்கா. ஒண்ணும் எங்களுக்கு ஒபகாரம் பண்ணவேணாம். போராட மக்கள் தயாரா இருக்காங்க. நாங்களும் வெட்டியா ஊரச் சுத்திக்கிட்டு இருக்கம்னு ஒங்ககிட்ட வந்து கையப் பேஞ்சிக்கிட்டு நிக்கில. நீங்க போயி வேலயப் பாருங்க.”

சொல்லிவிட்டு நிற்காமல் நடந்துகொண்டிருந்தார்கள். “ தூண்டி முள்ளுல புழுவ மாட்டிக் கெடாசறமாதிரி, நிர்வாகத்துல ஆள் தயார் பண்ணிட்டாம் பாரு.” அறிவழகன் இன்னும் ஏதேதோ சொல்லிக்கொண்டு வந்தான்.

பின்னால் கோபத்தில் உறுமி, புல்லட் தடதடத்துப் போய்க் கொண்டிருந்தது.

*

18

கம்மாக்கட்டையில் செங்கல்ராவு வழக்கம்போல் போதை யில்தான் குந்தியிருந்தார். சிகாமணி மட்டும் என்றால்கூட ஏதாவது அலப்பியிருப்பார். அறிவழகன் கூட வந்ததும் சற்றே சுதாரித்து கேட்டார் " அப்பறம் அய்யா என்னா சொல்றாருப்பா?"

" அய்யா சொல்றது கெடக்குட்டும். தெருக்கூத்துக்காரங்க நடத்தற போராட்டுத்துக்குலாம் தலம தாங்கப் போறீங்க. ராவுன்னு இல்லாம பகல்னு இல்லாம அய்யா நமக்காக பாடுபட்டுக்கிட்டு கெடக்கறாரு, நம்ப சங்கத்து கூட்டத்துக்கு மின்னாலகூட வந்து நிக்க மாட்டங்குறீங்க..." வருத்தமாய்ச் சொல்வதுபோல் பொய்முகம் காட்டிப் பேசினான் அறிவழகன்.

பட்டென்று அவர் முகத்தில் மலர்ச்சி. திக்காலுக்கொன்றாய் நீட்டிக்கொண்டிருந்த முடியைக் கோதியபடி " அதுவாப்பா... அவனுவோ சும்மா ஒண்ணும் போடுல. இருக்கறதுல கொஞ்சம் விஷயம் தெரிஞ்ச பெரிய தல நாந்தான். இந்தச் சீட்டு எழுதிக் கட்றது குறிப்பா சேவல் குத்தறதுங்கறதுலாம் சிக்கலான சமாசாரம். போலிசு, கேசுன்னு கூட போவும். தலமானா நிக்கறவனத்தான் மொதல்ல புடிப்பான். பொசுக்குன்னு உள்ள கொண்டுபோயி வைச்சிட்டான்னா கூத்து ஆடற பொழப்புப் பூடும்னு கணக்குப் பண்ணித்தான் கூத்த வுட்டு நின்னு வெகுகாலம் ஆன என்ன கொண்டுபோயி தலப்பு வேஷம் கட்றமாதிரி மின்னால நிறுத்த றானுவோ. நானும் சரி வுடு, அப்பிடியே ஒரு தற்கொறச்ச நடந்தாலும் தூக்குலியா கொண்டுபோயிப் போட்டுடுவானுவோ. அப்பிடியே போட்டாலுந்தாம் போடுட்டுமே. எலங்கையில அம்மாம் மக்க மனுசாளு மாண்டு மடிஞ்சி போவக்குள்ள நம்ப உசுரு மட்டும் என்னா பெரிய மயிரு உசுரு. போடுங்கடான்னு... வுட்டுட்டன்." சொல்லி முடித்தவர் ஞாபகம் வந்தவராய் திரும்பவும் தொடர்ந்தார்.

" அப்பறம் சந்தடி சாக்குல நீ வேற ஏம்ப்பா... நீங்க போட்ட சங்கக் கூட்டத்துக்கு எதுக்கு வராத வுட்ருக்கன். அப்பியே ஒரு நாளு கூத்து சம்பளத்த புக்காம கொண்டாந்து நன்கொடன்னு குடுத்தன். என்னா நீங்கள்லாம் கீழ்ங்கன்னுவோ தல எடுத்தப்பறம் நமக்கு என்னா நாட்டாமன்னு ஓரத்துல ஒதுங்கி குந்தியிருப்பன். மத்தபடி நா வராம எந்தக்

கூட்டத்த நடத்தியிருக்கீங்க... சரி நாளைக்கு விருத்தாசலம் வந்துடுங்கப்பா.”

‘ மாறு காலு அங்க மாறுகையி

அப்பா வேடப்பரே

அய்யா வேடப்பரே - நீ

வாங்க வேணும் அந்தச் சிங்களன.

செய்யாத அந்த சிஷையெல்லாம்

அப்பா வேடப்பரே

அய்யா வேடப்பரே - செய

வர்த்தனுக்கு நீ செய்யவேணும்”

உச்சத்தில் எகிறி எகிறிப் பாடுகிற குரல்கள். ஓங்கி ஒலிக்கிற பம்பைகள். பெருங்குரலில் கிளம்புகிற பின்பாட்டு. திடுமென விருத்தாசலம் பாலக்கரையே திகைத்துப் போய் நிற்கிறமாதிரி சூழ்ந்துகொண்ட பெருங்கூட்டம். இடையே ஈழத்தின் இன்னல் களை விளக்கியபடி போக ஏதுவாக, முன்னால் டயர்வண்டி, மைக்செட் கட்டப்பட்டு போய்க்கொண்டிருந்தது. அதில் தாள மத்தாளக் கட்டைகளை வைத்து புலியூர் அரிகிருஷ்ணன் அடித்துக் கொண்டிருந்தார். போராட்ட ஊர்வலம் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

செயவர்த்தனாவை தண்டிக்கும் விதம் சீட்டு எழுதிக்கட்டி, சேவல் குத்தும் நிகழ்வை உள்ளடக்கிய திரைச்சீலையை முன்னே பிடித்தபடி இருவர் நிற்க ஒட்டி ஞானமேட்டு செல்வராசிலிருந்து வேகாக்கொல்லை சின்னதுரை, மேல்பாதி மாணிக்கம், பொன்னங் குப்பம் சக்கரை, குறவன்குப்பம் சடகோபன் மற்றும் அவரவர் சமாக்கள் எனத் திரளாய் தெருக்கூத்துக் கலைஞர்கள். தம் பங்கிற்கு ஏதாவது இந்த ஈழத்தமிழர்களுக்கு உதவமுடியாதா என்ற ஏக்கத்தோடு நகரும் அவர்களின் முகத்தில் கண்விழித்துக் கூத்தாடிவிட்டு அரிதாரத்தை அழித்த கையோடு வந்திருந்த அயர்வும் சோர்வும் தெரிந்தது.

ஊடே மையமாக, அடிக்கிற நிறத்தில் ஒரு சட்டையைப் போட்டுக்கொண்டு, தலைக்கு தாளாரமாய் எண்ணெயைக் காட்டி, தோளில் காவியாய் கனத்த துண்டைப் போட்டுக்கொண்டு வெள்ளை வேட்டியில் கூடுதல் ஆர்வத்துடன் செங்கல்ராவு நடந்து கொண்டிருந்தார்.

அனைத்துக் கட்சிகளுக்கும் அமைப்புகளுக்கும் பேதம் பாராமல் அழைப்புக் கொடுக்கப்பட்டு, பெரும்பாலும் வந்திருந்தார்கள். ஜி.ஆர். டாக்டர் ஒரு கல்யாணத்திற்குப் போக வேண்டியிருந்ததால் நகரப் பொறுப்பாளர் சுந்தரமூர்த்தியை அனுப்பி வைத்திருந்தார். அவருடன் வந்துகொண்டிருந்த அறிவழகனைப் பார்த்து லேசாய் வரவேற்புத் தலையாட்டிவிட்டு செங்கல்ராவு ஆவேசமாய்ப் பின்பாட்டில் போய்க்கொண்டிருந்தார்.

கூட்டத்தைவிட கூடுதலாய்ச் சுற்றி வளைத்தபடி வந்து கொண்டிருந்தது காவல்துறை. என்னவோ இவர்கள்தான் ஈழத்திற்கு ஆயுதம் கடத்துபவர்கள் போன்று குறிவைத்து உன்னிப்பாய் கவனித்துக் கொண்டுமிருந்தது.

அறிவழகன் முன்னால், கழுத்தில் கேமராவோடு இரண்டு பத்திரிக்கைக்காரர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் சற்றும் இதில் விருப்பமில்லாதபடி வெறுப்பாய் மெல்ல பேசிக்கொண்டே போனான். “ இதுலாம் எந்தக் காலத்துல போயி சீட்டு எழுதிக் கட்றன், சேவல் குத்தறன்னு. மடத்தனமா இருக்கு. வேடப்பரு இனிமே குதிரையில ஏறி கடலத் தாண்டி, மாறுகால் மாறுகை வாங்கப் போறாரு...”

சுந்தரமூர்த்திக்கு எலிக் காது. ஒரு எட்டு முன்னே வைத்து அவர்களிடம் சொன்னார் “ வுடுங்கப்பா. அவுங்கவுங்களுக்குன்னு ஒரு நம்பிக்க இருக்கு. அதோட வேடப்பரு போவாரா, கேப்பாராங்கறது முக்கியமில்ல. மக்கள் மத்தியில எடுபடறமாதிரி ஈழத்தமிழருக்கு ஆதரவா ஒரு போராட்ட வடிவம். இதுல போயி...”

கேட்டுக்கொண்டு வந்த அறிவழகன் இடையில் புகுந்தான். பம்பை சத்தத்தையும் மீறி காட்டமாக உரைக்கிறமாதிரி சொன்னான். “ எந்த நடிக எவங்கூடப் போறான்னு கிசுகிசு எழுதற பேப்பருக்கு வேல பாக்குறவன்... எந்த போலிசுகாரனுக்கு டீ வாங்கி குடுத்தா எஃப். ஐ.ஆர் காப்பிய குடுப்பான் கண்ணு காது வைச்சி கத கட்டி எழுதி காசி பாக்கலாம்ங்கற பத்திரிக்கக்காரனுவுளுக் குலாம் என்னா கெடக்கு. நீங்க வாங்க அண்ண...”

மூஞ்சியில் அடித்தமாதிரி போய்விட்டது; பட்டென்று புகைப்படம் எடுக்கிற மாதிரி எதிரில் போய் வழிமறித்தபடி படம் காட்டிக் கொண்டிருந்தார்கள் பத்திரிக்கையாளர்கள்!

பெரிய சேவல் ஒன்றின் கால்களைப் பிடித்தபடி தலையில் பூசைக் கூடையோடு கட்டியக்காரன் வேஷங்கட்டும் அண்ணங் காரன் குப்பம்

சடையவேல் பாட்டுப் பாடவும், எதிர்ப்பாட்டுக்கு பெண்வேஷம் கட்டும் பொன்னங்குப்பம் சக்கரையும் ஆயிப் பேட்டை வெங்கடேசனுமாய் தர்க்கமாய் பாட்டுப் பாடியபடி வந்தனர். கூட்டம் பாலக்கரை முடக்குத் திரும்பியது. சற்றே ஆசுவாசப்பட்டது மாதிரி பம்பையும், பாட்டும் இடைவெளி கொடுத்தது.

பட்டென்று முன்னே போன மேல்பாதி மாணிக்கம் வாத்தியர் கடைத்தெருவிலிருந்த கூட்டத்தைப் பார்த்து இதுதான் சரியான தருணம் என்கிறமாதிரி திரும்பினார். " செங்கல்ராவு அண்ண, அந்த கொஞ்சிக்குப்பம் தங்கராசு பாட்ட எடுத்து வுடுங்க..."

எல்லோருக்குமே அது மிகவும் சரியாகப் படவும், திரும்பி அவரைப் பார்த்தார்கள். செங்கல்ராவு மறுப்பேதும் சொல்லாமல் கையைக் குவித்து வாயருகில் வைத்து செருமியபடி டயர் வண்டியில் குந்தியிருந்த மத்தாளக்காரனைப் பார்த்தார். அவரும் தயார் என்கிற மாதிரி மத்தாளக்கட்டையில் இரண்டு அடி அடித்து ஒரு குத்து குத்தி, " ங்கூம்..." என்று ஒரு இழுப்பு இழுத்தார். செங்கல்ராவு ஆர்வமாய் அவரைக் கவனித்தபடியே வந்து கொண்டிருக்கும் அறிவழகனைப் பார்த்துச் சிரித்தபடி தொகையறாவில் இறங்கினார்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே

முன்தோன்றி வந்தாய் மூத்த குடிமகனே!

மூவேந்தர் ஆட்சி செய்து

மூன்று சங்கம் அமைத்து

முத்தமிழைத் தான் வளர்த்தாய்! தலைமகனே! தமிழ்மகனே!

(தரு)

அப்பப்பா தமிழ்மகனே தலைமகனே சேதி கேளடா - ஈழத்

தமிழர்படும் துயரம் போக்க நீதி கேளடா. (- அப்பப்பா...)

எத்தனை எத்தனை பத்தினிப் பெண்களின் கற்பு பறிபோச்சே

- செய

வர்த்தனா என்கிற பித்தனாலே மக்கள் சீரழியலாச்சே.

சுற்றிச் சுற்றி இராணுவம் வந்து சுட்டுத்தள்ளலாச்சே - இன்னும்

மெத்தனமோ நீயும் போருக்கெழுந்திடு. வே ண் டா மே
வீண்பேச்சே.

(- அப்பப்பா...)

கொலை நடக்குது கொள்ளை நடக்குது ஈழ சேதத்திலே - தினம்

மலைபோல பிணம் சுட்டுக்குவிக்கிறார் ராணுவ வேஷத்திலே.

நிலைகுலைந்தங்கு எத்தனை தமிழர்கள் செத்தாரோ
மொத்தத்திலே - பெரும்

அலைவீசும் இந்துமாக்கடல் சிவக்குது தமிழர் ரத்தத்திலே!

(- அப்பப்பா...)

தங்கத் தமிழனின் ரத்தத்தை சிங்கள நாய்கள் குடிக்குதடா

அவர்

அங்கம் சிதையுறார் அவர்களை எண்ணிநம் ஆவி

துடிக்குதடா.

லட்சம் லட்சமாய் அகதிகளாய் நாளும் துயரமடா - கொஞ்சி

தங்கராசன் பாடும் பாடலிலே சோகக் கண்ணீரும் கலங்குதடா

- (அப்பப்பா...)

கணீரென்ற குரலில், கல்லையும் கரையவைக்கும் பாடல். கடையில் குந்தியிருந்தவர்கள், சாமான் செட்டுகள் வாங்க வந்தவர்கள், ஊருக்கு சேதிக்கு போவதற்கு நின்றவர்கள் என யாவருக்குமே, யாவற்றையும் இழந்து நிற்கிற தமிழ்ஈழ மக்களின் நிராதரவு நிலை ஒரு கணம் மனத்தை உருக்கிவிட்டது.

அறிவழகன் கூட அந்தக் கடைசி அடிப் பாடலில் கலகலத்துப் போய்விட்டான்.

திரும்ப பம்பை, பாடல், ஊர்வலம் வேடப்பர் கோயிலை நோக்கிப்

போய்க்கொண்டிருந்தது.

*

19

சா தா நிலக்கரி ஏற்றிப்போகும் லாரிகளிலிருந்து சிந்தி கருவடைந்து கிடக்கிற நெய்வேலி - விருத்தாசலம் சாலை. மெள்ள தார்சாலையை விட்டு இறக்கி ஊத்தாங்கால் கிராமத்தின் தெருவில் சைக்கிள் நுழைந்தபோது வெயில் ஏறத்தொடங்கியிருந்தது. நந்தியாவட்டை நிழலடியில் போய் சைக்கிளை நிறுத்தினான் சிகாமணி.

“ வாங்க மாமா....” குரல் கேட்டு நிமிர்ந்தவன் அப்படியே அசந்துபோய் நின்றுவிட்டான். இணுக்குகளிலெல்லாம் சங்குகளும் பூக்களுமாய் குலுங்கக் குலுங்க நிற்கும் டிசம்பர் கிளையாய் சுமதி. நேற்று முளைத்த செடி இன்று பூத்து நிற்பதுபோல் பருவத்துப் பிள்ளைகள் மளமளவென்று வளர்ந்துவிடுகிற அதிசயத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னான் “ வர்றன் சுமதி...”

கேரியரில் மாட்டியிருந்த பையை எடுத்துக்கொண்டு குறட்டில் ஏறினான். அகன்ற பெருங்களமாய் வீட்டிற்கு முன்னால் சிமிட்டி தளத்தில் குறடு. குறட்டைச் சுற்றிலும் அந்தியிலும் ராவிலுமாய் தெருவு ஆட்கள் கிடந்து இடுப்பாற்ற ஏற்ற கட்டைச்சுவர். கொடிக்காம் மூலையில் விரிந்திருந்த நந்தியாவட்டைக் கிளைகளின் நிழல் குறட்டில் எட்டின வரை தாவியிருந்தது.

குறடு கொள்ளாமல், வீட்டின் குடலை உருவிப்போட்டதாய் குண்டான், குவளை, சாக்குகள், கட்டில், பேன், டி.வி., புத்தகங்கள், செருப்பு, துணிமணிகள் யாவும் குவிந்துகிடந்தன. “ என்னா அதுக்குள்ள பொங்கல் வந்துட்டுது போல்ருக்கு” கேட்டுக்கொண்டே நடந்தான்.

ஈரத்தரையில் போட்டு, ஊறிக்காய்ந்த கோலக்கோடுகள் கலையாமலிருந்தன. நடுவில் சாணி உருண்டையில் செருகியிருந்த பறங்கிப் பூ வதங்கி நாலாகடையும் பின்னுக்கு விழுந்து சாணியில் மஞ்சள் சவ்வைப்போல் ஒட்டிக்கிடந்தது.

“ எம்மா... மாமன் வந்துருக்கு...” மஞ்சள் வெயிலைப் போல் எதிரில் ஓடிவந்தவள், அவன் கைப் பையை வாங்கியபோது அவள் சூடியிருந்த சாமந்திப்பூவின் மணம் வீசியது. மனமெல்லாம் ஏதோ திடுமென ஒரு மாயம்

புகுந்துகொண்ட மாதிரி சிகாமணி திகைத்துப் போய்விட்டான். அவளை சுவாசித்துக்கொண்டே நின்றிருந்தான்.

“ என்னா மாமா நின்னுட்டிங்க... வாங்க.”

அவனையுமறியாமல் அத்தைமகள் என்கிற கூடுதல் உரிமையை எடுத்துக்கொண்டு, ஒட்டி உரசியபடி பின்தொடர்ந்தான். ஏறுமேட்டிலிருந்து இறங்குகிற ஒற்றையபடிப்பாதையைப் போன்று தோளிலிருந்து பின்னுக்குத் தாழ்ந்திறங்கும் அவள் தாவணி. உச்சியிலிருந்து தரைக்குத் தாவும் ஓணான் கொடியைப்போன்று இடைவரைக்கும் தொங்கலாடும் கூந்தல். குனிந்து பையைக் கீழே வைத்தபோது, பைக்கும் முன்னேபோய் கொடுக்குபோன்ற அவளின் கூந்தல்நுனி தரையைக் கொத்தியது.

விசிப்பலகையில் கிடந்த தூசியை சமுக்காளத்தாலேயே விசிறிவிட்டு ‘ குந்துங்க மாமா...” என்றாள். வெளியே வைத்திருந்த குடங்கள் ஒன்றிலிருந்து தண்ணீரைச் சாய்த்துக் கொடுத்தாள். நேருக்கு நேர் சிரித்து நிற்கும் அவளின் கன்னக்குழிவு இன்னும் அவளை அழகாக்கியது. ஒரு வளர்ந்த குடும்பத்தியை தாவணிச் சுற்றலில் சிறைப்படுத்தியது போன்று ஒரு வளப்பம்.

“ வாப்பா...” மேலெல்லாம் தூசியாய் கொண்டையை அவிழ்த்து உதறியபடி போய் நந்தியாவட்டை நிழல் குடத்திலிருந்து தண்ணீரை எடுத்து முகங் கழுவிக்கொண்டு வந்து நின்றாள் ராசாமணி அத்தை. “ வர்றன் அத்த...” தாழ்வாரத்தில் அடியெடுத்து வைத்துப் போய் விசியில் குந்தினான். சிலீரென்ற சிமிட்டித்தரை. சுண்ணாம்புக்காரை பூசிய வழவழப்பான அந்தக் காலச் சுவர். நடுவில் மரக்கம்பி குறுக்குப்போட்ட மெத்தை. முன் தாழ்வாரம் உள்பக்கம் தட்டோடு போட்டு மேலே சீமையோடு வேய்ந்தது. தெருவில் நின்று பார்த்தாலே ‘ பெரிய கை’ எனத் தோற்றம் காட்டும் எடுப்பு. எதிரே சித்திர வேலைப்பாடுகள் கொண்ட மரத்தூண். அதில் பனையைத் தழுவி ஏறும் ஆலங்கழுந்தாக கை வளைத்து சாய்ந்து நிற்கும் சுமதி. அவளைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் போல் ஒரு அழகு.

ராசாமணி உள்ளே திரும்பிக் கூப்பிட்டாள் “ பானு, மாமன் வந்துருக்கு பாரு. அப்பாவ வரச்சொல்லு...”

பதில் குரல் இல்லை. மாமாதான், கரிப்புதையிலிருந்து பிடுங்கியது மாதிரி கன்னங்கரேல் என ஒட்டடைப் படிவுகளுடன் வந்தார். “ வாடா...”

சிகாமணி எழுந்துவிட்டான். “ வர்றம் மாமா...” சிரித்துக் கொண்டே

கேட்டான் “ என்னா மாமா.. கல்லு வூட்ல போயி இம்மாங் கரித் தூசி...”

“ அது அங்காண்ட சோறு ஆக்கற கொட்டாயில ஒட்டட அடிச்சது...” விசியிலிருந்த சமுக்காளத்தைத் தள்ளிவிட்டு வெறுமனே குந்தினார். முட்டிவரை தொங்குகிற பட்டாபட்டி அண்டர்வேர் தாண்டி நாடா தொங்கியது. நடுமண்டை வரை எகிறிவிட்ட நெற்றி. சிவந்த உருவத்தில் திட்டுத்திட்டாய் கரித்தீற்று படிந்திருந்தது.

“ நோட்டிசு குடுத்துட்டானுவுளாம...” எடுத்த எடுப்பில் கேட்டார்.

“ அதாம் மாமா, குடுத்துருக்கானுவோ. அள்ளிக்கிட்டுப் போயி எங்க வுடப் போறானுவோன்னு தெரியில. அதோட நாங்களும் வூட்டுக்கு ஒரு ஆளு வேல வாங்கிடுணுங்கறதுல உறுதியா இருக்கம்...” சொல்லிக்கொண்டே போனான்.

“ அம்மாஞ் சீக்கிரம் வூட்டுக்கு ஒரு ஆளுக்கு வேலங்கறத உம்மப்பட்டுட மாட்டானுவோ. சரி நம்ப அய்யா என்னா சொல்றாரு. இங்க கூட ஒரு நாளைக்கு ஜி.ஆர். டாக்டரையும், சுந்தரமூர்த்தியையும் வைச்சி கூட்டம் போடுணும்னு இந்த ச.மு. ச.வுல இருக்குற நம்ப இ.பி. மாதவன் பேசிக்கிட்டிருந்தாரு.” அக்கறையாகச் சொன்னார்.

“ நோட்டிசு குடுத்த சேதியும் அய்யாவுக்கு தெரியப்படுத்தி யிருக்கு. ஆனா அவுருமட்டும் என்னா பண்ணுவாரு. தொடர் சாலைமறியல் சம்மந்தமா விளக்கக் கூட்டங்களப் போட்டுக்கிட்டு அலைச்சல்ல இருக்காரு. குறள்மணி அண்ணன், ஜி.ஆர். டாக்டரெல்லாம் மொதல்ல வைச்சி பாத்துக்கிட்டு, அப்பிடியும் கதைக்கி மேவுலன்னா, கடைசியாத்தான் அய்யாவ கூப்புடுற மாதிரியிருக்கறம்.”

“ அதுலாம் அய்யா வராம நிர்வாகம் ஒண்ணும் அசங்க மாட்டான். சரி பாருங்க...” மாமா எழுந்து உள்ளே போனபடி கூப்பிட்டார் “ பானு, காபி போட்டுட்டியா...”

பார்த்துக்கொண்டே நின்றதால் சுமதியிடம் ஏதாவது பேச வேண்டும் போல் ஒரு நிர்பந்தம் “ பானுவுக்கும் உள்ள ஒட்டட அடிக்கிற வேலயா...”

“ நேத்து தாவாரத்துல ஒட்டட அடிச்சி கழுவி வுடற வேல என்னிது. இன்னைக்கி அவளுக்கு அடுப்பங்கர வேல. அதான் உள்ள ஒட்டட அடிச்சி உருட்டிப் பெரட்டிக்கிட்டு கெடக்கறா...” சுமதி செல்லமாய் பானுவைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே பானு கையில் ஆவி பறக்க தம்ளரோடு வந்தாள்.

நிமிர்ந்தான். தலையெல்லாம் கருந்தூசியோடு பானு. அவளும் இன்றைக்கோ நாளைக்கோ என்கிற மாதிரி பிராயத்து வாசலில் நிற்கிற தோற்றம். பார்வை ஓட்டில், மேலே அழுக்குப் படியாதவாறு போட்டிருந்த அவளின் ஆம்பிளை சட்டையைப் பார்த்ததும் ஞாபகம் கிளர்ந்தது. எப்போதும் ஆம்பிளை சட்டையோடு திரிகிற பூமாதேவியின் உருவம் பட்டென்று மனசுக்குள் எழுந்து, சரக்கென்று அவனை கம்மங்கொல்லைக்கு இட்டுச் சென்றது. அங்கே குருவிகளும் தகரச் சத்தமுமாக ஒரே ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும். கம்மஞ்சோலைகளுக்கிடையில் ஓடுகிற பூமா.

“ மாமா, காப்பி...” இயல்புக்குத் திரும்பினான் சிகாமணி. என்னவோ விரதத்தில் இருப்பவன் கவிச்சியைத் தொட்டுவிட்ட தவிப்பு. தம்ளரை வாங்கியவன் கையில் ஏதேச்சையாய் பட்ட பானுவின் விரல்கள் சுளீரெனச் சுட்டன. வாங்கி உறிஞ்சிக் கொண்டே விரிந்த விழிகளில் தூணோடு சாய்ந்த சுமதியின் உருவம் பார்க்கக் கூசியது. அவனையுமறியாமல் வெடுக்கென்று தலை தாழ்ந்துகொண்டது. தூணோரம் இருந்த பையிலிருந்து பொங்கல் வரிசைகளான வாழப்பழம் தேங்காய் பூ போன்றவற்றை வெளியே எடுத்து வைத்துக்கொண்டே கேட்டாள் “ உள்ளூர்ல பெரிய அத்தைக்கி குடுத்துட்டீங்களா மாமா.”

“ அதுக்கு அப்பாவ போவச் சொல்றன். நீ நடு அத்தைக்கி எடுத்துக்கிட்டுப் போயி குடுத்துட்டு வான்னு அம்மா என்ன இங்க அனுப்பிவுட்டது.” வாய் சொல்லிக்கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் பூமாவும் கம்மங்கொல்லைக் குருவிகளுமாகவே அவனுக்குள் சலசலப்பு. எழுந்து சட்டைப்பையிலிருந்து ஐம்பது ரூபாய் பணத்தை ராசாமணியிடம் கொடுத்துவிட்டு, ஆளுக்கு இருபது ரூபாய்களாய் சுமதியிடமும் பானுவிடமும் கொடுத்துச் சொன்னான் “ அம்மா வளைய போட்டுக்கச் சொல்லிச்சி.”

“ அம்மா சொன்னாதாம் போட்டுப்பம், நீங்க சொன்னா நாங்க போட்டுக்க மாட்டமா... மாமா.” சுமதி சிரித்துக்கொண்டே கேட்டாள். ஆனால் பதிலுக்கு அவனால் எதுவும் சொல்லவோ நிமிர்ந்து நேருக்குநேர் பார்க்கவோ கூட முடியவில்லை.

“ சரி, போயி மாமனுக்கு சாப்பாட்ட பாருங்க...” உள்ளுக்கு அனுப்பிவிட்டு சிகாமணியிடம் ராசாமணி கேட்டாள் “ ஏம்ப்பா... ஊரு எடுக்கற மாதிரியிருந்தா இப்படி நம்ப ஊரப்பக்கம் வந்துருங்களன். ஒரு நெலம்பலத்த வாங்கிக்கிட்டு இப்பிடி ஒண்ணடி மண்ணடியா கெடந்துட்டுப் போறது. ஒப்பங்கிட்ட கலந்து பாரன்.”

இவன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அவளே திரும்பக் கேட்டாள். " ஏம்ப்பா.... ராசோக்கியத்தோட அடிதடி கேசு நடந்துத, என்னா ஆச்சி? அந்த குட்டிகூட வயிசிக்கி வந்துட்டுதுன்னு சேதி. ஒங்கள தண்ணி ஊத்தக் கூப்புட்டாங்களா?"

ஏற்கெனவே கம்மங்கொல்லை கனவில் இருந்தவன், திரும்பவும் சமாசம்பந்தம் இல்லாமல், பூமா பற்றிய பேச்சு கிளம்பியதும் அவனால், உடனே பதில் சொல்ல இயலவில்லை.

தயங்கியபடி சொன்னான் " கேசு ஈரங்கி மேல ஈரங்கியாதான் போய்க்கிட்டு இருக்கு. தண்ணி ஊத்தறதுக்கு நம்பளக் கூப்புடவும் இல்ல, கூப்புட்டுருந்தாலும் யாரும் போற மாதிரியும் இல்ல."

அன்று கம்மங்கொல்லையில் பார்த்தபிறகு இடையில் நாலைந்து தடவைதான் அவளைப் பார்த்திருக்கிறான். ஏதேச்சை யாய் பார்க்கிறபோதும் கூட அதற்குப் பிறகும் ஒரு மின்னலைப் போல் தான் கம்மங்கொல்லையும் குருவிகளும் ஞாபகத்திற்கு வந்துபோகும். ஆனால் இப்போதுபோல் தொடர்ந்து மனம் அதிர்ந்துகொண்டேயிருந்தது எப்போதும் இல்லை.

யோசனையில் இருந்தவன் பார்வையில் தெருவில் நாலைந்து பெண்பிள்ளைகள் பாவாடை சட்டையில் மேற்குப் பக்கம் போய்க் கொண்டிருப்பது பட்டது. அதில் மிகவும் இளையவளாகத் தெரிந்த சிறுமி ஒன்று இவர்களையும் வீட்டையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனதும் ராசாமணிக்கு பட்டென்று எதுவோ உதைக்க திடுமென எழுந்து பேய் பிடித்தவள் போல தெருவுக்கு ஓடினாள். "ஏ... புள்ள..."

எல்லாப் பசங்களும் திடுக்கிட்டுத் தேங்கி நின்றார்கள். ஏற்கெனவே திரும்பிப் பார்த்துக்கொண்டே போன பிள்ளை மிரண்ட மாதிரி பின்னுக்கு ஒதுங்கியது. அதற்குள் சிகாமணியும் வந்துவிட்டான். அம்மாவின் குரல் கேட்டு சுமதியும் பானுவும்கூட தெருவுக்கு வந்துவிட்டார்கள்.

மிரண்டு ஒதுங்கிய பெண்பிள்ளையைப் பார்த்து ராசாமணி கேட்டாள் " கம்சலா மொவதான்டி நீனு..." ' ஆமாம்' என்கிறமாதிரி தலையாட்டியது அது.

சிகாமணிக்கு ஒருகணம் ரேகம் ஆடிப்போய்விட்டது. சின்ன அத்தை கம்சலாவை அப்படியே உரித்து எடுத்துக் கொண்டுவந்து நிற்கிற உருவம். ஏழு வயது இருக்கும். சடைகள் இரண்டும் முன்பக்கம் வீழ்ந்து கிடக்க,

தலையின் இரு உச்சிகளிலும் ஒற்றைச் செம்பருத்தி இதழ்களைப் போல டேப்புக்கொதை.

கிட்டப்போய் நின்று தலையைக் கோதிவிட்டமாதிரி சிகாமணி கேட்டான் " நா யாருன்னு தெரியுமா..."

லேசாய் சிரித்தமாதிரி சொல்லியது. " ம். மாமா..."

பொசுக்கென்று சிகாமணிக்கு கண்ணீர் முட்டியது. " எப்பிடி புள்ள தெரியும்..." ராசாமணி கேட்டாள்.

" மந்தாரக்குப்பத்துல ஒருநாள் நிக்கிறப்ப எங்க அம்மா காட்டிச்சி... பெரிமா..."

ராசாமணியைப் பெரியம்மா என்றதும் அவளுக்கும் தாங்க வில்லை. கம்சலா தனியே ஓடிப்போய் கல்யாணம் செய்துகொண்டு எட்டு வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. பக்கத்தில் இரண்டு மூன்று மைலில் உள்ள ஊமங்கலம் எலுமிச்சைதான் ஊர். ஆனாலும் தங்கையாக இருந்தாலும் இவளுக்கும் வேகம்தான். எட்டிக்கூடப் பார்க்கவில்லை. ஏதேனும் காரியங்கவையில் ஏதேச்சையாய் பார்ப்பதோடு சரி, பேச்சுவார்த்தை இல்லை. அதுவே அண்ணன்காரன் காதுக்கு எட்டிவிட்டால் சூரசம்காரமே நடத்திவிடுவான் என்கிற பயம். இந்தப் பிள்ளையைக் கூட கைக்குழந்தையாய் இருந்த போதுதான் பார்த்திருக்கிறாள். திடுமென இப்போது பார்த்தபோது கூட கம்சலாவின் முகசாடையை வைத்துதான் கூப்பிட்டது.

சிகாமணி கூட இவளை நடக்கிற பிள்ளையாய் இட்டுக்கொண்டு போகையில் மந்தாரக்குப்பம் பேருந்துநிலையத்தில் தூரத்திலிருந்து பார்த்திருக்கிறான். அப்பனுக்குப் பயந்து இவனும் அந்தப்பக்கம் போனதே இல்லை. சிகாமணி பட்டென்று பையில் கையைவிட்டு ஒரு ஐம்பது ரூபாய் தாளை எடுத்து அவள் கையில் கொடுத்தான். " பொங்கலுக்கு வளைய போட்டுக்க."

அவள் பிடிவாதமாய் மறுத்துவிட்டாள். சுமதியும் பானுவும் போய் கையை வலுக்கட்டாயமாய் பிடித்தாடியும் பார்த்து விட்டார்கள்.

" வாணாம் எக்கா..." விடாப்பிடியாய் மறுத்துவிட்டாள்.

" எக்கா..." என்றதுமே இருவருக்குமே கலங்கிவிட்டது. " எங்கள... எப்பிடிடி தெரியும்.." ஆச்சரியமாய்க் கேட்டார்கள்.

“ அந்தாண்ட தெருவுல எங்க பள்ளிக்கொடத்துல படிக்கிற ஒரு அக்கா வயிசிக்கி வந்துருக்கு. அதான் அடிக்கடி ஒங்க பெரிமா, அக்காள்லாம் இருக்கறாங்கன்னு சொல்லிக்கிட்டு இருக்கும். அந்த அக்காவதான், இப்ப எல்லாரும் பாக்கப் போறோம்.” கிளி கொஞ்சுகிற மாதிரி அப்படியே கம்சலாவின் பேச்சேதான்.

“ சரி. வந்து ரவ சாப்புட்டுட்டு போ...” ராசாமணியும் கிட்டப் போய் கூப்பிட்டாள்.

“ வாணாம் பெரிமா. அம்மா அடிச்சிடும். மாமன், அக்கான்னு எதாவது பேச்ச எடுத்தாலே அம்மா எரிஞ்சி வுழும்.” எல்லாமும் தெரிந்து வைத்துக்கொண்டு எதுவும் தெரியாத மாதிரி அவளின் பேச்சு. சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் போய்க் கொண்டிருந்தாள்.

“ இம்மாஞ் சொல்றம எங்கியாவுது கேக்குதா பாரன். அவ ஆத்தாளுக்கு இருக்கற ஆங்காரம் அப்பிடியே இருக்குது பாரு.” லேசாய் பொய்க்கோபம் காட்டிப் பேசினாலும் தங்கையின் மகளைப் பார்த்துப் பேசிவிட்ட பூரிப்பு ராசாமணிக்கு.

கொடுத்த பணத்தை வாங்கவில்லையென்றாலும்கூட சிகாமணிக்கும் சந்தோஷந்தான். கம்சலா அத்தையின் முகத்தை திரும்பவும் உள்ளுக்குள் கொண்டுவந்து பார்த்தான். அச்சு அசலாய் அவளைப் போலவே உருவத்தில் பேசிவிட்டுப் போகிறவளைப் பார்த்துக்கொண்டே நின்றான். ‘ சரி எங்க போய்டப் போவுது. இந்த பெருங்காத்துவோ இருக்கற வரைக்கும் தோலே தோலுன்னு கறாரா இருக்கும். இன்னம் பத்துப்பொழுது போனா, எல்லாம் நாமதான். பாத்துக்கலாம் வுடு...’

இன்னும் ஏதேதோ சிந்தனைகளோடு திரும்பினான். எதிரில் ஆம்பிளை சட்டையைப் போட்டுக்கொண்டு கண்ணில் குத்துகிற மாதிரி பானு. என்னவோ பூமாதேவி மட்டும் ஆம்பிளை சட்டை போட்டால் அழகாய் இருப்பது மாதிரி, மற்றவர்களுக்கென்றால் சற்றும் பொருத்தமில்லாத மாதிரி....

பானுவின் மீது விழுந்து பிடுங்காத குறைதான். “ என்னா இது அங்கபங்கமில்லாம, ஒரு பொட்டப்புள்ள போயி ஆம்பிள சட்டய போட்டுக்கிட்டு...”

பானுவுக்கு மட்டுமில்லால் சுமதி, ராசாமணி எல்லோருக் குமே ஒரு மாதிரியாகப் போய்விட்டது. அதுவும் சற்றுமுன்னர் முதல் தடவை

பார்த்தபோதெல்லாம் விட்டுவிட்டு திடுமென இப்படி. ராசாமணி பொறுக்கமாட்டாமல் சொன்னாள் “ சும்மா ஒட்டட தூசி மேல வுழாம இருக்கறதுக்கோசரம்...”

அதற்குள் சிகாமணிக்கும் விபரீதம் புரிந்து சிரித்து மழுப்பினான். “ அதுக்காக இல்ல. திட்டமா இருந்தாலும் பரவாயில்ல. மாமா வோட பெரிய சட்டய எடுத்துப் போட்டுக்கிட்டு... பாக்கறதுக்கு சோளக் கொல்ல மெரளி பொம்ம மாதிரி... அதான்.”

*

20

“ பொ ங்கலோ பொங்கலோ... போவியோ பொங்கலோ...”

“ பொங்கலோ பொங்கலோ... போவியோ பொங்கலோ...”

தொடர்ந்தும் இடைவிட்டுமாய் வெளியெங்கும் ஆங்காங்கே போகிகொத்து போடுகிற குரல்கள். ஒவ்வொரு முறையும் காதில் விழுகிறபோதெல்லாம் பூமாவுக்கு, இன்னும் நேரத்தில் எழுந்திருக் காமல் விட்டுவிட்டோமே என்கிற குற்றஉணர்ச்சி விட்டுவிட்டுத் தெறிக்க, நடை கூடுதலாய் எட்டி எட்டி விழுந்துகொண்டிருந்தது. மார்கழியில் மரமெல்லாம் குளிரும், தை மாதம் தரையெல்லாம் குளிரும் என்கிறமாதிரி பூமாவுக்கு வெடவெடத்தது. புற்களின் நுனியில் திரண்டிருந்த பனித்துளிகள் எல்லாம் சுளீர் சுளீர் என்று விரல்களில் சில்லிப்பாய்ச் சுட, வரப்பில் சாய்ந்திருந்த முற்றிய நெல் மணிக்கதிர்கள் கொலுசில் பட்டுத் தெறித்துச் சிதறின.

“ இரம்மா... எதுக்குப் பறக்கற...” அவள் நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ராசோக்கியம் சற்றே கோபப்பட்ட மாதிரி பேசினார்.

“ பறக்காத... சூரியன் உச்சிக்கி வந்தப்பறந்தான் போவிய கொத்து போடுணும் பாரு.” ஈரக்காலையில் கிழக்கே பனிநமுரில் முழுசும் தலைகாட்ட முடியாமல் நடுங்கிக் கிடந்த சூரியனைப் பார்த்தபடி சொன்னாள். குரலில் ஏதோ ஆண்டு அனுபவித்த ஒரு குடும்பத்தியின் பொறுப்பும் அக்கறையும் தெரிந்தது.

ராசோக்கியத்திற்கு பொசுக்கென்று சதாசிவத்தின் பேரில் யோசனை ஓடியது. அவன் படிக்கும் காலத்திலெல்லாம், பூமா ரொம்பவும் சின்னப்பெண். ராசோக்கியம் கோழி கூவவே சதாசிவத்தை எழுப்பி விடுவார். ‘ எலேய் ஊருப் பசங்கள்லாம் போவியக்கொத்துப் போட ஓடுதுவோடா. ஏந்திரிடா...’

தூங்கிக்கொண்டு கிடந்தால்கூட ‘ உம் ஆம்’ என்று சத்தத்தை யாவது காட்டுவான். முழித்துக்கொண்டு கிடந்தால் அநியாயத்துக்கு அரக்கு மாதிரி அப்படியே கிடப்பான். ஒருசில நேரங்களில் முறுக்கி முறுக்கிக் கிடந்துவிட்டு எழுப்புகிறவருக்குப் பதிலேதும் சொல்லாமல் மெல்லமாட்டாமல் முழுங்கமாட்டாமல் ‘ சே... காலநேரத்துல வந்து கடுப்ப ஏத்திக்கிட்டு...’ புலம்பிக்கொண்டே எழுந்திருப்பான்.

‘ அதுஅது நல்லநாளும் அதுவும் எனுமா குதியாளம் போட்டுக்கிட்டு கொல்லிய பக்கம் ஓடுதுவோ. இது மொனறிக்கிட்டு நிக்கிது. போ... கொல்லிய அப்பிடியே கிழிச்சிக்கிட்டு வெளைஞ்சி நிக்கும்...’ ராசோக்கியம் அவனைப் பொருட்படுத்தாது சித்திருட்டி லேயே கிளம்பிவிடுவார். அதற்கும் முன்பாகவே ஊர்ப் பசங்கள் டயரைக் கொளுத்தியபடி, குளிருக்கு எதையாவது உளறிக்கொண்டே போவார்கள். கொல்லையைத் தொடுவதற்கு முன்பாகவே கத்தத் தொடங்கிவிடுவார்கள். ‘ போவியோ பொங்கலோ.... பொங்கலோ போவியோ...’

என்னதான் வடை முறுக்கு எனச் சுட்டாலும், பட்டாசு கட்டாய் வைத்து வெடித்து அதம் பரப்பினாலும் ஏதோ அவசரம் அவசரமாய் வாசலால் நுழைந்து தோட்டத்தால் வெளியேறி விடுகிற பண்டிகை தீபாவளி. ஆனால் பொங்கல் அப்படியில்லை. பொங்கல், வாரம் பத்து நாளிருக்கவே, வீட்டைச் சுத்தம் செய்வதும் ஒட்டடை அடிப்பதும், பொட்டைமண் வெட்டி வந்து வீடு சுவர் மெழுகுவதுமாக ஒரே பரபரப்பாக இருக்கும். நெல் அறுக்காதவர்கள் கூட, முதல் அறுப்பு அறுத்தவர்களிடம் ‘ நெல்லுக்கு நெல்லு பொங்க கழிச்சி குடுத்துடறன்’ வழக்கம் வாங்கி பொங்கலுக்குப் புத்தரிசி ஆயத்தம் செய்வார்கள்.

எல்லாவற்றிற்கும் முதல் எதிர்ப்பார்ப்பாய் இந்தப் போகிப் பண்டிகை. இரவெல்லாம் தூங்காமலேயே கிடப்பார்கள் சிறுவர்களும் வயசுப் பசங்களும். விடிந்ததும் விடியாததும் மா, வேம்பு, ஆவரம், பூலாப்பூ என வேலி இடுக்குகளில் தேடி ஒடிப்பதும், கொண்டுபோய் கொல்லைமூலையில் போடுவதுமாய் ஒரே குதூகலம்.

அண்மைக் காலங்களிலெல்லாம் போகிப் பண்டிகைக்கு சதாசிவத்தை எழுப்புவதில்லை. நல்லநாளும் பெரியநாளுமாய் அவனை எதுக்கு எழுப்பி எரிச்சலை உண்டாக்கிக்கொண்டு என ராசோக்கியமே கிளம்பிவிடுவார். வேட்டியைப் போர்வையாய் வளைத்துக்கொண்டு நாலு தப்படி எடுத்து வைப்பதற்குள் அம்மாவின் புடவையை வாரிச்சுருட்டிப் போர்த்தியபடி எட்டுத் தப்படியாக முன்னால் பூமா ஓடிக்கொண்டிருப்பாள். ‘ நீ எதுக்குடி போற...’ பாஞ்சாலை அதட்டுவாள்.

‘ அறியாப் பசங்க போய் போவியக் கொத்து போடுலன்னா, கொல்ல கோச்சிக்குமாம்...’ பூமாதேவி ஓடியபடி சொல்லிக் கொண்டிருப்பாள்.

‘ இந்த நாலு நெல சாணிய எடுத்துப்போட்டுட்டு, அஞ்சாறு ஒட்டத்தாட்டய கழுவறதுக்கு பகமாறிக்கிட்டு என்னா சாக்குப் போக்கு சொல்லிட்டுப்போவுது

பாரு...’ பாஞ்சாலை புலம்பிக் கொண்டு நிற்பாள்.

‘ க்கும்... தண்ணி மொண்டாந்து வைச்சிட்டன். சாணி கரைச்சிப்போட்டு, கோலத்தபோட்டு பூசணிப் பூவயும் சொருவி வைச்சிட்டன். அப்பறம் என்னாத்த வூட்டுல சொயிட்டி வைக்குணுமாம். கொன்னக் கோழியாட்டம் சுருட்டிச் சுருட்டிகிட்டுக் கெடக்கற மொவன ஏந்திரிச்சிப்போயி போவியக்கொத்து போட்றாண்ணு சொல்லாத. ஒரு பொட்டப்புள்ள நல்லநாளு பெரிய நாளுன்னு இம்மாம் வேலயச் சாய்ச்சிட்டு இந்தக் குளுர்ல ஓடறம் பாரு. எனக்கு வல்லா வைச்சிக்கிட்டு நில்லு... போம்மா... போவியக் கொத்து போட்டுட்டு அப்பிடியே கண்ணுக்குட்டிக்கி கையோட கையா நாலு பில்லும் அரிச்சிக்கிட்டு வர்றன்...’

பூமா பேச ஆரம்பித்துவிட்டால் ராசோக்கியம் குறுக்க வாயைத் திறக்கமாட்டார். அவள் பேசுவதையே வேடிக்கை பார்த்துக் கொண்டே நிற்பார். அவருக்கு, பூமா பேசுகிறபோதெல்லாம் அவரின் அம்மா பூமாலை ஞாபகம் வந்துவிடும். இவளைப் போலவே தான் அவளும் டாண் டாண்... என்று பேசுவாள். ஆனால் பூமாவுக்குத் தான் பாட்டியாளைப் பார்க்கக் கொடுப்பினை இல்லை. பிறக்க மூணு மாசம் இருக்கும்போதே வேதியில் போய்விட்டாள். ராசோக்கியத்தின் அப்பா, ராசவன்னியன் உதிரச்சிசுவாய் பூமாவைக் கையில் வாங்கியபோது சொன்னது இன்னமும் ஞாபகமிருக்கிறது. ‘ எலேய் ராசோக்கியம், நம்ப பூமால செத்துப் போவுலடா. ஒனக்கு புள்ளையா வந்து பொறந்துருக்காடா.’ ராசோக்கியம் தன் அம்மாவின் ஞாபகமாய் பூமாலை என்றே பேர் வைக்கச் சொன்னார். ராசவன்னியந்தான் சொன்னார் ‘ என்னாதான் இருந்தாலும் தன் சாவா இல்லாம வேதியில போனவ பேரையா வைக்கிறது. மூணுல ரெண்டு பங்கு எழுத்து வர்ற மாதிரி பூமாதேவின்னு பேர வையி.’

வழக்கம்போலவே காலையில் கிளம்பும்போதும் பாஞ்சாலை ஆரம்பித்தாள். “ ஏம் புள்ள, வூட்டுல இம்மாம் வேல கெடக்குது. அத வுட்டுட்டு இப்பதான்...” பேசிக்கொண்டே திரும்பித் திண்ணையைப் பார்த்துக் கூப்பிட்டாள் “ எலேய் சதாசிவம்... தம்பி, ஏந்திரிச்சி...” முடிக்கவில்லை. இடைபுகுந்து பூமா பேசினாள் “ எம்மா, அண்ணன் அஞ்சி மணிக்கு ஏந்திரிச்சி வேலைக்குப் பூட்டுது. தே போனாப்ல வந்துடறம்மா. நீ ஒண்ணும் செய்யாத. போன அடி மறையாம வர்றன். பெசாம இரு..”

“ வேலைக்கி இல்லம்மா... ஒரு வயசிப்புள்ள, இந்த விடி காலையில...” பாஞ்சாலைக்கு அவளையும் அறியாமல் உள்ளுக்குள் ஒரு உடைவும் குரலில் இரக்கமும் தெரிந்தது.

ராசோக்கியம் கூட இதை யோசிக்கவில்லை. அவருக்கே ஒரு மாதிரியாகப் போய்விட்டது. குலுங்கக் குலுங்கப் பனியைப் போர்த்திக்கொண்டு நிற்கும் ஒரு பூஞ்செடியைப் போல புத்தம் புதுத் தாவணி பாவாடையில் வாசலில் நிற்கும் பூமாவை அப்படியே பார்த்துக்கொண்டே நின்றார். கன்றாய் கையில் இருந்தது, மளமளவென்று முழங்கையில் ஏறி, தோள்பட்டையால் தொற்றி, உச்சந்தலை நடுவில் நிற்பது போலப் பார்த்த மாத்திரத்திலியே வளர்ந்து நிற்கும் பூமாவை இதோ இப்போதுதான் பார்க்கிற மாதிரி ஒரு பாசமும் பரிவும்.

“ எப்பா.... அது கெடக்கட்டும் வாப்பா... விடிஞ்சப்பறம் போவியக் கொத்து போடக்கூடாதுப்பா...” பனித்துளி சிதற செடி அசைந்து சிரித்தபடி சொன்னதும் நினைவுக்கு வந்தவராய் சொன்னார். “ ஒம்மா சொல்றதும் சரியாத்தாம்மா இருக்கு...” இன்னும் அணைக்கப்படாத கம்மலான கூரைவிளக்கு வெளிச்சத்தில் சன்னமாய் பனி இறங்கிக் கொண்டிருந்தது. இதற்கு மேல் யாரும் எதுவும் மறுப்பு சொல்லாத மாதிரியான வார்த்தையைத் தேடிக்கொண்டு யோசனையில் நின்றுகொண்டிருந்தாள் பூமா. நிறையப் பசங்கள் சலசலப்போடு வேலிக்கப்பால் கொல்லைவெளிப் பக்கம் போய்க்கொண்டிருந்தார்கள்.

சற்றுநேரம் கழித்து பூமா தயங்கியதுமாதிரி சொன்னாள். “ அதுக்கில்லப்பா. அடுத்த வருசம்லாம் கொல்ல இருக்குதோ, இல்ல ஓலய குடுத்த நெய்வேலிக்காரன் ஓட்ட கையில எடுத்துக் குடுத்து ஓடுங்கன்னு, கொந்தாளத்த வுட்டு குழி நோண்டப் போறானோ யாரு கண்டா. அதான் போயி களையாற நாலா கடையும் நடந்து போவியக் கொத்துப் போட்டுட்டு வரலாம்னு... ஆசையா இருக்குப்பா...”

ரசோக்கியத்திற்கு ஒரு கணம் திக்கென்று போய்விட்டது. பாஞ்சாலைக்கு உள்ளுக்குள் ஒரு நெளுக்கம் கண்டு கண்களில் திரண்டது. வெளிச்சம் பாய்ச்சி விரியத் தொடங்கியிருந்த கிழக்கு பட்டென்று இருண்டு, வானமெங்கும் கருமை கவ்விப் போனமாதிரி இறுக்கம். யாரும் எதுவும் பேசவில்லை. “ சரிம்மா...” என்று சொன்ன ராசோக்கியத்திற்கு குரல் ததும்பியிருந்தது. நட்டதலை நிமிராமல் ராசோக்கியம் பின்னால் அடியெடுத்து வைக்க, பூமா படலைத் திறந்தாள். அவளுக்கு முன்னால் துடுக்கு ஓடிக் கொண்டிருந்தது.

ஓ ழுங்கையை விட்டு கொல்லைவெளிக்குள் நுழைந்தவுடன் நாலா

திசையிலிருந்தும் போகிக்குரல்கள். குரல்களைக் கேட்கக் கேட்க, பூமாவிற்கும் இருந்த இறுக்கமும் கனமும் போன இடம் தெரியவில்லை. ராசோக்கியத்திற்கு கூட அவளின் அவசரமும் பரபரப்பும் விரைவும் உற்சாகமூட்ட எல்லாமும் மறந்துபோய், ஓர் அறியாப் பையனைப்போல் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார்.

“ இன்னம் காலையிலேயே எழுப்பியிருக்கணும்பா...” சொல்லிக் கொண்டே வழிநடையில் நின்றிருந்த மாமரத்தின் கிளையைத் தாழ்த்தி கொஞ்சம் கொத்துகளை ஒடித்தாள்.

“ எனக்கும் நாலு கொத்து ஒடிம்மா...” குரல் கேட்டு இருவரும் திரும்பினார்கள். கனகராசு சித்தப்பா வந்துகொண்டிருந்தார். “ மரம் நம்ப ராசவன்னியந் தாத்தா வைச்சதில்ல, கண்டபடி ஒடிக்கிறதுக்கு. மேலத்தெரு சாமியாரு சண்டைக்கி வந்துருவாரு.” சிரித்துக் கொண்டே சித்தப்பனுக்கும் நாலைந்து கொத்துகளை ஒடித்துப் போட்டுவிட்டு வரப்பில் நடந்துகொண்டிருந்தாள். ஓரத்து மரத்தில் இருந்து நாலைந்து வேப்பங் கொத்துக்களை கொசுறியவாறு கூட ராசோக்கியம் நடந்து கொண்டிருந்தார். நாய் லொக்கு லொக்கு எனப் பின்னால் ஓடிவந்து கொண்டிருந்தது.

அறுத்த வயல்களில் குறுக்காக நடந்து கிணற்றுமேட்டுக் கொட்டகையில் நின்றார்கள். கையிலிருந்த வேப்பங்கொத்து களையும் கொடுத்துச் சொன்னார். “ போய் சனிமூலையிலேர்ந்து போட்டுக்கிட்டு வாம்மா....”

சிட்டாய்ப் பறந்து போனவள் சனிமூலையில் போய் நின்றாள். கையிலிருந்த மா வேம்புக் கொத்துகளோடு, படையல் இலைப் பருக்கையை எடுத்து விளக்கிற்கு இட்டதுபோல், எட்டி மறிச்சி யிலிருந்த ஆவாரஞ்செடியின் பூங்கொத்து ஒன்றையும் ஒடித்துச் சேர்த்து மூலையில் போட்டு சத்தமாக கத்தினாள் “ பொங்கலோ பொங்கலோ...” சொல்லுகையில் பூமாவிற்கு உடம்பெல்லாம் ஒரு உற்சாகம். திரும்பவும் சொல்வதற்கு ஆரம்பித்தாள். அதற்குள் தூரத்தில் நன்கு பரிச்சயமான குரலில் ஒரு “ பொங்கலோ பொங்கலோ...”

குரலைக் கேட்ட மாத்திரத்திலேயே பூமாவிற்குள் ஒரு மெல்லிய மின்னல். ஆயிரம் கத்தல்கள் இருந்தாலும் தாயொலியை இனங்கண்டு ஓடி மடியணையும் ஆட்டுக்குட்டியைப் போல், வெளியெங்கும் குரல்கள்தான் என்றாலும் தனக்கான குரலில் பூமாவிற்கு ஒரு பரவசம். மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். தூரத்தில் உற்சாகமாய் போகிக்கொத்து போட்டபடி சிகாமணி. இவள் கவனித்தபோது, அவனும் ஒரு பார்வை விசாரிப்பை பட்டென்று

விரியவிட்டான். குருவிக்கொத்து. கம்மஞ்சோலைகள் சூழ்ந்தன.

“ எம்மா...” ராசோக்கியம் கூப்பிட்டார்.

“ ஒவ்வொரு தொண்டியிலயும் சனிமூலையில மட்டும் போட்டுட்டு சீக்கிரம் வாப்பா.”

“ தே வர்றம்பா...” கூடுதலாய் ஆவாரங்கொத்துகளை ஒடித்துக் கொண்டு மயிலைப்போல வரப்புகளில் ஓடினாள். வெளியெங்கும் குரல்கள் ஒலித்துக்கொண்டேயிருந்தன. துடுக்கு வரப்பில் பூமாவை முந்த முயன்று அவள் கால்களுக்கு ஊடாகப் போனது. வரப்பில் குந்தி அதன் தலையைத் தடவியவாறு நெற்றியில் முத்தமிட்டாள்.

பூமா ஒரு சுற்று சுற்றிப் போட்டுவிட்டு வருவதற்குள் ராசோக்கியம் ஒரு பண்ணை பில்லுக்கு மேல் அறுத்து வைத்திருந்தார். கையில் மீந்திருந்த தழைக்கொத்துகளைச் சரி செய்து எட்டி கொட்டகை யின் கூரையில் செருகினாள். கூரையின் நெற்றியில் ஆவாரம்பூக் கொத்து சந்தனப் பொட்டாய் மின்னியது.

“ பின்னம் நாலு அறுக்கறன். போயி வூட்டுக் கூரைக்கு வைக்கிற மாதிரி மறிச்சியில நாலு பூலாப்பூவு புடுங்கிக்கிட்டு, நெல்லா பூவு இருக்கிற கொத்தா பாத்து ஆவாரம்பூவும் ஒடிச்சிக்கிட்டு வாம்மா...”

கொல்லைக்குப் போடுவதென்றால் மா, வேம்பு, ஆவாரம்பூ, போதும். இன்னும் ஒருசில கடபடாதவர்கள் பல்லுக்குச்சி ஒடித்ததுபோக மீந்த நுனி வேப்பஞ்சிமிடு போல ஒப்புக்கு வெறும் வேப்பந்தழையை மட்டும் போட்டுவிட்டுப் போவார்கள். மீறினால் ரசத்தில் கறிவேப்பிலை கிடப்பதுபோல ஒன்றிரண்டு மாந்தழைகள் கிடக்கும், அவ்வளவுதான். ஆனால் யாராக இருந்தாலும் வீட்டுக்கூரைக்கு என்றால் கூடுதலாய் பூலாப்பூ, சாமை, திணை, நெல், கேழ்வரகு என பூங்கதிர்கள் சேர்த்து மணமக்கள் கைகளில் கொடுக்கப்படும் பூச்செண்டைப் போல், கனக்க கதம்பமாய்ச் செருகி வைப்பார்கள்.

நெல்லுக்கும் கேழ்வரகுக்கும் பஞ்சமில்லை. சாமை, திணைக் கதிர்கள் கூட கொஞ்சம் மெனக்கிட்டு மும்முடிச்சோழகன் கொல்லைப்பக்கம் நடந்தால் கிள்ளிக்கொண்டு வந்துவிடலாம். ஆனால் இந்தப் பூலாப்பூ கிடைப்பதுதான் ரொம்பவும் சிரமம். மெல்லிய பசுஞ்சிம்புகளில் எலிக்காதுபோன்ற சிறிய இலைகளின் இணுக்குகளில் பொறுக்கு பொறுக்காய் சிலிர்த்துக்கொண்டு சோற்றுப்பருக்கையை வைத்தமாதிரி பூலாப்பூ. ஆவாரம்பூ உட்பட எல்லாப்

பூக்களும் இருந்தாலும் அதில் பூலாப்பூ இல்லையென்றால் எடுக்காது. அது படர்ந்து அதிகமாகவும் கிடைக்காது. நாணாப்புதர் இடுக்கில், சப்பாத்திக் கள்ளியின் சந்தில் கருங்கூந்தலின் முதல் நரையைப் போல ஒற்றைப் பூச்சிம்பு வெள்ளையாய்த் தெரியும். தேடித்தான் பிடுங்கவேண்டும்.

வெறுங்காலங்களில் குறுக்கநெடுக்கப் போகும்போது பார்த்து வைத்திருந்து குறிப்பாய் போய்ப் பிடுங்கினால்தான் உண்டு. அதிலும் ஏற்கெனவே பார்த்து வைத்திருந்தவர்கள் பிடுங்கிப் போய்விடுவதும் உண்டு. போகியன்று கூட வீட்டுக்கூரைக்குத்தான். மாட்டுப்பொங்கல் அன்று மாட்டு மாலைக்கு, வண்டி அலங்காரத் துக்கு நிறையப் பூலாப்பூ தேவைப்படும். அதிகாலையிலேயே கிளம்பி கிழக்கே வளையமாதேவி போகிற ரோடு தாண்டி தெற்கே மும்முடிச் சோழகன் வரைக்கும் என அலையாய் அலைந்து பிடுங்கி பூங்கத்தைகளுடன் உச்சிக்குதான் வீட்டுக்கு வருவார்கள்.

பூமா கொல்லையை ஒட்டிய மறிச்சியில் இரண்டு இடத்தில் பார்த்து வைத்திருந்தாள். வாய்க்காலால் வந்து மறிச்சியை ஒட்டிப் பார்த்தபடி வந்தாள். நாணா, நுணா, வேம்பு, கார, சூர என அடம்பு கட்டியதில் பார்த்து வைத்திருந்த இடத்தைத் தேடினாள். சொல்லி வைத்தமாதிரி அசகுலையாமல் இருந்தது. ஒரு கைப்பிடிக்கு ஆகும். பிடுங்கினாள். கணுக்களில் ஒடிந்து வேர் இற்றுக்கொள்ள, கையோடு வந்ததில் கொடி கொடியாய் நீண்டு தொங்கிக் கொண்டிருந்தன.

பூலாப்பூ கிடைத்த மகிழ்வில் நின்றுகொண்டிருந்தவளுக்கு மறிச்சிக்கும் அங்காண்ட குட்டைப்பக்கம் பேச்சரவம் கேட்டது. கொடிகளை, செடிகளை விலக்கி, மெல்ல வெளியே குட்டைப் பக்கம் வந்தவள் அப்படியே அதிசயத்துப் போய் நின்றுவிட்டாள். அங்காண்ட மும்முடிச்சோழகன் கொல்லை வெளிவரை எட்டின தொலைவுக்கு மஞ்சமஞ்சேள் என்று ஒரே ஆவாரம் பூக்கள் மண்டிய செடிகள்தான். பூமாவிற்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. எத்தனையோ தடவை சின்ன வயதிலிருந்து பூத்துக்குலுங்கி நிற்கும் இந்த ஆவாரச்செடிகளைப் பார்த்திருக்கிறாள். ஆனால் இந்த வருசம் போன்று தளதளவென்று செடிகளும், ஏகத்துக்கும் மஞ்சளைக் கொட்டிக் காய வைத்தமாதிரி பூக்களுமாய் அவள் எப்போதும் பார்த்ததேயில்லை. நடுவே திட்டாய்த் தேங்கி நிற்கும் குட்டையைத் தவிர்த்து நாலாபக்கமும் மறிச்சியைக் காவலுக்கு வைத்தமாதிரி எங்கும் சங்கமாய் பூக்கள்தான். சிலுசிலுப்பான ஈரக் காற்றுக்கும், தலையாட்டி நிற்கும் மஞ்சள் பூங்கொத்துகளுக்கும், ஈக்கு ஈக்காய் இதழ்பிரித்துப் பார்த்துவிட்டுத்தான் நகருவேன் என விடாது பறந்துகொண்டிருக்கும்

வண்டுகளுக்கும், கிழக்கே சீய்த்து இளங்கதிர் காட்டி விரியும் சூரியனுக்கும்... பூமாவிற்குத் தாங்க முடியவில்லை. தன்னைப்போலவே இந்த பூமியும் புதிதாய் பூத்துக் குலுங்கி நிற்கிறதோ என்கிற மாதிரியான உற்சாகத்தில், பூமா கையிலிருந்த பூலாப்பூவைப் போட்டுவிட்டு செடிகளின் ஊடே ஓடுகிறாள். ஆவாரம்பூக்களை வருடுகிறாள். பூக்களோடு செடியை மார்பில் அணைத்து உச்சிமுகர்கிறாள். ஆனந்தம். பேரானந்தம். மஞ்சள் வனத்தில் ஒரு சிட்டுக்குருவியைப்போன்று அவள் ஓட்டமும் ஆட்டமும்.

“ எக்கா...”

திரும்பினால், செல்லப்பாங்கி பசங்களும், தேவகி வீட்டுப் பசங்களும் கையில் வைத்திருந்த ஆவாரம், பூலாப்பூக் கொத்துகளை நீட்டுகிறார்கள். “ இந்தாங்க எக்கா.... ஒங்க ஆட்டம் ரொம்ப நெல்லா இருந்துது....”

அவளுக்கு வெட்கமாகிவிட்டது. மழுப்பினாள் “ இல்லிங்கடா... எந்த வருசமும் இல்லாம இந்த வருசம் ஆவாரம்பூ பூத்துருக்கறத பாத்ததும் எனக்குத் தாங்குல. அதான் பாத்துக்கிட்டு நின்னன். சரி வுடுங்கடா. எப்ப ஊர்லேர்ந்து வந்தீங்க.”

“ நேத்து ராத்திரிதான் வந்தம்க்கா..... காலையில கௌம்பி வர்றப்ப ஒங்க வூட்டப்பக்கம் பாத்தம். எங்க அம்மாதான் பூமா அக்காள்லாம் வராது. நீங்க போங்கடான்னு சொல்லிட்டுது..” செல்லப்பாங்கி அண்ணியின் பையன்களில் இளையவன் ரமேசு சொன்னான். செல்லப்பாங்கி அண்ணி சொன்னதின் காரணத்தை யோசித்துப் பார்த்த பூமாவுக்கு லேசான சிரிப்பு வந்தது. வயதுக்கு வந்து தாவணி போட்டு பெரிய மனுசியாகியதெல்லாம் மறந்து இன்னும் சின்னப்பிள்ளை போன்று அறியாப்பசங்களிடம் பேசிக்கொண்டிருப்பது அவளுக்கு என்னவோ போல் இருந்தது. “ சரிடா. நானும் நாலு ஆவாரம்பூவு ஒடிச்சிக்கிட்டு வர்றன். கௌம்புங்க.”

“ மாட்டுக் கட அன்னைக்கு நெறைய ஒடிச்சிக்கலாம். சும்மா சாங்கத்துக்கு நாலு ஒடிச்சிக்கிட்டு வா யெக்கா...” வடலூரில் குருகுலத்தில் படிக்கிற தேவகி பையன்களில் பெரியவன் சிவா சொல்லியபடி போய்க்கொண்டிருந்தான்.

போன வருசமெல்லாம் இந்தப் பசங்களுடன் வந்து, ஆட்டமும் பாட்டமும் ஒரே ரகளையுமாக பூக்களை ஒடித்துக்கொண்டு திரும்பியது அவளுக்கு நினைவு வந்தது. பெருமூச்சி விட்டுக் கொண்டே கிணற்றுக்கொட்டகைப் பக்கம் பார்த்தாள். இன்னும் அவளின் அப்பா மும்முரமாக புல் அறுத்துக்கொண்டிருப்பது மறிச்சியின் நுணாச் சந்துகளினூடாகத் தெரிந்தது.

முழுசும் பூக்களாகவே நிறைந்திருக்கிற ஆவாரம் பூங்கொத்து ஒன்றைத் தேடினாள். ஏமாற்றம். ஏனென்றால் திரும்புகிற எல்லாப் பக்கங்களிலும் நேர்த்தியான பூங்கொத்துகள்தான். இதில் எதை ஒடிப்பது எதை விடுவது என்கிற குழப்பம். ஒன்றை ஒடித்தாள். இதைவிட அது பெரியது என மற்றொன்றை ஒடித்தாள். இப்படி யாய் இதுக்கு அது, அதுக்கு அடுத்தது என அவளை மறந்து வளைத்துப் பிடித்திருந்த கைகளுக்குள் கத்தையாய் ஆவாரம் பூங்கொத்துகள். ஒடித்துக்கொண்டே போனாள். திடுமென யாரோ எதிரில் தென்பட நிமிர்ந்தவளுக்கு இன்ப அதிர்ச்சி. எதிரில் இவளைப் போன்றே ஆவாரங்கொத்துகளுடன் சிகாமணி. ஒரு கணம் அப்படியே திகைத்து நின்று விட்டாள். என்ன செய்வது எனத் தெரியாத பதற்றம். பட்டென்று, ஞாபகம் வந்தவளாய் அவசரமாய்த் திரும்பி கிணற்றுக்கொட்டகைப் பக்கம் பார்த்தாள். அப்பா மறிச்சி மறைவிற்கப்பால் புல்லறுப்பில் மூழ்கியிருந்தார். அவள் இதழ்களில் தன்னையுமறியாமல் லேசான முறுவல் இழை.

ஒரே ஒரு கணம்தான் சிகாமணி பார்த்ததும். ஆவாரம் பூவிதழ்கள் முகத்தில் உரச, இதுவரைக்கும் ஆம்பிளை சட்டையில் தூர நின்றே மின்னலாய் பார்வையில் தெரிந்தவள் இப்போது மஞ்சள் மயிலாய் கைதொடும் தூரத்தில். அவனுக்குள்ளும் படபடத்துக்கொண்டிருந்தது.

இருவருக்குமே சூழல் மறைந்த ஒரு இனிய தருணம். இடையிலிருக்கிற சண்டை சாடி யாவற்றையுமே மறந்த நிலை. கைகளில் இருக்கிற பூங்கொத்துக்களை மாற்றிக்கொண்டு விட்டால் தடைகளை உடைத்தெறிந்து விடலாம். துடுக்கு சிகாமணியிடம் ஓடி அவனை முகர்ந்து பார்த்து வாலாட்டியது.

திடுமென கொல்லையிலிருந்து கூப்பிடு குரல். “ பூமா..”

ஒற்றைநொடியில் இயல்புக்கு வந்த இருவர் முகத்திலும் ஏமாற்ற உணர்வு.

“ தே வர்றம்பா...” பதற்றத்தில் நடுங்கிய குரல்.

சாரைகளாய் சராலென்று அவரவர் விலகி, ஏதும் நடவாதவாறு பொய்யாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள்.

*

21

“ ங்க்கீய்ய்...” தொண்டையில் அடிவாங்கிய பன்றியின் கனத்த கடைசிக்குரல், கரிநாளுக்கு வரவேற்பு கொடுப்பது மாதிரியிருந்தது. அதிகாலையிலேயே வேலையை ஆரம்பித்துவிட்டார்கள் போலும்... ராசோக்கியம் எழுந்து வெளியில் வந்தார். தெளித்து இன்னும் கூட்டப்படாத வாசலில் சைக்கிளில் பூக்கூடையை வைத்துக் கொண்டு மருதூர் யேபாரி நின்றுகொண்டிருந்தான். நுரைத்து வழியும் பொங்கல் பானையைப்போன்று கூடையின் வாய்ப்பிருவங் களில் பூச்சரங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. உள்ளே நல்ல சாமந்திப் பூக்களும் நிறைந்திருந்தன.

சுற்றிலும் தூக்கம் கலையாத முகத்துடன் வைரம், தங்கம், கசப்பு, பூமா எனத் தாவுவதும் பார்ப்பதுமாக இருந்தார்கள். எல்லோருக்கும் சடைப்பூ பின்னி வைக்கும் ஆசை. அந்தியில் கோயில் முன்னால் கும்மி, திம்பி, கோலப் போட்டிகள் நடக்கப் போகிற நிகழ்வுகளில் ஆவல் ஓடிக்கொண்டிருந்தது. “ ஏம்மா வேணுமின்னா வாங்கிட்டு வுடுங்க, கருநாளும் அதுவுமா கால நேரத்துல போனாதான் யேபாரம் ஓடும்” பூக்காரன் அவசரப் படுத்திக் கொண்டிருந்தான்.

“ என்னா மாமா.... கறி வேணுமா...” வாசலில் நின்று கொண்டிருந்த ராசோக்கியத்தைப் பார்த்து, எதிரே தெருவுக்கும் அங்காண்ட கோயிலின் முன்னால் பூவரசுக் கழுந்தில் தலைகீழாக ஆட்டைத் தொங்கவிட்டு உரித்துக்கொண்டிருந்த தெற்கு வெள்ளூர் தங்கராசு கேட்டார்.

“ நாலு காலு மட்டும் குடன்...” குரல் தூக்கம் கலையாமல் கெட்டித்துப்போயிருந்தது ராசோக்கியத்திற்கு.

“ நாளைக்கி நெய்வேலிக்காரன் போடான்னு நெட்டித்தள்றப்ப இந்தக் காணிபூமிய எல்லாம் நாம ஒண்ணுந் தலையில தூக்கிட்டுப் போவப்போறது இல்ல. கையில இருக்கிற காசிய, இப்படி நல்ல நாளு பெரியநாளுல நெறமா பின்னம் ஒரு கிலோ கறிய வாங்கி வூட்ல ஒடம்பு சரியில்லாம இருக்கறவங்களுக்கு குடுக்குணும்னு இல்லாம இப்பதான் காலு வேணும், கொடல் வேணுமின்னு...” பல்லைக் கடித்துக்கொண்டு ஆட்டுத் தோலை உரித்தபடி தங்கராசு சொன்னார்.

தேவையில்லாமல் இப்படி இந்தக் காலையில் நிலம் எடுப்பதை ஞாபகப்படுத்தியது, இரண்டு மூன்று நாளாய் இந்த பொங்கல் முகாந்திரத்தில் மறந்திருந்தது திரும்பவும் வந்து சூழ்ந்துகொண்டு உருட்டுகிற மாதிரி நெருடியது. ஆனாலும் அவன் சொல்வது போன்று உடம்பு சரியில்லாமல் இருக்கும் பாஞ்சாலைக்கு, காலோடு கறியும் எடுத்துக்கொடுத்துச் சாப்பிடச் சொன்னால் தேவலாம் என்று பட்டது. " அர கிலோ கறியும் காலும் குடு போதும். அப்பறம் பன்னிக்கறி வேற இருக்க..."

பூக்காரன் சைக்கிளை தள்ளிக்கொண்டு போனான். வீட்டு மறைவோரம் வந்து ஒண்ணுக்கு இருந்தார். பக்கத்தில் முதல் நாள் மாட்டுப்பொங்கலுக்கு சவாரி போன வண்டி கழுவி, பூசைபோட்டு, வளையங்களில் பூங்கொத்துகள் கட்டப்பட்டு தேர்போல நின்று கொண்டிருந்தது. படலுக்கும் உள்ளேயிருந்த மாடுகளின் கழுத்தில் கோர்த்துக் கட்டப்பட்ட பூங்கொத்துகள் இன்றி வெறும் கயிறு மட்டும் தொங்க, நெற்றியில் சந்தனப்பூச்சில் செந்திலகம் அழியாமல் மிளிர்ந்து கொண்டிருந்தது.

" இந்த கோழிக் கூண்ட தொறந்து வுட்டா என்னாப்பா..." சொல்லிக்கொண்டே திறக்கப்போனவரை வாசல் கூட்டிக் கொண்டிருந்த பூமா பதறியபடி ஓடிவந்து தடுத்தாள். " இருப்பா. அம்மாவுக்கு ஒடம்பு சரியில்லண்ணு, சாவ அறுக்கறதா நம்ப அய்யனாருக்கு வேண்டிக்கிட்டன். இன்னஞ் செத்தநேரம் கழிச்சி புடிச்சித் தர்றன், போயி அறுத்துக்கிட்டு வாப்பா..."

மாட்டு கட்டுத்தெருவைச் சுத்தம் பண்ண சாணித்தட்டை எடுத்துக்கொண்டு போனார். " இருங்க நா அள்ளிக்கிறன்..." பூச்சியின் சத்தம் கேட்டுத் திரும்பினார். கொல்லைக்காட்டில் கிடந்து கருத்த உடம்பிற்கு தோதான சிவப்புநிற புதுச்சேலை... நேற்று மாட்டுக்கடை யன்று அய்யாயிரத்திற்கும் பூச்சிக்கும் புதுத்துணிமணிகள், கிழக்குமுகமாய் நிற்கவைத்து பாஞ்சாலையும் ராசோக்கியமும் கொடுத்தார்கள்.

வாங்கும்போது என்றைக்குமில்லாமல் பூச்சி அழுதே விட்டாள். " எனுமோ ஆண்டய மெச்சிக்கிற பண்ணக்காரங்களும் இல்ல. பண்ணக்காரங்கள மெச்சிக்கிற ஆண்டையும் இல்லம்பாங்க. வாசல்ல நிக்கிறன். தின்ன வவுத்த மின்னால வைச்சிக்கிட்டு பொய் சொல்லக் கூடாது. நாங்களும் குனிஞ்சி நிமுந்தம். நீங்களும் நெறக்க நாளு படி குடுத்தீங்க... தே ஏட்ட கௌப்பறன்னு நெய்வேலிக்காரன் சூத்துல மெளாத்த கட்டிவுட்டு விரட்றதுக்கு நிக்கிறான். ஏதோ காணி பூமி வைச்சிருக்கீங்க, அவங் குடுக்கற காசியில போற எடத்துல ஒரு பூமித்தாய வாங்கிக்கிட்டுகூட

பொழுத ஓட்டிடுவிங்க. ஆனா நாங்க.... எங்களுக்கு கையிம்காலுந்தான் தொண. வெறுங்கூடா நிக்கிற எங்கள தொருத்தனா எங்க போயி நிப்பம். ஒங்கள அண்டி வாழற நாங்க, நீங்களே இல்லன்னா எப்பிடிப் பொழைப்பம்...”

பூச்சி கண்ணைத் துடைத்துக் கொண்டு கரகரத்த குரலில் சொன்னாள் “ அப்பறம் ஏதோ ஆண்டவன் வுட்ட வழி. போற எடத்துல எங்கள மறந்துடாதீங்க. நாங்களும் கெட்டம் பொழைச்சம்னு கெடந்தா ஒங்கள மறக்கமாட்டம் சாமீ.”

“ அன்பார்ந்த வேப்பங்குறிச்சி வாழ் பொதுமக்களுக்கு, இன்று இனிதாய் நடந்தேறிய கரிநாள் விளையாட்டுப் போட்டி களின் பரிசளிப்பு விழாவிற்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” ஒற்றை விசிப்பலகை போட்டு ரேடியோ சாமான்கள் அடுக்கியிருக்க மைக்செட்டில் கணீரென்று பேசினான் அறிவழகன். கூட பரபரப்பாய் சிகாமணியும் நின்றுகொண்டிருந்தான்.

முன்னால் பத்திருபது வாண்டுகள் பொழுது முழுவதும் குதித்த களைப்பில் ஆவென்று குந்தியிருக்க, சுற்றிலுமாய் வயசுப் பெண்கள். திடுமென நீண்டுகொண்ட பூச்சடைகள், பின்னல்கள். பாவாடை சட்டையில் இருந்தது தாவணிக்கும் தாவணியில் இருந்தது திடுமென புடவைக்குமாய்... மயில் பாவாடைகள் பட்டுப்புடவைகள். அதுவும் கண்ணாறு விழுந்துவிடுகிறமாதிரி எல்லாம் ஒரே இடத்தில் நிற்கவும் தூரத்தில் இருந்து நோட்டம் விட்டபடி இளவட்டங்கள் நின்றுகொண்டிருந்தனர்.

ஊடாக பெரிய சனங்களும் தலைகாட்டி நிற்க தொடர்ந்து நடந்த கும்மி, திம்பி சுற்றலில் என சற்றே வேர்வை மின்ன, லேசான மூச்சுவாங்கலில் நின்றிருந்தவர்களைப் பார்க்கப் பார்க்க உற்சாக மாய் இருந்தது. இப்படிப் பரிசு, விழா என அதிகம் வந்து பழக்க மில்லாததால், பின்னுக்கு இருந்தவர்களை முன்னுக்கு மறைப்பாக இழுத்து இழுத்து விடப்பட்டதில்தான், பூமா முன்வரிசைக்கு வரவேண்டி வந்துவிட்டது.

“ காலையில் நடந்த கபடி போட்டி நம் மண்ணின் முதன்மை யான விளையாட்டு. நம் மண்ணை எதிரிகளிடமிருந்து காக்கவும், மீறி நுழைந்துவிட்டால் வளைத்துச் சிறைப்படுத்துவதுமான நம் வீரத்தின் வெளிப்பாடு. ஆனா இன்று நம் மண்ணை, தவழ்ந்து விளையாடிய தாய்மடியை நெய்வேலிக்காரன் பிடுங்கிக்கொள்ள விருக்கிற சூழல். இந்த

இக்கட்டான சூழலில் நம் மண்ணில் வாழ்ந்த கௌரவத்தை, மானத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வாய்ப்பாக இந்தக் கபடி போட்டி காலையில் நடத்தப்பட்டது. வெற்றி பெற்ற ‘ சீறும் சிங்கங்கள்’ அணிக்கு அதன் தளபதி பால்ராசுக்கு எனது பாராட்டுகள். இந்தப் பரிசளிப்பு விழாவிற்கு மதிப்பிற்குரிய நம் ஜி.ஆர். டாக்டர் வருவதாக இருந்தது. தவிர்க்க இயலாத சூழலால் வரமுடியாமல் போனதால், அவர் சார்பில் பரிசுத்தொகையாக ரூபாய் ஐநூறை வழங்குகிறோம்.” கைதட்டல்களூடே சொல்லி முடித்தபோது அறிவழகன் சற்று உணர்ச்சிவசப்பட்டவனாகத் தெரிந்தான். அதேபோல் சங்கம், கூட்டம் அது இதுவென்றால் சற்றே தயக்கம் காட்டுகிற பால்ராசுக்குக்கூட இந்தப் பரிசும், அறிவழகனின் பேச்சும் சற்றே உற்சாகப்படுத்தியது மாதிரி ஒரு தெளிவும் திராணியும் முகத்தில் கொப்பளித்தது. அதே வேளை தோல்விமுகங் கண்ட சதாசிவத்தின் ‘ பாயும் வேங்கைகள்’ புதிதாய்ப் போட்ட கரிநாள் போதையில் இறக்கமாக நின்று கொண்டிருந்தது.

அடுத்தும் அறிவழகனே தொடர்ந்தான் “ நம்ப அய்யாதான் சொல்வார். பெண்களின் பங்களிப்பு இன்றி நம்முடைய எந்தப் போராட்டமும் இலக்கை அடைந்துவிட முடியாது என்பார். ஒருவேளை காலடியில் கிடக்கும் நம் தாய்மண்ணைக் காப்பாற்ற முடியாமல் நம் போராட்டங்கள் தோற்றுப் போய்விடுகிற நிர்கதிக்கு தள்ளப்பட்டுவிட்டால்...” சொல்ல முடியாமல் அறிவழகனுக்கு குரல் இடறியது. பட்டென்று சிலிர்த்து பழைய உற்சாகத்தில் பேசினான் “ அப்படி நடக்காது... அப்படி மீறி நடந்துவிட்டாலும், நம் மண்ணின் மரபுகளை, பாடல்களை, கதைகளை அடுத்த சந்ததிக்கு எடுத்துச்சென்று விதைக்கிறவர்கள் நம் தாய்மார்கள், இளம்பெண்கள். அந்த வகையில் சற்று முன்பு வரை நடைபெற்ற பெண் களுக்கான கும்மி, திம்பி விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கு தம்பி சிகாமணி தற்போது பரிசுகளை வழங்குவார்.” சொல்லி முடித்தபோது அரைகுறை போதையில், கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த செங்கல்ராவுக்கு புன்சிரிப்பு. அதேபோல் அசலாம்பு அத்தை, வெள்ளைச்சி, அத்தை மகள் அமிர்தம் எல்லோருக்கும் பூமுகம்தான்.

சிகாமணி பரிசு வழங்குவார் என்றதும், பெண்கள் பகுதியில் முன்னால் நின்றுகொண்டிருந்த பூமாவிற்கு திடுக்கென்று போய்விட்டது. கும்மிக்கு முத்துக்கண்ணுவிற்கும், திம்பி சுத்துவதற்கு பூமாவும், சித்தப்பா மகள் வைரமும் எனப் பரிசுக்குத் தேர்வாகி யிருப்பதாகச் சற்றுமுன்னர் அறிவிப்புகள் சொல்லப்பட்டிருந்தன.

பூமாவிற்கு ஒரு கணம் என்ன சொல்வதென்று தெரிய வில்லை. சிகாமணி மேற்பார்வையில்தான் விளையாடினோமா... அறிவழகன் மாமாதானே குறுக்க நெடுக்க வந்து உன்னிப்பாக விளையாட்டை கவனித்துக்கொண்டிருந்தார். இவன் எப்படி... அப்பா என்ன சொல்வாரோ, அண்ணன் என்ன சொல்வானோ.... வேர்த்து விறுவிறுப்பாய் சடசடப்பில் நின்று கொண்டிருந்தாள்.

கும்மிப்பாடலில் முதலிடம் பிடித்த முத்துக்கண்ணு ஆயாவிற்கு இப்போது பரிசுத்தொகையை வழங்குவார். அறிவழகன் சொல்லவும் முத்துக்கண்ணு ஆயி வெட்கத்தில் நெளிந்து குழைந்துகொண்டே வந்தாள்.

“ குட்ட வெட்டி ஏலேலோ கொளமும் வெட்டி, கொறவமீனு ஏலேலோ கறி சமைச்சின்னு கொமுரிப் பொண்ணுமேரி துள்ளித் துள்ளி அங்க கொண்டான் அடிச்ச, இங்க எனுமோ குடும்ப கட்டுப்பாடு பண்ண பொம்மனாட்டி மாதிரி அடிமேல அடிய வைச்சிப் போற...” கணேசன் பொண்டாட்டி செல்லப்பாங்கி மெல்ல இணுக்கவும் ஊரே சிரித்தது.

சிகாமணியிடமிருந்து பரிசுத்தொகையை வாங்குகிறபோது, முத்துக்கண்ணு ஆயாவிற்கு மொளுக்கென்று கண்களில் திரண்டு கொண்டுவிட்டது. “ எனுமோ சாமிவுளா... நாம் பாக்க பொறந்த புள்ளிவோ, எங்களப் பாத்து மார்க்கு போட்டு பணத்த குடுத்து வாழ்த்துறீங்க. அந்த அய்யனார் புண்ணியத்துல மேலைக்கிலாம் ஒரே எடத்துல இந்த மண்ணுல இருப்பமா, இல்ல ஒண்டுக் குடுத்தனமா அங்கங்க எங்கியாவுது ஒட்டிக்கிட்டு நிப்பமான்னு தெரியில. ஆக மொத்தத்துல அந்த அய்னாரு, எங்கள வுடுங்க நாங்க வெறும் மரம், ஒங்கள எல்லாத்தையும் நெல்லபடியா வைக்கிட்டும்.” சொல்லி முடிக்கையில் குரல் பிசிறியது.

கூட்டம் இயல்புக்கு வர நேரங் கொடுத்து அறிவழகன் தொடர்ந்தான். “ அடுத்து, ஒரு உருட்டாம்... செம்பழமாம் என திம்பியில் சுழன்ற பூமாவிற்கும் வைரத்திற்கும் தம்பி சிகாமணி... பரிசு வழங்குவார்.”

வைரமும் தானுமாய் நின்றுகொண்டிருந்த பூமாவிற்கு கண்கள் இருண்டு போகிறமாதிரி இருந்தது. மெல்ல அடி எடுத்து வைத்தவளுக்கு நடக்கக் கூசியது. கிட்ட நெருங்கியும் விட்டாள். சிகாமணிக்கு ஒரே படபடப்பு. பரிசுத்தொகையை அறிவழகனையே கொடுக்கச்சொல்லி விடலாமா என்றுகூட உள்ளுக்குள் ஒரு யோசனை ஓடியது. ஆனால் ஒரு அசட்டுத் துணிச்சலில் கொடுப்பதற்கு கையை நீட்டிவிட்டான். சுற்றிலும் மின்மினிப் பூச்சிகள் பறக்கிற மாதிரியான மகிழ்வில் பூமாவும் துணிந்து கையையும்

நீட்டி விட்டாள். திடுமென குறுக்கே கொடுவாளை நீட்டியது போன்ற குரல். “ பூமா வாங்காத. எட்டத்த வா” அதட்டலோடு குந்தியிருப்பவர்களின் தலைகளில் கால் வைக்காத குறையாய்த் தாண்டினான் சதாசிவம்.

பூமாவிற்கு உடம்பெல்லாம் ஒருசேர ஓராயிரம் ஊசிகளைக் குத்தியது போன்ற வலி. அதற்குமேல் சிகாமணி அப்படியே வெலவெலத்துப்போய் நின்றுவிட்டான். அதோடு கூட்டத்தில் குந்தியிருந்த செங்கல்ராவும் விலுக்கென எழுந்து தள்ளாட்டத்தோடு தாண்டி வரவும், அவனுக்கு பட்டென்று இருள் கவ்வுகிற மாதிரியான சூழல்.

அறிவழகனும் இதை எதிர்பார்க்கவில்லை. சிரிப்பும் கெலிப்புமாய் இருந்த மொத்தக்கூட்டமும் பொட்டென்று பதட்டச் சூழலுக்குத் தாவிவிட்டது.

“ நீங்க குடுத்தாக் குடுங்க. இல்லன்னா கண்டவங்கிட்டலாம் எங்கூட்டு புள்ளைய கைய நீட்டச் சொல்லாதீங்க.” வந்த வேகத்தில் அறிவழகனை நெட்டாத குறையாய் எகிறவும், சற்றே சிகாமணி பின்னுக்கு ஒதுங்கினான்.

“ எந்தக் கம்னேட்டி எங்கூட்டு புள்ளைய கண்டவன்னு சொன்னது” சிகாமணியின் மறித்தலையும் மீறி வந்த சூட்டில் சதாசிவத்தின் நெஞ்சை நோக்கிக் கால் நீட்டிவிட்டார் செங்கல்ராவு. போதையில் குறியாய்ப் பிடிக்கவில்லையென்றாலும் லேசாய் கால் பட்டுவிட்டது. அவ்வளவுதான்.

“ வா பேச்சி வாயிலிருக்கக்குள்ள காலு மயிர நீட்றியா...” பின்னுக்கு நின்றுகொண்டிருந்த சதாசிவத்தின் சித்தப்பன் கனகராசு எட்டி செங்கல்ராவின் மயிரைப்பிடித்து பின்னுக்குச் சுழற்றி இழுத்துக் கெடாசினார். பற்றிக்கொண்டுவிட்டது. காசியும் மணிமாறனும் கனகராசுவை வளைத்துக்கொள்ள, குபீரென்று பாய்ந்த சதாசிவம் குறுக்கே நின்ற சிகாமணியை ஒரு நெட்டு நெட்டினான். அதற்குள் பாஞ்சாலை, ராசோக்கியம், அறிவழகன், அம்புசாட்சி, கணேசன், செல்லப்பாங்கி என மறித்து வளைத்து, பிய்த்து, சிம்பி சண்டையைப் பிரித்து ஈவு அத்து விடுவதற்குள் பெரும்பாடாய்ப் போய்விட்டது.

“ விடிஞ்சி எந்திரிச்சா ஏமூட்டு புள்ள ஊரு ஊருன்னு கெதியா கெடக்குது. இந்த கேப்னேசி நாயி கண்டவம் பட்டம் போடுது.” இடுப்புத்துணி அவிழ்ந்து ஒட்டுக்கோவணத்தோடு செங்கல்ராவு உறுமுகிறார்.

அறிவழகன், கணேசன் ரெண்டுபேருமாய் சதாசிவத்தை மறித்துக்கொண்டு போகப் பெருமுயற்சி எடுக்கையில் கனகராசு கிளறுகிறார். அவருக்கும் கடந்த போதைதான். “ ஏற்கனவே இருக்கற கேசோட இன்னும் ஒரு கேசப்

போட்டு இந்த கூத்தாடிப் பயல உள்ள தள்ளணும். இனிமே வுடவேகூடாதுடா...”

ராசோக்கியம் பரிதாபமாகக் கெஞ்சுகிறார் “ எலேய் என்னாடா இது. அவந்தான் எடுத்துப் போட்டன் கழுத்த முறிச்சன்னு நிக்கிறான்னா நீனுமாடா...”

“ அண்ண, ஒனக்கு ஒண்ணுந் தெரியாது. நீ சும்மா இரு. அவன வுடக்கூடாது. எட்டப் போ அண்ண. வுடுடி.” கையைப் பிடித்து இழுக்கும் அம்புசாட்சியை மீறிக்கடந்து நிக்கிறார் கனகராசு. இன்னும் இறங்காத கூரத்தோடு சதாசிவமும் அரக்குகிறான்.

அசலாம்பு செங்கல்ராவை இழுத்துக்கொண்டு நிற்க, வெள்ளைச்சி தன் பங்கிற்கு அண்ணனுக்கும் அண்ணன் மகன் சிகாமணிக்கும் ஆதரவாய் ஆரம்பித்தாள் “ வுடாம என்னா செய்யப் போறீங்க இப்ப..” தாட்டீகமான உடம்பிற்கு கூழாங்கற்களைப் போல வார்த்தைகள், கனகராசுவை நோக்கி எறிந்தாள்.

‘ கேக்கறவங்க கேக்கறாங்க. மறிக்கிறவங்க மறிக்கிறாங்க... ஒஞ் சிமிழு வாய அத்தோட மூடு..” பாஞ்சாலைக்குக் குரல் எடுபட வில்லையென்றாலும் சுளுக்கியைப் போல் வெள்ளைச்சியை நோக்கி நீண்டது.

“ ஒங்குளுதே சிமிழு மாரி சின்னதா இருக்கட்டும். நாங்க ஒண்ணும் கடங் கேக்க வல்ல. நீ வாம்மா எட்டத்த...” வெள்ளச்சியின் தடித்த மகள் அமிர்தகலசம், வலுக்கட்டாயமாக அம்மாவை இழுத்துக் கொண்டே பேசியவாறு வந்தாள் “ ரெண்டு சாணு மயிரும், சீப்பாங்கட்டையாட்டம் மூஞ்சியும் வைச்சிக்கிட்டு பெரிய தங்கச்சியாம் தங்கச்சி. இதுக்குப் போயி பரிசு குடுக்கிறதுல பூட்டுதாம். அதான் அழகுல பெரிய ரம்பையாச்ச, எதுக்கு வூட்ட வுட்டு வெளியே இட்டாறீங்க. என்னப் பாரு என் அழகப் பாருன்னு தெருவுல ஆட வுடுறீங்க... எட்டடுக்கு மாளிகையிலே எட்டி எட்டிப் பார்த்துக்கிட்டு எந்த எடைஞ்சலும் இல்லாம உள்ள இருக்குறது.”

தொடர்ந்து அவள் பேசிக்கொண்டே போனதைச் சிகாமணியால் தாங்க முடியவில்லை. “ அமிர்தம்...” கறாராய் அதட்டினான்.

“ க்கும்... இங்கதாம் மாமா கத்துவ. அங்க ஊரு ஊருன்னு கெடக்கற, ஒரு நாயி ஒன்ன மதிக்கமாட்டங்குது. இம்மாம் கும்பல் நிக்கிது. இப்ப என்னாடா அவன் அந்த ரூவாய, அந்தப் புள்ளை கிட்ட குடுத்தா என்னான்னு கேக்கறதுக்கு நாதியில்ல. பெரிசா கெம்பற...” அமிர்தத்தின் பேச்சால்

சிகாமணி ரொம்பவும் பாவமாய் அம்மா அசலாம்பைப் பார்த்துக் கெஞ்சாத குறையாய் சொன்னான் “ எம்மா எல்லாரையும் இட்டுக்கிட்டு போம்மா...”

எதிர்பார்க்கவில்லை அவன். அம்மாவும் பட்டென்று சீறுகிறாள். “ இப்ப என்னாடா ஒனக்கு? சின்னத்தனமா இருக்குது. அந்தப் புள்ள கேக்கறதுல என்னா தப்பு இருக்குது? சொல்லு. நீதான் ஊரு ஊருன்னு கெடக்கற. ஒனக்கு இந்த ஊருல யாரும் இல்ல.”

“ தே போ புள்ள. இருக்கட்டும். எல்லாம் கேக்காத இல்ல, மறிக்காத இல்ல. கருநாளு அன்னைக்கி எல்லாம் இப்பிடித்தான் இருப்பான். நாளப்பின்ன கேட்டுக்கலாம். வுட்டுட்டுப் போயி வேலயப் பாருங்க...” கரி படாச்சியின் கனத்த பேச்சில் மொத்தக் கூட்டமும் கலைய ஆரம்பித்தது.

ஊரைக் காலி செய்ய நிர்வாகம் துடித்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் விளையாட்டு, போட்டி, பரிசளிப்பு என இன்னும் கூடுதலாய் மக்களை ஒருங்கிணைக்கலாம் என நினைத்த அறிவழகன் முகத்தில் ஏகப்பட்ட சோர்வும் கவலையும்.

ரொம்பவும் திகிலடைந்தவனாய் சிகாமணி. கலைகிற கூட்டத்தில் ஏக்கமாகப் பார்த்தான். ஏமாற்றமே மிஞ்சியது. பூமா போய்விட்டாள்.

*

22

அடித்துப் போட்ட மாதிரி தெரு அமைதியாகக் கிடந்தது. எதையாவது காரணம் காட்டி சந்தடி சாக்கில் குடித்துவிட்டு வந்து ரகளை கட்டுகிற கணேசன் கூட மனங் கேட்காமல் வீட்டை விட்டு வெளியே வரவில்லை.

வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த பூமாவிற்குள், நடந்த அமளி துமளி கல்லாய் அழுத்துகிறது. அதம் பரப்புகிற அண்ணன். அலமலண்டு போய் அப்பா அம்மா. அரண்டு நிற்கிற சிகாமணி. அதைவிட ஆணி தரும்புகிறமாதிரி அமிர்தத்தின் பேச்சு. தாங்க முடியவில்லை. நினைக்க நினைக்கக் குமுறிக் குமுறி ஆத்திரம் அடைக்கிறது உள்ளுக்குள்.

அவளையுமறியாமல் கம்மங்கொல்லையில் பூத்து, ஆவாரங் காட்டில் வளர்ந்து எவருக்குமே தெரியாமல் ஆழ வேர்பாய்ச்சி நிற்கிற நேசம். அடிகாண வெட்டி அலசி வெயிலில் போட்டுவிட்ட அவலம். நிரந்தர இருட்டு. நெடுஞ்சுவர். மனதைத் தேற்றி எவ்வளவோ மெனக்கிட்டு, கடும் முயற்சிக்குப் பிறகு அவளுக்குள் கம்மங்கொல்லை விரிகிறது. ஆனால் எந்தச் சோலையிலும் பச்சையம் இல்லை; பழுத்துக் காய்கிற வலியில், சருகுகளாய்ச் சலசலக்கின்றன. குருவிகளும் ஊமையாய் அந்தர வெளியில் பறக்கின்றன.

“ இங்க என்னா எழவா வுழுந்து போச்சி, எல்லாம் இடிஞ்சி மாஞ்சிபோயி இப்பிடி மொடங்கிக் கெடக்குறீங்க?” அதட்டல் குரலில் பூமா எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு குந்தினாள். சுவரோரம் சுருண்டு கிடந்த பாஞ்சாலை திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. திண்ணையில் படுத்துக் கிடந்த ராசோக்கியத்திற்குக் கூட கிணுக்முணுக்கென்று வார்த்தையில்லை.

பூமாவுக்கு எழுந்துபோய் சாப்பாடு போட கொஞ்சம் கூட மனமில்லை. திரும்பவும் படுத்துக்கொண்டாள். சதாசிவம் அவனாகவே நின்று நின்று பார்த்துவிட்டு தானே போட்டுத் தின்றான். சாப்பிட்டு முடித்து எழுந்தவன் சொல்லிக்கொண்டான் “ நாங் கேட்டது ஒங்குளுக்கு தப்பாப் போச்சி. இப்ப என்னா நானா மறிச்சிக்கறன். நடுவூட்ல இட்டாந்து விருந்து வையிங்க. நாளைக்கி அவம் அப்பன் இன்னும் பெரிய கொடுவாள எடுத்துக்கிட்டு வெட்றதுக்கு வருவான்.”

பாஞ்சாலை ஆத்திரம் பொங்க வெடுக்கென்று எழுந்து குந்தினாள் “ வாய மூட்றா. கேக்கறதுக்கு ஒரு மொறதரம் இல்லியா. ஊரு பொதுவுல ஒரு காரியங்கவ நடக்கறப்ப சரிதான்னு போவுணும். அப்பிடியும் சரியில்லன்னா வான்னு நம்மூட்டு புள்ளிவுள கையில புடிச்சிக்கிட்டு எட்டத்ததான் வருணும். அத வுட்டுட்டு அம்மாந் தாண்டு தாண்டற. இதுல புதுசா குடி வேற. இதுலாம் நெல்லதில்ல தம்பி. ஊரு ஒலகத்துக்கு அஞ்சி குடும்பம் நடத்தக் கத்துக்க. ஆமா...”

திண்ணையிலிருந்து ராசோக்கியமும் ஆரம்பித்தார். “ பாஞ்சால, பெசாமப் படு. அவன் எரணியனுக்கு பெரகலாதன் பொறந்த மாதிரி நமக்கு வந்துருக்கான். எத நடத்தனாலும் நடத்துட்டும் வுடு.”

“ இந்த மாதிரி ஒழுவன பேச்சும் ஒவமான கதையும் பேசனதாலதான், அன்னக்கி அந்தக் கூத்தாடிப்பய கத்திய எடுத்து கிட்டு வந்து வெட்னான். இன்னைக்கி மாதிரி அப்பப்ப அவன் பல்லப் புடுங்கி வைச்சிருந்தா கிட்ட நெருங்குவானா. சரி. வாணாம் வுடுங்க. ஏந் தப்பாவே இருந்துட்டுப் போவுது.”

வடக்கே இரவு பத்துமணிக்கான சங்கு சன்னமாகக் கேட்டது.

தூ ங்குவதற்கு முயற்சி செய்து தோற்றுப் போவதை விடவும் எழுந்து குந்தியிருப்பது மேலாகப் பட்டது. சிகாமணி விரிந்து கிடக்கிற நிலா வெளிச்சத்தில் எழுந்துபோய் ஒண்ணுக்கு விட்டு வந்து குந்தினான். கோயிலடியில் நடந்த கந்தரகோலத்தின் சடசடப்பு இன்னமும் அடங்காமல் மனசுக்குள் ஆடிக்கொண்டே யிருந்தது. பெருமூச்சி விட்டுக்கொண்டு திரும்பவும் படுத்தான்.

ஒருபக்கம் இன்னலில் இடிபட்டுக்கொண்டு கிடக்கும் இந்த சமூகத்தின் தாழ்வுகளைத் துடைத்தெறிந்துவிட்டு மேலேறி வர இட ஒதுக்கீட்டுப் போராட்டத்திற்கான அழைப்பு. மறுபக்கம் தாய்மண்ணை எந்தக் கணத்திலும் பிடுங்கிக்கொள்ளத் தயாராய் இருக்கிற நிறுவனத்தின் கொடும் பிடியிலிருந்து மக்கள் வாழ்வைக் காத்து நிலைக்க வைக்க போராட்டத்திற்கான முயற்சி. எல்லாவற்றிற்கும் மேலாக தாங்கவே முடியாத கூத்தாடி அப்பனின் குடிகாரப் போக்கு. இந்த இக்கட்டில் கல்லில் நெல் முளைத்த மாதிரி வறண்ட நெஞ்சுக்குள்ளும் எதிர்பாராமல் பூத்து, இடை யறுந்து நிற்கிற பூமாவின் நேசம்... இனி தூக்கமே வராது என்கிற மாதிரி மேலேமேலே படிவுகள் வந்து வீழத் தாங்க முடியாமல் புரண்டு படுத்தான்.

கட்டில் கிறிச்சக் கொட்டியது.

“ சிகாமணி...” குரல் கேட்டு ஒருக்களித்துப் பார்த்தான். அறிவழகன்தான். குறட்டில் ஏறிக் கிட்டவரவும், வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து, உட்காரத் தோதாய் ஒதுங்கி இடம் கொடுத்தான். கொஞ்சம் பதற்றமாகவே கேட்டான் “ என்னா அண்ண... தூங்குல...?”

“ இல்லடா. எனக்கு ஆச்சரியமா இருக்குடா...” சொல்லிக் கொண்டே கட்டிலில் குந்தினான். “ நொள்ள நாலைஞ்சி வகையறாதான் இருக்கும் இந்த வேப்பங்குறிச்சியில. இதுல ரெண்டு மூணு குடும்பத்த தவிர்த்து, மீதிய சுத்தி சொயிட்டிப் பாத்தா வள்ளிக்கொடியா பள்ளிக்கொடியான்னு பூரா பங்காளின்னும் ஒறம்பறன்னும் ஒண்ணுக்குள்ள ஒண்ணுதான் எல்லாம். இவுனுவுள ஒத்துமையா வைச்சி ஊர்ல ஒரு பொது நிகழ்ச்சின்னு நம்பளால நடத்த முடியில... ஆயிரத்தெட்டு சண்ட, எடைஞ்சல்னு கந்தர கோலமாப் போயி... போதுண்டா சாமின்னு நமக்கு ஆந்தாந்து போவுதுடா...”

வெறும் நட்சத்திரங்களின் வெளிச்சம் மட்டுமே என்பதால் முகம் தெளிவாய்த் தெரியவில்லை என்றாலும் ரொம்பவும் உன்னிப்பாய் சிகாமணி கேட்டுக்கொண்டிருந்தான். அறிவழகன் தொடர்ந்து பேசினான் “ நம்ப அய்யாலாம் இம்மாம் பெரிய சமூகம், ஏகப்பட்ட அமைப்புங்க, எக்கச்சக்க தலைவருங்க... இதலாம் ஒருங்கிணைச்சி எப்பிடித்தான் மேலமேல போராட்டத்த முன்னெடுத்துக்கிட்டு போறார்னு ஆச்சரியமா இருக்குப்பா.”

ஏதோ பேச்சு புரியாத போக்கில் போய், கடைசியில் தெரிந்த திக்கில் திரும்பவும் சிகாமணி உற்சாகமானான். “ நம்ப ஊர் மாதிரிதான் அண்ண மேலயும். எத்தினி பேரோ ஆரம்பத்துல அய்யாவுக்கு வாக்கு குடுத்தவங்கள்லாம் அவருகிட்ட இப்ப இல்ல. செலபேரு எதிராக் கூட போயி அறிக்க வுட்டுக்கிட்டு நிக்கிறாங்க. ஆனா அதுக்குலாம் அய்யா சளைக்கில. லேசா மனச தளர விட்டாலும் அது முன்னெடுக்கிற முயற்சிய பெரிய அளவுல பின்னுக்கு இழுத்துடும். அதான் இந்த பிரச்சினைகளைத் திரும்பிப் பாக்காம போய்க்கிட்டியே இருக்காரு.” மேற்கில் பீக்கருவை மரங்களிலிருந்து சிள்வண்டுகளின் சத்தம் விடாமல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

அறிவழகன் பொறுமையாக நிதானமாகப் பேசினான் “ அதாண்டா. இது சம்பந்தமாதான் ஓங்கிட்ட பேசிட்டுப் போவலாம்னு வந்தன். அப்புறம் இந்த ஈழப் பிரச்சினைய பாரு. புலிகள் சிங்கள வனுவுளோட போராடறது ஒரு பக்கம்னாலும், ஒண்ணுக்குள்ள ஒண்ணா இருக்கவேண்டிய சகோதர

இயக்கங்கள சமாளிக்கறது பெரிய வேலையா இருக்கு. இந்தியா நாட்டாம பண்றதுக்காக அவுங்கள தூண்டிவுட்டு எங்கள அழிக்க இந்த உள்ளடி வேலய செய்யிதுன்னு புலிகள் வெளிப்படையாவே சொல்றாங்க. மீறி சமாளிச்சும் போய்க்கிட்டு இருக்கறாங்க...”

சிகாமணி சற்றே நிமிர்ந்து குந்தினான். குறள்மணி அண்ணனுடான நெருக்கத்திற்குப் பிறகு அறிவழகன் குறிப்பாய் ஈழத்தைப் பற்றி அதிகம் பேசுகிறான். அது தனக்கே புதிய தெளிவுகளை உண்டாக்குவதுபோல் சிகாமணிக்கு பட்டது.

அவனது ஆர்வத்தை வைத்து அறிவழகன் தொடர்ந்தான். “ இதலாம் எதுக்குச் சொல்றன்னா நம்ப குறள்மணி அண்ணன் சொல்றமாதிரி ஒரு பொதுப்பிரச்சினைக்காக வெளிய வந்துட்டா சுயநலம், சொந்த பந்தத்தோட சிக்கல் முக்கல் இதலாம் பாக்கக் கூடாது. இப்ப நம்பளயே எடுத்துக்க... இந்த நிமிஷம் வரைக்கும் நிலம் எடுக்கிற பிரச்சினையில முக்கியமா அலைஞ்சிக்கிட்டும் யோசிச்சிக்கிட்டும் இருக்கறம். அப்பறம் சாலை மறியல் போராட்டத்துக்கும் மக்களத் திரட்டியாவணும். நாம ஏதோ மத்தவனுவோ மாரி காரியங்கவ, ஊரு பொது நிகழ்ச்சின்னு காரணங்காட்டி குடிச்சிட்டு ஒளறிப் பொழுத ஓட்ற ஆளுவுளும் கெடயாது. நமக்கு தலைக்கு மேல ஏகப்பட்ட பொறுப்பும் இருக்கு. அய்யா எடுக்கிற முன்னெடுப்புல நாம எதிலியும் மொத ஆளா நிக்குணும்னு நமக்குள்ள ஒரு வெறியும் இருக்கு. இதலாம் வைச்சி நாம நடந்தேறிப் போவும்போது, பொழுதோட கோயில்ல நடந்த சச்சரவு மாதிரி நடக்கத்தான் செய்யும். அதலாம் பாத்து சுருண்டு சோந்துடக்கூடாது. என்னாதான் ரெத்தமும் சதையுமா இருந்தாலும் பக்கத்து வூட்டுக்காரனும், பக்கத்து கொல்லைக்காரனும் எப்பியும் நேசமா பாசமா இருந்தது கெடையாது. மீறிப் பேசிக்கிட்டு இருந்தாலும் உள்ளேர்ந்து வராது, உதட்டுலேர்ந்துதான் வரும். அதனாலதான் அவன் வாத்தா வக்காங்கறன், ஆத்தா பொண்டா ட்டிங்கறான். கத்திய எடு மம்முட்டிய எடுன்னு தாம்தூம்னு குதிக்கிறான்னுலாம் நாம யோசிச்சிக்கிட்டு தயங்கி நின்னுடக் கூடாது. ஒரு பொது விஷயத்துக்காக நாம வந்துட்ட பிறகு நாலுபேரு நாலு வெதமா பேச நடக்க கோபப்படத்தான் செய்வான். நாம மேல மேல மீறி மீறித் தாம் போவணும்.”

தொடர்ந்து பேசினான் “ நமக்கு இந்த சின்னப்பயலுவோ எதிரி கெடயாது. இவனுவோ கிட்ட போயி வெட்டியா மோதி மண்டையவும் ஒடைச்சிக்கக் கூடாது. நமக்கு எதிரே நிக்கிறது நெய்வேலிக்காரன்தான். ஊர் எடுக்குறதங்கறது தான் நமக்கு உயிர்பிரச்சனை. உயிர் போவுதுங்கறப்ப

இந்தச் சில்றப் பயல்லாம் தானா வந்து நம்ப கூட நின்னுப்பான். இதலாம் மனசுல வைச்சிக்கிட்டு அடுத்த கட்டத்துக்கு நாம என்னா செய்யலாம், எப்பிடிப் போவலாம்னு யோசன பண்ணிப் பாரு.” ஒவ்வொரு சொல்லும் சிகாமணியை உற்சாகப்படுத்துகிற, தூக்கி நிறுத்துகிற மாதிரியான தெறிப்புகள். வெகுநேர யோசனைக்குப் பின் தூக்கத்தையும் பாராமல் முடிவெடுத்து வந்த முயற்சியில் சற்றே பலன் கிடைப்பது மாதிரி சிகாமணி நிமிர்ந்து குந்திய விதம் அறிவழகனுக்குப் பெருத்த தெம்பைக் கொடுத்தது.

“ அதுலாம் ஒண்ணுமில்ல அண்ண. ஆளுவோக்குள்ள ஒரு சண்ட சச்சரவுன்னா பரவாயில்ல, குறுக்கால ஒரு வயிசி பொட்டப் புள்ளய நிக்கவைச்சி பத்துப் பேரு மின்னால இப்பிடின்னா...” இடையில் பேச்சைச் சற்று நிறுத்தினான். ஒரு கணம் வேர்க்கரை யானால் துண்டாடப்பட்ட செடியின் வதங்கல் போலத் துவண்டு இரைச்சல் நடுவே நிற்கும் பூமா உள்ளுக்குள் வந்து போனாள். தொடர்ந்தான் “ அதான் அண்ண மனசுக்கு ரொம்ப வருத்தமாப் போச்சி. அதோட எங்க வூட்ல இருக்கற ராவணகாசூரன், கண்டுங் காணாததுக்கு எங்க அத்த வூட்டு சாமாயிவோ அதம் பரப்பனது... பாவம் அந்தப் புள்ள. நம்ப அய்யா சொல்ற மாதிரி ஒரு கூட்டம் போராட்டம்னு, பொட்டப் புள்ளிவோ வர்றதே அரிதா இருக்குது. ஏதோ நல்லநாளு பெரியநாளு, அதோட இந்த ஊர் எடுக்கிற பிரச்சினையில நாம மின்னு நின்னு செய்றம்னு நம்ப பேச்சக் கேட்டு வெளையாட வந்த புள்ளைவோ தெகப்பூண்ட மிதிச்சாப்ல தெவைச்சி தெகமாறிப் பூட்டுது அண்ண...”

அறிவழகனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. சிகாமணி ஒரு நாளும் இப்பிடி யாருக்காகவும் இறங்கி நெகிழ்ந்து பேசியதே இல்லை. ஆனாலும் அவன் பேசுவதில் உண்மை இல்லாமலும் இல்லை. தள்ளுமுல்லு நடக்கிறபோது இவனும்தானே நின்று கொண்டிருந்தவன். முள்ளிடுக்கில் சிக்கிப் படபடத்துக் கொண்டிருக்கும் பட்டாம்பூச்சியைப் போல பூமா துடித்துக் கொண்டிருந்ததை அந்தக் கெடுபுடியிலும் பார்க்கத்தான் செய்தான்.

சற்றுநேரம் பொறுமையாக இருந்துவிட்டு அறிவழகன் பேசினான். தெற்கே கொல்லைவெளிப் பக்கமிருந்து மாடு ஒன்று கழுத்தில் கட்டப்பட்ட கட்டை தேயத்தேய தரதரவென இழுத்தபடி வந்துகொண்டிருந்தது. உள்ளே சிகாமணியின் அப்பன் இருமுவது கேட்டது. “ எனக்கும் ஒங்க குடும்பங்களுக்குள்ற சண்ட இருக்குன்னு தெரிஞ்சேதான், பரிச ஓங் கையால குடுக்க வைச்சன். ஏன்னா, ஊரு ஒத்துமையா இருந்து போராட வேண்டிய நேரத்துல இப்பிடி சண்ட சச்சரவு கோர்ட்டு கேசுன்னு அலையக் கூடாது.

அதலாம் மறந்து சமாதானமாப் போறதுக்கு இதுலாம் பொது எடத்துல ஒரு வாய்ப்பா இருக்குட்டும்னுதான் பாத்தன். அது என்னா டான்னா குறுக்க இருக்கற கால்முள்ளப் புடுங்கிட்டு, நெரந்தரமா கிளுவ முள்ளுல உசுர்வேலி வைச்சமாதிரி ஆயிட்டுது.” சொல்லி முடிக்கும்போது அறிவழகன் முகத்தில் தொய்வும் ஆயாசமும் தெரிந்தது.

“ சரி போயிப் படு அண்ண. எது நடந்தாலும் நடக்கட்டும். எல்லாத்தையும் பாத்துக்கிட்டுதான் போயாவணும்.” போர்வையை உதறியபடி எழுந்தான். ஆனால் உதறுவதால் எதுவும் போய்விடப் போவதில்லை.

‘ நெரந்தரமா கிளுவ முள்ளுல உசுர்வேலி’ அறிவழகன் போனபின்னும் வெகுநேரமாய் அந்த வார்த்தைகள் சிகாமணிக்கு அப்படியே உள்ளுக்குள் நிலைகால் போட்டு நின்றுவிட்டன. அங்காண்ட பூமாவும் இங்காண்ட இவனுமாய்.

*

23

சதாசிவம் வேலையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தான். வரவர அவனுக்கு வீட்டிற்குப் போகவே பிடிக்கவில்லை. வாரம் பத்து நாளாயிற்று, கரிநாள் அன்று நடந்த சண்டையிலிருந்து வீட்டில் யாரும் அவனுடன் சரியாகப் பேசுவது இல்லை. குறிப்பாய் பூமாவின் புறக்கணிப்பு அவனுக்குத் தாங்கமுடியவில்லை. காலையில் கூட எழுப்பிவிட ஆளில்லாமல், தாமதமாய் எழுந்து அடித்துப் பிடித்துக்கொண்டுதான் வேலைக்கு ஓடினான்.

கரிநாள் அன்று கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோமோ என்று அவனுக்குள் நெருடிக்கொண்டிருந்தது. போதை போட்டது தான் ரொம்பவும் தப்பாய் போய்விட்டது. கபடியில் தோற்ற ஆற்றாமையில் கூட்டாளிகள் ஊற்றிவிட்டு விட்டனர். இருமனசாய் தயங்கிக் கொண்டிருந்தவன், கடந்து குடித்து விட்டதுதான் சிக்கலில் மாட்டிவிட்டது. குடும்பத்திற்குத் தெரிந்து போனது ஒருபக்கம், குறிநெறி கெட்டமாதிரி ஊர்ப் பொது நிகழ்வில் மூக்கை நீட்டி அவமானத்தைத் தேடிக்கொண்டது மறுபக்கம். அறுத்துக் கொண்டேயிருந்தது அவனுக்கு.

“ வாடா சதா... எங்க போய்ட்டு வர்ற?” மந்தாரக்குப்பம் முடக்கில் திரும்புகிற போது குரல் கேட்டு நிமிர்ந்தான். டீக்கடையில் புல்லட்டை நிறுத்தி எதிர்பார்த்துக் காத்திருப்பதுபோல் தனபால் நின்றுகொண்டிருந்தார்.

“ வேலைக்கிப் போய்ட்டு வர்றங்க...” ஊரில் பெரியப்பா முறையாகத்தான் வரும் என்றாலும் பணத்தில் செல்வாக்கில் மிதந்து போய்விட்டதால் எல்லோருமே உறவுமுறைகளை விடுத்து ‘ ங்க...’ பட்டந்தான் பேச்சில். அவசரமாய்ச் சொல்லியபடி சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினான். கேரியரில் இருந்த மஞ்சள் ஹெல்மெட் காலில் சிக்கிக் கீழே உருண்டது.

“ பாத்துடா. என்னா யோசனையில இருக்கற...” ஹெல்மெட்டை எடுக்கக் குனிந்தவனைப் பார்த்துச் சொன்னார்.

“ ஒண்ணும் யோசனையில்ல... சும்மா ஃபஸ்ட் ஷிப்டுக்குதான் போய்ட்டு வந்தன்.” தயக்கமாகச் சொன்னான்.

“ நீ செஞ்சது ரொம்ப சரிடா...” உடைக்காமல் பேசியதும் சதாசிவத்திற்கு ஒன்றும் புரியவில்லை. “ ஒரு வாரமா ஒன்ன பாத்துப் பேசலாம்னு

பாக்கறன். ஆளே கையில சிக்கமாட்டங்கற. கரிநாள் அன்னைக்கி நீ பேசனதுதான் ரொம்பச் சரி. எல்லாம் கேள்விப் பட்டன்.”

சதாசிவத்திற்குப் பட்டென்று விளங்கிவிட்டது. தானே அவசரப்பட்டுத் தாண்டி விட்டோமோ என்று குழம்பிக்கிடந்த மனசுக்கு ஒரு ஆதரவுக் குரல், பற்றுக் கரம். பள்ளத்தில் வெள்ளத்தைத் திருப்பிவிட்ட மாதிரியான ஒரு உற்சாகம்.

“ அப்பறம் எவன் வூட்டுப் புள்ளைக்கி, சபையில வைச்சி எவன் பரிசு குடுக்கறது... அதான் பாத்தன்... ஒரு நெட்டு... மறிக்கிலன்னா, ஒரு வாங்கு வாங்கியிருப்பன்.” சோர்ந்திருந்த உடம்பும் மனமும் அவனுக்கு கணநேரத்தில் துளிர்த்துக்கொண்டது.

“ அதான் நானும் சொல்றன். நாம் பாக்காத ஊரா. எப்பன் பண்ணாத பஞ்சாயத்தா. எனுமோ மேலேர்ந்து குதிச்ச மாதிரி அந்தக் கூத்தாடிப் பய மொவனும், அந்த ரெங்கநாதம் மொவனும்... கண்டும் காணாததுக்கு எங்க அறுந்த வாலு பால்ராசு பயலும் ஊரே உள்ளங்கையில இருக்கறமாதிரி ஆடறானுவோ. நா வேணான்னு பாக்கறன். செத்த நேரந்தான். மைன்ஸ்லேர்ந்து வர்ற நம்ப லாரியில நாலு பழைய இரும்பத் தூக்கியாந்து, ரெண்டு பேர் தோட்டத்திலியும் அரவப்படாமப் போட்டுட்டு, விஜிலென்சுக்கு தகவல் கொடுத்தா போதும். வந்து வெள்ளெலிய நெட்டி வாங்கற மாதிரி நாலு வைச்சி இழுத்துக்கிட்டுப் பூடுவான்.” கடந்து பேசினார் தனபால்.

சதாசிவத்திற்கு ஆரம்பத்தில் பேச்சு உற்சாகமாக இருப்பது போல் தோன்றினாலும் கடைசியில் பழைய இரும்பு, விஜிலென்சு என்று பேசியது ரொம்பவும் கூடுதலாகத் தெரிந்தது. இங்கு நெய்வேலி நிறுவனத்திலிருந்து நாலாகடையிலும் இரும்புகளை வண்டி வண்டியாய் கடத்திக்கொண்டுபோய் விற்பது சாதாரணமாய் நடக்கிற ஒன்று. எந்த போலிசும் விஜிலென்சும் ஒன்றும் கெம்ப முடியவில்லை. இதில் என்.எல்.சியே கையில் இருப்பது மாதிரி தனபால் ரொம்பவும் பேசியது இவனுக்கு ஒருமாதிரி பட்டாலும் சதாசிவம் பதிலேதும் பேசவில்லை.

கொஞ்சம் நேரம் கழித்து அவரே பேசினார் “ நீ ஒண்ணும் யோசிக்காத. எடுக்கறதாயிருந்தாலும் குடுக்கறதாயிருந்தாலும் அரசாங்கந்தான் முடிவு பண்ணணும். கூத்தாடி செங்கல்ராவு மொவனும், குப்பன் பேரன் அறிவழகனும் சேந்து முடிவு பண்றது இல்ல...”

கிழக்கிலிருந்து பெரியார் பஸ் ஒன்று புழுதியை வாரி விட்டபடி மேற்கே போனது. மேற்கிருந்து திணறிக்கொண்டு வந்த தார்ப்பாய் போட்ட

லாரியிலிருந்து கருப்பாய்த் தண்ணீர் ஒழுகியபடி வந்துகொண்டிருந்தது. ஒதுங்கி நின்று தொடர்ந்தார்.

“ நீ பாட்டுக்கும் ஊர்ல எதிலியும் கலந்துக்காம ஒழுங்கா வேலைக்குப் போ. ஊரு எடுத்ததும் எவனுக்கு வேல குடக்கறானோ இல்லயோ, ஏஞ் சொந்தப் பொறுப்புல நா ஒனக்கு வாங்கித் தர்றன். காண்ட்ரேட்ல வேல செய்ற ஒன்ன அப்பிடியே எம்ளாய்சா ஆக்கறது பெரிய மாக்காணம் இல்ல...” உறுதியாகச் சொன்னார்.

வேலைக்கு உத்திரவாதமாய் தனபால் அடித்துப் பேசியதும், சதாசிவத்திற்கு மகிழ்வு திரும்பிவிட்டது. உற்சாகத்தில் சொன்னான் “ நான்லாம் ஊர்ல எதியும் வைச்சிக்கமாட்டன். ஆனா எப்பந்தான் எனுமோ நெலம் கூடவே பொறந்து கூடவே தூக்கிக்கிட்டுப் போற மாதிரி, அந்தப் பேச்ச எடுத்தாலே ஆளுக்கு அப்பிடியே இருண்டு போவுது.”

“ அட அவனுவோலாம் காணாமூணா தெரியாத குத்தம், ரெண்டாலங்கெட்டதனமா மண்ணுல உழப்பறிச்சிக்கிட்டு கெடக்கறவனுவோ. அவனுவோ அப்பிடிதாம் பேசுவானுவோ. பத்துப்பேரு கையெழுத்துப் போட்டா பதினோராவது ஆளா தானாப் போடப்போறான். அப்பிடியே தனியாளா நின்னு எதுவும் சாதிக்கவும் முடியாது. குண்டுக்கட்டாத் தூக்கி எட்டத்த கெடாசிட்டு, நெய்வேலிக்காரன் டோசர வுட்டு, வூட்ட தரமட்டமா ஆக்கிட்டு போய்க்கிட்டியே இருப்பான்.” என்னவோ கடிக்கிற சித்தெறும்பைத் துடைக்கற சாக்கில் நசுக்குவதுபோல் அலட்சிய மாகப் பேசினார்.

“ சரிங்க. நா வர்றன்.” விடைபெற்றுக்கொண்டு தெம்பாய் வேலை நிரந்தரம் என்கிற உறுதியோடு சைக்கிளைத் தள்ளினான்.

“ அப்பறம் இன்னொன்னு...” ஏறப்போனவனைக் கூப்பிட்டு நிறுத்திக் கிட்டப்போய்ப் பேசினார் “ நெய்வேலி மேட்டர்னு இல்ல. சால மறியலு, சங்கம் அது இதுன்னு எல்லாத்தையும் சேத்து தான் எதுக்கும் போவாதன்னு சொல்றன். சங்கம், போராட்டம்னு போனாதான் நம்ப படாச்சின்னு அர்த்தம் இல்ல. ஊர் அறிஞ்ச பாப்பானுக்கு பூணூல் எதுக்கும்பான். அதுக்குப் போவுலன்னா நம்ப படாச்சி இல்லன்னு பூடாது. மீறிப் போயி அப்புறம் போலிசு கேசுன்னு எதாவது ஆயிட்டதுன்னா, விஜிலென்சு வைச்சி பாத்துட்டு கிரிமினலுக்குலாம் வேல இல்லம்பான். மறுபடி என்னாதான் நாம கெசகரணம் போட்டாலும் வேல குடுக்க மாட்டான்.” தனபால் இறுத்திப்பிடித்துப் பேசினார்.

“ அட நீங்க வேறங்க... எனக்குத் தெரியாதா... கிளிப்புள்ளைக்கி சொல்ற மாதிரி...” பொய்யாய்ச் சலித்துக்கொண்டான்.

“ இப்பிடித்தான் இந்தப் பால்ராசு பயகிட்ட பாடமாப் படிச்சி வைச்சிருந்தன். அது இந்தாண்ட காதுல வாங்கி அந்தாண்ட காதால வுட்டுட்டு, இன்னக்கி அந்த அறிவழகம் பய கூடப் போயி நிக்கிது. அது எங்கியாவுது போவுது. அவம் அப்பன் சம்பாரிச்சி வைச்சிருக் கான். அதுக்குத் தாங்கும். எங்க வேண்ணாலும் போவும். ஒனக்குலாம் தாங்காது. ஒழுங்கா சொன்னத மனசுல வைச்சிக்கிட்டு காலடிய பாத்துக்கிட்டு போய்க்கிட்டு இரு ஆமா...”

*

24

அய்யனார் கோயிலை ஒட்டி களம். சாணி கரைத்துப் போட்டு மெழுகியது மாதிரி கெட்டித்தாவு. சனி மூலையில் குவிக்கப்பட்டிருந்த போரிலிருந்து எள்ளுக் காய்களை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார் ராசோக்கியம். கொள்ளிச் சுள்ளிகளை அடுப்பிலிருந்து உருவிப்போடுவதைப்போல், பண்ணைக்குப் பண்ணை ஆவி பறந்துகொண்டிருந்தது.

காலையில் உப்புப்போட்ட நீராகாரத்தை மட்டும் குடித்து விட்டு வந்திருந்தது தாக்குப் பிடிக்கவில்லை. குனிந்து அள்ளி நிமிர்கிறபோது கண்ணாம்பு சுற்றுகிற மாதிரியிருந்தது.

அய்யாயிரம், பூச்சி, செல்லப்பாங்கி எல்லோரும் ராசோக்கியம் எடுத்துப்போடுகிற காய்களை களத்து விளிம்பிலிருந்து வரிசையாக உலுக்கி உதறிக் காயவைத்துக் கொண்டிருந்தனர்.

“ மூத்தவர, வுடு. நா ஏறி அள்ளிப் போடறன்.” அய்யாயிரத் திற்கும் குனிந்து அள்ளி ஈரக்காய்களைக் கொண்டுபோய் உதறி உதறி... கடுமையான வேலைதான், மூச்சுவாங்கியபடி கேட்டார்.

கொழகொழவென எள்ளுச்சுணை படிந்த வேர்வை, வயிறு சுருக்கங்கள் வழி கசிந்து போட்டிருக்கும் அண்டராயரின் மடிப்புகளில் கருமையாய் ஈரம் படர்ந்திருந்தது. பெருமூச்சி விட்டபடி சொன்னார் “ ஒனக்கு மட்டும் என்னா வயிசி இருவ திலியா நிக்கிது. வாணாம் வுடு. எள்ளுக்கா ஆவி ஒத்துக்காம பத்து நாளு படுத்துக்கிட்டினா... பாவம் பூச்சி மட்டும் என்னா செய்யும்.”

“ ஆண்டவம் புண்ணியத்துல பையன் தலையெடுத்து வேலைக்கிப் போவ ஆரம்பிச்சப்பறம், அந்த பயம்லாம் இல்ல மூத்தவர. ரொம்ப பொறுப்பான புள்ள. பாத்துப்பாங்கற தெம்புலாம் எப்பயோ வந்து போச்சி” அய்யாயிரத்திற்குத் தன் மகனைப் பற்றிச் சொல்கிறபோது எள்ளுக்காய்களின் கருப்புப் படிவையும் மீறி உள்ளுக்குள் ஒரு மலர்ச்சி. அள்ளி உதறிக்கொண்டிருக்கிற பூச்சிக்கும் பூரிப்புத் தாங்கவில்லை.

“ நம்ப படாச்சி வூட்டு வேலையா இருந்தா மட்டும் போயி ஒதவி குடுத்துட்டு வாங்க. மத்த எடத்துல எங்கியும் கூலிக்கின்னு வேலைக்கிப்

போவ வேணாம். கொண்டாந்து குடுக்கற காசிய வைச்சிக்கிட்டு லட்சணமா காயிகறிய வாங்கி ஆக்கித் தின்னுட்டு திண்ணையில படுங்கன்னுதான் சொல்றான். இருந்தாலும் ஒழைச்ச கட்ட எங்க ஓஞ்சி குந்த முடியிதுன்னு நாங்களாதாம் அங்க இங்க ஓடியாறது." பெருமை பிடிபடவில்லை அய்யாயிரத்திற்கு.

போரிலிருந்து கேட்டபடி எடுத்துப் போட்டுக்கொண்டிருந்த ராசோக்கியத்தின் உள்ளுக்குள் மகன் சதாசிவம் வந்தான். வரவர அவள் துண்டிரிக்கமாய் பேசுவது... இப்போதெல்லாம் பெரிய வீட்டுக்காரன் தனபால் கூட அங்கஇங்க எனப் புழுக்கை வேலையில் நிற்பது... பற்றிக்கொண்டு வருகிறது. ஊருக்குக் கொள்ளி வைக்க தீப்பெட்டியை எடுத்துக்கொடுக்கிறவன் தனபால். பாம்பு நிழலில் தவளையாய் இவன். நினைக்க நினைக்க எள்ளுக் காங்கையையும் தாண்டி உள்ளுக்குள் அதிகமாய் சூடு கொதித்தது. ஏதேச்சையாய் திரும்புகிறபோது வடக்கில் தெரிந்த முதல் அனல் மின் நிலையப் புகைக்கூண்டுகள் கண்ணில் பட்டபோது இன்னும் கூடுதல் கொதி கிளம்பியது.

தலையில் கூழ் குண்டோடு மறிச்சியின் சந்து வழியாக, பாஞ்சாலை களத்துப் பக்கம் வந்துகொண்டிருந்தாள். குண்டின் மேலிருந்த கிண்ணத்தை நுணாச் சிம்பு ஒன்று வழிமறித்தது. " பாத்து பாத்து... தலய தாத்தனாப்ல வா... கிண்ணம் உருண்டுடப் போவுது" போரிலிருந்தபடி ராசோக்கியம் பதறினார்.

வந்த வாக்கிலேயே சற்றுப் பின்னால் போய் லேசாய் குனிந்து பயபக்தியோடு எடுத்துவருகிற கரகம்போல நிதானமாய் பாஞ்சாலை வெளியே வந்தாள். பின்னாலேயே ஓடிவந்த துடுக்கு, ஓரத்து நுணாவின் அடியில் ஓடிக் காலைத் தூக்கியது.

" பூமா எங்க போச்சி? அதுகிட்ட குடுத்தனுப்ப வேண்டிது தான." செல்லப்பாங்கி எதிரில் போய் கையிலிருந்த வாளியை வாங்கி வந்தாள்.

" அதான், அது கையிலதான் பள்ளிக்கொடத்து சாவி இருக்கற மாதிரி, இதுபோயி தான் ரூம்ப தொறந்துவுட்டு பாடம் நடத்தியாவுணும்ங்கிற அரிபியில பள்ளிக்கொடம் பள்ளிக் கொடம்னு பறவாப் பறந்துது. சரி, அதும் சட்டிபான தொடக்கூடாது, நெற களத்துக்கு எதுக்குன்னு நா எடுத்தாந்தன்."

" சரி சரி. எடுத்தாந்தது பிக்கியில்ல. காத்துவாட்டத்துல எள்ளு சொண. அப்பறம் ஒத்துக்காம ஒனக்கு அள்ளையக்கட்டி இழுக்க ஆரம்பிச்சிடும்.

இப்பிடி இங்காண்ட சனிமூல குடுத்து வந்து நில்லு.” சொல்லிக்கொண்டே காய்களை அள்ளிப்போட்டார். களம் முழுவதும் நிறைவதற்கும், போர் காலியாவதற்கும் சரியாக இருந்தது. போர் இருந்த காலடியைச் சுத்தமாக்குகிறபோது போட்டிருந்த பூச்சிமருந்தையும் மீறி ஏகப்பட்ட எக்கட்டான்கள்.

எல்லோரும் அய்யனார் குளத்தில் போய் கையைக் காலைக் கழுவினார்கள். கழுவக்கழுவ எள்ளுக்காய்களின் கொழகொழப்பு விடவேயில்லை. அடியில் மணல் பாவிய துறையைக் கடந்து கொஞ்சம் ஆழத்திற்குப்போய்ச் சேற்றுமண்ணை எடுத்துத் தேய்த்துக் கழுவியதும் வேண்டாவெறுப்பாய் மெல்லப் போனது.

“ என்னா புள்ள பாஞ்சால... நாளுக்கு நாளு ஒடம்பு எனுமோ கழிப்புல ஆப்புட்டமாதிரி உருவு இல்லாமப் போவுது...” பாதையில் புழுதி பறக்க வண்டியோட்டிக்கொண்டு வந்த கரி படாச்சி களத்திற்கு நேரே வந்ததும் மூக்கணாங்கயிறை இழுத்து நிறுத்தியபடி கேட்டார்.

“ குடும்பத்துல இருக்கற புத்திரரு போக்கு ஒண்ணும் சரியில்ல. வாயத் தொறந்தா ஆகாசத்தும் பூமிக்குமா குதிக்கிறாரு. நெய்வேலிக் காரன் நெலத்த எடுக்கறானோ இல்லியோ இவனே மொதல்ல நெலத்துப் பத்தரத்த எடுத்துக்கிட்டுப் போயி ஒப்படைக்கணுங்கற மாதிரி நிற்கிறான்.” மெலிந்த உடம்பில் குரல் நைந்து வந்து கொண்டிருந்தது.

“ அதோட அந்த தனபால் பய கூடவேற இப்ப அடிக்கடி...” மூக்குப்பொடியையும் சேர்த்து இழுத்தார்.

“ அதான். இப்ப அங்கதான் ஏறிக்கிட்டு நிக்கிறாரு. அவுரு சொல்லிட்டாராம் ஊருக்காரனுக்கு எவனுக்கும் தலையால தண்ணி குடிச்சாலும் வேல குடுக்குற குறியில இல்ல. ஆனா ஒன்ன மட்டும் அப்பிடியே காண்ட்ரேட்லேர்ந்து நேர எம்பளாய்சா ஆக்கி வுட்டுடறன்னானாம்.”

கேட்டுக்கொண்டே வந்த ராசோக்கியம் சொன்னார் “ போயி, பேண்டு சட்டைய பொட்டி போட்டு, மடிப்பு கொலையாத போட்டுக்கிட்டு போவச் சொல்லு. எனுமோ அவன் நெகா தெரியாத நிக்கிது இது. நிக்கிட்டும்.”

“ சாப்புடம் மாமா...” சூழலை மாற்றுகிற மாதிரி பாஞ்சாலை கரி படாச்சியைக் கூப்பிட்டாள்.

“ நீங்க சாப்புடுங்க. வடிவேலு எள்ளுக்கா ஏத்தக் கூப்புட்டான். அதான் ஓட்டிக்கிட்டு வந்தன்.” கிளம்பினார்.

வெயில் ஏற ஏற கணகணவென்று எள்ளுக்காய்களில் சூடு ஏறி வாய்விட்டு வெடித்துச் சரசரவென எள்மணிகள் களத்தில் சிதறுகிற சத்தம் கேட்கவும் மறிச்சி நிழலில் குந்தியிருந்த ராசோக்கியம் எல்லோரையும் கிளப்பினார் " வாங்க ஒரு உலுக்கு உலுக்கிட்டு வரலாம்."

முதல் உலுக்கு என்பதால் எள்மணிகளை விடவும் சருகுகள் தான் அதிகம் இறங்கியிருந்தன. ஒரு பக்கத்திலிருந்து மெனையாக கைகளைக் கோர்த்து வாங்கியது மாதிரி உலுக்கிக்கொண்டே போய் களத்தில் அந்தாண்டப் பக்கம் ஏறிப் போகிற நேரம், கிழக்கே ஏதோ இரைச்சல் கேட்பது மாதிரி தெரிந்தது.

" இருங்க இருங்க..." ராசோக்கியந்தான் அமர்த்தினார்.

பாஞ்சாலை மறிச்சியைத் தாண்டி அங்காண்ட போய் நின்று பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கியபடி வந்து மறிச்சி நிழலில் குந்தினாள். " என்னா அத்த... கம்முன்னு வந்து குந்தற..." செல்லப்பாங்கி கேட்டாள்.

" ஓம் பக்கத்து வூட்டுக்காரி தேவகி கொல்லையில வேலத்தல யில தான் ஏதோ மகாநாடு நடக்குது போல்ருக்கு..." வழக்கம் போல் நடக்கிற கதையென்பது மாதிரி சாதாரணமாகச் சொன்னாள்.

" அந்த அம்மா நம்ப சொல்றது எத காதுல வாங்குது. காயிவோல்லாம் பழுத்து வெயில்ல வெடிச்சிக் கொட்டுது. இந்த அம்மா எதியும் பாக்காம ஊருக்குப் போயிருக்குது... அப்பறம் எந்தக் குடுத்தனக்காரந்தான் சும்மா இருப்பான். இருந்து இருந்து பாத்துட்டுதான், இன்னைக்கி காலையில வடிவேல் மாமன் ஆளு கூப்புட்டுக்கிட்டு இருந்துது. நாங்க வர்றதுக்கு செத்தமின்னதான் தேவகியம்மா வாயிலு பொடவையக் கட்டிக்கிட்டு மின்னால வந்துது. வந்ததும் கொல்லயில அந்த மாமன் மகாநாடு கூட்டியிருக்கும்..." செல்லப்பாங்கி தேவகியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

குடித்த கம்மங்கூழுக்கும், உடனடியாக உலுக்கத் தொடங்கிய தால் கிளம்பிய வியர்வைக்கும் திரும்பவும் உடம்பு, அய்யனார் கோயில் நிழலுக்கு இழுத்தது. நாலாபக்கமும் துறிஞ்சி மரங்கள் சூழ, சுற்றிலும் அடம்பாய் நாணாப் புதர்கள். சில்லென்ற மணல் தரை. குந்திய பூச்சி, அசதியில் சாய்வதற்கு முயன்றாள். " என்னா சூத்து இல்லாத கலயமாட்டம், பொசுக்கு பொசுக்குன்னு கீழ சாயற. வேல மெனக்கிட்டுப்போவும். சுத்திலும்

தெறிச்சிக் கெடக்குற எள்ளுவுள வெளக்கமாத்தால தள்ளு. வா” அய்யாயிரம் அதட்டினார்.

“ சும்மா புடுங்காத என்ன. வெய்ய தாங்குல.” பூச்சி சிரித்துக்கொண்டே சொல்லியபடி நேராக நிமிர்ந்து குந்தினாள்.

தெற்கிலிருந்து வேர்த்து விறுவிறுக்க வந்த கீரையனும் ரங்கநாதும் தலையில் இருந்த தட்டுக்கொடிக் கத்தைகளைப் போட்டுவிட்டு குளத்தில் இறங்கினார்கள். ஏனங்களில் ஏறிக் கொண்டிருந்த எறும்புகளைத் தட்டியபடி பாஞ்சாலை கேட்டாள் “ ரெண்டு சொம்பு கூழு இருக்கு. குடிக்கிறிங்களா அண்ண...”

“ வேற எதுக்குத்தாம் நேரா வூட்டுக்குப் போவாத எள்ளுக் களத்துக்கு வந்துருக்கம்” சிரித்துக்கொண்டே குளத்தில் முழுக்குப் போட்டுவிட்டு வந்தார்கள்.

ஆளுக்கொரு செம்பை நீட்டினாள். ரங்கநாது வாங்கிக் கொண்டே ராசோக்கியத்திடம் கேட்டார் “ என்னாடா, ஓந் தம்பிக்காரன் கொல்லிய அக்கடான்னு போட்டு வைச்சிருக்கான்.”

“ அவனுக்கு என்னா அண்ண. ஓட்டல் கட சாப்பாடும், வூட்டுக்கு வரும்போது கைகொண்ட காசியுமா தரவுல பொழுது ஓடறப்ப, நம்பளமாதிரி வெயில்ல கெடந்து லோலுபடுணும்னு என்னா தலையெழுத்து. அதோட ஓல குடுத்தப்பறம் எப்ப எடுத்தாலும் எடுக்கப்போற கொல்லியில என்னா பாடுபட்டுக் கிட்டுன்னு கூட இருப்பான்.”

ராசோக்கியம் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே “ இந்தாடா... இந்தாடா... தூக்குடா... தூக்குடா...” கரி படாச்சி மாடு களை அதட்டும் சத்தம் கேட்டது. கொஞ்ச நேர இடைவெளியில் சத்தமாகக் கூப்பிடுகிற குரல் கேட்டது “ எலேய்... ராசோக்கியம், செத்த அய்யாயிரத்த இட்டுக்கிட்டு இங்க வாடா...”

“ வர்றப்பயே பாத்தன். முடுக்கான செமையாதான் ஏத்திக்கிட்டு இருந்தாரு. வெயில்ல மாடு மட்டும் என்னா செய்யும். திருவல் போட்டுக்கிச்சி போல்ருக்கு. இரு, நாங்களும் வர்றம் போவும்...” அவசரமாய் வாயில் ஊற்றிக்கொண்டு எல்லோருமாய்க் கிளம்பினார்கள்.

நினைத்தமாதிரியே வலுத்த சுமை. சின்ன ஒரு எதுகட்டையில் மாடு திருவல் போட்டுக்கொண்டு நின்றிருந்தது. “ தூக்குடா... தூக்குடா...” ஆளுக்கொரு கை கொடுத்துத் தாங்கித் தள்ளவும் மேடேறிக் களத்துக்கு வந்தது.

“ சரி போவும்டா...” கீரையனிடம் சொல்லியபடி ரொம்ப சோர்வாய் ரங்கநாது எழுந்து குந்தவும், வேர்த்து விறுவிறுத்தபடி ஆவாரங்கட்டைகளைக் கடந்து குறுக்கே கோயில் முன்னால் சிகாமணி வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

வந்த வேகத்தில் பதட்டத்தோடு சிகாமணி கேட்டான் “ அறிவு அண்ண இந்தப் பக்கம் வந்துதாம, எங்க பெரிப்பா இருக்கு...”

அவன் பதட்டத்தைப் பார்த்துவிட்டு ரங்கநாதுக்கு மட்டுமல்ல களத்தில் எள்ளுச் செங்காயம் உலுக்கிக் கொண்டிருந்தவர்கள், எள்ளுக்காய்களை இறக்கிக் கொண்டிருந்தவர்கள், தூரத்தில் ஆடுகளை கொண்டுவந்து விட்டுவிட்டு நின்றிருந்த காசி படாச்சி என எல்லோருமே அவனைக் கொஞ்சம் மிரட்சியாகப் பார்த்தார்கள்.

சிகாமணிக்கு அவசரத்தில் சொல்ல வாய் கூடவில்லை. “ அவனுவோ வந்துருக்கானுவோ... பெரிப்பா...”

“ யாருப்பா...” ரங்கநாதுக்கும் குரல் பிசிறியது.

“ நெலம் எடுக்கறது சம்பந்தமாதான்...”

ராசோக்கியத்திற்குப் புரிந்துவிட்டது. மறிச்சி நிழலில் குந்தியிருந்த பாஞ்சாலை ஏதோ அவசரம் என்பது மட்டும் புரிந்து “ என்னாவாம்...” என்று சண்டைக்காரன் என்பதால் கிட்ட வராமல் கேட்டதும் பட்டென்று ராசோக்கியம் மடக்கினார் “ ஒண்ணுமில்ல அங்கியே இரு... பூச்சி, அதுகிட்ட போயி நில்லு. அது காதுல இந்த சேதி வுழுந்துதுன்னா இழுப்பு இழுப்பு வந்து தொலைச்சிடும்...”

தெற்கே வேகமாக அறிவழகன் கொல்லைப் பக்கம் சிகாமணி ஓடினான்.

“ என்னாவாம்...” பாஞ்சாலை கலவரமாக ராசோக்கியத்தை நோண்டினாள்.

“ ஒண்ணுமில்ல. பெசாம இரு. எல்லாம் நடக்கறதுதான் நடக்கும்.” தேவையில்லாமல் எரிந்து விழுந்த ராசோக்கியத்தை அதிர்ந்தமாதிரி பார்த்தாள்.

காயள்ளிப் போட்டபடி வண்டிமீது நின்ற கரி படாச்சி ஏதேச்சையாக ஊர்பக்கம் பார்க்கவும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வருவது தெரிந்தது.

“ புல்டோசரு, ஜீப்லாம் தே வருதுப்பா...” குரல் நடுக்கத்தி லிருந்தது.

*

மூன்று

25

கா லடிச்சத்தம் கேட்டால்கூட மளமளவென்று சேர்ந்து நிறைந்துகொள்கிற செந்தலை எறும்புகள் போன்று, சேதி கிடைத்த சிறிது நேரத்திற்குள் சூழ்ந்துகொண்டது கூட்டம். ஒழுங்கையை விட்டு அய்யனார் கோயில் திட்டில் நுழைகிற வழியில் மேலே நகரவிடாமல் சனங்கள் மறித்துக்கொள்ள, உறுமலை நிறுத்திவிட்டு ஊமையாய் நின்றுகொண்டிருந்தது, நிரவல் இயந்திரமான புல்டோசர். ஏதும் பேசாமல் ஓட்டுபவனும் உயரே குந்தியிருந்தான். பின்னால் ‘ தமிழ்நாடு அரசு’, ‘ என்.எல்.சி’ என முகப்பில் பொறித்த படி வந்து நின்ற இரண்டு ஜீப்புகளிலிருந்து இறங்கிய நால்வர், எந்தப் படபடப்பும் இல்லாமல் சுத்தமான காற்றைச் சுவாசித்து மகிழ்வதுபோல் பார்வையில் பட்டார்கள்.

அறிவழகனும் சிகாமணியும் முன்னால் நிற்க, செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு அலறியடித்துக் கொண்டு வந்து நிற்கிற சுவடு, எல்லோர் முகத்திலும் உடம்பிலும் தெரிந்தது. எல்லாக் கண்களிலும் ஒரு பயம் பரிதாபம், இனம் புரியாத குழப்பம். மேலெல்லாம் எள்ளுச் சுணையோடு நெரிசலில் அறிவழகனின் பின்னால் நின்றுகொண்டிருந்த ராசோக்கியத்திற்கு வந்து நின்ற இயந்திரங்களும் ஆட்களும் எமதூதர்களாய்த் தெரிந்தார்கள்.

இதைவிடவும் தாண்டிய கூட்டத்தையெல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம் என்பதுமாதிரி அலட்சியமாய் அதிகாரிகள் வந்து முன்னால் நின்றார்கள். புல்டோசரின் இறக்கிவிடப்பட்ட இயந்திரப் பல்லின் அகன்ற நுனி ஒரு ஆவாரஞ்செடியின் அடியை வேரோடு பிடுங்குகிறமாதிரி கடித்துக்கொண்டு நிற்க, வயதான தோற்றத்திலிருந்த அதிகாரி ஒருவர் பேசினார்.

“ நா ஒண்ணும் அசலூர் கெடையாது. புவனகிரிக்கும் பக்கத்துல கீரப்பாளையந்தான் சொந்த ஊரு. எங்க ஊருப் பொண்ணு கூட இந்த பக்கம் கொம்பாடிக்கும்பத்துலதான் வாக்கப் பட்டிருக்கு...” சமாசம்பந்தம் இல்லாமல் பேசிக்கொண்டே போனார். சனங்கள் தாங்கமுடியால் நின்றிருந்தார்கள்.

“ இந்த கத சொல்ற வேலலாம் இருக்கட்டும்...” கொஞ்சம் கோவத்தோடு பேசிய செங்கல்ராவு முதுகில் எங்கோ புழுதியில் படுத்து உருண்டுவிட்டு,

சேதி கேட்டுத் திடுமென ஓடி வந்த அடையாளம் அப்படியே தெரிந்தது. சிகாமணிதான் அடக்கினான் " செத்த நேரம் பேசாம இரு."

" என்னடா... ஊருக்குள்ள நொழைஞ்சி, ஒழுங்கையால உள்ள வந்து நடு நெஞ்சாங்கொலையில ஏறி நிக்கிற மாதிரி அய்யனார் கோயில்ல நிக்கிறாங்க. பேசாம இருக்கச் சொல்ற..." வடிவேல் தாண்டினான். கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த அவன் பொண்டாட்டி தேவகி அந்த நெருக்கடியிலும் அவன் பேசுவதை ஒரு பூச்சியை பார்ப்பதைப் போல் பார்த்தாள்.

" இருடா... மொதல்ல எதுக்கு வந்துருக்காங்கன்னு தெரியாம சுதிமதி கெட்டாப்ல..." இன்னும் ஈரம் காயாத இடுப்பு அண்டராய ரோடு நின்றிருந்த ரங்கநாது அமர்த்தினார்.

" ம்... பொண்ணு பாக்க வந்துருக்காங்க..." கும்பலில் யாரோ இணுக்கினார்கள்.

சற்றே கூட்டம் அடங்க, ஏற்கெனவே பேசிய ஆள் தொடர்ந்தார் " அநேகமா நானும் எதாவது ஒரு வகையில ஒங்குளுக்குச் சொந்தக்காரனாக்கூட இருக்கலாம். இதலாம் எதுக்கு ஒங்ககிட்ட சொல்றன்னா, நா அரசாங்கத்துல வேல செய்றவனா இருக்கலாம். தே இந்த சாருவோ தாசில்தாரா, ஆர்.ஐயா இருக்கலாம். ஆனா நாங்க யாரும் ஒங்குளுக்கு எதிரிங்க கெடயாது."

பின்னால் நின்றுகொண்டிருந்தவர்களும் முன்னால் வந்தார்கள். பின்னுக்கு நின்ற ஜீப்புகளின் பின்னாலும் ஊருக்குள்ளிருந்து சனங்கள் சரமாரியாய் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. தொடர்ந்து பேசினார் " ஊரு, நெலத்த டேக் ஓவர் பண்றதுக்கு ஏற்கனவே நிர்வாகம் ஒங்குளுக்கு நோட்டிஸ் குடுத்துருக்கு..." அவர் சொல்லி முடிப்பதற்குள் இடைமறித்தன ஏகப்பட்ட குரல்கள். " நாங்க யாரும் நெலம்புலம் வூடு வாச எடுக்கறதுக்கு சம்மதப்பட்டு ஒண்ணும் கையெழுத்துப் போட்டுக் குடுக்கல..."

வந்த ஆட்கள் ரொம்பவும் வலிந்து, பிரச்சினையாகி விடாதவாறு வழகொழ பேச்சாகப் பேசுவதுபோல் தெரிந்ததும் அறிவழகனும் சிகாமணியும் சனங்களை அமர்த்தியபடி கொஞ்சம் நிதானமாக எதுவும் பேசாமல் நின்றிருந்தார்கள்.

" அதாங்க. அக்ரிமெண்டு நோட்டிஸ்ல யாரும் சைன் பண்ணிக் குடுக்குல. அதனால பட்டா நெலத்த வுட்டுட்டு பொறம் போக்கு, தரிசப் பாத்து

மொதல்ல ஆக்குபை பண்ணி, வெவல் பண்ணுங்க அப்பிடின்னு அனுப்பியிருக்காங்க. இங்க இருக்கிற இந்த எடம் யார் பேர்லியாவது பட்டாவா இருக்கா? அப்படி இருந்தா நீங்க மறிக்கிறதுல நாயம் இருக்கு...” பள்ளிப் பசங்களிடம் கேட்பது போல், அய்யனார் கோயிலின் ஆவாரஞ் செடிகள் சூழ்ந்த திடலைக் காட்டிக் கேட்டார்.

“ இதுலாம் அய்யனார் பேர்ல இருக்கு. தொட்டுப் பாரு. என்னா விண்ணங்கத்தக் குடுக்கப் போறாம் பாரு” காசியின் ஆடு ஓட்டுகிற கழியை வாங்கி அடிக்கிற குறியாய் ஆட்டியபடி செங்கல்ராவு எச்சரித்தார்.

“ அதுலாம் நாங்க அய்யனார்கிட்ட பேசிக்கிறம்...” சிரிப்பை அடக்கியபடி வந்தவர்களில் ஒருவன் சொன்னான். இயந்திரத்தின் கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்தவன் லேசாய் சிரிக்கவும் செய்தான்.

உச்சி வெயில். உருக்குகிற காங்கை. உருகி வழிகிற வேர்வை. உள்ளுக்குள் பொங்குகிற ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அறிவழகன் குரலில் கொஞ்சம் கடுமையைக் காட்டிப் பேசினான் “ என்னா நக்கல் பண்றிங்களா...”

“ என்னப்பா இப்பிடி திடீர்னு நக்கல் பண்றியான்னு கேட்கற...” முதலில் பேசிய ஆள் கேட்டார்.

“ அப்பறம் என்னாங்க. குடுத்த நோட்டிசுக்கு சனங்க கிட்டேர்ந்து எந்தப் பதிலும் இல்லியன்னு கூப்புட்டுப் பேசாம, கேக்கறதுக்கு யாருக்கும் உரிமையில்லங்கற மாதிரி குட்டப் பொறம்போக்குல இப்பிடித் திடீர்னு வந்து நிக்கிறீங்க. கேட்டா அய்யனாருகிட்ட பேசிக்கிறங்கிறீங்க. தே பாருங்க, நீங்க நெனைக்கற மாதிரி இது ஒண்ணும் கிண்டல் கீநூட்டு யேபாரமில்ல. எங்களோட உயிர்பிரச்சின. காலடியில கெடக்கறது மண்ணு இல்ல, எங்க தாய்மடி. எங்க கோரிக்கை எதையும் காதுல வாங்காம இத எடுக்கணும் எங்களக் கௌப்பணும்னு நெனைச்சா நாங்க உசுர வுடறதுக்குக் கூடத் தயாரா இருக்கம்...” அறிவழகன் பேசப்பேச சனங்களுக்கு ரெத்தம் தெறிக்கிற மாதிரியான ஒரு உக்கிரம்.

சிகாமணியும் ஆரம்பித்தான் “ இங்க பாருங்க. ஒங்க மட்டத்துல இந்த பிரச்சனய தீக்கமுடியாதுன்னு ஒங்குளுக்கும் தெரியும். தெரிஞ்சிதான் வந்துருக்கீங்க. ரொம்ப வளத்தாதீங்க. இது சம்பந்தமா பேசறதுக்கு யாரையாவது ஒடனே இங்க வரச் சொல்லுங்க. இல்ல வீணா விவாதம் பண்றத வுட்டுட்டு வந்த வழியப் பாத்துக்கிட்டுத் திரும்பிப் போங்க...”

நால்வரில் ஒல்லியாக இருந்த ஒருவன், சின்ன கை ரேடியோ போன்ற

கருவியை எடுத்து எதுவோ கமுக்கமாகப் பேசினான். சொல்லி வைத்தமாதிரி கால் மணிநேர இடைவெளியில் நில எடுப்புத் துறையின் பெரிய அதிகாரி வந்து இறங்கினார். ஏற்கெனவே வந்தவர்களைப் புறந்தள்ளிவிட்டு, சனங்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கிட்ட நெருங்கவிடாமல் கூட ரெண்டு பேர், சாதா உடையில் இருக்கிற காவலர்களாக இருக்கவேண்டும், வளையம் போட்டபடி நின்றுகொண்டார்கள்.

பழந் தின்று கொட்டை போட்ட மனுசன் போல் அடையாளம் காட்டியது பெருத்த தொப்பையும் மின்னுகிற வழுக்கையும். தேர்தலில் நிற்கிறமாதிரி ஒரு வணக்கத்தையும் போட்டார். “ ம் சொல்லுங்க...”

“ என்னாங்க சொல்றது. குண்டுமில்லாம மருந்துமில்லாம புல்டோசரோட திடுதிப்புன்னு வந்து நின்னாக்கா என்னா அர்த்தம்... ஒரு தாக்குத் தகவல் இல்ல...” அறிவழகன் சாந்தமாகப் பேசப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டான்.

“ ஒங்க ஊர் தலையாரிகிட்டச் சொல்லி டாம் டாம் போடச் சொல்லியாச்ச.” தொந்தி சொன்னார் “ சரியா தகவல் கெடைச் சிருக்காது. சரி வுடுங்க. அப்பறம் ஒங்க ஊர் முக்கியஸ்தர் தனபாலுக்கும் தெரியும். எங்கப்பா... வல்லியா... அவுர இட்டுக்கிட்டு வராம இங்க வந்து...” கடிந்துகொண்டார்.

“ க்கும். ராவணாசூரன் அவந்தான் இந்த ஊர எடுக்கறதுல மொதக்குறியில நிக்கிறான். அந்த ஆளக் குறுக்கால இழுக்குறீங்க.” கரி படாச்சி கடந்து பேசினார்.

“ ஒங்க ஊர்க்காரரு அவுரப் போயி நீங்களே கொற சொல்றீங்க... சரி. அவுர வுடுங்க. இங்க ஒங்ககிட்ட யாரோட நாங்க பேசணும்” தொந்தி நேரடியாக விஷயத்துக்கு வந்தது.

“ தே எங்க பசங்க இருக்காங்க பாரு...” எல்லோரும் இவர்களைக் கைகாட்டவும், அறிவழவனும் சிகாமணியும் கடைசியாக வந்து சேர்ந்த பால்ராசையும் சேர்த்துக்கொண்டு மூன்றுபேருமாய் முன்னால் போய் நின்றார்கள்.

“ வாங்க... இப்பிடிக் கோயில் பக்கம் போயி நெழல்ல குந்திப் பேசுவம்...” தொந்தி முன்னே நடக்கவும், மந்தைகளாய்க் கூட்டம் பின்தொடரவும், காசி படாச்சி மறிச்சியைத் தாண்டிப்போன ஆடுகளை அதட்டினார்.

வண்டிக்குள்ளிருந்து எடுத்துவந்து போட்ட மடக்கு நாற்காலி யில் குந்தினார். மற்றவர்கள் அவர்கள் பின்னால் நின்று கொள்ளவும், கூட்டம் அமைதியாக

பதைபதைப்புடன் புழுதியில் குந்தியிருந்தது. திடுமென மறிச்சியின் சந்து வழியாக வந்து தலையாரி, தொந்தியைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டான். நடுத்தர வயது. பக்கத்தில் தெற்கு வெள்ளூர்தான் சொந்த ஊர். ஊருக்குள் மணியக்காரரையே பார்க்க முடியாது என்பதால் தலையாரியையும் அதிகம் பார்க்க முடிவ தில்லை. அவன் கூழைக்கும்பிடைப் பார்த்தே தலையாரி என்பதை முடிவு செய்துவிட்டது மாதிரி கேட்டார் " ஓம் பேரு என்னாப்பா..."

" அஞ்சிலட்சம் சாமீ..." திரும்பவும் கும்பிட்டபடி சொன்னான்.

" அஞ்சிலட்சமா..." கொஞ்சம் அதிசயித்தவர் தொடர்ந்தார் " ஒங்களுக்கு ஒண்ணும் டாம் டாம் போடச்சொல்லி தகவல் குடுக்குலியா..."

" இல்லிங்க சாமீ... எங்க ஊர்லியும் இந்த மாதிரி அய்யா மாருங்க வந்துருந்தத பாத்துட்டு, சரி நம்ப ஊர்லியும் இப்பிடி பிரச்சின உண்டேன்னு வுழுந்தடிச்சிட்டு ஓடியாறங்க..." உண்மை யில் டாம் டாம் போடச்சொல்லி எந்த மணியத்துக்கும் தலை யாரிக்கும் தகவல் கொடுப்பதில்லை. எல்லாம் முறைப்படி நடக்கிற மாதிரி ஒரு பேச்சுதான்.

தெற்கு வெள்ளூரிலும் இதேபோன்று அதாகுதம் தொடக்கம் என்பதைக் கேட்டறிந்ததும், இருந்த எல்லோர் முகத்திலும் கூடுதலாய் பீதி பரவத் தொடங்கியது.

" இப்பிடி முன்னால வாங்க..." என்று தொந்தி அறிவழகன் பக்கம் பார்த்துக் கூப்பிட்டார். மூவரும் கிட்டப்போனார்கள். ரொம்பவும் அலட்சிய பாவனையில் பேச்சின் தொடக்கமிருந்தது. " நம்ப வடலூர்ல வள்ளலார் இருந்தார். அவர் இறைவனை ஜோதி உருவில் அதாவது ஒளி உருவில் கண்டார். அதே மாதிரி ஜோதியில் இரண்டறக் கலந்தும் விட்டார். அவரைப் பின்பற்றிதான் இன்னமும் ஜோதி அதாவது ஒளியை தீபச்சுடர் தெய்வமாக வழிபட்டுக்கிட்டு இருக்கறம்."

அறிவழகன், சிகாமணி, பால்ராசு மூவருக்குமே தாங்க முடியாத எரிச்சல். பால்ராசு படிப்பு ரொம்பவும் குறைவுதான் என்றாலும், தெடலடியாய் பேசக் கூடியவன். பட்டென்று குறுக்கிட்டான் " ஏஞ் சார் போன கதையெல்லாம் புளி ஊத்திக் கரைச்சிக்கிட்டு... நடக்கிற கதய மட்டும் பேசுங்க..."

வெறுத்துவிட்டார் அந்த ஆள். கொதிப்புகளோடு குந்தி யிருக்கும் மனங்களைக் குளிரவைத்து மெல்ல சீராக்கி, பிறகு விஷயத்திற்கு போகலாம் எனப் பீடிகையோடு வள்ளலாரைச் சொல்லி ஆரம்பித்த அவரின் பேச்சு

கத்தியால் வெட்டியது போன்று துண்டாய் நின்றது.

மூவரில் சற்று வயதில் பெரியவனாகத் தெரிந்த அறிவழகனை பாவமாகப் பார்த்தார். அறிவழகன் திரும்பி பால்ராசை அமர்த்து கிறமாதிரி பார்த்தான். “ இருடா பால்ராசு. மேல நிர்வாகத்துல மக்கள்கிட்ட இப்பிடிலாம் சாமி பூமின்னு சொல்லி பேச்ச ஆரம்பிச்சாதான் அமைதியாக் கேப்பாங்க போவாங்கன்னு பாடம் படிச்சி அனுப்பியிருப்பாங்க... அதனால வடலூர்ங்கிறாரு. ஜோதிங்கிறாரு...”

சொல்லிக்கொண்டே போன அறிவழகனின் பேச்சில் திடுமென உள்ளே நுழைந்தான் சிகாமணி “ அடுத்து என்னா சொல்லப் போறார்னா... அப்பேர்கொத்த ஒளியை நாட்டு மக்களுக்கு குடுக்கிற தெய்வீக சேவையை நம்ப நெய்வேலி செஞ்சிக்கிட்டு இருக்கு. ஆனா இப்பக் குடுத்துக்கிட்டு இருக்கற ஒளி நாட்டு மக்களுக்கு பத்துல, அதனால நாட்டின் பெரும்பாலான இடங்கள் இன்னும் அறியாமை இருள்ல மூழ்கிக் கெடக்குது. அந்த அறியாமை இருளைப் போக்கி அறிவு ஒளியைத் தருவதற்கு இந்த நிலக்கரி நிறுவனத்திற்கு இன்னும் கூடுதல் நிலக்கரி தேவை. அந்த நிலக்கரி இந்த வேப்பங்குறிச்சி, தெற்கு வெள்ளூர், கூனங்குறிச்சிக்குக் கீழால தான் இருக்கு. ஆகையால நாட்டு மக்களுக்கு ஒளி கொடுக்கிற சேவையில நாமளே நம்பள இணைச்சிக்கிட்டு, நம்ப ஊர்களை நிறுவனத்திற்கு மனமுவந்து குடுக்கறதுதான் தர்மம். நிர்வாகம் ஒண்ணும் யாசகமாவும் கேக்குல. அதுக்குப் பதிலா மனசுக்கு நிறைவான வழியக் காட்டும். தகராறு பண்ணாம எட்டத்தப் போறது தான் மரியாத. மீறனா போலிசு வரும். அடிதடி நடக்கும். நாட்டு மக்களுக்கு சேவை செய்ற பணிக்கு எடைஞ்சலா இருக்கறதால ராசதுரோக குத்தம் பாயும்... இதானங்க சார்...”

வந்திருந்த அதிகாரிகள் மட்டுமில்ல, ஊரே அசந்து போய் விட்டது. மழைபோன்று பெய்து முடித்த சிகாமணியின் பேச்சு, கொண்டுவந்த ஒற்றை அஸ்திரத்தையும் ஒடித்துப் போட்டுவிட்ட மாதிரி அதிகாரம் நிராயுதபாணியாகப் போய்விட்டது. மெல்ல தொண்டையைக் கனைத்தபடி கொஞ்சம் எச்சரிக்கையாகவே ஆரம்பித்தார் “ ம்... பரவாயில்ல. நான் நெனைச்சத விடவும் ஊர்ல இளைஞர்கள் விழிப்பாதான் இருக்கறாங்க. வெரிகுட். இப்பிடித்தான் இருக்கணும்.” உள்ளுக்குள் திக்குமுக்காடிய நிலையிலும், அதிகாரி ஒரு பாராட்டைப் போட்டுத்தான் ஆரம்பித்தார். அவர் பாராட்டிற்கு யாரும் மயங்குகிறமாதிரி இல்லை.

“ சுத்தி வளைச்சிப் பேசாம, சுருக்கமாச் சொல்லுங்க. எங்களத் தெருவுக்கு கொண்டாந்துட்டிங்க. எங்க கோமணத்த உருவறதங் காட்டியும் நாங்க

மேற்கொண்டு போவுணும்..” சிகாமணியின் அப்பன் செங்கல்ராவு. ‘ குடிகாரக் கூத்தாடியா இப்படிப் பேசறான்...’ எல்லோரும் அதிசயமாகப் பார்க்கிறார்கள்.

இதற்குமேல் வளர்த்திக்கொண்டிருப்பது சரியில்லை என்பதை உணர்ந்த தொந்தி நேரடியாக விஷயத்துக்கு வந்தார் “ இந்த ஊரு, அப்புறம் நிலபுலம் எல்லாத்தையும் எடுக்கறதா அரசு முடிவு பண்ணிட்டுது. பொதுமக்கள் சேவைக்காக நிலங்களை கையகப்படுத்தறத எந்தச் சட்டத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது. அதுக்குப் பதிலா இழப்பீடுகள், மாற்று வசதிகள் அப்பிடிங்கறத பத்தி நீங்க மேல நிர்வாகத்துகிட்ட பேச்சுவார்த்த மூலமாதான் பேசித் தீத்துக்கணும்.”

கிணுக் முணுக் என்று எந்தச் சத்தமும் இல்லை. அப்படியே இடிந்துபோய்க் குந்தியிருந்தார்கள். பதைபதைக்க விழித்துக் கொண்டு குந்தியிருந்த கண்களில், ஆசைப்பட்டுக் கட்டிய வீடு, அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இடுப்பொடிய உழன்று கிடந்த மண், உயிராய் மதித்த நிலம், மரமட்டை, மாடு, மனை எல்லாமும் வரிசையாய் ஓடிக்கொண்டேயிருந்தன. ‘ எந்தச் சட்டத்தாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது’. மற்ற எல்லோரையும் விட ராசோக்கி யத்தை எள்ளுச் செங்காயத்தை உலுக்குவதுபோல் உலுக்கிவிட்டது. ராசோக்கியம் திரும்பி நின்று கொண்டிருந்தவர்களில் பாஞ்சாலையைத் தேடினார். “ இங்க குந்தியிருக்கன்...” இவரின் தேடுதலைப் புரிந்து கொண்ட பாஞ்சாலை பின்னாலிருந்து சத்தத்தைக் கொடுத்தாள்.

பாஞ்சாலை குந்தியிருந்தது அவருக்குச் சற்று ஆறுதலாக இருந்தாலும் அவள் கண்களை நேரடியாகப் பார்ப்பதற்கு பயம். ‘ இனி குந்தியிருந்து ஒரு புண்ணியமுமில்லை’ என்பது மாதிரி எழுந்தார். கூப்பிட்டார் “ பூச்சி...”

“ என்னாடா ஏந்திரிச்சிட்ட...” ரங்கநாதுக்கு குரல் கட்டியிருந்தது.

“ எள்ளுக்காயி உலுக்குணும் அண்ண. மேலைக்கி ஒடம்பு சூட்டுக்கு உச்சந்தலையில அரக்கித் தேய்ச்சிக்கறதுக்கு எள்ளுப் பொட்டுக்குங் கூட வழி இல்லன்னு முடிவானப்பறம், இந்த அய்யனார் புண்ணியத்துல ஆப்புட்ட நாலையும் நேராநேரத்துல உலுக்கி எட்ட எடுத்தாதான் நெல்லது...”

“ பேச்சுவார்த்த மூலமாதான் பேசித்தீக்கணுங்கிறீங்க. ஆனா கெவர்மெண்டு குடுத்த நோட்டீசுக்கு பதில் குடுக்குலிய, என்னா ஏதுன்னு இதுவரைக்கும் விசாரிக்கவே இல்லிய...” அறிவழகன் கேட்டான்.

“ அதான் தே... வந்துருக்கம...” அதிகாரி சிரித்தபடி சொன்னார்.

“ என்னா கழுத்துல கத்திய வைச்சிக்கிட்டு சமாதானம் பேசற மாதிரி, புல்டோசர கொண்டாந்து நிறுத்திக்கிட்டா...” கும்பலி லிருந்து குரல் வந்தது.

கடைசியில் பெரிய விசாரிப்பை முடித்து தீர்ப்பை வழங்குவது போல் அதிகாரி பேசினார். “ அதாம்பா ஒரு கை தட்னா ஓச வராது. ரெண்டு கையையும் சேத்துத் தட்னாதான் ஓசை. குடுத்த நோட்டிச வாங்கி எறவாணத்துல சொருவிட்டா எப்பிடி அடுத்த கட்டத்துக்குப் போவமுடியும்? மொதல்ல நெலத்தக் குடுக்கறதுக்கு சம்மதம், எந்த ஆட்சேபணையும் இல்லன்னு கையெழுத்துப் போட்டுக் குடுங்க. கெவருமெண்டுல ஒரு ரேட்டு இருக்கு. அத வுடு. நாங்கள்லாம் அக்கம்பக்கத்து ஏரியாக்காரங்கதான. எங்குளுக்கு நாட்டு நெலம எப்பிடி இருக்கு, வீடு வாச நெலபலத்துக்கு மார்க்கட் வேல்யு எப்பிடி இருக்குன்னு யோசன பண்ணி மேல சொல்றம். திருப்தியான தொகை கெடைக்கிற மாதிரி நாங்க ஏற்பாடு பண்றம்.” அதிகாரி சொல்லிக்கொண்டே போனார். புல்டோசரில் குந்தி யிருந்தவன் இறங்கி மறிச்சியில் அடம்பு கட்டியிருந்த நாணாச் செடிகளின் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தான்.

அதிகாரி திடுமென எழுந்தார். “ அப்பறம் என்னா கௌம்ப லாமா...” பின்பக்கம் நின்றுகொண்டிருந்தவர்களைப் பார்த்துக் கேட்டார்.

அறிவழகன் உட்பட குந்தியிருந்தவர்களுக்கும் பொக்கென போய்விட்டது. “ என்னா சார் ஏந்திரிச்சிட்டிங்க...” பதறியபடி கேட்டான்.

“ அப்பறம் என்ன... குடுத்துருக்குற நோட்டிசுக்கு கையெழுத்து போடறம், போடுலன்னு ஒரு வார்த்த சொல்லாம... அப்பறம் மேல பேசறதுக்கு என்னா இருக்கு...”

“ என்னாங்க திடீர்னு இப்படி ஒருநாளையில பேசி முடியிற விஷயமாங்க? மக்களோட வாழ்வாதாரப் பிரச்சின. குந்தியிருக்கிற மண்ண வுட்டுட்டு தலமேல துணியப் போட்டுக்கிட்டு போற மாதிரி உயிர்ப்பிரச்சின. எனுமோ கத்திரிக்கா யேபாரம் மாதிரி படியிலன்னு சொல்லிட்டு ஏந்திரிக்கிறீங்க. ஒருத்தரோட போறது கெடையாது, ஊர் விஷயம். அதுக்கும் அங்காண்ட இழப்பீட்டுத் தொக இருக்கு. மாற்றுக்குடியிருப்பு இருக்கு. அதைவிடவும் வீட்டுக்கு ஒரு ஆளுக்கு வேலைங்கற எங்க தலையாய பிரச்சின... இதப் பத்திலாம் பேச எங்குளுக்கு மேல தலமை இருக்கு, அமைப்பு இருக்கு, இதலாம் வுட்டுட்டு... கையெழுத்துப் போடு கையெழுத்துப் போடுன்னா..” அறிவழகன் பறக்கிற கோபத்தை அடக்கிக்கொண்டு பேசினான்.

“ சரி இப்பயும் ஒண்ணும் கெட்டுப்போவுல. ஏற்கனவே நோட்டிசு குடுத்து மூணு மாசத்துக்கு மேல ஆயிப்போச்சி. இன்னும் ஒரு மாசம்கூட எடுத்துக்குங்க. சரியா இன்னைய முப்பதாவது நாளுக்குப் பிறகு...” சொல்லிக்கொண்டே போனவர் நிறுத்தினார். எல்லோரும் அவரைக் குழப்பமாகப் பார்த்தார்கள். “ நா எதையும் அப்ப சொல்ற மாதிரி இருக்காது. ஏன்னா இது மக்களுக்கான அரசாங்கம்தான். ஆனா அரசு, நாட்ல பெரும்பாலான மக்கள் இருட்டுல, தொழில்ல பின்தங்கிக் கெடக்கறதப் பாத்துக்கிட்டு சும்மா இருக்காது. முன்னேற்றத்திற்குத் தடையா இருக்கற எதையும் யாரையும் குறிப்பா நீங்க... உட்பட... யாரையும் வுட்டு வைக்காது. சரி கெளம்புங்கப்பா...”

கிளம்பியவர் பட்டென்று ஏதோ ஞாபகம் வந்தவராய் நின்று நிதானமாகச் சொன்னார் “ நீங்க எனுமோ ஊரக் கூட்டணும் கலந்து பேசணும்ங்கிறீங்க. இன்னய நெலவரத்துக்கு இந்த ஊர்ல நிலம் குடுக்கறதுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லன்னு ரெண்டு பேர் கையெழுத்துப் போட்டுக் குடுத்து, மதிப்பீடும் போட்டு தே பாருங்க... செக்கும் வந்துட்டுது.” கும்பலைப் பார்த்து இரண்டு காசோலைகளைப் படங்காட்டுவதுபோல் காட்டிவிட்டு படக்கென பையில் வைத்துக்கொண்டார்.

சிகாமணி, அறிவழகன், ரங்கநாது, கரி படாச்சி உட்பட ஒட்டுமொத்தப் பேருக்கும் பகீர் என்று பற்றிக்கொண்டது. கொளுத்திப் போட்டுவிட்டு அதிகாரிகள் அலட்சியமாக வண்டியில் ஏறிக் குந்த ஜீப்புகள் முன்னே போக புல்டோசர் பின்தொடர, புழுதி கிளப்பியவாறு போய்க்கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் இருளடைந்து போய் நின்றுகொண்டிருக்க, ரங்கநாதுதான் கேட்டார் “ என்னாப்பா இப்பிடிச் சொல்லிட்டுப் போறான்?”

“ அரசாங்கம் வழக்கமா செய்ற வேலதாம்ப்பா இது...” அறிவழகன் சொன்னான்.

“ அது எவனுவோன்னு தெரியில. ஒத்துமையா இருக்குற ஊர்ல, யாரையும் கலக்காம திடீர்னு...” நடுத்தெரு தலையாட்டி தங்கராசு கேட்டார்.

“ இதுல என்னாடா பெரிய யோசன. ஒருத்தன் ஊருக்குள்ள பொருள வித்துகிட்டு இருக்கற கணக்கஞ் செட்டி. இன்னொருத்தன் ஊரையே விக்கிறதுக்கு தயாரா நிக்கிற தனபால் பய... முந்தாநாளு கூட பஸ் ஸ்டாண்டு மொடக்குல வேலிக்கு ஓணான் சாட்சிங்கற மாதிரி ரெண்டு பேரும் நின்னு பேசிக்கிட்டு இருந்தானுவோ. ஆனா இவ்வளவு சுருக்கமா

வேலய வைச்சிருப்பானுவோன்னு நா நெனைச்சிப் பாக்குல...” கரி படாச்சி சொல்லிக்கொண்டே போனார்.

‘ இவுரா இருக்குமா அவுரா இருக்குமா...?’ எனக் குழம்பிக் கொண்டிருந்த எல்லோருமே கரி படாச்சி சொல்லி முடித்ததும் ‘ இருக்கலாம்...’ என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

கடைசியில் பெருமூச்சி விட்டபடி ரங்கநாது சொன்னார் “ இதுக்கு மேல அசந்தர்ப்பமா இருக்கக் கூடாதுப்பா... இன்னைக்கி ரெண்டு பேரோட இருக்கறது நாளு ஆவ ஆவ கூடிக்கிட்டியே பூடும். நம்ப ஆளுவோ செம்பிலி ஆடுவோ மாதிரி சரசரன்னு கெளம்பிடுவானுவோ...”

சொல்லிக்கொண்டு இருக்கும்போதே சிகாமணி குறுக்கிட்டான் “ ஆமா அண்ண. இன்னைக்கி ஜி.ஆர்.டாக்டர பாத்துட்டு, குறள்மணி அண்ணங்கிட்ட பேசி ஓடந்தடன்னு தாசில்தார் அலுவலகத்து மின்னால ஒரு கவன ஈர்ப்பு போராட்டம் வைச்சாதான் கதைக்கு ஆவும்..”

அதையே எல்லோரும் ஆமோதித்தார்கள். களத்தில் நின்று கொண்டிருந்த ராசோக்கியம் கரைந்துபோன குரலில் கேட்டார் “ சொல்லுங்கப்பா. ஒரு ட்ரக்கு வைச்சிக்கிட்டு பின்னம் பத்து பேரா வேண்ணா விருத்தாசலம் ஜி.ஆர். டாக்டர போயி பாத்துப் பேசுவம்.”

“ இல்ல மாமா... இதுக்குலாம் கும்பல் வேணாம். நாங்க மூணு பேரு போதும். போய் பாத்துப் பேசறம். ஆர்ப்பாட்டம் வைக்கிற அன்னைக்கி மட்டும் குடும்பத்தோட வந்துடணும்.”

இறுகிய முகத்துடன் எல்லாவற்றையும் அய்யனார் மெளன மாகப் பார்த்துக்கொண்டு குந்தியிருந்தார்.

*

26

கா வல்துறை இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. அறிவழகன், சிகாமணி மட்டுமல்ல குறள்மணியால்கூட ஆரம்பத்தில் நம்ப முடியவில்லை. ஜி.ஆர். டாக்டர் மட்டும் கொஞ்சம் உறுதியாக இருந்தார். " அய்யா வந்து நின்னு, இந்த நிலப் பிரச்சினையை பேசனாதான், அரசாங்கமா இருந்தாலும் நிர்வாகமா இருந்தாலும் அசங்குவான். இல்லன்னா செவிடங் காதுல ஊதன சங்கு மாதிரிதான்."

நம்ப முடியாமல் சிகாமணி கேட்டான் " அய்யா சாலை மறியல் போராட்டம் வைச்சிருக்கிற இந்த அரிபரியில வருவாரா?"

குறுக்கே வந்த நோயாளியிடம் பேசிக்கொண்டே இடை இடையே இவர்கள் பக்கமும் ஜி.ஆர். பேசினார். " அய்யா சாதாரண ஆளு கெடயாது. அவுரு பெரிய மனிதத் தேனீ. இதுமாதிரி ஏகப்பட்ட போராட்டங்கள வெற்றிகரமா நடத்தி முடிக்கக் கூடியவர். கேட்டுப் பாப்பம். தேதி கொஞ்சம் மின்னப் பின்ன இருக்கும்."

குறள்மணியும் சொன்னார் " நீங்க சொல்றதும் சரிதான் அண்ணாச்சி. இதுவரைக்கும் எடுத்த கிராமங்களுக்குக்கூட தர்றன்னு சொன்ன உதவிகள நிர்வாகத்துல செய்யமாட்டங்கறான். அய்யாவை வைச்சி ஒரு எச்சரிக்கைய குடுத்தாதான் சரிப்படும்."

" இன்னங் கேசு வெளியில இருக்காப்பா..." கேட்டபடி ஜி.ஆர். எழுந்து வெளியே போய்விட்டு வந்தார். நல்ல வளர்த்தி. நடுத்தரப் படிப்பில் இருப்பவர்கள்கூட சாதி, சங்கம் என்று போனால் நாளை மறியல், சிறை என்று வந்தால் என்ன செய்வது என்று யோசிக்கும் போது மருத்துவமனை நடத்திக் கொண்டிருப்பவர், துணிந்து சங்க நடவடிக்கைகளில் இறங்கி, அய்யாவின் வழிகாட்டுதலில் தொடர்ந்து இயங்குகிறார்.

போனில் அந்த நேரத்திலேயே அய்யாவுடன் தொடர்பு கொண்டார். சரியாய் பதினைந்து நாள் இடைவெளியில் அய்யா தேதி கொடுத்துவிட்டார்.

' தொடர் சாலைமறியல் ஏன்?' விளக்கக் கூட்டம் மற்றும் நிலமெடுப்பு தொடர்பான அரசின் அடாவடிகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம். இனமானக் காவலர் அய்யா அழைக்கிறார். நாள்: **01.05.1987** இடம்: மந்தாரக்குப்பம்

பேருந்து நிலையம், நேரம்: மாலை 3.00 மணி.

தி ரும்புகிற பக்கமெல்லாம் சுவரொட்டிகளும், துண்டறிக்கை களும், மஞ்சள் கொடிகளுந்தான். திடுமென மந்தாரக்குப்பம் பேருந்து நிலையமே நீள அகலம் கூடிவிட்டதுபோன்று எங்கும் மனிதத் தலைகள். தங்களைச் சூழ்ந்திருந்த இருள் இத்தோடு அகன்றுவிட்டது போன்று எல்லோர் முகத்திலும் ஒரு தெளிவு. வேப்பங்குறிச்சி, தெற்குவெள்ளூர், கூனங்குறிச்சி மட்டுமல்ல ஏற்கெனவே நிலம் பறிக்கப்பட்ட வெள்ளையங்குப்பம், நண்டுகுழி, வளையசெட்டிக்குப்பம், வெண்ணக்குழி முதலாய், அடுத்து எடுக்கக் காத்திருக்கும் கத்தாழை, கரிவெட்டி, வீணங்கேணி உட்பட சேதி கிடைத்த இடத்திலிருந்தெல்லாம் பேருந்தில், டிராக்டர்களில், இரு சக்கர வாகனங்களில் வந்து குவிந்துகொண்டேயிருந்தனர். இழந்துவிட்ட, இழக்கப் போகிற வாழ்வாதாரங்கள் மீண்டும் கிடைக்குமா என்கிற ஏக்கப் பெருமூச்சுகள்.

சளைக்காமல் வண்டி வண்டியாய் காவலர்களைக் கொண்டு வந்து இறக்கிக் கொண்டேயிருந்தது காவல்துறை. எந்த நிமிடத்திலும் ஏதாவது ஒரு வழக்கைப் போட்டு எவரை வேண்டுமானாலும் உள்ளே தள்ளுவதற்குத் தயாராய் எதிர்பார்ப்பில் உலவிக்கொண் டிருந்தது உளவுப் பிரிவு.

மேடையில் ஜி.ஆர் டாக்டர் ஒருபுறம். மறுபுறம் குறள்மணி. முன்னே இருபக்கமும் சிகாமணியும் அறிவழகனும் தூண்களைப் போல நின்றுகொள்ள, பால்ராசு குறுக்க நெடுக்க தண்ணீர் கொண்டு வைக்கவும் போகவுமாய் இருந்தனர். எல்லா இளைஞர்களுக்கும் தாமும் போய் அய்யா முன்னால் நிற்க வேண்டும் என்கிற பேராவல். இடையிடையே டாக்டர் அய்யா வாழ்க... டாக்டர் அய்யா வாழ்க... கோஷம் கூட்டத்தைப் பிளக்க, குந்தியிருந்த எல்லோருமே ஒரு கட்டத்தில் அய்யா வாழ்க... என்று உரத்த குரலில் சொல்லத் தொடங்கினர்.

ஜி.ஆர். டாக்டர் பேசி, குறள்மணி பேசி, இறுதியாய் அய்யா பேசத்தொடங்கும்போது அரசு மின்சாரத்தை நிறுத்த எங்கும் ஒரே கூச்சல். அரசுக்கு எதிராய் நேரடி கோஷத்தில் இறங்க மீண்டும் விளக்குகள் ஒளிரத் தொடங்கின.

“ எம் இனமானச் சொந்தங்களே... வரலாற்றின் நெடிய பக்கங்களில் நாம் ஆண்ட பரம்பரையினர். இன்று பஞ்சைப் பராரிகளாக ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட, நொறுக்கப்பட்ட, வதைக் கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட...

இன்னும் எத்தனை பட்ட... களோ அத்தனையும் சுமந்து இன்று காடுகரையில் உழைத்து கூனிக்குறுகிக் கிடக்கிறோம்...” வயற்காட்டில் உழன்று கிடக்கும் உழவனின் கனத்த குரல். ஒடுங்கிச் சிவந்த தேகம். கண்களில் சுயமரியாதைச் சுடரேற்றிய தந்தை பெரியாரின் தீர்க்க ஒளி.

அய்யா இந்த இனத்தைப் பற்றி, அது ஏமாற்றப்படுகிற விதம் பற்றி, இனி எதிர்கொண்டு இதிலிருந்து மீள்வது பற்றி... இட ஒதுக்கீட்டின் அவசியம் பற்றி... பேசிக்கொண்டேயிருந்தார். கேட்டுக் கொண்டிருந்த எல்லோருக்குமே எவ்வளவு தூரம் நாம் ஏமாற்றப் பட்டிருக்கிறோம் என்கிற உண்மை நிலவரத்தை உணர்ந்த அதிர்வும் அழுத்தமும். உறைந்துபோய்க் குந்தியிருந்த ஒவ்வொருவருமே ‘ நெலம் எடுக்கற பிரச்சினலாம் அப்பறம். மொதல்ல இனம்... அப்பறந் தான் வூடு, வாச எல்லாமும்...’ உள்ளுக்குள் மாறியிருந்தார்கள்.

ஆனால் அய்யா இனம் மட்டுமல்ல, இந்த நிலமும்தான் முக்கியம் என்று அடுத்த கட்டத்துக்கு வந்தார். “ இன்று மே தினம். சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்... எனப் பாவேந்தர் பாரதிதாசன் தொழிலாளிகளைப் பற்றிப் பாடுவார். ஆக தொழிலாளி என்பவன் தொழிற்சாலைகளில் மட்டும் வேலை செய்கிறவன் அல்ல. வயலில், முந்திரிக்காட்டில்... விடிந்தால் காடு சாய்ந்தால் வீடு என வாழ் கிறவனும் தொழிலாளிதான்...” நெய்வேலியைச் சுற்றியுள்ள வளமான நிலபுலங்களைக் கொண்ட விவசாயிகளை, தொழிலாளிகளை அவர்தம் வாழ்வின் சேவைகளைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

அவரின் பேச்சு நிறுவனத்தை, அரசை நோக்கித் திரும்பியது. “ நாட்டு முன்னேற்றம் என்கிறீர்கள். அதற்கு நிலம் கையகப்படுத்த வேண்டும் என்கிறீர்கள். யாராலும் தடுக்க முடியாது என்று சொல்கிறீர்கள். மீறித் தடுத்தால்...” (காவலர்களை கையைக் காட்டினார். “ இருக்கவே இருக்கிறார்கள். அடித்து நொறுக்கி உள்ளே தூக்கிப் போட்டு வெளியே வரமுடியாதபடி வழக்குப் போடுகிறார்கள். சரி இதுவரை நிலத்தை, வாழ்ந்த பூமியை தாரை வார்த்துக் கொடுத்து விட்டுப் போனானே அவன் எப்படிக் கிடக்கிறான் என்று திரும்பிப் பார்த்தீர்களா? நீங்கள் கொடுத்த பிச்சைக்காசை செலவு செய்துவிட்டு நீங்கள் காட்டிய முள்ளுக் காட்டில், மழை பெய்தால் முழங்கால் சேற்றில் நடைப்பிணமாய் வாழ்ந்துகொண்டு கிடக்கிறானே, அவனைத் திரும்பிப் பார்த்தீர் களா? அவன் வயிறு எரிய எரிய நீங்கள் வெளிச்சத்திலே வாழ முடியுமா? உல்லாச வாழ்க்கையை வாழ்கிற நீங்கள் அவனை நினைத்துப் பார்த்த துண்டா? இந்த லட்சணத்தில் வேப்பங்குறிச்சி, தெற்கு வெள்ளூர், கூனங்குறிச்சி என

எடுக்கத் துடித்துக்கொண்டு நிற்கிறீர்கள். செத்துப் போன மாட்டோட தோலைக்கூட ஊரில் இன்றைக்கி பேரம் பேசி விற்கிறான் வாங்குகிறான். வாழ்ந்து கிடந்த மண்ணை, சோறு போட்ட தாயை... எடுப்பதற்கு நிற்கிறீர்கள். கொடுத்த நோட்டிசுக்கு இன்னும் மக்களிடமிருந்து எந்தப் பதிலும் ஏன் வரவில்லையென்று விசாரித்தீர்களா... பேச்சுவார்த்தை நடத்தினீர்களா? எதுவும் செய்யாமல் திடுமென புல்டோசரை கொண்டுவந்து நிறுத்துவது சர்வாதிகாரம். அரசு செய்கிற சட்ட விரோதம். இந்த விரோதப் போக்கை இனிமேலும் தொடராமல், உடனடியாக நிர்வாகமும் அரசும் மக்களை அழைத்துப் பேசவேண்டும்.”

உணர்ச்சிப் பிரவாகமான பேச்சு. சின்ன சத்தம் கூட இல்லாமல் கல்பாவியதாய் அசைவற்றுக் குந்தியிருக்கிறார்கள். காவலர்கள் மட்டும் நடமாடிக் கொண்டிருக்க மெயின் ரோட்டில் தயங்கித் தயங்கி நெரிசலில் வாகனங்கள் போய்க்கொண்டிருந்தன.

அய்யா நின்றுகொண்டிருந்த இருவரையும் காட்டித் தொடர்ந்தார். “ அறிவழகன், சிகாமணி போன்ற எங்கள் இனமான இளஞ்சிங்கங்கள், இவர்கள் பின்னால் இருக்கிற நூற்றுக்கணக்கான இளைஞர்கள்... மக்கள் ஏமாந்தாலும் இவர்கள் விடமாட்டார்கள். இனியும் உங்கள் கதை எங்களிடம் எடுபடாது. குறள்மணி, டாக்டர் ஜி.ஆர்., நானும் எல்லாருமாய் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருப்போம்.”

கூட்டத்தின் முற்பகுதியிலேயே குந்தியிருந்த வேப்பங்குறிச்சி மக்களுக்கு அவ்வளவு பெரிய சனத்திரளில் அறிவழகனையும் சிகாமணியையும் அய்யா குறிப்பிட்டுப் பேசியது தாங்க முடியாத மகிழ்ச்சி. இளம்போதையிலிருந்த செங்கல்ராவு நா தழுதழுக்க எழுந்து “ அய்யா...” என்று கும்பிட்டார். கும்பலோடு கும்பலாய்க் குந்தியிருந்த பூமாவிற்கு, அய்யா சிகாமணியின் பெயரை உச்சரித்த போது முகம் பூரித்தது.

“ உடனடியாக இந்தப் போராட்டக்குழுவிற்கு எம் மக்களின் சார்பாக நியமிக்கப்பட்ட தலைவர் குறள்மணியை, உறுப்பினர் களான அறிவழகன், சிகாமணி, தெற்குவெள்ளூர் உத்தண்டராயர், சேப்ளாநத்தம் செம்பப் படையாட்சி ஆகியோரை நிர்வாகம் அழைத்துப் பேசவேண்டும்.”

இடையே தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பவும் தொடர்ந்தார். குரல் தொனி நிதானமாக இருந்தது. “ பேச்சு என்றால் விளக் கெண்ணையில வதக்கிய வெண்டைக்காய் மாதிரியில்லை. சுற்றுச்சுற்றாக இல்லாத நறுக்கான கறாரான பேச்சாக இருக்க வேண்டும்... தற்போதைய நிலவரப்படி நிலங்களின்

விலையைக் கணக்கிட்டு இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னதாக என்னவாக இருக்கும் என்பதை ஊகித்து குறைந்தபட்சம் ஏக்கருக்கு இரண்டு லட்சம் தொகை, நெய்வேலியை ஒட்டிய பகுதியிலேயே நல்ல நீர்வசதி மிக்க மாற்றுக் குடியிருப்பு, குறைந்த பட்சம் ஆளுக்கு ஒரு ஏக்கர் நிலம், கட்டாயம் வீட்டுக்கு ஒரு ஆள் வேலை... இந்தத் தொகை, வேலை எல்லாமும் இந்த வேப்பங்குறிச்சி, கூனங்குறிச்சி மக்களுக்கு மட்டுமல்ல, ஏற்கெனவே நிலங்களை அடிமாட்டு விலைக்கு கொடுத்தவர்களுக்கும் பொருந்துகிறமாதிரி அவர்களுக்கும் இந்த இழப்பீடும் நிவாரணமும் வேலைவாய்ப்பும் கிடைக்க வேண்டும். இதில் தவறினால்...”

பேச்சை சற்று நிறுத்தினார். எல்லோரும் உன்னிப்பாக கவனித்தனர். “ எங்களுக்குப் போராட்டம் புதிதல்ல. களம் பல கண்டு வெற்றிவாகை சூடிய பரம்பரையில் வந்தவர்கள். தொடர் சாலை மறியல் போராட்டம் அறிவித்திருக்கிற அதே வேளை, அதைத் தாண்டிய ஒரு பெரும் போராட்டத்தை இன்னும் இங்கு இருக்கின்ற சகோதர அமைப்புகளோடு சேர்ந்து நாங்கள் நடத்த வேண்டிய சூழல் வரும். அதற்கு இந்த அரசும் நிர்வாகமும் நிறைய விளைவுகளைச் சந்திக்க நேரும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். போராடுவோம், நமக்கான நம் மண்ணுக்கான உரிமைகளை வென்றெடுப்போம், தொடர்சாலை மறியல் போராட்டத்தை வெற்றியடையச் செய்வோம். நன்றி. வணக்கம்.”

இப்போதெல்லாம் அறிவழகனுக்கும் சிகாமணிக்கும் வணக்கம் சொல்லி மாளவில்லை, டீக்கடை பக்கம் போனால் வயதில் பெரியவர்கள் கூட எழுந்து இடம் கொடுக்கிறார்கள். “ இப்பிடிக் குந்து தம்பி...” அதைவிடவும் மந்தாரக்குப்பம் சைக்கிள் கடைப் பக்கம் காற்றடிக்கப் போனால் கூட “ இப்பிடிக் குடுங்க தம்பி...” என்று வாங்கி அடிக்கிறார்கள். அறிவழகனுக்கும் சிகாமணிக்கும் திரும்புகிற பக்கமெல்லாம் உற்சாக வரவேற்பு.

“ என்னா தம்பி, அய்யாகிட்டேர்ந்து தகவல் ஏதாவது வந்துதா...” என்னவோ அய்யாவுடன் நேரடித் தொடர்பில் இவர்கள் இருப்பது போல் நிறைய விசாரிப்புகள்.

“ என்.எல்.சிக்காரனே நம்ப அய்யா கூட்டத்தப் பாத்துட்டு மெரண்டுட்டான் இல்ல...” தண்ணீர் பிடிக்கிற இடத்தில் பெண்களின் பேச்சு.

“ போலிசுக்காரனுவோ வேற, ஒங்க ரெண்டு பேரையும் மாறி மாறி மொறைச்சுப் பாக்கறானுவோப்பா...” எதிர்ப்படும் எச்சரிப்புகள்.

“ ஏம்ப்பா... அய்யா கூட்டம் எங்க நடந்தாலும் எங்களக் கூப்புடு. சாலைமறியல் போராட்டத்துல எங்களயும் சேத்துக்க.” உணர்ச்சி வசப்படும் ஆதரவுக் குரல்கள்.

அய்யா வந்துவிட்டுப்போன பிறகு, காய்ச்சலில் கிடந்த செடிக்கு குடம் தண்ணீர் ஊற்றிய மாதிரி எல்லோர் முகத்திலும் தெளிவும் நம்பிக்கையும். மேல நம்பளப் பாத்துக்க ஒருத்தன் இருக்கான், பயப்படக்கூடாது... தானே தெம்பாகித் தெளிவடைந்து கொண்டுவிட்ட நம்பிக்கை.

அதே வேளை அரசாங்கத் தரப்பிலும் லேசான ஓர் அசைவு. விழித்துக்கொண்டு இருப்பவர்களை மட்டுமல்ல, ஏற்கெனவே உறங்கிக் கிடப்பவர்களைக் கூட எழுப்பி சேதியைச் சொல்லி உசுப்பிவிடுகிற மாதிரியான பேச்சு. ஏற்கெனவே நிலங் கொடுத்த வர்களுக்கும் தற்போதைய நிலவரப்படி மறுமதிப்பீடு, நிலுவைத் தொகை... என்று வந்துவிட்டால்...? யோசிக்க வைத்தது.

*

27

அடித்துத் துவைத்துப் போட்ட மாதிரி சுளீர் என்கிற வெயிலில் பளிச்சென்று வாசல். முதல் உலுக்கில் தனியாக எடுத்து சுத்தம் செய்து, பூச்சி பிடிக்கக்கூடாது என்பதற்காக கொஞ்சம் நெல்மணிகளும் கலந்த விதை எள். மூன்று படி பிடிக்கிற அன்னக் கூடை நிறைய எடுத்து வைத்தது. சாணித்தெளிப்புகள் நிறைய விழுந்து, நல்ல தாவில் கொட்டி குனிந்த வாக்கிலேயே இருபக்கமும் திரும்பித்திரும்பி விரல்களால் கோர்த்துக் கிண்டியபடி சுழன்று பின்னுக்கு நகர்ந்தாள் பூமா. இளம்பச்சை கலந்த பொன்னிறப் பாவாடை தாவணியில் அவள் குனிந்த வாகுக்கு ஒரு கையும் மறுபுறம் பின்னிய சடையுமாய் துறையில் புள்ளிமான் ஒன்று தண்ணீர்குடிப்பது போல ஒரு அழகு. கிண்டி விட்டுவிட்டு, காலில் ஒட்டிய எள் மணிகளைத் தட்டிவிட்டு எட்ட வந்து நின்று பார்த்தபோது அவளுக்கே ஆச்சரியம். துளியும் பிசிறில்லாத எள்ளால் ஆன ஒரு கருமை வட்டம் கோலம் போல வாசலில், அவள் நினைத்துப் பார்க்காமலேயே, விழுந்திருந்தது.

எல்லாமும் அம்மா பாஞ்சாலையிடம் கற்றுக் கொண்டவை தான். நெல் ஆவாட்டி ஆக்க, அவுல் பதம் பார்த்துக் கூட்ட, கம்பு கொங்கை அடிக்க, தூற்ற, தாத்த, நோம்ப, புடைக்க, தரிக்க, தெள்ள, இடிக்க, மழுக்க, குற்ற... ‘ போற எடத்துல எதியும் ஆத்தா கத்துக் குடுக்குலியான்னு நொட்டுச் சொல்லு சொல்லக்கூடாது’ எல்லாமும் கற்றுக்கொண்டுவிட்டாள்தான்.

“ என்னாடி எள்ளுதான் எண்ணெய்க்கி காயுது எலிப் புழுக்க எதுக்கு காயுதுங்கறமாதிரி மொட்ட வெயில்ல நிக்கிற...” முத்துக்கண்ணு ஆயிதான் தலையில் புல் சுருணையோடு கேட்டுக் கொண்டே போனாள்.

“ இல்ல பெரிமா, சும்மா வெர எள்ளுதான் காய வைச்சன்” இழுத்தாள்.

“ ஆனாலும் ஒப்பனுக்கு ஒரு தீரம்டி. கொல்லிய, வூடு வாசல் எல்லாத்தையும் எடுத்தே ஆவணும்னு நெலகாலுமேல நெய்வேலிக் காரன் நிக்கிறான். ஊரே அவதி கொள்ளையில கெடக்குது. ஒப்பன் அடுத்த போகத்துக்கு வெர எள்ளு எடுத்து வைச்சாவுது.” குரல் தேய்ந்துகொண்டேபோய் மறைந்தது.

ராத்திரி இதையேதான் பாஞ்சாலை, ராசோக்கியத்திடம் கேட்டாள். பெருமூச்சி விட்டுக்கொண்டே ராசோக்கியம் சொன்னார் " இங்கியே இருந்தாலும் இல்ல எட்டப்போன்னு தொரத்தனாலும் நம்பளால கொல்லகுடின்னு பயிரு வைக்காம இருக்க முடியாது பாஞ்சால. ஒரு கா காணியா இருந்தாலும் எங்கியாவது பாத்து வாங்கறம். வாழ்ந்த மண்ணுல வெளைஞ்ச வெரமொதல எடுத்துக் கிட்டு போயி மாசூலு வைக்கறம். மண்ணுலதாம் பொறந்தம். மண்ணுலதான் வளந்தம். மண்ண எடுத்துக்கிட்டுப் போறதுக்கு பதிலா மண்ணுல வெளஞ்ச மாசூல எடுத்துக்கிட்டு போவும்."

பாஞ்சாலைக்கும் குபுக்கென்று ஆத்திரம் பொங்க ஒரு சடசடப்பு. பூமா பொக்கென்று அம்மாவின் உடல் மாற்றத்தை கண்டுபிடித்துவிட்டாள். இதுவேறு உடம்பு ஏதாவது சிக்கலைக் கொண்டு வந்துவிட்டால்... பட்டென்று பேச்சை மாற்றினாள். " எம்மா, பெரிய ஆட்டு வாய்ப் புண்ணுக்கு பன்னி நெய் தடவணும்னு சொன்னிய, அந்த பாட்ல தேடுனியா?"

" க்கும்... சொல்ல மறந்துட்டண்டி. தொம்ப சந்துல பூன உருட்டியிருக்கும் போல்ருக்கு. வுழுந்து ஒடைஞ்சி கெடந்துது. முத்துக்கண்ணு ஆயி வூட்ல போயி வாங்கியாப்பா. பாவம் தழையக்கூட கடிக்க முடியாம கொதகொதன்னு புண்ணு. ரெண்டு நாளைக்கி தடவனா சரியாப்பூடும். செத்த ஓடி வாங்கியாப்பா... வைச்சிருப்பாங்க..." சூழலை மறந்து பாஞ்சாலை அவசரப் படுத்தினாள்.

என்னதான் தற்காலிக அவசரத்தில் மறந்தாலும், மனசுக்குள் பாஞ்சாலைக்கு விதை எள் மேலேயே யோசனை ஓடுகிறது. ' எங்க கொண்டுபோயி மகராசனுவோ வுடப்போறானுவுளோ. குந்தறதுக்கு நாலு தப்படி நெல்ல மனையா குடுப்பானாங்கறதே சந்தேகங்க றானுவோ. இதுல பயிரு வைக்கறதுக்கு ஏக்கர் வாங்கி... குடுக்கற நால் ரூவாக் காசிக்கு வூட்ல இருக்கற ஆணாப் பொறந்தது, என்னா யோசன பண்ணி மகாநாடு வளத்தப் போவுதோ... நல்லத வுட்டுட்டு எந்த நரகல்ல போயி நிக்கினும்னு தல எழுத்து எழுதியிருக்கோ...'

ராவெல்லாம் நிலம், விதைப்பு, ஏர், இடமாற்றம் என நினைத்துக் கொண்டே கிடந்ததில் காலையில் குளிர்ந்து குளிர்ந்து வருவது மாதிரி உடம்பு கனத்திருந்தது பாஞ்சாலைக்கு. சந்தேகப்பட்டுதான் பூமாவிடம் சொன்னாள் " ஒண்ணன வேலைக்குப் போய்ட்டு, கொஞ்சம் சீக்கிரமா நேரத்தோட வூட்டுக்கு வரச் சொல்லுடி..."

“ எதுக்கு?” வேலைக்கு கிளம்பிக் கொண்டிருந்தவன் அடிக்கிற மாதிரி கேட்டான்.

“ ஒடம்பு நளுர் கண்டமாதிரி இருக்குது. மத்தியானமா ஆஸ்பத்திரிக்கு போய்ட்டு வரணும்.” யாரிடமோ சொல்வதுபோல சொன்னவளின் குரல் வலுவில்லாமல் இருந்தது.

“ ராத்திரி பூரா ஏர் ஓட்டவும், வெரப்பு வெரைக்கறதுமா பெனாத்திகிட்டு இருந்தா நளுர் கண்டு போவாம என்னா செய்யும்... ஒங்கள மொதல்ல இந்த எடத்த வுட்டு எட்ட இட்டுக்கிட்டுப் போயி வுட்டாதான், ஒரு ஓசனையும் இல்லாம ஒடம்ப நெல்ல படியா வைச்சிருப்பீங்க... சரி அர நாளு லீவு போட்டுட்டுதான் வருணும். நா என்னா எம்பளாய்சாவா இருக்கன், போனாப்ல தலயக் காட்டிட்டு வர்றதுக்கு...”

“ ஏ ண்டி.. ஊருக் கோழிவோ பூரா, நாலு எள்ளையும் நங்க சோளம் பண்ணுதுவோ. உள்ள என்னாதாம் பண்ற?”

குரல் கேட்டு பூமா அவசரமாய் வெளியே வந்து பார்த்தாள். சதாசிவம் சைக்கிளில் கொண்டுவந்து அம்மாவை இறக்கி விட்டுவிட்டு, ஓரமாய்த் தள்ளி நிறுத்திக் கொண்டிருந்தான். பாஞ்சாலை வெறுங்கைகளை வீசிக் கோழிகளை ஓட்டிக் கொண்டிருந்தாள். காலையில் ஆஸ்பத்திரிக்கு கிளம்பிப் போகிற போது இருந்ததைவிட பாஞ்சாலை தெம்பாய் இருப்பதாகப் பட்டது. “ இப்பதான் உள்ள போனன். அதுக்குள்ள மொளேர்னு வந்து நிக்கிதுவோ... ஊரு கோழிவோ பூரா இங்க கொட்டு கொட்டுன்னு கொட்டிக்கிட்டு நிக்கிது. நம்ப பலபட்ற குஞ்சுவுள வைச்சிக்கிட்டு எங்க போச்சின்னு தெரியில. அது கெடக்குட்டும்... ஆஸ்பத்திரியில என்னா சொன்னாங்க...” பூமா பதற்றமாய்க் கேட்டாள்.

“ மாத்தரதான் எழுதிக் குடுத்துருக்காங்க...” மாத்திரைகளை வெளியே எடுத்து வைத்தபடி சொல்லிக் கொண்டிருக்கும்போதே கோயிலை ஒட்டிய சின்னப்பள்ளிக்கூடத்தில் ஒரே இரைச்சலாக இருந்தது. “ என்னாடி ரெண்டு வருசமா பள்ளிக்கொடம் நடக்குதா நடக்கிலியான்னே தெரியாது. இப்ப எனுமோ பழைய குருடி கதவத் தொறடிங்கிறமாதிரி பசங்க இம்மாங் கத்து கத்துதுவோ.”

“ பெரிய வாத்தியாருக்கு பதிலு வேற வாத்தியார் போட்ருக் காங்க. அந்த வாத்தியாரு எப்பியும் தூங்கி வழிஞ்சமாதிரியே இருக்கறதால பசங்க பழைய எரைச்சல்ல நிக்கிதுவோ. ஆமா... இந்த மாதிரி அடிக்கடி

சடசடன்னு ஒடம்பு ஆவுதுன்னு டாக்டரு கிட்ட சொன்னியா...” பூமா பழையபடி உடம்பு விஷயத்தில் நுழைந்தாள்.

“ அதிர்ச்சியா எதியும் காதுல வாங்கக்கூடாதுன்னு சொல்றாரு. நம்பதான் நாளும் நெருப்புல நின்னு தெவைக்கிற மாதிரி. கத இதுல போயி அதிர்ச்சியா இல்லாம இருக்கறது எப்படி...”

கொஞ்சம் தெம்பாய் திடாரிக்கமாய் பாஞ்சாலையின் பேச்சு இருந்ததும் பூமா மெல்ல இணுக்கினாள் “ சோறுலாம் ஆக்கி வைச்சிட்டன். நா மத்தியானத்துக்கு மேலனாச்சும் பள்ளிக்கொடம் போறம்மா...”

“ அதான பாத்தன். ஒனக்கு ஒரு நாளாச்சும் அந்த பள்ளிக் கொடத்துப் படிய மிறிக்கலன்னா தல வெடிச்சுடும.”

*

28

“ ஒ டந்தடம்னு எதாவது பேச்சி வார்த்தைக்கி கூப்புடுவானு வோன்னு பாத்தன். ஒரு தாக்க தகவல் கூட குடுக்குல. சரி எதாச்சும் சேதின்னா சொல்லி வுடுங்கப்பா...” உத்தண்டராயர் சங்க அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார்.

ரோட்டில் தீப்பிடித்த வீட்டை அணைக்கப்போகிற அவசரத்தில் ஆரணை அலறவிட்டபடி தனியார்க்காரன் ஒருவன் பேருந்து நிலையம் பக்கம் போனான். சத்தம் தேய்ந்து ஓய்ந்ததும் சிகாமணி சொன்னான் “ கூப்புடாம எங்க பூடுவானுவோ. இல்லன்னா திரும்பவும் அய்யாவக் கொண்டாந்து ஒரு அதிர்ச்சி வைத்தியத்த குடுப்பும்.”

“ சரிண்ண... பாப்பும்...” அறிவழகன் அவசரமாய்த் தலையாட்டி விட்டு மீண்டும் ‘ தினப்புரட்சி’யில் வந்த பிரபாகரனின் சுதுமலைப் பேருரையில் மூழ்கிப் போனான். வெகுநேரத்திற்கு பிறகு பெருமூச்சி விட்டவனாய் நிமிர்ந்து சொன்னான். “ ஊரு எரிஞ்சாலும் நாயி எரியாதுங்கறமாதிரி எல்லாம் இந்த ஆயுதத்த ஒப்படைக் கணுங்றதிலேயே குறியா இருந்துருக்கானுவோ பாரு. இந்தியா - இலங்கை ஒப்பந்தத்துல அதான் முக்கிய சரத்தாம். ஆனா அது இவனுவோ நெனைக்கறமாதிரி இல்லாம, இப்ப பெரிய சிக்கல கொண்டாந்து வுட்டுடும் போல்ருக்கு.”

“ என்னா அண்ண சொல்ற... ஆயுதத்த ஒப்படைச்சிட்டு... அது சரியா வருமா அண்ண...” சிகாமணி சந்தேகமாய் கிட்ட நகர்ந்து கேட்டான்.

“ குறள்மணி அண்ணங்கூட ஒரு தடவ பேசறப்ப சொன்னார்டா. பெங்களூர்ல போன வருசம் சார்க் மாநாடு நடந்துது பாரு. இங்கேர்ந்து எல்லா அமைப்புகளும் செயவர்த்த னாவுக்கு கருப்புக்கொடி காட்றதுக்கு போனப்ப அண்ணங்கூட போயிருந்தார... அப்பேர்ந்து இந்தியா இப்பிடி பல்லப் புடுங்கற மாதிரி ஒரு ஒப்பந்தத்த போடுணுங்கறதிலியே குறியா இருந்துருக்கு. ஈழத்த வுடு, மாநில சுயாட்சி அளவுக்குக் கூட இதுல வழியில்லியாம். கடந்து இப்ப பிரபாகரன இட்டுக்கிட்டு போயி டில்லியில வைச்சி, கையெழுத்து போட வற்புறுத்தியிருக்காங்க. அவுரு தோலே தோலு முடியாதுன்னதும், இந்தியாவே நேரா போயி ஒப்பந்தத்தப் போட்டுட்டு வந்துட்டுது. இப்ப எல்லாம் முட்டி மோதிக்கிட்டு நிக்கிது.”

சிகாமணி முகத்தில் புரியாததுமாதிரி குழப்ப ரேகை ஓடியதும் அறிவழகன் எப்படிப் புரிகிற மாதிரி சொல்வது என தேங்கினான். சிறிதுநேர யோசிப்பிற்குப் பிறகு சற்றே உற்சாகமாய் சொன்னான். “ இந்தியா - இலங்கை ஒப்பந்தம் எப்படியிருக்குன்னா... இப்ப கூனங்குறிச்சியில ரெண்டு வகையறாவுளுக்குள்ள தகராறுன்னு வைச்சிக்குவம். அவுங்க கூப்புடாமலேயே அழையா விருந்தாளியா நம்ம ஊரு தனபாலு போயி பஞ்சாயத்தம் பண்றாரு. சூழ்ச்சடியா ரெண்டுக்கும் எடையில ஒரு கல்யாணத்த பண்ணி வைச்சிட்டா எல்லாம் ராசியாப் பூடும்ங்கறாரு. வேண்டா வெறுப்பா ஒண்ணு சம்மதிக்குது. ஒண்ணு சம்மதிக்கில. மறுபடி இருந்து இருந்து பாத்துட்டு, அவசரமா இவுரே நாளு குறிச்சி, கல்யாண ஏற்பாட்டையும் பண்ணி, அவுங்கள்ல ஒரு பொண்ணையும் இழுத்தாந்து நிப்பாட்டிட்டாரு. கல்யாணத்தன்னக்கி பொண்ணு கழுத்துல தாலி கட்றது யாருன்னு பாத்தா... இவுரு தனபாலு.”

அறிவழகனும் சிகாமணியும் பேசிக்கொண்டே சங்கக் கட்டிடத்தை விட்டு வந்து கொண்டிருந்தார்கள். பள்ளிக்கூடத்திற்கு நேரே வரும்போது இவர்களுக்கு இணையாக சைக்கிள் ஒன்று வந்து நின்றது. சதாசிவம் சைக்கிள் தான்.

கரிநாள் அன்று நடந்த பிரச்சினையிலிருந்து அறிவழகனிடம் கூட அவன் சரியாய் எதுவும் பேசுவதில்லை. சைக்கிளிலிருந்து பேண்ட் சட்டை போட்டிருந்த ஒரு ஆள் இறங்கினான். கையில் சிகரெட்டுடன், காலரில் கர்சிப்பை செருகி வைத்துக்கொண்டு... ஆளைப் பார்த்தால் அதிகாரியாகவும் தெரியவில்லை.

அவன் பேசாவிட்டாலும் நாமாகவாவது யாரென்று சதாசிவத்திடம் கேட்கலாம் என்று அறிவழகன் நினைத்தான். அதற்குள் அவன் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவசரமாகக் கிளம்பினான். “ என்னா மாப்ள, சார் யாரு? நீ பாட்டுக்கும் கொண்டாந்து வுட்டுட்டுக் கெளம்பற...”

“ ஒங்களதான் பாக்க வந்துருக்காரு...”

ஏதோ வழிகேட்டுத் திகைத்து நின்றவரை, பரிதாபப்பட்டு இட்டுக்கொண்டு வந்தமாதிரி தெரியவில்லை அவன் பேச்சு. எதிரியின் வீட்டை, காவல்துறையினரிடம் வலிந்து இட்டுவந்து காட்டுவதுபோல் இருந்தது. கிளம்பியும் விட்டான்.

இறங்கியவன் விரலிலிருந்ததை அணைத்துவிட்டு மற்றொரு சிகரெட்டை பற்றவைத்து அலட்சியமாக ஊதிவிட்டு, நேசமாகக் குலுக்குவதற்குக்

கைகளை நீட்டியபடி சொன்னான் “ ஏம் பேரு சொக்கநாதன்... சொக்கன்னு கூப்புடுவாங்க...”

சந்தேகமாய் கைகளை நீட்டினான் “ அறிவழகன்” சிகாமணியும் ஒரு வணக்கத்தை குழப்பமாகப் போட்டான். “ சிகாமணி.”

“ நா லேண்டு ரென்ரூட்மெண்டு ஆபிசிலேர்ந்து வர்றன். தாசில்தார் அலுவலகம், நில எடுப்புத்துறை, நெய்வேலி...” பின்பகுதி யைச் சொல்லும்போது கொஞ்சம் அழுத்தம் கொடுத்து நீதி மன்றத்தில் வழக்குரைஞர் படிப்பதுபோல் தெளிவாக நிறுத்திச் சொன்னான்.

இரண்டு பேருக்குமே பட்டென்று ஓர் அதிர்வு தெரிந்தது முகத்தில். மூச்சிறைக்க வேகமாக சைக்கிளைக் கொண்டு வந்து பால்ராசும் நிறுத்தினான். “ என்னா மாமா...”

“ சார் லேண்ட் ரெக்ருட்மெண்ட் ஆபிஸ்லேர்ந்து வந்துருக் கறாராம்.” சொல்லி முடிக்கவில்லை. பால்ராசு துள்ளாத குறைதான். “ அதான பாத்தன். நம்ப அய்யா வந்து ஒரு அலட்டிய குடுத்ததும் ஆட்டாமாட்டிக்கா வேல நடக்குது பாரு...”

உற்சாகமாகச் சொல்லிக் கொண்டிருந்த பால்ராசை, புகையை ஆழ இழுத்து விட்டபடி பார்த்துக்கொண்டிருந்த சொக்கன், திரும்பி அறிவழகனிடம் சன்னமாகச் சொன்னான் “ ஓங்க ரெண்டு பேர்கிட்டயும் கொஞ்சம் தனியாப் பேசணும்.”

பால்ராசை பார்த்தபடி அறிவழகன் சொன்னான். “ அவுரு வேற யாருமில்ல எங்க நண்பர்தான். எங்க சங்கத்துக்காரரு. பரவாயில்ல சொல்லுங்க...”

ஆனாலும் சொக்கநாதன் திரும்பவும் தயங்கியதும் பால்ராசே பின்வாங்கினான். “ சரி மாமா. சார் எனுமோ சொல்றதுக்கு தயங்குறாரு. எனக்கு ஒரே வேச்சார்லா இருக்கு. வூட்டு வரைக்கும் போயி சட்டைய மாத்திக்கிட்டு வர்றன். ஆனா பொசுக்குன்னு புடிய மட்டும் வுட்டுடாதீங்க ஆமா...” எச்சரித்துவிட்டு சைக்கிளை வேகமாக மிதித்துக்கொண்டு ஊரை நோக்கிப் போனான்.

சொக்கன் கடைசி இழுப்பையும் இழுத்து எறிந்துவிட்டு “ வாங்க, இப்பிடிப் போய்க்கிட்டியே பேசுவம்” என்று கூப்பிட்டான்.

சிகாமணிதான் வெடுக்கென்று சொன்னான் “ பரவாயில்ல இப்பிடி கம்மாக்கட்டையில குந்திப்பேசலாம்.”

சொக்கன் அதிர்ந்தமாதிரி பதறினான். “ என்னாங்க... எந்த விஷயத்த நாம பேசப்போறோம்னு தெரிஞ்சும் இப்பிடி ரோட்ல குந்தி பேசுணும்ங்கிறீங்க?”

“ நாங்களே இப்ப நடுரோட்லதான் நிக்கிறம்...” என்ற சிகாமணியை அறிவழகன் அமர்த்தினான்.

நடந்தார்கள். மந்தாரக்குப்பம் காலனி குடியிருப்பு வீடுகள் நேருக்கு வந்ததும் பட்டென்று திரும்பி ஒரு வீட்டுக்குள் நுழைந்தான் சொக்கன். அறிவழகனும் சிகாமணியும் சந்தேகத்தோடு தயங்கினார்கள். “ வாங்க...” வீட்டுக்காரரும் வெளியே வந்து வலிந்து கூப்பிட்டார்.

வீட்டுக்காரர் நடுத்தர வயதைத் தொட்டவர்போல் தெரிந்தார். ஒரு வார காலத்திற்குள்தான் இந்த வீட்டிற்குக் குடிவந்திருக்க வேண்டும். ரோட்டில் போகும்போதெல்லாம் ஒரு வயதான தம்பதிகள் இதில் குடியிருப்பதை அடிக்கடி பார்த்திருக்கிறான்.

சொக்கநாதன் ஒரு நாற்காலியில் குந்தியபடி எதிர்த்த சோபாவில் கையைக் காட்டினான். ஒரு செம்பில் தண்ணீர் கொண்டுவந்து வைத்துவிட்டு வீட்டுக்காரர் அவசரமாகச் சொன்னார் “ பேசிக்கிட்டு இருங்க. தோட்டத்துல கொஞ்சம் வேல.”

சிகாமணி எட்டின வரைக்கும் பார்வையை உள்ளே அனுப்பி, வீட்டுக்கார அம்மாவைத் தேடினான். எவரும் தென்படவில்லை. சுற்றி வளைக்காமல் சொக்கன் பேச்சை ஆரம்பித்தான் “ ரெண்டு பேரும் எங்க வேல செய்றீங்க...”

சிகாமணி பட்டென்று கேட்டான். “ ஏங்க லேண்டு ரெக்ருட் மெண்ட் ஆபிசிலேர்ந்து வந்துருக்கீங்க. பேச்சுவார்த்தைக்கு சேதி இல்லன்னா தேதின்னு எதாவது கொண்டாந்துருப்பீங்கன்னு நாங்க பதட்டமா இருக்கறம். நீங்க என்னா வேல செய்றீங்கன்னு கேக்குறீங்க. என்னா வேல செஞ்சா என்னா குடுப்பீங்க...”

மேலும் பேசிக்கொண்டிருந்த சிகாமணியை அறிவழகன் “ இர்ரா...” என்று அமர்த்திவிட்டு பொறுமையாகச் சொன்னான் “ ரெண்டு பேருமே மைன்சுல காண்ட்ரேட்ல வேல செஞ்சம். காண்ட்ரேட் முடிஞ்சி கம்பெனிக்காரன் பூட்டான். இப்ப வீட்லதான் இருக்கம்.”

“ என்னா படிச்சிருக்கீங்க...”

“ இவுரு எம்.ஏ. படிச்சிருக்காரு. நா பி.ஏ. சொல்லுங்க எங்குளுக்கு என்னா

கலக்டெர் உத்தியோகமா வாங்கிக் குடுக்கப் போறீங்க... சும்மா என்னா படிச்ச... ஏது படிச்சன்னு...” சிகாமணிக்கு எரிச்சல். தாண்டி விட்டான்.

சொக்கன் பதிலுக்கு பதட்டமில்லாமல் சொன்னான் “ ஆமா. கலக்டர் உத்தியோகமில்ல. கடலூர் கலக்டர் ஆபிசுல உத்தியோகம். உம்னு ஒரு வார்த்த சொன்னா போதும்...”

இருவருமே திடுக்கிட்டனர் ‘ கலக்டர் ஆபிசுல உத்தியோகமா...’

நாற்காலிக்கும் கீழே இருந்த பையிலிருந்த நெடும் நோட்டு ஒன்றை எடுத்து நடுவிலிருந்த இரு உறைகளை ஆளுக் கொன்றாய் நீட்டினான். உருவி விரித்துப் படித்தவர்கள் அசந்து போய் விட்டார்கள். இருவருக்குமே, தேதி மட்டும்தான் போட வேண்டும். தகப்பனார் பெயர், தெருப் பெயர், கதவு எண் உட்படப் போடப்பட்டு கடலூர் கலெக்டர் அலுவலகத்தில் அலுவலகப் பணிக்கான வேலை நியமன ஆணை.

“ இத நாங்க வாங்கிக்கிட்டு, நாளையிலேர்ந்து அரவப்படாம கலக்டர் ஆபிசுக்கு கைநெறயா சம்பளத்துக்கு வேலைக்குப் பூடுவம். நீங்க எந்தச் சிக்கலும் இல்லாம புல்டோசர கொண்டாந்து ஊரு உள்ள வுட்டு நெரவிக்கிட்டு நிப்பீங்க.” துப்பாக்கி போன்று ஆட்காட்டி விரலை நீட்டி எச்சரிக்கை செய்கிற மாதிரி பேசினான் “ நீ போயி மேல சொல்லு. குடுக்கற இந்த எலும்புத் துண்டுக்கு நாக்கத் தொங்கப் போடற நாயிவோ நாங்க இல்ல. கூட்டத்துல எங்க அய்யா பேசன அத்தன தீர்மானத்துக்கும் ஆதரவா இந்த மக்களுக்கு உரிய நிவாரணம் தர்ற உத்திரவாதத்தோட வர்றதா இருந்தா சொல்லு. இல்ல, இந்த மாதிரி உள்ளடி வேலையோட தனியாக் கூப்புட்டுப் பேசற மாதிரியிருந்தது நடக்குறது வேற... ஏந்திரிச்சி வா அண்ண.” சிகாமணிக்கு ஆத்திரத்தில் படபடக்கிறது பேச்சு.

அறிவழகனுக்கும் தாங்கமுடியாத ஆத்திரம்தான். ஆனாலும் ரொம்பவும் கறாராக ஆனால் பதட்டமில்லாமல் பேசினான் “ வூடு, வாச, நெலம் பலம்னு நிவாரணமா குடுக்கற தொகையை ஏதோ மின்னப் பின்ன குடுங்க வாங்கிக்கறம். ஆனா ஒங்கள இங்க அனுப்பி வைச்ச அதிகாரிகிட்ட சொல்லி வூட்டுக்கு ஒரு ஆளு கலக்டர் ஆபிசுல வேணாம் இந்த என்.எல்.சியில கக்கூஸ் கழுவுற வேலயா இருந்தாக்கூட போதும். ஆர்டர் போட்டு வாங்கியாங்க. இந்தப் போராட்டம், ஆர்ப்பாட்டம் எல்லாத்தையும் நாங்க வுட்டுடறம்...”

“ அட நீ வா அண்ண. இந்த ஆளு வெறும் அம்பு தான். நாளைக்கி அம்ப வுட்டவங்கிட்ட போயி பேசிக்குவம்...” இருவரும் சடாரென்று எழுந்து

வெளியே வந்தார்கள்.

*

29

சொக்கன் போய்ச் சொல்லித்தான், முடிவெடுத்திருக்க வேண்டும். நிலஎடுப்புத் துறை அலுவலகத்தில் ‘ வாங்க பேசலாம்’ என்கிற மாதிரி வேண்டாவெறுப்பாய் கூப்பிட்டிருந்தார்கள்.

குறள்மணி தலைமையில் அறிவழகன், சிகாமணி, உத்தண்ட ராயர், செம்ப படையாட்சி என நாலைந்து பேர்தான் போவதாக ஏற்பாடு. ஆனால் சேதி கிடைத்த எல்லோருமே கிளம்பி விட்டார்கள். “ நாங்க உள்ள வல்லப்பா. சும்மா வெளிய ஒங்குளுக்குத் தொணையா நிக்கிறம்...” ஊரே அரிகிடையாய்க் கிளம்பி நிற்கிறது.

அறிவழகனோ சிகாமணியோ யாராலும் கிளம்பி நிற்பவர் களின் முகத்தை முறித்துப் பேச முடியவில்லை. எல்லோருமே இருவர் மீதும் பாசமும் நம்பிக்கையும் வைத்திருப்பவர்கள். குறிப்பாய் இருவருக்கும் கலெக்டர் அலுவலகத்தில் பணி நியமன ஆசை காட்டியதைப் புறந்தள்ளி, பொதுமக்கள் நலனே எங்கள் லட்சியம் என்று ஆணித்தரமாய் நின்ற உறுதியைக் கேள்விப்பட்ட பிறகு இவர்களுக்காக உயிரைக்கூடக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தார்கள்.

“ இந்தாப்பா துண்டு...” பூமா கொடுத்த மஞ்சள் துண்டை வாங்கித் தோளில் போட்டுக்கொண்டு நின்ற ராசோக்கியத்தை பார்த்த உத்தண்டராயர் அசந்து போய்விட்டார். “ எப்பா, பெரிய சங்கத்துக்காரரு போல்ருக்குப்பா.”

“ இவுரு பழைய உறுப்பினர் அண்ண. ரசீத அய்யா போட்டாவோட ஃபிரேம் பண்ணியே வைச்சிருக்காரு” அறிவழகன் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

சிரித்தபடி நின்ற பூமாவிடம் கேட்டான். “ ஒண்ணன் எங்க பூமா...?”

“ வேலைக்கி மாமா...”

ஊரே திரண்டு நிற்கும்போது ஒட்டாமல் சதாசிவம் வேலைக்குப் போவதும் வருவதும் ஒதுங்கிச் செல்வதும் அறிவழகனுக்கு இடித்தது. இருந்தாலும் அதை வெளியில் காட்டி கும்பலில் சீய்த்துக் கொள்ள விரும்பவில்லை.

கரி படாச்சி, ராசோக்கியம், பால்ராசு அப்பா என மூவருடைய டயர்

வண்டிகள். இதுவில்லாமல் மோட்டார் பைக்குகளிலும் சைக்கிள்களிலுமாக ஏகக் கூட்டம். ராசா படை பரிவாரங்களுடன் வேட்டைக்குக் கிளம்புகிற மாதிரி ஒரு தோற்றம்.

“ சரி நீங்க கௌம்பி வாங்க. நாங்க மந்தாரக்குப்பம் பஸ் ஸ்டாண்டு போயி குறள்மணி அண்ணன் வந்துருப்பாரு, இட்டுக்கிட்டு வர்றம்.’ அறிவழகனும் சிகாமணியும் ஆளுக்கொரு சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள்.

சங்க அலுவலகத்து சுவர் ஓரமாய்ப் போய் மெயின்ரோட்டில் ஏறப்போகிற நேரம், வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. பின்னாலிருந்து ஓட்டிவந்தவரிடம் பேசியபடியே குறள்மணி வந்து இறங்கினார். இவர்களும் இறங்கிவிட்டார்கள். “ வணக்கம் அண்ண. ஒங்கள இட்டார்றதுக்குதான் பஸ் ஸ்டாண்டுக்கு கௌம்பனம்...” அறிமுகமான முகமாய் தெரிந்த மோட்டார் சைக்கிள்காரரையும் அறிவழகன் வணங்கிச் சொன்னான் “ வாங்க சார்...”

“ வர்றம்பா. நமக்குச் சொந்தக்காரரு அந்தக் காலத்துலியே கிறிஸ்தவத்துல சேந்துட்ட குடும்பம். அமலநாயகம்னு பேரு. இஞ்சினிரா இருக்கறாரு. நல்ல தமிழ் ஆர்வலர். குறிப்பா ஈழத்தமிழர்கள் பத்தி ரொம்ப...” மோட்டார் சைக்கிள்காரரைப் பற்றி சொல்லிக்கொண்டே போனார்.

அறிவழகனுக்கு பட்டென்று புரிந்துவிட்டது. “ சார கேள்விப் பட்ருக்கன். இப்பதான் நேர்ல பாக்கறன். அண்மையில கூட ‘ ஈழம் இன்றைய நிலை’ன்னு சார் தலைமையிலதான் கூட்டம்னு ஒரு நோட்டிச பாத்தன்...”

“ அதான் வூட்டுக்கு வரச்சொல்லி ரொம்ப நாளா சொல்லிக் கிட்டு இருந்தாரு. நம்ப அலைச்சல்ல எங்க எட்டிக்கிது. கடந்து போன வாரத்துல பண்ருட்டியில நிகழ்ச்சியில பாத்துட்டு ரொம்ப வற்புறுத்தனாரு. சரின்னு நேத்தே கௌம்பி வந்து தங்கி, அப்பிடியே பேசியிருந்துட்டு...”

தன்னைப் பற்றி எல்லாமும் சொல்லிக்கொண்டு இருக்கும் போது, தான் சொல்வதற்கு எதுவுமில்லாதவராய் சிரித்தபடி நின்ற அமலநாயகம், “ சரி வர்றங் குறள்...” கிளம்பினார்.

“ பாத்துக்கப்பா. நம்ப பசங்க. வேப்பங்குறிச்சி. இந்த நெலம் எடுக்கறது சம்பந்தமான பிரச்சினயில அலைஞ்சிகிட்டு கெடக்கறாங்க.”

“ எந்த நேரத்துலயும் எதுக்காகவும் தயங்காம வாங்க. பொது மருத்துவமனைக்கும் பின்னால, மொதத்தெருவுல வலது பக்கத்து மொதவீடு...” கிளம்பியவர் திடுமென ஞாபகம் வந்தவராய், குறள் மணியிடம் கேட்டார். “ ஏம்ப்பா... மணி, கொழும்புல இந்த இந்திய தூதர்

இப்பிடி அறிக்கை வுட்ருக்காரு...”

அறிவழகனே அண்ணனிடம் இதுபற்றிக் கேட்கலாம் என்றுதான் நினைத்திருந்தான். அவர் கேட்டதும் உற்சாகமாகி விட்டான்.

“ அஞ்சுக கேள் போலும் பகைவர் தொடர்பு’ ன்னு அன்னைக்கே எச்சரிக்கை செஞ்சி வைச்சிருக்காரு வள்ளுவர். அமைதிப் படைன்னு பெருவாரியான துருப்புகள கொண்டுபோயி எறக்கி வுட்ருக்காங்க. இது எங்க போயி முடியும்னு மூணு தரப்புலயும் ஒண்ணுந் தெளிவு இல்ல... பாக்கலாம் என்னா நடக்குதுன்னு...” சொல்லிவிட்டு வறட்சியாகச் சிரித்தார்.

அமலநாயகம் கிளம்பிப் போனதும், “ ஏம்ப்பா போவலாமா...” கேட்டபடி ஏதேச்சையாய் திரும்பி வேப்பங்குறிச்சி போகிற ரோட்டில் பார்வையை விட்டவர் அதிர்ந்து போய்விட்டார். “ என்னாப்பா இம்மாங் கூட்டம்...”

“ அதான் அண்ண, சொன்னா எதுவும் கேக்குல. எல்லாம் பேச்சிவார்த்த நடக்கற அங்கதான் வருதுவோ.”

ரயில்வே ஸ்டேஷன் வருகிற ரோட்டுக்கும் மேற்காலப் பக்கம் என்.எல்.சி.யால் கட்டிக் கொடுக்கப்பட்ட இடத்தில் நில எடுப்புத் துறை அலுவலகம். முன்னால் விரிந்திருந்த வாகை மர நிழலில் தெற்கு வெள்ளூர், கூனங்குறிச்சி எனக் கூடச் சேர்ந்து திரளாகப் போய் நின்றார்கள்.

இதை விடவும் பெரிய பெரிய எதிர்ப்புக் கூட்டங்களைப் பார்த்துப் பழக்கப்பட்ட அலுவலர்கள், அதிகாரிகள் அடிக்கடி வெளியே வந்து சாதாரணமாகப் பார்த்துவிட்டு உள்ளே போனார்கள்.

குறள்மணியைப் பின்தொடர்ந்து எல்லோரும் போனார்கள். “ இப்பிடி பெஞ்சுல குந்துங்க...” ஊனமுற்ற சிப்பந்தி உட்காரச் சொன்னார்.

உள்ளே போய் என்னென்ன எப்படிப் பேசவேண்டும், கேட்க வேண்டும் என்கிற யோசனையில் எல்லோரும் தாசில்தார் அறை முன் பெஞ்சுகளில் குந்தியிருக்க, அலுவலகத்தில் வேலை செய்கிற எவருமே இவர்களைப் பொருட்படுத்தவில்லை. குனிந்த தலை நிமிராமல், நடந்த கால் நில்லாமல் ஏதோ அந்த அலுவலகமே இயந்திரமண்டபம்போல் தோற்றங் காட்டியது. சிகாமணி அங்குமிங்கும் தலையைச் சுழற்றி சொக்கனின் தலை எங்காகிலும் தென்படுகிறதா எனப் பார்த்தான்.

இவர்களை உட்காரச் சொல்லிவிட்டுப் போன சிப்பந்தி, காலை இழுத்து இழுத்துக்கொண்டு நேரே குறள்மணியிடம் வந்தார். “ இன்னக்கி மீட்டிங்

கேன்சல். இப்பதான் போன் வந்துச்சு. சாரு, கலெக்டர் மீட்டிங்குக்கு போயிட்டாராம்.”

எல்லோர் முகத்திலும் திக்கென்று ஒரு ஏமாற்றம். “ ஏங்க, நீங்கதான் நாளைக்கி தாசில்தார் தலைமையில கூட்டம்னு வந்து சொன்னீங்க. இன்னைக்கி கலெக்டர் மீட்டிங்கன்னா என்னா அர்த்தங்க. ஏதோ திட்டம் போட்டு எங்கள இழுத்தடிச்சி ஏமாத்தற மாதிரியிருக்கு...” குறள்மணி சத்தமாகப் பேசவும், அலுவலகத்தி லிருந்த எல்லோர் முகத்திலும் லேசான அதிர்வு.

“ இல்லைங்க. திடீர்னு கலெக்டர் ஆபிசுலேர்ந்து...” சிப்பந்தி இழுத்துக்கொண்டு இருக்கும்போதே சேதி வெளியே போய், திடுமெனப் பற்றிக்கொண்டது.

“ பிடுங்காதே! பிடுங்காதே! எங்கள் வாழ்வைப் பிடுங்காதே!”

“ எடுக்காதே! எடுக்காதே! எங்கள் நிலத்தை எடுக்காதே!”

“ அடிக்காதே! அடிக்காதே! எங்கள் வயிற்றில் அடிக்காதே!”

“ ஏமாற்றாதே! ஏமாற்றாதே! எங்களை நீயும் ஏமாற்றாதே!”

ரோட்டில் போவோர் வருவோர், பக்கத்திலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலிருந்தவர்கள் எல்லோருமே திரும்பிப் பார்க்கவும், கிட்ட வரவுமாய் சரசரவென அது ஒரு போராட்டக் களமாக மாறிவிட்டது. குறள்மணியோ அறிவழகனோ சிகாமணியோ யாருமே சொல்லவும் இல்லை, திட்டமிட்டுத் தொடங்கவும் இல்லை. தானே பற்றிக்கொண்ட உக்கிரம். தருணம் பார்த்துக்கொண்டிருந்த நெருப்பு.

“ வீட்டுக்கு ஒரு ஆள் வேலை கொடு.”

“ வேண்டிய நிவாரணம் விரைந்து கொடு.”

“ மாற்றுக் குடியிருப்பும் மறுவாழ்வும், எங்களுக்கு உறுதி கொடு.”

“ ஏமாற மாட்டோம் ஏமாற மாட்டோம் இனியும் நாங்கள் ஏமாற மாட்டோம்.”

“ போராடுவோம் போராடுவோம் வாழும் உரிமைக்குப் போராடுவோம்.”

பால்ராசும் தெற்குவெள்ளூர் மணிகண்டனும் மாறிமாறி கோஷங்கள் எழுப்ப, நில எடுப்பு அலுவலகம் கதிகலங்கியபோது மிகுந்த சத்தத்துடன் நாலைந்து

ஜீப்புகளும், ஒரு பெரிய வேன் ஒன்றும் திடுதிப்பென வந்து நின்றன. எல்லோரிடமும் தடிகள், தற்காப்புத் தட்டிகள். கையில் பிடித்துக்கொண்டு நொடிப் பொழுதுக்குள் சூழ்ந்து வளைத்துக்கொண்டது காவல் துறை. கப்சிப்பென்று அடங்கிப்போய்விட்டது மொத்தக் கூட்டமும்.

காவல் தலமான் அலட்சியமாக நடந்து முன்னே வரவும் கூட்டம் இரண்டாய்ப் பிளந்து வழிவிட்டது. குறள்மணியை ஓரக்கண்ணால் கவனித்தபடி நேரே அறிவழகனிடம் போனார். " இதுலாம் நல்லா இல்லிங்க. எங்க பர்மிஷன் இல்லாம இவ்வளவு கூட்டத்தக் கூட்டி வந்து போராட்டம் நடத்தறது ரொம்ப தப்பு. நடவடிக்க எடுக்குணும்னு முடிவு பண்ணிட்டா, ரொம்ப சிவியரா இருக்கும்."

குறள்மணி பேசுவதற்கு வாயை எடுத்தார். அதற்குள் சிகாமணி முந்திவிட்டான் " எதுங்க நல்லா இல்ல. பொறந்த மண்ணுங்க. பறிபோவுதேன்னு அதது தெவைச்சி தெகமாறிப் போயி நிக்கிதுவோ. இதுல இன்னைக்குப் பேச்சுவார்த்தன்னு நேத்திக்கிச் சொல்லிட்டு, இப்ப கேன்சலு, தாசில்தார் கலெக்டர் மீட்டிங் பூட்டார்னா என்னா அர்த்தம்? அதது வாழ்வு போவுது, வாழ்ந்த மண்ணு போவுதுன்னு தானா தெரண்டு வந்த கூட்டம். யாரையும் வலிஞ்சி வளைச்சி இட்டாருல. எதிர்பார்ப்போட வந்ததுவோ. இப்படித் திட்டம் போட்டு ஏமாத்தறதுன்னா எது சும்மா இருக்கும். ஏதாளங்கெட்ட சனங்க கத்திப்பாத்துட்டு தே பூடப்போவுது. எனுமோ கத்தி கடப்பாரயோட நிக்கறமாதிரி சிட்டி தட்றதுக்குள்ள வந்து சுத்தி நிக்கிறீங்க..." சிகாமணியின் இடைவிடாத அழுத்தமான பேச்சில் காவல் தலமானே கொஞ்சம் தேங்கினார்.

" நமக்கு ஒண்ணுன்னா ஒரு நாதிக்கிம் வழிகெடயாது. வரவும் மாட்டாங்க. இங்க எச்சி ஈரம் காயறதுக்குள்ள பிலிபிலின்னு வந்து நிக்கிறாங்க..." கூட்டத்தில் யாரோ சொல்லவும் தலமான் திரும்பிப் பார்த்தார். இரண்டு மோட்டார் சைக்கிளில் கேமராக் களுடன் வந்தவர்கள் இறங்கிய சுருக்கு தெரியாமல் பளிச் பளிச்சென்று கும்பலைப் போட்டோ எடுத்தார்கள்.

" கழுகுக்கு வேர்க்கிற மாதிரி, நமக்குத் தெரியறதுக்குள்ள சேதி இவனுவுளுக்குத் தெரிஞ்சி போவுது." தலமான் முனறிக் கொண்டே உள்ளே பார்த்துக் கூப்பிட்டார் " யாருப்பா... தாசில்தார் எப்ப வருவாரு...?"

சிப்பந்தி பரிதாபமாக காலை எடுத்து வைத்து விந்தியபடி சொன்னார். " தெரியலிங்க சார். கலெக்டர் மீட்டிங்குன்னு..." சொல்லிக்கொண்டு இருக்கும்போதே கேமராக்காரர்களில் ஒருவன், குறள்மணியிடம் நோட்டும்

பேனாவுமாக வந்தான். “ ஒங்க பிரச்சின என்னன்னு சொல்லுங்க...”

‘ நி ல எடுப்புத் துறை அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம். நெய்வேலி. ஆ க ஸ் டு 1 . நிவாரணம் மற்றும் மாற்று ஏற்பாடுகள் தொடர்பான பேச்சுவார்த்தையின் போது அலுவலர்களின் புறக்கணிப்பால் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வேப்பங்குறிச்சி, தெற்கு வெள்ளூர் போன்ற ஊர்களை நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தோண்டுதல் மற்றும் மின் உற்பத்தி விரிவாக்கப் பணிகளுக்காக அண்மையில் நில ஆர்ஜிதம் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் அரசு இழப்பீடு, மறுவாழ்விற்கான நிவாரண உதவிகள் போன்று எந்த உதவிகளையும் உறுதிப்படுத்தாமல் நில ஆர்ஜிதம் செய்ய முயன்றதாகத் தெரிகிறது. சேதி அறிந்த மக்கள் தடுத்து நிறுத்தினர். இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவும் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று பேச்சு வார்த்தைக்கு தேதி கொடுத்து வரவழைக்கப்பட்ட மக்கள் நில எடுப்பு தாசில்தார் கலெக்டர் மீட்டிங்கிற்கு சென்றுவிட்டதாகத் தகவல் அறிந்ததும் திடுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தை போராட்டக் குழுத்தலைவர் குறள்மணி தலைமையில் வேப்பங்குறிச்சி தெற்கு வெள்ளூர் போராட்டப் பொறுப்பாளர்கள் அறிவழகன், சிகாமணி, உத்தண்டராய படையாட்சி, செம்ப படையாட்சி எனப் பெருந்திரளாய் மக்கள் ஈடுபட்டனர். தகவலறிந்த காவல்துறை தலையிட்டு கூட்டம் இந்த மாதம் 20ஆம் தேதி கட்டாயம் நடைபெறும் என உறுதியளித்ததுடன், மக்கள் கலைந்து சென்றனர். இந்த நிலமெடுப்பு தொடர்பாக டாக்டர் அய்யா அவர்கள் அண்மையில் நெய்வேலி யில் ஒரு பெரும் கவன ஈர்ப்பு கூட்டத்தை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.’

‘ தினப்புரட்சி’யில் படத்துடன் கூடிய தலைப்புச் செய்தியாக வந்திருந்ததை சேப்ளாநத்தம் செம்ப படையாச்சி படித்துக் காட்டவும் அறிவழகன், சிகாமணி இன்னும் கரி படாச்சி என நிறையப்பேர் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். “ நம்ப பத்திரிக்கய தவிர, மத்ததுலலாம் சும்மா நாலு வரியில தான் இந்தச் சேதிய போட்ருக்கானுவோ...” கத்தை பேப்பர்களுடன் உத்தண்டராயர் உள்ளே நுழைந்தார்.

“ எந்த பத்திரிக்கக்காரனுக்கும் இந்த மண்ணுமேல அக்கற இல்ல அண்ண. அவனுக்கு பேனு, பிரிட்ஜ், ஏசி... எல்லாமும் தேவ இருக்கு. அதனால கரண்டு தேவ. கரண்டு தயாரிக்கிற நெய்வேலி தேவ. ஆனா தேவைய பூர்த்தி செய்ய எடத்த குடுக்கற நம்பள மறந்துடுவான். இன்னம் கொஞ்சம்

வலுவா போராட்டம் நடத்துனா நம்பள தீவிரவாதின்னு கூட சொல்வானுவோ.” வரவர சிகாமணியின் பேச்சு ரொம்பவும் கூர்மையாகப் போவதுபோல் பட்டது அறிவழகனுக்கு.

“ அதுக்காகத்தான் எதுத்தாப்ல பொட்டிக் கடையில ஒரு மாப்ள நிக்கிறாரு பாரு” உத்தண்டராயர் கையைக் காட்டாமல் தாவாங்கட்டையால் காட்டினார்.

“ யாரு அண்ண...” பெட்டிக் கடையோரம் வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவி காம்பு கிள்ளியபடி நின்றிருந்த ஆளைப் பார்த்து கேட்டான்.

“ நீங்கள்லாம் இப்பதான போலிஸ்காரம் பார்வைக்கி வர்றீங்க. நாங்கள்லாம் அரிஓம்னு அய்யா சங்கம் ஆரம்பிச்ச காலத்திலேர்ந்து போலிஸ்காரன பாத்துகிட்டு இருக்கறம். அதனால அவுங்க நோட்ட வோட்டம்லாம் தெரியும்.”

‘ யாரா இருக்கும்...’ அறிவழகனும் குறுக்கிட்டு ஓடிய நாலைந்து பேருந்துகள், லாரிகளின் இடையிடையே பார்த்தான். ஐம்பது வயதைத் தொட்டவர். தொந்தி கூடுதலாய் கனத்திருந்தது. கக்கத்தில் கெந்துவட்டிக்காரனைப் போல் பை இருந்தது.

இருவருக்கும் மட்டுமல்ல கரி படாச்சி உட்பட அங்கிருந்த எவருக்குமே யாரெனப் பிடிபடவில்லையெனத் தெரிந்தது. உத்தண்ட ராயரே சொன்னார். “ கியூ பிராஞ்ச் போலிசு. ம.ஃப்டியில நின்னு, நம்ப சங்கத்துல இருந்து என்னா பேசறம், என்னென்னா நடவடிக்க எடுக்கறம்னு ரகசியமா கண்காணிக்கறாங்க.”

கியூ பிராஞ்ச் என்றதும் சற்றே திடுக்கிட்டாலும் எவரும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. “ சரி வர்றன் தம்பி...” கரி படாச்சி மட்டும் கிளம்பினார்.

“ என்னா, போலிசுன்னதும் கரி படாச்சி பயிந்துட்டாரா?” உத்தண்டராயர் சற்றே சிரிப்புடன் கேட்டார்.

“ அட நீ வேறப்பா. எனக்கு என்னா புள்ளையா குட்டியா. இல்ல கணக்கப்புள்ள போட்டு வரவுசெலவு பாக்கறமாதிரி கண்ணுக்கெட்டாத தூரம் வரைக்கும் காணி பூமி இருக்கா. அவரைப் பந்தல் மாதரி ஒரு குடிச. உப்பு விக்கிறவம் மாதிரி ஒரு வண்டியும் ஒரு சத மாடுவுளுந்தான். இதுல என்னா பயம்! தே இப்பியே கூட அந்த ஆளுகிட்ட சொல்லி என்ன கையோட இட்டுக்கிட்டுப் போவச் சொல்லு. என்னா கூடவே அந்தக் கெழவியையும் இட்டுக்கிட்டுப் போறமாதிரி சொல்லு. தனியா வுட்டட்டுப் போனா கெறாவிக்கிட்டு கெடக்கும்.” கரி படாச்சி சர்வசாதாரணமாகச் சொல்லிவிட்டு,

துண்டை உதறித் தோள்மேல் போட்டுக்கொண்டு மூக்குப்பொடியை உறிஞ்சியபடி கட்டிடத்தை விட்டு வெளியே வந்தார்.

கொஞ்சநேரம் அமைதியாய் சேதிகளைப் புரட்டிக் கொண்டிருந்த உத்தண்டராயர் சொன்னார் "எம். ஜி.ஆருக்கு இந்த கண தப்பிக்காதுங்கிறானுவோ..."

" அதான் யோசனையா இருக்கு. இதுல அடுத்த மாதம் 17ஆம் தேதியில நம்ப சால மறியல் வேற..." அறிவழகன் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஏதோ யோசனையிலிருந்து திடமென விடுபட்டவன் மாதிரி சிகாமணி பேசினான். " இருவதாம் தேதிக்குக்கூட பேச்சுவார்த்தை க்கு கூப்புடமாட்டானுவோ பாருங்களன்."

அறிவழகனும் உத்தண்டராயரும் சந்தேகத்தோடு கேட்டார்கள் " என்னாப்பா இப்பிடி சொல்ற?"

" ஆம அண்ண. எதாயிருந்தாலும் செப்டம்பர் 17, தொடர்சாலை மறியல் போராட்டத்துக்கு அப்பறந்தான் அநேகமா கூப்புடுவானுவோ..."

" என்னா அம்மாங் குறியா சொல்ற..."

" நெசந்தான் அண்ண. அதோட சாலை மறியலு எந்த அளவுக்கு வெற்றி அடையுதோ அந்த அளவுக்கு நம்ப நெலம் தொடர்பான பிரச்சனைகளோட வெற்றியும் இருக்கு. ஏன்னா இங்க இருக்கற நெலம்பலம் பூரா நம்ப ஆளுங்களுதுதான். பாதிக்கப் பட்டுக் கெடக்கறதும் நம்ப சனங்கதான். இந்தப் பக்கம் எந்த அளவுக்கு சாலை மறியல் நடக்குதோ அந்த அளவுக்கு இங்கத்திய மக்கள் எழுச்சியும் இருக்கும்னு அரசுக்கும் தெரியும். அதனாலதான் உண்ம நெலவரத்த தெரிஞ்சிக்கிட்டு அப்பறமாதான் பேச்சு வார்த்தைக்கு கூப்புடுவானுவோ." சிகாமணி சொல்லிக்கொண்டே போக உத்தண்டராயர், வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந் தார்.

அறிவழகனுக்கும் சிகாமணி சொல்வது சரியாகவே பட்டது. இல்லையென்றால் உறுதியாக முதல்நாள் சொல்லி, மறுநாள் ரத்து என்றால் உண்மையாகவே இடிக்கத்தான் செய்தது. இருபதாம் தேதியும் அவ்வாறே ஏதாவது சாக்குப்போக்கு சொல்வார்கள் என்று தோன்றியது.

உத்தரண்டராயரும் அதை உணர்ந்தவராய் உணர்ச்சி வசப்பட்டு சொன்னார் " நீ சொல்றது வாஸ்தவந்தாம்பா. நமக்கு, குறிப்பா நெலம் பறிபோவ இருக்கறவங்களுக்கு உறுதியா ஒரு நெல்லது கெடைக்கணும்னா அதுக்கு

ஒரே வழி சாலை மறியல் போராட்டத்த வலுவா நாம நடத்துறதுலதான் இருக்கு...”

“ ரொம்ப வேகமாப் பேசாத அண்ண, வெளிய வேற ஆளு நிக்கிதுங்கற...” அறிவழகன் எச்சரிக்கைப் படுத்தினான்.

“ நம்ப ஆளுதான். சமுட்டிக்குப்பம். சொந்தக்காரரு வேற.” சொல்லியபடி வெளியே வந்தவர் கியூ பிராஞ்காரரைப் பார்த்து ஒரு வணக்கத்தைப் போட்டார். பார்த்தபடி வெளியே வந்தார்கள் அறிவழகன் சிகாமணியும்.

வேப்பங்குறிச்சிக்குப் போக மெயின் ரோட்டை விட்டுத் திரும்பி பள்ளிக்கூடத்தைக்கூட தாண்டியிருக்க மாட்டார்கள். பின்னால் கூப்பிடுகுரல் கேட்டது. “ ஏங்க சிகாமணி...”

திரும்பினார்கள். மடிப்புக்குலையாத காக்கி யூனிஃபார்மில் காவலர் ஒருவர் கூப்பிட்டபடி வந்துகொண்டிருந்தார். கியூ பிராஞ்சிக்காரன் அதுக்குள்ள வேல குடுத்துட்டானா?

கிட்டவந்ததும் சிகாமணியிடம் கேட்டார் “ ஒங்க அப்பாதான செங்கல்ராவு...”

“ ஆமாங்க...”

“ அரஸ்ட் வாரண்டு வந்துருக்கு...” சொன்னதோடு நில்லாமல் கையில் வாரண்டையும் கொடுத்தார்.

*

30

த ன்னைக் கடந்த போதை செங்கல்ராவுக்கு. தெருவே அதம் பறக்கிறது. புழுத்த நாய் குறுக்கே போகாத மாதிரி வாயில் சரஞ்சரமாய் எல்லாமும் நர வார்த்தைகள் தான். அசலாம்பு வந்து அடக்கி அடக்கிப் பார்க்கிறாள். " வாணாம். என்னா ஏதுன்னு தம்பி வெசாரிக்கப் போயிருக்கான். மொட்டத் தாதன் குட்டையில வுழுந்த மாதிரி ஒண்ணு கெடக்க ஒண்ணு பேசி ஊர் வம்ப வெலைக்கு வாங்காத..."

" ஏய்... ஒனக்கு ஒண்ணுந் தெரியாதுடி. அமுக்கி இருந்து கழுத்தறுக்கற பயலுவோடி அவனுவோ அண்ணந்தம்பி ரெண்டு பேரும். அவவன் கொல்ல போச்சே குடி போச்சேன்னு தெவைச்சிப் போயி நிக்கிறான். இவன் கும்பலோட கும்பலா சகுனி வேஷம் போட்டு நின்னுட்டு, எப்ப நடந்த மரம் வெட்டன கேசுக்கு, இப்ப கொண்டாறான் வாரண்டு. படுபோசிப் பயலுவுளா... ஒங்கள நா கொத்துக்கட்டையில வைச்சிக் கொத்திட்டு உள்ள போவுல எப்பங் கருத்தா படாச்சிக்கும், எம்மா சொக்காயிக்கும் நா பொறக்குல..."

யார் சொல்லியும் கேட்கவில்ல. இதுவேறு ஒண்ணுக்கு மூன்றாய் சனங்கள் கூடச்சேர்த்துச் சொல்லி அங்காண்ட ராசோக்கியம் வீட்டில் அள்ளிப் போட்டுவிட்டால்... நேரே ரங்கநாது வீட்டுப் பக்கம் ஓடினாள். ' வூட்ல அவன் இல்லாத நேரத்துல இந்த கம்னேட்டி பய இந்த வேதிய வளத்தறான...'

ரங்கநாதும் வீட்டில் இல்லை. அறிவழகனும் சிகாமணி கூட கடலூர் போயிருப்பதாக காசாம்பு சொல்லவும் குண்டோட்டம் குதிரையோட்டமாக ஓடிவந்தவள் தெருவில் நின்ற வண்டியைப் பார்த்து அப்படியே வெலவெலத்துப்போய்விட்டாள்.

வாசலுக்கு நேரே தெருவில் மாட்டுவண்டி. வண்டியில் ராசோக்கியம். வண்டியை வழிமறித்தபடி செங்கல்ராவு. மாடுகள் இரண்டும் முன்னே மறிக்கும் செங்கல்ராவை எட்டி எடாவி விடுகிறமாதிரி கொம்பால் மட்டுமட்டென்று நுகத்தடியில் மோதுகின்றன.

" என்னாடா மொறைக்கிற. எப்ப நடந்த மரம் வெட்ன சண்டக்கி எப்ப

வந்து அரவந் தெரியாம ஆளப் புடிக்கிறதுக்கு வாரண்டு அனுப்புற... ஒன்ன...” புள்ளுக்கழியை வைத்துக்கொண்டு செலாவரிசை எடுக்கறார்.

ராசோக்கியத்திற்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு மூன்று ஈரங்கிக்கு செங்கல்ராவு வரவில்லை. கனகராசும் இவரும் மட்டும் வெட்டியாய்ப் போய்வந்தார்கள். யாரையாவது வைத்து ராசியாய்ப் போய்விடலாம் என்று கூட யோசித்துக்கொண்டு இருந்ததுதான். இந்த நிலம் எடுப்பது தொடர்பான தலைபோகிற பிரச்சினைகளில் அதில் கவனம் செலுத்தாமல் போய்விட்டது. இந்த இக்கட்டில் எப்படி வாரண்ட் அளவிற்குப் போனது என அவரால் யூகிக்க முடியவில்லை. ஆ னா லு ம் ‘ குடிகாரங்கிட்ட என்னா கெடக்கு’ என்கிற மாதிரி ராசோக்கியம் எதுவும் பேசாமல் மாடுகளை முன்னே போகவிடாமல் கைக்கயிறை இழுத்துப் பிடித்துக்கொண்டு குந்தியிருந்தார்.

வண்டியில் குந்தியிருந்த அய்யாயிரம்தான் இறங்கி வந்து பேசினார் “ ஏஞ் சாமி நீங்க வேற. அவுரே கைய முறிச்சி கக்கத்துல சொருவற மாதிரி, பொழப்பப் புடிங்கிக்கிட்டு நெய்வேலிக்காரன் பொடரியப் புடிச்சித் தள்றானேன்னு நித்தம் பொலம்பிக்கிட்டு கெடக்கறாரு. அங்காண்ட அந்தப் பாஞ்சால பெரியாயியும் ஒடம்பு சரியில்லாம கெடக்குது. இவுரு போயி வாரண்ட வுட்டாரு, வக்கீல வுட்டாருன்னு...”

மெல்ல கூட்டம் கூடி எல்லோரும் வேடிக்கைதான் பார்க் கிறார்கள். வந்து மறிக்க முத்துக்கண்ணு ஆயிக்கும் துடித்ததுதான். ஆனால் குடித்துவிட்டால் செங்கல்ராவு குணங்கெட்டவன். இதில் அய்யாயிரம் துணிச்சலாய் வந்து பேசியது செங்கல்ராவுக்கு இன்னும் எகிறி விட்டது.

“ டேய்... நீ அவனுக்கு பண்ணக்காரன்னா ஊத்தற பழைய கஞ்சியக் குடிச்சிட்டு, ஒழுவு வெட்டியான் வேலயப் பாத்துக்கிட்டு ஒழுங்காப் போ... நீ வந்து இங்க பஞ்சாயத்தம் பொளக்கற வேலய வுட்டுடு. இப்ப இவனால உள்ள போவலாம்னு இருக்கறன். ஒன்னால உள்ள போவ வைச்சிடாத...” புள்ளுக்கழியை ஆட்டிக் கொண்டிருந்த நேரம் சேதி கேள்விப்பட்டு பூமா, பாஞ்சாலை, வடிவேலு, கணேசன், செல்லப்பாங்கி என எல்லோருமே வந்து விட்டார்கள்.

கணேசனுக்கும் சற்று நிதானமான போதைதான். ஆனாலும் முன்னே போனவனை செல்லப்பாங்கிதான் தடுத்தாள். “ நீ போனா குடிகாரனும் குடிகாரனும் சேந்துக்கிட்டு ரொம்ப லட்சணமா இருக்கும்.”

“ அவனுக்கு என்னா போவுங்காலம் எதாவது வந்துபோச்சா. செவுனேன்னு வழிமேல வண்டிய ஓட்டிக்கிட்டு வந்த ஆளுகிட்ட வெட்டியா தகலாறு

பண்றான்னா...” பூமாவின் மறிப்பையும் மீறி கெறாவிக்கொண்டே பாஞ்சாலை ஓடிவந்தாள்.

வடிவேலுதான் குறுக்கே வந்து சண்டை போட்டான் “ என்னா மாமா இது.”

செங்கல்ராவு அவனுக்கும் பதிலடி கொடுக்கிறார் “ மாமன் இருக்காண்டா மயிர்ல. ஊரு என்னா லட்சணத்துல இருக்கு. இதுல வாரண்டு அனுப்பியிருக்கான். அதக் கேக்கறதுக்கு ஒங்குளுக்கு ஒக்கித இல்ல. மாமன் நொட்றான் மாமன்...”

யாருக்கும் எந்த விபரமும் சரியாகப் புரியவில்லை. அசலாம்பு எசாகையில் நின்றபடி செங்கல்ராவை எட்டி எட்டிப் பிடித்து இழுக்கப் பார்க்கிறாள். வெள்ளச்சி இருந்தாலாவது துணிந்து “ எட்ட வா அண்ண” என்பாள். காலையில் அவளும் மகளுமாய் ஊருக்குப் போனதாய் ஞாபகம்.

பாஞ்சாலையைக் கிட்ட விடாமல் மறித்துக்கொண்டே பூமா அழுதபடி கேக்கிறாள் “ என்ன கங்காட்சி எப்பா இது...” “ நீ பேசமா இரும்மா...” வடிவேலு பூமாவை அடக்கிவிட்டு, “ நீ எட்டப் போ மாமா...” லேசாய் ஒதுக்கியபடி “ நீ வண்டிய ஓட்டியா பெரிப்பா...” வடிவேல் சொன்னதுந்தான்... ஒரே நெட்டு தான். ஓடி அய்யாயிரத்தின் மேல் சாய்ந்துவிட்டான் வடிவேலு. “ ஓந் தெருவுல போயி ஓம் பஞ்சாயத்து மயிரலாம் வைச்சிக்குடா...”

வெலவெலத்துப்போய் வடிவேல் நின்றிருந்த நேரம், பின்னால் மூச்சு வாங்கியபடி சதாசிவம். முதல் பணிக்குப் போய்விட்டு வந்து குளித்துக்கொண்டிருந்தவன், தலையைக்கூட சரிவரத் துவட்டாத அவசரத்தில் ஓடி வந்து, அதே வேகத்தில் கூட்டத்திற்குள் பாய்ந்தான். அவன் நுழைகிற வேகத்தைப் பார்த்து, பாஞ்சாலையை விட்டுவிட்டு பூமா ஓடி அவனை மறித்தாள். “ சண்ட வேணாம். வுட்டுட்டு வேலயப் பாரு.”

“ இதவிட என்னா மயிரு வேல இருக்கு... வழிய போற வண்டிய மறிச்சிக்கிட்டு வம்ப வளத்தறான்னா...” ஆவேசமாய் நெருங்கியவனை வடிவேல் உட்பட எல்லோரும் பிடித்து மறிக்கிறார்கள்.

“ வம்பு வளத்தறனா.. வக்காள ஓழீவுளா... ஒங்கள... வாரண்டாடா வுடுறீங்க... வாரண்டு...” மறிப்பதற்கு அசலாம்பு நெருங்குவதற்குள், சதாசிவத்தை நோக்கி செங்கல்ராவு கழியை ஓங்கினார். எட்டி அவன் காலை நீட்டவில்லையென்றால், முன்னால் மறித்துக்கொண்டு நின்ற வடிவேலின் பின்மண்டை உடைந் திருக்கும். மூச்சைக் கட்டி எகிறி

சதாசிவம் ஒரு உதை விட்டான். ஓங்கிய கழி கீழே இறங்குவதற்குள் குறியாய் செங்கல்ராவின் நெஞ்சில் வலுவாய் இறங்கியது சதாசிவத்தின் பாதம். நிலை குலைந்து பின்னுக்கு வலது மாட்டுக்கு நேரே ஓடி விழுந்ததும், ஏற்கெனவே எடாவியபடி மிரண்டு நின்ற மாடு வாட்டமாக கொம்பைச் சாய்த்துக் குத்தி ஆளை உயரே தூக்கியது. செங்கல்ராவுக்கு இடது விலாவில் பாய்ந்த கொம்பு, சதையைக் கிழித்துக்கொண்டு இறங்கியிருந்தது.

ரத்தக்களரி. குய்யோ முறையோ என ஒரே அலறல் சத்தம். செங்கல்ராவைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்கள்.

மார்பைச் சுற்றி வலுத்த கட்டு. கட்டின் வெள்ளை நிறத்தில் ரத்தக்கசிவு செக்கச்செவேல் என்று தனித்துக் கூரமாகக் காட்டியது. எலும்புக்கு எதுவும் பாதிப்பில்லையென்றாலும் ஆழமான காயந்தான். பத்துத் தையலுக்கு மேல் போடவேண்டியதாய்ப் போய்விட்டது. ஒரு வாரம் முழுவதும் தொடர்ந்து கூத்தாடிய களைப்பில் கிடப்பதுபோல் செங்கல்ராவு மயக்கத்தில் கிடப்பது தெரிந்தது. கால்மாட்டில் அசலாம்பு அழுதுகொண்டே குந்தியிருந்தாள். குண்டு பல்பு வெளிச்சத்தில் பூச்சிகள் சரமாரியாகப் பறக்கவும், ஒன்றிரண்டு செங்கல்ராவு மேல் விழவும், இடையிடையே பொறுக்கி எட்டப்போட்டபடி மூக்கைச் சிந்திக்கொண்டிருந்தாள் அசலாம்பு.

எந்த ஆஸ்பத்திரியிலும் டக்கென்று எடுத்துக்கொள்ள வில்லை. இவ்வளவு பெரிய காயம். எதாவது அடிதடியாக இருக்கும். பின்னால் போலிசு கேசு வம்பு எதற்கு என்று ஜி.ஹெச்சுக்கு தூக்கிப் போகச் சொன்னார்கள். அதற்குத் தகுந்த மாதிரி மேய்ச்சக்காலி லிருந்து வந்த காசி, கேசு குடுத்தே ஆகவேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார். ‘ மொதல்ல ஆஸ்பத்திரியில காட்டுங்க. அப்புறமா ஏம் புள்ள வந்து பாத்துப்பான்’ அசலாம்பு கதறுகிறாள். பிறகு விஷயம் கேள்விப்பட்டு வந்த செம்ப படையாச்சி, ராமச்சந்திரன் டாக்டரிடம் ‘ நம்ப சிகாமணி அப்பந்தான், சும்மா மாடு முட்டிட்டுது’ என்று சொல்லிப் பார்க்க வைத்தார்.

தலைமாட்டுப் பக்கம் கிடந்த ஸ்டூலில் திகைத்துப்போய் செய்வதறியாது குந்தியிருந்தான் சிகாமணி. வாரண்ட் என்றதும் ‘ நாளைக்கே கொண்டாந்து ஒப்படைக்கறம்’ என உத்தண்டராயரை வைத்துப் பேசி உறுதியளித்து விட்டு நேரே கடலூர் போய், இவர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த அரிச்சந்திரன் வக்கீலைப் பார்த்தார்கள்.

மூன்று ஈரங்கிக்கு தொடர்ந்து வரவும் இல்லை. குறைந்த பட்சம் வரமுடியவில்லை என்கிற தகவலை வக்கீலிடம் கூடத் தெரிவிக்கவில்லை. வழக்கு முடிவுக்கு வரவில்லையென்றாலும் வக்கீலுக்கு வருமானமாவது வந்துகொண்டிருந்தால் பரவாயில்லை. எதற்கும் வழியில்லாத வழக்கு. தொடர்ந்து ஆஜராகாத ஈரங்கி. நீதிமான் பிடிவாரண்ட் கொடுத்துவிட்டார். அரிச்சந்திர மகராசனும் ‘ இப்பிடியாவது ஆளு வந்து, வருமானத்த குடுக்கட்டும்’ தலையைச் சாய்த்துக்கொண்டு இருந்துவிட்டார். விளைவு செங்கல்ராவுக்கு வாரண்ட் வந்துவிட்டது.

“ ஏம்மா, நாந்தான் ஊரு அலைச்சல்ல கெடக்கறன. நீயாவது இந்த ஆள, ஈரங்கி கீரங்கின்னு பாத்து அனுப்பியிருக்கக் கூடாது. எப்பிடி இத ஈவு பிரிச்சி சரி பண்ணப் போறன்னு தெரியில...” புலம்பிக்கொண்டே கேட்டான் சிகாமணி.

“ இந்தக் குடிகாரன் போறம் போறன்னு சொல்லிட்டு, மந்தாரக்குப்பத்துப் பக்கம் நின்னு குடிச்சிட்டு வருவான்னாப்பா நாங் கண்டேன். கூடப்போன அந்த ஆளுனாச்சும் இந்த மாதிரி கோர்ட்டுக்குப் போவுலன்னு ஒருதடவ கூட சொல்லுல. இதுக்கு மேல என்ன என்னாப்பா செய்யச் சொல்ற...” அசலாம்பு கோவென்று அழுதாள்.

“ வுடு ஆச்சி...” அறிவழகன் அவளைத் தேற்றினான்.

“ ஒஞ் சுழிய அடக்கிக்கிட்டு வூட்லியே இரு. மந்தாரக்குப்பம் பக்கம் போயி வம்ப கிம்ப வளத்திக்கிட்டு வலீனா போலிசு கீலிசுன்னு சிக்கல்ல கொண்டுபோயி வுட்டுடாதன்னு சும்மா ஒரு வார்த்தைக்குத் தான் சொன்னன்... அப்பிடியே வானத்துக்கும் பூமிக்குமா குதிக்கிறான். கீசகன கிழிக்கிறமாதிரி ராசவன்னியம் பெத்ததுவுள கிழிச்சிடுறங்கறான். அந்த நேரம் பாத்து வண்டி வரவும் மறிச்சிக் கிட்டு பாடாப் படுத்தறான். புள்ளுக்கழியச் சுத்திக்கிட்டு கெந்து பாயறான். எந்த மக்க நெருங்கி இவங்கிட்ட மறிக்கப் போவுது. அந்த மவராசன் வண்டிய வுட்டு கீழ எறங்குல. அவன் பெத்தது இவனுக்கு மேல. அது பாய, தள்ளுமுள்ளுல நெட்டி மாட்டுமேல வுழுந்து... காலம் பூரா இந்தக் கூத்துன்னா... இவங்கிட்ட கொற காலத்தையும் நா எப்புடி ஓட்டுவன்னு தெரியிலிய. தவுறி கொடலு பக்கம் கொம்பு பாஞ்சி ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிருந்து துன்னா என்னா கெதி ஆவறது! வாணாம்பா... இவங்கிட்ட இருந்து காலஞ்கழிச்சி வாரிக் கொட்டிக்கிட்டது வரைக்கும் போதும். இவந் திருந்த மாட்டான். நாமதான் சாண் கவுறோ, மண்டறக் கெணறோன்னு உயிர மாய்ச்சிக்கிறது மேலு...” கண்ணீரும் கம்பலையுமாய் அசலாம்பு மூக்கைச் சீந்தி பெட்டுக்கும் கீழே துடைத்தாள்.

அசலாம்பு சொல்லிச்சொல்லி அழவும் சிகாமணிக்கும் கலங்கி விட்டது. அறிவழகன் மெல்ல சிகாமணியின் தோளைத் தொட்டான். “ வுட்டுட்டு ஆவ வேண்டிய வேலயப் பாப்பும் வாடா...”

“ அட நீ வேற, போ அண்ண. ஒரு மனுசன் எது எதுக்குத்தான் அலைவான். நெருப்புல நிக்கிறமாதிரி ஊரு பிரச்சின. வூட்ல இருக்கற வங்க ஒத்தாசையா இல்லன்னாலும் பரவாயில்ல. ஒவுத்திரியம் குடுக்காதனாச்சும் இருக்கணும்...” சலித்துக் கொண்டான்.

செங்கல்ராவு ஒருக்களித்துப் படுப்பதற்கு பெருமுயற்சி எடுத்து வலியால் தூக்கத்தில் முகஞ்சுளித்தார். அசலாம்பு ஆவேசம் கொண்டவள் மாதிரி பேசினாள். “ வாணாம்பா. பொறந்த நோறு பொங்க வைச்சிப் படைச்சாலும் போவாதும்பாங்க. இவன் எடுத்த சென்மம் அப்பிடி. புடிக்கிற பாவம் புடிக்கட்டும், பெசாம ஒரு கால கீல அடிச்சித் திருவிப்போடு. கஞ்சிய கிஞ்சிய ஊத்திப்பம். அப்ப தான் காலு மடங்கி ஊர்வம்புக்குப் போவாம வூட்ல கெடப்பான்.”

“ ஏம்மா இங்க பேஷண்டுகிட்ட தொணதொணன்னு பேசிக்கிட்டு இருந்தா எப்பிடி. ஏந்திரிச்சி வெளியில போங்க...” மருத்துவமனை சிப்பந்தி சத்தம் போடவும், வாயை அடக்கிக் கொண்டு கம்மென்று குந்தியிருந்தாள். ஆனாலும் உள்ளுக்குள் எகிறும் குமுறலுக்கு ஏற்ப கண்களில் பொங்கிப் பொங்கிக் கண்ணீர் கொப்பளித்துக் கசிந்தது.

“ தே பெசாம படுத்துகிட்டாச்சி... இன்னய தினத்துக்கே போலிசோட கையில கால்ல வுழாதகொறையா சொல்லி நாளைக்கே கொண்டாந்து ஆஜர் படுத்தறம்னு என்னா பாடு பட்டம். இனிமே நாளைக்கி போயி வாமுட்டு போட்டு இந்த மாதிரி ஆஸ்பெட்டல்ல கெடக்கறாங்கன்னு சொல்லணும். அப்பறம் இவுரு சரியானப்பறம் நேரா கோர்ட்டுல வைச்சி ஜாமின் எடுக்கணும்....” சிகாமணி விசனமாக சொல்லிக்கொண்டே போனான்.

“ எல்லாம் பாத்துக்கலாம் வுட்றா..” அறிவழகன் தேற்றுகிற மாதிரி பேசினான். ஆனாலும் சிகாமணி அடைகிறமாதிரி தெரியவில்லை. “ எனக்கே பங்கமா இருக்கு அண்ண. ஊரு சம்பந்தமா எப்பேர்பட்ட அதிகாரிகிட்ட கூட சும்மா ஒடைச்சிக் கெடாசற மாதிரி பேசறம், நடக்கறம். சொந்தக் கேசுல, அதுவும் நம்ப பக்கம் தப்ப வைச்சிக்கிட்டு, தல நிமுந்து பேச முடியில அண்ண. நீங்களுந் தான பாத்தீங்க. எனுமா தலயச் சொறிஞ்சிக்கிட்டு அவனுவோகிட்ட நிக்க வேண்டிதா இருக்கு...”

“ அசலாம்பு... அசலாம்பு...” செங்கல்ராவிடமிருந்து மெல்ல முனகல் சத்தம் வந்தது.

திடுமென அந்தக் காந்தாளம் அசலாம்பு விடமிருந்து எப்படி வந்ததெனத் தெரியவில்லை “ ம்... அசலாம்பு மல்லாந்து போவுல. கிட்டத்தான் இருக்கா...”

*

31

“ ஏ ம் புத்திய செருப்பால அடிச்சிக்கணும். எவனாச்சும் அடிச்சிப் பல்லப் புடுங்கறான், நமக்கு என்னான்னு நாம வழிமேல வந்துருக்குணும். கருநாளு அன்னைக்கே நா ஒங்ககிட்டேர்ந்து பாடம் கத்துருக்கணும். மனசு கேக்குல. ஒப்பன வழிமறிச்சி வைச்சிக் கிட்டு அடிக்கிறான்னு சேதிய கேட்டதும் தாங்குல. போன வேகத்துல கொஞ்சம் தாண்டிட்டன். இங்க என்னாடான்னா, நாந்தான் கத்தியால குத்தினன்னு, கொலப் பழிய போட்டு உள்ள தள்றமாதிரி குடும்பத்துல நிக்கிதுவோ.” சதாசிவம் பேசிக்கொண்டே இரவுப் பணிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

சாப்பாடு போடப் பிடிக்காமல் தோட்டத்துப்பக்கம் போய்க் குந்திக்கொண்டாள் பூமா. தோட்டத்து பீக்கருவைப் புதர்களுக்கு அப்பால் தெற்குவெளி நிலவு வெளிச்சத்தில், கம்மங்கொல்லையின் வரப்பில் நடப்பதுபோன்று அவளையுமறியாமல் ஒரு நினை வோட்டம். குருவிகளும் வரப்பின் ஊடே சிகாமணியும்... நினைக்க நினைக்க பெருமூச்சுதான் வந்தது. ஏற்கெனவே பழைய வழக்கு, கரிநாள் பிரச்சினை, கண்டும் காணாததுக்குக் கொலை செய்யாத குறையாய்க் கொம்புக்காயம்.

பாஞ்சாலையும் கீச்சா ராமா என்று வாயைத் திறக்கவில்லை. எழுந்து சாப்பாடு போடவும் கிட்ட வரவில்லை. வெளியே அரவம் கேட்டது. குந்திய நிலையில் திரும்பிப் பார்த்தாள். கனகராசுதான் அங்காண்ட இருந்து வந்து திண்ணையில் குந்தினார்.

“ எதாவது போலிசு கேசு கீசுன்னு போயிருக்கானுவுளான்னு விசாரிச்சியா அண்ண...” ராசோக்கியத்திடம் கேட்டார்.

“ நா ஒண்ணும் விசாரிக்கில...” அதிகம் வளர்த்தாமல் ராசோக்கியம் சொன்னார்.

“ வக்காள ஓழிவோ... ஈரங்கிக்கு போவாத வுட்டா வாரண்டு வுடுவானுவோன்னு மயிரானுக்குத் தெரியாதா. வண்டிய மறிச்சிக்கிட்டு வானத்தக் கிழிக்கிறன், நாலுக்கு மூணா மடிக்கிறன்னு துள்ளுனா என்னா அர்த்தம்...” சொல்லிக்கொண்டே போனவர் சமாதானப் படுத்துகிறமாதிரி தனக்குத்தானே பேசினார். “ பொண்டாட்ட ஓத்தம் மாடு...

நரிக்கொறவமங்கலத்துல அறியாப் புள்ளதான் புடிச்சி தண்ணி காட்டும், பச்ச புள்ளயாட்டம் சொன்ன பேச்சக் கேட்டுக்கிட்டு பின்னாலேயே இழுத்த இழுப்புக்கெல்லாம் வரும்னான். சுழிசுத்தமும் நெல்லாதான் இருந்துது. இங்க கொண்டாந்த நாளா அந்த எடாவற பழக்கம் எப்பிடி வந்துதுன்னு தெரியில."

நரிக்குறவமங்கலம், கம்மாபுரம் பக்கம். கனகராசு வாங்கிக் கொடுத்த மாடுகள்தான். வந்த நாளாய் பொம்பள சனங்களைக் கண்டால் லேசாய் எடாவுகிற மாதிரி தலையாட்ட ஆரம்பித்தது தான். கடைசியில் இப்படி...

" மாட்டுச்சுழிலாம் நெல்லாதான் இருக்கு. நம்ப சுழி சரியில்லாமதான் இப்பிடிலாம் வந்து வெளையிது..." ராசோக்கியம் உள்ளுக்குள் குமுறிக்கிடக்கும் கொதிப்பிலிருந்து வார்த்தையை பொறுக்கி எடுத்துப் பேசினார்.

சதாசிவம் சட்டையை எடுத்துப்போட்டுக்கொண்டு கிளம்புகிற நேரம், பாஞ்சாலை தட்டில் சோற்றைப் போட்டுவந்து திட்டென வைத்தாள். வைத்த வேகத்தில் தட்டிலிருந்து நாலைந்து பருக்கை களும் செம்புத்தண்ணீரும் சிதறின.

" ஒங்க சாப்பாடும் வேணாம். ஒண்ணும் வாணாம்..." சதாசிவம் ரொம்பவும் காட்டமாகப் பேசியபடி வெளியே வந்தான். திண்ணை யில் குந்தியிருந்த கனகராசு தான் சொன்னார் " இருடா. ஏண்டா இப்பிடி வரவர இம்மாங் கோவப்படுற. வண்டிய மறிக்கட்டும, அடிச்சிடுவானா? குடிகாரன் எங்கையாவது கத்திட்டுப் போறான்னு போவாம. வந்த வேகத்துல நெட்டி, மாட்டுமேல வுழுந்து வெலாவ கிழிச்சி... இதே ஆவாத நேரமா இருந்து பழுவு எலும்பத் தாண்டி ஈரக்கொலைய பக்கம் கொம்பு எறங்கியிருந்தா நம்ப கத என்னா ஆவறது..." பேச்சில் கொஞ்சம் கண்டிப்பு கூடியிருந்தது. ஆனாலும் அதையெல்லாம் அவன் காதில் வாங்கிக்கொள்கிற மாதிரியில்லை.

" டேய் வுடுடா. அவன் இந்த நெலத்த எடுத்து, குடுக்கற நாலணா காசிய கொண்டுபோயி வாணம் வுடறதுக்குள்ள என்ன எங்கியாவது கொண்டுபோயி ஒரு கண நேரமாவது உள்ள வைக்காம வுடமாட்டான்" ராசோக்கியம் சொல்லுகிறபோது ரேகமே நடுங்கியது.

" வாணாம் வாணாம். என்னால யாரும் உள்ள போவ வேணாம். இன்னையிலேர்ந்து ஒங்குளுக்கு என்னால எந்தச் சிக்கலும் வராது. எவனாச்சும் ஒதைச்சாலும் வாங்கிக்குங்க. அடிச்சாலும் பட்டுக்குங்க..."

தெருவு விளக்கு வெளிச்சத்தில் சைக்கிளை மிதித்துக் கொண்டு போகிறவனின் மெலிந்த நிழல் திண்ணையிலெல்லாம் விழுந்து ஓடிந்து ஓடியது.

“ பாவம்... அறிவழகனும் அந்தப் பயலும் பேச்சுவார்த்தைக்கி தேதிய கேட்டு அலைஞ்சிக்கிட்டு கெடக்கற நேரத்துல இது வேற...” மெய்யாலுமாகவே சிகாமணியைப் பற்றி பரிதாபப்பட்டு ராசோக்கியம் பேசினார்.

சிகாமணியைப் பற்றி முதன்முறையாக அனுசரணையாக பேச்சு வீட்டில் கேட்டதில் பூமாவுக்கு உள்ளுக்குள் மெல்லிசாய் ஒரு உற்சாக மின்னல் கோடு. எழுந்து தண்ணீர் குடிப்பதுபோன்று உள்ளே வந்தாள்.

“ இனிமே ஆள வண்டியில கிண்டியில வைச்சிக் கொண்டுக் கிட்டுப்போயி கோர்ட்டுல ஆஜராக்கி, ஜாமீன் எடுத்தாதான்” கனகராசும் சொல்லிக்கொண்டிருந்தார்.

என்ன நினைத்தாரோ ராசோக்கியம் திடுமென இறங்கியது மாதிரி பேசினார் “ ஏண்டா தம்பி, நெலம்பலம் வூடுவாச எல்லாத்தையும் எடுக்கறதன்னு நெய்வேலிக்காரன் முடிவு பண்ணிட்டான். இருக்கற மரத்துவுளயே என்னா பண்றதுன்னு தெரியில. இதுல வெட்டி முடிஞ்சி போன மரத்துக்கு என்னா வழக்கு மேல வழக்கு. நடமேல நட. நாளைக்கி கூண்டோட கைலாசமா எங்க கொண்டுபோயி வுடப்போறானுவோன்னு தெரியில. போவும் போது யாரும் தலையில தூக்கிட்டுப் போவப்போறதில்ல. இதுல போயி இன்னம் வம்பு வழக்குன்னு இழுத்துப் பறிச்சிக்கிட்டு... அந்தக் குடிகாரனுக்காக இல்லன்னாலும் அந்தப் பையனுக் கோசரனாச்சும் பேசாம ராசியாப் பூடுவம்னு பாக்கறன். என்னா சொல்ற...”

கனகராசு மட்டுமல்ல, பாஞ்சாலையாலும் இதை நம்ப முடிய வில்லை. பூமாவுக்கு சொல்லவே தேவையில்லை, றெக்கைகள் இல்லாத குறைதான். பசுமையான சோலைகள் சரசரக்க கம்மங் கொல்லைகள் ஊடே ஓடிக்கொண்டிருக்கிறாள்.

சற்றுநேரம் கனகராசு யோசித்தார். பிறகு “ நீ சொல்றதும் சரியாதாம் படுது. ஆனா நம்பளா வலினா போயி சட்ட கெட்ட தனமா சொல்லணுமாங்கறதுதான் கொஞ்சம் இடிக்கிற மாதிரி யிருக்கு... பத்துப்பொழுது பாப்பும். அவனுவுளா எறங்கி வரட்டும்.” சொல்லி முடித்ததும் பட்டென்று பூமாவுக்குள் ஒரு சொடுக்கம். “ ட்ரோ...” வென பெருஞ்சத்தத்துடன் கல்லெறிந்தமாதிரி பறாச்சென்று குருவிகள்

பறந்தோடிவிட்டன.

*

32

செங்கல்ராவுக்கு ஏற்கெனவே வேடுரூபமாய் தலைமுடி. இதுவல்லாமல் மருத்துவமனையிலிருந்த நாலைந்து நாளில் தாடியும் தப்புமாக அலங்கோலமாகிவிட்டார். இந்த லட்சணத்தில் காரில் குந்தவைத்து, வேகத்தடையில் ஏறி இறங்கும்போது வலி தாங்காமல் துடித்துப் போய்விட்டார். இங்காண்ட அசலாம்பும் அங்காண்ட சிகாமணியுமாகப் பிடித்திருந்தும் வன்னியர்பாளையத்திற்கு நேரே போட்ட திடீர் பிரேக்கில் மோதிக் குலுங்கியதில் உயிரே போகிற மாதிரி அலறிவிட்டார். போட்டிருந்த கட்டையும் மீறி லேசாய் சிவப்புக் கசிவும் தெரிய ஆரம்பித்துவிட்டது. சிகாமணி திரும்பிப் பார்த்து அவரை முறைத்தான். ‘ பாவம்பா. வலி தாங்காமதான்...’ அசலாம்பு கண்களால் அவனிடம் கெஞ்சினாள்.

காலையில் கிளம்பும்போதே மந்தாரக்குப்பம் காவலர் ஒருவர் கூடவே வருவதாகத்தான் சொல்லியிருந்தார். வாரண்டில் இருக்கிற நபரின் கூடவே காவலர் வரவேண்டும் என்பதுதான் சட்டம் என்று சொன்னவர் “ சரி நீங்க போங்க. நா நேரா கோர்ட்டுக்கு வந்துடுவன்...” காரில் வருவதைத் தவிர்த்துக் கொண்டார். வராமல் விட்டதே பெரிது. இல்லையென்றால் நாலைந்து நாட்களாய் வைத்த மாதிரி இன்றைக்கும் வாமுட்டு போட வைத்திருப்பார்கள்.

சாலையோரத் தென்னைகளில் நிறையக் குருவிக்கூடுகள். குருவிகளைப் பார்த்த மாத்திரத்தில் அவனுக்கு அந்தச் சூழலிலும் கம்மங்கொல்லை நினைவில் வந்தது. ஆனால் நெருங்கி அருகில் வரமுடியாதபடி எதையாவது செய்து மேலமேல சிக்கலை உண்டாக்கி விரட்டியடிக்கிற முதல் ஆளாய் அப்பன் செங்கல்ராவு.

மஞ்சக்குப்பம் மைதானத்திற்கு மேற்கே பெட்ரோல் பங்க் சந்தில் நுழைந்து வழக்கறிஞர் அரிச்சந்திரன் வீட்டு வாசலில் போய் கார் நின்றது. பரிதாபமாகக் குந்தியிருந்த செங்கல்ராவுக்கு காவலாக அசலாம்பை விட்டுவிட்டு அறிவழகனும் சிகாமணியும் உள்ளே போனார்கள். எட்டிப் பிடிக்கிறமாதிரி பின்னாலேயே வந்திருப்பார்கள் போலும். காசியும் அத்தை வெள்ளைச்சியுமாக அரக்கப்பரக்க வந்து நின்றார்கள். கனத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு வந்ததில் சீத்துபூத்துவென இரைத்தது. “ நீ யெதுக்கு

அத்த வந்த? மாமன மட்டும் அனுப்பிட்டு வூட்ல இருக்க வேண்டிது தான." சிகாமணி கேட்டான்.

" என்னாப்பா ஏழூட்டு பொறப்பு வெலாவக் கிழிச்சிக்கிட்டு கெடந்து... வழக்கும் கிழக்குமா நீ அலைஞ்சி தெவைக்கறத தாங்காமதான், அமிர்தத்த ஆட்ட ஓட்டிக்கிட்டுப் போவச் சொல்லிட்டு, ஓடியாறம்." வெள்ளைச்சி சொல்லும்போதெல்லாம் அசலாம்புக்கு பற்றிக்கொண்டு வந்தது. ' ஆம்படையானும் பொண்டாட்டியும் வைச்ச வேல. மரத்த வெட்டிக்குடு மயிர வெட்டிக்குடுன்னு வம்ப வெலைக்கி வாங்கி வைச்சி கடைசியில இம்மாந்திரம் கொண்டாந்து நிறுத்த வைச்சிட்டிங்கள...'

வாசலில் பூத்துக்குலுங்கிய செம்பருத்திச் செடி நிழலில் காசி குந்தினார். " அந்த பணத்தக் குடு..." வெள்ளைச்சி அதட்டாத குறையாய்க் கேட்டாள்.

முடமுடவென எல்லாமும் நூறுரூபாய் நோட்டுகள். காசியிடமிருந்து நோட்டுகளை பிடுங்கி வெள்ளைச்சி எண்ணிக் கொண்டிருக்கும்போது அவரின் மனசுக்குள் பிணைகட்டியிருந்த கெடாக்குட்டிகள் கத்தின. விடியற்காலையிலே எழுந்து, தீபாவளிக்கு விற்கலாம் என்று வைத்திருந்த கெடாக்குட்டிகளையும் ஓட்டிவந்து, மந்தாரக்குப்பம் பாயிடம் விலை பேசி விற்றுவிட்டு... " இந்தாப்பா" என்று சிகாமணியிடம் கொடுத்தாள். வெயிலில் திரிந்து, வேர்வையில் குளித்து, பொடியில் வெந்து அலைந்து வளர்த்ததை விற்றுத் தேர்ந்த பணம்... கொடுக்கும்போது பார்த்துக்கொண்டு குந்தியிருந்த காசிக்குத் தாங்கவில்லை. பெருமூச்சி விட்டுக்கொண்டார்.

" என்னா பாக்கற. அவுருதான் குடிகாரருன்னா நீனாச்சும் ஈரங்கிக்கி வந்துருக்குணுமில்ல. நொண்டி மாட்டுக்கு சறுக்கனது வாட்டம்னு நீனும் வுட்டுட்ட. இன்னைக்கி ஒட்டுமொத்தமா தலைக்கி வந்துபோச்சி வென..." வெள்ளைச்சி போட்ட சத்தத்தில் உள்ளிருந்து ஒரு ஆள் வந்து பார்த்துவிட்டு உதட்டின் குறுக்கே விரலை வைத்து அமைதியாக இருக்கும்படி சைகை செய்துவிட்டுப் போனார்.

" சிகாமணி, நீ வக்கிலுகிட்ட பாத்து விபரத்தக் கேளு. நா போயி தம்பி காலேஜ்ல இருப்பான், இட்டுக்கிட்டு வர்றன்." கிளம்பினாள். " மணிமாறன்லாம் வேணான்னு பாக்கறன். சரி போய் இட்டுக்கிட்டு நேரா கோர்ட்டுக்கு ஒரு பதினொரு மணிக்குள்ள வந்துருங்க" சொல்லிவிட்டு உள்ளே போனார்கள்.

உள்ளே ஏகப்பட்ட புத்தகங்கள், எடுத்துப் படித்ததற்கான அடையாளங்கள் எதுவுமில்லாமல் அலமாரிகளில் தோற்றங் காட்டின. நடுவே வழக்குரைஞர்

அரிச்சந்திரன், கருப்பு அங்கி போட்டால் உடம்புக்கும் துணிக்கும் வித்தியாசம் தெரியாது என்கிற மாதிரி இருந்தார். மேசைமீது கண்ணாடி தம்ளரில் துல்லியமாக ஊடுருவும் வகையில் தெள்ளிய தண்ணீர். வருகிறவர் களுக்கு மூலையில் ஆட்டங்கண்ட ஒரு ஸ்டூலில் நீர்க்கசிவில் பாசம்பிடித்த தண்ணீர்ப் பானை. மூடியில் கவிழ்த்து வைக்கப் பட்டிருந்த தம்ளர் துலக்கப்படாமல் நீர்க்காவி அப்பியிருந்தது.

அரிச்சந்திரனின் தலை கொள்ளாத சுருள்முடி மையேற்றி நாட்கள் கடந்துபோய் வேரில் வெள்ளை பூத்திருந்தது. நிமிர்ந்து " சொல்லுங்க" என்றார்.

" வாரண்ட் கேசு. வேப்பங்குறிச்சி செங்கல்ராவு... வண்டியில குந்த வைச்சிருக்கம்..." அறிவழகன் துண்டு துண்டாகச் சொன்னான்.

" கோர்ட்டு வக்கில்னு எதுக்கு வைச்சிருக்கான். கோர்ட்டு வரச்சொல்றப்ப ஒண்ணு கோர்ட்டுக்குப் போவுணும் இல்ல, வக்கிலப் பாக்கணும். செலவு ஆவும்னு எதியும் பாக்காம இருந்தா வட்டியும் மொதலுமா சேத்து குடுத்துதான் ஆவணும். குடுங்க..." அரிச் சந்திரன் சுற்றி வளைக்காமல் பணத்துக்காகக் கையை நீட்டினார்.

ஆயிரம் ரூபாயை முதலில் கொடுத்தான். பணம் குறைவாக இருந்ததும் சற்றே கோபத்தைக் காட்டினார். " இங்க பாருப்பா. ஜட்ஜிசெங்கல்ராவு, காசி, மணிமாறன்னு மூணு பேருக்குந்தான் சேத்து வாரண்ட்ட இஷ்யூ பண்ணாரு. நாந்தான் ஒண்ணாவது பார்ட்டி ஒரு ஆளுக்கு போதும். குறிப்பா படிக்கிற பையன் மணிமாறன மனசுல வைச்சி அவரு கிட்ட சொல்லி வேணாம்னு ஏற்பாடு பண்ணனன். மேலலாம் பாக்கணும். பேசனபடி மீதி ரெண்டாயிரத்தக் குடுங்க..."

" இல்லிங்க... சம்பந்தப்பட்ட மரம் இருந்த எடமே இப்ப நெய்வேலிக்காரன் எடுக்கறதுக்கு உறுதியாயிட்டது. மரமோ நெலமோ இல்லன்னு ஆனப்பறம்.." சிகாமணி இழுத்தான்.

" மரமோ நெலமோ இல்லன்னு ஆனா மரத்துக்கு நடந்த சண்ட வெட்டு எல்லாம் இல்லன்னு ஆயிடுமா.." உரக்கப் பேசவும் சிகாமணி மறுப்பு எதுவும் பேசாமல் இரண்டாயிரத்தை எடுத்து வைத்தான்.

பணத்தை வாங்கி இழுப்பறையில் போட்டுக்கொண்டிருக்கும் போது அறிவழகன் மெல்லப் பேசினான் " அதான் சார். இப்ப சொன்னமாதிரி மரமோ நெலமோ இல்லன்னு ஆனப்பறம் வெட்டியா இந்த வழக்கு

எதுக்குங்க சார். கையோட கையா ரெண்டு பார்ட்டியும் ராசியா போறமாதிரி வழக்க முடிக்கறதுக்குப் பாருங்க. ரெண்டு தரப்புலயும் நா பேசி முடிக்கறன் சார். அதோட நெலம் எடுக்கறது சம்பந்தமா ஊர்ல வேற போராட்டம் ஆர்ப்பாட்டம்னு கொந்தளிப்பாக் கெடக்குது. இதுல போயி கோர்ட்டு கேசுன்னு...”

ஒரு நிமிடம் அரிச்சந்திரனுக்கு முகம் இருண்டு போய்விட்டது. சண்டைக்கி நிற்கிறமாதிரி வலுத்த பேச்சு “ கோர்ட்டு கேசுன்னு இத மின்னியே யோசிச்சிருக்கணும். இங்க வர்றதுக்கு மின்னியே ராசியாப் போறது. எதுக்கு இங்க எங்ககிட்ட வந்து கேஸ் கட்டப் போட்டு, நாங்க மூளயக் கசக்கிப் பிழிஞ்சி ராக்கண்ணு பகல்கண்ணு முழிச்சி கேச எப்பிடி நடத்தி ஜெயிக்கலாம்னு முடிவு பண்ணி வைச்சிருக்கிற நேரத்துல ராசியாப் போறம்னா எப்பிடி. நாங்க எதுக்கு வெட்டியா...” வார்த்தையை முடிக்காமல் கோபமாக ஒரு பார்வையை வீசினார். அறிவழகனுக்கும் சிகாமணிக்கும் பதிலுக்கு கோபம் பறந்தது. ஆனாலும் இது பொதுவிஷயமில்லை. சங்க பிரச்சனையுமில்லை. தனிப்பட்ட சொந்த வழக்கு. அவசரப்பட்டால் மேலும் எதையாவது சிக்கலில் கொண்டுவிட்டுவிடுவான்.

என்ன நினைத்தாரோ அரிச்சந்திரன் சற்றே இறங்கிய குரலில் திரும்பவும் பேசினார் “ மொதல்ல இந்த ஜாமீன் எடுக்கற விஷயத்த பாப்போம். அப்பறமா அதப் பத்தி யோசிப்போம். ராசியா போறதுங்கறது அம்மாஞ் சாமான்யம் இல்ல. சமாதானமா போற அளவுக்கு கேசுல சாத்தியக்கூறு இருக்கான்னு மொதல்ல பாக்கணும்.”

“ கொல்லைக்காரனே சும்மா வுடும்போது சீட்ட பொறுக்கிக்கு என்னா கெடக்கு?” அறிவு குரலை உயர்த்தினான்.

“ சரி சரி... நேரா கோர்ட்டுக்கு போங்க. பின்னால வர்றன்.”

*

33

திரும்புகிற பக்கமெல்லாம் சுவரொட்டிகள். கம்மாக்கட்டை, சுவர், தார்சாலை என எங்கும் தொடர் சாலைமறியலுக்கான விளம்பரங்கள். சாலையின் குறுக்கே, உயரே தோரணங்களாய் மஞ்சள் திரைச்சீலைகள். முடக்குக்கு முடக்கு மஞ்சள் கொடிகள். சங்கப் பெயர் பலகைகள்.

‘ தொடர்சாலை மறியல் போராட்டம். டாக்டர் அய்யா அழைக்கிறார்.’

‘ செப்டம்பர் 17-23. இட ஒதுக்கீடு என்பது நம் உரிமை. அதை இறைவன் கொடுப்பான் என்பது மடமை. தொடர் சாலை மறியலை வெற்றியாக்குவதே நம் கடமை.’

கனல் தெறிக்கிற வாசகங்கள். இடையில் இருக்கிற இரண்டு நாட்களும் நெருப்பாய்த் தகித்துக்கொண்டிருப்பதாய் ஒரு பிரமை. மந்தாரக்குப்பம் சாலை சங்க அலுவலகத்தில் மஞ்சள்துண்டு, சட்டை அணிந்து நிறையப் பேர் வருவதும் போவதும் ஒரே பரபரப் பாய் இயங்கிக்கொண்டிருந்தது. “ என்னா... எப்பிடி...” என மேலோட்டமான விசாரிப்புகள் தான் எல்லோருக்குள்ளும் என்றாலும் ஏற்கெனவே யார் யார் எந்த இடத்தில் எப்படி மறிக்க வேண்டும் என ரகசியமாய் ஜி.ஆர் டாக்டரிடமிருந்தும் குறள் மணியிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு ஆயத்தமாகத் தானிருந்தார்கள்.

அலுவலகத்திற்குள்ளிருந்த அறிவழகனையும் சிகாமணியையும் சேப்ளாநத்தம் செம்ப படையாச்சி ரகசியமாய் தனித்துக் கூப்பிட்டார். உள்ளிருந்த ஒன்றிரண்டு பேர் ‘ தினப்புரட்சி’யில் மூழ்கியிருக்க, உள்தடுப்புச் சுவருக்கு அப்பால் கூப்பிட்டுப் போனார். “ ஜி.ஆர். டாக்டர் விருத்தாசலத்துலேர்ந்து இப்பத்தான் சொல்லி அனுப்பியிருக்கிறாரு...” ரொம்பவும் கிசுகிசுத்த குரலில் பேசினார்.

இவர்களும் பதட்டத்தோடு கேட்டார்கள் “ என்னா அண்ண..”

“ இனிமே இங்க நீங்க இருக்கவேணாம். அதோட இந்த மாதிரி கும்பல் பக்கமும் அதிகமா தலய காட்டவேணாம். சாலை மறியல் பேராட்டத்துக்கு தற்காப்பு முன்னெரிக்கைக்கு கைது பண்றம்னு ஒங்கள ரெண்டு பேரையும் மொதல்ல புடிச்சி உள்ள போடறதுக்குக் காவல்துறை திட்டம் போட்டு

வைச்சிருக்காங் களாம். அதோட சாலை மறியல்ல கூட ஒங்க ரெண்டு பேரையும் கலந்துக்க வேணாமுன்னு சொல்லிட்டாரு. ஒருவேள போலிசு கையில சிக்கிக்கிட்டா பெரிய கேசாப் போட்டு வெளிய வராம உள்ள தள்ளிட்டு, நிலம் எடுக்கிற பிரச்சினைக்கு எதிரான நடவடிக்கையை முடக்கிப் போடறதுக்கும் வாய்ப்பு இருக்குன்னும் சொல்றாரு. அதனால ஒடனே தலமறவா ஆயிடுணுங்கறாரு. இதே இந்த சேதி சி.பி.சி.ஐ. டி.யில இருக்கற ஒரு ஆள் மூலமா அவருக்கு வந்துருக்காம்.”

அறிவழகனும் சிகாமணிக்கும் ஒரே சமயத்தில் உள்ளுக்குள் திக்கென்று அடைத்துக்கொண்டது. ஜி.ஆர். டாக்டர் சொல்லி யனுப்பியபடி காவல்துறையின் அனுமானங்கள் சரியாக இருப்பது போன்று தோன்றியது. ஆனாலும் இருவரும் சாலைமறியலில் கலந்துகொள்ளாமல் இருப்பது பெரிய இழப்பு போல் இடித்தது.

“ அண்ண... சேத்தியாத்தோப்புல கண்ணன கைது பண்ணிட்டாங் களாம்.” உள்ளே அவசரமாய் நுழைந்து கெங்கைகொண்டான் கோபால் சொன்னதும் செம்ப படையாச்சி உட்பட அறிவழகன், சிகாமணி இருவருக்கும் பதற்றம் தொற்றிக்கொண்டது.

“ சரி சரி கெளம்புங்க. இனிமே முக்கியமான ஆளுங்க யாரும் இங்க வரவேணாம்...” செம்ப படையாச்சி கிளம்ப ஆயத்தமானார்.

பதட்டமாக வெளியே வந்தார்கள். அவர்களையுமறியாமல் எதிரே இருந்த பெட்டிக்கடையில் பார்வை ஓடியது. அச்சமூட்டுகிற மாதிரியான ஆட்கள் எவரும் நில்லாமலிருந்தது சற்றே ஆறுதலாக இருந்தது. அதே சமயம் கடையில் தொங்கிக்கொண்டிருந்த மாலைப் பத்திரிக்கையின் சுவரொட்டியில் ‘ ஈழத்தில் சிக்கல் - திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம்’ செய்தி கண்ணில் பட்டது. அறிவழகனுக்கு அந்த நிலையிலும் உள்ளுக்குள் சுருக்கென்று ஒரு வலி ஊடுருவியது.

“ அண்ண... அங்காண்ட பெல்ட்டு கடையில பாருங்களன்...” சிகாமணியின் குழப்பமான குரலில் சொடுக்கத்தோடு பார்வையை பக்கத்தில் ஓட்டியவனுக்கு மேலும் பகீரென்றது. தலையின் முடிவெட்டே ஆளை அடையாளம் காட்டியது. ஸ்டூலில் குந்தி சிகரெட் பிடித்தபடி நோட்டம் விட்டுக்கொண்டிருந்தார்.

“ இதுக்குமேல ஒரு நிமிஷம் கூட நிக்கக் கூடாது. கெளம்புடா...”

சாலையில் எதுவோ குறுக்கிட வரிசையாய் வாகனங்கள் தேங்கவும்

இதுதான் சமயமென்று, படாரென்று சைக்கிளை எடுத்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்தார்கள். போன வேகத்தில் சாப்பாடு போடச் சொல்லி சாப்பிட்டுவிட்டு நேரே கொல்லைக்கு வந்து அய்யனார் கோயில் துறிஞ்சி மரத்தடியில் குந்திக் கொண்டார்கள் அறிவழகனும் சிகாமணியும்.

“ சிகா, ஈழத்துல நிலமை பெரிய இக்கட்டுல மாட்டிக்கிச்சி. திலீபனோட ஐஞ்சு அம்சக் கோரிக்கையில முக்கியமான சிலதையாவுது இந்தியா ஏத்துக்கிட்டுதான் ஆவணும். வேற வழியில்லை. என்ன நடக்கும்னு பாப்போம்.”

வந்து கொஞ்சநேரங்கூட ஆகியிருக்காது, ஓட்டமும் பெருநடையுமாக பால்ராசு வந்து சேர்ந்தான். “ ஊருக்குள்ள போலிசு வந்துட்டுப் போச்சி மாமா. குறிப்பா ஒங்க ரெண்டு பேர் வூட்டையும் நோட்டம் வுட்டுட்டுப் போறானுவோ...”

*

34

கும்மிருட்டு. காதை அறுக்கிற கருவமர வண்டுகளின் கரகர சத்தம். சில்லாடலாய் ஓடிக்கொண்டிருந்த முதல் அனல் மின் நிலையக் கரித்தண்ணீர் ஓடையில் புரட்டிப் போட்டிருந்த கனத்த கருங்கற்களை அறிவழகன், சிகாமணி, பால்ராசு, உத்தண்டராயர், கரி படாச்சி இன்னும் இரண்டு மூன்று தெற்குவெள்ளூர் பசங்கள் எனத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு போனார்கள். எல்லாமும் ஓடை அலைவாரியில் பதிக்கப்பட்டிருந்த பெருங்கற்கள். பூச்சி பொட்டுகளைப் பொருட்படுத்தாமல் கரி படாச்சி நுனிப் பாரை யால் நெம்பித் தூக்கவும், கொடுத்த நீக்குநிலையில் வெடுக்கெனப் புரட்டி ஓடையில் போட்டு, மறு உருட்டு உருட்டவும் கழுவித் துடைத்த மாதிரியாய் ஈரக்கற்கள்.

பகலில் கூட சலாபத்தாய் காலைக் கீழே வைக்கக் கூசும் அடர்ந்த பீக்கருவை முள்காடு. அமாவாசை இருட்டில் பெருச்சாளி போவதெல்லாம் வழி என்பதுமாதிரி சரசரவென வேலை நடந்து, சாலையில் இடுப்பளவு உயரத்திற்கு சுவர் வைக்கப் போதுமான அளவிற்கு ஓரப் புதரில் குவித்து வைத்திருந்தனர்.

“ சரி, இதுக்குமேல மரத்த வெட்டி இழுத்தாரும்... வாங்க” அறிவழகன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே புதரைத் தாண்டி சாலையில் வெளிச்சமும், கிழக்கே பாலத்தைத் தாண்டி சத்தமும் கேட்டது. பொட்டென்று அரவப்படாமல் அப்படியே குந்திக் கொண்டார்கள். போலிஸ் ஜீப்புதான். கடந்துபோன பிறகும் திக்திக்கென ஒவ்வொருவருக்குள்ளும் அடித்துக்கொண்டது.

படபடப்பைக் குறைக்க கரிபடாச்சி, பொடிமட்டையை இடுப்பிலிருந்து உருவி, ஒரு இழுப்பு இழுத்தார். சத்தம், நெடியை வைத்து உத்தண்டராயர் மெல்லிய குரலில் கெஞ்சாத குறையாய் கேட்டுக்கொண்டார். “ அண்ண, ரவிய பொழுதுக்கு செத்த இந்த பொடி போடறத நிறுத்துங்க அண்ண. மறந்தாதியா இக்கட்டான நேரத்தில போட்டு ஒங்குளுக்கு தும்மல் வர்லன்னாலும் எப்பங் குதுருக்குள்ள இல்லன்னு எங்குளுக்கு வேல குடுத்துடும். அப்பறம் போலிசுகாரம் மோப்பம் புடிச்சிட்டான்னா ஒண்ணும் பண்ண முடியாது. ஒடனே தூக்குல போட்டுடமாட்டாங்கறது வேற. ஆனா

நம்ப ரோட்ல எந்த எடறும் இல்லாம வண்டிங்க ஓடிக்கிட்டு இருந்துடும். மேல அய்யாகிட்டயும் பேரு கெட்டுடும். அய்யா அறிவிச்ச ஒரு வாரத்துக்கும் தொடர்ந்து மறியல் நடத்தறதுக்கு போலிஸ்காரங் கையில மாட்டாம நாம வெளியில இருந்தாவணும்.”

மரத்தையே அடியோடு வெட்டி இழுத்து வருகிறமாதிரி பெரிய கிளைகள். அதை விடவும் பெரிய ஆச்சரியம், ஒரு ஆள் மட்டுமே நுழைந்து போகக்கூடிய புதரில் அவைகளை அநாயசமாய் இழுத்துவந்து சேர்த்ததுதான். மற்றவர்களை விடவும் கரி படாச்சிக்கு குளிரெடுத்த அந்த இரவில் வேர்த்து விறுவிறுத்து கடுமையாய் மூச்சு வாங்கியது. “ ஏம் மாமா இந்த வயசான நேரத்துல இம்மாஞ் செரமம். பெசாம வூட்ல குந்திக் கெடக்கக் கூடாது...” அவரின் நிலையைப் பொறுக்காமல் சிகாமணி சொன்னான்.

“ ஏம்ப்பா செத்த நேரத்து இந்த செரமத்தையே நாம பெரிசின்னு நெனைச்சா, நம்ப அய்யா ராவுன்னு இல்லாம பவல்னு இல்லாம ஊரு ஊரா இம்மாம் ராஜ்ஜியத்தையும் சுத்தி இந்த மக்கள ஒண்ணு சேத்து இந்தச் சாலை மறியல் போராட்டத்த அறிவிச்சி நடத்தறார அவுரு எம்மாம் செரமம் பட்ருக்கணும்.” அவர்களுக்குள்ளேயே கேட்கிற குரலில் சொன்னபோது எல்லோருமே நெகிழ்ந்து போய்விட்டார்கள். அதோடு விசுக்கென புதுரெத்தம் பாய்ந்த மாதிரி ஓர் தெம்பு.

அவரே தொடர்ந்தார் “ மாட்டிக்கிட்டா நெலம் எடுக்கிற பிரச்சினையில எடுத்துக்கட்டி பாக்கறதுக்கு ஆளு இல்லாத பூடும்னு ஜி.ஆர்.டாக்டருலாம் சொல்லியும் ஒங்களால கலந்துக்காம இருக்க முடிஞ்சிதா. அதுமாதிரிதான் இது. ஏதோ புள்ளகுட்டின்னு எந்த அக்குத்தொக்குமில்லாத நாமளே துணிஞ்சி இதுல எறங்குலன்னா யாரு செய்றது. நாம மெனக்கிட்டு இந்த சாலை மறியல செஞ்சி நம்ப சாதிசனத்துப் புள்ளிவுளுக்கு மேலைக்கி ஒரு வாழ்வு கெடைச்சா, நம்ப படற செரமமெல்லாம் சாதாரணமாப் பூடும்.”

திரும்பவும் போலிஸ் ஜீப்பொன்று கிழக்கிலிருந்து மேற்கே போனது. பதுங்கி மீண்டார்கள். முதல் நாள் மாலையிலிருந்து சாலை காவல்துறை கட்டுப்பாட்டில் வந்துவிட்டமாதிரி சரமாரியாய் ஜீப்புகள் குறுக்க நெடுக்க போகவும் வரவுமாய் அமளிதுமளியாகிக் கொண்டிருந்தது. நெடுநாளைய திட்டமிடலுடன் முன்கூட்டியே அறிவித்து விளக்கக் கூட்டங்கள் நடத்தியதால், அய்யாவின் பேச்சுக்கான மக்கள் எழுச்சியை அறிந்த காவல்துறை நிறையப் பேரை, முன்னெச்சரிக்கையாயும் சந்தேகத்தின் பேரிலும் கைது செய்திருந்தது. கருங்காலிகள் சிலபேர் திட்டமிட்டு

வேண்டப்படாத வர்களைக் கைகாட்டியும் விட்டுக்கொண்டிருந்தனர்.

ஆனாலும் விருத்தாசலத்திலிருந்து அதிகாலை கிளம்புகிற முதல் பேருந்தை மடக்கி சாலை மறியலைத் தொடங்கிவிட வேண்டும் என்பதில் அறிவழகனும் சிகாமணியும் உறுதியாய் இருந்தனர். முன் கைதை தவிர்ப்பதற்காக கொல்லைக்காட்டில் கிடந்தவர்கள், தகவல் கொடுத்து இருட்டிய பிறகு அய்யனார் கோயில் களத்தில் கூடித் திட்டமிட்டார்கள்.

“ நா எங்க ஊரு ஆளுவுள வைச்சி, கெழக்க பாத்துக்கறன். நீங்க மேற்க பாத்துக்குங்க...” எடுத்த எடுப்பில் செம்ப படையாட்சி சொல்லிவிட்டார்.

மேற்கே குறிப்பாய் பாலத்திற்கும் பக்கத்தில் உத்தண்டராயர் பால்ராசை வைத்துக்கொண்டு பார்க்கவேண்டும். பால்ராசு நல்ல துணிச்சல்காரன்தான். விடாப்பிடியாய் வந்து ஒட்டிக்கொண்ட கரி படாச்சி கூட இருக்கிறார் என்றாலும், அறிவழகனுக்கும் சிகாமணிக்கும் அவர்களைத் தனித்துவிட விருப்பமில்லை. கடந்து இருவரும் “ நாங்களும் வந்துதாம் ஆவணும்” என்று ஒற்றைக்காலில் நின்றதும் உத்தண்டராயர் அரைமனதாய்தான் ஒத்துக்கொண்டார். ஆனால் சின்ன சந்தேகம் என்றாலும் மேற்படி இருவரும் உடன் தப்பித்துப் போய்விடுகிற மாதிரி எட்டாகையில்தான் இருக்க வேண்டும் என உறுதியாய்ச் சொல்லிவிட்டார். கொல்லைக்கே சாப்பாட்டை எடுத்து வரச்சொல்லி சாப்பிட்டுவிட்டு நள்ளிரவுக்கு மேல்தான் கிளம்பினார்கள். புதிதாய் வடித்த பாரையோடு, மரம் வெட்ட தீட்டிய புதுக் கருக்கோடு கூடிய கைவாளோடு ரொம்பவும் பொறுப்பாய், கரி படாச்சி வந்து நின்றார்.

தலைக்கு முக்காடு போட்டு மறைத்துக்கொண்டு வத்திக் குச்சியைக் கிழித்து மணியைப் பார்த்தார் உத்தண்டராயர். இரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது தோதாய் நெடுநேரமாய் எந்த வாகனமும் இல்லாமலிருந்தது. உத்தண்டராயர் கேட்டார் “ ஆரம்பிக்கலாமா?”

“ இரு அண்ண. விருத்தாசலத்துலேர்ந்து மொத பஸ்சு வர்றதுக்கு எப்பிடியும், இங்கேர்ந்து ரூட்டு கிளியரா இருக்கான்னு பாத்துக்கிட்டு போயி ஓகே குடுத்தாதான் அங்கேர்ந்து வருவான். அதுவரைக்கும் கொஞ்சம் பாப்பும்.”

எல்லோருக்கும் ஆச்சரியம். அறிவழகன் சொன்னமாதிரியே போலிஸ் ரோந்து ஜீப் ஒன்று நிதானமான வேகத்தில் மேற்கு நோக்கிச் சென்றது. மெதுவாக வெளியே போய் ரோட்டில் நின்று பார்த்தான். ஜீப் புள்ளியாய்ச்

சிறுத்துக் கொண்டிருந்தது. கிழக்கில், புளியமரத்தில் ஆந்தை ஒன்றுமட்டும் அலறிக்கொண்டிருந்தது. மற்றபடி வெகுதூரத்தில் முதல் அனல் மின் நிலைய வெளிச்சங்கள் ஏகத்துக்கும் தெரிந்தன. நொடியில் பரபரப்பானான். " கொண்டாங்க... எப்பிடியும் பஸ்சோட ஜீப்பு திரும்பி வர்றதுக்கு இன்னம் ஒரு மணிநேரத்துக்கு மேல ஆவும்..." கருங்கற்களைக் கொண்டுவந்து கரகரவென இடுப்பளவு கட்டையாக அடுக்கி, முக்கித் திணறி பெருமுயற்சி எடுத்து மரக்கிளைகளை இழுத்து வந்து போட்டார்கள். ஆரம்பித்த கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே, எட்டிப் பார்த்தால்தான் அங்காண்ட இருப்பவர்கள் தெரியும் என்கிற மாதிரி உயரமான, கனத்த அணை போன்றதோர் தடுப்பு. முட்டுச்சந்தைப்போல் சடுதியில் முடங்கிப் போய்விட்டது சாலை. அய்யாவின் ஆணைப்படி தொடங்கிவிட்டது சாலை மறியல். அனைவருக்குள்ளும் படபடப் பையும் தாண்டி ஓர் மகிழ்வு.

" நம்ப ஆளுவோ அங்கங்கியும் இந்த மாதிரி வேலய செஞ்சி, மறியல் போட்டுதான் வைச்சிருப்பாங்க. அதலாம் தாண்டி இம்மாந் தூரத்துக்கு பஸ்சு இங்க வர்றதுங்கறது சந்தேகந்தான். நிக்கிட்டும். நம்ப அய்யாவுக்குப் பதில் சொல்லாம எதுவும் நவுரக்கூடாது..." பால்ராசு உணர்ச்சிப் பிழம்பாய்ப் பேசினான்.

" அது கெடக்குட்டும்பா... மிச்சங் கெடக்கிற கல்லுவுளயும் தூக்கிக்கிட்டுப் போய் போடுவம். வலுத்த மறியலா இருக்கட்டும். வாங்க..." கரி படாச்சி சன்னக்குரலில் கூப்பிட்டார்,

அணையை ஒட்டி திரும்பவும் ஒரு சுவர் எழுப்புகிற வேலை மும்முரமாய் நடந்துகொண்டிருந்தது. பால்ராசு, அறிவழகனிடம் சொன்னான். " ஒரு டயர கியர எடுத்தாந்து கொளுத்தி அந்த புளியாமரத்து போரையில போட்டு வுட்ருந்தா, மளமளன்னு புடிச்சி பெருங்கெளைவோ பூரா மளுக்கு மளுக்குன்னு ரோட்ல கெடந்துருக்கும். மறியல் வேல இன்னம் சுளுவா முடிஞ்சிருக்கும்."

" இன்னையோடையா முடிஞ்சிடப் போவுது! நாளைக்கி மரத்துவுள பாப்பும்..." அறிவழகன் சொல்லிக்கொண்டே கற்களைத் தூக்கிக்கொண்டு வந்து போட்டான்.

கடந்து வேலை நடந்துகொண்டிருந்தபோது, திடுமென மேற்கில் வெளிச்சப் புள்ளிகள். வேலை அவசரத்தில் இதை எவரும் கண்டுகொள்ளாமல் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்ததில், நெருங்கிவிட்டன. முதுகில் உரைத்த சூட்டில் வெளிச்ச வெம்மைகள் கிட்ட நெருங்கிவிட்ட

கணத்தில்தான் திடுக்கிட்டுப்போய் விட்டார்கள். “ எலேய் போலிஸ்டா...” அதிர்ந்து ஒரே பாய்ச்சலாய் கருவைப் புதருக்குள் பாய்ந்தார்கள்.

தூரத்திலேயே கவனித்து விட்ட காவலர்கள் மின்னலாய் நெருங்கிவிட்ட கணத்தில், கிழக்கே ஓடி தெற்கே போக ஓடையில் குதித்துக் கொண்டிருந்தார்கள். அதே நேரம் கிழக்கிலிருந்து சொல்லி வைத்தமாதிரி வந்து பாலத்தில் நின்றது போலிஸ் வேன். முழங்கை நீள டார்ச்லைட்டுகளோடு காவலர்கள் குதித்துத் துரத்தினார்கள்.

ஓடையின் தண்ணீர்ப் பரப்பு அதிர்வில் தெறித்தது. டார்ச் லைட் வெளிச்சத்தில் மின்னலாய் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஓடைத் திருப்பத்தில் உள்ள தடுப்புக் கட்டையைத் தாண்டிக் குதித்து ஓடிவிட்டால் போதும், அங்காண்ட கொல்லை வெளிகள்... எந்த ராசா எந்த பட்டணம் எனச் சிட்டாய்ப் பறந்து விடலாம்.

இறுதியாய் ஓடிக்கொண்டிருந்தவர் கரி படாச்சிதான். அவருக்கும் சற்றுமுன்பு பால்ராசு. இருவரைத் தவிர எல்லோரும் முடக்கில் திரும்பித் தப்பிவிட்ட வேளை, பால்ராசு கட்டையைத் தாண்டிக் குதித்தபோது “ எம்மா...” என அலறிச் சுருண்டான். சுழன்று வந்து கால்களைத் தாக்கிய புள்ளுக்கழியில் கரி படாச்சி சுருட்டி மடக்கிக்கொண்டு தண்ணீரில் விழுந்தார்.

கரி படாச்சி ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். தப்பிக்கும் வழிவகை எதுவுமற்று, எடுத்த எடுப்பிலேயே இப்படிச் சிக்கிக் கொள்வோம் என சற்றுமுன்னர் வரை அவர் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. சில்லாடலாய் ஓடும் தண்ணீரில், தொப்பரையாய் நனைந்து பின்னுக்குக் கையை ஊன்றியபடி பரிதாபமாகப் பார்க்கிறார். திகிலில் தடதடவென நடுங்குகிறது உடம்பு. சுற்றி வளைத்துக்கொண்டு நிற்கின்றது கருத்த உருவங்களாய் காவல்துறை. ஓடை மணலாக இருந்ததால், விழுந்து உருண்டதில் அடியேதும் படவில்லை. ஆனால் இனி... ஓடை இரண்டாகப் பிளந்து தன்னை உள்வாங்கிக் கொண்டால் என்ன என்கிற மாதிரி ஒரு ஏக்கப் பரிதவிப்பு.

திடுமென முகத்தில் பாய்ந்தது, கண்ணைக் குருடாக்கி விடுகிறமாதிரியாய் டார்ச் வெளிச்சம். அதே வேகத்தில் பொசுக்கென்று முகத்திற்கு நேர் நீண்டு எத்தியது பூட்ஸ் கால் ஒன்று. “ ரோட்டையாடா மறிக்கிறீங்க...”

ஒருகணம் மூச்சே நின்றுவிடுகிறமாதிரியிருந்தது கரி படாச்சிக்கு. “ சார் சார்... ஒங்குளுக்கு எதுப்பா ரோட்ட மறிக்கிலிங்க சார்... அரசாங்கத்...” கைகளால் மறித்துச் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே பொருட்படுத்தாத

பூட்ஸ் கால் நீண்டுவிட்டது. முகத்தில் படாதபடி திருப்பிக்கொண்டாலும் தோள்பட்டையில் வலுவாக இறங்கியது. நிலைகுலைந்து போய் மல்லாக்க விழுந்தார்.

நெஞ்சில் காலை வைத்து அரக்குகிறது. " செத்த மின்ன தாம் பாத்துட்டுப் போனம், அதுக்குள்ள இம்மாம் கல்லுவுள, மரத்துவுள கொண்டாந்து போட்ருக்கிங்கள, நீங்களாம் மனசனுவுளா இல்ல, என்.எல்.சி. பொக்லினாடா..."

" அய்யோ... எம்மா... அடிக்காதீங்க சார்... சார்..." சற்று தூரத்தில் பால்ராசுவின் அடிதாங்கா அவலக்குரல் கேட்கவும், வாயைத் திறக்க கரி படாச்சிக்குப் பயம். எதைச் சொல்லியும் இனி ஆகப் போவது எதுவுமில்லை.

" வயசானவனா இருக்கான்... பாவம், கால எடு..." பரிதாபப் பட்டுச் சொல்லியபடி இரண்டு பேர் பால்ராசு பக்கம் ஓடவும், பூட்ஸ் கால் யோசித்தவாறு காலை எடுத்தது, மீண்டும் வெறியில் உருட்டி விடுகிறமாதிரி விலாவில் உதைத்தது. " ஏந்திரிடா..."

விலாவில் இறங்கிய உதையில், குடுக்கை ஆடுவது போன்று உள்ளுக்குள் குடுகுடுவென ஈரல்குலை நடுங்குகின்றது. கையை ஊன்றி, மெல்ல எழுந்து நின்றவரின் பிடரியைப் பிடித்து நெட்டுகிறான். " நடறா..."

விழுந்து விடுகிறமாதிரியான தள்ளாட்டத்தோடு ஓடைத் தண்ணீரில் நடந்து போகிறார். முதுகைத் துளைத்தபடி, உறுமலோடு வெளிச்சம் பின்தொடர்கிறது. இடுப்பில் சுற்றியிருந்த வேட்டி அவிழ்ந்து காலில் சிக்குகிறது. இழுத்து மேலே போட்டபடி தண்ணீர் வடிய வடிய இருட்டில் நடக்கிறார்.

வண்டியில் ஏறமுடியவில்லை. " ஏறுடான்னா எனுமோ நடிக்கிற..." எதிர்பார்க்கவில்லை அவர், லத்தியால் ஓங்கி ஒரு அடி முதுகில் விழுந்தது. ஒரு கணம் உடைந்து நொறுங்கிப் போய்விட்டார். இதுகாலமும் கிட்ட நெருங்கி எவரும் தொட்டுப் பேசியிராத உடம்பு. கண்ணில் தெறிக்கிறமாதிரி வலி குடைந்து கொண்டிருந்தது. குமுறலோடு கம்பி வலை சூழப்பட்ட வாகனத்தில் குந்தியவரின் உள்ளுக்குள் முத்துக்கண்ணு ஆயி வந்தாள். குபீரென்று உடைத்துக்கொண்டது அழுகை.

உடன் குண்டுக்கட்டாய் உள்ளே தூக்கிப்போடப்பட்ட பால்ராசு நிற்கமுடியாமல் காலைப் பிடித்துக்கொண்டு கதறியபடி கிடந்தான். "

அய்யோ... எம்மா... எப்பா...”

கொல்லை வெளியில், ஓடைக்காட்டில், மறிச்சியில் மாறி மாறிப் பதுங்கினார்கள். ஊருக்குள் நுழைந்த காவல்துறை குறிப்பாய் அறிவழகனை, சிகாமணியைத் தேடித்தேடித் துருவி எடுத்தது. கண்ணில் பட்டவர்களை எல்லாம் கைது செய்தது. பெண்களைக் கூட அடித்துத் துன்புறுத்தியது. சட்டி பானைகளைப் போட்டு உடைத்து நொறுக்கியது. ஆனால் ரோட்டில் ஒரு வாகனம் கூட செல்லாமல் வெறிச்சோடி கிடக்கிற சேதி அவர்களுக்கு சற்றே ஆறுதலாக இருந்தது.

உச்சிவெயிலுக்கு ஓடைகளில் பதுங்கிப் பதுங்கி செம்ப படையாட்சி வந்தார். “ நம்ப பக்கத்தவிட வடக்க விழுப்புரம் பக்கம்லாம் வலுவா நடந்துருக்காம்.” ஆச்சரியமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தவர் “ இன்னஞ் செத்த நேரம் தாமதிச்சிருந்துருந்தானு வோன்னா, ரோட்ட துண்டாடியிருப்பன். ஊரு ஆளுவோ எல்லாத்தையும் ரோட்ல பாரையோட கொண்டாந்து நிறுத் திட்டன்ல...”

அறிவழகன்தான் கேட்டான் “ எத்தினி மணி இருக்கும்...”

“ ரெண்டுக்கு மேல இருக்கும். ஒரு ஜீப்பு மேற்க போச்சி. பட்டுன்னு நாங்க வேலய ஆரம்பிச்ச கொஞ்ச நேரம் கழிச்சி போலிஸ் வேனு கெழக்கேர்ந்து ஒண்ணு வந்துட்டுது. வுட்டுக்கெடா சிட்டு கரும்புல பதுங்கிகிட்டம். வந்தவன் நின்னு பாத்துட்டு பட்டுன்னு அங்கங்க தகவல் குடுத்துக்கிட்டே மேற்க போனான். செத்த நேரத்துல ஒரு வேன் புள்ளா ஆள கொண்டாந்து ரோட்ல எறக்கனதும், நாங்க அப்பிடியே பின்னுக்கு வாங்கிட்டம்.”

சிகாமணி சற்று விளங்கியது மாதிரி சொன்னான் “ இவன் தகவல் குடுத்துக்கிட்டே மேற்க வரவும், மேற்க போனவனும் திருப்பிக்கிட்டு வந்துட்டான். இவனும் வரவும், ஓடையில நாம ஓடவும் பாலத்துல நிறுத்தி, அவன் தொருத்த ஆரம்பிச்சிட்டான்.”

எல்லோருக்குமே கரி படாச்சியும் பால்ராசும் போலிசில் சிக்கிவிட்ட சேதி தெரிந்து உள்ளுக்குள் கத்தியால் கிழித்தது போன்று வலி தெறித்துக்கொண்டிருந்தது. ஊருக்குள் உடனடியாகப் போய் பால்ராசு அப்பா அம்மாவை, முத்துக்கண்ணு ஆயியைப் பார்த்து விட்டு வந்தால் தேவலாம் என்று பட்டது. குறிப்பாய் கரி படாச்சி உருவம் எல்லோருக்குள்ளும் திரும்பத் திரும்ப விரிந்து கொண்டிருக்கிறது.

“ கொஞ்சம் இருங்க. பொழுது போவுட்டும். ரவ சேதி வெளியில தெரிஞ்சாக்கூட அந்த தனபால் பய, பட்டுன்னு அங்காண்ட தகவல் குடுத்து தூக்கிடுவாம். சிக்கலாப் பூடும்.” செம்ப படையாட்சி அமர்த்தினார்.

தெருவின் எடுமுனையிலேயே முத்துக்கண்ணு ஆயிதான், கண்ணீரோடு தென்பட்டாள். இழுத்துக்கொண்டு இருட்டுக்கு வந்தார்கள். சமாதானப் படுத்துகிறமாதிரி சிகாமணி சொன்னான் “ சும்மா இங்கதான் வைச்சிருப்பாங்க. நைட்டுக்குலாம் வுட்டுடு வாங்க. அநேகமா இன்னஞ் செத்தநேரத்துல வந்துடுவாரு.”

“ ஏம்பா பொய் சொல்றீங்க. மத்தியானமே போலிஸ் வண்டியில கடலூருக்கு இட்டுக்கிட்டுப் பூட்டாங்களாம்.” குரல் கம்ம கண்களில் கலகலவென ஓடிக்கொண்டிருந்தது.

“ எல்லாருந்தாம் ஒடியாந்தம்.. என்னா ஆச்சின்னு தெரியில. அதுலாம் ஒண்ணும் பயப்பட வேணாம். ஜி.ஆர்.டாக்டரு, குறள்மணி அண்ண, மேல கீழன்னு எல்லாம் பாத்துப்பாங்க. அங்கங்க வக்கீல் ஏற்பாடு பண்ணியிருக்காங்க. ஒடந்தடம்னு ஜாமீன்ல எடுத்துடுவாங்க.” மேற்கொண்டு ஏதாவது கேட்டுவிடுவாளோ என்கிற பயத்தில் வந்து நின்ற சனங்களை விலக்கிக்கொண்டு போனார்கள்.

அதேநேரம் தெற்கு வெள்ளூர் உத்தண்டராயர் கொல்லைக் காட்டால் விழுந்தடித்து வந்திருந்தவர், மேலு காலெல்லாம் வரிவரியாய் முள் சிம்புகள் கிழித்து துறிஞ்சித்தழைகள் ஒட்டிக் கொண்ட கோலத்தில் மூச்சிரைக்கச் சொன்னார் “ அறிவு, ஏகப்பட்ட எடத்துல மறியல் நடந்து அடிதடியாம். அதுக்குமேல கோலியனூர்ல, கொள்ளுக்காரங்குட்டையிலலாம் துப்பாக்கி சூடாம். நம்ப ஆளுவோ மூணு பேர் செத்துட்டாங்களாம்...”

அங்கிருந்த எல்லோருக்குமே ஒரு கணம் அதிர்ச்சி. கண்களில் கலவரம். திடுமென இருள் சூழ்ந்த மாதிரி திகில். தீர்மானமாய் செம்ப படையாட்சி அறிவழகனிடமும் சிகாமணியிடமும் சொன்னார்.

“ இதுக்குமேல ஒரு நிமிஷங்கூட இங்க நிக்காதீங்க. போலிஸ் குறி பூரா ஒங்க ரெண்டு பேரு மேலதான். இதான் சாக்குன்னு துப்பாக்கிய நீட்னாலும் நீட்டிடுவானுவோ. இந்தச் சாலைமறியல் முடிவு என்னான்னு தெரியற வரைக்கும் வெளியில தலைய காட்டாதீங்க. இதுக்குமேல நாங்க பாத்துக்கறம்.”

*

35

ஓடைத் தண்ணீரில் வாய் கொப்பளித்துவிட்டு வெளியே வந்தார்கள். நாலைந்து நாட்களாய் கொல்லை வெளிகளில், மோட்டார் கொட்டகைகளில் என இப்படி மாறி மாறிப் பொழுதைக் கழிப்பது பெரும்பாடாக இருந்தது. அதே சமயம் துப்பாக்கிச் சூட்டில் உயிர்பலிகள் உயர்ந்து இருபத்தியொன்று எனக் காதுக்கு வந்ததிலிருந்து இருவருக்குமே எதுவும் ஓடவில்லை.

போராட்டத்தின் இறுதிநாள். என்ன ஆனாலும் ஆகட்டும் என்று பகலிலேயே ஊருக்குள் நுழைந்தார்கள். தென்பட்டவர்கள் எல்லாமும் ஒரு வாய் பட்டமாதிரி " இன்னைய பொழுது இருந்துட்டு நாளப் பின்ன வந்தா என்னாப்பா? இந்த உள்ளூர் போலிசுவோ நேத்து ராத்திரிகூட வந்து பாத்தானுவோ."

போன சுருக்கில் துணியை மாற்றிக்கொண்டு வெளியே வந்தார்கள். அறிவுதான் சொன்னான். " வாடா அப்பிடி மறைவா ராசவள்ளி வூட்டப்பக்கம் நெய்வேலிக்கி போய் இன்னய பொழுது இருந்துட்டு வருவம்."

சாலையில் பெரும்பாலான வாகனங்கள் ஓடத்தொடங்கி யிருந்தன. பேருந்து நிலையம் பக்கம் போகாமல், பள்ளிக் கூடத்திற்கும் மேற்கால பக்கம் போய் தொப்புளிகுப்பத்தால் நுழைந்து, திடீர்குப்பம் போய் டவுன்ஷிப் வந்தார்கள். எதிர் பார்க்கவில்லை, ராசவள்ளி. " மின்னியே வந்துருக்கலாமில்ல அண்ண. ஒண்ணும் சாப்பாடு அதிகமா செய்யில. கடையில கிடையில பாத்துக்குங்க. ஸ்கூலுக்குப் போயிட்டு சாயந்திரமா வர்றன். அவுரும் ஹோம் கார்டு கேம்ப்புன்னு வெளியில பூட்டாரு."

அறிவழகன் வாங்கி வந்திருந்த செய்தித்தாளை விரித்தான். முதல் பக்கத்திலேயே ' தொடர் சாலைமறியலால் தமிழகத்திற்கு நூறு கோடி நட்டம். இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்பு' என்று புலம்பியிருந்தார்கள். இழந்த இருபத்தியொரு உயிர்கள் பற்றி சற்றும் பெரிதுபடுத்தாமல் பத்தியின் கடைசி வரியில் ஒப்புக்குக்குக் கோடிகாட்டிருந்தார்கள்.

அவனுக்கு பெருமூச்சு வந்தது. சாலைமறியலில் திரும்பத் திரும்ப இந்த பத்திரிக்கைகள் பொதுமக்களுக்குத் துயரம், பொருளாதார நட்டம் என

எழுதிக் கொண்டிருப்பது அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அதேநேரம் இந்தப் போராட்டம் ஏன், அதற்கான நிர்பந்தம் நியாயம் என குறைந்தபட்ச கவனிப்பு, யோசிப்பு கூட எவருக்கும் இல்லாமலிருந்தது, பெரும் வியப்பாக இருந்தது. பெரும்பான்மை சமூகமாக உள்ள இவர்களின் கல்வி வேலை வாய்ப்பிற்கான உரிமையை, அடிமட்டத்தில் கிடக்கும் இவர்களின் அவல வாழ்விற்கான விடிவைக் கேட்கவே கூடாதா? அதிகாரமிக்க பதவியிலிருந்து, தாழ்ந்த எடுபுடிகள் வரை அரசாங்கப் பணிகளில் இவர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே இருப்பதும் எண்ணிக்கையில் மிகக் குறைந்த சமூகங்கள் அவற்றைத் தொடர்ந்து ஆக்ரமித்துக் கொண்டுமிருப்பது என்ன நியாயம்? பெரியார் பெரியார் என்று சொல்லிக் கொள்கிற நாட்டில் இட ஒதுக்கீடு, சமத்துவம் என்பதெல்லாம் மறந்துபோனது தானா? பாதிக்கப்பட்ட சமூகம் தங்களின் வெளிப்பாட்டை, கோரிக்கையை செவிமடுக்காத அரசுக்கு எப்படித்தான் புரியவைப்பது? அய்யாவும் திடுமெனவா இந்தப் போராட்டத்தை அறிவித்தார். பெயரள விற்காவது அரசோ, மெத்தப் படித்த மேதாவிகளை ஆசிரியர் களாகக் கொண்டு நடத்தும் பத்திரிகைகளோ இதைச் சீர்தூக்கிப் பார்த்திருக்கலாமே. மீறி அறிவித்து அதனால் உயிரிழப்புகளைச் சந்திக்க நேர்வது பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல், சங்கடங் களையும் நட்டங்களையும் பட்டியல் இடுவது என்ன நியாயம்? எந்த அளவிற்குப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்? சூழ்நிலை கருதி பயணத்தைத் தானே தள்ளி வைத்திருப்பார்கள். அத்தியாவசிய சேவை மருத்துவந்தான். எந்த ஆம்புலன்ஸ் வண்டியும் நெடுஞ்சாலையில் நெடுந்தொலைவிற்குப் போக வேண்டியதில்லை. லாரிகளுக்கு மட்டுந்தான் இடைஞ்சல். அதுவும் உற்பத்திப் பொருட் களுக்கு ஒரு வாரம் தாமதிக்கும் என்பது தவிர வேறென்ன. தமிழகத்தில் இதுவரை பந்த்தோ, மறியலோ நடந்ததே இல்லையா? உள்ளுக்குள் ஏகப்பட்ட கேள்விகள் யோசனையாய் ஓடிக் கொண்டிருந்தன.

கையிலிருந்த செய்தித்தாளின் உள்தாளை உருவிப் பார்த்துக் கொண்டிருந்த சிகாமணி " அண்ண இதப் பாரன்..." அதிர்வோடு நீட்டினான்.

திக்கென்றது அறிவழகனுக்கு. மனம் சாலை மறியலிலே ஓடிக்கொண்டிருந்ததில், அதை கவனிக்காமல் விட்டு விட்ட வருத்தம், படபடப்பாய் தலைகாட்டியது. ' திலீபனின் தொடரும் உண்ணாவிரதம். உடல்நிலை கவலைக்கிடம்' படிக்கப் பதறியது.

" செத்தாக்கூடத் திரும்பிப் பாக்க மாட்டானுவோடா... நாடாடா இது..."

இறுக்கம் குறையாமல் இருந்த மனதில் வந்து விழுந்து விட்ட வார்த்தைகள். பட்டென்று அறிவழகனுக்கு ‘ ஏன் அப்படிப் பேசினோம்’ என்று துடித்தது. ஒருவேளை நம் வாய்ச் சொல்படி திலீபனுக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால்...

அதற்குமேல் அவனால் குந்தியிருக்க முடியவில்லை. அது பற்றி முழுமையாயறிந்த யாரிடமாவது உடனடியாகப் பேசினால் தேவலாம் என்று பட்டது. “ சரி வாடா... நம்ப குறள்மணி அண்ணன கொண்டாந்து வுட வந்தார அமலநாயகம் சார் வூட்டுக்கு போவும்.”

வா சலெல்லாம் தெருவோர மரத்தின் பூக்களாய் உதிர்ந்து கிடந்தன. மணியை அழுத்தினார்கள். கண்ணாடி அணிந்த பெண்மணி, அவரது மனைவியாக இருக்கவேண்டும், திறந்தார். உள்ளே கூடத்தில் ஐந்தாறு பேர், மையமாய் கைத்தடியோடு ஒரு முதியவரைச் சுற்றிக் குந்தியிருந்தார்கள். எல்லோர் முகமும் வாசல் பூக்களைப்போல வாடியே கிடந்தது. அமலநாயகம் சவரம் செய்யாததால் முகமெல்லாம் சோர்ந்து வெள்ளை பூத்திருந்தது. “ வாங்க...” என்று சொல்லியபடி மனைவி மற்றும் அங்கிருந்த முதியவரிடம் அறிமுகப்படுத்தினார். “ நம்ப குறள்மணிக்கு தெரிஞ்சவங்க...”

வறண்ட புன்னகைகளுடன் வணக்கங்கள் பரிமாறினர். அலமாரியிலும் பரணிலும் ஏராளமாய் நூல்கள். தமிழ் மரபுக் கவிதைகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அம்பேத்கர் நூல்கள், மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பக நூல்கள், விதவிதமான வடிவங் களில் ஏகப்பட்ட திருக்குறள் நூல்கள்... “ இதுல ஒக்காருங்க...” இருக்கைகளைக் காட்டவும் குந்தினார்கள். குந்திய அவசரத்திலேயே கேட்டான் அறிவழகன். “ திலீபன்...” பேச்சை எடுத்ததுமே முதியவர் முகத்தில் பொசுக்கென கலவரம் சூழ்ந்து, குடவுகொண்ட கண்களில் தண்ணீர் மொண்டு கொண்டது.

“ அய்யா... பாவலர் செம்புலத்தார்னு... எல்லாம் தனித்தமிழ் இயக்கத்துக்காரங்க. திலீபனோட கவலைக்கிடமான சேதிய கேட்டதிலேர்ந்து பச்சத்தண்ணிகூட பல்லுல படாம, இந்த வயதான நேரத்துல சொல்லச் சொல்ல கேக்காம பட்டினி கெடக்கறாரு”. அமலநாயகத்திற்கு குரல் தழுதழுத்திருந்தது.

அவருக்கு என்ன சொல்வதென்று அறிவழகன், சிகாமணி இருவருக்குமே தெரியவில்லை. முன்னாலிருந்த சிறு மேஜையில் பழச்சாறு தொடப்படாமல் அப்படியே இருந்தது. அந்தக் கண்ணாடி டம்ளரையே பார்த்துக் கொண்டிருந்த செம்புலத்தார், திடுமென கனிந்த குரலில் சொன்னார் “

தமிழ்த்தாய் தன் அரும் புதல்வன் திலீபனை சாக விடமாட்டாள் என்று தான் நினைக்கிறேன்.”

*

36

‘ நடந்து முடிந்த ஒரு வாரத் தொடர்சாலை மறியல் போராட் டத்தின் வெற்றி என்பது தமிழகத்தை மட்டுமல்ல, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்ததுதான். இந்த வரலாற்றுத் திருப்பத்தால் எம் மக்களுக்கான இடஒதுக்கீட்டை, உண்மையான உரிமையை அரசு நிச்சயம் வழங்கும் என்பது எனது ஆணித்தரமான நம்பிக்கை. ஆனால் இதற்கு நாங்கள் கொடுத்த விலை... இருபத்தியொரு உயிர்கள். ஈவு இரக்கமற்ற துப்பாக்கிச் சூடுகள் மிகக் கொடூரமானவை. சுதந்திரப் போராட்ட ஒடுக்குமுறைக் கொடுமைகளை விடவும் மோசமாய் குண்டடி பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் சூழலில் உயிர்த்தண்ணீர் கேட்டவர்களின் வாயில் சிறுநீர் கழித்த காட்டமிரண்டித்தனமான செயல்கள்.’

‘ எங்கள் வீடுகள் பல இடிக்கப்பட்டுள்ளன. அறுவடைத் தருணத்தில் உள்ள எம் வயல்கள் பல அழிக்கப்பட்டுள்ளன. கிணற்றுக்குள் மோட்டார்கள் புரட்டித் தள்ளிவிடப்பட்டுள்ளன. எங்களின் எழுச்சியைப் பொறுக்காத விஷமிகள் பலர் கலவரங்களைத் தூண்டிவிட்டு சமூகங்களுக்கிடையே பகைமையையும் வன்முறைகளையும் நிகழ்த்தி வீடுகளைத் தீக்கிரையாக்கி பேருந்துகளைக் கொளுத்தி குளிர்காய்ந்துள்ளனர். எங்கள் இளைஞர்கள் ஏராளமானோர் பொய்வழக்குகள் போட்டு சிறைப்படுத்தப் பட்டுள்ளனர்.’

‘ ஆனாலும் இதற்கெல்லாம் நாங்கள் அஞ்சப் போவது மில்லை. அசரப்போவதுமில்லை. இழந்து நிற்பது இருபத்தியொரு உயிர்கள் மட்டுமல்ல. இனியும் நூறாய் ஆயிரமாய் நாங்கள் இழக்கவும் தயாராய் இருக்கிறோம். ஆனால் எங்கள் இலக்கு உழைத்து உருக்குலைந்து கல்வியில் வேலைவாய்ப்பில் தரைதட்டிக் கிடக்கும் எங்கள் சமூகத்திற்கு இடஒதுக்கீடு வேண்டும் என்பதே.’

‘ தினப்புரட்சி’யில் விபரமான செய்திகளுடன் வந்தது அய்யாவின் அறிக்கை. அது துண்டறிக்கையாகப் போடப் பட்டிருப்பதை சிகாமணி சத்தமாகப் படித்துக் காட்டவும் வேப்பங்குறிச்சியில் எல்லோர் முகத்திலும் ஒரு மிரட்சியான தெளிவு. பிறகுதான் மெல்ல பேருந்து நிலையத்தில், கடைத் தெருக்களில் தலைகாட்டினார்கள். வாகனங்கள் வழக்கம் போல் ஓடத் தொடங்கின.

கரி படாச்சியை கடலூர் ஜெயிலில் வைத்திருந்தார்கள். பால்ராசுக்கும் கடலூர்தான் என்றாலும், ஓடையில் குதித்து ஓடும்போது கால் ஒடிந்த நிலையில் பிடிபட்டு, கடலூர் பெரியாஸ்பத்திரியில் வைத்திருந்தார்கள்.

தனபாலின் சொல்படி ஏதும் காதில் போட்டுக்கொள்ளாமல், வேலைக்குப் போய்விட்டு வீட்டுக்குள் நுழைந்த சதாசிவத்தை, அறிவழகனை சிகாமணியைத் தேடிப்போன போலீசார் மடக்கினார்கள். " நா எதிலியும் கலந்துக்கலிங்க... எனக்கு ஒண்ணுங் தெரியாதுங்க." சொன்னதைக் காதில் வாங்கவில்லை. சுவரில் மாட்டியிருந்த அய்யா படத்தைப் பார்த்துவிட்டுதான் அவனைப் பிடித்தார்கள். " இது நா மாட்னது இல்லிங்க... எங்க அப்பா மாட்னதுங்க..." எதையும் காதில் வாங்காமல் இழுத்துப் போனவர்கள், விஜயமாநகரம் பேருந்து எரிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட வர்களை ஏற்றிய வேனில் இடமிருக்கிறது என ஏற்றி, திருச்சிக்குக் கொண்டுபோய் விட்டார்கள். நான்காம் நாள், மரத்தை வெட்டிக்கொண்டு இருக்கும்போதே சுற்றி வளைக்கப்பட்ட உத்தண்டராயர், செம்ப படையாச்சி இருவருக்கும் சேலம் மத்திய சிறை.

சங்க வக்கீல்களுக்குத்தான் கடுமையான வேலை. கரி படாச்சிக்கும் பால்ராசுக்கும் இங்கேயே பிணை கிடைத்துவிடும் போல் தெரிந்தது. அறிவழகனும் சிகாமணியும் வக்கீலை பார்த்துவிட்டுத் திரும்பும்போதுதான், கடலூர் நகரமெங்கும் ' வீர வணக்க' சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தார்கள். படத்தில் திலீபன் சிரித்துக் கொண்டிருந்தார்.

அறிவழகனுக்குத் தாங்கவில்லை " கடைசியில இப்பிடித்தான் கொண்டாந்து வுடுவானுவோன்னு நெனைச்சன்." கரகரத்த குரலில் புலம்பினான்.

சிகாமணிக்கு அமலநாயகம் வீட்டில் பாவலர் செம்புலத்தார் தலையில் அடித்துக்கொண்டு அழுவதுபோல் காட்சி ஓடியது.

வீடு வந்து சேர்ந்த கரி படையாச்சியை முத்துக்கண்ணு ஆயி அழுதுகொண்டே கேட்டாள். " அடிச்சி கிடிச்சி பூட்டாங்களா..."

" மத்தவங்களுக்குலாம் அடிதான். என்ன, இந்த வயிசிலலாம் இது தேவையான்னு மெரட்னானுவோ. இந்த வயிசிலதான் இது நடக்குது. அதனாலதான் கலந்துகிட்டன்னு சொன்னன். ஒரு நல்ல விசயம் பொடிப்பழக்கம் செயிலோட போச்சி."

சதாசிவத்திற்குப் பிணை கிடைத்தும் ஒரு மாதம் திருச்சியில் கண்டிஷன்

பெயில். செலவு, அலைச்சல், சிரமம் ஒரு பக்கம் என்றாலும், இந்த கேசால் நாளைக்கு வேலை கொடுப்பதில் எதாவது சிக்கல் வந்துவிடுமோ என்கிற பயம் வேறு சூழ்ந்து கொண்டது. வீடு வந்து சேர்ந்ததும் நேரே அறிவழகனைப் போய் பார்த்துக் கேட்டான். அவனே தேடிவந்து பார்த்ததில் அறிவழகனுக்கு நிறைவு. சொன்னான் " இந்த கேசுக்கும் வேலைக்கும் சம்பந்தமில்ல மாப்ள. தனபாலு கூப்புட்டார்னு அவுரு பின்னால போவாம இருந்தாப் போதும், எதாருந்தாலும் பாத்துக்கலாம்."

பெரும்பாலான முக்கிய தலைவர்களுக்கு சேலம், நெல்லை, ராமநாதபுரத்தில் ஒரு மாதத்தை தாண்டியும் கண்டிசன் பெயில். தெரிந்த வீடுகளில் கோயில்களில் மண்டபங்களில் தங்கிப் பசியும் பட்டினியுமாய்ப் படாதபாடு.

அறிவழகனும் சிகாமணியும் பிணை எடுக்கிற வேலைகளில் பறந்து ஓடி முடித்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் வீடு வந்து சேர்ந்ததும் ரங்கநாதுதான் சொன்னார் " சரி இதோட இது இருக்குட்டும். அடுத்து இந்த நெய்வேலிக்காரன் விஷயத்த என்னான்னு பாருங்க. திடீர்னு வூட்ட இடிக்கணும் உத்தரத்த புடுங்கணும்னு வந்து நிப்பான்."

உண்மையில் ஒரு வாரத் தொடர் சாலை மறியல் போராட்டத்தைக் கண்ட நில எடுப்புத்துறை தடாலடியாக முடிவு எடுக்க சற்று தயங்கியது. அது மட்டுமில்லாமல் போராட்டம் முடிவுக்கு வந்த மறாவது வாரமே பேச்சு வார்த்தைக்குத் தேதியும் தந்தார்கள். ஆனால் குறள்மணி போன்றோர் வெளியில் கண்டிசன் பெயிலில் இருந்ததால், இவர்களாக தேதி ஒத்தி வாங்கியிருந்தார்கள்.

*

37

ஆள்பவர்களை விடவும் இறுக்கமானவர்கள் அதிகாரிகள். எத்தனையோ முறை வாழ்ந்த மண், பிறந்த வீடு, திங்கற சோறு என திரும்பத் திரும்ப வற்புறுத்திப் பேசியும், அவர்களிடமிருந்து நிவாரணங்களைப் பெறுவது என்பது கல்லில் நார் உரிக்கிற கதையாகத் திணற அடித்தது. ஆனாலும் குறள்மணி, ஜி.ஆர் டாக்டர், உத்தண்டராயர், செம்ப படையாச்சி என ஒவ்வொருவரும் சளைக்காமல் பேசினார்கள்.

பேச்சுவார்த்தை தேங்குகிறபோதெல்லாம், விடாப்பிடியாய் மறுக்கிற போதெல்லாம் அறிவழகனும் சிகாமணியும் சிட்டு தட்டுவதற்குள் மக்களைத் திரட்டி வந்து போராட்டத்தில் இறங் கினார்கள். மறியலுக்கு நின்றார்கள். “ பிடுங்காதே பிடுங்காதே! எங்கள் வாழ்வைப் பிடுங்காதே! மாற்றாதே மாற்றாதே! எங்களை வெடி குண்டாய் மாற்றாதே!” என்று நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏற்கெனவே சாலைமறியல் போராட்டத்தை நடத்திக் காட்டியவர்கள். மனதில் சின்னஞ்சிறு சடசடப்பு கூட இல்லாமல் மறியலுக்கு நின்றபோது காவல்துறை கூடுதலாய் இறக்கி விரட்டி யடித்து மிரட்டி வழக்குப் போடமுயன்றது. ஆனாலும் இருபத்தி யொரு உயிர்களை பலி கொடுத்து இறுக்கம் பாய்ந்து கிடந்த மனங்கள், காவல்துறையின் கொக்குமிரட்டலுக்கு அஞ்சவில்லை.

அறிவழகனும் சிகாமணியும் தொடர்ந்து போராட்ட மனநிலையிலேயே மக்களை வைத்துக் கொண்டிருந்ததில் பேச்சு வார்த்தை நடக்கிறபோதெல்லாம் காவல்துறைக்கு பதற்றமான சூழலாகவே இருந்தது. ஆனால் எதைச் செய்தும் ஏக்கர் நாற்பதா யிரத்துக்கு மேல் ஏறி வரவே முடியாது என்கிற நிலையில் அதிகாரிகள் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் பார்க்கலாம் என்று நழுவினார்கள்.

குறள்மணி, ஜி.ஆர். எல்லாரும் நிலைமையை மேலே சொன்னார்கள். கடந்து அய்யா போராட்டத்தில் இறங்குவதாய் சேதி வரவும் உற்சாகமானார்கள்.

அதேநேரம் புதிதாக வந்திருந்த மாவட்ட ஆட்சித்தலைமை இறங்கிப்

பேசியது. “ நாள மறாநாளு வாங்க. மறுபடியும் பேசுவோம். ஒரு சுத்து பேச்சிவார்த்தையில முடியிற வேலையா இது?”

சளைக்காமல் பேசினார்கள். தரகுக்காரர்களைப் போல் கையில் துண்டு போட்டுப் பேசாத குறைதான். இவர்கள் இரண்டு லட்சம் கேட்டு, ஒன்றரைக்கு வந்து கடைமுடிவில் ஒன்றாவது கொடுங்கள் என்றார்கள்.

நாற்பதிலிருந்தவர்கள், ஐம்பதைத் தொட்டு அறுபதில் வந்து நின்றார்கள். அதற்கே முதல் சுரங்கத்தோடு அனல் மின் நிலையத்தை யும் சேர்த்து எழுதிக்கொடுக்க வேண்டும் என்கிற மாதிரி கசந்தார்கள்.

குறள்மணி கடைசியாய்ப் புள்ளிவிபரத் துருப்புச்சீட்டை இறக்கினார். “ என்னாங்க எங்குளுக்கு இந்த நிறுவனத்த பத்தி ஒண்ணும் தெரியாதுன்னு நெனைச்சிக்கிட்டு மள்ளாட்ட மார்க்கெட்டுல துண்டுச் சீட்டுல வெல குறிக்கிறமாதிரி சொல் றீங்களா...? இன்னய தேதியில **15000** ஹெக்டர் நெலத்த வளைச்சிப் போட்டு **24000** நிரந்தர தொழிலாளர், **7000** ஒப்பந்த தொழிலாளர் களோட ஆண்டுக்கு **300** கோடிக்கு மேல லாபத்துல இயங்கிக்கிட்டு இருக்கற நிறுவனம் சார் இது. செகண்ட் மைன்ஸ் ஸ்டார்ட் ஆனா வளர்ச்சி விகிதம் **11.5%** அதிகரிக்குமே தவிர கொறையாது. ரன் பண்றதுக்கு தொழிலாளிகளும் கூடுதலா தேவை. அதே மாதிரி இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களோட சாபக்கேடான அரசியல்வாதிகளின் ஊழல்கள், அதிகார வர்க்கத்தோட குளறு படிகள், சிகப்பு நாடா சிக்கல்கள்னு இதலாம் மீறி லாபகரமா இயங்கற நிறுவனங்கள்ல இதுவும் ஒண்ணு.”

இதுவெல்லாம் தேவையில்லாத பேச்சு என்கிறமாதிரி இடைமறித்த அதிகாரியை “ இருங்க சார், ஒரு நிமிஷம் சொல்லி முடிச்சிடுறன்...” என்று குறள்மணி தொடர்ந்தார்.

“ இந்த நிறுவனம் எனக்கோ ஒங்குளுக்கோ வேற எந்தத் தனியாருக்கோ சொந்தமானதில்ல. **90** கோடி மக்களின் உடைமை இது. பொதுமக்கள்தான் இதன் முதலாளிகள். ஆனாலும் இதுல என்னா சிக்கல்னா...” சிகாமணியைக் காட்டிச் சொன்னார் “ தே இவனுக்கு தனிப்பட்ட முறையில கடன் எதுவுமில்ல. காண்ட்ரேட்ல தினமும் நூறு ரூவாய்க்கி வேலைக்கிப் போனான். இப்ப அதுவும் இல்ல. ஆனா இந்தியாவோட மொத்தக் கடன்ல **5230** ரூபாய் இவந் தலையில இருக்கு. இப்பைக்கி இந்தக் கடன அரசால கட்ட முடியாது. அடுப்பு வரி, துடுப்பு வரின்னு இவங்கிட்டியே வசூல் பண்ணி இன்னையவரைக்கும் வட்டியதான் கட்டிக்கிட்டு இருக்கு. இந்தத்

தாங்க முடியாத கடன் சுமையிலேர்ந்து இவன், நான், நீங்க எல்லாரும் மீண்டு மேல வருணும்னா வளர்ச்சியும் அமைதியான சூழலும் ஆக்கபூர்வமான செயல்திட்டமுந்தான் ஒரே வழி.

நான் இதுக்குமேல ஒங்குளுக்கு கூடுதலா சொல்லத் தேவையில்ல. முடிவெடுக்கிற பொறுப்புல இருக்கிற உயரதிகாரிங்க நீங்க. வாழ்ந்த மண்ண மட்டுமில்ல, வாழ்க்கையையே பறி குடுக்கிற மக்கள நெனைச்சிப்பாத்து நீங்க ஒங்க மனசாட்சிப்படி யோசிச்சி, நல்ல முடிவ எடுத்து, சாதகமான பதில சொல்லுங்க.”

எதுவும் பேசாமல் **12.15**க்கு கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டுப் போன அதிகாரிகள், உணவு இடைவேளைக்குப் பிறகு நிறைந்த வெள்ளிக்கிழமையில் எரிந்து கொண்டிருக்கிற நிறைவிளக்கைத் தூக்கிக்கொடுக்கிற தயக்கத்தில் ஏக்கருக்கு எண்பதினாயிரம் என்று, இதுவே இறுதியிலும் இறுதியானது என்று சொல்லி எழுந்தே விட்டார்கள்.

இவர்களும் வெளியில் நாற்பது ஐம்பது எனப் போகிற நிலையில் எண்பதாயிரம் என்பது விற்கிற விலைவாசியில் இரண்டே ஆண்டில் எட்டி விடுகிற தொகைதான் என்றாலும் இதற்கு மேலும் பறம்பைசாவிற்கு கூட ஏறி வரமாட்டார்கள் என்கிற உண்மை புரிந்ததுந்தான் ஒத்துக்கொண்டார்கள்.

அடுத்து மாற்றுக்குடியிருப்பு. ஏற்கெனவே விஜயமாநகரம் இண்டம்புதரில், ரூபநாராயணநல்லூர் முந்திரிக்காட்டில் மாற்றிக் குடியமர்த்தப்பட்ட மக்கள் படும் அவலத்தைப் பார்த்தவர்கள், உணர்ந்தவர்கள் இதிலும் விடாப்பிடியாக நின்றார்கள். “ எங்குளுக்கு இங்கியே நெய்வேலி சுத்துப்பட்டுல குடியிருக்கிற மாதிரி எடம் பாத்துக் குடுங்க. ஒங்குளுக்கு ஒரு புண்ணியமாப் பூடும்.”

மக்களைப்போலவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்களும் நயந்து பேசினார்கள் “ கொஞ்சம் பெரிய மனசு பண்ணிப் பாருங்க சார்.”

ஆனால் நில எடுப்புத்துறை வழக்கம்போலவே வடக்குத்து முள்காட்டை, ரூபநாராயணநல்லூர் கருவைக்காட்டைக் காட்டியது. கடந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைமை மீண்டும் தானாகவே தலையிட்டு சுற்றுப்பட்டில் ஆய்வு செய்து கடைசியில் தெற்கு வெள்ளூருக்கும் மேற்கே ஒரு மைல் தூரம் தள்ளி மெயின்ரோட்டை ஒட்டி புதர்மண்டிய ஓர் ஓடைப் புறம்போக்கைக் காட்டியது.

எல்லோருமே மாவட்ட ஆட்சித் தலைமையைக் கையெடுத்துக்

கும்பிட்டார்கள். இவ்வளவு கிட்டக்க, ஏதோ வீட்டைவிட்டு கொல்லை வெளியில் குடியிருக்கிற மாதிரி இரண்டு மூன்று நான்கு மைல்களுக்குள் சின்ன இடமாற்றம்தானே தவிர வேறெந்தச் சிக்கலுமில்லை. ‘ பணங்காசி கெடக்கட்டும்பா. தே பத்து தப்பிடியில பொறந்த மண்ணு. வெட்டி எட்டத்த கொட்டியிருந்தாலும் எச்சி ஈரங் காயறதுக்குள்ள ஓடி ஒரு புடி மண்ண எடுத்தாந்து அலசி வடிகட்டிக் குடுத்தா போதும், துடிச்சிக்கிட்டு இருக்கற உசுருகூட போயி சேரறம் மக்களான்னு பூரிச்ச மனசோட போய்ச்சேரும்.’

“ ஏ க்கருக்கு எண்பதாயிரம்னு அதிகத் தொகையும் குடுத்தாச்சி. அதோட இதுவரைக்கும் எந்த ஊருக்கும் செய்யாதமாதிரி ஊருக்கும் பக்கத்திலேயே மாத்துக்குடியிருப்பு. இதுவே அதிகம். ஒழுங்கா பணத்த வாங்கிகிட்டு வூட்டப் பிரிச்சிக்கிட்டு எட்டத்த ஓடச் சொல்லுங்க. அத வுட்டுட்டு வூட்டுக்கு ஒரு ஆள் வேல கீலன்னு போராட்டத்துல எறங்கனா எதியும் பாக்காதீங்க. அடிச்சி குண்டர் சட்டத்துல உள்ள தூக்கிப் போடுங்க...”

வாய்மொழியாக காவல் மட்டத்திற்கு ரகசிய உத்தரவு வந்திருப்பதாக சேதி தெரிந்ததும் குறள்மணி, ஜி.ஆர் போன்றவர்கள் அதிர்ந்து போனார்கள். மக்களைப் போராட்டத்தில் இறக்க யோசித்து மேலே அய்யாவிடம் பேசினார்கள். தேதி வாங்கினார்கள்.

‘ நெய்வேலிக்கு நிலம் கொடுத்தோர், வீட்டுக்கு ஒரு ஆள் வேலை கேட்டுப் போராட்டம்’ டாக்டர் அய்யா தலைமையில் அணிவகுப்போம்! நாள்: **10.10.87.** நேரம் காலை **10.00** மணி. இடம்: மந்தாரக்குப்பம் பேருந்து நிலையம்.

“ இ ட ஒதுக்கிட்டிற்கான போராட்டத்தில் இருபத்தியொரு உயிர்களை இழந்தவர்கள் நாங்கள். போராட்டத்திற்கும் நாங்கள் புதியவர்கள் அல்ல. இழப்புகளும் எங்களுக்குப் புதிது அல்ல. ஆனாலும் இழப்பதற்கு தற்போது இவர்களிடம் எதுவுமில்லை. உழுது பறித்துக்கொண்டு கிடந்த நிலத்தை, களையாறப் படுத்துப் புரண்ட வீட்டை எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டதால் வெற்றுக் கோவணத்தில் நிற்பதாய் ஓர் அவலம். அந்தக் கோவணத்தையும் அவிழ்த்து விட நிற்காதீர்கள். நீங்கள் கொடுப்பதாய் ஒத்துக்கொண்ட பணம் இந்த மண்ணுக்கான விலை அல்ல. நீங்கள் என்னதான் பணத்தைக் கொட்டிக் கொடுப்பதாகக் கொண்டாலும், ஒவ்வொரு வருக்குமான இந்தத் தாய்மண்ணை, தன்னிகரில்லா வாழ்வை அவர்களால் பெற்றுவிட முடியாது. நீங்கள் கொடுக்கவிருப்பதைச் செலவு

செய்துவிட்டு நாளை முக்கூட்டில் பிச்சைக்காரர்களாக கையேந்தும் நிலைக்கு ஆளாக்கி விடாதீர்கள். வீட்டுக்கு ஒரு ஆள் வேலை... நீங்கள் இவர்களுக்குத் தந்துதான் ஆகவேண்டும். அதிகாரிகளே! நீங்கள் உங்கள் வீட்டுப் பணத்திலிருந்து அவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்போவ தில்லை. இந்த மண்ணில் இதற்குள்ளிருந்த கருப்புத் தங்கத்தை காபந்து பண்ணிவைத்து, இன்னும் குறிப்பிட்டுச் சொல்லப் போனால் நீங்கள் வாழும் செல்வாந்தர வாழ்க்கைக்குப் பிச்சை போட்டவர்களே இவர்கள்தான். பிச்சை போட்டவர்கள் இன்று உங்களிடம் பிச்சை கேட்டு நிற்கிறார்கள். இதற்குப் பிறகும் நீங்கள் மறுத்தால், இவர்கள் கோரிக்கையைப் புறந்தள்ளினால் எழுகிற கோபமும் அதன் விளைவு களும் இதுகாறும் இல்லாத அளவுக்கு வேறுவிதமாக இருக்கும்.”

அய்யா உரையாற்றிவிட்டுப் போன பிறகு அதிகாரிகள் அசைந்த மாதிரிப் பேசினார்கள். பின்னால் கூழ் ஆற்றிவிடலாம் என்கிறமாதிரி ஆட்களின் தேவைக்கு ஏற்பப் படிப்படியாக எடுத்துக் கொள் கிறோம் என்று இறங்கினார்கள். படிப்படியாக என்பதெல்லாம் ஏமாற்று வேலை, உடனடியாக அதுவும் எழுத்துமூலமாக வேண்டும் என்று குறள்மணியும் ஜி.ஆரும் அடித்துப் பேசினார்கள். கடந்து இவர்களாகவே மாவட்ட ஆட்சித் தலைமையிடம் போனார்கள். நில எடுப்புத் துறை, நிர்வாகம், மக்கள் என மூன்று தரப்பாரையும் உட்கார வைத்துப் பேசவும், கடைசியாய் ஒத்துக்கொண்டார்கள். ஊரைக் காலி செய்வதற்குள், படிப்படியாக வீட்டுக்கு ஒரு ஆள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எல்லாவற்றிலும் மனிதாபி மானமாக நடந்துகொண்ட மாவட்ட ஆட்சித் தலைமையிடம் எழுத்துப் பூர்வமாக கேட்கச் சொல்ல மக்களுக்குத் தயக்கம். ‘ நிர்வாகத்த நம்புல. நீங்க சொல்றதால ஒத்துக்கறம்...’ ஒரு வழியாய் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

‘ அ ப்பறம் என்னாடா கைக்கி நெறமா காசி. சூத்துக்கும் பக்கத்திலியே மாத்துக்குடியிருப்பு. ஊர எடுத்து முடிக்கறதுக்குள்ள வூட்டுக்கு ஒரு ஆள் வேல.’

மண்ணை விட்டுப் பிரிகிற வலி ஒருபக்கம் இருந்தாலும் ஏதோ ஒண்ணுக்கு முக்காலாய் தொகை இருந்தாலும் நெய்வேலி நிலமெடுப்பு வரலாற்றில் வீட்டுக்கு ஒரு ஆள் வேலை என்கிற கோரிக்கையை ஏற்றுக்கொண்டது என்ற வகையில் எல்லோருக்கும் திருப்திதான். இது பற்றிக் கோயிலடியில் எல்லோரும் பேசிக் கொண்டு இருக்கும்போதுதான், தெருவுக்கு வந்து

சத்தமாகச் சொன்னான் கணேசன் “ எம்ஜியாரு செத்துட்டாராம். டி. வி.யில சொல்றாங்க...”

*

நான்கு

38

டும்... டுடும் டும்... டும்டும்... டுடும்டும்... “ மேற்படி இந்த வேப்பங்குறிச்சி கிராமம் சுரங்கம் வெட்டுவதற்கு கெவுருமெண்ட்டால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகையாக முதல் தவணைப் பணமும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், மேற்படி நிலம் தோட்டங்களில் உள்ள மரம் மட்டைகளை இன்னும் ஒரு மாத கால அளவிற்குள் தம் சொந்தப் பொறுப்பில் வெட்டி அப்புறப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறினால் மரங்களின் மீது உரிமை கோரவோ மேற்படி மரங்களுக்கு மீண்டும் இழப்பீடு கோரவோ முடியாது. இது அரசாங்கத்தோட உத்தரவு...” டும்டும்... டுடும்டும்..

<u>உள</u> ர்த் தெருவில், கொல்லைவெளியில், ஒழுங்கையில்... திரும்புகிற பக்கமெல்லாம் விடாது வெட்டுச்சத்தங்களும் கிளைகளோடு மரங்கள் முறிந்து விழுகிற ஓசைகளுந்தான். ‘ நம்ப கிட்ட மரம் குடுக்கறது ஏதாவது இருக்குங்களா...’ கத்தி, கடப்பாரை, வாள் என வெட்டுக்காரர்களும், மர வியாபாரிகளும் வலிந்துபோய் தென்பட்டவர்களிடமெல்லாம் விசாரிப்புதான்.

‘ குடுக்காம ஊர வுட்டுப்போவும்போது தலையிலியா தூக்கிக் கிட்டு போவமுடியும்.’ தளர்ந்து தத்தளித்துக் கிடக்கிற இந்த வார்த்தைகளே போதும் என்கிறமாதிரி அடிமாட்டு விலைக்கும் கீழ் இறுத்துகிற வியாபாரத் தந்திரங்கள்.

‘ பாக்கறதுக்குத்தான் பெரிய மரம், ரெண்டடி பலவதான் வரும். ஆனா பெலா மரமா இருந்தாச் சொல்லு. இது சும்மா மாமரம். சக்க பாஞ்சது. பொட்டியா கெடாசனாலும், கதவாப் போட்டாலும் நாலு தூத்த போட்டுதுனா, நமூர்ல சண்டைக்கி நிக்கிற பெண்டாட்டி மாதிரி பொடைச்சிகிட்டுதான் நிக்கும்.’ மரத்தின் தரத்தைத் தாழ்த்தி இடித்துப் பேசும் அவலம்.

‘ இன்னம் நாலு வருசம் நின்னுதுன்னா, நீங்க கண்டிக்கிற வெலைக்கி குடுக்கலாம். ஆனா அதுவரைக்கும் நெய்வேலிக்காரன் தாங்குவானா’ கெடுவைச் சொல்லி கிடுக்கிப்பிடிக்குள் கொண்டு வரும் நெருக்கடிகள்.

‘ பெலா மரமா இருந்தா என்னா... படு பிஞ்சிக் கழி. மீறனா ஒரு டயர் வண்டி நெவத்தடிக்குதான் ஆவும். இதப்போயி எனுமோ சாமி தேருல

சித்திர பதும செதுக்கிற வேலைக்கி ஆவுற வெலய சொல்ற...' முதிர்ந்த மரத்தைக்கூட பிஞ்சுக் கழியாக்கும் வியாபார நேக்கு.

நாலாபுறமும் வந்து இப்படி இழித்தும் பழித்தும் அடித்துப் பிடுங்காத குறைதான். குழி தோண்டி, எருவு போட்டு, கன்றுவைத்து, குடலி கட்டி, தலையால் தண்ணீர் மொண்டு ஊற்றி ஆளாக்கிய மரங்கள். தலையாட்டும் கிளைகளைப் பார்த்துக் கொண்டே மனத்தை ஆயக்கட்டி விற்றுத் தொலைப்பது தவிர வேறு வழியில்லை. ' மொறத்து அளவே பூட்டுது. இனிமே முச்சு அளவுள என்னா கெடக்கு.'

<u>உள</u> ரில் முக்கால்வாசி மரங்களும் வெட்டுப்பட்டு மொட்டை யடிக்கப்பட்ட ஒரு அதிகாலையில் பெரிய ராட்சத வாள்களோடும், திரண்ட உடற்கட்டுகளோடும் கூடிய பத்துப்பேருக்கும் மேலான கும்பல் ஒன்று ஊருக்குள் வந்து இறங்கியது. வழக்கமாக ஊருக்குள் மரம் வெட்டிக்கொண்டிருக்கும் நபர்களைப் போல் தெரியவில்லை. சந்தேகமாய்ப் பார்க்கும் எவரையும் அலட்சியமாய்ப் புறந்தள்ளி விட்டு, நேரே தெற்குவெள்ளூர் போகிற பாதையில் நிற்கும் புளிய மரத்திடம் போனார்கள். அடியில் பன்றிக்கறி போட்டு உதிரம் காய்ந்து கிடக்கும் காட்டாமணித்தழைகளை மிதித்தபடி அண்ணாந்து அண்ணாந்து பார்த்தார்கள்.

தலமானாய் இருந்தவன் சொன்னான் " எப்பிடியும் இருவது டன்ன வுட்டுக்குடுக்காது. பழைய கட்ட. அறுப்பு வேற ஓடாது. வெட்டுக் கூலியப் பாத்துப் பேசுணும்."

கொல்லை வெளியில் மரங்கள் வெட்டிய இடத்தில் கழித்து கேட்பாரற்றுக் கிடக்கும் குச்சிகளை ஏற்றிக்கொண்டு திடீர்குப்பம் பக்கம் போய்ப் போட்டால் அரிசி உப்பு மிளகாய்ச் செலவிற்கு ஆகும் என முத்துக்கண்ணுவுடன் டயர் வண்டியில் போய்க்கொண்டிருந்த கரி படாச்சிதான் முதலில் கவனித்தார். ' என்னா பொது மரத்து கிட்டப் போயி நிக்கிறானுவோ. நெய்வேலிக்காரன் இதுக்கு தனியா ஏலம் வுட்டுட்டானா?'

அதற்குள் டி. வி.எஸ். **50** வண்டியில் வெள்ளையும் சொள்ளையுமாக வந்து இறங்கிய ஒருவரும் போய் நின்று அண்ணாந்து அண்ணாந்து பார்த்தார். புளியமரத்துக்கு நேரே வண்டியை நிறுத்திவிட்டு கரி படாச்சி சந்தேகமாகக் கேட்டார் " ஏம்ப்பா என்னா ஊரு நீங்க. பொதுவு மரத்துகிட்ட வந்து நிக்கிறீங்க. புளியம் பழத்தக்கூட ஊர்ல பொதுவுலதான் ஏலம் வுடுவாங்க.

ஆனா இத வெட்ற மாதிரி ஊர்ல ஒரு சேதிகீதி ஒண்ணியுங் காணம.”

வெள்ளைச் சட்டைக்காரன் அலட்சியமாகச் சொன்னான் “ அதுலாம் பேசியாச்சி பெரியவர. அய்னா கோயில் மறிச்சியில ஒண்ணு. வர்ற வழியில ஓட ஒட்டா ரெண்டு. மொத்தம் நாலு மரம். நம்ப காண்ட்ரேட்காரரு தனபாலுகிட்ட பேசி அச்சாரம் குடுத்துட்டங்க.”

“ எலேய், இந்த வேல வேற செய்ய ஆரம்பிச்சுட்டானா திருட்டு வேமானி” அதிர்ச்சியோடு நடுவண்டியில் குந்தியிருந்த முத்துக் கண்ணுவிடம் கைக்கயிற்றைக் கொடுத்துவிட்டு ஒரேஓட்டமாய் ஊருக்குள் ஓடினார். எதிரில் தென்பட்ட பால்ராசிடம் செய்தியைச் சொன்னார். “ சனங்க அதது பணம் வாங்கற அலைச்சல்ல இருக்கறப்ப என்னா உள்ளடி வேல செய்றாம் பாரு ஊரக் கெடுத்தவன்.”

பணம் வாங்குவது தொடர்பான சிக்கல்கள் ஏதும் இருந்தால் கிட்டக்க இருந்து சரிபண்ணுகிற மாதிரி அறிவழகனும் சிகாமணியும் சென்றுவிட்டார்கள். இருந்தாலும் கிடைத்தவர்களையெல்லாம் திரட்டிக்கொண்டு, போன அடி மறையாமல் புளியமரத்தடிக்கு வந்துவிட்டார் கரியர். “ பொதுவு மரத்த ஏலம் கீலம் வுடாம இவுரு மட்டும் தனியா என்னா நொட்றது” செங்கல்ராவு வந்த வேகத்தில் தாண்டினார்.

கும்பலைக் கண்டதும் வியாபாரி பயந்துவிட்டார். “ இங்க பாருங்க. நாஞ் சொன்னா ஊரு கேட்கும். பயப்படாம வெட்டுங் கன்னுதான் தனபால் சொன்னாரு. நீங்க வேண்ணா அவுரப் போயி கேளுங்க.”

“ அது அது பணம் வாங்கவும், மரம்மட்ட விக்கவுமா கெதிகலங்கி நிக்கிறப்ப எதுவும் கண்டுக்காதுன்னு சொல்லி யிருப்பான். நீ போயி கேளு, கேக்காம இரு. ஆனா ஊரு அனுமதி இல்லாம ஒரு சிம்பக்கூட தொட வுடமாட்டம்.” குறுக்கே நின்று விட்டார்கள்.

இனிமேல் செக்கு செல்லாது என்கிறமாதிரி வியாபாரி, டிவிஎஸ் ஐ எடுத்துக்கொண்டு நேரே தனபால் வீட்டுப்பக்கம் போனார். நமக்கு எதுக்கு வம்பு என்கிற மாதிரி மரம் வெட்ட வந்தவர்கள் வேரில் குந்தினார்கள்.

போன அடி மறையாமல் வந்த வியாபாரி முகம் சுருங்கி யிருந்தது. “ சரி மரத்து பணத்த யாருகிட்ட குடுக்குணும்?” சற்றுத் தேங்கித் திரும்பவும் அவரே தொடர்ந்தார் “ மரத்த அவுரு மூல்யமா வித்து, பணத்த ஊர் பொதுவுல குடுக்கலாம்னு நெனைச்சாராம்.”

அவர் சொல்லி முடிக்கவில்லை. கரி படாச்சி கோபத்தில் பொரிந்தார் “

முடிச்சிமாறி... திருட்டு வேமானி...”

வியாபாரிக்கு தன்னைச் சொல்கிறாரா, தனபாலைச் சொல்கிறாரா என்கிற குழப்பம்.

“ சரி, அத வுடு. என்னா ரேட்டுக்கு பேசன...” ரங்கநாதுதான் கேட்டார்.

“ இருபதுக்கு கேட்டாரு. பாஞ்சிக்கி முடிச்சன். ஆயிரம் அச்சாரம் குடுத்துருந்துது. அது எள்ளுத்தண்ணியுந்தான்...” ஒரு முடிவுக்கு வந்தவராய் ஒரு நூறுரூபாய் கட்டை எடுத்து நீட்டினார். “ இந்தாங்க. மீதி அஞ்சு மரம் ஏத்தறப்ப குடுக்கறன்...”

ரங்கநாது வாங்கவில்லை. கரி படாச்சியைக் காட்டினார். “ இவுருகிட்ட குடுங்க...”

கரி படாச்சிக்கு மட்டுமல்ல, வண்டியில் குந்தியிருந்த முத்துக் கண்ணுக்கும் அதிர்ச்சியாய்ப் போய்விட்டது. “ எப்பா எப்பா... வேணாஞ் சாமி. இம்மாம் பெரிய ஊர்ல அம்மாம் பெரியதனம் வாணாம். அவுரு கிட்ட பணத்த குடுக்காதீங்க. அதுக்கு கணக்கு வழக்குன்னு ஒரு கருமாந்தரமும் தெரியாது.”

கனகராசுதான் சொன்னார் “ சும்மா பொதுவுல வைச்சிருக் கறதுக்கு என்னா கெடக்கு. வுடு அண்ணி.”

“ வாணாம்பா. அவுருக்கு அம்மாம் வெவரம்லாம் இல்ல சாமீ...” கெஞ்சினாள்.

“ வெவரம் இல்லாத தொட்டுதான் இந்த வயிசில ‘ யார்ரா அது கரி படாச்சி’ன்னு அய்யாவே கேக்கறமாதிரி, பாஞ்சி ராத்திரியில போயி பஸ்ச மறிச்சாரா, செயிலுக்கும் போனாரா...” கும்பலில் ரங்கநாது சொன்னதும் கரி படாச்சிக்குக் கண் கலங்கி விட்டது. முத்துக்கண்ணு அதற்குமேல் நெகிழ்ந்து போய்விட்டது. பணத்தை வாங்கிக் கையில் கொடுத்தார். “ இதக் கையில வைச்சிக் கிட்டு, பசங்க கிட்ட சேதிய சொல்லிடு. நாளைக்கி பொதுவுல ஒரு செலவுன்னா, வூடு வாசல தோத்துட்டு நிக்கறதுவோகிட்ட வரிக்கோலு எடுத்துகிட்டுப் போயி நின்னு வசூல் பண்ண முடியாது.”

“ எ ந்தக் காலத்துல யாரு வைச்ச மரமோ, பொசுக்குன்னு கைய நீட்டிட்டம்.” ரங்கநாது சொல்லிக்கொண்டே தெருவு பக்கம் வந்தவர், திடுமென மறந்து போனவராய் கனகராசுவிடம் கேட்டார் “ என்னாடா...

ஒண்ணன் ராசோக்கியத்த ரெண்டுநாளா ஆளக் காணம்.”

“ அதாம் மாமா... குடும்பத்துல கொஞ்சம் கோள்பாரு. மொவங்காரரு நெய்வேலிக்காரன் ஊன்னு சொன்ன மறாநாளே பணத்த போயி வாங்கியாருலன்னு ஆகாசத்துக்கும் பூமிக்குமா குதிக்கிறாரு. இவுரு மண்ணுல வுழுந்து ஒழப்பறிச்சிட்டு கெடந்தவரு. பட்டுன்னு போயி கைய நீட்றதுக்கு மனம் துணியில. இவுரு தாமதப்படுத்தறதால நாளைக்கி வேல குடுக்கறதுல எதனாச்சும் சிக்கல் பண்ணிட்டா என்னா பண்றதுன்னு புத்திரரு ரொம்ப பாயறாரு. நேத்து கையத் தீண்டிக்கிற அளவுக்குக் கூட பூட்டுது. எங்கண்ணிக்கி வேற ரெண்டு நாளா ஒடம்பு சரியில்லாம கெடக்கு” கனகராசு சொல்லிக்கொண்டே போனார்.

ரங்கநாது ஒரு நிமிடம் நின்றுவிட்டார். “ அய்யய்ய... எனக்கு எந்த சேதியும் தெரியாத. ராசோக்கியத்த பாத்து சண்ட போடறன். தலைக்கி மேல பூட்டுது. தப்பிக்க முடியாதுன்னு ஆனப்பறம், சரிதான்னு வுட்டுட்டு போவவேண்டிதுதான். அத வுட்டுட்டு, இந்த வயிசிக்கி மேல தலக்கி ஒசந்த புள்ளைகிட்ட...” சொன்னதோடு இல்லாமல் ராசோக்கியம் வீட்டுக்கு நடையைப் போட்டார்.

“ வாங்க. ஒங்குளுக்கு ஒரு புண்ணியமாப் போவும். செத்த வெளக்கமா சொல்லி ஒடந்தடம்னு போயி பணத்த வாங்கியாரச் சொல்லுங்க மாமா. எனக்கு வேற பக்கத்துல பெரிய இமிசையா இருக்கு” என்றார் கனகராசு.

*

39

க ட்டுக்கட்டாய் எல்லாம் நூறு ரூபாய் நோட்டுகள். பையை விரித்துப் பார்த்துக்கொண்டிருந்த பூமாவுக்கு ஒரு நிமிடம் உள்ளுக்குள் தென்னைகளின் நிழல் விழுந்த கிணறும் நெல், மணிலா, கம்பு என விளைந்து கிடக்கிற கொல்லை வெளிகளுமாய் வந்து போனது.

‘ எவ்வளவு வந்தது, என்னா சேதி’ பாஞ்சாலை எதையும் கேட்கவும் இல்லை, பையை வாங்கிப் பார்க்கவும் இல்லை.

சுவரோரம் போய் குந்தியிருந்தார் ராசோக்கியம். மின்சாரம் நின்று, எரிந்துகொண்டிருந்த சிமினியின் சுடருக்கு ஏற்ப சுவரில் ஆடிக்கொண்டிருந்தது அவரின் நிழல். உள்ளுக்குள் குமுறிக் குமுறி ஆத்திரம். அடக்கப் பெரும்பாடு பட்டார். நிலத்துக்கும் தனக்குமான உறவைக் கத்தியால் வெட்டி, ரத்தம் ஒழுக ஒழுக, பைக்குள் போட்டு, பூமாவின் கையில் கொடுத்துவிட்டதாய்த் துடித்துக் கொண்டிருந்தார்.

பசலைக்கொடியாய் வதங்கி நின்ற பூமா, பணத்தை எடுத்துக் கொண்டு உள்ளே சாமியா வீட்டிற்குப் போனாள். பிசிறுகிற குரலோடு கேட்டார். “ எங்கம்மா எடுத்துகிட்டுப் போற? கொண்டு போயி பொட்டியில வைய்யி.”

“ சாமி கிட்ட வைக்கறதுக்குப்பா.” குரல் கனத்தது.

“ பூமா...” வெளியே குரல் கேட்டது.

கனகராசுதான். உள்ளே வந்தவர் இறுக்கமான சூழலைப் பார்த்துவிட்டு மெதுவாக ராசோக்கியத்திடம் குந்தினார். மடியி லிருந்த பணத்தை எடுத்துக் கொடுத்தார். “ இந்தா அண்ண. இஞ்சினும் பம்பும் அஞ்சாயிரமாவுது போவும்னு பாத்தன். எல்லாம் மோட்ரா பூட்டதால இஞ்சினுக்குலாம் இப்ப வெல இல்ல, பழைய இரும்புக்குத்தான் போடலாம்னு நாலாயிரத்துக்கு மேல முடியாதுன்னுட்டான். அதே மாரி இங்க மூலைக்கி மூல மரம் வெட்றதால மாமரத்துக்கும் ரெண்டாயிரந்தான் குடுத்தான்.”

பூமாவுக்கும் பாஞ்சாலைக்கும் ஒரு நிமிடம் திக்கென்று ஆகிவிட்டது. பொழுது முப்பது நாழியும் திண்ணையில் முடங்கிக் கிடந்துவிட்டு திடீரென்று எல்லாமும் விற்று... “ எப்ப இதலாம் வித்துது...” எழுந்து குந்திய

பாஞ்சாலை திகிலடங்காமல் கேட்டாள்.

“ காலையில பணம் வாங்க நெய்வேலிக்கி போறப்பதான், பாத்து கேட்டன். நா வல்ல, நீனே பாத்துக் குடுன்னாரு. மரத்த மத்தியானம் வெட்டி ஏத்திட்டானுவோ. இஞ்சினு பம்ப இப்பதான் பொழுதோட...” கனகராசு சொல்லிக்கொண்டிருந்தார்.

பூமாவின் மனசுக்குள் மாமரம் மளமளவென்று பூமி அதிர முறிந்து விழுகிற திகிலோசை. “ என்னாப்பா, எங்க கிட்டகூட ஒரு வார்த்த சொல்லாம...” பாஞ்சாலை கேட்கலாம் என்று நினைத் ததைப் பூமா கேட்டாள்.

திடுமென ஒரு மௌனம். வெகுநேரம் கழித்துதான் ராசோக்கியம் பேசினார். குரல் இறக்கத்திலிருந்தாலும் துல்லியம் குறையவில்லை. “ கேட்டு என்னாம்மா பண்றது. வுட்டுடணும்னு கட்டாயம் வந்துட்டுதுன்னா, எதியும் எதிர்பாக்காம வுட்ருணும். மரம் என்னா மட்ட என்னா... பெத்த மொவன் என்னா...” கடைசியில் சொல்லி முடிக்கும்போது குபுக்கென்று கண்களில் திரண்டுகொண்டது.

“ ஏண்ண நீங்க வேற. ஆம்... ஊம்னா... அவன் ஒரு எதிரின்னு குறுக்கால இழுத்துப்போட்டுக்கிட்டு” சற்றே கோபமாகச் சொல்லி விட்டு வெளியே போனார் கனகராசு.

“ அத்த, எங்க அக்காமொவனுக்கு சொரமாம். சேதி காதுல வுழுந்ததும் எனக்கு கையும் ஓடுல காலும் ஓடுல. அவரு வந்தா இந்த மாதிரி அகித்தியமான சேதி வந்ததால அவசரம் அவசரமா கௌம்பிப் போறான்னு செத்த மறக்காமச் சொல்லிடு அத்த. அப்பறம் நா எனுமோ குடும்பத்துல பொறுப்பு இல்லாம பாரம் ஒறைக்காம இருக்கன்னு ஒங்கிட்ட பஞ்சாயத்தம் வைப்பாரு. கடந்தா ஏங்கிட்ட கையக் கால நீட்டுவாரு.”

தலை கொள்ளாத பூவும் முகம் கொள்ளாத சிரிப்புமாய் தேவகி. சொல்லிவிட்டுப்போக வந்தவள் மாதிரி தெரியவில்லை, புதிதாய் வாங்கியிருக்கும் தோடு மாட்டலையும் உள்ளி உள்ளி புடவையையும் காட்டிவிட்டுப் போவதற்கு வந்தமாதிரிதான் பாஞ்சாலைக்குத் தெரிந்தது. நிலபலம் அதிகம் என்பதால் வந்த தொகையும் கூடுதல். இனி கொல்லை குடி, ஓடு ஒடியா என எந்தப் பிக்கல்பிடுங்கலும் இல்லாத சுதந்திரம். பணம் கைக்கு வந்த நாளிலிருந்து தேவகிக்கு ஒரே பரபரப்பும் மகிழ்ச்சியுந்தான். வடிவேலுவிடம் நகைய எடு, நட்ட எடு, பண்டத்த வாங்கு என ஓயாத நச்சரிப்புதான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு இரண்டு நாட்களுக்கு

முன் பழையபடி கொஞ்சம் அவசரப்பட்டு விட்டான்.

இதற்கு முன்பெல்லாம் அவளைப் போட்டு பொணப் பிரட்டாய்ப் புரட்டியிருக்கிறான். அப்போதெல்லாம், பதிலுக்கு பதில் வாயாடிவிட்டு அங்க போறன் இங்க போறன் எனச் சூர் விடுவாள். எறவாணத்திலிருந்த சாட்டைக்கழியால் லேசாய் சும்மா இரண்டு விசிறல்தான். விழுந்து புரள்கிறாள் தெருவில். கும்பலைக் கூட்டுகிறாள். ‘ கையில காசி ஏறன திமிர்ல என்ன இப்பிடிப் போட்டுக் கொல்றானே. எவ ஓதி வுட்டான்னு தெரியலிய. இவங் காசிய கரைக்க, எவ கையில போட்டுக்கிட்டு என்ன இந்தப் பாடு படுத்துறான்னு எனக்குத் தெரியலிய. அவ நெல்லா இருப்பாளா. எனக்கும் ஏம் புள்ளிவுளுக்கு தீம்பு நெனைக்கறவ, என்ன மாதிரி நடுத்தெருவுல நின்னு தெவைப்பாளா...’

இத்தனை காலம் இல்லாமல் தேவகி ஏதோ புதுவழியைக் கண்டுபிடித்து தெருவில் விழுந்து புரண்டதும் வடிவேல் அதிர்ந்து போய்விட்டான். அதிகப்படியாய் பணம் வந்து, ஊர் பொச்சரிப்பில் கிடக்கிற தருணத்தில் இவளின் பேச்சு. ‘ இருந்தாலும் இருக்கும். பணம் எக்கச்சக்க கையேத்தத்துல இருக்குது இல்ல.’ சனங்களின் பார்வையை வைத்தே ஊகித்துக் கொண்டான். வேறு வழியில்லை. கடந்து எவளையாவது கையைக் காட்டி விடுவாளோ என்கிற பயம். பட்டென்று அடக்கத்திற்கு வந்துவிட்டான்.

வாழுங்காலப் பிழைப்பை அழித்து வந்த பணம். பாதுகாப்பாய் வைத்துப் படைக்க வேண்டும், நல்லபடியாய் பசங்களைப் படிக்க வைக்க வேண்டும். வயது கடந்து கொண்டிருந்தாலும் எதாவது ஒரு பியூன் வேலையாவது வாங்கி விடவேண்டும். அதற்கு இவளிடம் கொஞ்சம் பதமாய்த்தான் போக வேண்டும்.

தோடு மாட்டல் வாங்கிக் கொடுத்தான். கைநீட்டிய புடவை களையும் எடுத்துக் கொடுத்தான். கண்டும்காணாததுக்கு அண்ணங் காரனை நேற்று வரவும் சொல்லிவிட்டாள். ‘ எங்க அண்ணன் கைமாத்து கால்மாத்து வாங்கன எடத்துல கழுத்தப் புடிச்சி நெரிக் கறானுவுளாம். ஒரு இருவதாயிரம் இருந்தா பிக்கல தீத்துடுலாங் கறாரு. பணம் இருக்குன்னு தெரிஞ்சிக்கிட்டுதான் வந்துருக்காரு. இல்லன்னு வெறுங்கையக் காட்டியா அனுப்ப முடியும்.’ எல்லாமும் அவளே பேசியும் விட்டாள். தப்பிக்க முடியவில்லை. கொடுத்தே ஆக வேண்டும் என்கிற கட்டாயம். ‘ இந்த நெலத்து காசிக்கி என்னென்னா நாடகம் நடத்தப் போறாளோ’ கொடுத்தும் அழுதான்.

“ என்னா ஆலோலம், என்னப் பாரு ஏம் அழவப் பாருன்னு சொல்லிட்டுப்போவுது.” கேட்டுக்கொண்டே செல்லப்பாங்கி வந்து திண்ணையில் குந்தினாள். முடிந்து கட்டுகிற அளவிற்கு இன்னும் வளராத முடி பரட்டைத்தலையாகச் சிலுப்பிக்கொண்டு நின்றது.

“ எனுமோ அவுங்க அக்கா மொவளுக்கு சொரமாம். பாக்கறதுக்கு ஊருக்குப் போவுதாம்.” பாஞ்சாலை சொல்லியடி தலையை ஈத்திக் கொண்டிருந்தாள். தெருவில் மாடுகள் மேய்ச்சலுக்குப் போய்க் கொண்டிருந்தன.

“ சொரமா இருந்தா பொட்டிக்கடையில மாத்தர வாங்கி குடுத்தாச் சரியாப்பூடுது. இது ஒரு சேதின்னு அடிச்சிப் புடிச்சிக் கிட்டு ஓடறாளாமா... ஆனாலும் அத்த, எங்க வூட்ல கெடக்கற குடிகாரனையும் இவளையும் ஒரு ஏர்ல கட்டி ஓட்டலாம். இந்த நாலு ரூவா காசிய கண்டதும் இதுவோ அடிக்கிற ராங்கி இருக்க...”

“ அப்பறம் என்னா ரெண்டு பேரையும் சோடி போட்டுத்தான் வுட்டுப் பாரன்.” சிரித்தபடி சொல்லிக்கொண்டே கனகராசு பொண் டாட்டி அம்புசாட்சி திண்ணையில் வந்து குந்தினாள்.

“ யாரு எங்க குடிகாரங் கூடயா. கெட்டுது கத. ராத்திரி நாந்தான் கேக்கறன். நம்மளமாதிரி கா காணி இருக்கற ராமசாமிக்கி முப்பதாயிரம் வந்துருக்கு. ஆனா நமக்கு ஒரு லட்சம் வந்துருக்கு. நாளைக்கி அளவுக்கு மேல குடுத்துட்டன்னு வந்து வட்டியோட கட்டிட்டுப் போடான்னு சொல்லிடப் போறான். பாத்து பணத்த செலவு பண்ணு. இல்ல யாருகிட்டனாச்சும் வட்டிப் பொறுப் புலனாச்சும் அவசரத்துக்கு வாங்கிக்கிற மாதிரி குடுத்து வையின்னன். தே பாரு...” தலையைத் தொட்டுக்காட்டினாள். “ இந்த மொட்டயடிச் சிருக்கிறதுல துளுந்துருக்கற நாலையும் புடுங்கிப் போட்டுட்டுத்தான் வுடுவன்னு போட்டுப் பறம்படிக்கிறான். இவள்லாம் அவனுக்கு எம்மாத்திரம். ஒரே நாள்ல எப்பனக் கண்டியா ஏயாளக் கண்டி யான்னு முந்தானிய ஒதறித் தல மேல போட்டுக்கிட்டுக் கௗம்பிடுவா.”

பட்டென்று தேவகியின் பேச்சை விட்டுவிட்டு அம்புசாட்சி கேட்டாள் “ அதான்டி நானும் கேக்கலாம்னு நெனைச்சேன். ஒங் குளுக்கு ஒரு லட்சமாம். அந்த ஆளு ராமசாமிக்கி வெறும் முப்பதாயிரந்தானாம். முக்கூட்ல பொலம்பிக்கிட்டு நிக்கிறான்.”

இதே கேள்வியைத்தான் கணேசனிடமும் செல்லப்பாங்கி கேட்டது. போதையில் அசத்துகிறான். “ நாஞ் சின்னக் குடுத்தனக்காரன் இல்லடி. பெரிய குடுத்தனக்காரன்னு நெய்வேலிக்காரனுக்கு தெரிஞ்சிருக்கு. அதனால பின்னம் பத்து ரூவாய சேத்துக் குடுக்கறான். குறுக்க நிக்கிற ஒனக்கும் ஊர்ல கெடக்கறவனுவோ மாதிரி ஏம் பெருமையப் பத்தி தெரியில. ஏங் குடுத்தாங்கற...”

“ இ ந்தக் கீரையன் வந்தாம்பா?” கிளம்பிக் கொண்டிருந்த அறிவழகனை எதிர்பார்த்தபடி, தெருவில் பயணமாக நின்று கொண்டிருந்த சிகாமணியிடம் ரங்கநாது கேட்டார்.

“ அது சம்பந்தமாதாம்பா நேத்து கேக்கப் போயிருந்தம். நெலம் இல்லாதவங்களுக்குலாம் வூடு எடுக்கறப்பதான் பணம் குடுப்பாங்களாம்.” சொன்னான்.

“ அதாம்பா நானும் சொன்னன். வூடு எடுக்கறப்பையும் வுட்டுடப் போறாங்க. செத்த பாத்து தம்பிவோகிட்டு சொல்லுங்கன்னு சொல்லிட்டுப் போனாம்பா. நாம இருக்கறவங்களுக்கு மட்டும் பாடுபடக்கூடாது. இல்லாதவங்களுக்கும் சேத்து பாடுபடணும்...” தட்டுக்கொடிகளை அடி சீவிக்கொண்டே சொன்னார்.

“ இல்ல பெரிப்பா. ரத்னவேலு, அரசாயி, கீரையன்... எல்லார் லிஸ்டையும் வெவரமா எடுத்தும் வைச்சிருக்கம். முன்கூட்டியே மேல குடுத்தும் இருக்கறம்...” சிகாமணி சொல்லிக்கொண்டு இருக்கும் போதே, அறிவழகனும் கிளம்பி வெளியே வந்தான்.

‘ எங்க...’ என்கிற மாதிரி தயக்கமாகப் பார்த்தார். புரிந்து கொண்ட அறிவழகன் “ விருத்தாசலம் வரைக்கும் போய்ட்டு வர்றம்பா. முதல் தவண குடுத்ததோட கூழ ஆத்தினாலும் ஆத்திடு வானுவோ. ஒரு கல்யாணத்துக்கு ஜி.ஆர். டாக்டர், குறள்மணி அண்ணன்லாம் வர்றாங்க. அடுத்து என்னா பண்றதுன்னு கலந்துக்கிட்டு வர்றம்.” சொல்லிக்கொண்டு இருக்கும்போதே நுணா, வேம்பு என மிளார்களை ஏற்றிக்கொண்டு டயர் வண்டி ஒன்று கடந்து போனது.

“ ஒரு தழதாம்பக் கூட வுட மாட்டானுவோ போல்ருக்கு...” மெளார் வண்டியை பார்த்துக்கொண்டே சிகாமணி சொன்னான்.

“ சும்மா கெடக்கறதுதான. ஆளா செத்த மெனக்கிட்டு ஏத்திக்கிட்டு செங்கல்

சூளையைப் பக்கம் பூட்டா கைகொண்ட காசிதான்.” சொல்லிக்கொண்டிருந்த ரங்கநாது சிகாமணியிடமே கேட்டார். “ ஏம்ப்பா குடுத்த பணத்தலாம் என்னா பண்றீங்க. ஒப்பங் கையில கியில குடுத்துடப் போறீங்க. நாலே நாள்ல வாணம் வுட்டுடுவான்.”

“ ஏற்கனவே கொஞ்சம் பாக்கி சாக்கி இருக்குது பெரிப்பா. அதோட வூட்ல வெலாவுல குத்து வாங்கிக்கிட்டு, ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரின்னு நிக்க வைக்கற மகராசருக்கு வாங்கனது வேற இருக்கு. இதலாம் குடுத்துட்டு என்னா மீறும்! அத வைச்சி எனுமா ஓட்றதுன்னு தெரியில.” விசனமாகச் சொல்லிக்கொண்டே சிகாமணி தெருவில் இறங்கினான்.

அறிவழகனும் சிகாமணியும் பாலக்கரையில் இறங்கி பாலத்தில் நடந்து கொண்டிருந்தார்கள். மணிமுத்தாறு கீழே குப்பையும் கோலுமாகக் கிடந்தது. வலதுபக்கம் மார்க்கெட்டால் நுழைந்து பழமலய்நாதர் கோயிலின் கீழண்ட கோபுர வாசப் படியாய் நுழைந்து, வடக்கு கோபுர வாசப்படி ஒட்டி இருக்கும், விருத்தாம்பிகை அம்மன் சன்னதிக்குப் போனார்கள். உள்ளே இவர்களுக்கும் முன்பாக குறள்மணி, மாப்பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்தார். அவன் கும்பிட்டு வரவேற்கவும் இவர்களும் கும்பிட்டார்கள். குறள்மணிக்கும் வணக்கம் சொன்னார்கள்.

பையனுக்கு பீங்கான் பேக்டரியில் வேலை. சங்கத்துக்காரன். ஒரு கூட்டத்தில் குறள்மணி பேசுவதைக் கேட்டுவிட்டு ரொம்பவும் பிரியமாகிவிட்டான். தூணை ஒட்டி மணப்பெண் அலங்காரத் துடன் நின்றுகொண்டிருந்தவள், செறுவயதாகத் தெரிந்தாள். இரு வீட்டார்களும் சேர்ந்து மொத்தமே ஒரு ஐம்பது பேர் தான் இருக்கும். கோவிலிலும் கூட்டம் குறைவுதான்.

ஜி.ஆர். டாக்டர் வந்தவுடன் எல்லோரும் சன்னதிக்குள் போனார்கள். அம்பாள் முன் வைத்து பூஜை முடிந்து மாலை தாலியோடு தட்டு வந்தது. ஜி.ஆர். தாலியை மணமக்களின் பெற்றோர்கள் கையால் எடுத்துக்கொடுக்கச் சொன்னார். பையன் வாங்கிக் கட்டினான். கோயிலின் மேளக்காரர்கள்தான் கொட்டு மேளம்; நறுக்காய் நாலு தட்டுத் தட்டினார்கள். அட்சதையைத் தூவி அன்பளிப்பு கொடுத்துவிட்டு அவசரமாய்க் கிளம்பினார். ஜி.ஆரின் கார்பக்கம் போனார்கள். குறள்மணி அண்ணன்தான் சொன்னார் “ மொதல் தவண குடுத்ததோட இருக்கான். அதான் அடுத்து என்னா பண்றதுன்னு கேக்க வந்துருக்காங்க. ஆஸ்பத்திரிக்கு வருட்டுமா அண்ண...”

“ இன்னைக்கி ஆஸ்பத்திரிக்கி லீவு. நெறையா கல்யாணத்துக்கு போவுணும்.” சற்றே யோசித்தவர் “ சரி என்னா பண்றான்னு பாப்பும் அறிவு. நம்ப கோரிக்க எல்லாத்தையும் சரி பண்ணிட்டு அப்பறமா ஊருகிட்ட வாடான்னு சொல்லுவம். சரியா. அப்புறம் நேரமாவுது. மறுபடி பாப்பும். இருந்து சாப்புட்டுப் போங்க மணி...” குறிப்பாய் குறள்மணியிடம் சொல்லிவிட்டுப் பறந்து போனார்.

பதினாறு கால் மண்டபத்திலேயே பந்தி. கடைச்சாப்பாடு தான். இருபது பேருக்கு மேல் முதல் பந்தியில் இருந்தார்கள். அடுத்த பந்தியில் பார்க்கலாம் என்று மண்டபத் தூணில் சாய்ந்து குந்தியபடி கோயிலின் பிரமாண்டமான கோபுரங்களைப் பார்த்தார். “ விருத்தாசலத்துக்கே பெரிய அழகு இந்த பழமலய்நாதர் கோயில்தான். எல்லாம் சோழர் ஆட்சிக் காலத்து திருப்பணி களாதான் இருக்கும். எவ்வளவு பாடுபட்டு இறைவன் மேல உள்ள பக்தியால இவ்வளவு பெரிய அழகான கோயிலக் கட்டி, வரலாற்றுல என்னைக்கும் அழியாம நெலைச்சி நிக்கிறாங்க பாரு. இப்படிப்பட்ட கலை அழகுள்ள ஒரு கோயில்ல வைச்சி எளிமையா கல்யாணம் பண்றதுதான், ரொம்ப சரி.”

“ நீங்க சொல்றது உண்மதான் அண்ண. நானும் படிச்சிருக்கன், கேள்வியும் பட்ருக்கன். இது ரொம்ப பழமையான கோயிலு. தலப்புல இருக்கற கோபுரம் கூட, செம்பியன் மாதேவி தன் கணவர் கண்டராதித்த சோழன் பேரால கட்டினதுதான். அஞ்சி நந்தி, அஞ்சி பிரகாரம், அஞ்சி கோபுரம், அஞ்சி கொடி மரம், அஞ்சி தீர்த்தம்னு எல்லாம் அஞ்சஞ்சா ஐந்தெழுத்து மந்திர ஆகம விதிப்படி நிர்மாணிக்கப்பட்ட கோயிலு அண்ண இது. ஆனா இந்தக் கோயிலயும் முஸ்லீம்கள் வுடுல. படையெடுப்புல ஏகப்பட்ட செலைய ஒடைச்சி வைச்சிருக்கானுவோ. நடந்த தாக்குதல்ல அஞ்சாவது பிரகாரமே இடிஞ்சி அழிஞ்சி போயிருக்கு. இப்ப கோயில சுத்தி போற தார்ரோடு அப்ப பிரகார சுற்றுதான். அதே மாதிரி நந்திங்க. எனக்கு தெரிஞ்சே கீழண்ட கோபுர வாசப்படிக்கு எதிர்க்க, இப்ப காய்கறி சந்த இருக்கற எடத்துல ஒரு நந்தி மண்டபம், இடிபாட்டோட கெடந்துது.” அறிவழகன் ரொம்பவும் உருக்கமாகச் சொன்னான். விருத்தாசலத்தில்தான் எம்.ஏ. வரை படித்தவன்.

“ ஒரு மக்களுடைய பாரம்பரியத்த பண்பாட்டு சின்னத்த இடிக்கறதும் அழிக்கறதுமா அன்னையிலேர்ந்து இன்னைய வரைக்கும் அந்தக் கேவலமான வேலய செஞ்சுக்கிட்டுதான் இருக்கறானுவோ. தே ஈழத்த எடுத்துக்க. இனப்பிரச்சன மட்டுமில்ல, மதப் பிரச்சனையும் தான். மொழிய,

பண்பாட்டை அழிக்கணும்னு பெரிய யாழ் நூலகத்தையே கொளுத்தியிருக்கானுவோ தெரியுமா...” குறள்மணி சொல்லிக்கொண்டிருந்தார்.

பட்டென்று உற்சாகமாகி அறிவழகன், சட்டைப் பையிலிருந்து மடித்து வைத்திருந்த ஒரு படத்தை எடுத்து அவரிடம் காட்டினான். ஆங்கில வார இதழ் ஒன்றில் வந்த வண்ணப் படம். இந்திய ராணுவ டாங்கி ஒன்று அடிபட்டு ஆமைபோல் மல்லாந்து கிடக்க, அதன்மேல் மூன்று பெண் புலிகள் கையில் துப்பாக்கியோடு நின்றிருந்தனர்.

“ ஏற்கனவே நா பாத்துட்டன்...” சொன்னவர், தொடர்ந்தார் “ வினைத்திட்பம் என்பது ஒருவனது மனத்திட்பம்.”

“ இப்பல்லாம், முக்கால்வாசி பத்திரிக்கக்காரனுவுளும் இதப் பத்திலாம் ரொம்ப கடுமையாதான் எதுத்து எழுதறானுவோ அண்ண.” மிகவும் வருத்தத்துடன் அறிவழகன் சொன்னான்.

சிரித்துக்கொண்டே சொன்னார். “ அவனுவோ கொணாச் சாரம் அப்பிடித்தான். தமிழ், தமிழர்னாலே பத்திக்கிட்டு எரியும். அவனுவோ தூக்கிப் புடிக்கிற மேலாதிக்க வைதீகத்தை தமிழ்மரபு எப்பவும் எதுத்துக்கிட்டு நிக்கிதுங்கறது தான் அதுக்கு காரணம். ஆனா இத்தன கோடி மக்கள் பேசற மொழிய, திருக்குறள் முதன்மை நூலா இருக்கிற ஒரு பண்பாட்ட எந்த சக்தியாலயும் அசைச்சிப் பாக்கமுடியாது.”

சிகாமணி ஆர்வமாகக் கேட்டபடி இருந்தான். அறிவழகன் தான் தொடர்ந்து கேட்டான் “ சரி அண்ண, இம்மாம் பெரிய ராணுவத்த எதுத்து என்னா செய்ய முடியும்... இது எங்க போயி முடியும்...”

“ வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல் புரிந்த தன்மையிது” என்று சொல்லி குறளுக்கு விளக்கம் கொடுக்க முற்பட்டபோது பந்தி எழுந்திருந்தது.

பேருந்தில் ஊர் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, பெரியார் நகர் தாண்டி சன்னலோரம் குந்தியிருந்த சிகாமணி கேட்டான். “ அந்த படத்த எடுண்ண... பாப்பும்...”

வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தவன், மெதுவாகச் சொன்னான். “ என்னாண்ண... பொட்டப் புள்ளிவோ தூக்க முடியாம இம்மாம் பெரிய துப்பாக்கிவுள தூக்கிக்கிட்டு யுத்தத்துல நிக்கிதுவோ!”

“ போயி நின்னு போராடித்தான் ஆவணும். வேற வழி...”

எல்லாம் வயதுப் பெண்பிள்ளைகள். பள்ளிக்கூடம் போகாமல், காதல், கல்யாணம் என்கிற சராசரி வாழ்வைப் பற்றி யெல்லாம் நினைப்பு இல்லாமல் வாழ்வா சாவா என அடித்தும் அடிபட்டுமாய் போகிற நிலை.

“ அண்ண, ஈழப் பிரச்சின எவ்வளவு கொடுமையான சிக்கல்னு எனக்கு இப்பதாண்ண புரியிது...”

“ இதுக்கே ஆயிரத்தெட்டு குத்தங்கொற சொல்றானுவோ...”

“ எதுல குத்தங்கொற இல்ல. சொல்லிட்டுப் போறானுவோ. தப்போ சரியோ... நம்ப அக்கா தங்கச்சிவோ என்ன செஞ்சாலும் செய்யட்டும். இதுவுள நாம வுட்டக்குடுக்கக் கூடாது அண்ண...”

“ **க்** கும். என்னாடா பணம் வந்து இம்மாம் நாளாவுது, இன்னம் தலையக் காணம்னு பாத்தன்...” தெருப் பக்கம் பாத்த அசலாம்பு ஒரு முக்கு முக்கியபடி வீட்டுக்குள் வந்தாள்.

“ யாரும்மா...” கேட்டான் சிகாமணி.

“ யாரு. உள்ளூர்ல சீவாங்குச்சி கனத்துல இருக்குது பாரு ஒரு அத்த. லட்ச ரூவா பணம் வாங்கன சேதி கெடைச்சிருக்கும். அண்ணங்கிட்ட போனா, எதாவது அள்ளிக்கிட்டு வரலாம்னு யோசனையா இருக்கும்.” முகத்தை விகுத்தமாக வைத்துக்கொண்டே சொன்னாள்.

“ அவுங்களுக்குந்தான் மொதல் தவண ஒரு லட்சத்துக்கும் மேல வந்துருக்கும்” வெளியே வந்தபடி சொன்னான்.

“ கோடி ரூவா வந்தாலும் ஆத்தா வூட்லேர்ந்து எம்மாம் பெரட்டிக்கிட்டு போவலாம்ன்னுதான சனங்க பாக்கும்” சொல்லிக் கொண்டாள்.

“ எம்மா ராசாமணி அத்தையும் வருதும்மா...” குரலில் லேசான உற்சாகம் தெரிந்தது.

“ இல்லிய. உள்ளூர் தொம்பய தான பாத்தன். ஒருவேள படலாட்டம் இதும் பின்னால வந்ததுல மறைச்சிருக்கும்...” சிரித்தபடி சொல்லிக்கொண்டே வெளியில் வந்தாள். ராசாமணி என்றால் மட்டும் அசலாம்பு ஆப்பையும் டப்பாக்கூடுமாக நின்று விடுவதில்லை. எப்போதும் தூரத்தில் இருப்பதின் மீது சற்று கூடுதல் விசாரிப்பு. அப்புறம், அவள் மகள் சுமதி மீது ஒரு கண்.

அவ்வளவுதான்.

“ வாங்க அண்ணி...” ராசாமணியைப் பார்த்துதான் கூப்பிட்டாள். “ வாங்க அத்த... வாங்க அத்த...” இருவரையும் கூப்பிட்டான் சிகாமணி.

“ வர்றன்...” ராசாமணி கூட வெள்ளைச்சியும் சேர்த்துச் சொன்னாள்.

பாயை எடுத்துப் போட்டபடி கேட்டாள் “ சுமதி பானுமதி லாம் எப்பிடியிருக்குதுவோ?”

“ கெடக்கறாளுவோ...” சொல்லிக்கொண்டே குந்தினாள்.

பானுமதி பேரைக் கேட்டதும், பொங்கல் வரிசை கொடுக்கப் போனபோது ஆம்பிளை சட்டையில் நின்ற முகம் சிகாமணி மனசுக்குள் விரிந்தது. கொஞ்ச நேரத்திற்குள் பானுமதியின் முகம் சற்றே மாறி அந்த இடத்தில் பூமாவின் முகம் வந்து குந்திக் கொண்டதும் பொட்டென்று ஒரு சொடுக்கம். பணம் வாங்கிக்கொள்ள, வராதவர்களின் சார்பாக விசாரிக்க என அலைச்சலில் குறுக்க நெடுக்ககூட பூமாவைப் பார்த்தாய் ஞாபகமில்லை. மீறிப் பார்த்தும் ஒன்றும் ஆகிவிடவும் போவதில்லை. பெருமூச்சு விட்டபடி குந்தியிருந்தான்.

“ அப்பா எங்கப்பா... ஆஸ்பத்திரியில இருக்கறப்ப வந்து பாத்துட்டுப் போனதோட சரி. எங்க மாளுது வருணும்னா...” ராசாமணி சலிப்பாகச் சொன்னாள்.

“ இந்த கொம்பு குத்தன எடத்துலதான், உள்கொண்டு எனுமோ சிக்கல் இருக்கு போல்ருக்கு. சுருக்கு சுருக்குன்னு குத்துதுன்னு சொல்லிக்கிட்டு இருந்தாரு... எது எப்பிடியிருந்தாலும் குடிக்கறத நிறுத்தறது இல்ல. செத்த மின்ன கூட அந்த காணிக் காரம் கணேசன் பய கூடதான் சொல்லச் சொல்லக் கேக்காம போயாவுது. எங்க ஊத்திக்கிட்டு, யாருகிட்ட வம்ப வளத்திக்கிட்டு நிக்கிதோ தெரியில...” அசலாம்பு வருத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“ எங்கியும் போவுல. இங்கதான் இருக்கன். அதுக்குள்ள கூரையப் பிச்சிக்கிட்டு கோயிந்தனப் பாக்க பூட்டன்னு பஞ்சாயத்தம் வைக்காத...” குரல் கேட்டுத் திரும்பினார்கள். திட்டமான போதையில், வேர்வை வடிய வடியத் தெருவில் வந்துகொண்டிருந்தார் செங்கல் ராவு. செம்பட்டை பாய்ந்த தலை வெயிலில் பொன்னிறமாய்த் தோற்றங் காட்டியது.

அவர் விசாரிக்க இவள் விசாரிக்க கடைசியில் ராசாமணி ஆரம்பித்தாள் “

நெலம் பலம் எடுக்கறாங்கன்னு சேதி ஆம்புட்டுது. எனுமா கெடக்குறீங்கன்னு போயி ஒரு எட்டு பாத்துட்டுன்னு வான்னு சொன்னாரு... அதான் வந்தன். மத்தபடி குடுக்கற காசிய கன்னா சின்னா படுத்திடாதீங்க. எங்க கிட்ட குடுத்தாகூட அப்பிடி ஊத்தாங்கால் பக்கம் ரெண்டு காணி தரய கிரய வாங்கிப் போடலாம். இல்லன்னா நம்ப வகையிலியே ரெண்டு வட்டிக்கி மூணு வட்டிக் குன்னு பரப்புத்தியத்துக்கு வுட்டாலும் வுடலாம்...”

பணம் பற்றிப் பேச்சு திரும்பியதுமே அசலாம்புக்கு முகம் இருண்டுபோனது. அம்மாவின் முகக்குறிப்பும் தன் மனத்தைப் போலவே இருப்பதைக் கண்டதும் சிகாமணி பேச்சை மறித்தான். வாங்கிய இடத்தில் இன்னும் கொடுபடாமல் கிடக்கிற கடன், பிறகு வண்டியை மறிக்கப்போனதில் வந்த விண்ணங்கத்தில் தொடரும் அப்பனின் வைத்திய செலவு... செலவுகளை, சிரமங்களை சிகாமணி அடுக்கிக்கொண்டே போனதும் ராசாமணிக்கு மட்டுமல்ல, வெள்ளைச்சிக்கும் ஏமாற்றமாய்ப் போய்விட்டது. குறிப்பாய் வெள்ளைச்சிக்கு குறைந்த பட்சம் ஐந்து பவுனை விற்று காணி வாங்கியதையாவது சரி செய்யவேண்டும் என்கிற ஆவலம் நிராசையாய்ப் போகிற வருத்தம்.

“ ஏம்மா, வண்டிய மறிச்சன் வண்டிய மறிச்சன்னு சொல்றான... அப்பிடிலாம் ஒரு எச்சரிக்க பண்ணி வைச்சியும் என்னா பண்ணியிருக்கானுவோ தெரியுமா...” ஏதோ முக்கியமான இடத்தில் பிடியை இறுத்திவிட்ட மிதப்பில் சொல்லிவிட்டு நிறுத்தினார் செங்கல்ராவு.

‘ இப்ப புதுசா என்னா சிக்கலக் கொண்டாந்து வுடறான்னு தெரியிலிய...’ அசலாம்புக்கும் சிகாமணிக்கும் ஒரே நேரத்தில் திக்கென அதிர்ந்தது. திரும்பி ஒருசேர செங்கல்ராவைப் பார்த்தார்கள்.

குறிப்பாய் வெள்ளச்சியைப் பார்த்துச் சொன்னார். “ போயி பாரும்மா. அவம் மறிச்சியில காட்றன்னு நம்ப கொல்ல நேருக்கு இருந்த மரத்தலாம் காட்டி வெட்டியிருக்கானுவோ. அவஞ் சொல்லாமலா யேபாரி வெட்டியிருப்பான். மூணு நாலு சுத்துல கழுவி விட்ட மாதிரி சைடா ஒரு நொணா நின்னுது. பூட்டுது. அவனலாம் கொடுவாளால கொத்தி இழுத்தா என்னா.” கொடுவாளாய்க் கையைக் காட்டிக் கொத்திப் பேசியதும் சிகாமணிக்கும் அசலாம்புக்கும் உள்ளுக்குள் சொரசொரவென்றது.

இதுதான் சமயமென்று வெள்ளச்சியும் அதம்பினாள் “ அவந் திருந்த மாட்டான் அண்ண. அவன ஒரு தடவையாச்சும் வலுக்க ஒரு பாடம் பண்ணனாதான் அடங்குவான். விறோலங்கெட்ட பய. அன்னைக்கி அத்து

நேருக்கு இருந்தத கொத்திட்டமுன்னு அம்மாம் பாடுபடுத்தி வம்பு வளத்தன கம்னேட்டி, இன்னைக்கி எப்பிடி இங்காண்ட கைய நீட்டிச்சி. அவன சும்மா வுடக்கூடாது அண்ண.” எகிறினாள்.

அதிர்ந்து போன அசலாம்பு வெள்ளைச்சியைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள். “ வேணாஞ் சாமி. அண்ணனும் தங்கச்சியுமா எங்குளுக்கு சம்பாரிச்ச வைச்ச மரம் மட்டலாம் போதும். இதுக்குமேல எங்களால தாங்க முடியாது.” அதே வேத்தில் திரும்பி தீர்மானமாய் சிகாமணியைப் பார்த்துச் சொன்னாள் “ எலேய் தம்பி, இந்த நெய்வேலிக்காரன் ஏட்டக் கௌப்பறதங் காட்டியும் இந்தக் கூத்தாடிப் பய நம்பள எங்க கொண்டுபோயி வுட்டாலும் சிக்கல்ல வுட்டுடுவான். நாஞ் சொன்ன மாதிரி புடிக்கிற பாவம் புடிக்கட்டும், இவங் கைய கால முறிச்சிப் போடு, நாம கஞ்சி ஊத்தி காபந்து பண்ணிப்பும். ஆமா, நாஞ் சொல்றதக் கேளு...”

இங்கேயே இருப்பதால் வெள்ளைச்சிக்கு இதுவெல்லாம் சகஜமாக பட்டது. ஆனால் ராசாமணிக்குத் தாங்கவில்லை. “ என்னா அண்ணி, இப்பிடி கையக் கால முறிப்பன்னு...”

“ அட நீ வேற. சும்மா இரு அண்ணி. ஒங்குளுக்கு ஒண்ணும் தெரியாது. நாலு நாளைக்கி மின்ன மாடு குத்தின எடத்துல வெலாவுல வலிக்கிது ரவ வெந்நீர வைச்சி அடின்னான்னு ஒரு பொம்னேட்டி தலையால தண்ணி மொண்டாந்து ஊத்தி சுட வைச்சி வெரல் பொறுக்குற பக்குவத்துலதான் அடிக்கிறன். அதுல லேசா சுரீர்னு சுட்டுப்போச்சின்னு கொல்றதுக்காடி நிக்கிறன்னு நிமுந்த வேகத்துல ஒரே குத்தா தாடைய குத்தி இங்க பாரு...” கன்னச்சதையை இழுத்து ஒரு பல்லை ஆட்டிக் காட்டினாள். “ அப்பிடியே சீவம் பிரிஞ்சி போச்சி வலியில. பல்லு ஆட்டங் கண்டு வீங்கிக்கிட்டு புள்ள கேட்டதுக்குக் கூட சொத்துப்பல்லுன்னு பொய்ய சொல்லி இவங்கிட்ட...” ஓவென்று அழுதுகொண்டிருந்தாள்.

*

40

சுத்தம் கேட்டுத் திரும்பிய எல்லோர் முகங்களிலும் பெரும் திகில். ஒரு புயலைப் போலப் புழுதி மேகம் பின்தொடர நாலைந்து வெட்டு இயந்திரங்களும் ஏழெட்டு லாரிகளுமாய் ஊருக்குள் நுழைந்து பொசுக்கென உறுமலடங்கி நின்றன. தேங்கி நிற்க வழியில்லாத புழுதி, பனி ஈரம் பரவிக் கிடந்த வீடுகள் மீதும் தெருக்கள் மீதும் ஓடிப் பாவியது. இயந்திரங்களிலிருந்து இறங்கியவர்கள், கலவரத்துடன் வேடிக்கை பார்த்த சனங்களின் மீது அலட்சியப் பார்வையை வீசினார்கள்.

வலிந்துபோய்க் கேட்கலாம் என்று நினைத்த அறிவழ கனுக்கும் சிகாமணிக்கும் அவர்களுக்குள் பேசிக்கொண்டது எதுவும் புரியாததால் தயங்கினார்கள். எல்லாரும் வேற்று மாநிலத்தவர்கள். பின்னால் வந்த ஜீப் ஒன்று நிற்காமல் போகவும் வரிசைகட்டி நின்ற இயந்திரங்கள் பின்தொடர்ந்தன. நேராய் அய்யனார் கோயில் ஆவாரங்காட்டில் இறங்கிய ஒவ்வொன்றும் கொடுக்கைத் தொங்கப்போட்டு மண்ணைச் செடிகளோடு கொத்தி அள்ளி உயரே தூக்கி லாரியில் போட்டது. பெரிய லாரிகள்தான். இருந்தாலும் இரண்டுமூன்று கொட்டிலேயே நிரம்பிய அவை திணறிக்கொண்டு கிளம்பியதும், பூமி கிடு தாங்கியது போன்ற ஓர் அதிர்வு.

குண்டுகுழிகள் எதற்கும் அஞ்சாத ராட்சத பலங்கொண்ட லாரிகள், அசகுலையாமல் போய் ஊருக்குள் நுழைகிற சாலையை ஒட்டி கிழக்குப் பக்கமாய் தூக்கிச் சாய்த்ததும் ‘ சொரேர்’ என்று, ஆடுமாடுகள் மிரண்டோடும் படியான, பெருஞ் சத்தம். அதே நேரம் கொட்டுகையில் கிளம்புகிற புழுதி, வைகாசி மாதத்தில் கிளம்புகிற மண்காற்றைப் போல் எழும்பி மெல்ல வேப்பங் குறிச்சியின் மீது படியத் தொடங்கியது.

வேலை தொடங்கிய சற்று நேரத்திற்கெல்லாம் பெரும் பெரும் பள்ளங்களை உண்டாக்கி ஒவ்வொரு இயந்திரமும் பள்ளத்தில் நின்று சலாபத்தாய் வெட்டுகிறமாதிரி துரித கதியில் வேலை. அடுத்தடுத்து விடாது வெட்டவும், நடைநடையாய் கொண்டுவந்து கொட்டவும் தெருவெங்கும் வெளியெங்கும் ஒரே புழுதி. ஆச்சலாய் எப்போதும் காற்றுவாங்கியபடி திறந்து கிடக்கிற வீட்டுத் திண்ணையில், வாசலில் குந்திக் கிடக்கிற சனங்கள் எல்லாவற்றையும் உள்ளுக்குள் வாங்கி கதவைச் சாத்திக் கொண்டார்கள்.

மூடி வைத்த குடத்திற்குள்ளும் புழுதியாடை படிந்தது. அதே வேளை ஊருக்கு வடக்கே கொட்டத் தொடங்கிய மண் நடுவில் வருகிற சாலையை விட்டு கிழக்குமேற்காய் அணையைப் போல நீண்டு உயர்ந்து, வெளிப்பார்வையிலிருந்து வேப்பங்குறிச்சியை மறைக்கத் தொடங்கி யிருந்தது.

எப்போதும் கும்பலுக்கு இருக்கிற மரியாதை தனிமனிதர் களுக்குக் கிடைப்பதில்லை. இதுவே ஊரைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தால் புள்ளடித்த மாதிரி இந்நேரம் தக்க பதில் வந்திருக்கும். இல்லையென்றால் அதிகாரியே வெளியே வந்து கூப்பிடுவார். ‘ வாங்க ஒக்காந்து பேசலாம்.’

அறிவழகனும் சிகாமணியும் ‘ ஏண்டா தாதா...’ என்று கேட்க நாதியில்லாமல் வெகுநேரமாய் நில எடுப்புத்துறை அலுவலகத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். கடந்து உள்ளே போய் திரும்பவும் கேட்டான் அறிவழகன் “ என்னாங்க எப்ப வருவாரு? காலை யிலேர்ந்து நிக்கிறம்.” கேட்டுக்கொண்டு இருக்கும்போதே இருக்கையில் குந்தியிருந்தவர்கள் எல்லாரும் டக்கென்று விறைப்பாய் ஆனதும் திரும்பிப் பார்த்தான். அதிகாரிதான். புதிதாய் வந்து பொறுப் பேற்றிருப்பவர் என்றாலும் ஏற்கெனவே இரண்டு மூன்று நாளைக்கு முன்பே பார்த்திருக்கிறார்கள். பெருந்தொப்பையோடு கூடிய கனத்த உருவம். வழுக்கைத்தலையின் முன்பகுதியில் ஒரு கட்டி போன்று திரட்சி.

வணக்கம் போட்டார்கள். பின்னால் வந்துகொண்டிருந்த தனபால் இவர்களைக் கண்டதும் தேங்கி, ஒரு ஊழியருடன் பேசுவது மாதிரி நின்றுகொண்டார். உள்ளே வரச் சொன்னார் அதிகாரி. இவர்களின் பேச்சை உள்வாங்கிக் கொண்டு ரொம்பவும் சாதாரணமாகச் சொல்லிக்கொண்டு போனார். “ இன்னைக்கி நாளைக் குள்ள பூரா பணத்தையும் கணக்குவழக்கு பாத்து செட்டில் பண்ணிடு வாங்க. அதேமாதிரி ஒங்குளுக்கு மாற்றுக்குடியிருப்பு கலெக்டர் காட்ன எடத்துலியே, தெருவு மடிச்சி எடம் தயாராயிட்டுருக்கு. அநேகமா இன்னம் ஒரு வாரத்துக்குள்ள மனைங்க பிரிச்சி குடுத்துடுவம். குடிதண்ணிக்கு பைப்பு லைன் போட்டு வந்துடும். சனங்ககிட்ட சொல்லி நீங்க ஒத்துழைப்பு குடுத்து ஊர ட்ரான்ஸ்பர் பண்றதுக்கு உதவுனிங்கன்னா எங்களுக்கு செரமமில்லாம இருக்கும். ஏன்னா எங்குளுக்கு மேல பிரஷர் குடுக்க ஆரம்பிச்சிடுவாங்க. பணத்த செட்டில் பண்ணிட்டாலே எடத்த கிளியர் பண்ணிக்குடுக்குணுங் கறது கெவர்மெண்டோட ரூல். ஆனா இந்த விஷயத்துல கொஞ்சம்

இணக்கமாதான் நடந்துக்கறம். ஏன்னா இது மக்களோட வாழ்வாதாரப் பிரச்சின. டக்குன்னு அரசு சொல்லுதுங்கறதுக்காக சட்டத்த கையில எடுத்திடக் கூடாது. அதனால மனை பிரிச்சிக் குடுத்ததும், மக்கள் கிட்ட போய் சொல்லி வீட்டக் கட்டிக்கிட்டு குடியேறச் சொல்றது ஒங்க பொறுப்பு."

அறிவழகன்தான் மறித்துக் கேட்டான் " சார் பணங் குடுக்குறீங்க, வாங்கிக்கறம். மனை குடுக்குறீங்க, போய்க் கட்டிக்கிறம். ஆனா படிப்படியா வேலைக்கி எடுத்துக்கறன்னது, மாற்றுக் குடியிருப்புக்கு போறதுக்கு மின்ன ஏற்பாடு பண்ணனாதான நெல்லாருக்கும்."

" இங்க பாருங்கப்பா. இழப்பீடும் மாற்றுக் குடியிருப்புக்கான ஏற்பாடுந்தான் மொதல்ல பண்றம். நீங்க இதுக்கு கோஆப்ரேட் பண்ணுங்க. அடுத்தடுத்து வேல நடக்கும்." பேச்சில் எந்தவொரு பிடிமானத்தையும் தளர்த்தாமல் அதிகாரி எழுந்தார்.

சிகாமணிதான் லேசான காட்டத்தில் பேசினான் " நாங்க கோஆப்ரேட் பண்ணுனும்னு சொல்றிங்க சார். அப்பிடியே நாங்க ஒத்துழைப்பு குடுத்து குந்தியிருக்கற எடத்த வுட்டுட்டு எட்டப் போனப்பறம் நீங்க செய்றதுங்கறதுலாம் சும்மா கதைங்க சார். ஊரக் காலி பண்றதுக்குள்ள, எங்குளுக்கு வூட்டுக்கு ஒரு ஆள் வேல குடுத்தாவணும்."

" எல்லாம் நல்லபடியா நடக்கும், போங்க தம்பி. கலெக்டர் மின்னால நிர்வாகம் வாக்கு குடுத்துருக்கறப்ப, எப்பிடி நடக்காமப் பூடும்." கும்பிட்டு அனுப்பினார்.

*

41

வேறு வழியில்லை, “ வாங்க...” வேண்டாவெறுப்பாய் கூப்பிட்டுக் கொண்டே பக்கத்தில் சைக்கிளை கொண்டுவந்து நிறுத்தினான் சதாசிவம். திரும்பிப் பார்த்த தங்கப்பழம் சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போனாள். சதாசிவம் ஒரு நாளும் இப்படி வாய்நிறையக் கூப்பிட்டதே இல்லை. ஆனாலும் கூட ‘ அத்தெ’ என்கிற வார்த்தையையும் சேர்ந்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று அவளுக்குப் பட்டது.

“ வர்றம்பா...” பையை மடியில் வைத்துக்கொண்டு குந்தினாள். சைக்கிள் நகர ஆரம்பித்ததும் அவள் மனமெல்லாம் பூரிப்பு. இந்தப் பூரிப்பு மேன்மேலும் நிலைக்கிற மாதிரி மலரை சதாசிவத்திற்கு கட்டி வைத்துவிட்டால் போதும். ஒரே பிள்ளை. ஒரே கனவு. சரியான நேரத்தில் அதற்கான பேச்சை ஆரம்பித்து விடவேண்டும். காத்துக்கொண்டிருந்தாள்.

“ வேலைக்காப்பா போய்ட்டு வந்த? பூமா எப்பிடியிருக்கு. அம்மாவுக்கு ஒடம்பு பரவாயில்லியா...” கேட்டுக்கொண்டே வந்தாள். நல்ல வெயில். வேர்த்து விறுவிறுத்தது ஒரு பக்கம் என்றாலும் சலாபத்தாய் பேச மனம் கூடவில்லை. “ உம்” “ ஆம்...” ஒன்றிரண்டு வார்த்தைகளில் அவன் நிறுத்திக்கொண்டது கூட அவளுக்கு வருத்தமில்லை, பதிலுக்கு மலரை விசாரிப்பான் என்று நினைத்தது ஏமாற்றமாக இருந்தது.

மந்தாரக்குப்பம் காலனிக்கு வந்து ஊருக்குள் நுழையும் முன் இருபக்கமும் உயர்ந்த நீளமான அணை. அணைக்கும் நேரே லாரிகள் வந்து திரும்பித் திரும்பி குண்டும் குழியுமாக மோசமாகக் கிடந்தது. தேங்கி நிறுத்தினான். லாரி ஒன்று முடக்கு திரும்பி புழுதியை வாரி மூஞ்சியில் அடித்துவிட்டுப் போனது.

அதிசயித்துப் போய்விட்டாள் “ என்னாப்பா இம்மாம் பெரிய அணையா இருக்கு. எப்பேர்ந்து வேல நடக்குது. மொதல்ல ஊர வுட்டு எட்டக் காலி பண்ணிக்கிட்டு வாங்கப்பா. மண்ணப்போட்டு மூடனாலும் மூடிடுவானுவோ போல்ருக்கு.”

ரோடெல்லாம் பொக்குழி பாய்ந்து கிடந்தது. மரங்கள் எல்லாமும் வெட்டி விட்டதால் எங்குமாய் படிந்து கிடந்த புழுதி, லாரிகள் கடந்து

போகிறபோதெல்லாம் குபீரென்று எழுந்து எழுந்து வளைத்துக்கொண்டது. மிகவும் சிரமப்பட்டு ஒதுக்கி, ஒதுங்கி சைக்கிளை தெருவுப்பக்கம் திருப்பினான்.

பூமா பார்த்துவிட்டாள். அதுவும் அத்தையை உட்கார வைத்துக்கொண்டு சதாசிவம் வருவது அவளுக்குத் தாங்க முடியாத சந்தோஷம். உற்சாகத்தில் உள்ளே திரும்பிக் கத்தினாள் " எம்மா அத்த வருது..."

உள்ளே ஓடி உட்காருவதற்கு விரித்துப்போட பாயை எடுத்தவள் உதறினாள். வீட்டுக்குள் பெட்டி மேல் கிடந்த பாயிலும் ஊருப்பட்ட புழுதி பறந்தது.

பட்டப்பகல் போன்று எட்டின வரைக்கும் வெளிச்சம். வெளிச்சம் பாய்கிற இடத்திலெல்லாம் பொன்னிறத்தில் பொங்கி எழுகிற புழுதி. வெட்டவும் கொட்டவுமாய் தடதடப்புகளோடு கூடிய உறுமல் சத்தம். கியாமியாவென்று புரியாத மொழிகளில் ஓட்டிகளின் குரல்கள். லாரிகளின் திணறல்கள். தெற்குவெளியில் ஏதோ ஒரு அதிசய உலகம்போல் இயங்கிக்கொண்டிருந்தது.

" என்னாம்மா ராத்திரியிலே கூட வுடாம வெட்றானுவோ..." காணிக்கல்லின் மீது ஏறி நின்று பார்த்த தங்கப்பழம் ஆச்சரியம் குறையாமல் கேட்டாள்.

" தலையாலயா வெட்டிக் கொட்றானுவோ ராவுன்னு பகல்னு பாக்கதுக்கு. எல்லாம் மிஷினு... சரி வா அத்த. அப்பா சாப்புடக் கூப்புட்டுது..." பூமா கூப்பிட்டாள்.

சோற்றைப் போட்டு, கரண்டி கொள்ளாது கோழிக்கறியை அள்ளி வைத்தாள். தங்கப்பழத்தைக் கண்டதும் ராசோக்கியத்தின் ஏற்பாடுதான். ' ஒரு சாவக்குஞ்சிய தட்டி ரசம் வைய்யிங்க. போவும் போது எதஎதத்தான் தூக்கி எடுத்துக்கிட்டுப் போறது.'

" நீனும் குந்தி சாப்புடு பூமா..." சொல்லியபடி தங்கப்பழம் நிமிர்ந்தாள். புழுதி படிந்து கம்மலான விளக்கு வெளிச்சத்தில் ஒரு தேவதையைப் போல பூமா நின்றுகொண்டிருந்தாள். இத்தனைக்கும் பெரிய மெனக்கிடல் எதுவுமில்லை. வழக்கமான ஒரு குளியல். துவைத்த பாவாடை தாவணி சுற்றல். பிறகு ஒரு சாதாரண சீவல். அத்தை கொண்டுவந்திருந்த ரெண்டே ரெண்டு முழம் பூதான். துணிச்சுருளில் வைத்திருந்த ஈரக்கீரையை உதறினால் தழைகளில் தெறிக்கிற ஒரு சிலிர்ப்பைப் போல சின்னதான ஒரு அலங்காரத்தில் பூமாவுக்கு அழகு பூசிக்கொண்டது.

சாப்பிட்டு முடிந்து வந்து குந்தினாள். லேசாய் செருமியபடி ராசோக்கியந்தான் ஆரம்பித்தார் " அதாம்மா ஏக்கருக்கு எம்பளதாயிரம்னு கணக்குப் பண்ணி பூராத்தையும் குடுத்துட்டானு வோ. வூட்டுக்கு மட்டுந்தான் பாக்கி. கூடிய சீக்கிரம் அதியும் குடுத்து, அங்காண்ட சண்முகா கொட்டாய்க்கும் மேற்கால நெரவி ரெடியா இருக்கு, அங்க அனுப்பிருவானுவோ போல்ருக்கு. இதுல வூட்டுக்கு ஒரு ஆள் வேலங்கற சிக்கல்தான் குறுக்கால இருக்கு..."

அடுத்து ஏதோ சொல்வதற்கு ராசோக்கியம் தயங்குவது மாதிரி தெரிந்ததும் பாஞ்சாலை சொன்னாள் " காசிய குடுத்துருக் கான்னு அவங் காட்ற எடத்துல குடிசையப் போட்டு குந்திக்கிட்டு எல்லாத்தயும் கால்மேல கால் போட்டுக்கிட்டு வாங்கி தின்னா எப்பிடி கட்டுபடியாவும். வூட்ல இருக்கற புள்ளாண்டாரு எப்பிடியும் வேல குடுத்துடுவாங்கற தெம்புல இருக்காரு. கையில இருக்கறத வாணம் வுட்டுட்டு, நாளைக்கி வூட்ல இருக்கிற பொட்டப் புள்ளய கட்டிக்குடுக்கறப்ப ஒன்னப் புடி என்னப் புடின்னு நிக்கிணும். அதான் அங்க முதனை பக்கம்னாச்சும் ரெண்டு காணி தரய வாங்கற மாதிரி பாருங்க. புள்ளாண்டாருக்கு வேண்ணா இங்க ஒரு குடிசையைப் போட்டு வுட்டுடுவோம். நமக்குத் தெரிஞ்ச தொழிலு ஒரு பயிர் பச்ச வைச்சிக்கிட்டு நாம அங்க கெடந்துடலாம். அப்பறம் ஆண்டவன் வுட்ட வழி."

சதாசிவம் எங்கோ வெளியில் போயிருந்தது, பாஞ்சாலைக்கு பேச சல்லீசாக இருந்தது. முதனையில் போய் தங்குகிற பேச்சு கிளம்பியதும் பூமாவுக்குள் லேசான தெளிவு. மலரின் நேசத்தில் மண்ணை இழக்கிற வலியை மறந்துவிடலாம் என்கிற நம்பிக்கை.

ராசோக்கியமும் ஆமோதிக்கிற மாதிரி சொன்னார் " அங்க மேற்குத் தெருவுல சிவப்பிரகாசம் அண்ணன் இருப்பாரு பாரு, அவுருகிட்ட நாஞ் சொன்னன்னு சொல்லு. சித்தர ஏரிப்பக்கம் பத்து ரூவா கூட இருந்தாலும் பரவாயில்ல, ஒரு காணியா இருந்தாலும் ரெண்டு காணியா இருந்தாலும் பாக்கச் சொல்லு. வாரம் பத்து நாளையில இந்த ஊர காலி பண்ற சேதி தெரிஞ்சிக்கிட்டு வர்றன்..."

சதாசிவத்திற்காகப் பூமா காத்துக்கொண்டு நின்றாள். அத்தை வந்திருந்தும் அவனுக்கு எப்போதும் போல ஒரு பாராமுகம். ' சரி, வர்ற படி வரட்டும்' என்று சோற்றைப் போட்டுக்கொண்டு குந்தினாள். கொஞ்ச நேரம் யோசனையாக இருப்பதுபோல் மௌனம் காத்துவிட்டு தங்கப்பழம் பேசினாள் " அப்பறம் மலரு சாதகத்த போட்டுப் பாத்தா தேவலாம்னு

தோணுது. தம்பிகிட்டயும் கலந்து பாருங்க. அப்பிடி நெலம்பலத்த வாங்கிக்கிட்டு ஒண்ணோட ஒண்ணா கெடந்துட்டுப் பூடலாம். என்னாதான் நீங்க சொல்ற மாதிரி நமக்குன்னு ஆக்கன சோறா இருந்தாலும் காலாகாலத்துல சாப்புட்டா தான நெல்லா இருக்கும்.”

பாஞ்சாலை, ராசோக்கியம் இருவருமே எதாவது பணங்காசை கேட்டுத்தான் வந்திருப்பாள் என நினைத்திருந்தார்கள். திடுமென இப்படித் திருமணப் பேச்சை எடுப்பாள் என எதிர்பார்க்கவில்லை. இது ஒன்றும் புதிய செய்தியாக இல்லாவிட்டாலும் கூட திடீரென அங்காண்டையும் இல்லாமல் இங்காண்டையும் இல்லாமல் ஊர் எடுக்கற பிரச்சினை நடுவில் நிற்கிறபோது வந்ததுதான் அவர்களைத் திகைக்கச் செய்தது.

பூமாவுக்கு இந்தச் சேதி ரொம்பவும் பிடித்தமானதாக இருந்தாலும், முதனை, மலர் என்றாலே ஒதுங்குவதும் தவிர்ப்பது மாக இருக்கிற அண்ணங்காரனை நினைக்கப் பயமாக இருந்தது. ஆனாலும் மலரின் பேச்சும் சிரிப்பும் அவனை சரி செய்து விடும் என்கிற நப்பாசையும் இருந்தது.

வெகுநேரம் கழித்து பாஞ்சாலைதான் பேசினாள் “ அவரு தான்... புள்ளாண்டாருக்கு வூட்ல கொஞ்சம் வேகம். நெய்வேலிக்காரன் ஊங்கறதங்காட்டியும் வூட்ட காலி பண்ணி வாரிச்சுருட்டிக்கிட்டு எட்டப் போனாதான் சீக்கரம் வேல குடுப்பானுவோன்னு இங்க ஓதி வுட்ருக்கானுவோ போல்ருக்கு. அதக் கேட்டுக்கிட்டு வந்து கெந்து பாயறாரு. இந்தப் பேச்ச எடுத்தா என்ன சொல்றாரோ.”

பாஞ்சாலை சொல்லிக்கொண்டு இருக்கும்போதே கனகராசு வந்தார். “ வாங்க. விருந்தாடி எப்ப வந்துது?” குந்தினார்.

“ மத்தியானமா வந்தன் அண்ண. பெரிய பாப்பாகிட்ட கேட்டன். அப்பா சந்தைக்கி போயிருக்கார்னு சொல்லிச்சி...” தங்கப்பழம் சொன்னாள்.

“ அந்தக் கதய எதுக்குக் கேக்கற... சுழி சுத்தம் பாத்து, கொம்பு கொளம்பு சீர் பாத்து மெனக்கிட்டு பாத்து வாங்கி குடுத்த மாடுவோ எல்லாம். இன்னைக்கி அதது எங்க இத இழுத்துப் பறிச்சிக்கிட்டுப் போறதுன்னு, நம்பகிட்ட வந்து நிக்கிதுவோ. எல்லாம் குத்தங்கொற இல்லாத, குடும்பத்துக்கு ஏத்த மாடுவோ. ஒவ்வொன்னையும் சந்தையில வெல காட்றப்ப மனசே ஆவமாட்டங்குது. அதோட பூரா அடிமாட்டுக்காரந்தான் பின்னம் பத்து ரூவா சேத்துக்குடுக் கறான்னு தள்ள வேண்டிதாருக்கு. எந்த சென்மத்துல நா செஞ்ச பாவமோ தெரியில. இந்தத் தொழில்ல வந்து மாட்டிக்கிட்டன்.” கனகராசு மெய்யாலுமே வருத்தப்பட்டார்.

“ வேற என்னா அண்ண செய்யமுடியும். கொல்லக்காடும் போயி, மாசூல் வைக்கறதும் போயி, மாட்ட வைச்சிக்கிட்டு மட்டும் என்னா செய்ய முடியும்” தங்கப்பழம் வருத்தப்பட்டாள்.

கனகராசு திடுமென ஞாபகம் வந்தவர் போல் பூமாவிடம் கேட்டார். “ ஆமா பூமா, வண்டி மாட்ட வுடு. பசுமாடும் ஓஞ் செறாப்புல வாங்கன ஆட்டுக்குட்டிவுளும் இருந்துத. சொல்லன். கொம்பாடிகுப்பத்துல ஒருத்தரு கை வளப்புக்கு கேட்டாரு குடுத்துடுவம்.”

பதறியபடி பூமா சொன்னாள் “ எங்க ஆட்டு மாட்டுக்குலாம் நீங்க ஒண்ணும் ஆளு இட்டார வாணாம். நாங்க குடும்பத்தோட முதனைக்கி போறம். கூடவே ஓட்டிக்கிட்டு போறம். அப்பிடி இல்லன்னா எங்க பூச்சிகிட்ட வாரத்துக்கு வுட்டுக்கறம்.”

“ என்னா அண்ண, முதனைக்கிப் போறதுன்னு முடிவே பண்ணிட்டிங்களா...” ஆச்சரியமாய் கேட்டார்.

“ போவாம என்னாடா பண்றது. பொறந்ததுலேர்ந்து செஞ்சிக்கிட்டு இருக்கற தொழிலு. இன்னைக்கி திடீர்னு வுட்டுட்டு என்னா பண்றது. எனுமோ வாழ்ந்த மண்ண வுட்டுட்டு வந்தாரங் குடியாப் போவுணும்னு தலையில எழுதிட்டான், யாரால மாத்த முடியும். போயி கொற காலத்தையும் மண்ணுல ஒழப்பறிச்சிக்கிட்டு கெடந்துட்டுப் போவ வேண்டிதுதான்...” பெருமூச்சி விட்டுக் கொண்டே சொன்னார்.

இடையில் எதுவும் பேச்சு இல்லை. கொஞ்ச நேரம் கழித்து பாஞ்சாலைதான் சற்று யோசித்தவாறு கனகராசைப் பார்த்துச் சொன்னாள் “ புள்ளாண்டாருக்கும் கல்யாணத்த வைச்சிக்கலான்னு சேதி எடுத்தாந்துருக்கு அண்ணியும்... என்னா மனப்போக்குல இருக்காருன்னு மொவங்காரரத் தொட்டுப் பாரன்.”

பட்டென்று கனகராசுக்கு முகமலர்ச்சி. “ நெல்ல சேதிதான். முதனைக்கிப் போறதுன்னு முடிவெடுத்தப்பறம், இத முடிச்சிக்கிட்டு போனாதான் நெல்லது. நீங்களும் அங்க போயி தங்கறதுக்கும் ஒரு புடிமானமா இருக்கும். மாத்துக்குடியிருப்புல ஒரு ஓட்டக் கட்டிக்கிட்டு சனங்களோட சனங்களா அவங் குடும்பத்தையும் இங்க வைச்சிக்கலாம்.”

வெளியே சதாசிவம் வருகிற அறிகுறி தென்பட்டதும் கப்சிப் என்று அது பற்றிப் பேசிய அடையாளமே இல்லாதமாதிரி குந்தியிருந்தார்கள். ஏதும் பேசாமல் பூமா சாப்பாடு போட்டாள். “ சாப்புடஞ் சித்தப்பா...”

கேட்டுக்கொண்டே குந்தினான்.

“ மாங்கா வத்த போட்டு, சின்னம்மா கருவாட்டுக் கொழம்பு வைச்சிருந்துது. சாப்புட்டுதான் வந்தன்.” சொல்லிக்கொண்டிருந்த கனகராசை பாஞ்சாலை சாடையாகப் பார்த்து சைகை காட்டினாள்.

ராசோக்கியம் திண்ணையில் போய் முடங்கிக்கொண்டார். பாஞ்சாலை பாயை விரித்துப் போட்டுக் கொண்டிருந்தாள். தங்கப்பழம் ஒண்ணுக்குப் போவதுபோல் தோட்டத்துப் பக்கம் போனாள். சாப்பிட்டு முடித்து எழுந்ததும் கனகராசு சொன்னார் “ அதாம்பா, அத்த... மலரு கல்யாணத்த பத்தி ஒங்கிட்ட...” சொல்லி முடிக்கும்வரை காத்திராதவன், யோசிக்காமல் பட்டென்று சொன்னான் “ வேல மொதல்ல கெடைக்கிட்டும். அப்பறமா கல்யாணத்த பத்தி பாப்பும்.”

*

42

“ எ ங்க அண்ண போய்ட்டு வர்றீங்க...” வண்டியில் குந்தியிருந்த சிகாமணி கேட்டதும், கைக்கயிற்றைப் பிடித்து இழுத்து நிறுத்தினார் கரி படாச்சி.

“ மண்ணு வெட்ற எடத்துக்குதான் போய்ட்டு வந்தன். அய்னா கோயில மட்டும் திட்டா வுட்டுட்டு, சுத்திலும் வெட்டிக்கிட்டு இந்தப் பக்கமாதான் வர்றானுவோ. அவனுவோ என்ன சரசரன்னு இன்னம் வாரம் பத்து நாளையில ஊருகிட்டயே வந்துடுவானுவோ போல்ருக்கு.” முழங்கால் வரை புழுதி ஏறி அறிவழகன் வேச்சார்லாக சொல்லிக்கொண்டிருந்தான்.

“ பட்டுன்னு அய்யனாருகிட்ட எப்பிடி கைய வைப்பானுவோ. துஷ்டக்காரங்கிட்ட அவசரப்பட்டா கையக் கால அடிச்சிடும்” அய்யனாரின் பெருமையில் கரி படாச்சி ஆழ்ந்துபோனார்.

“ அதுலாம் இல்ல மாமா. எடுத்ததும் பட்டுன்னு சாமி குதிரைய எல்லாத்தையும் ஒடைச்சி அள்ளிக் கொட்டிட்டான்னா மக்களுக்கு திக்குங்கும். சாமிக்கே இந்த கதின்னா நமக்கு எந்த கெதியில வுடப்போறானோன்னு சனங்க முழிச்சிக்கும். கேள்வி கேட்கும். மாத்துக் குடியிருப்புல இதேமாதிரி கோயில கட்டிக்குடுன்னு கறார் பண்ணும், சிக்கல உண்டாக்கும். இதுலாம் அவனுக்குத் தேவை யில்லாத வேலதான. சுத்தமா இப்ப புடிச்சி வெட்டிக்கிட்டு வர்ற மட்ட ஊருகிட்ட கொண்டாந்து வுட்டு ஊரக் காலி பண்ணிட்டு கடைசியாதான் கோயிலு கிட்டப் போவான்.” வண்டிக்குள்ளிருந்து சிகாமணி விளக்கம் கொடுத்தான்.

“ அது இருக்குட்டும். வண்டியக் கட்டிக்கிட்டு எங்க கெளம்பிட்டிங்க?” அறிவழகன் கேட்டான்.

“ எங்க ராசாமணி அத்த வூட்டுக்கு. வெறுவு இல்லன்னு சேதி வுட்ருக்கு. ஏற்கனவே பணம் பொரட்டிக்கிட்டுப் போவலாம்னு வந்தது. பறியிலன்னதும் கொஞ்சம் வேகத்துல போச்சி. சரி இதையாவது எந்த மறிச்சியிலாவது பாத்து அள்ளிக்கிட்டு போவலாம்னுதான்... எதாவது சேதியா அண்ண...” கேட்டான்.

“ புவனகிரியில கூட்டமாம். குறள்மணி அண்ணன் வர்றாராம். எப்பிடியும்

இன்னம் ஒரு வாரத்துல வூட்டுக்கும் பணத்த குடுத்துடுவானுவோன்னு நெனைக்கிறன். பணத்த பட்டுவாடா பண்ணிட்டான்னா அவ்வளவுதான். அதுக்கப்பறம் எதியும் பாக்கமாட்டான். ஊரக் காலி பண்ற வேலையில எறங்கிடுவான். அதுக்குள்ள கலக்டர கிலக்டர போயி பாக்கலாமான்னு அண்ணங் கிட்ட ஒரு ஓசன கேட்டுட்டு வரலாம்னு பாத்தன்.”

“ அதுக்கென்னா போவும் அண்ண. சும்மா மொளக்குச்சி அளவுக்கு அள்ளிப் போட்டு அனுப்பிவுட்டா, இவுரு போயி எறக்கி வுட்டுட்டு வந்துடுவாரு. அதுக்குள்ள நீங்க உத்தண்டராயருக்கு ஒரு சேதிய அனுப்பி வுடுங்க. இது வேற நாம தனியா தனியா போறத அவுரு தப்பா நெனைச்சிக்கப் போறாரு...” போய்க் கொண்டிருந்த வண்டியிலிருந்து சிகாமணி சொன்னான்.

கொல்லையை விட்டு, ஊருக்குள் அறிவழகன் நுழைந்ததும் ஏதேச்சையாய் தோட்டத்தில் பூமாதேவி நின்று கொண்டிருந்தாள். “ பூமா ஒங்க கெணத்த ஒட்டி, வெட்டு கெழக்க போவுது. நாள மறா நாளைக்குள்ள அடுத்த வெட்டு ஆரம்பிச்சி, கெணறு கொல்லையெல்லாம் தூக்கிடுவானுவோ.”

பூமாவுக்கு சொரேர் என்றது. “ ரெண்டு நாளைக்கி மின்னகூட போயி பாத்தம் மாமா. குட்டை நேருக்கு கெழக்க போச்சி. அதுக்குள்ளியா இந்தாண்ட வந்துட்டாங்க...”

“ போயிப் பாரன். திட்டா அய்னா கோயில வுட்டுட்டு, இப்ப வேற புதுசா ரெண்ட கொண்டாந்து வுட்டு, வெட்டிக்கிட்டு போறத. ரெண்டே கொட்டுல லாரி ரொம்பிப் போவுது.” கிளம்பினான்.

பூமாவுக்கு உடனடியாக கிணற்றை, கொல்லையைப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது. காய்கறி வாங்க மந்தாரக்குப்பம் போயிருக்கும் அம்மா வரட்டும் என்று உள்ளே போனாள்.

அறிவழகன் நாலு தப்படி கூட எடுத்துவைத்திருக்க மாட்டான். கணேசன் தலையைச் சொறிந்தபடி முன்னால் வந்து நின்றான். “ ரெண்டாவது பீரிடு எல்லாருக்கும் பணம் வந்துருக்குது. ஆனா எனக்கு வல்லப்பா.” இன்னம் ஊற்றிக் கொள்ளாமலிருந்ததில் குரல் தெளிவாக இருந்தது.

“ ஏற்கனவே ஒரு லட்சம் வாங்கிட்டிங்க இல்ல மாமா. காகாணிக்கு எப்பிடி ஒரு லட்சம் வரும்னு யோசிச்சி பாக்குணும். கடைசியா கெழக்கு தெருவு

காளிங்கராயருகிட்ட குடுத்திய அரக் காணி, அது இன்னம் பட்டா மாறாம ஒங் கணக்குல இருந்துருக்கு போல்ருக்கு. அதனால அவுருக்கு வரவேண்டிய பணம் ஒனக்கு வந்துருக்கு. அவுரு வந்து எழுதிக்குடுத்து பாத்தப்பறந்தான் இந்த வெளக்கம் புரியுது. சரி குடுத்த பணத்த எதுக்கு வசூல் பண்ணிக் கிட்டு, குடுக்க வேண்டியதுல கழிச்சிக்கிலாம்னு வுட்ருக்கான். அநேகமா வூட்டுக்குக் குடுக்கற பணம் கூட ஒங்குளுக்கு கம்மியா தான் வரும். பாத்து செலவு பண்ணு மாமா...” அறிவழகன் விலாவாரியாகச் சொன்னான்.

“ அதாம்பா நானும் பணம் கைக்கி வந்த நாளா, தலையால தண்ணி குடிச்சிக்கிட்டு கெடக்கறன். எதியும் அம்மாஞ்சாமானியமா காதுல ஏற்குல. ஏதோ நா, அடிச்சிக்கிட்டுக் கெடந்ததால, ஒண்ணுக்கு முக்காலானாச்சும் பணம் தப்பிச்சிது. இல்லன்னா பூராத்தையும் வாணம் வுட்டு ஆயிருக்கும்...” சுதாரித்து பணத்தை காபந்து பண்ணிய சாமர்த்தியத்தில் செல்லப்பாங்கி பேசினாள்.

அறிவழகன் வீட்டுக்குப் போகத் திரும்பினான். முத்துக்கண்ணு ஆயிதான் சொல்லிக்கொண்டு வந்தாள். “ என்னாப்பா வூட்ல விருந்தாடி வந்துருக்கு. இங்க நின்னு பேசிக்கிட்டு இருக்கற...”

“ வா ப்பா...” ராஜவள்ளியைப் பார்த்துக் கூப்பிட்டாலும் அறிவழகனுக்கு உள்ளுக்குள் இருந்த அதிர்ச்சி குறையாமல் படபடத்துக் கொண்டிருந்தது. வெ ளி யே டி. வி.எஸ். 50 ம் நிற்க வில்லை. அதே சமயம் வீட்டின் உட்புறங்களிலெல்லாம் கண்கள் அவசரமாக ஓடித் தேடின.

“ வர்றன் அண்ண...” நிமிராமல், நேரிட்டுப் பார்க்காமல் தங்கச்சி சொன்னதும், அவனுக்கு கூடுதல் குழப்பத்தை ஏற்படுத்தியது.

அடிக்கடி ஊருக்கு வருவது கிடையாது. வந்தாலும் இப்படித் தனிவழியாக வருவதும் இல்லை. மாப்பிள்ளையும் நெய்வேலி வேலைக்குச் செல்பவர். அதோடு வீட்டுக்காவல் படை என்கிற சமூக சேவைப் பணியில் இருப்பதால் வேலைக்குப் போய்விட்டு வந்திருக்கிற ஓய்வு நேரங்களிலெல்லாம் போலிஸ்காரரை போன்று காக்கி உடையை மிடுக்காகப் போட்டுக்கொண்டு சாலைப் பாதுகாப்புப் பணியில் நிற்பவர். ராசவள்ளியும், முத்தாண்டிக்குப்பம் பள்ளிக்குப் போய்விட்டு வந்து ஒழிந்த நேரத்தில், சனி ஞாயிறுகளில் டியூசன் எடுப்பதால், பக்கத்தில் நாலைந்து மைலில் புதுக்குப்பம் ரவுண்டானா பக்கம் தான் வீடு என்றாலும் வருடத்திற்கு

ஒருமுறை இருமுறைதான் தாய்வீடு வருவது.

“ ஏம்ப்பா... பையன் எங்க? மாமன் வல்லியா...” சந்தேகத்தோடு கேட்டான்.

“ அவுரு கூட வேல செஞ்சவருக்கு ஒடம்பு சரியில்லன்னு, அப்போல்லோ ஆஸ்பெட்லுக்கு விடியக்காலம்பற இட்டுக்கிட்டுப் போயிருக்காரு. தம்பிக்கு லீவு போட முடியாது. நாந்தான் லீவு போட்டுட்டு வந்தன்.” சொல்லிக்கொண்டிருந்த ராசவள்ளியை காசாம்பு தொய்ந்த முகத்துடன் பார்த்தாள்.

அறிவழகனைப் போலவே நல்ல நிறம். சிரித்த முகம். பேசினால் இன்னும் சிறிது நேரம் கேட்கலாம் என்கிற மாதிரி பேசுவாள். கலகலவென வீடு நிறைந்தவளாய் இருந்தவள். கட்டிக் கொடுத்த பின்பும், இங்கு வருகிறபோதெல்லாம் வீடு பழைய கலகலப்பில் மிதக்கும். ஆனால் எந்த உற்சாகமும் இல்லாது குந்தியிருக்கும் அவளைப் பார்க்கப் பார்க்க காசாம்புக்கு எதுவோ இடித்தது.

“ என்னாப்பா, சொல்லிக் குடுக்கற வாத்தியாரு ஒனக்கு லீவு கெடைக்கிது. படிக்கிற பையனுக்கு லீவு கெடைக்கலன்னு இட்டாராத வந்துருக்க.” ரங்கநாதுக்கு பேரன் மேல் ஓடிக்கொண்டிருந்தது.

“ ஜவகர் பள்ளிக்கொடம்லாம், எங்க பள்ளிக்கொடம் மாதிரி இருக்காது. சட்டதிட்டம் அதிகமா இருக்கும்.”

அறிவழகன் நேராகவே கேட்டான் “ வூட்ல எதாவது சண்டை யாப்பா...”

“ அதுலாம் இல்லண்ண. தனியா வந்தத வைச்சி சொல்றியா. நெலம் பலம் எடுக்கற சேதி கெடைச்சிது. அதான் சும்மா பாத்துட்டுப் போவலாம்னுதான் அண்ண வந்தன்.”

மழுப்புவது போல் தெரிந்தது அறிவழகனுக்கு. “ சரிப்பா. நீ வூட்ல இரு. நா புவனகிரி வரைக்கும் போய்ட்டு வரணும்.” கிளம்ப ஆயத்தமானான்.

அவள் முகத்தில் லேசான ஏமாற்றம் பரவுவதைக் கண்டதும் அறிவழகன் திரும்பக் கேட்டான் “ மாமா பணம் கிணம் ஏதாவது கேட்டு அனுப்பி வுட்டாரா...”

அவளால் உடனடியாகப் பதிலேதும் சொல்ல இயலவில்லை. அவளின் தேக்கத்தைப் பார்த்து காசாம்புக்கும் ரங்கநாதுக்கும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. சத்தம் போட்டார் “ ஏம்மா பணம் கேட்டாரு கொண்டாருன்னு எங்கிட்ட மின்னியே சொல்ல வேண்டிதான...” அறிவழகன்

பக்கம் திரும்பினார். “ நானும் ரெண்டு பேரும் வேலையில இருக்கற எடத்துல பணங்காசியா தேவப்படும்னு அலட்சியமா இருந்துட்டன்.”

அதே வேகத்தில் அறிவழகனிடம் சொன்னார் “ இங்க பாருப்பா. ஒரு பணங்காசி வந்துருக்கற எடத்துல, கேட்டாத் தேவலாம் குடுத்தாத் தேவலாம்னுதான் நெனைக்கும். நம்ப வூட்டுப் புள்ளைக்கி தெரியும் பொழைக்கிற பொழப்ப வுட்டுட்டு வந்த பணம்னு. மத்தவங்களுக்கு அதுலாம் தெரியாது. அதுக்காக அவரு மேல நாம வருத்தப்படவும் முடியாது. பொறந்த வூட்ட பழியா அய்யோன்னு நெனைச்சிகிட்டு, புகுந்த வூட்ல துணிய விரிச்சிப் போட்டு பொறந்த பொண்ணு மொடங்கனா, பெத்தவங் குடும்பம் வெளங்காதும்பாங்க. ஏம்பா அதுகிட்ட ஒரு அம்பதாயிரத்த பணத்த எடுத்தாந்து குடு.”

ரங்கநாது சொல்லிமுடித்தபோது ராசவள்ளியின் கண்கள் கலங்கியிருந்தன. பணத்தை எடுக்க உள்ளே போனான். “ இந்தா அண்ண...” கூப்பிட்டு ஹேண்ட்பேக்கிலிருந்து நூறு ரூபாய் கட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். “ அவுரு கொஞ்ச நாளா, நா அப்பியே பெரிய வண்டி கேட்டன். சின்ன வண்டிதான் பூட்டிக் குடுத்தாங்க. பெரிய வண்டி இருந்தா நெல்லாருக்கும்னு சொல்லிக் கிட்டு இருக்கறாரு. நானும் வண்டி வேண்ணா வாங்கிக்க, எதுக்கு பழைய கதையெல்லாம் இழுக்கறன்னு கேட்டா, மாமனார் வூட்ல இருந்து வந்தாதான் வண்டிக்கி பெருமன்னு சொல்றாரு. மறிச்சிப் பேசனா கோவப்படறாரு.” சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

இடைவெளி விட்டு திரும்பவும் அவளே தொடர்ந்தாள் “ ஒங்க கஷ்டமும் எனக்குத் தெரியும். அதனால பி.எப்ல அவுருக்குத் தெரியாம லோனு போட்டு பத்தாயிரம் பணம் எடுத்தாந்துருக்கன். கூட நீங்க கொறயிற பணத்த போட்டு அவுருக்கு ஒரு பெரிய வண்டி வாங்கிக் குடுங்க.” கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

“ ஏம்மா இப்பிடிலாம் இருக்கற. நீ நேரா ஒரு பெரிய வண்டிய வாங்கிக் குடுன்னு சொன்னா வாங்கிக் குடுத்துட்டுப் போறம். கஷ்டம் கெடக்குது. இதே இன்னொரு ஆம்பளப் புள்ளயா இருந்தா பங்கு பாகம்னுதான போயாவணும். அவுருக்குத் தெரியாம இது மாதிரி லோனு கீனுன்னு பணத்து விஷயத்துல செய்யாத. இந்தப் பணத்தையும் எடுத்துக்கிட்டு போயி அரவந் தெரியாம லோன கட்டு. நாள நாள மறாநாள்ல ஒரு பெரிய பைக்க கொண்டாந்து அண்ணன் ஒங்கூட்ல வுட்டுட்டு வருவான்.”

“ என்னத்தம்மா பாக்கப் போற. அதான் எல்லாத்தையும் வுட்டு தல மொழுவியாச்சி. அப்பறம் கொல்லிய வெட்றான், கெணத்த இடிக்கிறான்னு அதப் போயி பாத்துட்டு பகீர் பகீர்னு...” பாஞ்சாலை போடுகிற அணை எதுவும் பூமாவிடம் செல்லுபடியாகிற மாதிரியில்லை. வலிந்து கிளம்பியதும் என்ன நினைத்தாளோ பாஞ்சாலை “ நானும் வர்றன்” என்று கிளம்பினாள்.

“ நீனுமா. வாணாம்மா. நீ வந்து பாத்துட்டு அய்யோன்னு குந்திட்டினா அவ்வளவுதான். ஒன்ன இழுத்துப் பறிச்சிக்கிட்டு எங்களால இந்த நேரத்துல மாரடிக்க முடியாது. நானே போவாம வுட்டாலும் வுட்டுடுறன்.” பூமா அப்படியே அருகால் படியில் குந்திவிட்டாள்.

பாஞ்சாலைக்குத் தன் நிலை புரியும். இருந்தும் மனங் கேட்காமல்தான் சொன்னாள். பூமா மறுத்துவிட்டு, கறாராய் குந்தியதும் “ சரிசரி நா வல்ல... நீ போ...” வழிவிட்டாள்.

பூமாவுக்கு அவசரம் தொற்றிக்கொள்ள கிளம்பினாள். நினைவு வந்தவளாய் பாஞ்சாலை சொன்னாள். “ எம்மா, கெணத்த ஒட்டா பைப்பு தண்ணி ஊத்தற எடத்துல நாலு மூல சவுக்கமா மஞ்ச எழைக்கற கல்லு ஒண்ணு கெடந்துது பாரு. மறக்காம எடுத்துக் கிட்டு வா. எழைக்க எழைக்க சந்தனமாட்டம் கொழையும் மஞ்சளு...”

பெரும்பாலான நேரம் வேலை வேலை என்று கொல்லை யிலேயே கிடந்துவிடுவதால், பாஞ்சாலைக்குக் குளியலும் கொல்லை யில்தான். இறைப்பே இல்லையென்றாலும் குளிப்பதற்காகவே இஞ்சினை பூட்டிவிடுவார். திடுதிடுவென வேகமாய் வந்து விழுகிற தண்ணீரில் தலையைக் காட்டி... உடம்பைக் காட்டி... ஒத்தடம் கொடுப்பது போன்று இன்னம் கொஞ்ச நேரம் நின்றால் தேவலாம் என்கிற மாதிரியிருக்கும். குளித்து முடித்து கிணற்றை ஒட்டிக் கிடக்கும் சதுரக்கல்லில் மஞ்சளை வெண்ணெய் போல் இழைத்து முகத்துக்கு அப்பி, மஞ்சள் கயிற்றுக்குப் பூசி... கொல்லை யிலிருந்து வீட்டுக்குள் நுழையும்போது லட்சுமியே நுழைவது போல இருக்கும்.

எங்கும் ஒரே புழுதி. மடார் மடார் என்று சத்தம். கொத்திக் கிழித்து குடலைப்பிடித்து இழுக்கிற கழுகுகள் போன்று, வெட்டு இயந்திரங்கள் பள்ளமாக்குவதை அள்ளி எடுத்துப் போய் மேடாக்கப் பறக்கிற லாரிகள். ஒரு மட்டு பிடித்து கிழக்கே வெட்டிக்கொண்டு போகின்றன. அறிவழகன் மாமா சொன்னது போல் குதிரைகளுடன் அய்யனார் மட்டும் திண்ணையில்

குந்தி யிருப்பது போன்று திட்டாய் நிற்க, ஆவாரஞ் செடிகளும், குளமும் போன இடந் தெரியாமல் போய்விட்டிருந்தன. நிற்கிற கிணறும் மேடும் நாளையோ மறுநாளோ அடையாளமற்றுப் போய்விடும். பூமா திரும்பி கிணற்றுக்குள் பார்த்தாள். அடி ஆழத்தில் இறைக்காமல் கட்டுக்கிடையாய்ப் பாசி படிந்து கிடக்கிற தண்ணீர். நிறையச் செத்தைகளும் தென்னை மட்டைகளும் கிடந்தன. அடையாய் தண்ணீர் பரப்பில் புழுதி படிந்து கிடந்தது.

எத்தனையோ தடவை கிணற்றில் படிகளில் கால்வைத்து இறங்கியிருக்கிறாள். நீரில் மூழ்கிய படியில் நின்று மேல்படியில் துணியைத் துவைத்திருக்கிறாள். துவைக்கிறபோது சோப்பை தவறவிட்டு, அது உதிரும் ஆல இலையைப் போல அங்குமிங்கும் ஆடியபடி போய்த் தரையைத் தொடுவதற்குள் மூழ்கிப்போய் எடுத்து வந்திருக் கிறாள். சுற்றிச் சுற்றி தண்ணீர் அதிர தப்பட்டம் அடித்திருக்கிறாள்!

இஞ்சின் இருந்த இடத்தில் ஆயில் கசிந்து கருத்துக் கிடந்தது. கரித்துணிகளும் ஆங்காங்கே மாசிப்போய் கிடந்தன. பம்பு குழியில் பழைய கிரிஸ் டப்பா புழுதி படிந்து கிடந்தது. களத்தில் மாமரம் இருந்த இடம் வட்டமாய் அடிக்கட்டை மட்டுமே தெரிகிறது. அறுபட்ட ஓரப் பகுதிகளில் பிசின் பிதுங்கிக் காய்ந்திருந்தது. மரம் இருந்த நேருக்கு அண்ணாந்து பார்த்தாள். கிளைகளும் இலைகளுமாக மனக்கண்ணில், ஆகாயத்தில் விரிந்திருப்பது மாதிரி ஓர் தோற்றம். புளிப்பே இல்லாத பச்சரிசி மாங்காய். கொத்துக் கொத்தாய்க் காய்க்கும். குழம்பில் போட்டாலும் கரையாமல் கிடக்கும்.

லேசாய் காற்றடித்தது. கண்ணில் உயிரை வைத்துக்கொண்டு நின்ற தென்னைகள் சலசலத்தன. அவளையும் அறியாமல் மட்டை களின் நடுவே கூடுகள் நினைவுக்கு வந்தன. குருவிகளும் வந்தன. கூடவே சிகாமணியும் வந்தான்.

எப்படி வீடு வந்து சேர்ந்தாள் எனத் தெரியவில்லை. “ என்னாடி பேயறைஞ்ச மாதிரி வர்ற. அதுக்கு தான் எந்தக் கருமாந்தரத்தையும் போயி பாக்க வேணாங்கறது.”

*

43

“ இ தனால் ஊர் மக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால்... நாளை அதாவது **20.7.88** அன்று வீடுகளுக்கு, மனைகளுக்கு நில எடுப்புத்துறை அலுவலகத்தில் இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்யப்படுகிறது. அதுசமயம் தவறாமல் பணத்தை பெற்றுக் கொண்டு சரியாய் பதினைந்து நாட்களுக்குள் வீடுகளைக் காலி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அப்படிக் காலி செய்யத் தவறினால் காவல்துறையினரால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அப்புறப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இது உத்தரவு.” டும்... டும்.... டும்...

செவுளில் அறையாத குறையாய் அடித்துச் சொல்லிக் கொண்டே போனான். எல்லோர் முகத்திலும் கலவரம், பயம். ரோட்டில் நின்றிருந்திருப்பார் போலும், நாலைந்து பேருடன் உத்தண்டராயர் பதற்றத்துடன் வந்துகொண்டிருந்தார்.

அறிவழகன் சிகாமணி உத்தண்டராயர் என மூவரையும் சுற்றி ஒரு கூட்டமே கூடிவிட்டது. “ என்னப்பா, குறள்மணி என்னா சொன்னாரு. மேல்கொண்டு என்னா பண்றது” கரியர் கேட்டார்.

“ குறள்மணி அண்ணன வச்சி கலக்டர பாத்துப் பேசியிருக் கறம். நிர்வாகத்தோட பேசறன்னுருக்காரு. ஆனா எதுக்காகவும், பணம் வாங்கறத மட்டும் நிறுத்த வேணாம்னு சொல்லிட்டாரு.”

“ அப்ப கலக்டரும் ஒண்ணும் உறுதியாச் சொல்லுல” கரி படாச்சிக்கு குரல் கரகரத்தது.

“ கடைசி நேரத்துல அவுரும் கைய வுட்டட்டாருன்னா, வூட்டுக்கு ஒரு ஆளுக்கு வேலங்கறதுலாம் தண்ணியில எழுதின கதையாதாம் போயிடும்.” வடிவேல் விசனமாகச் சொன்னான்.

“ கலக்டரே வுட்டாலும் நாம வுடக்கூடாது. போராடணும்...” வழக்கத்திற்கு மாறாக உயர்ந்து ஒலித்தது அறிவழகனின் குரல்.

சிகாமணியை முந்திக்கொண்டு சந்தேகமாய் உத்தண்டராயர் கேட்டார் “

என்னாப்பா கலக்டரு எதாவது பின்வாங்கிடுவாருன்னு பயப்படுறியா...”

“ எனக்கென்னமோ பொசுக்குன்னு வூட்டுக்கு ஒரு ஆள் வேலய குடுத்துட மாட்டான்னு தோணுது அண்ண... அப்பிடியும் இப்பிடியும் ஆச்சக்காட்டி கடைசியில நம்பள கையக் கழுவிடுவானு வுளோன்னு பயமா இருக்கு. கலக்டர் மட்டும் யாரு. அவுரும் அரசாங்கத்துல வேல செய்றவர்தான். அவுரே நெனைச்சாலும் ஒரு அளவுக்கு மேல செயல்பட முடியாது. அதுக்குமேல நாமதான் நம்பளப் பாத்துக்கணும்.” அறிவழகனுக்கு ஏதோ அறிகுறி தெரிந்த மாதிரி பேசினான்.

“ என்னா அண்ண சொல்ற...”

“ ஆமண்டா. நாமதான் துணிஞ்சி போராட்டுத்துல எறங்கணும். வேறவழி...” கறாராகப் பேசிய அறிவழகனைக் குழப்பமாகப் பார்த்தார்கள்.

‘ **க** டலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் வேப்பங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த வடிவேல் த/ பெ பக்கிரி படையாச்சியாகிய நான் மேற்படி ஊரில் உள்ள கதவு எண் **31** கொண்ட கூரை வீட்டையும் **214/** கிவில் **12.5** ஏர்ஸ் எனது மனையையும் நிலக்கரி நிறுவனத் தோண்டுதல் பணிக்காக முழு மனதுடன் வழங்கச் சம்மதிக்கிறேன். அதற்கு இழப்பீடாக ரூ.**75,000** (ரூபாய் எழுபத்தைந்து ஆயிரம்) பெற்றுக்கொண்டு நாளது தேதி **(21.7.88)** யிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் **(5.8.88)** வீட்டைக் காலி செய்து, மேற்படி இதே வருவாய் எல்லையில் உள்ள மாற்றுக் குடியிருப்பிற்குக் குடிபெயர்ந்து கொள்கிறேன். தவறினால் அரசு எடுக்கும் எந்தவித நடவடிக்கைக்கும் கட்டுப்படுவேன் என்றும் மேலும் வீட்டை அப்புறப்படுத்துகிறபோது விட்டம், அருகால் போன்ற தளவாடப் பொருட்களின் சேதத்திற்கும், இடர்பாடு களுக்கும் நான் இழப்பீடு கோர மாட்டேன் என்று பணிவுடன் உறுதி கூறுகிறேன்.”

இப்படிக்கு

ப.வடிவேல் (ஒப்பம்)

பெயர், தந்தை பெயர், மனை விஸ்தீர்ணம் போன்றவற்றை நிரப்பி வடிவேலிடம் கையெழுத்தும் வாங்கிய படிவத்தை அறிவழகன் படித்துப் பார்த்துக் கொடுத்தான். வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். தனபால் மிடுக்கு குறையாமல் நேரே போய் அதிகாரிகளுக்கு ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு கனத்த கவரை வாங்கிப் போய்க்கொண்டிருந்தார்.

சொந்தப் பட்டாவில் இல்லாமல் புறம்போக்கில் குடிசை போட்டிருக்கிற கீரையனுக்குப் பத்தாயிரம் ரூபாய். சொந்த மனை யோடு கூடிய குடிசை என்பதால் ரத்னவேலுக்கும், அரசாயிக்கும் இருபத்தி ஐந்தாயிரம் வந்திருந்தது. கீரையன் அறிவழகனைக் கும்பிட்டார். " பணங்காசி பெரிசி இல்ல தம்பி. மன பிரிக்கறப்ப எங்கள மறந்துடாதீங்க. பொறம்போக்குல இருந்தங்கறதால கணக்குல வுட்டாலும் வுட்டுடுவாங்க. ஊருக்கு நா ஒரு குடி. ஒங்குளுக்கு தலைக்கி மேல வேலன்னு தெரியும். இருந்தாலும்..."

அரசாயி கொஞ்சம் தயக்கத்தோடு கேட்டாள் " ஏதோ நீங்க மெனக்கிட்ட தொட்டுதான், பத்து ரூவா இந்த பணம் வந்துது. நெலம்பலம் இல்லன்னு வுட்டுடப்போறாங்க. எதோ ஒங்க காலடி யில கெடந்து நா பொழுத ஓட்டிடுவன். வூட்ல பையன் இருக்கான். வேல குடுக்கறப்ப அவன வுட்டுடக்கூடாது. கூட்டப் பெருக்கற வேலயா இருந்தாக் கூட போதும்."

கிழக்குத்தெரு காளிங்கராயர் தான் எரிந்து விழுந்தார் " நீ வேற ஏம் புள்ள வந்து வவுத்து எரிச்சல கெளப்பிக்கிட்டு. எவம் இப்ப இந்தா வேல இந்தா வேலன்னு எடுத்து நீட்டிக்கிட்டு இருக்கறான். நீ மொவனுக்கு ஒண்ணு குடுன்னு முந்தாணிய வரிச்சிக்கிட்டு நிக்கிற..."

" வுடு ராயர, அது என்னாத்த கண்டுது பாவம்." செம்ப படையாட்சி காளிங்கராயரை சமாதானப் படுத்தினார். அறிவழகன் விரக்தியாகச் சிரித்தான்.

பணத்தை வாங்குவதற்கு முன்பு கூட அதிகாரிகளிடம் பேசினார்கள். கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். " ஊரக் காலி பண்ணனா என்னாங்க. கலக்டர் மின்னால நிர்வாகம் சொன்னப்பறம் பயம் எதுக்கு. தேவைக்கி ஏற்ப, படிப்படியா ஆள எடுப்போம். போயி பணத்த வாங்குங்க."

பணத்தைப் பெற்றுக்கொண்டு பத்து நாட்கள் கடந்து விட்டிருந்தது. வேலைவாய்ப்பு தருவது தொடர்பாக அறிவிப்போ அறிகுறியோ எதுவுமே இல்லை. சனங்களும் என்ன நடந்தாலும் நடக்கட்டும், கொன்றாலும் சரி வேலைக்கான உறுதி எதுவு மில்லாமல் இருக்கற இடத்தைவிட்டு எட்ட நகரக்கூடாது என்பதில் தீர்மானமாக இருந்தார்கள். மிரட்டுகிறமாதிரி ஊருக்குள் நுழைகிற சாலையையும் திட்டாய் ஊரையும் மட்டும் விட்டுவிட்டு சுற்றிலும் அகழிமாதிரி வெட்டத் தொடங்கிவிட்டார்கள்.

பன்னிரெண்டாம் நாள் காலை திசையெல்லாம் எதிரொலிக் கும்படி

நெற்றியில் ஒலிபெருக்கி கட்டிக்கொண்ட ஜீப் ஒன்று புழுதி பறக்க ஊருக்குள் நுழைந்து, உறுமியபடி வலம் வந்தது.

“ தமிழ்நாடு அரசு நில எடுப்புத் துறையின் இறுதி எச்சரிக்கை. சுரங்கப் பணிகளுக்காக, நிலம் மற்றும் மனைகள் ஆர்ஜிதப் படுத்தப் பட்டு, இழப்பீடும் வழங்கப்பட்டு உடன் இருப்பிடத்தை காலிசெய்து தருகிறோம் என கைப்பட ஆவணம் எழுதி உறுதி தந்திருந்தும் மாற்றுக் குடியிருப்புகளுக்கான இடங்களும் தேர்வு செய்யப்பட்டுவிட்ட நிலையில், இதுவரை யாரும் தங்கள் வீடுகளைக் காலி செய்யவில்லை. வருகிற **5.8.88** அன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குள் வீடுகளை காலி செய்யாவிட்டால், மறுநாள் **6.8.88** அன்று எவ்வித முன்அறிவிப்பின்றி காவல் துறையின் முன் குடியிருப்புகள் அப்புறப்படுத்தப்படுமென்றும் அப்புறப்படுத்துகிற செலவு மேற்படி வீட்டாரிடமிருந்தே வசூல் செய்யப்படும் என்றும், மேற்படி பணிகளுக்கு இடையூறாக இருப்பவர்கள் மீது கடுமையான காவல்துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.”

இதே செய்தியைத் துண்டறிக்கையாகவும் கொடுத்தார்கள்.

5ஆம் தேதி மாலை. விடிந்தால் **6** ஆம் தேதி. எல்லோர் முகங்களிலும் கலக்கமும் பயமும். “ கலக்டரு கலக்டருன்னு நம்பிக்கிட்டு கெடந்தம, அவுரும் கைவுட்டுட்டார...” கணேசன் புலம்பிக்கொண்டு நின்றான்.

அறிவழகன் சொன்னான். “ நாளைக்கி வர மாட்டானுவோ. ஆனா அதுக்குப் பதிலா அதிர்ச்சியான ஒரு அட்டாக்கு குடுப்பானுவோ...” குரலில் கூரம் தெரிந்தது.

“ அதிர்ச்சினா...” கேட்டார்கள்.

“ அதிர்ச்சினா ஊருக்கு வர்ற கரண்ட நிறுத்துவான். குடிக்கிற தண்ணிய நிறுத்துவான். அப்பிடி இல்லன்னா ஊருக்குள்ள வர்ற ரோட்ட மறிச்சி மண்ண கொண்டாந்து கொட்டுவான்...” அறிவழகன் சொல்லச் சொல்ல ஒவ்வொருவர் உடம்பிலும் விண் விண் என்று ரத்தம் தெறிக்கிற மாதிரி திகில். தொடர்ந்து பேசினான் “ என்னா அதிர்ச்சி குடுத்தாலுஞ் சரி, நாம பணிஞ்சிடக் கூடாது. திரும்பத் திரும்ப சொல்றது இதான். இது நம்ப மண்ணு. வெளைஞ் சிதோ வெளையிலியோ, தரைன்னு கெடந்தாலும் நமக்கு அது காலத்துக்கும் பாதுகாப்பு. இப்ப அந்த மண்ணும் இல்ல. இவங் குடுத்துருக்கிற பணமும் பாதுகாப்பு இல்ல. நம்ப வாழ்க்க பழைய படி

இல்லன்னாலும், ஏதோ சுமாரான வாழ்வுக்கு நமக்கு ஒரு வேல. வேலயக் குடுக்காம வூட்டு மேல கைய வைக்கக் கூடாது. ஜி.ஆர். டாக்டரும் குறள்மணி அண்ணனும் அய்யாவோட பேசிட்டு, இன்னைக்கு கலக்டர பாக்கப் போயிருக்காங்க. பாப்பும்.”

இரவெல்லாம் எவருக்கும் உறக்கமில்லை. என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என கதி கலங்கிப்போய் முடங்கிக் கிடந்தார்கள். குறிப்பாக பாஞ்சாலைக்கு அதிர்ச்சியில் இழுப்பு கிழுப்பு வந்து தொலைந்துவிடுமோ என்று பூமா பக்கத்திலேயே படுத்துக் கொண்டாள்.

திடுமென ஒரு ஈரவாசம். குளுங்காற்று. இடியிடித்தது. கூடவே கூரைச் சந்து வழியாய் மின்னலும் ஓடியது. சாரலில் தொடங்கி தூறல் விழவும் எங்குமாய்க் கிடந்த புழுதியில், வெட்டிப் போட்டிருந்த போடுமண்ணில் குபீரென்று எழுந்தது மழை வாசம். வலுக்கத் தொடங்கிய மழையில் எல்லோர் வீடுகளுமே ஒழுக ஆரம்பித்திருந்தன.

சி லீர் என்று விடிந்த **6** ஆம் தேதி காலை மண் அணைகளி லெல்லாம் கோடு கோடாய் தண்ணீர் அறுத்துக்கொண்டு இறங்கி யிருக்க, ஊரைச் சுற்றி எங்கும் தண்ணீர். புழுதியைப் பூசிக் கொண்டிருந்த குடிசைகள், வேலிகள் எல்லாமும் மழைத் தண்ணீரில் கழுவிப் பளீரென்று இருந்தன.

உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந்தாலும் ஈரக்காலையில் பதைபதைப்போடு வெளியே வந்தார்கள். தினமும் காலைப் பணிக்கு நேரத்திலேயே எழுந்து பழக்கப்பட்ட பால்ராசு, மந்தாரக்குப்பம் போனவன், கையில் பேப்பரோடு பதற்றமாக ஊருக்குள் சைக்கிளை மிதித்துக்கொண்டு வந்தான் “ நம்ப கலக்டர மாத்திட்டாங்க...”

இருக்கிற ஒரு நம்பிக்கையும் தகர்ந்துபோய்விட்ட தவிப்பு. அறிவழகன் செய்தித்தாளை வாங்கிப் பார்த்தான். “ தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் மாற்றம். உடனடியாக புதிய கலக்டர் பதவி ஏற்பு’. “ அதிர்ச்சி குடுத்துட்டாம் பாத்திங்களா...” சொன்னவனுக்கு முகம் வெளிறிப்போயிருந்தது.

வி ருத்தாசலத்திலேயே தங்கியிருப்பார் போலும், காலை யிலேயே வந்துவிட்ட குறள்மணி யோசனையில் இருந்தார். கலெக்டர் மாற்றப்பட்ட சூழலில் சொன்னபடி நடவடிக்கைகளில் இறங்கி விடுவார்கள் என எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதேபோன்று போலிஸ் வாகனங்களோ இடிப்பு இயந்திரங்களோ எது ஊருக்குள் நுழைந்தாலும்

உடன் தெற்கு வெள்ளூர், கூனங்குறிச்சி உட்பட மக்கள் திரண்டு வந்துவிட வேண்டும் என்கிற ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இதுவல்லாது வெளியில் உள்ள விவசாய சங்கங்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகள் உட்பட ஆதரவு தருவதாகவும் தெரிவித்திருந்தனர்.

எந்தவொரு அறிகுறியும் இல்லாமல் காலை நகர்ந்து கொண் டிருந்தது. மழையை, ஈரத்தை, நீர் தேங்கிய பள்ளத்தை எதிர் பார்க்காத இயந்திரங்கள், வழக்கம்போல் ஊரைச் சுற்றி வெட்டப்பட்ட அகழிகளிலிருந்து கொத்தி அள்ளிப் போட்டபடி பரபரப்பாய் இயங்கின. ஒன்றிரண்டு பத்திரிக்கைக்காரர்கள் கூட வந்து பார்த்துவிட்டு ஏமாற்றமாய்த் திருப்பிக் கொண்டிருந்தார்கள். செங்கல்ராவு, கணேசன் போன்றோரைக் கூடக் கெஞ்சிக் கூத்தாடி ஊற்றிக்கொள்ளாமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் எவரும் வரவும் இல்லை. எதுவும் நடக்கவும் இல்லை. “ ரெண்டு நாளைக்கி இந்த கலெக்டர மாத்தினதால என்னா ரியாக்ஷன் இருக்குன்னு பாத்துக்கிட்டு அப்பறமாதான் கிட்ட நெருங்குவான்” குறள்மணி சொன்னார்.

“ கலெக்டர மாத்தினது சம்பந்தமா ஒரு அடையாள சாலை மறியல் மாதிரி ஏதாவது பண்ணுவமா அண்ண” சிகாமணி கேட்டான்.

“ வேணாம். ஒரு அரசு அதிகாரிக்கி ஆதரவா மக்கள் இயங்குறத எந்த அரசியல்வாதியும் விரும்பமாட்டாங்க. அது அவுங்கள பெரிய சிக்கல்ல கொண்டுபோயி வுட்டுடும். வேணாம்” குறள்மணி தடுத்தார்.

“ உண்மதான் அண்ண. இனிமே நமக்கு இருக்கற ஒரே வழி எதிர்த்து நிக்கறதுதான்...” திடமாய்த் திட்டவட்டமாய்ச் சொன்னான் அறிவழகன்.

மறுநாளும் எந்தவொரு அசம்பாவிதமும் இல்லாமல் நகர்ந்ததும் அறிவழகனுக்கும் சிகாமணிக்கும் ரொம்ப சந்தேகமாக இருந்தது. “ அநேகமா இனிமேல நீட்டிக்க வுடமாட்டான். ஆரம்பிச்சிருவான்.”

“ சரி எப்ப வந்தாலும் வருட்டும் பாத்துக்கும்.” சொல்லிவிட்டு குறள்மணி எழுந்தார். “ வளையமாதேவில ஒரு பஞ்சாயத்து. ஆளு மேல ஆளா வுட்டுக்கிட்டு இருக்காங்க. நாம் போயி பாத்துக்கிட்டு ராத்திரிக்கி எந்நேரமா இருந்தாலும் இங்கியே வந்துடறன்.”

*

44

விடிந்தால் எட்டாந்தேதி. நள்ளிரவைத் தாண்டியும் போய் படுக்க எவருக்கும் விருப்பமில்லை. நாளையோ நாளை மறாநாளோ கடும் சிக்கலை எதிர்கொள்ளப் போகும் அவலநிலை. என்ன பாடு படுத்தப் போகிறார்களோ... என்ன விளையுமோ... ஒவ்வொருவருக் குள்ளும் பதற்றம், படபடப்பு. “ குறள்மணி அண்ணன் இருந்தா கொஞ்சம் தெம்புதான்... இன்னம் ஆளக் காணம்...” பால்ராசுதான் தெருவிளக்கு எட்டின தொலைவிற்கும் வெளிச்சத்தில் வீதியைப் பார்த்தபடி சொன்னான்.

“ என்னாங்கடா ஒரு மணிய தாண்டப்போவுது அண்ணன இன்னங் காணம்...” அறிவழகனுக்கும் உள்ளுக்குள் குறள்மணியை தேடிக் கொண்டிருந்தது.

நேரம் கணதாண்டிப் போய்க்கொண்டிருந்தது. இவர்களிடம் ஊரை ஒப்புக் கொடுத்துவிட்டமாதிரி சனங்கள் தூங்கிப் போய்விட்டிருந்தார்கள். “ ஒண்ணுக்கு மேல ஆயிட்டுது. இதுக்கு மேலயா இருட்டுல வரப்போறாரு. போயி படுங்கடா...” அறிவழகன் எல்லோரையும் அனுப்பிவிட்டு, கடைசியாய்த்தான் போய்ப் படுத்தான்.

எப்போது தூங்கிப்போனான் என்று தெரியவில்லை. ஒரு நேரத்தில் திடுமென கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு, திடுக்கிட்டுக் கண்விழித்து வந்து பார்த்தால், வெளியே செங்கமங்கல் இருட்டு. விடியத் தொடங்குகிற அதிகாலை. வாசலில் பால்ராசு நின்று கொண்டிருந்தான். “ என்னாடா...” அதிர்ச்சியாய் கேட்டான்.

“ அண்ண, இங்க வந்து பாருங்களன்...” பால்ராசு கூப்பிட்ட விதத்தை வைத்து ஏதோ முக்கியமான செய்தியாக இருக்க வேண்டும் என, உள்ளே போய் சட்டையை மாட்டிக்கொண்டு வந்தான்.

“ என்னாடா...”

“ வந்து நீங்களே பாருங்களன்...”

ஒன்றிரண்டு வாசல்களில் சாணி தெளித்துக் கொண்டிருந் தார்கள். பின்னால் குந்தவைத்து மிதித்துக் கொண்டுபோய் கம்மாக் கட்டையில்

இறக்கிவிட்டான்.

மஞ்சள் சால்வையைப் போர்த்தியபடி கம்மாக்கட்டையில் ஆலமரத்தின் கீழ் ஒரு உருவம் ஒருக்களித்துப் படுத்திருந்தது. முகம் தெரியவில்லை. எட்டி அங்காண்டப் பக்கமாய் பார்த்தவன் அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டான். குறள்மணி அண்ணன்தான். " இவுரு எப்படா வந்தாரு. ஆதுபாது அத்த மாதிரி இதுல மொடங்கிக் கெடக்கறாரு." ஆச்சரியமாய்ச் சொல்லிக் கொண்டான்.

" எழுப்புட்டுமா..." பால்ராசு சத்தம் போடாமல் கேட்டான்.

" வாணாம் வுடு. பாவம் அவுரு எங்கங்கன்னுதான் அலைவாரு. அசந்து கெடக்கறாரு. கெடக்குட்டும் வுடு. நீ போயி சிகாமணிய இட்டா..."

எதிரிலிருந்த கம்மாக்கட்டையில் குந்தி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவரைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு பிரமிப்பாகவும் பெருமிதமாகவும் இருந்தது. வாரத்தில் இரண்டு நாளோ மூன்று நாளோதான் வீட்டுக்குப் போவது மாதிரி பெரும் அலைச்சல். அதுவும் ராப் பொழுது முடங்கிக் கிடந்துவிட்டு, கோழி கூவாது கிளம்பி வந்துவிட வேண்டியது மாதிரிதானிருக்கும். கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், திட்டக்குடி, விருத்தாசலம் என தென்னாற்காடு மாவட்டத்தின் பெரும்பகுதிகளில் நாளும் போராட்டங்கள், சிக்கல்கள் என ஓயாத வேலைகள், அலைச்சல். கிடைக்கிற உணவு. நினைத்த இடத்தில் உறக்கம். ஓரளவு வசதியான குடும்பந்தான் என்று கேள்வி. இருந்தாலும் இவரது மனைவி இவரைப்பற்றி என்ன நினைப்பார்கள். அவர்கள் எவ்வளவு தியாகத்தை செய்து குடும்பத்தை நடத்திக்கொண்டு போக வேண்டியிருக்கும்! இயல்பிலேயே இவர் மனிதர்கள் மீது பிரியமானவர். பொதுநல அக்கறை வேறு. அரசியல், சமூகப் பணிகளில் இறங்கிவிட்டார். என்ன செய்வது என மனைவி, மக்கள் இவரது இயல்புக்குத் தங்களை மாற்றிக் கொண்டுதான் போய்க்கொண்டிருக்க வேண்டும். இல்லையென்றால் இப்படிக் கை உதறி கால் உதறி எந்தச் செயலிலும் இறங்கவும் முடியாது. இதுபோன்று அக்கடாவென தனித்த கம்மாக்கட்டையில் முடங்கவும் முடியாது.

சிகாமணியும் வந்து பார்த்தவன் ஒரு கணம் ஆடிப் போனான். தூரப்போய் குந்தி மௌனமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். நன்றாக விடிந்து, ஒரு ஆறரை அளவிற்கு அவராகத்தான் எழுந்து குந்தினார். " ஏம்ப்பா... வந்து நேரமாவுதா, எழுப்ப வேண்டிதான..." சாதாரணமாகக் கேட்டார்.

கிட்ட போய் சண்டை போடாத குறையாய் கேட்டார்கள். " என்னா

அண்ண, நீங்க செஞ்சிருக்கற இந்த வேல எங்க அடுக்கும். வூட்டப்பக்கம் வந்து நின்னு ஒரு சத்தத்த போட்டா ஏந்திரிச்சி வந்துருக்கப் போறம்...”

“ இல்லப்பா. வளையமாதேவில ரொம்ப லேட்டாயிடுச்சி. காலையில போங்கன்னுதான் சொன்னாங்க. எனக்குதான் எடுக்கப் போறங்கற ஊரு, நெருப்புல நிக்கிற மாதிரி சனங்கள வுட்டுட்டு அங்க எனுமா தங்கறதுன்னு தாயோட புள்ளயாப் பூடறன், செத்த செரமத்த பாக்காம கொண்டாந்து வுட்டுடுங்கன்னன். இங்க வந்து எறங்கறப்ப மணி ரெண்டே காலு. நீங்களும் கடந்துதான் போயி படுத்திருப்பீங்க. எதுக்கு நேரங்கெட்ட நேரத்துல தொந்தரவு பண்றதுன்னு, காத்து சிலுசிலுன்னு அடிச்சதும் செத்த சாஞ்சிட்டன். சரி வாங்க...” எழுந்தார்.

தோண்டப்பட்டுக் கொண்டிருக்கும் வயல்வெளியைத் தாண்டி, மும்முடிசோழகன் கொல்லைப் பக்கத்து மோட்டாரில் குளிக்கப் போனார்கள்.

காலை பத்து மணி இருக்கும் சரசரவென நுழைந்தன நாலைந்து மூடாக்கு போட்ட காவல்துறை வாகனங்கள். வந்து நின்ற வேகத்தில் தடதடத்து இறங்கினார்கள். ஒரு கையில் தடி மறுகையில் தட்டி, தலையில் கவசக்குல்லாய். குல்லாய் குறுகலில் தெரிந்த எல்லா முகங்களிலும் இரக்கமில்லாத மாதிரியோர் இறுக்கம்.

சடுதியில் தொற்றிக்கொண்டது பதற்றம். தீயாய்ச் சேதி திசையெங்கும் பரவ, திரளத்தொடங்கியது கூட்டம். ஏற்கெனவே மண்ணைப் பிரிந்து முள்ளில், முந்திரிக்காட்டில் வந்தாரங்குடியாய் நொந்து கொண்டிருப்பவர்கள், நாளைக்கு நமக்கும் இந்த கதிதான் என்ற கிலியில் இருப்பவர்கள், மக்கள் மீதும் மண்ணின் மீதும் அக்கறையுள்ளவர்கள் எனக் கட்சி பேதமின்றித் திரண்டு வரவும் திணறியது வேப்பங்குறிச்சி.

ஆனால் எதையும் முறியடிக்கத் தயாராய் காவல்துறை. மேலும் மூன்று ராட்சத இடி இயந்திரங்கள். உம் என்று ஒரு வார்த்தை சொன்னால்போதும் ஒட்டுமொத்த வேப்பங்குறிச்சி யையே கொத்திப் பிடுங்கி விடுகிற வேகத்தில் வந்து நின்று உறுமிக் கொண்டிருந்தன. மேலும் மேலும் அதிகாரிகளும் ஜீப்புகளில் வந்த வண்ணமாய் இருந்தனர். ஆனால் எதையும் பொருட்படுத் தாமல் எல்லா வீட்டிலிருந்தும் வஞ்சான் குஞ்சானிலிருந்து கிழங்கட்டைகள்வரை, ஊருக்குள் நுழைகிற இடத்தில் என்ன ஆனாலும் ஆகட்டும் என்று எதிர்த்து நின்றுகொண்டிருந்தனர்.

இறுதியாய் நிலக்கரி நிறுவனம், நில எடுப்புத்துறை, காவல்துறை என

உயர்நிலைத் தலைமை அதிகாரிகள் ஆளுக்கொரு ஜீப்பிலிருந்து இறங்கிவர சூடு பிடித்துக்கொண்டது சூழல். அதிகாரிகளை நெருங்க விடாது கைத்தடி மற்றும் ஆயுதக் காவலர்கள் வளையம் கோர்த்த படி நிற்க, காவல் தலமான்தான் அழைத்தார் " ஏம்ப்பா பிரச்சின பண்றீங்க..."

ஒவ்வொருவர் கண்களிலும் ஏமாற்றப்பட்ட வலி. ' படிப்படியா வேலைக்கி எடுத்துக்கறம்...' பசப்பு வார்த்தைகளில் இனியும் மைந்து விடக்கூடாது என்கிற கறார். கப்சிப் என்று கூட்டம் அமைதியாய் இருக்க, குறள்மணிதான் முன்னே போனார். என்ன நடக்குமோ என ஒவ்வொருவருக்குள்ளும் திக்குதிக்குவென அடித்துக் கொண்டது. குறள்மணியிடம் கேட்டார் " ஏங்க பண செட்டில் மெண்டு எல்லாம் முடிஞ்சி போச்சு இல்ல. அப்பறம் என்னாங்க..."

உத்தண்டராயர், செம்ப படையாட்சி, அறிவழகன் என முன்னுக்கு நின்றுகொண்டிருந்தவர்களில் சிகாமணி தான் ஆவேசமாகக் கேட்டான் " பண செட்டில்மெண்டு முடிஞ்சா எல்லாம் சரியாப் போச்சா?" மொத்தக் கூட்டத்தின் ஒற்றைக் குரலாய் கூட்டத்திலிருந்த படி தனித்து எகிறவும், காவல் தலமான் முகத்தில் சுரீர் என ஒரு சொடுக்கம். கும்பலில் நின்றபடி பார்த்துக்கொண்டிருந்த பூமாவுக்கு பொக்கென்று நெஞ்சில் ஒரு திகில்.

" இங்க பாருப்பா, கும்பல்ல யாரும் பேசக்கூடாது. அது பிரச்சினைய இன்கிரிஸ் பண்ணுமே தவிர, சால்வ் பண்ண ஒதவாது" காவல் தலமான் கறாராகப் பேசினார்.

பொட்டென்று அறிவழகனுக்கும் எகிறிவிட்டது. " கும்பலா... கும்ப கூடற அளவுக்கு கொண்டாந்து வுட்டது யாருங்க சார். இப்பிடிச் சுத்தியிலும் குழிய வெட்டி, நடுத்தெருவுல தெவைச்சி நிக்கவைச்சது யாரு. நாங்க என்னா பிச்சை கேக்கறதுக்கா கூடி வந்து நிக்கிறம். அதுஅது வவுறு எரிஞ்சி போயி நிக்கிது. பேசக் கூடாதுங்குறீங்க... பேசறதோட நிக்கிறாங்களேன்னு சந்தோஷப் படுங்க சார்." விரலை ஆட்டி ஆட்டிப் பேசவும் காவல் தலமானுக்கு ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது. அதே நேரம் சூழ நின்ற சனங்களுக்கும், நுனி பற்றிய திரியைப் போன்று கூடுதல் கொந்தளிப்பை ஊட்டியது.

அறிவழகன் பேசி முடித்ததும் சற்றே அமைதி. பிறகு குறள்மணி நேரடியாக ஆரம்பித்தார் " வூட்டுக்கு ஒரு ஆள் வேல குடுக்குணும் சார். இதுக்கு மின்னாடி இருந்த கலெக்டரு உறுதி குடுத்ததாலதான் பணத்த நாங்க கையில வாங்கனம். பேசனப்ப படிப்படியா வேலைக்கி எடுத்துக்கலாம்னு

சொன்னாங்க. எதாவது பாதிப்பேருக்குனாச்சும் வேல குடுத்துருந்தாலும் பரவாயில்ல. அதுக்கான எந்த ஏற்பாடும் இல்லாம திடுதிப்புன்னு வந்து ஊட்ட இடிக்கற துன்னா இது மிகக் கொடூரமான சர்வதிகாரம் சார்." சொல்லும்போது குறள்மணிக்கு குரல் தெறித்தது.

" அத வுடுங்க. அவுரு ட்ரான்ஸ்ஃபர்ல போய்ட்டாரு. பிரச்சினையை தற்காலிகமா தீர்க்கறதுக்கு ஏதாவது சொல்லியிருப்பாரு. அதலாம் நாம கணக்குல எடுத்துக்கக்கூடாது." அலட்சியமாகப் பேசினார்.

" அவுரு ட்ரான்ஸ்பர்ல போவுல. அனுப்பிட்டாங்க..." கத்திமுனையால் கீறுவது மாதிரி சிகாமணி திரும்பவும் இறக்கினார்.

காவல் தலமான் முகத்தில், அடுத்தடுத்த குறுக்கீடுகளில் எரிச்சல் கோடாய் சுருங்கித் தெரிந்தது. குறள்மணி திரும்பி இருவரையும் சற்று பொறுக்குமாறு பார்த்தார்.

" கலெக்டர மாத்தனது எல்லாம் அரசு விவகாரம். அதுல நாம தலையிடக்கூடாது. சார் நீங்க சொல்லுங்க. பண செட்டில் மெண்டு முடிஞ்சாச்சின்னு அவுங்களே ஒத்துக்குறாங்க. மாற்றுக் குடியிருப்பு?" காவல் தலமான் நிலஎடுப்புத்துறை தலமானைக் கேட்டார்.

அவர் சொல்லிவைத்தமாதிரி மடக்கி வைத்திருந்த ஃபைலை திறந்து, அதன் நடுவில் இருந்த ஒரு பெரிய காகிதத்தை எடுத்து விரித்துப் போட்டார். கோடுகளும் புள்ளிகளுமாய் அதைக் காட்டிச் சொன்னார். " இது தெருங்க சார். இது எலக்ட்ரிக் போஸ்ட்டுங்க. இது வாட்டர் டேப்புங்க. எல்லாம் கனெக்ஷன் குடுத்து ரெடியா இருக்கு. போய் இவங்க வீடு கட்டிக்க வேண்டியதுதான்."

" ஓகே ஓகே... ஒங்க சைடுல பிரச்சின இல்ல. சார்தான் இந்த மக்களுக்கு..." நிர்வாகத் தரப்பு தலமானிடம் சொன்னார்.

அவர் பங்குங்கும் ஒரு கோப்பை விரித்து நீட்டினார். " ஆக்சுவலா **86**லியே டோட்டல் புராஜக்ட்ல **500** லேபர்ஸ் எக்சஸ் சார். இதுல **87**ல் **100** லேபர், இப்ப **88** ல **150** பேர் ரிடையர்டு சார். ஆக இந்த ஆண்டு எண்டுல கூட **250** லேபர் எக்சஸ்தான் காட்டுது. இருந்தாலும் இந்த செகண்ட் மைன்ஸ் ரன்னாகும்போது ஆட்டாமடிக்கா ரெக்ரூட்மெண்ட் தேவ. அப்ப இவுங்கள கிராஜூவுலா யூஸ் பண்ணிக்கலாம் சார். நந்திங் டு ஒர்ரி..." ஆங்கிலத்தை கலந்து அடித்தார் நிர்வாகத் தலமான்.

" சார் எவ்வளவு துல்லியமா சொல்றாரு பாருங்க. இந்த வருஷம்

முடிவுக்கப்பறம் கூட 250 பேர், அதிகப்படியான தொழிலாளிங்க இருக்கற பட்சத்துல எப்படி மேலமேல எடுக்க முடியும்? இந்த மைன்சுல (தரையைச் சுட்டிக்காட்டி) கரி எடுத்து அனுப்புற சூழல்ல படிப்படியா ஆளுவுள எடுத்துக்கலாம். யாரும் பயப்பட வேணாங்கறாரு...” சனங்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு, நில எடுப்பு தலமான் மற்றும் உயர்அதிகாரிகளைப் பார்த்துச் சொன்னார். “ இப்பிடி வெவரமா சொன்னா மக்கள் ஏத்துப்பாங்க சார். அத விட்டுட்டு குறுக்கால வர்றவங்கள்லாம், நாம் பாத்துக் கறன்னு உத்தரவாதம் குடுக்கறது. அப்புறம் அவங்க போனப்பறம் நம்பகிட்ட வந்து அவரு சொல்லிட்டுப் போனாரு இவரு சொல்லிட்டுப் போனார்னு அவங்க கோபப்படறது... எல்லாத்துக்கும் நாமதான் காரணம்.” காவல் தலமான் புத்திசாலித்தனமாக பேசினார்.

“ எவ்வளவு பேர் வேல செய்றாங்க. இன்னம் எம்மாம் பேர் தேவப்படும்ங்கற கணக்கு வழக்குலாம் எங்குளுக்கும் தெரியும். இதலாம் எப்பியோ பேச்சு வார்த்தையில எங்க அண்ணம் சொல்லிட்டாரு. ஒங்க அள்ளுபுள்ளி கணக்க உள்ள வைச்சிட்டு ஆவ வேண்டிதப் பேசுங்க...” சிகாமணி எறினான்.

கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த முத்துக்கண்ணு ஆயியும் கடந்து பேசினாள் “ என்னா சார். ராசா பறங்கிக் காயி போட்ட மாதிரி கூப்புட்டு ஒங்குளுக்குள்ளியே நீங்க கேள்வி கேக்குறீங்க. நீங்களே பதில் சொல்லிக்கிறீங்க. மண்ணப் போட்டா பொன்னா வெளையும். அதப் புடுங்கிக்கிட்டு... தெவைச்சி தெகமாறி வவுறு எரிஞ்சி போயி நிக்கிறம். இப்பதான் கத சொல்றீங்க. நாங்க என்னா ஒங்களமாதிரி கார்ல போற வேல கேக்கறமா, இல்ல கலெக்டரு உத்தியோகம் குடுங்கறமா? ஏதோ கூட்டப் பெருக்க... அள்ளப் புடிக்க... ஒரு எடுபுடி வேலயாச்சும் குடுங்கன்னுதான கேக்கறம்.”

தலமான்கள், அதிகாரிகள் எல்லோருக்குமே அதிர்ச்சியாகிப் போய்விட்டது. நீட்டிப் படங்காட்டிய ஃபைல்களை பட்டென்று மடக்கிக் கொண்டார்கள். கண்டும் காணாததற்கு செல்லப் பாங்கியும் ஆரம்பித்தாள் “ எனுமோ எங்க அய்யா சொல்ற மாதிரி இவுங்க அப்பன் வூட்டு செறாப்ப தொறந்து எடுத்துக் குடுக்கற வங்களாட்டம் இம்மாம் கசந்துக்குறாங்க. ஆத்துல வருது மணல்ல சொருவுதுங்கற மாதிரி கீழ கடலும் காவேரியுமா கெடக்கற கரியில வர்ற ஊருப்பட்ட காசி. இதுக்கு ஆயிரம் சட்டம். அடிச்சி, சுட்டுப் பொசுக்கறமாதிரி ஆயிரத்தெட்டு போலிசு. எதுக்கு இம்மாஞ் செரமம் ஒங்குளுக்கு. தே ஊரச் சுத்தி நோண்டி வைச்சிருக்கீங்க பாரு பள்ளம்...

இதுல எங்கள உயிரோட போட்டுப் பொதைச்சிட்டு, எந்தச் சிக்கலுமில்லாம எடுத்துக்கிட்டு போங்களன்.”

மக்கள் பேச ஆரம்பித்ததம் குறள்மணி கூட சற்று ஒதுங்கிய மாதிரி மௌனம் காத்தார். ‘ வுடுங்க’ என்று அதற்கு ஏற்ற மாதிரி செம்ப படையாட்சியும் உத்தண்டராயரும் கண்ணைக் காட்டினார் கள். அறிவழகனும் சிகாமணியும் கூடக்கலந்து எகிறினார்கள். அதிகாரிகள் கண்ணில் தெறிக்கிறமாதிரியான கேள்விகளில் பேச்சற்று நின்றுகொண்டிருந்தார்கள்.

“ இப்படி கும்பல கண்டா மட்டும் எணக்கமா பேசறது. அப்பறம்... அப்பறந்தான்... இப்பிடித்தான எங்கள அரண்மன கட்டி வைச்சிருக்கறன், ஆத்துப் பாசனத்துல வயக்காடு வாங்கி வச்சிருக்கமுன்னு எங்க நாக்குல தேனத் தடவி இட்டுக்கிட்டுப்போயி உர்ணானூரு பீக்கருவ முள்ளுல எறக்கினிங்கள. செத்தமா பொழைச்சமான்னு ஒரு பய இது நாளுவரைக்கும் எட்டிப் பாத்தீங் களா. மொச வவுத்துல அடி வைக்கிறமாதிரி பொசபொசன்னு கொல்லக்காடு. ஒங்ககிட்ட வுட்டுட்டு நாங்க கருவுட மண்ணுல கருவ முள்ளுல சிக்கி, குடிக்கிற தண்ணிக்குக் கூட வழியில்லாத செத்து மடியிறம். ஆவேசமாகப் பேசியவள், திடுமென கும்பல் பக்கம் திரும்பினாள். “ சனங்களா... வேணாம். இன்னைக்கி ஆத்த கட்றம் மலைய ஒடைக்கறம்னு சொல்றத எதியும் நம்பாதீங்க. நம்ப மண்ணு. நம்ப ஒழைப்பு, நம்ப சோறு... வுட்டுட்டு நாளைக்கிப் பட்டினியா பரதேசியா நிக்க முடியாது. வூட்டுக்கு ஒரு ஆளு வேல... குடுக்காம வுடவே கூடாது.” ரூபநாராயணநல்லூர் கருவைக் காட்டில் கொண்டுபோய் விடப்பட்ட தெற்கு மேலூர்க்காரி சேதி கிடைத்து இங்கேயே இதற்காகவே வந்து தங்கியிருந்தவளின் கண்ணீர்க் குரலில் மொத்தக் கூட்டமும் நொடியில் உணர்ச்சி வசப்பட்டு விட்டது.

“ வேலை கொடு. வேலை கொடு. வீட்டுக்கு ஒரு ஆள் வேலை கொடு.”

“ ஏமாற்றாதே ஏமாற்றாதே. எங்களை இனியும் ஏமாற்றாதே.”

சிகாமணியின் உச்சக்குரலில் மொத்தக் கூட்டமும் சேர்ந்து குரலெழுப்ப மொத்தத் தீக்குச்சிகளும் ஒரே நேரத்தில் பற்றிக் கொண்ட பதற்றம்.

எந்த நொடியிலும் போலிஸ் கைத்தடிகளைச் சொடுக்கத் தயாராய் இருக்கிற தருணம்... இன்னும் கூடுதலாய் கோஷமிட்டபடி உணர்ச்சிப் பிழம்பாய் மக்கள்.

காவல் தலமான் எரிச்சலில் கையை உயர்த்தி அமர்த்தினார். “ உஸ் இருங்கப்பா...” ஓங்கிய குரல்கள் மெல்ல ஒடுக்கத்திற்கு வந்தன. குறள்மணியைப் பார்த்து அலட்சியமாகப் பேசினார் “ என்னாப்பா, உங்களக் கூப்புட்டா மொத்தக் கூட்டமும் பேசுது. நீ பேசாம இருக்கற. எல்லாம் கோஷம் போடுது. எதுவும் ஒங்குளுக்குக் கட்டுப்படாது போல்ருக்கு. சும்மா நீயே முக்கியமான ஆளுன்னு சொல்லிக்கிட்டு மின்ன வர்றியா...” கேலி செய்கிற மாதிரி காவல் தலமான் பேசியதும், எல்லோருக்கும் அதிர்ச்சியாய்ப் போய்விட்டது.

மழைவிட்ட மாதிரி ஒரே பேரமைதி. கிணுக்முணுக்கென்று யாரும் வாயைத் திறக்கவில்லை. துடித்துப் பேசுகிற சிகாமணி கூட கண்களில் கோபத்தைக் கசிய விட்டபடி மௌனமாக இருந்தது கண்டு பூமாகூட ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வந்திருந்த அனைத்துத் தலமான்களுக்கும் அதிர்ச்சி. திடுமெனக் கவிந்த மௌண இறுக்கத்தில் ஆடிப்போய்விட்டார்கள். அமைதியில் ஆழ்ந்திருந்த சூழலில் ஆணியடித்தமாதிரி குறள்மணி பேச ஆரம்பித்தார் “ ஆளாளுக்கு பேசறாங்கன்னா, அவ்வளவு தூரம் உள்ள கொதிச்சிப் போய் கெடக்குது சார். அந்தக் கொதிப்ப புரிஞ்சிக்கிலன்னா அப்பறம் படிப்பு என்னா பதவி என்னாங்க சார்.” எவரின் குறுக்கீடும் இல்லாமல் திரும்பவும் குறள்மணியே தான் பேசினார் “ இதுக்கு மேலயும் யோசிக்கறதுல ஒண்ணுமில்ல சார். எங்க கோரிக்கையை நிறவேத்தாம, ஒரு அடியக்கூட இங்காண்ட எடுத்து வைக்க நாங்க அனுமதிக்க மாட்டம்” குறள்மணியின் பேச்சு இறுதியாக இருந்தது.

காவல் தலமானின் பேச்சிலும் கூடுதல் கடுமையோடி யிருந்தது “ இது அரசாங்கத்தோட திட்டம். இத எதிர்க்கிறது அரசாங்கத்த எதிர்க்கிற மாதிரி.”

“ எதிர்க்கிற மாதிரி சூழல அரசாங்கந்தான் உண்டாக்குது... அரசாங்கமே மக்கள் தேர்ந்தெடுக்கறதுதான். மக்களுக்கு இல்லாத உரிமையா?” குறள்மணியும் கடுமையானார்.

“ நடவடிக்கை கடுமையா இருக்கும்...”

“ எல்லாத்துக்கும் தயாராத்தான் இருக்கறம்.”

“ இப்பிடி வலிய மறிச்சி கஷ்டகாலத்துல எறங்காதீங்க.”

“ நீங்க எப்ப எங்க மண்ணுல கால வைச்சிங்களோ அதிலேர்ந்து எங்குளுக்கு கஷ்ட காலந்தான்னு தெரிஞ்சிதான் இருக்கறம்.”

“ இப்பக் கூட டைம் தர்றம். எங்க லாரிங்க இருக்கு. எங்ககிட்ட ஃபோர்ஸ் இருக்கு. ஒத்துழைப்பு குடுத்திங்கன்னா பொறுமையா லாரியில ஏத்தி, மாற்றுக் குடியிருப்புல கொண்டுபோயி வுடறம்.”

“ வேலைக்கி உறுதியான, எழுத்துபூர்வமான நடவடிக்கை எதுவுமில்லாம, நாங்க இந்த மண்ணை வுட்டு எட்ட நவுற மாட்டம்” குரலை உயர்த்தினார் “ இது எண்ணித் துணிந்த கருமம்.”

“ இது வேலைக்காவாது. நீங்க ஸ்டார்ட் பண்ணுங்க...” காவல் தலமான் கடந்து சொல்லிய அடுத்த கணம், திடுமென காவலர்கள் ஓர் அணையைப் போலத் தடுப்பாக்கிச் சுற்றி வைளத்துக்கொள்ள, உறுமிக் கிளம்பிய இடிப்பு இயந்திரம், பக்கத்திலிருந்த அழகேசன் குடிசையைக் கொத்திப் பிடுங்கி இழுத்துத் தெருவில் போட்டது. எந்தவித சிரமத்தையும் தராது வீழ்ந்த கருப்பஞ்சருவு கூரைக் குவியலிலிருந்து, கோழி ஒன்று பறாச்சென்று பறந்து ஓடியது. உருண்ட ஓடுக் கூடையிலிருந்து நொறுங்கின முட்டைகள். பொரிக்கத் தயாராய் இருந்த பூங்குஞ்சுகள் உதிரம் கசியத் தரையில் நெளிந்தன.

குபீரென்று பாய்ந்தது கூட்டம். காவல் தட்டிகளை நெட்டியபடி வெறியோடு சனங்கள் முன்னேறவும், காவல் தலமான் கையைக் காட்டிவிட்டார். அவ்வளவுதான். கைத்தடிகள் தாறுமாறாய்ச் சுழன்றன. கண்மண் தெரியாத தாக்குதல். எதிர்த்து முன்னேறிய எவரையும் விடாமல் அடித்து நொறுக்கியது காவல்துறை. மண்டை உடைந்து, கை கால் அடிபட்டு... எங்கும் ரத்தக்களரி. “ அய்யோ... அம்மா...” கூக்குரல்கள். பயந்து பின்வாங்கி யவர்களையும் துரத்தித் துரத்தி அடித்தது.

ஒரு கட்டத்திற்கு மேல் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல், சனங்கள் நிலைகுலைந்து நாலாகடையும் சிதறி ஓடினார்கள். துணிந்தவர்கள் எட்டாக்கையில் போய் நின்று கல்லை, கழியை எடுத்து எறிந்தார்கள். ஆனாலும் பலம் கொண்ட காவல்துறை குறிப்பாய் எதிர்த்து நின்று பேசியவர்களைக் குறிவைத்துச் சூழ ஆரம்பித்தது. நொடியில் உணர்ந்துகொண்ட குறள்மணி பின்னுக்கு ஓடினார். இருந்தும் புள்ளுக்கழி ஒன்று அவரைப் பதம் பார்த்தது. அறிவழகனும் சுதாரித்து திரும்புவதற்குள் தோளில் விழுந்த அடியில் திகைத்துப் போய், கடந்து நிறுத்தியிருந்த வாகனங்கள் ஊடாக ஓடினான். வளைத்துக் கொண்டுவிட்டனர் சிகாமணியை, உத்தண்டராயரை, செம்ப படையாட்சியை.

பாதுகாப்பாய் ஒரு ஜீப்பின் மறைவில் நின்று பார்த்த அறிவழகனுக்கு

அங்கம் பதறியது. சனகாடு பொணகாடாய் சனங்களை அடித்து உதைத்து... எங்கும் அவலக்குரல்கள். ரத்தம் ஒழுகிய முகங்களோடு சனம் சுருள்கிற கொடூரம். சிறியவர்கள் பெரியவர்கள், ஆண்கள் பெண்கள் என எவரையும் விடவில்லை. இப்படியொரு வஞ்சினத்தோடு, மூர்க்கத்தோடு காவல்துறை இருக்கும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

அறிவழகனால் தாங்க முடியவில்லை. திடுமென தாக்குதல் களிலிருந்து திமிறி சிகாமணி தப்பி ஓடுகிறான். ஆனாலும் துரத்தி ஓடிப்பிடித்துச் சாத்துகிறார்கள். அறிவழகனுக்கு ஏதும் செய்ய இயலா ஆத்திரம். கைகள் பரபரக்கின்றன. சுற்றும் முற்றும் பார்த்தவன் முகத்தில் வெறி. அந்தச் சூழலிலும் ஓர் நறுமண நெருடல். திரும்பினான். பக்கத்தில் நின்ற ஜீப்பினுள் ஊசலாடும் பூச்சரத்திற்கு கீழே புகைந்து கொண்டிருந்தது வத்தி. பக்கத்தில் தீப்பெட்டி. அந்த நேரத்திற்கு ரணகளத்தை நிறுத்துவதற்கு அவனுக்கு வேறு வழி தெரியவில்லை.

அதே நேரம் தடியடி சேதி பறந்து ரோட்டு பக்கமிருந்து ஓடி வந்த மக்களும் ஆளுக்கொரு கழி, கல்லை எடுக்க கவசக்குல்லாய்கள் எகிறின. பதற்றமடைந்த காவல் தலமான் உடனே அடுத்த அதிரடி ஆணைக்குத் தயாரான நேரம், குபீரென்று எகிறியது தீ.

பின்னால் நின்ற ஜீப் ஒன்று எரிந்துகொண்டிருந்தது. தீயின் மறைவிலிருந்து அறிவழகன் தாண்டிக் குதிப்பதை காவல்துறை மட்டுமல்ல, இரத்தம் வழிகிற முகங்களோடு ஊரே மிரட்சியில் பார்த்தது. பாய்ந்து ஓடித்துரத்தியது காவலர் கூட்டம். ஓடையில் குதித்தபின் குடியிருப்புகளில் நுழைந்து அவன் மறைந்துபோனதும், ஆள் கிடைக்காத ஆத்திரம் திரும்பவும் வந்து மக்களைத் துவைத்தது. ஜீப் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது.

சிட்டு தட்டுவதற்குள் கத்திக் கூப்பாடு போட்டபடி வந்த தீயணைப்பு வண்டி, தீயை அணைத்துப் பரவாதபடி தடுத்தது. ஆனாலும் எலும்புக் கூடாய் ஜீப்.

காயங்களோடும் கட்டுகளோடும், ரத்தம் தோய்ந்த கண்ணீரோடும் விருத்தாசலம் ஆஸ்பத்திரியில் கிடந்தவர்களைப் போய்ப் பார்த்த ஜி.ஆர்.டாக்டர் பதறிப்போய்விட்டார். இது கூட்டத்தை கலைக்கச் செய்தமாதிரி தெரியவில்லை. ஏதோ திட்டமிட்டு இதுபோன்ற செயல்களில் இனி ஈடுபடக் கூடாது என்கிற மாதிரியான கொடுந் தாக்குதலாக தெரிந்தது.

கையெடுத்துக் கும்பிட்டுக் கதறுகிறார்கள் “ சாமீ எங்க மண்ண வுட்டுட்டு நாங்க படறத பாத்திங்களா. எங்க அய்யாவுக்கு எங்க கெதிய

சொல்லுங்களன் சாமீ.”

குறிப்பாய் முன்வரிசையில் நின்றிருந்த சிகாமணி, செம்ப படையாட்சி, உத்தண்டராயர் எல்லோருக்கும் வலுத்த தாக்குதல். சிகாமணிக்கு நெற்றியில் தையல் போட்டிருந்தார்கள். “ சவடாலாடி பேசுறீங்க...” செல்லபாங்கியை, முத்துக்கண்ணைத் துரத்தியடித்து சுருண்டு விழுந்ததில் மேலுகாலு எல்லாம் வயிண்டு கத்தி முறைக்கிறார்கள்.

கையில் கட்டோடு குறள்மணி கூட நிற்க ஜி.ஆர். டாக்டர் எல்லோரிடமும் சொன்னார் “ ஒண்ணும் பயப்படாதீங்க. மேல அய்யாகிட்ட சொல்லி, அடுத்து என்னா செய்றதுன்னு பாப்பும். இங்க சரியில்லாத மாதிரி தெரிஞ்சா, நம்ப ஆஸ்பத்திரிக்கு வாங்க, நாம் பாத்துக்கறன்.”

*

45

“ **கா** வல்துறை வாகனம் எரிப்பு. வன்முறையை அடக்க போலிஸ் தடியடி” எல்லா நாளிதழ்களிலும் நிகழ்வைத் திட்ட மிட்டு திருப்பிப் போட்டு மக்களின் மீது குற்றத்தைச் சுமத்தி தலைப்புச் செய்தியாய் வந்திருந்தது.

‘ அப்பாவி மக்கள் மீது போலிஸ் அராஜகம்.’ அனைத்துக் கட்சி சார்பில் அறிக்கை விடுத்தனர்.

அதே வேளை, ஆனைவாரி சண்முகம் வீட்டில் வைத்து அறிவழகனை கைது செய்தார்கள். மக்களிடம் வன்முறையைத் தூண்டியது, அரசுக்கு எதிராய் செயல்பட்டது மட்டுமல்லாமல் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தது என நாலைந்து பிரிவுகளில் வழக்குப் போட்டு குண்டர் சட்டத்தில் சிறையிலடைத்தார்கள். பெரும்பாலானவர் மீது ஆண்கள், பெண்கள் என பேதம் பார்க்காமல் வழக்கு போட்டிருந்தார்கள். சிகாமணி, செம்ப படையாட்சி, உத்தண்ட ராயர், குறள்மணி எல்லோரையும் ஆஸ்பத்திரியில் வைத்து கைதும் செய்தார்கள்.

ஜி.ஆர் டாக்டருக்கு ஜாமின் எடுக்கவும் காயம்பட்டவர்களை பார்க்கவுமாய் ஓயாத அலைச்சல். அலைந்து சோர்ந்து அனைவரையும் வெளியே எடுத்துக்கொண்டு வர வாரம் பத்து நாளைக்குமேல் ஆகிவிட்டது.

வாகன எரிப்பு எதிரொலியாய், முதல் குடிசையைப் பிரித்த தோடு நிறுத்தியிருந்தார்கள். மண் வெட்டுகிற வேலை கூட நின்றுபோயிருந்தது. அறிவழகன் இல்லாது தனியாய் சிகாமணி போகவும் வரவுமாய் பாவமாக இருந்தது. ஆனால் காவல் துறை யினரின் பார்வை அவன் மீது வேறுவிதமாக இருந்தது. அவனைப் பார்க்கப் பார்க்க அவர்களுக்குள் ஏதோ தவறவிட்ட தவிப்பு. அறிவழகனைப் போல், இவனையும் வலுவான ஏதாவது ஒரு வழக்கில் உள்ளே தள்ளியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே என அவர்களுக்கு உறுத்திக் கொண்டிருந்தது.

காய்கறி வாங்க மந்தாரக்குப்பம் போகையில் எதிரே எதேச்சையாய் பூமா. நெற்றிக் காயத்தோடு வந்த சிகாமணியைப் பார்த்தவளுக்கு குபுக்கென்று கண்களில் கோர்த்துக்கொண்டது. நெற்றியிலிருந்து இரத்தம் வழிய அவன்

நின்றிருந்த காட்சி உள்ளுக்குள் ஓடியது. ஆனால் எதையும் யாரையும் பொருட் படுத்தாமல் போய்க்கொண்டிருந்த அவனைப் பார்க்கப் பார்க்கத் துடித்தது.

சிறையிலிருக்கிற அறிவழகனைப் போய் குடும்பம் குடும்பமாய் பார்த்துவிட்டு வந்தார்கள். " நானும் வர்றம்பா..." ராசோக்கியத் துடன் பூமாவும் போய்ப் பார்த்தாள். அழுதாள். " என்னா மாமா, திடீர்னு இப்பிடிப் பண்ணிட்டு இங்க உள்ள வந்து... ஒங்கள இந்தக் கோலத்துல பாக்க முடியில மாமா..."

தங்கை ராசவள்ளி, வீட்டுக்காரரோடு வந்து பார்த்துவிட்டு அழுதாள் " என்னா அண்ண இதுலாம்..."

" எப்பியும் என்ன கூடவே கூப்புட்டுக்கிட்டு போயிட்டு, அன்னைக்கி மட்டும் என்ன, ஏண்ண தனியா வுட்டுட்டுப் போனிங்க... கூப்புட்டா வரமாட்டன்னு நெனைச்சிட்டிங்களா அண்ண..." காவலர்களின் எச்சரிக்கையையும் மீறி கோவென்று அழுது விட்டான். இப்படிக் கதறியழுது, சிகாமணியை யாரும் பார்த்ததே யில்லை. கிளம்பத் தயாராயிருந்த பூமாவின் காதுகளில் விழுந்தது அவன் கதறல்.

" இதுல அழுவறதுக்கு என்னாடா இருக்கு. சாவடியா சனங்களப் போட்டு அடிச்சிக்கிட்டு இருக்கான். நம்ப மக்க மனுசாள அந்த நேரத்துல காபந்து பண்றதுக்கு வேற வழி தெரியிலடா... சரி என்ன வுடு. இதால மக்களுக்கு எதுனாச்சும் நல்லது நடந்து துன்னா எனக்கு அது போதும்."

அம்மா காசாம்பு அழுது களைத்தாள். ரங்கநாது வெளியில் காட்டிக்கொள்ளாமல் உள்ளுக்குள் குமுறியபடி கம்பிகளைப் பிடித்திருந்த அவன் விரல்களைத் தொட்டுப்பார்த்தார்.

அறிவழகனைப் பார்த்துவிட்டு வெளியே வந்த அய்யாவின் முகம் சற்று வாடியிருந்தது. சூழ்ந்துகொண்ட பத்திரிக்கைகாரர் களுக்கு அய்யா அறிக்கையாகக் கொடுத்தார். " மக்களின் உணர்வு களை அரசு புரிந்துகொள்ளாதபோது நடந்த விபரீதம் இது. இதை ஒருசில பத்திரிக்கைகள் உட்பட அறிவுஜீவிகள் வன்முறை என்கிறார்கள். அரசும் கொடூரமான வன்முறை என்று குண்டர் சட்டத்தில் பாய்ந்திருக்கிறது. இது வன்முறை அல்ல. உணர்வுகளின் கொந்தளிப்பு. ஏமாற்றப்பட்டு, மண்ணை விட்டு நிராதரவாய் வெளியேற்றப்பட்ட மக்களின் கோபத்தின் உச்சம். சரிவர அம்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து குறைந்தபட்சம்

கோரிக்கைகளைப் பரிசீலனை செய்திருந்தால்கூட இதைத் தவிர்த் திருந்திருக்கலாம். நிலைமையைச் சரிவரக் கையாளத் தெரியாத நில எடுப்புத்துறை, காவல்துறை, நிர்வாகத் தரப்பு என அதிகாரிகள் மீது அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். போராடிய மக்களின் மீது போடப்பட்ட பொய்வழக்குகளை ரத்து செய்யவும் காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவும் இந்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். பொய்வழக்குகளில் சிறைப்பட்டும், காயம்பட்டும், வேதனைப்பட்டு குண்டர் சட்டத்தில் எங்கள் தொண்டர் தளைப்பட்டுமாய் இருக்கிற இந்தச் சூழலில் கூட அரசுக்கு நான் வேண்டிக்கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஒரு தாயைப் போல, தங்கள் வாழ்வில் உயிரென மதித்த மண்ணைக் கொடுத்து உலகின் வெளிச்சத்திற்கு உதவி புரிந்தவர்கள் அவர்கள். அவர்களின் மனக் கொந்தளிப்புகளுக்கு, உணர்வுகளுக்கு மதிப்பளித்து வீட்டுக்கு ஒருவர் என வேலையும், ஏற்கெனவே நிலம் கொடுத்தவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்பும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.”

குறுக்கிட்டார் நிருபர் ஒருவர் “ இதுக்கு மேலயும் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு வேல கொடுக்க நிர்வாகம் மறுத்தா, ஒங்களோட அடுத்த கட்ட நடவடிக்கை என்னவா இருக்கும்?”

“ என் தலைமையில நிர்வாகத்த எதிர்த்து நானே போராட்டுத்துல எறங்கறது மாதிரிதான் இருக்கும்” சற்றும் யோசிக்காமல் சொன்னார்.

மற்றொருவரும் மைக்கை நீட்டினார் “ ஈழத்தமிழர்களுக்கு ஆதரவா ஏற்கனவே அறிக்க குடுத்துருக்கீங்க. இருந்தாலும் அது சம்பந்தமா இப்ப எதாவது சொல்ல விரும்புறீங்களா?”

“ தமிழ் ஈழத்திற்கு, ஈழத் தமிழர்களுக்கு எங்களின் தொடர்ந்த பேராதரவு எப்போதும் இருக்கும்.” கும்பிட்டுவிட்டுக் கிளம்பினார்.

நெய்வேலி நில எடுப்புத்துறை வரலாற்றில் ஒரு அழியாத கரும்புள்ளியை ஏற்படுத்தி விட்டது வாகன எரிப்பு சம்பவம். மேலும் ஏதாவது இன்னும் சிக்கலான விளைவுகளுக்குக் கொண்டு போய் விடுமோ என்கிற யோசிப்பில் தயங்கித் தயங்கி ரொம்பவும் தாமதமாய்த்தான் நிர்வாகம் அந்த முடிவுக்கு வந்தது.

“ நிலம் கொடுத்தோருக்கு வேலை. மக்கள் கோரிக்கை ஏற்பு.” கொட்டை எழுத்துகளில் செய்தி வெளியானது.

முதலில் அவரவர் படிப்புக்குத் தக்கதான வேலை, அடுத்து தற்போது ஒப்பந்தத் தொழிலாளர்களாய் இருப்பவர்களுக்கு உடனே நிரந்தர வேலை ஆணை, மூன்றாவதாக படிப்பு மிகக் குறைவாக இருப்பவர்களுக்கு வயதுக்குத் தகுந்த வேலை என மூன்று கட்டங்களாக எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிப்பு வெளியாகி இருந்தது. ஆனால் உச்சபட்ச வயது **45**க்கு மேல் இருக்கக்கூடாது எனவும் அப்படி எந்த வகையிலும் வாய்ப்பு இல்லாத குடும்பங் களுக்கு, அவர்களின் வாரிசுதாரர்களுக்கு **18** வயது பூர்த்தியடைகிற சூழலில் தொடர்ச்சியாக வாய்ப்பு வழங்கப்படும் எனக் கூடுதல் தகவல். ஆக உடனடியாக இந்தத் தகவல் கண்டதும் உடன் படிப்பு, வயது தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

எல்லோருக்கும் மனம் கொள்ளாத மகிழ்வு. ஒவ்வொருவரும் சந்திக்கிற இடங்களிலெல்லாம் அறிவழகனைப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். செய்தியைப் பார்த்துவிட்டு குறள்மணி ஊருக்கு வந்ததும், மக்கள் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளாத குறைதான். “ இதுலாம் அறிவழகனுக்குத்தான் சேரும்.” மகிழ்ச்சி பொங்கச் சொல்லிக்கொண்டிருந்தார். ஜி.ஆர். டாக்டர் வரும்போதே வாங்கி வந்த இனிப்பை முதலில் ரங்கநாதுக்கும் காசாம்புக்கும் கொண்டு போய்க் கொடுத்தார்.

அய்யா, நிர்வாகத்தின் முடிவுக்கு நன்றி தெரிவித்தும் அதே போன்று ஏற்கெனவே நிலம் கொடுத்தோருக்கு வாய்ப்பு வழங்க கோரிக்கை விடுத்தும் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

முன்னைய விடவும் கூடுதலாய் மக்கள் போய் அறிவழகனைப் பார்த்துவிட்டு வந்தார்கள். கண்கலங்கக் கையெடுத்துக் கும்பிட்டார் கள். இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பு அவனது தியாகத்தால் வந்த கொடுப்பினை என்று வாயுருகப் போற்றிக் கொண்டிருந்தார்கள்.

*

ஐந்து

46

சி றைச்சாலையை விட்டு வெளியே வந்து, பஸ் ஏறி ஊர் வருகிறவரையில் சிகாமணிக்கு மனம் கனத்துக்கொண்டேயிருந்தது. எப்படி அந்த யோசனை அவனுக்கு வராமல் போய்விட்டது என மனசுக்குள் நொந்துகொண்டான்.

எழுதிக்கொடுத்து அனுமதி வாங்கிக்கொண்டு ஆவலமாய் போய் நிற்கிறான். அறிவழகனைப் பார்த்ததும் கண்கலங்குகிறான் " நீங்க இல்லாம மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு அண்ண..."

" இத ஏங் கஷ்டம்னு நெனைக்கிற. தனியா நின்னு செயல்படறதுக்கு இத ஒரு வாய்ப்பா நெனைச்சிக்க." சொல்லிவிட்டு ஆர்வமாய் கேட்கிறான். " அப்பா அம்மாவப் போய்ப் பாத்தியாடா. வரும்போது கூட இட்டுக்கிட்டு வந்தா என்னா..."

சிகாமணிக்கு பட்டென்று ஒரு தேக்கம். இரண்டு நாளைக்கு முன்பு பார்த்ததுதான். பிறகு பார்க்கவில்லை. அறிவழகன் கூட இல்லாத வருத்தத்திலேயே இருந்து கொண்டிருந்ததில் வேறெதுவும் அவனால் சிந்திக்க முடியவில்லை. மேலும் வக்கீல், வழக்கு, ஜாமீன் என ஜி.ஆரைப் பார்க்கக் கொள்ள அலைந்ததில், போய்ப் பார்க்கவும் இயலவில்லை. காலையில் கிளம்பி வருகிறபோது கூட ஞாபக மில்லை. குறைந்தபட்சம் ' அண்ணனுக்கு சேதி எதாவது இருக்கா' என்று அவர்களைப் பார்த்து கேட்டு வருவதற்குக் கூட ஆதியில்லாமல் போனது அவனுக்கு உதைத்துக் கொண்டிருந்தது. என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தடுமாறினான். " அதான் அண்ண... நீங்க கிட்டக்க இல்லாம, எதிலியும் சரியா எனக்கு ஓசன ஓடமாட்டங்குது அண்ண."

" போயி அப்பிடி அடிக்கடி பாத்துக்கடா. பாவம் வயசானது ரெண்டும் குறுங்குறுன்னு குந்திக்கெடக்கும். அப்பிடி இல்லன்னா ராசவள்ளி வூட்டுக்குனாச்சும் நெய்வேலிக்கி இட்டுக்கிட்டு போயி வுட்டுட்டு வா. பாப்பா வூட்ல பெறாக்கா இருந்தா அதுவுளுக்கு ஒண்ணுந் தெரியாது." அறிவழகன் சொல்லிக்கொண்டிருந்தான்.

" என்னா அண்ண, இம்மாம் பேர் இருக்கற ஊர்ல, பாப்பா வூட்ல கொண்டுபோயி வுடச் சொல்றிங்க. நாம் பாத்துக்கறன், வுடு அண்ண..."

வீட்டுக்குக் கூட வரவில்லை. நேரே ரங்கநாது வீட்டுக்குத்தான் போனான். காசாம்பும் அவருமாகத் தோட்டத்தில் பரிதாபமாகக் குந்தியிருந்தார்கள். வீடு அரவமற்றுக் குடி ஓடியதுபோல் தோன்றியது. திரும்பிப் பார்த்துவிட்டு " வாப்பா" என்றார். சிகாமணியைக் கண்டதும், காசாம்பிற்கு மொளுக்கென்று கண்களில் நீர் கட்டிக் கொண்டது. " ஊரு ஊருன்னு ஏம் புள்ள ஓஞ்சி ஒரு நிமிஷம் ஒக்காந்தது கெடையாது. இன்னைக்கி உள்ற..."

காசாம்புவை ஏறிட்டுப் பார்க்க சிகாமணிக்குத் தெம்பு இல்லை. " போய் பாத்துட்டுதான் வந்தம் பெரிமா."

" என்னாப்பா சொன்னான். எப்பிடி இருக்கான்..." பெற்ற மனம் பதறியது.

ஆறுதலாக இருக்கும் என்று சொன்னான் " அதுலாம் நெல்லா இருக்கு பெரிமா. ஏதோ அண்ணன் துணிஞ்சி அந்த காரியத்த செஞ்ச தொட்டுதான், நிர்வாகம் பட்டுன்னு வேல குடுக்கணுங்கிற முடிவுக்கு வந்துருக்கு..."

" குண்டர் சட்டம்னா ஆறு மாசத்துக்கு கொறையாம உள்ள இருந்துதான் ஆவணுமாம்..." யோசித்தபடி ரங்கநாது சொன்னார். முகத்தில் கவலை ரேகைகள் ஓடியிருந்தன.

யாரோ சொல்லித்தான் விபரமாகக் கேட்கிறார் என்றாலும் தெம்பூட்டுகிறமாதிரி சிகாமணி சொன்னான் " அம்மாந் தொலவுக்கு ஜி.ஆர்.டாக்டரு வுடமாட்டாரு பெரிப்பா. கலெக்டர் மட்டத் திலியும் பேசியிருக்காங்க. கூடிய சீக்கிரம் எடுத்துடுவாங்க. ஆனா எம்மாம் நாளு ஆனாலும் வந்தப்பறம் வேலய வாங்கிடலாம்."

" வேல கெடக்குது வுடுப்பா. இதலாம் பாத்தா ஏம் புள்ள அந்தக் காரியத்துல எறங்குச்சி. மக்கள காபந்து பண்ணுனும்னு அதுக்கு ஒரே நெனப்பு." ரங்கநாது நெகிழ்ச்சியாகச் சொல்லும் போது கண்களில் தளும்பியது.

" சரி வர்றம் பெரிப்பா. எதுனாச்சும் வேணும்னா சொல்லுங்க. அண்ணன பாக்குணும்னாலும் இட்டுக்கிட்டு போறன்" கிளம்பினான்.

" அண்ணன பாக்குணும்னா, நாங்க பூடுவம்..." சொன்னவர் சற்று தயங்கியது மாதிரி தொடர்ந்தார். " வேல குடுக்கறது உறுதி யானதும் அநேகமா ஒடந்தடம்னு எல்லாரும் மாத்துக் குடியிருப்புல வூடு கட்ட ஆரம்பிச்சிருவாங்க. தம்பி வெளிய வந்து, வூடு கட்டி போறவரைக்கும் இங்க இருக்க வுடமாட்டாங்கன்னு நெனைக்கிறன். காசி பணம்லாந்தான் கையில இருக்கு. செத்த ஆளா மெனக்கிட்டு, எங்குளுக்கு சின்னதா சாக

ஒண்ணு அங்க பொணைச்சி வுடு. தம்பி வந்தப்பறம் அதும் பிரியத்துக்கு பாத்து பெரிசாக் கட்டிக்கும்...”

பதறிப் போய்விட்டான் “ என்னா பெரிப்பா இப்பிடிச் சொல் லிட்டிங்க. அப்பிடி ஒங்கள வுட்டுட்டா இந்த ஊரு சனம் பூடும். ஒரு வார்த்த சனங்ககிட்ட சொன்னா போதும். அது அது அண்ணனுக்கு எதாவது செய்ய முடியாதான்னு ஏங்கிக்கிட்டு கெடக்கறப்ப... வாணாம், வூடு கட்றத, ஏம் பொறுப்புல வுடுங்க...”

*

47

மூன்று குறுக்குத் தெருக்களும் இரண்டு நெடுந்தெருக்களும் கொண்டு பரந்து விரிந்து கிடந்த பெரிய ஊரைச் சுருக்கி, நொண்டி விளையாட்டுக் கட்டங்களைப் போல குட்டித் தெருக்களும் சின்னச் சின்னதாய் மனைப்பிரிவுகளும் கொண்டதுமான மாற்றுக் குடியிருப்பு. அரைக்காணி அளவிற்குத் தோட்டம் வைத்திருந்த வனுக்கும் சரி, அந்தாண்ட தெருவில் தலைவாசல் படியும் இந்தாண்ட தெருவில் தோட்டத்து வாசப்படியுமாய் சுத்துக்கட்டு வளப்பு வீட்டுக்காரனுக்கும் சரி, சமமாய் எல்லோருக்கும் மூன்று செண்ட்டுதான் மனைக்கட்டு. குறுக்கிக்கொண்டு படுத்தாலும் நீட்டிக்கொண்டு படுத்தாலும் அவரவர் சாமர்த்தியத்திற்கு விட்டிருந்தார்கள்.

“ இப்ப என்னா நாலு காணி நெல்லு அடிச்சி நாப்பது தப்பிட்டியில வைக்கப்போரு போடப் போறமா. இல்ல நூறு மூட்ட எரநூறு மூட்ட புடிக்கிற மாதிரி தொம்பைய கிம்பைய வைக்கப் போறமா. இருவது முப்பது மாட்ட கட்டுத் தெருவுல கட்டி சாணி சவுதிய அள்ளிக் குப்பையில கொட்டப் போறமா. வெறும் ஒடம்பப் போட்டுக் கெடத்தி ஏந்திரிக்கறதுக்கு... எதோ கிட்டக்க இதையாவது கையக் காட்னான...”

அவரவர் மனைகளில் அவசரத்திற்கு சிமிட்டிக்கால் நட்டு கொட்டகை போடுவதும், சுவர் வைப்பதுமாய் அரக்கப்பரக்க வீடு கட்டுகிற வேலை. கல்லும் மண்ணும் வண்டிகளில் வந்து சரமாரியாய் இறங்கிக் கொண்டிருந்தன. கழிகள், கீத்துகள், கயிறுகள் என இது ஒரு பக்கம். இதுவல்லாமல் வீடு கட்ட, கீத்து போட என்று கைதேர்ந்த முத்தாண்டிக்குப்பம், எலவத்தடி ஆட்களின் படையெடுப்பு வேறு.

கரி படாச்சி அவருக்கு ஒதுக்கிய மனையில் வண்டியை நிறுத்தி பழைய கரி படிந்த கீத்து மரங்களை இறக்கிக்கொண்டிருந் தார். எட்ட ஓடி விழுந்த கழிகளை, குச்சிகளை முத்துக்கண்ணு ஆயி கிட்டக்க எடுத்துப் போட்டுக்கொண்டிருந்தாள். பின்னால் இருந்த ராசோக்கியம் மனையில் வந்து நின்ற சிறிய லாரியிலிருந்து சிமிட்டி ஓடுகள், இரும்புக் குழாய்கள் என இறக்க ஆரம்பித்ததும் வண்டியிலிருந்தபடி கரி படாச்சி கேட்டார் “ என்னாப்பா ஆளு இல்லாத மனையில எறக்குறீங்கள. யாருதுன்னு தெரிஞ்சிதான் எறக்குறிங்களா...”

“ நாந்தாம் பெரிப்பா எறக்கச் சொன்னன்...” சைக்கிளிலிருந்து இறங்கியபடி சதாசிவம் உற்சாகமாய்ச் சொன்னான்.

இறக்கிய கழி, கீத்துகளிலிருந்த கரி, உடம்பெல்லாம் பூசிக் கொள்ள கரி படாச்சி ரொம்பவும் கருப்பாகத் தெரிந்தார். “ என்னா பெரிப்பா, புதுசாப் பத்துக் கீத்த வாங்கிப் போட்டுக் கட்டுவம்னு இல்லாம ஒட்டட படிஞ்ச கீத்த வைச்சிக்கிட்டு ஒடம்பெல்லாம் கரியப் பூசிக்கிட்டு...” கேட்டான்.

கடித்தவாய் துடைத்தமாதிரி சொன்னார் “ எல்லாப் புதுசும் இந்த பழசுலேர்ந்து வந்ததுதான். ஒங்களாட்டம் நாலு காணி தரை இருந்து வுட்ருந்தா நானும் ஓகோன்னு ஓட்டலாம். இருக்குட்டும் வுடு. நாங்களும் பழசு. எங்க கூரையும் பழசு.” ஆரம்பத்தில் லேசாய் குத்துவதுபோல் கோடி காட்டி, கடைசியில் நகைப்பாய் முடித்தார்.

அவனால் பதிலேதும் சொல்லமுடியவில்லை. கரி படாச்சி திரும்பவும் பேசினார் “ ஏம்ப்பா, நானும் கேக்கலாம்னுதான் நெனைச்சன் மறந்துட்டன். ஆமா ஒப்பன எங்க காணம். தனியா எறக்கிக்கிட்டு கெடக்கற...”

அவனுக்கு திரும்பவும் பதில் சொல்ல முடியாத சிக்கல். கொஞ்சம் இழுத்த மாதிரி சொன்னான் “ அவுருக்கு இங்க வூடு கட்றதுக்கு ஒண்ணும் நாட்டம் ஓடுல. குடும்பத்த பெரட்டிக்கிட்டு போயி முதனையில தங்கிக்கிட்டு, நெலம்பலத்த வாங்கி பழைய குருடி கதவத் தொறடிங்கற மாதிரி, ஒத்த ஏர ஓட்டி ஒழப் பறிச்சிக்கிட்டு கெடந்தாதான் ஒக்கிதன்னு நிக்கிறாரு. வூட்ல இருக்கறதுவோ அவுருக்கு மேல, தொடைய தட்டிக்கிட்டு நிக்கி துவோ. யாரு எங்க போனாலும் போவுட்டும்னு நா வூட்ட கட்றம் பெரிப்பா...”

பெரிய லாரிகள் இரண்டு, புதுமண் மடித்த தெருவில் டயர்கள் புதையத் திணறியபடி தலைப்பு மனைகளுக்கு நேரே நின்று கொண்டிருந்தன. இரண்டு லாரிகளிலும் கொள்ளாது செங்கற்கள். தலைப்பு மனைகள் தனபாலுடையவை. நிலமெடுக்கிற விஷயத்தில் நாயைப்போல் வாலை ஆட்டியதற்கு விசுவாசமாய் எடுமுனையில், ரோட்டை பார்த்தவாறு ரெட்டைமனைகளாய்க் கொடுத்திருந் தார்கள். ஆழக் குழி தோண்டி, அகலக் கடகால் போட்டு உயர உயரத் தூண்கள் நிமிர்த்தப்பட்டு, மேலும் உயர்வதற்கு நுனிகளில் கம்பிகள் நீண்டிருந்தன. லாரிகள் நகரமுடியாமல், சோர்ந்துபோய் நிறுத்திவிட்டார்கள்.

திணறல் சத்தம் ஓய்ந்ததும் கரி படாச்சி சொன்னார். “ ஒப்பனாலாம் இந்த பொறாக்கூண்டு மனையில வந்து குந்திக்கிட்டு பொறங் கைய கட்டிக்கிட்டு நிக்கமுடியாதுப்பா. பாவம் பொழுது முப்பது நாழியும் கொல்ல கொல்லன்னு

கெடந்தவன். அப்பிடி யாவுது போவுட்டும் போ. முதனை தான, நெல்ல மண்ணுதான். மானாவாரியானாச்சும் ஒரு பயிற கியற வெரைச்சி கொற காலத்தையும் நிம்மதியா ஓட்டுட்டம் போ...” பேசிக்கொண்டே இறக்கிக் கொண்டிருந்தவர், தற்செயலாய் இடுப்பை ஆற்றுவதற்கு நிமிர்ந்தபோதுதான் கிழக்கே பார்த்தார். தூரத்தில் வேப்பங் குறிச்சியை ஒட்டிப் போட்டுக்கொண்டிருந்த மண் அணை, மெல்ல மேற்கே சற்று சரிவாக வருவது தெரிந்தது. அதுக்குத் தகுந்தமாதிரி வெட்டு வேலையும் நகர்ந்து வந்துகொண்டிருந்தது.

“ ஒப்பாரு யோசனையும் தப்பு இல்ல. நீ செய்ற இந்த வேலையும் நெல்ல வேலதான். ஒம்மா, பூமான்னு அவுங்க மூணு பேரும் முதனைக்கி குடுத்தனம் போவுட்டும். நீனு அந்த மலரு புள்ளைய ஒரு சரடப் போட்டு இட்டாந்து இங்க வைச்சி குடுத்தனம் பண்ணு.” முத்துக்கண்ணு சொன்னதும் சதாசிவத்திற்குள் நெடும் மௌனம்.

*

48

“ சி காமணி... சிகாமணி...” கிணற்றுக்குள்ளிருந்து கூப்பிடுகிற மாதிரி குரல் கேட்கவும், தாலுகா ஆபிஸ் தூங்குமூஞ்சி மரத்தில் சாய்ந்து கண்ணயர்ந்திருந்தவன், திடுக்கிட்டு எழுந்து குந்தியிருந்தவர் களையெல்லாம் ஒதுக்கிக்கொண்டு வாயிலை நோக்கி ஓடினான். அதற்குள் இரண்டாவது, மூன்றாவது முறையும் கூப்பிட்டுவிட்டு, பேப்பரை அடியில் செருகிவிட்டான்.

அ டு த் து ‘ ராசமாணிக்கம்’ ஓடிக்கொண்டிருந்தது. சிகாமணிக்கு வெறுத்துவிட்டது. வளையல்பெட்டி போன்று ஒரு மேஜையில் சர்னமர்ன கணக்குகளையெல்லாம் பரப்பிவைத்துக் கொண்டு, கையிலிருந்த காகிதங்களின் பெயர்களை ஊனாடி ஊனாடிப் பார்த்துக் கொண்டிருந்தவனிடம் கெஞ்சினான் “ ஏங்க, நா சிகாமணி...”

“ கூப்புட்டப்ப எங்க போன... இனி கடைசியிலதான்...”

பசி வேறு, அவனுக்குத் தலை வெடித்து விடுகிற மாதிரி யிருந்தது. இரண்டு மூன்று நாளாய் தாலுகா ஆபிசுக்கும் வீட்டுக்கு மாய் இதே வேலைதான். அச்சகத்தில் படிவங்களை வாங்கி கூட மனு எழுதி கிறுக்கல் வாங்கிக் கொண்டுபோய் ஊர் மணியக் காரரிடம் வாசகம் செப்பி வாங்கி வந்து கொடுத்து ஆர்.ஐ, தாசில்தார் என ஒவ்வொரு மேசையிலும் அது தரிசனம் கிடந்து கடைசியில் இந்த சித்திரகுப்த டபேதாரிடம் வரும்போது, எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் கூனிக் குறுகித்தான் போக வேண்டியிருந்தது.

சிகாமணிக்கு ஏற்கெனவே கல்லூரியில் சேரும்போது இந்த சாதி, வருமானச் சான்றிதழ்களை வாங்கியபோது பட்ட அனுபவம் இருக்கிறது. அந்த அனுபவத்தால் இங்கு எந்த வேலையும் எளிதில் முடிந்துவிடாது என்று தெரியும். எத்தனை முறை எடுத்தாலும் அத்தனை முறையும் அலைச்சலும் எரிச்சலும் அடைந்துதான் தீரவேண்டும்.

கல்லூரியில் வாங்கி வைத்திருக்கிற பழைய சான்றிதழ்களே போதும். இடையில் சாதியும் மாறிவிடப் போவதில்லை, வருமானமும் பெரிதாய்க் கூடிவிடப் போவதில்லை. ஆனால் இதுவே உயிரைக் கொடுக்காத குறையாய் சளைக்காமல் தொடர்ந்து போராட்டத்தின் மேல் போராட்டம் செய்து, கடந்து ஒருவர் குண்டர் சட்டத்தில் உள்ளே போய் கல்லிடுக்கில்

கசிந்தமாதிரி வந்த வாய்ப்பு. நொண்டிக்கு சறுக்கனது வாட்டம் என்று எதையாவது காரணங் காட்டிக் கையை விரித்துவிட்டால் என்ன செய்வது என்றுதான் புதிதாய் எல்லாமும் எடுக்க மெனக்கிட்டது. அதுவும் திடுமென அண்மையில் வெளிவந்த இரண்டாவது அறிவிப்பில் சான்றிதழ்களைப் பத்து நாட்களுக்குள் அதாவது **20.10.88** மாலை **5.00**க்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று கெடு விதித்திருந்ததில் ‘ அடிச்சன் புடிச்சன்’ என்று வந்து நிற்க வேண்டியதாகிவிட்டது.

எங்கு பார்த்தாலும் கையில் பையில் காகிதங்களுடன் கூட்டம். சிகாமணியால் நிற்க முடியவில்லை. கழி, மரம் எல்லா வற்றையும் கொண்டுபோய் மாற்றுக்குடியிருப்பில் வீடு கட்ட கடகால் பறிக்கிற இடத்தில் போட்டுவிட்டு வருமாறு அப்பன் செங்கல்ராவிடம் சொல்லிவிட்டு வந்திருந்தான். அவருக்குக் குடிப்பதற்குப் புதிதாய்க் கிடைத்திருக்கிற காரணம் - ‘ கொம்பு குத்தன காயத்துல உள்கொண்டு வலிக்கிது. இதப் போட்டா செத்த ஒரு மாதிரியா இருக்கு.’ ஆனால் போட்டுக்கொண்டு விட்டால் வலியாவது கிலியாவது!

தோதாய், மாற்றுக்குடியிருப்பிலிருந்து இங்காண்ட ரோட்டைத் தாண்டினால் கருவைப் புதரில்தான். ஊற்றிக்கொண்டுவந்து வேலை செய்கிற இடத்தில் ஆள் நமோதிற்கு முடங்கிக் கிடந்தால் கூட பரவாயில்லை.

“ சிகாமணி...”

இரண்டாவது தேடலில் கிளி இவனது சீட்டை எடுத்து வைத்துக் கொண்டு கூப்பிட்டது. தயாராய் வைத்திருந்த பத்து ரூபாயை நீட்டியதும், கையில் கொடுத்தது. வெளியில் வந்து நின்று நிதானமாக ஒவ்வொன்றையும் பார்த்தான். சிகாமணியில் சின்ன ‘ னி’ போட்டிருக்கிறதா பெரிய ‘ ணி’ போட்டிருக்கிறதா, அப்பன் செங்கல்ராவுக்கு செங்கல்வராயர் என வந்திருக்கிறதா கொம்பு, கால், புள்ளி எல்லாமும் போட வேண்டிய இடத்தில் பொறிக்கப் பட்டிருக்கிறதா எனக் கண்ணில் விளக்கெண்ணை ஊற்றிக்கொண்டு பார்க்காத குறையாய்ப் பார்த்தான். ‘ நமக்கு சரியா இருக்கறதுதான் மொதல்ல கண்ணுல படும். சரி பாக்கறவனுக்கு தப்புதான் மொதல்ல கண்ணுல வந்து சிக்கும்’.

ஆவாத பொண்டாட்டி மனநிலையில் நிறுவனம். குறிப்பாய் அறிவழகனும் இவனுந்தான் இதற்கு முக்கிய காரணம் என்கிற மாதிரி எந்தக் குற்றத்தைப் பார்த்து எதில் கழற்றி விடலாம் எனத் தேடித் தேடிப் பார்க்கும். இவன் பார்வைக்கு எல்லாமும் சரியாக இருந்தது. ஆனாலும் வருமானச்

சான்றில்தான் நிலங்களை யெல்லாம் பிடுங்கி பள்ளம் தோண்ட ஆரம்பித்த பிறகும் தொழில் என்கிற இடத்தில் ‘ விவசாயம்’ என இருப்பதைக் கண்டதும் பசியிலும் சிரிப்பு வந்தது.

திருப்தியாய் வெளியே வருகிற நேரம் பால்ராசும் சதாசிவமும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். சிகாமணியைப் பார்த்ததும் சதாசிவம் ஒதுங்கிக்கொண்டான். பால்ராசு நேராய் கிட்ட வந்து கையிலிருந்த படிவத்தைக் காட்டினான். “ எல்லாம் சரியா இருக்கான்னு பாரு.”

“ இதுக்குலாம் அறிவழகன் அண்ணந்தான்டா பொருத்தமா இருக்கும். பட்டு பட்டுன்னு இன்னது இந்த எடத்துலன்னு கண்டு புடிச்சிடுவாரு” படிவத்தைப் புரட்டிப் பார்த்து திருப்தியில் கொடுத்தான்.

“ நேத்திக்கி நானும் சதாசிவமுந்தான் போய்ட்டு வந்தம். ஆனாலும் அவுரு மாதிரி யாருக்கும் மனசு வராது. உள்ள இருக்கற இந்த நெலையிலயும் இதப் போயி அங்க எடு, மணியக்காரர பாரு, தலையாரியப் பாருன்னு நம்ப பேர்ல என்னா அக்கற தெரியுமா.” பால்ராசு உற்சாகமாய்ப் பேசிக்கொண்டே போனான்.

சிகாமணிக்கு ஆடி மாத மொட்டை ஈசலாய் அறிவழகனும் தானுமாய் இணைபிரியாமல் போவது உள்ளுக்குள் ஓடியது. பால்ராசு தொடர்ந்தான் “ அப்பறம் சொல்ல மறந்துட்டன். ஒங்கள என்னைல்லாம் குறுக்க நெடுக்க குறள்மணி அண்ணன், ஜி.ஆர்னு போய்ப் பாத்துட்டு வரச்சொல்லிச்சி. ஏதோ காரியம் சாஞ்சதும் சங்கத்த கண்டுக்காம வுட்டுட்டாங்கன்னு தப்பாப் புரிஞ்சிக்கிட்டு, அது மேல அய்யா வரைக்கும் பூடும்னாரு.”

“ நானும் அதான் நெனைச்சன். இந்த சர்டிபிகேட் எடுக்கறது அப்ளிகேஷன் குடுக்கறதுலாம் முடிச்சிட்டு ஒரு நாளைக்கி எல்லோரையும் போயி பாத்துட்டு வருவம்” சொல்லிக் கொண்டிருந் தவன், அடுத்து கொஞ்சம் தயக்கமாகத் தொடங்கினான் “ ஒண்ணு மில்லடா... நம்ப பசங்க கிட்டலாம் சொல்லி வைய்யி. அந்த பெரிப்பா பணம்லாம் குடுத்துடுவாரு. நாமெல்லாம் ஆளா நின்னு மெனக்கிட்டா போதும். அறிவழகன் அண்ணனுக்கு ஒரு ஓட்ட கட்டிக் குடுத்துடுணும். வாய வுட்டு அந்த பெரிப்பா மனம் பேதலிச்ச மாதிரி கேக்கறாரு...”

பால்ராசுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. “ எப்பன்னு சொல்லு. நீங்கள்லாம் ஏதோ காலேஜ் வரைக்கும் படிச்சிருக்கீங்க. பத்தாவதோட ஊத்தி மூடிக்கிட்ட எனக்குல்லாம் ஒரு நெல்ல வேல கெடைக்குதுன்னா அது அறிவழகன் அண்ணனாலதான். சொல்லு, கிட்ட நின்னு நாம்பளே

செஞ்சி குடுத்துடுவம்.” நெகிழ்ச்சி யாகச் சொன்னான்.

உச்சிவெயில் மண்டையைப் பிளந்தது. வீட்டிற்குப்போய்ச் சாப்பிட்டுவிட்டு பிறகு கடைகால் பறிக்கிற மாற்றுக்குடியிருப் பிற்குப் போகவேண்டும் என்று வேகவேகமாக நடந்து கொண்டிருந் தான். சங்க அலுவலகம் பூட்டிக்கிடந்தது. ஓரத்தில் சாய்த்து வைத்திருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு ஏறப்போனான். பின்னால் ஒரு சைக்கிள் வந்து நிற்பது தெரிந்தது.

திரும்பினான். மேற்குத் தெரு கோதண்டபாணிதான், இறங்காமல் காலை ஊனியபடி சிரித்தார் “ ஒப்பனுக்கு ஒண்ணு அடிச்சி ஒன்றரையில ஓடுதுடா...”

திக்கென்றது சிகாமணிக்கு. “ என்னா மாமா சொல்றீங்க...” பதட்டமாகக் கேட்டான்.

“ போயி பாரண்டா, கடகால் வெட்ற எடத்துல. ஒப்பனுக்கு கூத்தும் பாட்டும்... வுட்டா வேல செய்ற அத்தன பேருக்கும் வேஷத்த போட்டு கூத்து ஆட வைச்சிடுவாம் போல்ருக்க.”

சைக்கிளிலாவது அம்மாவைக் கொண்டுபோய் விட்டுவிட்டுப் வந்திருக்கலாம் என்று பட்டது. “ சரி போயி ஆவுட்டும்...” அவரை ஒதுக்கிவிட்டு வேகவேகமாக மிதித்துக்கொண்டு போனான். ஊரை நெருங்கும்போதே புழுதிக்காற்று அனலாய் வந்து மோதியது. லாரிகள் வந்து கடந்து போனபோது புயலாகவே தாக்கியது. நிர்வாகம் போகச் சொல்கிறதோ இல்லையோ, எவ்வளவு சீக்கிரம் காலி செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் புழுதியை விட்டு காலி செய்வது நல்லது என்று பட்டது.

வீட்டு வாசலில் போய் சைக்கிளை நிறுத்தியதும், நடையில் நின்றிருந்த அம்மா அவசரமாய் வெளியே ஓடிவந்து, தெற்குவெள்ளூர் பக்கம் போய்க்கொண்டிருந்த தபால்காரனைக் கூப்பிட்டாள். “ ஏங்க... எங்க தம்பி வந்து போச்சிங்க.”

தபால்காரர் திரும்பியதும் இவனைப் பார்த்து அசலாம்பு சொன்னாள் “ எனுமோ வக்கீல் கிட்டேர்ந்து வந்துருக்காம்பா...”

டக்கென்று சிகாமணிக்கு மரம் வெட்டிய வழக்குதான் ஞாபகத்துக்கு வந்தது. அதுவும் கூட வலிந்து முடிக்கச் சொல்லியும் விட்டார்கள். அதற்குப் பிறகு

எந்தச் சிக்கலும் அங்கிருந்து வராத சூழலில் திரும்பவும் வக்கீலிடமிருந்து என்றால்...? கையெழுத்து வாங்கிக்கொண்டு கொடுத்த உரையை வாங்கிப் பார்த்தான். ‘ ஆதிநாராயணன், வழக்குரைஞர், பங்களா தெரு, விருத்தாசலம்’ என்றிருந்தது. ‘ மரத்து கேசு கூட கடலூரு அரிச்சந்திரன் வக்கிலாச்ச...’ குழப்பமாகப் பிரித்தான். படிக்க ஆரம்பித்ததும் அவனுக்கு முகம் இருண்டு போனது.

“ ம தம் கொண்டு ஓடன தேவுடியாளுக்கு சொத்து என்னா கெடக்கு சொத்து. ஓடையாலயும் ஓடப்பாலையும் ஓடனப்ப தெரியாதா சொத்து இருந்த எடம். அந்தத் தேவுடியாளப் போயி நா வெளக்கமாத்தால வெலாகோலுல ஆனப் படாச்சி மொவ நா அசலாம்பு இல்ல...” வாய் ஓயவே இல்லை.

“ ஒழிச்சி தல மொழுவி என்னைக்கி வுட்டேன், இப்ப வந்து நோட்டிசு வுடறாளா... புடிக்கிற பாவம் புடிக்கட்டும்னு, கொண்டக் கோடாலியால ஓம் மண்டைய நாம் பொளக்குல...” குத்துகிற விலா வலியையும் மீறி செங்கல்ராவுக்கு போதையில் கூரங்கூரமாகப் பறக்கிறது பேச்சு.

“ வேலையாடி வேணும் வேல. பொடவைக்கும் உள்ளால கவுட்டியில ஒனக்கு குண்டும் தாயத்துமாடி தொங்குது தேவுடியா. ஏம் புள்ள ஊருக்கு ஒழைச்சி, ஒங்க சேனைவுளுக்குலாம் நெல்லது கெட்டது பாத்து, இன்னைக்கி ஆஞ்சி ஓஞ்சி அழிஞ்சி ஒரு வேல வாங்கறதுக்கு நிக்கிது. போட்டிக்காடி நிக்கிற, முன்டைச்சி முண்டைச்சி... ஓங் கெட்ட எண்ணத்துக்கும் கேடுகெட்ட புத்திக்கும் தான்டி போன மூணாம் நாளே அறுத்து நுணுக்கிட்டு நிக்கிற. இன்னுமாடி மதம் அடங்குல...” அசலாம்பு மனம் ஆறாமல் பாட்டுவிட்டு அடித்துக்கொண்டேயிருந்தாள்.

“ நீ சும்மா இரு புள்ள. ஏங்கூடதான பொறந்தா. ஏங்கிட்ட தான கேக்கறா. அவள ஏங் கையாலேயே முடிக்கிறன் வுடு...” செங்கல்ராவும் விடாமல் கெம்பிக்கொண்டிருந்தார்.

திடுமென மின்சாரம் நின்றுபோய் எங்கும் இருட்டு. எழுந்து போய் விளக்கேற்றக்கூட மனதில்லாமல் குந்தியிருந்த அசலாம்புக்குத் தாங்கவில்லை. கனிந்து அழுகிறாள் “ ஏம் புள்ளைக்கி போட்டியா இப்பிடி தீம்பு நெனைக்கிறாள, அவ நெல்லா இருப்பாளா நாதியத்துப் பூடுவாளா.”

திண்ணையில் குந்தியிருந்த சிகாமணி எழுந்துபோய் விளக்கைக் கொளுத்தி வந்து, மாடத்தில் வைத்துவிட்டு கலங்கலாய் அசலாம்பை அதட்டினான் “

எம்மா வுடும்மா. சும்மா ஒப்பாரி வைச்சி ஊரக் கூப்புட்டுக்கிட்டு...”

வாசலில் ரங்கநாது வந்து நிற்பது தெரிந்தது. பின்னால் கரி படாச்சியும் நின்றிருந்தார். “ வா... அண்ண...” செங்கல்ராவு கூப்பிட்டார். பெருங்குரலில் பேசிக்கொண்டிருந்ததில், குரல் கெட்டித்துப் போய் இருந்தது.

ரங்கநாதுவைக் கண்டதும் ஒப்பாரியை நிறுத்திவிட்டு, கையை நீட்டி நீட்டிப் புலம்பினாள் “ மதங்கொண்டு போயி அந்த எலுமிச் சானோட ஓடனாள, அந்தச் சின்னத் தேவுடியா குடுக்கற வேலய பாத்தியா அண்ண...”

“ இர்றம் புள்ள. எதுக்கெடுத்தாலும் கத்திக்கிட்டு கெடந்தா சரியாப் பூடுமா. மேல்கொண்டு என்னா செய்ணுமோ அதச் செய்யிணும்.” கோவணத்தை மறைத்துச் சுற்றிய துண்டில் அழுக்குப் படியாதவாறு பின்னுக்கு மழுப்பியபடி குந்திய கரி படாச்சி சத்தம் போட்டார்.

குந்தியபடி ரங்கநாதும் சொன்னார் “ அதாண்டா சாயந்திரமா எங்க காசாம்பு சொல்லிச்சி. இந்த மாரி அந்தச் சின்னது நோட்டிசு வுட்ருக்குன்னு...” சொல்லிக்கொண்டிருந்தவர் முகத்தில் பழைய தெளிவோ வேகமோ எதுவும் இல்லை. அறிவழகன் உள்ளே போன பிறகு முகச்சவரம் கூடச் செய்யாமல் தாடி வளர்ந்திருந்தது. “ ஒண்ணு பணம் குடுக்கறப்ப சிக்கல் பண்ணியிருக்கணும். அப்பல்லாம் வுட்டுட்டு இப்ப வேலைக்கின்னு நிக்கிற கூறுவாயில வந்து... எதோ தூண்டுகால் மேல நடக்கற மாதிரியில்ல இருக்கு.”

தெருவிலிருந்து தயங்கியபடி வாசலுக்கு வந்த வெள்ளைச்சி உள்ளே வந்து நடையில் குந்தினாள். அவளைக் கண்டதும் அசலாம்புக்கு ஆத்திரம் பொங்கியது. “ ஒங்க சேனைவோல்லாம் பண்றது நாயமா. ஒண்ணே ஒண்ணுன்னு ஏம் புள்ள ஒரு ஒட்டி நாக்கு. அதுக்கு ஒரு நெல்ல வழி வந்து சேர்றப்ப குறுக்க வந்து நிக்கிறாளே நாயமா?” என்னவோ வெள்ளைச்சியே மறித்துக் கொண்டு நிற்பதுமாதிரியிருந்தது அவளின் பேச்சு.

வெள்ளைச்சி அழுது விடுவாள் போலிருந்தது. “ ஏம் மாமா, நீனே கேளு. ஏஞ் சேனைன்னு சொல்லுத. எந்தச் சேனைய மதிச்சி அந்த நாடுமாறி போனா. இல்ல நாங்கதான் சொல்லிக்குடுத்து செய்யச் சொன்னமா. குண்டித்திமிரு கொண்டவ. அவளுக்கு ஒண்ணுந் தெரியாதுங்கற மாதிரி ஏங்கிட்ட வந்து வேதி வளத்தனா என்னா மாமா அர்த்தம். ஒண்ணு அந்த ஓடுகாலி நாடுமாறி, குறுக்கால ஒங்களமாரி யாரையாச்சும் வைச்சி நாலு மூணு குடுன்னு கேட்டாலும் பரவாயில்ல. நோட்டிசு அனுப்பி வேலையும் கேக்கறான்னா... அவள்லாம்...” கனத்த உடம்பை வைத்துக்கொண்டு

வேகமாகப் பேச முடியாமல் திணறினாள்.

ரங்கநாது சிகாமணியைப் பார்த்துச் சொன்னார் " அந்த நோட்டிச எடுத்தாடா தம்பி. அப்பிடி என்னாதான் வக்கீலு வக்கன வைச்சி எழுதியிருக்காம் பாப்பும்."

மனுதாரர்

1. ஹம்சலா, W/O (லேட்) தங்கதுரை

எலுமிச்சை, ஊமங்கலம் (அஞ்),

விருத்தாசலம் வட்டம்.

எதிர்மனுதாரர்

2. க.செங்கல்வராய படையாட்சி

S/O கர்த்தா படையாட்சி

வேப்பங்குறிச்சி,

மந்தாரக்குப்பம் (வழி)

நெய்வேலி, விருத்தாசலம் வட்டம்.

மேற்படி எனது மனுதாரர் **(1)** ஹம்சலா த/ பெ லேட் கர்த்தா படையாட்சி, சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு எலுமிச்சை கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கதுரை என்பவரை, தன் வீட்டாரின் மனச்சம்மதமில்லாமல் காதல் திருமணம் செய்து கொண்டார். அதே வேளை தனது தந்தையாரின் சொத்துக்களைப் பரிபாலனம் செய்து வரும்படியான தனது சகோதரர் எதிர்மனுதாரர் (2) செங்கல்வராய படையாட்சி என்பவரிடமிருந்தோ, அவரது பரிவாரங்களிடமிருந்தோ வரதட்சணையாகவோ, திருமணச் செலவாகவோ பணம் நகை எதுவும் பெறவும் இல்லை, வழங்கப்படவும் இல்லை. இந்நிலையில் மேற்படி கிராமத்தில் உள்ள அவர்களது சொத்துக்கள் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் சுரங்கப் பணிகளுக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு முறையே மூன்று நிலைகளில் பணப்பட்டு வாடாக்களும் செய்யப்பட்டுள்ளன. ஆனால் **2** வது நபர் தம் தந்தையாரின் சொத்திலிருந்து சிறிதும் பணம் பெறாத நிலையிலிருக்கும் **1** வது நபருக்கு நெய்வேலி நில எடுப்புத்துறையில் வழங்கப்பட்ட தொகையிலிருந்து நகையாகவோ பணப் பலனாகவோ நாளது தேதி வரை எதுவும்

வழங்கவில்லை. மனிதாபிமான முறையில் கூட தனக்கு கிஞ்சித்தும் உதவி புரிய மனம் வராத சூழலில், மேற்படி தமக்கு பாகஸ்தான சொத்திலிருந்து தனக்குச் சேர வேண்டிய பங்குத் தொகையையும், மேலும் கணவரை இழந்து கைம்பெண்ணாய்த் தவித்து காலம் கழிக்கும் தமக்கு, மேற்படி நிலத்து வழி இழப்பீடாக வருகிற வேலைவாய்ப்பைத் தனக்கே வழங்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளார். இந்நோட்டிஸ் கண்ட பதினைந்து நாட்களுக்குள் தக்க பதிலேதும் தாக்கல் செய்யாத அந்நியில் நீதிமன்றம் மூலம் தகுந்த மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

இப்படிக்கு

ஆதிநாராயணன், **B.A.B.L,**

வழக்குரைஞர்.

*

49

மந்தாரக்குப்பத்திலிருந்து விருத்தாசலம் போகிற பாதையில் பத்து மைல்களுக்குள்தான் அரசகுழி. 219 பெரியாரில் போய் இறங்கி 9ல் ஏறினால் வடக்கே நான்கு மைலுக்குள் முதனை. ராசோக்கியமும் பாஞ்சாலையும் போய் இறங்கியபோது பொழுது உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தது. ஏரித்தோப்பிற்குப் போகிற ரோட்டை விட்டு தெருவுக்குத் திரும்பினார்கள். " என்னா பாஞ்சால, முதனைப் பக்கம் ஆளக் காணம். பூசத்துக்குக் கூட வல்ல."

இருவருமே திரும்பினார்கள். திருப்பத்தில் முதல் வீடுதான் ராதாவுடையது. ராதா, பாஞ்சாலை ஈடுதான். இவளைப் போலவே பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி காரியங்களைப் பார்த்து நலிந்ததில் அவளுக்கும் தலை நரைத்திருந்தது. வடக்குத் தெருவுக் காரி. நடுத்தெருவில் வந்து செம்புலிங்கத்தைக் கட்டிக்கொண்டவள்.

" எங்கடி மாளுது. அங்க வேற ஊர காலி பண்ற அவதி கொள்ளையில எந்தப் பூசத்த கண்டம், பொங்கல கண்டம்." பாஞ்சாலை சொல்லிக்கொண்டே போனாள்.

எதிர்பார்த்த மாதிரி சைக்கிளில் சிவப்பிரகாசம் வந்து கொண்டிருந்தார். பளீரென்ற வழுக்கைத் தலையில் மின்னியது வெயில். நல்ல மனிதர். ஊரில் முக்கியமான புள்ளி. நியாயத்தைப் பிடித்துப் பேசக்கூடியவர். இவர்களைப் பார்த்துவிட்டு நிறுத்தினார். " வாங்க வேப்பங்குறிச்சார.... வாம்மா.." கூப்பிட்டார்.

" வர்றம் அண்ண... ஆயிசு நூறு. ஒங்களத்தாம் பாக்கலாம்னு வந்தம். தங்கப் பழத்துகிட்டகூட சொல்லியனுப்பியிருந்தன்." நினைத்துக் கொண்டு வந்தவர் தெய்வச் செயலாய் எதிரில் கிடைத்த மகிழ்வு ராசோக்கியம் எதிர்பார்ப்போடு சொல்லிக் கொண்டிருந்தார்.

" அப்பறமா அப்பிடி வாங்களன். வூட்லதான் இருக்கன், பேசிக்கலாம்..." சொல்லிவிட்டு, சைக்கிளை மிதித்துக்கொண்டு போனார். இவர்களும் நடந்தார்கள்.

வீடு திறந்து கிடந்தது. பாஞ்சாலை கூப்பிட்டாள் " மலரு..."

“ அத்த.....” மலரிடம் மட்டும்தான் லேசான குரலைக் கூட உடனடியாகக் கண்டுபிடித்து விடுகிற துல்லியம் உண்டு. உளுந்து உடைத்துக்கொண்டிருந்த மலர், கூப்பிட்டுக்கொண்டு வெளியே ஓடி வந்தாள். அத்தையைக் கட்டிக்கொண்டாள். “ வாங்க மாமா...” கூப்பிட்டாள். பாஞ்சாலை வாஞ்சையாய் உளுத்தம் மாவு படிந்திருந்த தலைமுடியைக் கோதிவிட்டாள். தாவணி பாவாடையில் பச்சைக்கொடியைப் போன்ற மலர். அப்படியே வேரோடு பிடுங்கிக் கொண்டுபோய் தன் குடும்பத்தில் நட்டுக்கொள்ள வேண்டும் எனத் துடித்தது அவளுக்கு.

உற்சாகத்தில் பரபரப்பாய் பாயை விரித்துப்போட்டாள். தண்ணீரைச் சாய்த்துக் கொடுத்தாள். வெளியே ஓடி மேற்கே திரும்பி சத்தமாய் சொன்னாள் “ஏ அண்ணியோவ்... ஊர்லேர்ந்து எங்க அத்தையும் மாமாவும் வந்துருக்காங்க... எங்க அம்மா துணி தொவைக்க ஏரிக்கிப் போச்சி. சீக்கிரம் வரச்சொல்லுங்க...”

“ வரட்டும், வந்து குந்தும்மா..” பூவையும் மிச்சரையும் எடுத்துக் கையில் கொடுத்தாள். வாங்கியபடி கேட்டாள் “ பூமா எப்படி யிருக்கா... மாமன்..”

விசாரிப்பு மாமனுக்கு நுழைந்ததும் பாஞ்சாலை பேச்சை மாற்றினாள். “ அப்பா என்ன ஷிப்டுக்குமா போயிருக்கு...”

“ அவுருக்கு என்னா... எந்த ஷிப்ட்டுக்கு, எப்ப போறார்னு யாருக்குத் தெரியும். போவாரு வருவாரு” சொல்லிக்கொண்டே போய், சிறு பந்தலிட்ட தோட்டத்து அடுப்பைப் பற்ற வைத்தாள்.

பாஞ்சாலையும் எழுந்து வெளியில் வந்தாள். தோட்டத்தில் மேற்காலப் பக்கமாய் தெற்கு வடக்கில் சற்று பெரிய வீடு போன்று கொட்டகை. பாதிக்கு சற்று கூடுதலாய் இடுப்பளவு கைப்பிடிச் சுவர் வைத்து, மெழுகிய சாணத்தரை. அங்காண்ட மீதிப் பாகம் வெறும் மரக்கால்களோடு, மணல் அடிக்கப்பட்டு, மாடு கட்டிக்கிடக்கிற தாவு.

பாஞ்சாலை கொட்டகையின் மெழுகிய தாவில் வந்து நின்று சுற்றிலும் பார்த்தாள். சின்ன இடம்தான். ஆனாலும் நிலம் அமைந்து மனை வாங்கி வீடு கட்டுகிறவரை இதில்தான் தங்கவேண்டும். இன்னும் ஒரு படைக்கு மேலே சுவர் வைத்தால் போதும். கதவு போடவேண்டும். ஒரு கணம் அவளுக்குள் வேப்பங்குறிச்சியின் விசாலமான வீடு மனசுக்குள் வந்துபோனது.

“ எந்த ஏஞ் சாண்ட நக்கியாரு ஏங் கோழியப் புடிச்சான்னு தெரியலிய....”

குரல் கேட்டு வெளியே வந்தாள். கிழக்கால வீட்டுக் காரி நரிமடத்தாள் தான், எப்போதும் போல பாட்டு விட்டுக் கொண்டிருந்தாள். அந்தக் காலத்திலிருந்து எதையாவது காண வில்லையென ஓத்தாம்பாட்டு விட்டுக்கொண்டு கிடப்பாள். தனித்த போக்கு எதுவும் யாரிடமும் வைத்துக்கொள்ள மாட்டாள்.

“ இவ பாட்டையும் காதுல வாங்கறமாதிரி ஆண்டவன் என்னியக் கொண்டாந்து வுட்டுருக்கான்...”

“ நரவலு கெடக்குது பாத்து வா வேப்பங்குறிச்சார...” சிவப்பிர காசத்தின் எச்சரிக்கையும் மீறி காலில் மிதித்துக்கொண்டு விட்டார். அருகிலுப்புடன் நடந்துபோய் வரப்பு அறுத்தோடியில் சாய்ந்து கிடந்த காணிக்கல்லில் காலைத் தேய்த்தபடி சுற்றும்முற்றும் பார்த்தார். ஊருக்கும் மேற்கே, ஏரிக்குப் போகிற பாதையின் ஒதுக்குப்புறம். மக்கள் ஒதுங்கி ஒதுங்கி நாலாகடையும் ஒரே நாற்றம். அருவாமூக்குப் பூண்டுகளும் நெருஞ்சிகளும் முளைத்து ஒரே வதிகாலாய்க் கிடந்தது. வால்வீச்சாய் கிடந்த இடத்தைக் காட்டிச் சொன்னார் “ இது குடுக்கறதுதான். இந்த வதிகாலுக்கே, விருத்தாலத்து ரேட்டுக்கு வெலய சொல்வானுவோ.”

ராசோக்கியத்திற்கு இன்னம் அருகிலுப்பு விடாமல் இருந்தது. அடுத்தும் இட்டுக்கொண்டு போனார். ஓடை ஓரமாக ஒரு இடத்தைக் காட்டினார். “ இந்த நாலு செண்ட்டும் வுடறதுதான்னு சொல்லிக்கிறானுவோ. இந்த நாலு செண்டு காசிக்கி, நாலு ஏக்கர் முந்திரி வாங்கலாம்.”

ஓடையில் இறங்கி, ஏறி செம்பையய்யனார் கோயில் போகிற பாதையில் நடந்துகொண்டிருந்தார்கள். வலதுபுறத்தில் தாமரை பூத்துக்கிடக்கிற, எந்த நாளையிலும் வற்றாத ஊர் ஏரி. ஏரிக்கும் வடக்கால சிவன் கோவிலின் பிம்பம் அசகுலையாமல் தண்ணீரில் கிடந்தது. ராசோக்கியம் பார்த்துக்கொண்டே வந்தாலும், அவர் காட்டிய இடங்கள் எல்லாமும் உள்ளுக்குள் அமுட்டிக் கொண்டே யிருந்தது. கொல்லைவெளியின் ஈரக்காற்று வந்துமோதும் வேப்பங்குறிச்சியின் தோட்டமும் வீடும் மனசுக்குள் வந்தது.

செம்பையய்யனார் கோயிலுக்கும் முன்பாக இடது பக்கத்தில் மூங்கில் படல் கட்டியிருக்கிற ஒரு தோட்டத்தைக் காட்டினார். நல்ல அழகான, இயற்கையான இடந்தான். ஆனாலும் வெகு தொலைவுக்கு எட்டின வரைக்கும் வீடுகள் எதுவுமில்லை. அங்காண்ட போனால் மர

அடம்புகளுக்குள் செம்பையய்யனார்தான். வயதுப் பிள்ளையைத் தனியாய் வைத்துக்கொண்டு, அதுவும் உள்ளூராக இருந்தாலும் பரவாயில்லை, வந்தாரங்குடியாக வந்து தங்குவது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது.

எதிரில் வயதானவர் ஒருவர் கழியை ஊன்றிக்கொண்டு வரவும், சிவப்பிரகாசம் கேட்டார் " கொல்லிக்கா பெரிப்பா போய்ட்டு வர்ற..."

நின்று நிதானமாக நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னார் " ஆரு சீப்பிராசமா. கொல்லிக்கி எங்கடா போறன். சும்மா கோயிலுக்கு போய்ட்டு வந்தன்." பக்கத்தில் நின்றிருந்த ராசோக்கியத்தைப் பார்த்துவிட்டு சந்தேகமாய் நெற்றியைச் சுருக்கினார்.

சிவப்பிரகாசம் சொன்னார் " நடுவீதியில சின்னத்தம்பி இல்ல, அவுரு தங்கச்சி வூட்டுக்காரரு.." ராசோக்கியத்திடமும் சொன்னார் " கொழந்தவேல் பெரிப்பா. சிவன்கோவில் கிட்ட வூடு."

"ஓ... வேப்பங்குறிச்சி புள்ளாண்டனா. கண்ணு புரியிலடாப்பா. செம்பையய்யா கோயில்ல, ஓங் கல்யாணத்தன்னைக்கி ஒன்னப் பாத்ததுதான். எம்மாங் காலம் ஓடிப்போச்சி." பெருமூச்சி விட்டபடி கேட்டார் " ஆமா... என்னா இம்மாந் தூரம் ரெண்டு பேருமா?"

" அதாம் பெரிப்பா. அங்க வேப்பங்குறிச்சிலாம் நெய்வேலில எடுத்துட்டாங்க. இப்பிடி நெலம்பலத்த வாங்கிக்கிட்டு வூட்டக் கட்டிக்குவம்னு பாக்கறாரு. அதாம் குடுக்கறமாதிரியிருக்கிற மனக் கட்டுவுள காட்றன்."

பெரியவர் வாயில் அடிக்கிற மாதிரி சொன்னார் " பாக்கறது தப்பில்லடா. ஆனா இன்னக்கி பாத்து வாங்கி, நாளைக்கு கடகால் போட்டு நாள மறாநாளு வூட்டக் கட்றமாதிரி இந்த மத்தியான வெயில்ல வந்துருக்கற பாரு, அதான் தப்பு." ராசோக்கியத்தைப் பார்த்து சொன்னார் " பாத்த ஒடனே வெரலால தட்டிப்பாத்து ஒடந்தடன்னு வாங்கிக்கிட்டுப் போயி அடுப்புல வைக்கிற சட்டிபான யேபாரமில்ல இது. வாழுங்காலத்துப் பயிரு. நம்ப அவசரத்துக்கு எவனும் குடுக்கவும் மாட்டான். மீறிக் குடுத்தாலும் நெய்வேலிக் காரன் ஒனக்கு குடுத்துருக்கற பூரா காசியையும் அவனுக்கே குடுத்தாத் தேவலாம்னுதான் நெனைப்பான்... நாளாவட்டத்துலதான் பாத்து வாங்கணும். மொதல்ல குத்துவைக்கி ஏதாவது முந்திரி கெடைக்கிதான்னு பாத்து ஒரு போகம், ரெண்டு போகம் பொறுக்குங்க... அப்பறம் அங்க இங்க விசாரிச்சி மனையா இருந்தாலும், கொல்லியா இருந்தாலும்

வாங்கறதப் பாப்பும்.”

“ நீங்க சொன்னப்பறந்தான் எனக்கு ஞாபகம் வருது பெரிப்பா. கக்கிலி தெரு, நம்ப ஆறுமுக முதலியாரு கூட, சித்திர ஏரிப்பக்கம் நாலு ஏக்கரையும் குத்துவைக்கி வுடறதாதான் சொல்லிக்கிட்டு இருந்தாரு.” சிவப்பிரகாசம் ஆர்வமாகச் சொன்னார்.

“ மொதல்ல அதப் போயி பாரு...” குழந்தைவேல் கழியை ஊன்றிக்கொண்டு போனார்.

பொழுது விழுந்து கொண்டிருந்தது. சுவரில் சாய்ந்து சற்று கண் அயர்ந்தார் ராசோக்கியம். தங்கப்பழம் பாயை எடுத்து வந்து போட்டாள். “ செத்த படு அண்ண இப்பிடி...”

“ வேணாம். வூட்ல வேற பூமா தனியா இருக்கும்.” பாஞ்சாலை அவசரப்படுத்தியதும் ராசோக்கியத்திற்கு அசதி போன இடம் தெரியவில்லை. “ சரி போவும்.” ஊருக்குப் போக ஆயத்தமாவது தெரிந்ததும் மலருக்கு பொசுக்கென்று ஒரு வாட்டம் வந்து கவிந்து கொண்டது. “ பூமாவ இட்டுக்கிட்டு வந்துருக்கலாம்” மலர் பொய்யாய்க் கோபப்பட்டாள்.

“ இங்கதான வரப் போறா... அதுக்குள்ள என்னா அவசரம்...” பாஞ்சாலை பெருமூச்சை விட்டுக்கொண்டு எழுந்தாள்.

எழுந்தவளை இழுத்துப்பிடித்து குந்துகிறமாதிரி தங்கப்பழம் பேச்சை ஆரம்பித்தாள். “ மறுபடி அந்த சிவப்பிரகாசம் மாமன் என்னா சொல்லி அனுப்பனாரு அண்ண...” பாஞ்சாலை கூட கேட்கலாம் என்றுதான் நினைத்திருந்தாள். தங்கப்பழம் ஆரம்பித்ததும் குந்தினாள். ராசோக்கியம் ரொம்பவும் தயக்கமாக, சிவப்பிரகாசம் காட்டிய மனைக்கட்டுகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். தங்கப்பழத்துக்கு மட்டுமல்ல பாஞ்சாலைக்கும் அந்த இடங்களைப் பற்றித் தெரியும் என்பதால் மனம் ஒப்பவில்லை. பிறகு குழந்தைவேல் வந்து சொன்னது, கக்கிலி தெரு ஆறுமுக முதலியார் முந்திரிகளை சித்திரை ஏரிக்கும் தெற்கால போய் பார்த்த வரை சொல்லி முடித்தார் “ இப்பத்திக்கி குத்துவைக்கிதான் முந்திரி அமரும் போல்ருக்கு.”

பாஞ்சாலைக்கு அவர் சொல்வது ஏற்புடையதாகத்தான் இருந்தது. தங்கப்பழமும் ஆமோதிக்கிறமாதிரி அதையேதான் சொன்னாள். “ அதான் அண்ண நானுஞ் சொல்லலாம்னு இருந்தன். நெலம்லாம் பத்துப் பொழுது

ஆற அமரப் பாத்து வாங்கனாதான் நெல்லா இருக்கும். அவுரு சொல்ற மாதிரி கக்கிலிதெருவாரு முந்திரிய குத்து வைக்கி பேசச் சொல்லுங்க. நம்ப முந்திரிக்கி மேற்காலதான். நல்ல தர. காய்க்கிற கன்னு தோப்புதான். அப்பறம் இந்த மனக்கட்டு பாக்கற வேலய அறவே வுட்டுடுங்க. வாணாம்.”

பாஞ்சாலையும் ராசோக்கியமும் சந்தேகமாகத் திரும்பினார் கள். தங்கப்பழம் இழுத்த மாதிரி சொல்லிக் கொண்டிருந்தாள் “ அப்பறம் இங்க நம்ப வூடு இருக்கக்குள்ள எதுக்கு வேற மனக்கட்டு பாத்துகிட்டு. எங்களுக்கு எந்த மொவன் இருக்கான் ஆளப்போறான். இல்ல இன்னும் ரெண்டு மூணுன்னு மொவளுவோ இருக்காளுவுளா பங்கு பிரிக்கிறதுக்கு. எல்லாம் இந்த மலரு புள்ளைக்கிதான். தம்பி கிட்ட சொல்லி காலாகாலத்துல ஒரு நாளு தேதிய பாத்து செம்பையய்யா கோயில்ல இட்டுக்கிட்டுப் போய் ஒரு சரட போட்டு வுட்டுட்டா இங்க இருந்தாலும் இருக்குதுவோ இல்லன்னா அங்க மாத்துக் குடியிருப்புல இருந்தாலும் இருந்துட்டுப் போவுது. நாம பாட்டுக்கும் பழமொறத்துக்கு சாணியும், கெழப்பொணத்துக்கு சோறுமா எங்கியாவுது உருட்டிக்கிட்டு கெடந்தா பொழுது போவுது. இதுல எதுக்கு வேற மனைய பாத்துகிட்டு... வூட்டக் கட்டிகிட்டு...”

ரொம்பவும் எதிர்பார்ப்பு மிக்க தங்கப்பழத்தின் பேச்சு. கேட்டுக் கொண்டிருந்த மலருக்கும் மகிழ்ச்சியும் பூரிப்பும்தான். ராசோக்கியம் பாஞ்சாலை எல்லோருக்குமே சரியானதாய் இருக்கிற யோசனைகள் தான். ‘ ஆனால் சதாசிவம்தான்... வேலை அறிவிப்பு வந்ததுமே கொஞ்சம் சாந்தமாக இருப்பதுபோல் தெரிகிறவன் வேலை கிடைத்து கைநிறைய வாங்க ஆரம்பித்து விட்டால் எந்த உச்சியில் போய் நிற்பானோ..’

“ யாரு கையிலயும் எதுவும் இல்ல. எல்லாம் அந்த செம்பையய்யனார் மனசு வைச்சாதான்.” பாஞ்சாலை கையை ஊன்றி எழுந்தாள்.

கிளம்புகிறபோது ராசோக்கியம்தான் கேட்டார் “ அப்பா எங்கம்மா? மத்தியானமாவுது வரும்னு பாத்தன். ஆளக் காணம்?”

திடுமென தங்கப்பழத்திற்கு ஒரு வாட்டம் வந்து வளைத்துக் கொண்டது. குரல் கமறியது “ ஆளு போற போக்கு சரியில்ல. அதுக்குதான் நாஞ் சொல்றது. ஒங்க கால்ல வுழுந்தாலும் வுழறன்... இந்தப் புள்ளய புடுச்சி, அந்த பையன் கையில குடுத்து குடும்பத்த எடுத்துக்குங்க.. அப்பிடி இல்ல... இந்தக் குடும்பம் அந்தல்ல கட்டி சிந்தல்ல பூடும்.” தங்கப்பழம் அழுதாள். மலரின் கண்களில் கலகலவென கண்ணீர் இறங்கிக் கொண்டிருந்தது.

*

50

“ அந்த எடத்துல கொஞ்சம் பதுங்கலா இருக்கு அண்ண..” விழல் கத்தைகளை எடுத்துப் போட்டுக்கொண்டிருந்த ராசோக்கியம், கீழே கிடந்த மூங்கில் பொளாச்சி ஒன்றை எடுத்து கூரையில் சுட்டிக் காட்டினார். உடன் கையிலிருந்த குத்தூசியைத் தலைப் பாகையில் செருகிவிட்டுக் கோர்த்துவாங்கிய கசங்கை முறுக்கி நுழைத்துக் கொண்டே எக்கிப் பார்த்தபடி “ எங்க..” என்றார் கரியர்.

“ ம்... தொங்க... இப்பதான் புதுசா வெழல் அடிச்சிக் கத்துக் கிறாரு பாரு, எங்கன்னு கேளு. கத்தய அவுத்துப் பரப்பி வுடறப்பியே சமமா நெரவி வுடத் தெரியாதா?” முத்துக்கண்ணு ஆயி லேசாய் கோபத்தைக் காட்டியவாறு எசாகையில் கிடந்த குப்பைகளைக் கூட்டியபடி சொன்னாள்.

“ வயிசி ஆனவர ரொம்ப மெரட்டாத பெரியாயி, பாவம்..” பால்ராசு சிரித்தபடி சொல்லிக்கொண்டு விழல் கத்தைகளை எடுத்துவந்து கிட்டக்கப் போட்டான்.

“ அது கெடக்கு கெழப்பொணம். அடிக்கிற வெயில்ல கண்ணு நீலங் கவிஞ்சி போவுது. எதப் பாத்தாலும் ஏகத்துக்கும் சமமாத் தெரியுது.” கரி படாச்சி சொல்லியபடி எக்கிப் பதுங்கலாக உள்ள இடத்தில் விழலை வெளியே இழுத்துவிட்டு தட்டுப்பலகையால் தட்டிச் சமப்படுத்தினார். “ போதுமாடாப்பா..”

“ அப்பிடியே இன்னங் கொஞ்சம் எக்கி தட்டு அண்ண..” பில்லு வரிசைக் கழிகளைச் செத்திக்கொண்டிருந்த கனகராசும் சொன்னார்.

“ இதுக்கு மேல எக்கனா கீழேதாண்டா கெடப்பன்” சிரித்துக் கொண்டே சொன்னார்.

“ போதும் வுடுங்கடாப்பா. பாவம் அவுரப் போட்டு வாதீக்கிறீங்க.” சொன்ன ரங்கநாது மிகவும் நெகிழ்ந்து போயிருந்தார். அறிவழகனே கிட்ட இருந்தால் கூட இவ்வளவு நறுவிசாக வேலை முடிந்திருக் குமா என்பது சந்தேகந்தான். இத்தனைக்கும் அவரையோ காசாம் பையோ ஒரு துரும்பைக்கூட எடுத்துப்போட எவரும் விடவில்லை.

‘ ஊருக்குன்னு மெனக்கிட்டு உள்ள போய் கெடக்கற புள்ளைக்கி ஒதவாத என்னா ஊரு.’ அவரவர் சத்துக்கு கடகால் தோண்டவும் கால் நடவும் சுவர் வைக்கவும் தண்ணீர் மொள்ளவும் சோறு ஆக்கவுமாக அரிபரியாய் வேலை. பெரும்பாலும் எந்த வீட்டி லிருந்தும் ஆள் வரவில்லை என்கிற பேச்சுக்கே இடமில்லை. செங்கல் ராவு, காசி படையாச்சி, சிகாமணி என அவர்கள் வீட்டு வகையறா முதல்நாள் வந்து செய்தமாதிரி அவரவருக்குத் தோதான நேரத்தில் வந்து செய்து கொடுத்ததில்தான், தொட்ட ஒரு வாரத்திற்குள், விழல் அடிக்கிற அளவுக்கு வேலை சுருக்கத்துக்கு வந்திருந்தது.

“ செங்கல்லுல செவுர் வைச்சதுக்கு, மேல நாலு ஓட்ட எடுத்து மாட்டிட்டுப் போயிருக்கலாம்” கனகராசு சொன்னார்.

“ தம்பி இருந்து செஞ்சாத் தப்பு இல்ல. நாம பாட்டுக்கும் நெய்வேலிக்காரன் குடுத்த காசிய பூரா வூட்ல போட்டுட்டு, புள்ள வெளிய வந்ததும் வெறுங்கையவா காட்றது?”

ரங்கநாது சொல்லி முடித்ததும் பால்ராசு மறித்தான் “ நீங்க இதச் சொல்றீங்க. தா பாரு வடிவேலு அண்ணன் வூடு. எத்தினி சதுரத்துல பிளான் போட்டு கட்டட வேல நடக்குதுன்னு.”

நிலம் கைவிட்டுப் போனதுமே வடிவேல் கை இறங்கியது இறங்கியதுதான். எவ்வளவு சொல்லியும் தேவகி கேட்கவே இல்லை. கட்டினால் அதுவும் தாராளமாய் கல் வீடுதான் என்று ஒற்றைக் காலில் நின்றுவிட்டாள். அவர்கள் கடகால் போட்டிருக்கிற அளவுக்கு, நெய்வேலிக்காரன் கொடுத்த காசில் ஒட்டிவிடலாம். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது. அவள் அடிக்கிற மொட்டை ராங்கிக்கி, கட்டுகிற வெங்காயச் சருகுப் புடவைக்கு... எதில் கொண்டு போய் விடப்போகிறாளோ?... விசனம் விழுந்து போய்விட்டான் வடிவேலு.

“ நா வந்துதான் ஏஞ் சேத்தாளி வூட்டு வேல முடியிணும்னு இருந்துருக்கும் போல்ருக்கு...” எல்லோரும் வேலையின் ஊடே திரும்பிப் பார்த்தார்கள். கீரையன்தான் சிரித்துக்கொண்டே சொன்னார்.

காசாம்பு இருந்தால் “ அவுரு வாயக் கிண்டுலன்னா ஒனக்கு தூக்கம் வராது” என ஏதாவது சொல்லியிருப்பாள். பழைய மனநிலை யிலிருந்திருந்தால் ரங்கநாதும் கேலியாய்ப் பதிலுக்குக் கெடாசி யிருப்பார்.

பால்ராசு கேட்டான் “ எந்த மறிச்சிய நெய்வேலிக்காரன் வுட்டு வைக்கப் போறான். ஜோடி போட்டுக்கிட்டு தட்டுக்கொடி அறுக்கப் போறமாதிரி

சேத்தாளிய அழைக்கிற...”

“ இங்க இல்லன்னா என்னா. தே இங்காண்ட தொப்புளி குப்பம், வெளிக்கூனங்குறிச்சின்னு போவ வேண்டிதுதான்.” கீரையன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ரங்கநாது மறித்துக் கேட்டார் “ ஊடு கட்றது, ஓங் கத எதோட இருக்கு..”

திடுமென கீரையன் வெறுமை படர்ந்ததுபோல் சப்புக் கொட்டினார் “ புளியாமரத்துங் கீழ பொங்கித் திங்கறவனுக்கு பெருசா ஊடு கட்டுறதுல என்னா கத இருக்கு மூத்தவர. பத்துப் பனமட்டையும் நாலு முழுங்கிச் சிம்பும்னா சரியாப் போச்சி.”

“ ஒனக்கு மட்டுமில்லடா. நம்ப எல்லாத்தையும் புளியா மரத்தடியில பொங்கித் திங்கற மாதிரிதான் வுட்டுட்டான். எதோ இந்த வேல குடுக்கறன்னு சொன்னதுதான், ஒரு பெரிய ஆறுதலு...” ராசோக்கியம் சொல்லியபடி விழல் கத்தையை உயரே தூக்கிப் போட்டார்.

நேரம் கண தாண்டிப் போய்க் கொண்டிருந்ததில் எல்லோருக்குமே பசியெடுத்தது. கரியர் மோட்டுவளையில் இருந்தபடி கிழக்கே சாப்பாடு வருகிறதா எனப் பார்த்தார். வேப்பங்குறிச்சியிலிருந்து நேராக இப்படியே வந்துவிடலாம். ஓடை உடைப்பில் ஏறி இறங்குவதுதான் சிரமம். மண் வெட்டவும் கொட்டவுமாக புழுதிப் படலத்தின் ஊடே தூரத்தில் வேப்பங்குறிச்சியில் குடிசைகள் தெரிந்ததே தவிர சோத்துக்கலயங்கள் எதுவும் தென்படவில்லை.

வடக்கில் காதைப் பிளக்கிறமாதிரி ஆரன் சத்தம் கேட்டதும் திரும்பினார். கிழக்கு மேற்காய் போகும் கடலூர் ரோட்டில் லாரிகள், பேருந்துகள் போய் வந்துகொண்டிருந்தன. ஊருக்குள் நுழைகிற தலைப்பில் தனபாலின் கட்டிடம் உயர்ந்து கொண்டிருந்தது. பார்வையைத் தாழ்த்தினார். மாற்றுக்குடியிருப்பில் நிறைய வீடு களும் குடிசைகளும் முளைத்த வண்ணமாய் இருந்தன. புதராய்க் கிடந்த இடத்தில் திருத்தி மண் அடித்து தெருவு மடித்ததில் மரங்கள் எதுவுமில்லாமல் வெறிச்சோடியிருந்தது. புதிதாய் வேம்பு, மா, பலா, தேக்கு என மனைகளில் வைக்கப்பட்ட கன்றுகள் குடலிக்குள் பசுமை காட்டின.

“ என்னா போடுட்டா...” கனகராசு கேட்டார்.

“ பசி எடுக்குதுடா...” காது அடைத்தது கரி படாச்சிக்கு. பக்கத்தில் தெருவை அடுத்து கணேசன் வீட்டுக்கு விழல் அடித்துக் கொண்டிருந்த

அய்யாயிரமும் இவரைப்போலவே சோர்வாக நின்றிருந்தார்.

“ வாணாம் எறங்கு. தே சாப்பாட்டு கரகம்லாம் வந்து போச்சி” ரங்கநாது சொல்லவும், கரி படாச்சி சந்தேகமாய்த் திரும்பினார். “ இப்பதாம் பாத்தன் காணம். ஒடையாலயே வந்துருக்காங்க போலிருக்கு.”

காசாம்பு, பூமா, செல்லப்பாங்கி என ஓடையிலிருந்து ஏறி, மாற்றுக்குடியிருப்பை நோக்கி சாப்பாட்டுக் குண்டான்களுடன் வந்துகொண்டிருந்தார்கள்.

“ எ ப்பாடா சாமீ... அய்னார அய்னார...” சொல்லிக்கொண்டே சாப்பிட்ட அசதியில், தரையின் அறுநிழலில் சாய்ந்தார் கரி படாச்சி.

“ அப்பிடி நம்ப வூட்டப்பக்கம் போவும்னு இல்லாம... இங்கியே மொடங்கிட்ட...” ராசோக்கியம் சொல்லிக்கொண்டே அவர் வீட்டுப்பக்கம் போனார். ரங்கநாதும் “ நானும் வரண்டா...” என்று போனார்.

“ கொழம்பு இருந்தா கொஞ்சம் குடு எம்மா... அய்யாயிரத் துக்கு நா வைச்ச கொழம்பு புடிக்கிலியாம்..” செல்லப்பாங்கி கிண்ணத்தோடு வந்து நின்றாள்.

“ கொழம்பு காணுலன்னு சொல்லன். எதுக்கு அய்யாயிரம் மேல பழியப் போடற...” சொல்லிக்கொண்டே கொட்டாய் மட்டும் போட்ட நிலையில் இருக்கும் அவர் வீட்டுப்பக்கம் போனார் கனகராசு.

“ கொழம்பு இருக்கு. இந்தப் பூமா புள்ள சாப்புடுதா என்னான்னு தெரியில. நாந்தான் இந்த ரசத்த கொண்டாந்து குடுத்துட்டு வாடின்னு இட்டாந்தன்.” கூப்பிட்டாள் “ தே பூமா..” பதிலேதும் இல்லாததால் “ அது அவுங்க வூட்டப்பக்கம் பூட்டுது போல்ருக்கு. ரவ எடுத்துக்கிட்டு போ...”

பக்கத்துச் சாரியில்தான் பூமாவின் ஓடு போட்ட வீடு. சுவர் வைத்து முடித்தாயிற்று, இன்னும் தரை போடவேண்டியதுதான் பாக்கி. முன்னால் தாவாரம். நடுவில் கூடம். பின்னால் சமையல் கட்டு. தோட்டத்துக்குப் போக வாசப்படி. வீடு கட்டுகிறபோது பூமா இரண்டு மூன்று தடவை பாஞ்சாலையுடன் வந்திருக்கிறாள். அதற்கே சதாசிவம் திட்டுவான். ‘ வெளியூரு ஆளுவோ வேல செய்ற எடத்துல எதுக்கு இட்டாந்த...’

பூமாவுக்குப் புதிய வீடு வாசல் என்பதிலெல்லாம் ஒன்றும் ஆர்வமில்லை. குறுக்கநெடுக்க வீடு கட்டுகிற இடத்திற்கு வருகிற அப்பனுக்கும்

அண்ணனுக்கும் எதாவது சிக்கல்முக்கல் வந்துவிடும் என்கிற பயந்தான். ஆனாலும் வேலை அறிவிப்பு வந்தபிறகு சதாசிவம் சற்று மாறியிருப்பதுபோல்தான் பட்டது அவளுக்கு. முதனையில் குத்தகைக்குத்தான் முந்திரி கிடைத்தது என்று அச்சாரம் கொடுக்கப் போகும்போது கூட ‘ எழுதும்போது மூணு வருசமா போட்டு எழுதச்சொல்லு...’ முரண்படாமல் இணக்கமாகத்தான் சொல்லி அனுப்பினான். இந்த மனமாறுதலோடு எப்படியாவது மலரைக் கொண்டுவந்து அவன் பக்கத்தில் நிறுத்தி கயிறைப் போடச் செய்து விட்டால்.... எல்லோருக்கும் நிறைவுதான். அதற்காகவே அதிகமாய் இப்போதெல்லாம் கும்பிட்டுக்கொண்டு கிடப்பாள். ‘ எப்பா... செம்பையய்யா.. உத்தண்டகாரா... எங்க அண்ணனுக்கு சீக்கிரம் அந்த நெய்வேலிக்காரன ஒரு வேலயத் தரச்சொல்லு...’

“ என்னா பாப்பா... ஒண்ணன் வூடு எனுமா இருக்கு...” ரங்கநாது கேட்டுக்கொண்டே உள்ளே வந்தவர் துண்டை விரித்துப்போட்டு முடங்கினார்.

“ எது அண்ண வூடு? எங்க அப்பா அம்மா இருக்கிற வரைக்கும் இது எங்க அப்பா வூடுதான் மாமா...” பூமா சொல்லவும் சிரித்துக்கொண்டே வந்து ராசோக்கியமும் முடங்கினார்.

சிட்டுக்குருவி ஒன்று அவசரமாய் உள்ளே வந்து ஆளிருப்பது கண்டு வெளியே ஓடியதும், பூமாவுக்குள் ஒரு மின்னல். வீட்டுக்குள் வந்த குருவி, கம்மங்கொல்லைக் குருவிகளை அழைத்து வந்தது. பூமா மெல்ல தோட்டத்திற்கு வந்து தெருவின் கடைசியில் இருக்கிற சிகாமணி வீட்டைப் பார்த்தாள். சுவர் மட்டும் வைத்த நிலையில் இருந்தது.

*

51

க ருணாமூர்த்தி பஸ்ஸில் போய் விருத்தாசலம் பாலக்கரையில் இறங்கி நடந்துகொண்டிருந்தார்கள். பின்னால் சோர்வாக வந்து கொண்டிருந்த சிகாமணியைப் பார்த்து, உத்தண்டராயர் நடையைத் தேக்கிக் கேட்டார். “ ரொம்ப மனச தளர வுடாத சிகாமணி. அம்மாம் போலிச கொண்டாந்து வுட்டு ஊரக் கெளப்பறன்னு நின்னப்பக் கூட இம்மாஞ் சோந்து போவுல. இப்ப என்னாடான்னா...”

“ அப்பிடி இல்ல அண்ண. அதுலாம் பொதுவு பிரச்சின. பின்னால ஊரு சனம், மேல சங்கம்னு இருந்தது. இது தனிப்பட்ட விவகாரம்.” சிகாமணி சொல்லிக்கொண்டே நடந்தான்.

ஆதிநாராயணன் யாரென்று விசாரித்துதான் வணக்கத்தைப் போட்டார்கள். கருப்பு அங்கியில், உயரமாய், விசாலமான முன் மண்டையில் இரத்தக்கீறலாய் ஒற்றை நாமம்... கும்பலிலிருந்து உருவிக்கொண்டுதான் வெளியே வந்தார். “ வணக்கம். என்னா சேதிங்க...”

நோட்டிசை கையில் எடுத்ததுமே சொன்னார் “ ஆமா, இது தனபால் சொன்னார்னு வந்த கேசு...”

தனபால் என்கிற பெயரைக் கேட்டதுமே சிகாமணிக்கு அதிர்ச்சி. உத்தண்டராயரும் சொன்னார் “ அதான பாத்தன். நம்ப சனங்க பட்டுன்னு கோர்ட்டு கேசுன்னு போவாதாச்ச.”

ஆதியிடம், சிகாமணி கொஞ்சம் படபடப்பாகப் பேசினான் “ நீங்க நெனைக்கிற மாதிரி தனபால் ஒண்ணும் நெல்லவர் இல்லைங்க சார். நெய்வேலிக்காரன் கூடக் கூடிக்கிட்டு எங்க ஊர எடுக்கறதுல என்னென்ன பாடு படுத்தினாரு தெரியுமா. அதலாம் முறியடிச்சி நாங்க பிரச்சினைய மேல கொண்டு போனதத் தாங்காமதான் இப்பிடி கிண்டி வுட்டு நோட்டிஸ் வுட வைச்சிருக்கார் சார்.”

“ அந்த ஆளு நிர்வாகத்துக்கு பெரிய இன்ஃபார்மர் சார்...” உத்தண்டராயரும் சொன்னார்.

இதுமாதிரியெல்லாம் நிறையக் காதில் வாங்கி வாங்கி ரொம்ப சலித்துப்

போனவராய் ஆதிநாராயணன் தெரிந்தார். “ இங்க பாருங்கப்பா. தனபாலு நல்லவரா கெட்டவராங்கறது முக்கியமில்ல.. அந்த அம்மா, இந்த மாதிரி பிரச்சினைன்னு வந்துது. ஒரு வக்கீலு என்னா செய்யிணுமோ அத செஞ்சிருக்கன்.”

“ இல்லிங்க சார், இது குடும்பச் சிக்கலு. இதுக்குப் போயி எதுக்கு கோர்ட்டு கேசுன்னு...” சிகாமணியின் வேலை விஷயத்தை சொன்னால், இன்னும் ஏதாவது சுற்றலில் விடுவானோ என மேலோட்டமாகச் சொன்னார் உத்தண்டராயர்.

“ இப்பவும் நானு ஒண்ணும் சொல்லுல. இது குடும்பச் சிக்கலு தான். தனபால வைச்சி, இல்ல நீங்களே போயி அந்த அம்மாகிட்ட பேசி ஒரு முடிவு பண்ணிட்டு வாங்க, மேல என்னா செய்யலாம்னு பாப்பும்..” இறுதியாய்ச் சொல்லிவிட்டு கருப்புக் கூட்டத்திற்குள் நுழைந்து கொண்டார் ஆதிநாராயணன்.

இதற்குமேல் இதை எப்படிக் கையாள்வது எனத் தெரியாமல் சிகாமணி திகைத்து நின்றுவிட்டான். தனபால் மேல் கோபம் கோபமாக வந்தது. “ பாத்தியா அண்ண, எனக்கு எங்க வந்து வேல குடுத்தாருக்காம் பாத்தியா அந்த ஆளு.”

உத்தண்டராயர் பட்டென்று அவனுக்கு ஆறுதலாய் ஒரு அணையைப் போட்டார். “ நீஞ் சொல்றமாதிரி, மேல மேல போயி இன்னைக்கி வூட்டுக்கு ஒரு ஆள் வேலங்கறது வரைக்கும் கொண்டாந்து வுட்டது அறிவழகனும் நீனும்தான்னு அந்த ஆளுக்கு ஆறுல. அவன் மனசுக்கு நிறைவா அறிவழகன் இப்ப உள்ள போனதும் அடுத்து ஒன்னப் பாத்துருக்கான். முடிச்சிபோட்டு வுட்டுட்டான். இத அவுக்குணும்னா நமக்கு இருக்கிற ஒரே வழி இப்ப அந்தப் புள்ளைகிட்ட போயி ஒக்காந்து பேசறதுதான்..”

பாலக்கரையில், இறங்கிய இடத்தில் ஏறிக்கொள்ளலாம் என நடந்தேதான் வந்துகொண்டிருந்தார்கள். “ இந்த நோட்டிசு விஷயத்துல தனபால் கினபால்னு அந்த ஆளு உள்ள நொழைஞ்சத ஒங்க அப்பாருகிட்ட சொல்லிடாத. அப்பறம் குடிச்சிட்டுப் போயி ரெகள கட்டினா... பிரச்சினய வேறமாதிரி கொண்டுக்கிட்டுப் பூடுவான் தனபாலு.”

பாலக்கரை வந்ததும் “ வந்தது வந்துட்டம், ஒரு எட்டு ஆஸ்பெட்டலுக்கு போயி ஜி.ஆரு இருக்காரான்னு பாத்துட்டு வருவம்” உத்தண்டராயர் சொன்னதும், சிகாமணிக்கும் சரியெனப் பட்டது.

மருத்துவமனை முழுவதும் சங்கத்துக்காரர்களும், நோயாளி களுமாக நிறைந்திருந்தார்கள். தெரிந்த சங்கத்துக்காரர்களுக்கு இவர்களும் அவர்களுமாய் வணக்கத்தைப் போட்டுக்கொண்டார் கள். வாசலில் நின்ற செல்வமணி கம்பௌண்டர் அடிக்கடி வந்து போவதில் பழக்கம். உள்ளே இட்டுக்கொண்டு போனார்.

நோயாளி ஒருவருக்கு மருந்துச்சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தவர், " வாய்யா உத்தண்டராயா, வாடா வேப்பங்குறிச்சி சில்லாக்கத்திரி! உள்ர இருக்கற ஒங்க ஆள இந்த மாசத்துல வெளிய எடுத்துடுவம்டா..." சொன்னார்.

அடுத்து காட்டுவதற்கு நின்றுகொண்டிருந்த பெண்ணின் கைக்குழந்தை நேரங்காலம் தெரியாமல் பாலுக்கு மாரைச் சீய்க்க, நோய் முகத்தில் வேதனை படர்ந்தது. உத்தண்டராயர், சிகாமணியின் சேதியை சுருக்கமாகச் சொன்னார்.

" அந்த தனபால் கம்னேட்டி கெடக்கறான். அந்தக் காலத்து லேர்ந்து காக்கை வன்னியன் இருந்துக்கிட்டுதான் இருப்பான். அவுன வுடுங்க. அந்தப் பொண்ணுகிட்ட போயிப் பேசுங்க" திரும்பி சிகாமணியைப் பார்த்துச் சொன்னார். " நீ பேசுடா. ஒங்க அத்தை தான."

" பேச்சுவார்த்த ரொம்ப நாளா இல்ல.." சிகாமணி இழுத்தான்.

" இல்லன்னா என்னாடா கெடக்கு. நெய்வேலி அதிகாரிவோ எவஞ் சொந்தக்காரன்? நெலத்து சம்பந்தமா, வேல சம்பந்தமா எத்தினி தடவ திரும்பத் திரும்ப பேசுனம். பேச்சு வார்த்த இல்லன்னா, சொந்தம் இல்லன்னு ஆயிடுமா.."

எழுந்தார்கள் குழந்தைக்காரி ஸ்டூலில் குந்தினாள். கதவு கிட்ட வரும்போது டாக்டர் கூப்பிட்டுச் சொன்னார். " சிகாமணி, அறிவழகன் உள்ள இருக்கறான்னு வுட்றாதீங்க. அவங்கிட்ட கையெழுத்த வாங்கி அவனுக்கும் வேலைக்கு ஒரு அப்ளிகேஷன போடுங்க. நாளைக்கு வெளிய வந்தப்பறம் வேலன்னு போயி நின்னா, அப்ளிகேஷன் கூடப் போடாம ஒண்ணுஞ் செய்ய முடியாதுன்னு நிர்வாகத்துல கைய விரிப்பான்."

வெளியே வந்தார்கள். " சரி சிகாமணி, நீ கௌம்பு. நா இப்பிடியே தாலுகா ஆபிஸ் வரைக்கும் போய்ட்டு வர்றன். எனக்கும் இந்த சாதி வருமானம்னு எடுக்கற வேல இருக்கு. நாளைக்கி எங்க ஊருக்கும் சொல்றப்ப, தக்காபுக்கான்னு நிக்கக்கூடாது. பையன நேத்திக்கே கொண்டாந்து குடுக்கச்

சொல்லியிருந்தன். என்னா சொல்றான்னு பாத்துக்கிட்டு வர்றன். சாயந்திரமா வேண்ணா எலுமிச்சிக்கிப் போயி அந்தப் புள்ளைகிட்ட கலந்து பாப்பும்..”

“ சரி அண்ண. எங்க மகராசருகூட கொம்பு குத்தன எடத்துல ரொம்ப வலிக்குதுன்னு சொல்லிக்கிட்டு இருந்தாரு. ஆஸ்பத்திரிக்கு இட்டுக்கிட்டுப் போவச் சொல்லியிருந்தன். என்னா பிரி கட்டி அடிக்கிறாரோ தெரியில. போயிப் பாக்கறன்.”

தலைமாட்டில் மருந்து பாட்டில்கள் இருந்தன. ஏற்கெனவே சளி இருமலில் இருப்பவர், வந்து படிந்துகொண்டிருந்த புழுதியில் மேலும் கொக்கினார். சிகாமணி உள்ளே போனான். வேர்த்து, வேச்சாரலில் கிடந்த மாதிரியான அலுப்பில், அசலாம்பு அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள்.

“ என்னாம்மா சொன்னாங்க..?”

“ என்னா சொல்றாங்க. போட்டோ எடுத்து பாத்ததுல, உள்கொண்டு காயம் ஆறாம இருந்து, ஈரல பாதிச்சிட்டுதுங்கறாரு. என்னாதான் மாத்தர மருந்து குடிச்சாலும் மேல மேல குடிச்சிக்கிட்டு இருந்தா ஒண்ணும் பண்ண முடியாதுன்னு டாக்டரு கைய விரிக்கிறாரு. இவன் எங்க கேக்கறான். நெல்லவேள மணிமாறன் வந்ததால தப்பிச்சம். அப்பியும் பஸ்ச வுட்டு எறங்கனதும், ஒண்ணுக்கு வுட்டுட்டு வரன்னு அங்காண்ட கருவத் தோப்புப் பக்கம் ஓடறான். எல்லாம் வூட்டப் போயி வுட்டுக்கலான்னு வலுக்கட்டாயமா ஆளக் கொண்டாந்து கெடத்திட்டு இப்பதான் மணிமாறன் போறான்.”

காலையில் தனியாக எப்படி அம்மாவை இட்டுக்கொண்டு போவச் சொல்வது எனத் தயக்கத்தோடு வெளியே வரும்போதுதான் தெருவில் மணிமாறனைப் பார்த்தான். லீவுக்கு வந்திருப்பதாய்ச் சொன்னவனை, கூட இட்டுக்கொண்டு போகச் சொல்லிவிட்டு வந்தான். அவன் இல்லையென்றால், எப்படியும் ஊற்றிக்கொண்டு வந்திருப்பார். அம்மாவும் இதைவிடவும் அழுது களைத்தவாறு திட்டிக்கொண்டு இருப்பாள். சிரமம்தான் என்றாலும், அண்மைக் காலங்களிலெல்லாம் அப்பாவை அவன் இவன் என்று மரியாதைக் குறைவாகப் பேசுவதும் திட்டுவதும் என்னவோ போல் இருந்தது. வேறு வழியில்லாமல் அவரை அப்படிப் பேசி அம்மா மனத்தை ஆற்றிக் கொண்டிருப்பதாகப் பட்டது.

“ உள்ள வந்து படுக்கச் சொன்னா என்னாம்மா... ஒரே புழுதியா வந்து படியுது” சொல்லிக்கொண்டே கைகால்களைக் கழுவப் போனான்.

“ உள்ள மட்டும் என்னா, போயி பாரன். பாயாட்டம் புழுதி படிஞ்சி கெடக்கறத. ஆமா வக்கீல பாக்கப்போனது என்னாச்சி?” காய்கறிகளை அரிந்துகொண்டே கேட்டாள்.

“ அந்த ஆளு என்னா சொல்றான். சம்மந்தப்பட்ட நபர் கிட்ட போயி பேசிப்பாருங்க. வேற வழி இல்லங்கறான்.” விசனமாகச் சொன்னான்.

“ அப்ப அந்த ஓடுகாலி கால்ல போயி வுழுந்து, எப்பா சாமி பாத்துச் செய்யின்னு நிக்கிணும்...” கேக்கும்போது அசலாம்பு முகத்தில் ஆத்திரமும் அவமானமும் தெரிந்தது.

“ வுழற நேரம் வந்தா வுழுந்துதான் ஆவணும்.” சிகாமணிக்கு குரல் தேய்ந்திருந்தது. இருவருக்குள்ளும் கம்சலாவைக் கொத்திப் பிடுங்குகிறமாதிரியாய் யோசனை ஓடிக்கொண்டிருந்தது. வெளியே இருமல் சத்தம் திரும்பவும் கேட்டது.

எழுந்தான். “ நா அறிவழகு அண்ணன் வூடு வரைக்கும் போய்ட்டு வரம்மா. அண்ணங்கிட்ட கையெழுத்து வாங்கி, வேலைக்கி அப்ளிகேஷன் போடச்சொல்லி ஜி.ஆர் டாக்டர் சொன்னாரு. பெரிப்பாகிட்ட சொல்லிட்டு வர்றன்.”

வெளியே வரும்போது, செங்கல்ராவு புரண்டு படுத்தவர் வலியில் நெரட்டினார். கூப்பிட்டார் “ தம்பீ...”

சிகாமணி திகைப்புடன் நின்றான். போதையில் இருந்தால் மட்டுமே இப்படி நெருக்கமாகக் கூப்பிடுகிறவர், இல்லாதபோது கூப்பிடவும் சந்தேகத்தோடு கேட்டான் “ என்ன..”

“ இப்பலாம் ரொம்ப வலிக்குதுப்பா..” வலியில் முகம் கோணியது.

“ நீ மேல மேல குடிச்சிக்கிட்டே இருந்தா அப்பிடித்தாம் வலிக்கும்” உண்மையில் படுக்கையில் விழுகிற அளவிற்கு கொண்டு வந்தது குடிதான் என்றாலும், கம்சலாவின் நோட்டிசும் ஒரு முக்கிய காரணம்தான். இருந்தும் எரிச்சலோடு தான் சொன்னான்.

“ அதுக்கில்லப்பா.. அந்தத் தகராறு நடந்தப்பையே ஒரு கேசு குடுத்து வைச்சிருந்திருக்கலாம்பா... பயமா இருக்குப்பா.. வெலாவ ரெண்டாப் பொளக்கறமாதிரி... ஒரு நேரம் இல்லன்னாலும் ஒரு நேரம்..” கடைக்கண்ணிலிருந்து கண்ணீர் கசிந்துகொண்டிருந்தது.

*

52

நெய்வேலியிலிருந்து மேற்கே விருத்தாசலம் போகிற சாலையில் ஊமங்கலத்தில் இறங்கினாலே போதும், ரோட்டை ஒட்டி வலது புறத்தில் எலுமிச்சை. தலைப்பிலேயே வீடு. உத்தண்ட ராயரை முன்னே போகவிட்டு பின்னால் தயக்கமாக நடந்து கொண்டிருந் தான். தலகடையில் ஏறக் கால்கள் கூசின. வாசலில் அந்திநிழல்கள் மெலிந்து நெடிதாய் விழுந்துகிடந்தன.

உத்தண்டராயரை மட்டும்தான் முதலில் அனுப்பலாம் என்று நினைத்திருந்தான். ஆனால் அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார். " நாம் போறது பத்தி ஒண்ணும் தப்பில்ல. ஆனா மொகத்துக்கு மொகம் கண்ணாடிங்கற மாதிரி ஒங்க ரத்தம் ஒங்க உறவு. ஆயிரம் சண்டசாடி வாக்குத்தத்தம் குறுக்கால இருந்தாலும், ஒன்னப் பாத்தா பேச்சி கொஞ்சம் சாதகமாத்தான் இருக்கும்."

எப்படிப் போய் முகத்தில் முழிப்பது என அவனுக்கு ரொம்பவும் குழப்பமாக இருந்தது. ஐந்தாறு மைல் தூரத்தில் இருக்கிற ஊர். இந்த ஊரைத் தாண்டித்தான் ராசாமணி அத்தை வீட்டுக்கு ஊத்தாங்கால் போகவேண்டும். எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்துவிட்டு, இப்போது போய் நிற்பது அவமானமாகத் தெரிந்தது. ஆனால் எல்லாமும் முடிந்து கடகந்தாயத்தில் நிற்கிறபோது யோசித்து எதுவும் பயன் இல்லை.

வாசல் தெளிக்க வந்த கம்சலாவின் மகள் அவசரமாக உள்ளே ஓடினாள். சிகாமணிக்கு ஒரு நிமிடம் உயிர் போகிற மாதிரியான வலி, உள்ளுக்குள். காய்த்து நிற்கும் முருங்கையை நோட்டம் விட்ட படி, உத்தண்டராயர் நின்றுகொண்டிருந்தார்.

" வாங்க..." முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டே வந்து கம்சலா கூப்பிட்டாள். சாயம் போன சாதாரணப் புடவை. செங்கல்ராவை போல நல்ல வளத்தி. வாழ்க்கை பறிபோனதில், தழைவிட்ட முந்திரிக் கிளையில் சுற்றியிருக்கும் காய்ந்த கொடியைப் போல கழுத்தில் ஒரு வெற்றுமணி மட்டும் கிடந்தது. செல்வச் செழிப்பிலிருந்து திடுக்கென தெருவுக்கு வந்ததுபோல் இன்னும் விடுபட முடியாத செல்வீகமும், ஏற்றுக்கொள்ள இயலாத வறுமையுமாகப் போராடிக் கொண்டிருப்பதாகவே தோற்றத்தில்

தெரிந்தது.

“ வர்றம்பா..” உத்தண்டராயர் பார்வையை நேருக்குக் கொடுக்காமல் சொன்னார். கம்சலா, சிகாமணியை வா என்று வாய்வார்த்தைக் குக்கூட கூப்பிடவில்லை. எப்படித்தான் கூப்பிடுவாள்.

இதே வாசலில்தான் தங்கதுரையைக் கிடத்தியிருந்தார்கள். காண்ட்ராக்ட் வேலைக்குப் போய்விட்டு வந்த ஆளை, லாரிக்காரன் தட்டிப்போட்டுப் போய்விட்டான். கைப்பிள்ளையை வைத்துக் கொண்டு, இந்த இடத்தில்தான் கிடந்து கதறுகிறாள். வாழ்க்கை பறி போன அவலம். பற்றி எழுந்திருக்க யாராவது கையை நீட்ட மாட்டார்களா என்கிற தவிப்பு. செத்துக்கிடந்த தங்கதுரையின் முகத்தைப் பார்த்ததைவிடவும் தெருவைப் பார்த்துப் பார்த்துதான் கம்சலா கதறினாள். ‘ அண்ணன் வருவாரா. அண்ணம் மொவன் வருவானா. அக்காளுவோ வருவாளுவுளா...’

‘ ஏண்டி இப்பிடி தானா வந்து தனிமரமா நின்னுட்டிய’ என்று ஆத்திரம் தீர அடித்த பின்பாவது, கட்டிப்பிடித்து காப்பாற்ற மாட்டார்களா என்கிற கடைசி எதிர்பார்ப்பு. எல்லாமும் பொய்த்து போய்விட்ட கொடூரம்.

‘ எந்த மூஞ்சிய வைச்சிக்கிட்டு இப்ப இங்க வந்து நிக்கிற...’ என்கிற மாதிரி இறுக்கமாய் கம்சலா. அம்மாவின் இடுப்பை வளைத்துக் கோர்த்துப் பிடித்துக்கொண்டு சின்னக் கம்சலா மட்டும், சிகாமணியின் முகத்தில் தெரிந்த அம்மாவின் சாயலைப் பார்த்துக் கொண்டேயிருந்தது.

உத்தண்டராயராகத்தான் போய் திண்ணையில் குந்தினார். முருங்கை அடியில் கிடந்த சிமிட்டிக்கட்டையில் பலிபீடக் கல்லில் குந்துவது போல் குந்தினான் சிகாமணி. நடுக்குப்பம் போகிறவர்கள், திரும்பிப் பார்த்துக்கொண்டே போனார்கள். எப்படிப் பேச்சைத் துவக்குவது எனத் தெரியவில்லை உத்தண்டராயருக்கு.

லேசாய் செருமியபடி சொன்னார் “ தங்கதொரலாம் நமக்கு பழக்கந்தான். கபடி வெள்ளாடறதுல நாங்கள்லாம் பழைய செட்டு ஆளுவோ. எனுமோ அவனுக்குக் காலகோலம் சரியில்ல.”

சொல்லி வாயைக்கூட மூடவில்லை. எட்டிக் குதிகாலை மிதிக்கிறமாதிரி சொன்னாள் “ ஏண்ணா வீணா... இருக்கறவங்க கதயப் பேசுங்க. போக்காளிவோ கத போனதோட இருக்கட்டும்.”

எடுத்த எடுப்பிலேயே அணைபோட்டது மாதிரி உத்தண்டராயர் திகைத்துப் போய்விட்டார். கம்சலா எப்போதும் இப்படித்தான். மற்ற

அத்தைகளைப்போல நேர்ந்து நிதானித்துப் பேசுகிற பழக்கம் எப்போதும் இல்லை. அம்மா அசலாம்பு கூட அடிக்கடி கெறாவிக் கொண்டு கிடப்பாள். ‘ இப்பிடி எடுத்துப் போட்டன் கழுத்த முறிச்சன்னு பேசுறதுக்கு, போற எடத்துல சொந்தம் பந்தம்லாம் அப்படியே பூரிச்சி கிட்டுதான் வந்து நிக்கும்.’

திரும்பவும் இயல்பு நிலைக்கு வந்து பேச்சை ஆரம்பித்தார் “ என்னத் தெரியுமாம்மா? நா தெக்குவெள்ளூர்தான்...”

“ யாரத் தெரிஞ்சி என்னா ஆவப்போவுது அண்ண. நம்ப கைய ஊனிதான் நாம கரணம் போட்டாவணும்.” கம்சலா திரும்பவும் கத்திரிக்கோலை நீட்டினாள்.

திரும்பத் திரும்பப் பேச்சு தொடங்கிய புள்ளியில் நின்றதும், உத்தண்டராயர் கடந்து நேராக விஷயத்துக்கு வந்தார் “ ஏம்மா அவவன் நெலம் எடுக்கிற சிக்கல்ல போலிசு, கோர்ட்டு, செயில்னு அலைஞ்சிக்கிட்டு சாவறான். நீ பாட்டுக்கும் நோட்டிசு வுட்டுருக்கிய. ஒரு வார்த்த என்னைமாதிரி குறுக்கால இருக்கிற ஆளுவோ கிட்ட ணாச்சும் கலந்துருக்கலாமில்ல... ஒனக்குள்ளது எங்க ஓடிடப் போவுது?”

“ பூட்டுத... இனிமே ஒரு காலமா போவப்போவுது? சரி ஊரு ஒலகத்துல இல்லாத தப்பையா நாஞ் செஞ்சிட்டன். சரி வுடு, நடந்துபோச்சி. கால்ரூவா காசியா இருந்தாலும், எதோ நாலு ஓட்டத்தாட்ட சாமானா இருந்தாலும் தலயச் சுத்தி வுட்டுக்கெடா சிருக்கலாமில்ல. அதையும் வுடு. எனுமோ அள்ளிக்கிலாம்னு நா வந்த நேரம், இந்த செறுவயிசில நா இப்பிடி..” அவளால் திடுமெனக் கவிந்த துக்கத்தால் பேச இயலவில்லை. உயரே அண்ணாந்து பார்த்து கம்சலாவின் மகளும் கலங்க, கட்டையில் குந்தியிருந்த சிகாமணிக்கும் பொசுக்கென கண்களில் பொங்கியது.

மேய்ச்சக்காலிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த மாடுகளில் ஒன்று வாசலில் ஏறவும், கண்ணைத் துடைத்துக்கொண்டு கம்சலா ஓடினாள். அது அலைச்சல் காட்டவும் மகளும் தானுமாய் வளைத்துக் கட்டிவிட்டு வந்து நின்றாள். பேச்சு நிதானமாகவும் தீர்மானமாகவும் வந்துகொண்டிருந்தது. “ யாரும் கேக்குல, பாக்குல. எறும்ப எழுதனவன் அர அரிசியச் சேத்து எழுதியிருப்பாங்கற மாதிரி போய்க்கிட்டுதான் இருந்தன். தே இப்ப நெலத்த பூரா எடுத்தான். கை நெறயா காசிய வாங்குறீங்கள இந்தக் காணி பூமிலாம் எப்பிடி வந்தது. அன்னைக்கி கையில களக்கட்ட எடுத்துக்கிட்டு வளையமாதேவி, மும்முடி சோழன் கண்ட மட்டும், கள வெட்டி

சம்பாரிச்சாந்து போட்டன. மடியில கீரையும் தலையில பில்லுமா கொண்டாந்து சேத்தன. அதுலாம் மறந்துபோச்சா...”

குறுக்க நெடுக்க யாரும் பேசவில்லை. பொழுது சுத்தமாய் இறங்கி விட்டிருந்தது. கம்சலா சொல்லிக் கொண்டிருந்தாள் “ சரி வாணாம். அவனே போனாப் போவுதுங்கறமாதிரி நெய்வேலிக்காரன் குடுக்கறான். இதுல சிக்கல வைக்கக்கூடாதுன்னு வுட்டுட்டன். தே பணங் குடுத்து எம்மாம் நாளாச்சி. பாவம் இந்தக் குடும்பத்தல களகாம்பாவுது வெட்டிக்கிட்டு கெடந்தாளேங்கற பரிதாவத்த பாத்தாவது ஒரு ஆயிரம் ரெண்டாயிரம்னாச்சும் குடுக்குணும்னு யோசன வரக்கூடாது? சொல்லுங்க அண்ண..” லேசாய் அதட்டுகிற மாதிரி கேட்டதும் உத்தண்ட ராயர் திடுக்கென நிமிர்ந்தார். “ நாஞ் சொல்றது தப்பா இருந்தா கேளுங்க அண்ண. அதாம் பாத்தன். கடந்து பூட்டுது. இதுக்கு மேலயும் நாம சும்மா இருந்தா நடக்காதுன்னுதான் இந்த முடிவுக்கு வந்தன்.”

உத்தண்டராயர் சப்புக்கொட்டியபடி ஆரம்பித்தார் “ தப்பு தாம்மா. அன்னைக்கே ஒடந்தடம்னு செய்யவேண்டியதச் செஞ்சிருக் கணும். அதோட தங்கதொர செத்தப்ப வராம வுட்டது மகா தப்பு. இல்லன்னு சொல்லுல. இந்த நெலம்பலத்து சிக்கல்லையும், இவனும் செய்ய வேண்டியதச் செய்யாம வுட்ருக்கமாட்டான். இந்த நெய்வேலிக் காரன் பிரிகட்டி அடிச்சதுல ஈவு பிரியாம வுட்டுட்டான்.”

“ நா யாரையும் தப்பு சொல்லுல அண்ண. அவுங்கவுங்க நேருக்கு சரியா இருக்குன்னு நடந்துக்கறப்ப, நம்ப நேருக்கு பாத்து நாமதான் எச்சரிக்கையா நடந்துக்கணும்.” சொல்லிவிட்டு மகளை வீட்டுக்குள் நெட்டாத குறையாய்த் தள்ளினாள். “ இன்னம் கரண்டு குடுக்குல போல்ருக்கு. போயி வெளக்கக் கொளுத்து.”

“ யாரும் நேராவும் யோசிக்கில, கோணலாவும் யோசிக்கல. வுட்டுடு. என்னா நேரமோ இந்த இக்கட்டுல அந்த ஆளுக்கு வெலாவுல தொடந்தாப்ல எனுமோ வெனயம் வைச்சி, பாவம் படுக்கையில வுழுந்துட்டாரு...” பேச்சில் சற்று இரக்கத்தைக் காட்டினார்.

“ நா அவரசப்பட்டதுக்கு தே.... நா அனுபவிக்கில, அதே மாதிரி தான் அவுருக்கும் அவசரப்புத்தி. இதுல பாவம் என்னா புண்ணியம் என்னா...” எல்லாவற்றிற்குமே கம்சலா பதிலை வைத்திருந்தாள்.

சிகாமணியால் அதற்குமேல் குந்தியிருக்க முடியவில்லை எழுந்தான். உத்தண்டராயரும் எழுந்து வாசலுக்கு வந்தார். “ ஒண்ணும் குறுக்கு சால்

ஓட்டாத. அவன் அப்பன வுடு. பாவம், இவம் எங்கியாவுது காண்ட்ராக்ட் பக்கம்னாலும் ஓடியிருந்தாலும் பொழைச்சிருக்கலாம். ஊரு ஊருன்னு கெடந்துட்டு, கடைசியில எல்லாம் கூடி வர்ற நேரத்துல இப்பிடின்னா, அத விட பெரிய கொடுமை எதுவுமில்ல. நா பொதுவான ஆளு. யாருக்கும் பாதகமில்லாம சொல்றன். மொத்தம் நாலோ அஞ்சோதான் வந்துருக்கு. இதுல ஒண்ணங்காரருக்கு ஒடம்ப பாக்க வாங்கனதும் இருக்கு. மேல்கொண்ட வைத்தியச் செலவும் இருக்கு. இது இல்லாம ஒன்ன மாதிரி பொறந்த பொறப்புவுளுக்கு நல்லது பொல்லதப் பாக்க வேண்டியதும் இருக்கு. வூடும் மாத்துக் குடியிருப்புல சும்மா பனிமறப்புக்கு போடறமாதிரி சாகையாதான் போடுது. நெல்ல வூடும் கட்டுணும். மேல இவனுக்கும் கல்யாணம் காட்சின்னு பாக்கணும் போவுணும். அதனால...” பேச்சை நிறுத்தினார்.

கம்சலா மகள் விளக்கை ஏற்றிவந்து திண்ணையில் வைக்கவும், மின்சாரம் வந்து பொலுக்கென்று லைட் எரியவும், சிம்னி சிறுத்துப்போனது. அடுத்துச் சொல்லவருவதை ஊனாடிக் கேட்பது போல் கம்சலா நின்றாள். “ வா, வக்கீலுகிட்ட போவும். ஒரு லட்ச ரூவா பணத்த குடுக்கச்சொல்றன். வாங்கிக்கிட்டு என்னால எந்தச் சிக்கலும் இல்லன்னு எழுதிக் கையெழுத்துப் போட்டுக் குடு.”

கம்சலா மூஞ்சியில் அடிக்கிறமாதிரி சொன்னாள் “ அதுலாம் சரிவராது அண்ண. பணத்தக் கூட வுடுங்க. ஆனா வேல எனக்குத் தான் வேணும். இதுக்கு மேலும் நானும் ஏம் புள்ளையும் நின்னு தெவைக்கக்கூடாது. அதே மாதிரி எப்பஞ் சம்பாரிச்ச சொத்து. எதிரிக்கி என்னா உரிமை இருக்கோ அதே மாதிரி எனக்கும் எல்லாமும் உண்டு.” கம்சலாவின் குரலில் தீர்க்கம் தெரிந்தது.

சிகாமணிக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. எட்டின வரைக்கும் ஏகத்துக்கு திடுமென இருள் சூழ்ந்துகொண்ட மாதிரியான தவிப்பு. கண்கள் திரள நின்றுகொண்டிருந்தவனைப் பார்த்த உத்தண்டராயர் கடந்து பேசினார் “ ஏம்மா... ஓம் புள்ளன்னா என்ன ஒண்ணம் புள்ளன்னா என்னா. தெவைச்சி தெகமாறி, ஓந் தலகட ஏறி வந்து நின்னு கலங்கறான். இன்னமும் நீ பெத்த புள்ளைகிட்ட போயி, வேல வேலன்னு போட்டி போட்டுகிட்டு...” உத்தண்டராயர் அதிரப் பேசவும் அதே வேளை ‘ ஓம் புள்ள ஒண்ணம் புள்ள பெத்த புள்ள’ வார்த்தைகளில் பொடுக்கென்று அவளுக்குள் ஓர் உடைவு... அவளையுமறியாமல் கலங்கி நின்ற சிகாமணியின் கண்களைப் பார்த்தவள் சொடுங்கிப் போய்விட்டாள்.

உத்தண்டராயரே பேசினார் “ நாளைக்கி சாயந்திரம், வக்கீலு கிட்ட வாம்மா. பணம் என்னா பெரிய இந்த பணம், இன்னம் பத்து இருவது சேத்து வாங்கிக் குடுக்கறன். வந்து வாங்கிக்கிட்டு அவனுக்கு ஒரு வழிய வுடு.”

*

53

ஆ காசத்தில் பறக்கிற மாதிரியிருந்தது சதாசிவத்திற்கு. முகம் கொள்ளாத சிரிப்பில், மிகவும் உற்சாகமாக இருந்தான். அவனுக்கு மட்டுமல்ல பால்ராசு, வடிவேல், கணேசன் என ஊரில் பெரும்பாலான பேருக்கு, என்.எல்.சி. நிறுவனத்திடமிருந்து வேலைக்கான ஆணை வந்திருந்தது. காணுகிற எவர் முகத்திலும் குதூகலம் நிரம்பி வழிந்தது. ‘ என்.எல்.சி வேலன்னா சும்மாவா... கைகொண்ட சம்பளம். தங்கறதுக்கு கோட்ரசு..’

பூமா ஒரு குத்து சக்கரையை அள்ளி சதாசிவத்தின் வாயில் போட்டாள். “ எப்பா அய்யனார... வேல வேலன்னு எங்க அண்ணனுக்கு தூக்கத்துல கூட பெனாத்தல்தான். இப்பவாவது கண்ண தொறந்திய...”

பாஞ்சாலைக்குக்கூட டக்கென்று உடம்பு தேறிவிட்டது போன்று ஒரு தெம்பும் திடாரிக்கமும் வந்துவிட்டது. “ அவன இட்டுக் கிட்டு போயி, சாமி படத்துகிட்ட அந்த ஆடரை வைச்சி, அவனுக்கு ஒரு விபூதிய போட்டு வுடு புள்ள.” அவள் வாயிலும் சக்கரை கரைந்து கொண்டிருந்தது. ராசோக்கியத்திற்கும் மகிழ்ச்சிதான். மண் மனை வீடு வாசல் என எதற்கெடுத்தாலும் அலட்சியமாய்ப் பேசி எரிந்து விழுந்து சண்டை வளர்த்தி கடைசியில் அவனது பெருவிருப்பம்... இந்த வேலையும் கிடைத்துவிட்டது. பெருமூச்சி விட்டுக்கொண்டார். “ அப்பா, இதுக்கு மேலனாச்சும் நெல்ல தூக்கம் தூங்குடா சாமீ...”

ஆனாலும் மகனின் வேலைச் செய்தி, பட்டென்று தன்னைத் தனிமையில் தள்ளிவிட்டது போன்று மெல்லிய கோடாய் ஓர் அந்நியம். பிறகு அவராகவே ‘ ஆமா போ. தே இம்மாம் நாளு, இவங் கையயா பாத்து குடும்பத்த ஓட்னம். மீறி கொறகாலத்தையும் அந்த செம்பையன்னாரு பாத்துப்பான் வுடு.’ மனசுக்குள் முதனையில் குத்தகை எடுத்திருக்கிற முந்திரித்தோப்பு நினைவுக்கு வந்தது. கொட்டை பொறுக்கிவிட்டு சித்திரை ஏரியில் குளிப்பதுமாதிரி ஒரு காட்சியும் உள்ளுக்குள் ஓடியது. பூமாவைக் கூப்பிட்டார் “ எம்மா...”

மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்த அண்ணனுடன் தானுமாய் மிதந்தவள் கேட்டாள் “ என்னப்பா...”

“ நாளப் பின்னயாச்சும் அந்த ஆடர எடுத்துக்கிட்டு முதனைக்கு போயி, நம்ப செம்பையய்யா கோயில்ல வைச்சி படைச்சி ஒரு செறப்ப குடுத்துட்டு வரச் சொல்லு..” நிலம் எடுக்கற சேதி அடிபட்ட காலத்திலிருந்து சதாசிவத்தை நேரடியாகக்கூட கிட்டக்க நிற்கையில் ‘ அவன் இவன்’ என்று நெருக்கமாக பாசமாகப் பேசியதே கிடையாது. ‘ அவுர கொல்லிக்கு வரச்சொல்லு...’ ‘ ஒண்ணங்காரரு எங்க போறாராம்? போயி மந்தாரக்குப்பத்துல ஒரு யூரியா மூட்ட எடுத்தாரச் சொல்லு’ என எல்லாமும் ‘ அவுரு இவுரு’ என இடைவெளி. சதாசிவத்திற்கும் தற்போது அவர் அப்படிப் பேசியது ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது.

சா மியா வீட்டில் நல்லவிளக்கு எரிய வீடெங்கும் ஊதுவத்தி மணம். அதேபோல் பாஞ்சாலை, ராசோக்கியம் உட்பட எல்லோர் நெற்றியிலும் விபூதிக் கீற்று துலங்கியது. என்றுமில்லாத படிக்கு குடும்பமே மகிழ்ச்சியில் திளைத்தது.

அவையம் வைக்கலாம் என்று எடுத்து வைத்திருந்த புள்ளிப் பொட்டையின் முட்டைகளை உடைத்துப் போட்டுப் பொரித்தாள். “ வந்து சாப்புடுப்பா...” அப்பாவைக் கூப்பிட்டு சாப்பாடு போட்டாள். பாஞ்சாலையும் கூட முன்கூட்டியே சாப்பிடுகிற தோரணையில் எழுந்து குந்தினாள். ‘ போடுட்டுமா..” கேட்டாள்.

“ ஒண்ணன் வருட்டுமம...” சொல்லிக்கொண்டு குந்தியிருந்தாள். மண் வெட்டுகிற வேலை கிட்டக்க நடந்து கொண்டிருந்ததால் இயந்திரங்களின் இரைச்சலும் லாரிகளின் திணறலும் கூடுதலாய்க் கேட்டது.

சாப்பிட்டு முடித்துவிட்டு ராசோக்கியம் திண்ணையில் போய்ப் படுத்துக்கொண்டார். வெளியே போய்விட்டு வந்த சதாசிவம் சாப்பிடக் குந்தினான். அம்மாவுக்கும் சேர்த்து சாப்பாட்டைப் போட்டாள். சாப்பிட ஆரம்பித்ததும் பூமா மெல்ல இணுக்கினாள் “ முதனைக்கி செம்பையய்யா கோயிலுக்கு போறப்ப, அப்படியே மலர போயிப் பாத்துட்டு வா. நீ பாட்டுக்கும் குறுக்குவழியால் எதாலனாச்சும் கொளத்தால நேரா வேலைக்கிப் பூடாத..”

இடம் பார்த்து இணுக்குவதில் பூமா கெட்டிக்காரி. சதா சிவத்தால் மறுத்துப்பேச முடியவில்லை. “ வேலையில ஜாயின் பண்ணிட்டு அப்பறமா போறன்.”

அடுப்பு தட்டுப் பக்கம் சாப்பிட ஆரம்பித்த பாஞ்சாலை தட்டை

எடுத்துக்கொண்டு வந்து கிட்டக்க குந்தியதும் சதாசிவத்திற்கு லேசாய் குழம்பியது. சொல்லிவைத்த மாதிரி பூமா ஆரம்பித்தாள் " அப்பறம் அந்த மலரு சேதி என்னா அண்ண? முதனைக்கி வேற குடி போவுணும். முந்திரிவோ வேற குத்தவைக்கு எடுத்துருக்கு.."

பாஞ்சாலையும் இசைவாய்ப் பேசினாள். " வேலயும் ஆண்டவன் புண்ணியத்துல கெடைச்சிருக்கு. அதோட கையில இருக்கற நாலு ரூவாயும் கன்னாசின்னா ஆயிடாம, ஒரு தரய கிரய வாங்கணும். அதுக்கு மேல ஒரு வயசிப் புள்ள வூட்ல இருக்கு. காலகாலத்துல ஒருத்தங் கையில புடிச்சிக் குடுக்கணும். ஒண்ணும் இதுக்குமேல யோசிக்கறதுல புண்ணியமில்லப்பா. அங்காண்ட பாத்தாலும் நம்மூட்டுப் புள்ள. சட்டுப்புட்டுன்னு ஒரு நாளு தேதிய பாத்து அந்த மலரு புள்ளைய கோயில்ல வைச்சி..."

பாஞ்சாலை சொல்ல வேண்டியதை கறாராகச் சொல்லி முடித்தாள். ராசோக்கியம் அதுதான் தன்னுடைய விருப்பமும் என்பதுபோல செருமி ஆமோதித்தார். சதாசிவம் என்ன சொல்வது எனத் தெரியாமல் திகைத்த மாதிரி சோற்றை விரலால் நிரவிக் கொண்டிருந்தான்.

" என்னா தின்னு தின்னு பாக்கற. ஒன்ன மாதிரி பத்தாவதுல பெயிலு இல்ல. பாஸ் பண்ணனது. வுட்டா காலேஜ் கீலேஜ்னு போயிருக்கிற புள்ள. கட்டிக் கிறதுக்கு நீ குடுத்து வைச்சிருக்கணும்." பூமா சிரித்தபடி சொல்லிக் கொண்டிருந்தாள்.

சதாசிவம் மனசுக்குள் மலர் வந்தாள். கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தவன், வாயைத் திறந்தான் " நம்ப வூட்ல ஒரு வயிசிக்கி வந்த புள்ளைய வைச்சிக்கிட்டு, அம்மாஞ் சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கினுமான்னு பாக்கறன்."

அவன் வாயை மூடவில்லை, பூமா அப்படியே எகிறிப் பாய்கிற மாதிரி பேசினாள் " இப்ப நா ஒண்ணும் கல்யாணம் பண்ணுனும்னு ஒத்தக் கால்லியும் நிக்கில. எனக்கு ஒரு கழுத வயிசியும் ஆயிப் போவுல. என்ன காரணங் காட்டிக்கிட்டு நீ தந்தனத்தாம் பாட்டுப் பாடிக் கிட்டு நிக்காத. மொதல்ல ஓங் காரியத்த முடி. என்னக் குறுக்கால இழுத்துப்போட்டு குளுர் காயாத."

பூமா உடாரித்துச் சொன்னாலும் பாஞ்சாலைக்கும் ஏன் ராசோக்கியத்திற்குக் கூட அவன் சொல்கிற யோசனை சரியாக இருப்பதுபோல் தோன்றியது. அதைவிடவும் வேலைக்கான ஆணை கையில் கிடைத்தவுடன் கூடுதலாய் அவனுக்குக் குடும்பப் பொறுப்பு வந்து விட்டதுபோல் இருவருக்கும்

பட்டது.

அவன் சொன்னதிற்கும் மறுத்து இவள் பேசியதற்கும் எதுவும் பேசாமல் குந்தியிருந்த அம்மாவைப் பார்த்த பூமாவுக்கு ஏதோ உதைத்தது. " என்னாம்மா பேசாமக் குந்தியிருக்க, அது எதியோ மனசுல வைச்சிக்கிட்டு என்னை காரணங் காட்டுது."

" நீ பேசாம இரு புள்ள.." பூமாவை வாயில் அடித்து மூடச் சொல்லாத குறையாய் அடக்கினாள். " நீ சொல்றதும் சரியாத் தாம்பா இருக்கு. ஒரு வயசிக்கி வந்த புள்ளய வூட்ல வைச்சிக்கிட்டு.. வேணாம். நீ வேல செய்ற எடத்துல நெல்ல பையனா இருந்தா பாரு. முடிஞ்ச வரைக்கும் வேலையில இருக்கறமாதிரி பாரு. கையில பத்துரூவா இருக்கக்குள்ளியே பின்னம் நாலு பவுனு போட்டு ஒரு வண்டிய கிண்டிய வாங்கிக் குடுத்து, நெறமா செஞ்சிடுவம். அதோட அங்காண்டயும் நம்ப காரியம். பத்து நாளு மின்னப் பின்ன ஆனாலும் நாம்பளா பாத்து முடிவு பண்றது. இத முடிச்சிக் கிட்டே அதுகிட்ட போவலாம்."

திண்ணையில் குந்தியிருந்த ராசோக்கியத்திற்கு இப்படி யோசிக்கத் தோணவில்லையே என்கிற வருத்தம் லேசாய் தலை காட்டியது. நாளைக்கு நிலம் வாங்கிப் போகிற இடத்தில் ஆண்டவன் புண்ணியத்தில் மிச்சபிச்சமாய் இருந்துவிட்டால் பரவாயில்லை. நமக்கு முன்னால் நம்ம நேரம் முன்னபோய் நின்னு இதைவிடவும் இறக்கத்தில் கொண்டுபோய்விட்டு விட்டால்... கையில் தோதுமாது இருக்கும்போதே பார்த்தால் தேவலாம் என்று பட்டது. படுத்துக் கொண்டார்.

" பத்துப்பொழுது முன்னப் பின்ன ஆனாலும் வேலையில இருக்கற பையனா பாருப்பா." பாஞ்சாலை மீண்டும் ஞாபகப் படுத்தினாள்.

" பாக்கறன்.." சதாசிவம் எழுந்தான்.

இப்படித் திசை திரும்பித் தன்னை நோக்கி வரும் என்று சற்று முன்னர் வரை பூமா யோசித்துப் பார்க்கவில்லை. திடுமென வளைத்துக்கொண்டது மாதிரி ஓர் இறுக்கச் சூழல். கால்மணி நேரத்திற்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்து அதைச் செய்து முடித்து விட்டுதான் அடுத்த கட்டம் என்கிற மாதிரியான முடிவுக்குப்பின் பூமாவுக்கு எதுவும் பேச நா எழவில்லை.

அதே நேரம் உடம்பெல்லாம் பூக்கள் உரசுகிறமாதிரி ஒரு கூச்சம், பூரிப்பு. எங்கும் பச்சைகள் விரிந்த பரந்த நிலம். கிட்ட நெருங்க நெருங்க கம்மங் கொல்லைகள், குருவிகள். ஊடே சிகாமணி. ஆனால் எட்டிப் பிடிக்கவே

முடியாதபடிக்கு பகை அகழி. தொடரும் விரோதம். ஒரு காலத்திலும் நிறைவேற முடியாத கனவுகள். எவருக்கும் தெரியாமல் பூத்து, எவர் பார்வையிலும் படாமலேயே உதிர்ந்துவிட நேர்கிற அவள் நேசம். சுத்தமாய் மறந்துவிடுவதைத் தவிர வேறெதுவும் அவளுக்கு வழியே இல்லையென்கிற நிர்பந்தம்.

“ என்னாடி வெளக்கப் பாத்து மொறைச்சிக்கிட்டு குந்தி யிருக்க..” செல்லப்பாங்கி கேட்டுக்கொண்டே வந்தாள். அவளுக்கும் தாங்க முடியாத சந்தோஷம். எட்டாவது வரை படித்திருந்த கணேசனுக்கும் வேலை வந்திருந்தது.

“ சும்மாதான் அண்ணி..” நினைவுக்கு வந்தவளாய் எழுந்தாள்.

“ ஒஞ் சித்தப்பனுக்கு வல்ல போல்ருக்குப்பா..” படுக்கப்போன சதாசிவத்திடம் சொன்னாள்.

“ அவுரு நாப்பத்திஅஞ்ச தாண்டிட்டாரு. எங்க பெரிய பாப்பா வைரம் பதினெட்டு வயிசி ஆயிப்போச்சினா குடுத்துடுவான்.” சொல்லிக்கொண்டு நின்றான்.

“ எங்க குடிகாரரு, தேவகி வூட்டுக்காரருக்குலாம் வந்துருக்கு. ஆனா இதுக்கு முக்கியமா பாடுபட்ட ஆளுவுளுக்குதான், பாவம் வராமப் பூட்டுது.” செல்லப்பாங்கி.

“ அறிவழகன் மாமாலாம் வெளிய வந்ததும் சங்கத்துக்காரங் கள வைச்சி வாங்கிடுவாரு” சதாசிவம் நம்பிக்கையாகச் சொன்னான்.

செல்லப்பாங்கி சற்றே குரலைத் தாழ்த்திச் சொன்னாள் “ அந்த கூத்தாடி வூட்டுத் தம்பி சிகாமணிக்குந்தான் வல்லியாம். எலுமிச்சில இருக்கற அவுங்க சின்ன அத்த கேசு போட்டதுல..” செல்லப்பாங்கி சொல்லிக்கொண்டிருந்தாள்.

காதில் வாங்க விருப்பம் இல்லாதமாதிரி படுத்துக்கொண்டான். சிகாமணிக்கு வேலையில் சிக்கல் என்கிற பேச்சு, பூமாவுக்கு சீவுமுள்ளாய் உள்ளுக்குள் அறுவியது.

*

54

சி காமணி ரொம்பவும் தளர்ந்துபோய் கனவில் போவது போல் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தான். காலையிலிருந்து சாப்பிடவில்லை. சாப்பிடவில்லை என்பதைவிடவும், சாப்பிட மனம் இல்லை. ஊரில் பெரும்பாலான பேருக்கு வேலை வந்திருக்கிற சூழலில், அறிவழகனுக்கும் இவனுக்கும் வரவில்லை. அறிவழகன் குண்டர் சட்டத்தில் உள்ளே இருப்பதால் சாத்தியமில்லை. ஆனால் இவனுக்கு... சாப்பிட, குளிக்க, எதுவும் ஓடவில்லை.

" ஏம்ப்பா... அந்த நாடுமாறி இங்காண்ட பணத்த வாங்கிக் கிட்டு, அங்காண்ட திரும்பவும் வேல குடுத்துருப்பாப்பா.." அம்மா அதிர்ச்சி குறையாமல் இரண்டு நாளாய்ச் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

அதற்கான வாய்ப்பே இல்லை. ஆதிநாராயணன் வீட்டில் வைத்து ஜி.ஆர் டாக்டர் அனுப்பிய சுந்தரமூர்த்தி முன்னிலையில் பணத்தைக் கட்டுக்கட்டாக கம்சலாவிடம் கொடுத்து கையெழுத்து வாங்கி, உத்தண்டராயர் சாட்சிக் கையொப்பமிட்டு, பதிவு அலுவல கத்தில் முறைப்படி பதிவு செய்த பத்திரம். வக்கீல் மூலம் அனுப்பியது இல்லாமல், தானும் நகலெடுத்து ஆளெடுப்பு நிர்வாகத்துக்கு அனுப்பி யிருந்தான். பத்திரத்தின் வரிகள் கூட இன்னமும் மனதில் ஓடிக்கொண்டிருந்தன.

' மேற்படி 1வது நபர் அவர்களிடமிருந்து எனக்கு குடும்பவழி சேர வேண்டிய சொத்துகளுக்கு மாற்றாக ரூ 1,20,00 (ரூபாய் ஒரு லட்சத்தி இருபதினாயிரம்) பெற்றுக்கொண்டு 2வது நபராகிய நான் எழுதிக்கொடுத்த ஆட்சேபணை இல்லா ஒப்புதல் பத்திரம். இனி வருங்காலத்தில் மேற்படி 1வது நபரிடமிருந்து சொத்தோ சொத்துவழி வருகிற என்.எல்.சி.யின் வேலை வாய்ப்பிலோ உரிமை கோர மாட்டேன் என்றும், அவர் விரும்புகிற வகையில் அவருக்கோ அவர் விரும்புகிற நபருக்கோ வேலைவாய்ப்பை வழங்கலாம் என்றும் இதில் எனக்கு ஏதும் ஆட்சேபணை இல்லையென்றும் உறுதி கூறுகிறேன். இது என்னுடைய மன சம்மதமாக முழு நினைவோடு எழுதியளித்த ஒப்புதல் அளிப்பு பத்திரம்.'

இப்படிக்கு

த. ஹம்சலா (2 வது நபர்)

ஒன்றாம் பிளாக்கில் கிழக்கே ஆர்ச் கேட் பக்கம், நெய்வேலி நிலக்கரி நிறுவனத் தலைமையகம். இருபக்கமும் நிழல் சூழ்ந்த குடியிருப்புகளைத் தாண்டி கிழக்கே போகப் போக, எதிர்மேடாக இருந்தது. உச்சிவெயில் வேறு மண்டையைப் பிளந்தது. வந்து போகும் வாகனங்களின் அனல்காற்றில் தொண்டை காய்ந்து சிகாமணிக்கு கண்ணாம்பு சுற்றுகிற மாதிரியிருந்தது. இறங்கி சாலையோர மரத்தின் கீழ் கேட்பாரற்று ஓடிக்கொண்டிருந்த குழாயில் தண்ணீர் குடித்தான். வெறும் வயிற்றில் தண்ணீர் ஓடிப் பரவியதும் குடலை முறுக்கிக் கொண்டு வலித்தது.

காலையிலேயே நில எடுப்புத்துறை அலுவலகத்தில் இங்கு தான் போக வேண்டும் என்று சொல்லியிருந்தால் இந்த நேரத்திற்கு என்ன ஏது என்று சேதியைத் தெரிந்திருக்கலாம். ‘ அவுரு வந்தாதான் தெரியும், இவுரு வந்தாதான் தெரியும்’ எனச் சொல்லிச் சொல்லி பெஞ்சில் உட்காரவைத்து விட்டார்கள். அறிவழகன், குறள்மணி அண்ணன் எனப் பலமுறை வந்து குந்திய பெஞ்சில் வாட்டமாய் குந்தியிருக்கிறான். கடைசியாய் நில எடுப்புத்துறை தலமான் வரவும் போய்ப் பார்த்தான். இவனுக்கு வேலை வராமல் போன மகிழ்ச்சி அவர் முகத்தில் தெரிந்தது.

ஆனாலும் வேலை வராமல் போனதிற்குத் தான் எந்த விதத்திலும் காரணம் இல்லையென்று அடித்துச் சொன்னார். நிலங்களைக் கையகப்படுத்தி நிறுவனத்துக்குத் தருவது மட்டுமே தனக்கான வேலை என்றும், வேலை யாருக்குத் தரவேண்டும் வேண்டாம் என்பதையெல்லாம் ஒன்றாம் பிளாக்கில் உள்ள நிறுவனத் தலைமை அலுவலகம்தான் முடிவு செய்யும் என்றும் அங்கு போனால் நிறுத்தப்பட்டதிற்கான காரணங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் சொன்னார்.

உத்தண்டராயரைக் கூட இட்டுக்கொண்டு வந்திருக்கலாம் என்று தோன்றியது. பாவம் அவரும் வேலை, வீடு மாற்றம் என்கிற சிக்கல் உள்ளவர்தான். எல்லாவற்றிற்கும் அவரைப்போட்டு இழுத் தடிக்க மன சம்மதமில்லையென்றாலும், குறைந்தபட்சம் அவரிடம் இதுபற்றிக் கலந்திருக்கலாம் என்று பட்டது. மனம் கெட்டுக்கிடந்த சூழலில் ஆதியில்லாமல் போய்விட்டது.

பிரமாண்டமாய் தலைமை அலுவலகம். நெய்வேலியில் இப்படி அகன்ற சாலைகள் வந்துகூடும் பெரிய வாசலைக் கொண்ட உயர்ந்து நீண்ட

கட்டிடத்தை அப்போதுதான் பார்க்கிறான். கிள்ளி னால் பச்சை ரத்தம் வருகிறமாதிரி பசும்புற்கள். பூத்துக்குலுங்குகிற செடிகள். காலடியில் ஓடிக்கொண்டேயிருக்கிற தண்ணீர். சாரை சாரையாக கொட்டகையில் நிற்கிற இருசக்கர வாகனங்கள், ஜீப்புகள், கார்கள், அலுவலகம் இயங்கிக் கொண்டிருப்பதாகவே தெரியாத படிக்கு ஓர் அமைதி.

ஆனால் இதில் எதிலும் சிகாமணிக்கு மனம் ஓடவில்லை. தனித்து இயங்குகிற பாதுகாவல் அலுவலகத்தில் போய் பரிதாபமாக விஷயத்தை சொன்னான்.

" ரெக்ரூட்மெண்ட் செக்ஷன். இப்படியே நேரா போயி ரைட்ல திரும்பி லெப்டல போனா, வரும். ஒசரமா ஒக்காந்துருப்பாரு.." பசிப் படபடப்பாக இருக்க வேண்டும், குந்திய நிலையில் விரலாலேயே வழிகாட்டினான்.

ஓசையில்லாமல் நடந்துகொண்டிருந்தான். எவரும் நிமிர்ந்து பார்க்க முடியாதபடிக்கு வேலையில் ஆழ்ந்திருந்தார்கள். திடுமென வெளியே சைரன் சத்தம். சன்னல் வழியாகப் பார்த்தான். நெற்றியில் சிவப்பு விளக்கு பதித்து சத்தம் எழுப்பியபடி பாதுகாவல் வாகனங்கள் முன்னே பின்னே போக நடுவில் சொகுசு கார் ஒன்று போய்க் கொண்டிருந்தது. சைரன் சத்தம் தேய ஆரம்பித்ததும் அலுவலகத்தில் ஒரே சலசலப்பு. ஒன்றிரண்டு பேர் நிற்கவும் நடக்கவுமாக சாப்பாட்டு சங்குக்காகக் காத்திருப்பது மாதிரி தெரிந்தது.

இவன் அவசரமாய், சொன்னபடி வலது இடது திரும்பி, உயரமான ஆள் முன் நின்று ஒரு வணக்கத்தைப் போட்டு விஷயத்தை சொன்னான். சாப்பிடப்போகும் அவசரம் அவருக்கு. பிறகு வரச் சொல்லலாம் என நினைத்தவர், ஏதோ சந்தேகப்பட்ட மாதிரி கேட்டார் " பேரு என்னா சொன்னிங்க..."

" சிகாமணிங்க. வேப்பங்குறிச்சி கிராமம். அப்பா பேரு செங்கல்வராயர்..." பாடமாய் ஒப்புவித்தான்.

பிறகு எதுவும் அவர் கேட்கவில்லை. சரசரவென எழுந்து போய், அலமாரியைத் திறந்து தேடினார். பழுப்புத்தாள் உறை கொண்ட ஒரு கோப்பு. எடுத்து வந்து குந்தித் திறந்து பார்த்தார். இவனுக்கும் பார்வையில் எட்டியது.

இவன் போட்ட அப்ளிகேஷன். பிறகு கம்சலா அனுப்பி யிருந்த நோட்டிசு. அடுத்து வக்கீல் மூலம் அனுப்பப்பட்ட ஆட்சேபணை இல்லா ஏற்பளிப்பு

பத்திரத்தின் நகல். ஆக மேலும் இவன் அனுப்பியது. இவனுக்காகவே போடப்பட்ட தனிக்கோப்பு.

உயரமானவர் பேசினார். “ நாங்க லிஸ்ட்டு ரெடி பண்ணிக் கிட்டு இருக்கறப்பதான், இந்த நோட்டிஸ் வந்துது. அதனால அத கிளியர் பண்ணனப்பறம் அனுப்பிக்கலாம்னு நிறுத்தி வைச்சிட்டு, ஃபைனல் லிஸ்ட் ரெடி பண்ணிட்டம். சி.எம்.டி.கிட்ட லிஸ்ட்ட வைச்சி ஓ.கே வாங்கனப்பறந்தாம், இந்த நோ அப்ஜக்ஷன் வந்து சேந்தது. சி.எம்.டி டெல்லியில ஒரு மீட்டிங் சம்மந்தமா ரொம்ப பிசியா இருந்ததால, இதப் பத்தி பேச முடியில. பிறகு செகண்டு லிஸ்ட்டுல அனுப்பிக்கலாம்னு வுட்டுட்டம்.”

இவனுக்கு மயக்கம் வருகிறமாதிரியிருந்தது. உயரமானவர் இவன் மனக்குறிப்பை வைத்து தொடர்ந்தார் “ இதுல ஒண்ணும் சிக்கல் இல்ல. எல்லாம் கிளியர். அப்பிடியே சி.எம்.டி. கிட்ட வைச்சி ஓ.கே வாங்கணும், அவ்வளவுதான். ஆனா சி.எம்.டி தே, போனாரு பாரு. நேரா சென்னைக்கி போயி, டெல்லிக்கிதான் பிளைட்டு. நாளைக்கி சென்ட்ரல் மினிஸ்டர் தலைமையில மீட்டிங். மீட்டிங்க முடிச்சிட்டு நேரா கேரளாவுக்குப் போய் அவுரு பொண்ணுக்கு கல்யாணம். எல்லாம் முடிச்சிட்டு வந்து சேரறதுக்கு எப்பிடியும் ஒரு மாசம் ஆவும். பயப்படாமப் போங்க. திரும்பவும் சொல்றன் இதுல ஒண்ணும் சிக்கல் இல்ல. சி.எம்.டி. வந்ததும், ஆடர் வீட்டுக்குத் தேடி வரும் நிம்மதியாப் போங்க.”

“ சி.எம்.டி இல்லன்னா ஜி.எம் அளவுள இத ஃபாலோ பண்ண முடியாதுங்களா சார்... ஒரு மாசம் ஆவுங்கிறீங்க..” கேட்டான்.

“ நீங்க வி.ஐ.பி. ஒங்கள மாதிரி எக்ஸ்குளுசிவ் பர்சன்சுக்குலாம் சிஎம்டி லெவல்ல தாங்க ஓகே பண்ணணும்.”

*

55

வேலை என்கிற ஒற்றைச் சொல்லுக்காகக் காத்துக்கொண்டிருந்த ஊர். அது கிடைத்து அவரவர் வேலைக்குப் போக ஆரம்பித்த அதே ஆர்வத்தில், ஊரைக் காலி செய்துவிட்டு மாற்றுக்குடியிருப்பில் போய் குடியேறுவதிலும் ஆர்வத்தைக் காட்டினார்கள். ‘ எடமும் குடுத்து வேலையும் குடுத்துட்டான். இனிமே குந்தியிருந்தா வந்து பொடரியப் புடிச்சி நெட்டித்தள்ளுவான். இல்லன்னா ராவோட ராவா மண்ணு வெட்டி மிஷினால கொத்தி அள்ளிகிட்டுப் போயி மண்மேட்ல கொட்டி மூடிடுவான்.’

குடிபெயர்கிற வேலையும் அப்படியொன்றும் கடினமான தாகவும் இருக்கவில்லை. மரம்மட்டைகளை ஆடுமாடுகளை எல்லாரும் விற்றுவிட்டு சிலுக்க நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் வீட்டுக்கு வீடு பெயர்வுக்குப் பெரும் சிக்கலாய் இருந்தது இந்தத் தொம்பைகள்தான். கம்பு, கேழ்வரகு, நெல், மணிலா எனக் கொட்டி வைத்து வேண்டும் என்கிறபோது கீழ்திறப்பால் திறந்தெடுத்து குற்றியும் அரைத்துமாய் வாழ்க்கையை ஓட்ட உதவியவை. குடும்பத்தின் செழிப்பைக் காட்டுகிற மாதிரி நடுக்கூடத்தில், தாழ்வாரத்தில் கிடந்த வற்றைக்கூட கடைசி நேரத்தில் ‘ நெலமே இல்லன்னு ஆனப்பறம் எதுக்கு வெத்து மெப்புக்கு...’ கையைக்காட்டி விட்டிருந்தார்கள். மீறிக் கிடந்த மண் தொம்பைகளை அசக்கினால்கூட பொலபொலவெனப் போய்விடும். விட்டுச்செல்வதை விட வேறு வழியில்லை.

அதே போன்று அடுக்குப் பானைகள். ‘ எந்த வெரப்பண்டத்த பானையில வைச்சிருந்து வெரைக்கப் போற... நெய்வேலிக்காரன் காட்டியிருக்கிற பத்துக்கு பத்து தாண்டு தப்பிடி மனையில, பொறாக் கூண்டுக் குடிசையில சாராய ஊறல் போடற மாதிரி இதுவுள எங்க எடுத்துக்கிட்டு போறது’. மீறியும் வைத்தவர்கள், லாரிக்காரன் உண்டாக்கி வைத்திருந்த குண்டுகுழியின் குதிப்பில் வண்டி இறங்கி ஏறியதிலே வீறல்விட்டு வேலை முடிந்துவிட்டது.

இதையும் மீறி கொஞ்சபேர் வீட்டில் மரப்பெட்டி. நாலைந்து வீட்டில் மட்டும் பீரோ. பெரும்பாலானவர் வீட்டிலும் கயிற்றுக் கட்டில். மற்றபடி எல்லோருக்கும், கட்டியிருக்கிற கொடிக்கழியில் கிடக்கிற துணிமணிகளும், நெய்வேலிக்காரன் கொடுத்ததைச் செலவு பண்ணியது போக மீதி

பணமும்தான்.

இருக்கவே இருக்கிறார் கரி படாச்சி. சொல்லப்போனால் இந்த ஊரை மாற்றுகிற வேலையை சிரமமில்லாமல் முடித்து வைத்தது அவரும் அவரது வண்டியும் மாடுகளுந்தான். பத்துப் பதினைந்து நாளாய் ஏற்றவும் இறக்கவுமாக அவருக்குத்தான் வேலை அதிகம். தலையில், சைக்கிளில் எடுத்து வருபவர்களைக்கூட ‘ வண்டியில இப்பிடிப் போடு. கொண்டுபோயி எறக்கிடுறன்’. வலிந்து ஏற்றி வந்து இறக்கிவிட்டார். கூலி கொடுத்தவர்களும் உண்டு. ‘ அப்பறம் தர்றன்’ என்று சொன்னவர்களும் உண்டு. ‘ ஏதோ நம்பளால முடிஞ்சது’. முத்துக்கண்ணு ஆயி கூட ‘ செத்த போய்ட்டு வா’ மூஞ்சைக் காட்டாமல் அனுப்பி விடுவாள்.

இந்தாண்ட தெருவில் ரங்கநாது குடும்பமும் அங்காண்ட தெருவில் ராசோக்கியம் குடும்பமும் மட்டும் பாக்கி, எல்லாக் குடும்பங்களும் போய்ச்சேர்ந்துவிட்டன. வேலைக்குப் போய்விட்டு வந்த மாலை நேரத்தில் பால்ராசு வந்து ரங்கநாதுவைக் கேட்டான். “ கட்டுன வூட்ட அங்க பூட்டிப் போட்டுட்டு, ஏம் பெரிப்பா இங்கியே குறுங்குறுன்னு ஒக்காந்துருக்கீங்க. நாளைக்கு வூட்ட மாத்திடுவமா..”

“ பாப்பும்பா.. அநேகமா அடுத்த வாரம் வுட்டுடுவாங்க. ஜாமீனு எடுக்கற வேல கிட்டத்தட்ட நெருங்கிடுச்சின்னு குறள்மணி சொன்னதா சிகாமணி வந்து சொல்லிட்டுப் போச்சி. தம்பி வருட்டும்னு பாக்கறன். அதுக்கெடையில எவனாச்சும் வந்து காலி பண்ணனும்னு சொன்னா, சொல்லி அனுப்பறன...” ரங்கநாது அறிவழகன் வராமல் போகக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

இங்காண்ட ராசோக்கியம். அவர்கள் குடும்பத்தைப் பொறுத்த வரை ஏற்கெனவே மாற்றுக்குடியிருப்பிற்குப் போய்விட்ட மாதிரிதான். வேலை கிடைத்த சூட்டோடு பூமாவை இட்டுக்கொண்டுபோய் சதாசிவம் பால் காய்ச்ச வைத்துவிட்டான். ‘ நா, எப்பிடியாவது மலர கொண்டாந்து பால் காய்ச்ச வைச்சிருணும்னு பாத்தன். நீ எனக்கு ஐடியா குடுத்து, என்ன வந்து பால் காய்ச்ச வைச்சிட்ட.’ சாப்பாடு மட்டும் இங்குதான் என்றாலும் மாற்றுக் குடியிருப்பு புதுவீட்டில்தான் சதாசிவத்திற்கு ராப்படுக்கை.

கடந்த பத்து நாளாய் பூமா பள்ளிக்கூடம் போகவில்லை. ஊரிலிருந்து அவள் மட்டும் தனியே போகவேண்டும் என்பதால் பாஞ்சாலையே முட்டுக்கட்டை போட்டுவிட்டாள். பூமாவுக்கும் வேறு வழியில்லை. முதனைக்குப் போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டாள்.

அடுத்த வருஷம் அங்கே சேர்ந்தாலும் மறுபடி பத்தாவதில்தான் சேரவேண்டும்.

திடுமென முளைத்துக்கொண்ட என்.எல்.சி மாற்றுக் குடியிருப்பு அல்லது புதுவேப்பங்குறிச்சி, பேருந்து நிறுத்தம். அடுத்து களம்போல் கிடந்த வெளியில் புதுமெருகு குலையாத சின்னச்சின்ன அளவில் அம்மன், பிள்ளையார் கோயில்கள், நிர்வாகம் கட்டித் தந்ததுதான். ஒட்டி மேலே சிமிட்டி ஓடு போட்ட பள்ளிக்கூடம். குடியிருப்புக்குள் நுழையும்போதே இடதுபக்கத்தில் உயர்ந்திருக்கிற தனபாலின் கட்டிடம். கீழ்வரிசையில் நாலைந்து கடைகள், மேலேயும் அதே போன்றுதான். முதல்கடையிலேயே ஆள் வைத்து மளிகைக்கடை வைத்திருந்தார் கணக்கஞ் செட்டி. அடுத்தது ஒரு டீக்கடை, வட்டிக்கடை, கடைசியில் கண்ணாடிக் கதவு போட்ட சலூன் கடை, இன்னும் தையல் கடை, ஓட்டல் கடைகளும் வருவதாக சேதி.

பேருந்து நிறுத்தத்திலிருந்து தெற்கே நீள்கிற தெருச் சாலையில் கிழக்கே நான்கு தெருக்கள் வேப்பங்குறிச்சிக்கு. மேற்கே நான்கு தெருக்கள் தெற்கு வெள்ளூருக்கும் மூன்று தெருக்கள் வடக்கு வெள்ளூருக்கும். அடுத்து தெற்கு வடக்காய் போகும் ஓடையைத் தாண்டி மூன்று ஊர்களாக காலனி குடியிருப்புகள். தெற்கு வெள்ளூரும் வடக்கு வெள்ளூரும் இன்னும் முழுமையாக வந்து சேராத நிலையில் வேப்பங்குறிச்சி மட்டும் வந்து கொடியை நாட்டிக்கொண்டுவிட்டது.

புதிய வீடுகள், புதிய வாசல்கள், வேலிகள். வேலிக்கு நட்ட பூவரசுகள், தோட்டத்திலும் வாசல்களிலும் வைக்கப்பட்ட தென்னங் கன்றுகள்... என பச்சைகட்டத் தொடங்கியிருந்தன. தெருக்களில் கொட்டிக்கொண்டிருக்கிற குழாய்களில் தண்ணீர். அதைவிடவும் தாராளமாய் ரோட்டை தாண்டி அங்காண்ட தொப்புளிகுப்பம், ஆதண்டார் கொல்லை கருவைத்தோப்புக்குள் போனால் கதகதவெனக் காய்ச்சிய பட்டைத் தண்ணீர்.

விடிகாலையிலே விழித்துக்கொள்கிற டீக்கடைகள். முதல் பணிக்கு வேலைக்குப் போகிறவர்கள், முதல் சுரங்கத்திலிருந்து கரிலோடுக்கு வந்தவர்கள், சிமிட்டி லோடு எடுத்து வருபவர்கள் என ஒரே கூட்டந்தான். விடிந்ததிலிருந்து பத்துமணிவரை அரசியல் பேச்சுதான். ‘ டாக்டர் அய்யா திரும்பவும் போராட்டம் வைச்சிருக்காராம்.’

பொழுது சாயத் தொடங்கினால் சூப்பு, சுண்டல், சுடச்சுடச் சரக்கு... மொத்தத்தில் பழைய இடத்தை விடவும், புதிய அடையாளத்தில் கொஞ்சம்

நாகரீகமாகவும் பரபரப்பாகவும் பொலிவு பூசிக்கொண்டிருந்தது, புது வேப்பங்குறிச்சி.

சேப்ளாநத்தம் செம்ப படையாச்சியும் உத்தண்டராயரும் பேருந்தை விட்டு இறங்கியதும் முதலில் தென்பட்டவர் கரி படாச்சி தான். மாடுகள் அசைபோட்டபடி, வண்டியில் மணல் ஏற்றி வந்து ஊருக்குள் நுழைகிறமாதிரி நின்றுகொண்டிருந்தன. சூப்புக் கடையை நோக்கி உத்தண்டராயர் தான் கூப்பிட்டார். " அண்ண.."

திரும்பிய கரி படாச்சி பழைய ஆளாக இல்லை. முன்பெல் லாம் பெரும்பாலும் கோவண கோலத்தில்தான் நின்று கொண்டிருப்பார். வண்டிக்கு வேலையும் கண்மறைய கொல்லைக் காட்டில்தான் இருக்கும். இங்கு வந்தபிறகு அடிக்கடி மெயின் ரோட்டு பக்கம் வண்டி ஓட்ட வேண்டியிருப்பதால் கோவணத் துணிமேல் வேட்டிச்சுற்றல் கட்டாயமாகிவிட்டது.

" யாரு தெக்கு வெள்ளூராரா... வாங்க வாங்க... அடேங்கப்பா செம்பருமா... வாங்க சாமீவுளா. ஒங்களல்லாம் அடிக்கடி பாத்துக்கிட்டு இருந்தாதான் அய்யா, சங்கம்னு எங்களுக்கு ஞாபகம் வருது..." வண்டிகிட்ட வந்தபடி சொன்னார்.

" புது எடந்தடம்லாம் எப்பிடி இருக்குது. வண்டிவாசி பொழப்பு எப்பிடி ஓடுது" செம்ப படையாச்சி அக்கறையோடு விசாரித்துக் கொண்டிருந்தார்.

" நாத்தா இருந்தாப் புடுங்கி நட்டதும் பட்டுன்னு பச்ச கட்டிக்கும். இது மரத்தப் புடுங்கி நட்ட மாதிரி. அறுபட்ட வேரு, முறிஞ்ச கெள, முறுக்கனது திருவனதுன்னு... பத்துப்பொழுது போவணும், அதுவரைக்கும் தழ வுட்டாப்லதான் நிக்கிம். அப்பறம் ஏங் கத மட்டும் என்னா புதுசா. அங்க கொல்லக் காட்ல வண்டி ஓடிச்சி. இங்க தார் ரோட்டுமேல ஓடுது. மாட்டுக்குத்தான் அடிக்கடி லாடம் தேஞ்சி, கட்டி கட்டுப்படியாவுல..." கரி படாச்சி விசனத்தோடு சொல்லிக் கொண்டிருந்தார்.

உத்தண்டராயர்தான் கேட்டார் " சிகாமணிய பாத்திங்களா..."

கரி படாச்சிக்குள் பட்டென்று ஒரு சொடுக்கம். " காலையில அவுங்க அப்பன, ஆஸ்பத்திரிக்கி இட்டுக்கிட்டு போயி வந்தாம் போல்ருக்கு. நாந்தான் சாமான் செட்டுவுள எல்லாத்தையும் அள்ளிப்போட்டு, அவன் ஒப்பனையும் தூக்கி ஒக்காரவைச்சி, வூட்ட மாத்தி கொண்டாந்து வுட்டன். புள்ளையப் பாக்க சவிக்கில. என்னா நேரமோ இதுக்குன்னு மெனக்கிட்ட

ரெண்டு பேருக்குமே வேல இல்லங்கறது ரொம்ப மனசுக்கு கஷ்டமா இருக்கு” சொல்லிக் கொண்டிருந்தார்.

“ அதான் ரெண்டு நாளைக்கி மின்னகூட பாத்தன். சி.எம்.டி. வந்தா அனுப்பிடுவானுவோன்னு சொன்னான... அது இருக்குட்டும். நாளைக்கி சாயந்திரமா அறிவழகன் ஜாமீன்ல வெளிய வந்துடு வாப்ல. எல்லா வேலையும் முடிஞ்சி போச்சின்னு கடலூர்லேர்ந்து நம்ப வக்கீல் போன் பண்ணனாராம். விருத்தாசலம் போயிருந்தம். ஜி.ஆர். டாக்டர் சொன்னாரு..” உத்தண்டராயர் ஆர்வமாகச் சொன்னார்.

கரி படாச்சி அப்படியே குளிர்ந்து போய்விட்டார். “ நெசமாலுமாப்பா சொல்ற. அவுங்க அப்பா அம்மா வயசானதுவுள பாக்கப் பாக்க மனசு பகீர்ங்குது..” அந்த மகிழ்வான சேதியை உடனடியாக யாரிடமாவது சொல்லிவிட வேண்டும் என அவசரமாய் அங்குமிங்கும் பார்த்தார்.

மரத்தடியில் குந்தியிருந்தவர்களின் மேல் வெயிலைப் போர்த்தி விட்டு, நிழல் முற்றாகக் கிழக்கே நகர்ந்துவிட்ட பொழுதில், அறிவழகன் மெல்ல வெளியே வைத்தான். லாரியிலும் வண்டி களிலுமாக வந்திருந்த மொத்தக் கூட்டமும் ஓடிச் சூழ்ந்து கொண்டது.

“ அறிவு, வந்துட்டியாப்பா...”

“ அண்ண, ஒன்னால நாங்க நெல்லா இருக்கம் அண்ண...”

“ மாமா, ஊரே பெரண்டு வந்துருக்கம் மாமா...”

கண்ணீர் பெருக்கெடுக்கிற குரல்கள். களங்கமில்லாத மனதின் விசாரிப்புகள். அறிவழகனுக்கு உள்ளிருந்த பொழுதுகளின் தனிமையும் இறுக்கமும் பொசுக்கென உடைந்து பொங்கி வழிகிற நெகிழ்வு.

குறள்மணி அண்ணனை, ஜி.ஆர். டாக்டரை பார்த்துக் கண்ணீர் மல்கக் கும்பிட்டான். “ அங்க அப்பா அம்மா நிக்கிறாங்க பாரு... போப்பா.... வழிய வுடுங்க...” ஜி.ஆர் சொல்லவும் கூட்டம் தானாய் வழிவிட, “ தம்பீ...” காசாம்பு கதறிவந்து கட்டிப்பிடித்துக் கொண்டாள். பின்னால் அவன் முதுகைத் தட்டிக்கொண்டிருந்த ரங்கநாதுக்கு கண்களில் வழிந்துகொண்டிருந்தது.

“ நம்ப வைக்கீலுக்குதாம்பா ரொம்ப நன்றி சொல்லணும்.” நாலைந்து இளவல்கள் புடைசூழ நின்றுகொண்டிருந்த சங்கத்தின் மாவட்டத் தலைமை வழக்குரைஞரைக் காட்டவும் விசுவாசமாய் கைகளைப் பிடித்துக் குலுக்கி

நன்றி சொன்னான். கும்பிட்டான்.

“ நீயில்லாம புள்ள தெவைச்சி தெகமாறிட்டாம்பா...” உத்தண்டராயர் சொல்லவும், சிகாமணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கலங்கினான். செம்ப படையாச்சியை, ராசோக்கியத்தை, கரி படாச்சியை, முத்துக்கண்ணு ஆயியை, வடிவேலை, பால்ராசை, கணேசனை... ஒவ்வொருவராகக் கும்பிட்டுக் கும்பிட்டு நன்றி சொன்னான்.

“ சரி பொழுது போவுது. கௌம்புங்க” கனகராசு அவசரப் படுத்தினார்.

*

56

குடி ஓடிவிட்ட வீடுகள். கூரை பிய்ந்தும், காலி செய்துமாய் வெறுமனே நிற்கும் குட்டிச்சுவர்கள். குப்பை கூளங்களாய்க் கிடக்கும் தெருக்கள். ஏகத்துமாய்ப் பறக்கிற புழுதி. தூரத்தில் மண்வெட்டும் இயந்திரங்களும், லாரிகளின் போக்குவரவும் மட்டுமே உயிரோட்ட மாய் ஓடிக்கொண்டிருக்கும் பழைய வேப்பங்குறிச்சி.

சாமான் செட்டுகளை எல்லாம் ஏற்றிய பிறகு அடுத்த நடையில் சங்கத்தின் தட்டிகள், கொடிச் சுருணைகள், திரைச்சீலைச் சுருள்கள். வீடு குடிமாறிப் போவதாகவே தெரியவில்லை. ஏதோ அடுத்த ஊருக்கு ரெக்கார்டு டான்சு போடக் கிளம்பிவிட்ட ஆட்டக்காரர் களின் வண்டிபோல் தெரிந்தது. கரிபடாச்சி கேட்டார் " போவலாமா."

அறிவழகன் வெறிச்சோடிக் கிடக்கிற வீதிகளை விரக்தியோடு பார்த்தான். " போவலாமாப்பா.." திரும்ப கரி படாச்சி கேட்டது எதுவும் அவன் காதில் விழாதமாதிரி நின்றுகொண்டிருந்தான். அவன் பார்வையில் ஊரே திரண்டு இயந்திரங்களை, அதிகாரிகளை, காவல்துறையை வழி மறித்துக்கொண்டு நின்ற காட்சி ஓடியது. ஜீப்பு எரிந்த இடத்தில் தரை இன்னமும் பொசுங்கிக் கருத்தே கிடப்பது தெரிந்தது.

நேற்று வந்ததிலிருந்தே மௌனமாய் சுரத்தின்றிக் குந்தி யிருந்த அறிவழகனைப் பார்க்கப் பார்க்க காசாம்புக்குப் பதறியது தான். வெளியே காட்டிக்கொள்ளாது இருக்க அவளும் முயற்சி செய்து தோற்று மெல்லக் கேட்டாள் " ஏம்ப்பா ஒரு மாதிரியா இருக்க. அதான் வெளிய வந்தாச்ச..."

ரங்கநாதுக்கு எல்லாம் தெரிந்த மனநிலை. காசாம்புவை அதட்டினார் " ஏண்டி அவங்கிட்ட நொய்யி நொய்யின்னு ஏதாவது நிண்டிக்கிட்டு குந்தியிருக்க. செத்த அசரட்டும் வுடன்."

அந்த நேரம் பார்த்துதான் சிகாமணியும் மாற்றுக்குடியிருப்பி லிருந்து சைக்கிளில் வந்து இறங்கினான். பார்த்துவிட்டார். வாசலிலி லேயே போய் சிகாமணியை மடக்கி தெருவுப்பக்கம் இட்டுக் கொண்டு போனார்.

சிகாமணிக்கு ஒன்றும் புரியவில்லை. ரங்கநாது பிடித்திருந்த கையில் ஒரு பதட்டம் தெரிந்தது. ரகசியமாய் கெஞ்சுகிற மாதிரி சொன்னார் " மறுபடி, தம்பிகிட்ட ஒனக்கு வேல கெடைக்கில போவுலங்கறது பத்தி அதே மாதிரி

நம்ப பசங்க வேலைக்கிப் போறது வர்றது பத்திலாம் பேசாதப்பா. தம்பி மனங்கெட்டாப்ல எதுனாச்சும் நெனைக்கப் போவுது.”

“ நீ வேற ஏம் பெரிப்பா. ஏங் கதய வுடு. இது குடும்பச் சிக்கலு. அதியும் பணங்காச குடுத்து விலாவரி பண்ணி, இன்னம் ஒரு வாரம் மிஞ்சனா பத்து நாளையில நானும் வேலைக்கிப் பூடுவன். அண்ணன்லாம் சாதாரணம் இல்ல. நாளைக்கி வேலையில ஏதாவது இக்கு வைச்சான்னா சங்கத்து மேல்மட்டம் வரைக்கும் போயி ஒண்ணுல ரெண்டு பாக்காம வுடமாட்டாங்க. அதனால பயப்பட வேணாம் பெரிப்பா.” கடைசியாய் அவன் குரல் லேசாய் எகிறியதும் அடக்கினார் “ மெதுவாப்பா..”

“ மேலைக்கி வர்றது இருக்கட்டும். இப்ப அது சம்மந்தமா எதுவும் பேசாத. அப்பறம் நம்ப பசங்கள செத்த இட்டா. மொதல்ல இந்த சாமாஞ்செட்டுவுள அள்ளிக் கொண்டுகிட்டுப்போயி போட்டு அங்க மாத்துக் குடியிருப்புல போயி ஒலைய வைச்சாதான் தம்பிக்கு மொகம் மாறுதலையா இருக்கும்.” சற்று அவனைத் தேக்கி தகவலைச் சொன்னார்.

சிகாமணிக்கும் அவர் சொல்வது சரியாகவும் இருந்தது. ஊரில் ஒன்றும் தெரியாத காணாமூணாவுக்கெல்லாம் வேலை வந்து, தனக்குமட்டும் வராமல் விட்டதில் அனுபவிக்கிற திகிலும், பின்தங்கிய குற்றஉணர்ச்சியும் தற்சமயம் வரை உள்ளுக்குள் நெருஞ்சி முள்ளாய் குத்திக்கொண்டிருப்பது யோசனையில் ஓடியது. ஊரில் பெறாக்காய் இருந்த நமக்கே இப்படியென்றால் ஐந்தாறு மாதங் களாய் உள்ளே இருந்துவிட்டு திரும்பவும் இப்படித் தனித்து மீண்டும் சிறையில் இருப்பது போன்று குந்தியிருப்பவனிடம் போய் வேலை கீலை என்று பேசினால்...

“ அண்ண...” கூப்பிட்டபடி உள்ளே போனான்.

“ வாடா என்னாடா சேதி...” குரலில் பழைய உற்சாகம் எதுவுமில்லாமல் இருந்ததும், சிகாமணிக்கு சற்றே வருத்தமாக இருந்தது.

“ சும்மாதான்... அண்ண...” நிறையப் பேச வேண்டுமாய் வந்தவன் சூழல் கருதி மழுப்பினான்.

சற்று மௌனத்திற்குப் பிறகு அறிவழகனே பேசினான் “ நாளைக்கே வூட்ட மாத்தனா தேவலாண்டா. மொத மட்டு புடிச்சி, இம்மாஞ் சீக்கிரமா வெட்டி நெருக்கிக் கொண்டாந்துட் டானுவோ...”

“ ஊர எடுக்க ஆரம்பிக்கிறவரைக்குந்தான் தா தோன்னு ஆரக்காட்டுவானுவோ. கைய வைச்சிட்டானுவோன்னா சரசரன்னு போவ

வேண்டிதான்; யார எதிர்பாக்கப் போறானுவோ. சரி அண்ண... நாளைக்கி பசங்கள இட்டாந்து வூடு மாத்ற வேலய முடிச்சிடுவம்.”

இவர்கள் பேசிக்கொள்வதையெல்லாம் கண்காணிப்பது போல், வாசலில் நின்றபடி ரங்கநாது கேட்டுக்கொண்டிருந்ததும், சிகாமணிக்கு என்னவோ போல் இருந்தது. எழுந்தான். “ காலையில பசங்களோட வர்றன் அண்ண..”

பதிலுக்கு “ போடா வாடா” என்றுகூட சொல்லாமல் அறிவழகன் மௌனமாய் தலையை மட்டும் ஆட்டியதும் சிகாமணிக்குத் தாங்க வில்லை. போராட்டக் கணங்களில் கொஞ்சம் அசந்த மாதிரி இருந்தாலும் ‘ என்னடா சோந்துட்ட. நம்ப கொஞ்சம் மனமாறலா இருந்தாலும் சனங்க சுத்தமா தொவுண்டுடும். எதிரிக்கு அது ரொம்ப சுலபமாப் பூடும்.’ எப்போதும் எச்சரிக்கையாய் உற்சாகமாய் இருக்கச் சொல்கிற அறிவழகன்தான். சிறையில் இருக்கிறபோது கூட ‘ ஜி.ஆர். டாக்டர போயி பாருங்க.. குறள்மணி அண்ணங்கிட்ட பேசுங்க...’ தெம்பாய் திடகாத்திரமாய் சொல்லி அனுப்பியவர்தான். வெளியே வந்தபிறகு இப்படி ஒரு மௌனம். ரங்கநாது பெரிப்பா எச்சரிக்கை படுத்துகிற அளவுக்குப் போய் இருப்பது, சிகாமணிக்கு நினைக்க நினைக்க தன் சஞ்சலத்தையும் மீறி வலித்தது.

காலையில் சிகாமணிக்கு அலைச்சலான அலைச்சல். பால்ராசை, ரத்தினத்தை, வடிவேலை, கணேசனை எல்லோர் வீட்டையும் ஓடி ஓடிப் பார்க்கிறான். பெரும்பாலும் முதல் பணிக்கு காலையிலேயே போய்விட்டிருந்தார்கள். மீறித் தென்பட்டவர்கள் கூட ‘ ஒண்டியா வந்து என்னா பண்றது... பேங்குல ஒரு முக்கியமான வேல இருக்கு. போய் பாத்துட்டு வந்து கும்பலா போயி பாப்பும்’ என்றார்கள்.

இவன் அலைவதைப் பார்த்துவிட்டு செல்லப்பாங்கிதான் சொன்னாள் ‘ நேத்து அறிவு தம்பிய இட்டார்றதுக்கு லீவு போட்டுட்டு கடலூர் வந்ததுல எல்லாம் அரிகெடையா காலையில வேலைக்கிப் பூட்டுதுவோப்பா. காய்கறிக் கடைக்கி வெங்காயம் பொடைக்கறதுக்குத்தான் அமுந்துருக்கன். நா வேண்ணா வருட்டுமாப்பா..’

‘ நீ வந்து என்னா எக்கா பண்ணுவ...’ சொல்லிவிட்டு கரியரைப் போய் பார்த்தான்.

‘ எவனும் கெடைக்கிலடா. என்னா இப்ப பொட்டி யையும் கட்டுலயும் தூக்கறதுக்குதான் பின்ன ஒரு ஆள் வேணும். நாம்பளே போயி பாப்பும் வா...’ கடந்துபோய் வண்டியைப் பூட்டினார்.

வண்டியில் கரி படாச்சியும் சைக்கிளில் சிகாமணியுமாய் வந்து இறங்கியதைப் பார்த்த அறிவழகனுக்கு திக்கென்று போய் விட்டது. “ என்னாடா நீங்க ரெண்டு பேர் மட்டும் வர்றிங்க... பொட்டிலாம் தூக்கி வைக்கணும்.”

“ நாமளே ஏதாவது முட்டிதான் தூக்கிப் பாக்கணும். வேற வழியில்ல.. ஊர்ல ஒருத்தங்கூட லூட்ல இல்ல. எல்லாம் வேலைக்கி வேலைக்கின்னு விடியகாலையிலேயே பூட்டானுவோ...” சிகாமணி பரிதாபமாகச் சொன்னான்.

சிகாமணி மட்டுமல்ல, ரங்கநாதோ கரி படாச்சியோ யாருமே எதிர்பார்க்கவில்லை. வெந்து கொண்டிருக்கும் கூழில் குமிழிட்டுக் கிளம்பும் கொதி ஆவியைப் போல அறிவழகனின் வார்த்தைகள். “ அப்ப ஊர்ல நாம ரெண்டு பேரு மட்டுந்தான் வேலவெட்டி எதுக்கும் வழியில்லாம நிக்கிறம் போல்ருக்கு.”

ஏற்கெனவே கருத்த உடம்பு, இதில் பெட்டி சாமான்செட்டு என ஏற்றியதில் ஒட்டடைக் கரியைப் பூசிக்கொண்டு ஒரு கரும்முனியைப் போல் வண்டியை ஓட்டி வந்தார் கரி படாச்சி. எப்போதும் அமளிதுமளியாய் பேச்சும் இரைச்சலுமாகக் கிடக்கிற அடிகுழாயில் எவருமற்றுத் தனித்து தண்ணீர் அடித்துக் கொண்டிருந்த பூமாவைப் பார்த்துச் சிரித்தபடி கேட்டார் “ ஒப்பனுக்கு இந்த ஊர வுட்டுப் போறதுக்கு இன்னம் மனசு வல்ல போல்ருக்கு...”

பதிலுக்கு என்னவோ சொல்ல வாயெடுத்த பூமா, வண்டிக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த அறிவழவனைப் பார்த்ததும் அடிப்பதை விட்டுவிட்டு கிட்ட வந்தாள். அதே நேரம் இவள் கிட்ட வருவதைப் பார்த்ததும் வண்டிக்குப் பின்னால் சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்த சிகாமணி, மறைவாய் அந்தாண்டப் பக்கமாய் போனான். வீட்டுப் பக்கமிருந்து ராசோக்கியமும் பாஞ்சாலையும் வேகமாக வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும், உயரே குந்தியிருந்த காசாம்பு “ வண்டிய செத்த நிறுத்துங்க” என்றாள்.

மூக்காணாங்கயிறைப் பிடித்து இழுத்து நிறுத்தினார். மறைவில் சிகாமணியும் பின்னால் ரங்கநாதும் தேங்கினார்கள். அறிவழ கனைப் பார்த்து பூமாதான் சொன்னாள் “ நெல்லா இருக்கீங்களா மாமா. நேத்திக்கி அம்மாவும் நானுமாதான் கௌம்பனம். அப்பறம் அப்பாதான் வந்தா பாத்துக்கலாம்னு சொன்னாரு. காலையில லூட்டுக்கு வரலாம்னுதாம் பாத்தம். அதுக்குள்ள..”

கிட்ட வந்து பாஞ்சாலையும் அறிவழகனிடம் சொன்னாள் “ எனுமோப்பா...

ஒன்னால இந்த ஊர்ல முக்கால்வாசிப் பேரும் வேலைக்கிப் போவுதுவோப்பா..”

வேலை சம்பந்தமாய் பேச்சு இருந்ததும், ரங்கநாது அவசரமாய் நுழைந்து பேச்சை மாற்றினார் “ அப்பறம் என்னாடா ராசோக்கியம், பாத்து ரெண்டு நாளையில கௌம்பற வழியப் பாரு. தனியா ஒரு வயிசிப் புள்ளய வைச்சிக்கிட்டு மொக்கு மொக்குன்னு குந்தியிருக்காத... போயி காலாகாலத்துல முந்திரி கிந்திரியப் பாரு.”

“ கௌம்புணும் அண்ண...” ஏறிட்டுப் பார்க்காமல் குனிந்து கொண்டே சொன்னார்.

“ என்னா முந்திரிகிந்திரின்னு... மாத்துக்குடியிருப்புக்கு வல்லியா...” அறிவழகன் சந்தேகமாய்க் கேட்டான்.

“ அங்க வந்து ஒக்காந்துகிட்டு என்னாப்பா பண்றது. அதான் ஒரு நெலம்பலத்த வாங்கிக்கிட்டு முதனைய பக்கம் தங்கிக்கலாம்னு பாக்கறம்..” ராசோக்கியம் சொல்லிக்கொண்டிருந்தது, அங்காண்ட மறைவில் நின்று கொண்டிருந்த சிகாமணியின் காதில் விழவும், அவனுள் சொருக்கென்று சிறு வலி. ஆனாலும் மறக்க வேண்டிய வலிதான். மறந்துதான் ஆகவேண்டும்.

“ சரி வரண்டா..” ரங்கநாது சொல்லவும் வண்டி நகர ஆரம்பித்தது.

நாலு அடிகள் கூட மாடுகள் எடுத்து வைத்திருக்காது. திடுமென நினைவு வந்தவராய் கரியர், கைக்கயிறுகளை இழுத்துப் பிடித்து மாடுகளைத் தேக்கினார். வண்டி நின்று, திரும்பி ராசோக்கியத்திடம் சொல்கிறமாதிரி எல்லோரிடமும் சொன்னார். “ நேத்து தாம் பாத்தன் ராசோக்கியம். நம்ப நெல்ல நேரமோ எனுமோ தெரியில, இன்னமும் நம்ப அய்னாரு கோயிலு மேல கைய வைக்காம திட்டா வுட்டு வைச்சிருக்கானுவோ. எடம் குடுத்தான், வேல குடத்தான்னு, நம்பள வைச்சி காபந்து பண்ணன சாமிய அக்கடான்னு வுட்டு கெடாசிட்டுப் போயி, மேலைக்கி வெறுஞ் செங்காமுட்டி கல்லுக்கா கலுப்புரம் கொளுத்திக்கிட்டு நிக்கமுடியும்...”

ராசோக்கியம், ரங்கநாது, அறிவழகன், மறைவில் நின்றிருந்த சிகாமணி எல்லோருக்குமே. அய்யனாரை மறந்துபோய்விட்ட குற்ற உணர்ச்சி, குத்திக் குடைந்தது.

“ தம்பி உள்ள இருந்ததுல, மனங்கெட்டாப்ல நானும் மறந்துட்டன். நெல்ல வேள ஞாபகப்படுத்தின...” ரங்கநாது தவறை ஒப்புக்கொண்டவராய் சொன்னார்.

“ சரி மாமா, அம்மாம் பெரிய அய்னாரு செலய குதிரைவுள எனுமா பெரட்டிக்கிட்டு போறது. பீடம் போட்டு சிமிட்டியில செஞ்சது. எப்பிடி அசகொலயாம நோண்டி எடுத்தாலும் பொசுக்குன்னு வீறல் வுட்டுடும். அப்பறம் விண்ணங்கம் வுழுந்த செலய எடுத்துக்கிட்டு போயி வைக்கிலாமா...” மனம் சொடுங்கி யிருந்த அறிவழகன் கூட அய்யனார் என்பதால் யோசித்துச் கேட்டான்.

மறைவில் நின்றுகொண்டிருந்த சிகாமணி சற்றே தயங்குவது மாதிரி சொன்னான். “ குதிரை, அய்யனார்னு பெரிய செலைவுள ஒண்ணும் பண்ண முடியாது. வேண்ணா வூட்டுக்கு வூடு நேர்ந்துக் கிட்டு வைச்சிருக்கற வேண்டுதல் செலைவுள, அவுங்கவுங்கள வைச்சி தூக்கி எடுத்துக்கிட்டுபோயி மாத்துக் குடியிருப்புல ஓட ஓரமா துறிஞ்சி ஒண்ணு நிக்கித, அதுக்கும் கீழ வைச்சி கும்புட்டுக் கலாம்.”

இந்த யோசனை எல்லோருக்குமே சரியாகப் பட்டது. “ சரி அப்பிடித்தாம் செஞ்சிடுவமாடா?” ராசோக்கியத்தைப் பார்த்து ரங்கநாது கேட்டார்.

ராசோக்கியமும் ஆமோதித்தார். “ சரி அப்பிடித்தாம் ஒரு சாவக்குஞ்சிய அறுத்து செறப்ப கிறப்ப குடுத்து எடுத்துக்கிட்டு போயி வைச்சிடுவம்.”

*

57

புது வேப்பங்குறிச்சியின் புள்ளையார் மூலையில் மண் மேட்டுக்கு நேர், ஓடைக்கும் இந்தப் பக்கம் நின்றிருந்த பெரிய துறிஞ்சி மரத்தடியில் திடுமென முளைத்துக்கொண்டது அய்யனார் கோயில். செகசோதியாய் ஆங்காங்கே எரிந்து கொண்டிருக்கும் வெளிச்சத்தின் ஊடே பெஞ்சுகள் போடப்பட்டு தெருக்கூத்து சபை. சுதியைக் கூட்டி மத்தளங்களை அடித்துத் தொடங்கிவிட்டது கூத்து. புதிய குடியிருப்பில் தொடங்கும் புதுவாழ்க்கை. இடமாற்றத்தில் கூடவே கும்பிட்ட தெய்வத்தையும் கொண்டுவந்த மகிழ்வில் வேப்பங்குறிச்சி, வடக்கு வெள்ளூர், தெற்கு வெள்ளூர் என கூத்து பார்க்க சூழ்ந்து கொண்டுவிட்ட கூட்டம். முடியாமல் படுத்துக்கிடந்த செங்கல்ராவு கூட மெல்ல சைக்கிளில் குந்தவைத்து இட்டுக்கொண்டு வர, சபைக்கு நேர் கட்டிலில் தலைக்கு உசரம் கொடுத்து சபையைப் பார்த்தபடி முடங்கிக் கிடந்தார்.

துப்பாக்கி வேட்டக்காரன்டி - அடி

குல்லா பெண்ணே கோகிலவதியே

நாந் தப்பாமல் சுடுவம் பாரடி

அடி மான சுடுவன் மயில சுடுவன்

அடி மான சுடுவன் மயில சுடுவன்

குண்டு போட்டு குயில சுடுவன்

(துப்பாக்கி வேட்டக்காரன்டி...)

களர்குப்பம் ரகுராமன், கட்டியக்காரன், களரியில் சபையலங் காரம் செய்துகொண்டிருந்தான்.

இரண்டு நாளாய் கடுமையான வேலை எல்லோருக்கும். அதிரடியாய் பீக்கருவைகளையும் செடிகொடிகளையும் ஒரு காணி தலைமாட்டிற்குமேல் வெட்டி, தோண்டி அப்புறப்படுத்தி நிரவி, மரத்தடியில் சின்னச் சின்ன யானைகள், குதிரைகள். சவாரி செய்தபடி அய்யனார் என ஏகப்பட்ட சிலைகள். ஒவ்வொன்றிற்கும் பின்னாலும் மறக்க முடியாத கதைகள். உயிரைக் காப்பாற்றியது, வெள்ளம், புயலிலிருந்து விளைச்சலைக்

காப்பாற்றியது, சொத்து வழக்கில் சாதகம் செய்தது, நினைத்த மாதிரி பிள்ளைகளுக்கு மணவாழ்க்கை கிடைத்தது, குடியிலிருந்தும் கூத்தியிடமிருந்தும் கணவனை மீட்டது, தனக்கும் பின்னால் அசையும் அசையாச் சொத்துக்களுக்கு வாரிசை உண்டாக்கியது என விழுந்து கும்பிட்டு வேண்டிக்கொண்ட கோரிக்கைகளுக்கெல்லாம் அய்யனார் செய்துமுடித்துக் கொடுத்ததிற்கு காணிக்கையாக முப்பூசைப் படையல் போட்டு கொண்டுவைத்த சிலைகள். காலையில் வெயிலுக்கு முன்னயே சிலைகளை எடுத்துக் கொண்டுவர ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தார்கள். பம்பையை எதிர்பார்த்ததில் தாமதமாகி விட்டது.

<u>உள</u> ரே கோயிலைச் சுற்றித் திரண்டிருந்தது. முப்பூசைப் படையல் போட்டு தடபுடலாய் நடக்கவேண்டிய நிகழ்வு. மண்ணைப் பிரிந்த சூட்டில் சேவலை அறுத்து சின்னதாய் சிறப்பு. சிலைகளைக் கழுவி, துண்டைச் சுற்றி, பூசையிட்டு தேங்காயை உடைத்து கற்பூரத்தை கொளுத்தினார் கரியர். தாம்பாலத் தட்டில் தகதகவென எரிகிறது கற்பூரம். சிலைகளுக்கு காட்டி, ஆளுயரத்தை தாண்டிய பெரிய அய்யனாருக்கும் கட்டினார். தலைக்குமேல் எக்கி நீட்டி, ஒவ்வொருவரிடமும் எடுத்துவந்து காட்டினார். " எப்பா சாமி போற எடத்துல எங்குளுக்கு நெல்ல வழிய காட்டுடா சாமி" கும்பிட்டு விபூதி பூசிக்கொண்டார்கள்.

தீப ஆராதனை காட்டிவிட்டு தட்டை எடுத்துப்போன கரியர், கீழே வைக்காமல் வெகு நேரமாய் அய்யனாரையே பார்த்துக் கொண்டு நின்றார். வீரசிங்கன் குப்பத்து வேலாயுதத்தின் பம்பை கணதாண்டி விண்விண் என்று அடி தெறித்துக் கொண்டிருந்தது. திடுமென கரியருக்குள் ஒரு மின்னல் பாய்ச்சல். உடம்பு நடுங்க ஆரம்பித்தது. பம்பை அடிக்கு ஏற்ப கால்கள் ஆட்டம் காட்ட ஆரம்பித்தன. கையிலிருந்த தாம்பாலத்தட்டின் கற்பூர சுவாலை அலைமோதவும் ரங்கநாது பட்டென்று அதை வாங்கிக்கொண்டார்.

உடன் தரை அதிர்கிறமாதிரி ஆவேசமான ஆட்டம். கரி படாச்சியின் துள்ளல் ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பம்பை தரிகினத்தோம் போட்டது. " நா அய்னாரு வந்துருக் கண்டா..." இடுப்பு வேட்டி அவிழ்ந்து காலில் சிக்கியதைக் கூடப் பொருட்படுத்தாமல் கோவணத்தோடு ஆடியபடி அய்யனார் சொன்னார்.

" அய்னார... எப்பா... எப்பியும் மாதிரி எங்குளுக்கு ஒரு தொணையா இருடா சாமீ..." ஓடி அவரின் முன்னால் கையெடுத்துக் கும்பிட்ட முத்துக்கண்ணு ஆயியின் கடைக்கண்ணால் தண்ணீர் ஓடுகிறது. "

அய்னார... அய்னார...” எங்கும் குரல்கள்.

ரங்கநாதுதான் கேட்டார் “ சரி என்னா கொற...?”

கருவைக் கட்டை போலிருந்த உடம்பில், எங்கும் வெளுத்த முடிகள். வேர்த்தோடுகிறது. துண்டங்களாய் தெறிக்கின்றன வார்த்தைகள். “ கொற என்னான்னாடா கேக்கற. கொற வைச்சிட்டிங் களடா. என்ன மறந்துட்டிங்கள. என்ன மொதல்ல கொண்டுபோயி வைச்சிட்டு இல்ல, மறுபடி நீங்க கெளம்பியிருக்கணும். எல்லாம் முடிஞ்ச கடகந்தாயத்துல போனாப்போவுதுங்கற மாதிரி என்ன... தாங்க முடியிலடா. என்ன மறந்துட்டிங்கடா...”

எல்லோருக்குள்ளுமே குற்ற உணர்ச்சி குத்த ஆரம்பிக்கவும், ரங்கநாதுவே திரும்பச் சொன்னார். “ எந்தக் கொறைய யாருகிட்ட சொல்றதுன்னு எங்குளுக்கு தெரியில. எங்களுக்கு ஒண்ணுன்னா ஓங்கிட்ட வந்து நிப்பம். இன்னைக்கி ஒன்ன, எங்களன்னு நம்ப ரெண்டு பேரு மேலயுமே கைய வச்சிட்டான். நாலக் குடு அஞ்சக் குடுன்னு அவங்கிட்ட பிச்சை கேட்டு கையேந்திக்கிட்டு நின்னதுல ஒன்ன மறந்துட்டம். ஓம் புள்ளிவோ தான். ஒண்ணும் மனச பேதலிக்க வுடாத. ஏந்திரிச்சி எங்க கூட வந்து அப்பிடி துறிஞ்சி மரத்துங் கீழால குந்து. மேலைக்கி காலம் செயிச்சா ஒரு கோயில கீயில கட்றம்.”

“ வர்றண்டா வர்றன். ஒங்கள வுட்டுட்டு நாம் மட்டும் தனியாக் குந்திக்கெடந்து என்னா பண்ணப் போறன். ஆனா எனக்கு ஒரு ஆச. என்னக் கொண்டுபோயி வைச்சி, கையோட கையா இன்னைக்கே ஒரு கூத்த வைய்யிங்கடா. ஏம் பொறப்பு வளப்ப காதால கேட்டு ரொம்ப நாளாச்சி.” கரியரின் ஆட்டவோட்டம் நின்று மெளனமாகவும், ரங்கநாது விபூதியைப் போட்டார். துவண்டு சரிந்தவரைத் தாங்கிப் பிடித்துப் படுக்க வைத்தனர்.

மழை பெய்தமாதிரி ஒரே அமைதி. தூரத்தில் லாரிகள், இயந்திரங்கள் இரைச்சல் மட்டுமே கேட்டுக்கொண்டிருக்க ஒவ்வொரு வருக்குள்ளும் குழப்பம். குறிப்பாய் கூத்து விஷயத்தை எவருமே எதிர்பார்க்கவில்லை. ‘ இதுக்குமேல யாரப் போயி எங்க பாத்து... இந்த செங்கல்ராவு காலு மடங்கி கீழ வுழுலன்னா கூட யாரையாச்சும் தேடிப் புடிச்சி கொண்டாந்துடுவாப்ல...’ ரங்கநாது குழப்பமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அறிவழகனோடு நின்றிருந்த சிகாமணிதான் ‘ சரி வுடு பெரிப்பா. நானும் அண்ணனும் வேண்ணா கொறவங்குப்பம் சடகோபர போயி பாக்கறம். வேற

எடத்துல பாக்கு வாங்கி யிருந்தாலும், எதாவது நாலைஞ்சி பேர பொறுக்கிப் பொணைச்சி அனுப்பி வுடுவாரு.’

அறிவழகனை செட்டு சேர்த்தது அவருக்குச் சற்றும் பிடிக்கவில்லையென்றாலும் அரை மனதாய் சம்மதித்தார். ‘ சரி ஒப்பாரு பாக்கவேண்டிய வேலதான். ரவிய கூத்து ஓம் பொறுப்பு.’

ஊரே அரிகிடையாய் விழுந்து கும்பிட்டது. முதலில் கரியர்தான் தொட்டுக் கும்பிட்டு, தலையில் கோலி வைத்திருந்த சும்மாட்டின் மீது சிலையைத் தூக்கி வைத்துக்கொண்டார். அடுத்து ரங்கநாது, ராசோக்கியம், கணேசன் என ஊரே ஆளுக்கொரு சிலையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு நின்றது. பால்ராசு வைத்த நெருப்பில் அதிர்வேட்டுகள் முழங்கின. கிளம்பினார்கள். ‘ ஒலக்க சத்தம் ஒரலு சத்தம் அய்யனாருக்கு கேக்கக்கூடாது. ஊருக்குள்ள நொழையாம, ஓடையால மேற்க போயி, ஊருக்கு நேரா - துறிஞ்சி மரத்துக்கிட்ட ஏறிக்கலாம்.’ பம்பைகள் முன்னே போக, வழி நெடுக வாணங்கள் சீறிக்கொண்டு மேலே போய் வெடித்தன. ஏகத்துக்கும் காங்கைகள் நெளிய, செக்கச் செவேல் என்று வெட்டி எடுக்கப்பட்ட பொட்டை வெளி. மண்வெட்டும் இயந்திரங்களை இயக்குபவர்கள், லாரி ஓட்டுபவர்கள் என எல்லோரும் வேடிக்கை பார்த்தவாறு இருக்க, தலைக்கு ஒரு சிலையாய் எடுத்துக் கொண்டு, கோயிலிலிருந்து இறங்கி வரிசையாய் போய்க்கொண்டே இருக்கும் சனங்களைப் பார்த்தபடி, உயிரற்று பொய்க்கட்டையோடு குந்தியிருந்தார் பெரிய அய்யனார்.

அய்யனார் உட்பட வெளியேறிவிட்ட பிறகு ராசோக்கியத் திற்கு குடும்பத்தை வைத்துக்கொண்டு தனியாயிருப்பது என்னவோ போல் இருந்தது. குறிப்பாய் சிலையைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டு திரும்பியபோது பார்வையில் பட்ட பெரிய அய்யனாரின் பரிதாபகரமான முகமும் பார்வையும் உள்ளுக்குள் அழியாமல் நின்றுகொண்டே இருந்தது. வெகுநேரம் வரை தூக்கமே வரவில்லை.

மேற்கில் இயந்திரங்களின் இடிச் சத்தத்தையும் தாண்டி மாற்றுக்குடியிருப்பில் கூத்துச் சத்தம் உச்சத்திலிருந்தது. தாள மத்தாள சத்தங்கள், சன்னமாய் காற்றுவாட்டத்தில் கேட்டது.

ரங்கநாதும் கரி படாச்சியும் சாயந்திரமாய் வந்து கூப்பிட்டு விட்டுதான் போனார்கள். ‘ எல்லாம் நம்ப நல்ல நேரந்தான்டா. கொரவங் குப்பத்தாரு எங்கியும் பாக்கு வாங்காமதான் இருந்துருக் காரு. ராத்திரிக்கி வா, கூத்து

பாத்துட்டு வரலாம்.’

நிறையத் தடவை அய்யனார் கல்யாணம் நாடகத்தில், சடகோபர் அய்யனார் வேஷங்கட்டி ஆடிய கூத்துகளைப் பார்த்திருக்கிறார். திறமையான ஆள். கணீரென்ற குரல். எந்தத் தேக்கமும் இல்லாத புருதி பாடம்.

அவனி சூழ் பகைவர்தன்னையே அடக்கியாள - இந்த

அகிலந்தன்னில் வந்துதித்தேனே!

கொலுவடி பாடி வெளியே வரும்போது, நேரில் அய்யனாரே காட்சி கொடுத்ததாய், மக்கள் கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள்.

‘ வர்றம் போங்க...’ சொன்னரே தவிர, ராசோக்கியத்திற்கு புதுவேப்பங்குறிச்சி போகப் பிடிக்கவில்லை. பூமா பிறந்தபோது வந்த பாஞ்சாலையின் இழுப்புக்காக வைத்திருந்த சிலையைக் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்ததோடு சரி. ‘ நம்ப கூத்ததான் நெய்வேலிக்காரன் பாக்கறான... இதுல எங்க போயி வேற கூத்து...’ என்பது ஒரு பக்கம் இருந்தாலும், நெஞ்சுக்குள் நின்றுகொண்டிருந்த அய்யனாரின் சொடுங்கிச் சோர்ந்த முகமே அவரைப் போக விடாமல் செய்துவிட்டது.

‘ இம்மாந் தூரம் எங்க...’ என பாஞ்சாலையும் போகவில்லை. துணைக்கு எவரும் இல்லாமல் பூமாவும் படுத்துக்கொண்டாள்.

ஏதேதோ யோசனையில் கிடந்து, கடந்து கண்ணை இழுத்துக் கொண்டு போகிற நேரம், யாரோ வாசலில் வந்து நிற்பதுபோல அவருக்கு அரவப்பட்டது. திடுக்கிட்டு எழுந்தார்.

வாசலில் எவரும் இல்லை. ஆனால் பெருச்சாளி ஓடினால் கூட கத்தி ஊரைக் கூட்டுகிற துடுக்கன் கூட, யாரோ பழகிய பரிச்சயமுள்ள நபர் வந்து போனது மாதிரி வாலைக் குழைத்துக் கொண்டு சற்று தூரம் ஓடி வழி அனுப்பிவிட்டு வந்தமாதிரி ராந்தல் வெளிச்சத்தில் தெரிந்தது. ராசோக்கியத்திற்கு பட்டென்று எதுவோ உதைத்தது.

அதேநேரம் மேற்கில் தெருக்கூத்தின் தாள மத்தாளச் சத்தம் உக்கிரமாய் கேட்டுக்கொண்டிருந்த வேளை, அய்யனார் கோயிலுக்கு நேர் வெளிச்சம்; இயந்திரச் சத்தங்களும் கேட்டது. ‘ மேற்கதான வெட்டிக்கிட்டுப் போனானுவோ... திடீர்னு எப்பிடி கெழக்க கோயில்கிட்ட...’ யோசித்த ராசோக்கியத்திற்கு உடன் உடம்பு பதறியது. பித்துப் பிடித்தவர்மாதிரி ஒரே ஓட்டமாய் கோயிலை நோக்கி ஓடினார்.

துடுக்கனோடு போய் நின்றவருக்கு தடதடவென உடம்பு நடுங்குகிறது. அங்கம் பதறுகிறது. சுற்றிலும் மண்ணோடு மரமட்டை களும் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டு குதிரைகளும் இன்றி, தன்னந்தனியாய் பெரிய அய்யனார். வந்து நிற்கும் இவரை இயந்திர ஓட்டிகள் எவருமே பொருட்படுத்தவில்லை.

நேருக்கு சுழன்று நின்ற இயந்திரத்தை எரித்துவிடுகிற மாதிரி அய்யனார் முறைத்துக்கொண்டு இருந்த நேரம், பட்டென்று விரல்களை மடக்கி மூஞ்சியில் குத்துவது மாதிரி இயந்திரத்தின் கை வேகமாக நீண்டது. ராசோக்கியத்திற்கு ஒரு நிமிடம் கண்கள் இருண்டுபோய் விட்டன.

நீட்டிய வேகத்திற்கு தலை துண்டாய் பின்னுக்குச் சாய்ந்திருக்கும், ஆனால் இயக்குபவன் என்ன நினைத்தானோ கிட்டக்க கொண்டுபோய் பட்டென்று நிறுத்தி கீழே அடி மண்ணைப் பறித்தான். பறித்து அசகுலையாமல் எப்படியாவது லாரியில் ஏற்றிவிட்டால், கண்மறையக் கொண்டுபோய் மண்ணைப் போட்டு மூடிவிடுவார்கள் என்பது அவன் கணக்கு.

ஆனால் பொய்த்துவிட்டது அவன் எண்ணம். மண்ணை கொஞ்சம் வலுவாகப் பறித்துவிட்டதில் மொக்கென்று அய்யனார் லேசாக சாய்ந்தார். பீடத்தில் கிளம்பிய வெடிப்பு, அய்யனாரை இரண்டாகக் கிழித்தமாதிரி வயிறு, நெஞ்சு என ஓடி, நெற்றியிலும் கோடு விழுந்தது. ராசோக்கியத்திற்குப் பார்க்க பதைபதைக்கிறது. காலங்காலமாய்த் தங்களை காபந்து பண்ணியவரின் கதி... சகிக்க முடியவில்லை. அதிர்வில் அசைவற்று நின்றுகொண்டிருந்தார்.

அடுத்து இந்தாண்டப் பக்கம் பறித்தபோது கிழக்குப் பக்கமாய் இருந்த அய்யனார், லேசாய் வடக்கே திரும்பினார். பறித்த வேகத்தில் மேலே வந்த இயந்திரக் கொடுக்கு மோதியதில் வாளோடு கை துண்டித்து விழுந்தது. நிராயுத பாணியாய் அய்யனார்.

கை துண்டாகியதுமே ஓட்டிக்கும் வெறுத்திருக்க வேண்டும். கடந்து இனி எதற்கும் யோசிக்கத் தேவையில்லையென, ஓங்கி அய்யனாரின் செவுளில் ஒன்று வைத்தான். உடைந்து சிதறினார் அய்யன்.

ஒரு கணம் ராசோக்கியத்திற்கு உடம்பிலிருந்து உயிரை உருவியது போல் ஒரு வலி. தூரத்தில் கேட்கும் தாளமத்தாள சத்தம் எதிரே கேட்பது போல் ஓர் நினைவு. கொறவங்குப்பம் சடகோபர், அய்யனாராய் வந்து அருகில் பாடுவது போன்று பிரமை.

“ அவனி சூழ் பகைவர் தன்னையே

அடக்கியாள - இந்த

அகிலந்தன்னில் வந்துதித்தேனே!”

முண்டமாய் குந்தியிருப்பவரை நோக்கி இயந்திரம் சடாரென்று சுழன்று வந்து இடுப்பில் தாக்குகிறது. தொடை வரைக்கும் மட்டுமே மீதமிருக்க, சடகோபர் திரும்பவும் பாடுகிறார்.

“ பவனி வந்து பாரை ஆளவே

படைகள் சூழ - இந்த

மண்ணில் உதித்த அய்யன் நானுமே”

பாடி முடித்து தாளக்கட்டில் சுழன்று நின்றபோது தலை, முண்டம் என தனித்தனியாய் கை வேறு கால் வேறாய் லாரியினுள் சிதறிக் கிடந்தார் அய்யனார்.

*

58

‘ இன்னும் ஏன் தயக்கம்? இருபத்தியொரு உயிர்கள் போதாதா? தமிழக அரசே! இட ஒதுக்கீடு வழங்கு...’

தொடர் முழக்கப் போராட்டம். இடம்: வானொலித் திடல், விருத்தாசலம். நாள்: 01. 03. 89. மாலை 6.00 மணி. தலைமை: டாக்டர் ஜி.ஆர். முன்னிலை: குறள்மணி. சிறப்புரை: பேராசிரியர் கீரன்.

குறள்மணி அண்ணன் கொடுத்துவிட்டுப் போன, பெரிய கத்தை யிலிருந்து ஒரு துண்டறிக்கையை உருவி எடுத்துப் படித்துக் கொண்டிருந்த அறிவழகன், கீழே தன் பெயர் இருப்பதையும் பார்த்தான். பிறகு அந்தந்தக் கிளைகளுக்கு ஏற்ப கொடுக்கிறமாதிரி சிறிய சிறிய கட்டுகளாகப் பிரித்துக் கட்டிப் போட்டுக் கொண்டிருந்தான்.

நேரம் உச்சியைத் தொடுகிறமாதிரி இருந்தது. சாலையில் வாகனங்கள் கடந்துபோகிற போதெல்லாம் வந்து கவிகிற நிழல் மறைவு குறள்மணி அண்ணன் வந்து நுழைவதுபோல் தோன்றத் தோன்ற திரும்பிப் பார்க்கிறபோது இவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. வெளியே வந்து ஒரு வாரத்தைக் கடந்து போகிறது. உத்தண்ட ராயரிடமோ செம்ப படையாச்சியிடமோ தன் வேலை சம்பந்தமாய் கலந்து பார்க்கலாம் என்றுதான், இப்படி சங்க அலுவலகத்துப் பக்கம் வந்தான். இவன் நேரத்திற்கு அவர்களோடு குறள்மணியும் குந்தியிருந்தது, இவனுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. அதைவிடவும் குறள்மணி இது குறித்துப் பேசியதோடு இல்லாமல் உடன் செயலில் இறங்கியிருப்பது கண்டதும் அவனுக்கு சிறை யிலிருந்து வெளியே வந்த நாளாய் உள்ளுக்குள் கனத்துக்கொண்டு கிடந்த இறுக்கம் தளர்ந்தமாதிரி ஒரு நெகிழ்வு.

‘ நேத்து இந்தக் கூட்டம் சம்மந்தமா டாக்டர பார்க்க விருத்தாசலம் போனப்பதான் ஒன்ன பத்தியும் சொன்னாரு. அதான் எதுக்கும் நாங்க மூணு பேரும் கார்பரேட் ஆபிஸ் போயி, ஒன்னோட வேலைக்கி என்னாதான் சொல்றான்னு கேட்டுப் பாத்துட்டு வர்றம். நீ இங்கியே இரு. ஒன்னக் கண்டா ஏதாவது மேல கீழ பாப்பானுவோ.’

கிளம்பிப் போயிருந்தார்கள். ‘ என்ன சொன்னார்களோ ஏது சொன்னார்களோ’ குழப்பம் உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. நேரம் ஆக

ஆகத் தனித்துக் குந்தியிருப்பது தவிப்பும் எதிர்பார்ப்பு மாக அவனைப் பிரிகட்டி அடித்துக்கொண்டிருந்தது.

தபால்காரனை பார்த்துவிட்டு பின்னாலேயே வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் பின்தங்கிய சிகாமணியாவது வந்தால் தேவலை என்கிறமாதிரி பட்டது. இரண்டு பேரில் அவனுக்காவது ஒரு நல்ல சேதி வந்தால் மகிழ்ச்சிதான். நேற்றுக்கூட போய்ப் பார்த்து விட்டுதான் வந்திருந்தான். ‘ இப்பதாங்க தபால்ல அனுப்பியிருக்கம். நாளைக்கி கையில கெடைச்சிடும்’ என்றதாய் சொல்லியிருந்தான். நிச்சயம் நல்ல சேதியோடுதான் வருவான். ‘ ச்ச்... ச்ச்...’ உச்சியில் சைனம் கூட சொன்னது.

“ அ வங் கெடக்கறான் மயிரான். எனுமோ இந்த ஜீப்பு விஷயத்த போயி பெரிய கொல கேசுங்கறமாதிரி குறுக்கால தலய ஆட்றான்.” கோபமாகச் சொல்லிக்கொண்டு வந்த குறள்மணியின் பேச்சு காதில் விழுந்ததுமே அறிவழகனுக்கு ‘ சொரேர்’ என்றது.

உள்ளே வந்து குந்திய உத்தண்டராயர் சொன்னார் “ நெலம் எடுக்கற வேல என்னா நம்ப ஊரோடையா முடிஞ்சிடப்போவுது. தே இங்காண்ட மணகதி, கொரவங்குப்பம்லாம் எடுக்கறமாதிரி நோட்டிஸ் குடுத்துருக்கானுவுளாம். அதுவும் நம்ப மக்கதான். சும்மா வேல வேலன்னு அறிவு போய்ட்டா அதலாம் யாருதான் பாக்கறது. நிர்வாகத்துல ஒடாரிச்சதும், ஒரு நெல்ல முடிவாதான் தெரியுது.” இயல்பாக இருப்பதற்கான முயற்சிகளோடு கூடிய பேச்சு.

செம்ப படையாச்சி அடுத்து எதுவோ பேச வாயெடுப்பதற்குள் அறிவழகன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். ‘ நிர்வாகத்துல வேலைக்கி தண்ணி காட்டிட்டான்.’

தயங்கித் தயங்கிதான் குறள்மணி பேசினார். “ அவன் முடியாதுங்கறாம்பா...” சொன்னதோடு இல்லாமல், ஒரு விளக்க நகலையும் கொடுத்துனுப்பியிருந்ததை நீட்டினார். சுற்றி வளைக்காமல் நேரடியாக மறுப்புக் கொடுத்திருந்தனர்.

‘ அரசு வாகனங்களை எரித்தல், நிறுவனத்திற்கு எதிராக வன்முறையில் ஈடுபடுதல் போன்ற நிரூபிக்கப்பட்ட கிரிமினல் குற்றங்கள் இருப்பதால், தங்களின் வேலை தொடர்பான விண்ணப்ப மனு நிராகரிக்கப்படுகிறது.’

அறிவழகனுக்கு பெருத்த ஏமாற்றம் ஏதும் இல்லை. இப்படியும் சொல்லிக்

கை விரிக்கக்கூடும் எனச் சிறையிலிருக்கும் போதே அவன் யோசித்ததுதான். எதற்கும் ஒரு முயற்சி எடுத்துப்பார்க்கலாம் என்கிற ஆவலாசைதான். ஆனால் நிராசையாகி விட்ட சூழலில், வறட்டுச் சிரிப்பாக குறள்மணியைப் பார்த்து சிரித்தான்.

நிர்வாகத்தில் ஆள்எடுப்பு தலமான் சொன்னதை செம்ப படையாச்சி சொல்லிக் கொண்டிருந்தார் " அவன் என்னா நம்ப கணக்கஞ் செட்டி மாதிரி வலிக்காம பேசுறாம். அவருக்கும் எங்களுக்கும் தனிப்பட்ட சொந்த விரோதமா இது. எரிச்சது, மறிச்சதுன்னு எல்லாமும் எங்களுக்கு எதிரானதும் இல்ல. எல்லாம் மேல அரசாங்கத்த எதுத்ததுதான். இது பொதுமக்கள் பிரச்சின, போராட்டம். அந்தப் போராட்டத்துல இதுமாதிரி அரிதா நடக்கறதும், மீறறதும் சாதாரணம் தான். ஆனா அரசுக்கு சட்டம், நடைமுறைன்னு ஒண்ணு இருக்கு. அது இதலாம் குறிப்பா குற்றவியல் நடவடிக்கையா கருதி, இவங்களை மேற்கொண்டு நிர்வாகத்துல சேத்துக்கிட்டா ஆபத்து வருமோன்னு பயப்படுது. அவுரு தியாகத்த மதிக்கறம். இனிமே எந்தச் சிக்கல், பிரச்சினைன்னாலும் நீங்க வரவேணாம், அவுரையே அனுப்பிவுடுங்க, நாங்க தாராளமாச் செஞ்சி குடுக்கறம், அவரது வேலை தொடர்பான கோரிக்கையை தவிரங்கறாம்" சொல்லி நிறுத்தினார்.

அறிவு பெருமூச்சு விட்டபடி குந்தியிருந்தான். உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருக்கும் கலவரமான, குழப்பமான எண்ணங்கள் முகத்தில் தெரிந்தன.

குறள்மணி தான் சொன்னார் " ஏதோ மெனக் கிட்டிங்க. சனங்க, நாங்க எல்லாமும் கூட இருந்தம். எனுமோ உணர்ச்சி வசப்பட்டு ஆத்தரத்துல நடந்துபோச்சி. ஆனாலும் யாருக்கு எதுக்காக மெனக்கிட்டமோ அவுங்குளுக்கு அது நல்லபடியா நடந்துட்டுது. இதுல மெனக்கிட்ட நமக்கு, வேல கெடைக்கிலயேங்கிற வருத்தம் இருக்க வேண்டியதுதான். ஆனா அதுக்காக நம்ப அவசரப் பட்டுட்டமோன்னு மனதளவுளகூட ஒருநாளும் நெனைக்கக் கூடாது. அப்படி நெனைச்சாலே நாம, மெனக்கிட்டதுக்கு அர்த்தம் இல்லாமப் பூடும். அங்காண்ட ஈழத்தப் பாரு... எவ்வளவு பலி, தியாகங்கள்... எல்லாம் சின்னச் சின்னப் பசங்க. ஆனாலும் போராட்டம் மேலும் மேலும் போய்க்கிட்டுதான் இருக்கு. தே நம்ப சாலை மறியல் போராட்டத்த எடுத்துக்க. இருபத்தியோரு பேர் செத்துருக்காங்க. அதலாம் நெனைச்சிப் பாரு. நாம உசுரோட இருக்கறம். நம்ப அப்பா, அம்மான்னு குடும்பத்த பாத்துக்கறம். அதே மாதிரி நமக்கு இந்த வேல இல்லன்னா வேற எங்கியாவது மூட்ட தூக்கினாச்சும் நம்ப குடும்பத்த காபந்து

பண்ணிக்கப் போறம். ஆனா செத்தவன் நமக்குப் பின்னால குடும்பம் என்னா ஆவும்னு நெனைச்சிப் பாத்துருப்பானா. ஒரு நிமிஷம் அத மனசுல நெனைச்சிருந்தான்னா, போராட்டம் மறியல்னு வெளியதான் வந்துருப்பானா, இல்ல அய்யாவோட அந்தப் போராட்டமும் வெற்றி அடைஞ்சிருக்குமா... காலம் கருதி கலங்காதிருப்பர் ஞாலம் கருதுபவர்.”

எல்லோரும் புரியாமல் முழிக்கவே, மீண்டும் ‘ காலம் கருதி இருப்பர் கலங்காது ஞாலம் கருதுபவர்’ என்று குறளைச் சொல்லி அதற்கு விளக்கமும் கொடுத்தார்.

குறள்மணி பேசப் பேச அறிவழகனுக்குள் ஒரு நெளுக்கம். ஒரு வாரமாய் மனதிற்குள் வேலை தொடர்பாய் கெட்டித்துக் கிடந்த இறுக்கம் மெல்லத் தளர்ந்து... ஓர் இயல்பு நிலைக்கு வந்துவிட்டது மாதிரி முகத்தில் தெளிவு.

உத்தண்டராயர் தொடர்ந்தார் “ என்னாடா நமக்குத்தான் ஆறுதல் சொல்றாங்களே தவிர நிர்வாகத்த எதுத்து இது தொடர்பா ஒரு போராட்டம் ஆர்ப்பாட்டம்னு சங்கத்துல வைச்சிப் பாக்குலி யேன்னு தப்பா நெனைக்காத அறிவு. நம்ப சங்கத்து வக்கீலு ஒருத்தர பாத்தப்ப அவுரும் கிரிமினல்னு முத்தர குத்தி குடுக்க மாட்டானு வோன்னுதான் சொல்றாரு. ஆனா குடும்பத்துல வேற யாராவது தகுதியான நபர் இருந்தா ஃபைட் பண்ணி பாக்கலாம்ங்கறாரு. அதுமாதிரி இல்லன்னாலும் ஒண்ணும் பண்ண முடியாதுன்னுட் டாரு.”

“ இதுல என்னா அண்ண தப்பா நெனைக்கறது. எனக்கு மட்டும், இதுல என்னா சிக்கல்னு தெரியாமலா இருக்கு... வேல என்னா வேல. பாத்துப்பும் வுடுங்க அண்ண..” யாரையும் நேரிட்டுப் பார்க்க முடியாமல் வெளியே சாலையைப் பார்த்தபடி சொன்னான்.

எழுந்தார்கள். அறிவழகனின் தோளில் தட்டியவாறு செம்பர்தான் பேசினார் “ வேலைக்கும் தற்காலிகமா ஒரு ஐடியா வைச்சிருக்கன். ஒனக்குத்தான் தெரியுமே தொப்புளிகுப்பத்தாரு வெள்ளையரு... சண்முகா பேலசுக்கு எதுத்தாப்ல லாரி புக்கிங் ஆபிசு இருக்கும் பாரு. அவுருதுதான். நம்ப அய்யா பேர்ல பிரியம் உள்ளவருதான். நாலைஞ்சி லாரியும் ஓடுது. ஆபீசுக்கு ஒரு ஆளு வேணுமின்னு சொன்னாரு. போன்லதான் வேல. கரி ஏத்திக்கிட்டு போற லாரிவுளுக்கு திரும்பு கால்ல ஜல்லி, காய்கறின்னு ஏதாவது லோடு பாத்து அமுத்திவுடணும், அவுரு லாரிங்களோட கணக்குவழக்கப் பாக்கணும், அவ்வளவுதான்.”

அறிவழகனுக்கு லேசான வெளிச்சக்கீற்று தெரிந்தமாதிரி ஒரு பற்றுதல்.

குறள்மணியும் உற்சாகப்படுத்துகிற மாதிரி சொன்னார் “ நமக்கும் தெரிஞ்சவர்தான். நானும் பாத்துச் சொல்றன். சுமாரா சம்பளமும் குடுப்பாரு, பாத்துக்க. அதோட உத்தண்டராயர் சொன்ன மாதிரி இந்தப் பக்கத்துல நெலம் எடுக்கறது போறது சம்பந்தமா கிட்ட நின்னு பாத்துக்க. அப்பறம் பின்னால அய்யாவ வைச்சி ஏதாவது வாய்ப்பு இருக்கான்னு பாத்துக்கலாம்... அதோட கையோட கையா அய்யாகிட்ட ஒடந்தடம்னு ஒரு தேதிய வாங்கி...” சொல்லிவிட்டு நிறுத்தினார்.

சந்தேகமாக எல்லோரும் குறள்மணியைப் பார்த்தார்கள். குறள்மணி லேசாய் சிரித்தபடி அறிவழகனைப் பார்த்துத் தொடர்ந்தார். “ ஓங் கல்யாணத்துக்குதான். மொதல்ல வூட்ல ஒரு பொண்ணப் பாக்க சொல்லி சீக்கிரம் கல்யாணத்த வைக்கிற வேலய பாருப்பா. தாண்டன வயிசில போயி இன்னமும் தள்ளி தள்ளிக் கிட்டு..”

குறள்மணி சொல்லிமுடித்ததும் முதன்முறையாக அறிவழகன் முகத்தில் லேசாய், ஆனால் பொலிவிழந்த மாதிரி மெல்லிய புன்னகை. அவனும் ஒப்புக்கொண்ட மாதிரி சற்றே தயக்கத்துடன் சொன்னான் “ நம்ம சூழ்நிலைய புரிஞ்சிக்கிட்டமாதிரி தெரிஞ்ச எடமா இருந்தா ஒண்ணு பாருங்க அண்ண. வூட்ல இருக்கறதுவோ எப்பிடி ஏங்கிட்ட இதச் சொல்றதுன்னு தெவைச்சி தெவைச்சிகிட்டு நிக்கிதுவோ..”

வெளியே வந்தார்கள். சங்க வாசலைத் தாண்டி சிகாமணியின் சைக்கிள் ஏதோ யோசனையில் இவர்களைப் பார்க்காத மாதிரி ரோட்டில் கிழக்கே போய்க்கொண்டிருந்தது.

“ சிகாமணி...” செம்பர் கூப்பிட்டார். திடுக் கிட்டமாதிரி சைக்கிளை நிறுத்தி, இறங்கி தள்ளிக்கொண்டு வந்தான். விரக்தியோடு கையில் இருந்த கிழிக்கப்பட்ட தபால் உறையைக் குறள்மணியிடம் கொடுத்தான். வாங்கியவர், வாயால் ஊதி உறைக்குள் இருந்ததை உருவிப் படித்தார். சிகாமணியின் முகத்தைப் போலவே, அவருக்கும் முகத்தில் இருள் பாயத் தொடங்கியது.

‘ மேற்படி நாளிட்ட தங்கள் வேலை விண்ணப்ப மனு தொடர்பான ஆய்வில், கம்சலா என்கிற நபரின் ஆட்சேபணை இல்லாச் சான்றின் நகல் பார்வைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் திரு க.செங்கல்வராயர் என்கிற நபரின் நேரடி வாரிசான சிகாமணி என்கிற தங்களிடமிருந்து நிலங்களின் இழப்புத் தொகையிலிருந்து தமக்குச் சேரவேண்டிய பாகத்தை

பெற்றுக் கொண்டதாகவும், எனவே அவருக்கு நிறுவனத்தின் வேலை வாய்ப்பை வழங்க தனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லையென்றும் தெரிவித்திருக்கிறார். எனினும் இதுபோன்ற சிக்கல்கள் ஆட்சேபங்கள் பிற்காலங்களில் ஏதும் எழக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு, நிலம் அளித்தவர் என்கிற வகையில் திரு க.செங்கல்வராயர் அவர்களின் உடன்பிறந்தார், மற்றும் உரிமையுள்ள உறவுதாரர் என ஆண், பெண் எவரேனும் இருந்தால் அவர் களுடைய ஒப்புதலையும், பணி வழங்க ஆட்சேபணை இல்லாச் சான்றினையும் தகுதியான அலுவலர்கள், சாட்சியர்கள் முன்னிலையில் பெற்று, நிறுவனத் தலைமை அலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். தவறினால் நிலம் எடுப்பு தொடர்பான வேலை வாய்ப்புப் பெறும் தகுதியை இழப்பர் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.’

*

59

மெல்லிய பறங்கிக் கீற்றைப்போல் மூன்றாம் பிறை. பார்த்து கன்னத்தில் போட்டபடி ராசோக்கியம் கூப்பிட்டார் " பூமா... நெலாப் பெற கண்டுருக்கு. வந்து பாரன். மேலைக்கி முதனையில தாம் பாக்கலாம்." பூமா வரவும், பிறந்து வளர்ந்து கால்பாய்த்து நிற்க்கிற வேப்பங்குறிச்சியின் கடைசிப் பிறையை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

குளித்துக்கொண்டிருந்த சதாசிவம் சிரித்தபடி சொன்னான் " முதனைக்கி மட்டும் வேற நெலா இல்ல. இந்த நெலா, மூணாம் பொற எல்லாம் அங்கியும் வரும்."

வாசலில் கிடந்த கட்டிலில் வந்து படுத்தார். வானத்தில் ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் தென்பட்டன. எப்போதும் ஓயாமல் கேட்டுக்கொண்டிருக்கும் வெட்டு இயந்திரங்களின் இரைச்சல், கடக்கு முடக்கு இடிச் சத்தங்கள், லாரிகளின் உறுமல்கள் எல்லாமும் இன்றோடுதான். நாளையிலிருந்து எதுவும் காதில் விழப்போவ தில்லை. ஆனாலும் அய்யனார் உடைந்து சிதறிய காட்சிதான் எப்போதும் நினைவை விட்டு அகலவே அகலாது என்கிற மாதிரி அறுத்துக் கொண்டிருக்கிறது.

அமாவாசை கழிந்து வளர்பிறையில்தான் கிளம்ப வேண்டும் என்று வாரம் பத்துநாளாய்க் காத்துக்கொண்டிருந்தவர், நேற்று மாலையிலிருந்தே அதற்கான தயாரிப்பில் இறங்கி விட்டார். அய்யாயிரத்தை வரச்சொல்லி குட்டித்தா ஆட்டையும் இரண்டு பெரிய குட்டிகளையும் ஓட்டிக்கொடுத்து சொன்னார் " இம்மாம் நாளு எங்க கூடக் கெடந்ததுக்கு ஞாபகமா வைச்சிக்க."

சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, வெட்டு வேலையைப் பார்வையிட அவ்வப்போது வரும் மேல் அதிகாரிகளின் ஜீப் ஒன்று திடுமென இவர்கள் வீட்டை நோக்கி வந்துவிட்டது. ஊரே கிளம்பிவிட்ட பிறகு தனித்துக் குடும்பம் நடத்திக் கொண்டிருப்பது உறுத்தியிருக்க வேண்டும். நிறுத்தியதும் இவரே போய்ச் சொன்னார். " நாளைக்கி கெளம்பிடுவம் சார்."

ராசோக்கியத்தின் பதில் அவர்களுக்கு பெரும் சிரமத்தை குறைத்த மாதிரி இருக்கவேண்டும். பேச்சை மாற்றுகிற மாதிரி அதிகாரி கேட்டார். " வீட்ல பையன் வேலைக்கிப் போறாறா?"

“ போறான் சார்...” ஏன் என்கிறமாதிரி சற்று குழப்பமாகச் சொன்னார்.

“ இந்த லேண்டு ரெக்ருமெண்டு ஸ்கீம்லதான வேல வந்துது...” கேட்டார்

“ ஆமா சார்...” லேண்டு, ரெக்ருமெண்டு என நிறையத் தடவை பேச்சுகளைக் கேட்டிருந்ததில் புரிந்துகொண்டு சொன்னார்.

“ அப்பறம் என்னாங்க. வேலையும் குடுத்தாச்சி. பணமும் வாங்கியிருப்பீங்க. மாத்துக் குடியிருப்பிலியும் வீடு கட்டியிருப்பீங்க. இதுக்குப் பிறகும் எடத்தக் காலி பண்றதுக்கு ஒங்குளுக்கு என்ன கசக்குது. இங்கேயே குப்ப கொட்டிக்கிட்டு குந்தியிருக்கீங்க.” பேச்சில் பட்டென்று கோபம் தெறித்தது.

ராசோக்கியம் இதை எதிர்பார்க்கவில்லை. அவரும் கடந்து விட்டார். “ எட்டத்த போவாம இங்கியே எட்டடுக்கு மாளிகையா கட்டிக்கிட்டு குடியிருக்கப் போறம். ஏஞ் சார் வீணா வவுத்து எரிச்சல கௌப்புறீங்க. நாங்களே கொற காலத்த எனுமா ஓட்றதுன்னு தெரியாம தெவைச்சிப் போயி நிக்கறம்... நீங்க வேற. நாந்தான் நாளைக்கிக் கௌம்பறம்னு சொல்லிட்டன.”

மண்ணைப் பிரிகிற வலியில் சிதறிய வார்த்தைகளைக் கேட்டதும், அதிகாரிகளுக்கு ஒருமாதிரியாகப் போய்விட்டது. சற்றுத் துணிந்த மாதிரி “ அதுக்கில்லீங்க... தனி ஊடு... வயசுப் புள்ளைய வைச்சிக்கிட்டு... சரிங்க... கௌம்பறம்.” போய்விட்டார்கள்.

சதாசிவம் சைக்கிளை தள்ளிக்கொண்டு வாசலுக்கு வந்தான். திண்ணையில் கொளுத்தி வைக்கப்பட்டிருந்த சிமினி விளக்கு காற்றில் அலைமோதிக் கொண்டிருந்தது. பாஞ்சாலையும் பூமாவும் கருத்த முகத்துடன் வெளியே வந்து நின்றார்கள். கட்டிலில் படுத்துக்கிடந்த ராசோக்கியமும் இதற்கென எழுந்ததுபோல் காட்டிக் கொள்ளாமல் எழுந்து டயர்வண்டியின் மூக்கணையில் கட்டப்பட்டிருந்த மாடுகளிடம் போய், ஒதுக்கிக் கிடந்த வைக்கோலை கிட்டக்க தள்ளிவிட்டார்.

வண்டியில் அதிகச் சுமைகள் எதுவுமில்லை. இரண்டு பைசாக்குகளில், ஒரு மூட்டைக்கு மேல் வரும், நெல் கிடந்தது. மற்றபடி குண்டான் குண்டு தட்டு தம்ளர் எனத் தட்டுமுட்டுச் சாமான்கள்தான். தேவையில்லாத அண்டா குவளை போன்ற பெரிய பாத்திரங்களை முன்கூட்டியே மாற்றுக்குடியிருப்பிற்கு எடுத்துப் போகச் சொல்லிவிட்டிருந்தது, சவுகர்யமாக இருந்தது. இரண்டு மூன்று நாளாய் கஞ்சி தண்ணீர் எதுவும் நிறைவாக

ஊற்றாமல் விட்டு, லேசாய் சொடுங்கத் தொடங்கிய துடுக்கனை வலிந்து இட்டுக்கொண்டு போய், மாற்றுக் குடியிருப்பில் தம்பி கனகராசு வீட்டில் வலுக்க கவனிக்கச் சொல்லியும் விட்டாயிற்று. மற்றபடி இவர்களுடைய துணிமணிகள்தான். பிறகு வண்டியைப் பூட்டிக் கொண்டு கூட தண்ணீர் மொண்டு வைத்திருக்கும் செப்புக்குடம், சாப்பாட்டு சாமான்களை எடுத்து வைத்துக்கொள்ளலாம்.

“ சரி பாத்து பத்தரமா போங்க பூமா... நாள மறாநாளு வேண்ணா வேலைக்கிப் போய்ட்டு அப்பிடியே நேரா முதனைக்கு வர்றன்...” சைக்கிளில் காலைத் தூக்கிப்போட்டவாறு சொன்னான்.

“ அடிக்கடி முதனைக்கி வந்துட்டுப் போ அண்ண...” பூமாவுக்கு குரல் கலைந்திருந்தது.

“ நா வர்றது இருக்கட்டும். அங்க போனதும் குதியாளம் போடறதுக்கு செட்டு ஆம்புட்டுக்கிட்டுதுன்னு என்ன மறந்துடாத. குறுக்க நெடுக்க நாளுல மூணுல வந்து எதாவது கறி காய ஆக்கிப் போட்டுட்டுப் போ...” லேசாய் சிரித்தபடி சொன்னான்.

“ எனக்கு என்னா பஸ்சு ஏறிவந்து ஒனக்கு வந்து ஆக்கிப் போடுணும்னு இன்னமும் தல எழுத்தா? அங்க இருக்க மலர் மேடத்த அனுப்பறன். ரெண்டு பேருமா சேந்து கூட்டாஞ்சோறு ஆக்கிச் சாப்புடுங்க...”

“ நாங்க கோழி கூவக்குள்ள கௌம்பிடுவம். வாழ்ந்த வூட்ல வௌக்க அமிச்சி வைச்சிட்டுப் போவக்கூடாது. நெல்லவௌக்க கொளுத்தி வைச்சிட்டுப் போறம். காலையில வந்து குளுர வைச்சி எடுத்துக்கிட்டுப் போ...” சைக்கிளை நகர்த்தத் தொடங்கியவனிடம் பாஞ்சாலை சொன்னாள்.

போய்க்கொண்டிருக்கும் அவனைப் பார்த்தபடி திடுமென ராசோக்கியம் சொன்னார் “ கூடாரோட கூடி சுத்திக்கிட்டு நிக்காம, வேலைக்கிப் போனமா வந்தமான்னு இருக்கணும். வேல செய்ற எடத்துலயும் பத்தரமா வேல செய்யணும். அதது நெலங் குடுத்த காசியோட, கைநெறயா சம்பளம்னு தலகாலு புரியாமச் சுத்தும். காலடியப் பாத்துகிட்டு பொழுத ஓட்டணும். சரியில்லன்னா வூட்டப் பூட்டிப் போட்டுட்டு முதனைக்கி வந்து, நேரா அங்கேர்ந்தே வேலைக்கி போய்ட்டு வா. கட்ன வூட்ட எவனும் தலையால தூக்கிக் கிட்டுப் பூடமாட்டான்.”

என்றைக்குமில்லாமல் அனுசரணையாய் அக்கறையாய் ராசோக்கியத்தின் இந்தப் பேச்சு, பாஞ்சாலை பூமாவுக்கு மட்டுமல்ல, சதாசிவத்திற்கே

நெகிழ்ந்து போய்விட்டது. இருட்டில் சொல்லிக் கொண்டான் “ சரி போய்ட்டு வாங்க...”

தூக்கம் வரவேயில்லை ராசோக்கியத்திற்கு. திரும்பத் திரும்ப வாழ்ந்த சூழல், இடம், ஊர், கொல்லைக்காடு என உள்ளுக்குள் ஓடிக் கொண்டேயிருந்தது. என்ன நினைத்தாரோ பட்டென்று கட்டிலை விட்டு இறங்கினார். பித்துப் பிடித்தவர் போன்று தெருவில் இறங்கி கோயிலின் முன்னால் போய் நின்றார். இருள் பாய்ந்து ஊமையாய் நின்றுகொண்டிருந்தது கோயில். விழுந்து கும்பிட்டால் எவ்வளவு சிக்கலையும் தீர்த்துவிடுகிற அம்மன். சாகை ஊற்றுகிறபோது வரிசை வரிசையாய் குந்தி சனங்கள் கூழ் வாங்கிக் குடிக்கிற இடங்கள். கூத்துக் களரி. ஒவ்வொரு இடமாய் நின்று நின்று பார்க்கிறார். மண்டிக் கிடக்கிற இருட்டுக்குள்ளும் துலாம்பரமாய் தெரிவது போன்று பரவசம் உள்ளுக்குள்.

‘ பெரிப்பா... எங்க அப்பா சந்தைக்கிப் போய்ட்டாரு. எங்க நாத்தாங்காலுக்கும் செத்த தண்ணி வைக்கச் சொல்லுது எங்க அம்மா..’ அம்புசாட்சி சொல்வதை அசைகுலையாமல் சொல்கிற தம்பி மகள் கசப்புவின் குரல் கேட்டுத் திரும்பி தம்பி வீட்டை ஏக்கமாகப் பார்க்கிறார். கதவு உட்படப் பேர்த்துக்கொண்டு போய் விட்டார்கள்.

‘ மாமா, ஆளு பேசற பேச்சி சரியில்ல. பொடரியப் புடிச்சித் தள்ளி போடீன்னு சொல்லியாவுது.’ வடிவேல் வீட்டைக் கடக் கிறபோது மறித்துக்கொண்டு தேவகி பஞ்சாயத்தம் வைப்பது மாதிரியே பட்டது.

அங்காண்ட கணேசன். “ மொட்டைச்சி... மொட்டைச்சி...” குரல் கேட்டது.

அடிகுழாய். அடித்து அடித்து அடிவாங்கியது ஓய்ந்து கிடக்கிறது. நாளையோ மறாநாளோ எவனாவது பிடுங்கிக் கொண்டு போய் பழைய இரும்புக்குப் போட்டு வெங்காயம் வாங்கி விடக்கூடும்.

அப்படியே எல்லாத் தெருக்களிலும் நுழைந்து நுழைந்து வந்துகொண்டிருந்தார். இருண்டு கிடக்கிற ஒவ்வொரு வீடு பற்றியும் ஒவ்வொரு நினைவுகள், நிகழ்வுகள். செங்கல்ராவு வீட்டிற்கு நேர் வந்ததும் அவரையும் அறியாமல் ஒரு பதற்றம். கொம்பு குத்தப்பட்டு சாய்ந்த இடத்தில் சிந்திய ரத்தத்துளிகள் கண்முன் மினுங்குவது போல் தெரிந்தது.

நடந்தார். மண் வெட்டுகிற இடத்திற்குப் போய் நின்றார். எல்லாம் விளைந்த கொல்லைகள். பத்தடிகள் கொண்ட ஒரு மட்டு. லாரிமீது நிறுத்தியிருந்த

சிறிய கோபுரக் கம்பத்தின் மீது ராட்சச விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்க, நான்கு பெரிய கொடுக்குகளைக் கொண்ட இயந்திரங்கள். வெட்டவும், கொட்டவும் கொட்டியதைக் கொண்டுபோய் சுற்றிலும் மேடாகக் கொட்டியது போக மேற்கே தூரத்தில் கொட்டியதுமாக சிறிய மலையைப் போல மண்மேடு இருளில் எகிறிக்கொண்டிருந்தது.

இயந்திரங்களை இயக்கிக் கொண்டிருந்தவர்கள் மொழி புரியவில்லையென்றாலும் " என்னா இந்த நேரத்துல..." என்பதாய் சைகைகளில் கேட்கிறார்கள். பதிலேதும் சொல்லாமல் திரும்பிக் கொண்டிருந்தார். தூரத்தில் வெகுதொலைவிற்கு அப்பால், முதல் அனல் மின் நிலையக் கோபுரங்களின் உயரே சிவப்பு நிறத்தில் வெளிச்சங்கள் அணைந்து அணைந்து எரிந்துகொண்டிருந்தன. அய்யனார் இருந்ததிற்கான அறிகுறியே இல்லாமல் வெறிச்சோடி யிருந்தது.

வீட்டுப்பக்கம் திரும்பினார். சின்னப் பள்ளிக்கூடத்தில் ' ஓரோன் ஒண்ணு... இரோன் ரெண்டு...' வாய்ப்பாட்டு சத்தம் கேட்டது.

வீட்டு வாசலில் வந்து நின்றார். படியோரம் படுத்துக் கிடந்த துடுக்கு இவரைக் கண்டதும் எழாமலேயே வாலாட்டியது. தம்பி வீட்டிலிருந்து ஓடிவந்திருக்குமோ? கிட்டப்போனார், மறைந்து விட்டது.

" எம்மா..." திடுமென சூரிக் கத்தியால் கீறியது போன்ற வலியில் பூமாவின் முனகல். பதறியபடி கிட்டப்போனார் " என்னாப்பா..."

தூக்கம் வராமல் அவளும் கிடந்திருக்க வேண்டும். " ஒண்ணு மில்லப்பா. சூட்டும் பேர்ல வவுத்த வலிக்கிறமாதிரியிருக்குப்பா..." அவளே எழுந்துபோய் வண்டியிலிருந்த கூடையில் வெந்தய டப்பாவை எடுத்துவந்து, வாயில் நாலை அள்ளிப்போட்டு தண்ணீர் குடித்துவிட்டுவந்து படுத்துக்கொண்டாள்.

*

60

தலைக்கோழி கூவியது. திடுக்கென விழிப்பு வந்தது ராசோக் கியத்திற்கு. இரண்டாவது முறையும் மந்தாரக்குப்பம் காலனி பக்கமிருந்து கோழி கூவுகிற சத்தம் கேட்டு, அடுத்தடுத்து கூவல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. பூமாவும் நிறையக் கோழிகளை வைத்திருந்தவள்தான். ஆயிரம் சேவல்கள் கூவினாலும் இவள் வீட்டுச் சேவல்கள் அதம் பரப்புகிறமாதிரி எதுவும் இருக்காது. போகிற இடத்தில் இது எல்லாவற்றையும் எப்படி இழுத்துக் கொண்டுபோக முடியும் என்றுதான் எல்லாவற்றையும் விற்றுத் தொலைத்து விட்டாள். கன்னிப்பொட்டை ஒன்றுமட்டும் அதுவும் முட்டை இட்டு அவையத்தில் இருந்ததால் தப்பித்தது.

மரங்களற்ற வெளி என்பதால், கோயில் இடுக்குகளில் முளைத்த அரசு, ஆல் கழுந்துகளில் சிம்புகளில் தஞ்சம் புகுந்திருந்த குருவிகள் சிலும்ப ஆரம்பித்ததும் ராசோக்கியம் எழுந்து குந்தினார். இதற்கு மேலும் தாமதப்படுத்தினால் முதனைக்குப் போய்ச் சேர்வதற்குள் வெயில் ஏறிவிடும். இளம் வெயிலுக்குள்ளாகவே போய்ச் சேர்ந்தால்தான் மாடுகளுக்குச் சிரமமில்லாமல் இருக்கும். எழுந்தார். எழுந்த வேகத்தில் அவசரம் தொற்றிக்கொண்டது.

எழுப்பினார். “ பாஞ்சால... பாஞ்சால... பொழுது விடியப் போவுது பாரு. பூமா... ஏந்திரும்மா...”

சொன்னதோடு நிற்காமல் பசுமாட்டையும் கன்றுக்குட்டியை யும் கொண்டுவந்து வண்டியின் பின்பக்கக் கொக்கியில் கட்டினார். அவையம் வைத்திருந்த கோழியைக் கூடையோடு தூக்கிவைக்கையில் “ கறாங்... கறாங்...” என்று கத்தியது.

பாஞ்சாலை எழுந்து மறைவிற்குப் போய்வந்தாள்.

“ ஏந் திரும்மா...” சொல்லியபடி பாயைச் சுருட்டினார். புரண்டு படுத்து மெல்ல சோம்பல் முறித்தபடி எழுந்த பூமாவைப் பார்த்துக் கேட்டார் “ எப்பிடிமா இருக்கு...”

“ இன்னும் லேசா வலிக்குதுப்பா...” சொன்ன பூமாவைக் குழப்பமாகப்

பார்த்தார். பாஞ்சாலை கேட்டாள் “ என்னாடி...”

“ வவுத்த வலிக்குதும்மா...” குரலில் லேசாய் வலியும் தெரிந்தது.

பாஞ்சாலை உள்ளுக்குள் சரசரவென்று நாள் கணக்குகளைப் போட்டுப் பாத்துவிட்டு “ சூட்டும் பேர்லியாதான் இருக்கும். வண்டி புட்டியில வெளக்கெண்ண இருக்கும். எடுத்துத் தொப்புள்ல தடவிக்கிட்டு, பட்டுபட்டுன்னு சாமானுவுள எடுத்து வைய்யி...”

பாயை எடுத்து தண்ணீர் இருந்த குடத்தை ஊற்றி வைத்து, கட்டிலைத் தூக்கிப்போட்டு கட்டுத்தெருவில் கிடந்த சாணி நிலைகளையும் கொடித்தட்டில் எடுத்துப்போட்டு உயரே வைத்து... இனி வண்டியைப் பூட்ட வேண்டியதுதான். பாஞ்சாலை “ இங்க வாம்மா. இந்த வெளக்க ஏத்தி வைய்யி...” என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள்.

திண்ணையிலிருந்த சிமினி விளக்கை எடுத்துக்கொண்டு பூமா, மெளனமாக சாமியா வீட்டிற்குள் போனாள். வண்டியைப் பூட்டத் தயாராய் வைத்துவிட்டு ராசோக்கியமும் உள்ளே வந்தார். நிறை விளக்கு. ஏற்றியதும் சலனமில்லாமல் எரிந்தது.

உள்ளங்கையில் சிமினியோடு பூமா, உள்ளுக்குள் சாமியை மனதார வேண்டிக்கொண்டு நின்றாள். பாஞ்சாலையும், ராசோக்கி யமும் நெடுங்கிடையாய் விழுந்து கும்பிட்டார்கள். வாழ்ந்த வீடு, பிள்ளைகளைப் பெற்று, ஏணை கட்டி, சீராட்டிப் பாராட்டி வளர்த் தெடுத்த கூடு. எழுத்திருக்க மனமில்லாமல் தரையோடு தரையாய்க் கிடந்தார்கள். திடுமென ராசோக்கியம் உடைந்து அழுதார். “ கொற காலத்தையும் ஓம் மடியில ஓட்றதுக்கு எங்குளுக்குப் பொசுப்பு இல்ல சாமீ... போற எடத்துலயாச்சும் எங்குளுக்கு எந்த வில்லங்கமும் இல்லாம வைய்யி... உத்தண்டகாரா... செம்பைய்யா...”

பூமா ஒரு காலத்திலும் அவர் அழுது பார்த்ததில்லை. அவளையுமறியாமல் உள்ளுக்குள் ஏதோ இனம்புரியாத வலி. ஒரு நடுக்கம்.

பாஞ்சாலைக்கும் தாங்கவில்லை. அழுதுகொண்டே எழுந்தாள். வெகுநேரம் கழித்து எழுந்தவர் உடன் அழுத சுவடு தெரியாமல் கண்களைத் துடைத்துக்கொண்டு கனத்த பெருமூச்சி விட்டபடி சொன்னார் “ சரி வாங்க...” கிளம்பினார்.

பாஞ்சாலையும் “ வாம்மா...” என்றபடி பின்தொடர்ந்தாள். ரெண்டு அடி எடுத்து வைத்த பாஞ்சாலை சந்தேகமாய்த் திரும்பினாள். பூமா சிலையைப்

போல கையில் சிம்னி விளக்கை வைத்தபடி நின்றுகொண்டேயிருந்தாள். “ ஏண்டி நின்னுட்ட... வாடீ.”

ஒன்றும் சொல்லாமல் ரொம்பவும் பரிதாபமாக அம்மாவைப் பார்த்தாள். கலவரமான அவள் முகக்குறியைக் கண்டதும் பாஞ் சாலைக்கு திக்கென்றது. பதற்றமாக ஓடி வந்து தோளைத் தொட்டு உலுக்கியபடி கேட்டாள். “ ஏண்டி என்னாடி...” கையிலிருந்த சிமினியின் சுவாலையும் ஆடியது.

“ வவுத்த ரொம்ப வலிக்குதும்மா...” தாங்கவியலா வலியின் தகிப்போடு சொன்ன பூமாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்து சிமினி விளக்கு வெளிச்சத்தில் கரகரவென இறங்கிக் கொண்டிருந்தது.

கிழக்கு வெளுக்கத் தொடங்கி நெடுநேரம் கடந்து விடிந்தும் விட்டது. உள்ளே நிறைவிளக்கிற்கு முன்னால், சிமினி விளக்கு எரிந்து கொண்டிருக்க, முட்டியில் முகம் புதைத்தபடி குந்தியிருந்த பூமாவின் கண்ணீர் வழிந்து வற்றிக் காய்ந்தும் விட்டிருந்தது.

நடையில் குந்தியிருந்த பாஞ்சாலைக்கு உள்ளுக்குள் பலவிதமான யோசனைகள். இவ்வளவு நாள் கிடந்து வளர்பிறை பார்த்துக் கிளம்புகிற நேரத்தில் சகுனத்தடங்கல் மாதிரி... போகிற இடத்தில் வளமாக இல்லாவிட்டால்கூட பரவாயில்லை, ஏதோ கைகால் உடம்புக்குப் பழுதில்லாமல் இருந்துவிட்டால் போதும். திரும்பவும் மாற்றுக்குடியிருப்புப் பக்கம் வந்து நத்தி கொறகாலத் தையும் ஓட்டிவிடலாம். அதையும் மீறி ஆளுக்கோ தனக்கோ பிள்ளை களுக்கோ... ஏதாவது என்றால்... “ உத்தண்டகாரா... செம்பையய்யா...” பீதியில் உதடுகள் தானாக உச்சரிக்கத் தொடங்கின.

திண்ணையில் குந்தியிருந்த ராசோக்கியம் பெருமூச்சி விட்டவராய் எழுந்தவர் மறுபடியும் சொன்னார் “ ஒண்ணும் குடி மொழுவிப் போவுல வுடு. ஆயிரமே சொந்தம் பந்தமா இருந்தாலும், ஒரு விண்ணங்கத்தோட வூட்டுக்குள்ள வந்து நொழைஞ்சாங்கன்னு நாளைக்கி ஒரு சொல்லுகுத்தம் வந்துடும். ஆனது ஆயிப் போச்சி. ரெண்டு நாளு இருந்துட்டுப் போவும்.” சொன்னதோடு இல்லாமல் வண்டியில் ஏற்றியிருந்த பாய் படுக்கைகளை இறக்கினார். மாட்டை கன்றைப் பிடித்துக் கட்டினார். கோழிக் கூடையை எடுத்து வைத்தார்.

நேற்று வந்த ஜீப்தான். அதே அதிகாரிகள் தான். ஏதேச்சை யாய் இவர்களைப் பார்த்துவிட்டு சரக்கென தேங்கித் திரும்பி கிட்ட வந்து நின்றது. ராசோக்கியத்திற்கு பட்டென்று ஒரு சடசடப்பு. கிட்டப் போனார்.

நடையில் குந்தியிருந்த பாஞ்சாலை கூட கொஞ்சம் அலண்டமாதிரி எழுந்து நின்றாள். சதாசிவம் ஒரு வணக்கத்தையும், அய்யாயிரம் கும்பிடலையும் போட்டார்கள்.

“ என்னாப்பா, இன்னும் கௌம்பாம டேரா போட்டுட்ட. நீ குடுத்த சவடாலுக்கு காலி பண்ணிப் போயிருப்பன்னு நெனைச் சேன். இது யாரு வேலைக்கிப் போற தம்பியா...” சதாசிவத்திடம் கேட்டார் “ ஏம்ப்பா ஒங்க அப்பாவுக்கு கெவுருமெண்டு ரூல்சு என்னான்னு சொல்லக்கூடாதா?”

ராசோக்கியத்திற்கு பட்டென்று என்ன சொல்வதென்று தெரியவில்லை. உடம்பெல்லாம் கூனிக்குறுகியது போன்ற ஓர் அவலத்தில் தயங்கியபடி சொன்னார் “ இல்லிங்க சார். கோழி கூவக்குள்ள கௌம்பறதுன்னுதான் முடிவு பண்ணியிருந்தம். ஆனா கௌம்பகுள்ள...” அதற்குமேல் சொல்லக்கூசியது “ திடீர்னு புள்ளைக்கி வூட்டுக்குத் தூரம் வந்துட்டுது. அதனாலதான்.” சொல்லி முடித்தபோது அக்கினியை தாண்டியது போன்று ஒரு சூடு உள்ளுக்குள்.

பெண்ணைப் பெற்றவராக இருக்கவேண்டும். அதே சூடு, வந்த அதிகாரிக்கும் பட்டென்று அவர் முகத்திலும் ஒரு வதக்கம். “ சரிங்க... சரிங்க... இருந்து பாத்து பத்தரமா இட்டுக்கிட்டு போங்க.”

வெட்டு நடத்திய பக்கம் ஜீப், புழுதி விரையப் பறந்தது.

*

ஆறு

61

கண்ணைத் துளைத்துக் குருடாக்கி விடுகிறமாதிரி ஒவ்வொரு வாகனத்திலும் வெளிச்சம். நேரே இடிக்கிற மாதிரி வந்து கடந்து போகிறபோதெல்லாம் மாடுகள் தேங்கித் திகைத்து நின்றன. சளார் சளார் என்று வந்துமோதும் காற்று வேறு. இன்னும் பத்து தப்படிதான், மெயின்ரோட்டை விட்டு ஊத்தாங்கால் ரோட்டில் இறங்கிக்கொண்டால் இடரற்றுப் போகலாம்.

வண்டிக்குள் குந்தியிருந்த பூமா, தூங்கித் தூங்கி விழுவது பஸ் லாரிகளின் வெளிச்சப் பாய்ச்சலின்போது தெரிந்தது. மூன்றாம் நாள் தலைக்கு ஊற்றியே ஆகவேண்டிய கட்டாயம். பச்சைத் தண்ணீரைத் தலைக்கு ஊற்றிக்கொண்டு வந்தால்கூட, சில்லிப்பில் தூக்கம் வராது. கோழி கூவவே கிளம்ப வேண்டியிருந்ததில் பாஞ்சாலை, வெந்நீரை வைத்து ஊற்றிவிட்டிருந்தாள். வெந்நீரின் இதம் உடம்பெல்லாம் பரவியிருந்ததில், தாலாட்டுகிற மாதிரியான வண்டிப் பயணத்தில், ஊரை விட்டு வருகிறோம் என்கிற வலியையும் மீறி தூக்கம் வளைத்துக்கொண்டு விட்டது பூமாவுக்கு.

பாஞ்சாலையின் மடியில் சாய்ந்தவளை, அதட்டி நிமிர்த்தி விட்டாள். “ தலைக்கு ஊத்தனதோட தூங்கனா சளி புடிச்சிக்கும் புள்ள. தே விடிஞ்சி போச்சி. ஊத்தாங்காலு, முந்திரிக்காட்டத் தாண்டனா அங்காண்ட முதனைதான்.”

தூக்கத்தில் ஒன்றும் புரியாமல், ராந்தல் வெளிச்சத்தில் மாறிமாறி வைக்கிற மாட்டுக் கால்களுக்கு ஏற்ப பக்கவாட்டத்தில் விழுந்து வருகிற நிழல்களைப் பார்த்துக்கொண்டே வந்த பூமாவுக்கு திரும்பவும் கண்கள் சொக்கின.

தலையிலிருந்து நழுவி விழுந்த துணியை இழுத்துவிட்டவாறு திரும்பவும் அதட்டினாள் “ என்னா புள்ள, சொல்றதுலாம் காதுல ஒறைக்கில.” தலையிலடித்தமாதிரி போட்ட சத்தத்தில் பூமாவுக்கு தூக்கம் பொசுக்கென கலைந்துவிட்டது.

ஏதேச்சையாய் திரும்பிய ராசோக்கியம் “ புள்ளைக்கி இழுத்துவுடறது இருக்கட்டும். நீ தலையில துணிய நெல்லாப் போடு” சொல்லிக்கொண்டே தன்நடையில் போய்க்கொண்டிருந்த மாடுகளின் மேல் அதட்டியபடி கையை வைத்தார். கைபட்ட சுருக்கில் திடுக்கிட்ட மாதிரி மாடுகள் எட்டி நடையைப் போட்டன. நிலம் தெளிய ஆரம்பித்திருந்தது.

ரோட்டை விட்டு இறங்கி, வடக்கில்போய் வண்டி ரயில்வே கேட்டில் ஏறியபோது கிழக்கே சனிமூலை நேருக்கு முதல் அனல் மின் நிலையக் கோபுரங்கள், ஏகப்பட்ட இயந்திரங்களின் வெளிச்சம். அதேபோன்று உயரத் தொடங்கியிருந்த இரண்டாம் அனல் மின் நிலைய புகைக்கோபுரங்களும் வெளிச்சத்தில் மூழ்கியிருந்தன. வேப்பங்குறிச்சியில் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டாம் சுரங்கத்திலிருந்துதான் இதற்குக் கரி வரவேண்டும். இரண்டாம் அனல் மின் நிலையத்தில் வேலை நடக்கிற சத்தங்கள் கூடக் கேட்டன. குறுக்கே கன்வேயர் பெல்ட் போகிறமாதிரி ரோட்டில் பாலம் வேலை நடந்து கொண்டிருப்பதைக் கடந்து வந்தது ராசோக்கியத்திற்கு நினைவிற்கு வந்தது.

கேட்டிலிருந்து வண்டி இறக்கத்தில் இறங்கியபோது, மூக்கணாங்கயிற்றை இழுத்துப் பிடித்தும் பாரம் நெட்ட நெட்ட மாடுகள் ஓடின. பின்னால் வளையத்தில் கட்டப்பட்ட பசுமாடு வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல், இடறிக் கீழே விழுந்து விடுகிற மாதிரி ஓடிவந்தது. கூட திரியனாய் வந்துகொண்டிருந்த கன்றுக் குட்டியோ மகிழ்ச்சி தாளாமல் துள்ளலும் போட்டது. வேகமாய் ஓடி வேகத்தடைகளில் தடதடத்தபோது, அவையக் கூடையிலிருந்த கன்னிப்பொட்டை கூட பயத்தில் கொர் கொர் என்றது. குலை அறுந்து போகிற மாதிரி உடம்பு குலுங்கியதில், பூமா வுக்கும் தூக்கம் சுத்தமாய் போய்விட்டது.

ஊத்தாங்கால் வீதியில் வண்டி போய்க்கொண்டு இருக்கும் போது நாய்கள் குரைத்தன. ஒன்றிரண்டு கன்றுக்குட்டியைப் பின் தொடர்ந்து எட்டிக் காலைக் கவ்விப் பிடுங்கி விடுகிற மாதிரி குரைத்துக்கொண்டு வந்தன. தாயும் கன்றுமாய் திரும்பி சீந்திச் சீந்திப் பயமுறுத்தியபடியே வரவும், வண்டி ஊரைக் கடந்து முந்திரிக் காட்டுப் பாதையில் நுழைந்தது. நாய்கள் பின்வாங்கி திரும்பவும் ஊருக்குள் ஓடின. துடுக்கனைக் கொண்டுவந்திருந்தால் வள்வள் என்று வளைத்துக்கொண்டு இரைச்சல் அதிகமாக இருக்கும். போகிற இடத்திலும் பெரிய பாடு. தலையில் போட்டிருந்த துண்டை உருவி பூமா முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

இரண்டு மூன்று மைல்களுக்கு இடையில் முந்திரிக் காடுகள் தான். காட்டைத் தாண்டினால் அங்காண்ட முதனை. ஊரை நெருங்க நெருங்க பாஞ்சாலை ராசோக்கியம் இருவருக்குமே வெளியே சொல்லமுடியாத ஓர் இறுக்கம். கிளம்பி வருகிறபோது இருந்த மனநிலையைவிட மிகவும் பரிதாபமாய் ஏதோ அநாதரவாய்ப் போகிறமாதிரி ஓர் உணர்வு. பஞ்சம்பிழைக்க தூர தேசம் போகிற மாதிரி ஒரு தாழ்வு.

ஆனால் மாறாக உற்சாகமாய் பூமா. அரிஓம் என்றும் கிளம்பு கிறபோது தீட்டுத்தடுப்பில் சிக்கி, மீண்டு வருகிற சோகம், ஊரைப் பிரிகிற வருத்தம் எல்லாமும் கூடிய மனச்சிக்கலிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்ட மாதிரி, விரியத்துவங்கிய பூவாய் பூமாவின் முகம். பூரித்த ஒரு கட்டத்தில் எழுந்து நின்றுகொண்டாள். போர்த்தியிருந்த போர்வையைச் சுருட்டிப் போட்டுவிட்டு தூரத்தில் அனல் மின் நிலையக் கோபுரங்களுக்கு அப்பால் எழும் செங்கதிரை ஆவலாய்ப் பார்த்து கைகளை உயரே தூக்கிப் பின்னி உடம்பை முறுக்கித் திருவி சலாபத்தாய் சோம்பல் முறித்துக்கொண்டாள். எள் முனையளவும் வலியோ வருத்தமோ இல்லாது சிலுக்க கைகளை முறுக்கி உதறிக் கொண்டிருக்கும் அவளைப் பார்த்த பாஞ்சாலைக்குள் பட்டென்று ஒரு கலவரம் சூழ்ந்துகொண்டது.

“ இந்த சீப்ப எங்கம்மா வைச்ச?” பாஞ்சாலையின் பார்வையைப் பொருட்படுத்தாமல் கூடையில் தேடி எடுத்தபடி சீவக் குந்தினாள். “ நேத்திக்கே அண்ணன ரவ பூவு வாங்கிக்கிட்டு வரச் சொல்லி யிருக்கலாம்.” அலுத்துக்கொண்டாள்.

“ ஊருக்குப் போயி சீவிக்கலாம் வுடும்மா. எதுக்கு தொம் பாட்டக்காரிச்சி மாதிரி வண்டியில குந்திச் சீவிக்கிட்டு...” கடுமை யாகக் கேட்க வேண்டியதை மென்மையாக மெதுவாகக் கேட்டாள் பாஞ்சாலை.

‘ தொம்பாட்டக்காரிச்சி’ என்கிற கடும்சொல் பூவுக்குள் லேசாய் இடறினாலும், அவள் இருக்கிற மகிழ்வில் பொருட் படுத்தவில்லை. ராசோக்கியந்தான் அதட்டினார் “ வுடம்பா. அது எதாவது சீவிக் கிட்டு போவுது.”

“ இல்லப்பா, என்னாடி தூக்கத்திலேயே ஏந்திரிச்சி ஓடியாந்தி யான்னு மலரு கிண்டல் பண்ணும்.” மலர் பெயரை உச்சரிக்கும் போது இதழ்களில் ஓர் விரிவு. உள்ளுக்குள் அளவு கடந்த ஆனந்தம். அவளின் ஆர்வக்குறிப்பை உணர்ந்த பாஞ்சாலைக்கு பெரும் விசனம் மனசுக்குள் பரவத் தொடங்கியது. முடிகளை நன்றாக முன்னுக்கு வளைத்துப்போட்டு சீவத் தொடங்கியிருந்தாள். பாஞ்சாலைக்கு அவளின் விசனமற்ற போக்கு தாங்கவில்லை. ஆனால் எல்லா வற்றையும் உள்ளே அடக்கிக்கொண்டு மெல்ல சாந்தமாக “ பூமா...” என்றாள். குரல் மிகவும் தாழ்ந்திருந்தது கண்டு, என்ன சொல்லப் போகிறாள் என்கிற மாதிரி ராசோக்கியம் கூட திரும்பிப் பார்த்தார்.

சீவுவதை விட்டுவிட்டு சந்தேகமாக நிமிர்ந்தாள். பாஞ்சாலை தயங்கித்

தயங்கிப் பேசினாள். “ என்னாதான் நம்ப சொந்தக் காரங்களா இருந்தாலும் நாம ஒண்ணும் விருந்தாடியாப் போவுல, நாலு நாளு இருந்துட்டு வர்றதுக்கு. வந்தாரங்குடியா வந்து தங்கியிருக்கங்றது மனசுல ஓடிக்கிட்டு இருக்கணும். அடக்க வொடுக்கமா போவுணும். வருணும். அதே மாரி அந்த மலரு புள்ள கூட கூடிக்கிட்டு அங்க இங்கன்னு அலையக்கூடாது. கும்மாளம் போட்டுக்கிட்டு நிக்கக்கூடாது. நாளைக்கி காட்டுக்காடை வந்துதான் வூட்டுக்காடைய கெடுத்துப் போச்சின்னு பேரு வந்து வெளைஞ்சிடும். ஆமா, சொல்லிட்டன்.”

தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருந்ததும், மெல்ல சீவிய படி கேட்டுக்கொண்டிருந்தாள். ஆமோதிக்கிறமாதிரி ராசோக்கியம் ஊனாடிக் கேட்டபடி குந்தியிருந்தார். “ கொல்லகுடிக்கி போனாலும் குளிக்கறதுக்கு ஏரித்தொறைக்கிப் போனாலும் போனமா வந்தமான்னு இருக்கணும். கும்ப கூடிக்கிட்டு ஓரியடிச்சிக்கிட்டு நிக்கக்கூடாது.”

இனி சொல்வதற்கு வாய்ப்பே கிடைக்காது என்கிறமாதிரி பாஞ்சாலை சொல்லிக்கொண்டிருந்தாள். பூமா பதிலேதும் பேசாமல், சடையைப் பின்ன ஆரம்பித்திருந்தாள். “ அதே மாரி அத்தையோ மாமனோ சண்டசாடி போட்டுகிட்டாங்கன்னா, நம்ப பாட்டுக்கும் குசு குடிச்ச நாயாட்டம் பெசாம குந்தியிருக்கணும். நம்ப வூடு மாதிரி மின்னமின்ன போயி நாட்டாமயாட்டம் பஞ்சாயத்தம் பண்ணிக்கிட்டு நிக்கக்கூடாது. சண்ட கோபக்குறியில எதுனாச்சும் சொல்லிட்டாங்கன்னா மனசு தாங்காது சொல்லிட்டன்.”

வண்டி கடகடத்த சாலையில் அரசாங்க முந்திரிக்காடுகளைத் தாண்டி, முதனையின் பட்டாத்தோப்பு வண்டிப்பாதையில் சத்தமில்லாமல் போய்க்கொண்டிருந்தது. பூமா ஊம் ஆம் என்று எதுவும் வாயைத் திறக்கவில்லை என்றாலும் பாஞ்சாலை கிளிப் பிள்ளைக்குச் சொல்கிறமாதிரி சொல்லிக்கொண்டே வந்தாள்.

பின்னி முடித்து விருத்தமாய் இழுத்து ஒப்பாக்கி, நுனியை வளைத்து மணிக்கட்டிலிருந்த ரப்பர் வளையத்தை இழுத்து இறுக்கமாகப் போட்டு அதே வேகத்தில் சடைப் பின்னலைத் தூக்கிப் பின்னுக்குத் தள்ளிப் போட்டுவிட்டு, சீப்பிலிருந்த முடியை உருவியபோது வண்டி முதனைக்குள் நுழைந்தது. முக்கியமாய் இதையும் சொல்லி விடவேண்டும் என்கிற மாதிரி பாஞ்சாலை சொன்னாள் “ நம்ப மண்ண வுட்டு கௌம்பி எப்ப இந்த மண்ணுல நாம வந்தாரங்குடியா அடிய வைச்சமோ இப்பையிலேர்ந்து இந்த கோவம், ரோசம் எல்லாத்தையும் நாம வுட்டுக்கெடாசிட்டு செவுனேன்னு பொழப்பப் பாக்கணும்.”

“ எம்மா, ஏஞ் சர்டிகேட்ட வாங்கியாந்து இங்க சேத்து வுடுங்களன், நா பள்ளிக்கொடம் போறன்...’ சமாசம்பந்தமில்லாமல் கேட்டாள்.

“ நாஞ் சொல்றது எதியும் காதுல வாங்காத. ஒன் ராகமே பெரிசுன்னு பேசு. ஒண்ணும் கலைக்ட்ரு வேலைக்கிப் போவுல. ஒரு வயிசிப் புள்ள... ஊரு தாண்டி ஊரு வந்து பள்ளிக் கொடத்துல சேத்துக்கிட்டு... சொல்றத கேட்டுக்கிட்டு வூட்டு வேலயப் பாத்தாப் போதும்.”

வண்டி நடுவீதிக்குத் திரும்பியதும் ஆவலமாய் மலரின் வீட்டை நோக்கிப் பார்வை ஓடியது. அதே நேரம் மலரும் எதேச்சையாய் வாசலுக்கு வந்தவள் பார்த்துவிட்டாள். ஒரே சத்தம் “ ஏய் பூமா...” இவளும் பதிலுக்கு எழுந்து துள்ளிக் குதிக்காத குறைதான் “ மலரு.. மலரு..” கூச்சல்தான். தெருவே அதம் பறக்கிறது.

“ பூமா, பெசாம இரு புள்ள... குந்து புள்ள...” பாஞ்சாலையின் ரகசிய அதட்டலையும் மீறிப் பறக்கிறாள். தெருவில் இருந்தவர்கள் எல்லாரும் திரும்பிப் பார்க்கிறார்கள். பாஞ்சாலைக்கு எடுத்த எடுப்பிலேயே குபுக்கென முகம் இருண்டுபோனது.

*

62

வெள்ளையன் லாரி புக்கிங் ஆபிஸ்.' ஓங்கி உதைத்தால் விழுந்து விடுகிறமாதிரியான சுவர்களால் கட்டப்பட்டு, மேலே சிமிட்டி ஓடு போட்டு இரண்டாகத் தடுக்கப்பட்ட கொட்டகை தான். கிறுகிறுத்தவாறு பக்கவாட்டத்தில் அனலை வாரி வீசியபடி ஓடிக்கொண்டிருக்கும் விசிறியில் ரோட்டோர புழுதி அப்பியிருக்க, முன்னால் ஒரேயொரு மேசை. மேசையில் இரு கனத்த நோட்டுகள். சிமிட்டி வண்ணத்தில் ஆதிகாலத் தொலைபேசி ஒன்று. பிறகு பின்னுக்குச் சாய்ந்து கொள்கிறமாதிரியான ஒரு நாற்காலி. நாற்காலி யில் குந்தியிருந்த அறிவழகன் திரும்பத் திரும்ப செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

மந்தாரக்குப்பத்துக்கும், புதுவேப்பங்குறிச்சிக்கும் இடையில் மெயின் ரோட்டின் வலதுபுறம் சண்முகா பேலஸ். சுவரில் ஓட்டிய சினிமா போஸ்டரில் நதியாவோ ராதாவோ சிரித்துக் கொண்டிருந் தார்கள். எதிரே ரோட்டுக்கும் இந்தப் பக்கம் ஆபிசுக்கு முன்னால் பெரிய களம் போன்ற சிறுதிடல். கிழக்குபக்கமாக நின்று கொண்டிருந்த இரண்டு லாரிகளில் ஒன்று கரியேற்றி மூடாக்கு போடப்பட்டு தண்ணீர் கருப்பாய் ஒழுகி ரோட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது. பக்கத்தில் நின்றிருந்த பென்ஸ் லாரியின் டயரை கழற்றிக் கொண்டிருந்தார்கள்.

நெற்றியில் ' வெள்ளையன்' என எழுதிக்கொண்டு மேற்கில் இரண்டு லாரிகள் நின்றிருந்தன. ஓனர் தொப்புளிகுப்பத்தார் என்கிற வெள்ளையன் ரயில்வே டிராக்கில் போகிற ஓப்பன் கோச்சில் துணிந்து ஏறி கரியைத் திருட்டுத்தனமாக ஓரத்தில் தள்ளிவிட்டு, கூட்டி அள்ளி உண்டை உருட்டி விற்றுக் கொண்டிருந்தவர்தான். தொப்புளி குப்பத்தில் ஊரை மட்டும் விட்டுவிட்டு நிலங்களை எடுத்துக் கொண்ட நிர்வாகம், கொடுத்த பணத்தில் பின்னும் இரண்டு லாரிகளை வாங்கினார். கரி லோடு எடுத்து ஓட்டினார். சிமிட்டி ஆலைகளுக்கு சாம்பல் அடித்தார். மூன்று லாரிகளும் மேலும் மூன்றை ஈன்றெடுத்தன.

ஆயிரம் வசதி வாய்ப்புகள் வந்தாலும் டாக்டர் அய்யாமீது மட்டற்ற மதிப்பு. சாலைமறியலில் போய் நின்று போராட்டத்தில் ஈடுபடாத குற்ற உணர்ச்சியை, அறிவழகனுக்கு வேலை கொடுத்ததில் சரிசெய்து கொண்டதுபோல் ஒரு மகிழ்வு. நித்தம் டிரைவர், கிளீனர் என வந்துபோகும்

வழக்கமான முகங்களுக்கிடையே உத்தண்ட ராயர், செம்பர், குறள்மணி என சங்கத்துக்காரர்கள் வந்து போகத் தொடங்கியிருந்ததில் பெருமிதம். அதே சமயத்தில் தொழில் சம்பந்தமாய் எழுகிற பிரச்சினைகளுக்கு அவர்களின் வருகை சற்று பாதுகாப்பாகவும் இருந்தது.

எந்த வேலையையும் நிறைவாய்ச் செய்யக்கூடியவன்தான் அறிவழகன். தொலைபேசியில் கனிவாய்ப் பேசி லோடு அமர்த்த, திரும்புகாலின் வெற்று நடைக்கு சுமை பார்த்து ஒதுக்க என இந்த வேலை அவனுக்குப் பிடித்தமானதாகவே இருந்தது.

ரங்கநாது கூட நெய்வேலி வேலை கிடைக்காமல் போனதும் எங்கே சோர்ந்து விடுவானோ என்கிற பயத்தில் வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டு தான் குந்தியிருந்தார். குறுக்க நெடுக்க மந்தாரக்குப்பம் போக வருகிறபோது, உள்ளே அறிவழகன் இருப்பது தெரிந்தே கேட்பார் ‘ தம்பி, உள்ள இருக்காப்லயா...’

‘ யாரு மேனேஜரா... இருக்காரு. கூப்புடட்டுங்களா...’

‘ வாணாம் வாணாம். சும்மா இருக்குதான்னு பாத்தன்.’ மேனேஜர் என்கிறபோது அப்படியே அவருக்குக் குளிர்ந்து போகும். அதே சூட்டோடு வீட்டுக்குப் போய் காசாம்புவிடம் சொல்லிச் சொல்லி மகிழ்வார் ‘ மேனேஜர பாக்கப் போனன்...’

என்னதான் மேனேஜர் எனும் பெருமையான வேலை என்றாலும் ‘ கா காசியா இருந்தாலும் கெவுரு மெண்டு காசி’யை வாங்கிப் பார்க்க முடியவில்லையே என்கிற வருத்தம் அவர்களுக்கு படித்துறையின் கல்லைப்போல் அழுந்திக் கிடந்தது. அதுவும் கையெழுத்தைக்கூட சரியாய் போடத் தெரியாதவர்கள், ஊரில் நிறையப் பேர் கைகொள்ளாச் சம்பளத்தில், புதிதாய் வாங்கிய வண்டி களில் பறக்கிறபோது, ஒரு படித்த பிள்ளை, ஆசாரியைக் கூப்பிட்டு செறா பிளக்க வைத்ததுபோல், அனல் கக்குகிற கொட்டகையில் குந்தியிருப்பது தாங்கவில்லைதான். என்றாலும் ஒருநாளும் அறிவழகன் முன்னால் அதைக் காட்டிக்கொண்டதேயில்லை.

‘ தம்பி எங்க...’ நிலம் எடுத்து சிக்கலில் இருப்பவர்கள், ஆலோசனை கேட்பவர்கள் என நிறையப்பேர் தேடிக்கொண்டு வருபவர்களை ‘ அங்க வெள்ளையர் ஆபிஸ்ல இருக்கும் பாருங்க.’ சொல்லிவிடுகையில் எல்லாமும் மறந்து ஆறுதல் கொள்வார்கள்.

‘ எம்பளாய்சு வேல கெடைச்சிருந்தா பத்து ரூவா பணத்ததாம்

பாத்துருக்கலாம். புள்ளய இப்பிடி ஆளுமேல ஆளுன்னு எந்த மானுடம் தேடிக்கிட்டு வரும்.’

“ **த** ம்பீ...” நாற்காலி காலியாக இருந்ததும், ஒரு அடி உள்ளே எடுத்து வைத்துக் கூப்பிட்டார் கீரையன். கூட வந்த ஆள் வெளியே நின்றுகொண்டிருந்தார்.

“ யாரு” உள்தடுப்பிலிருந்து ஒரு கணக்கு நோட்டை எடுத்த படி வந்த அறிவழகன் “ என்னா கீர... யாரு...” கூட வேட்டி சட்டையில், நெற்றியில் ஒற்றை நாமத்தோடு, கையில் மஞ்சள்பையை வைத்தபடி நின்றவரை சந்தேகமாகப் பார்த்துக் கேட்டான்.

“ ஒங்களப் பாக்கத்தான் வந்துருக்காரு...” சொல்லிவிட்டு வேட்டிக்காரரை “ இப்பிடி பெஞ்சில குந்துங்க சார்” என்றபடி கீழே கிடந்த டயரில் கீரையனும் குந்தினார்.

“ நா எனுமோ நீ எங்கியாவது கூனங்குறிச்சி பக்கம் வேலி மறிச்சியில கைய வைச்சி, பஞ்சாயத்துக்கு ஆளு இட்டாந்துருக்கன்னு பாத்தன். நீ எனுமோ என்னப் பாக்க வந்துருக்கார்னு சொல்ற” சிரித்தபடி கேட்டான்.

“ ஒப்பாருக்கும் ஒனக்கும் கீரையன்னா கசங்கு கழின்னுதான் ஞாபகம் வரும் போல்ருக்கு...” சிரித்துக் கொண்டே சொன்னார் “ சீக்கிரம் நீங்க கல்யாணச் சாப்பாடு போடுவிங்கன்னு நா ஆளு கொண்டாந்துருக்கன். என்னப் போயி...”

மஞ்சள் பை ஆரம்பித்தார். “ கல்யாணசுந்தரம் ஏம் பேரு. சேத்தியாத் தோப்புதான் சொந்த ஊரு. கடலூர்ல ரெண்டு நாளைக்கி முன்ன குறள்மணி சார பாத்தன். ஒங்கள பத்தி சொன்னாரு. அவுரு தங்கச்சி பையனுக்கு, அண்ணாமல காலேஜ்ல வேல செய்ற பொண்ணு நாந்தான் ஏற்பாடு பண்ணி வைச்சன்.”

மீதியைக் கீரையன் ஆரம்பித்தார். “ ஒப்பார பாத்து இட்டுக் கிட்டு எதாவது மறிச்சிய பக்கம் போவலாம்னு வூட்டுக்குப் போனா, சாரு அங்க விசாரிச்சிட்டு நின்னாரு. நாந்தான் இட்டுக்கிட்டு போயி வூட்ல வுட்டன். அதுக்கப்பறந்தான் சாரு வந்த விஷயத்த சொன்னாரு. அம்மா மூஞ்சியில சந்தோஷம் தாங்குல. ஒப்பாருக்கு அதுக்கு மேல. அதோட தம்பிகிட்ட இட்டுக்கிட்டு போன்னு அனுப்பி வுட்டுது.”

திரும்பி புரோக்கரை பார்த்துப் பேசினார். “ தம்பி இப்பிடி புரோக்கர் செட்ல

குந்தியிருக்குதுன்னு நெனைக்காதீங்க. தம்பி யாருக்குக் கையக் காட்டுதோ, அவுருக்கு அப்படியே வேலயப் போட்டுக் குடுக்கறதுக்கு என்எல்சிகாரன் தயாரா இருக்கான். இங்க வேலைக்கி போற எல்லாருக்குமே தம்பியாலதான் வேல கெடைச்சிது. கையெடுத்துக் கும்புடாத கொறதான்." மேலே வழிந்த வியர்வையைத் தோள்துண்டால் விசிறியபடி சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் சொல்வது எல்லாமும் மிகையாகப் போய்க் கொண்டிருந் ததும், தனக்கு இதில் ஏதும் சம்பந்தம் இல்லையென்கிறமாதிரி ரோட்டை வெறித்துப் பார்த்துக்கொண்டு குந்தியிருந்தான். உன்னிப்பாக ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த புரோக்கர் " எல்லாத்தையும் குறள்மணி சாரு சொல்லிட்டாரு" என்றபோது இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தது எல்லாம் வெற்றுச்சொற் களாய் போய்விட்ட வெறுமை கீரையன் முகத்தில்.

ஆலம் இலைகளைப் போல் ஏகப்பட்ட புகைப்படங்கள். இயல்பாய் அல்லது வலிந்த புன்னகையில் பெண்பிள்ளைகள். ராசிக்கு தக்கன சீட்டைத் தேர்ந்தெடுக்கும் கிளியைப்போல் புரோக்க ராகவே தேர்ந்தெடுத்து ஒரு படத்தை நீட்டினார். வாங்கிப் பார்த்த மாத்திரத்திலேயே அறிவழகன் முகத்தில் புன்னகை இழை ஓடியது.

" பெண்ணோட அப்பாவும் சங்கத்துக்காரர்தான். கச்சிதமான குடும்பந்தான். ஒரு பொண்ணு ஒரு பையன். பொண்ணு இளயது. பன்னெண்டாவது வரைக்கும் பிடிச்சிருக்கு. வடலூருக்கும் அங்காண்ட உள்மருவாய்தான் சொந்த ஊரு. அப்பிடியே பஸ்ச வுட்டு எறங்கனா தெக்கால பக்கம் மோட்ரோட நாலு காணி நெலம். நஞ்சைக்கி நஞ்ச. புஞ்சைக்கி புஞ்ச. வெள்ளரி போட்டாலே போதும். முத்தி பழுத்துதான் ஆவணும்னு கட்டாயம் கெடையாது. வரப்புத் தலமாட்லியே பணம் பட்டுவாடா ஆவும். வடலூர் பஸ்டாண்டுல வைச்சி பிஞ்சாவே விக்க, வந்து கூடை கூடையா வாங்கிட்டுப் பூடுவாங்க..."

கீரையன் இடுப்புக் கைலி சுற்றலிலிருந்து புகையிலையை எடுத்துப் போட்டார். புரோக்கர் அள்ளி வீசிக்கொண்டிருந்தார். " பொண்ணோட அப்பா வேலையில இருக்கற மாப்பிள்ளய தவிர, வேற சாதகத்த எடுத்துக்கிட்டு ஏந் தலகட வழி ஏறாதன்னுட்டாரு. ஆனாலும் குறள்மணி சாரு சொன்னதால எனக்கு ஒண்ணும் பயமில்ல. உங்குளுக்கும் சந்தேகம் வாணாம். குறள்மணி சாரு சொல்லுன்னா பொண்ணோட அப்பாவுக்கு தலமேல. வூட்டுல கலந்துக்கிட்டு சொல்லுங்க. மனசுக்குப் புடிச்சிதுன்னா, ஜாதகம்லாம் சாதகம்தான். ஒங்க வூட்ல உம்மப்பட்டா மேக்கொண்டு பொண்ணு வூட்ல பேசறதெல்லாம் குறள்மணி சாரு தானே பாத்துக்கறன்

னுருக்காரு.”

புரோக்கர் கிளம்பினார். “ போட்டோவ நீங்களே வைச்சிக்குங்க.” அவர் கேட்டாலும், இவன் தருவதாக இல்லை.

*

63

சவரம் செய்யப்பட்ட முகம். நரைத்து செம்பட்டை பாய்ந்த தலைமுடி. வெள்ளக்கோட்டானைப் போல் உடம்பு முகமெல்லாம் வெளுத்து, பற்கள் நீண்டு ஒரு நிரந்தர காயலாக்காரராய் ஆகிவிட்டார் செங்கல்ராவு. மாற்றுக் குடியிருப்பு பேருந்து நிறுத்தத்தில் இறக்கி சைக்கிளில் பின்னால் குந்தவைத்தபடி சிகாமணி தள்ளிக்கொண்டே வந்தான். சோர்ந்து கால்கள் பின்ன துணிமணிகள் பிதுங்கும் பைகளைத் தூக்கியபடி பின்னால் அசலாம்பு வந்துகொண்டிருந்தாள்.

வாசலில் நிறுத்தியதும் அவரால் இறங்க முடியவில்லை. அசலாம்பு சைக்கிளைப் பிடித்துக்கொள்ள, சிகாமணி தாங்கிப் பிடித்து இறக்கினான். “ பாத்துடா பாத்து... பாத்து...” தெருவிலிருந்து அறிவழகன் ஓடிவந்து கூடப் பிடித்தான். “ வாப்பா...” அறிவழகனைக் கூப்பிட்டபடி அசலாம்பு போய் கதவைத் திறந்து பாய் தலையணை களை எடுத்துவந்து நடையில் போட்டாள். மெல்ல கொண்டுபோய் நடையில் படுக்க வைத்தார்கள்.

“ ஏம்ப்பா ரொம்ப முடியலியா...” கீழே குனிந்து அறிவழகன் கேட்டான்.

பேசுவதற்கு சிரமமாக இருந்தது. வாயில் கையைக்காட்டி முடியவில்லை என நடுங்கும் கைகளால் சைகை காட்டினார். லேசாக மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. அறிவழகன் சிகாமணி பக்கம் திரும்பினான். “ ராமச்சந்திரன் டாக்டரு நெல்லா பாத்துதான் சொன்னாரு. கொம்பு குத்தனதுல ஈரக்கொலைய ஒண்ணும் பாதிக்கில. லேசா வீங்கன மாதிரிதான் இருக்கு. மாத்தர மருந்துல சரியாப் பூடும்னுதான் சொன்னாரு. கடைசியில இம்மாஞ் சிக்கல்ல கொண்டாந்து வுட்டுட்டுது.” வருத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

சிகாமணி வெளியே கட்டிலைத் தூக்கி வந்து போட்டான். குந்தினார்கள். “ அதுலாம் ஒண்ணுமில்லப்பா. இவன் ஒடம்புக்கு இவனேதாம்பா எமன். தே இப்பிடிக் கெடக்கறான்னு பாக்கிறியா. ரவ நடக்கறமாதிரி தெம்பு இருந்தாப் போதும், எங்கியாவுது போயி ஊத்திக்கிட்டு வந்துடுவான்.” அப்பாவை அவன் இவன் என அறிவழகன் முன்னால் அம்மா பேசுவது என்னவோ போல் இருந்தது. பட்டென்று அசலாம்புவின் பேச்சு வேறுபக்கம் திரும்பியது. “ எனுமோ ஏங் குடும்பத்துக்கு தீம்பா இருந்துட்டானுவோ அவனும் அவம் புள்ளிவுளும். நெல்லபடியா இருக்குட்டும் போ” செங்கல்

ராவைப் பற்றி பஞ்சாயத்தம் வைக்கிற மாதிரி தொடங்கி கடைசியில், கொம்பு குத்த காரணமாக இருந்த ராசோக்கியத்தை, சதாசிவத்தை வாசாங்கு விட்டாள்.

“ முந்தா நாளு நெல்லா இருந்த ஆளுக்கு திடீர்னு மூச்சி வுடமுடியாம சேப்பங்கட்டி இழுக்குது. முழி பிதுங்குது. சரி ஆஸ் பத்திரிக்காவது போவலாம்னு போயி தூக்கப்போனா குப்புன்னு ஒரே சாராய நாத்தம். புல் போத. வூட்ட வுட்டு எட்டப் போவுல. எப்பிடி போதைன்னு ஆராய்ஞ்சி பாத்தா, முத்துக்கண்ணு ஆயிதான் சொல்லுது. நம்ப கணேசன் பாக்க வந்துருப்பாரு போல்ருக்கு. அவுரு ஏற்பாட்லதான் சரக்கு. அவுரப் புடிச்சிக் கேட்டா, ஈரலு வேல முடிஞ்சி போச்சி, இனிமே நா பொழைக்க மாட்டன், எனக்கு ஒரு பாட்லு வாங்கியாந்து குடுத்தே ஆவணும்னு சொல்லி அழுதிருக்காரு. இம்மாம் பெரிய ஆத்துமான் செத்துப்பூடுவன்னு சொல்றப்ப மனசு கேக்குல, அதான் வாங்கியாந்து குடுத்தங்கறாரு. அதோட இட்டுக்கிட்டு ராமச்சந்திரங்கிட்ட ஓடனா, போதையில எந்த ஊசி போட்டாலும் கேக்காதுன்னு அவுரு மூஞ்ச காட்றாரு. அப்பறம் கெஞ்சிக் கூத்தாடி வைத்தியம் பாக்கச் சொல்லி மூணு நாளா கொசுக்கடியில கெடந்துட்டு இப்பதான் இட்டுக்கிட்டு வர்றம்.” சிகாமணிக்குக் குரல் ரொம்பவும் இறங்கித் துயரம் பாய்ந்திருந்தது.

“ ஏண்டா இம்மான்லாம் நடந்துருக்கு. ஏங்கிட்ட ஒரு வார்த்த கூட சொல்லுல. நானும் இந்த புரோக்கர் செட்டுக்கு போனப்பறம் எட்ட வரமுடியில.” அறிவழகன் மெய்யாலுமே வருத்தப்பட்டான்.

“ நீங்களும் என்னமாதிரிதான் லோலுபட்டுக்கிட்டு கெடக்குறீங்க. எதுக்குன்னுதான் சொல்லுல.” சிகாமணி சொன் னாலும் உண்மையில் ரங்கநாதுதான் ஏற்கெனவே சொன்ன தில்லாமல் திரும்பவும் இவனிடம் சொல்லியிருந்தார். ‘ தம்பி கிட்ட சும்மா சும்மா வேலையில சிக்கலு அது இதுன்னு பேசிக்கிட்டு அதுக்கு ஞாபகப்படுத்திகிட்டு நிக்காத.’ அதற்குப் பிறகு அறிவழகனை வெறுமனே பார்ப்பதைக் கூடத் தவிர்த்து விட்டதினால் இதுமாதிரி அவசரச் சேதிகளைக் கூடப் பேசிக்கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

அசலாம்பு பாலைக் கொண்டுவந்து வைத்து விட்டு குடிப்பதற்கு செங்கல்ராவை லேசாக தாங்கிப் பிடித்து சுவரில் சாய்த்துக் குந்த வைத்தாள். அறிவழகன் திடுமென ஞாபகம் வந்தது போல் கேட்டான் “ ஏண்டா நானும் கேக்கலாம்னு நெனைச்சன். இந்த வேல விஷயமா கையெழுத்து வாங்கறதுக்கு ஒங்க அத்தைவுள போயிப் பாத்தியா?”

அறிவழகன் கேட்ட அடுத்த கணமே சிகாமணிக்கு அப்படியே முகம் பொசுக்கென சொடுங்கிப் போய்விட்டது. “ அத ஏங் கேக்குறிங்க அண்ண. எனக்கு எனுமோ வேலைக்கான பொசுப்பு இல்லன்னு தாண்ண தோணுது.”

“ என்னாடா சொல்ற...” அறிவழகன் அதிர்ச்சியோடு கேட்டான்.

அசலாம்புவும் வருத்தமாகச் சொன்னாள் “ நானும் அதாம்பா சொல்றன். போயிக் கேட்டாத்தான எந்த புத்துல எந்தப் பாம்பு இருக்குன்னு தெரியும். அது அதுக்குத் தகுந்த மாதிரி மேங்கொண்டு என்னா பண்ணலாம்னு பாக்கலாம். அத வுட்டுட்டு அதுலாம் சரியா வராது சரியா வராதுன்னு வூட்ல குந்தியிருந்தா என்னாப்பா அர்த்தம். நெய்வேலிக்காரன் குடுத்த காச அப்பிடியே மூட்டை யாவா வைச்சிருக்கறம், எதாவது பொழப்பப் பாத்துக்கலாம்னு இருக்க. அந்த சின்னத் தேவுடியாளுக்கு ஒன்னே கால் ரூவா குடுத்துது, அப்பறம் இந்த மவராசனுக்கு வாணம் வுட்டது, வுட்டுக்கிட்டு இருக்கறதுன்னு கடைசியில தலமேலதான் துணியப் போட்டுக் கிட்டுத்தான் போவலாம் போல்ருக்கு...”

“ ஏண்டா இப்படி இருக்க. வேலைங்கறது வாழுங் காலத்துக்கும் வவுத்து சோறுடா. ஏங் கதங்கறது வேற. ஒன்னிது கொஞ்சம் எறங்கிப் போயிப் பேசனா முடிஞ்சிடும்டா...” அறிவழகன் சத்தம் போட்டான்.

“ இல்ல அண்ண. உள்ளூர்ல இருக்கற அத்த நெல்லா வரப் போவ இருந்ததுதான். சரி அம்மாவ வுட்டு கேக்கச் சொன்னா, எதாவது கடும்புடியா கேட்டுடும்னு நானேதாம் பாத்து கேக்கறன். இந்த மாரி அந்த சின்னது நோட்டிசு குடுத்தது சிக்கல கொண்டாந்து வுட்டுட்டுது. அதனால எல்லாரும் சேந்து கையெழுத்துப் போட்டுக் குடுத்தாதான் வேல தரமுடியும்னு சீட்டு குடுத்துருக்கான்னு சொன்னது தான். ஊங்கொட்டி கேட்டுட்டுப் போனதுதான். ஆச்சி... ஒரு வாரத்துக்கு மேல ஆவப்போவுது. குறுக்கநெடுக்க ஒடம்பு சரி யில்லாத ஆளப் பாக்கறதுக்குக் கூட இந்தப் பக்கம் வல்ல. இதுக்கு மேல போயிக் கேட்டு மட்டும் என்னா சொல்லிடப் போறாங்க அண்ண...” விசனமாக சொல்லிக் கொண்டு போனான்.

*

64

குத்தகை ரசீது

நி கழும் துந்துபி வருடம் பங்குனி மாதம் 15 ஆம் தேதி (29.3.1989) தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் முதனை கிராமம் கைக்கோளர் வீதியைச் சேர்ந்த விநாயக முதலியார் பயிர் ஆறுமுக முதலியர் 1 வது நபர். மேற்படி மாவட்டம், வட்டம், புதுவேப்பங்குறிச்சி (என்எல்சி மாற்றுக்குடியிருப்பு) கிராமத்தைச் சேர்ந்த ராசவன்னிய படையாட்சி பயிர் ராசோக்கிய படையாட்சி 2வது நபர். இ தில் 1 வது நபருக்கு சொந்தமான அ. பு.சர்வே எண் 213/4 கி, 214/4 ஙி, 215/1 சி- நான்கு ஏக்கர், சித்திரை ஏரிக்குத் தெற்கு, பச்சமுத்து படையாட்சி நிலத்துக்கும் மேற்கு, கருணாகர முதலியார் நிலத்திற்கும் வடக்கு, தங்கராசு செட்டியார் நிலத்திற்குக் கிழக்கு. மேற்படி நிலத்தில் உள்ள முந்திரி மரங்களின் மகசூலை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20000/- (இருபதினாயிரம்) க்கு குத்தகை அடிப்படை யில் அனுபோகம் செய்துகொள்ள 2 வது நபர் சம்மதம் தெரிவித்து முதலாம் ஆண்டிற்கான தொகையையும் செலுத்தி உள்ளார். இதுபோன்றே ஒவ்வொரு ஆண்டின் மகசூல் பருவத் தொடக்கத்தி லேயே 1 வது நபர் பணத்தை முழுவதும் செலுத்திவிட வேண்டும். இந்தக் குத்தகை ஒப்பந்த காலத்திலோ அல்லது ஒப்பந்தம் முடிவுறும் காலத்திலோ, மேற்படி மரங்களின் மகசூலை மட்டுமே அறுவடை செய்துகொள்ள வேண்டுமேயன்றி, மரம் விறகு போன்ற எந்தவொன்றின் மீதும் உரிமை கொள்ளக்கூடாது. மேலும் இந்த சக்குபந்தியில் உள்ள முந்திரி மரங்களைத் தவிர்த்து மீதமுள்ள பலா, மா, கொய்யா மரங்களின் அனுபோகத்தை இது கட்டுப்படுத் தாது எனவும் அவை 1வது நபர் இடம்தான் தொடர்ந்து பராமரிப்பு மற்றும் அனுபோகத்தில் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளப் படுகிறது. இந்த குத்தகை ரசீதானது நாளது தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு செல்லுபடியாகத் தக்கதாகும். மூன்றாண்டு முடிந்து 1 வது மற்றும் 2 வது நபர்களிடையே மறு ஒப்பந்தம் செய்தாலன்றி, மூன்றாம் வருசம் சித்திரை காலாவதியை ஒட்டிய முந்திரி அறுவடை முடிவுறும் காலத்தில் மழை, வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களா லன்றி உள்ளது

உள்ளவாறு 2வது நபர் 1வது நபரிடம் நிலத்தை ஒப்படைத்து விடவேண்டும் என இதுபடிக்கு செய்துகொண்ட குத்தகை ஒப்பந்த உடன்படிக்கையாகும்.

1 வது நபர் (ஒப்பம்) ஆறுமுக முதலியார்

2 வது நபர் (ஒப்பம்) ராசோக்கிய படையாட்சி

சாட்சிகள்

1 . S .சின்னத்தம்பி படையாட்சி **S/O** செம்புலிங்கம், முதனை.

2 . T .சிவப்பிரகாச படையாட்சி **S/O** தங்கவேல், முதனை.

முந்திரி மரங்கள் இருபுறமும் பூத்து நிற்கிற, செம்பையய்யனார் கோயில் போகிற பாதை. வண்டி புழுதிபறக்கப் போய்க்கொண்டிருக் கிறது. வண்டிக்குள் கலப்பை, சங்கிலி, நுகத்தடி எனத் தூக்கிப் போட்டுக்கொண்டு பொன்னேர் கட்டப்போகிற பூரிப்பில் ராசோக்கியம். இங்கு முதனை வந்து, மொத்தப் பணத்தையும் கொடுத்து குத்தகை ரசீது எழுதிய பிறகு, முந்திரி வேலை முதன்முதலில் இப்படி ஏரைப் பூட்டி ஓட்டுகிற மாதிரி அமையும் என்று அவர் நினைத்துப் பார்க்கவில்லை.

காலையில் வேப்பங்குறிச்சியிலிருந்து கொண்டுவந்து சுவரில் சாய்த்து வைத்திருந்த கலப்பை நுகத்தடியை எடுத்து வைத்ததுமே பாஞ்சாலை ஆச்சரியமாய்க் கேட்டாள் " என்னாடி... ஒப்பனுக்கு இன்னும் வேப்பங்குறிச்சியில இருக்கிற ஞாபகமா. எறப்பம் பட்டறையில ஓட்டப் போறமாதிரி வண்டியில கலப்பையைத் தூக்கி வைச்சிக்கிட்டு நிக்கிறாரு."

வேப்பங்குறிச்சியில் மழையைப் பெரும்பாலும் எதிர்பார்க்க மாட்டார். எள்ளோ மள்ளாட்டையோ நெல்லோ எது அறுவடை முடிந்தாலும் உடன் நித்தம் கால்காணிக்கு தண்ணீர் பாய்ச்சி விடுவார், கடை ஈரம் பார்த்து கையோட கையாக ஓட்டியும் விடுவார். இங்கு மழைநாளாக இருந்தால் சரி. ஆனால் குருவி குடிக்கக் கூட தண்ணீருக்கு சித்திரை ஏரியை நோக்கி வந்தால்தான் விதி என்றிருக்கிற மானம் பார்த்த வெளியில் வேச நாளில், இப்படி நடுநஞ்சையில் சேடை ஓட்டப் போகிறமாதிரி கலப்பையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினால் யார்தான் கேட்கமாட்டார்கள்.

தெருவெல்லாம் அதிசயமாய்த் திரும்பிப் பார்க்கிறார்கள்.

செம்பையய்யனார் கோயிலுக்குத் திரும்புகிற தருணத்தில் சிவப்பிரகாசம் மேற்கே கோட்டேரிப் பக்கம் போய் வந்திருப்பார் போலும், பார்த்துவிட்டு நிறுத்தினார். அவருக்குள்ளும் ஆச்சரிய மான ஆச்சரியம். " என்னா வேப்பங்குறிச்சார, மோளத்த காய்ச்சற மாதிரி காலை வெயிலு போட்டு இப்பிடிக் கொளுத்துது, இந்த கோடையில ஏரு மாடுன்னு கெளம்பிட்ட..."

நேற்று குத்தகைச் சீட்டு எழுதி முடித்த கையோடு செம்பையய் யனாரையும் கும்பிட்டுவிட்டு முந்திரியையும் பார்த்துவிட்டு வரலாம் என்று சாயந்திரமாய் கிளம்பிவிட்டார். தடித்த வடக்கயிறுகள் போன்று வண்ணான் கொடிகள் படர்ந்து, அடர்ந்த பெருமரங்கள் சூழ்ந்த தோப்பு, செம்பையய்யனார் கோயில். அந்தி என்பதால், ஒன்றிரண்டு பேர் மட்டும் தென்பட்டனர். கோயிலுக்கும் தெற்கில் நாலாபுறமும் மரங்கள் சூழ்ந்து எந்தக் காலத்திலும் தண்ணீர் வற்றாத சித்திரை ஏரி. நீர் கொள்ளாது பூத்து வதங்கியிருந்த செந்தாமரைகளின் மேல், மேற்கால இருக்கிற செம்பையய்யனாரின் தோழி செல்லியம்மன் கோயிலின் நிழல் விழுந்து கிடந்தது.

போட்டிருந்த அண்டராயரோடு தண்ணீரில் இறங்கி மூழ்கினார். தோள் துண்டைக் கசக்கிப் பிழிந்து துவட்டியவாறு நேரே செம்பையய்ய னாரிடம் போனார். அடர்ந்த தோப்பில் மையமாய் கோபுர இடுக்குகளில் செடிகள் முளைத்தப் பழமை படர்ந்த சிறிய கோயில், மண்டபம். உள்ளே கற்சிலையில் செம்பையய்யனார். " எப்பா சாமீ... ஒன்ன நம்பித்தான், ஊரு வுட்டு ஊரு வந்து இருபதினாயிரம் பணத்த எண்ணிக் குடுத்துட்டு, முந்திரியக்கூட போய்ப் பாக்குல, நேரா ஒங்கிட்டத்தான் வந்துருக்கன். கைய வுட்டுடாத, காபந்து பண்ணு." ஈர உடம்போடு விழுந்து கும்பிட்டார்.

ஏரியை அடுத்து தென்னண்டப் பக்கம்தான் குத்தகை எடுத்திருக் கிற ஆறுமுக முதலியார் முந்திரி. பொறிச்சி, நுணா, நாணா, இண்டு என மரங்களும் செடிகளும் நிறைந்து அடர்ந்த வேலியாய் மறிச்சி. நடுவில் போன வழியால் நுழைந்து தோப்பிற்குள் போனார். தோப்பை இரண்டாகப் பிளந்தமாதிரி சிதம்பரத்து மூலை குடுத்து கொடிபாதை ஓடியிருந்தது.

எல்லாமும் கன்று முந்திரிகள். வைத்து, அஞ்சாறு வருடங் களுக்குள் தான் இருக்கும். பூக்களும் பசுமையான தழைகளும் சிவந்த கொழுந்துகளுமாக முந்திரிகள் நல்ல சுணையாக இருந்தன. கிட்ட நெருங்கிப் பார்த்தார். பெரும்பாலான பூக்களில் மூக்குத்தி மூக்குத்தியாய் சன்னமாய்ப் பிஞ்சுகள் தெரிந்ததும், ராசோக்கியத்தின் மனசுக்குள் பெருத்த சந்தோஷம். ' இப்ப இருக்கற பூவுக்கும் பிஞ்சிக்குமே ஒண்ணு ஒண்ணா முந்திரிக் கொட்ட வுழுந்தாலும் அசல வுட்டுக் குடுக்காது.'

ஒன்றைப் பார்த்த மாதிரி எல்லா முந்திரிகளிலுமே பூக்கள் தெரிய, நிறைந்த மனத்தோடு நாலாபுறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். முந்திரிகளைப் போலவே ஓரம்பாரங்களிலிருந்த மா பலாவிலும் நல்ல காய்ப்பு. ஆனாலும் மா பலாவோ முதலியார் பார்த்துக் கொடுத்தால்தான் உண்டு.

திடீரென்று மூக்கரக்காற்று சருகுகளோடு புழுதியை வாரி யிறைத்தபடி சுழன்றுகொண்டே ஏரிப்பக்கம் ஓடி, தாமரை இலைகளையெல்லாம் படபடவென அடித்துக் கிழித்துக்கொண்டே கோயிலின் மர அடம்புகளை நோக்கியது. ராசோக்கியம் இறுக்க மூடி கண்களைத் திறந்தார். குளித்த உடம்பெங்கும் ஒரே புழுதி. முந்திரி மரங்களின் காலடியில் கிடந்த சருகுகளையெல்லாம் அள்ளி வெளியே வீசி எங்கும் நிறைந்து கிடந்தன.

தெற்கில் சருகுச் சத்தம் கேட்டது. திரும்பினார். வண்டி மாடுகளைப் பிடித்தபடி ஒரு ஆள் வந்து கொண்டிருந்தான். கனத்த மாடுகள் இரண்டும் பாதையில் வராமல், முந்திரித் தொங்கலில் தினவுக்கு உராய்ந்து உராய்ந்தபடி வந்துகொண்டிருந்தது கண்டதும் இவருக்குப் பதறிவிட்டது. உரசியபடி வந்த ஒவ்வொரு தொங்கலுக்கும் கீழே அரும்பத்தொடங்கிய பிஞ்சுகளோடு கூடிய பூக்கள், கொழுந்துகள், தழைகள் யாவும் பாய் படுக்கையாய் உதிர்ந்து கிடந்தன.

“ ஏம்ப்பா... பூத்துருக்கற முந்திரிய ஒட்டி இப்பிடி ஓட்டியாறிய. மாடு ஒராஞ்சி எம்மாம் பூவும்பிஞ்சும் கொட்டுது பாரு...” புது இடம், புதுச் சூழல் என்பதால் வேகத்தை குறைத்துக்கொண்டு கொஞ்சம் அடக்கமாகத்தான் கேட்டார்.

அவனுக்கு திக்கென்று போய்விட்டது. நல்ல உயரமான வலுத்த ஆள். தமுக்குவீரனுக்கு கட்டப்பட்டிருந்தது போல், தலையில் கனத்த தலைப்பாக்கட்டு. இதுகாறும் எவரும் எதிர்த்தோ ஆலோசனையோ சொன்னதேயில்லாத நிலையில், யார் எவர் எனப் புரியாமல் தன்னிடம் அவசரப்பட்டுக் கேட்டுவிட்ட மாதிரி அவனுக்குள் திடுக்கிடல். லேசாய் மாட்டை இழுத்துத் தேக்கியபடி கட்டை பாய்ந்த குரலில் கேட்டான். “ என்னா ஊரு நீங்க?” யாருடா நீ, எங்கே வந்து யாரை என்ன கேட்கிறாய் என்கிற மாதிரி அலட்சியமாய் இருந்தது, அவன் பேச்சு.

‘ மாடு பூவும் பிஞ்சுமா அடிச்சிக் கொட்டுதுன்னு கேட்டா, என்னா ஊருன்னு கேக்கற. என்னா ஊரா இருந்தா என்ன பண்ணுவ?’ கேட்கலாம் என்றுதான் நினைத்தார். ஆனால் வந்தாரங்குடியாய் வந்திருக்கிற ஊரில் வந்த அன்றே எதற்கு வம்பு என்கிறமாதிரி அடக்கிக்கொண்டு சொன்னார். “

வேப்பங்குறிச்சி. இங்க நடுவீதியில சின்னத்தம்பி இருக்காற அவுரு மச்சான். இந்த முந்திரிய குத்து வைக்கி எடுத்துருக்கன். இல்லன்னா நா எதுக்கு கேக்கப் போறன். பாரு குலுங்கக் குலுங்கப் பூத்துருந்துது எல்லாத்தையும் எனுமா ஒராசி நொறுக்கிப் போட்டு வைச்சிருக்கு." புழுதியில் கிடக்கிற பூக்களைத் தழைகளோடு அள்ளிக் காட்டினார்.

சின்த்தம்பி பெயரெல்லாம் அவனிடம் எடுபடவில்லை " முந்திரி குலுங்கக் குலுங்கப் பூத்துருக்குதுன்னு மாட்டுக்கு தெரியாது அதான்..." என்று தெனாவட்டாய் சொல்லியபடி மாடுகளை ஓட்டிக்கொண்டு மறிச்சியால் நுழைந்து ஏரிக்குள் இறங்கினான்.

ராசோக்கியத்துக்கு துடித்தது ' மாட்டுக்கு இருக்குட்டும்டா. ஒனக்கு முந்திரி பூத்துருக்குன்னு தெரியுதுல்ல.' கேட்கப் பதைத்தது. ஆனால் அந்நேரத்தில் அடங்கிப்போவது தவிர வேறெதுவும் அவருக்கு உசிதமாகத் தெரியவில்லை. வேப்பங்குறிச்சியில் ' என்னா மூத்தவர' என்கிற சொல்லுக்கு இறங்கி எவரும் பேசி அறியாதவர். துண்டிரிக்கமான அவன் பேச்சில், முதன்முறையாக உள்ளுக்குள் ஒரு அவலம் வந்து கவ்வியது.

பிறகுதான் யோசித்தார். முதலில் குறுக்கால் போகும் வழியை நிறுத்த வேண்டும். வழியே எங்கும் இல்லையென்கிற மாதிரியான நிலைமையும் இல்லை. கிழக்கால நல்ல அகலமான நடைவரப்பு தான். கொஞ்சம் சுற்றி வரவேண்டும், அவ்வளவுதான். வெறுமனே வழியில் முள்ளைப் போட்டு அடைக்க விருப்பமில்லை. மீறிப் போட்டாலும் ' முள்ளு போட்டா மூணு வழி' என்கிற மாதிரி இருபுறமும் புதுவழிகள் முளைத்துவிடும்.

முதலில் நாலு பக்கமும் அடி செதுக்கிப் புழுதி உண்டாக்கி, படல் இழுத்துவிட்டால் குறுக்கே போக கொஞ்சம் யோசிப்பார்கள். பிறகு காய்ப்புக்கு ஆரம்பித்துவிட்டால் கிட்டக்க வந்து குந்திக்கொண்டு கையைக் காட்டிவிடலாம் ' செத்த அப்பிடியே வரப்பால போங்க...'

வரப்பு ஓரமாக அடி செதுக்கும் இடங்களைப் பார்த்தார். அடி செதுக்க எளிதான பொதபொதவென்று நல்ல மணல் வெளிதான். ஆனால் நிறைய தாராக் கட்டைகளும், புல்பூண்டுகளும் காய்ந்தும் கண்ணில் உயிரை வைத்தமாதிரியான லேசான பச்சையிலும் தெரிந்தன. பில்லுசெத்தி கொண்டு செதுக்கினால் இந்தப் புல்பூண்டுகளில் மக்குமக்கென்று சிக்கிக்கொண்டு பெரிய பாடுதான். எப்படிக் கெட்டாலும் நாலு ஏக்கரும் சுற்றி அடி செதுக்கி மறைக்க குறைந்த பட்சம் ஒரு வாரமாவது ஆகும். நல்ல வெயிலுக்கு. கடும்புடியான வேலையாகத்தான் இருக்கும். வேறுவழியில்லை. அடி

செதுக்கி, படல் இழுத்துதான் ஆக வேண்டும்.

திடுமென அவருக்கு ஒரு யோசனை. நல்ல மணலாக இருக்கும் போது எதற்கு பில்லுசெத்தியைக் கொண்டு செதுக்கி மாய்ந்து கொண்டிருக்க வேண்டும். கலப்பையைக் கொண்டு, மேலாக மாட்டைக் கட்டி ஏரால் ஓட்டிவிட்டால்... வேலையும் எளிதாக முடிந்துவிடும். புழுதியும் பில்லுசெத்தி கொண்டு செதுக்குவதை விட நன்றாகவும் ஆழமாகவும் இருக்கும். சும்மா மேலே மிதக்கும் புல்பூண்டு செத்தைகளை அரித்துவிட்டு, படலைக் கட்டி இழுத்து விட்டால், மாவைக் கொட்டிக் கிண்டியது மாதிரி பளிச்சென்று புழுதி தயாராகிவிடும். நல்ல யோசனை, சரியான நேரத்தில் தோன்றியது கண்டு, ராசோக்கியத்திற்கு மெய்யாலுமே பெருமை யாக இருந்தது.

*

65

“ தமிழ்நாடு ஒரு கோடி ரூபாய். விழுந்தால் வீட்டுக்கு. விழா விட்டால் நாட்டுக்கு.”

செவுளில் அறைகிறமாதிரி சத்தம். தனபால் கட்டிடத்தின் சலூன் கடை நாற்காலியில் குந்தியிருந்த சதாசிவம், முகம் பூராவும் பூசியிருந்த நுரையோடு, கண்ணாடியைப் பார்த்துச் சொல்லிக் கொண்டான். “ மின்னலாம் மந்தாரக்குப்பம் டவுண்லதான் இந்த லாட்ரி சீட்டுக்காரனுவோ ஏலம் போட்டுக்கிட்டுக் கெடப் பானுவோ... இப்பல்லாம் இங்கியே வந்துட்டானுவோ போல்ருக்கு...”

உடைத்த பிளேடை சவரக்கத்தியில் செருகிக்கொண்டே பார்வதிபுரத்தான் சொன்னான் “ நம்ப ஊரும் பழைய வேப்பங் குறிச்சி மாதிரி கிராமமாவா இருக்கு. முக்கா டவுணா ஆயிப்போச்சி, அதான் இங்கியும் வந்து துருத்திய வைச்சி ஊதறான்.”

“ நீ எப்ப மாத்துக்குடியிருப்புல வந்து இந்த தனபால் கட்டடத்துல சலூன் வைச்சியோ அப்பியே டவுணா ஆயிடுச்சி.” சிரித்துக் கொண்டே சதாசிவம் சொன்னான். சிரிப்பதற்கு இடைவெளி கொடுத்து, மழிப்பை நிறுத்தியிருந்தான் பார்வதிபுரத்தான்.

கடைவாசலில் மிகவும் சோர்வாக ரத்னவேல் நிற்பது, கண்ணாடியில் தெரிந்தது. மடக்கிக்கட்டிய சுருங்கிய வேட்டிக்கும் கீழே கால்சட்டை தெரிந்தது. போட்டிருந்த துண்டும் சட்டையும் வெளுப்பு நிறம் மங்கி நீர்க்காவி ஏறியிருந்தது. ஆனாலும் பழைய வேப்பங்குறிச்சியில் நிக்கிற கோவணத்தின் மேல் வேட்டிச் சுற்றுக்கு, இது ரொம்பவும் மேலாகத் தெரிந்தது.

பார்வதிபுரத்தானும் கண்ணாடியைப் பார்த்தபடி சிரித்துக்கொண்டே கேட்டான் “ என்னா சித்தப்பா, மொத மொத வேலைக்கி வர்றகுள்ளியே இம்மாம் லேட்டா வர்ற...”

“ ஒஞ் சின்னம்மாள போயி கேளன். இந்த நேரத்துக்கு கடையில போயி அரிசி வாங்கியாங்கறா. பக்கத்துல செட்டி கடை யில வாங்கிக் கொண்டுபோயி குடுத்துட்டு ஓட்டோட்டமா ஓடியாறன்...”

சொல்லிக்கொண்டே சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு, விளக்கமாற்றை எடுத்து சிதறிக்கிடந்த முடிகளைத் தள்ளி மூலையில் ஒதுக்கினார்.

“ சின்னாம்மா சொல்லுது பெரியாம்மா சொல்லுதுன்னு ஏங்கிட்ட கத சொல்லிக்கிட்டு இருக்கக்கூடாது. டாண்ணு எட்டு மணிக்கு, நா வர்றதுக்கு மின்ன வந்து கடையத் தொறக்கணும். கூட்ணும், தண்ணி மொண்டாந்து வைக்கிணும்” சிரிப்பை அடக்கிக்கொண்டு இயல்பாகச் சொல்வதுபோல் சொல்லிக்கொண்டிருந்தான் பார்வதி புரந்தான்.

“ என்னாப்பா ரத்னவேல இந்த மெரட்டு மெரட்ற..” நுரைகளை வழித்துத் துடைத்துக்கொண்டிருந்த இடைவெளியில் சதாசிவம் கேட்டான்.

“ யாரு பெரிய தம்பியா.... நா வேற கவுனிக்காம குந்தியிருக் கறன. நம்ப பார்வதிபுரத்து தம்பி ரொம்பதான் மெரட்டுது. மறுபடி என்னா பண்றது. பழைய ஊரு மாதிரி இங்க, யாரும் ஏங்கிட்ட வேலயும் செஞ்சிக்கறது இல்ல. நேரா இங்க வந்து ஒங்களமாதிரி சேர்ல ஒக்காந்துக்கிறாங்க. அத வுட்டா மந்தாரக்குப்பம் போயிடறாங்க. ஒப்பாரு மாதிரி இருக்கறவங்க செஞ்சிட்டாதான். அவுருந்தான் ஊருக்குப் பூட்டாரு. அப்பறம் நம்ப அறிவு தம்பி அப்பா, கரி படாச்சின்னு தாண்டன வயிசிக்காரங்க தான். அது வுளும் நாலுல மூணுலயா செஞ்சிக்குதுவோ. ஒண்ணும் பொழப்பு ஓடுல.” விசனமாகச் சொல்லிக்கொண்டு இருந்தார்.

இடையில் நிறுத்தி சற்று இடைவெளி கொடுத்து அவரே பேசினார். “ சரி வூட்ல ஒக்காந்துருந்து என்னா பண்றதுன்னு இப்பிடி வேலைக்கி வந்தா... தம்பி எங்க முத்தாளுக்கு தங்கச்சி மொவனாதான் வேணும், சொந்தக்கோழிதான் தோலுமுட்ட இடுதுங்கறமாதிரி சூத்துல மெளாரக் கட்டி அடிக்கிறமாதிரி ரொம்ப மெரட்டுது...” சற்றுமுன் இருந்த விசனம் மறைந்து லேசான புன்னகையுடன் சொன்னார்.

பார்வதிபுரத்தான், திரும்பவும் ரத்னவேலிடம் சிரிப்பாகவே சொல்லிக் கொண்டிருந்தான். “ அப்பறம் சித்தப்பா, இங்க வர்றவங்க எல்லாம் முடிவெட்றதுக்கு வந்துருக்காங்களா இல்ல, பேப்பர் பாக்க வந்துருக்காங்களான்னே தெரியாது. சமயத்துல எல்லாரும் குந்தி, ரொம்ப அரிபுரியா கத வடிச்சிகிட்டு இருப்பாங்க. வர்ற ஆளுவோ மெய்யாலுமே முடிவெட்ட வர்றவங்க கும்ப இருக்குது போல்ருக்குன்னு நெனைச்சிக்கிட்டு மந்தாரக்குப்பம் பக்கம் பூடுவாங்க. தொழிலுக்குச் சிக்கலாப் பூடும். அதே மாதிரி நம்ப தொழில்ல ஒரு வார்த்தய அடிக்கடி சொல்லிக்கிட்டே

இருக்குணும். தேதி காலமா இருந்தா, நா வேற கல்யாணத்துக்கு மோளம் அடிக்கப் போவணும், தவுல்காரன இட்டாரணும். நாதஸ்வரத்துக்கு சேதி குடுக்குணும்ங்குணும். தேதி இல்லாத காலமா இருந்தா, கோயில் மோளத்துக்கு பாக்கு வைக்கப் போவுணும். காது குத்துக்கு வேற ரெண்டு செட்டா சொல்லியாவுணும்னு நாம அரிபிரியா இருக்கறமாதிரியே காட்டிக்கிட்டு இருந்தா பேப்பர முழுசா படிக்கிணும்னு நெனைக்கறவங்க கூட கடைய மூடப்போறானோ எனுமோன்னு தலப்ப மட்டும் பாத்துட்டு போய்கிட்டு இருந்துடுவாங்க...”

“ நெல்ல நெல்ல யோசனையாதான் ரத்னவேலுக்கு சொல்லிக் குடுக்கற போல்ருக்கு. நானே பேப்பர பாக்கலாம்னு நெனைச்சன். வாணாம்பா...” பணத்தை கொடுத்துவிட்டு சதாசிவம் கிளம்பினான்.

“ நீ வேற ஏந் தம்பி. அது சும்மா தமாசுக்கு சொல்லுது...” ரத்னவேல் காலண்டர் தாளைக் கிழித்தபடி சதாசிவத்திடம் கேட்டார் “ ஏந் தம்பி... ஊருக்கு கீருக்கு போனியா. அப்பா அம்மால்லாம் எனுமா இருக்காங்க?”

“ இன்னைக்கி என்னா தேதி முப்பதா...” **30.9.89** தேதியிட்ட காலண்டர் தாளை பார்த்துக்கொண்டே சொன்னான். “ இருபத்தி அஞ்சாந்தேதின்னு தான் நெனைக்கிறன். போயி நாலைஞ்சி நாளுதான ஆவுது. இன்னைக்கித்தாம் போவலாம்னு இருக்கறன்...” சொல்லியபடி படிகளில் இறங்கினான்.

ஆர்வமாய் பால்ராசு வந்து படிகளில் ஏறியபடி சதாசிவத் திடம் கேட்டான் “ பேப்பர்ல முக்கியமான சேதி வந்துருக்கு பாத்தியா.”

“ இல்லடா..” அவன் தலையாட்டியதைக் கூடப் பொருட் படுத்தாது நுழைந்த வேகத்தில் பெஞ்சில் குந்தி பேப்பரை எடுத்தவன், தலைப்புச் செய்தியிலேயே போட்டிருந்ததைப் படித்தும் காட்டினான். “**20** சதவீத இட ஒதுக்கீடு. வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு...”

சித்திரை ஏரியின் இறக்கத்தில் சைக்கிள் மிதிக்காமலேயே வேகமாய் உருண்டோடியது. கரையை ஒட்டிய வண்டிப்பாதையில் தெற்கே போய்க்கொண்டு இருக்கும்போதே, பூமாவின் குரல் கேட்டது. குறியாய் மறிச்சியின் சந்தால் போய் மாமரத்து அடியில் சைக்கிளை நிறுத்தினான் சதாசிவம்.

மேலுகாலு எல்லாம் ஒரே புழுதி மயம். பூமா தலையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்துக்கொண்டிருந்தவள், சரக்கென்று வந்து நின்ற

சைக்கிளை முதலில் பார்த்தாள். “ அய்... அண்ணன்...” சொன்னதோடு நில்லாமல் கிட்ட ஓடிவந்தாள். மலர் அதற்குமேல் புழுதியோடு பறந்து வந்து நின்றாள். “ வா மாமா...” சொன்னதோடு அல்லாமல், வண்டிமேல் கிடந்த துண்டை எடுத்துக் கொடுத்தாள். “ வேர்த்து வடியுது. தொடைச்சிக்க மாமா...”

“ அத்த மொவள பாத்ததுந்தான், ரொம்ப வழியறாரு. தொடைச்சிக்குட்டும்” சிரித்துக்கொண்டே பூமா சொல்லவும், சதாசிவத்திற்கு ஒரு தேக்கு தேக்கியது. துண்டை வாங்கினானே ஒழிய துடைத்துக் கொள்ளவில்லை.

பாஞ்சாலைதான் வந்து தண்ணீர் மொண்டு கொடுத்துக் கொண்டே சத்தம் போட்டாள் “ கிண்டல் கீநூட்டு இருக்குட்டும். மொதல்ல, வெயில்ல வந்தவங்கிட்ட ஒரு சொம்பு தண்ணி மொண்டு குடுக்கறதுக்கு எவளுக்கும் யோசன இல்ல.”

வாங்கிக் குடித்துக்கொண்டே, அம்மாவைப் பார்த்தான். ஊரை விட்டு வந்த நாலைந்து நாட்களுக்குள் ரொம்பவும் இளப்படியாய் தெரிவது போல்பட்டது. “ ஏம்மா புழுதியில... வேர்வைக்கும் புழுதிக்கும் சளி புடிச்சிக்கப் போவுதும்மா...”

“ சும்மா செத்த அடி மறைக்கறதுக்கு...” பாஞ்சாலை சொல்லிக் கொண்டிருக்கும்போதே உள்ளுக்குள் சதாசிவத்தின் அக்கறையான விசாரிப்பின்மேல் ஓடியது. ஊரைவிட்டு வந்து நாலைந்து நாளைய பிரிவிற்குள், தன்மேல் கூடுதல் அக்கறையில் இருப்பதாய் அவளுக்கு ஒரு எதிர்பார்ப்பு.

கடைசிச் சுற்றைக் கொண்டுவந்து தலைமாட்டில் திருப்பும் போதே ராசோக்கியம் பார்த்துவிட்டார். ஆனாலும் ஒன்றும் கேட்கவில்லை. ஏரை ஓட்டிவந்து நிழலடியில் நிறுத்தி, மாட்டை அவிழ்த்துவிட்டார். தலையில் சுற்றியிருந்த வேட்டியெல்லாம் ஒரே புழுதி. மேலே படிந்திருந்த புழுதியைக் கரைத்துக்கொண்டு வியர்வை அண்டராயரில் இறங்கி சாயமாய்ப் படிந்திருந்தது. மாடுகளை ஓட்டிக்கொண்டு குளத்துப்பக்கம் போனார்.

இவன் ஏர் ஓட்டிய புழுதியில் நடந்து பார்த்தான். முந்திரிக் கொல்லையைச் சுற்றி ரோடு போட்ட மாதிரி கிடந்த புழுதியில் காங்கை நெளிந்தது. மேலே அரித்த புல்பூண்டுகளை சருகுகளை பொட்டையாகத் தெரிந்த ஓரிடத்தில் போட்டு கொளுத்தப்பட்டு புகை கனிந்து கொண்டிருந்தது. திரும்பி பூமாவிடம் அவனும் ஆச்சரியமாய்க் கேட்டான் “ இந்த ஊர்ல முந்திரிக்கி மாட்டக் கட்டி ஏரால அடி இழுக்கறது நீங்களாத்தான் இருக்கும் பூமா.”

“ பின்ன, நம் அப்பா என்னா சாதாரண ஆளா. தே இம்மாம் முந்திரிக்கும் செத்த நேரத்து வேலதான். சாப்புட்டுட்டு ஒரு படலக் கட்டி இழுத்துட்டா அப்பிடியே கொங்கு புழுதியாப் பறக்கும்.” சொன்னவள், தொடர்ந்து விசாரித்தாள் “ அப்பறம் சித்தி சித்தப்பாலாம் நெல்லா இருக்காங்களா. வைரம், தங்கம், கசப்புலாம் எனுமா இருக்குதுவோ... துடுக்கு என்னா செய்யுது?”

பாஞ்சாலையும் கேட்டாள் “ எதாவது தண்ணி தளுப்ப குடுக்குதுவுளாப்பா...”

“ அதுலாம் நமக்கு எந்தக் கொறையும் இல்ல. சாப்பாட்டு நேரத்துக்கு சாப்பாடு. தவுறுனா, அங்காண்ட சண்முகா பேலசு கிட்ட ஓட்லு...” சொல்லிக்கொண்டே முந்திரிகளிடம் போய்ப் பார்த்தான். பூவும் பிஞ்சுகளுமாக எல்லாமும் தெரிந்ததும் அவனுக்கும் மகிழ்ச்சி. “ நெல்ல முந்திரிவோதாம் போல்ருக்கு.” சுற்றிப் பார்த்து விட்டு வந்து வண்டியில் குந்தினான்.

பூமா, மலர், பாஞ்சாலை என எல்லாமும் போய் ஏரியில் கைகால்களைக் கழுவிவிட்டு வந்து சாப்பிடக் குந்தினார்கள். ராசோக்கியம் குளித்துவிட்டு, மாடுகளை ஓட்டி வந்து மரத்தடியில் கட்டிவிட்டு அவரும் நுணாத்தழைகளை ஒடித்துப்போட்டுக் குந்தினார்.

“ அத்தை வூட்லதான இருந்துது. சாப்புட்டுட்டு வந்தியா? ஆமா, ஒனக்கு எப்படி இந்த முந்திரிக்கொல்ல தெரியும். அத்தை சொல்லி அனுப்பிச்சிதா...” பூமா ஆச்சரியத்தோடு கேட்டாள்.

“ ஆமா, சித்தர ஏரிக்கி வர்றதுக்கு வழி கேட்டுட்டுத்தாம் வருணும் பாரு. இங்க வந்தா, ஒங்க பேச்சி சத்தந்தான் ரேடியா செட்ல கேக்கறமாதிரி ஓடுத” சொல்லியபடி குந்தினான்.

தாமரை இலையில் சோறுபோட்டு குழம்பை ஊற்றினாள் பூமா. எதிரில் குந்தியிருந்த மலர் இவனைப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டாள். ஒரு வாய் அள்ளி வாயில் போடவில்லை, சதா சிவத்திற்கு விக்கியது. பட்டென்று எட்டி செம்பை நீட்டினாள் மலர்.

“ புள்ளையையும் கிள்ளி வுட்டுட்டு ஏணையையும் தாலாட்ற மாதிரி மனசுல நெனைச்சி விக்கல உண்டாக்கன அம்மாளே தண்ணி மொண்டும் குடுக்கறாங்க போல்ருக்கு.” பூமா சிரித்துக்கொண்டே சொன்னாள். மலருக்கு வெட்கமாகப் போய்விட்டது. சதாசிவம் ஒன்றும் சொல்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடித்ததும் ராசோக்கியம் அப்படியே சாய்ந்து விட்டார். ஏதேச்சையாகத்தான் பூமா பார்த்தாள். " என்னா அண்ண, நெசமாலுமே ஓம்மேல எனக்கு சந்தேகமா இருக்கு" என மலரைப் பார்த்து கண்ணடித்தபடி சொன்னாள் " சட்டைலாம் என்னைக்கும் இல்லாம அயர்ன் பண்ணி மடிப்புக் கொலையாமப் போட்டுக்கிட்டு வந்துருக்க..."

பாஞ்சாலையும் அப்போதுதான் பார்த்தாள். சதாசிவம் ஒருநாளும் இப்படிப் பொட்டி போட்டு, சட்டை போட்டுக் கொண் டிருந்ததாய் ஆதியே இல்லை. புதுச்சட்டை தைத்துக் கொடுக்கும் போது கடைக்காரன் போட்டுக் கொடுப்பதோடு சரி, துவைத்துப் போட்டுக் கொண்டாலே போதும் என்கிற கணக்கிலிருக்கிறவன்.

" நீ வேற. நம்ப அரசாயி, வூட்டுக்கு வூடு தண்ணி பைப்பா போனதால துணி தொவைக்கிற வேலய வுட்டுட்டு, தள்ளுவண்டி வைச்சிக்கிட்டு தெருவுக்கு தெருவு துணி தேய்ச்சுக்கிட்டு இருக்குது. கௌம்பி வர்றப்ப வாசலுக்கு நேரா நின்னது, போட்ருந்த சட்டைய கயிட்டிக் குடுத்தே ஆவணும்னு, அவுத்துக் குடுக்கச் சொல்லி தேய்ச்சிக் குடுத்துது." சொன்னவனுக்கு அரசாயி சொன்ன குறைபேச்சும் உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. ' இப்ப இந்த சட்டைய ஊருக்குப் போட்டுக்கிட்டுப் போனா, ஒத்த மொவ ஓங்கூடயே வந்துடும்.'

அதற்குமேல் அவனுக்கு அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. கிளம்பினான். " வர்றம் பூமா..."

" ஒங்க மலருகிட்ட ஒரு வார்த்த சொல்லிட்டுப் போவ மாட்டியா..." சிரித்துக்கொண்டே கேட்டாள் பூமா. வேப்பங்குறிச்சியில் இருந்ததை விட அவள் மிகவும் மகிழ்ச்சியாய் இருப்பதுபோல் அவனுக்குப் பட்டது. " வர்றன்..." சைக்கிளை தள்ளினான்.

அரைத்தூக்கத்தில் இருந்த ராசோக்கியத்திற்கும் கேட்டிருக்க வேண்டும். புரண்டு படுத்தபடி சொன்னார் " வந்தது வந்தாச்சி. அவன செம்பையய்யா கோயிலுக்குப் போயி கும்புட்டுப் போவச் சொல்லும்மா."

கிளம்பினான். பூமா கூடவே வந்து சொன்னாள். " கோயிலுக்குப் போய்ட்டு, அப்பிடியே வூட்ல அத்த இருக்கும், போயி பாத்துட்டுப் போ அண்ண. நேரா ஊருக்குப் பூட்டினா எதாவது தப்பா நெனைக்கும்."

" என்னா மாமா அதுக்குள்ள, இருந்து இப்பிடியே வேலைக்கி போவலாம் இல்ல..." மலர் சொல்வது எதையும் காதில் வாங்காமல் ஒரு பச்சை

சிரிப்பை உதிர்த்துவிட்டுக் கிளம்பினான்.

*

66

கோழிகள் கூவி, குருவிகள் சிலும்பி, பூவரசு மரமெங்கும் காக்கைகளின் பேரிரைச்சல். முதனைக்கு வருகையில் ராத்தங்கல் நேர்கிறபோதெல்லாம் ராசோக்கியத்திற்கு விடியக்காலையின் இந்த காக்கைகளின் கரைதல், ரொம்பவும் பிடிக்கும். லேசாய் ஆரம்பிக்கும் போதே எழுந்து குந்திக் கொள்வார். எங்கும் நிறைந்திருக்கிற பூவரசுகளில் குந்தி கறாம்முறாம் என்று கொஞ்சல்களாய் குலாவல் களாய் விடியும் வரை தொடரும் இனிய சந்தோஷ குரல்களைக் கேட்டுக் கேட்டு ரசிப்பார். இங்கு நிரந்தரமாய் வந்தபிறகு நித்தமும் தொடர, கேட்டபடி எழுந்து வெளியே வந்தார்.

மாடுகளை மாற்றிக் கட்டி, கட்டுத்தெருவைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார். வேப்பங்குறிச்சியில் இருக்கிற போதெல்லாம் சாணியை அள்ளிக்கொட்டி வாருவதெல்லாம் பூமாவின் வேலைதான். இங்கு வந்த இடத்தில் வயசுப் பிள்ளையை சாணி வாரச் சொல்லக்கூடாது என்றுதான் அவரே எல்லாமும் செய்து கொண்டிருந்தார். இருந்தபோதும் குறைந்தபட்சம் விளக்குமாற்றால் கூட்டி விடுவதற்குக்கூட வராமல் படுத்துக் கிடப்பது, அவருக்கு வருத்தமாக இருந்தது. இருந்தாலும் பாஞ்சாலையைப் போல் " என்னாடி... என்ன சொல்லி ஒன்ன இட்டாந்தான். எல்லாத்தையும் காத்துல வுட்டுட்டு ராகம் பாடிக்கிட்டு நிக்கிற. வெளக்கமாத்த எடுத்தன்னா வெலாக் கோலிடுவன்" என்பதுபோல் வெளியே காட்டிக்கொள்ள மாட்டார். ' ஒரு வயிசி பொட்டப்புள்ளகிட்ட போயி எதுக்கு மூஞ்ச காட்டிக்கிட்டு... கெடக்குது போ'.

" ஏய் ஏந்திருங்கடி. இப்பப் பாரு ஒரு கொடம் தண்ணியக் கொண்டாந்து தலையில ஊத்தறன்" வழக்கத்திற்கு மாறாக பாஞ்சாலைக்கு பதில் தங்கப்பழம் சத்தம் போட்டபடி குடங்களை எடுத்துக்கொண்டு தண்ணீர் பிடிக்கப் போனாள். இரண்டும் முதல்நாள் இரவில் அடித்த அதத்திற்கு, பாஞ்சாலை போட்ட சத்தத்தில் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு, எழுந்திரிக்காமல் கிடந்தன.

நித்தமும் காலையில் வலிந்து சத்தம் போட்டு எழுப்பி எழுப்பி சண்டை கட்டி பாஞ்சாலை தோற்றுப்போயே விட்டாள். " எதுக்குக் காலங்காத்தால தொண்டாவியப் போக்கிக்கிட்டு... அதுவோ ஏந்திரிக்கறப்ப ஏந்திரிக்கட்டும். எக்கேடாவது கெட்டுப் போவுட்டும்." அடுப்பைப் பற்றவைத்து ஊதிக்

கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள் புரண்டு புரண்டு படுத்திருந்த இரண்டுக்கும், வெளியே வண்டியைப் பூட்டுகிற மாதிரி நுகத்தடி சத்தம் கேட்டது. உடன் வெளியே ராசோக்கியம் சொல்லிக்கொண்டிருந்தார் " அதுவோகிட்ட ரவ சாப்பாடு குடுத்தனுப்பு. ஒண்ணு ரெண்டு கொட்ட தெரியறதப் பாத்துப் பொறுக்கறன். வழி நட வேற, திமிதிமின்னு சனம் எல்லாம் குறுக்கால போறதுக்குதான் நிக்கும்."

படல் கட்டி இழுத்தபிறகு எல்லாச் சனங்களும் வரப்புமேல் தான் சுற்றிக்கொண்டு போகிறார்கள். இருந்தாலும் அவருக்கு வேப்பங்குறிச்சி மாதிரி பொழுது விடிந்தால் கொல்லையில் நிற்க வேண்டும். அதற்கு ஒரு சாக்குதான் வழி, சனம் என்பதெல்லாம்.

" பூமா..." கனத்த குரலில் கூப்பிட்டார். ஈக்கடி தாங்காமல், தலையால் அடித்ததில் கொம்பு மடார் என்று நுகத்தடியில் மோதியது. பதிலில்லாமலிருந்ததும் திரும்பவும் கூப்பிட்டார்.

மறாவது குரலுக்கு " என்னாப்பா..." என்று அடிக்கிற மாதிரி கேட்டாள்.

அவருக்கு ஒரு நிமிடம் பதில் பேசத் தயங்கியது. தேங்கியது மாதிரி நின்று விட்டுச் சொன்னார் " ரவ சாப்பாடு எடுத்துக்கிட்டு வா. தோப்புக்குப் போறன்..." பதிலுக்குக் காத்திராமல், வண்டியில் ஏறிக் குந்தி மாட்டை அதட்டினார். வண்டி தோட்டத்திலிருந்து தெருவுக்கு வந்தது.

சின்னத்தம்பி சைக்கிளைக் கொண்டுவந்து வாசலில் நிறுத்தினார். தலையில் வளைத்துக்கட்டிய துண்டு. கசங்கிய காக்கி பேண்ட்டு சட்டை. வேலையிலிருந்து வந்திருப்பது மாதிரிதான் தெரிந்தது. ஆனாலும், அந்தக் காலையிலும் அவருக்கு போதையில் கண்கள் சிவந்திருந்தன. ' ஆளு போற போக்கு சரியில்ல' தங்கப்பழம் அடிக்கடி சொல்வது உள்ளுக்குள் ஓடவும், வண்டியை நிறுத்திவிட்டு ராசோக்கியம் கேட்டார் " என்னா வேலைக்கிப் போனா ரெண்டு நாளு மூணு நாளைக்கி வூட்டுப்பக்கம் வரமாட்டங்கற?" தெருவில் நிறுத்தி தலையிலடிக்கிற மாதிரி கேட்டதும் சின்னத்தம்பியின் முகத்தில் போதையிலும் ஒரு வாட்டம்.

பதறியபடி தங்கப்பழம் ஓடிவந்து " நீ வண்டிய ஓட்டிக்கிட்டுப் போ அண்ண. நா அதுவோ கையில சாப்பாட்ட குடுத்து அனுப்பறன்..." சமாசம்பந்தம் இல்லாமல் வந்து சொன்னாள். தான் கேட்பது அவளுக்குப்

பிடிக்கவில்லையென்பதால்தான் இப்படிப் பேச்சை மாற்றி போ என்று சொல்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டவர், குழப்பத்தோடு தங்கப்பழத்தைப் பார்த்தபடி வண்டியை ஓட்டிக்கொண்டு போனார்.

படல் இழுத்துக்கிடக்கிற புழுதியின்மேல் ஊனாடிப் பார்த்தபடி நடந்துகொண்டிருந்தார். காலையில் வந்ததும் யாராவது முந்திரிக்குள் நுழைந்திருக்கிறார்களா, புதிய அடி ஏதாவது தென்படுகிறதா என அடிநடத்திப் பார்த்துவிட்டுத்தான் அடுத்த வேலை எதுவாக இருந்தாலும்.

சனிமூலைக்கு நேர் பாம்பு ஒன்று ஊர்ந்து போயிருந்தது. ஊசி ஊசியாய் நகங்களைப் பாய்ச்சி, வாலைப் போட்டு இழுத்துக் கொண்டு இரண்டு மூன்று இடங்களில் உடும்பு போயிருந்தது. நுனி விரல்களைக் கூட்டிப் புழுதியில் தொட்டதுபோல் வழக்கம் போலவே, கட்டை பாய்ந்து கிடக்கிற அருகம் புற்களுக்காக முயல்களின் கால் அடிகள், நிறையத் தெரிந்தன. புழுதியில் ஒரு முந்திரிப் பழத்தைப் போட்டு நார்நாராய்க் கிழித்துக்கொண்டிருந்த அணில் இவரைப் பார்த்து விட்டு, கீச்கீச்சென்று வாலைத் தூக்கித் தூக்கிக் கத்தியபடி ஓடி முந்திரி மரத்தில் ஏறியது. குறுக்கும் நெடுக்குமாய் ஐந்தாறு இடங்களில் எறும்புகள் தேய்வடி பாதை யாக்கி ஊர்ந்து போய்க்கொண்டிருந்தன. பார்த்துக்கொண்டே போனவர், சிதம்பரத்து மூலைக்கு வந்ததும் உச்சிமயிரைப் பிடித்து இழுத்தமாதிரி திகைத்து நின்றார். விருத்தகிரிகுப்பத்துப் பக்கமிருந்து குறுக்கே நுழைகிற பழைய ஞாபகத்தில், இவரின் படல் இழுப்பைப் பொருட்படுத்தாது தோப்புக்குள் நுழைந்திருந்தன, ஒரு சோடி செருப்பில்லாத கால்கள். இடதுகால் குதியில் ஏதோ கட்டுப்போட்ட மாதிரி கோடுகோடாய் அடி நசுங்கித் தெரிந்தது.

எடுமுனையிலேயே நன்கு காய்த்திருக்கிற முந்திரி. சுற்றிப் பார்த்திருந்தது தவிர ஒரு காயை, பழத்தைத் தொடவில்லை. அப்படியே முந்திரிக்கு முந்திரி சுற்றிப் பார்த்தபடி, நேராய் பலா மா மரங்களை நோட்டம் விட்டபடி மறிச்சி வழியால் நுழைந்து வெளியே போயிருந்தது. ‘ யாரா இருக்கும் அடி மறைச்சிருக்கிற முந்திரியில இம்மாந் துணிச்சலா வந்து போயிருக்கறது?’ ராசோக்கியத்திற்கு கொல்லைக் காரர் ஆறுமுக முதலியார் மேல்தான் நினைப்பு ஓடியது. ஆனாலும் பொழுது போனபிறகு வந்து போயிருந்தது, சந்தேகமாக இருந்தது. ஒருவேளை, இன்னும் திருடுகிற அளவிற்கு ஒப்புடி வரவில்லையென்று போய்விட்டார்களா... யோசனை பலவாறாய் ஓடிக்கொண்டிருந்தது.

மாடுகளை அவிழ்த்துவிட்டார். அது மறிச்சியிலிருந்த நுணாத் தழைகளைக்

கடித்துக் கொண்டிருந்தது. ஏரியில் அரசகுழியான், பானைகளைக் கவிழ்த்துப் போட்ட தெப்பத்தில் மிதந்தபடி, பூக்களைப் பறித்துக்கொண்டிருந்தான். மாமரத்தில் தொங்க விடப்பட்டிருந்த சொரட்டுக்கழியை எடுத்துக்கொண்டு கொட்டை பறிக்க வந்தார். அங்கொன்றும் இங்கொன்றுமாய்த்தான் தென்பட்டன. இன்னும் ஒரு வாரம் போனால் கொட்டை அரிபிரியாக விழும்.

“ எப்பா...” பூமாவின் குரல்தான். காலையிலிருந்த இறுக்க மேதுமில்லாதபடி இயல்பாக இருந்தது.

“ வர்றம்மா...” சொரட்டுக் கழியை அங்கேயே போட்டுவிட்டு, பொறுக்கியதை மட்டும் புட்டியில் எடுத்துக்கொண்டு வந்தார்.

“ நீங்க சாப்புடுங்க மாமா... நாங்க போயி பொறுக்கிக்கிட்டு இருக்கறம்” மலர் சொன்னாள்.

புட்டியிலிருந்த காராக்காய் பழங்களைக் கொட்டிவிட்டு இரண்டும் கொட்டை பொறுக்கக் கிளம்பியிருந்தன. இவர் குளித்து விட்டு வரலாம் என ஏரிப்பக்கம் போனார். அரசகுழியான், பூக்களைச் சாக்குகளில் திணித்து சைக்கிளில் வைத்துத் தள்ளிக்கொண்டு போனான். உயரமாய், உடும்பைப்போல் உருவம். நீர்க்காவி ஏறியிருந்த வேட்டியைப் போலவே முண்டா பனியனும் தலைத்துண்டும். ஏரித் தோப்பிற்குப் போய் டவுண் வண்டி 9ல் ஏற்றிவிட்டு வருவது மட்டும்தான் அவன் வேலை. விருத்தாசலத்தில் கடைக்காரர்கள் பூ மூட்டைகளை இறக்கிக் கொள்வார்கள்.

இறங்கினார். அடியில் சிலீர் என்று குத்தியது தண்ணீர். எதிர்க்கரையில் அரவம் கேட்டது. ஏதோ படையல் போலும். சிறுவர்களும் பெரியவர்களுமாக நாலைந்து பேர் கரைகளில் நிற்கவும், தண்ணீரில் கால்களை நனைக்கவுமாகத் தென்பட்டார்கள். வந்து சாப்பிடக் குந்தினார். கோயில் பக்கம் பம்பைச் சத்தம் கேட்டது.

மாங்காய் ஊறுகாயும் தாளித்த மோருமாய், சோற்றைக் கண்ட பிறகுதான் அவருக்கு கடுமையாய்ப் பசிப்பதுபோல் தோன்றியது. சாப்பிட்டு முடித்ததும் ஆயாசமாக வந்தது. இப்போ தெல்லாம் பசி தாங்கமுடியவில்லை. சற்றுநேரம் தாண்டினாலும் கண்ணாம்பு சுத்துவதுமாதிரி உடம்பு பலக்குறைவாய் இருப்பதை உணர்ந்தார். அப்படியே மாமரத்தடியில் துண்டை விரித்துப் போட்டு, சாரை நெளிவதுபோல் உடம்பைப் போட்டு முறுக்கினார். இதமாக இருந்தது. கண் இழுத்துக்கொண்டு போனது.

அவருக்கு வேப்பங்குறிச்சியில் வாய்க்கால் வஞ்சி போட்டுவிட்டு, கிணற்று மேட்டு களத்தடி மாமர நிழலில் படுத்திருப்பது போன்று ஒரு சுகம். இந்நேரம் வீடுகளை, குடிசைகளை இடித்து அள்ளிக்கொண்டு போய்ப் போட்டுவிட்டு, தோண்டியிருப்பார்கள். இடிப்பு இயந்திரங்கள் இடிப்பது போலவும், தோண்டு இயந்திரங்கள் மண்ணைப் பூதாகரமாய்க் கொத்தி, ராட்சத கொடுக்குகளால் அள்ளி லாரிகளில் போடுவது போலவும் திணறிக்கொண்டே போய் மண்மேட்டில் சரக்கென்று புழுதி கிளம்பச் சாய்ப்பது போலவும் உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது.

ஊருக்குப் போய்வந்தால் தேவலாம் என்று அவருக்கும் பட்டது. சதாசிவம் என்ன செய்துகொண்டு கிடக்கிறானோ... கரி படாச்சி, ரங்கநாது, அறிவழகன், முத்துக்கண்ணு ஆயி... எல்லோரும் கண்ணிலேயே நின்றுகொண்டிருந்தார்கள். ஏரிக்காற்று லேசாய் அசையவும் சற்று அசந்தார்.

வெ யில் ஏறிவிட்டது. இங்கேயும் பொறுக்கிவிட்டு, ஏரிக்குக் கிழக்கால, மலர் வீட்டு முந்திரியிலும் போய் பொறுக்கித் திருவிக் கொண்டு வந்திருந்தார்கள். செம்பையய்யனார் கோயிலில் பம்பை, உச்சகட்டத்தில் அடித்துக்கொண்டிருந்தார்கள்.

“ சாயந்திரம் வரைக்கும் இருந்தா படையல்ல கறிச்சோறு தின்னுட்டுப் போவலாம்” மலர் சொல்லிக்கொண்டாள்.

பூமா பதறிவிட்டாள். “ எங்க போயி... வாணாஞ் சாமி. வூட்டுக்கு தெரிஞ்சாப் போச்சுன்னா, இன்னைக்கிலாம் வெளக்கமாத்த கையில எடுத்துடும்...” சொல்லிக்கொண்டே மறிச்சியின் நாணாச் செடிகளிலிருந்த பழங்களைப் பறித்துப் போட்டுச் சப்பினாள்.

“ சரி வுடு...” சொன்னவள், திரும்பத் திரும்ப நாணாப் பழங்களைப் பறித்ததும் “ இது எதுக்குடி முட்ட முழியாட்டம் பறிச்சித் தின்னுக்கிட்டு, அங்காண்ட ஓடைக்கி வா, சங்கமா ஈச்சம்பழம் இருக்கும். பறிச்சித் திங்கலாம்.” மலர் சொன்னதோடு இல்லாமல் வெளியே வந்து மறிச்சி ஓரமாக மேற்கே சென்றுகொண்டிருந்தாள்.

பூமாவும் அசந்து கிடந்த அப்பாவைப் பார்த்துக்கொண்டே மலரின் பின்னால் போனாள். தூரத்தில் பம்பைச் சத்தத்தோடு கூடவே வாணவெடியும். தோப்பிற்கு மேலே சர்ரென்று புகை சீறியபடி உயர்ந்தேறி வெடித்தது.

ஏரியின் மேற்காலக் கரையின் அடம்புக்குள் நுழைந்து அங்காண்ட ஓடைக்குப் போகும்போது, செல்லியம்மன் கோயிலுக்கும் பக்கத்திலிருந்த பூவுக்காரன் கொட்டகையில் பேச்சரவம் கேட்டது. அரசகுழியானுக்கு குடும்பம் இருப்பதாக, இங்கு அழைத்து வந்ததாக யாரும் பார்த்தது இல்லை. பூமா இதையெல்லாம் பொருட்படுத்த வில்லை. ஆனால் மலருக்கு சந்தேகமாக இருந்தது.

நிறைய ஈச்சஞ்செடிகள், செடியடிகளில் நிறைய கொத்துக் கொத்தாய் ஈச்சம் பழங்கள். கைகளில் முள் குத்தாதவாறு மலர் எச்சரிக்கையாய்ப் பறித்துப் பறித்துக் கொடுத்தாள். மேய்ந்து கொண்டிருந்த வெள்ளாடுகளைப் பார்த்துக்கொண்டே பூமா பழங்களை வாங்கித் தின்றுகொண்டிருந்தாள். " ஆடுதான் நிக்கிது. ஆட்டுக்காரங்கள யாரையும் காணம்" பூமா சொல்லிக் கொண்டிருக்கும் போது மலருக்கு திக்கென்று உள்ளுக்குள் ஒரு இடி இடித்தது.

' ஆடு நிக்கிதுன்னா, ஆட்டுக்காரங்க கொட்டாயிலதான் இருப்பாங்க...' மலர் யோசித்துக்கொண்டு இருக்கும்போதே பூமா... " ஏய் நரி நரி..." புதரில் கிடந்துவிட்டு ஓடிய நரியைப் பார்த்துக் கத்தினாள். நரியைக் கண்ட மாத்திரத்தில் ஆடுகள் கத்தியபடி மிரண்டோடின. " எங்க நரி... எங்க நரி... குட்டியகிட்டிய எதாவது புடிச்சிட்டுதான்னு பாருங்க..." பதறியபடி கொட்டகையிலிருந்து கனகவல்லி வெளியே ஓடிவந்தாள். வெளியே தலை காட்டிய பூவுக் காரன் இவர்களைப் பார்த்துவிட்டு பொசுக்கென்று உள்ளிழுத்துக் கொண்டான்.

குறிப்பாய் மலரைப் பார்த்த கனகவல்லி அப்படியே விக்கித்துப் போய்விட்டாள். " வெறும் நரிதான் ஓடுது..." இழுத்துக்கொண்டே சொன்ன மலர் யோசித்தாள் ' இப்பிடிப் போவுதா கத. பாவம் அந்த மணி அண்ணன் பெலாக்கா மாங்கான்னு யேபாரத்துல அலையிது. ஆடு மேய்க்கறன்னு சொல்லிட்டு இது இங்க மேய்ச்சல்ல நிக்கிது போல்ருக்கு'.

கனகவல்லி தெற்கால தெருவுக்காரி. அண்ணி முறையாகத் தான் வேண்டும். ஒட்டடைக் குச்சிக்கு துணி சுத்தியதுமாதிரி என்றாலும் இடுப்புவரை தொங்குகிற கனத்த முடி. தலைக்கும் பின்னால் ஒரு குட்டித்தலை இருப்பது மாதிரி கொண்டை. காதுவரைக்கும் வாய், வாயைத் திறந்தால், அடிக்கிற மாதிரிதான் பேசும். அடிக்கடி அவள் வீட்டுப் பக்கமும் சண்டையும் இரைச்சலும் கேட்டுக்கொண்டிருக்கும்.

கனகவல்லி ஒன்றும் சொல்லாமல் ஆடு களை ஓட்டிக் கொண்டு வடக்கே

போனாள். பூவுக்காரனும் கொட்டகையின் படலைச் சாத்திவிட்டு ஊர்ப்பக்கம் கிழக்கே போனான். இவர்களுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. ஏரிக்குப் போக கொட்டகை ஓரமாக நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

இறக்கத்தில் இறங்குகிறபோதுதான் மலர் பார்த்தாள், கொட்டகையின் கதவுத் தட்டியில் சிவப்பு நிறத்தில் கனத்த துண்டு ஒன்று கிடந்ததும் அவளுக்கு உதைத்தது. அது கனகவல்லியின் துண்டுதான். தண்ணீர் மொள்ள வரும்போது தோளில் போட்டுக் கொண்டு வந்து, சும்மாடு கோலிக்கொண்டு போவதை நிறையத் தடவை பார்த்திருக்கிறாள். உடன் அவளுக்குள் அந்த யோசனை ஓடியது.

ஒருநாள் தொடர்ந்து நாலைந்து குடங்களை வைத்துக் கொண்டு தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தாள். வெகுநேரமாய் ‘ ஒரே ஒரு கொடம் வுடு அண்ணி’ மலர் கெஞ்சினாள். விடவே யில்லை. மீறி வைத்த குடத்தையும் பிடுங்கி எட்டப்போட்டு விட்டாள்.

அதோடு “ சில்லான் செவுப்பா இருந்தா வந்த ஒடனே சொருக்குன்னு வுட்டுக்குணுமா. நான்லாம் நெலகாலு மேல நின்னு புடிக்கில... அவுசரம் தாங்குலியா...” சீறுகிறாள்.

மலருக்கு அப்படியே உடம்பெல்லாம் ஊசியில குத்தியது போன்று வேதனை, அவமானம். ஒரு குடம் பச்சைத் தண்ணீருக்கு போய் நாக்கில் நரம்பில்லாமல் பேசும் அவளின் குணம். அழுது கொண்டே வெறுங்குடத்தோடு வீடு வந்துவிட்டாள்.

வகை தொகையில்லாமல் வந்து சிக்கிவிட்டாள் கனகவல்லி.

மலருக்கு இது சரியான நேரமாகப் பட்டது. திரும்பி, எட்டி வெடுக்கென்று துண்டைப் பிடித்து இழுத்தாள். படலின் குச்சி களையும் முறித்துக்கொண்டு வந்த துண்டில் குப்பென்று அழுக்கு நாற்றம் அடித்தது.

கனவில் கேட்கிறமாதிரி குரல்கள் காதில் விழவும் ராசோக்கியம் புரண்டு படுத்தார். சிவப்பிரகாசம், ஆறுமுக முதலியார், பலாக்காய் வியாபாரி மணி என நிற்கவும் திடுக்கிட்டமாதிரி எழுந்து குந்தினார். சிவப்பிரகாசம்தான் “ என்னா வேப்பங்குறிச்சாரு அசந்துட்டார் போல்ருக்கு.” கேட்டபடியே படல் இழுத்துக்கிடக்கிற புழுதியைப் பார்த்தார்.

“ சும்மா படுத்தன். அப்பிடியே அசந்துட்டம் போல்ருக்கு.” கையைத் தரையில் ஊன்றி எழுந்தார். பின்புறம் அண்டராயரில் ஒட்டியிருந்த புழுதியைத் தட்டினார்.

“ என்ன வேப்பங்குறிச்சார, வீரட்டிக்குப்பத்து ஓடையில கெடக்கற வெள்ளவாரி புழுதிமாரி ஏரு மாட்டக் கட்டி ஓட்டி இப்பிடி புழுதி கௌப்பி வைச்சிருக்கற...” உண்மையிலேயே சிவப்பிரகாசத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த முதனை வெளியில், இப்பிடிக் கேழ்வரகு மாவாய் புழுதியுண்டாக்கி படல் இழுத்துப் போட்டு வைத்திருந்தை அவர் பாத்ததே இல்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாய், இந்த ஒரு வேலையிலேயே மிகத் திறமையான நபருக்குத்தான், நாம் நிலம் அமர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்கிற பெருமை அவர் முகத்தில் பூத்துக்கிடந்தது.

பல் எடுப்பாய், சற்று தொப்பையுடன் நின்றிருந்த மணி கூட ஆச்சரியமாய்ப் பார்த்துக்கொண்டே சொன்னான் “ நானும் இப்பதாம் பாக்கறன். எறும்பு போனாக்கூட அடி தெரியும் போல்ருக்கு.”

ஆறுமுக முதலியார் ஆச்சரியப்படவில்லை. நேற்றே அவர் எல்லாமும் பார்த்துவிட்டார். நிலம் வாங்கி, கம்பு மள்ளாட்டை என மானாவாரி மகசூல் வைத்த காலங்களில் கூட, வேலி வைத்து, சப்பாத்தி முட்கள் நட்டு வைத்து... குறுக்கால் போகும் வழியை நிறுத்தப் படாதபாடு படவேண்டும். முந்திரிக்கன்று போட்டதி லிருந்து, சொல்லவே தேவையில்லை, இவரது முள் மந்திரமெல்லாம் பலித்ததேயில்லை. கோடு கிழித்தமாதிரி பாட்டை போய்க் கொண்டுதானிருந்தது.

இப்போது முட்கள் போடவில்லை. சப்பாத்தி நடவில்லை. வெறும் அடி மறைப்புதான். விவரமாய் ஏரைப் பூட்டி ஓட்டியதில் புரண்ட பொடி புழுதிதான். வரப்பால் போக ஆரம்பித்திருந்தார்கள். அவரால் உள்வாங்கிக் கொள்ளவே முடியவில்லை. முதலியார் சொல்லிக்கொண்டார் ‘ நமக்குலாம் விவசாயம் யோக்கியத இல்ல. நம்ம அப்பம் மாதிரி தறி ஓட்றதுக்கு தான் லாயக்கு.’

“ கால்ல என்னா காக்கா தோலுங்களா? காலையிலேயே நெனைச்சேன். சாயந்திரமாவுது வந்து பாத்துட்டு வருவமுன்னு பாத்தன். அது ஒண்ணுமில்லிங்க. ஒரு அர செங்காமுட்டி கல்ல அடுப்பு அனல்ல போட்டு, நெல்லாச் சுட்டப்பறம், எருக்கம் பழுப்ப சுடுகல்லுமேல போட்டு, வலியுள்ள எடத்த வைச்சி மிறிச்சா, அப்பிடியே அமுங்கிடும்.”

முதலியாருக்கு மட்டுமல்ல, சிவப்பிரகாசத்துக்கும் ஆச்சரிய மாய்ப் போய்விட்டது. குதிகால் கட்டைப் பார்த்துக்கொண்டே முதலியார் கேட்டார் “ எனக்கு காக்காத் தொலும்புன்னு ஒனக்கு எப்பிடித் தெரியும்? காலையிலேயே நெனைச்சங்கற...”

“ நேத்து நா ஊட்டுக்கு போனப்பறம், இந்தத் தோப்புக்கு வந்து பெலாமரத்த சுத்தியடிச்சிப் பாத்துட்டுப் போயிருப்பீங்க போல்ருக்கு. வேத்து ஆளா இருந்தா ஒண்ணு ரெண்டா இருந்தாலும் கொட்டையில கைய வைச்சிருப்பாங்க. இது ஒரு பிஞ்சி பிதுர தொடாம, பெலா மரத்துவுள மட்டும் எட்ட நின்னு சுத்தியடிச்சிப் பாத்துட்டுப் போறதுன்னா அது ஒடைய பார்ட்டியாதான் இருக்கும்னு நானா முடிவு பண்ணனன். அதோட எடதுகாலு குதியில கட்டுப் போட்ருந்த மாதிரி அடியில கோடுவோ தெரிஞ்சிது. குதி காலுல, குதிபொடவம் வந்தா வீங்கிக்கிட்டு வலிக்குமே தவிர, கட்டுப் போடற மாதிரி காயம் வராது. முள்ளு அடிச்சிருந்தாலும் இம்மாம் பெரிய கட்டா போட்ருக்க மாட்டாங்க. நானாதான் குருட்டடியா காக்காத் தோலா இருக்குணும்னு முடிவு பண்ணனன்.” ராசோக்கியம் சொன்னார்.

அவ்வளவு குறியாய், விலாவாரியாய் சொன்ன பிறகு முதலியாரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. “ வெவரமான ஆளுதான்” சிரித்துக்கொண்டே பலாமரத்துப் பக்கம் போனார்.

சிவப்பிரகாசம் மட்டும் இவரோடு பேசிக்கொண்டு வந்தார். “ கெழக்குத் தெரு படையல் ஒண்ணு. கௌம்பி வந்துக்கிட்டு இருக்கறப்பதான், இவரு பெலாக்காய காட்டலாம்னு மணிய இட்டுக்கிட்டு வந்தாரு. அதோட நேத்தே வந்து, போயி முந்திரியப் பாரன் படல் இழுத்து வைச்சிருக்கறதுன்னு ரொம்ப பெரகல்யமா சொல்லிக்கிட்டும் இருந்தாரு, சரி இங்காண்ட ஒரு எட்டு பாத்துட்டுப் போவும்னு வந்தன். வந்தப்பறந்தான் தெரியுது ஒன் யோசனையும், வேலையும்...”

“ நமக்குலாம் ஒரு வேலன்னா அது அர்த்தம் திருத்தமா செய்யிணும் இல்லன்னா செய்யக்கூடாது. வேப்பங்குறிச்சியில நம்ப மாசூல்னா மத்தவங் கொல்லிய விட நாலு மூட்ட கூடுதலாத்தான் வெளைச்ச இருக்கும்.” சொல்லிக்கொண்டு இருக்கும்போதே பட்டென்று அவருக்குள் ஒரு குலைவு தென்பட்டது. “ அப்பிடிலாம் நாலு பேருக்கு மதிப்பா, மாசூலு வைச்சிருந்துட்டு இப்ப ஊட்ல குந்தியிருக்க முடியாமதான் இப்பிடி வந்து பில்லுபொடிய அரிச்சி, புழுதியப் போட்டுக் கௌறி... பொழப்ப ஓட்ட வேண்டிதா இருக்கு.”

பெலாக்காய்களைப் பேசி முடித்துவிட்டு, எல்லோரும் கோயிலுக்குக் கிளம்ப ஆயத்தமான நேரம், முதலியாருக்கு அடி மறைத்து வந்து போட்டபடி கிடந்த படல்மேல் ஓடியது. காரமுள், மௌாரி மௌார் போட்டு கிட்டிப்பிடித்து கட்டப் பட்டிருந்தாலும் பிடித்து இழுத்துப்போகத் தோதாய்,

பெரிய மூங்கில் முள் ஒன்றை வெட்டிப் போட்டுக் கட்டப்பட்டிருந்தது. மறிச்சியின் சனிமூலை யில் நின்றிருந்த மூங்கில் புதையில் வெட்டுப்பட்ட அடிக்கட்டையும், மேலே உருவி இழுத்ததில் ஒடிந்த முட்களின் வதங்கலும் தெரிந்தது.

“ என்னாப்பா, முழுங்கியில போயி வெட்டி வைச்சிருக்கற...” அதிர்ச்சி அடைந்தவராய் முதலியார் கேட்டார். ராசோக்கியத்திற்கும் கூட அதிர்ச்சிதான். பத்திரத்தில் மா, பெலா, கொய்யா மரங்களை யெல்லாம் காட்டியவர் அவருடையதாக இருந்தால் இந்த மூங்கிலையுமா விட்டுவைத்திருப்பார் என்று நம்பித்தான் வெட்டி விட்டார். கடைசியில் எதுக்கு கைய வைச்ச’ என்கிற மாதிரி இப்போது கேட்கையில் அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. மெல்ல தயங்கித் தயங்கிச் சொன்னார் “ கெழக்கால எங்க மச்சாம் முந்திரி நேர் மேற்குல இருக்கறதால அவுரு வைச்சிருப்பாருன்னு நெனைச்சி வெட்டிட்டன். இல்லன்னா...”

முதலியார் ரொம்பவும் நையாண்டியாய் சிரித்துக்கொண்டே சொன்னார் “ யாரு சின்னத்தம்பியா... வைப்பாரு வைப்பாரு... நேர் மேற்கு இல்ல... இப்பிடியே நேர் கெழக்கு. திடீர்குப்பம் ஒட்டத் தெருவுல தான் வைப்பாரு, வைச்சிக்கிட்டும் இருப்பாரு...” சொல்லிய படி மறிச்சியின் வழியாய் ஏரிப்பக்கம் போய்க்கொண்டிருந்தார்.

பின்னால் என்ன சொல்வதெனத் தெரியாத திகைப்பில் ராசோக்கியத்தைப் பார்த்துக்கொண்டே சிவப்பிரகாசம் போக, இவருக்குக் குழப்பமான குழப்பம். ‘ திடீர்குப்பத்துல ஒட்டத் தெருவுலயா...’ கலவரத்தோடு நின்றுகொண்டிருந்தார்.

பூமாவும் மலரும் மடி நிறைய ஈச்சம் பழங்களுடன் வந்தவர் கள், ஏதேச்சையாய் தோப்பிலிருந்து ஏரிப்பக்கம் போகிறவர்களைப் பார்த்தார்கள். குறிப்பாய் மணியைப் பார்த்த மலருக்கு உள்ளுக்குள் படபடவென அடித்துக்கொண்டது. கூப்பிட்டாள் “ அண்ண...”

பின்னால் போய்க்கொண்டிருந்த மணி நின்றார். “ என்னா பாப்பா...” “ ஈச்சம்பழம் வேணுமா அண்ண...” கேட்டுக்கொண்டே போனாள். “ நாங்க போய்க்கிட்டியே இருக்கறம் வா...” சிவப்பிர காசம் போகவும், மணியும் ரெண்டு தப்படி எடுத்து வைத்து திரும்பி எதிர்க்க வந்தான்.

கையில் சேரை பழங்களை அள்ளிக்கொடுத்து அவனும் வாயில் போட்டு ருசித்த நேரம்... துண்டை நீட்டினாள். “ இது ஒங்க துண்டுதான அண்ண. பூவுக்காரன் கதவுத் தட்டியில கெடந்துது.”

அவனுக்கு ஒரு நிமிடம் அப்பிடியே சிவுக்கென்று ஆத்திரம் எகிறியது. “அந்தத் தேவுடியாள இனிமே செருப்பால சாத்தனாதான் சரிப்படுவா. ராத்திரிக்கி ஆவுட்டும்.”

*

67

“ நீ ங்க போயி சாப்புடுங்கப்பா, நா அப்பறமா வந்து சாப்புட்டுக்கறன்...” ராசோக்கியம் சொல்லிவிட்டு திரும்ப கட்டிலில் சுருண்டு கொள்ளவும், பூமாவுக்கும் மலருக்கும் அதிர்ச்சியாகி விட்டது. கொஞ்ச நேரத்திற்கு முன்பும் இதையே சொல்லி, அவர்களும் சாப்பிட்டு வந்துவிட்ட பிறகும், அவர் அதையே சொல்லிக் கொண்டிருந்தது, குழப்பமாக இருந்தது.

பாஞ்சாலையும் எழுந்து வந்து சொன்னாள் “ ஏந்திரிச்சி வந்து சாப்புடு... என்னா ஒடம்புக்கா சரியில்ல...”

“ ஒடம்பு என்னா ஒடம்பு. என்னைக்கி ஊர எடுக்கறதுக்கு கொடிய கொண்டாந்து நட்டானுவுளோ அன்னைக்கே ஒடம்பு பூட்டுது. இனிமேலா போவப்போவுது. எனுமோ கத சொல்லுவாங்கள கொடும கொடுமன்னு கூத்தாடிக்கிட்டு போச்சாம் அங்க ரெண்டு கொடும அவுத்துப் போட்டுக்கிட்டு ஆடுச்சாங்கறமாதிரி, நம்ப பாடு பெரிய பாடுன்னு இங்க வந்தா, இங்க நடக்கறது கேடுபாடா இருக்குங்கறத நெனைச்சாதான்...” ராசோக்கியம் விசனத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

வாசலில் நின்றுகொண்டிருந்த தங்கப்பழத்திற்கு சுருக்கென்று உள்ளுக்குள் ஏதோ குத்தியது. பாஞ்சாலை அண்ணங்காரர் சின்னத் தம்பியை பத்திதான் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொண்டு சொன்னாள் “ எனுமோ பொறந்த நோறு பொங்க வைச்சி போன்னாலும் போவாதுங்கறமாதிரி அவரு குடியிலியே பொழுத ஓட்டிட்டாரு. இனிமேலு பட்டு என்னா சொல்லி என்னா பண்ணப் போவுது” இன்னும் ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தாள்.

ராசோக்கியத்திற்கு அவள் சொல்வது எதிலும் யோசனை ஓடவில்லை. ‘ திடீர்குப்பத்துல ஒட்டத் தெருவுல வைப்பாரு. இப்ப வைச்சிக்கிட்டும் இருப்பாரு’. திரும்பத் திரும்ப ஆறுமுக முதலியார் சொன்னதே ஓடிக்கொண்டிருந்தது. முந்திரியில் அவர் சொன்ன அடுத்த கணமே ராசோக்கியத்திற்குப் புரிந்து விட்டது. சின்னத்தம்பி வீட்டுக்கு நேரந்தாண்டி வருவதற்கும் பெரும்பாலான நாட்கள் வராமல் போவதற்கும் குடி மட்டும் காரணமில்லை, கூட இந்தப் பழக்கமும் இருப்பதால்தான்.

நினைக்க நினைக்க எதுவோ நெஞ்சுக்குள் வந்து அழுத்துகிற மாதிரியே

இருந்தது. ஆனால் எல்லாவற்றிற்கும் அணைபோட்டு நிற்கிற தங்கப்பழத்தை அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. ‘ ஆளு போற போக்கு சரியில்ல...’ எனத் திரும்பத் திரும்பச் சொல்லி ‘ புள்ள கல்யாணத்தப் பாருங்க...’ என்று சொல்கிறாளே தவிர ‘ ஆளு போற போக்கு சரியில்ல, அவுர கூப்புட்டுக் கண்டிச்சி வையி, விசாரி, என்னான்னு கேளு’ என்று ஒருநாளும் சொன்னதில்லை. சின்னத் தம்பியிடம் இவர் கேட்டுக் கொண்டிருக்கும்போது சமாசம்மந்தம் இல்லாமல் அவள் வந்து பேசி வலிந்து தன்னை முந்திரிக்கு அனுப்பிவிட்டது ஞாபகத்துக்கு வந்தது.

இரவு பத்துமணிக்கான சங்கு கிழக்கே நெய்வேலியில் அடிப்பது கேட்டது. பூமா அழுத்திச் சொன்னாள் “ நாங்கள்லாம் சாப்புட்டம்பா... நீங்கதான் சாப்புடணும்.”

வேண்டாவெறுப்பாய் எழுந்து வீட்டுக்குள் போனார். பூமா போட்ட சோற்றை எதுவும் சொல்லாமல் சாப்பிட்டு முடித்தார். தங்கப்பழம் உள்வீட்டில் போய்ப் படுத்திருந்தாள். நகர்ந்து எட்டத்த குந்தியபடி மலரிடம் கேட்டார் “ அம்மா தூங்கிட்டுதான்னு பாரும்மா.”

எல்லோருக்கும் பட்டென்று ஒரு கலவரம். ‘ எதுக்கு அம்மாவ...’ மலர் உள்ளுக்குள் யோசித்தபடியே எழுந்தாள். அதற்குள் தங்கப்பழமே எழுந்து வந்துவிட்டாள் “ என்னா அண்ண...”

“ இப்பிடிக் குந்தும்மா...” தங்கப்பழத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல் சொன்னார். தங்கப்பழம் குழப்பமாக சுவரோரம் குந்தினாள். ராசோக்கியம் கறாராக கேட்டார் “ நாங் கேக்கறதுக்கு மறைக்காமச் சொல்லு. நம்ப சின்னத்தம்பிக்கு திடீர்குப்பத்துல என்னா வேல...”

ஈட்டியை நேருக்கு நேர் நெஞ்சில் பாய்ச்சிவிட்ட அதிர்வில் தங்கப்பழம் அப்படியே வெலவெலத்துப் போய்விட்டாள். கண்களில் கலகலவென்று இறங்கியது. அதேபோல் மலரும் கலங்கிக் கலகலத்துப் போய்விட்டாள். தங்கப்பழம் சொல்வதற்கு முயன்று முயன்று தேங்குகிறாள். தத்தளித்துக்கொண்டு வார்த்தைகளுக்கு முன்னே தாண்டிக்குதித்து அழுகை மறித்துக்கொண்டு நின்றது. தங்கப்பழம் கண்ணீரும் கம்பலையுமாய் சொல்லச் சொல்ல ராசோக்கியத்திற்கு உள்ளுக்குள் காட்சியாய் ஓடிக்கொண்டிருந்தது.

“ இது எம்மாம் நாளா நடக்குது?” தலையை ஆட்டி ராசோக்கியம் நிதானமாகக் கேட்டார். குரலில் கனம் கூடியிருந்தது.

“ மின்னலாம் இல்ல அண்ண. இப்ப ஒரு வருசமாதான். பாக்கறவங்க வந்து சொல்றப்ப உசுரு போவுது. ஒரு பொட்டப் புள்ளய வைச்சிக்கிட்டு ஏங் காலம் எப்பிடிப் போவும்னு தெரியல...” கோவென்று அழுதாள்.

“ இம்மான்லாம் நடக்குத. ஏங்கிட்ட சொல்லலாமில்ல...” சத்தம் போட்டார்.

“ அசிங்கப்பட்டுக்கிட்டுதான் அண்ண சொல்லுல...” தலை குனிந்தபடி கண்ணீர் வழியச் சொல்லிக்கொண்டிருந்தாள். மலரும் அழுதபடியே குந்தியிருக்க, பூமாவும் பாஞ்சாலையும் என்ன சொல்வதெனக் குழம்பத்திலிருந்தார்கள்.

“ சரி வுடு. இனிமே நா பாத்துக்கறன். நீங்க போய்ப் படுங்க...” தீர்மானமாய் சொல்லிவிட்டுப் போய் கட்டிலில் படுத்தார்.

பூமாவும் மலரும் போய்ப் படுத்துக்கொண்டார்கள். அழுது கொண்டே குந்தியிருந்த தங்கப்பழமும் பாஞ்சாலையும் இருந்த இடத்திலேயே சுருட்டிக் கொண்டார்கள். பாஞ்சாலைக்கு நெஞ்சே வெடித்து விடுகிறமாதிரி ஓர் இறுக்கம். தனக்கு முன்னே தன் நேரம் இங்கு வந்து குந்திக்கொண்டு படுத்துகிற பாடு. தாங்க முடியாத விசனத்தில் அவள் வெகுநேரம் தூங்கவே இல்லை.

ராசோக்கியத்திற்கும் அதே நிலைதான். கண்ணை இழுத்துக்கொண்டு போகிற மாதிரியான நேரம். வாசலில் யாரோ நிற்பது மாதிரி தெரியவும் திடுக்கிட்டு எழுந்தார். தங்கப்பழந்தான் போர்த்தியபடி இருட்டில் நின்றுகொண்டிருந்தாள்.

“ என்னாம்மா...” பதற்றத்தோடு கேட்டார்.

“ அவன் ஒரு கொணங்கெட்டவன் அண்ண. அவசரப்பட்டு கடும்புடியா எதாவது கேட்டுடாத அண்ண. அவம் பாட்டுக்கு மனங்கெட்டாப்ல போதையில ஒண்ணுகெடக்க ஒண்ணு செஞ்சிக் கிட்டான்னா, நானும் ஏம் புள்ளையும் நடுத்தெருவுல நின்னுடுவம் அண்ண...” கண்களைக் கசக்கியபடி கெஞ்சிக்கொண்டிருந்தாள்.

ராசோக்கியத்திற்கு முன்பைவிடவும் பாறாங்கல்லைத் தூக்கி வைத்தமாதிரி நெஞ்சு கனக்க ஆரம்பித்தது.

*

68

நடையில் பூமாவும் மலரும் படுத்துக்கொண்டார்கள். உள்வீட்டில் தங்கப்பழமும் தோட்டத்து வாசப்படியில் தலை வைத்து பாஞ்சாலையும் முடங்கிக்கொண்டார்கள். வெளியே கொட்டாயில் கட்டில் போட்டு ராசோக்கியம் படுத்துக் கிடந்தார். சின்னத்தம்பி இன்றைக்கும் வீடு திரும்பவில்லை. நேற்றிரவு தங்கப்பழத்திடம் பேசிய பிறகு மனக்குழப்பம் கூடிவிட்டது; இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்ற கலக்கத்திலிருந்தார் ராசோக்கியம்.

நடையில் பேச்சரவம் கேட்டதும், பாஞ்சாலைக்கு அசந்த கண் திறந்து விழிப்பு தட்டியது. வழக்கம் போல மலரும் பூமாவும் குசுகுசுவெனப் பேச ஆரம்பித்திருந்தனர். அவளுக்கு எரிச்சலாகப் போய்விட்டது. முதல்நாள் இரவில் நடந்த கண்காட்சி, அழுகை... தன்னாலயே இன்னும் மீண்டு வரமுடியாத நிலையில்... அப்பனின் முறையற்ற போக்கை உடன் மறந்துவிட்டு இப்படிப் பேச்சும் சிரிப்புமாய்... இந்த மலர் பிள்ளை.

தொடர்ந்து மலர் ஊர் கதைகளை அளந்து கொண்டிருந்தாள். தோழிகளின் வில்லங்கமான ரகசியங்களை சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள். கடந்து கற்பகம் கடலூர் ரெடிமேட் கடைக்குப் போய் பிரா எடுத்து வந்த கூத்தைச் சொல்லி சிரித்ததும், பூமாவுக்கு, அந்த அந்தரங்கப் பேச்சு பிடிக்கவில்லை. உடனே பேச்சை மாற்றினாள். “ அது கெடக்குட்டும் ஒரு வெடியபோடு பாப்பும்...”

“ வெடியா...” மலர் சற்றே யோசித்து சொன்னாள்.

‘ வலையில்லாத மீனு

வெலையில்லாத வாங்கி

நா ஆயக்குள்ளேயும் பத்தினி

அரியக்குள்யேயும் பத்தினி

அண்ட வூட்டுக்காரங்களுக்கு

பத்துப் புள்ள பெக்கற வரைக்கும் பத்தினி

என்ன அவுசாரின்னு சொன்னா

அடிப்பன் தொடப்பக்கட்டையால’

பூமாவுக்கும் சிரிப்பு தாங்க முடியவில்லை. ‘ அண்டவூட்டுக் காரங்களுக்கு பத்துபுள்ள பெக்கறவ எனுமா பத்தினியாவா. அதுக்கே தொடப்பக்கட்டையால...’

இன்னும் விழித்துக் கொண்டுதான் கிடக்கிறேன் என எச்சரிக்கை செய்கிற மாதிரி பாஞ்சாலை, இயல்பாய் இருமுவது போல் இருமி சத்தத்தைக் காட்டியபடி புரண்டு படுத்தாள். கட்டிலில் தூக்கம் வராமல் புரண்டு படுப்பதுபோல், கட்டிலின் கயிறு இறுகுகிற சத்தமும் கேட்டது. ஆனால் எதையும் பொருட்படுத்தாமல் இரண்டும் சற்று சத்தமாகவே சிரித்து குசும்பிக் கொண்டிருந்தன. இதையும் மீறி கண்ணை இழுத்துக்கொண்டு போகிற நேரம், குபீரென்று இரண்டுக்கும் பெரும் சிரிப்பு.

பாஞ்சாலை எரிந்து விழுந்தாள். “ ஏண்டி எத்தினி நாளு சொல்றன். பன மட்டையில மூத்தரம் பேஞ்சாப்ல படுக்கையில என்னாடி பேச்சும் சிரிப்பும்...”

பூமா பொட்டென்று வாயை அடக்கியது. ஆனால் வழக்கத் திற்கு மாறாக மலர் பதிலுக்குச் சொன்னாள் “ அட வுடன் அத்த. எத்தினி நாளைக்கி பேசிக்கிட்டு இருக்கப் போறம்.”

தங்கப்பழமும் தூங்காமல் கிடந்திருப்பாள் போலும். உள்ளிருந்து சத்தம் போட்டாள். “ என்னாடி என்னா. சின்னவங்க பெரியவங்கன்னு இல்லாம வார்த்த குடுத்துக்கிட்டு. வரவர நாக்கு நீளுது. அடக்கி வையி சொல்லிட்டன்.”

பாஞ்சாலை எதிர்பார்க்கவில்லை. அடங்கியது மாதிரி அமைதி காத்திருந்த பூமா, வெடுக்கென்று சொன்னாள் “ நீ குடுத்து வைச்சவ. ஒனக்கு நாக்கு நீளுதாம். யாருகிட்ட வேண்ணாலும் நாக்கால மூக்கத் தொடற பந்தியத்துக்கு போவலாம். இல்ல மலரு...”

துள்ளிக்குதிக்காத குறையாய் இரண்டும் சிரிக்கின்றன. பாஞ் சாலைக்கு பொறி பறக்கிறது. இங்கு வந்த பிறகு யாரையும் சட்டை செய்யாத அவளின் போக்கு அப்படியே தொடர்ந்து நாளைக்குப் போகிற இடத்திலும் தொற்றிக்கொண்டு விட்டால்...?

வெளியே பூனை கத்துகிற சத்தம் கேட்டது. பாஞ்சாலை திடுக்கிட்டு எழுந்து குந்தியபடி கேட்டாள் “ ஏண்டி அந்த குஞ்சித்தா கோழிய கவுத்தியா...”

“ க்கும்... மறந்துட்டம்மா...” பேச்சையும் சிரிப்பையும் அப்படியே விட்டுவிட்டு பதற்றமாய் எழுந்து வெளியே வந்தாள். கிட்ட வரவும் பாஞ்சாலை வளைத்துக் கொண்டுவிட்டாள். உள்ளே கிடந்த காந்தாளத்தையெல்லாம் ஒன்று கூட்டி, ஓங்கி ஒன்று வைத்தாள். “ நாம எங்கேர்ந்து எதுக்கு வந்துருக்கமுன்னு கறியில தைக்காம திமிர்கொண்டு போயி பேசிக்கிட்டு... மாட்டு மேல கோழி மேல எங்கியாவுது ஒனக்கு ஓசன ஓடுதா?”

வகையாய் சூத்தாம்பட்டையில் விழுந்தது அடி. நிலை குலைந்து போய்விட்டாள் பூமா. இவ்வளவு காலத்தில் யாரும் அவளைத் தொட்டு அடித்ததில்லை. அதுவும் இங்கு வந்திருக்கிற இடத்தில் மலர் முன்பாக அடித்தது அவளுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. ராசோக்கியமும் எழுந்து வந்து சண்டை போட்டார். “ ஏம்மா, வூட்ல இருக்கற ஒரு பொட்டப் புள்ள கோழி என்னாச்சி, மாடு என்னாச்சின்னு பாக்காம இருந்தா என்னாம்மா அர்த்தம்.”

ராசோக்கியம் கூடச்சேர்ந்து சத்தம் போட்டதும் பூமாவுக்குத் தாங்கவில்லை. குஞ்சுகளோடு கோழியைப் பெரிய கழிக் கூடையில் கவிழ்த்துவிட்டு உள்ளே வராமல் மௌனமாக சுவரோரத்து இருட்டில் போய்க் குந்திக்கொண்டாள். கொஞ்சநேரம் கழித்து பாஞ்சாலை எட்டி அவளைப் பார்த்தாள். ஆனால் அவளைப் பொருட்படுத்தாத மாதிரி சிலையைப்போல் அசையாமல் குந்தியிருந்தாள்.

படுத்துக்கிடந்து பார்த்துவிட்டு மலர் வந்து கூப்பிட்டாள் “ வா பூமா. உள்ள வந்து படு.”

“ நா வல்ல. நீ போ...” குரல் எப்போதுமில்லாதபடிக்கு கறாராக இருந்தது.

பாஞ்சாலைக்குக் கடந்துவிட்டது. வேகமாக எழுந்து சுவரோரம் கிடந்த விளக்கமாற்றை எடுத்துக்கொண்டு கிட்டப் போனாள். “ இப்ப உள்ள வந்து படுக்கிறியா... இல்ல இந்த வெளக்க மாத்தால வெலா கோலுட்டுமா... ”

“ எதுக்கு இப்ப அதுகிட்ட போயி சூத்த அடைச்சிக்கிட்டு கத்தற...” ராசோக்கியம் கிட்டவந்து பாஞ்சாலையை அதட்டிவிட்டு பூமாவிடம் சாந்தமாகச் சொன்னார் “ என்னாம்மா இதலாம். ஏந்திரிச்சி உள்ளே போய்ப் படும்மா...”

அவர் செக்கும் செல்லுபடியாகவில்லை. ராசோக்கியத்திற்கு வரவர அவளின் செய்கை புதிதாக இருந்தது. எப்போதும் எவ்வளவோ பொறுப்பாக

இருக்கிறவள், இங்கு வந்த பிறகு எதன் மீதும் அக்கறையில்லாமல் அடியோடு மாறிவிட்டது அவருக்குக் கலவரமாக இருந்தது.

தங்கப்பழமும் வெளியே வந்து சத்தம் போட்டாள் " என்ன புள்ள. என்னா இப்பதான் மோடி வைச்சிகிட்டு இருட்டுல குந்தி யிருக்கிற. ஒரு பெத்த தாயி ஒரு தட்டு தட்னதுல அப்பிடியே பொத்துக்கிட்டுப் பூட்டுதா..."

எதற்கும் அசங்கவில்லை. மலர்தான் சமாதானமாய் பேசினாள். " சரி வல்லன்னா வுடுங்க. நாங்க வெளியில இங்க வாசல்லியே படுத்துக்கிறம்" சொன்னதோடு இல்லாமல் உள்ளே போய் பாயை எடுத்துவந்து நிலா வெளிச்சத்தில் வாசலில் போட்டாள். அவ்வளவுதான்.

தங்கப்பழத்திற்கு அந்தக் வேகமும் ஆத்திரமும் எங்கிருந்து வந்ததெனத் தெரியவில்லை. ஆவேசமாய் பாஞ்சாலையின் கையிலிருந்த விளக்கமாற்றைப் பிடுங்கி ஓங்கி ஓங்கி மலரை வைத்து வாங்கினாள். " ஏண்டி ஒனக்கு மதமாடி. அவன்னா வேலைக்கிப் போறன் வேலைக்கிப் போறன்னு குடியும் கூத்தியாளுமா வூட்டுக்கு வராத சுத்திக்கிட்டு உயிர வாங்கறன்னா... ஏண்டி நீ வூட்ல இருந்துக் கிட்டு உயிர எடுத்துக் கொட்டிக்கிற. அத்தராத்திரியில வாசல்ல பாய எடுத்தாந்து போட்டு, மல்லாத்திக்கிட்டு கொம்மாளம் போடுங்க. அக்கம்பக்கத்து சனம் அப்பிடியே மெச்சிக்கும்."

மலர் அப்படியே விக்கித்துப் போய் நின்றுவிட்டாள். பாஞ் சாலையும் ராசோக்கியமும் அதற்குமேல் சொல்வதற்கு எதுவு மில்லாமல் திகைத்துப்போய் விட்டார்கள். அவளின் கோபம் மகள் மேலேயோ பூமா மேலேயோ இல்லாமல் சின்னத்தம்பி மீது ஓடி இன்னும் அடங்காமல் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

தங்கப்பழம் அதே வேகத்தில் ராசோக்கியம் பக்கம் திரும்பினாள் " இங்க பாரு அண்ண. மொட்டையும் மொட்டையும் கூடிக்கிச்சாம் முருங்க மரத்துல ஏறிக்கிச்சாம்ங்கற மாதிரி இதுவோ ரெண்டும் ஒரு எடத்துல இருந்துதுன்னா அனத்தந்தான். நேத்து குளிக்கப் போறன்னு போயி சித்தர ஏரியில ஒரு மடி செந்தாமரப் பூவ பறிச்சிக்கிட்டு வந்துருக்குதுவோ. பூவு குத்துவ எடுத்த அரசகுழியான் வந்து பஞ்சாயத்தம் வைச்சிட்டுப் போறான். தெக்குத் தெருவுல மணி பொண்டாட்டிய சனகாடு பொணகாடா அடிச்சித் தொவைச்சிருக்கிறான். இவதான் கிள்ளிப் போட்டான்னு அவ கேழ்வியான கேழ்வியா வுட்டு அடிக்கிறா. எவ எவங்கூட போனா ஒனக்கு என்னா கெடக்கு. ஒன்னலாம்..." திரும்பவும் விளக்கமாற்றை ஓங்கினாள்.

*

69

பொழுது லேசாய் சாயத் தொடங்கியிருந்தது. கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள் காசாம்பு. " காலையில விடியாத போனது, வந்து சேர்றதுக்கு இம்மாம் நேரமா ஆயிப்போச்சி..." சொல்லிக்கொண்டே ரங்கநாது உள்ளே வந்து பெஞ்சில் குந்தி, " குடிக்கறதுக்கு தண்ணி மொண்டா..." என்றார்.

பின்னாலேயே வந்திருப்பான் போலும், வடிவேலு சைக்கிளை நிறுத்திவிட்டு " மாமா..." என்று கூப்பிட்டபடி உள்ளே வந்தான்.

" ஏதுடா எப்பா இம்மாந்தூரம். வேலைக்கிப் போனப்பறம், எவனுமே திரும்பியே பாக்க மாட்டங்கறானுவோன்னு சொல்லிக் கிட்டு கெடந்தன்." தண்ணீரைக் குடித்துவிட்டு செம்பை அவனிடம் நீட்டினார். " வாப்பா..." காசாம்பும் கூப்பிட்டாள்.

" எல்லாம் எங்க போய்ட்டு வர்றீங்க..."

" அறிவுக்குதாம் சாதகம் பாக்க பெத்தனாங்குப்பம் போயிருந்தம். அங்க ஒரே கூட்டம். பாத்துட்டு இப்பத்தான் வந்தம்." லேசான உற்சாகத்தில் சொன்னார்.

" என்னா சொல்றான்..." வடிவேலும் ஆர்வமாகக் கேட்டான்.

" அவன் என்னா சொல்றான். புரோக்கர் குடுத்த சாதகத்த வைச்சி பாத்தம். தம்பிக்கும் கல்யாண தெசதான் ஓடுது. பொண்ணு சாதகமும் பொருத்தமாத்தான் இருக்கு, எப்ப வேண்ணாலும், காரியம் கூடறதுக்கு வாய்ப்பு இருக்குங்கறான்... சரி நீ வந்த சேதி என்னா, நா பாட்டுக்கும் பேசிக்கிட்டு இருக்கறன்." ரங்கநாது விசாரித்தார்.

" சும்மாதான் வந்தன்..." லேசாய் மழுப்பியது மாதிரி சொன்னான். அவனுக்கு இவ்வளவு நாள் கடந்து அறிவழகனுக்குக் கல்யாணப் பேச்சை ஆரம்பித்திருக்கிற இந்தச் சூழலில் தனது குடும்பச் சிக்கலைப் போய் எதற்குச் சொல்லிக்கொண்டு எனத் தயங்கினான்.

அவனது தேக்கமான முகக்குறிப்பை வைத்து காசாம்பும் கேட்டாள் " ஏம்ப்பா, என்னா சேதி..."

லேசாய் தயங்கியதுமாதிரி ஆரம்பித்தான் “ வூட்ல இருக்கறது தான் ஒண்ணும் சொல்பேச்சி கேக்கமாட்டங்குது எக்கா. நெலம் இருக்கறப்பலாம் வெய்ய தாங்குல ஒடம்பு முடியிலன்னு சொல்லிக் கிட்டு கஞ்சி தண்ணியக்கூட ஆக்கிக் கொண்டாந்து குடுக்காம சண்ட வளத்திக்கிட்டு நின்னுது. இப்ப நெலம்பலமும் இல்ல. வாசத் தலமாட்டுல தண்ணி. மொண்டு காலாகாலத்துல ஒரு வேலைக்கிப் போற ஆளுக்கு சோத்துக் கொழம்ப ஆக்கிக் குடுக்கும்னு பாத்தா, மந்தாரக்குப்பம் பஸ்டாண்டுல பூவுக் கடை வைக்கப்போறன்னு நிக்கிறா...” விசனமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

“ அதாஞ் சரி. எலேய் ஓம் பொண்டாட்டி தேவகி இருக்காள, சில்லாக்கத்திரிடா. இப்ப மட்டும் மேல வெய்ய பாடம் படாம குளுகுளுன்னு ரோட்டோரத்துல குந்தி மொழம் போட்டு பூவ விக்கப் போறாளாமா...” காசாம்பு ஆச்சரியமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“ ராசோக்கியம் இருக்கறவரைக்கும், இந்த வடிவேல் பொண்டாட்டி பஞ்சாயத்த என்னால தீக்கமுடியில மாமான்னு சொல்லிக்கிட்டு கெடப்பான். இப்ப என்னாடான்னா நெலம மாறி நீ பஞ்சாயத்து வைக்கிற மாதிரி ஆயிப்போச்சி போல்ருக்கு. நெலம் பலத்த புடுங்கிக்கிட்டு நம்பள இங்க ரோட்டோரத்துல வுட்டது ஒரு பங்குன்னா, ஓம் பொண்டாட்டி ரோட்லியே போயி நிக்கப் போறங்கறா. சரி வுடு. அதலாம் போயி வேணான்னு மறிக்கவும் முடியாது. மறிச்சாலும் நிக்காது. எந்த நேரத்துல எங்க போயி நிக்கிணும்னு நம்ப தலையில எழுதியிருக்கோ அங்க போயி நின்னு தான் ஆவணும். அது இஷ்டத்துக்கு வுட்டுடு. அதே நேரம் அது கையில காசி அதிகமாத் தேங்காத மாதிரி குடும்பத்த நடத்திக்க.”

“ எங்க மாமா... கையில காசிய கண்டதும் அண்ணனுக்குக் குடு, தம்பிக்குக் குடுன்னு ஆளுவுள கொண்டாந்து நிறுத்திட்டா. அதே மாரி ஏம் பேச்சக் கேக்காத, கடல் மாதிரி பெரிய வூட்டக் கட்ட வைச்சி... இப்பயே அங்க இங்க கைய நீட்னாதான் ஒட்டு ஒட்ற வேலயே நடக்கும் போல்ருக்கு.” எழுந்தான்.

“ சரி வேலயில இருக்கறப்ப, என்னா கெடக்கு. ஒரு லோன கீன போட்டுப் பாத்துக்கலாம். வூட்டு வேலய முடி...” கூடவே வெளியே வந்தபடி சொன்னவர், தெருவில் வெள்ளைச்சி மகன் மணிமாறன் போவது கண்டதும் கூப்பிட்டுக் கேட்டார் “ தம்பி, அம்மா வூட்ல இருக்குதாப்பா...”

அவன் சைக்கிளை விட்டு இறங்கியபடி சொன்னான் “ அப்பாதான்

மண்மோட்டப்பக்கம் ஆடு ஓட்டிக்கிட்டு போயிருக் காரு. அம்மா வூட்லதான் இருக்கு மாமா... வரச் சொல்லுட்டுமா...”

“ வாணாம். ஓம் மாமன் சிகாமணிதான் போவுணும்னு சொன்னான். இருக்கானான்னு பாத்து கூப்புட்டுக்கிட்டு வர்றன்.”

“ வா ங்க...” கையெடுத்துக் கும்பிட்டு நின்ற காசி படை யாச்சியைக் கண்டதும் ரங்கநாதுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. “ கொஞ்ச நேரத்துக்கு மின்னதான் பையங்கிட்ட கேட்டன். ஆடு ஓட்டிக்கிட்டு போயிருக்கார்னு சொன்னான்” சந்தேகமாய் இழுத்தார்.

“ பொழுது போன நேரங்கறதால தே இங்காண்ட ஓடையில தான் அலம்ப அடிச்சிக்கிட்டு நின்னன். மாமன் வர்றங்கறார்னு வந்து சொன்னான். சரி மொதமொத மாத்துக் குடியிருப்புக்கு வந்தப் பறம் வர்றிங்களேன்னு வந்தன்.” ஆளைப் பார்த்தால் மேய்ச்சக்காலி லிருந்து வந்தவர்போல் தெரியவில்லை. எப்போதும் கோவணத்தில் நிற்பவர் குளித்து பளீர் வெள்ளை வேட்டி சட்டை துண்டில் நின்றதும் சிகாமணிக்கு சந்தேகமாக இருந்தது.

வெள்ளைச்சியும் கனத்த உடம்பைத் தூக்கிக்கொண்டு வந்து சிரிப்பும் கையுமாகக் கும்பிட்டாள். “ வாங்க அண்ண. தே இந்தாண்ட தெருவுல இருக்கீங்க. எப்பிடிக் கெடக்கறம், எனுமா இருக்கறம்னு திரும்பிப் பாக்காம இருக்கீங்க...” பேச்சும் சிரிப்பும் செயற்கையாக இருப்பதுபோல் பட்டது. “ வாப்பா...” சிகாமணியையும் கூப்பிட்டாள்.

“ வர்றன்...” சிகாமணியும் இங்கு வந்து வீடு கட்டிய பிறகு இப்போதுதான் அத்தை வீட்டுக்கு வருவது. உயரமாகச் சுவர் வைத்து ஓடுதான் போட்டிருந்தார்கள். கூடத்தில் விரித்துக்கிடந்த பாயில் குந்தினார்கள்.

“ நாங்க வந்து பாக்கறது இருக்கட்டும். நீ ஒங்க அண்ணன வந்து பாக்குலன்னு ரொம்ப வெசனமா இருக்காரு.” சமயம் பார்த்து இறக்கினார் ரங்கநாது.

“ என்னா அண்ண பண்றது. நம்ப ஒடம்புக்கு தக்கன நாமதான் நடந்துக்கணும். நம்ப வூட்ல இருக்கற புள்ள படாதபாடு பட்டு ஆஸ்பத்திரியில காட்டி கொண்டாந்து வுடறப்ப அதோட பாத்துப் பதனமா இருந்துக்கணும். அத வுட்டுட்டு திரும்பவும் குடிக்கப் போனா என்னா அர்த்தம். அந்த எரிச்சல்லதான் வந்து பாக்கப் புடிக்கிலிய தவிர, மத்தபடி

எனக்கு என்னா கோவம். என்னைக்கிம் எனக்குச் செஞ்சாலும் செய்யிலன்னாலும் எனக்குப் பொறந்த வூடு இல்லன்னு ஆயிடுமா. இல்ல அண்ணமூட்டு புள்ளதான் எனக்கு மருமொவன் இல்லன்னு ஆயிடுமா...” வெள்ளைச்சிக்கு உடம்பைப் போலவே கனத்த மூளை. எல்லாவற்றிற்கும் பதிலைத் தயாராக வைத்திருந்தாள். குறிப்பாய் ‘ மருமகனில்’ அழுத்தம் காட்டினாள்.

பளீரென்று எரிய ஆரம்பித்த விளக்கைப் பார்த்து கன்னத்தில் போட்டபடி காசி சுவரோரம் குந்தியிருந்தார். ரங்கநாதுதான் பேச்சை ஆரம்பித்தார் “ வேல விஷயமா சிகாமணிதான் பாக்குணும்னு சொன்னான். அதான் வந்து கலந்துக்கிட்டு போவலாம்னு வந்தம்.”

ரங்கநாது சொல்லி வாயை மூடவில்லை. அதற்குள் வெள்ளைச்சி ஆரம்பித்து விட்டாள் “ நானே ஒங்கள வந்து பாக்கலாம்னுதான் நெனைச்சன் அண்ண. தே பங்குனியும் பூட்டுது. சித்தர வையாசி யிலனாச்சும் இந்த பொட்டப் புள்ளைக்கி கல்யாணத்த முடிச்சிருவம்னு போயி சாதகத்தையும் பாத்தன். அம்மான் வழியிலதான் பொண்ணு போவும்னு கெரகம் இருக்குங்கறான். அதோட அங்காண்டையும் எங்க அண்ணனுக்கு தாதோன்னு கெடக்கறது, திடுக்குன்னு ஒண்ணுன்னா நாளைக்கி ஒத்தப் புள்ள அவனும் தனியா நின்னு தெவைச்சிடுவான். அதான் கிட்டின்சுல ஒரு நாளு தேதிய பாத்து முடிச்சிடுவம்னு, எங்க அசலாம்பு அண்ணிகிட்ட ஒங்களப் பேசச் சொல்லலாம்னு பாத்தன்.”

சிகாமணிக்கு தலையில் இடி இறங்கியது மாதிரி அதிர்ச்சி. ரங்கநாதும் இதை எதிர்பார்க்கவில்லை. உள்ளே திரும்பிக் கூப்பிட்டாள். “ எம்மா அமிர்தம், காப்பிய கொண்டாந்து மாமனக்கு குடும்மா...”

வேலை தொடர்பாய் ஆட்சேபணை இல்லாக் கையெழுத்து கேட்டு வந்திருப்பதை, பெண் பார்க்க வந்திருக்கிற மாதிரியான நிகழ்வாக மாற்றி சாதுர்யமாய் காயை நகர்த்திக் கொண்டிருந்தாள் வெள்ளைச்சி. அமிர்தகலசம் பட்டுப்புடவை கட்டி அவசர அலங்காரத்தில், அதிக வெட்கத்துடன் தட்டில் காபி தம்ளர்களுடன் பூதாகரமாய் வந்து நீட்டினாள் “ எடுத்துக்குங்க மாமா.”

சிகாமணிக்கு ஒருகணம் கண் இருண்டுபோனது. இப்படி யெல்லாம் சூழல் இருக்கும் என்றால் வந்திருக்கவே தேவையில்லை என்கிற மாதிரி தயங்கினான். “ ஏம்ப்பா, எடுத்துக்க. பாப்பாதாம் போட்டுது.” வெள்ளைச்சி சிரிப்பு என்கிற பெயரில் அதம்பினாள்.

குடித்துக்கொண்டே அத்தையின் பின்னால் நின்ற அமிர் தத்தைப் பார்த்தான் அத்தையின் உடல்கட்டையும் தாண்டி, பின்னால் நின்ற அமிர்தத்தின் கனத்த உருவம், கட்டியிருந்த பட்டுப்புடவை வேறு போர்த்தியபடி இருந்ததில் அகலக்கட்டில் இருபுறமும் கூட்டிக்காட்டியது. அவனுக்கு குடித்துக்கொண்டிருந்தது காப்பியாகவே தெரிந்தது.

ரங்கநாதுதான் பெருமூச்சி விட்டபடி தொடர்ந்தார் " என்னா கல்யாணம். நேரங்காலம் கூடி வந்துட்டுதுன்னா நாம்பளே மறிச்சாலும் நிக்காது. அத அப்பறம் பேசிக்கலாம். மொதல்ல வாசோறு, இந்த வேல விவகாரத்த பாத்துமுடிப்பும். நெய்வேலிக் காரனுக்கு நொண்டிமாட்டுக்கு சறுக்கனது வாட்டம்னு நாளு கடந்து போச்சின்னா அப்பிடியே அவுத்து வுட்டுடுவான்." சொல்லிக்கொண்டே சிகாமணியைப் பார்த்தார். அவன் ஒன்றும் பேசாமல் சொல்லிவைத்தமாதிரி ஒரு லட்சத்தை எடுத்து அவர் கையில் கொடுத்தான்.

" எதோ நாலோ அஞ்சோ நெய்வேலிக்காரன் குடுத்தாம் போல்ருக்கு. இதுல அந்த சின்னப்புள்ள நோட்டிசு குடுத்ததுக்கு, உத்தண்டராயர வைச்சி ஒண்ணே ஒண்ணே காலோ குடுத்துருக்காம் போல்ருக்கு. இது இல்லாம ஊத்தாங்காலு புள்ள ராசாமணி வேற இருக்கு. அப்புறம் அப்பனுக்கு அதுஇதுன்னு புள்ள பறவாப் பறக்கறது தெரிஞ்ச கத தான். என்னாதான் செலவர்ன இருந்தாலும் வெறுங்கையவும் மொழம் போட முடியாது. இதுல பெரிய ரூவா ஒர்ரூவா இருக்கு. எடுத்துக்கிட்டு வேல குடுக்கறதுல எனக்கு ஆட்சேபணை இல்லன்னு எழுதிக் குடு."

அமிர்தமும் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. விறுவிறுவென உள்ளே போய்விட்டாள். வெள்ளச்சி இறங்கிப் பேசினாள். " பணம் என்னா மாமா பணம். எனக்கும் புள்ள தெவைக்கறது தெரியாம இல்ல. எங்க அண்ணன வுடு. கண தாண்டிப் பூட்டாரு. ஆனா எங்க அண்ணியும், அண்ணம் மொவனும் என்னியும் ஏம் பொட்டப் புள்ளையையும் நெனைச்சிப் பாக்கணும்."

வெள்ளைச்சிக்கு திடுமென குரல் கரகரத்து கண்களில் துளிர்த்தது. " என்னா ஒடம்பு வாட்டமோ, நானும் ஆஸ்பத்திரி அங்க இங்கன்னு இட்டுக்கிட்டு போயி அத காட்டியும் பாத்துட்டன். ஒடம்புல எந்தச் சிக்கலும் இல்ல, ஒடம்பு ராசி இப்பிடிங்கிறான். நமக்குத் தெரியுது ஒடம்புல எந்தச் சிக்கலும் இல்ல, ஆத்தா மாதிரி ஒடம்பு கொஞ்சம் தாட்டிக்கா இருக்குன்னு. ஆனா மொகந் தெரியாம புதுசா வர்றவங்கிட்ட போயி இதச் சொல்ல முடியுமா. அதனால தம்பிக்கின்னா எல்லாந் தெரியும். எல்லாத்துக்கும் மேல எனக்கும் ஏம் புள்ளைக்கும் எங்க அண்ணங் குடும்பத்துல செய்ற ஒதவியாவும்

இருக்கும். அதனால...”

சற்றே இழுத்தமாதிரி இடைவெளி கொடுத்துத் தொடர்ந்து பேசினாள். “ ஏதோ ஆண்டவன் புண்ணியத்துல பையனுக்குப் படிப்பு முடியவும், நெய்வேலியில வேல குடுக்கவும் சரியா இருந்து போச்சி. நெலத்துக் காசி வூடு கட்னது போவ அப்பிடியேதான் இருக்கு. ரெண்டு லட்சம் பணம் தர்றன். ஒங்க பணத்தையும் சேத்து மொத்தமா மூணு லட்சத்தையும் கொண்டுபோயி நடுப்புள்ள ராசாமணிகிட்ட குடுத்து மொதல்ல கையெழுத்த வாங்கியாங்க. அப்பிடியே கையோட கையா காரியத்த வையிங்க. வேலைக்கி மொட இல்லாம நானும் கையெழுத்துப் போட்டுத் தர்றன். போவுட்டும்.” இன்னும் ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தாள். சிகாமணி நட்ட தலையை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. ரங்கநாதும் பேசவில்லை. பேசுவதற்கு எதுவும் அவருக்கு வாய்ப்பு இருக்கவில்லை. பெண்ணைக் கட்டிக்கொண்டால் இரண்டு லட்சம் பணமும் கொடுத்து கையெழுத்துப் போட்டுத்தரத் தயார். இல்லையென்றால் கையெழுத்துமில்லை, காலெழுத்துமில்லை.

வெள்ளைச்சியின் முடிவையும் குறை சொல்ல முடியாது. சிறுவயதிலேயே உடம்பு சற்று கூடுதலாய்ப் பூரித்துப் போய் நிற்கும் தன் மகளை சிகாமணியே கட்டிக்கொள்ள யோசித்தால், வேறு யார்தான் கட்டிக்கொள்வார்கள்? அதுவும் தன்னால் தன் கையெழுத்தால் ஒரு வேலையே, வாழ்க்கையே கிடைக்கவிருக்கிற போது இந்தக் கோரிக்கையை அவள் வைப்பது தவறு என்றும் சொல்லிவிடமுடியாது. இந்தச் சிக்கலே இல்லையென்றாலும் ‘ ஏம் பொண்ணக் கட்டித்தான் ஆவணும்’ என்று சொல்லவும், மீறினால் தகராறு செய்யவும் உரிமை இருக்கிறது.

எழுந்தார். “ சரி, நா அந்த ஊத்தாங்காலு புள்ளைகிட்ட போயி அது என்னா சொல்லுதுன்னு கேட்டுக்கிட்டு, அசலாம்பு கிட்டயும் என்னா பண்ணலாம்னு கலந்துக்கிட்டு வர்றன். வாப்பா...”

வெளியே வந்தார்கள். சிகாமணிக்கு மனசெல்லாம் இருள் பாவி இனிமேல் எப்போதும் விலகவே விலகாது என்கிற மாதிரி கனத்துக் கிடந்தது.

*

70

செங்கல்ராவு வெயில் காய்ந்துகொண்டு குந்தியிருந்தார். சிண்டு வைத்திருந்தபோது இருந்த கம்பீரமும் எடுப்பும் மொட்டையடிக்கப்பட்டதில் சுத்தமாய் அற்றுப்போய் மாறிப் போயிருந்தார். உடல் நலிந்து ஆளே மெலிந்து கிடக்கிற நிலையில், முடி வேறு ஆளை ஒணத்திக் கொண்டிருக்க வேண்டாம் என்றுதான் அசலாம்பு, ரத்னவேலுவை வீட்டுக்கே வரவழைத்து மொட்டை யடிக்கச் செய்திருந்தாள். இடைஇடையே தொடர்ந்து இருமல் வந்து கொண்டிருந்தது. இருமும் போதெல்லாம் பழுவு எலும்புகள் வெளியே புடைத்துக்கொண்டு தெரிந்தன. போடுகிற ஊசிகளும் மாத்திரைகளும் எந்தப் பலனையும் கொடுப்பதாகத் தெரியவில்லை. ராமச்சந்திரன் டாக்டர் கூப்பிட்டு கடுமையாகச் சொல்லிவிட்டார். ஈரல்குலையிலிருந்த காயம் உள்கொண்டு ஆறாமலிருந்தது சீழ் வைத்து மேலே மேலே குடித்துக் குடித்து, இனி அறுவை சிகிச்சை செய்தாலும் தேறுவது சிக்கல்தான். கொடுக்கிற மருந்துகளைச் சாப்பிட்டுக்கொண்டு, குடி திசையையே நாடாமலிருந்தால் ஏதோ பொழுதை ஓட்டிக்கொள்ளலாம்.

சைக்கிளை தள்ளி வந்து நிறுத்தியபடி சிகாமணி தயாராக இருந்தான். கதவை வெறுமனே சாத்திவிட்டு வெளியே வந்த அசலாம்பு, குந்தியிருந்த செங்கல்ராவிடம் சொன்னாள். “ உள்ளூர்ல ஓஞ் சேனைவோ சொல்றத கேட்டா, கிரீடத்த சொயிட்டி வைக்கறங்குதுவோ. ஊத்தாங்கால்ல இருக்கற நடுசேனையையும் ஒரு தடவ கேட்டுட்டு வந்துடறம். செத்த அங்க இங்க போறவங்கிட்ட சொல்லி, தண்ணிய கிண்ணிய வாங்கிக் குடிச்சிட்டு ஏந் தாவ அறுத்துடாத. போனாப்ல வந்துடறம்.”

மாற்றுக்குடியிருப்பிலிருந்து சைக்கிளிலேயே புறப்பட்டார் கள். பேருந்து நிறுத்தத்தில் நாலு முழம் பூவு மட்டும் வாங்கிக் கொண்டாள். நேற்று இரவே வெள்ளைச்சி சொன்ன தகவல்களை, ரங்கநாது வந்து கலந்தார். ஊங்கொட்டிக் கேட்டுக்கொண்டிருந்த அசலாம்பு சிகாமணியைக் கலக்காமல் ஒரு யோசனை பண்ணினாள். உள்ளூரில் இருக்கும் அமிர்தத்தைவிட அவளுக்கு ஆயிரம் மடங்கு பாசம் ஊத்தாங்காலில் இருக்கும் சுமதி மீது. அவளை மருமகளாய்க் கொண்டுவந்து விடவேண்டும் என்றுதான் அவளுக்கு உள்ளூர விருப்பம். ஆனால் திங்கிற சோறாய் இந்த வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு, சுமதி வீட்டில் பணங்காசை மட்டும் பெற்றுக்கொண்டு கையெழுத்து போட்டுக் கொடுப்பதாகச் சம்மதித்தால்

வேறு வழியில்லாமல் அமிர்தத்தைக் கூட ஏற்றுக்கொள்ளத் தயாராகத் தான் இருந்தாள்.

ஆனால் ஊத்தாங்காலில் இருப்பவர்கள் என்ன யோசனை யில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால்தான் எதுவாக இருந்தாலும் பேசமுடியும். ரங்கநாதுவையே அனுப்பலாம் என்றுதான் நினைத்தாள். ஆனால் அவர் மறுத்துவிட்டார். ‘ எனுமோ தான் ஆடாட்டாலும், தன் சதையாடும்பாங்க. நீ போயி நேர்ல கேட்டா அதுக்கு ஒரு மரியாத இருக்கும். நீனும் சிகாமணியுமா போய்ட்டு வாங்க...’

ஊத்தாங்கால் போய் வாசலில் சைக்கிளை நிறுத்தியதுமே பறந்து ஓடிவந்து இரண்டும் கட்டிப்பிடித்துக்கொண்டு “ வாங்க அத்த... வாங்க அத்த...” என்று வளைக்கிறார்கள். அசலாம்புக்குத் தாங்க வில்லை. எப்போதுமே அவள் மீது பிரியமாய் இருக்கற பிள்ளைகள் தான். இரண்டுமே வயதுப் பிள்ளைகளாய் ஆன பிறகும் இன்னும் குறையாத பாசத்திலிருந்ததும் மகிழ்ந்து போய்விட்டாள்.

“ வாங்க மாமா...” என்று சிகாமணியைக் கூப்பிட்டதிலும் குறைவில்லாத அன்பும் பாசமும். ஆனால் சிகாமணிக்குதான் இன்னமும் பாவாடை சட்டையிலேயே நின்றுகொண்டிருக்கும் பானுமதியை கண்டதும் அவனையுமறியாமல் இந்த இக்கட்டான சூழலிலும் பூமாவை ஞாபகப்படுத்தியது.

“ வாப்பா வந்து ஒக்காரு...” பட்ராசு கூப்பிடவும் நினைவுகளை அறுத்துக்கொண்டு வந்து பெஞ்சில் குந்தினான்.

“ என்னாடி இப்பதான் நொளுவமாதிரி மேலமேல ஏறிக்கிட்டு” அசலாம்பை வளைத்துக்கொண்டிருந்த இரண்டையும் ராசாமணி சத்தம் போட்டாள்.

“ வுடம்ப்பா. அதுவுளுக்கு திடீர்னு அத்தையப் பாத்ததும் கைகாலு புரியில” பட்ராசும் ராசாமணியிடம் சொன்னார்.

காயலாவில் கிடக்கிற அண்ணனை அக்கறையாய் விசாரித்து, அன்பாய் காபி கொடுத்து, ஆசைபாசையாய் சாப்பிட வைத்து... ஓய்ந்த நேரத்தில்... அசலாம்பு தயங்கித் தயங்கி மெல்ல சொன்னாள்.

கேட்டுக்கொண்டிருந்த ராசாமணி சுற்றி வளைக்காமல் நேரடியாகச் சொன்னாள். உள்ளூரில் வெள்ளைச்சியிடம் போய் கேட்டுவிட்டு வந்த விஷயம் அதற்குள் அவள் காதுக்கு வந்து விட்டமாதிரி பேச்சு இருந்தது. “ எனக்கு ஒண்ணும் ஏம் புள்ளிவுல கட்டிக்குடுக்கறது மாக்காணம் இல்ல.

கண்டங் கண்டன்னு கொத்திக்கிட்டுப் போறதுக்கு ஆளுமேல ஆளு சேதி மேல சேதியுமா வந்துக்கிட்டுதான் இருக்குது.”

ராசாமணி சொல்வது ஏதோ வழிவிடுகிற மாதிரியிருந்ததும் சிகாமணிக்கு பட்டென்று அமிர்தத்தின் உருவம் நினைவில் வந்து, மப்பு போட்டது போன்று உள்ளுக்குள் லேசான கருமை பாவியது.

ராசாமணி சொல்லிக்கொண்டே போனாள் “ இப்பியும் நாங்க ஒண்ணும் ஏம் புள்ளய கட்டிக்கிட்டுத்தான் ஆவணும்னு சொல்லுல. ஆனா இதுவே ரெண்டும் கூட ஆம்பளப் புள்ளிவோ பொறக்காததாலயோ எனுமோ தெரியில மாமன்னா அப்பிடியே உசுரா நிக்கிதுவோ. அதுவும் அந்தப் பெரிசிக்கி வாயத் தொறந்தா சிகாமணி மாமன், சிகாமணி மாமந்தான். எங்குளுக்காக இல்லன்னாலும் பரவாயில்ல. ஏம் பெரிய புள்ள பிரியத்துக்குனாச்சும் அத நீங்க கட்டிக்கிட்டுத்தான் ஆவணும். ஆனா ஏதோ ஒங்க சிக்கல கணக்குல வைச்சி, புள்ள பிரியத்தையும் காரணங் காட்டி வந்த எடத்துல வலினாப் புடிச்சி உம்மப்பட வைக்கிறாங்கன்னும் நெனைக்காதீங்க. ஏம் புள்ள நெறவெளக்கு. நடுவூட்ல நின்னா வூடெல்லாம் நெறைஞ்சிருக்கும். ஆயிரம் கஷ்டம் குடும்பத்துல இருந்தாலும், அந்த வலி வெளியில தெரியாதமாதிரி எணக்கமா எல்லாரையும் அரவணைச்சி குடும்பத்த ஓட்டிடும்.”

என்ன சொல்வதென்று தெரியாத அதிர்வில் அசலாம்பு இடிந்து போய்க் குந்தியிருந்தாள். ஆளாளுக்குமாய் வழியை மறிக்கும் செய்கையால் சிகாமணிக்கும் அதே இடிபாடுகள்தான். கனவு களோடு நின்றிருந்த சுமதியை ஏறிட்டுப் பார்க்க மனமில்லாமல், தயங்கித் தயங்கித் தரையைப் பார்த்துக்கொண்டே அசலாம்பு சொன்னாள் “ சுமதிய கட்டிக்கிட்டு போறதுக்கு எங்குளுக்கும் இஷ்டந்தான். ஆனா உள்ளூர்ல இருக்கற அந்த அம்மாளும் ஏம் புள்ளய நீங்களே கட்டிக்கிலன்னா யாரு வந்து கட்டுவாங்கன்னு பஞ்சாயத்தம் வைக்கிது. அதோட இதுக்குச் சம்மதப்படற மாதிரியிருந்தா கையெழுத்து கியெழுத்துன்னு கிட்ட வாங்கன்னு கறாரா சொல்லுது. அதான்.”

திடுமென ஒரு மௌனம். ராசாமணி, பட்ராசுக்கு மட்டுமல்ல தூணைப் பிடித்துக்கொண்டு நின்ற சுமதிக்கும் பட்டென்று வேரைப் பிடுங்கியது மாதிரி வதக்கம். கலங்கிய குரலில் சொன்னாள் “ மாமன் என்னா நெனைக்கிதோ, அது மனசுக்கு எது சரின்னு படுதோ அது படிக்கு செய்யுட்டும்மா. அதுகிட்ட போயி யாரும் இதுக்கமேல ஏஞ் சம்பந்தமா எதுவும் பேச வேணாம்.”

பெஞ்சில் குந்தியிருந்த பட்ராசு சாமி வந்தவரைப் போல எழுந்தார். ஒருநாளும் இப்பிடி அவர் யாரையும் மூஞ்சியில் அடித்தது மாதிரி பேசியது இல்லை. ஆணி தரும்புகிற மாதிரி கனத்த வார்த்தைகள். “ நீ சும்மாரும்மா...” சுமதியைப் பார்த்துச் சொல்லிவிட்டு வேகமாக சிகாமணி பக்கம் திரும்பினார். “ எனக்கு ஆம்பளப் புள்ளிவோ இல்ல. இதுவுளத்தான் ஆசையா வளத்து வைச்சிருக்கன். இன்னைக்கி ஏம் பெரிய புள்ள ஆசப்பட்ட மாதிரி கல்யாணம் பண்ணிக்க முடியிலன்னா, கையெழுத்து காலெழுத்துன்னு வந்துருக்கிற பாரு இது மட்டும் இல்ல, வேற எதுக்கும் எங்கள எதிர்பார்க்காதீங்க. ஆமா...”

*

71

‘ நிகழும் சாதாரண ஆண்டு சித்திரை மாதம் **20**ஆம் தேதி வெள்ளிக்கிழமை **(05.05.1989)**, விருத்தாசலம் வட்டம் என்.எல்.சி மாற்றுக் குடியிருப்பு, புதுவேப்பங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த ரங்கநாத படையாட்சி - காயாம்பூ இவர்களின் மகன் அறிவழகனாகிய நான், குறிஞ்சிப்பாடி வட்டம் உள்மருவாய் கிராமத்தைச் சேர்ந்த தங்கவேல் படையாட்சி - மல்லிகா இவர்களின் புதல்வி வெற்றிச் செல்வியாகிய தங்களை இன்றுமுதல் எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன். இன்று முதல் குடும்பத்தில் நிகழும் சுகதுக்கங்களை இருவரும் சமமாக பாவித்தும் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்தும் இல்லற வாழ்க்கையை இன்முகமாக நடத்திச் செல்வோம் என்றும் பெரியோர்கள், பெற்றோர்கள் முன்னிலையில் உறுதியளித்து இம் மணமாலையைத் தங்களுக்கு அணிவிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

ர. அறிவழகன் (ஒப்பம்)

டாக்டர் அய்யா பத்திரத்தில் உள்ள வரிகளைப் படிக்கப் படிக்க அறிவழகன் உறுதியேற்பு எடுத்து முடித்து, வெற்றிச் செல்வியின் கழுத்தில் மாலையைச் சூட்டினான். வெற்றிச்செல்வியும் உறுதியளிப்பு செய்து மணமாலையை அறிவழகனுக்குச் சூட்டினாள். பிறகு இருவரும் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டனர். மணமக்களின் பெற்றோர் மங்கலநாணை எடுத்துக்கொடுக்க டாக்டர் அய்யாவின் தலைமையில், புத்தம் புது நேசம் மார்பில் உரச வெற்றிச்செல்வியின் கழுத்தில் அறிவழகன் தாலியைக் கட்டினான். ஒலிவாங்கியில் சங்கத்துக்காரர்கள் “ மணமக்கள் வாழ்க... மணமக்கள் வாழ்க...” வாழ்த்தொலித்தனர்.

தாலி கட்டியதும் எப்போதும் பந்தியை நோக்கிச் சிட்டாய்ப் பறக்கிற சனங்கள், அய்யா தலைமையில் நடக்கிற திருமணம் என்பதால் அசகுலையாமல் குந்தியிருந்தார்கள். வாழ்த்துரைக்க வந்த ஜி.ஆர் டாக்டர், குறள்மணி, உத்தண்டராயர், செம்ப படையாட்சி என எல்லோரும் அய்யா பேசுவதற்கு ஏதுவாக சுருக்கமாக மணமக்களை வாழ்த்திப் பேசி முடித்தனர்.

நிறைவுரையாக அய்யா பேசினார். “ இன்று மணவிழா காணும் தம்பி அறிவழகன் தனிமனிதன் அல்ல. பறந்து விரிந்து கிடக்கிற நம் இனமானச்

சொந்தங்களின் சொத்து. இந்த நெய்வேலி நிலமெடுப்பு, வீட்டுக்கு ஒருவர் வேலை கேட்பு போன்ற போராட்டங்களில் பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்டாலும் தலைமையேற்று நடத்தியது நமது சங்கம்தான். நமது இனமான டாக்டர் ஜிஆர், குறள்மணி போன்றோர் வழிகாட்டுதலில் செம்ப படையாட்சி, உத்தண்டராயர் என மூத்தோர்களின் துணை கொண்டு, இளவல்கள் சிகாமணி, பால்ராசு போன்ற எண்ணற்ற சிங்கங்களின் தோள்களோடு இணைந்து அவர் இந்த இனத்திற்கும் இந்தப் பகுதி மக்களுக்கும் ஆற்றிய பணிகளும் தியாகங்களும் நாம் மறக்கக்கூடியவை அல்ல. கரி படாச்சி போன்ற பாமரர்களும் இந்த நிலமெடுப்பு போராட்டங்களிலும் தொடர் சாலைமறியலிலும் ஈடுபட்டார்கள், இணைந்து போராடினார்கள் என்றால் அதற்கு நம் அறிவழகனின் செயல்பாடுகளும் அணுகுமுறைகளுந்தான் காரணம்.”

அடுத்துப் பேச ஆரம்பிப்பதற்குள் மண்டபத்தின் நடுவில் குந்தியிருந்த கரி படாச்சி நெகிழ்ந்துபோய் எழுந்து அய்யாவைப் பார்த்துக் கும்பிட்டார். கண்களில் நீர்த்துளிகள் பூக்க நின்றவரைக் காட்டி அய்யா சொன்னார் “ தே, கரி படாச்சியும் இருக்கிறார்.”

கரி படாச்சி குந்திக்கொள்ளவும் அய்யா தொடர்ந்தார். “ இன்று நாம் குடும்பத்திற்கோர் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கும் சூழலில், நம் அறிவழகனுக்கு வேலை இல்லை என்று நிறுவனம் கையை விரித்துவிட்டது. ஏற்கெனவே குண்டர் சட்டத்தில் சிறைவாசம், பிறகு இப்போது வேலை இன்மை. ஒரு குடும்பம் தன் நிலபுலங்களை இழந்து வீடுவாசலை விட்டுவிட்டு தன் தலைமகனை சிறைக்கொடுமையையும் அனுபவிக்க விட்டு, வேலை வாய்ப்புக்கும் வழியில்லாமல், புறாக்கூடு போன்று சிறிய குடியிருப் பில் வாழ நேர்கிறபோது உண்டாகிற சிக்கல்களை, சிரமங்களை நான் அறிவேன். அறிவழகனின் இழப்பை வலியை நான் உணர் கிறேன். ஆனால் இதையெல்லாம் தாங்கிச் செல்கிற மனவலிமை அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் உண்டு. ஏனென்றால் இழப்புகள் ஒன்றும் நமக்குப் புதிதல்ல. சாலை மறியல் போராட்டத்தில் இருபத்தியொரு உயிர்களை இழந்தவர்கள் நாம். அந்தக் குருதிச் சுவடுகளின் ஈரம் காயாத சூழலில் நான் திரும்பத் திரும்ப இந்த நிறுவனத்திற்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் நீங்கள் எங்கள் அறிவழகனுக்கு குறிப்பிட்டு வேலைவாய்ப்பை மறுத்தீர்களே, ‘ கிரிமினல்’ பட்டம், அதுபோன்று இனியும் உருவாவதற்கு வழிவகை செய்யாதீர்கள். மண்ணைக் கொடுத்துவிட்டு மக்கிப்போய் நிற்கும் அவர்களின் உணர்வுகளை ஏக்கங்களை செவி கொடுத்துக் கேளுங்கள், நிறைவேற்றி வையுங்கள்.”

அடுத்து இட ஒதுக்கீடு. ஆரம்பித்தார் “ அண்மையில் முதல்வர் அவர்கள் ஒரு அறிக்கையில் சொல்கிறார். டாக்டர் அவர்களே, உங்களுக்கு ஒரு கனி கொடுத்திருக்கிறேன். அது இருபது சதம் என்னும் இடஒதுக்கீட்டு கனி. அந்தக் கனியைச் சுவைத்துப் பாருங்கள் என்று சொல்கிறார். உடனே நான் முதல்வர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கும் கனியைச் சுவைத்துப் பார்த்தேன். ஆனால் அது அழுகியிருக்கிறது என்றேன். முதல்வர் அவர்களே, நாங்கள் இடஒதுக்கீடு கேட்டுப் போராடியது, சாலை மறியல் செய்தது, அதனால் இருபத்தியொரு உயிர்களை இழந்தது எல்லாமும் எங்கள் இனத்திற்கு இடஒதுக்கீடு கேட்டுத்தான். ஆனால் நீங்கள் கொடுத்தது எந்தக் கோரிக்கைகளையும் போராட்டங்களையும் முன்வைக்காத நூற்றியேழு சாதிகளுக்கும் சேர்ந்து இருபது சதம் இட ஒதுக்கீடு கொடுத்திருக்கிறீர்களே இது நியாயமா? இதற்காகவா நாங்கள் இருபத்தியொரு உயிர்களை இழந்தோம், எண்ணற்ற வழக்குகளைச் சந்தித்தோம், ஏகப்பட்ட உடைமைகளைத் தவற விட்டோம்? இதை எப்படிச் சிறந்த இட ஒதுக்கீடு என்பது, சிறந்த கனி என்பது. மீண்டும் சொல்கிறேன். எங்களுக்குப் போராட்டம் புதிதல்ல, சிறை புதிதல்ல, இழப்பு புதிதல்ல... எங்களின் இலக்கு நியாயமான ஒதுக்கீடு. நீங்கள் குறிப்பிடுவது போன்று சுவை மிக்க கனியைத் தேடி எங்கள் போராட்டம், பயணம் தொடரும். என் இனமானச் சொந்தங்களே... அதன் முன்னெடுப்பாக இனியும் வெறுமனே ஓட்டுப் போடும் இனமாக நாம் இல்லாமல், அரசியலில் பங்கெடுத்து அதன் மூலமாகத்தான் அதை அடைய முடியும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால் விரைவில் நாம் ஒரு கட்சியைத் தொடங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதற்கான அறிவிப்பு விரைவில் வரும். அதற்கு உங்களின் ஆதரவை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, இந்த மணமக்கள் நீடு வாழ வாழ்த்துகிறேன்.”

மழை பெய்து முடிந்த மாதிரி கூட்டம். உடன் அய்யா பின்னால் திரும்பினார். உதவியாளர், ஒரு கனத்த உறையைக் கையில் கொடுத்தார். சற்றே இளகிய குரலில் அய்யா சொன்னார் “ குறள் மணி பேசும்போது திருக்குறள்களைத் தொடுத்துப் பாமாலையாக்கி மணமக்களுக்குச் சூட்டினார். விளக்கமும் கொடுத்தார். சிந்தித்துப் பாருங்கள், எத்தகைய பேரறிவுக்கு பண்பாட்டுக்குச் சொந்தக் காரர்கள் நாம்! சினிமா இன்று நம் வாழ்வைச் சீரழிக்கிறது. நம் மொழியை, கலைகளை மீட்டெடுக்க வேண்டும். அதற்குப் படித்த இளைஞர்கள் முன்வர வேண்டும். இதோ அறிவழகன் இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார். தமிழீழ விடுதலைக் கான ஆதரவிலும் முன் நிற்பவர். இத்தகைய இளைஞர்களின் அயராத பணிதான்

இன்று சமூகத்திற்குத் தேவை. நீங்கள் வெளியே ஒலிபெருக்கியில் நம் அறிவழகனைப் பற்றி நம் சங்கம் வெளியிட் டிருக்கிற ‘ அறிவழகனுக்கு குண்டர்சட்டம். அலண்டு போகும் உங்கள் திட்டம்’ என்கிற பாடலைக் கேட்டிருப்பீர்கள். அப்பேர்க் கொத்த அவரின் தியாகத்தை பாராட்டி, போற்றி அவரது வேலை யின்மையைக் கருத்திற்கொண்டு நம் இனமானச் சொந்தங்களின் ஒத்துழைப்போடு வருங்காலத்திற்கான பெருந்தொகையாக இல்லா விட்டாலும் கூட வழித்தொடக்கத்திற்கான வாய்ப்புத்தொகையாக இது இருக்கும் என்று கூறி இந்தத் தொகையை அவருக்கு வழங்குகிறேன்.”

மணமக்கள் எழுந்து நிற்க அய்யா தொகையினைக் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக்கொண்ட மணமக்கள், அய்யாவின் கால்களில் விழுந்து ஆசி பெற்றனர்.

ஒலிபெருக்கி இனிய பெண் குரலில் மெலிதாகப் பாடிக் கொண்டிருந்தது. ‘ தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்...’

ராசோக்கியத்திற்கு அய்யாவைப் பார்த்தது ஒரு பக்கம், ஊர்க்காரர்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் பார்த்தது இன்னொரு பக்கம் எனத் தாங்கமுடியாத சந்தோஷம். முதனைக்குப் போன பிறகு வருகிற முதல் தடவை என்பதால் எல்லோரும் இவரை விசாரிக்க, இவர் அவர்களை விசாரிக்க மண்டபத்தில் ஒரே பரபரப்பாக நின்று கொண்டிருந்தார்.

குறிப்பாய் கரி படாச்சி விசாரிக்கும்போது அப்படியே குளிர்ந்து போய்விட்டார். “ அங்க பத்திரிக்க வைச்சிட்டு வந்து அறிவழகந் தம்பிதாம்பா சொல்லிச்சி. முதனையில செம்பையய்யா கோயிலு ஏரி ஓட்டி நெல்ல முந்திரித்தோப்பு. ராசோக்கியம் மாமன் இங்க எப்பிடி கொல்லக்காட்ல அரிபுரியா நிப்பாரோ அதே மாதிரிதான் அங்க முந்திரித்தோப்புலயும் நிக்கிறாரு. எனக்குக்கூட அத பாத்ததும் கொல்ல ஞாபகம் வந்து போச்சின்னு வாவுருவிப் பூட்டுதுப்பா... எனுமோ ராசோக்கியம், வாழ்க்கையில காசி பணம்லாம் முக்கியமில்ல. பயிர் பச்சன்னு வாழ்ந்த மனுசனுக்கு திரும்பவும் அதே மாதிரி வாழ்க்க அமையறது பெரிய குடுப்பனதாம்பா...”

“ ஓம் பொழப்புலாம் எப்பிடி ஓடுது அண்ண?”

திடுமென கரி படாச்சி சோகமாகிவிட்டார். “ ஏங் கத ரொம்ப மோசமாதான்டா இருக்கு. மின்னலாம் கொல்ல வேல, அங்க இங்கன்னு வண்டிய ஓட்டிக்கிட்டு போனா, சும்மாக் கூட இதப் புடின்னு ஒருத்தனும்

சொல்லமாட்டான். நாம்பளா மனம் கேக்காம ஒரு மூட்ட முடிச்ச, மண்ணுத்தட்ட தூக்கனாதான் உண்டு. இப்ப கடைக்குக் கட சாமான், மூட்ட முடிச்சின்னு வண்டி ஓட்றதுல, பெரும்பாலும் நம்ப தலையாலயே தூக்கிக்கிட்டு போயி போட வேண்டிதாருக்கு. ஒண்ணும் முடிய மாட்டங்குது.”

ராசோக்கியத்தைப் பார்த்துவிட்டு அய்யாயிரம் கிட்ட வந்தார். “ என்னா அய்யாயிரம், எப்பிடியிருக்க? பூச்சி எனுமா இருக்குது?”

“ எதோ ஓம் புண்ணியத்துல நெல்லா இருக்கறம் மூத்தவர. மொவன் வேலைக்கி எங்கியும் போவக்கூடாதுன்னுட்டான். நீங்க குடுத்த ஆட்டுக்குட்டியப் புடிச்சிக்கிட்டு அப்பிடி பெறாக்கா போய்க் கிட்டு வந்துக்கிட்டு இருக்கறம். அது கெடக்குட்டும். ஆயி பாப்பாலாம் வல்லீங்களா?” அக்கறையில் பழைய பாசம் சற்றும் குறையாமல் அய்யாயிரம் விசாரித்தார்.

“ ஆயி உள்ள சாப்புட்டுக்கிட்டு இருக்குது. பாப்பாவுந்தான் வந்துது. இங்கதான் வூட்ல இருக்குது.” ராசோக்கியம் சொன்னதும் பாஞ்சாலையைப் பார்க்க உள்ளே ஓடினார் அய்யாயிரம்.

மெல்ல மண்டபம் கலையத் தொடங்கியிருந்தது. துணிமணி வரும்புடிகளோடு வந்த ரத்னவேலையும் அரசாயியையும் பார்த்து சிரித்துக்கொண்டே கேட்டார் “ எந்த நெலம்பலத்த எடுத்தாலும், ஒங்க வரும்புடிக்கு ஒண்ணும் கொறைச்ச இல்லடா.”

“ நீங்கதான் அக்கடான்னு எங்கள வுட்டுக்கெடாசிட்டு பூட்டிங்க. எதோ அறிவுதம்பின்ன தொட்டு, பழச மறக்காம எடுத்துக்குடுக்குது. வேற யாரு தேடப் போறாங்க.” ரத்னவேலு வருத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

கனகராசு வந்ததும் “ சரி வா அண்ண போவலாம்” என்று கூப்பிட்டார். மண்டபத்திற்குள் பாஞ்சாலை, முத்துக்கண்ணுவுடன் பேசிக்கொண்டிருந்தாள். “ காரியக்காரங்க கிட்ட ஒரு வார்த்த சொல்லிட்டு வர்றன் போ” உள்ளே போக நினைத்தவர், தயங்கி ஒதுங்கி நின்றார். வேடுரூபமாய் மிகவும் மெலிந்து ஆளே அடையாளம் தெரியாதபடிக்கு செங்கல்ராவு. அசலாம்பு கைத்தாங்கலாய்ப் பிடித்து இட்டுக்கொண்டு போனாள்.

திரும்பிப் பரிதாபமாக கனகராசைப் பார்த்தார் ராசோக்கியம். கனகராசு தாழ்ந்த குரலில் மெதுவாகச் சொன்னார் “ ஏற்கனவே குடிச்சி குட்டிச்செவுராப் போன ஒடம்பு. இதுல கொம்பு குத்தன காயம் ஆறாம

இருந்து சீழ் வைச்சிருக்கறப்ப வுடாம மேல மேல குடி. அது என்ன பண்ணும். ரொம்ப கேடுபாடாத்தான் இருக்கு.”

ஒரு நிமிடம் வண்டியை மறித்துக்கொண்டு ராவணனாய் குதித்த காட்சி ஓடி, கடைசியில் இப்போது கைத்தாங்கலில் போகும் கோலத்தில் நிற்க, மனம் கனத்தது.

மண்டபத்தில் கூட்டம் வெகுவாகக் குறைந்திருக்க, சரி போகலாம் என்கிற மாதிரி உள்ளே போய் பாஞ்சாலையைக் கூப்பிடப்போனார். மணமேடையில் நின்றிருந்த ரங்கநாது பார்த்து விட்டார். அங்கிருந்தபடி கூப்பிட்டார். “ ரெண்டு பேரும் வந்துட்டுப் போங்க.” அதோடு ஓட்டமாய் வந்து “ வாங்க...” என்று ரெண்டு பேரையும் கையைப் பிடித்து இழுத்துப்போகாத குறையாய் இட்டுக்கொண்டு போனாள் காசாம்பு.

மணமேடையில் மணமக்கள் உட்பட அஞ்சாறு பேர் நின்று கொண்டிருந்தார்கள். பூ, பொரி, பழம் எனக் கசகசத்துக் கிடந்த மணமேடையில் இருவரும்போய் கூச்சத்தோடு நின்றார்கள். பாஞ்சாலை மணமக்களைப் பார்த்தாள். அறிவழகனுக்கு ஏற்ற அழகு, வளர்த்தி எனப் பொருத்தமாகத்தான் இருந்தாள். ரங்கநாது தாம்பாலத் தட்டிலிருந்த மஞ்சள் கலந்த அரிசியை நீட்டினார். குறிப்பால் உணர்ந்துகொண்ட மணமக்கள், காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குவதற்கு கிட்ட வந்ததும் பதறிப் போய் விட்டார்கள். “ மாமா... என்னா இது வேல...” தடுக்கிற மாதிரி நீட்டவும், பாஞ்சாலை “ இந்தாப்பா வுழாதீங்க... வுழாதீங்க... நில்லுங்க...” என்றாள்.

அதற்குள் இருவரும் காலில் விழுந்து விட்டார்கள். பதற்றத் துடன் நின்றுகொண்டிருந்தவர்களிடம் ரங்கநாது சொன்னார். “ இன்னமும் பயிருபச்சன்னு பழைய நெனப்பு மாறாம ஓடி முந்திரி மரம்மட்ட, மண்ணு மக்கன்னு கெடக்குறிங்க. ஒங்கள மாதிரியே பொறக்கப் போற புள்ளிவுளுக்கும் மண்ணுமேல பாசம் இருக்குணும்னு சொல்லி, நாலு அரிசிய அள்ளிப் போடுங்க.”

“ நெல்லபடியா இருங்கப்பா...”

மணமக்கள் வாழ்த்துகளைப் பெற்று எழுந்தார்கள்.

*

72

வளையமாதேவி ரோடு கல்யாண மண்டபத்தை விட்டு வெளியே வந்து மேற்கே பேருந்து நிலையத்துப் பக்கம் பேசிக் கொண்டே நடந்து வந்துகொண்டிருந்தார்கள். ரோட்டு மார்க்கத் தில் அய்யா வருகையைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் சுவரொட்டிகள் சிரித்துக்கொண்டிருந்தன. காலை நேரமாக இருந்தது ஒருபக்கம். பள்ளிகளுக்குக் கோடை விடுமுறை வேறு என்பதால் ரோட்டில் சன நடமாட்டம் குறைந்து சரார் சரார் என லாரிகளும் பஸ்களும் போய்வந்து கொண்டிருந்தன.

முன்னே நடந்த ராசோக்கியம் பாஞ்சாலையிடம் சொல்லிக் கொண்டே வந்தார். “ போனதும் கௌம்பு பாஞ்சால. ஊருக்குப் போவும். சித்தர ஏரிக்குப் படையலுக்கு வர்ற சனங்களே தோப்ப கொள்ள வுட்டுடும்.” பாஞ்சாலைக்கு இன்றைய பொழுது இருந்து சதாசிவத்திற்கு ஒரு கறியை கிறியை எடுத்து ஆக்கிப்போட்டுவிட்டு நாளைக்குப் போனால் தேவலாம் என்று பட்டது. கனகராசும் அதற்கு ஏற்றமாதிரி குறுக்கால் ஒரு மறுப்பைப் போட்டார். “ இரு அண்ண, நாளைக்கிப் போவலாம். கல்யாணத்துல அய்யா சொன்ன மாதிரி மாத்துக்குடியிருப்பு பொறாக் கூண்டுல நாங்க அனுபவிக்கிற சந்தோஷத்த நீங்களும் ஒரு நாளைக்கி இருந்து அனுபவிச்சிப் பாத்துட்டுப் போங்க...” சிரித்துக்கொண்டே சொன்னார்.

ரோட்டில் திடுமென ஒரு பெரிய அணை குறுக்கிடவும் அப்படியே திகைத்துப்போய் நின்றுவிட்டார்கள் எல்லோரும். பேசிக்கொண்டே வந்ததில் பழைய ஞாபகத்தில், பழைய வேப்பங்குறிச்சிக்கு போகிற ரோட்டில் திரும்பி நேரே தெற்கே மந்தாரக்குப்பம் பள்ளியை, காலனி குடியிருப்புகளைத் தாண்டி ஓடையைக் கடந்து, மண்மேடு குறுக்கால இல்லையென்றால் அங்காண்டப் பக்கம் நடந்துகொண்டே போய் பள்ளத்தில் கூட இறங்கியிருப்பார்கள்.

“ என்னா இப்பிடி ஒரு ஞாபக மறதியில வந்து நிக்கிறம...” பாஞ்சாலை அதிசயமாகச் சொல்லிக்கொண்டு நின்றாள்.

“ பொறந்து வளந்து காலங்காலமா வாழ்க்கைய ஓட்டன பூமி பாஞ்சால. அதான் காலு தானா இழுத்துக்கிட்டு வருது.” ராசோக்கியம் பெருமூச்சு விட்டபடி சொல்லிக் கொண்டிருந்தார்.

கனகராசு சரசரவென உயரமாய் கிழக்கிலும் மேற்கிலுமாக நீண்டு கிடந்த அணைமீது ஏறினார். அங்காண்ட பார்த்தவர் சொன்னார் " அண்ண, மெதுவா ஒயர ஏறி வாங்களன்."

தட்டுத்தடுமாறி உயரே ஏறிப் பார்த்தவர்கள், அப்படியே சிலைபோல் நின்றுவிட்டார்கள். வீடுகள், கோயில்கள், பள்ளிக்கூடம் என வேப்பங்குறிச்சி இருந்த இடம் அதலபாதாள மாய் அடையாளம் தெரியாமல் போயிருக்க ஏகப்பட்ட லாரிகள், இயந்திரங்கள் வெட்டவும் போகவுமாய்ப் புழுதி பறந்து கொண்டிருந்தது. மேல் மட்டு தொடர்ந்து மேற்கே வெட்டு இயந்திரங்களால் கொத்தி லாரிகளில் அள்ளிப் போட்டுக்கொண்டு போகவும், அடுத்தடுத்த மட்டுகளை இன்னும் ஆழமாக்கியபடி ராட்ச இயந்திரங்களின் பிரமாண்ட வெட்டுச் சக்கரங்கள் கீழே இறுத்த ஆரம்பித்திருந்தன. வெட்டுகிற மொத்த மண்ணையும் நேராய் மேற்கே மாற்றுக்குடியிருப்பு தாண்டி நேர் தெற்கில் போய்க் கொட்டுமாறு கன்வேயர் பெல்ட் பாதை அமைத்துக் கொண்டிருந் தார்கள். நின்றுகொண்டிருக்கிற அணை மேடும், லாரிகள் போகிற மாதிரி நல்ல அகலமாக்கப்பட்டு மேற்கே போகப் போக சற்றே தாழ்வாகப் போடப்பட்டிருந்தது.

வீடு வாசல்களும் நில நீட்சிகளுமாய்ப் பெருமையாக வாழ்ந்திருந்த வாழ்க்கை இதோ அந்தரத்தில் மிதந்து கொண்டிருப்பது போன்ற ஒரு தோற்றம். பாஞ்சாலைக்கு அதற்கு மேலும் பார்த்துக்கொண்டு நிற்க முடியவில்லை. " சரி வாங்க, போவும்." கூப்பிட்டுக்கொண்டு பெருமூச்சி விட்டபடி இறங்கினாள்.

" இவனுவோ போற போக்குல இன்னம் நாலைஞ்சி மாசத்துக் குள்ள கரியத் தொட்டுடுவானுவோ போல்ருக்குடா..." சொல்லிக் கொண்டே ராசோக்கியமும் இறங்கினார்.

ரோட்டில் சங்க அலுவலகத்திற்கு நேரே வந்து தேங்கினார்கள். " என்னா அத்த, அங்க காசாம்பு பெரிம்மா ஒங்கள சம்பந்தம் கலக்க பாத்துக்கிட்டு இருக்குது. நீங்க இங்க வந்து நிக்கிறீங்க..." செல்லப்பாங்கி கேட்டுக்கொண்டே வந்து ஒட்டிக்கொண்டாள்.

" ஊருக்கு போவுணும்னு வந்துட்டம்..." பாஞ்சாலை சொல்லிக் கொண்டே செல்லப்பாங்கியைப் பார்த்தாள். பழைய வேப்பங் குறிச்சியில் இருந்ததைவிட உடம்பு கொஞ்சம் பூத்துப் பூரிப்பாய்த் தெரிந்தாள். அதேபோன்று மேனியிலும் செம்மை படர்ந் திருந்தது. மெலிதான புடவையில், கழுத்தில் ஒட்டிக் கிடந்த ஓரிழைச் சங்கிலியில் எடுப்பாய்

நின்றவளிடம் கேட்டாள் " என்னாடி மாத்துக் குடியிருப்புக்கு வந்ததும் பொம்னேட்டியே ரொம்ப மாறிட்ட. கணேசனுக்கு வேல கெடைச்ச பூரிப்புல நீ பாட்டுக்கும் உப்பிக்கிட்டு இருக்கியா?"

செல்லப்பாங்கி சிரித்துக்கொண்டே சொன்னாள் " அதுலாம் ஒண்ணுமில்ல அத்த. அப்பலாம் கொல்லக்காட்டுக்கு வேலைக்கி போன ஒடம்பு. இப்ப கடத்தெருவுபக்கம் கூட்ட பொடைக்க வேலைக்கிப் போறன்னு சொன்னதுக்கே ஓம் மொவங்காரருக்கு பங்கமா போவுதாம். அப்பறம் வூட்ல நெழல் காத்துக்கிட்டு குந்திக் கெடக்கற ஒடம்பு அப்பிடித்தான் இருக்கும். அதோட அதுவும் மின்னமாதிரி நித்தம் குடிக்கறதும் இல்ல. ஏந்தா எளச்சா நாலுல மூணுல... குடிச்சாலும் அரவந் தெரியாது. பாரன் அத்த... இதுலேர்ந்து எங்க குடும்பம் எனுமா ஓடுதுன்னு..." ரொம்பவும் பெருமையாய் மகிழ்ச்சி பொங்க பின்னிக்கிடந்த சடையை எடுத்து முன்னே போட்டாள். மொட்டைச்சி என நிர்பந்தத்தால் விளைந்த பெயர் முற்றிலும் மாறி கூந்தலின் பின்னல் மார்பு மேட்டில் சற்றே ஏறி இறங்கித் தொங்கலாடிக் கொண்டிருந்தது.

பேசிக்கொண்டே வந்தார்கள். பாஞ்சாலை ஞாபகம் வந்த வளாய்க் கேட்டாள் " வடிவேலதாம் பாத்தன். நம்ப தேவகி அம்மாளு எப்பிடி இருக்குது?"

" அந்த அம்மாளுக்கு என்னா. கனங்கொண்ட காசி வந்ததுல பணத்து மேல படுத்துக்கிட்டு... நெதத்துக்கு ஒரு சேல, கண்ணு மையி, பூதறமாவு, பல்லு வெளக்க புருசு. கண்டும் காணாததுக்கு இப்ப புதுசா மந்தாரக்குப்பம் பஸ்டாண்டுல பூவு வித்துக்கிட்டு, தென வட்டிக்கி பணத்த மேய்ச்சலுக்கு வுட்டுக்கிட்டு இருக்குது. அந்த வடிவேல் மாமன்லாம் அதுக்கு தூசி இப்ப. ஏதாவது கேட்டா டால்ரைட்டா அவுர அடிச்சிப் பேசி போய்ட்டு வா ராசாங்குது. எனுமோ கத சொல்லுவாங்கள. பத்தினின்னாலும் பத்தினி, எங்க அம்மா அப்பிடியாப்பட்ட பத்தினி. சித்திர வைகாசியில காயும்னா காயும், ஐப்பசி கார்த்தியையில பேயும்னா பேயும்ங்கற மாதிரி. அது என்னா ரப்பு ராங்கியில பேசுது..."

பாஞ்சாலைக்கு தேவகி என்றாலே எப்போதும் வேப்பங்காய் தான். இதில் செல்லப்பாங்கியின் பேச்சு, பஸ் ஸ்டாண்டு பக்கம் போகவேண்டும் என்கிற எண்ணத்தையே மாற்றி விட்டது. கடந்து, மாற்றுக்குடியிருப்பை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். எதிரில் வேகவேகமாக சதாசிவம் சைக்கிளில் வருவது தெரிந்தது. சற்றே குழப்பமானார்கள்.

“ என்னாப்பா...” சைக்கிளை நிறுத்துவதற்குள் பாஞ்சாலை பதட்டமாகக் கேட்டாள்.

“ சித்தப்பா எங்கம்மா..” லேசாய் மூச்சு வாங்க கேட்டான்.

“ ஏம்ப்பா. கடைக்கி போயிட்டு வர்றன்னாரு” படபடப்பு குறையாமல் கேட்டாள்.

“ ஒண்ணுமில்ல. வைரம் வயிசிக்கி வந்துருக்கும்மா...”

“ அப்பிடிச் சொல்லு. தரவுக்கார மாமனுக்கு தண்ணி ஊத்தறது, புட்டு சுத்தறது, மேலைக்கி கல்யாணம் காட்சின்னு இதுக்கு மேல செலவுமேல செலவுதாம் போ.” செல்லப்பாங்கி முகமெல்லாம் சிரிப்பாகச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

தொடை இடுக்குகளில் கசிவும், அடிவயிற்றில் வலியும் கண்களில் மிரட்சியுமாகத் தான் கதவுச்சந்தில் குந்தியிருந்தது போலவே பாவாடை சட்டையில் வைரம். பூமா பாசமாகக் கேட்டாள் “ சாப்புடிறியாப்பா...”

கதவு இடுக்கில் கசியும் வெளிச்சத்தைப் போலவே மெல்லீசாய் வைரத்தின் வார்த்தைகள் “ வாணாங்க்கா...” தங்கச்சிகள் தங்கமும் கசப்பும் பூமாவின் இருபக்கமும் வந்து ஒட்டியபடி வைரத்தை எவரையோ புதிதாய்ப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அம்பு சாட்சி தான் சத்தம் போட்டாள் “ பூமா அதுவுள இங்க தள்ளிவுடு. அங்க எனுமோ அவ வித்த காட்றமாதிரி போயிப் போயி நிக்குதுவோ.”

அம்மாவின் பேச்சைப் பொருட்படுத்தாமல் பூமாவை பிரமிப்பாய் பார்த்தபடி, குந்தியிருந்த வைரத்திடம் தங்கம்தான் சொன்னாள் “ பூமா அக்காவாட்டம் இனிமே நீனும் பொடவ கிடவலாம் கட்டிப்ப.”

வைரத்தை விட பூமாவுக்கு பட்டென்று வெட்கம் சூழ்ந்து கொண்டது. முதனையில் இருக்கிறபோது கூட எப்போதும் பாவாடை தாவணியில்தான். இங்கு ஊருக்கு வருவதாகக் கிளம்பியதும், மலர்தான் இந்தப் புடவையைக் கட்டிவிட்டாள். ‘ இப்பிடி முந்தானி உருவாம முடிச்சிப்போட்டு சொருவி, மறுபடி அப்பிடியே இடுப்புல ரெண்டு சுத்துச் சுத்தி, கையால மாத்தி மாத்தி கொசுவி, வவுத்த லேசா எக்கி மடக்கி சொருவனா கவுத்தால கட்ன மாதிரி இறுக்கமா இருக்கும். அப்பறம் பொடவ தலப்ப அழகா மடிச்சி மாராப்பப் போட்டு, தோள்பட்டையில பின்ன போட்டுகிட்டா...’ மலருக்கே ஆச்சரியம் தாங்கவில்லை. பொசுக்கென்று பூமாவுக்கு ஒரு பொலிவு கூடி ‘ தாலியக் கொண்டா கொண்டா...’ என்கிறமாதிரி குடும்பத்தனம் பூத்திருந்தது முகத்தில்.

‘ எனக்குக் கூட இப்பிடி எடுப்பா இல்லடி... ஒனக்குன்னு நெய்ஞ்சமாதிரி சேல இருக்கு.’ மலர் சொல்லச் சொல்ல பூமாவுக்கு வெட்கம் தாங்கவில்லை.

நினைவில் மிதந்தவளை “ ரொம்ப வெக்கப்படாத எக்கா... பெரிப்பா ஒன்னக் கூப்புடுறாரு...” சொன்ன கடைக்குட்டி கசப்புக்கு எப்போதும் பெரியதனமான பேச்சுதான்.

இடையில் வேலிகீலி எதுவும் இல்லை. பக்கத்து வாசப்படி என்கிறமாதிரி அடுத்து பூமாவின் வீடு. வீட்டிற்குள் அம்மாவும் அப்பாவும் நின்றுகொண்டிருக்க தோட்டத்தில் சதாசிவம். தூரத்தில் தென்மேற்கில் மண்ணை கன்வேயர் பெல்ட்டால் கொண்டுவந்து கொட்டுவதற்கு நிறுவப்படும் உயரமான இயந்திரங்களைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

ராசோக்கியம்தான் சொன்னார் “ நானும் அம்மாவும் இருந்து பாத்துக்கிட்டு வர்றம். நீனும் அண்ணனும் வேண்ணா முதனைக்கிப் போயி அந்த முந்திரிக் கொட்டைவுளப் பொறக்குங்களன். ராத்திரிக்கிதான் வேலைக்கிப் போவுணுமாம.”

“ அதா போவுலங்குது! ஆடி மாசத்துல மொட்ட ஈச கோத்துக் கிட்டு போறமாதிரி ராப்பொழுது அந்த மலர தனியா வுட்டுட்டு வந்ததுக்கே இதுக்குத் தூக்கம் வந்துருக்காது.” பாஞ்சாலை சொல்லிக் கொண்டு இருக்கும்போதே சதாசிவம் உள்ளே வந்தான். பஞ்சாயத்தம் வைக்கிற மாதிரி அவனிடம் சொன்னாள் “ இது இங்க இருக்கறப்ப எனுமா பொட்டாட்டம் ஊட்டு வேலயப் பாத்துக்கிட்டு இருந்துது. அங்க போனதும் ஏவுணி கொண்ட மாதிரி அந்தப் புள்ள கூட கூடிக்கிட்டு என்னா ராவுடி பண்ணுது தெரியுமா. எதாவது கேட்டுட்டா போச்சி, ஒரேடியா மோடி வைச்சிக்கிட்டு குந்திக்குது.”

“ நம்ப பூமாலாம் நெல்ல புள்ளதான். அங்க இருக்கறதுதான் இத கெடுத்துருக்கும். அது வளப்பு அப்பிடி.”

ஏதாவது ஒரு பொய்ச்சத்தம் போடுவானென புகாராய் சொன்னது தான். இதற்காக இப்படி மலரை செவுளில் அறைந்தது போல் வளர்ப்பு சரியில்லையென்கிறமாதிரி சொன்னதும் பாஞ்சாலைக்கு மட்டுமல்ல பூமா, ராசோக்கியம் எல்லோருக்குமே முகவாட்டமாய்ப் போய்விட்டது.

“ என்னாப்பா ஒரு வயிசிப் புள்ளிவோ வெளையாட்டுக்கு துடுக்கும் துண்ட்ரிக்கமுமாத்தான் இருக்கும். அதுக்குன்னு நம்ப மலரு புள்ளய போயி...” இழுத்தாள்.

“ பெத்தவங்க சரியா இருந்தாதான் புள்ளிவோ சரியா இருக்கும்.” திரும்பவும் அவன் ஆணியை இறக்கியதும் பாஞ்சாலைக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவனே தொடர்ந்தான் “ ஒரு நாளு திடீர்குப்பம் சந்தைக்கிப் போனப்ப, ஏதேச்சையாதாம் பாத்தன். அங்காண்ட ஒட்டத் தெருவு குடிசைக்கும் மின்னால ஒரு பொம்பள கூட ஒங்க அண்ணாரு சின்னத்தம்பி படையாச்சி ரொம்ப எழைஞ்சாப்ல பேசிக்கிட்டு நிக்கிறாரு.”

*

73

ராசோக்கியத்திற்கு மட்டுமில்லை முந்திரித்தோப்பு வைத்திருந்த எல்லோருக்கும் பெருத்த ஏமாற்றம்தான். கொத்துக் கொத்தாய் உப்பு சொரிகிற மாதிரி பூத்திருந்த முந்திரிப் பூக்கள் சித்ரா பருவத்திற்கு நல்ல பிஞ்சி பிடிக்கும் என்று நினைத்திருந்தவர்களின் எதிர்பார்ப்பு எல்லாமும் பொய்த்துவிட்டது. பௌர்ணமி இரண்டுநாள் இருக்க, பெய்த மூடுபனியில் கருகிப் பெரும்பாலான பூக்கள் கீழே கொட்டி நிரவியதுமாதிரி உதிர்ந்து போய்விட்டன. வருடத்திய மழைப்பொழிவும் குறைவாக இருந்திருந்ததால் கடுமையான வறட்சி. பனி ஒரு பக்கம் இருந்தாலும் வேரின் ஈரம் இல்லாமல் நுனியில் மட்டும் பூக்கள் எப்படித் தங்கும். இதுவே பழைய வேப்பங்குறிச்சியில் இருந்ததுபோல் கிணறு இருந்து மோட்டாரோ இஞ்சினோ போட்டு இறைத்து மரத்துக்கு மரம் தண்ணீர் விட்டால், எந்தப் பனியாக இருந்தாலும் பத்துப் பூக்கள் தாங்கி நிற்கும், காய்க்கும்.

எதற்கும் வழியில்லாத மானம் பார்த்த பூமி. மகசூல் காலத்தில் கூட குனிந்து பயிர் செய்ய உடம்பு வளையாமல் முந்திரிகளைப் போட்டுவிட்டு வீட்டில் குந்தியிருந்துவிட்டு, கொட்டை பொறுக்குகிற நாட்களில் மட்டும் வந்து சூத்தை ஆட்டுகிற மனிதர்கள். இதில் வந்து அகப்பட்டுக் கொண்டதாய் வலியுடன், உதிரும் பூக்களைப் பார்த்தபடி விசனமாகக் குந்தியிருந்தார் ராசோக்கியம். பாஞ்சாலை யும் பூமாவும் கிடைத்த கொட்டைகளைத் திருவினார்கள்.

சித்திரை ஏரியில் வண்டி வண்டியாகத் தண்ணீரை மொண்டு கொண்டிருந்தார்கள். ஊரில் எல்லோருமே பனியால் மட்டுமல்ல பூச்சியாலும் பூக்கள் உதிர்வதாக நினைத்துக்கொண்டு, அடுத்த அமாவாசைப் பருவத்திற்காவது மீதமிருக்கிற பூக்கள் பிஞ்சு பிடிக்கும் என்று மருந்தடிக்கிற வேலையில் மும்முரமாக இருந்தார்கள்.

நூல்பூச்சி போன்று எதுவுமில்லாதபோது மருந்தடிப்பது வெட்டிவேலை என்பது ராசோக்கியத்திற்கு நன்றாகத் தெரியும். அதுவுமில்லாது பூத்துக் குலுங்கி நிற்கிறபோது மழையோ, ஏன் பனி ஈரம்பட்டால் கூட அதில் உள்ள பண்டாரம் நழுவி பிஞ்சு பிடிக்காமல் போய்விடும். இதில் மருந்தும் கலந்து அடிப்பது, பூக்களில் விஷத்தை ஊற்றுவது. மாமரத்தடியில், குடிமுந்திரி நிழலில் படுத்து மாறி மாறி யோசித்தார். இந்த அமாவாசைப்

பருவத்திற்குள் சரியாய்ப் பிஞ்சு பிடிக்கவில்லையென்றால் நிச்சயம் கையைப் பிடித்துவிடும். முதலியார் பறம்பைசாவுக்கும் இதங்காத பேர்வழி. என்ன செய்வது எனத் தெரியாமல், எழுந்து போய் சித்திரை ஏரியில் முழுகிவிட்டு செம்பையய்யனார் கோயிலுக்குப் போனார்.

உச்சிப்பொழுதில் ஒருவரும் இல்லாமல், தனியாய்த் தானிருந்தார் செம்பையய்யனார். விழுந்து கும்பிட்டார். ‘ ஒன்ன நம்பித்தான் வந்து காலடிய எடுத்து வைச்சன். இப்பிடி எடுமொனையிலேயே கையச் சுட்டுக்கிறமாதிரியிருந்தா நா காணி வாங்கறது எங்க, பூமி வாங்கறது எங்க. எதாவது நாலு பூவு மினுங்கற மாதிரி எனக்கு வழியக் காட்டி நட்டம் வராமப் பாத்துக்க. மேலைக்கி பூசத்தண்ணிக்கு உண்டியல்ல நூத்தபத்த போடறன்.’ மனச்சுமையையெல்லாம் செம்பையய்யனிடம் கொட்டிவிட்டு தோப்பை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். வழக்கமாய் ஏரியில் மருந்தடிப்புக்கு தண்ணீர் மொள்ளுகிற வேலை வெயிலையும் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டிருந்தது. ஏரியிலிருந்து நாலாகடையும் நீர் நிரம்பிய வண்டிகள், ட்ராக்டர்கள் கடந்து போய், பாதையெல்லாம் தண்ணீர் சிந்தி காய்ந்தும் காயாமலும் கிடந்தது.

கிழக்காலத் துறையில் டயர்வண்டியை நிறுத்தி, அதிலிருந்த நான்கைந்து பாரல்களுக்கு இருவர் தண்ணீர் மொண்டு கொடுப்பதும், இருவர் வாங்கி ஊற்றுவதுமாக கடும்புடியாய் வேலை நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே போன ராசோக் கியத்திற்கு பட்டென்று ஒரு யோசனை வந்தது. ‘ முந்திரியின் பூக்களுக்கு இப்போது தேவை மருந்து அல்ல. வேருக்கு நீர். தாகத்திற்குத் தண்ணீர்’. செம்பையய்யனார் வழிகாட்டி விட்டதாய் ஓர் உற்சாகம்.

நேரே முந்திரியின் நிழலில் குந்தியிருந்தவர்களிடம் போனார். “ ஏம்மா, அத்த வூட்ல பாரலு ரெண்டு கெடந்ததுல்ல...”

“ கெடந்தமாதிரிதான் இருக்குது. ஏம்ப்பா... மருந்தடிக் கறதுக்கா...” கேட்டாள்.

“ இல்லம்மா முந்திரி மரத்துவுளுக்கு தண்ணி மொண்டு ஊத்தறதுக்கு. காய்ச்சல்லதான் பூவுலாம் கொட்டுண்டு போவுது. பின்னம் ரெண்டு பாரலு பாத்து, வண்டியில வைச்சி மரத்துக்கு மரம் தண்ணி மொண்டாந்து ஊத்துவம்னு பாக்கறன்” உற்சாகமாகச் சொன்னார்.

“ என்னாப்பா சொல்ற? எம்மாம் மரத்துவுளுக்கு எவ்வளவு தண்ணிய மொண்டு ஊத்திக் கட்டுப்படியாவும்?” பூமாவுக்கும் பாஞ்சாலைக்கும்

அதிர்ச்சியாகப் போய்விட்டது.

“ ஏம்மா, ரெண்டு காணி மூணு காணியா இருந்தாலும் மள்ளாட்டைக்கி ஒட்டுத்தண்ணி போடுல. வாய்க்கால்ல வர்ற தண்ணிய மொண்டு பாத்தியில ஊத்தற மாதிரி, தே இங்காண்ட சமுத்தரமாட்டம் கெடக்குது சித்திர ஏரித்தண்ணி. வண்டிமாடும் செவுனேன்னுதான் கட்டிக்கெடக்கு. நாம்பளும் வுழற நாலு முந்திரிக் கொட்டையையும் பொறுக்கித் திருவிப் போட்டுட்டு சும்மாதான குந்தியிருக்கம். அதோட மத்தவங்களது மாதிரி இது ஒண்ணும் பெருமரமும் இல்ல. எல்லாமும் கன்னுமுந்திரிதான். மரத்துக்கு நாலு கொடம் ஊத்தனாக்கூட, பட்டுன்னு வேருக்கு ஒறவு செய்யும். செஞ்சிதாம் பாப்பும. அப்பிடியே காய்க்கிலன்னாலும், தண்ணி மொண்டு ஊத்தறதாலயா முந்திரிக்கி ஒரு பாதிப்பு வந்துடும்?”

மனச்சம்மதம் இல்லாமல்தான் ஆரம்பத்தில் வேலையைத் தொடங்கினார்கள். ஆனால் ஒரு நடைத் தண்ணீரைக் கொண்டு போய் ஊற்றியதுமே இது சரியான, சாத்தியமான வேலை என்று பாஞ்சாலைக்கு உற்சாகமாகிவிட்டது.

இரண்டாவது நடைக்கு ஏரியில் நல்ல ஆழமாகக் கொண்டு போய் நிறுத்திவிட்டு பாஞ்சாலையும் ராசோக்கியமும் வண்டியில் நின்றுகொண்டார்கள். கீழே நின்றபடி பூமாவும் மலரும் தண்ணீரை மொண்டு மொண்டு கொடுத்தார்கள். கொளுத்துகிற கோடையில் சில்லுப்பாய் தண்ணீரில் வேலை. மேலே சுடும்போது தண்ணீரில் முழுக்குப் போட்டு நனைத்துக்கொண்டு உற்சாகமாய் பூமாவும் மலரும் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்திய சுருக்கில் நிரப்பி விட்டார்கள். பாரல்களின் மேல் தளும்பாதவாறு புடவையை விரித்துப்போட்டு மூடியபடி, வண்டி ஏரியை விட்டுக் கரையேறவும், மலரும் பூமாவும் ஓடி வண்டியில் ஏறிக் குந்திக்கொண்டு கால்களை ஆட்டியபடி போனார்கள். தளும்புகிறதிலிருந்தும் ஈரஉடையி லிருந்தும் தண்ணீர், கால்களின் கட்டைவிரல் நுனியால் கோடாய்ச் சிந்திக்கொண்டே போனது.

சருகுகளை எட்டத்தள்ளி மண்வெட்டியால் லேசாய் தொட்டி போன்று அணை கூட்டியபடி ராசோக்கியம் போய்க் கொண்டிருந்தார். பூமா மட்டும் மொண்டு மொண்டு கொடுக்க பாஞ்சாலையும் மலரும் ஒவ்வொரு மரத்துக்கும் ஊற்றிக்கொண்டு வந்தார்கள். ஆனால் கரைகள் உடைந்துபோகிற மாதிரி ஊற்றிவிட்டு வந்திருந்தாலும் உடனே உறிஞ்சிக்கொண்டது. ஒவ்வொரு மரத்திற்கும் நாலைந்து குடம் ஊற்றினார்கள். நடைக்குப் பத்துப் பனிரெண்டு மரங்களுக்கு மேல் ஊற்றமுடிந்தது. மூன்றாவது நடைக்கித் திரும்பும் போது பாஞ்சாலைக்கு

சோடையாக இருந்தது. “ என்னா அத்த, வண்டி ஒண்ணும் எடுக்குலியா. இரு அம்மா சாப்பாடு எடுத்துக்கிட்டு எங்க தோப்புக்கு கொட்ட பொறுக்க வரும். அத இங்க வுட்டுட்டு, நீ போய் கொட்ட பொறுக்கு.”

உடம்பு நனைந்தும் வெயிலில் காய்ந்துமாய் எதாவது நளுர் கண்ட மாதிரி பழையபடி உடம்பு ஏதாவது வேலை வைத்து விட்டால் என யோசித்துக் கொண்டிருந்த தருணத்தில் மலர் சொன்னது, ராசோக்கியத்திற்குச் சரியாகப் பட்டது. வண்டியை ஏரிக்குள் கொண்டுபோய் நிறுத்தினார்.

மேலத்தெரு ரெங்கசாமி, சிவப்பிரகாசத்துக்குப் பக்கத்து வீட்டுக்காரர். தானும் மகனுமாய் டயர்வண்டியில் தண்ணீர் மொண்டு ஊற்றிக்கொண்டிருந்தவர் கேட்டார் “ என்னா வேப்பங்குறிச்சார, மருந்துதான அடிக்கிற. அதுக்கு என்னா ரெண்டு பாரல்னா பத்தாதா. எதுக்கு மாட்டுக்குச் செமையா நாலு பாரல கட்டிக்கிட்டு...”

“ மருந்து அடிக்கிலிங்க... முந்திரி மரத்துவுளுக்கு தண்ணி மொண்டு ஊத்தறம்.” ராசோக்கியம் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே பூவுக்காரன் அரசகுழியான் காதில் வாங்கியபடி மலர், பூமா இருவரையும் முறைத்துக்கொண்டே போனான். இவர்கள் வத்தி வைத்த நாளிலிருந்து கனகவல்லி இந்தத் திசைப் பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்கவில்லை. மணி கடந்துபோய் கடுமையாக கவனித்து விட்டதின் விளைவு. பூவுக்காரனுக்குப் பொரிந்தது.

“ என்னா... முந்திரிக்கி... மொண்டு ஊத்துறிங்களா? நெல்ல கத. எம்மாந் தண்ணிய மொண்டு ஊத்தி அதுவும் செடிகிடின் னாக்கூட பரவாயில்ல. மரத்துவுளுக்கு ஊத்தி... என்னாத்த கட்டுப் படியாவும்? எனமனங் கெட்டாப்ல என்னா வேல செய்றீங்க...” ஆச்சரியப்படுகிறமாதிரி அதே சமயம் லேசாய் கண்டிக்கிற மாதிரியும் ரங்கசாமி சொன்னார்.

“ நெல்ல யோசனதான். கன்னு முந்திரிதான. மொண்டு ஊத்தறதுல ஒண்ணுந் தப்பு இல்ல. இதுக்கு மின்ன மள்ளாட்ட கேவுருன்னு தலையால தண்ணி மொண்டுக்கிட்டு போயி ஊத்தி மானாவாரி மாசூலு வைக்கில. அதுமாதிரிதான். மொண்டு ஊத்தற இந்தத் தண்ணிக்கி மரத்துக்குப் பத்துப் பிஞ்சி புடிக்காம வுடாது.” ரங்கசாமிக்கு சத்தவண்டி ஓட்டிவந்த தெற்குத்தெரு கோயிந்தர் வேலையை ஆமோதிக்கிறமாதிரி சொன்னார்.

“ பிஞ்சி புடிக்கறது இருக்குட்டும் கோயிந்தா. ஏற்கனவே மருந்தடிக்கறதுக்கு மொள்றது ஒரு பக்கம். இதுல இவுரு ஒரே ஆளா வண்டிய வைச்சி நடநடயா அடிச்சிக் கொண்டுபோயி ஊத்தனா என்னா அர்த்தம். தாமரப்

பூவு குத்துவ வுட்ருக்கற ஏரியில தண்ணி கொறஞ்சா சிக்கலாப் பூடாது.” தாடியும்தப்புமாய் காவி வேட்டியை இடையில் சுற்றியபடி வந்து செம்பையய்யனார் கோயில் பூசாரி முருகேசன் கேட்டார். அவரிடம் புகாராய் சொல்லி இட்டுக்கொண்டு வந்த பூவுக்காரன், பூமாவையும் மலரையும் எரித்துவிடுகிறமாதிரி பார்த்துக்கொண்டிருந்தான்.

“ போ முருகேசா. மருந்தடிக்கிறவன் ரெண்டு நட மொண்டா, இதுக்கு பின்னம் ரெண்டு நட. அந்தக் காலத்துல ஏரியச் சுத்தி இருந்த கொல்லைவோ பூரா இப்பிடிச் செஞ்ச வேலதான். அதோட நித்தம் அடந்து மொண்டாலும் பாதூர் ஏரியாட்டம் கெடக்கறதா பொசுக்குன்னு வத்திடப்போவுது” சொல்லியபடி வண்டியை வெளியே ஓட்டினார் கோயிந்தர்.

இவரது வண்டியும் தோப்புக்குள் போய் நின்றது. தங்கப் பழம் சாப்பாட்டை வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். மலர் வண்டியிலிருந்தபடி சொன்னாள் “ அத்த, நீ சொரட்டுக்கழி புட்டிய எடுத்துக்கிட்டு எங்க தோப்புக்குப் போ. எம்மா, நீ கொடத்த எடுத்துக்கிட்டு வந்து தண்ணி மொண்டுக்கிட்டுப் போயி ஊத்து.”

க டுமையான வேலையாக இருந்தாலும் நிறைவான வேலை. சுட்டுப் பொசுக்குகிற வெயிலுக்கு அசந்து கிடந்துவிட்டு வெயில் தாழத் திரும்பவும் ஆரம்பித்தார்கள். எல்லா மரங்களுக்கும் ஊற்றி கடைசி பாரலில் ஏழெட்டுக் குடங்களுக்கு தண்ணீர் மீந்தது. “ மீந்த தண்ணிய, மொதல்ல ஊத்தன மரத்துவுளுக்கு ஊத்தச் சொல்லுட்டு மாப்பா...” பூமா கேட்டாள்.

ராசோக்கியம் நிமிர்ந்து பார்த்தார். மேற்கால சாரியில் குடலிக்குள் இரண்டு பலாங்கன்றுகள் வதக்கமாக நின்றுகொண் டிருந்தன. “ இந்த பெலாங்கன்னு ரெண்டுக்கும் ஊத்துங்கப்பா...” சொன்னதோடு நில்லாமல் வாங்கிக்கொண்டு போய் ஊற்றவும் செய்தார்.

தங்கப்பழம் உட்பட எல்லோரும் சண்டை போட்டார்கள் “ பத்துப் பெலா மரத்துக்கும் மேல நிக்கிது. ஆயிரமே குத்துவையா இருந்தாலும் ஒரு மரத்தையாவுது வுட்டு ரெண்டு பெலாப் பிஞ்ச கொத்தி ஆக்கித் தின்னுங்கன்னு அந்த மொதலி சொல்லுல. நீ என்னான்னா ஆளு, வண்டி மாடுன்னு மொதலு வைச்சி தண்ணி மொண்டாந்து, அந்தப் பெலாங்கன்னுக்கு ஊத்தற...”

“ வுடும்மா, செல பேரு அப்பிடித்தான் இருப்பாங்க. பந்தியில ஒக்காந்த

பத்துப் பேருக்கு சோறு போட்டுட்டு, ஒரு ஆளுக்கு இல்லன்னு கை விரிக்கிற மாதிரி இம்மாம் முந்திரிக்கி ஊத்திட்டு தாயத்த புள்ளிவுளாட்டம் மொகஞ்செத்து நிக்கிற இதுவுளுக்கு ஊத்துலன்னா என்னாம்மா அர்த்தம். அதான் மனங் கேக்காம...” சொன்னவர் ஊற்றிமுடித்து “ சரி நீங்க கௌம்புங்க. நா படல இழுத்துட்டு வர்றன்” என்று படல் கிட்டப் போனார்.

மலர் பூமாவைப் பார்த்தாள். இதுதான் சமயமென்று கட்டிவைத்த மாட்டை அவிழ்த்துவிட்ட மாதிரி இரண்டும் ஏரியை நோக்கி ஓரியடிக்கப் பறந்து கொண்டிருந்தன.

*

74

ஏரித்தோப்புத் திடலில் மஞ்சள் கொடியைக் கட்டியபடி வேன் ஒன்று நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் ராசோக்கியத்துக்கு ஓர் ஆவலம். வண்டியைத் தேக்கினார். ‘ எதாவது விருத்தாசலம் கடலூர் பக்கம் கூட்டமா...’ அவருக்கு அறிவழகன் ஞாபகம் வந்தது. வேப்பங்குறிச்சியில் இருக்கிறவரை சங்க விஷயமாக சின்ன சேதியாக இருந்தாலும் கலந்து விடுவான்.

ஏரிக்கரைப் பக்கமிருந்து சிவப்பிரகாசம் வந்துகொண்டிருந்தார். சந்தேகமாகக் கேட்டார். “ என்ன அண்ண, சங்கத்துக் கொடியோட வேனு நிக்கிது?”

“ அய்யா இன்னைக்கி சாயந்திரம் மெட்ராஸ்ல கட்சி தொடங்கறாராம். கெழக்குத் தெருவுல செல்லதொர சங்கத்துல முக்கியமான ஆளு. அதான் எல்லாம் வேன்ல கௗம்பறாங்க.” கிட்ட வந்து சொன்னார்.

“ ஆமா. எங்க அறிவழகன் கல்யாணத்தன்னைக்கிக்கூட அய்யா கிட்டின்சுல கட்சி ஆரம்பிக்கறதா சொன்னாரு. எங்க ஊர்லலாம் எப்பிடியும் ரெண்டுமூணு வேனு போவும்.” பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

சிவப்பிரகாசந்தான் கேட்டார். “ அது கெடக்குட்டும். ரெண்டு நாளா ஒன்னப் பாக்கலாம்னு மெனக்கிடறன். ஆளே அம்புட மாட்டங்கற...”

“ என்னா அண்ண இப்பிடிச் சொல்லிட்டிங்க, ஒங்க வூட்டு வழியாலதாம் வண்டிய ஓட்டிக்கிட்டு வர்றம் போறன். ஒண்ணுமில்ல, ஒங்குளுக்கும் சேதி வந்துருக்கும. பூவு நெறையா காய்ச்சல்ல கொட்டு துன்னு வாரம் பத்து நாளா ஏரித்தண்ணிய மொண்டு ஊத்திக்கிட்டு கெடக்கறன்” மாடுகள் நகராமல் வலுவாகக் கயிற்றை இழுத்துப் பிடித்துக்கொண்டு சொன்னார்.

“ அந்த பூசாரிதான் வந்து, நீ குடுக்கற துணிச்சல்லதான் ஏரித்தண்ணிய மொண்டு ஊத்திக் காலி பண்றாப்லன்னு பஞ்சாயத்தம் வச்சான். குருவி குடிச்சாடா கொளத்து தண்ணி வத்திடப் போவுதுன்னு சண்ட போட்டதும் பூட்டான். அது கெடக்குட்டும், மாக்கு மாக்குன்னு ஊத்திக்கிட்டு கெடக்கறதுக்கு, எதாவது புரயோசனமா இருக்கா...?”

“ அட நீ வேற அண்ண, நேத்துதான் கிட்ட நெருங்கிப்போயி நின்னு

பாத்தன். கொட்டுண்டது போவ மீதியிருக்கிற பூவு பூரா மூக்குத்தி மூக்குத்தியா பிஞ்ச வைச்சிக்கிட்டு நிக்கிது. எதோ, பாதிக்கி பாதி கருவனது போவ நின்னாலும் ஒங்க புண்ணியத்துல ஒண்ணுந் தப்பு வராது அண்ண. ஆனா குருட்டடியா இந்த யோசனைய மட்டும் நாஞ் செய்யில, தல மேல துண்டப் போட்டுக்கிட்டுதாம் போவுணும்." ராசோக்கியம் மகிழ்ச்சி பொங்கச் சொல்லிக்கொண்டிருந்தார்.

" ஏம் புண்ணியமெல்லாம் ஒண்ணுமில்ல வேப்பங்குறிச்சார. ஒவ்வொரு யோசனையும், நீங்க மண்ணுமேல வைச்சிருக்கற பிரியத்துல வருது. செய்றது ஒவ்வொண்ணும் ஒங்குளுக்குக் கைகூடி வருது. அப்பறம் இந்தப் பிஞ்சி வைச்சிருக்கற சேதிய எறைச்சிக்கிட்டு நிக்காதீங்க. மொதலியாரு காதுக்குப் போச்சினா... இந்த யோசன நமக்கு வராமப் போச்சன்னு எதாவது சிக்கல் பண்ணலாமான்னு பாப்பாரு." சிவப்பிரகாசம் சொல்லிக் கொடுத்தார்.

" சரி அண்ண, வர்றன்." மாடுகளின் கைக்கயிற்றைத் தளர்த்து கிற நேரம், சிவப்பிரகாசம் " இரு இரு. எதக் கேக்கலாம்னு நெனைச்சனோ அத மறந்துட்டன்" நிறுத்தினார்.

திரும்பவும் கைக்கயிற்றை இழுத்து விறைப்பாக்கினார். சிவப்பிரகாசம் மாடுகள் எடாவி விடாத தூரத்துக்கு நெருங்கி வந்து சொன்னார். " ரெண்டு நாளைக்கி மின்ன, ஓம் மச்சாம் பொண்டாட்டி தங்கப்பழம் வந்துது. சின்னத்தம்பிய வூட்டப் பக்கம் சரியா வல்ல போவுலன்னு எதோ கடாம்முடான்னு சத்தம் போட்டுட்டிங்கன்னு வந்து சொல்லிச்சி."

ராசோக்கியத்திற்கு பட்டென்று தங்கப்பழத்தின் மேல் கோபம் வந்தது. சின்னத்தம்பி விஷயத்தில் தங்கப்பழம் ஏன் இவ்வளவு பயப்படு கிறாள் என அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. சொன்னார் " என்னான்னு தெரியில அண்ண. அந்த ஆளுமேல மொளுக்குன்னு வாயத் தொறக்க கூடாதுங்குது. இது குடுக்கற துணிச்சல்லதான், அவம் தம் பிரியத்துக்கு நடக்கறான். நெனச்ச நேரத்துக்கு மட்டும் வூட்டுக்கு வராம் போறான். எனக்குத் தலயப் பிச்சிக்கிட்டு போவுது அண்ண. ஏம் மொவனே ஒருநாளு ஆள திடீர்குப்பத்து ஒட்டத் தெருவுல பாத்துருக்கான்." வருத்தமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

" நா என்னா சொல்றன்னா, நீங்க ஒண்ணும் அந்தக் குடும்பத்து சிக்கல்ல ஒடம்ப போட்டு முறிச்சிக்கிட்டு கெடக்காதீங்க. அவனுவோ எல்லாம் படிச்சிட்டா வேலைக்கிப் போனானுவோ. கெடந்து ஆப்புட்ட மாதிரி, கைகொண்ட சம்பளம். கண்ணுமுண்ணு தெரியாததாம் போவானுவோ. ஒரு

நெலம்பலத்த வாங்கற வரைக்கும் கம்முன்னு இருந்துட்டு எட்ட வர்ற வழியப் பாரு... அப்பறம் அந்தப் புள்ள எதுக்கு அடிச்சிகிதுன்னா, கெழக்குத் தெருவுல இந்த மாதிரிதான் ஒருத்தன் வேலைக்கி போறவன் கோழி புடிச்சிக்கிட்டு இருந்தான். பசங்களும் வூட்டுப் பொம்னேட்டியும் கடந்து ஆளக் கண்டிக்க ஆரம்பிச்சதும் ஒரேடியா வூட்டுப்பக்கம் வராம, அங்கியே தங்கிட்டான். அதுமாதிரி கடாம்முடான்னு சண்ட போடறதுல, ஒரேடியாத் தங்கிடப் போறான்னு பயப்புடுது வேற ஒண்ணுமில்ல." சிவப்பிரகாசம் சொல்லி முடித்தார்.

" சரி அண்ண, அதுக்காக வூட்ல ஒரு வயிசிப் புள்ளய வைச்சிக்கிட்டு... நாளைக்கி கல்யாணம் கில்யாணம்னு போறப்ப..." ராசோக்கியம் சற்றே வேகப்பட்டவராகக் கேட்டார்.

" நாளைக்கி எதாவது நடக்குது போவுது. ஆனா ஒன்னால அந்தக் குடும்பத்துல எதாவது தற்கொறச்சலு வந்துடப்போவுது, பாத்துக்க..."

*

75

‘ டாக்டர் அய்யா அழைக்கிறார்.’ ‘ பாட்டாளி மக்கள் கட்சி’ தொடக்க விழா. நாள்: **16.07.1989** மாலை **4.00** மணி. இடம்: சீரணி அரங்கம். சென்னை. ‘ இனமானச் சொந்தங்களே வருக! வருக!!’

சண்முகா பேலஸ் முன்னால் நீளநீளச் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டு வைக்கப்பட்டிருந்த தட்டிகளைப் பார்த்துக்கொண்டே வந்த உத்தண்டராயர் செட்டில் குந்தியிருந்த அறிவழகனிடம் கேட்டார் “ ஏம்ப்பா... நிகழ்ச்சி முடிஞ்சி ஒரு வாரத்துக்கு மேல ஆவுது. தட்டிய அவுத்து இப்பிடி செவுத்துப்பக்கம் வைச்சா, வேற எதுக்காவது ஒட்டி வைக்கலாமில்ல...”

“ ஒரு வெளம்பரமா இருக்குட்டும்னு பாத்தன்.” அறிவழகன் சிரித்துக்கொண்டே சொன்னவன், அவரிடம் கேட்டான் “ ஆமா அன்னைக்கி கூட்டம் முடிஞ்சி திரும்புகால்ல எதுல வந்தீங்க? நானும் சிகாமணியும் ரோட்லேர்ந்து கடற்கர கண்ட மட்டும் அலஞ்சிக்கிட்டு கெடந்தம்.”

“ விழா முடியறதுக்கு செத்த மின்னதான், கூட்டத்துல தெக மாறிட்டன். நானும் ஒங்களத் தேடித்தேடிப் பாத்துட்டு கடைசியில வடலூர்க்காரங்க வண்டி ஆம்புட்டதும் அதுல வந்தன்.” குந்தி கசங்கிய பேப்பர்களை புரட்டிப் பார்த்துக்கொண்டே சொன்னார்.

“ அய்யா சங்கம், கட்சின்னு மேலமேல போய்க்கிட்டு இருக்கறாரு. அதுக்குத் தகுந்தமாதிரி நாம்பளும் வேகமாச் செயல்படணும். மொதல்ல ஜி.ஆர். டாக்டர கொண்டாந்து கட்சி சார்புல கூட்டம் போடணும். கையோட கையா நம்ப மாத்துக்குடியிருப்புல நொழையற எடத்தல ஒரு கட்டயக் கட்டி கட்சிக்கொடியையும் சங்கத்துக் கொடியையும் ஒண்ணாப் பறக்கவுடணும்.” மாலை நேரமாக இருந்த தால் இடையிடையே லோடு ஏற்ற நிறையத் தொலைபேசி அழைப்புகள் வரவும் தகவல்கள் கொடுத்தபடி அறிவழகன் ஆர்வமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

“ அப்பறம் நீ சொன்ன லாரி தகவலாதான் வந்தன். பண்ருட்டியில ஒரு ஆளு கிட்ட இருக்காம். எண்பத்தி அஞ்சி மாடலாம். ரெண்டரை சொல்லி கொறைக்க முடியாதுங்கறானாம். போயி பாத்துட்டு வரலாம்னு

நெனைக்கிறேன்.” உத்தண்டராயர் சொன்னார்.

அறிவழகன் முகத்தில் திடுமென ஒரு உற்சாகம். கட்சி தொடக்க விழாவிற்கு சென்னை போகிறபோது அவரிடம் சொன்னான். ‘ வூடு கட்னது போவ கையில கொஞ்சம் பணம் இருக்கு. இது இல்லாம அய்யா குடுத்ததும் இருக்கு. அதனால எல்லாத்தையும் போட்டு ஒரு லாரிய வாங்கி கரி கிரி ஓட்லாம்னு பாக்கறன். தெரிஞ்ச எடத்துல இருந்தா சொல்லுங்க அண்ண.’

உத்தண்டராயருக்கு அறிவழகன் சொன்னதும் சரியாகப் பட்டது. லாரிகள் வரப்போக இருக்கிற இடத்தில், அதுபற்றிய அறிமுகமும் கணக்குவழக்கும் அத்துபடியாயிருக்கிற சூழலில், வேலையோடு வேலையாக இதையும் கவனித்துக்கொள்ளலாம் என்கிற யோசனை. அதோடு கல்யாணத்திற்கு பிறகு ‘ லாரி ஓனர்’ என்று பெருமிதமாகவும் இருக்கும். கூடுதலாய் அய்யா செய்த உதவிக்கு ஞாபகார்த்தமாகவும் இருக்கும்.

உத்தண்டராயரிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்துவிட்டால் தலைமேல் சுமையாக, செய்துமுடிக்கிறவரை ஓயமாட்டார். “ சரி போய்ப் பாத்துட்டு வருவம் அண்ண...” அலுவலகத்தில் விட்டு விட்டுப் போக வெள்ளையர் வருகிறாரா என்று பார்த்தான். வருகிற நேரந்தான்.

பேசிக்கொண்டு இருக்கும்போதே வெள்ளையரும் வந்து விட்டார். எழுந்தான். “ ஆபிஸ்ல இருங்க அண்ண. பண்ருட்டி வரைக்கும் போய்ட்டு வருணும்.”

“ எதாவது கட்சி வேலயா...” சாதாரணமாகக் கேட்டார்.

“ ஆமா... கட்சி வேலையுந்தான்...” உத்தண்டராயர் சொல்லிக் கொண்டிருந்த அதேவேளை அறிவழகன் ஆர்வத்தில் சொன்னான் “ அது ஒண்ணும் இல்ல அண்ண. இங்க குந்தியிருக்கிறதுல பிக்கியில்ல, எதாவது நாமளும் ஒரு லாரி வாங்கி வுடலாம்னு அண்ணங்கிட்ட சொல்லியிருந்தன். அதான் பண்ருட்டியில இருக்குன்னு...”

சொல்லி முடித்ததும் வெள்ளையர் முகத்தில் ஒரு நிழல் படர்ந்தது. உத்தண்டராயர் ‘ எதுக்கு வாய வுட்ட’ என்கிற மாதிரி முறைத்தார்.

மந்தாரக்குப்பம் பஸ் நிலையம் வந்து சண்டையே போட்டார். “ என்னாதான் கட்சிக்காரரு சங்கத்துக்காரரா இருந்தாலும், ஒரு தொழிலு செய்றவங்ககிட்ட போயி நாமளும் அதே தொழிலு செய்றன்னு சொன்னா எடைஞ்சலாதான் தெரியும்.”

“ இல்ல அண்ண. நாளைக்கி வெளியில தெரியத்தான போவுது. அதான் முன்கூடியே சொல்லிடுவம்னு...” இறங்கியது மாதிரி சொன்னான்.

வெற்றிச்செல்வி வாசலைப் பார்த்த வண்ணமாய்க் குந்தி யிருந்தாள். கண்கள் அறிவழகனைத் தேடியவாறே இருந்தன. பொழுது சாய்ந்து இருளத் தொடங்கினாலே வந்து விடுகிறது குறுகுறுப்பும் தகிப்பும். இரவின் வெகுநேரத்தைக் கடந்தும் அறிவழகனைக் காணாமல் உடம்பைப்போட்டு முறுக்குவதும் உதறுவதுமாய் தாங்கமுடியாத அவஸ்தையாக இருந்தது.

கல்யாணத்திற்குப் பிறகு இப்படியோர் எதிர்பார்ப்பு மிக்கதாக இரவு மாறிவிடும் என ஒருநாளும் அவள் எண்ணிப் பார்த்ததே இல்லை. வடலூர் குருகுலத்தில்தான் படித்தாள். அடிக்கடி குடும்பத்தோடு சபைக்கும் வருவார்கள். தைப்பூசத்தின் போது வீடு உறவினர்களாய்க் கிடக்கும். அண்ணன்காரனின் நண்பர்கள் நித்தம் தேடிக்கொண்டு வருவார்கள் போவார்கள். மாமன்முறைக் காரர்கள் வலிய வந்து பேசுவார்கள் கொள்ளுவார்கள். ஆனால் அதுபோன்ற காலங்களிலெல்லாம் ஒருசிறு சலனத்தைக் கூட அறிந்திராத மனதும் உடம்பும்... திருமணமான பின்பு அது கண்டு உண்டு ருசித்து... திரும்பத் திரும்ப அது தேவையாகவே இருந்து, அறிவழகனைத் தேடிக்கொண்டிருந்தது.

அறிவழகனும் இதைப் புரிந்துகொண்டவனாய் மதிய சாப்பாட்டுக்கு தவறாமல் வந்துவிடுவான். காசாம்பும் ரங்கநாதும் ஆட்டக் கண்டியா மாட்டக் கண்டியா என்கிறமாதிரி பறாச் பறாச் சென்று வெளியே கிளம்பி விடுவார்கள். திரும்ப தாமதமாய்தான் புக்கிங் ஆபிஸ் போவான். அதேபோன்று பொழுது சாய்ந்து விளக்கு ஏற்றிவிட்டாலே அசலாம்பும் ரங்கநாதும் வெளியே வராந்தாவுக்கு நழுவிவிடுவார்கள். அறிவழகனும் புள்ளடித்தமாதிரி ஆறு மணிக்குள் வந்துவிடுவான்.

ஆனால் இப்போது, நேரம் ஆக ஆக சடசடப்பும் படபடப்பும் உடம்பெல்லாம் ஏதோ ஊர்வது நெளிவதுபோல்... செல்விக்குக் கூசியது. தாங்கமுடியாமல் எழுந்து கைகளை உயர்த்திப் பின்னி திமிர் முறித்துக்கொண்டாள். அவளின் மனவோட்டத்தை அறிந்தவளாய் காசாம்பு ரங்கநாதைப் பார்த்து சத்தம் போட்டாள். “ ஒண்ணும் கலக்டரு உத்தியோகம் இல்ல அது. சாயந்திரம் அஞ்சி மணிக்கலாம் வூட்டுக்கு வர்ற மாதிரியிருந்தா இருக்குட்டும். இப்பிடி பாஞ்சி நாழி வரைக்கும் காக்கவைக்கிற மாதிரியிருந்தா போவ வேணாமுன்னு சொல்லிடு ஆமா...”

“ இல்ல அத்த... இன்னைக்குதான் லேட்டாவுது... எங்கியாவுது வேலையாப்

போயி...” சொல்லும்போதே வார்த்தைகள் சிக்கின.

காரணமில்லாமல் அநாவசியமாக தாமதப்படுத்தமாட்டான் என காசாம்புக்கும் தெரிந்ததுதான். ஆனாலும் கல்யாணம் ஆகி புதுப்பெண், புழுவைப்போல் துடிப்பதும் நெளிவதும் உண்மை யிலேயே காசாம்புவால் தாங்க இயலவில்லை.

பத்துமணி சங்கு அடிக்க சற்று நேரந்தான் இருக்கும், அறிவு சைக்கிளை நிறுத்திவிட்டு வந்து வீட்டிற்குள் நுழைந்தான். சொல்லி வைத்த மாதிரி நடையில் படுத்துக்கிடந்த இரண்டும் ஒரே நேரத்தில் நல்ல பாம்புகளாய்த் தலையைத் தூக்கின. உள்ளே குந்தியிருந்த செல்வி விசுக்கென எழுந்த நேரம், கண்களில் பொலுக்கென்று மின்னியது.

ரங்கநாதுதான் கேட்டார் “ ஏம்ப்பா, வூட்ல ஒரு பொட்டப் புள்ள இருக்கும்ங்கற யோசன மனசுல ஓடுணும்பா.”

உள்ளே போய் நின்றபடி சொன்னான். “ கட்சி வேலலாம் இல்லப்பா. நாமளும் ஒரு லாரி வாங்கி வுட்டா பாத்துக்குலாம்னு உத்தண்டராயருகிட்ட கலந்தன். அவுரும் சரியான யோசனதான்னு பண்ருட்டியில ஒருத்தங்கிட்ட இருக்குன்னு இட்டுக்கிட்டுப் போனாரு.”

படுத்துக்கொண்டே கேட்ட ரங்கநாது பட்டென்று உற்சாக மானார் “ நெல்ல யோசனதான். சரி போனது என்னாப்பா ஆச்சி. வண்டி புடிச்சிருந்துதா...”

“ பண்ருட்டியில காய்கறி ஓல்சேல் யேபாரிதாம்பா. நேஷனல் பர்மிட் லாரி. எண்பத்தி அஞ்சி மாடலு. மொத ஓனர்தான். வண்டிலாம் அடிபுடி இல்லாம நெல்லாதான் இருக்கு. ஆனா வெலதான் மூணுக்குமேல சொல்றான். சரி, அதாங் கலந்துக்கிட்டு போவும்னு வந்துட்டன்” சொல்லியபடி திரும்பினான்.

“ போவும்போது வடிவேல் மாமங்கிட்ட, லேட்டா தான் வருவன், வூட்ல போயி செத்த சொல்லுங்கன்னன்... வந்து சொல்லுலியா” செல்வியைப் பார்த்துக் கேட்டான்.

பேச அவளிடம் வார்த்தைகள் இல்லை. தொண்டைக்குழியில் ஆத்திரம் துடித்துக்கொண்டிருந்தது. யாரும் வந்து சொல்லவில்லை யென்கிற மாதிரி குறுக்குவசத்தில் தலையை ஆட்டினாள். கண்களில் தேங்கியவை ஆட்டலில் சிதறின. அவனது சட்டைக் கொத்தான்களை அவிழ்த்துக் கொண்டிருந்தாள். சட்டையைக் கழற்றி போட்டிருந்த பனியனை பேண்ட் சொருகலிலிருந்து விடுவித்ததும், அவன் பள்ளிப் பையனைப்போல் கழற்ற ஏதுவாக கைகளை உயரே தூக்கினான்.

பனியனை மேலே உயர்த்தி உருவிய நேரம், அவன் வியர்வை கலந்த அக்குள் வாசத்தில் அவளுக்கு அப்படியே கண்களின் இமைகள் மெல்ல தாழ்ந்துபோய் அவன்மேல் சாய்ந்துவிட்டாள். மெதுவாகச் சாய்த்த நிலையில் படுக்கையறைக்கு நடத்திக் கொண்டுபோய் நிறுத்தி நிமிர்த்தினான். கொடியைப் போலத் துவண்டு நின்ற அவளைப் பார்த்தபடியே கைலிக்கு மாறியவன், தோட்டத்திற்குக் குளிக்கப் போனான். அவள் நெடுமூச்சுவிட்டபடி பின்னால் போனாள்.

சாப்பிட்டு முடித்து, அவனோடு கட்டிப்பிடித்து உருண்டு எழுந்த பிறகுதான் அவளுக்குத் தகிப்பு அடங்கி இயல்பு நிலைக்கு வர முடிந்தது. அவனுக்குந்தான். ஆசுவாசமாய் ஓய்ந்த நிலையில் அவன் மேல் கைகளைப் போட்டு மார்பு முடிகளை நீவியபடி தயக்கமாகக் கேட்டாள் " ஏங்க எல்லார மாதிரியும் நீங்களும் பேசாம நின்னுக்கிட்டு இருக்காம ஜீப்புகீப்புன்னு எதுக்குங்க வம்புதும்புக்குப் போனீங்க?"

அறிவழகனுக்கு அப்படியே நெஞ்சில் பாறையைத் தூக்கிப் போட்டமாதிரி ஒரு அதிர்வு. நிறையப்பேரிடம் விசாரித்து தீரத் தெரிந்துகொண்டு, எந்த நேரத்தில் எப்படிப் பேசவேண்டும் என்கிற முன்தயாரிப்புகளோடு கேட்ட மாதிரி தெரிந்தது. இருந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் கேட்டான் " ஏம்ப்பா..."

" இல்லிங்க... படிக்காதவங்ககூட ஊர்ல நெறயாப் பேரு வேலைக்கி போய் வந்துக்கிட்டு, கைநெறையா சம்பளத்தோட குடும்பத்துல சந்தோஷமா இருக்கறாங்க. நம்ப வூட்டுக்காரரும் இதே மாதிரி வேலைக்கிப் போற வர்றமாதிரியிருந்தா எப்பிடி இருக்கும்னு அடிக்கடி நெனைச்சிப் பாப்பங்க. அதான் கொஞ்சம் அவசரப்படாம இருந்துருந்தா ஒங்க படிப்புக்கு பெரிய வேலையா நெய்வேலிக்காரன் குடுத்துருப்பான்னு..." மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அன்று இவன் அவசரப்பட வேண்டிய நிர்பந்த சூழலை அவளுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது எனத் தெரியவில்லை. அதோடு ஊரில் முக்கால்வாசிப்பேர் நெய்வேலி வேலைக்கு போகிற சூழலில், அவளின் எண்ண ஓட்டத்திற்கான விளக்கத்தைச் சொல்லிப் புரிய வைப்பதாலும் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. மீண்டும் மீண்டும், தெருவில் வேலைக்குப் போய்வந்து கொண்டிருப்பவர் களைப் பார்க்கும்போது திரும்பத் திரும்ப துளிர்த்துக் கொண்டு தான் இருக்கும். இயல்பாய் இருப்பதுபோல் சாதாரணமாகச் சொன்னான் " வேல என்னாப்பா பெரிய

வேல. லாரி ஒண்ணு பாத்துட்டு வந்துருக்கன். நாம்ப ஒரு ஓனர்ங்கறத வுட்டுட்டு ஒருத்தங் கீழால போயி வேல செஞ்சிக்கிட்டு...”

அவளும் விடவில்லை. “ ஆண்டவன் புண்ணியத்துல வாங்குங்க. நெல்லபடியா இருப்பம். ஆனா லாரி வாங்கி வைச்சி ஓட்றதுலாம் சாதாரண வேல இல்லீங்க. எங்க போவுது எங்க வருதுன்னு ஒரு ஆளு கட்டாகட்டியா இருந்தே ஆவணும்” அவள் சொல்லச் சொல்ல அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தொடர்ந்து சொன்னாள் “ எங்க வூட்ல ஒரு இந்துஸ்தான் ட்ரக்கு இருந்துதுங்க. யானையைக் கட்டித் தீனி போடறமாதிரி. அங்க டயர் பஞ்சர்னு நின்னுதும்பான். டீசல் போட காசியில்லம் பான். கரும்பு சரிஞ்சி கரண்டு கம்பத்துலே சாய்ஞ்சிட்டுதும்பான். எங்க அண்ணன் டிப்ளமோ படிச்சான். ஒரு நெல்ல சட்ட போட முடியாம, நேரா நேரத்துக்குச் சாப்புட முடியாம, ஒரு காரியங் கவைக்குப் போவ முடியாம... கடைசியில எல்லாத்தையும் வித்துட்டு, கடலூர்ல ஒரு கம்பேனி வேலைக்கி போனப்பறந்தான் அவனுக்கும் எங்குளுக்கும் நிம்மதியா இருந்துது.” செல்வி சொல்லியபடி மல்லாந்து படுத்தாள்.

“ ட்ரக்குல அதுவும் இந்துஸ்தான் அப்பிடித்தான். இது லைலண்டு. என்.பி. லாரி. நமக்கும் எல்லாமும் அத்துபடி... அதனால ஒண்ணும் பயமில்ல...” அறிவழகன் தெம்பாகச் சொன்னான்.

“ ட்ரக்கு என்னா லாரி என்னா. எல்லாம் ஒண்ணுதாங்க. அப்பறம் ஒங்க சவுரியம். வடலூர் ராமலிங்கசாமி புண்ணியத்துல ஊருக்குலாம் நெல்லது செஞ்சிருக்கீங்க. ஒங்குளுக்கு ஒரு நெல்ல வழி காட்டாமலா வுட்டுடுவாரு.” வெற்றிச்செல்வி தூங்க ஆரம்பித்திருந்தாள்.

*

76

“ சூர வேஷம் கட்றவரு வூட்ல எப்பிடியிருக்காரு...” வடிவேலுவை முன்னே விட்டு பின்னால் வந்துகொண்டிருந்த சிகாமணி, குரல் கேட்கவும் திரும்பினான். மந்தாரக்குப்பம் பேருந்து நிலையத்திற்குள் ஓட்டலின் முன்னால், வண்டியில் மூட்டையை நகர்த்தியபடி கரியர்தான் கேட்டார்.

முன்னே போன வடிவேலு, குடையின் கீழிருந்த தேவகி பூக்கடைகிட்டே போகவும், இவன் சைக்கிளை கொண்டு போய் கரியர் வண்டிகிட்டே நிறுத்தியபடி சொன்னான் “ ரொம்ப ஒடம்புக்கு முடியாமத்தான் இருக்காரு மாமா...”

அந்திவெயில், வியர்வையில் பட்டு மின்ன தானாகவே மூட்டையை நகர்த்தி கிட்ட கொண்டுவந்து வைத்து திரும்பி நின்று முதுகில் மூட்டையைச் சாய்த்துத் தூக்கினார். முடியவில்லை, சைக்கிளை நிறுத்திவிட்டு ஓடி லேசாய் தாங்கிவிட்டதும் அவருக்கு எளிதாகிவிட்டது. உள்ளே தூக்கிக்கொண்டுபோய் போட்டுவிட்டு வந்தார்.

“ ஏம் மாமா வயசான காலத்துல இம்மாஞ் செரமமப் படுறீங்க...” வருத்தத்தோடு கேட்டான்.

“ என்னாப்பா பண்றது, நெய்வேலிக்காரன் இப்பிடி செமுக்குணும்னு நம்ப தலையில எழுதிட்டான். அது கெடக்கட்டும். அத்தைக்காரிவோ ஒண்ணும் ஒத்துவல்ல போல்ருக்கு. ஊம்... சொந்த பந்தங்கறதுலாம் சும்மாப்பா...” கரியர் மிகவும் விசனப்பட்டார்.

“ மறுபடி என்னா மாமா பண்றது. இது பொண்ண கட்லாம்னா அது சிக்கலுக்கு நிக்கிது. அது பொண்ணக் கட்லாம்னா இது சிக்கலு வைக்கிது. எல்லாத்துக்கும் மேல முடிச்சிப் போட்டு வுட்டுது பாரு, எலுமிச்சையில இருக்க சின்னது, அது நெத்தியில கல்ல வைச்சி வாங்கற மாதிரி ஒண்ணேகால் ரூவா கௌப்பிக்கிட்டு பூட்டுது. இதுவுளுகிட்டலாம் அலைஞ்சி பாத்துட்டுதான் இது ஒண்ணும் கதைக்கி ஆவாதுன்னு, மின்ன வேல செஞ்ச எடத்துல காண்ட்ரேட்ல வேலைக்கிப் போறன். ஷிப்டுக்கு நூறு ரூவா தர்றான். வூட்ல குந்திக் கெடந்து மட்டும் என்னா பண்றது. எவங் குடுப்பான்.” சிகாமணி உருக்கமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

“ தா... ஏழாவதோ எட்டாவதோ தான் படிச்சான் வடிவேலு. அவனுக்கு கைகொண்ட காசி சம்பளம். ஒனக்கு நூறுங்கற.” தலையை ஆட்டியபடி சொன்னார். “ ஒன்னியும் அறிவழகனையும் நெனைச்சா தாம்பா எனக்கு மனசே ஆறமாட்டங்குது. மெனக்கிட்ட நீங்க ரெண்டு பேருமே...” சப்புக்கொட்டி வருத்தப்பட்டார் கரியர். சிகாமணிக்கு மறக்க நினைத்தாலும் இடையில் யாராவது இப்பிடிப் பேசிவிடுகிறபோது, திரும்பவும் வேலையின்மை நினைப்பு வந்து சூழ்ந்துகொண்டு சொடுக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது.

“ வர்றம் மாமா...” சைக்கிளைத் தள்ளியபடி தேவகியின் பூத்தட்டுப் பக்கம் போனான். கரியர் கடை வீதிப் பக்கம் வண்டியை ஓட்டிக்கொண்டு போனார்.

தேவகி வடிவேல் நிற்பதைப் பொருட்படுத்தாமல் பூக்கட்டிக் கொண்டு இடையில் கேட்பவர்களுக்கு முழம்போட்டு கிள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். சிகாமணி போய் வடிவேலுவிடம் கேட்டான் “ போவுமா மாமா....”

இவனுக்குப் பதில் சொல்லாமல் தேவகியைப் பார்த்து முறைத்துக்கொண்டே சற்று கோபமாகச் சொன்னான் “ இன்னைக்கி ஆறு மணிக்குலாம் நீ வூட்ல இல்ல...” பற்களை நறநறவென நெரித் தான். பேருந்துக்கு காத்துக்கொண்டிருந்தவர்கள் அக்கம்பக்கத்துப் பூ வியாபாரிகள் எல்லாமும் திரும்பிப் பார்த்தார்கள்.

“ எப்பியும் போல எட்டுமணிக்கு மேலதான் வருவன். போவும் போதே இப்பியே வவுத்துக்கு எதாவது வாங்கிக்கிட்டு போனாலும் போ இல்ல வெறும் வவுறா கவுந்தடிச்சிப் படுத்துக்கிட்டாலும் படுத்துக்க...” சிகாமணி பக்கத்தில் நிற்பதைக் கூட பொருட்படுத்தாமல் வடிவேலுவை விடவும் தேவகி சத்தமாக திமிராகப் பேசியதும் சிகாமணியே அதிர்ந்து போய்விட்டான்.

“ எட்டுமணி வரைக்கும் வித்து நீ ஒண்ணும் குடும்பத்த காபந்து பண்ண வேணாம். இப்பியே நீ வூட்டுக்கு கெளம்பு.” அவளைப் பிடித்து இழுத்து வருகிறமாதிரி கிட்டப்போனான்.

சிகாமணி பதட்டத்துடன் சைக்கிளை நிறுத்திவிட்டு மறிக்கப் போவதற்குள், பக்கத்தில் பூ விற்றுக்கொண்டிருந்தவன் நல்ல வாட்ட சாட்டமான பயலாகத் தெரிந்தவன், குறுக்கே வந்து மறிக்கிறமாதிரி லேசாய் நெட்டினான். “ யேபாரம் நடக்கற எடத்துல எதுக்கு அண்ண வந்து தொந்தரவு

குடுத்துக்கிட்டு... வூட்டுக்கு வருவாங்க. பாத்துக் கலாம் போங்க...”

அவனது பேச்சுத் தோரணையும், வலிந்து மறித்த விதமும் சிகாமணிக்கு அதிர்ச்சியாக இருந்தது. ‘ யாரு இவன். ஆளுமேல கைய வைச்சி இப்பிடி...’ யோசனையில் இருக்கும்போதே, வடிவேலு அவனிடம் சொன்னான் “ இந்தாடா... ஒனக்கு இதுல வேல கெடையாது. இது எங்க குடும்ப வெவகாரம்.”

பட்டென்று அவனுக்குக் கோபம் வந்துவிட்டது “ எங்க வந்து குடும்ப விவகாரம். பஸ்டாண்டுலியா... சரிதான் போன்னு சொன்னா பொடைச்சி பொடைச்சிக்கிட்டு நிக்கிற...” நெட்டவும் செய்தான்.

சிகாமணி அவனை மறித்து அடக்கினான். “ இங்க பாருப்பா. நீ போயி ஓம் பூவ விக்கிற வேலயப் பாரு. அவுங்க ஆம்படையாம் பொண்டாட்டிக்குள்ள...”

பொசுக்கென பூக்கட்டுவதை நிறுத்திவிட்டு சிகாமணியிடம் பஞ்சாயத்தம் வைக்கிறமாதிரி தேவகி சொன்னாள் “ இல்ல தம்பி...”

ஆனால் அவளைச் சொல்ல விடவில்லை சிகாமணி. “ போதும் எக்கா... ஓம் பஞ்சாயத்த நிறுத்து...” அடிக்கிறமாதிரி சொல்லிவிட்டு வடிவேல் பக்கம் திரும்பினான். “ மாமா... இப்ப வர்றியா இல்லியா...”

ஒன்றும் பேசாமல் சைக்கிளை மிதித்துக்கொண்டு வந்தவன், முடக்குத் திரும்பி மெயின்ரோட்டில் ஏறுகிற இடத்தில் மேற்காலப் பக்கம் ஒயின்ஸ் கடை வாசலில் சைக்கிளை நிறுத்தினான். “ நீ போய்க்கிட்டு இரு மாப்ள. வர்றன்...”

கடைக்குள் நுழைகிற அறிகுறியில் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் அதிர்ந்தமாதிரி கேட்டான் “ என்னா மாமா இதுலாம்...”

“ இல்ல மாப்ள அவ படுத்தற பாட்ட என்னால தாங்க முடியில மாப்ள. எவஎவன்லாம் வந்து நெட்றதுக்கு நிக்கிறாம் பாத்தியா. அவ அடிக்கடி சொல்லிக்கிட்டு இருப்பா பாரு நெலத்த எடுக்குட்டும் நெலத்த எடுக்குட்டும்னு... நெலத்த எடுத்ததும் அவ ராஜ்ஜியமா பூட்டுது மாப்ள. பசங்களும் வெளியில போய் தங்கிப் படிக்கிற மாதிரி ஆளாயிட்டானுவோ. பேசாம ஒரே போடா அவளப் போட்டுடுணும்னு வவுத்த எரிச்ச வருது மாப்ள...” மனம் வெறுத்துப் பேசினான்.

“ ஏம் மாமா நீங்க வேற... சரி வாங்க. போய்க்கிட்டு இருக்கறன்...”

நல்லநாள் பெரியநாள் என்றால் மட்டும் அரவந் தெரியாமல் லேசாய் குடிப்பவர், இப்படிப் பட்டப்பகலில் கடந்து கடைக்குள் நுழைவது கண்டு பெருமூச்சு விட்டபடி சிகாமணி, மாற்றுக் குடியிருப்பு நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

சண்முகா பேலசுக்கு நேரே வரும்போது அவனுக்கு அறிவழகன் ஞாபகம் வந்துவிட்டது. திரும்பிப் பார்த்தான். கரி ஏற்றி மூடாக்கு போட்டு தண்ணீர் வழிய நின்று கொண்டிருந்த லாரியின் பின்னால் நின்றிருந்த அறிவழகன் பார்த்துவிட்டான். இவனும் கிட்டப் போனான்.

“ அத்தைமாருவோ ஒண்ணும் ஒத்து வல்லியா...” அறிவழகன் கேட்டான்.

“ அதுஅது நம்பகிட்டதான் சாவி வந்து மாட்டிக்கிச்சின்னு, வேல காட்டுதுவோ அண்ண. நானும் அல மோதிப் பாத்துட்டு ஆண்டவன் வுட்ட வழின்னு காண்ட்ரேட் வேலைக்குப் போறன். வேற வழி...” சிகாமணிக்கு குரல் இறங்கியிருந்தது.

அறிவழகன் சொன்னான். “ நானும் பல வழியில யோசிச்சி தான் ஒரு லாரி வாங்கலாம்ங்கற முடிவுக்கு வந்துருக்கன். ஆனா ஓட்டுக்கு வந்துருக்கற மேடம் வாணாம்னு சொல்லாம அது ரொம்ப செரமமான தொழிலு அது இதுன்னு சுத்தி வளைச்சி சொல்லிக்கிட்டு நிக்கிது.”

சிகாமணி யோசிக்காமல் பட்டென்று சொன்னான் “ வாங்குங்க அண்ண. எதுலதான் செரமம் இல்ல. தே கீழ கெடந்து ஆப்புட்டாப்ல வடிவேலு மாமனுக்கு வேல கெடைச்சிருக்கு, சந்தோஷம்தான்னு நாம நெனைக்கிறம். ஆனா செத்த மின்ன வாயத் தொறந்திருந்தார்னா பஸ்டாண்டிலயே ஆளுக்கு ஒத வுழுந்துருக்கும். எந்தப் பக்கம் பாத்தாலும் சிக்கலும் செரமமுந்தான் அண்ண...”

“ என்னா தகராறா. பக்கத்துல ஒருத்தன் சப்போட்டுக்கு வந்துருப்பான. ஆனா இந்த நெலம் எடுத்து கையில நால்ரூவா பணத்த பாத்ததும் நம்ப சனங்கள்ல செல பேருக்கு என்னா பேசறம், எனுமா நடக்கறங்கறதே தெரியாம புத்தி மழுங்கிப் போச்சிடா...” அறிவழகன் விசனமாகச் சொன்னான்.

“ என்னா அண்ண சொல்ற...” சிகாமணி லேசான அதிர்ச்சியில் கேட்டான்.

டீயை கையில் வாங்கியபடி சொன்னான் “ சப்போட்டுக்கு பக்கத்துல ஒருத்தன் வந்து நின்னாம் பாரு, அவன் கைவசத்துக்குப் பூட்டுதுடா அது. அன்னைக்கி ஒருநாளு பாக்கறன் பே டே பஜார்ல அவங்கூட

எழைஞ்சிக்கிட்டு துணியெடுத்துக்கிட்டு நிக்கிது.”

நின்ற நிலையில் நீட்டிய உள்ளங்கையிலிருந்து இறங்குவது போல், உயர்ந்து, நீண்ட இயந்திரத்தின் நுனியிலிருந்து கன்வேயர் பெல்ட்டில் மண் கொட்டுவது தூரத்தில் தெரிந்தது. பார்த்துக் கொண்டே வீட்டுப்பக்கம் சைக்கிளை திருப்பும் போதுதான் சிகாமணி கவனித்தான். தெருவில் வெள்ளைச்சி அத்தை வந்து கொண்டிருந்தாள். ரங்கநாதும் அவனுமாய் போய்க் கேட்டுவிட்டு வந்து ஒரு மாதத்திற்கும் மேல் ஆகிவிட்டது. அங்கிருந்து யாரும் இங்கு வீட்டுப் பக்கம் வருவதில்லை. இவர்களும் அங்கு போவ தில்லை. வெள்ளைச்சி, வீட்டைக் கடந்து ரோட்டுப்பக்கம் போய்க் கொண்டிருந்தாள்.

வராந்தாவில் செங்கல்ராவு படுத்துக்கிடந்தார். தலைமாட்டில் எச்சில் துப்புவதற்காக மண் நிரப்பி வைக்கப்பட்டிருந்த கொட் டாஞ்சியில் ஈ மொய்த்தது. உள்ளே போய் சட்டையைக் கழற்றி விட்டு தோட்டத்துப் பக்கம் போனான். சோற்றுக் குண்டானை விளக்கியபடி அசலாம்பு குந்தியிருந்தாள். அவள் இப்போதெல்லாம் இவனுடன் கூட அதிகம் பேசுவதில்லை. சிகாமணிக்கு வேலை கிடைக்காமல் செய்துவிட்ட நாத்தனார்கள் ஒரு பக்கம், இருமி இருமி செங்கல்ராவு ஒரு பக்கம், இன்னமும் ஒண்டியாய் சோறு ஆக்க தண்ணி மொள்ளவென குடும்பச் சுமைகளின் வலி மறுபக்கம் என நொந்துபோனாள்.

வெளியே திடுமென பேச்சரவம் கேட்டது. அசலாம்பு விளக்குவதை நிறுத்தினாள். ஏதோ சந்தேகப்பட்டவனாய், நடையில் வந்து நின்று பார்த்தவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. செங்கல் ராவுக்கு பக்கத்தில் வெள்ளைச்சி கையில் ஒரு பிரட் பாக் கெட்டோடு நின்றிருந்தவள், கூப்பிட்டாள் “ அண்ண... அண்ண...”

செங்கல்ராவிடமிருந்து பதில் ஏதும் இல்லாமலிருந்ததும், குனிந்து கூப்பிட்டாள். அசைந்தார். கண்களைத் திறந்து பார்த்தார். மெல்ல எழுந்து குந்துவதற்கு முயற்சித்தார். உதவிக்கு நீட்டிய வெள்ளைச்சியின் கைகளைத் தடுத்துவிட்டு தானே எழுந்து குந்தினார். சிகாமணி உள்ளே போய்விட்டான். எழுந்து நின்று கேட்ட அசலாம்புக்கு, இன்னாருடைய குரல்தான் எனத் தெரிந்தும் முகத்தில் எள்ளும் கொள்ளும் பொரிந்தது. வெளியே வரவில்லை. திரும்பவும் விளக்கியபடி குந்திக்கொண்டாள்.

“ எப்பிடி அண்ண இருக்கு...” அக்கறையாய் விசாரித்தாள் வெள்ளைச்சி.

செங்கல்ராவுக்கு பட்டென்று முகம் மாறியது. எதுவோ அவர் சொல்வதற்கு

வாயை எடுத்தார். அதற்குள் இருமல் முந்திக்கொண்டு பேச விடவில்லை. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க கொட்டாஞ்சியை எடுத்து சிரமப்பட்டுத் துப்பினார். எச்சிலில் துளியாய் தெரிந்த ரத்தத்தைக் கண்டதும் வெள்ளைச்சி பதறிப் போய் விட்டாள். அதற்குமேல் அவரிடம் எதுவும் பேசவில்லை. எழுந்து வீட்டிற்குள் போனவள், யாரும் இல்லாததால் தோட்டத்துக்குப் போனாள். கூடுதலாய் மண்ணைத் தொட்டு மரமரவென ஆவேசமாய் அசலாம்பு தேய்த்துக்கொண்டிருந்தாள்.

அழையா விருந்தாளியாய்ப் போய் சிகாமணி இருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் குந்தினாள். அவளாகவே பேசினாள். " ஏம்ப்பா அன்னைக்கி வர்றன்னு சொல்லிட்டு வந்தீங்க. அதுக்கப் பறம் வந்து ஒண்ணும் பதிலு சொல்லுல."

" என்னாத்த வந்து சொல்லுலங்கற..." சிகாமணி குரலில் லேசாய் கடுமை தெரிந்தது.

" அதாம்பா பொண்ணு தகோலுதான். நாளு வேற தள்ளிக் கிட்டுப் போவுது. இப்பதான் பாத்தன்... அப்பாவுக்கும்... ரொம்ப" அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கரிக்கையோடு எழுந்தாள் அசலாம்பு.

பாம்பு படத்தால் அடிக்கிறமாதிரி பேசுகிறாள் "ஏ மூட்டு புள்ளைக்கி வாழுங்காலத்து பொழப்பு இந்த வேல. அது ஒங்குளுக்கு முக்கியமில்ல. ஒங்க வூட்டுப் புள்ள கல்யாணந்தான் ரொம்ப முக்கியமா போச்சா. ஆளுக்கு ஒரு கையெழுத்தப் போட்டு மொதல்ல போயி வேலைக்கிச் சேருடான்னு சொல்றதுக்கு ஒக்கித இல்ல. ஒங்ககிட்ட தான் செறாப்பு சிக்கிக்கிட்டமாதிரி ஏம் பொண்ண கட்டிக்கிங்கறதும் ஓம் பொண்ணக் கட்டிக்கிங்கறதும்... அவனுக்கு என்னா ரெண்டு ரெண்டாவா தொங்குது. ரெண்டையும் கட்டிக்கிறதுக்கு? எம்மாம் அக்கற பாரு அண்ணன வந்து வெசாரிக் கறது..." வெள்ளைச்சி மட்டுமல்ல சிகாமணி கூட அப்படியே ஆடிப்போய் விட்டான். அசலாம்பு இப்பிடிக் கடந்து பேசி ஒருநாளும் யாரும் பார்த்ததேயில்லை. தண்ணீரில் நனைத்து நனைத்து அடிக்கப்பட்ட கனத்த சாட்டை அடிகளைப்போல வார்த்தைகள். வெள்ளச்சி அப்படியே வெலவெலத்து எழுந்து போயே போய்விட்டாள்.

*

77

தேர் போலக் காய்த்து நிற்கிற முந்திரிகளைப் பார்க்கப் பார்க்க

ராசோக்கியத்திற்கு சிரிப்பு முகந்தான். பாஞ்சாலையோ பூமாவோ யாருமே எதிர்பார்க்கவில்லை. அதைவிடவும் ஊர்க்காரர் களுக்கு ரொம்ப பொறாமையாய்ப் போய்விட்டது. ‘ எலேய், இங்காண்ட கெடக்கற ஏரித்தண்ணிய மொண்டு ஊத்தி, முந்திரி சனகாடு பொனகாடா காய்ச்சித் தள்ளியிருக்குடா... இந்த ஆளுக்கு.’

‘ ஆட்டக் காணம்னு வந்தம், மாட்டக் காணம்னு வந்தம், தண்ணி குடிக்கலாம்னு வந்தம்...’ எதையாவது காரணம் சொல்லிக் கொண்டு வந்து குடும்புகுடும்பாய்க் காய்த்திருக்கிற முந்திரிகளை, பொறுக்கிக் குவித்திருக்கும் காரக்காய் பழங்களைப் பார்ப்பதற் காகவே வருகிறார்கள் போகிறார்கள்.

டீக்கடையில், கோயில் நிழலில் குந்திக்கொண்டு எல் லோருக்கும் இதே பேச்சுதான். ‘ உள்ளூர்க்காரனுக்கு பல யோசன. எல்லாம் மழ பேய்ஞ்சாதாங் காய்க்கும்ங்கற மாதிரி எத எடுத்தாலும் ஒரு அலட்சியம். ஆனா வந்தாரங்குடியா வந்துருக்காம் பாரு அவனுக்கு ஒரே யோசன. எப்பிடியாவது நாமளும் இந்த ஊர்ல நாலு பேருக்கு மதுப்பா மேல வருணும்னு யோசிக்கறான். தே மொதலியாருந்தான் இருக்கறாரு. இதே ஏரித்தண்ணிதான் இம்மாங் காலமாப் பக்கத்துல கெடக்குது. இந்த யோசன அவுருக்கு வந்துதா. பனியால மட்டுமில்ல, மானக் காய்ச்சலாலதான் அதிகமாப் பூவு கொட்டுதுன்னு கண்டுபுடிச்சி, ஏரித்தண்ணிய மொண்டு ஊத்தி இன்னைக்கி புட்டிய வைச்சி மள்ளாட்ட ஆயறமாதிரி காரக்காயும் பழமுமா பொறுக்கிச் சேக்கறான்.’

காரக்காய்களும் பழங்களுமாகக் குவித்துவைத்திருந்தார்கள். மீதி உள்ள மரங்களைப் பொழுதுசாயப் பார்த்துக் கொள்ளலாம் என்று கொட்டைகளைத் திருவினார்கள். வடக்கில் கோயில் பக்கம் பம்பை உச்சத்திலிருந்தது. வெள்ளி செவ்வாய் என்கிற கணக் கெல்லாம் இல்லை செம்பையய்யனாருக்கு. எப்போதும் படையல், செறப்புதான். ஏரிப் பக்கம் கிட்டக்க பேச்சரவம் கேட்கவும், ராசோக்கியம் திரும்பிப் பார்த்தார். சிவப்பிரகாசமும் முதலியாரும் வந்துகொண்டிருந்தார்கள்.

ராசோக்கியம் எழுந்துநின்று கூப்பிட்டார் “ வாங்க. என்னா தெரிஞ்சவங்க படையலுங்களா...”

முதலில் வந்த சிவப்பிரகாசத்தைப் பார்த்துதான் கேட்டார். ஆனால் முதலியாருக்குப் பொத்துக்கொண்டுவிட்டது. “ இந்தப் பக்கம் படையல்னாதான் வருவாங்களா. முந்திரிதான குத்துவைக்கி வுட்ருக்கு.

மாமரம் பெலாமரம்னு கூடவா பாக்க வரக்கூடாது" பேச்சு கடுமையாக வந்துகொண்டிருந்த அதேவேளை கண்கள், காய்த்திருக் கிற முந்திரிகளின் மீதும் கொட்டி வைத்திருக்கும் காரக்காய் பழங்களின் மீதும் ஓடியது.

ராசோக்கியம் பதறிப் போய்விட்டார். " என்னாங்க திடீர்னு இப்பிடிக் கேட்டுட்டிங்க. இது ஒங்க தோப்பு. நீங்க வர்றதுக்கு யாரங்க கேக்கணும். படையல் நடக்குதுன்னு தெரிஞ்சவங்களா இருக்குமோன்னு..." இழுத்தார்.

சிவப்பிரகாசம் சிரித்துக்கொண்டே உடைத்துப் பேசினார் " அதுலாம் இல்ல. அங்க டீக்கடையில வேப்பங்குறிச்சாருக்கு முந்திரி நெல்லா காய்ச்சிருக்குன்னு பேசிக்கிறானுவுள, அதான் பாத்துட்டு வருவம்னு வந்தம். பரவாயில்ல மொத ஈட்டுல புடிக்கிறமாதிரிதான் பிஞ்சு புடிச்சி காய்ச்சிருக்கு போல்ருக்கு."

சிவப்பிரகாசம் சொன்னது உண்மையிலேயே ராசோக்கியத் திற்கு மகிழ்ச்சியாக இருந்தது. " அதுலாம் ஒண்ணுமில்ல அண்ண. நமக்கு தெரிஞ்ச தொழிலு பயிரு பச்சன்னு இது ஒண்ணுதான். எந்த மாசூலு வைச்சாலும் செறப்பா செய்யிணும்னு நெனைக்கறது தான். எல்லாத்துக்கும் மேல செம்பையனாரு ஏறெடுத்து பாத்தது தான்." ராசோக்கியம் நெகிழ்வாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலியார் பேச்சில் ஏதும் ஆர்வமில்லாதவராய் பலா மாமரங் களைப் பார்ப்பதுபோல் முந்திரிகளை நோட்டம் விட்டுக்கொண் டிருந்தார். எல்லா மரங்களும் தூக்கத்தில் விழித்துக்கொண்ட மாதிரி திடுமென எவர் கொல்லையிலுமில்லாமல் அங்கு காய்த்து நிற்பதில் அவருக்குக் கண்கள் கூசின.

" இனிமே பாரு வேப்பங்குறிச்சார... காய்ச்சப்பாடு வந்து போச்சினா முந்திரிக்கி தண்ணி மொண்டு ஊத்த பாரலும் வண்டியுமா தான் நிப்பானுவோ ஊர்ல..." சிவப்பிரகாசம் சொன்னார்.

பலா மரங்களைப் பார்த்துக்கொண்டிருந்த ஆறுமுக முதலியார் ஆச்சரியமாகவும் அதேசமயம் குற்றஞ்சாட்டுகிற மாதிரியும் சொன்னார். " என்னாங்க இந்த மரத்துல ஒரு காயக் காணம்?"

ராசோக்கியம், கொட்டைகளைத் திருவிக்கொண்டிருந்த பாஞ்சாலை, பூமா எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். " பெலாக்காய காணமா? நாங்கள்லாம் மரத்தக்கூட நிமுந்து பாக்கறது இல்லிங்க..." பாஞ்சாலை சொன்னாள்.

ராசோக்கியம் கிட்டப்போயும் பார்த்தார். " கோம்பு ஒண்ணு ரொம்ப

காய்ஞ்சு போனதா தெரியித தவிர, வெட்ன மாதிரியோ திருவன மாதிரியோ தெரியலிங்க.”

சிவப்பிரகாசம் குறுக்கே புகுந்தார் “ எதாவது சொத்துங் கித்துமா இருந்து வெம்பி கீழே வுழுந்துருக்கும். மாடுவோ கீடுவோ தின்னுட்டுப் போயிருக்கும். இங்கதான் ராவு பவல்னு இல்லாம ஏரிக்குத் தண்ணி குடிக்கறதுக்கு மாடுவோ வந்துக்கிட்டு இருக்கும...”

நம்புதலை இல்லாதமாதிரி முதலியார் நின்றுகொண்டிருந் தார். பாஞ்சாலையும் விடவில்லை. “ நமக்குலாம் அப்பிடி அடுத்தவங்க பொருளத் தொடுணும்னு மனசுல தோணாதுங்க. தே முந்திரிக்கி தண்ணி மொண்டு ஊத்தறப்ப, இந்த ரெண்டு பெலாங் கன்னுக்கும் தான் சேத்து ஊத்தனம். ஒரு எடத்துக்குப் போனா நெல்லதுதான் நெனைப்பம தவிர, கெடுதலு நெனைக்க மாட்டம். அதுக்கப்பறம் அந்த செம்பையய்யனார்தான் சாட்சி, நீங்க என்னா நெனைச்சிட்டுப் போனாலும் போங்க.” செம்பையய்யனாரைக் குறுக்கே இழுத்த பிறகு முதலியாரால் ஒன்றும் பேசமுடியவில்லை.

சிவப்பிரகாசம் தான் சொன்னார் “ பாஞ்சால... கொட்ட பொறுக்கி முடிஞ்சதும் ஏதோ ஒங்க சத்துக்கு உண்டான தொகைய கோயில் உண்டியல்ல போடுங்க. இம்மாங் கொட்டையும் ஏரித்தண்ணிய மொண்டு ஊத்திதான், ஏரித்தண்ணிய மொண்டு ஊத்திதான்னு நிக்கிறானுவோ. சாமி பேரச் சொன்னப்பறம் நாம்ப சும்மா இருக்கக்கூடாது.”

ராசோக்கியம் பட்டென்று ஆர்வமாகச் சொன்னார். “ பொய்யில்ல அண்ண. ஏரித் தண்ணிய மொண்டு ஊத்தனதுலதான் இம்மாங் கொட்டையும். நா எப்பியோ முடிவு பண்ணி வைச்சிருக்கன். என்னா ஒரு நூத்தப்பத்த போடலாம்னு நெனைச்சிருந்தான். இதுக்குமேல ஆயிரம் ரூவாய ஒங்க கையிலியே குடுத்துடறன். நீங்களே உண்டியல்ல போட்டுடுங்க.”

*

78

“ என்னா லாரி ஓனரு ரொம்ப அரிபுரியா இருக்காரு போல் ருக்கு... பணங்காசி மேல ஓசன ஓடறதுல சேவிங் பண்ணக்கூட நேரங் கெடக்கிலியா...” செம்ப படையாட்சி சொல்லிக்கொண்டே வந்ததும் யாரைச் சொல்கிறார் எனத் திரும்பிப் பார்த்தான்.

நெற்றியில் ‘ அறிவு’ எனக் கட்சி வண்ணத்தில் பொறித்த படி நின்ற லாரியைப் பார்த்துக்கொண்டே கிட்ட வந்தார் “ ஒன்னத் தாம்பா சொல்றன். லாரி வாங்கிட்டா நீனும் மொதலாளிதான...” அறிவழகனிடம் சொன்னதும் தன்னைத்தான் சொல்கிறார் என்பதை உணர்ந்து சிரித்தான் “ என்னா அண்ண பெரிய ஓனரு. எங்க செல்வி சொன்னமாதிரி இது பெரிய சிக்கல் வேலையாத்தான் இருக்கும் போல்ருக்கு. நேரா நேரத்துக்கு வூட்டுக்குப் போவ முடியில... சாப்ட முடியில...”

“ மோட்டார வைச்சி பராமரிக்கறதுன்னா அப்பிடித்தான் இருக்கும். ஒரு லாரி வாங்கனதுக்கே சங்கம் கட்சின்னு கூட்டத்துக்கு வரமாட்டங்கற. அய்யா வேற நம்பள நம்பி கட்சிய வேற ஆரம்பிச்சி வைச்சிருக்காரு. வெள்ளையரு மாதிரி நாலஞ்சி லாரின்னு போயிட் டின்னா எல்லாத்தையும் ஒரேடியா மறந்துடுவ போல்ருக்கு.” பெஞ்சில் குந்திச் சிரித்தபடி சொல்லிக்கொண்டிருந்தார்.

வெள்ளையர் பற்றி பேச்சு ஓடியதும் அவனுக்கு லேசாய் முகம் மாறுதல் கண்டது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ரகசியத்தைச் சொல்கிறமாதிரி சொன்னான் “ உத்தண்டராயரு சொன்னமாதிரி லாரி வாங்கனப்பறம், இவுரு போக்கு கொஞ்சம் மாறுதலையாதான் அண்ண இருக்கு.”

“ வேலைக்கி வந்த ஆளு, திடீர்னு ஓனர் ரேஞ்சுக்கு போறதுங் கறதப் பாக்கற அவுருக்கு லேசா சங்கடமாதான் இருக்கும். அதலாம் பாக்காத. நம்ப கட்சிக்காரரா வேற இருக்காரு.” சமாதானப் படுத்துகிற மாதிரி சொன்னார்.

“ அது இல்ல அண்ண. வழக்கமாக் குடுக்கற சம்பளத்துல திடீர்னு ஆயிரத்த புடுச்சிக்கிட்டு குடுக்கறாரு. என்னா அண்ணங்கறன். ஒன்னோட லாரிக்கும் சேத்துதான இங்க வேல பாக்கற. அதனால சம்பள விஷயத்துலியும் கொஞ்சம் பாத்துப் போங்கறாரு. பெசாம ஆபிசுக்கு வர்றத

நிறுத்திட்டு, தனியா நம்ப லாரிய மட்டும் லோக்கல் லோடுக்கு ஓட்டிக்கிட்டு பாத்துக்கலாம்னு இருக்கறன்." அறிவழகன் மனம் சஞ்சலப்பட்ட மாதிரி சொன்னான்.

பேசிக்கொண்டு இருக்கும்போதே உயரமான பையன் ஒருவன் வந்து " இந்தா அண்ண, நா ரெனிவுலுக்கு வெற்றி டிரைவிங் ஸ்கூலுக்கு போனன். ஒங்க ஓனருகிட்ட குடுன்னு குடுத்தாங்க." லைசென்சை கொடுத்துவிட்டுப் போனான்.

" என்னா லைசென்சுலாம்? நீனும் வண்டி ஓட்றமாதிரி யோசனையா..." செம்பர் கேட்டார்.

" மோட்டார்ல திடீர்னு அவசரத்துக்கு நாம்பளும் ஓட்ற மாதிரியுந்தான் இருக்கும். ஏற்கெனவே லைட் வைச்சிருந்தன். வண்டி வாங்கனப்பறம் எதுக்கும் இருக்குட்டும்னு ஹெவிய எடுத்தன். பையன் நம்ப வண்டி கிளீனர்தான். சேலத்துக்கு செங்கல் சேம்பருக்கு லோடு போவுது." அறிவழகன் சொன்னான்.

பையன் வண்டிக்குள் ஏறியதும், திணறிக் கரும்புகையைக் கக்கியபடி கிளம்பியது. இவர்களைப் பார்த்து தலையாட்டிவிட்டுப் புறப்பட்டார்கள். வண்டிக்கும் பின்னால் சற்று தூரம் வரை புகை மண்டலம் தெரிந்தது. கேட்டார் " என்னா இம்மாம் பொக தள்ளுது."

" இஞ்சினு இப்பதான் வேல செஞ்சிதுன்னு சொன்னா னுவோ. இப்ப இப்படித் தள்ளுது. மோட்டார்ல எல்லாம் வாயால போட்டு சூத்தால எடுக்கறவனுவுளாதான் இருக்கானுவோ."

" அவனுக்கு வண்டி வாங்கனதுலேர்ந்து வூட்டு நெனப்பே சுத்தமா இல்ல. அது புரியாம, கௗம்பிக்கிட்டு இது தெருவப் பாத்துக்கிட்டு நிக்கிது." தெருவில் வந்துகொண்டு இருக்கும்போதே கேட்டது காசாம்புவின் குரல். அறிவழகனுக்கு திக்கென்றது.

மதியம்கூட சாப்பாட்டுக்கு வருகிறபோது செல்வி சொல்லித்தான் அனுப்பினாள். " ஒரு மாசந் தவறாம வடலூருக்கு பூசத்துக்கு போவம். இங்க வந்தப்பறம் போவ முடியில. இந்த மாச பூசத்துக்காவது, சாயந்தரமா வந்து இட்டுக்கிட்டு போயி ஊர்ல வுடுங்க."

அவனும் ' சரி' என்று தலையாட்டிவிட்டுத்தான் போனான். போன இடத்தில் வெள்ளையர் இந்த சம்பள விஷயத்தில் இக்கு வைத்ததும் எல்லாமும்

மறந்துபோய்விட்டான். லோடு ஏற்றி வண்டியை அனுப்பிவிட்டு, வெள்ளையரிடம் கணக்குவழக்கைச் சொல்லிவிட்டு வருவதற்குள் ஏழு மணியைத் தாண்டிவிட்டது.

“ ஏம்ப்பா... அந்தப் புள்ளய நேரா நேரத்துல வந்து பஸ்சு ஏத்தியாவது வுட்ருக்கலாம். அது வடலூர் போயி அங்காண்ட வேன புடிச்சாவது ஊருக்குப் போயிருக்கும்...” காசாம்பு சண்டை போடுகிற மாதிரி கேட்டாள்.

ஒருநாள் அவசர வேலையென்று இப்படித்தான் பஸ் ஏற்றி விட்டுவிட்டான். இரண்டுநாள் கழித்து, இட்டுக்கொண்டு வரப் போனவனை மாமனார் பிடித்துக்கொண்டார். ‘ இங்க பாருப்பா தல போற வேலயா இருந்தாலும் பொட்டப் புள்ளய தனி வழி அனுப்பி வழக்கப்படுத்தாத. அது குடும்பத்துக்கு ஆவாது. ஊட்டுக் குள்ள வந்து விருந்து சாப்புட்டுட்டுதாம் போவுணுங்கற கணக்குக் கெடையாது. கொண்டாந்து வாசல்ல வுட்டுட்டு தெருவோட திரும்பனாலுஞ் சரி, தனியா மட்டும் அனுப்பாத...’

“ என்னாப்பா நாங் கேக்கறன். ஒண்ணுஞ் சொல்லாத போற...” திரும்பவும் காசாம்பு கேட்டாள்.

“ என்னாத்த அவன சொல்லச் சொல்ற? எதாவது வேல பேர்ல மறந்துருப்பான்.” ரங்கநாது சத்தம் போட்டார்.

மெல்ல வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தான். குளித்து முடித்து சரசரக்கிற புடவைக்கு மாறி அலங்காரங்கள் செய்து ஒரு தேவதையைப் போல் நின்றிருந்தவள் இவனைக் கண்டதும் தலைகுனிந்து கொண்டே போய் குளிப்பதற்குத் தண்ணீரை எடுத்து வைத்தாள். உடை மாற்றி குளிப்பதற்கு தோட்டத்திற்கு வந்தவன் மன்னிப்பு கேட்கிறமாதிரி சொன்னான். “ நெனைச்சிக்கிட்டுதாம்பா இருந்தன். அந்த ஆளு சம்பளத்த கொறைச்சிக்கிட்டு குடுக்கறாரு. கேட்டா ஒன்னோட வண்டிக்கும் சேத்துதான வேல பாக்கறன்னு...” அவன் சொல்வது எதையும் காதில் வாங்காமல் ஒரு இயந்திரத்தை அவனுக்கு போல முதுகு தேய்த்துவிட்டு உள்ளே போனாள்.

அவன் வெலவெலத்தமாதிரி குளித்துவிட்டு வந்து வாசலில் நின்றான். உள்ளிருந்து துண்டை எடுத்துவந்து அவனுக்குத் தலை துவட்டிவிட்டாள். புடவையின் சரசரப்பும், சோப்பு சூழ்ந்த பவுடர் மணமும், மனம் நிறைந்தவளின் அங்கத் தீண்டுதலும் பட்டென்று அவனை எங்கேயோ இட்டுக்கொண்டுபோனது. சுதாரித்தபடி அவள் முகத்தை நிமிர்த்திக் கேட்டான். “ என்னாப்பா, நாஞ் சொல்றது எதையும் காதுலியே வாங்கிக்க மாட்டங்கற...”

விளக்கு வெளிச்சத்தில் தத்தளித்துக் கொண்டு நிற்கின்றன கண்கள். வெடிக்கும் அழுகையை அடக்கிக்கொண்டே சொன்னாள். “ வண்டி வாங்கனா என்னா நடக்கும், எப்பிடி இருக்கும்னு முன்கூட்டியே சொல்லிட்டன். எல்லாந் தெரிஞ்சிருந்தும் நானே திருந்திக்கலன்னா ஏந் தப்புதான். என்னை நா மாத்திக்கணும். மாத்திக்கறன்.”

“ என்னாப்பா சொல்ற...” அதிர்ச்சியாகக் கேட்டான்.

“ ஊருக்குப் போவுணுங்கற நெனப்பே எனக்கு இருக்கக் கூடாதுங்க. அதுக்கு தகுந்தமாதிரி என்னை நா மாத்திக்கணும்.” கறாராகச் சொன்னபோது கண்ணீர் இறங்கிக்கொண்டிருந்தது.

துவட்டி முடித்து உள்ளே இட்டுக்கொண்டு போய் சாமியா வீட்டில் வள்ளலார் படத்தின் முன் நிறுத்தி கற்பூரம் கொளுத்திக் கும்பிட்டாள். விபூதியை எடுத்து அவன் நெற்றியில் பூசிவிட்டு, கண்ணில் விழுந்துவிடாதவாறு கையால் மறைத்துக் கொண்டு லேசாய் ஊதினாள். காற்றோடு ஆத்திரத் துளிகள், நெற்றியில் ஓடித் தெறித்தன.

*

79

விடிந்த பிறகும் சின்னத்தம்பி வீட்டிற்கு வரவில்லையென்பது கண்டதும், தங்கப்பழத்திற்குத் தாங்கமுடியவில்லை. இரண்டு நாள் மிஞ்சினால் மூன்று நாள், எந்த போதையில் எங்கு கிடந்தாலும் ‘ டாண்’ என்று வீட்டிற்கு வந்துவிடக்கூடிய ஆள்தான். ஆறாவது நாளைக் கடந்தபின்னும் வரவில்லை. இரவெல்லாம் அழுது குமுத்துப் போயிருந்தது அவள் முகம்.

உலை கொதித்துக் கொண்டிருந்த வேளை. அதே நினைப்போடு காய்கறி அரிந்து கொண்டிருந்த தங்கப்பழத்திற்கு மறுக்கென்று விரல் அருவாமனையில் பாய்ந்து, குபுக்கென்று ரத்தம் பொங்கியது. ‘ உம் ஆம்’ங்கவில்லை. விரலை ஈரப்படுத்தி அழுந்தப் பிடித்துக் கொண்டதும் இரத்தம் வருவது நின்றதே தவிர கடும் எரிச்சல்.

அரிசியைக் களைந்து உலையில் போட்டுவிட்டு ராதா வீட்டிற்குப் போய் முருங்கைக்காய் வாங்கிக்கொண்டு வரலாம் என வெளியே வந்தாள். மனசெல்லாம் சின்னத்தம்பியின் மேலேயே ஓடிக்கொண்டிருந்தது. தங்கப்பழத்தைப் பொறுத்தவரையில் சின்னத்தம்பி அவளுக்கு எந்த விதத்திலும் குறைவைத்தது இல்லை. குடி கூத்தியா என எங்கு சுற்றினாலும், இரண்டு மூணு நாளில் வீடு திரும்பியதும், எல்லோரும் அசந்துகிடக்கும் நள்ளிரவில் உள்வீட்டில் வந்து அவளுடன் படுத்துக்கொள்கிற கணங்களில், அவளுக்கு எல்லாக் கசப்புகளும் கரைந்து, மறந்து உற்சாகமாகி விடுவாள். ஒரு வயசிப்புள்ள கல்யாணத்துக்கு நிற்கும்போது கூட இதை விடமுடியாமலிருப்பது பகலில் நினைத்துப் பார்க்கும்போது சங்கடமாக இருக்கும். இதனால்தான் அவள் கடந்துபோய் புருஷனைக் கண்டிக்க முடியாமல் திகைமாறி நிற்பது. ஆனால் ஆறாவது நாளாய் அவன் வீட்டிற்கு வராத நிலையில் அவள் யாருடனும் பேசுவ தில்லை. வீடு மெல்ல மெல்ல இறுக்கம் சூழ்ந்து ஓர் இழவு வீட்டின் சூழலுக்குள் ஆழ்ந்துவிட்டது.

‘ இதுக்குத்தான் அண்ண, அவங்கிட்ட கடந்து எதியும் கேக்கக் கூடாதுங்கறது. தே லேசா நீங்க குறுக்க நெடுக்க சண்ட போடப் போயி பாரு... ரெண்டுல மூணுலங்கறவன் நாலா ஆயி, அஞ்சாவது நாளாவும் வல்ல. அப்பிடியே இந்த குடும்பத்தத் தல மொழுவிட்டு அங்கியே இருந்தாலும் இருந்துடுவான்.’ கண்ணீரோடு முதல்நாள் இரவு சொன்னது இன்னமும் பாஞ்சாலைக்கும் ராசோக்கியத்திற்கும் அறுத்துக்

கொண்டிருந்தது. ‘ ஒன்னால அந்தக் குடும்பத்துல எதாவது தற்கொறச்சலு வந்துடப் போவுது’ சிவப்பிரகாசம் சொன்னதும் ஓசைப்படாமல் உள்ளே ஓடிக்கொண்டிருக்கவும், இனி எப்போதும் இதுபற்றி வாயைத் திறக்கக்கூடாது என்கிற மாதிரி வந்து படுத்துக்கொண்டார்.

எப்போதும் வம்பும் தும்புமாய் குசுகுசுவெனப் பேசியபடி கிடக்கும் பூமாவும் மலரும் ஒன்றும் பேசாமல் தண்ணீர் மொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

அண்ணனின் அடாத போக்கு, அண்ணிக்காரியின் பொசுக் கென்று விரல்நீட்டிய குற்றச்சாட்டு, முள்ளாய் மனசில் அறுவிக் கொண்டிருக்க பாஞ்சாலை முடங்கியே கிடந்தாள். ராசோக்கியத்திற்கு, இதுவேறு இப்படிப் படுத்துக்கிடப்பது அப்படியே மெல்ல பழைய படி உடம்பு சரியில்லாத நிலைக்குக் கொண்டுபோய் விட்டுவிடுமோ என்கிற பயம். கூப்பிட்டார் “ பாஞ்சால, ஏந்திரிச்சி கௌம்பு. தோப்பு பக்கமாச்சும் போவும்.”

முந்தானையை வளைத்துப் போர்த்திக்கொண்டே தங்கப்பழம் முருங்கைக்காய் வாங்கி வர ராதா வீட்டைத் தேடிப் போனாள். ஆனால் வழியிலேயே திரும்பி நேரே வடக்காலத் தெரு போய் அழகேசர் வீட்டிற்குள் நுழைந்தாள். நைட் ஷிப்ட்டு பார்த்துவிட்டுத் தான் அவர் வந்திருந்தார். விசாரித்தாள். அழகேசரும் முந்தினநாள் சாமிதுரை சொன்னதுபோலவேதான் சொன்னார் “ நேத்து எங்க கூடத்தான் வேலைக்கி வந்தாரு, பாத்தன். இங்க வல்லன்னா, அப்ப அங்கதாம் போயிருப்பாரு.”

ஊமையாய் வீட்டிற்குள் நுழைந்த தங்கப்பழத்தை ஏறெடுத்துப் பார்ப்பதற்கு ராசோக்கியத்திற்கு விருப்பமில்லை. மேலும் வீட்டில் குந்தியிருக்கப் பிடிக்காமல், மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி, சாமான் செட்டுகளை எடுத்து வைத்துக்கொண்டு தோப்புக்குப் போகிற வேலையில் கவனத்தைச் செலுத்தினார்.

அடுப்பங்கரைக்கு வந்த தங்கப்பழத்திற்கு, பிறகுதான் உறைத்தது. முருங்கைக்காய் வாங்கப் போனவள்தான், அங்கு போகாமல் அழகேசர் வீட்டிற்குப் போய்வந்து விட்டது. மலரும் பூமாவுமாய் குடங்களை இறக்கிக் கீழே வைத்ததும், மலரிடம்தான் சொன்னாள் “ ராதா வூட்ல போயி ரெண்டு முருங்கக்கா வாங்கியா புள்ள...”

கூட பூமாவும் பாதி நனைந்த துணிமணியோடு போய் ராதா வீட்டில் கேட்டதும், அவள் கையைக் காட்டினாள். “ எட்டாது, ஒசரதான் இருக்கு. தா சொரட்டுக்கழி இருக்கு. எட்டிக்கிட்டிப் பாருங்க.”

ராதா சொல்லிவிட்டு உள்ளேபோய் கொஞ்சநேரம் கூட இருக்காது. மலுக்கென்று ஒரு சத்தம். பிறகு தரையில் மளமளவென கிளைகள் முறிந்துவிழுகிற ஓசை. அவசரமாய் வெளியில் வந்த ராதா அப்படியே விக்கிப்போய் நின்றுவிட்டு, நேரே தங்கப் பழத்தின் வீட்டுப்பக்கம் ஓடாத குறையாய்ப் போனாள்.

“ ஏண்டி தங்கப்பழம், முருங்கக்கா கேட்டு வுட்டிய, அதுவோ படுத்தியிருக்கிற பாட்ட வந்து பாரு. எம்மா பெரிய கௌ. பூவும் பிஞ்சுமா எப்பிடி நின்னது...” ஆத்திரத்தோடு பஞ்சாயத்தம் வைத்தாள்.

மரத்தில் சற்றுப் பெரிய கிளை அதுதான். கொத்துக் கொத்தாய்ப் பூக்களும் பிஞ்சுகளுமாய் முறித்துக்கொண்டு கீழே கிடக்க, இவர்கள் பறிப்பதற்கு ஆசைப்பட்ட முருங்கைக்காய் தரையில் விழுந்து இரு துண்டாய்ப் போயிருந்தது. மலர்தான் எக்கி எக்கிப் பறிக்க முயற்சி செய்துகொண்டிருந்தாள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு பூமா சொரட்டுக்கழியை வாங்கி, ஒரே துள்ளாய்த் துள்ளி உயரே சிம்பை நோக்கி நீட்டினாள். சிம்பில் மாட்டாமல் சற்று அதற்கும் கீழே ஒரு சிறிய கிளையில் மாட்டியது, இவள் கனத்தைத் தாங்காமல் பூச்சி அடித்து பிசின் ஒழுகியபடி நின்ற ஒரு பெருங்கிளையோடு முறித்துக்கொண்டு விழுந்தது. அவசரமாய் எட்ட ஓடுவதற்குள் இருவரின் முதுகிலும் முருங்கைச் சாட்டைகள் விழுந்து, வலி தெறித்துக் கொண்டிருந்தது.

ரொம்பவும் ஆர்ப்பாட்டமாய் வருகிற தங்கப்பழத்தைக் கண்டதும் இரண்டுக்கும் கிலி கண்டுவிட்டது. வந்த வேகத்தில் கீழே கிடந்த சற்று பெரிய முருங்கைக் கழுந்தை கையில் எடுத்தவள் ஓங்கினாள். “ ஏண்டி தேவ்டியா... அவம் போயி அங்க குந்திக்கிட்டு ஒரு வாரமா படாத பாடு படுத்தறான்னா, நீனும் என்ன இந்த பங்கப் படுத்தற...”

ராதா வந்து மறிக்கவில்லையென்றால் அடி விழுந்திருக்கும். ஆனாலும் தெருவில் பல பேர் முன்னிலையில் இப்பிடிப் பேசி கழியை ஓங்கியது, மலருக்கு அடித்துவிட்ட மாதிரியே ஒரு அவமானமும் வலியும். நொறுங்கிப்போய்விட்டாள். பூமாவுக்கும் சுளீர் என்று அடி விழுந்துவிட்ட மாதிரிதான்.

மலர் எதுவும் பேசாமல் படுத்தே கிடந்ததும் பூமாவுக்கு என்னவோ போல் இருந்தது. “ வுடு மலரு. மாமன் வூட்டுக்கு வல்லங்கற கோவத்துலதான அத்தை பேசனாங்க. இதுக்குப்போயி உம்முன்னா படுத்துக் கெடக்கறது.” பூமாவின் பேச்சுக்கு அவளிடம் பதிலெதுவும் இல்லாதது கண்டதும்,

அவளுக்கு விசனமாக இருந்தது. காலையிலேயே பேசாமல் எப்படியாவது தோப்புக்கு இட்டுக் கொண்டு போயிருக்கவேண்டும்போல் தோன்றியது. கொட்டை விழுவது குறைந்து தோப்பு சுருக்கத்துக்கு வந்துவிட்டதால் ராசோக்கியமும் வலிந்து கூப்பிடவில்லை. தங்கப்பழமும் மலரோடு வளர்த்திய வேதியில், அதே கோபக்குறியோடு சொரட்டுக்கழிப் புட்டியை எடுத்துக்கொண்டு தோப்புக்குக் கிளம்பிவிட்டாள்.

பூமா வெளியே எழுந்துவந்து மாட்டுக்கு கன்றுக்குட்டிக்கு அன்னக் குண்டானில் இருந்த கழநி தண்ணியைக் கொண்டுபோய் வைத்தாள். வெயில் உச்சிக்கு வந்து கொளுத்திக்கொண்டிருந்தது. வீட்டுக்குள் நுழைந்தபடி மலரைப் பார்த்தவளுக்கு, அவள் படுத்துக் கிடந்த இடத்தில் இல்லாதது கண்டதும் பக்கென்றது. “ மலரு...” கூப்பிட்டுக்கொண்டே உள்ளே போனாள்.

“ என்னாடி...” உள்வீட்டிலிருந்து வந்தவள் வெளியே போய் மூஞ்சி கழுவிவிட்டு, சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியின் முன் நின்றாள்.

எங்கோ வெளியே போவது போல் தெரிந்ததும் அதிர்ந்தபடி பூமா கேட்டாள். “ எங்க மலரு...”

அடிக்கிறமாதிரி சொன்னாள். “ நா திடீர்குப்பம் போறன் வர்றியா...”

திடீர்குப்பம் என்றதும் பூமா பதறிவிட்டாள். பயத்தோடு சொன்னாள். “ ஒங்க அம்மாவுக்கு தெரிஞ்சா...”

“ அவ கெடக்கறா. அவள்லாம் ஒரு பொம்பளையாட்டம். மொடுக்குன்னு அந்த ஆளப் பத்தி யாராவது, வாயத் தொறந்து கேட்டுட்டாப் போதும், அப்பிடியே குறுக்கால வந்துடுவா. அப்பைக்கி அப்ப என்னா ஏதுன்னு கேக்காம வுட்டு துணிச்சல் குடுத்துதான், இன்னைக்கி அவன் அங்கியே போயி குந்திக்கிட்டான். போயி ஆவுட்டும். அப்பங்கிப்பங்கறதுலாம் அப்பறம்” கோபத்தில் பொறி பறந்தது அவளுக்கு.

“ வாணாம் மலரு... இதுலாம் பெரியவங்க சிக்கலு...” பூமா தடுத்தாள்.

“ நீ வந்தா வா. இல்லன்னா போ...” கிளம்பிக் கொண்டிருந்தாள். அவள் நிற்கிறமாதிரி தெரியவில்லை. மேலும் அவளைத் தனியாக அனுப்பவும் மனமில்லை. வேறு வழியில்லாமல் பூமா நின்ற நிலையில் சீப்பால் ஒரு ஓட்டு ஓட்டி ரப்பர் வளையத்தைப் போட்டுக்கொண்டே வெளியே போனாள்.

தெரு திரும்புகிற இடத்தில் வாடகை சைக்கிள் கடை. ஆளுக்கொன்று எடுத்துக் கொண்டார்கள். முதனையிலிருந்து வடக்கே வீரட்டிக்குப்பம் வந்து கிழக்கே பெரியகாப்பாங்குளத்தால் நுழைந்து ஆர்எஸ்பதி தைலமரத் தோப்பால் சனிமூலையாய் போனால் எட்டிப் பிடிக்கிற மாதிரி அஞ்சாறு மைலில் திடீர்குப்பம். மலர், நிறையத் தடவை தனியாகவும், தங்கப்பழத்தை இட்டுக் கொண்டும் திடீர்குப்பம் சந்தைக்குப் போய்வந்திருக்கிறாள். அப்பனுக்கு இந்த திடீர்குப்பம் தொற்று ஏற்பட்ட பிறகு யாரும் அந்தப் பக்கம் போவதில்லை.

நெய்வேலியிலிருந்து மின்சாரத்தை எடுத்துச்செல்கிற உயரமான மின்கோபுரங்கள். தடித்த மின்கம்பிகளின் மெலிந்த நிழல் கோடாய் விழுந்துகிடக்கிற பாதையில் ஆவேசமாய் மிதித்துக் கொண்டிருந்தாள் மலர். உள்ளுக்குள் ‘ அவம் போயி அங்க குந்தி ஒரு வாரமா படாத பாடு படுத்தறான்னா, நீனும் என்னை ஏண்டி இந்த பங்கப் படுத்தற...’ தங்கப்பழம் முருங்கைக் கழுந்தை ஓங்கிக் கொண்டு துரத்துவதாகப் பட்டது. ‘ ஒப்பன திடீர்குப்பம் ஒட்டத் தெருவுல பாத்தன்...’ தெருவில் முன்னே சொல்லி, பின்னே சிலர் சிரித்துக்கொண்டு போவதாகத் துளைத்தது.

எல்லாவற்றையும்... இன்னும் சற்று நேரத்தில், எதிரே தொலைவில் தெரியும் பிரமாண்ட கோபுரங்களின் மேல் போய்க் கொண்டிருக்கும் புகையைக் கரைத்துக்கொண்டிருக்கும் காற்றைப் போல் சிதைத்து ஒன்றுமில்லாமல் செய்துவிடுகிற வேகத்தில் மிதித்துக்கொண்டிருந்தாள்.

பின்னால் வந்த சைக்கிள் புதியதாக இருந்தாலும் முந்திரிக் கொட்டை மூட்டையின் சுமையேற்றத்தைக் குறிவைத்து வாடகைக் காகப் பூட்டப்பட்ட கனத்த வண்டி. மிதி வாங்கியதில் பூமாவுக்கு கடுமையாக மூச்சி வாங்கியது. அதிகம் அதுவும் இவ்வளவு தூரத்திற்கு வந்து பழக்கமில்லாதது ஒரு பக்கம். இடையிடையே கொட்டி வைத்து, நொறுங்கிக் கிடக்கிற பாய்லரின் கரிக்கசடுகளின் கந்தகப் புழுதி. கொதிக்கிற வெயிலில் உருகி ஓடுகிற வேர்வையில் எகிறி எகிறி மிதிக்கிறபோது மிளகாய்த் தூளைக் கொட்டி அரக்கியது மாதிரி தொடை எரிந்தது. அதே சமயம் ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால் சந்தையிலிருந்து காய்கறிகளோடு திரும்புகிற சைக்கிள்களுக்கு வழிவிடும்போது தேய்வடிப் பாதையின் மணலில் சுக்கிரித்து தடுமாற்றத்தைக் கொடுத்தது.

குலை அறுந்துபோகிற மாதிரியான பள்ளம் படுகுழிகளில் விழுந்து போய்க்கொண்டிருந்த பூமாவுக்குள், ‘ என்னா நடக்குமோ, வூட்டுக்கு போனா, என்னா பாட்டு வுழுமோ...’ பயமும் படபடப்பும் கூடிக்

கொண்டேயிருந்தது.

திடுமென பாதை திடல் போன்ற வெளியைக் கடந்து, கருவைப் புதருக்குள் கொடிபாதையாகக் குறுகி நுழைந்தோடியது. தெருக்களற்ற சின்னச் சின்ன பன்றிக் குடிசைகளைப் போலத் தென்பட்ட சாகைகளின் சந்துகளில் நுழைந்து, உயரமான சுற்றுச் சுவர்களுடன், இரைச்சல்களோடு கிடக்கும் சந்தையின் புள்ளையார் மூலையில் முட்டுகிறமாதிரி ஓடி, கிழக்கே போனது.

மூலையில் சற்றே தேங்கி, வடக்கே பார்த்தார்கள். சுவரை ஒட்டி ஓடும் சாக்கடையில் பன்றிகள் புரண்டன. சைக்கிளிலிருந்து மேல்மூச்சி கீழ்மூச்சி வாங்க இறங்கி நின்றுகொண்டிருந்தார்கள். அப்பன் இருக்கும் குடிசை எதுவெனத் தெரியாமல் அவன் கண்ணில் படும் வரை காத்திருந்தாள் மலர். உள்ளுக்குள் தொற்றியிருந்த படபடப்பில், இன்னும் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது வியர்வை.

“ என்னா மலரு இங்க...” பின்னால் குரல் கேட்கவும் அதிர்ச்சி யோடு திரும்பினார்கள். ராதா ஆச்சி வீட்டு அண்ணன் செல்வராசு தான் பின்னாலியே வந்திருப்பான் போலும், சைக்கிளை நிறுத்திக் காலை ஊன்றியபடி கேட்டான். இவர்களுக்கு உடனே என்ன சொல்வதெனத் தெரியாத சங்கடம்.

“ சும்மா சந்தைக்கித்தான் அண்ண...” மலரின் பதில், அவனுக்கு ஏற்க முடியாததாக இருந்தாலும், “ சரி எதுக்கு இங்க நின்னுக்கிட்டு... வாங்க...” சொல்லிக்கொண்டே போனான். அவனுக்கும் சின்னத் தம்பியின் தொடுப்புக் குடிசை அங்குதான் இருக்கிறது என்பது தெரியும்.

திரும்பி ஒட்டத் தெருவைப் பார்த்தார்கள். அதிக நடமாட்ட மில்லை. சந்தை இரைச்சலுக்கு எதிரான அமைதியில் கிடந்தது. நான்கு குடிசைகள் தள்ளி பகல் துய்ப்போ தூக்கமோ முடித்துவிட்டு வந்து ஒருத்தி திமிர் முறித்துக்கொண்டு நின்றாள். உடம்பை முறித்து கைகளை உயர்த்தி நீட்டியபோது, மார்புப் பிதுக்கங்கள், ஜாக் கெட்டிலிருந்து திமிர முயற்சித்தன. சுவரிடை உள்ள சந்து வழியாக, சந்தையிலிருந்து கனத்த பையோடு பெண்கள், வெளியே வந்து சாக்கடையைத் தாண்டி வடக்கே போய்க்கொண்டிருந்தார்கள்.

திடுமென இரண்டாவது குடிசையிலிருந்து கைலி பனியனோடு சின்னத்தம்பி வெளிப்பட்டு, கூரையோரம் இருந்த சாக்குத்தடுப்பு குளியல்அறைக்குள் லேசான தடுமாற்றத்துடன் நுழைந்தது கண்டதும் மலருக்கு நொடியில் சடசடப்பும் வெறியும் தொற்றிக் கொண்டது. ரெண்டே தாண்டில் குளியல்

தடுப்பின், சாக்குத் தொங்கலுக்கு முன்னால் போய் நின்றுகொண்டாள் மலர்.

“ யாரு... யாரு நீ...” பதட்டத்தோடு குடிசையை விட்டு வெளியே வந்தாள் ஒருத்தி. நல்ல வலுத்த உடம்பு. மாஞ்செவலையாய் நிறம். செம்பட்டை பாய்ந்த முடிகளை வளைத்துத் தளர்ந்த கொண்டை போட்டிருந்தாள். மட்ட விலைப் புடவையில் நைந்த ஜாக்கெட்டில் திரண்டு கனத்த மார்களின் நடுவே, ஒடுங்கிக் கொடியாய் கிடந்தது மாராப்பு. கழுத்தில் மஞ்சளாகவும் இல்லாமல் கருப்பாகவும் இல்லாமல் பஞ்சடைந்து அழுக்கு நிறத்தை ஒட்டிய ஒரு கயிறு. மலருக்கு அவளைப் பார்க்கப் பார்க்க எட்டி அவள் மயிரைப் பிடித்து இழுத்துப்போட்டு மிதிக்க வேண்டும் போல் துடித்தது. ஆனால் அடக்கிக்கொண்டு திரும்பினாள். முதலில் அப்பன், பிறகுதான் இவள்...

உள்ளுக்குள் போன சின்னத்தம்பிக்கு, வெளியே கேட்ட குரலில் லேசான படபடப்பு. தொங்கலின் ஊடே பார்த்தவர் அரண்டுவிட்டார். போதையெல்லாம் பொசுக்கெனப் போய்விட்ட அதே நேரம், வெளியே மலர் கூப்பிட்டாள் “ எப்பா... இப்ப வெளிய வர்றியா... இல்ல... நா உள்ள வருட்டுமா...”

வந்திருப்பவர்கள் யாரெனத் தெரிந்ததும் குடிசைக்காரிக்கு குப்பென வேர்த்து உடம்பில் நடுக்கமும் பரவியது. “ யாரு நீனு. இங்க வந்து நின்னுக்கிட்டு எப்பங்கிப்பன்னு... எட்டத்தப் போ...” வேகமாகப் பேசியபடி மலரை நெட்டுகிற மாதிரி கையை நீட்டினாள். அவ்வளவுதான், பூமாவே எதிர்பார்க்கவில்லை, மலருக்கு அப்படியொரு ஆக்ரோஷம் எங்கிருந்து வந்ததெனத் தெரியவில்லை. “ அடித் தேவுடியா... வேலைக்கி வந்த ஆள மடக்கிப் போட்டு வைச்சிக்கிட்டு.. யாரு எவுருன்னா...” ஓங்கி ஒரே இழுப்பாய் அவள் செவுளில் இழுத்தாள்.

அலண்டு போய்விட்டாள் அவள். ஒரு கணம்தான், படாரென்று சுதாரித்து எ ட் டி “ எங்க வந்து நின்னுக்கிட்டு என்னியே...” அப்படியே கொத்தாய் மலரின் தலைமுடியைப் பிடித்துத் தூக்கி விடுகிற மாதிரியான கோபத்தில் எகிறினாள். பூமாவுக்கும் பொசுக்கென்று ஒரு வேகம். இதற்குமேல் நாமும் விடக்கூடாது என்கிற மாதிரி நீட்டிய குடிசைக்காரியின் கையைப் பிடித்து மடக்கி ஒரே நெட்டாய் நெட்டினாள். ஒரே நேரத்தில் இரண்டு பேரின் தாக்குதலையும் சமாளிக்க முடியாமல், மொளமொள வென்று கூரையின் சருகுகளை நொறுக்கியபடி அவள் சாய்ந்தாள்.

திடுமென சாக்குத் தடுப்பிலிருந்து வெளிப்பட்ட சின்னத் தம்பிக்கு

ஆத்திரமான ஆத்திரம். மென்று விழுங்கி விடுகிற மாதிரி யான கோபத்தில் எட்டி மலரின் கையைப் பிடித்து இழுத்தார். " ஒங்குளுக்கு இங்க என்னா வேல. எதுக்கு இங்க வந்து பங்கப் படுத்துறீங்க...?"

படாரென்று திரும்பினாள் மலர். பிடித்திருந்த அவரின் கையை விலுக்கென்று உதறிவிட்டு " நீ நடத்தற குடும்ப மயிருக்கு நாங்க வந்து பங்கப் படுத்தறமா..." ஓங்கி அவர் கன்னத்தில் ஒரு இழுப்பு இழுத்தாள்.

சின்னத்தம்பிக்கு பொறி கலங்கியது மாதிரிப் போய்விட்டது. வெலவெலத்துப்போய் நின்றுவிட்டார். அடங்காத ஆத்திரத்தில் மலர் விடவில்லை. " ஒன்னலாம் அப்பன்னு சொல்லிக்கிறதுக்கே எனக்கு வெக்கமாருக்கு... இந்த வயிசில ஒனக்கு... அப்படியே ஒன்ன..." திரும்பவும் ஓங்கிய அவளின் கையை, திடுமென ஒரு கை மறித்தது.

பாதையில் சைக்கிளில் போகிறவர்கள் வருகிறவர்கள் சந்தை யிலிருந்து சந்து வழியாய் வந்தவர்கள் அக்கம் பக்கத்து குடிசைக்காரர்கள் என சின்னதாய் ஒரு கும்பல்.

" என்னா மலரு இது..." பிடித்திருந்த கையை விட்டபடி செல்வராசு கோபத்தோடு கேட்டான்.

" இல்ல அண்ண... ஒரு வாரமா வூட்டுக்கு வல்ல... சண்ட" திக்கித் திக்கி அவள் சொன்னாள்.

" என்னா பெரிப்பா இது. ஒரு வயிசி பொட்டப்புள்ளய வூட்ல வைச்சிக்கிட்டு..." சண்டை போடுகிறமாதிரி கேட்டான். இந்தப் பொட்டப் பிள்ளைகள் இரண்டையும் இங்கே தற்செயலாய்ப் பார்த்ததும் விபரீதம் ஏதோ நடக்கப் போவதை அவன் ஊகித்துதான், சந்தைக்கிப் போனவன், திரும்பி வந்தது. நினைத்தமாதிரியே நடந்தும் விட்டது.

பூமாவையும் மலரையும் கூப்பிட்டுக்கொண்டு செல்வராசு சாக்கடையைத் தாண்டி வெளியே வந்துகொண்டிருக்கும் போது " தம்பீ..." என்றொரு குரல் கேட்டது. திரும்பினான். கோவணத்தின் மீது துண்டை வளைத்துக் கட்டியபடி தாடியும்தப்புமாய் பக்கத்துக் குடிசை வாசலிலிருந்து கிழவர் ஒருவர் கிட்ட வந்தார்.

தலையைச் சொறிந்தபடி செல்வராசைப் பார்த்துச் சொன்னார். " தம்பீ... ஏதோ சந்தைக்கி வந்த எடத்துல புள்ளைகிட்ட சாருக்கு பழக்கமாப் போய்ட்டது. ஆனாலும் ஒரு வெளக்க அமிச்சி ஒரு வெளக்க ஏத்தக்கூடாதுங்கறமாரி குறுக்க நெடுக்க அந்தக் குடும்பத்தையும் போயி

பாருங்கன்னுதான் நாங்களும் சொல்றது. ஆனா சாரு பொழங்கனதுல, புள்ள இப்ப மூணு மாசம் மொழுவாம இருக்கு. அதாம் மயக்கங்கியக்கமா இருக்குன்னு ஒரு வாரமா கிட்ட இருந்துருப்பாரு. நாளப் பின்ன வரச்சொல்றம் போங்க. பாவம் பொட்டப் புள்ளிவோ வேற மொட்ட வெயில்ல இம்மாந் தூரம்...”

பெரியவர் ஏதேதோ தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார். பூமா... குறிப்பாய் மலருக்கு தலை சுக்குநூறாய் உடைந்து சிதறியதுபோல் பேரதிர்ச்சி.

*

80

எட்டி மயிரைப் பிடித்ததோடு அல்லாமல், தங்கப்பழம் விளக்கமாற்றைக் கையில் எடுத்ததும் பாஞ்சாலைக்குப் பதைத்தது. ஓடி விளக்கமாற்றைப் பிடுங்கினாள். அப்படியும் விடவில்லை. எட்டி ஒரு அடி அடித்துவிட்டாள்.

“ ஏண்டி, எங் குடும்பத்த திடீர்குப்பம் ஒட்டத்தெருவு கண்டமுட்டும் சிரிக்கவைக்கிற... அம்மாம் திமிராடி ஒனக்கு...” திரும்பவும் கையை ஓங்குகிறாள்.

மலரும் ஓயவில்லை. “ ஏங்கிட்ட மட்டும் வெளக்கமாத்த எடுத்துக்கிட்டு நில்லு. ஓந் நெளுவு மயிர பாத்துதாம் போனாம் பாரு. போ... ஓம் மாப்ள குடும்பம் நடத்துனதுல ஒஞ் சக்களத்தி மூணுமாசம் மொழுவாம இருக்காளாம். மயக்கம் வந்துக்கிட்டு இருக்காம். நீனும் போயி கிட்ட இருந்து சுக்கு பனவெல்லம் தட்டிப் போட்டு கெஷாயம் வைச்சிக் குடுத்துட்டு வா...”

தங்கப்பழத்திற்கு மட்டுமல்ல பாஞ்சாலை, ராசோக்கியம் எல்லோருக்குமே இடி விழுந்துவிட்டது. இப்படி ‘ மூணு மாசம்’ என்கிற அளவிற்கு இது நகரும் என எவருமே எதிர்பார்க்கவில்லை. தங்கப்பழம் அதிர்ச்சியில் அப்படியே நிலைகுலைந்து போய்க் குந்திவிட்டாள்.

மலர் மட்டும் இன்னமும் சீத்துபூத்துவென பெருமூச்சி விட்ட படி கோபத்தில் நின்றுகொண்டிருந்தாள். இடிபாடுகளிலிருந்து இன்னும் மீளாத அதிர்ச்சிக்கு ஆறுதல் மாதிரி ராதாமகன் செல்வராசுதான், ராசோக்கியத்திடம் சொன்னான் “ அது சும்மா கதை. எதாவது காசி பணத்த கறக்கறதுக்கு வழி அது. வகதொக கெட்டாப்புல இப்பிடிச் சிக்கிக்கிற ஆளுவோகிட்ட அந்தத் தெருவுல செய்ற வழக்கமான வேலதான் அது. நடந்தது நடந்து போச்சி. இதுல ஒண்ணும் மறபொருளும் இல்ல. ஒரு நாளைக்கி நம்ப சிவப்பிரகாசம் மாதிரி இருக்கற ஆளுவுள இட்டுக்கிட்டுப் போயி ஒக்காந்து பேசி பத்தப்பாஞ்ச குடுத்து வெலாவரி பண்ணிட்டு, ஆள எட்ட இட்டாறதுதான் ஒரே வழி. அதுக்கு மேல அவுரு புத்தியா இருந்தா இருக்கறாரு இல்லன்னா போறாரு...” சொல்லிவிட்டு செல்வராசு எழுந்து வீட்டுப்பக்கம் போனான்.

பொழுது சுத்தமாய் இறங்கிவிட்டது. ‘ மூணு மாசம் மொழுவாம இருக்கறா...’

திரும்பத் திரும்ப உள்ளுக்குள் எதிரொலிக்க, சிலையைப் போல் சாய்ந்திருந்தாள் தங்கப்பழம். மலரும் அழுதகளையோடு அப்படியே முடங்கிப் போய்விட்டாள். வேதனையோடு பூமா மட்டும் பரிதாபமாக வாசலைக் கூட்டவும் அடுப்பைத் தள்ளவுமாக ஓடிக்கொண்டிருந்தாள்.

“ ஏரிக்கிப் போய் குளிச்சிட்டு வர்றன்...” ராசோக்கியம் கிளம்பினார். எப்போதும் இல்லாமல், “ கசகசன்னு இருக்கு நானும் வர்றன்...” பாஞ்சாலையும் கிளம்பினாள். “ பொழுது போனப்பறம் ரவ தண்ணிய வைச்சி ஊத்திக்காம எதுக்கு ஏரிக்கி...” ராசோக்கியத்தின் பேச்சை அவள் பொருட்படுத்தவில்லை.

ரோட்டில் நிறையப் பெண்கள் குளித்துவிட்டு மகிட்டிக் கட்டிய பாவாடையின்மேல் ஈரப் புடவைகளை அள்ளிப்போட்ட படி வந்துகொண்டிருந்தார்கள். வேகமாகப் போய்க்கொண்டிருந்த பாஞ்சாலை, சிவப்பிரகாசம் வீட்டு முன்னால் தேங்கினாள். சொல்லி வைத்தமாதிரி இருவருமே படிக்கல்லில் ஏறி சிவப்பிரகாசம் வாசலுக்கு வந்து நின்றிருந்தார்கள்.

“ என்னா பொழுதுபோன நேரத்துல ரெண்டு பேரும்...” திண்ணையில் குந்தியிருந்த சிவப்பிரகாசம் பதட்டத்துடன் எழுந்தார். அவர் மனைவி சந்தனமும் “ வாங்க...” என்று கூப்பிட்டாள்.

திண்ணையில் ராசோக்கியம் குந்தினார். நடையில் குந்திய பாஞ்சாலைதான் ஆரம்பித்தாள். “ குடும்பத்துல அண்ணங்காரரு போக்கு சரியில்ல. ரொம்ப கணதாண்டிப் போயி நிக்கிறாரு.”

சொல்லிமுடிக்கவில்லை, அதற்குள் அதை ஆயக்கட்டுகிற மாதிரி சிவப்பிரகாசம் சொன்னார். “ அந்தக் கதய வுடு. செத்த மின்னதான் அந்த செல்ராசு முந்திரிய பக்கம் போனவன், சொல்லிட்டுப் போனான். அந்த திடீர்குப்பம் சிக்கலு பத்து ரூவா பணத்துக்குத் தான் செலவே ஒழிய, பெரிய தல போற காரியம்லாம் ஒண்ணுமில்ல. அதப் பாத்துக்கலாம் வுடுங்க. அப்பறம்...” சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு, அடுத்த கட்டத்துக்குத் தயாரானர் சிவப்பிரகாசம்.

அடுத்தும் பாஞ்சாலையேதான் பேசினாள் “ ஏற்கனவே எங்க புள்ளாண்டாரு இங்கித்திய பொண்ண கொஞ்சம் எறக்கமாப் பேசிக்கிட்டு இருந்தாரு. இதுல இந்தக் கங்காட்சி வேற. எது எப்பிடியிருந்தாலும் இதுக்கு மேல அந்த வூட்ல ஒண்ணா பொங்கித் தின்னுக்கிட்டு இருக்கறது ரொம்ப சங்கட்டமாதான் இருக்கும். ஒண்ணு, வேற போயி குடிச போட்டுக்கிறமாதிரி

நாலு சென்ட்டு எடம் எந்த குப்பக்குழியா இருந்தாலும் பாருங்க. அப்பிடி இல்ல எந்த மாட்டுக்கொட்டாயா இருந்தாலும் பரவாயில்ல, வாடகைக் காவது பாருங்க...”

ராசோக்கியமும் அதுவே தனது கோரிக்கையும் என்கிற மாதிரி குந்தியிருந்தார். சிவப்பிரகாசம் ஒன்றும் பேசாமல் ஏதோ யோசனையில் இருந்தவர், சற்றுநேரம் கழித்து மெல்ல ஆரம்பித்தார் “ ஒங்குளுக்கு மொதல்ல இந்த முதனையே வேணாம்னு பாக்கறன்.”

அதிர்ந்து போய்விட்டார்கள் இருவரும். “ என்னாண்ண சொல்ற...” சற்றே குரலை உயர்த்தி கலவரமாய்க் கேட்டாள்.

சிவப்பிரகாசம் தொடர்ந்தார் “ அந்த ஆறுமொக மொதலியும் பேச்ச மாத்திட்டான். இந்த ஒரு வருசத்தோட, முந்திரிய வுட்டுடச் சொல்லு, நானே பாத்துக்கப் போறன்னு வூட்டுக்கே வந்து சொல்லிட்டுப் போறான் அந்த ஆளு.”

மறுபடியும் பேரிடியாக இறங்கியது இருவருக்கும். “ என்னா அண்ண, குத்துவ சீட்டுல மூணு வருசம்னு எழுதியிருந்தது... இப்பப் போயி ஒரு வருசத்திலியே...” ராசோக்கியம் அதிர்ச்சியோடு கேட்டார்.

“ மறுபடி கிட்ட இருந்து எழுதனதே நானு, எனக்குத் தெரியாதா... இதுலாம் நாயமான்னு நானுங் கேட்டன். அதுக்கு அந்த ஆளு அப்பிடியே தாண்டறான். உள்ளூரானவிட வந்தாரங்குடியான் ஒனக்கு முக்கியமா போச்சா. எழுதியிருந்தா என்னா. நா ஒண்ணும் மூணு வருசத்துக்கும் சேத்து பணம் வாங்கிடுல. அதோட அடுத்த வருச மாசுலுக்கு ஒண்ணும் ஏரு பாரு ஓட்டி எருவு கிருவு அடிச்சிடுல. கெடந்த கொல்ல கெடந்த வாட்டத்துலதான் கெடக்குது. வுட்டுட்டுப் போவச் சொல்லுங்கறான்...” சிவப்பிரகாசத்தின் பேச்சில், முதலியைப் பற்றி கொஞ்சம் கடுமை தெரிந்தது.

“ அப்ப ஒருத்தன் வந்தாரங்குடியானா இருந்தா, அவனுக்கு நீதி நேர்மங்கறத பத்திலாம் ஒண்ணும் பாக்கக் கூடாது அப்பிடித்தான.” ராசோக்கியம் இறங்கிய குரலில் கேட்டார்.

“ அப்பிடிலாம் ஒண்ணுமில்ல. நீங்க கொஞ்சம் வெவரமா அந்த ஏரித்தண்ணிய மொண்டு ஊத்தி, நாலு பிஞ்சிய பாத்ததும் அவனுக்கு மனம் பொறுக்குல. மயிலு ஆடிச்சின்னு குயிலு கூடச் சேந்து ஆடன மாதிரி, நாமளும் மேலைக்கி அதுமாதிரி ஏரித் தண்ணிய மொண்டு ஊத்திப் பாத்தா என்னான்னு யோசன ஓடுது. அதோட ஏங்கிட்டியே வந்து அத்தினி மூட்ட

ஆச்சி இத்தினி மூட்ட ஆச்சின்னு வாவுருவிப் போறான். இப்பிடி ஏக்கரிஞ்சி போறவம் மின்னால, நாம கஷ்டப்பட்டு ஒழைச்சி பத்து ரூவா கெடைச்சாலும் நமக்கு ஒட்டாமத்தாம் போவும். அதனால நா என்னா சொல்றன்னா... இந்தக் குத்துவ முந்திரி கதயே வாணாம்...”

இருவர் முகத்திலும் குழப்ப ரேகைகள் ஓடின. சிவப்பிரகாசம் பொறுமையாகச் சொல்ல ஆரம்பித்தார் “ தே இப்பிடியே இங்காண்ட வீரெட்டிக்குப்பம்... அதுலேர்ந்து காட்டால கொடிக் கா மூல குடுத்துப்போனா நாலஞ்சி மைலுல மணக்கொல்லை...”

பாஞ்சாலை உடனே சொன்னாள் “ தா அந்தாண்ட தெருவுல தொப்புளி கெழவி மொவ சின்னப்புள்ள நாலஞ்சி வருசத்துக்கும் மின்ன கூட செத்துபோச்ச. அத அந்த ஊர்லதான் குடுத்துருந்து துன்னு நெனைக்கிறன்...”

அதே சமயம் சிவப்பிரகாசம் உற்சாகமாய்ச் சொல்லத் தொடங்கினார் “ அந்த ஊருதான். நம்ப சந்தனத்து தங்கச்சி குங்குமத்த அந்த ஊர்லதான் குடுத்துது. கலியபெருமாள்னு பேரு. வருசாவருசம் அங்கேர்ந்துதான் வூட்டுச் செலவுக்கு நமக்கு நெல்லு வரும். நேத்திக்கி போயிருந்தன். இந்த மொதலி முந்தா நாளு அவுத்து வுட்டது ஞாபகம் வந்தது. நெலம்பலம் எதாவது கெடைக்குமான்னு வெசாரிச்சன்... ஒரு எடத்தக் காட்னாரு... பாத்தன்...” சொல்லிக் கொண்டு இருக்கும்போதே மேற்கால சாமியா வீட்டில் சைனம் சொல்லியது. பாஞ்சாலை “ கிருஷ்ணா... கிருஷ்ணா...” என்றாள்.

“ அப்பிடியே ஊர ஒட்டி மூணு ஏக்கர், கெணத்து மோட்ரோட நெலம். கொல்லிய ஒட்டி அந்தக் காலத்து சொரட்டோடு போட்ட வூடு. ரெட்டியாமாரு எடம். மொவனுவோலாம் மெட்ராசுக்கு வேலைக்குப் போன எடத்துல செல்வீகமா தங்கிட்டதால, இங்க இருந்த கெழவங்கெழுவியும் ஒரேடியா எல்லாத்தையும் வுட்டுட்டு நாம்பளும் புள்ளிவோ கூட பூடுவம்னு கௌம்பியும் போய்ட்டுதுவோ. இப்ப நம்ப சகலம் பொறுப்புலதான் இருக்கு. பேசி முடிச்சி, தகவல குடுத்தா வந்து கையெழுத்தப் போட்டுட்டுப் பூடுவாங்க...” சிவப்பிரகாசம் ஆர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ராசோக்கியத்திற்கு அவர் சொல்லச் சொல்ல உள்ளுக்குள் லேசான நம்பிக்கையும், மோட்டார் கிணறு என ஈர நினைவுகளும் ஓட ஆரம்பித்திருந்தது. பாஞ்சாலைதான் கேட்டாள் “ அம்மாம் வசதியான எடந்தடம்னா உள்ளூர்ல போட்டி கீட்டி இருக்கும...” இழுத்தாள்.

“ கா காணி அர காணின்னா போட்டிக்கி நிப்பாங்கதான். இது மோட்ரு கெணரோட மூணு ஏக்கரு. தொட்டுத் தொட்டு பாத்தாலும் கெரயச்

செலவோடு நாலு லட்சத்த தொட்டுடும். ஒரே முட்டா அம்மாங் காசி அங்க எவன் வைச்சிருக்கான். எதோ நெலம்பலத்த எடுத்ததுல மொத்தமா ஒங்களமாதிரி இருக்கறவங்க வைச்சிருந்தா தான் உண்டு. இல்லன்னா பணங்காசியில மெதமிஞ்சிப் போயி படுத்துக் கெடக்கறவன் வாங்கனாதான்" சிவப்பிரகாசம் சொன்னார்.

உள்ளுக்குள் நிலபுலம், பணப்புரட்டு என ஓட இருவரும் மௌனமாகக் குந்தியிருந்தார்கள். சிவப்பிரகாசமே தொடர்ந்தார் " ஒண்ணும் யோசன பண்ணாத. ஏதாளங்கெட்ட ஏரித்தண்ணிய மொண்டு ஊத்தி, ஊரே திரும்பிப் பாக்கற மாதிரி முந்திரிக் கொட்ட பொறுக்கன ஆளு நீனு. ஓம் ஒழைப்புக்கு எங்க போனாலும் நெல்லாதான் இருப்ப. அதோட சைனமும் ஏவல்ல நெல்லாதான் சொல்லுது... நாளைக்கி நெல்லு ஏத்திக்கிட்டு இங்கதான் வர்றாரு. திரும்புகால்ல வண்டியிலேயே கூட போயிப் பாரு. ஒழவுங் குடியும் ஒரு எடத்துலங்கற மாதிரி, நிச்சயம் புடிக்கும். சொன்னீங்கன்னா... மேல்கொண்டு பாத்து முடிச்சிருவம்."

இருவருக்குமே மனம் நிறைவாக இருப்பதுமாதிரி பட்டது. எழுந்தார்கள். பெருமூச்சுவிட்டபடி ராசோக்கியம் சொன்னார். " சரி போயி பாத்துட்டு வந்து சொல்றன் அண்ண. ஆனா ஒரு ஊர்ல வந்து தங்கி, ஒரு முந்திரி மாசூலுக்கே இங்க ஏகப்பட்ட அனுபவம். இதுல இன்னொரு ஊரு... மோட்ரு கெணறுன்னு வேற..."

" அட, இங்க வந்து தங்கனத எதுக்கு கணக்குல சேக்கற... எதோ மச்சான் வூட்டுக்கு ரெண்டு மூணு மாசம் விருந்துக்கு வந்ததா நெனைச்சிக்க..." சிவப்பிரகாசம் சிரித்துக்கொண்டே சொன்னார்.

" ஏம் மாமா... நீ வேற விருந்து கிருந்துன்னு வவுத்து எரிச்சலக் கௌப்பிக்கிட்டு..." பாஞ்சாலை வருத்தமாகச் சொல்லிக்கொண்டே போனாள்.

*

ஏழு

81

முதனையின் முந்திரித் தோப்புகளைக் கடந்து, வீரெட்டிக் குப்பத்திற்குள் வண்டி நுழைந்தபோது வெயில் லேசாய் ஏறத் தொடங்கியிருந்தது. செக்கச்செவேல் எனப் பொட்டைத் தண்ணீர் கிடந்த ஏரியின் மேற்காலப் பக்கம் வடக்காய் ஓடிய காட்டுக்கூடலூர் தார் ரோட்டை குறுக்காகக் கடந்து, கொடிக்கா மூலையில் இறங்கிய ஓடையில் வண்டி போய்க்கொண்டிருந்தது.

கலியபெருமாள் மாடுகளை வாபேச்சில் அலட்டி ஓட்டுகிற போதெல்லாம் டயர்வண்டியின் வளையங்கள், அடித்துக்கொண்டு சத்தமிட்டன. கலியபெருமாளுக்கு உயரம் சற்றுக் குறைவுதான் என்றாலும் நல்ல சிவப்பு. ராசோக்கியத்தை விடவும் வயது குறைவுதான். சனநடமாட்டம் குறைந்த காட்டுப்பாதைக்கு வந்ததும் இடுப்பில் சுற்றியிருந்த வேட்டியைத் தலைக்குச் சுற்றியபடி, கோவணத்தோடுதான் ஓட்டிக்கொண்டிருந்தார்.

காட்டின் நடுவே ஒற்றை ஆலமரத்துடன், அடியில் தெகிலாய் செந்நீரை வைத்துக்கொண்டு கிடந்த குட்டையைக் காட்டியபடி கலியபெருமாள் சொன்னார் “ இந்த குட்டைக்கும் அங்காண்ட இருக்கறது பூரா கெவுருமெண்டு காடு...”

ஆனால் வண்டிக்குள் குந்தியிருந்த ராசோக்கியத்திற்கு அவர் சொல்வது எதுவும் காதில் விழவேயில்லை. அவர் மனம் முழுவதும் பார்க்கப் போகிற நிலத்தை, வீட்டைப் பற்றியே ஓடிக்கொண்டிருந்தது. செம்பையய்யனார் புண்ணியத்தில் மனசுக்குப் பிடிக்கிறமாதிரி அமைந்துவிட்டால், வாழுங்காலத்தை அக்கடாவென்று அங்கேயே ஓட்டிவிடலாம்.

சுள்ளென்று வெயில் உறைக்கத் தொடங்கிய நேரத்தில், காட்டின் மண்பாதையை விட்டு, கடக்குமுடக்கு என்கிற தார் ரோட்டில் வண்டி ஏறியது. வண்டியின் சத்தத்தில், திடுக்கிட்டு மிரண்டிபடி இரண்டு மான்கள், அங்காண்ட முந்திரிகளை யொட்டிய முட்புதர்களிலிருந்து குறுக்கால் விழுந்தடித்து வடக்குக் காட்டுப்பக்கம் ஓடின. எதிரே புழுதியைக் கிளப்பியபடி கண்ணாடியில் 33 என்றும் நெற்றியில் ‘ காட்டுக் கூடலூர்’ என்றும் பொறித்தபடி பெரியார் வந்துகொண்டிருந்தது.

ஒதுக்கி நிறுத்தினார். புழுதியை வாரி இறைத்தபடி 33 கிழக்கே போனது. பின்னுக்குத் திரும்பி புகைமண்டலத்தைக் காட்டியபடி கலியபெருமாள்

சொன்னார் “ இப்பிடி கெழக்க போயி வடக்க திரும்பி காட்டுக் கூடலூர் வரைக்கும் போய்ட்டு வரும்.”

ராசோக்கியமும் பார்த்தார். துரத்திக்கொண்டு போகும் புழுதிச் சேட்டைக்கும் நேர்கிழக்கே உயரமாய் தூரத்தில் முதல் அனல் மின் நிலையப் புகைக்கூண்டுகளின் நுனிகள் தெரிந்தன. ஆச்சரியமாகச் சொன்னார் “ பர்ஸ்ட்டு தெர்மலு பொகக் கூண்டு தே தெரியுது.”

“ பர்ஸ்ட்டு தெர்மலுக்கும் கீழண்டப் பக்கம் போற ரோட்ல தெக்க நாலைஞ்சி மைலுலதான் மந்தாரக்குப்பம், வேப்பங்குறிச்சி லாம்... அப்ப வேப்பங்குறிச்சிலேர்ந்து நேரா பர்ஸ்ட்டு தெர்மலு வந்து, அப்பிடியே மேற்கால வந்தா..” ஆர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்த ராசோக்கியத்தைப் பார்த்து கலியபெருமாள் தொடர்ந்தார் “ திடீர்குப்பம் சந்த... சந்தையிலேர்ந்து மேற்க மண் பாதையில வந்தா, இந்த ரோட்ல வந்து ஏறும். அப்பறம் இங்காண்ட மணக்கொல்ல. வேப்பங்குறிச்சிலேர்ந்து வண்டியில வருணும்னா இதான் நேர்வழி.”

பேச்சில் திடுமென குறுக்கிட்ட திடீர்குப்பத்தால் சின்னத்தம்பி நினைவுக்கு வந்து ராசோக்கியத்திற்கு ஒரு கணம் இறுக்கம் கவ்வியது. ‘ பத்து ரூவா செலவுதான் ஆவும தவுர அது தல போற காரியம்லாம் ஒண்ணுமில்ல’ சிவப்பிரகாசம் சொன்னது உள்ளுக்குள் ஓடியது. என்னாதான் பத்துரூவாயாக இருந்தாலும், குடும்பம் இருக்கற சூழலில் இவர்தான் முடிச்சை அவிழ்க்க வேண்டும்.

வண்டி சுடுகாட்டை ஒட்டி ஒரு குளத்தோரத்தில் நின்றது. “ இது உத்திமா கொளம். கொட்ட பொறுக்கிக்கிட்டு சனம்லாம் இதுலதான் வந்து வுழும்.” மாடுகளைப் பூட்டவிட்டுக் கொண்டுபோய்த் தண்ணீர் காட்டியபடி சொன்னார். திரும்பவும் வண்டியைப் பூட்டி ஓட்டிக்கொண்டு முடக்கில் திருப்பியதும் தூரத்தில் மேற்கே ஊர் தெரிந்தது. “ தா தெரியுது பாரு அதாம் மணக்கொல்லை.”

*

82

எல்லா வீடுகளுமே கூரைவீடுகள்தான் என்றாலும், தோட்டங் களில் கிடந்த மள்ளாட்டைக்கொடி வைக்கோல் போர்களை பார்த்ததுமே, ராசோக்கியத்திற்கு மணக்கொல்லை பிடித்துப் போய் விட்டது. ஊருக்குள் நுழைந்திருந்த வண்டி கோயிலின் முன்னால் கிடந்த திடலை நோக்கிச் சென்றது. முனையிலேயே பறந்து கொண் டிருந்த சங்க, கட்சிக்கொடிகளைக் கண்டதும் ஏதோ தாய்கிராமத் திற்குள் நுழைந்துவிட்ட பரவசம். திடலிலிருந்து தெற்கு நோக்கிய தெருவில் இறங்கி, ஊரின் விளிம்பில் ஒரு கூரைவீட்டின் தோட்டத்து வேம்படியில் போய் நின்றது. ராசோக்கியம் நிறைவான மனசோடு மணக்கொல்லை மண்ணில் காலடி வைத்து இறங்கினார். நிழலில் கிடந்த குடலியில் மாடுகளைக் கட்டிவிட்டு நிமிர்ந்த கலியபெருமாள், தெற்குப் புறமாய்க் கையைக் காட்டிச் சொன்னார். " தே, இந்தக் கொல்லதான்."

மூங்கில் படலைத் திறந்துகொண்டு அங்காண்ட போய் நிலத்தில் நின்றவர் அப்படியே அசந்து போய்விட்டார். எவர் இடைஞ்சலும் இல்லாமல் மூன்று ஏக்கரும் ஒரே சதுரம். ஏற்ற இறக்கமில்லாதபடி ஏகத்துக்கும் சமமாய்த் தரை. ஒப்புக்கு நாலைந்து இடத்தில் தடுத்தபடி வரப்புகள். நெல் அறுத்து, தாளடிகள் மாசிப் போயிருந்தன. எந்தப் பயிருக்கும் ஏற்ற லேசாய் செம்மை பாவிய மணல் தாவு. சிதம்பரத்து மூலை பக்கமாய் கிணறு. கிணற்றிலிருந்து எட்டிப் பார்த்தபடி இரும்புக் குழாய். ஒட்டிய சின்ன கிணற்று மேட்டில் ஒரு நுணா.

கிணற்றுப் பக்கம் போய்க் குனிந்து பார்த்தார். வேப்பங்குறிச்சியில் இருப்பதுபோல் செங்கற்களால் கட்டப்பட்ட வட்டக்கிணறு. கிணற்றுச் சுவரில் நீட்டப்பட்டிருந்த ஆங்கில்களில் மோட்டார், தகரம் போட்டு மூடப்பட்டிருந்தது. குழாய் அடியில், பாசிபடர்ந்து கிடந்த தண்ணீர் தொட்டுக் கொண்டிருந்தது. இரண்டு போர் துளைகளில் தண்ணீர் மட்டத்திற்கு குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தன.

" இந்த நாளையில கொஞ்சம் தண்ணிக்கி கஷ்டந்தான். ஆனா ஒரு மழ பேய்ஞ்சிட்டுதுன்னா, அப்படியே தண்ணிய மொண்டுக்கும். அப்படி இல்லன்னா தா அந்தாண்ட கெணறுமாதிரி போர கொஞ்சம் அகலப்படுத்தி, நேரா போர்ல சக்ஷன் பைப்ப வுட்டு, மோட்ர ஓட்டனா, தண்ணி போடு

போடுன்னு போடும். ரெட்டியாரு இங்கியே இருந்துருந்தார்னா அந்த வேலையையும் செஞ்சிருப்பாரு. அங்காண்ட மாதிரி இங்காண்டையும் மள்ளாட்ட கெழங்கு எறங்கற செடியா ஏகத்துக்கும் இருந்துருக்கும்.”

ராசோக்கியம் வேலிக்கும் அங்காண்ட இருக்கிற கொல்லையைப் பார்த்தார். வாழைகள் சூழ்ந்த ஒரு கூரைக் கொட்டகையின் இடுப்பி லிருந்து நீண்ட குழாய் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தது.

மறந்துவிட்டவர் போல் திடுமென கலியபெருமாள் காட்டினார் “ தா அந்த வூடுதான்.” அவர் வீட்டுக்கும் மேற்கால தோட்ட இடைவெளியை விட்டு அடுத்து வீடு. “ அந்தாண்ட வாசப் படி தெருவுல. இந்தாண்ட வாசப்படி இங்காண்ட கொல்லியில. ஒண்ணுக்கு வுடுணும்னாலும், கொல்லியிலதான் வந்து வுடுணும்.” சிரித்தார் கலியபெருமாள்.

ராசோக்கியம் வீட்டை நோக்கினார். அந்தக் காலத்து வீடுதான். சின்னதாய் நடுவில் மெத்தை போட்டு முன்னும் பின்னுமாய் சாரம் இறக்கி ஓடு போட்ட ‘ சுத்துக்கட்டு வளவு வீடு’. வீட்டோடு தோட்டத்திற்கும் சேர்த்து ஆரல் போட்டு தகரத்தில், தோட்டக்கதவு போட்டிருந்தார்கள். மதில் சுவருக்குள் மா, பலாமரங்கள் நின்றிருந்தன. நோக்குகிற பக்கமெல்லாம் நிறைவாக இருப்பது போலவே தெரிந்தது. பாஞ்சாலையைக் கூடவே இட்டுக்கொண்டு வந்திருக்கலாம்போல் பட்டது.

கிழக்காலப் பக்கத்து வேலியின் கிளுவையில் ஒழுங்கையில் போய்க்கொண்டிருந்த நாலைந்து ஆடுகள் தாவுகால் போட்டுக் கடித்துக் கொண்டிருந்தன. அங்காண்ட தெற்கே கொல்லைவெளிப் பக்கம் போகிற ஒழுங்கையில், தலையில் சாப்பாட்டுக் குண்டானோடு போய்க்கொண்டிருந்தாள் ஒருத்தி. பார்த்தபடியே நுணா மரத்தடிக்கு வந்து நின்றார் ராசோக்கியம். குளிர்ந்த நுணாவின் நிழல். திடுமென அவருக்கு வேப்பங்குறிச்சியில் கிணற்றுமேட்டு மாமரத்தடியில் நின்றுகொண்டிருப்பதாய் ஒரு நினைவு. எங்கும் கம்பும் மள்ளாட்டையும் விளைந்து கிடப்பதாய் ஒரு பரவசம்.

நிறைவாக கலியபெருமாள் அவரிடம் சொன்னார் “ வூடோ, கொல்லியோ ஒண்ணும் பாக்கவேணாம். இதுல எதாவது கொறன்னு சொல்லணும்னா, ஊரு ஒட்டா கொல்ல இருக்குங்கறது ஒண்ணு தான். வேலி அடைச்சி மாளாது. என்னாதான் கோட்டை அடப்பா அடைச்சி வைச்சிருந்தாலும், ஆடு மாடு பொசுக்குன்னு உள்ள நொழைஞ்சிடும். அதோட தெருவுல எப்பியாச்சும் தண்ணி வராதப்ப மோட்ர போட்டா, கிட்டத்த இருக்கறதால

குளிக்கவும் தண்ணி மொள்ளவுமா சனங்க இங்க வந்து நின்னுடும்.”

இரண்டுமே அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. ஊரை ஒட்டிய நிலம் என்கிற ஒரு சவுரியம் இருக்கிறதென்றால், சில சங்கடங்களும் இருக்கத்தான் செய்யும். பேசிக்கொண்டு இருக்கும் போதே பக்கத்து மள்ளாட்டைக் கொல்லையிலிருந்து குரல் கேட்டது. “ யாரு கலியபெருமா...”

ராசோக்கியம் திரும்பினார். தெற்கால வேலிக்கும் அங்காண்ட மோட்டாருக்கும் பக்கத்தில் மண்வெட்டியோடு அந்த ஆள் நின்றிருந்தார். நல்ல கருத்த தாட்டிகமான உருவம். முகமெல்லாம் தாடி. ராசோக்கியத்தின் வயது இருக்கும். கருவைக் கட்டையில் சுற்றியதுமாதிரி இடையில் சுற்றி ஏற்றிக்கட்டிய கைலி.

கலியபெருமாள் சங்கடமாய் இவரைப் பார்த்தபடி, தயக்கத் தோடு சொன்னார் “ முதனையில எங்க சகலருக்குத் தெரிஞ்சவரு. நெலத்த வாங்கறதுக்குப் பாக்கறாரு.”

“ இதுல எதுக்கு பணத்த கொண்டாந்து போட்டு ராக்கண்ணு பகல்கண்ணு முழிச்சி காவ காத்து ஒடம்ப போட்டு ஒடிச்சிக்கிட்டு. பேசாம பணத்த கொண்டுபோயி பேங்க் பக்கம் போட்டுட்டு வட்டிய வாங்கி ராசா மாதிரி கால்மேல கால் போட்டு சாப்புட்டுக் கிட்டு இருக்கலாம்.” ரொம்பவும் சலிப்பாகச் சொல்லிக்கொண்டே மடையை மாறினார்.

வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். கொஞ்சம் எட்ட வந்து, திரும்பிப் பார்த்துக்கொண்டே சொன்னார் “ என்னா சொல்றாம் பாரு. எதிரி வாழ்ந்தா எட்டு நாளைக்கிப் பட்டினி கெடப்பான். இம்மாம் சிக்கலு புடிச்ச நட்டமான வேலைய எதுக்குச் செய்றான். வுட்டுட்டுப் போவ வேண்டிதுதான. ரெட்டி உம்னு சொன்னா இத பூராத்தையும் வாங்கறதுக்கு தயார்தான். ஆனா இவஞ் சொல்ற வெலைக்கி ரெட்டி உம்மப்படுணுமில்ல.”

சொல்லிக்கொண்டே வந்தார் “ கோபால்னு பேரு. இவன் ஒருத்தன். அப்பறம் தா, மேற்க பச்ச தெரியுது பாரு. இவந் தண்ணி தாம் பாயுது. இவந் தம்பிக்காரங் கொல்ல. ரெண்டு பேருமே கொஞ்சம் சிக்கல் புடிச்ச ஆளுவோதான். இவனுக்கு நாலு பசங்க. வூட்ல ஒண்ணு சுத்திக்கிட்டு நிக்கிது, அது இவனுவுளுக்கு மேல அறுந்த வாலு. கண்ணுல இருக்கிற பாப்பாவக்கூட கெப்பிக்கிட்டு பூடும்.”

தகரக்கதவு கிறீச்சலுடன் திறந்தது. சிமிட்டித்தளம் போட்ட வாசலில் சருகுகள் இறைந்து கிடந்தன. மாமரத்து அடியில் செம்பருத்திச் செடிகள்

வதங்கிப்போயிருந்தன. தாழ்வாரத்தில் மரத்தொம்பைகள் கிடந்தன. கிழக்கால சுவரை ஒட்டி, சிமிட்டியால் பூசிய அடுப்பு. அடுப்புக்கும் நேர் கீழே அம்மியும் ரொப்பு உரலும் கிடந்தன. திறந்திருந்த சன்னல் வழியாக உள்ளே பார்த்தார். உள் வாசலில் பாதியளவுக்கு பளீரென்று கிடந்த வெயிலில் சருகுகள் காய்ந்து கொண்டிருந்தன. சுவரில் பெரிதான மிகப்பழைய ராமர் பட்டாபிஷேகப் படம் ஒன்று மட்டும் நிறம் மங்கித் தொங்கிக் கொண்டிருந்தது. குறுக்க நெடுக்க வெளவால்கள் பறக்க, புழுக்கை நாற்றமடித்தது.

வசதியான வீடு, வீட்டை ஒட்டிய நிலம், எல்லாவற்றையும் பார்க்கப் பார்க்க ராசோக்கியத்திற்கு பிரமிப்பாக இருந்தது. கொஞ்சம் மிரட்சியாகக் கேட்டார் “ வெல எதாவது ஏறுமாறா சொல்லுவாங்களா...”

“ வயக்காட்ல உள்கையில காணி அறுவதுகிட்ட போவுது. இங்க எப்பிடியும் எழுவதுக்குக் கொறயமாட்டாங்க. மும்முக்கா ரெண்டே கால் காணி. அப்பறம் மனக்கட்டு, வூடு, மோட்ரு கெணறு சர்வீசுன்னு... நால்ரைக்கி மேல சொல்லிக்கிட்டு இருக்காங்க... நாம நாலுன்னா முடிச்சிக்கிலாம். வரும்போது கூர வூட்ல கெழக்கால பக்கம் தாவரத்துல செவுப்பா ஈச்சர்ல குந்தியிருந்தாரு பாரு. அவுருகிட்டதான் பொறுப்பு கட்டியிருக்காங்க... பாத்துட்டு வந்துடுவம்...”

வீட்டுக்கு வந்தார்கள். திண்ணையில் ராசோக்கியம் குந்தினார். “ எல்லாம் கொல்லிய பக்கம் போயிருக்குவோ.” சொல்லிக் கொண்டே அருகால்படி சட்டத்தில் இருந்த சாவியை எடுத்து வீட்டைத் திறந்தார். தண்ணீர் மொண்டுவந்து கொடுத்தார். வாங்கிக் குடிக்கும்போதுதான் பார்த்தார். சுவர் காலண்டரில் அய்யா...

“ பரவாயில்ல, நம்ப கட்சிக்காரர்தாம் போல்ருக்கு.”

“ மறுபடி நாம போயி வேற கட்சியில எப்பிடி இருக்கறது. அதோட பெரிய பையன் முருகன் இங்க கட்சிலியும் பொறுப்புல தான் இருக்கறான்.” கலியபெருமாள் பெருமையாகச் சொன்னார்.

பழுத்த பழமாகத் தெரிந்த ரெட்டியாரைப் பார்த்து ராசோக்கியம் கும்பிட்டார். “ வாங்க குந்துங்க...” என்றபடி சந்தேகமாய் கலியபெருமாளைப் பார்த்தார். ரெட்டியாரின் வெளுத்த கை விசிறி மட்டையை ஆட்டியபடி இருந்தது.

வழவழப்பாய் சில்லென்றிருந்த சிமிட்டித்தரையில் குந்தினார்கள்.

கலிபெருமாள்தான் சொன்னார். “ முதனையில நம்ப சகலனுக்குத் தெரிஞ்சவங்க...” நிலம் எடுக்கப்பட்டு வேப்பங்குறிச்சி யிலிருந்து முதனை வந்து, அங்கிருந்து இங்கு வருவதற்கான முயற்சி களைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ரெட்டியார், சிறிது நேர யோசனைக்குப் பிறகு சொன்னார். “ ஒஞ் சகலன் சொன்னாருங் கற. நீனும் இட்டாந்துருக்கற. எனக்கொண்ணும் இதுல ஆட்சேபணை இல்ல. ஆனா ஒனக்குத்தான் இங்காண்ட பாத்தா பக்கத்து வூடு. அங்காண்ட பாத்தா பக்கத்து கொல்ல. ஓங்கிட்ட நாளைக்கி ஆடு மாடு போச்சி வந்துதுன்னு சிக்கல கொண்டாராத ஆளாப் பாத்துக்க...”

ராசோக்கியம் பட்டென்று சொன்னார் “ நான்லாம் நாலு காணி மாசூலு வைச்சி ஊர்ல மதிப்பா இருந்தவன். எதோ காலகோலம் சரியில்ல, வந்துருக்கன். வந்த எடத்துல என்னால யாருக்கும் எந்தச் சிக்கலும் வராது. ஏற்கனவே ஒரு ஊர்ல வந்தாரங்குடியா வந்து தங்கியிருந்ததுல, என்னா சிக்கலு வரும் போவும்னு எனக்குத் தெரியும். அப்பிடியும் மீறி எதாவது சிக்கலுன்னா, கட்ன ஆலயத்துங் கீழ இருந்து சொல்றன், ஊர மீறி எங்கியும் போவமாட்டன். அப்பறம் வெலய மட்டும் பாத்துச் சொல்லுங்க. மோட்ரு, போருன்னு ஏகப்பட்ட வேல செலவு இருக்கு. சொன்னிங் கன்னா... முதனையார இட்டாந்து ஒரு நாளைக்கிப் பேசி முடிச்சிக்கலாம்...”

ராசோக்கியத்தின் தணுவான பதிலை விடவும், அவர் வாயாலயே தன்னை ‘ வந்தாரங்குடி’ எனச் சொன்னது ரெட்டியாருக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. ஏதும் பேசாமல் சற்று நேரம் இருந்துவிட்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தவராய்ச் சொன்னார் “ சரி பேசிக்கலாம். ஒரு நாளைக்கி, கலியபெருமாளு சகலன இட்டுக்கிட்டு வாங்க...”

காரியம் நிறைவாய்க் கைகூடுகிற திசையை நோக்கி நகர்கிற திருப்தியில் கலியபெருமாள் எழுந்தார். “ சரி வர்றங்க...” கிளம்பினார்.

விலையில் ஏதாவது ஒரு இடத்தைத் தெரிந்துகொண்டு போனால் தேவலாம் என்கிறமாதிரி தயக்கத்தோடு ராசோக்கியம் எழுந்தார். வீட்டுகிட்ட வரும்போது கேட்டார் “ அண்ண... வெலையில ஒரு எடத்த தெரிஞ்சிக்கிட்டா நெல்லாருக்கும்னு பாத்தன்.”

“ நால் ரூவாய்க்கி நா முடிச்சி தர்றன் வா...” நம்பிக்கையோடு கலியபெருமாள் சொன்னதும், ராசோக்கியத்திற்குப் பெரும் திருப்தி.

*

83

புதுவேப்பங்குறிச்சியில் வந்து இறங்கியபோது வெயில் தாழ்ந்திருந்தது. அந்தி வியாபாரத்திற்கு தள்ளுவண்டிகளில் சுண்டல், சூப்பு எனத் தயாராகிக்கொண்டிருந்தன. காலையில் வண்டியில் கிளம்பி மணக்கொல்லை போய் மனத்திற்குப் பிடித்த மாதிரியிருந்த நிலத்தைப் பார்த்துவிட்டு, வழி கேட்டு மேற்கே தண்டராகுளம் வந்து விருத்தாசலம் போய், பின் கடலூர் வண்டி பிடித்து இங்கு இறங்கி... ராசோக்கியத்திற்கு அலுப்பாக இருந்தது. ஆனாலும் பழைய வேப்பங்குறிச்சியில் இருந்ததுபோல் கிணறு நிலபுலம்... கூடுதல் வசதியாய் வீடு என மனமெல்லாம் மகிழ்ச்சியில் மிதந்தது. வீட்டிற்குப் போய் பாஞ்சாலையிடம், பூமாவிடம், சதாசிவத்திடம் என எல்லோருக்கும் சொல்ல வேண்டும்போல் துடித்தது.

தூரத்தில் தெற்கே மண்மேட்டுபக்கம் உயர்ந்து நீண்டிருந்த இயந்திரத்திலிருந்து மண்கொட்டக் கொட்டக் கிளம்பும் புழுதிப் படலத்தைப் பார்த்துக்கொண்டே தெருவில் நடந்து போனார். எதிரே அறிவழகன் மனைவியுடன் பயணமாக வந்து கொண்டிருந்தான். இவரைப் பார்த்துவிட்டு கேட்டான் “ என்ன மாமா எப்பிடி யிருக்கீங்க...” வெற்றிச்செல்விக்கும் அறிமுகப்படுத்தினான். “ மாமா... நம்ப ஊருதான்...”

சொல்லிக்கொண்டு இருக்கும்போதே செல்வி மறித்துச் சொன்னாள் “ எனக்கா தெரியாது. கல்யாணத்துல கூட கால்ல வுழுந்து கும்புட்டம...”

“ ஆமா, நா வேற மறந்துட்டன். நீ மறக்காம ஞாபகம் வைச்சிருக்க...” செல்வியைப் பார்த்து அறிவழகன் சந்தோஷப் பட்டான்.

“ ஏம்ப்பா மண்ணு மாறனாதான மனுசாளோட கொணம் மாறும். உள்மருவா என்னா அக்காமக்கஞ் சீமையா. தே வடலூரு தாண்டனா அங்காண்ட, நம்ப மண்ணுப்பா. அந்தப் பாசமும் நெனப்பும் என்னைக்கும் மாறாது, மறக்காது” ராசோக்கியம் சொல்லும்போது செல்விக்கு வெட்கம் தாங்கவில்லை.

அக்கடாவென வந்து அசந்து நடையில் குந்தினாள் பூமா. கடும்புடியான வேலை. சதாசிவத்தின் துணிமணிகளைத் துவைக்கவும் பத்துபாத்திரங்களைத் தேய்க்கவுமாய் பாஞ்சாலைக்கும் அவளுக்கும் பிரிகட்டி விட்டது. இடையில் தங்கம், வைரம், கசப்பு எனத் தண்ணீர் மொண்டுவந்து ஊற்றக்கொள்ள இல்லாவிட்டால் இந் நேரத்திற்குக் கூட

முடிந்திருக்காது. தேய்த்து அலசிப்பிழிந்து உதறிக் காயவைத்த கைகளில், படர்ந்திருந்த சோப்பு வெண்மையின் மீது தேங்காய் எண்ணையாவது தடவலாமா என பூமா, யோசித்துக் கொண்டிருந்த நேரம் ராசோக்கியம் வீட்டிற்குள் நுழைந்தார்.

குந்தி தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. நேரே தோட்டத்தி லிருந்த பாஞ்சாலையிடம் போனார். " ஒன்ன இட்டுக்கிட்டு போவாம வுட்டுட்டன் பாஞ்சால. கொல்லன்னா அப்பிடியே நம்ப பழைய கொல்லிவோ மாதிரிதான். தர, மாமரம், நொணா... நெலமும் கெணறும் மோட்ரோட ஒரே சதுரம்." சொல்லச் சொல்ல பாஞ்சாலைக்கு முகமெல்லாம் ஒரே மகிழ்வு. " பக்கத்திலேயே வூடு. முதனையாரு சொன்னமாதிரி ஒழவும் குடியும் ஒரே எடத்துல..." தொடர்ந்து ராசோக்கியம் ஆர்வமாய் சொல்லிக் கொண்டிருந்ததும் பாஞ்சாலை உள்ளுக்குள் செம்பையய்யனாரை வேண்டிக்கொண்டாள். ராசோக்கியத்தின் மனதிற்கு ஒரு விஷயம் பட்டுவிட்டால், அது நல்ல விஷயமாகத்தான் இருக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

மாறாக பூமாவுக்குத்தான் பட்டென்று விசனம் விழுந்து கவ்விக்கொண்டது. ஒரேயடியாய் மலரைப் பிரிந்து போக வேண்டும் என்கிற வலி, உள்ளுக்குள் பரவ ஆரம்பித்து விட்டது. அதுவும் பெற்ற அப்பன் வீட்டுக்கு வராமல் குடும்பம் அமளிதுமளியாய்க் கிடக்கிற சூழலில்... பிரிந்து போகவேண்டும் என்கிற சேதி, அடி மனதில் முள்ளால் கீறியதுபோல் தெறித்தது.

சற்று நேரத்தில் சதாசிவம் சைக்கிளில் வந்து இறங்கினான். அவனைக் கண்டதும் ராசோக்கியம் ஒண்ணுக்குப் போவதுபோல் மறைவிற்கு ஒதுங்கினார். வந்தவன் நேராய், பாஞ்சாலையிடம் கேட்டான் " எப்பம்மா வந்தீங்க..."

" காலையில நீ இப்பிடி வேலைக்கு போயிருப்ப, நாங்க இங்காண்ட வந்துட்டம். இவுரு மேற்க மணக்கொல்ல போய்ட்டு இப்பதான் வந்தாரு..." சொல்லிக்கொண்டு இருக்கும்போதே அங்காண்ட வீட்டிலிருந்து கனகராசும் அம்புசாட்சியும் வந்தார்கள். ராசோக்கியத்திடம் போய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

" பூமா, தண்ணி மொண்டா. வெளியிலேர்ந்து வர்றவங்களுக்கு ஒரு சொம்பு தண்ணி மொண்டாந்து குடுக்குணுங்கற பழக்கம் கூட, ஒனக்கு முதனைக்கிப் போனப்பறம் மறந்து போச்சி..." பூமாவைக் கடிந்தபடி, அவள் கொண்டுவந்து கொடுத்த தண்ணீரை வாங்கிக் குடித்தான் சதாசிவம்.

தென்மேற்கில் உயரத்தொடங்கியிருக்கும் மண்மேட்டு புருவத்தில் செகசோதியாய் ஏகப்பட்ட வெளிச்சப் புள்ளிகள் சூழ மண் கொட்டும் இயந்திரம். அதேபோன்று ஊருக்குத் தெற்கே, தூரத்தில் மண் வெட்டுகிற சத்தம், வெளிச்சமேகங்கள் எனப் பார்த்துக்கொண்டே கூரையோரமாக ராசோக்கியம் குந்தி யிருந்தார். வாசலில் சாப்பிட்டுக்கொண்டிருந்த சதாசிவத்திடம் முன்னால் குந்தியிருந்த பாஞ்சாலை மணக்கொல்லை பற்றி மெல்ல ஆரம்பித்தாள்.

‘ என்னா ஊர் ஊரா சட்டிபானைய தூக்கிக்கிட்டு...’ எதாவது மறுப்பு சொல்வான் என்றுதான் பாஞ்சாலையும் ராசோக்கியமும் நினைத்தார்கள். ஆனால் அவன் திடுமென கூடுதலாய்ப் பொறுப்பு வந்து சூழ்ந்துகொண்டதைப்போல உணர்ந்து பேசினான். “ மின்னியே நாலு எடத்துக்குப் போயி, நாலு பேர வெசாரிச்சிப் பாத்துருந்தா நல்ல எடமாவும் கெடச்சிருக்கும். போயி இந்நேரத்துக்கு பழைய ஊராவும் ஆயிருக்கும். அத வுட்டுட்டு மச்சான் வூடு மாமன் வூடுன்னு போயி அங்க இருக்கற பஞ்சாயத்த தீக்கறதுக்கே பெரிய பாடா இருக்கு. அதோட வெளிய சொல்றதுக்கும் அசிங்கமா இருக்கு...” அடுத்த சோற்றுக்குத் தட்டை நீட்டினான்.

இறுக்கமான முகத்தை வைத்துக்கொண்டு பூமா சோற்றைப் போட்டு ரசத்தை ஊற்றினாள். பிசைந்துகொண்டே சொன்னான். “ மணக்கொல்லலாம் நெல்ல ஊருதான். கூட வேல செய்ற ஆலடிப் பையன் கல்யாணத்துக்கு அந்த வழியாப் போயிருக்கன். கெழக்க இருக்கற முந்திரிக்காடு பூரா அந்த ஊரோட முடிஞ்சி, அங்காண்ட எல்லாம் கொல்லக்காடுதான்...”

சாப்பிட்டு முடித்த கையைத் துடைத்தபடி நகர்ந்து குந்திக் கொண்டு சொன்னான் “ அவுருக்குப் புடிச்சிருந்தா அப்பறம் என்னா. ஒடந்தடம்னு பாத்து முதனையாரை இட்டுக்கிட்டு போயி முடிங்க. நானும் நாளுல மூணுல அப்பிடியே நேராஅங்க வந்து போவ ரொம்ப சவுரியமா இருக்கும்...”

ராசோக்கியத்திற்குப் பெருத்த நிம்மதி. நிலத்தை கிரயம் எழுதி மணக்கொல்லைக்கே குடிபோய்விட்ட ஒரு பரவசம். பாஞ்சாலைக்கு முதனைக்குப் போனது வந்தது பற்றிய பேச்சு இடறினாலும் தற்போது வெளியேறிவிட்டால் தேவலாம் என்கிற சூழலில் அது ஒன்றும் பெரிதாகப் படவில்லை. ஆனால் மலர் விஷயந்தான்... மெல்ல பூமாவிலிருந்து தொடங்கினாள்.

“ மணக்கொல்ல போறது பத்தி ஒண்ணுமில்லப்பா. அதுக்கு மின்ன இந்தப் பூமா சேதிதான்... நீனும் ஒண்ணும் கண்டுக்காம அப்பிடியே வுட்டுட்ட...” இணுக்கினாள்.

“ என்னால எந்தக் கொறையுமில்ல. ஒங்கள ஓசன பண்ணிக் கிட்டுதான் ரெண்டு மாசமா பெசாம இருக்கறன். கூட ஒரு பையன், புதுசா வேலைக்கி சேந்தவந்தான். நெல்ல பையன். அப்பா இல்ல. அம்மா... கட்டிக்குடுக்கற வயிசில தங்கச்சி... உம்னு சொன்னா நாளைக்கே தேதிய வைச்சி, கல்யாணத்த முடிச்சிக்கலாம்” சாதாரண மாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

பாஞ்சாலை, ராசோக்கியம் என எல்லோருக்கும் ஆச்சரிய மாகப் போய்விட்டது. பாஞ்சாலைதான் கேட்டாள் “ ஏம்ப்பா, இம்மாம் பொருத்தமான எடத்த வைச்சிக்கிட்டு எந்தச் சேதியும் சொல்லாம நீ பாட்டுக்கு இருக்கற. கல்யாணத்த வைச்சிருந்தா இந்நேரத்துக்கு பழைய பொண்ணு பழைய மாப்ளயா ஆயிருக்கும். இப்பனாச்சும் புடிய வுட்டிய. ஒடந்தடம்னு பாருப்பா. ஆடி போயி ஆவணியிலனாச்சும் காரியத்த வைச்சிக்கலாம்.”

பூமாவுக்கு இவர்கள் பேசிக்கொண்டிருப்பது கனவா நனவா எனப் புரியாத ஒரு திகைப்பு. சற்று நேரம் பொறுத்திருந்துவிட்டு சதாசிவம் பேசினான் “ நாளைக்கே கூட தேதிய வைச்சிக்கலாம்தான். ஆனா பொண்ணக் குடுத்து பொண்ணக் கட்டிக்கிற மாதிரி யிருக்கணும். நாம வேலையில இருக்கற மாப்ளய பாக்கறமாதிரி, அவுங்களும் பாக்கறாங்க. கடந்து நானும் அந்த முடிவுலதான் இருக்கறன்.”

பாஞ்சாலைக்கு அப்படியே தலையில் இடி இறங்கியது மாதிரிப் போய்விட்டது. ராசோக்கியம் கூட ஒரு கணம் ஆடிப் போய்விட்டார். தன்னையும் மீறி “ அப்ப மலரு...” பூமா கத்தியே விட்டாள். அதிர்ச்சியிலிருந்து மீளாமல் பாஞ்சாலை கேட்டாள் “ என்னாப்பா சொல்ற. பாவம்பா அந்தப் புள்ள. நின்னு தெவைச்சிடும்பா. குடியும் கூத்தியுமா நிக்கிற அப்பன். அதுக்குமேல பாவம்... ஒண்ணும் வெவரம் புரியாதவப்பா தங்கப்பழம்... அந்தக் குடிகாரனலாம் பாக்காதப்பா... நம்ப பொண்ணு கொணத்த தாம்பா பாக்கணும். சித்ர ஏரி தண்ணிய மொண்டு ஊத்தி நமக்காக அம்மாம் பாடு பட்டுக்கிட்டு கெடந்துதுப்பா...” பாஞ்சாலை அழாத குறையாய்ச் சொன்னாள். பூமா அழுதுகொண்டிருந்தாள்.

“ இதாலதான். இந்த மாதிரி எதாவது தற்கொறச்சல கொண்டாந்து வுடுவீங்கன்னுதான், இம்மாம் நாளா பெசாம இருந்தன். வேலையில

இருக்கற மாப்ள மட்டும் வேணும்னா இப்பிடி எதாவது பாத்தாதான். இல்லன்னா காணி வாங்கறதுக்கு நிக்கிறீங்க பாரு, நெய்வேலியான் குடுத்த காசி, அது பூரா செலவு பண்ணிக் கட்டிக் குடுத்தாலும் காணாது" சற்று உரக்க கோபமாகப் பேசிவிட்டு எழுந்தான்.

சத்தம் கேட்டு அம்புசாட்சியும் கனகராசும் ஓடிவந்தார்கள். எல்லோரும் இறுக்கமாகவும் சதாசிவம் கோபக்குறியோடும் நிற்பது கண்டதும் " என்னாப்பா... என்னாப்பா சேதி" பதட்டத்தோடு கேட்டார்கள்.

பஞ்சாயத்தம் வைக்கிறமாதிரி அவர்களிடம் சொன்னான் " நாலு நாளைக்கி மின்ன நாஞ் சொல்லுல சித்தி, இந்த பொண்ணு தகவலு. இவுங்க என்னா சொல்லுவாங்கன்னு ஒங்ககிட்ட நாஞ் சொன்னனோ அதே மாதிரிதான் நம்ப சொந்தப் பொண்ணு, நம்ப வுட்டா யாரு நாதின்னு சொல்லிக்கிட்டு இருக்கறாங்க."

கனகராசு அம்புசாட்சி இருவருக்குமே இந்த சேதி ஏற்கெனவே தெரிந்திருக்கிறது என்றதும் பாஞ்சாலைக்கு அவர்கள் மேல் கோபம் திரும்பியது. " நீங்களாச்சும் அவனுக்கு அது யாரூட்டு புள்ளன்னு ஒரு புத்திமதிய சொல்லாம... என்னா அர்த்தம்" கடிந்த மாதிரி கேட்டாள்.

அம்புசாட்சி ஏற்கெனவே தீர்மானம் பண்ணியதுமாதிரி சொன்னாள் " இங்க பாரு எக்கா. நாஞ் சொல்றன்னு தப்பா நெனைக்காத. மொதல்ல நம்ப புள்ளிவுளப் பாரு. இது அறியாப் புள்ளிவோ மண்ணக் கூட்டி வைச்சிக்கிட்டு வெள்ளாடறது இல்ல. வாழுங்காலத்துப் பயிரு. நாளைக்கி நம்ப புள்ளிவோ கண்ணக் கசக்கிக்கிட்டு நிக்காத மாதிரி மொதல்ல நெல்ல வழியத் தேடணும். அப்பறந்தான் அண்ணன், அண்ணி, அண்ணம் மொவள்லாம்..."

மேலும் மேலும் இடிகள் இறங்கிக் கொண்டிருந்தன. அம்பு சாட்சியே இப்படிச் சொல்வாளெனப் பாஞ்சாலை எதிர்பார்க்க வில்லை. தனக்கும் அதுதான் படுகிறது என்கிற மாதிரி கனகராசும் நின்றுகொண்டிருந்தார். இன்னும் சொல்லப்போனால் இவர்கள் தெம்பில்தான் சதாசிவமே பேசுவதுபோல் தோன்றியது.

" என்னா அம்புசாட்சி, நீனே இப்பிடிப் பேசற.... யாரு எவரு. சின்ன வயசிலேர்ந்து இவம் பேர்ல அந்த புள்ள உசிரா இருந்தது... இப்ப போயி..." பாஞ்சாலை அழுதே விட்டாள்.

" என்னா எக்கா, கலியோகம் தெரியாத பேசற. இன்னய கால கட்டத்துல நெய்வேலி வேலையில இருக்கற மாப்ள கெடைக்கறதே குதிரக்கொம்பா

இருக்கு. அதிலியும் நம்ப புள்ள படிச்ச நொள்ளப் படிப்புக்கு கூலி வேல செய்றவனதாம் பாக்கலாம். சும்மா வீணு வம்பு வளத்திக்கிட்டு நிக்காத. நம்ப வூட்டுப் புள்ள நாளைக்கி ராசாத்தி மாதிரி இருக்கும். பொண்ணு குடுத்து பொண்ணு கட்றதுல நகநட்டு சாமாஞ்செட்டுன்னு ஒண்ணும் பெருத்த செலவும் இருக்காது" அம்புசாட்சி சொல்லிக்கொண்டிருந்தாள்.

அதுவரை பேசாமல் குந்தியிருந்த ராசோக்கியம் வாயைத் திறந்தார் " என்னாடா கனகராசு, நாம பொறக்கறப்பியே நெய்வேலி யில வேல கெடைக்கும்னா நெனைச்சிக்கிட்டு பொறந்தம். எனுமோ ஆவாத நேரம் வந்துது, நெலத்தப் புடுங்கிக்கிட்டு இந்த வேலய குடுத்தான். இதியும் சும்மாவா குடுத்தான். ஆத்தரத்துல கடந்து ஒரு ஆவாத வேலய செய்யப் போயி, ஒரு புள்ள ஆறு மாசம் உள்ள கெடந்து... தே எதுத்தாப்ல பொண்டாட்டிய கூப்புட்டுக் கிட்டு போறான். ஊரு பூரா பை நெறையா சம்பளத்தோட வேல கெடைக்கும், நமக்கு மட்டும் கெடைக்காதுன்னு நெனைச்சிக்கிட்டா அந்த வேலயச் செஞ்சான். அதோட வேல கெடைக்கிலன்னதும், வுழுந்து செத்தா பூட்டான். எனுமோ வேலக்கார மாப்ள வேலக்கார மாப்ளன்னு... உசுர வுட்டுக்குறீங்க..." வேகமாகச் சொல்லிக் கொண்டிருந்தவர் இடையில் தேக்கி சற்று நிதானமாகச் சொன்னார் " ஆளு குடிகாரனாப் பூட்டான். குடும்பம் சிக்கல்ல கெடக்குது. ஒரு பொட்டப் புள்ளய வைச்சிக்கிட்டு பாவம் அது தெவைக்கிது. ஏதோ நம்பளால ஒரு கைத்தாங்கலு, அந்தப் பொட்டப்புள்ளிய நாம கட்டிக்கிட்டம்னா பெரிய புண்ணியத்த செஞ்ச மாதிரி யிருக்கும்னு சொன்னா... எனுமோ இப்பதான் கத சொல்றீங்க..."

ராசோக்கியம் சொல்லி முடிக்கவும் அம்புசாட்சிக்கும் கனக ராசுவுக்கும் மூஞ்சியில் அடித்தமாதிரி போய்விட்டது. சதாசிவம் கூட அவர் இந்த வேலையைக் குத்திக்காட்டிப் பேசியதை எதிர்பார்க்க வில்லை. ராசோக்கியத்தின் சூடு ஆறுவதற்குள் பூமாவே பேசினாள் " இங்க பாரு அண்ண, வேலையில இருக்கற மாப்ள இல்லாத மாப்ளன்னு ஏங் கதய வுடு. நீ மொதல்ல மலர கல்யாணம் பண்றதப் பாரு." கண்ணைத் துடைத்துக்கொண்டு திடமாகச் சொன்னவள், திரும்பவும் கலங்கிவிட்டாள் " ஒண்ணும் ஓசன பண்ணாத அண்ண. அது குடும்பம் இருக்கற நெலமையில, நாம கட்டிக்கிலன்னா அது பாவம் நம்பள சும்மா வுடாது அண்ண..."

பூமாவே தன் வாழ்க்கையைப் பற்றிய அக்கறை இல்லாமல் மலரைப் பற்றிப் பேசியதும் கனகராசுவுக்கும் அம்புசாட்சிக்கும் ஒன்றும் சொல்லமுடியவில்லை. இனிமேல் அங்கு நிற்பதும் அதுபற்றிப் பேசுவதும்

தேவையில்லாத மாதிரி தெரிந்து நழுவி வீட்டுப் பக்கம் போனார்கள்.

சதாசிவமும் பூமா இப்படிப் பேசுவாள் என்று எதிர்பார்க்க வில்லை. அவளிடம் கோபத்தோடு ஆனால் நிதானமாகப் பேசினான் “ ஒனக்கு வேணும் வேணாங்கறது ஓம் பிரியம். ஆனா என்னப் போயி இதக் கட்டு அதக் கட்டுன்னு ஏங்கிட்ட சொல்லாத. எதக் கட்டுணும் போவுணும்னு எனக்குத் தெரியும்.”

சொல்லிவிட்டு உள்ளேபோய் ஆணியில் மாட்டியிருந்த சட்டையைப் போட்டுக்கொண்டு வெளியில் வந்தான். “ அன்னைக்கி திடீர்குப்பத்துல மானம் போவுது. எட்டு ஊரத் தாண்டி இதியும் கூப்புட்டுக்கிட்டு வந்து அது சண்ட அடிக்கிது. எல்லாம் அப்பனுக்கு இருக்கற புத்திமாதிரிதான் நாளைக்கி அதுவும் மொகமிட்ட வாக்குல நிக்கும்.”

ராசோக்கியத்திற்குப் பதைத்தது. அதற்குள் பாஞ்சாலை கோபத்தில் கடந்தே விட்டாள் “ எலேய், எனக்குப் புடிக்கில அதனால கட்டுலன்னு ஒரே வார்த்தையில சொல்லிட்டுப் போ. அது ஒண்ணும் கட்டிக்கிறதுக்கு ஆளு இல்லாம கொடிவேலியத் தின்னுட்டு கெடக்குல. அதுக்காக ஒரு பொட்டப்புள்ளய போயி அப்பம் புத்தி இருக்கும் ஆத்தா புத்தி இருக்கும்னு தரக்கொறவாப் பேசாத. அவன் குடிகாரனா இருக்கலாம், கூத்தியா வூட்ல சுத்திக்கிட்டு நிக்கலாம். ஆனா அவ ராமனுக்கு வாக்கப்பட்ட சீதேவி மாதிரி. அவ புள்ளயப் போயி நாக்குமேல பல்லப் போட்டு நசுங்கனாப்ல பேசாத. அப்பறம் பெத்த புள்ளன்னு கூட நா பாக்க மாட்டன்.”

அவனும் சளைத்துப் பேசவில்லை “ இந்தா இதுக்குமேல இங்க அதியும் இதியும் பேசிக்கிட்டு நிக்காதீங்க. எனக்கு அதக் கட்டிக்கிறதுக்குப் புடிக்கில. வேற எடத்துலதான் கல்யாணம் பண்ணிக்கப் போறன்.”

பாஞ்சாலைக்கு உடம்பெல்லாம் பதறுகிறது “ எலேய், நீ எந்தத் தெம்புல பேசறன்னு எனக்குத் தெரியும்டா. ஆனா சொல்றங் கேட்டுக்க. அந்த மலரு புள்ளய தவுர்த்து வேற எடத்துல நீ கல்யாணம் பண்ணுனும்னு நெனைச்சா, அப்பன் வருவான் ஆத்தா வருவான்னு கெனவுல கூட நெனைக்காத. நீ பாட்டுக்கு ஒஞ் சவுரியத்துக்கு போய்க்கிட்டியே இருக்கலாம்.”

“ அவன் எல்லாம் முடிவு பண்ணி வைச்சிக்கிட்டுதான் பேசறன்னும் சொல்றான். நீ எனுமோ அப்பன் ஆத்தாள செல செஞ்சி வைச்சி குடும்புடுவான்னு நிக்கிற. அவனுக்கு இந்த வேல கெடைச்சதும் நம்பள எனுமோ பீதொடைச்ச கல்லாட்டம் பாக்கறான். அவங் கிட்ட போயி...”

ராசோக்கியம் வெறுத்துப் பேசினார்.

“ ஆமா, நா முடிவு பண்ணிதான் வைச்சிருக்கன். ஆடி போயி ஆவணியில கல்யாணம். நீங்க வந்தாலும் வாங்க. வல்லன்னாலும் போங்க...” அறுத்துச் சொல்லிவிட்டு தோட்டத்துப் பக்கம் போனான்.

“ முடிவு பண்ணிட்ட இல்ல. சரி போ... ஒன்னப் பத்து மாசம் பெத்து எடுத்த வவுறு எரிஞ்சி ஏம் வாயால ஒண்ணு சொன்னா பலிச்சிடும். வேணாம். நீ நெல்லபடியா இரு. தே புள்ள ஏந்திரு... ஒப்பன இட்டுக்கிட்டு கௌம்பு, முதனைக்கி போவும். இதுக்கு மேல இங்க எதுக்கு ஒக்காந்துக்கிட்டு. அவன் மனசுக்குப் புடிச்ச எடத்துல கட்டிக்கிட்டு மகராசனா இருக்குட்டும்” கோபத்தோடு பாஞ்சாலை எழுந்தாள்.

மறுப்பு ஏதும் சொல்லாவிட்டாலும் தயங்கியபடி பின்னே ராசோக்கியம் வந்துகொண்டிருந்தார். அவருக்கும் பின்னால் பூமா அழுதுகொண்டே தெருவிளக்கு வெளிச்சத்தில் உயிரற்று நடந்து கொண்டிருந்தாள். “ வேகமாய் முன்னே போய்க்கொண்டிருந்த பாஞ்சாலை திரும்பிப் பார்த்து சத்தம் போட்டாள் “ சீக்கிரம் வா புள்ள. அரசகுழியில ஓம்போதர பஸ்ச போயி புடிக்கணும்.”

வாசலில் நின்றுகொண்டிருந்த கனகராசோ அம்புசாட்சியோ சதாசிவமோ யாருமே வந்து மறிக்கவும் இல்லை, கூப்பிடவுமில்லை. துடுக்கு மட்டும் விடாமல் கூடவே வந்தது, பஸ்சில் அவர்கள் ஏறியதும், ஏமாற்றமாய் திரும்பி ஓடிவிட்டது.

*

84

‘ வெள்ளிக் கொலுசுமணி... வேலான கண்ணுமணி...’ வெள்ளைச்சியின் வீட்டு முன்னால் போடப்பட்டிருந்த பந்தலின் உயரமான காலின் உச்சியில் ஒலிபெருக்கி, புது வேப்பங்குறிச்சி யையே கிழித்துக் கொண்டிருந்தது. ஆனால் தோட்டத்தில் ஏனம் விளக்கிக் கொண்டிருந்த அசலாம்புக்கு, அதைக் கேட்கக் கேட்க, பற்றிக்கொண்டு போவது மாதிரி உள்ளுக்குள் எரிந்தது. வெளியே திண்ணையில் சாக்குப்படுதா மறைவில் தாடியும்தப்புமாய்க் கிடந்த செங்கல்ராவு அதையெல்லாம் காதில் வாங்குகிற நிலையில் இல்லை.

‘ விநாயகனே வினை தீர்ப்பவனே...’ என்று காலையில் அரிஓம் என்று பாட்டு தொடங்கியபோதே, சிகாமணிக்குள் பொசுக்கென இருட்டு பரவியது. உடன் சைக்கிளை எடுத்துக் கொண்டு கடைத் தெருவுப் பக்கம் போனவன்தான், அப்படியே மதிய வேலைக்குப் போய்விட்டான்.

அசலாம்பு கூட ஊர் ஒப்பந்தக்கட்டுக்காவது பத்திரிக்கை கொண்டுவந்து வைப்பார்கள் என்று நினைத்தாள். வெள்ளைச்சியோ காசியோ மகன் மணிமாறனோ யாருமே இந்த வீட்டுப்பக்கம்கூடத் திரும்பவில்லை. அப்படி அவர்களே பத்திரிகை வைத்திருந்தாலும் அசலாம்பு, அந்த வீட்டுப்பக்கம் அடியைக்கூட எடுத்துவைக்கக் கூடாது என்கிற நினைப்பில்தான் இருந்தாள். வேண்டுமானால் அவர்களைப் போலவே நாமும் ஊர் ஒப்புமைக்கு ஒரு கால்காசியை எடுத்துக்கொடுத்து சிகாமணியைப் போய் அம்மான் பட்டம் கட்டிவிட்டு வரச் சொல்லலாம் என்கிற யோசனைதான். பத்திரிக்கை வைக்காமல் விட்டதில் மிச்சம்தான்.

தடபுடலாய் நடக்கிற காரிய ஏற்பாடுகளைப் பார்த்துவிட்டு, இரண்டு நாளைக்கு முன்பு இதுவிஷயமாய் ரங்கநாதுவைப் போய்ப் பார்த்து கரி படையாச்சி பேசினார் “ என்னாப்பா இது. நாம்பளே மண்ண வுட்டு மனைய வுட்டு மாத்துக்குடியிருப்புல வந்து எல வுட்ட மரமாட்டம் நிக்கிறம். இதுல ஏதோ ஒண்ணுக்குள்ள ஒண்ணு ஒரு ஒட்டுறவா ஓட்டும்னு பாத்தா சண்ட சாடின்னு... வா போயிப் பேசி ரெண்டு குடும்பத்தையும் ராசி பண்ணி பாப்பும்.”

ரங்கநாது குறுக்கே தலையாட்டிவிட்டார் “ அதுலாம் நாம போயிப் பேசி

ராசியாப் போற சூழ்நெல அங்க ஒண்ணும் இல்ல. ஒண்ணு பில்லுகட்டுக்காரன் ஒதுங்கணும். இல்ல வைக்க கட்டுக்காரன் ஒதுங்கணும். ரெண்டு பேரும் போட்டி போட்டுக் கிட்டு நிக்கிறப்ப நம்ப கத ஒண்ணும் அங்க மேவாது.”

மேற்கில் விருத்தாசலத்தை அடுத்த மணவாளநல்லூர்தான் மாப்பிள்ளை. கொளஞ்சியப்பர் கோயில் முன்னால் ஓட்டல்கடை வைத்திருக்கிறார்கள். கடையில் மீந்தது போனது வந்ததைத் தின்று விட்டு கல்லாவிலேயே குந்திக் கிடந்ததில் மாப்பிள்ளையும் சற்றுக் கனத்த உடம்புதான். வெள்ளைச்சிக்கு தன் மகள் அமிர்தத்தைப் போலவே கனத்த மாப்பிள்ளை வாய்த்ததில் கொஞ்சம் கூட விருப்பமே இல்லை. ஆனாலும் உருவிவிட்ட மாதிரி சொட்ட வாளைக்குட்டியாய் மாப்பிள்ளைக்கு எங்கு போவது? ‘ அத்தை அத்தை’ என வாய்நிறையக் கூப்பிட்டுக்கொண்டு கிடந்த சிகாமணியே கையை விரித்துவிட்ட பிறகு விதி விட்ட பாடு என்றுதான் பெண் கொடுக்க ஒத்துக்கொண்டாள். ஒரே பெண். நெய்வேலிக்காரன் கொடுத்த பணம் வேறு. கண்டும்காணாததிற்கு மணிமாறனின் எம்ப்ளாய்சு வேலை, சம்பளம். முன்னப்பின்னப் பார்க்காத செலவில் கல்யாண ஏற்பாடு.

பொழுதுபோகவும் செங்கல்ராவு இரும ஆரம்பித்துவிட்டார். கொட்டாஞ்சியில் நிரம்பிய புதிய மணலையும் நனைத்து விட்டிருந்தது, தொடர்ந்து துப்பிக்கொண்டிருந்த சளி. ஏழு மணிக்குமேல் இருக்கும், பெண் அனுப்பிவிட வெள்ளைச்சி வீட்டுக்கு வீடு வந்து கூப்பிட்டுக்கொண்டே போனாள். அசலாம்பு வீடு இருக்கிற திசையைக் கூட அவள் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. குறிப்பாய் இருமிக்கொண்டிருந்த அண்ணங்காரனின் குரல்கூட அவளைச் சங்கடப்படுத்தவில்லை. “ மாமா மாமா...” என உயிராய்க் கிடந்த அமிர்தத்தை சிகாமணி நிராகரித்ததும், அதோடு அசலாம்பு அடித்துப் பிடரியைப் பிடித்துத் தள்ளாத குறையாய்ச் சொல்லியதும் அவளுக்குள் அறுத்துவிட்டது. வெள்ளைச்சி திரும்பிப் பார்க்காமலேயே போய்க்கொண்டிருந்தாள்.

இரவு பத்தரை மணிக்குமேல் ஆகிவிட்டது. இரண்டாம் பணி முடித்து ஊருக்குள் நுழையவும், பெண் அனுப்பிவிட்டு வெள்ளைச்சி வகையறா வீடு திரும்பவும் சரியாக இருந்தது. கும்பல் போகட்டும் என்று சிகாமணி கோயில் மறைவில் ஒதுங்கினான். வெகுநேரம் கழித்துதான் வீட்டுப்பக்கம் வந்தான். இவனை எதிர்பார்த்து வீட்டில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளேபோய் சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தான். வெளியே குரல் கேட்டது “ எண்ணா... எண்ணா...”

திரும்பி நடையைப் பார்த்த சிகாமணிக்கு முகம் சுண்டிவிட்டது. நடையில் ஊத்தாங்கால் நடுஅத்தை ராசாமணி, பிளாஸ்டிக் பையில் இரண்டு மூன்று ஆப்பிள்களும் பிஸ்கட் பாக்கெட்டுகளுமாக வைத்துக்கொண்டு செங்கல்ராவை எழுப்பிக்கொண்டிருந்தாள். இ வ ன் " வா..." என்றுகூடச் சொல்லாமல் தோட்டத்துப் பக்கம் போனான்.

' அண்ணனப் பாக்க வர்ற நேரத்த பாத்தியா...' உள்ளுக்குள் கொதித்த அவனுக்கு, வேலை விஷயமாய் கையெழுத்து கேட்கப் போனபோது அவள் பேசியது கோடாய் மனசுக்குள் ஓடியது. ' எங்குளுக்கு ஒண்ணும் பெரச்சின இல்ல. ஏம் புள்ளதான் ஓம் பேர்ல உசுரா இருக்கு...' பெண்ணைக் கட்டினால்தான் கையெழுத்து என்கிறதைச் சொல்லாமல் சொல்லுகிற பேச்சு. அதையும் உடைத்துப் பேசிவிட்டான் அத்தை வீட்டுக்காரன் பட்ராசு. சிகாமணிக்கு உறவு சொந்தம் எல்லாமும் சுத்தமாய் வெறுத்துவிட்டது. அதுவும் காணாமூணாத் தெரியாத நிரந்தரப் பணியாளர்களின் கீழ் எடுபுடியாய் ஒப்பந்த வேலை செய்கிற அவமானம். பல்லில் பட்டுத் தெறித்த மாதிரி போட்டி போட்டுக்கொண்டு நட்டாற்றில் விட்ட பிறகு ' அண்ணன் கிண்ணன்' என்று வந்தது, அவனுக்குப் பொறி பறந்தது.

ஆனால் எதிர்பார்க்கவில்லை அவன். அசலாம்பு வேகமாய் போய் " வாங்க..." என்று கூப்பிட்டதும், அவனுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. முன்பு பெரிய அத்தை வெள்ளைச்சி கல்யாணம் சம்பந்தமாய் விசாரிக்க வந்தபோது ' ஒங்க பொண்ணும் வேணாம், அவுங்க பொண்ணும் வேணாம். போயி ஒங்க சோலிய பாருங்க' என்று சொன்னவள்... கையெழுத்து சம்பந்தமாய் ஊத்தாங்கால் போயிருந்தபோது அடிக்காத குறையாய் பட்ராசு மாமா பேசியதும் வெலவெலத்து போய் எழுந்து வந்தவள்... இப்போது எப்படி வாய்நிறையக் கூப்பிட்டது...

செங்கல்ராவு பரிதாபமாக ராசாமணியைப் பார்த்தார். இருமும்போது புடைத்துக்காட்டிய பழுவு எலும்புகளைப் பார்த்த ராசாமணிக்கு கண்களில் துளிகள் பூத்து மின்னின. அப்படியே திண்ணையில் குந்தி, பழங்கள் பிஸ்கட்டுகளை வெளியே எடுத்து வைத்தாள். " திங்கிறியா அண்ண..." கேட்டாள்.

" இப்பதான் ஒரு வா சோறு தின்னுது. வேணாம்..." அருகாலைப் பிடித்துக் கொண்டிருந்த அசலாம்பு பட்டும்படாமல் சொன்னாள். தோட்டத்தில் நின்றுகொண்டிருந்த சிகாமணிக்கு கடும் பசி. தாங்கமுடியாமல் நின்றுகொண்டிருந்தான்.

கண்களைத் துடைத்துக்கொண்டு ராசாமணி சொன்னாள் “ ஆளு அப்பிடியே காலையில கல்யாணத்துக்கு கொளஞ்சிப்பாரு கோயிலு மண்டபத்துக்கு வந்துடறன்னு சொல்லி என்ன மட்டும் போயி தலையக் காட்டிட்டு வான்னு அனுப்பி வுட்டுது. சரி வந்தது வந்துட்டம், காயலா கெடக்கற ஆளப் பாத்துட்டு போவும்னு வந்தன்.”

அசலாம்புக்கு சுமதி, பானுமதி எல்லோரையும் விசாரிக்க வேண்டும் போல் துடித்தது. குறிப்பாய் மனசுக்குள் சுமதி நின்று கொண்டேயிருந்தாள். கேட்கலாம் என்று வாயை எடுத்தவள், சிகாமணி பார்க்கிறானா எனத் தயக்கத்தோடு திரும்பினாள். அவன் எரித்து விடுகிறமாதிரி பார்த்ததும், அவளுக்குப் பொசுக்கென ஆர்வமும் உற்சாகமும் அடங்கிப் போய்விட்டது.

ராசாமணிக்கு அண்ணனைப் பற்றிய கவலையும் விசாரிப்பும் சடுதியில் மறைந்து கீழே தரையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள் “ சுமதிக்குக்கூட மேலக்குப்பத்துலேர்ந்து ஒரு மாப்ள வந்தது. மொத மைன்சுல எம்பளாய்சா இருக்கானாம். வூட்ல இருக்கற ஆளும் குடுத்தா எம்பளாய்சுக்குதான்னு சொல்லிக்கிட்டு இருந்துது. இந்த எடம் வந்ததும் அதுக்கும் புடிச்சிப் போச்சி. இந்த மாசக் கடைசியில தேதிய பாத்து வைச்சிடலாம்னு முடிவுல இருக்கு...”

அசலாம்பு அப்படியே ஒரு கணம் சுருண்டு போய்விட்டாள். குறிப்பாய் ‘ எம்பளாய்சுக்குதான் குடுக்கணும்’ என்பதில் கொஞ்சம் கூடுதல் அழுத்தத்தைக் காட்டியது அவளுக்குள் சுருக்கென்று குத்தி வலி துடித்துக்கொண்டிருந்தது. ‘ பொண்ணு எம்பளாய்சுக்கு தான். சிகாமணி மாதிரி காண்ட்ரேட்ல வேல செய்றவனுக்குலாம் இல்ல...’ எனப் பொருள்படும்படியான ஆழமான பேச்சு.

அசலாம்பு முகத்தில் ஈயாடவில்லை. பிடிவிட்டுப்போன பரிதாபத்தில் சிகாமணியைத் திரும்பிப் பார்த்தாள். இன்னமும் சூடு குறையாமல் அவன் முகத்தில் பறந்த பொறியைக் கண்டு பெட்டிப்பாம்பு மாதிரி அடங்கினாள்.

ராசாமணி, காயலாவில் கிடக்கும் அண்ணனைப் பார்க்க வந்த மாதிரி தெரியவில்லை, சுமதியின் கல்யாணம் பற்றி சொல்லி விட்டுப்போக வந்தமாதிரி “ வர்றன்...” என்று கிளம்பிவிட்டாள்.

“ எம்ப்ளாய்சாவே பாத்துக்கிட்டு போங்களன். நாங்களா மறிச்சிக்கிறம்...” கோபமாகப் பொரிந்துகொண்டே சாப்பாட்டைப் போட்டு வைத்தாள் அசலாம்பு. எதுவும் பேசாமல் சாப்பிடக் குந்தினான் சிகாமணி.

“ அதுக்கே எம்பளாய்சுக்குதான்னு சொல்லிக்கிட்டு இருந்தாராம்.” செம்பில் தண்ணீர் மொண்டுவந்து வைத்தபடி சொன்னாள். வாயில் அள்ளிப்போட்ட சோற்றை மெல்லாமல் அவளை முறைத்தபடி பார்த்தான். அவள் இவனைப் பொருட் படுத்தாத மாதிரி காட்டிக்கொண்டாலும், சற்றே அமைதியாக இருந்தாள்.

சாம்பார் தேவையாக இருந்தது, தட்டை நகர்த்தினான். “ தே ஒருத்தி அவுத்து வுட்டுட்டுப் போற மாதிரி நீங்களும் போங்க. போயி எம்பளாய்சாவே வாரிக்கிட்டு வாங்க...” சற்று உரக்க முனறியபடி கரண்டியால் மொண்டு ஊற்றினாள். சிகாமணிக்கு சாப்பிடாமல் எழுந்துவிடலாமா என்றுகூடத் தோன்றியது.

கடைசி உருண்டையை வாயில் போட்டுவிட்டு கையை இறக்குவதற்குள், அசலாம்பு தட்டுச் சோற்றை அள்ளி வைத்தாள். ரசத்தை ஊற்றியபடி புலம்பிக் கொண்டிருந்தாள் “ ஊரு ஒலகத்துலலாம் எம்பளாய்சா இல்லாதவம் பூரா, கல்யாணம் பண்ணிக்காம சாமியாராத்தான் நிக்கப்போறானுவோ பாரு...”

சாப்பிடுவதை பட்டென்று நிறுத்திவிட்டான். சோற்றுக்கு பதிலாய் அவளைப் போட்டு மென்றுவிடுகிற மாதிரியான கோபத்தில் பார்த்தான். “ ஏம்மா சாப்புடும்போது வவுத்து எரிச்சலக் கெளப்பிக் கிட்டு. பெசாம வாய மூடிக்கிட்டு குந்தியிரும்மா...”

அசலாம்பு அப்படியே உடைந்து போய்விட்டாள். கண்களில் தாரை தாரையாக இறங்குகிறது. அழுகையை அடக்கப் பெரும் பாடுபட்டுக்கொண்டே சொன்னாள் “ அந்த சுமதி புள்ள நெல்ல புள்ளப்பா. எம்பளாய்சுக்குதான் குடுப்பாங்கற அவுங்க கதய எல்லாத்தியும் எட்டத் தள்ளுப்பா. அவம் பத்திரிக்கையே அடிச் சிருந்தாலும், நாளைக்கே போயி நாம கூப்புட்டா அந்தப் புள்ள யாரையும் எதிர்பாக்காம ஏந்திரிச்சி வந்துடும்பா. காலையில வாப்பா போய்ட்டு வருவம். காலத்து பயிருப்பா. காலாகாலத்துக்கும் நம்ப குடும்பத்த கீழ வுடாம கையில ஏந்திக்கும்பா. செத்த மனக்கஷ்டத்த பாக்காதப்பா. வாப்பா போய்ட்டு வருவம். மகாலட்சுமி மாதிரி அந்தப் புள்ளய மறக்கவே முடியிலப்பா.”

சாப்பிடாமல் சோற்றுக்கை காய்ந்துகொண்டிருந்தது. கண்ணீர் விட்டபடி புலம்பிக்கொண்டிருக்கும் அம்மாவையே பார்த்தவாறு குந்தியிருந்தான். புலம்பலும் கண்ணீரும் ஓய்ந்து இயல்புக்கு வர வெகுநேரம் பிடித்தது. பிறகு மெல்ல கிளிப் பிள்ளைக்குச் சொல்கிற மாதிரி சொன்னான் “ எம்மா... நீ

நெனைக்கிற மாதிரிலாம் சொந்தபந்தம் இப்ப இல்லம்மா. அன்னைக்கி அத்த அத்தன்னு பாசமா நின்ன சுமதிய இப்பப் போயி பாரு. என்னா ஏதுன்னு கேக்கறதுக்குக் கூட யோசிக்கும். ஏன்னா, நா சும்மா காண்ட்ரேட்ல வேல செய்றவன். எம்பளாய்சு வேலையில இருக்கறவன வுட்டுட்டு என்னைப் பாக்குணும்னு அதுக்கு என்னா தலை யெழுத்தா... தே வந்துட்டுப் போவுத அத்த... எம்பளாய்சு மாப்ள எம்பளாய்சு மாப்ளன்னு எனுமா பூரிப்ப போட்டு ஒடைச்சிட்டுப் போவுது. இதுல போயி போவலாம்... கேக்கலாம்னு... வெட்டிக் கத படிச்சிக்கிட்டு...”

“ எலேய்... அந்த புள்ளய வேணாங்கறதுக்காக எதஎதையோ சொல்லிக்கிட்டு இருக்கடா. தங்கம்டா அந்தப் புள்ள. அப்படியாப் பட்ட தங்கத்த வுட்டுட்டு நாம எங்க போயித் தேடனாலும் தகரந்தாண்டா கெடைக்கும்.”

அதற்குமேலும் அவனால் பொறுத்துக்கொண்டு குந்தியிருக்க முடியவில்லை. எழுந்து வேகமாக வெளியில் வந்து, குண்டானில் இருந்த தண்ணீரைக் கையால் அள்ளி ஊற்றிக் கழுவிக்கொண்டு நிமிர்ந்தான். தூரத்தில் தெற்கே மண் வெட்டுகிற கொட்டுகிற இயந்திரங்களில் ஏகப்பட்ட வெளிச்சங்கள். எல்லோருடைய வாழ்க்கையையும் புரட்டிப்போட்டு விட்டு மின்னிக் கொண்டிருக்கும் அவற்றைப் பார்க்கப் பார்க்க பற்றிக்கொண்டு வந்தது.

தோட்டத்தில் கிடந்த கட்டிலில் குந்தினான். மனம் அமைதியில்லாமல் அலைமோதிக்கொண்டு கிடந்தது. ‘ தங்கம்டா அந்தப் புள்ள.. அப்பிடியாப்பட்ட தங்கத்த வுட்டுட்டு நாம எங்க போயி தேடனாலும் தகரந்தாண்டா கெடைக்கும்’. உள்ளுக்குள் சத்தம் போட்டுக்கொண்டிருந்த அம்மாவின் குரலில், தகரம் என்கிற வார்த்தை திடுமென அவனுக்குள் ஒரு கொக்கியைப் போட்டது.

தகரம், தகரச் சத்தமாய் மாறி திரும்பத்திரும்ப ஒலிக்க, எங்கும் குருவிகள்... கம்மங்கொல்லை... ஊடே பூமா ஓடிக் கொண்டிருந்தாள்.

வெளியே இருமல் சத்தம் கேட்டதும், இயல்புக்கு வந்தவன் பெருமூச்சு விட்டுக்கொண்டான். நினைவு ஒன்றைத்தவிர ஆறுதல் தருவது எதுவாகவும் அப்போது இல்லை.

*

85

எட்டின தொலைவிற்கு ஏகத்திற்கும் பெரும் பள்ளமாய் சுரங்க வெட்டு வேலை. வேப்பங்குறிச்சி, தெற்குவெள்ளூர், வடக்கு வெள்ளூர் என இருந்ததிற்கான எந்த அடையாளமும் இல்லாமல், தோண்டப்பட்டு விட்டிருந்தது. கிழக்குப் பக்கமிருந்து பிடிக்கப் பட்ட மட்டுகள், மேற்கே வெட்டியபடி போய்க்கொண்டிருக்க, கன்வேயர் பெல்ட்டுகளின் வழியாக வெட்டுகிற மண் மேற்கே மண் மேட்டில் கொட்டப்பட்டு சிறிய மலையைப் போல் உருவாகிக் கொண்டிருக்கிறது. வெட்டுகிற இடத்தில் தண்ணீர் ஊறி இடைஞ்சல் செய்யாமல் இருக்க ஓரங்களில் ஆங்காங்கே ராட்சத போர் போட்டு பெரியபெரிய குழாய்களில் தண்ணீர் போய்க் கொண்டுமிருந்தது.

மைன்ஸ் ஓரமாக அணையைப் போன்று மண்ணைக் கொட்டி, லாரிகள் போகவரத் தோதாகப் போடப்பட்ட பாதையில் ரங்கநாதும் கீரையனும் பார்த்துக்கொண்டே வந்தார்கள். அணை பாதை மேற்கே வரவரக் குறைந்து மாற்றுக் குடியிருப்பிற்கு நேரே தந்தரையில் போய்க்கொண்டிருந்தது. தலையில் உள்ள வலுத்த கொடிக்கழிச் சுமைகளைத் தாங்கிப்பிடித்தவாறு ஓடையில் இறங்கி உயரே ஏறிக் குடியிருப்பு பக்கம் வந்துகொண்டிருந்தார்கள். வால் போல் நீண்ட கொடிகளின் நுனிகள் தரையில் தெறாவியபடி கோடு கிழித்துக்கொண்டு வந்தன.

மேற்கே எலுமிச்சை, வடக்கே தொப்புளிகுப்பம் ஓடைகள் எனத் தொடர்ந்து போனதில் கழிகளுக்குத் தட்டுப்பாடு வரவும், கீரையன்தான் வலிந்து கிழக்கே வளையமாதேவி ஓடைகளின் பக்கம் இட்டுக்கொண்டு போனார். தூரம் கொஞ்சம் அதிகம்தான் என்றாலும் அடிபோட்டுப் பின்ன, எளிதில் வணக்கத்திற்கு வரக் கூடிய கொடிகள், அறுத்துக் கழித்துக்கொண்டு வர நேரம் உச்சிக்குத் தாண்டிவிட்டது.

ஊரில் எவ்வளவோ பேர் கேட்டும் விட்டார்கள் ‘ என்னா ஒரு லாரி ஓனரோட அப்பங்காரரு இன்னம் கொடிக்கழி, கொடித் தட்டுன்னு... நெல்லாவா இருக்கு...’

‘ என்னாடாப்பா... தெரிஞ்ச தொழிலு... செஞ்சிக்கிட்டு இருந்த வேல... மின்னிய விடவும் ஒண்ணும் தழைஞ்சி போயி நிக்கில வாழ்க்க. இந்த லாரி கீரிங்கறதுலாம் மலய வெட்டி எலி புடிக்கிற மாதிரி, நாலு நாளையில அலையிற அலைச்சல்ல சீத்துபூத்துன்னு எரப்பு கண்டு போவும். இது

சில்லாடலா எப்பியும் செய்ற வேல. தட்டு, தட்டி, கொடலின்னு பின்னுன ஒடனே சிக்கலில்லாம வித்தும் போவுது. நாம என்னா திருடவா போறம், இதச் செய்றதுக்கு அசிங்கமா இருக்க...' கேட்கிற ஆளையே ' சரிதான்' என்கிற நிலைக்குக் கொண்டுவந்துவிடுவார் ரங்கநாது.

ஆரம்பத்திலிருந்து செல்விக்கும் குடலி, கொடித்தட்டு, கறிக்கூடை என இவர் பின்னுவதைப் பார்க்கப் பார்க்க ஏதோ செய்யக்கூடாத தொழிலைச் செய்துகொண்டிருப்பதாய் வெளியே சொல்லமுடியாத அருவருப்பு உள்ளுக்குள். அவர்கள் ஊரில் எல்லாம் கீரையன் சமூகத்தார் மட்டும் பின்னுவார்கள் விற்பார்கள். இங்கு கீரையனோடு போவதும், கழிக்கொடிகள் வெட்டி வருவதும் பின்னி விற்பதும்... அவளுக்கு ஏற்கவில்லை.

ஒரு வாரத்திற்கு முன்பு வந்திருந்த அவள் அப்பா தங்கவேல் படையாச்சி, இவர் குடலி பின்னுவதைப் பார்த்துவிட்டார். பத்துப் பன்னிரண்டு கால்கள் போட்டு இரட்டைப் பின்னலில், வலுத்த வணக்கமான கொடிகளைப் போட்டு நெருக்கமாகப் பின்னிய இரும்புக் கூண்டுகள் போன்று, குடலிகள் எல்லாமும். அசந்து போய் விட்டார். பயிர் பச்சை, மரம் மட்டை என்று கிடக்கிற ஒரு குடியானவன் செய்கிற எந்த வேலையுமே சிறப்பாகத்தான் இருக்கும் என்று மெச்சியபடி செல்வியிடம் சொன்னார் ' ஓம் மாமனாரு கிட்ட சொல்லி ஒரு பத்துக் கொடலி பின்னிக் குடுக்கச் சொல்லும்மா. நம்ப எதுவா கொல்லியில பெலாங் கன்னுவோ வைச்சி வுட்டுடுவம். பின்ற கொடலியக் கொண்டுபோயி வைச்சிட்டா, எட்டாக் கைக்கி போயி தல கூடற வரைக்கும் ஈ எறும்புகூட நொழையாம பெருத்த காபந்தா இருக்கும்.'

அப்பாவே பார்த்து ஆச்சரியப்பட்டு பின்னிக்கொடுக்கச் சொல்லிக்கேட்டதும் செல்விக்கு ஒருமாதிரியாகி விட்டது. அப்பா கொடுத்த பணத்தை அவரிடம் கொடுத்துச் சொன்னதும், ரங்கநாதுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. " சம்மந்தி கிட்ட போயி என்னா பணம்? பின்னிக் குடுக்கறன். கொண்டுபோயி ஏம் பேரச் சொல்லிப் பத்துப் பெலாமரத்த வைச்சி உண்டாக்கச் சொல்லு..."

*

எட்டு

86

பூமாதேவி இல்லம்

19.08.1989

முகப்பில் எழுதப்பட்ட, பளீரென்ற வெள்ளைச் சுவரில் பொட்டுப் பொட்டாய்த் தூறல்கள் விழவும், மெல்ல ஈரம் முழுவது மாய்ப் பரவத் தொடங்கியிருந்தது. சனிமூலையில் சளாரென்று கண்ணைப்பறிக்கிற ஒரு மின்னல். கூடவே குண்டிகுடல் எல்லாமும் நடுங்குகிறமாதிரி பேரிடி. சில்லென்று வந்து கவிந்த ஈரக்காற்றின் மண்வாசத்தைச் சுவாசித்தபடி கருங்கல் பதித்த திண்ணையில் குந்தியிருந்த பாஞ்சாலைக்கும் ராசோக்கியத்திற்கும் மனசெல்லாம் சந்தோஷம்.

மணக்கொல்லையில் அடியெடுத்து வைத்த முதல் நாளிலேயே இப்படியொரு மழையோகம் இருக்குமென்று அவர்கள் எதிர் பார்க்கவில்லை. ஆடிப்பட்ட விதைப்பிற்கான மழை. பத்துப்பொழுது தாண்டிப் பெய்தாலும் தகுதியான மழைதான். சற்று நின்று பெய்துவிட்டால் போதும். உடனடியாக புதிய நிலத்தில் ஒரு சால் ஓட்டி மறுசாலில் விதைத்து விடலாம். ராசோக்கியத்தின் எண்ணத்தைப்போலவே சனிமூலையில் மேலும் சுவர் போல் கருத்து இடியும் மின்னலுமாய்ப் பெருமழைக்கான ஆர்ப்பாட்டம் ரொம்பவும் ஆடம்பரமாய்த் தெரிந்தது.

மெல்ல தூறல் வலுத்து, மழையாய் இறங்க ஆரம்பித்த வேளை, ராசோக்கியத்திற்கு இந்த ஈரத்தில் விதைத்துவிடலாம் என்கிற நம்பிக்கை மட்டுமல்ல, மணக்கொல்லையில் வாழ்க்கையை நிலைநிறுத்திவிடலாம் என்ற உறுதியும் மனசுக்குள் வேர்விட்டது.

பின்னால் கொல்லையின் வேலியில் முள்ளுச் சுள்ளிகளைக் கோர்த்து அள்ளிக்கொண்டிருந்த பூமாவுக்கு, அவள் அவசரத்தைத் தாண்டியும் தலைக்குப் போட்டிருந்த ஈசல் இறகு போன்ற தாவணி வேகமாய் நனைந்து விட்டிருந்தது. மணக்கொல்லைக்கு வரும் போதே முதனையில் கோகாலி போட்டுக்கிடந்த முந்திரி விறகில் கொஞ்சம் வண்டியில் அள்ளிப் போட்டுக்கொண்டு வந்திருக்கலாம் என்று பட்டது. ஆனாலும் மலரை விட்டுப் பிரிகிற வலியில், அதுவும் சதாசிவம் கைவிட்ட ஏமாற்றத்தைத்

தாங்கிக்கொள்ள இயலாது மலர் துவண்டிருந்த சூழலில் இதுபற்றியெல்லாம் அவளால் யோசிக்க முடியவில்லை.

ஆனால் பூமாவிற்கே ஆச்சரியமாகத்தானிருந்தது. முதனையை விட்டுக் கிளம்பும்போது இருந்த வாதனை மணக்கொல்லை வந்து அடியெடுத்து வைத்த அடுத்தகணமே, என்னவோ பழைய வேப்பங்குறிச்சியில் நிற்பது மாதிரி ஒரு பரவசம் பாய்ந்து, எல்லாமும் மறையத் தொடங்கிவிட்டது. அதிகாலையிலேயே வந்து புதுவெள்ளை பூசிய வீட்டில் சந்தனம் பூசிப் பொட்டு வைத்து அறிமுக மில்லாத தெருவு சனங்களை வலிந்துபோய் அறிமுகப் படுத்திக் கொண்டு, அழைத்து வந்து பாலைக் காய்ச்சி ஓடி ஆடி உற்சாகமாய் வேலை. எல்லாமும் முடிந்து சாயந்தரமாய் இப்படி கொல்லையை, கிணற்றைச் சுற்றியடித்துப் பார்த்துவிட்டு வரலாம் என்று வந்தது தான். மேற்கால வேலியில் கிடந்த காரமுள் குச்சிகளைப் பார்த்துப் பொறுக்கி எடுத்துக்கொண்டு போகலாம் எனக் குனிந்தாள். கொளுத்துகிற மாதிரி மதியம் அடித்த வெயிலுக்கு பொசுக்கென வானம் குமுறி இடியும் மின்னலுமாய்... சுளீர் சுளீர் என விழுகிற கனத்த தூறலில் பூமாவுக்கு உடம்பு கூசியது.

குச்சிகளைக் கொடுங்கையாக அள்ளிக்கொண்டு வீட்டை நோக்கி ஓடி வரும்போதே மழை வளைத்துக்கொண்டது. அவள் நனைவது பற்றியெல்லாம் ஒன்றுமில்லை, குச்சிகள் நனைவதுதான் அவளுக்கு வருத்தமாக இருந்தது. நனைந்த குச்சிகளை வைத்து என்னதான் மண்ணெண்ணெயை சொதும்பற ஊற்றிப் பற்ற வைத்தாலும் ஊதி ஊதிக் கண் அவிந்துதான் போகும்.

“ எக்கா... ஓடு... ஓடு..” மழை இரைச்சலில் குரல் கேட்டுத் திரும்பினாள். பக்கத்து வீட்டு செயக்கொடிதான். ஆடுகளின் பின்னால் நனைந்தபடி சொல்லிக்கொண்டு ஓடும் அவளைப் பார்த்ததும், பூமாவுக்கு வேப்பங்குறிச்சியில் பாவாடை சட்டையுமாய் நின்ற, அவளின் பழைய உருவம் மனசுக்குள் வந்துபோனது. இன்றோ நாளைக்கோ என வயதிற்கு வரும் பருவத்தில் செயக்கொடி. கலியபெருமாளின் மகள். காலையில் பார்த்து மதியம் பழகி அந்திக்குள் ‘ எக்கா... எக்கா’வென ஒரு ஒட்டுதல்.

தோட்டத்துத் தகரக் கதவைத் திறந்தபோது திடுமென ஒரு பெரிய இடி. பிடித்திருந்த தகரக்கதவில் இரும்புக் கம்பியால் அடித்தமாதிரி தடதட சத்தம். அச்சிபிச்சியெல்லாம் ஆட்டங் கண்டுவிட்டது. “ அர்ச்சுனா... அர்ச்சுனா...” அவளையுமறியாமல் வாய் அதிர்ச்சியில் உளறியது. நனைந்துகொண்டே, சிமிட்டித் தாவில் வழுக்கி விடாதவாறு பதனமாக

நடந்துபோய்த் தாழ்வாரத்தில் குச்சிகளைப் போட்டாள். குச்சிகளின் நுனியிலிருந்து தண்ணீர் கசிந்து சொட்டிக்கொண்டிருந்தது.

உள்வாசலில் திரும்பவும் நனைந்து நடையைக் கடந்து வெளித் தாழ்வாரத்திற்கு வந்தாள். சோவென மழை. இடையிடையே வீசும் காற்றிற்கு ஏற்ப அலை அலையாகவும் ஓடி ஓடிப் பெய்தது. மேலே போட்டிருந்த சித்தோடுகளின் முனைகளில் நீர்க்கம்பிகளாய் அறுதல் இல்லாமல் தண்ணீர் ஊற்றிக்கொண்டிந்ததைப் பார்க்கப் பார்க்க பூமாவுக்கு ஆர்வம் தாங்கவில்லை. கைகளை நீட்டி உள்ளங்கைகளில் தெறிக்கிற மழைத்துளிகளை ரசித்துக்கொண்டே நின்றாள். உள்ளுக்குள் ஒரே குதூகலம். ஏதோ இவ்வளவு நாளாய் இதையெல்லாம் பார்க்க அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லையே என்கிற மாதிரியான ஏக்கத்துடன் கூடிய ஓர் ஆனந்தம். புதிய வீட்டின் இணக்கமான சூழலை ரசித்துக்கொண்டேயிருந்தாள்.

“ என்னாடி தலயக்கூட தொவுட்டாத....” பாஞ்சாலை திண்ணையிலிருந்து எழுந்து வந்து சத்தம் போட்டாள்.

உள்ளே போய்த் துண்டை எடுத்துத் தலையைத் துவட்டியபடி, நாலாபுறமும் திரையைக் கட்டித் தொங்கவிட்டமாதிரி உள்வாசல் கூரையோடுகளில் மழை விழுதுகள் இறங்குவதைப் பார்த்தாள். இப்படியொரு உள்வாசலுடன் கூடிய அழகான வீடு வாய்க்கும் என்று அவள் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

தெருவிலிருந்து படியில் ஏறினால் தாழ்வாரம். தாழ்வாரத்தை அடுத்துத் திண்ணையுடன் கூடிய நடை. நடையிலிருந்து உள்ளே போனால் சுற்றிலும் பட்டாசாலை போடப்பட்டு உள்வாசல். நடையை ஒட்டி கிழக்கில் ஒரு அறை. அதே நேருக்கு பட்டா சாலையைக் கடந்து தெற்கில் சமையலறை. அதேபோன்று தலை வாசல் நேருக்கு உள் வாசலைத் தாண்டி தோட்டத்திற்குப் போகும் நடை. உள் தாழ்வாரம். தாழ்வாரத்தின் சிதம்பரத்து மூலையில் கூடுதல் அடுப்பங்கரை.

பாஞ்சாலை ஒவ்வொரு இடமாய் ஒழுகுகிறதா என்று பார்த்துக்கொண்டே வந்தாள். எங்கும் சின்ன ஒழுக்கு கூட இல்லை. ஆனால் தரை மட்டும் செங்கல் பதித்து மேலே பூசியிருப்பார்கள் போலும். நாளாவட்டத்தில் சில இடங்களில் சிமிட்டிப்பூச்சு தேய்ந்தும் சிதைந்தும் ஏகத்துக்கும் செங்கல் தரையாகவே தெரிந்தது. திண்ணையில் குந்தியிருந்த ராசோக்கியத்திடம் போய்ச் சொன்னாள் “ இந்த செங்காமுட்டி தரையில எனுமா பாயப்போட்டு படுத்து ஒக்காந்து குடும்பம் நடத்துனாங்களோ. கூட்ட கொள்ள, ஒரு

தண்ணி ஊத்திக் கழுவ ரொம்ப சங்கடமா இருக்கும் போல்ருக்கு.”

“ ரெட்டியாமாருவோ எங்க கீழ ஒக்கார படுக்கப்போறாங்க... இந்தாண்ட படுத்தா கட்லு. இங்காண்ட சாய்ஞ்சா மெத்த. குந்தக் கொள்ள நாற்காலி ஈச்சர்னு நெறயாக் கெடக்கும். அதனால தரையக் கண்டுக்காம வுட்டுட்டாங்க போல்ருக்கு. இப்ப மட்டும் என்னா... வேப்பங்குறிச்சில இருந்த சாணத்தரைக்கி இது எம்மானே மேலு.”

ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொன்னாளே தவிர, பாஞ்சாலைக்கு காலை வைத்தால் சில்லிப்பு பாய்கிற இந்த செங்கல் பாவிய தரை அவளுக்குப் பிடித்தமானதாகவே இருந்தது.

“ இந்த மாதிரி கனமழைக்கிலாம் வேப்பங்குறிச்சியா இருந்தா வூட்டுக்குள்ள ரெண்டு கொடம் தண்ணிய, இந்நேரத்துக்குப் புடிச்சிருக்கலாம்” சொல்லிக்கொண்டே திண்ணையில் குந்திய பூமா வேறு பாவாடை தாவணிக்கு மாறியிருந்தாள்.

பொழுது போகவில்லையென்றாலும், மழை இருட்டு. ஆடு மாடுகள் மழைக்குளிரில் விறைத்தபடி தெருவில் போய்க் கொண்டிருந்தன. எதிர்பாராத மழையால் குடையோ சம்மங்கூடோ எதுவுமில்லாமல் வெறும் தலையில் போட்டிருந்த துணிகள் ஒரு சவ்வைப்போல் ஒட்டிக்கொண்டிருக்க, சனங்கள் புதிதாய்க் குடி வந்திருக்கும் இவர்களைப் பார்த்தபடியே போனார்கள்.

“ என்னாம்மா... வூடு கொல்லலாம் புடிச்சிருக்கா..” பூமாவிடம் ராசோக்கியம் கேட்டார்.

“ எல்லாம் புடிச்சிருக்குப்பா. அண்ணன் மட்டும் நம்ப பேச்ச கேக்கறமாதிரியிருந்தா இந்நேரத்துக்கு அண்ணன், மலருன்னு இன்னும் ரொம்ப சந்தோஷமா இருக்கும்பா.” சொல்லும்போது பூமாவுக்கு நகக்கண்ணில் ஈரம் கோர்க்கிற மாதிரி பொசுக்கென கண்களில் ஈரம் சூழ்ந்துகொண்டது.

வெகுநேரம் வரை யாரும் எதுவும் பேசவில்லை. மழையையே வெறித்துப் பார்த்துக்கொண்ருந்தனர். பிறகு ராசோக்கியமே பேசினார் “ யார் யாருக்கு என்னா எழுதியிருக்குமோ அதுபடிக்கு தான் நடக்கும். வேப்பங்குறிச்சியில பொசுப்பு இல்லன்னு முதனைக்கி வந்தம். வந்த எடத்துல என்னா ஆச்சி. நிம்மதியா இருக்க முடிஞ்சிதா. அந்தக் குடிகாரன் பண்ணன குடும்பத்துக்கு, திடீர்குப்பத்தானுவோ கால்ல வுழாத கொறையா கெஞ்சிக் கூத்தாடி

இருவதாயிரத்தக் குடுத்து இட்டாந்து வுட்டுட்டு, இப்ப இங்க வந்து நிப்பம்னு யாரு கண்டா. நாஞ் சொல்றது இதான். கெட்டம் பொழைச்சம்னு இது மூணாவது எடம் நமக்கு. வந்த எடத்துல அண்ணன் வந்தா நெல்லா இருந்துருக்கும் தம்பி வந்தா நெல்லா இருக்கும்னு மனச போட்டு கொழப்பிக்கிட்டு இருக்காம, சந்தோஷமா பொழுத ஓட்ற வழியப் பாருங்க.” சொல்லி முடிக்கும்போது மழை லேசாய் இடைவெளி விட்ட மாதிரியிருந்தது.

அந்தி மழை விடாமல் திரும்பவும் தொடுத்துக்கொள்ளவும், பூமா போய் விளக்குகளைக் கொளுத்தி வந்து வைத்தாள். பெருமூச்சி விட்டபடி எழுந்த பாஞ்சாலை, தெருவில் போய்க்கொண்டிருந்த நாலைந்து மாடுகள், வண்டிமாடுகள் கட்டியிருக்கும் கொட்டகைக் குள் நுழைந்ததும் அதட்டினாள். அவை வெளியே வராததுமாதிரி தெரிந்ததும் ராசோக்கியம் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு ஓடி விரட்டினார்.

வெளியே போன மாடுகள், போக்குக் காட்டியபடி எதிரே நின்றுகொண்டிருக்கவும், தாழ்வாரத்தில் நின்றபடி மீண்டும் அதட்டிக் கொண்டிருந்தார். அண்டராயர் போட்டுக்கொண்டு தலையில் சாக்கு கொங்காணியோடு மாடுகளின் பின்னால் வந்த ஒருவர், மழை வாசலில் நின்றபடி குளிரில் வெடவெடத்துக்கொண்டே கோபமாகக் கேட்டார் “ வாயில்லா சீவனுவோ மழைக்கு செத்த ஒதுங்கி நிக்கறதுல எடம் என்னா எழைஞ்சாபூடும்... இப்பதான் துப்பாக்கிய புடிச்சிக்கிட்டு கோட்டைக் காவலுக்கு நிக்கிற..”

பாஞ்சாலை ராசோக்கியம் இருவருக்குமே ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. சத்தம் கேட்டு பூமாவும் வெளியே வந்துவிட்டாள். பாஞ்சாலைதான் கடந்து பேசினாள் “ ஏம்ப்பா வண்டிமாடுவோ இதுவளக் கண்டதும் எடாவற மாதிரி சண்டைக்கு நிக்கிது. எல்லாம் பசுமாடுவுளா வேற இருக்குது. கவுத்தகிவுத்த அறுத்துக்கிட்டு முட்டிப் போச்சினா, ஏதாவது செனையா இருந்து சிக்கலாப்பூடும்னு ஓட்டனா.. என்னா நீ இந்த மாதிரி பேசற...”

தொடர்ந்து பேசுவதற்கு இறங்கிய பாஞ்சாலையைக் கையைக் காட்டி அமர்த்திவிட்டு ராசோக்கியம் கொஞ்சம் தணுவாகப் பேசினார் “ சரிப்பா ஏதோ தவறுதலா ஓட்டிட்டன். பசுமாடுவோ மழைக்கி நின்னா போவுதுன்னு வுட்ருக்கலாம். சரி, வுடு, மழையில எதுக்கு நின்னுக்கிட்டு, மாட்ட ஓட்டிக்கிட்டு போப்பா..” ராசோக்கியம் இறங்கியது மாதிரி பேசியதும், அவன் சமாதானமாகி மாடுகளை ஓட்டிக்கொண்டு போனான்.

பாஞ்சாலைக்கு, அவளை அடங்கச் சொல்லிவிட்டு இவ்வளவு தூரம் அவனிடம் இறங்கிப் பேசியது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. பூமா கேட்டே விட்டாள் " என்னாப்பா, மாடுவோ கும்பலா நொழைஞ்சி அதம் பண்ணிச்சி. நீ என்னான்னா திடீர்னு இப்பிடி பயிந்தமாதிரி திருப்பிக்கிட்டு பேசற."

" இனிமே இப்பிடி எறங்கிப் போவத்தான் கத்துக்கணும். முதனைங்கறது வேற. எல்லாம் நமக்கு சொந்தபந்தம். அப்பிடி யிருக்கிற ஊர்லியே ஆறுமுக மொதலி மூணு வருசம்னு காட்டி எழுதன குத்தவைய ஒரு வருசத்துல முறிச்சிட்டான். இது சுத்தமா அறிமுகம் இல்லாத ஊரு. என்னாதான் நம்ப மேல எள்ளுமொகனத்தினி குத்தம் இல்லான்னாலும் சரிதான்னு போவணும். வந்தாரங்குடின்னு கொஞ்சம் மேல கீழதான் பாப்பாங்க பேசுவாங்க. அதோட கொஞ்சம் பச்சையா வெளில வர்றமாதிரி யிருந்தா, வலினா சிக்கல்முக்கல் வந்து சேரும். பதிலுக்கு நாம கொஞ்சம் அவசரப்பட்டுட்டா கூடப் போதும், மேல மேல சிக்கலு வந்து இமிசையதான் குடுக்கும்." எதிர்கொள்ளப் போகும் வாழ்க்கையின் இடைஞ்சல்களைப் பற்றி எச்சரிக்கையோடு சொல்லிக்கொண்டிருந்தார் ராசோக்கியம்.

இருட்டிவிட்டது. ஊற்றிய மழை தூறலாய் குறைந்தது முற்றிலும் நின்று, சாரக்காற்று மட்டும் அடித்துக் கொண்டிருந்தது. திடுமென மின்சாரம் வந்து தெருவிளக்குகள் எரிந்தன. " லைட்டுவுள போடும்மா.." போட்டதும் கம்மலாய் எரிந்துகொண்டிருந்த தெரு விளக்கு வெளிச்சத்தில் பூச்சிகள் சூழ்ந்து பறக்க ஆரம்பித்திருந்தன. வாசலில் நின்றுகொண்டிருந்தவரின் காலடியில், சில்லாடலாய் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. மேற்கில் குளிர் தாங்காமல் குட்டி ஆடு ஒன்று கத்திக்கொண்டிருப்பது கேட்டது.

கிழக்கே கலியபெருமாள் வீட்டை நோக்கி நடந்தார். குறுக்கால் பத்துத் தப்படிதான் இருக்கும். அங்காண்ட வீடு. திண்ணையில் கோவணத்தோடு குந்தியிருந்தவர் இவரைப் பார்த்துவிட்டு, கொடியில் கிடந்த வேட்டியை எடுத்துத் தோராயமாக இடையில் சுற்றியபடி கூப்பிட்டார் " வாங்க.." அவர் மனைவி குங்குமமும் அவரைப் போலவே குள்ளம். இவரைக் கண்டுவிட்டு மடக்கிய கால்களில் கெட்டிக்காப்பு போட்டிருந்தது. அவளும் கூப்பிட்டாள் " வாங்க..."

சொட்டிக்கொண்டிருந்த கூரைத்தண்ணீரின் துளிகள் நாலைந்து மேலே விழ " வர்றங்க..." போர்த்தியிருந்த வேட்டியைத் துண்டாய் மடித்துத் தோளில் போட்டபடி திண்ணையில் போய்க் குந்தினார். போட்டிருந்த அண்டராயரின்

நாடா தொடை இடுக்கில் இறங்கி திண்ணையில் தொங்கிக்கொண்டிருந்தது.

“ எங்க சகலன் சொன்னமாதிரி வேப்பங்குறிச்சாரு நெல்ல ராசியானவர்தாம் போல்ருக்கு. ஊருக்கு வர்றப்பையே நெல்ல வெரப்பு மழையோடதான் வந்துருக்காரு.” உண்மையிலேயே மழையுடன் கூடிய ராசோக்கியத்தின் வருகை, கலியபெருமாள் மனதில் மகிழ்வை உண்டாக்கியிருந்தது.

“ ஏங்க நீங்க வேற, கெடந்த மானம் பேயுது. அதுவும் ஆடியில பேய வேண்டியது, ஆவணியில பூந்து சாத்துது. அது கெடக்குட்டும். ஒரு சத்த ஏரு பாருங்க. கெழக்கால ஒழுங்கிய பக்கம் லேசா செங்கட்டு சேந்த மாதிரி மோடுபரியா இருக்கறத நாளைக்கி ஓட்னாதான் பதமா இருக்கும். எங்க ஏரக் கூட பின்னம் ஒரு ஏரு பாத்திங்கன்னா, ஒரு சாலு ஓட்டி, மறுசாலுக்கு அப்பிடியே நாலு எள்ளக் கெடாசிகிட்டுப் போனா, நாள மறாநாளுக்கு மேற்காலப் பக்கம் கிட்டப்போவும்போது மணல்தர பதத்துக்கு வந்துடும்.” ராசோக்கியம் விதைப்புத் திட்டத்தை சொல்லிக் கொண்டு போனார்.

மழை பெய்த பிறகு கொல்லையைப் போய்ப் பார்க்காமலேயே மண்ணின் தன்மைகளைச் சொல்லும் அவரை வியப்பாகப் பார்த்தார். “ சரி நாளைக்கி காலையில பாக்கறன். அநேகமா ஈரம் அதிகமா இருக்கறதால ஏரோட்டற வேல அரிபுரியா இருக்காது. கெடைக்கும்னு தான் நெனைக்கிறன்.”

“ அக்கா என்னா பண்ணுது...” தட்டில் சோற்றைப் போட்டுவந்து வைத்து குந்திக்கொண்டு செயக்கொடி கேட்டாள்.

“ ஆத்தாளும் புள்ளையும் ஊட்லதான் குந்தியிருக்குதுவோ..” சிரித்தபடி சொன்னவர் கேட்டார் “ தம்பி எங்க...”

“ பால் காய்ச்சன எடத்துல அங்க வந்து தலயக் காட்டிட்டு கௌம்பிப் போனவரு, புதுக்குப்பத்துல எதோ கட்சி கூட்டமாம், பாத்துக்கிட்டு அப்பிடியே வேலைக்கிப் போறன்னுட்டு போனாரு. ராத்திரி பத்து மணிக்கு மேலதான் வருவாரு. மழ வேற, வர்ற வழியில திடீர் குப்பத்து தெடல் பூரா ஏகத்துக்கும் தண்ணியா நிக்கும்.” கலிய பெருமாள் சொல்லிக்கொண்டிருந்தார்.

ராசோக்கியம் எழுந்தார். “ சாப்புட்டு போங்களன்..” குங்குமம் சொன்னாள். “ வாணாங்க, ஊட்ல செய்ஞ்சிருக்குவோ..” வெளியில் வந்தார். மேற்கே வீரன் குட்டைப் பக்கம் தவளைச் சத்தம். மழை பெய்துவிட்டது, விதைப்புக்கு தயாராகுங்கள் என்பதுமாதிரி ‘ தட்டை எடு, மமுட்டிய எடு’ எனக் கத்திக்கொண்டிருந்தது.

சாப்பிட்டுவிட்டு உள்வாசலில் பாய் விரித்து மூவருமாய்ப் படுத்தார்கள். பூமாவுக்குப் புதிய இடம் என்பதால் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள். மலர்கூட இருந்தால், இந்நேரம் காலைத்தூக்கி மேலே போட்டுக்கொண்டு, சிரிப்பும் களிப்புமாகப் பேசிக்கொண்டிருக்கலாம். பிறகு தன்னக்கடந்த தூக்கமாக இருக்கும். வரும்போது அவளைக் கூடவே கூப்பிட்டுக்கொண்டு வரலாம் என ஆசைப்பட்டாள். ஆனால் தன்னைக் கட்டிக்கொள்வான் என்றிருந்த சதாசிவம் மறுதலித்துவிட்ட சூழலில் அவளை இட்டுக்கொண்டு வருவது சரியாக இருக்காது என்பது ஒரு பக்கம். அடுத்து இருபதினாயிரம் கொடுத்து விலாவரி பண்ணி சின்னத் தம்பியை வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிற நிலையில், மலர் வீட்டிலிருந்தால் கொஞ்சம் படிமானமாக இருப்பார் என்கிற நம்பிக்கை. உண்மையில் திடீர்குப்பத்தில் நடந்த தள்ளுமுள்ளுவில் அப்பன் என்று கூடப் பார்க்காமல் செவுளில் விழுந்த மலரின் அடி அவருள் நிறையவே மாற்றத்தை ஏற்படுத்தி யிருந்தது. வீட்டுக்கு வந்தபிறகும் அதன் தாக்கம் குறையாமல் அவளிடம் எச்சரிக்கை உணர்வோடு பேசவும் நடக்கவுமாய் அது வெளிப்படையாகவே தெரிந்தது. நினைவுகள் அறுந்து பூமா கண்ணயர்ந்தாள்.

தூக்கத்தில் காலைத் தூக்கி பாஞ்சாலையின் வயிற்றில் போட்டாள். ‘ பாரு தூணாட்டம் காலத் தூக்கிப்போடறத. மூச்சே நின்னுடும் போல்ருக்கு. எல்லாம் அந்த மலரு புள்ள பாடம்.’ அவளும் புதிய வீட்டில் தூங்காமல்தான் கிடந்திருந்தாள். மேலே போட்டியிருந்த பூமாவின் காலைத் தூக்கி எட்டப்போட்டு, எட்டாக்கையில் நகர்ந்து திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

*

87

சில்லென்ற காலை. சிலுசிலுவெனக் குளுங்காற்று. கிளுவை வேலிக்கும் அப்பால் சிவந்து எழுந்த சூரியனிலும் ஈரநைப்புடன் இளம்வெயில். ஈரத்தரையில் எங்கும் செம்பட்டு நிற பாப்பாத்திப் பூச்சிகள் ஊர்ந்து கொண்டிருக்க, கண்ணில் உயிரை வைத்துக் கொண்டு கட்டை பாய்ந்து கிடந்த புல்பூண்டுகளின் நுனியில் திடுமென ஒரு நம்பிக்கைத் துளிர். வெகுநாள் கழித்துப் பெய்த மழையில் முழுதுமாய்க் களையாறக் குளித்து முடித்திருந்த மரங்களின் தழைகளில் பளீரென்ற பசுமை.

பாஞ்சாலை தாம்பாலத்தட்டில் வத்திக் கற்பூரத்தை எடுத்து வந்து ஏரின் முன்னால் கொளுத்திவிட்டு கிழக்கு பார்த்துக் கும்பிட்டாள். ராசோக்கியம் கற்பூர தீபத்தைத் தீண்டி கண்களில் ஒத்திக்கொண்டு ஏரின் முன்னால் நெடுங்கிடையாக விழுந்து கும்பிட்டார். “ எப்பா... செம்பையய்யா... ஒன்ன நம்பிதான் இங்கியும் வந்துருக்கம். வந்த எடத்தல எந்தக் கொறையும் இல்லாம எங்கள வைச்சி காப்பாத்து.”

ஒழுங்கை ஓரமாகக் கிடந்த முள்முரடுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த பூமாவும் வந்து கும்பிட்டாள். தானும் நெற்றியில் இட்டுக்கொண்டு, மாடுகளுக்கும் இட்டுவிட்டு தட்டை பின்னத்த ஏரில் நின்றிருந்த கிருஷ்ணமூர்த்தியிடம் நீட்டினார். “ நா, இன்னம் பல்லுவாயக்கூட கழுவுல, ஏங்கிட்ட எதுக்கு நீட்ற, நீங்க கும்புட்டா சரிதான்.” வெள்ளை வாயாய் சொன்ன கிருஷ்ணமூர்த்தி கரி படாச்சியை ஞாபகப்படுத்துகிறமாதிரி ஒற்றைக் கோவணத்தில் இருந்தார். அவருக்கும் இவருக்கும் ஒரே வித்தியாசந்தான். அவர் சற்று உடம்பு பூசியது மாதிரி இருப்பார். இவர் ஒல்லி. மனைவி காசியம்மாள் இறந்துபோய்விட்டாலும், இரண்டு மகன்களுக்கும் திருமணமாகி, வந்த மகராசிகள் ரெண்டு பேருமே கிருஷ்ண மூர்த்தியைத் தாங்கு தாங்கு எனத் தாங்குவார்கள். ‘ ஒரு நிமிஷம் ஓய்ஞ்சி ஊட்ல குந்தாம சத்தத்துக்கு வண்டியும், ஏரும் ஓட்டியாந்து போட்டா எவதான் தாங்க மாட்டா..’ தெருவில் பேசிக் கொள்வார்கள்.

மேழியைத் தொட்டுக் கும்பிட்டு ஓட்டினார். மாடுகள் மேய்ந்து மிதிகாலாய்க் கிடந்த தரை. முதல் சால் என்பதால் இறுத்தலாய் மாடுகளுக்கு சற்று சிரமம்தான் என்றாலும் நல்ல ஈரம். பதமான உழவு. இடதுமாட்டைத் தூக்கிஓட்டி ஒழுங்கை ஓர வரப்பைக் கத்தியால் அறுப்பதுமாதிரி

ஓட்டிப்பிடித்து வளைத்து வெலாக் கோலி ஓட்டியபோது மண்ணுக்கு பெரிய மாலைபோட்ட மாதிரி நீள்வட்டத்தில் உழவு கிடந்தது. வெகுநாளாய் மேழியைப் பிடிக்காமல் கிடந்த ஆர்வத்தில், ஓட்ட ஓட்ட ஆசையாக இருந்தது. கொழுவின் இருபுறங்களிலும் மடமடவென அறுபடுகின்ற புல்பூண்டுகளின் வேர்கள், புரள்கிற புதுமண்ணில் நெளிகிற மண்புழுக்கள், கூடவே அடி நடத்திக் கொத்தி இழுக்கிற காக்கைகள். பின்னால் வந்துகொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி சொன்னார் " மொத சாலுதான. ரொம்பவும் இறுத்தாம, எழைக்காம பெரம்புடிபாத்தா ஓட்டு. வெரைச்சி ஓட்றப்ப, ரெண்டாம் சாலுல சேரப் புடிச்சிக்கலாம்."

ராசோக்கியத்திற்கு முதல் சால் இரண்டாம் சால் என்கிற கணக்கெல்லாம் கிடையாது. அவர் உழவு ஓட்டிய கொல்லை யென்றால் குறுக்கே நடந்துபோக எவரும் யோசிக்க வேண்டும். நாலு வெலாவைத் தாண்டுவதற்குள் கால் அசந்து போய் விடுகிற மாதிரி ஆழமாய் நெருக்கமாய் உழவு இருக்கவேண்டும். ஆனாலும் கிருஷ்ணமூர்த்தியின் பேச்சை அவரால் புறக்கணிக்கமுடியவில்லை. நெடுங்கால்களாய் குதிரை உடல் கொண்ட இவரது செட்டித் தாங்கல் மாடுகள் போல் அல்ல அவருடைய மாடுகள். குட்டைக் கால்களும் பெருத்த உடலும் கொண்ட நாட்டு மாடுகள். எவ்வளவு சுமையாக இருந்தாலும் தேங்காது. ஆனால் எட்டி வேகமாய்க் காலை வைக்காது. தன்நடையாய்த்தான் போகும். அழுத்திப் பிடித்தால் ரொம்பவும் செறுநடையாகப் பின்தங்கும். அதட்டி ஓட்டினால், ஈரஉழவில் சீக்கிரம் சோர்ந்துபோகும். சீத்துபூத்துவென இரைத்து நுரை தள்ளும்.

அதோடு காலையில் கலியபெருமாள் டீக்கடையில் பார்த்து இவரை இட்டுக்கொண்டுவந்து விட்டுச் சொல்லியிருந்தார். ' இந்த மணக்கொல்லையில ஒங்களுக்கு ஒரு ஆத்திர அவசரத்துக்கு ஆளா, ஏரா, வண்டியா... ஒதவி செய்றதுக்கு தோதான ஆளு. நெல்ல மனுசன். பாத்து அனுசரிச்சி வைச்சிக்குங்க...' எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டு ராசோக்கியமே சொன்னார். " நீங்க சொல்றமாதிரி பெருக்க புடிச்சி மேலாக்க ஓட்டியாறன். சும்மா எள்ளுக் கெடாசறதுக்கு என்னா கெடக்கு. நீங்க மாட்டுவுள ரொம்ப அலசாம ஓட்டியாங்க.."

கம்பு விதைக்கலாம் என்றுதான் நினைத்திருந்தார். ஊர் ஓரக் கொல்லையாக இருப்பதால், கம்பு என்றால் இந்தக் கிளுவை வேலிகள் தாங்காது. உடனடியாக ஒழுங்கைப் பக்கம் கனத்த வேலி வைக்க வேண்டும். அப்படியே காரமுள்ளாக வெட்டி வந்து கால் முள்ளாக நட்டாலும், கரம்பில்

காலார மேய்ந்து நின்ற பழக்கத்தில் ஆடும் மாடும் வந்து வந்து மூக்கை விட்டுக்கொண்டு தான் நிற்கும். என்றாவது ஒருநாள் நீக்குநிலை கொடுத்து உள் நுழைந்து ருசி கண்டுவிட்டால், பிறகு எந்த வேலியையுமே மதிக்காது. ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒருநாள் மேய்ச்சல் அழிம்பைக் கண்டு பேச்சில் கொஞ்சம் மீறுகிறமாதிரி ஆகிவிடும். ‘ வந்தாரங்குடிப் பயலுக்கு அம்மாம் ஆச்சா..’ வரிந்து கட்டிக் கொண்டு நிற்பார்கள். களை வெட்ட அறுக்க அடிக்க என்று நிறைய ஆட்களும் தேவைப்படும். எள் என்றால் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஒப்புக்கு ஒரு களை தட்டிவிட்டால்கூட போதும். மேலும் போர் சுத்தம் செய்து மோட்டார் போட்டு இறைப்பது ஒரு பக்கம் இருந்தாலும் மழையே இல்லாவிட்டாலுங்கூட, பனி ஈரத்திலேயே நெடுவி பூப்பூத்து செடிக்கு நாலைந்து காய்களை வைத்து விடும். வேலிக்கும் தொப்புமுள் அல்லது பீக்கருவையை வெட்டி வந்து கவைகழியால் கிளுவையின் சந்துக்குச் சந்து தொற்றிவிட்டு விட்டால் கூடப் போதும். மீறி எள்ளுக் கொல்லையில் நுழைந்தாலும், ஆவலத்தில் செடியை, தழையைக் கடித்து அதன் கொழகொழப்பில் விருப்பமில்லாமல், வரப்புக் கட்டைகள் பக்கம் போய்விடும். அதைவிடவும் வேப்பங்குறிச்சி தாய்மண்ணிலிருந்து எடுத்திருந்த விதை எள்ளிலிருந்துதான், தன் பயிர் பச்சையைத் தொடங்கவேண்டும் என்கிற விருப்பமுந்தான், எள்ளைத் தேர்ந்தெடுத்தது.

முக்கால் காணிக்குமேல் மோட்டாங்கால் தரையை முதல்சால் ஓட்டி முடித்து சாப்பிடக் குந்தினார்கள். இவருடையதைப் போல் மோடுபரியான நிலத்துக்காரர்கள் மட்டும் அரிபிரியாக இல்லாமல் ஆங்காங்கே ஏர் ஓட்டிக்கொண்டிருந்தார்கள். உழவில் ஏர் மாட்டை விட்டுவிட்டு சாப்பிடக் குந்தும் இவர்களைப் பார்த்துக்கொண்டே ஒழுங்கையில் போய்வந்து கொண்டிருந்தார்கள் சனங்கள். வாழைத்தார் ஒன்றைத் தூக்கிக்கொண்டு பக்கத்துக் கொல்லைக்காரர் கோபால் போய்க் கொண்டிருந்தார். சாப்பிட்டு முடித்துவிட்டு “ பல்லுக் குத்தறதுக்கு, தா அதுல ஒரு சீவு கிள்ளியாம்மா..” ராசோக்கியம் சிதம்பரத்து மூலைப்பக்கம் ஒழுங்கை ஓர சீவாங்கட்டையைப் பூமாவிடம் காட்டினார்.

கிட்டப் போய் காய்ந்தும் பச்சையுமாக நின்ற சீவுக்குச்சிகளில் ஒன்றைக் கிள்ளிக்கொண்டு இருக்கிற நேரம், திடீர் என்று கிட்டக்க ஒரு சத்தம். திடுக்கிட்டுத் திரும்பினாள். அந்தாண்ட கொல்லையில் கோபால் மகன் பெரிய கத்தியை வைத்துக்கொண்டு நின்றிருந்தவன், இவளைப் பார்த்து லேசாய் சிரிக்கவும் செய்தான். நல்ல வளர்த்தி. முரட்டு உடம்பு. கைலி பனியனுக்கும் தலைக் கட்டுக்கும் விஷமமான சிரிப்புக்கும் பூமாவுக்கு...

பகீர் என்ற ஒரு திகில் நெஞ்சில் பாய்ந்தது. வீச்வீச்சென்று அவனின் அடுத்தடுத்த வெட்டுகளில், கீழே கிடந்த வாழைமரம் துண்டித்துக் கொண்டு போகவும் வெட்டுப்பட்ட மாதிரி திரும்பி சாப்பிடுகிற இடத்திற்கு வந்தாள்.

பாஞ்சாலை கையிலிருந்த விதைப்புப் புட்டியை ராசோக்கியம் வாங்கி சனி மூலையிலிருந்து கிழக்கு பார்த்து கும்பிட்டுத் தொடங்கினார். சீராய் அள்ளி மெல்லிசாய் வீசிக்கொண்டே போனதில் சிலது விதைப்புட்டியில் பட்டும் தெறித்தன. ஏகத்திற்கும் சமமாய் கைவெலா பட்டுவிடாத மாதிரி இரண்டு வீச்சாய் விதைத்துக் கொண்டே போனார். விதைத்து முடித்து மேலே, அண்டராயர் இறுக்கத்தில் என உடம்பில் ஒட்டிக் கிடந்த எள் மணிகளைத் தட்டி, உதறிவிட்டு வந்து ஏரைப் பிடித்தார். “ சும்மா பளுவுகட்ட அடிக்கற மாதிரி மேலாக்க ஒழவு இருக்கணும். இன்னும் ரெண்டு சங்கிலியக்கூட இழுத்துக் கட்டிக்க.” வெகுநாள் பழகின மாதிரி கிருஷ்ணமூர்த்தியின் பேச்சு. மறுப்பு ஏதும் சொல்லாமல் சிரித்துக் கொண்டே “ சரி அண்ண...” ராசோக்கியம் சொன்னார்.

கண்ணாறு விழுந்து விடுகிற மாதிரி சமமாய், படலைக் கட்டி இழுத்ததாய் விதைப்பு உழவு “ பொட்டுஎள்ளு கூட இந்த ஈரத்துக்கு அசகொலையாம மொளைச்சிடும். பயப்படாம இதே சீருக்கு மேல புடிச்சி சேர ஓட்டு..” கிருஷ்ணமூர்த்தி உற்சாகமாய்ச் சொல்லிக்கொண்டே வந்தார். உழவு மேலாக்கப் பிடித்ததில் மாடுகள் இரண்டும் சிரமமில்லாமல் தலைப்பு ஏரைப் பின்தொடர்ந்து போகவும் மகிழ்வு. கிருஷ்ணமூர்த்தி எடுத்தார் பாட்டை.

“ தாயாரும் அழைத்த சேதி, தானுமே அறியவேண்டி

பொற்பல அணிகள் பூண்டு புலேந்திரன் வருகின்றேனே...”

திடுமென எழுந்த பாட்டுச்சத்தத்தில் ராசோக்கியத்தின் மாடுகள் மிரண்ட மாதிரி நடையில் சற்று தாறுமாறாய் வேகம் காட்டின. அதே நேரம் கிருஷ்ணமூர்த்தியின் மாடுகளும் லேசான வேகத்தில், முன்னத்தி ஏரைப் எட்டிப் பிடிக்கிற மாதிரி போகவும் உழவு சில இடங்களில் கோணியது. ஒழுங்கிய பக்கம் போய்க் கொண்டிருந்த கலியபெருமாள் மகன் முருகன் சிரித்துக்கொண்டே கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்துச் சொன்னான் “ கொஞ்சம் மெதுவாப் பாடு பெரிப்பா. மின்னத்த போற மாடுவோ மெரளுது பாரு.”

பட்டென்று மாட்டை அமர்த்தி ஏரை நிறுத்தினார் ராசோக்கியம். ஒழுங்கையிலிருந்து, வழியாய்க் கிடந்த கிளுவைச் சந்து வழியாக உள்ளே வந்தான் முருகன். கலியபெருமாளைவிட உயரம். நல்ல சிவப்பு. எடுப்பான முகவெட்டு. ராசோக்கியமும் சிரித்துக்கொண்டே சொன்னார் “ மாடு

மெரளுது, கொஞ்சம் சீரா பாட்டு இருந்தா தேவலாம்னு நெனைச்சன், அதுக்குள்ள நீ சொல்லிட்டப்பா...”

“ சீரா பாடுனா ஒங்க மாட்டுக்கு நெல்லது. ஆனா பெரிப்பா மாட்டுக்கு பாட்டு சத்தமா இருந்தாதாம் பின்னம் ஒரு அடி எட்டி கால வைக்கும். அவுரு பாட்டக் கேட்டு பழவன மாடுக அதுவோ.”

“ ஆமண்டா ஏம் பாட்டக் கேட்டுக்கேட்டு மாடுவோ ரெண்டும் வேவாக்கொல்ல சின்னத்தொர சமாவுல கூத்தாடப் போவப் போவுது. ஏண்டா நீ வேற, எட்டப் போடா. நீ ஏர ஓட்டுப்பா, வெய்ய ஏறுது.” பொய்யாய்க் கடிந்துகொண்டார் கிருஷ்ணமூர்த்தி.

“ ஏம்ப்பா... வேலைக்குப் போவுல..” ராசோக்கியம் முருகனிடம் கேட்டுக்கொண்டே ஏரை ஓட்டினார்.

“ தே மத்தியானமா போவுணும். நேத்து பண்ருட்டியில கட்சிக்காரரு வூட்ல கல்யாணம். ஒங்க ஊரு அறிவழகன் அப்பறம் சேப்ளாநத்தத்துல இருப்பார செம்பரு.. நெறையாப் பேர பாத்தன்..” கூட வந்துகொண்டே சொன்னான்.

ராசோக்கியத்திற்கு பட்டென்று அவனிடம் ஒரு நெருக்கமும் பிடிப்பும் தோன்றியது.

“ அறிவழகன்லாம் சாதாரண ஆளு இல்லப்பா..” பிரமிப்பாய் சொல்லிக்கொண்டே தலைமாட்டு உழவை ஓட்டித் திருப்பினார்.

“ எல்லாமும் எனக்குத் தெரியும்” அதைச் சொல்கிறபோது அவனுக்குள்ளும் ஒரு பெருமிதம். போய்க்கொண்டிருந்தான். வெயில் ஏறியது.

“ ஈர ஒழவு. மாட்ட போட்டுக்கிட்டு ஒண்ணும் அலச கட்ட வேணாம். நமக்கும் இம்மாம் நாளு கெடந்துட்டு ஓட்றது ஏரக்கூடப் போனியா பேயக்கூடப் போனியாங்கற மாதிரி காலு அசந்துபோவுது. அதோட ஈரமும் ஒண்ணும் அந்தார்லா இல்ல. நாளைக்கி ஓட்டிக் கிலாம். ஒரு பூட்டாவே வுட்டுருவம்.” வெயில் உச்சிக்கு வந்திருந்ததில் ராசோக்கியத்தைக் கேட்காமலேயே மாடுகளைப் பூட்டவிட்டார்.

“ எப்பாடா சாமீ... செம்பையய்யனார... சாமீ.. சாமீ...” ஆச்சலாய்ச் கிடந்தவர் சொல்லிக்கொண்டே எழுந்து குந்தினார். வெயில் லேசாய் சாயத் தொடங்கியிருந்தது. அதற்குமேலும் குந்தியிருக்கப் பிடிக்காமல், கத்தியை எடுத்துக்கொண்டு வீட்டுக்கும் மேற்கால வீரன் குட்டைப் பக்கம் போனார். பீக்கருவை முள்ளை வெட்டி வெட்டி அடுக்கினார். தலையில் துணியைப்

போட்டபடி வந்து அடுக்கியிருந்த மிளார்களை இழுத்துக்கொண்டு ஒழுங்கைப் பக்கம் போட்டாள் பூமா. பொழுது இறங்கத்தொடங்கியதும், ராசோக்கியம் எழுந்து வந்து ஒவ்வொரு முள்மிளாராய் எடுத்து கிளுவையின் சந்துகளில் வைத்து அழுத்திக்கொண்டே போனார்.

பூமாவாகவே போய் மாமரத்தடியில் பார்சட்டம் போன்று கிடந்த ஒன்றை எடுத்து வந்து இரு முனைகளிலும் ஒரு கயிறைக் கட்டி நடுவில் நின்று இடுப்பில் மாட்டி விதைத்த மண்ணில் இழுத்துக்கொண்டே போனாள். மூங்கில் படல் இருந்து போட்டு இழுத்தால், பிற்காலத்தில் களை வெட்ட, தண்ணீர் கட்ட என இன்னும் சமமாக இருக்கும். ஆனால் படலுக்கு இனிமேல் மெனக்கிட்டு கட்டினால்தான். இருந்தாலும் பார்சட்டம் போட்டு இழுப்பதும் அவ்வளவு மோசமாக இல்லை. இழுக்கப்பட்ட இடம் சற்று சுமாராக சமமாகத்தான் தெரிந்தது.

பாஞ்சாலைக்கு ஆச்சரியமான ஆச்சர்யம். வேப்பங்குறிச்சியில் விதைப்புக் காலங்களில் படல் இழுப்பது போன்ற வேலைகளைப் பூமா கூடமாடச் செய்கிறவள்தான். இடையில் முதனைக்கு வந்தவுடன் எல்லாமும் தலைகீழாய் மாறி அது நின்ற நிலைக்கு, பழையபடி இப்போது மூச்சு வாங்க வாங்கப் படல் இழுத்ததைக் கண்டதும் அவளுக்குத் தாங்கவில்லை.

‘ மணக்கொல்லியில அடிய வைச்சதும் பழையபடி இந்தப் புள்ள எக்கட்டானாட்டம் நிக்குது.’ ராசோக்கியம் நினைத்துக் கொண்டே வேலியில் முள்ளைத் தொற்றுகிறார். ஆனாலும் பெருமூச்சு விட்டுக்கொண்டார். வீடும் சற்று வசதியானது என்பதால் தொகை கொஞ்சம் கூடிவிட்டதில் கையில் மடியில் இருந்தது எல்லாமும் போட்டு கிரையம் எழுதி வாங்கி வந்தாயிற்று. இதுவல்லாமல் போர் போட வேண்டும். எல்லாமும் போட்டுப் பார்த்து, பத்து ரூபாய் இந்த நிலத்திலிருந்து எடுத்தால்தான் பூமாவுக்கு கல்யாணம் கில்யாணம் என்று பார்க்கலாம். எல்லாம் செம்பையய்யனார் கையில் இருக்கிறது. அவர் பார்க்கவேண்டும். வேண்டிக்கொண்டார்.

திடுமென ஒரு பத்து ஆடுகளுக்கு மேல் இருக்கும். ஒழுங்கையில் வந்துகொண்டிருந்தன. அடைக்கப்படாமல் இருந்த கிளுவைச் சந்தால் நுழைந்து விதைத்த கொல்லையில் புகுந்து அங்காண்ட மேற்கே கரம்புப்பக்கம் ஓடின. பதறினார் ராசோக்கியம் “ யாருது ஆடு.. யாருது ஆடு... வுடாதீங்க... வுடாதீங்க..” கத்தியபடி ஓடினார். பூமாவும் மறித்துப் பார்க்கிறாள். போக்குக் காட்டிவிட்டு உள்ளுக்குப் போய்க்கொண்டிருந்தன.

ஆட்டுக்காரி நெடுநெடுவென வளர்ந்தவள், இடுப்பில் சீவுக்கத்தை

சொருகல். ஆடி அசைந்து வந்தவள் அலட்சியமாகப் பேசினாள் “ என்னா இப்பத்தான் எள்ளு மொளைச்சி நாலு எலையில நிக்கிது. கடிச்சி வேரோட காளானாட்டம் புடுங்கிட்டுதுன்னு இம்மாம் அடி அடிச்சிக்கிற...”

கொல்லைப் பக்கம் போக வந்த கலியபெருமாள்தான் சண்டை போட்டார் “ தே... புள்ள, ஆடுவோ இன்னைக்கி ஓடற பழக்கத்துல தான் நாளைக்கும் ஓடும். சொன்னா ஓட்றன்னுட்டு போயன். இப்பதான் நாலு எல மூணு எலன்னு எண்ற வேலயில நிக்கிற...”

பதைத்த பாஞ்சாலை கூட, அவர் போட்ட சத்தத்தில் தானும் எதற்கு என்று விட்டு விட்டாள். ஆனால் ராசோக்கியம், கொஞ்சம் தணிந்தே பேசினார் “ இங்க பாரும்மா, வெள்ளாடு மட்டும் வெளஞ்ச கொல்லதான்னு கணக்கு இல்ல, வெதைச்ச கொல்லியில கூட அடிய வைக்கக்கூடாது. செத்த ஒங்களுக்கு ஒரு புண்ணியமாப் போவும். பின்னால ஆடுவோ கூட வந்து வேலியில நொழையாம மடக்கி ஓட்டிக்கிட்டுப் போங்க. அப்பறம் வெளியூர்க்காரன் பொழைக்க வந்தவன், வந்தாரங்குடியான் இப்பிடிப் பேசனான் அப்பிடிப் பேசனான்னு, வம்ப வளத்திகிட்டு நிக்காதீங்க..”

கேட்டுக்கொண்டே போன கலியபெருமாள் திரும்பி கண்டிக்கிற மாதிரி ராசோக்கியத்திடம் பேசினார். “ அட நீ வேற வேப்பங்குறிச்சார... எப்பப் பாத்தாலும் வந்தாரங்குடியான் வந்தாரங்குடியான்னு சொல்லிக்கிட்டு நிக்கிற. இந்த ஒலகத்துல எல்லாரும் வந்தாரங்குடியானுவோதான்.

*

88

வாயெல்லாம் எச்சில் ஒழுகி கண்கள் சொருகி, நெற்றி வியர்வை காலைவெயிலில் மின்ன நிதானமில்லாமல் செல்வி, அவள் அம்மா மல்லிகாவின் கால்களில் சாய்ந்திருந்தாள். கன்னங்கள் ஒட்டி, கண்கள் குடவு கொண்டு அங்கம் மெலிந்திருந்தது. மாராப்பு கோடாய் ஓடி, திரண்டிருந்த மார்கள் தளர்ந்து ஜாக்கெட்டின் உப்பல் துணி கீழ்கொண்டு சுருங்கியிருந்தது. எதிரே கிடந்த வாந்தியில் ஈக்கள் மொய்க்க, தூரத்தில் நாய் ஒன்று மோப்பம் பிடித்தபடி நின்றிருந்தது.

செல்வியின் நெற்றியில் பதிந்துகிடந்த முடிகளை ஒதுக்கிவிட்டு, தண்ணீரால் வாயைத் துடைத்த நேரம் திரும்பவும் ஓக்காளித்தது. அவள் அம்மா சுதாரித்து, மாரில் கிடந்த தாலிக்கொத்தை ஒதுக்கிவிட்டு, ஜாக்கெட்டின் மேல் கொக்கியை நீக்கி வாந்தி வராத வாறு நெஞ்சை நீவிவிட்டுக்கொண்டிருந்தாள். அப்படியும் கொளுக்கென்று வந்துவிட்டது. நீட்டியிருக்கும் செல்வியின் கால்களின் மீது விழாதவாறு, பச்சைத் தண்ணீராய் எடுத்த வாந்தியை கைகளில் வாங்கி எட்டக்க ஊற்றினாள்.

அறிவழகன் விசனத்தோடு கிட்ட வந்தான். அதற்குள் காசாம்பு கண்களில் மினுங்குகிற கண்ணீரைக் கூடத் துடைக்காமல், வெந்நீரைக் கொண்டுவந்து வைத்தாள். சம்பந்தி " வுடுங்க நா தொடைக்கிறன்.." என்று சொல்வதைக் காதில் வாங்காமல் அவளே செல்வியின் வாயில் தண்ணீரைக் கொடுத்து கொப்பளிக்கச் செய்து உமிழச் சொன்னாள். வாயைத் துடைத்துவிட்டு ஆவென்று கிடந்த மாரில் மாராப்பை விரவிவிட்டு " இப்பிடி உள்ள வந்து ஒக்காரு" என்று சொல்லும்போது அவளுக்கும் குரல் கரகரத்திருந்தது.

வதங்கிய கோவைக்கொடியைப் போன்ற அவளைத் தோளில் தாங்கி அழைத்து வந்து படுக்க வைத்தார்கள். அட்டையைப் போல் சுருண்டு கிடக்கும் அவளைப் பார்க்கப் பார்க்க பரிதாபமாக இருந்தது. திருமணத்திற்கு முன்பு இருந்ததை விடவும் உடம்பு சற்று பூசி பார்க்க லட்சணமாக இருந்தவள், ஒரு பத்துப் பதினைந்து நாட்களுக்குள் நொடிந்து நூலாய்ப் பஞ்சடைந்து போய்விட்டாள்.

" ஏம்ப்பா எடுஎடுன்னு ஒடல் தங்காம, இப்பிடியே எடுத்துக் கிட்டு இருந்தா எப்புடிப்பா. திரும்ப ஒரு தடவ ராமச்சந்திரங் கிட்டையாவது இல்ல அந்த கலா கிட்டயாவுது இட்டுக்கிட்டுப் போவுமாப்பா.." காசாம்பு அழுதுவிடுவாள்

போலிருந்தது.

சம்பந்தி மல்லிகாதான் சளைக்காமல் மறுத்துப்பேசினாள். “ ஏங்க... ஒண்ணுமில்லிங்க. செல புள்ளிவுளுக்கு வவுத்துல அந்த ஈரம் ஓடிப்பரவி, ஒரு எடத்துல தங்கற வரைக்கும் இப்பிடித்தாங்க ஓடல் தங்காம ஏத்தம் போட்டு எறைக்கற மாதிரி எடுஎடுன்னு எடுத்து, வவுத்த பெரட்டிக்கிட்டு கெடக்கும். தே இந்த மாசத்துல மீதி இருக்கிற நாலைஞ்சி நாளு வரைக்கும் அப்பிடித்தான் இருக்கும். அப்பறம் சரியாப் பூடும்.”

“ இல்லிங்க, ஆயிரமே மொழுவாம இருக்கறப்ப வாந்தி எடுத்தாலும் இப்புடியா போட்டு வதைக்கும்..” சொல்லிக்கொண்டு இருக்கும்போதே திடுமென ஞாபகம் வந்தவள்போல் சொன்னாள் “ ஏம்ப்பா இதுலாம் காடுமோடா கெடந்த எடத்த திருத்தி வூட்ட கட்டிக்க வுட்டானுவுள, எடத்துல ஏற்கனவே காத்துச்சேட்டை எதாவது இருந்து புள்ளய தொடர்ந்துகிடந்து போச்சா... வேண்ணா தொப்புளிகுப்பத்து நடேசன இட்டாந்து ஒரு பாடம் போட்டு பாப்புமாப்பா...” காசாம்பு, மருமகள் படும் வதையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் ஏதேதோ சொன்னாள்.

அதற்கும் சம்பந்தியே அணை போட்டாள் “ ஏங்க நீங்க பயப்படறமாதிரிலாம் ஒண்ணுமில்லிங்க. எங்க பக்கத்து வூட்டுப் புள்ளைக்கு இதே மாதிரிதான். ஒரு பத்துப் பாஞ்சி நாளு வாட்டி எடுத்து ஒடனே சரியாப் பூட்டுதுங்க...”

அறிவழகன் என்ன சொல்வதென்று புரியாமல் நின்று கொண்டிருந்தான். செல்வி முழுகாமல் இருக்கிற சேதியைக் கேட்ட திலிருந்த முதல் சந்தோஷம், அவள் படுகிற பாடுகளைப் பார்த்துப் பார்த்து முற்றிலுமாய் மரத்துப் போய்விட்டது. இப்போதே இப்படியென்றால், நிறைமாதத்தையெல்லாம் எப்படித் தாங்கப் போகிறாள் என்பதை நினைக்கும்போது அவனுக்குத் திகிலே கண்டுவிட்டது.

வெளியே குந்தியிருக்கிற ரங்கநாதுக்கு மனசே சரியில்லை. ஏதோ பொட்டைப்பிள்ளைகள் முழுகாமலிருக்கும் போது வாந்தியெடுக்கும் போகும். ஒரு மாங்காய், எலுமிச்சை ஊறுகாயைத் தொட்டுக்கொண்டு கஞ்சி, தண்ணீரைக் குடித்தால் சரியாகிப்போகும். ஆனால் இப்பிடிக் குடும்பமே பதறுகிறமாதிரி, பச்சத்தண்ணீர்கூட குடலில் ஒட்டாமல் வாந்தியெடுத்து கண தாண்டிக் கிடந்தால்... “ நா வேண்ணா நடேசன போய் பாத்துட்டு வர்றம்பா...” கேட்டார்.

“ இருங்க. ரவ சாப்புட்டு போங்க..” சம்பந்தியின் குரல் அவர் காதில்

விழவில்லை. தெருவில் இறங்கிப் போய்க்கொண்டிருந்தார்.

அறிவழகன் செல்வியின் தலைமுடியைக் கோதியவாறு பக்கத்தில் குந்தியபடி கேட்டான் " வேண்ணா ஆஸ்பத்திரிக்கு போய்ட்டு வருவமாப்பா..."

அவளிடமிருந்து " உம்... ஆம்" என்று எந்த சத்தமும் வரவில்லை. மாறாக கோதிக்கொண்டிருந்த அவன் விரல்களைக் கையில் அழுந்தப் பிடித்தாள். வலுவற்ற அவளின் கையில் லேசான சூடும் நடுக்கமும் தெரிந்தது.

" எப்பிடியிருக்குன்னு பாத்துட்டு நாளைக்கி வேண்ணா போவலாம்.." மல்லிகா சொன்னதும், வலிந்து அவளின் கையை எடுத்துவிட்டு எழுந்தான்.

" சரி பாருங்க, டிரைவர் வேற வந்துருக்கானோ எனுமோ தெரியில.." சொல்லிவிட்டுக் கிளம்பினான். ஆனால் எடுத்த அடி வைத்து வெளியே வர அவனுக்கு மனமேயில்லை. காசாம்பும் அதற்குமேல் காய் காய் என்று காய்ந்தாள். " என்னாடா தம்பி, ஊரு உலகத்துல இல்லாத லாரி வாங்கிட்ட. புள்ள பசலக் கொடியாட்டம் கெடந்து தவிக்குது. சட்டைய கயிட்டி கெடாசிட்டுப் போற மாதிரி போற..."

பதிலுக்கு ஏதும் சொல்லாமல் வெளியே வந்தான். உண்மையில் இந்த லாரி வாங்கிய பிறகு கைகால் பிரிந்து எந்த வேலையையுமே செய்ய முடியவில்லை. வீட்டிலும் என்ன நடக்கிறது போகிறது என அக்கறை எடுத்துக்கொள்ள முடியவில்லை. முக்கியமாய் கட்சி, சங்கம் என்று கூட்டத்திற்குப் போய் தலையைக் கூட காட்ட முடியவில்லை.

ஒரு கல்யாணத்திற்கு வந்த ஜி.ஆர் டாக்டரும் இவனையும் சிகாமணியையும் பார்த்து சொல்லி வருத்தப்பட்டார். " என்னாப்பா ஆயிரமே வேலை கெடைக்கிலங்கிற வருத்தம், குடும்ப சூழ்நெல சரியில்லங்கறதா இருந்தாலும் ரெண்டு பேருமே சொல்லி வைச்ச மாதிரி கட்சிய பத்தி காதுல போட்டுக்காம பாராமுகமா இருந்தா என்னா அர்த்தம்பா. இதுலாம் அய்யா காதுக்குப் போனா என்னா நெனைப்பாரு..."

சிகாமணி கூட கூட்டத்திற்குப் போக முடியவில்லையென் றாலும் செம்ப படையாட்சி, உத்தண்டராயர் எனப் பார்த்தாவது அவ்வப்போது விசாரித்துக் கொள்வான். இவனுக்குத்தான் முற்றாய் அதற்கு வாய்ப்பே இல்லை. அதுவும் அண்மைக்காலமாய், கரி லோடு போவது ரொம்பவும் நட்டமாகப் படுவதில் பெரும் மனச்சிக்கல். நெடுந்தொலைவு ஓட்டுக்கு வண்டி தாங்கவில்லை. ஜாயிண்டு, கியர்பாக்ஸ், கிரவுண், டயர் என ஒவ்வொரு

நாளும் இருப்புக் கட்டுகிற காசிற்கு வேலை வந்து வெறுங்கையாய்ப் போய்க்கொண்டிருந்தது.

அதைவிடவும் வண்டி ஓட்டுகிற டிரைவர்கள்! நாட்கள் ஆக ஆக கணக்கு வழக்கிலும் கொஞ்சம் கைவைப்பது மாதிரி அல்லுபுள்ளி காட்டுவதாய் உதைத்தது. அதுபற்றி ஊனாடி, கடந்து கணக்குக் கேட்டால், எதாவது இடைஞ்சல் பண்ணிவிடுகிறார்கள். போன வாரம், லெக் பட்டன் கொண்ட புது டயர் சாலையோரம் நீட்டியிருந்த ஆங்கிளில் வேண்டுமென்றே குத்தி, செருப்பு அடி அட்டைக்குப் போடக்கூட ஆகாதமாதிரி கந்தலாய்க் கொண்டு வந்துவிட்டான். ‘ ஓம் பொருளுன்னா, இப்பிடிச் செய்வியா... ஆறாயிரம் ரூவா போட்டு வாங்கன டயராச்ச...’ கேட்டதிற்கு ஒரே வார்த்தையாய் சொல்லிவிட்டுப் போய்விட்டான். ‘ நோண்டி நோண்டி அறங்கணக்கு பொறங்கணக்கு பாக்கற ஓங்கிட்டலாம் மன சம்மதமில்லாம வண்டி ஓட்டனா இப்பிடித்தான் ஆவும். நீ யாரையாவது வைச்சி வண்டிய ஓட்டிக்க...’

புதிதாய் வருகிற எவனையும் எடுத்த எடுப்பில் நல்லவன் கெட்டவன் என்ற அறுதியிட்டுப் பார்க்க முடியவில்லை. பத்துப் பொழுதுபோன பிறகுதான் உள்முகம் தெரிய வருகிறது. அதற்குள் ஒரு சுருட்டுச் சுருட்டி விடுகிறான்.

கடந்துதான் இனி வெளி ஓட்டுத் தேவையில்லையென முடிவெடுத்து செம்ப படையாட்சி அறிமுகத்தில் சேப்ளாநத்தத்தில் ஒரு செங்கல் சூளையில் நாள் வாடகையில் பேசி ஓடிக்கொண் டிருக்கிறது. பணப்புழக்கம் டிரைவர் கைக்குப் போகவில்லை யென்றாலும், அந்த வெறுப்பை வண்டி ஓட்டில் காட்டி விடுவார் கள் எனக் கிட்டக்க போய் இருப்பான். சமயத்தில் இவனே நடை எடுத்துப் போய்வருவதால் வீட்டுப் பக்கம் அதிகம் கவனம் எடுத்துக் கொள்ளமுடியாத சூழல். இந்த இக்கட்டில்தான், செல்வியின் இந்தப் பாடு. அறிவழகன் கூழில் விழுந்த ஈயாய்த் தத்துளித்துக் கொண்டிருந்தான்.

குழப்பத்தோடு டிவிஎஸ் **50** ஐ தள்ளிக் கொண்டு தெருவிற்கு வருகிற நேரம், திரும்பவும் வாந்தியெடுக்கிற சத்தம் “ ஓவ் ஓவ்...” என்று கேட்கவும் தேங்கி நின்றான். அதோடு “ எம்மா... எம்மா.. செல்வி...” பதட்டத்தோடு குரல் கேட்கவும், படாரென்று வண்டியை ஸ்டேண்டு போட்டு விட்டு வீட்டுக்குள் ஓடிவந்தான்.

உடம்பெல்லாம் தொப்பரையாய் வேர்வையில் நனைந்து, வாந்தியெடுத்து படுக்கையில் நிதானமில்லாமல் கிடக்கிறாள். தூக்கி, அவளைக் குத்தவைத்து முகத்தில் தண்ணீரை அடித்துப் பார்க்கிறார்கள். மூச்சுப்பேச்சு

எதுவுமில்லாமல் தலை துவண்டது கண்டதும் காசாம்பும் மல்லிகாவும் கத்தவும் முத்துக்கண்ணு ஆயி, செல்லப்பாங்கி எல்லாமும் ஓடி வந்துவிட்டார்கள். இதற்குமேலும் இங்கு வைத்திருப்பது சரியில்லையென வண்டியை எடுத்துக்கொண்டு போய் ஆட்டோவை இட்டுக்கொண்டுவந்து தூக்கிப்போட்டு ராமச்சந்திரனிடமே போனார்கள்.

ஆஸ்பத்திரியில் தேரும்திருநாளுமாய்க் கூட்டம். வெளியில் பெஞ்சில் குந்த வைத்துப் பிடித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, உள்ளே கூட்டத்திற்குள் போய் நின்று எக்கி தலையைக் காட்டினான். டாக்டர் பார்த்துவிட்டார். " என்னா வேப்பங்குறிச்சி சிங்கம் எட்டிப் பாக்குது..."

" வீட்லதான் சார் ரொம்பவும் முடியில. மயக்கமா இருக்கு சார்..." இரைச்சல்களுடே சொன்னான்.

" கொண்டாங்க.." ஒரு தடவை ஒருவரைப் பார்த்துவிட்டால், அவர்களின் நோய்நிலைமையை, குணநலன்களை மறக்காமல் ஞாபகம் வைத்திருப்பவர், சாதாரணமாகச் சொன்னார்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு வந்து, முன்னால் குந்த வைத்தார்கள். தலையை நிமிர்த்தி, இமைகளைத் திறந்து பார்த்தார். முன்னும் பின்னும் டிகிரி வைத்து பார்த்தார். " ஒண்ணுமில்ல. பயப்படாதீங்க. உள்ள இட்டுக்கிட்டுப் போயி படுக்க வைங்க..."

அறிவு குரல் கம்ம சொன்னான் " சுத்தமா பச்சத் தண்ணிகூட ஒடம்புல ஒட்லிங்க..."

" பொண்டாட்டி மேல ஓவரா பாசம் வைச்சா இப்பிடித்தான் வாந்தியெடுக்கும்.." சிரித்துக்கொண்டே நர்சுகளிடம் திரும்பினார். " எழுதுங்க..." சரசரவென மருந்துகளை, மேற்கொள்ளவேண்டிய சிகிச்சைகளை சொல்லிக்கொண்டிருந்தார்.

*

89

அந்தி வெயில், பசி நேரம் வேறு. வேலையும் ரொம்ப கடுமை. அலுத்துப் போயிருந்தது சிகாமணிக்கு. மந்தாரக்குப்பம் நோக்கி வர வர எதிர்மேடாக இருந்ததால் எகிறி எகிறி மிதிக்க வேண்டி யிருந்ததில் வேர்த்து விறுவிறுத்து மூச்சு வாங்கி மயக்கம் வருகிற மாதிரி இருந்தது. பேருந்து நிலையம் தாண்டி ரோட்டுக்குத் திரும்பியதும் ஏதேச்சையாகத்தான் பார்த்தான். பள்ளிக்கூடத்திற்கு எதிரே இங்காண்ட மளிகைக் கடையில் உத்தண்டராயர் யாருடனோ பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

‘ சரி பார்த்துவிட்டு வரலாம்...’ என சைக்கிளை நிறுத்தி, ரோட்டின் குறுக்கே தள்ளிக்கொண்டு போனவன், அவரிடம் பேசிக் கொண்டிருந்தவளைப் பார்த்ததும் வெறுத்து அப்படியே நின்று விட்டான். எலுமிச்சையில் இருக்கும் சின்ன அத்தை கம்சலா தான். இவனுக்கு வயிறு எரிந்தது. ‘ மகராசி அரிஓம்னு ஒரு வழக்க போட்டு என்ன இப்பிடி நடுரோட்ல நிக்க வைச்சிட்டிய.’

“ ஏம்ப்பா.. ஒண்ணு இந்தாண்ட போ இல்ல அந்தாண்ட போ. ஒண்ணுலியுமில்லாம இப்பிடி நடுரோட்ல நின்னா என்னா அர்த்தம்...” மோட்டார் சைக்கிள்காரனின் அதட்டலில் இயல்புக்கு வந்து சைக்கிளைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு ஓரத்தில் புளியமர மறைவிற்கு வந்தான்.

வெகுநேரம் நின்றுகொண்டிருந்தான். கம்சலா எதோ முக சொடுக்கமாக சொல்லிக்கொண்டு நிற்பதை உத்தண்டராயர் மௌனமாகக் கேட்பது தெரிந்தது. பிறகு அவள் கிழக்கே பேருந்து நிலையம் பக்கம் போகிற வரை நின்றுவிட்டு, மேற்கே திரும்பிக் கொண்டிருந்தவரிடம் போய் நின்றான்.

“ ஒனக்கு ஆயுசு நூறுப்பா... இப்பத்தான்..” உற்சாகமாகச் சொன்னார்.

“ பாத்துக்கிட்டுதான் இருந்தன்..” தளர்ந்தமாதிரி சொன்னவன், டீக்கடை பக்கம் இட்டுக்கொண்டு வந்தான்.

டீ குடித்துக்கொண்டே சொன்னார் “ அதாம்பா. ஒனக்கு வேல கெடைக்காம போனதுக்கு தாந்தான் காரணமாயிட்டாங்கறத சொல்லிச் சொல்லி ரொம்ப வருத்தப்படுது.”

தொடர்ந்து சொல்வதற்கு முயன்றவரை மறித்துப் பேசினான். “ நெசந்தான

அண்ண. இது கிண்டுலன்னா நிர்வாகத்துல யார் யாருக்கு என்னா சிக்கலு இருக்குன்னா பாக்கப்போறான். வாய்ச் சோறு அண்ண. இன்னைக்கி ஊருல, ஆனா ஆவன்னா தெரியாத வங்கூட கைநெறையா சம்பளம் வாங்கிக்கிட்டு ராசா வாட்டம் இருக்கறான். இங்க பாரு அண்ண..” காய்ப்புக் காய்த்துக் கருத்திருந்த உள்ளங்கைகளைக் காட்டியபடி ஆத்திரமாகச் சொன்னான் “ வெய்ய நேரத்துல இரும்பத் தொட்டா அப்பிடியே கொதிக்குது. அனல்ல பொழுதேறிக்கும் நின்னு நின்னு கண்ணாலேயே ஆவி பிரிஞ்சுடும் போல்ருக்கு...”

சற்று நிறுத்தி தொடர்ந்து சொன்னான் “ அதோட வூட்டுக்கு வந்தா வூட்ல இருக்கிற அம்மாளுக்கு அதுக்குமேல.. ஊத்தாங்கால்ல இருக்கற அந்தப் புள்ளய கொண்டாந்து நிறுத்துலன்னு அது மூஞ்ச தூக்கி மோட்டுவளையில வைச்சிக்கிட்டு நிக்குது. அவன் எம்பளாய்ஸ் மாப்பிள்ளைக்கிதான் குடுத்தே ஆவணும்னு அதே மாதிரி மாப்பிள்ளையும் பாத்து நிச்சயம் பண்ணுன புள்ளய எப்படிப் போயி நாம கேக்கறது? அதோட காண்ட்ரேட்ல வேல செய்ற நமக்கு எப்படித்தாங் குடுப்பான். அது முடிஞ்சும் போச்சி. அதுலேர்ந்து ஏங்கிட்ட சரியாப் பேசறது இல்ல....”

பதிலேதும் சொல்லாமல் கேட்டுக்கொண்டு நின்றார். கடந்து பேசினான் “ எல்லா யாராள அண்ண. எல்லா இதாலதான். அப்பிடியே சொத்துபத்துல வேணுமின்னாலும் குறுக்கால ஒங்கள மாதிரி யாருகிட்டயாவது சொல்லிக் கேட்ருந்தா, நானே தலயச் சுத்திவுட்டு கெடாசிருப்பன் இல்ல. சீவுக் குச்சால நிண்டற மாதிரி நிண்டிவுட்டு பணத்த கெப்பிக்கிட்டு வுட்டுட்டது. நிர்வாகத்துல நொண்டி மாட்டுக்கு சறுக்குவது வாட்டம்னு என்ன நடுரோட்ல நிக்காத கொறயா வுட்டுட்டான்...”

மனதில் கிடந்ததையெல்லாம் அவன் பேசிவிட்டு ஓய்ந்தபிறகு உத்தண்டராயர் சொன்னார் “ என்னான்னு தெரியில. ஒன்ன ஒருநாளைக்கி வூட்டுக்கு வரச் சொல்லிச்சிப்பா.”

சிகாமணி உதைத்தது. ‘ எதற்கு’ என்கிற மாதிரி சந்தேகமாக அவரைப் பார்த்தான்.

“ ஏதோ மனங்கெட்டாப்ல சொல்லுது. என்னாதான் சொல்லுதுன்னு செத்த போயி பாத்துட்டுதான் வாயன். பாவம், பொட்டப் புள்ள...” அழுத்தமாகச் சொன்னார்.

“ ஆமா இதுக்கமேல யாரு போயிதான் என்னா ஆவப்போவுது போ. வாங்க அண்ண போவும்.”

பின்னால் குத்த வைத்து மிதித்துக்கொண்டு போனான். புதுவேப்பங்குறிச்சி திரும்புகிற நேரம், வந்துநின்ற பேருந்திலிருந்து செல்லப்பாங்கியும் முத்துக்கண்ணு ஆயியும் இறங்கினார்கள். “ எங்கயோ போய்ட்டு வர்றீங்க...” இறங்கியபடி உத்தண்டராயர் கேட்டார்.

“ நம்ப அறிவு தம்பி பொண்டாட்டி செல்விக்குதான், குளிக்காம இருக்கறதுல ரொம்ப ஒடம்பு சரியில்லாமப் போயி, முந்தா நாளு நம்ப ராமச்சந்திரங்கிட்ட சேத்துருக்கு. அதாம் போயி பாத்துட்டு வரம்.” முத்துக்கண்ணு ஆயி சொல்லிக்கொண்டே போனாள்.

இருவருக்கும் ஒரு மாதிரியாகப் போய்விட்டது. உத்தண்ட ராயர்தான் சொன்னார் “ என்ன நேரங்காலமோ அவனப் பிரிகட்டி அடிக்குது போ. வூட்ல ஒடம்பு சரியில்ல. இந்த மருந்த கொண்டு போயி குடுக்கணும். இல்லன்னாக்கூட ஓடி பாத்துட்டு வரலாம்.”

சிகாமணியும் சொன்னான். “ சரி அண்ண. நானும் வேலைக்கி போய்ட்டு இந்நேரத்துக்கு வர்றன். நாளைக்கே போய் பாத்துட்டு வருவம்.”

பொழுது இறங்க இறங்க, லாரி பஸ்களுக்கு ஆவேசம் வந்தது போல் வேகமாய்ப் போய் வந்து கொண்டிருந்தன. பழைய வேப்பங்குறிச்சி போகிற பள்ளிச்சாலை தாண்டி வளையமாதேவி போகிற குறுக்கு ரோட்டுக்கு அங்காண்ட மகாலட்சுமி மருத்துவமனை நோக்கி சைக்கிள் போய்க்கொண்டிருந்தது. பின்னால் உத்தண்ட ராயர்.

எகிறி எகிறி மிதித்துக்கொண்டு வந்த சிகாமணி எதிரே கூட்டத்தைப் பார்த்ததும் வேகத்தைக் குறைத்து நிறுத்தினான். பதற்றமும் இரைச்சலுமாக கும்பலுக்கும் அங்காண்ட பக்கம் லாரி ஒன்று நின்றுகொண்டிருந்தது. சைக்கிளை நிறுத்தி விட்டு கும்பலை விலக்கிக்கொண்டு உள்ளே போனார்கள். லாரியின் சக்கரத்தில் சைக்கிள் ஒன்று நசுங்கிக் கிடந்தது. அது கிடந்த வாட்டத்திற்கு... வந்தவன் நிச்சயம் போய்ச் சேர்ந்துதான் இருக்கவேண்டும் போல் தோன்றியது.

பக்கத்தில் கையில் காலில் மட்டும் ரத்தக்காயங்களோடு, மயக்கமாய், ஒருவன் காலில் சாய்ந்திருந்தான். “ மொதல்ல தண்ணிய குடுங்கப்பா...” அவசரமாய் நீட்டிய செம்பை வாங்கி, அவனிடம் குனிந்தார் உத்தண்டராயர். குப்பென்று தண்ணி வாடை அடித்தது.

“ தே ஆட்டோ வந்துட்டுது... தூக்குங்கப்பா..” பக்கத்திலிருந்த சி. ஆருக்கு ஆட்டோ பறந்தது.

“ லாரிக்காரப் பயலுவோ என்னா தெனாட்டல் மயிருமேல ஓட்றானுவோ தெரியுமா.” யாரோ சொல்லிக்கொண்டு இருக்கும்போது போலீஸ்காரர் வந்து நின்றார்.

“ யோவ் எட்டத்தப் போங்க... கும்பலக் கலைங்க..” விரட்டியபடி “ யோவ் டிரைவர் எங்கப்பா?” லத்தியால் லாரியின் கதவைத் தட்டினார்.

“ ஆமா. ஆள அடிச்சிப் போட்டுட்டு டிரைவரு வண்டியில தாங் குந்திருப்பான்...” யாரோ சொல்லவும் காவல்துறைக்கு கடுப்பாகிவிட்டது.

“ கும்பலக் கலைங்கன்னா, சும்மா சட்டஞ்சரா பேசிக்கிட்டு...” லத்தி கோபத்தில் சுழன்றது.

அந்தக் கூட்டத்தில் சிகாமணியைப் பார்த்த காவலர், லேசாய் புன்னகைக்கவும், ஒரு வணக்கம் விழுந்தது அவருக்கு. “ ஏங்க ஓங்க கட்சிக்காரங்க லாரிதாம் போல்ருக்கு...” சொன்னார்.

நிமிர்ந்து லாரியை பார்த்த சிகாமணி இடிந்து போய் விட்டான். நெற்றியில் ‘ அறிவு.’

அவசரமாய் மருத்துவமனைக்கு ஓடி அறிவழகனைத் தேடி விசாரித்தார்கள். காலையிலேயே வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டதாகச் சொன்னதும், வரும்போதே வீட்டில் பார்த்து விட்டு வந்திருக்கலாமே என்று இடித்தது. சேதி கிடைத்ததும். அறிவு அலறியடித்துக்கொண்டு வராத குறையாய் வந்து சேர்ந்தான்.

மூவருமாய் லாரிகிட்டே ஓடினார்கள். சைக்கிள் அதே இடத்தில் நசுங்கியபடி கிடந்ததும் அறிவழகனுக்கு மூச்சே நின்று விடும்போல் இருந்தது. நேரே சி.ஆர். மருத்துவமனைக்குப் போனார்கள்.

“ ஆளுக்கு சீரியசா இருக்குன்னு, கோரிமேடு இட்டுக்கிட்டுப் பூட்டாங்களாம். இப்பதான் வேன் போவுது” சொன்னார்கள்.

“ அப்படி ஒண்ணும் சீரியசா இல்லிய... கைகால்லதான அடி..” சொல்லிக்கொண்டிருந்த சிகாமணிக்குப் பதில் சொல்ல யாருமில்லை.

வேதனையோடு லாரியை நோக்கித் திரும்புகையில் சுத்தமாய் இருட்டிவிட்டது. லாரிக்கும் முன்னால் டீக்கடையில் நின்று கொண்டிருந்த போலீஸ்காரரிடம் உத்தண்டராயர் கேட்டார் “ என்னா சார், காயம் ஒண்ணும் மோசமாயில்லங்கறாங்க. எனுமோ சீரியசா இருக்குன்னு கோரிமோடு

பூட்டாங்களாம்.”

“ கட்சி கலர்ல பேரு எழுதிவைச்சா செல நேரத்துல இப்படித் தான், சிக்கல்ல கொண்டுபோயி வுடும். அதோட வண்டியப் பாருங்களன். ஒரு போன் பண்ணிட்டு வருவம்னு பக்கத்தில கடைக்குப் போய்ட்டு வர்றதுக்குள்ள..” லத்தியால் காட்டினார்.

அதிர்ந்து போய்விட்டார்கள். முன் கண்ணாடிகள் இரண்டும் உடைக்கப்பட்டு, கீழே சில்லை சில்லையாய்க் கொட்டிக் கிடந்தவை எதிரே வரும் வாகன வெளிச்சத்தில் மின்னின. காவலர் உத்தண்ட ராயரிடம் சொன்னார் “ மொதல்ல டிரைவர லைசென்ச எடுத்துக் கிட்டு போலிஸ்டேசன் போவச் சொல்லுங்க... இங்கயே வண்டி நின்னுக்கிட்டு இருந்தா மேலமேல எதுனா சிக்கலாப் பூடும்.”

லைசென்சு என்றதுமே அறிவழகனுக்கு மேலும் திக்கென்றது. இரண்டு நாளைக்கு முன்புதான், மணகதி ஊர்ப் பையன் வண்டிக்கு வந்து கேட்டான். வெள்ளையன் லாரி ஆபிசில் ஓட்டிக் கொண்டிருந்த போது பழக்கம். “ சரி ஓட்டு” என்று சொன்னான். லைசென்சு ரெனிவல் போயிருக்கிறது, பிறகு வந்ததும் தருவதாகச் சொல்லி யிருந்தான். பிறகு கேட்டு வாங்க வேண்டும் என்று நினைத்திருந்தது, மறந்துபோனது... உதைக்க ஆரம்பித்தது.

*

90

“ லாரி சைக்கிள்காரம் மேல மோதிட்டுதுன்னு அறிவழகனப் புடிச்சி உள்ள வைச்சிட்டானுவோ. அதோட குறுக்கால சனி ஞாயிறாப் போனதால நேத்துதான் ஜாமீன்ல எடுக்க முடிஞ்சிது...”

விருத்தாசலத்தில் டாக்டரைப் பார்க்க வந்த செம்ப படையாட்சி சொன்னதிலிருந்து இரண்டு நாளாய் மனசே ஆறவில்லை ராசோக்கியத்திற்கு. சேதி கேள்விப்பட்டதிலிருந்து பாஞ்சாலையும் வேப்பங்குறிச்சி போய் அறிவழகனைப் பார்த்து விட்டுத்தான் வரவேண்டும் என மனம் கேட்காமல் புலம்பிக்கொண்டு கிடந்தாள். ஆனால் இருவருக்குமே, ஆத்தாள் அப்பன் சொந்தம் பந்தம் எதுவுமே தேவையில்லையெனத் தூக்கியெறிந்து பேசிவிட்ட மகன்காரனின் தலைகடையை மிதித்துக்கொண்டு அங்காண்ட எப்படிப் போவது என்கிற ஒரே மனக்குழப்பந்தான்.

பாஞ்சாலைதான் துணிந்து முடிவெடுத்தாள். “ அவங் கெடக் கறான் சடையன். நம்ப பாத்து வளந்தது, நம்ப கிட்ட சேம்பரிக் குதுங்கறதுக்காக ஊருக்கு ஒழைச்ச புள்ளய ஓடிப் பாக்காம இருக்க முடியுமா. நீ கௌம்பு. நாம போயி பாத்துட்டு வருவம்.”

33ல் போய் விருத்தாசலத்தில் இறங்கி **219**-ல் ஏறிக்கொண் டார்கள். துணிந்து கிளம்பி வந்த பிறகும் மகன்காரனின் முகம் நினைவுக்கு வந்து குறுக்கிட்டது. அந்தப் பயல் சதாசிவம் தெருவில் தென்பட்டால் என்ன செய்வது எனப் பாஞ்சாலைக்கு உதைத்துக் கொண்டே இருந்தது.

சண்முகா பேலஸில் இறங்கிக்கொண்டார்கள். வேப்பங் குறிச்சிக்கு வந்து விட்டுப்போய் இரண்டு மாதங்கள் இருக்கும், திரும்ப அடியெடுத்து வைக்கிறபோது ஏதோ அந்நியமாய்த் தெரிவதுபோல் ஓர் உணர்வு. எதிரே வந்த பால்ராசு இவர்களைப் பார்த்துவிட்டு சைக்கிளை நிறுத்தினான். “ வாங்கப்பா... வாங்கம்மா...” கூப்பிட்டான்.

“ வர்றம்பா... நம்ப அறிவப் பாத்துட்டு வரலாம்னு வந்தம்பா...” சொன்னார்கள்.

“ வூட்லதாம்பா இருக்காரு. அந்த அண்ணிக்கிக்கூட ஒடம்பு சரியில்ல.” சொன்னவன் ஞாபகம் வந்ததுபோல் தொடர்ந்தான். “ சதாசிவம் கூட செத்த

மின்னதான் வேலைக்கிப் போனான்... சரி போய்ட்டு வாங்க" சைக்கிளில் ஏறினான்.

இருவருக்குமே சதாசிவம் வீட்டில் இல்லையென்கிற சேதி தெரிந்து மனம் சற்று லேசான மாதிரி நிம்மதி. ஆனாலும் தெருவில் இவர்கள் வீடு இருக்கிற பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மனம் துணியவில்லை. கோயில் சந்தால் நுழைந்து இங்காண்ட அறிவழகன் வீட்டுப்பக்கம் வந்துவிட்டார்கள்.

" வா ராசோக்கியம்" பெஞ்சில் குந்தியிருந்த ரங்கநாது எழுந்து விட்டார். தூணில் சாய்ந்து குந்தியிருந்த அறிவழகனும் " வாங்க மாமா.." எழுந்து கூப்பிட்டான். பாஞ்சாலையைக் கண்டதும் காசாம்பு " வாங்க..." என்று தண்ணீர் மொண்டுவந்து கொடுத்தாள். முடங்கிக் கிடந்த செல்வியும் சற்றே தலையைத் தூக்கி " வாங்க..." என்பது மாதிரி தலையை ஆட்டினாள். அடையாளம் புரியவில்லை யென்றாலும் செல்வியின் அப்பாவும் அம்மாவும் " வாங்க" என்றார்கள். அவர்களுக்கு ரங்கநாது அறிமுகப்படுத்தி வைத்தார்.

கிட்டப் போய்க் குந்தி விசாரித்த பாஞ்சாலையிடம் செல்வியின் உடல்நலம் பற்றி " இப்ப பரவாயில்ல" காசாம்பு சொல்லிக்கொண்டிருந்தாள்.

" ஏதேச்சையா, எள்ளுக்கு மருந்து வாங்கலாம்னு விருத்தா சலம் வந்தப்ப, செம்பர பாத்தன். அதுக்குப்பறந்தான் எனக்கு சேதியே தெரியும். எனக்கு ஒண்ணுமே புரியில. என்னாடா எந்த வழியிலயும் ஒரு மனுசன முன்னேற வுடாம நேரங்காலம் பிரிகட்டி அடிச்சா என்னாதாம் பண்ணமுடியும்" ராசோக்கியம் கொஞ்சம் படபடப்பாகப் பேசினார்.

அறிவழகன் நிறையப் பேரிடம் இதே விஷயத்தை திரும்பத் திரும்ப சொல்லியிருந்ததில் வார்த்தைகள் சுருக்கமாக கோர்வை யாக வந்தன. அடிபட்ட ஆளும் சம்பவ இடமும் வில்லங்கமாக இருந்ததில் வண்டிக்கு சேதம். அதே நேரத்தில் டிரைவரின் அலட்சியத் தால் லைசென்சு ரினிவல் இல்லாமல் இருந்து, வேறு வழியில்லாமல் இவனே உள்ளே போக நேர்ந்தது. பிறகு ஜாமீனில் வந்து பஞ்சாயத்த மாய் பேசி, பெருந்தொகை கொடுத்து முடித்தது.

செல்வியின் அப்பா தங்கவேலுதான் சொன்னார் " மோட்டார் லாம் அப்பிடித்தான். ஆக்சிடெண்டு, கேசுங்கறதுலாம் சாதாரணம். ஆனா லைசென்ச கையிலகூட வாங்கிப் பாக்காம வண்டியில ஏத்தனுதான் ரொம்ப தப்பு." மோட்டாரில் நிறைய அனுபவப் பட்டவராய் சொல்லிக்கொண்டிருந்தார்.

ராசோக்கியம் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்தாலும் எல்லாமும் சோர்வாக இருந்த அறிவழகனுக்குச் சொல்வது போலிருந்தது தங்கவேலுவின் பேச்சி. அவரே தொடர்ந்து பேசினார் " ஏதோ நம்ப நேரம், நாம லைசென்சு வைச்சிருந்த தொட்டு, அதோட ஸ்டேஷன்லயும் தெரிஞ்ச ஆளு இருந்ததால ஓட்னது நம்பதான்னு குடுத்து தப்பிக்க முடிஞ்சிது. இல்லன்னா வண்டியவே சீஸ் பண்ணியிருப்பான். எதோ ரெண்டு நாளு உள்ள இருக்கறமாதிரி ஆனாலும், இது நம்பளோட பூட்டுது. அவுங்க இவுங்கள பாத்துப் பேசியும் முடிச்சாச்சின்னு வைச்சிக்க. இதே கேசு, வழக்குன்னு பூட்டா, டிரைவர கொண்டாம்பான். ஜாமின்ல எடுக்கணும். அவன இட்டுக்கிட்டு ஈரங்கி ஈரங்கிக்கி அலையணும். நாம வண்டி ஓட்றதப் பாக்கறதா, அவம் பின்னால சூத்தப் புடிச்சிக்கிட்டு நிக்கிறதா. அவன் கோட்ரு குடிக்கிணும்பான், கொத்துக்கறி வேணும்பான். பெரிய பாடாப் பூடும்.."

அவர் சொல்லச் சொல்ல அறிவழகனை விடவும் உன்னிப்பாக கேட்டுக்கொண்டிருந்த ரங்கநாதுக்கு லேசாய் முகம் இறுக்கமாவது போல் இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து ஏதோ முடிவான தீர்மானத் திற்கு வந்தவராய் பேசினார் " வாணங்க. ஏதோ ஓட்லாம் கொள்ள லாம்னு ஆசப்பட்டம். வண்டிய வாங்கனம். சந்தர்ப்ப சூழ்நில சரியில்லாத இருக்கறப்ப, மேல மேல இதுவேற சிக்கல கொண்டாந்து வுட்டுக்கிட்டு... வூட்ல புள்ளைக்கும் ஒடம்பு முடியாம இருக்கு. புள்ளையங்காட்டியும் நமக்கு என்னா பெரிய சம்பார்த்தன. யாராவது ஆளு இருந்தா பாருங்க, வண்டிய குடுத்துடுவம்."

திடுமென ரங்கநாது அப்படிச் சொல்வாரென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அதைவிடவும் அறிவழகன் அதற்கு மறுப்போ எதிர்ப்போ எதுவும் சொல்லாமலிருந்ததும் மேலும் ஆச்சரியமாய்ப் போய்விட்டது. கிணற்றில் கேட்கிற மாதிரியாய் காதில் விழுந்த லாரி விற்பது மாதிரி பேச்சில் மெல்ல திரும்பி அறிவழகனைப் பார்த்த, செல்வியின் முகத்தில் மெல்லிசாய் ஒரு பொலிவு.

" எதாருந்தாலும் பாத்து யோசன பண்ணிச் செய்யுங்க..." வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். " சரி பாஞ்சாலை... பொழுது பூடும்.." கிளம்பினார்கள்.

காசாம்பு பட்டென்று பரபரப்படைந்தவளாய் சொன்னாள். " என்னா அதுக்குள்ள... இருங்க, சாப்புட்டுப் போவலாம்..."

ரங்கநாதும், ராசோக்கியத்தை பார்த்து அவசரமாய் பேச்சைத் திருப்பினார். “ சரி பத்துப் பொழுது போவுட்டும், இதப் பாத்துக்குவம்.. நீ என்னா பண்ணிக்கிட்டு இருக்கற. வெவசாயம்லாம் எப்பிடிப் போவுது...” விசாரித்தார்.

ராசோக்கியம் பெருமூச்சு விட்டபடி சொன்னார் “ எள்ளு வெரைச்சிருக்கன். தண்ணிக்குதான் பாட்டுவாசியா இருக்கு. கெணறுலாம் இருக்கு. போர பெரிசி படுத்தி மோட்ரு போட்டா, நெல்லு மள்ளாட்டன்னு பயிறு வைக்கலாம் போல்ருக்கு. பெருஞ் செலவா ஆவுமாட்ருக்கு. வூட்ல இருக்கற புள்ளாண்டாருக்கு, நெய்வேலியில வேல கெடைச்சதும் மேலேர்ந்து குதிச்சமாதிரி யிருக்கு. கேள்விப்பட்ருப்பீங்க... எல்லாத்தையும் வுட்டுக் கெடாசிட்டு மகராசனா இருடான்னு பூட்டம்...”

ஏற்கெனவே வாட்டமாக இருக்கிற குடும்பத்தில் மேலும் வாட்டத்தைக் கொடுப்பதுபோல் இருந்தது அவரின் பேச்சு. பட்டென்று பாஞ்சாலை குறுக்கே தலையை நீட்டினாள் “ எல்லாம் வூட்டுக்கு வூடு வாசப்படிதான். வுட்டுட்டு கௌம்பற வேலயப் பாரு.”

கிளம்பினார்கள். “ அஞ்சரை வண்டியாவது புடிக்கலாம் வா. இல்லன்னா ரோட்லேர்ந்து நடக்குணும்.” சரசரவென்று யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் தெருவில் வந்து கோயில் சந்தில் நுழைகிற நேரம், கசப்பு ஓடிவந்து கையைப் பிடித்துக்கொண்டது. “ வா பெரிம்மா வூட்டுக்கு...”

பாஞ்சாலைக்கு பொதுக்கென கண்களில் திரண்டுவிட்டது. கூடவே தங்கம், வைரம் என வந்து கூப்பிட்டார்கள். பிடித்திருந்த கசப்பின் கையை வலிந்து பிரித்துவிட்டு நடந்தாள். “ வூட்டுக்கு போங்க.. நாளப் பின்ன ஒரு நாளைக்கு வர்றன்.”

இந்த முறை பின்தொடராமல் பசங்கள் கூடவே நின்றுவிட்ட துடுக்கு, தூரத்தில் திரும்புகிறவரை ஏக்கமாய் பார்த்தபடி வாலை மட்டும் ஆட்டிக் கொண்டிருந்தது.

*

91

காற்று குறைவாக இருந்ததும் சைக்கிள் மிதி வாங்கியது. காற்றடித்துக் கொண்டு போகலாம் என்று முனைக்கடையில் நிறுத்தினான் சிகாமணி. பம்பை அழுத்துகையில் என்றுமில்லாத படிக்கு அடித்துக் கொண்டிருந்த மஞ்சள் வெயிலில் வேர்த்தது. மழை வருகிறமாதிரி சனிமூலை இருட்டிக் கொண்டு மிருந்தது. பொழுது போவதற்குள் போய்வந்தால் தேவலாம் என்கிற மாதிரி அவசரமாய் அடித்துக்கொண்டு, சைக்கிளை தள்ளிய நேரம், அறிவழகன் டி. வி.எஸ் **50**ஐக் கொண்டுவந்து நிறுத்தியபடி கேட்டான். " மழ வர்ற மாதிரி இருக்கு. அந்தி நேரத்துல எங்கடா..."

" கூட வேல செய்றவன் ஊமங்கலத்துல வூடு குடி நொழைஞ்சான் அண்ண. காலையிலேயே போயிருக்கணும். முக்கியமான வேல நடக்குதுன்னு காண்ட்ரேட்டுக்காரன் லீவு குடுக்க முடியாதுன்னு கைய விரிச்சிட்டான். அதான் காலையில வேலைக்கிப் போய்ட்டு, இப்பதான் வந்து அங்க போய் தலையக் காட்டிட்டு வருவம்னு..." கிளம்பினான்.

" சரி... தூத்தத்துளி வர்றதங்காட்டியும் சீக்கிரம் போய்ட்டு வா..." அறிவழகன் போய்க் கொண்டிருந்தான்.

முகத்தில் அடித்துக் கொண்டிருந்த மஞ்சள் வெயில் மெல்ல மங்கிக் கொண்டிருப்பதுபோல் பட்டது. அதே நேரம் முதுகுக்குப் பின்னால் மழைக்கான குளுங்காற்று சில்லென்று தள்ளுகாற்றாய் அடிக்கவும் சிலிர்ப்பாய் சிரமமில்லாமல் மிதித்துக்கொண்டிருந் தான். உடன் தூறல் ஆரம்பிக்கிற மாதிரியிருந்தது. சனிமூலை யிலிருந்து வடக்கில் நகர்ந்து சுவர் வைத்த மாதிரி காலிறங்கி லேசாய் மின்னவும் செய்தது. பறாச்சென்று கடந்துபோன லாரியின், தார்ப்பாய் சரியாகக் கட்டப்படாமல், நிலக்கரித்தூள் சிந்திக் கொண்டே போகவும், கண்களில் விழுந்து கலங்கடித்தது. எதிரில் வந்த பெரியார்காரன் ஓரத்தில் படிந்து கிடந்ததையும் வாரி மூஞ்சியில் தூற்றிவிட்டுப் போனதும், சிகாமணிக்கு ஏன் சைக்கிளில் வந்தோம் என்றாகி விட்டது.

பளிச்சென்று கண்ணைப் பறிக்கிற ஓர் மின்னல். உடன் திடுமுடுவெனப் பேரிடி. ஆனாலும் அவனுக்கு மழை வந்தால்கூட தேவலாம் என்று பட்டது. வேலையில்லாமல் போய்விட்ட நிர்கதி, உறவுகள் புறக்கணித்த வெறுப்பு, அப்பன் கிடக்கிற கேடுபாடு, அம்மாவின் நலிவு... என உள்ளுக்குள்

கிடக்கிற கொதிப்புகளை யெல்லாம் அணைந்துபோகச் செய்கிறமாதிரி ஒரு பெருமழையில் சிலுக்க நனையவேண்டும் போலொரு ஏக்கம்.

ஊரை நெருங்குவதற்குள் மஞ்சள் வெயிலையும் மப்பு மறைத்துக் கொண்டுவிட்டது. பொட்டுபொட்டென தூறலும் அம்மான்பொட்டு போட ஆரம்பித்திருந்தது. புது வீடு இருக்கிற தெருவுக்குள் திரும்புகிற அதே நேருக்கு ரோட்டுக்கும் இங்காண்ட எலுமிச்சை. சின்ன அத்தை கம்சலா இருக்கிற தெரு, அதுவும் முதல் வீடு. உத்தண்டராயரும் தானுமாய்ப் போய்க் குந்திப் பேசியும் பிடி கொடுக்காமல் பணம் கறந்து, அந்தச் சிக்கலால் வேலையும் இழந்து... இந்த லட்சணத்துல, அம்மா வரச்சொல்றாங்களாம்... திரும்பிக்கூடப் பார்க்காமல் நேரே குடிநுழைகிற வீட்டுப்பக்கம் போனான்.

புதுவீட்டில் இவன் நண்பனைத் தவிர எல்லோரும் இருந்தனர். மொய் விழுந்த பணத்தை எடுத்துக்கொண்டு, கம்பி எடுத்தவகையில் கொடுபடாமலிருந்த கடனைக் கொடுக்க அவன் விருத்தாசலம் போயிருப்பதாய் வெள்ளைவாயாய் சொன்னார்கள். நோட்டை கொண்டுவரச்சொல்லி ஐம்பது ரூபாயை எழுதிவிட்டு, சூடு படுத்திய காப்பியை குடித்துவிட்டு மழையைக் காரணங்காட்டி " வர்றங்க... வந்தா சொல்லுங்க..." என்று வெளியே வந்தான்.

தெருவில் இறங்கியபோது தூறல்கள் கனக்க ஆரம்பித்திருந்தன. சனிமூலை இடியும் மின்னலுமாக சேம்பரித்துக் கொண்டு நின்றது. ஏறி இரண்டு மிதி கூட மிதித்திருக்க மாட்டான், சடசடவென வளைத்துக்கொண்டுவிட்டது மழை. சிட்டு தட்டுவதற்குள் தொப்பரையாய் நனைந்துவிட்டான். ஆனாலும் தனக்காகவே பெய்தமாதிரி ஒரு பரவசம். ரோட்டிற்கு வருவதற்குள் கரகரவெனக் கறந்து வெள்ளம் புரண்டோடியது. படுதாவைக் கட்டித் தொங்கவிட்டதுபோல் இறங்கிக் கொண்டிருக்கும் கனத்த மழையில், கண்மண் தெரியாதபடிக்கு எதிரும்புதிருமாய் லாரிகள். பறந்து போகும் வேகத்தில் சளார் சளார் என்று நீர்ச் சிறகுகள் வந்து மேலே மோதவும் திகைத்துப்போய் ஓரமாய் நின்றுவிட்டான். ' சோ' வென்று பெய்கிற மழையில், அங்காண்ட போய், டீக்கடை சாரத்தில் ஒதுங்கலாம் என சைக்கிளை விட்டு இறங்கி வாகனங்கள் குறுக்கிடாத இடை நேரத்திற்காகக் காத்திருந்தான். திடுமென தலைக்குமேலே மழை நின்றது. திடுக்கிட்டுத் திரும்பியவன் எதிர் பார்க்கவில்லை... சின்ன அத்தை கம்சலாதான், குடை பிடித்துக் கொண்டு நிற்க, ஈரஇடையே வளைத்துகோர்த்தபடி கம்சலாவின் மகள். அண்ணாந்து பார்த்த சிறு விழிகள். " வூட்டுக்கு வாங்க மாமா."

மகளைப்போலவே ஆத்தாவும். “ வூட்டுக்கு வாப்பா...” கம்சலாவிற்கு உதடுகள் துடித்து, அழுகை உடைந்து கலகலவென கண்களில் இறங்கி ஓடுகிறது. குடையே பொத்துக்கொள்கிற மாதிரி மழை சக்கையாய் நொறுக்க காலடியைச் சுழித்து மண்ணை அரித்துக்கொண்டு வெள்ளம் புரண்டோடுகிறது.

“ கேப்பா பேச்சி கேட்டு, ஏம் புத்திய பீ திங்க வுட்டு ஏம் பொறப்பு ஒனக்கு கொடும பண்ணிட்டம்பா. என்னாலதாம்பா ஒனக்கு இம்மாம் இமிசையும். எந்தக் கோயில்ல போயி வுழுந்தாலும் ஒனக்குச் செஞ்ச பாவம் சும்மா வுடாதுப்பா.” உடைந்து அழுது கொண்டிருந்தாள். சின்னக் கம்சலாவும் பிடியைத் தளர்த்துகிற மாதிரி தெரியவில்லை. “ நீங்க போறத பாத்துட்டுப் போயி அம்மா கிட்ட சொல்லி ரொம்ப நேரமா நிக்கிறம். வா மாமா...”

வழக்கு, நோட்டிஸ், பணம், வேலையின்மை என உள்ளுக்குள் அறுத்துக்கொண்டு கிடந்தது எல்லாமும் சடுதியில் மறைந்தது. தாயாய் ஊட்டிவிட்ட நேசம், சகோதரியாய் வளர்த்தெடுத்த பாசம், எல்லாவற்றிற்கும் மேலாக வெகுகாலம் சுவடே இல்லாமல் போய் பொசுக்கென்று வளைத்துக்கொண்ட பரம்பரையின் வாசம்... ஓசையில்லாமல் அவனுக்குள்ளும் உடைத்துக்கொண்டுவிட்டது.

கூரைகளில் தொங்குகிற மழைக்கம்பிகள், சிமினி விளக்கு வெளிச்சத்தில் தங்கக்கம்பிகளாய் மின்னுகின்றன. திடுமென இழைகூடி வளைத்துக்கொண்ட உறவின் பிடிக்குள் ஏதும் பேசாமல் மழையை வெறித்துப் பார்த்துக்கொண்டு திண்ணையில் குந்தி யிருந்தான். மீதமிருந்த ஈரத்தையும் போக்க துண்டால் அழுந்த அவன் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தது சின்னக் கம்சலா.

அவன் முன்னால் சோற்றைப் போட்டுக்கொண்டு வந்து வைத்ததும் பதறியபடி சொன்னான் “ வாணாம், மழ வுட்டதும் நா கௌம்பறன்...”

“ நா இனிமே ஒரு காலத்திலயும் ஒஞ் சோத்துக்கு வந்து பங்குக்கு நிக்க மாட்டன். நீ பயப்படாம சாப்புடுப்பா...” அழுது கொண்டே சொன்னவளைக் கலங்கியபடியே பார்த்தவன், சின்னக் கம்சலா நீட்டிய தண்ணீர்ச் செம்பை வாங்கினான். கைகழுவிய நீர் மழைத் தண்ணீரோடு ஓடிக் கலந்துகொண்டது.

குந்தி, அள்ளி வாயில் போடப் போனபோது அவனுக்கு மீண்டும் கண்கள் கலங்கின. கண்கள் வழிய வழியச் சாப்பிட்டான். எதிரில் பார்த்துக்கொண்டே குந்தியிருந்த சின்னக் கம்சலாவிற்கு ஊட்டுவதற்குத் திட்டமாய் சோற்றை

அள்ளினான். ‘ தனக்குத்தான்’ என்கிறமாதிரி ஊகித்துக்கொண்ட பிஞ்சுவாய், வாங்குவதற்கு ஆயத்தமாய் கிட்டக்க நெருங்கி மெல்ல விரிந்தது. ஊட்டி விட்டான். நடையில் குந்தியிருந்த கம்சலா கனிந்து வெளியின் மழையைப் போலச் சொரிகிறாள்.

“ ஏம் பொறப்பு ஒனக்குத் துரோகம் பண்ணிட்டம்பா. போட்டியா நின்னு கொடும பண்ணிட்டம்பா. என்ன மன்னிச்சுடுப்பா. எனக்கும் ஏம் புள்ளைக்கும் ஒன்ன வுட்டா... எங்குளுக்கு யாருப்பா இருக்கா... ஒங் கால்ல வுழுந்தாலும் வுழறன், ஏந் தப்ப மன்னிச்சி எங்கள ஏறெடுத்துப் பாத்துக்கப்பா...”

தொடர்ந்து புலம்பிக்கொண்டிருந்தவள், அவன் சாப்பிட்டு முடித்ததும் எழுந்து உள்ளேபோய், ஒரு மஞ்சள் பையை எடுத்து வந்தாள். கத்தையாய் பணத்தை எடுத்து அவன் மடியில் வைத்தாள். “ இந்தாப்பா நீ குடுத்த பணத்துல ஒரு ரூபா கூட தொடாத அப்பிடியேதான் வைச்சிருந்தன். ஏமூட்டு புள்ள நீ வேலைக்கிப் போயிருந்தாக்கூட கைநீட்டி வாங்கன ஏம் மனசு கொஞ்சம் ஆறியிருக்கும். நீனே வேலையில்லாம, காயலாவுல கெடக்கற அப்பன வூட்ல வைச்சிக்கிட்டு தெவைக்கறப்ப, இத மீறியும் வைச்சிருந்தா இது என்னக் கொன்னுடும்பா...”

வெடுக்கென மீண்டும் மஞ்சள் பையில் கையை விட்டாள். நீட்டிய கையில், கனத்த தாலிச் சங்கிலி. கோர்த்திருந்த தாலி வில்லையில் இன்னமும் குங்குமம் மங்கலாய் ஒட்டிக்கொண்டிருந்தது. “ இந்தாப்பா, ஒங்களல்லாம் வுட்டுக் கெடாசிட்டு வந்ததுல மீந்தது இதான். தொங்கத் தொங்கப் போட்டுக்கிட்டு குலுங்கக் குலுங்க நிக்கணும்னு ஆச ஆசையா செஞ்சி போட்டான். போட்டுக்கிட்டு இருக்கத்தான் எனக்குப் குடுப்பன இல்ல... அந்தப் போக்காளி... என்ன...” குபுக்கென்று பெருங்குரலில் வெடித்து அழுதாள். சின்னக் கம்சலாவும் கோவென்று அழுகிறது. சிகாமணிக்குத் தாங்கவில்லை.

கண்களைத் துடைத்துக்கொண்டு சொன்னாள் “ அந்த பணத்தையும் எடுத்துக்க. இந்தத் தாலிச் சங்கிலியையும் எடுத்துக் கிட்டுப் போயி வித்துட்டு, காசி பணத்த குடுத்தாவது வேல வாங்கற வழியப் பாருப்பா. ஏமூட்டு பொறப்பு என்னப் பாக்குல போவுலன்னாலும் நீ நெல்லா இருக்கன்னு சேதி கெடைச்சாலே போதும்பா.”

தாலிச்சங்கிலியை நீட்டிச் சொன்னதும் சிகாமணி ஒரு கணம் பதறிப்போய்விட்டான். “ அத்த...”

“ அத்த...” வெகுகாலம் கழித்து கேட்ட வாபொறப்பில் மீண்டும் குமுறிக் கிளம்பியது அவளுக்கு.

மழை விட்டிருந்தது. எழுந்தான். “ வாணாம் அத்த. எனக்குன்னு எது நடக்குமோ அதுதான் நடக்கும். இந்தப் பணம் நாயப்படி பாத்தா ஒனக்குன்னு சேரவேண்டியது தான். நானே குடுத்துருக் கணும். எப்பிடியாயிருந்தாலும் சேர வேண்டிய எடத்துல சேந்துட்டுது, வைச்சிக்க... நா மறுபடி வாரன்.”

பணம், நகை எல்லாவற்றையும் எடுத்து சின்னக் கம்சலாவின் கைகளில் கொடுத்துவிட்டு வெளியே வந்தான். அண்ணாந்து பார்த்தான், துலாம்பரமாய் வானம் வெளிவாங்கத் தொடங்கி யிருந்தது. சிலீர் என்று குளிர்காற்று முகத்தில் படவும் ஓர் பரவசம்.

*

92

கிணற்றின் மேல் உயரமான முக்கோணக் கம்பங்கள் நடப்பட்டு, போர்துளை அகலமாக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது. கிணற்றில் உள்ள போரில் ராடுகளின் முனையில் பொருத்தப்பட்ட துரப்பண ஆக்கர் சுற்றிக் குடைந்து செல்லுமாறு பக்கத்துக்கு மூன்று பேராய் கனத்த இரும்பு ஹேண்டில் போட்டு சுற்றிக்கொண்டிருந்தார்கள். ராடுகளை தூக்க இறக்க ஏதுவாக, இரும்பு ரோப் மூலம் வெளியே இருக்கும் பட்டறையில் இணைத்துச் சுற்றப்பட்டு, இரண்டு பேர் தாங்கிப்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

ராசோக்கியம் கையில் மடியில் எதுவும் தோது இல்லாமல், இருக்கும் எள்ளைப் போன்று ஏதாவது உளுந்து கேழ்வரகை விதைத்து, ஒரு வருடம் போய்தான் இந்த போர் போடுகிற வேலையைப் பார்க்கலாம் என்றிருந்தார். ஆனால் விதைத்தலிருந்து பொட்டுத் தூறல் இல்லாவிட்டாலும் கூட பனி நமுரிலியே சுமாராய் நெடுவிவிட்ட செடிகள் குலுங்கக் குலுங்கப் பூக்களை வைத்துக் கொண்டு நிற்கையில் சொடுங்கிப் போவதை பார்க்க அவரால் முடியவில்லை. எதையாவது புரட்டி உடனடியாக போர் போட்டே ஆகவேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிட்டார்.

கலியபெருமாளை இட்டுக்கொண்டு போய் பூமாவின் கழுத்தில் கிடந்தது, பாஞ்சாலையின் காதில் கிடந்தது எல்லாமும் பொறுக்கிச் சேர்த்து ஆலடி பேங்கில் வைத்துதான் வேலையை ஆரம்பித்தார். கொட்டாரக்குப்பம் ராமசாமியுடைய போர்செட்டு. நான்காவது நாளாய் வேலை நடந்துகொண்டிருந்தது. இரும்பு ராடை சுற்றிச்சுற்றி இறக்குவதும் ஏற்றுவதும், சிப்பானைப் போட்டு போரை அள்ளிச் சுத்தம் செய்வதுமாக கடும்புடியான வேலை. வேலைக்கு தகுந்தமாதிரி தாராளமாய்ச் சாப்பிட்டார்கள். பூமாவுக்கு ஆக்கிப் போட்டு மாளவில்லை. ‘ நாலு நாளையில முடிச்சிடறன்...’ என்ற ராமசாமி, எப்படியும் ஒரு வாரத்திற்கு இழுத்துவிடுவார் போல் தெரிந்தது.

உச்சிவெயிலில் வாழைநாராய் வதங்கியிருந்தன எள்ளுச் செடிகள். பதைபதைப்போடு பார்த்துக்கொண்டே வந்த பூமாவுக்கு, தலையிலிருந்த சாப்பாட்டுக்குண்டான் சூடு பெரிதாகத் தெரிய வில்லை. இறக்கி வைத்ததும், கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் மொண்டுவைத்திருந்த தண்ணீர்க் குடம் காலியாக இருந்ததைப் பார்த்தாள். தண்ணீர் கொண்டுவருவதற்குக் குடத்தை

எடுத்துக் கொண்டு வீட்டுப்பக்கம் கிளம்பினாள். ராசோக்கியந்தான் “ இந்தாண்ட மோட்டார்ல புடிச்சிக்கிலாம்மா” என்றார்.

பூமாவுக்குத் தயக்கம். அதோடு உள்ளுக்குள் ஓர் அச்சமும் தலைகாட்டியது. பெரும்பாலும் சாப்பாட்டை பூமாவும் தண்ணீர்க் குடத்தை பாஞ்சாலையுமாக எடுத்துக்கொண்டே வந்துவிடுவார்கள். இரண்டு நாளாய் புதிதாய் வந்து தொற்றியிருந்த ஒற்றைத் தலைவலியில் பாஞ்சாலை படுத்துக் கிடந்ததில், பூமா சாப்பாட்டை மட்டும் எடுத்துவர வேண்டியிருந்தது.

நேற்று இதே மாதிரிதான் தண்ணீர் இல்லையென்று பக்கத்து மோட்டாரில் போய் குனிந்து பிடித்துக்கொண்டிருந்தாள். இறைத்துக்கொண்டிருக்கிற குழாய் நேருக்கு ஏதோ சன்னலில் உறுத்துவது போல் தெரிய தலையை நிமிர்த்திப் பார்த்தவள் அப்படியே நடுநடுங்கிப் போய்விட்டாள். சன்னலில் கோபால் மகன், குனிந்திருக்கும் இவளை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தவன், படாரென்று ஏதேச்சையாய்ப் பார்த்ததுபோல் திருப்பிக்கொண்டான். அவசரமாய் மாராப்பைத் தழைத்து விட்டபடி திரும்பிப் பார்க்காமல் குடத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள்.

“ இல்லப்பா... நா வூட்ட போயி கொண்டாறன்...” கிளம்பினாள்.

“ நீ வூட்டுக்குப் போயே புடிச்சா பாப்பா... அந்த மோட்டார் தண்ணி வேணாம்..” பட்டறையில் நின்று வளைவு கைப்பிடியைப் பிடித்துக்கொண்டிருந்த ராமசாமி சொன்னார்.

“ ஏங்க தண்ணி நெல்லா இல்லியா...” வீட்டுப்பக்கம் போய்க் கொண்டிருந்த பூமாவைப் பார்த்துக்கொண்டே கேட்டார்.

“ தண்ணிலாம் நெல்லா இருக்கு. அந்த ஆளு மனசுதான் நெல்லா இல்ல... நேத்து வேல முடிஞ்சி சாயந்தரமா குளிக்குலாம்னு எல்லாம் தொட்டிகிட்ட பூட்டம். பட்டுன்னு அந்த ஆளு மோட்ர நிறுத்திட்டு எதுவும் பேசாம வூட்டுக்குப் போறான். அப்பறம் சிவசிவான்னு நின்னுட்டு வூட்ட போயிதான் குளிச்சம். ரொம்ப கெட்ட எண்ணக்காரன்...” ராமசாமி சற்றே ஆவேசமடைந்தவராகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

ராசோக்கியத்திற்குப் பட்டென்று உதைத்தது. நேற்றுக் காலையில் கூட இதே மாதிரிதான் தண்ணீர் மொண்டுவந்து வைக்கலாம் என்று குடத்தை எடுத்துக்கொண்டு போனபோது திடுமென மோட்டார் நின்றுவிட்டது ஞாபகம் வந்தது. கரண்ட் நின்றுவிட்டது என்றுதான் நினைத்து வந்துவிட்டார். இவர் சொல்வதைப் பார்த்தால் கொட்டகைக்குள் இருந்த கோபால் திட்டமிட்டு

நிறுத்திவிட்டதாகவே இப்போது பட்டது. நிலத்தைப் பார்க்க வந்ததிலிருந்தே அவரின் பார்வையும் போக்கும் ஒரு மாதிரியாகவே இருந்து வருவது அவருக்கு ஞாபகத்தில் வந்தது. ஏனோ அவர் மனதில் என்றுமில்லாத படிக்கு ஒரு திகில் குடிகொள்ள ஆரம்பித்தது.

“ ஒண்ணுமில்ல. போர அகலப்படுத்தி நீர்மோட்ர போடப் போறங்கறதுதான் அந்தாளுக்கு அம்மாம் வேகம். அவுரு மேல் மோட்ர வைச்சிதான எறைக்கறாரு. இதுல நீர்மோட்ரு போட்டா எப்பிடியும் அங்காண்ட அவுரு மோட்ருல கட்டாயம் தண்ணி தலையாட்ட ஆரம்பிக்கும்.” ராமசாமி சொல்லியபடி கையைக் கழுவிக்கொண்டே குந்தினார்.

“ அப்பறம்..” ராசோக்கியம் குழப்பமாகக் கேட்டார்.

“ அப்பறம் என்னா அவுரும் அகலப்படுத்தி நீர்மோட்ர போடணும். அப்பிடியே நீர்மோட்ர போட்டாலும் இந்த அளவுக்கு அது எறைக்காது. இத விட அதுல ஒண்ணும் மணல்சாயலு அதிகம் இல்ல. ரெண்டு போரையும் மின்ன நாந்தாம் போட்டன்.” ராமசாமி சாப்பிட்டுக்கொண்டே சொன்னார்.

“ அப்ப எனக்கு மேல மேல சிக்கலாதாம் இருக்கும் போல்ருக்கு..” ராசோக்கியம் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, ஒழுங்கையில் ஊதாங்குழல் போன்று ஒரு பைப்பை கையில் பிடித்தபடி கிருஷ்ண மூர்த்தி வேகமாகத் தெற்கே போனார். சாப்பாட்டில் குந்தியபடி ராசோக்கியம் கேட்டார் “ என்னா கையில இரும்பு பைப்போட யார அடிக்கறதுக்கு இம்மாம் வேகமாப் போற...”

“ க்கும்.. நாந்தான் அதுவும் இரும்பு பைப்ப எடுத்துக்கிட்டு அடிக்கப்போறன். வூட்டுக்கு வர்ற ஓயரு ஒண்ணு லூஸ் கனைசன்ல இருக்குன்னு சின்னவன் பிரிச்சி அடிக்கறன், போயி பொட்டிய ஆஃப் பண்ணுன்னான். அதான் போறன்..” ஒழுங்கையில் கோபால் நிலத்துக்கு எதிரில் இருக்கும் ட்ரான்ஸ்பார்மரை நோக்கிப் போய்க்கொண்டே சொன்னார்.

“ பொட்டியல்லாம் ஆஃப் பண்ணத் தெரியுமா..” சற்று சத்தமாகச் சிரித்தபடி கேட்டார். அவர் காதில் வாங்காமல் போய் ட்ரான்ஸ்மரத்தின் பைப்பில் மாட்டித் திருப்பினார். கிறிச் சென்று பொறி பறக்க அது ஊமையானது. அங்காண்ட மோட்டார் நின்று போனதும் கோபால் மகன் வெளியே வந்து பார்த்தான்.

“ மோட்ரு கரண்டுல எதுக்கு பொசுக்கு பொசுக்குன்னு கேட்டுக் கேழ்வி இல்லாம நிறுத்துறீங்க? தண்ணி சுத்தமா ஓடிப் பாய மாட்டங்குது” கோபால் மகன் சற்று கோபமாகக் கேட்டதை, கிருஷ்ணமூர்த்தி பொருட்படுத்தவில்லை.

“ வேல அர்த்தமா இருக்கும். ஆனா ஆளப் புடிக்கறதுதான் கஷ்டம். கோழி கூவாத போயி ஆள, படுக்கையில புடிச்சாத்தான் உண்டு. மேல்மோட்டர்னா கூட உள்ளூர் கரண்டுகார ரெட்டியாரே போதும். இது நீர்மோட்ருங்கறதால செத்த பூண்டியாங்குப்பம் போயி முத்த இட்டாந்து வேல பாத்தாத்தான் நெல்லது.” கலிய பெருமாள் சொன்னதுமாதிரி ஆளைப் பிடிப்பதுதான் பெரிய பாடாக இருந்ததே தவிர, மற்றபடி பூண்டியாங்குப்பத்து முத்து நல்ல வேலைக்காரர்தான். பன்னிரண்டரை டெக்கான் கம்பெனி மோட்டார். கார்கூடல் ரெட்டியார் கடை விருத்தாசலம் குமரன் எலக்ட்ரிக்கல்சில் வாங்கி வந்திருந்தார்கள். ஆறு ஸ்டேஜ் பம்பு. ஆயில் ஸ்டார்டர், நூறு அடிக்கு ஜாக்கி மரை போட்ட இரும்பு பைப்புகள், பினோலெக்ஸ் கேபிள், பண்ருட்டியில் ஆர்டர் கொடுத்து செய்யச் சொல்லி வாங்கி வந்த தகரப் பெட்டியில் ஸ்டார்ட்டர் பிட்டிங்... என ஐம்பதாயிரத்திற்கு மேல் செலவு.

ஆனால் எல்லாச் செலவுகள், சிரமங்கள் யாவற்றையும் தூக்கி எறிகிற மாதிரி செயின் பிளாக் போட்டு மோட்டாரை இறக்கி கனைக்ஷன் கொடுத்து ஸ்டார்ட்டர் பட்டனை அழுத்தியதும் நீட்டு நீட்டென நீட்டுகிற தண்ணீர். காவு கொடுத்த எலுமிச்சம் பழத்து சிவப்பைக் கரைத்துக்கொண்டு ஓடுகிறது. ஆடுமாடுகள் மிதித்து சிதைந்து கிடக்கிற வாய்க்கால் மிதமிஞ்சி வருகிற தண்ணீரை வாங்கிப்போக முடியாமல் வழிந்து பிதுங்குகிறது.

ராசோக்கியத்திற்கு தாங்கமுடியாத சந்தோஷம். பழைய வேப்பங்குறிச்சி கிணற்றில் மேநீரில் இஞ்சின் ஓடும்போது இறைக்கிற மாதிரியான அளவு கடந்த தண்ணீர். வாய்ப்பேச்சு நேரத்திற்குள் ஓரத்திலிருந்த தளையில் முக்கால்வாசியும் பாய்ந்தது. காலடியில் ஈரம் பட்ட சிலிர்ப்பில் பொசுக்கென பூரிப்புக் காட்டின எள்ளுச் செடிகள். மகிழ்வில் ஆசைதீர தண்ணீரை அள்ளி அள்ளிக் குடித்தார். அப்படியே தேங்காய் தண்ணீர் மாதிரி, வெறும் தண்ணீரைக் குடித்தாலே வயிறு நிரம்பி விடுகிற ருசி.

பாஞ்சாலைக்கும் தாங்கவில்லை. கடைக்கண்ணில் துளிர்க் கிறது. அடியாழத்தில் கலங்கலாய் கொஞ்சம் மட்டும் தண்ணீர் கிடந்த கிணறு. போரை பெரிசுபடுத்தி மோட்டாரை போட்டு, அதிலிருந்து இப்படிக் கடலும்

காவேரியுமாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது... முதனை செம்பய்யனாரை வேண்டிக் கொண்டாள்.

பூமா, பாவாடையும் ஆம்பளை சட்டையுமாகப் பழைய சிறுமியாகவே ஆகிவிட்டாள். தாவணியைத் தூக்கிச் செருகிக் கொண்டு வழிகிற வாய்க்காலில் மண்ணை அள்ளிப்போட்டுக் கட்டுகிறாள். தண்ணீர் ஏறாமடையில் தேங்கி நிற்கிறபோது காலால் இடறியும் ஏகத்துக்கும் கையால் சீண்டிப் பாய்ச்சுவதுமாக மனசெல்லாம் பெரும் உற்சாகம்.

ஒழுங்கை என்பதால் போவோர் வருவோர் எல்லாரும் கரம்பாய், ஆடுமாடு மேய்ந்து மிதிகாலாய்க் கிடந்த இடத்தில் சமுத்திரத்தை கொண்டுவந்து திருப்பியதாய் ஓடும் தண்ணீரை நின்று பார்க்கிறார்கள். டீக்கடையில், கோயில் பட்டாசாலையில், கொல்லைவெளிகளில் எல்லா இடங்களுக்கும் சேதி போய் வந்து வந்து பார்க்கிறார்கள். பெருமை தாங்கவில்லை. படைத்த பொரி கடலையை எல்லோருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்.

“ இம்மாந் தண்ணிய வைச்சிக்கிட்டு இருக்கற போர்ல, ரெட்டி மேல்மோட்ரு வைச்சிக்கிட்டு கெணத்துல தண்ணி இல்ல தண்ணி இல்லன்னு வுட்டுட்டாரு” கிருஷ்ணமூர்த்தி சொல்லிக்கொண்டி ருந்தார்.

“ சும்மாவா எறைக்கிது. போர் செலவு, மோட்ரு போட்டதுன்னு பெரிய ரூவாயில முக்கால முழங்கிட்டது” கலியபெருமாள் சிரித்துக்கொண்டே சொன்னார்.

ஆனால் வேலிக்கும் அங்காண்ட கோபால், இறைக்கிற தண்ணீரை அப்படியே வற்றிவிடச் செய்கிற பார்வை பார்க்க, முத்து பொசுக்கென பெட்டியிலிருந்த பீஸ்கட்டையில் ஒன்றை இழுத்தார். மக்கென பைப்பை உதறியபடி மோட்டார் நின்று போனது. முத்து திருப்தியாகச் சொன்னார். “ ஒண்ணும் பிரச்சின இல்ல. மோட்ரு ஓடிக்கிட்டு இருக்கறப்ப ஒரு லைன்ல பீஸ் போனா கூட ஸ்டாட்டர் வுழுந்துடும்.”

பிடுங்கிய கட்டையைப் போட்டுவிட்டு, ராசோக்கியத்தை கிட்ட கூப்பிட்டு விளக்கிச் சொன்னார் “ மோட்ரு கௌப்பறதுக்கு மின்ன மூணு லைன்லியும் கரண்டு இருக்கான்னு இந்த சுட்சுவுள போட்டுப் பாக்கணும். அப்பறமா இந்த பட்டன அமுக்கி இந்த லிவர இப்பிடித் தூக்கிப் போடணும்.”

ராசோக்கியத்தை அதுமாதிரியே அவர் கையால் போடச் சொன்னார். கொஞ்சம் பதட்டத்துடன் போட்டாலும், மோட்டார் ஓடி வாய்க்காலில் தடதடவென தண்ணீர். ஒரு நிமிடம் சாணி கரைத்து ஊற்றி, இஞ்சினை

கிளப்பியதும் சாணிப்பால் இறைத்து பின் கலங்கிய மஞ்சளாகி பின் நிறம் மாறி நீட்டி ஊற்றும் பழைய வேப்பங்குறிச்சி வாழ்நிலை மனதிற்குள் வந்துபோனது. இதற்கு எந்த வேலையும் இல்லை. கரண்டு இருந்தால் நின்றநிலையில் போட்டுவிட்டால் போதும்.

“ கையோட கையா ஏகத்துக்கும் எள்ளுக்கு ஒரு தண்ணியக் கட்டி வுடு. காயி கொள்ளாம நெறுவா எள்ளு இருக்கும். நாளைக்கி எல்லாச் செலவையும் எடுத்து எட்டக் கெடாசிடும்” கோவணத்தை இறுக்கிவிட்டு குளிக்கத் தொடங்கிய கிருஷ்ணமூர்த்தி சொன்னார்.

“ இனிமே ஒங்களுக்குத்தான் பெரிய சிக்கலு. தெருவுல தண்ணி கிண்ணி வல்லன்னா, அது அது கொடத்தத் தூக்கிக்கிட்டு வந்து குளிக்கறதும் மொள்றதுமா தொந்தரவு குடுக்கும். ரெட்டி எம்மானே சொல்லிப் பாப்பாரு, எதுவும் அடங்காது” கலியபெருமாள் சிரித்துக் கொண்டே சொன்னார்.

“ தே இங்காண்ட மோட்ரு ஓடுது. தெருவுல தண்ணி வராதப்ப கூட பாத்துட்டன், ஒரு சனங்கூட இங்காண்ட வல்ல. நீங்க எனுமோ அதிசயமாச் சொல்றீங்க.” ராசோக்கியம் கோபால் மோட்டார் கொட்டகைப் பக்கம் காட்டிக் கேட்டார்.

கலியபெருமாள் சற்று அடக்கி வாசிப்பவராகச் சொன்னார் “ எங்க அங்காண்ட கோபால் மோட்ருலியா... பொம்மனோட்டிவோ கொடம்னு அங்காண்ட எடுத்துக்கிட்டு பூட்டுதுனாப் போதும், அப்பனும் மொவனும் துணிய உருவிக்கிட்டு வுட்டுடுவானுவோ...”

நீர் இறைத்த சத்தத்தையும் மீறிக் காதில் விழுந்த அவரின் பேச்சில் பூமாவுக்குள் திகில் பரவியது. தண்ணீர் பிடிக்கப் போனபோது சன்னலுக்குள் வெறித்த அந்தக் கண்கள் உள்ளுக்குள் மின்னலாய் ஓடின.

*

93

காற்றடிக்கும் போதெல்லாம் அலைஅலையாய் நெற்பயிர்கள் அசைந்தாடுவதைப் பார்த்துக்கொண்டே நின்றார். ஐ.ஆர் 20தான். சோறு, இட்லி இரண்டுக்குமே நன்றாக எடுக்கும். வீட்டுச் செலவிற்குப் போக விற்பதற்கும் தோதான நெல். ஆலடி பச்சைத் துண்டு ரெட்டியாரிடம் போய், திட்டமாய் ஒரு ஏக்கர் நடுகிற மாதிரி வாங்கி வந்து நாற்று விட்டிருந்தார்.

ஈரத் தரையில் விதைத்து, நல்ல தகுதியான நேரத்தில் தண்ணீர் கூட்டியதில், இடுப்பமுட்டும் வளர்த்தியில் எள்ளுச் செடிகள். கைப்பிடிக்குள் எட்டுக்காய்கள் இருக்கிற மாதிரி காய்ப்பும் வலுக்கப்பிடித்து ஒழுங்கையில் போவோர் வருவோர் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

இன்னும் பத்துப் பதினைந்து நாட்களில் எள்ளுக்காய்கள் பழுத்து விடும். நாற்றும் நடுகிற பக்குவத்திற்கு வந்துவிடும். எள்ளை அறுத்து நாற்றை நட்டு முடித்துக்கொண்டு பின் ஆற அமர மள்ளாட்டை வாங்கி மீத இடத்தில் போட்டுக்கொள்ளலாம். ஆனால் நடவுச் செலவிற்கு, மள்ளாட்டை போடுவதற்கு என எல்லாவற்றிற்கும் அறுக்கிற எள்ளை உலுக்கி கமிட்டிக்கு போய் வந்தால்தான் கதைக்கு ஆகும்.

நாற்றாங்காலின் வரப்போரக் களைகளைக் குந்தி அரித்துக் கொண்டிருந்தார். வேப்பங்குறிச்சியில் எத்தனையோ முறை நாற்று விட்டிருக்கிறார். எப்போதும் நாற்றுவிடுகிற வேலை தொடங்கி விட்டால், தண்ணீர் கட்ட, வடியவிட என முளைத்துப் பச்சை கட்டுகிற வரை ஊருக்கு சேதிக்கு என எட்டப் போகமாட்டார். அப்படி நாற்றாங்கால் கிட்டக்கவே இருந்தும் பெருமழை வந்து ஒருநாள் அலைச்சல் காட்டிவிட்டது. மழை என்பதை விடவும் அந்த கோபால்தான்...

நாற்றாங்கால் நெல்மணிகளில் வேர் இறங்கி ரதம் திரும்புகிற ஐந்தாம் நாள் அது. ராசோக்கியமும், கிருஷ்ணமூர்த்தியும் எள்ளுக் கொல்லைகளில், வாய்க்கால்களில் கிடந்த புற்களை பில்லு செத்தியால் செத்தி, ஆளுக்கு ஒரு கட்டு வரும், கிருஷ்ணமூர்த்திக்குத் தூக்கிவிட்டதும் கிளம்பும்போது சொன்னார் “ மானம் எனுமோ கொழப்பற மாதிரி மூடி மூடித் தொறக்குது. நாத்தாங்காலுக்கு நேரத்துலியே ரவ தண்ணி வைச்சி வுட்டுடு.”

“ நாம கிட்டதான இருக்கறம். மானம் கரிசக்கட்டனா பாத்துக்குவம்...

ராசோக்கியம் செத்திய புற்களைக் கொண்டுபோய் மாடுகளிடம் போட்டுவிட்டு வந்து தோட்டத்து மாமரத்தடியில் சிமிட்டி தாவில் குந்தினார். பூமாவே இடித்து புளிக்கவைத்து ஆக்கிய கம்மங்கூழ். கரைத்து வந்து ஊற்றிக்கொடுத்தாள். இரண்டு செம்புக்கு மேல் நெறமாய் இழுத்தது.

பாஞ்சாலை, வாய்க்காலில் போட்டிருந்த புளிச்சைக் கீரை களைப் பிடுங்கி வந்து ஆய்வதற்குக் குந்தியவள் சொன்னாள் " முதனைக்கி ஓடி அந்த மலரு புள்ளய எட்டிப் பாத்துட்டு வந்தா தேவலாம். அண்ணங்காரரு வேற தெண்டங் கட்டி கொண்டாந்து வுட்டுட்டு வந்தப்பறம் திரும்ப குதிர ஏறறதுக்கு நிக்கிறாரோ எனுமோ தெரியில."

அடுத்து வேப்பங்குறிச்சியில் ' ஆத்தா அப்பன் வேணாமுன்னு பொண்ணு கொண்டார நின்னார புள்ளாண்டாரு, கொண்டாந்தாரா இல்லியான்னு தெரியில..' என்று புலம்புவாள் என்று எதிர்பார்த் தார். ஆனால் மகனைப் பற்றி வாய்க்கட்டு கட்டியதுமாதிரி கறாராய் எதுவும் பேசாமல் இருந்தது அவருக்கு ஆச்சரியமாகவே இருந்தது. அறிவழகனைப் பார்க்க வேப்பங்குறிச்சிக்குப் போயிருந்த போது எதிர்ப்பட்ட பால்ராசுவிடமாவது சதாசிவத்தைப் பற்றிக் கேட்கலாம் என்றுதான் ராசோக்கியத்திற்கு ஓர் ஆவலம். ஆனால் ' தோலே தோலு, வீடு இருக்கிற திசைப்பக்கம் கூடத் திரும்பி விடக் கூடாது' என்கிற வைராக்கியத்தில் இருக்கும் பாஞ்சாலையைக் கண்டு முடிவை மாற்றிக்கொண்டு விட்டார். கல்யாணம் என்று எந்த முடிவிற்கும் போகவில்லையென்பது மட்டும் உறுதியாய்த் தெரிந்தது. எப்படியிருந்தாலும் ஊரில் யாராவது சண்டை போட்டு, ' ஒப்பன ஒத்தாள இட்டாடா...' என்று சொல்லி, நிச்சயம் சதாசிவம் வருவான் என்பது அவரது கணக்கு. கூழைக் குடித்துவிட்டு நகர்ந்து குந்தினார்.

" எங்க அண்ணிக்கார அம்மாளு என்னா பண்ணிக்கிட்டு இருக்குன்னு தெரியில, அதாவது அந்த மலரு புள்ளய இப்பிடி பஸ்சுக்கு இட்டாந்தாவது காட்டிட்டுப் போவலாம்." பாஞ்சாலை திரும்பத் திரும்ப முதனையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததும் ராசோக்கியம் அசதியில் கொட்டாவி விட்டுக்கொண்டே சொன்னார். " இந்த நாத்து பச்ச கட்டி கொஞ்சம் நெடுவட்டும், போய்ட்டு வருவம்."

திரும்பவும் கொட்டாவி வரவும், நல்ல வெயிலில் நெம்பி நெம்பி பில்லுச் செத்திய அயர்வில் அப்படியே சிமிட்டித் தாவில் சாய்ந்தார். கீரை ஆய்ந்து முடித்த சோர்வில் பாஞ்சாலையும் துணியை விரித்துப்போட்டு முடங்கியவள் அசந்துவிட்டாள். உள்ளே சோறாக்கி கீரை கடைந்து... என அடுத்தடுத்த வேலைகளில் பூமாவும் மறந்துவிட்டாள்.

ஒரு நேரத்தில் கனவில் கேட்கிறமாதிரி ‘ உஸ் உஸ்’ என காற்றடிச்சத்தம் கேட்கவும் கண்விழித்தவர், அலங்கமலங்கப் பார்த்தார். பொழுதிறங்கி இருளத் தொடங்கியது மாதிரி எங்கும் கருக்கல். சனிமூலையில் மள்ளாட்டைக் கொடிபோர் வைத்தமாதிரி ஒரே இருட்டு. கொடிகொடியாய்க் கண்ணைப் பறிக்கிற மின்னல். கடாமுடாவென்று அடிவானத்தில் இடிகளின் குடைச்சல். மழை வந்தன் வந்தன் என்கிறமாதிரி குளுங்காற்று. கொடிக்கம்பிகளில் கிடந்த துணிகளை அவசரமாக எடுத்துக்கொண்டிருந்த பூமா, தூக்கப் பித்தில் குந்தியிருக்கும் அப்பாவைப் பார்த்து திடுக்கிட்டுப் போய்விட்டாள். ‘ எப்பா.. போச்சி போச்சி... நாத்தாங்காலுக்கு தண்ணி வைக்கில...’ கத்தியே விட்டாள்.

உயிரே போய்விட்டது ராசோக்கியத்திற்கு. ஒரே ஓட்டமாய் ஸ்டார்ட்டர் பெட்டியை நோக்கி பதற்றத்தோடு ஓடினார். நின்ற நிலையில் துணிகளைத் தாழ்வாரத்தில் போட்டுவிட்டு பூமாவும் நாற்றாங்காலுக்குப் பாய்ந்தாள். இரைச்சலில் கண்விழித்த பாஞ்சாலைக்கு நொடியில் எல்லாமும் விளங்கி அவளும் ஓடினாள்.

ஓடிய வேகத்தில் பெட்டியைத் திறந்து சுட்சியை அழுத்தினார். அவருக்கு மூச்சே நின்றுவிட்டது. கரண்டு இல்லை. அதற்குள் பூமாவும் பாஞ்சாலையும் ஓடிவந்து, ஊமையாய் இருக்கும் குண்டு பல்ப்பை பார்த்து வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டு நிற்கிறார்கள். “ இப்பிடியாப்பட்ட மூதேவி பகல்ல வந்து என்ன அடைச்சிட்டாள. அடுப்பங்கரையில தான இருந்த, ஒனக்காவது இந்த யோசன வந்துருக்கக்கூடாது.” பூமாவைப் பிடித்து எரிகிறாள்.

கிழக்கே உத்திமாகுளத்துப் பக்கம் நின்று பெய்கிறது. எந்த நேரத்திலும் இப்படி நகர்ந்துவிடக்கூடும். ராசோக்கியம் பரிதாபமாக நாற்றாங்காலைப் பார்க்கிறார். நீட்டிய முளைக்கூர்கள் தரையில் ஊன்றித் திரும்பி நிற்கிற நெல்மணிகள். லேசாய் தூறினால்கூட அதிர்வில் வேரோடு சிதறிவிடு கும்பல் கும்பலாய் கூட்டி விட்டுவிடும். தூரத்தில் பெய்வதோ கல்லால் எறிகிறமாதிரி கனமழை. மெல்ல மேற்கு நோக்கி வருவதற்கு அறி குறியாக லேசாய் காற்று திரும்பவும், ராசோக்கியம் தலையில் கைவைத்தபடி அப்படியே குந்திவிட்டார்.

மழை கிழக்குவெளியை நெருங்கிக் கொண்டிருந்தது. குளிக்க வந்திருப்பார் போலும் கிருஷ்ணமூர்த்தி. ஒழுங்கையிலிருந்து வந்து கொண்டிருக்கும்போதே தலையில் கைவைத்தபடி குந்தியிருக்கும்

ராசோக்கியத்தையும் நாற்றாங்காலில் ஆடலங்கழிகளாய் நின்று கொண்டிருக்கும் பாஞ்சாலையையும் பூமாவையும் பார்த்தவருக்கு, பட்டென்று நாற்றாங்கால் மேல் ஓடியது. " க்கும்... நாத்தங்காலுக்கு தண்ணி வைக்கிலியா போச்சி... போச்சி..."

" தூங்கிட்டன் அண்ண. இந்த நேரம் பாத்து கரண்டு இல்ல..." ராசோக்கியம் அழுதுவிடுவார் போலிருந்தது.

" அவனுவோ ஊட்டிய புடிக்கிறமாதிரி புடிச்சினுவானு வுளாச்ச.." சொன்னவர் திடுமென ஞாபகம் வந்தவராய் " இல்லிய... நா வரும்போது வூட்ல கரண்டு இருந்துத..." சந்தேகமாய் நேரே ஒழுங்கையைப் பார்த்தவர் அதிர்ந்துபோய்விட்டார். கோபால், ட்ரான்ஸ்பார்மர் பக்கத்தில் பெட்டியை நிறுத்துகிற பைப்பை கையில் வைத்தபடி சாவகாசமாக நிற்கிறார். ஓடினவேகத்தில் கிருஷ்ணமூர்த்தி கேட்டார். " ட்ரான்ஸ்மரத்தையா நிறுத்தியிருக்க.."

குரல் கேட்டு திடுக்கிட்ட மாதிரி ராசோக்கியம் எழுந்தார். கோபால் அலட்சியமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். " ஆமா மோட்ருல கொஞ்சம் வேலன்னு நாந்தான் நிறுத்தனன். இடி இடிக்கக்குள்ள எப்படி ஆன் பண்றது.." அவர் சொல்லி முடிக்க வில்லை. எட்டி அவர் கையிலிருந்த பைப்பை வாங்கினார். " எலேய் கொலகாரா... அவன் நாத்தாங்காலுக்கு தண்ணிவைக்க முடியாத தவிச்சிப்போயி நிற்கிறான். நீ எனுமோ கத சொல்லிக்கிட்டு நிக்கிற..."

மழை கிட்டக்க வந்துவிட்டது. பைப்பை வாங்கின வேகத்தில் மாட்டி தலையில் கட்டியிருந்த வேட்டியை வளைத்துப் போட்டுப் பிடித்துக்கொண்டு பல்லைக் கடித்தபடி விலுக்கென்று இழுத்தார். மேலே கத்திகள் ஓடிப் பாய்ந்து " ம்.. என்று இயங்கத் தொடங்கியது பெட்டி.

அடுத்த விநாடி ராசோக்கியம் மோட்டாரை கிளப்பிவிட்டார். மழை ஒழுங்கைக்கும் அங்காண்ட நின்று பெய்தபடி வந்து கொண்டிருக்க சன்னமாய் மெல்லிய தூறல்கள் விழவும் செய்தன. பொதபொதவெனத் தண்ணீர் வாய்க்காலில் விழுந்தோடி நாற்றாங் காலில் பரவியது. பாஞ்சாலையும் பூமாவும் கூடவே தண்ணீரை விடவும் வேகமாய் வாய்க்காலோரம் ஓடி பிதுங்காமல் பிருவங்களில் கசிவதையும் மண்ணை அள்ளிப் போட்டுக் கட்டியபடி பறந்தார்கள்.

நாலாகடையும் தண்ணீர் ஓடிப் பரவிக்கொண்டிருக்க விழுகின்ற மெல்லிய தூறலில் சிற்றலை வட்டங்கள் தோன்றவும் மறையவுமாய் இருக்க, மழை

அங்காண்ட ஒழுங்கை யைத் தொட்டது. நாலாமூலையும் ஓடித்திரும்பித் தேங்கியபோது ராசோக்கியத்திற்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சி. அதே நேரம் மழை சடசடவென நாற்றாங்காலில் இறங்கியது. நெல்மணிகளைக் கொத்த வந்திறங்கும் செறவிப் பறவைகளை விரட்ட நாற்றங்காலில் ஊனியிருந்த கழியில் பறந்த வெள்ளைத் துணி மழையில் நனைந்து சுருங்கிக் கழியோடு ஒட்டிக்கொண்டது. " இனிமே எம்மாம் மழ பேய்ஞ்சாலும் பேயுட்டும். தண்ணிமேல பேஞ்சா ஒண்ணும் ஆவாது." தலை தப்பியது மாதிரி பெரிய ஆசுவாசம்.

நின்று பெய்தது மழை. வாய்க்கால் வழி நுழைகிற தண்ணீர் நாற்றாங்காலை உடைத்துவிடாதபடிக்கு போக்குமடை போக்கு விட்டு நிமிர்ந்தார். பாஞ்சாலையும் பூமாவும் தண்ணீர் பாய்ந்த திருப்தியில் தலையில் துணியைப் போட்டுக்கொண்டே வீட்டை நோக்கி ஓடினார்கள்.

கையிலிருந்த பைப்பை, கோபால் கொட்டகைப் பக்கம் போட்டுவிட்டு, மழையில் நனைந்துகொண்டே கிருஷ்ணமூர்த்தி வந்தார். தண்ணீர் ஊற்றுகிற குழியில் குந்திக் குளிக்கிற மாதிரி தண்ணீர் கிடந்தது. குந்தி முதுகில் வாரி இறைத்துக் குளித்துவிட்டு, மழையில் நின்றவர் சொன்னார் " ஊராள எல்லாம் ஒனக்கு எந்த இமிசையும் கெடயாது. இந்த கோபால் பயகிட்டதான் ஒனக்கு பேர் சொல்லி மாளாது போல்ருக்கு. இடி இடிக்கிறத காரணங் காட்டிக்கிட்டு எனுமா நிக்கிறாம் பாத்தியா. எனக்கு எனுமோ அவன் வேணுமின்னு நிறுத்தன மாதிரிதான் தெரியுது."

" நெசந்தான் அண்ண. ஊராள என்னா மிஞ்சனா ஆட்டு மாட்டு தொந்தரவுதான். அது நாம்பன்னு இல்ல, வழிக்கரையில யாரு பயிரு வைச்சாலும் இருக்கத்தான் செய்யும். ஆனா இந்த ஆளு நாம போரு போட ஆரம்பிச்சதிலேர்ந்து சண்டக்காரனப் பாக்கற மாதிரி மொறைக்கறதும் எதாவது எடைஞ்சல் குடுக்கறதுமாத்தான் இருக்கான் அண்ண... எனுமோ நீங்களே இன்னைக்கி இல்லன்னா, அந்த ஆளு பொட்டிய நிறுத்தி படுத்தன பாட்டுக்கு, நாத்தாங்கால் கத கந்தலாப் போயிருக்கும்." ராசோக்கியம் நெகிழ்வாகச் சொல்லிக் கொண்டிருந்தபோது, பெருமழையாய் வலுத்தது.

*

94

விடியற்காலையிலேயே வண்டியைப் பூட்டி, இளம் வெயிலுக்குள்ளாகவே முதனைக்கு வந்துவிட்டார்கள். தெருவை நெருங்க நெருங்க மலர், கண்ணிலேயே நிற்பதுபோல் தெரிந்தது பூமாவுக்கு. ரோட்டை விட்டுத் திரும்பியதும் ஆவலாய் பார்வை வீட்டை நோக்கி ஓடியது மலர் தென்படாமல் ஏமாந்து திரும்பியது.

வாசலைக் கடந்து தோட்டத்திற்குள் நுழைந்ததும் சத்தம் கேட்டு மலர் வெளியே வந்தாள். " வாங்க மாமா... வாங்க அத்த.." குரலில் சுரத்து இல்லை. முகத்தில் பழைய உற்சாகம் எதுவுமில்லா மல் சாதாரணமாக பூமாவைக் கூப்பிட்டாள் " வாடி.." மோடா மொத்தமாக " வாங்க.." என்று கூப்பிட்ட தங்கப்பழத்தின் பேச்சும் அதிகம் பூசிக்கொள்ளாத இடைவெளியில் இருந்தது. மொத்தத்தில் ஒரு சொந்தக்கார வீட்டிற்கு வந்தமாதிரியே தெரியவில்லை. ஏதோ வழிப்போக்கில் வெயிலுக்கு மாட்டை பூட்டவிட்டு இளைப்பாறு வதற்கு நிழலில் ஒதுங்கியது மாதிரியே உணர்ந்தார்கள்.

பூட்டவிட்டு மாட்டைக் கட்டும்போதுதான் பார்த்தார். கொட்டகையில் சின்னத்தம்பி கட்டிலில் படுத்திருந்தது பெரும் ஆறுதலாக இருந்தது. முதனையில் இருக்கிறவரையில் பகலில் ஒருநாள் கூட அவர் இப்படிப் படுத்துக்கிடந்து ராசோக்கியம் பார்த்ததில்லை.

தூங்காமல் கிடந்து காதில் ஏதாவது விழப்போகிறது என மெதுவாக மலரிடம் கேட்டார் " எம்பளாய்சு எப்பிடி இருக்கிறாரு?"

அவளும் மெதுவாகவேதான் சொன்னாள் " அதுலாம் மின்னமாதிரி கெடையாது மாமா. வேலைக்கிப் போய்ட்டு வந்தா நேரா வூட்டுக்குதான். ஆனா போத போடறதுதான் முன்னைக்கும் இப்ப மோசமா இருக்கு. முந்தா நாளு கூட மேலக்குப்பத்து ஓடையில நெதான மில்லாம வுழுந்து கெடந்து, ராதா வூட்டு செல்வராசு அண்ணந்தான் இட்டாந்து வுட்டுட்டுப் போனாரு."

உள்ளே போய்க் குந்தினார்கள். மலர் கலாராய் பேசாமல் இருந்தது, பூமாவுக்கு என்னவோ போல் இருந்தது. முதனைக்கு வருவதாகக் கிளம்பியபோது பூமாவை வீட்டில் விட்டுவிட்டு வருவதாகத்தான் ஏற்பாடு. ஆனால் மலரைப் பார்த்து விட்டுத்தான் வருவேன் என்று ஒற்றைக்காலில்

நின்று வந்த பூமாவுக்கு, மலரின் இந்தப் பாராமுகம் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தங்கப்பழமேதான் புலம்புகிறமாதிரி சொன்னாள் “ இப்ப யோசிச்சி யோசிச்சிப் பாத்து குடிச்சிட்டுக் கெடந்தா என்னா பண்றது. திடீர்குப்பம் போறதுக்கு மின்ன யோசிச்சி இருக்கணும். ஏம் புள்ளைக்கி அது நெனைச்சமாதிரி வாழ்க்க கெடைக்கல. சொந்தம் வுட்டுடும் போல்ருக்குன்னு பொழுது முப்பது நாழியும் பொலம்பிக் கிட்டு கெடந்து என்னா புண்ணியம்.” சதாசிவம் உடாறித்து விட்டது பற்றிய தங்கப்பழத்தின் பேச்சு.

“ அவுரு ஆத்தா அப்பனே வேணாமுன்னு பெரிய குதிர ஏறறதுக்கு நிக்கிறாரு. இதுல சொந்தம் பந்தமுன்னுதானா பாக்கப் போறாரு..” பாஞ்சாலைக்கு சொல்லும்போது குரல் அடைத்தது.

பூமாவுக்கு சாப்பிடாமல் கிளம்பி வந்தது, பசி எடுத்தது. எழுந்துபோய் தண்ணீர் மொண்டு குடித்தாள். திடுக்கிட்டு உணர்ந்தவளாய் தங்கப்பழம் எழுந்தாள். “ சரி சாப்புடுங்க..”

பூமா தோட்டத்திற்குக் கை கழுவப்போனாள். கொட்டகையில் நின்றிருந்த பசுமாடும் கன்றுக்குட்டியும் நெடுநாள் பிரிந்த பாசத்தை காட்ட நெம்பிக்கொண்டு நின்றன. கிட்டப் போகவும் இரண்டும் வந்து உரசிக்கொண்டு நின்றன. சொறிந்துவிட்டாள். ஒணக்கையாக தலையைத் தூக்கி கழுத்தைக் காட்டிக்கொண்டிருந்தன. கோழியும் வளர்ந்துவிட்ட குஞ்சுகளோடு ஓடி வந்தது.

நல்ல வெயிலுக்கு சின்னத்தம்பி எழுந்தார். தூக்கமும் போதையும் முகத்தில் அகலாமல் கிடந்தது. வாசலில் நின்றவர் வீட்டிற்குள் குந்தியிருப்பவர்களை எதிர்பார்க்கவில்லை. ஒப்புக்கு கூப்பிட்டார் “ வாங்க...” வேறெதுவும் பேசவில்லை.

தோட்டத்தில் போய்க் குளித்துவிட்டு, வேலைக்குக் கிளம்பினார். சட்டை பேண்ட்டை மாட்டிக்கொண்டிருக்கும் போது தங்கப்பழம் சாப்பாட்டை கொண்டுவந்து வைத்தாள். சொன்னார், குரலில் கரகரப்பு. “ நா கேண்டின்ல சாப்புட்டுக்கறம்.. வேணாம்...”

சைக்கிளை தள்ளிக்கொண்டு வெளியே வந்தார். ராசோக் கியம் கிட்டப்போய் சொன்னார் “ நாங்களும் வெய்ய தாழ கௌம்பறம். ஊரு ஒட்டா கொல்ல. நீர்மோட்ரு போட்டதுல வேற ஊர்ல ஓமலு...”

“ சரி..” என்ற வார்த்தையைச் சொன்ன சின்னத்தம்பிக்கு ராசோக்கியத்தை

ஏறெடுத்துப் பார்க்கமுடியவில்லை. ஏற்கெனவே ஒன்றும் கட்டிப்பிடித்துக் கொள்கிற மாதிரியான நெருக்கம் இல்லையென்றாலும் திடீர்குப்பம் பஞ்சாயத்திற்குப் பிறகு பேச்சு சுத்தமாய் அறுத்துவிட்ட மாதிரியிருந்தது.

“ அப்பறம் ஒடம்ப பாத்துக்க. செவுரு இருந்தாதான் சித்திரம் எழுதமுடியும். பீய்ய தின்னமா வாயக் கழுவனாமாங்கறமாதிரி சுத்தமா எல்லாத்தையும் வுட்டுத்தொலைச்சிட்டு, இந்த போத போடறதையும் கொறைச்சிக்கிட்டு குடும்பத்தப் பாரு. புள்ளய எங்கியாவுது புடிச்சிக்குடுக்கிற வழியப் பாரு...” சொல்லி முடித்தபோது ராசோக்கியத்திற்கும், கூட நின்றிருந்த பூமா, பாஞ்சாலை எல்லோருக்கும் கண்களில் துளிர்த்தது. வீட்டுக்குள் தங்கப்பழமும் மலரும் பரிதாபமாக நின்றுகொண்டிருந்தார்கள்.

என்ன நினைத்தாரோ சைக்கிளில் ஏறப்போன சின்னத்தம்பி, தயங்கித் தவித்தமாதிரி திரும்பி நின்று ராசோக்கியத்தைப் பார்த்து கேட்டார். “ நா வேண்ணா சதாசிவத்த நேர்ல பார்த்து ஒரு வார்த்த கேக்குட்டுமா...” குரல் சுத்தமாய் இறங்கியிருந்தது.

பூமாவுக்குள் பட்டென்று சிறு நம்பிக்கை. மலரை வேண்டாம் என்பதற்கு காரணமாய் காட்டும் மாமனே நேரில் போய்க் கேட்டால் அண்ணங்காரனிடம் நிச்சயம் மாறுதல் தெரியும். மனம் இறங்கலாம். பாஞ்சாலைக்கும் ராசோக்கியத்திற்கும் அது சரியென்று படுகிறமாதிரி தெரிந்தது. வீட்டுக்குள் நின்றிருந்த தங்கப்பழத்திற்கு பொசுக்கென எல்லாமும் கூடி வருகிறமாதிரியாய் துளி வெளிச்சம்.

ஆனால் எல்லாவற்றையும் பொய்யாக்குகிற மாதிரி குறுக்கில் பாய்ந்தது மலரின் குரல் “ என்ன வேணான்னு சொன்னப்பறம் அதுகிட்ட வலினாப் போயி யாரும் நேர்லியும் கேக்க வேணாம் மறவாவும் கேக்கவேணாம். வுட்டுட்டு வேலயப் பாருங்க. திடீர்குப்பம் போயி நிக்கும்போது வூட்ல புள்ள இருக்கறது தெரியிலிய. இப்பத்தான் ரொம்ப அக்கறையாப் போயி கேக்கப்போறாரு.”

ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுகிறமாதிரி மலரின் பேச்சு. எல்லோரும் ஒரு கணம் அப்படியே வெலவெலத்துப் போய் நின்று விட்டார்கள். கீச்சா ராமா என எதுவும் வாயைத் திறக்காமல் சைக்கிளில் ஏறிப் போய்க்கொண்டிருந்தார் சின்னத்தம்பி. இனிமேல் எந்தவொரு பிடிமானத்திற்கும் வழியில்லாமல், சதாசிவத்திற்கு சற்றும் சளைக்காத மலரின் தாண்டிய வார்த்தைகள். பூமாவுக்கு கலகலவென்று கண்களில் இறங்குகிறது.

“ சரி வர்றம்பா. பாத்து இருங்க.” வெயிலை எதிர்பார்க்காமல்

கிளம்பினார்கள். முகஞ் செத்துப்போய் நிற்கும் தங்கப்பழத்தைப் பார்த்துக்கொண்டே பாஞ்சாலையும் பூமாவும் வண்டியில் குந்தி யிருக்க ராசோக்கியம் ஓட்டிக்கொண்டு போனார்.

சூரியன் விழவும், வண்டி ஊருக்குள் நுழையவும் சரியாக இருந்தது. தெருவில் வந்துகொண்டிருக்கும்போதே ஒழுங்கையைப் பார்த்தவர் பதறினார். கொல்லைக்கு நேர் கிளுவையில் நிறைய ஆடுகள் தாவுகால் போட்டபடி நின்றிருந்தன. " நெனைச்சன், பாரு எனுமா ஆடுவோ நிக்கிது பாரு. ஓடும்மா..." பூமாவிடம் பதட்ட மாகச் சொன்னார்.

கோயில் தெரு ராசமாணிக்கம் வீட்டு ஆடுகள்தான். இத்தனைக்கும் கருவை மரத்தில் தொற்றிக்கிடக்கும் சீலைத்துணியைப்போல, கருத்த உடம்பில் நீர்ச்சீலை மட்டும் கட்டிக்கொண்டு வாங்குகழியோடு கூடவேதான் நின்று கொண்டிருக்கிறார். கிளுவையில் தாவுகால் போட்ட மில்லாமல் மூன்று ஆடுகள் எப்படியோ உள்ளே போய் நாற்றாங்காலில் குழப்பிக்கொண்டு நின்றிருந்தன.

வேப்பங்குறிச்சியாக இருந்தால் பூமாவும் கடந்து பேசக்கூடியவள் தான். வந்த இடத்தில் வேகமாகப் பேசக் கூசியதில் " என்னா இப்பிடி வுட்டு அழும்பு பண்றீங்க.." என்று கேட்டுக் கொண்டே வளைத்து ஓட்டினாள்.

பூமாவைக்கூட அந்த ஆள் பொருட்படுத்தவில்லை. உள் பக்கமாக வந்து நின்றவற்றை விரட்டிய ராசோக்கியத்தைப் பார்த்த பிறகுதான் ஒப்புக்கு ஓட்டுவதுபோல் அதட்டினார் " கருமாந்தர ஆடுவோ பொழுதேறிக்கும் மேஞ்சாலும் பொழுதோட புள்ளையார் மேல கெடக்கிற பூவக் கடிக்குங்கிறமாதிரி வூட்டுக்கு ஓட்டிக்கிட்டு வர்றப்பதான் வேலிமேல ஏறுது." உள்நுழைந்த வழி தெரியாமல் அங்குமிங்கும் முட்டிமோதிய ஆடுகள், புது வழியைப் போட்டுக்கொண்டு வெளியே வந்தன. ராசோக்கியத் திற்குப் பொறி பறந்தது. அதுவும் நாற்றாங்காலைக் குழப்பிய வெள்ளாடுகள். தாண்டி விட்டார் " யோவ், ஒனக்குலாம் வயசி ஆகிப்போச்சே தவிர அறிவுங்கறதே கெடையாது. ஆட்டக் கொண்டாந்து எங்க வுட்டுட்டு... என்னா அதம் பண்ணுது. எனுமோ இப்பதான் கத சொல்லிக்கிட்டு நிக்கிற..."

ராசமாணிக்கமும் மின்னது பின்னது பாக்காத ரகம். அவருக்கும் எ கிறி விட்டது " வேலி கிளுவையில இருந்தா வெள்ளாடு வெட்டிப் போட்டாலும் நிக்காதுங்கறது தெரியாம, வழிக்கரையில கிளுவ முள்ள ஊனனாம்பாரு அவந்தான் அறிவில்லாதவன். என்னப் போயி அறிவு இருக்காங்கற."

“ ஏதோ வெவரந் தெரியாத ரெட்டிதான் அந்தக் காலத்துல வைச்சிட்டான். வெவரம் உள்ள ஆளுவோ நீங்களாச்சும் வுடாம ஓட்டிக்கிட்டு போறது.” கடந்து பேசிக்கொண்டிருந்த ராசோக்கியத்தைப் பூமாதான் அடக்கினாள் “ சரி வுட்டுட்டுப் போப்பா..”

ராசமாணிக்கம் சத்தம் போட்டுக்கொண்டே போனார். “ அதான், வேலியக் கட்டி வெவசாயம் பண்ணிக் கிழிச்சிட்டுப் பூட்டான் ரெட்டி. அடுத்தாப்ல இவுரு வேப்பங்குறிச்சிலேர்ந்து பெரிய படாச்சி கிழிக்க வந்துருக்காரு. எனுமோ கிளுவையில நொழைஞ்சி இஞ்சிமஞ்சளத் தின்னுட்டமாதிரி.”

ஆணியைத் தரும்புகிறமாதிரி வார்த்தைகள். ராசோக்கியத் திற்கு சுருக்கு சுருக்கென நெஞ்சில் வலி தெறித்தது.

“ நானும் எம்மானே பொறுமையா இருந்துதான் பாக்கறன். ஆனாலும் மணக்கொல்லியில ஒண்ணும் குடும்பம் நடத்திக் காலந்தள்ள முடியாது போல்ருக்கு.” விசனமாக சொல்லிக் கொண்டே கட்டிலில் குந்தினார்.

“ என்னா வேப்பங்குறிச்சாருக்கு அதுக்குள்ள அம்மாஞ் சலிப்பாப் போச்சி மணக்கொல்ல...” சொல்லியபடி சாப்பாட்டை எடுத்துவந்து வாசலில் குந்தினாள் குங்குமம். “ சாப்புடுங்களன்.”

“ சாப்பாடு என்னா பெரிய சாப்பாடு. அந்த ஆள்னா அன்னைக்கி அரவந்தெரியாம கரண்ட நிறுத்திட்டு நிக்கிறான். சாயந்திரம்னா இவன் ஆட்ட கொண்டாந்து வுடுறான்.” ராசோக்கியம் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்ததும் கலியபெருமாள் அமர்த்தினார்.

“ வுடுங்க. ஊருல நாலு பேரு அப்பிடிதான் இருப்பான்.”

“ அப்பிடி இல்லிங்க. நானும் வந்து கொல்லிய ஏசகமா ஒண்ணும் ஓட்டுல. நம்மூட்டு காசிய கொட்டி நெரவி வாங்கி, குறுக்கால போறவன்லாம் ஒண்ணு கெடக்க ஒண்ணு பேசறப்ப, வவுத்து எரிச்ச எனுமா வருது.” ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

ராசோக்கியத்தின் பேச்சு சத்தத்தில் பூமாவும் பாஞ்சாலையும் எழுந்து வந்துவிட்டார்கள். பாயைக் காட்டி “ வாங்க... குந்துங்க...” என்றாள் குங்குமம்.

குந்தாமல் பாஞ்சாலை பஞ்சாயத்தம் வைக்கிறமாதிரி சொன்னாள் “ ரொம்ப மோசம் பண்றாங்க. செத்த பாத்து சண்ட போடுங்க..”

பூமாவும் கூட சொன்னாள் “ ஒரு பட்டி ஆடு. அந்த ஆளு வுட்டுட்டு அக்கடான்னு நிக்கிறாரு..”

கலியபெருமாள் பூமாவைப் பார்த்துச் சொன்னார் “ அவன் ஒரு கொலகாரன். ஒங்க கொல்லதான்னு இல்ல. இங்க எவங் கொல்லியா இருந்தாலும் பழிபாவத்துக்கு அஞ்சாம நடுக் கொல்லி யிலதான் ஆட்ட வுட்டுக்கிட்டு நிப்பான். யாரு எவுருன்னு பாக்காம, அவன் அப்பனமாதிரி எடுத்துக் கெடாசிதாம் பேசுவான். அவங் கெடக்கறான் வுடு. ஆனா.. இந்த கோபால்தான்...” இறுதியில் பேரைச் சொல்கிறபோது கொஞ்சம் அடக்கி வாசிக்கிறமாதிரி இழுத்து தொடர்ந்தார் “ இங்காண்ட நீர்மோட்ரு போட்டதுல, தண்ணி எட்டாமுட்டிக்கா போயி அங்காண்ட அவம் மோட்ரு தலை யாட்டுது போல்ருக்கு. ஏற்கனவே அவந் தம்பி, மொவனுவோன்னு ரொம்பவும் யோக்கியனுவோ. இதுல இந்தத் தண்ணி சிக்கல்ல, பொட்டிய நிறுத்தறம் போறன்னு உள்ளடி வேலையில எறங்கறானுவோ போல்ருக்கு..”

பூமாவுக்கு ஒரு கணம் தண்ணீர் மொள்ளப் போனபோது வெறித்தபடி பார்த்த கோபால் மகனைப் பற்றிச் சொல்லலாமா என்று யோசித்தவள் ‘ எதுக்கு வம்பு’ என விட்டுவிட்டாள்.

“ தண்ணி கொறையுதுங்கறது வாஸ்தவந்தான் அண்ண. ஆனா நீங்களே யோசிச்சிப் பாருங்க. வேப்பங்குறிச்சில அய்னா கோயிலு ஒட்டா கெணறு இஞ்சினோட நடு சதுரம். படியாள வெரைச்சி பரையால அளக்கறமாதிரி வெளையிற தங்கமான எடம். அப்பேர்க் கொத்த எடத்த வுட்டுட்டு..” பூமாவைக் காட்டினார் “ இந்தப் பொட்டப்புள்ளயக் கூட ஒரு எடத்துல புடிச்சிக் குடுக்காம கொண்டாந்து இந்தக் கொல்லியில போட்டுட்டு, மானத்த பாத்துக் கிட்டா குந்தியிருக்கறதுன்னு தண்ணிக்கி ஒரு வழியத் தேடனம். அந்தச் செம்பையய்யனார் புண்ணியத்துல ரவ தண்ணியும் கெடைச்சிது. இன்னைக்கி அந்தத் தண்ணியால ஒரு தற்கொறச்சல்னா, கொல்லிக்கி ஒரு தண்ணிய கிண்ணிய வுடச்சொன்னா வுடலாம். இல்ல நெரந்தரமாவே ஒரு கா காணி அர காணிக்கி எதியுமே குடுக்கவேணாம், எனாமாவே கட்டிக்கிட்டும். அதலாம் வுட்டுட்டு காத்துமழ வர்றப்ப பொட்டிய நிறுத்தறதும் போறதும்.. இதுலாம் நாயமா.. ஆயிரமே வந்தாரங்குடியா இருந்தாலும் இதுலாம் அடுக்காதுங்க..” ராசோக்கியம் வாசாங்கு விடுவது மாதிரி சொன்னார்.

கலியபெருமாள் ஒன்றும் சொல்ல முடியவில்லை. “ சரி. ரெட்டியாருகிட்ட ஒரு வார்த்த சொல்லிப்பாப்பும் வுடு..” ஏதோ சொல்லவேண்டும் என்பதுபோல் சொன்னார்.

உள்ளே கேட்டுக் கொண்டே சாப்பிட்டிருப்பான் போலும், முருகன் கையைத் துடைத்த படி வெளியே வந்ததும் கலிய பெருமாளைப் பார்த்து சண்டை போட்டான் “ என்னாப்பா ரெட்டியாரு கிட்டியாருன்னு கூழ ஆத்திக்கிட்டு, இந்த ஆளையும் அந்த ஆட்டுக்காரரையும் நேர்லியே பாத்து சண்ட போட்டு வுடு. அப்பறம் முதனைக்கி பெரிப்பாவுக்கு சேதி போச்சினா, நம்பள மொறைப்பாரு...”

முருகன் சற்று சத்தமாக கறாராகப் பேசியதும் கலியபெருமாளால் எதுவும் மறுத்துப் பேசமுடியவில்லை. உண்மையான அக்கறையில் அவன் பேசியது இவர்களுக்கும் ஆறுதலாக இருந்தது. பூமாவுக்கு கூடப்பிறந்த பிறப்பைப் போன்று முருகன் மீது ஒரு பெரிய மதிப்பு வந்துவிட்டது. நெகிழ்ந்த மாதிரி சொன்னாள் “ ஒங்கள நம்பித்தான் வந்துருக்கம். செத்த பாத்துக்குங்க அண்ண..”

“ அட நீ வேற ஏம்மா.. இவனுவோ கெடக்கறானுவோ. வேலயப் பாரன்.” முருகன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே செயக்கொடி உள்ளிருந்து வந்து கூப்பிட்டாள். “ வாக்கா சாப்புடலாம்..”

“ முருகு அண்ணஞ் சொன்னதே எங்களுக்குச் சாப்புட்ட மாதிரி...”

*

95

பி ரமாண்டமாய் அடுத்தடுத்த மட்டுகளைக் கீழே இறுத்திய படி நகர்ந்து கொண்டிருந்தது சுரங்கவெட்டு வேலை. அதற்கேற்றாற் போல் மேற்கில் நீண்டு மலையைப்போல் உயர்ந்து கொண்டிருந்தது மண்மேடு. தூற்றுவதுபோல் மண்ணைக் கொட்டிக்கொண்டிருக்கும் இயந்திரக் கரத்திலிருந்து கிளம்பும் புழுதி, அதிகாலை வெயிலில் வெங்கல மாசியைப் போல் தோற்றங்காட்டியது. பார்த்துக் கொண்டிருந்த சிகாமணி, திரும்பி பல்குச்சியைக் கிழித்து நாக்கை வழித்தபடி ஓடையில் இறங்கி அய்யனார் துறிஞ்சிக்கு நேர் ஏறினான்.

பழைய வேப்பங்குறிச்சியில் இருந்ததுபோல் கனத்த மீசையோடு அய்யனாருக்கு சிலை வைக்கவேண்டும். குதிரைகள் செய்ய வேண்டும். அய்யனாருக்காக இல்லாவிட்டாலும் ஒரு கைகால் அலம்பவாவது ஒரு குளமோ குட்டையோ வெட்ட ஏற்பாடு செய்யவேண்டும். யோசித்துக்கொண்டே வந்தான். கருவைப் புதர் மறைவில் ஒதுங்கியிருந்த ஒன்றிரண்டு சனங்கள் இவனைப் பார்த்து விட்டு எழுந்தார்கள்.

“ கீர... கீரேய்... புளிச்ச கீரேய்...” தெருவில் சைக்கிள்காரன் ஏலம் போட்டுக்கொண்டு போனான். சிகாமணி, சந்தால் நுழைந்து தோட்டத்திற்குப் போனான். இவனைக் கண்டவுடன் விளக்கிக் கொண்டிருந்த ஏனங்களை, அசலாம்பு கடாமுடாவென்று கூடுதல் வேகத்தில் போட்டு உடைப்பதாய்த் தெரிந்தது. பாவம் அவள் மட்டும் என்ன செய்வாள். ஆடின காலமெல்லாம் ஆட்டமாய் ஆடி, வாங்காத வம்பையெல்லாம் வாங்கி, கடைசியில் படுக்கையில் படாதபாட்டை பட்டுக்கொண்டும் படுத்திக்கொண்டுமாய் இருக்கிற குடிகாரப் புருஷன். அதைவிடவும் கழுத்தில் கிடக்கற கயித்துக்கு பழுது வந்து நேர்வதற்குள், இவனுக்கு ஒரு கன்னி கழித்துவிட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு. எல்லாமும் கூடி இப்போதெல்லாம் கோபப்படுவதும், எரிந்து விழுவதும் ஏனங்களைப் போட்டு உடைப்பதுமாகப் போய்க்கொண்டிருக்கிறாள். கடந்து “ ஏங் குடும்பத்த இந்த கெதிக்கு கொண்டாந்து வுட்டானுவுளே. அவனுவோ நெல்லா இருப்பானுவுளா, நாதியத்துப் போவானுவுளா. என்ன மாதிரி அவளும் அவ புள்ளையும் நின்னு தெவைக்குமா...” ராசோக்கியம் குடும்பத்தை வாசாங்காய் விட்டு அடிப்பாள்.

பூமா குடும்பத்தை இழுத்து அவர்களைப் பற்றி அசலாம்பு பேசுகிறபோது அவனுக்கு எரிச்சலாகவே இருக்கும். கைகால் கழுவிக்கொண்டு நிமிர்கிறபோது வெளியே இருமல் சத்தம் கேட்டது. பொசுக்கென்று அசலாம்பு, சிகாமணி இருவருக்குள்ளும் ஒரு சொடுக்கம். இனி சன்னமாய் தொடங்கும் இருமல் மெல்ல உக்கிரத்திற்கு போய், ஒரு கட்டத்தில் மூச்சுக்கூட விடமுடியாமல், அல்லைகள் இழுக்க போய்ப் பார்த்தால் முழி பிதுங்கிப் பரிதாபகரமாகக் குந்தியிருப்பார் செங்கல்ராவு.

வாட்டத்தோடு இருவரும் நின்ற நேரம், வெளியே கேட்ட இருமல், எப்போதுமில்லாதபடிக்கு உடன் நின்று ஒரே அமைதி. கேட்ட ஒன்றிரண்டு இருமல்களும் வழக்கம்போல் கனக்க இல்லாமல் சாதாரணமாக இருந்ததும், சந்தேகத்தோடு அசலாம்பு ஏணங்களை அப்படியே வைத்துவிட்டு முன்னவும் சிகாமணி பின்னவுமாய் திண்ணைக்குப் போனார்கள்.

ஆச்சரியமான ஆச்சரியம். தூக்கி சிரமப்பட்டு சுவரில் சாய்த்துவிடப்பட்டிருந்த செங்கல்ராவு, சாதாரணமாக நகர்ந்து குந்தியிருப்பது போன்று சுவரை ஒட்டி இயல்பாக சாய்ந்து ஆச்சலாகக் குந்தியிருந்தார். இருபக்கமும் தாங்கலாய் ஊன்றிக் கொண்டிருக்கும் கைகள்கூட மடிமீது கோர்த்தபடி கிடந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வாய் குடித்ததா இல்லையா என்கிற மாதிரி வைச்சது வைச்சமாதிரி எறும்பேறிக் கிடக்கிற பால், இப்போது தம்ளர் முழுவதும் காலியாகியிருந்தது. தாடியும்தப்புமாய்க் கிடந்த முகத்தில் சற்றே தெளிந்த மாதிரி ஒரு பார்வை. அதேபோன்று நீட்டிக் கிடந்த கால்களும் லேசாய் ஆடிக்கொண்டிருந்தன.

இருவருக்குமே நம்ப முடியவில்லை. ஆர்வத்தில் குந்தி கூப்பிட்டான் " எப்பா..." அசலாம்பு துளிர்த்த கண்ணீரோடு குனிந்து தோளைத் தொட்டாள். திரும்பிய செங்கல்ராவு முகத்தில் மெல்லிசாய் ஒரு இழையோடியது. " அப்பா இனுமே தேறிப்பாரு, பயப்படா தம்மா..." மன வலிகளையெல்லாம் மீறி தெம்பாய் சிகாமணி சொன்னான்.

" என்னா பாக்குறிங்க... எனுமா இருக்கு..." தெருவிலிருந்து செல்லப்பாங்கி கேட்டுக்கொண்டே வந்தாள்.

" என்னான்னு தெரியில. நேத்திலாம் ஒரு மொணறு பாலு கூட உள்ளுக்குப் போவாத ரொம்ப பயங் காட்டிக்கிட்டு கெடந்துது. இன்னைக்கி இருமலு கொறைஞ்சி அதுபாட்டுக்கும் செவுத்துல சாஞ்சிகிட்டு பொசுக்கு பொசுக்குன்னு பாக்குது. முழு டம்ளரு பாலையும் நெட்டி வைச்சிருக்குது. ஒருவேள தெளுவு குடுத்துக் கிடுத்து அடிக்கப்போவுதோ என்னான்னு

தெரியிலய...” ஈர எச்சில், சளி ஏதுமில்லாது காய்ந்துகிடக்கும் கொட்டாஞ்சி மணலைப் பார்த்துக் கொண்டே குழப்பமாகச் சொன்னாள்.

“ என்னா சொல்றீங்க...” சந்தேகத்தோடு செல்லப்பாங்கியும் வந்து கூப்பிட்டாள் “ எப்பா...”

“ என்னா...” என்று கேட்காத குறைதான், வெடுக்கென்று திரும்பிப் பார்த்தார். செல்லப்பாங்கி தன்ன மறந்து பட்டென்று துறிஞ்சி அய்யனார் இருக்கும் திக்கை நோக்கிக் கும்பிட்டாள். “ எப்பா அய்யனார, இப்பத்தான்டா சாமி எங்குளுக்கு மனங் குளுந்துது.” கும்பிட்ட நேருக்கு தூரத்து மண்மேட்டில் இயந்திரம் மண்கொட்டிக் கொண்டிருந்தது.

“ இனுமே ஒண்ணும் பயமில்ல... எம்மா...” செல்லப்பாங்கி சொல்லிக்கொண்டு இருக்கும்போது செங்கல்ராவின் உதடுகள் லேசாய் முணுமுணுத்தன. சற்றுநேரத்தில் சன்னமாய் குரலும் கேட்டது.

‘ தத்தத்தன தனனா தனனா

தத்தத்தன தனனா தனனா...’

திருப்புகழ் ஓடிக்கொண்டிருந்தது. சிகாமணிக்கும் செல்லப் பாங்கிக்கும் நம்பிக்கை வர, மாறாக அசலாம்புக்குக் கூடுதலாய் பயம் தொற்றிக்கொண்டது.

“ தண்ணி தளுப்ப பாத்துக் குடுங்க. இந்த மொற தப்பிக் கிட்டாரு...”

செல்லப்பாங்கி போய் தெருவில் எதிர்ப்பட்டவர்களிட மெல்லாம் சொல்லி, எல்லோருமே ஆர்வமாய் ஓடிவந்து பார்க்கிறார்கள். முத்துக்கண்ணு ஆயி “ என்னா மூத்தவர...” என்கிறாள். காசாம்பு “ என்னா அசலாம்பு வூடு... எனுமா இருக்கு...” கேட்கவும் ஆர்வமாய்த் திரும்புகிறார். பதிலுக்குப் பேசவில்லையே தவிர பாட்டுக்குக் குறைச்சல் இல்லை. மகிழ்வில் கரி படாச்சி கேட்டார் “ ஒக்காள ஓழி... இம்மாம் நாளு இந்தப் பாட்ட எங்கடா வைச்சிருந்த...” ரங்கநாதும் பார்த்து கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனார்.

சேதி கேள்விப்பட்டு, கனகராசுதான் ஆற்றமாட்டாமல் சொல்லிக் கொண்டிருந்தார் “ படுக்கையில வுழுந்ததுல குடிக் கறதுக்கு எட்டியிருக்காது. அதான் ஓடம்பு தேறி பாட்டு கௗம்பி யிருக்கும். அந்த அம்மாளு லொசுக்குன்னா எங்களாலதாம் பூட்டு துன்னு வாசாங்கு வுட்டு அடிக்கிது. இனிமேல்பட்டு எதாவது எங்களப் பத்தி வாயத் தொறக்கட்டும்...” கடைசியில எச்சரிக்கை செய்கிறமாதிரியும் பேசினார்.

நேரம் ஆக ஆக நல்ல முன்னேற்றம். அவராகப் பின்னுக்கு நகர்ந்து இறங்கிப் படுக்கவும், லேசான கைத்தாங்கலில் முயன்று சுவரில் சாய்ந்து குந்தவும் நல்ல தெளிவு. குரலும் பிரிந்து பாட்டும் புரிந்தது.

உறும நேரம். திடுமென தெருக்கூத்தில் பாடுவதுபோல் அந்தப் பெருங்குரலும் உடல்தெம்பும் எங்கிருந்து வந்ததெனத் தெரிய வில்லை. தெருவிலிருந்தவர்கள் எல்லோரும் திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்க்கவும் கவனிக்கவுமாய் நிற்க... அவருக்குப் பிடித்த மான திருப்புகழ். சபையில் விரும்பிப் பாடப்படும் அவரின் கைப்பாட்டு. உற்சாகத்தோடு பாடுகிறார்.

“ கழியுதடா நாளிங்கு

கணக்குப் பாக்குறானங்கு

காலமெல்லாம் ஏதிங்கு

கடனேது..”

பாடி முடித்தவுடன், எல்லோரும் அதிர்ச்சியாய் நிற்க அசலாம்பு நினைத்தது போலவே செங்கல்ராவுக்கு பட்டென்று தலை தொங்கிவிட்டது.

*

96

“ எள்ளுப்பொட்டு இருக்கா...”

“ எள்ளுப்பொட்டு இருந்தாச் சொல்லுங்க..”

விருத்தாசலம் கமிட்டிக்குள் நுழைவதற்கு முன்பாகவே வண்டியின் சூத்தைப் பிடித்தபடி சிறுவியாபாரிகள் கேட்டுக் கொண்டே வந்தார்கள். குத்தூசி போட்டுக் குத்துகிற மாதிரி ஒருவன் மூட்டையை விரலால் நிண்டியபடியே வந்தான். பின்னால் குந்தியிருந்த கிருஷ்ணமூர்த்திக்கு எரிச்சல் வந்துவிட்டது. “ எள்ளுக்கு யேபாரிவோ வர்றானுவுளோ இல்லியோ, எள்ளுப் பொட்டுக்கு பிலிபிலின்னு வந்து நிக்கிறீங்க.. எள்ளுப்பொட்டும் இல்ல, ஒண்ணும் இல்ல..” விழுந்து பிடுங்காத குறையாய்ப் பேசினார்.

“ இல்லன்னு சொல்லிட்டுப் போயன்யா. இப்பதான் சூத்துல வரகு வைக்கில துருத்துக்கிட்டு கத்தற” கடுப் படித்துவிட்டு எட்டப்போனான் ஒருவன்.

உள்ளே நுழைந்து களத்து கிட்டப் போகும்போது நிறையப் பேர் எள்ளுப்பொட்டு கேட்டபடி திரும்பவும் வந்து சூழ்ந்து கொண்டார்கள். “ அண்ண, பின்னால மூட்டமேல கண்ணு இருக்கட்டும்...” எச்சரிக்கை செய்தார் ராசோக்கியம்.

“ நா பாத்துக்கிறன் ஓட்டு..” நன்றாகப் பின்பக்கம் நகர்ந்து குந்திக்கொண்டார். பெரும்பாலும் கமிட்டிக்கு வருபவர்கள் சுத்தம் செய்வதில் ஒதுங்குகிற எள்ளுப்பொட்டைத் தனியாக பையில், சிப்பத்தில்தான் கட்டி எடுத்து வருவார்கள். கொஞ்சம் அசந்தாலும் இந்தப் பொட்டுஎள் கேட்டு வருபவர்கள், மூட்டை சந்தில் கிடக்கிற அந்தப் பையை, பைசாக்கை அரவந் தெரியாமல் கெப்பிக்கொண்டு போய்விடுவார்கள். வண்டியில் குந்தியிருப்பவர்களுக்கும் மூட்டையை எங்கு இறக்கலாம், எந்த வரிசையில் குத்தலாம் என்று யோசனை ஓடுமே தவிர இந்த எள்ளுப்பொட்டுச் சிப்பத்தின் மீது ஓடாது. மூட்டையை இறக்கி வைத்துவிட்டு, ஆச்சலாய் நிற்கையில்தான் எள்ளுப்பொட்டு யோசனை வரும். ஓடி வண்டியில் பார்த்தால் ‘ க்கும்..’ ஏமாந்துதான் போகும்.

நடுவண்டியில் குந்தியிருக்கும் பாஞ்சாலை, ஒரு பெரிய பையில் ஐந்தாறு படிக்கு ஆகும் எள்ளைப் பாதுகாப்பாய் கீழே போட்டு அதன்மீது

குந்தியிருந்தாள். வேப்பங்குறிச்சியில் மகசூல் வைக்கும் போதும் எள்ளோ கம்போ மள்ளாட்டையோ இங்குதான் எடுத்து வரவேண்டும். மள்ளாட்டை, எள் என்று வந்தால் மட்டும் வண்டி கூடவே பாஞ்சாலையும் வருவாள். ஒரு காணத்திற்கு ஆகிற மாதிரி எடுத்து கிட்டக்க இருந்து ஆடி, வண்டியோடு எண்ணையை எடுத்துப் போய்விடுவாள். அதே போன்று பொட்டுஎள் எடுத்து வந்து விற்பதைப் பாஞ்சாலையே வைத்துக்கொள்வாள். உரம் வாங்க, மருந்து வாங்க என பணத் தொக்கடைக்கு ‘ செல்லப் பாங்கிகிட்ட வாங்கனன், முத்துக்கண்ணு ஆயிகிட்ட வாங்கனன்’ எனக் கடன் வாங்கி வந்து கொடுப்பது மாதிரி கொடுப்பாள். அது பாஞ்சாலையுடைய செறுவாடுதான் எனத் தெரிந்தும் ராசோக்கியம் காட்டிக் கொள்ளமாட்டார். அதேபோன்று திரும்ப கமிட்டிக்கு போய்வருகிற போதோ, மரமட்டையில் ஏதாவது கிடைக்கிற போதோ மேலே பத்து ஐந்தை வட்டியாகப் போட்டு ‘ வாங்கன எடத்துல நாணயம் தவறாமக் கொண்டுபோயி குடு. அப்பத்தான் நாளப் பின்ன ஒரு முட்டாட்டத்துக்கு குடுப்பாங்க..’ சிரிப்பை மறைத்துக்கொண்டே கொடுப்பார். ‘ இம்மாம் நாளு கெடந்துட்டு நேத்திக்கிதான் கேட்டாங்க. சரி குடு. சாயந்திரம் கையோட கையாக் கொண்டுபோயி குடுத்துடறன்.’ வாங்கி ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் கொண்டுபோய் அடுக்குப்பானையில் வைத்துக் கொள்வாள்.

எள்ளு குடோன் கிட்ட கொண்டுபோய் வண்டியை நிறுத்தும் போது பொழுது நன்றாக விடிந்திருந்தது. குடோனிலிருந்து போகவும் வரவுமாய் நிறைய ஆட்கள். எல்லோர் முகத்திலும் இரவு முழுவதும் கண்விழித்திருந்த களைப்பு தெரிந்தது. கொட்டாவி விட்டபடி கிருஷ்ணமூர்த்தி இறங்கி குடோனுக்குள் இறக்குவதற்கு இடம் பார்க்க நுழைந்தார்.

ராசோக்கியத்திற்கும் கண்கள் எரிந்தன. இத்தனைக்கும் பாதி ராத்திரிக்கு மேல்தான் வண்டியைப் பூட்டினார்கள். எள் அறுக்க, போர் வைக்க, உதற, தூற்ற எனக் கூடவே இருந்து பார்த்த கிருஷ்ணமூர்த்தியை “ செத்த கொண்டாந்து கமிட்டியில வைச்சிட்டு வண்டிய திருப்பி ஓட்டிக்கிட்டு வந்துடன்” என்று அழைத்து வந்திருந்தார். வழக்கம்போலவே ஒரு காணத்திற்கு எள் எடுத்து ஊறவைத்து சுத்தம் செய்து காணம் ஆடி வர பாஞ்சாலை வந்திருந்தாள். “ செத்த அக்காகூட வந்து படுத்துக்க பாப்பா, நாங்க மார்க் கெட்டுக்கு போறம்..” செயக்கொடியை பூமா கூடப் படுக்கவைத்து விட்டு வந்திருந்தார்கள்.

கிருஷ்ணமூர்த்தியும் இவரைப்போலவே தளர்ந்தவர்தான். “ சும்மா தூக்கிவுடு. நாம் பாத்துக்கறன்..” முதுகில் சாய்த்துவிட்டு தூக்கிவிடச்

சொன்ன கிருஷ்ணமூர்த்தியிடம் மறுத்தார். “ வேணாம். ரெண்டு பேருமா கையில புடிச்சிக்கிட்டு போவும் வா...” அஞ்சாறு மூட்டைகளையும் கையில் பிடித்தே தூக்கிக்கொண்டுபோய்ப் போட்டார்கள். வரிசையில் மூட்டைகளை நிறுத்திவிட்டு, கிருஷ்ண மூர்த்தியை குந்த வைத்துவிட்டு வெளியே வந்தார். வண்டியை ஓரங்கட்டி பூட்டவிட்டார்.

வண்டியில் குந்தியிருந்த பாஞ்சாலைதான் முதலில் பார்த்தாள். மேற்கால வாசப்படிக்கும் பக்கத்தில் நின்றிருந்த வண்டியில் கட்டப் பட்டிருந்தன உச்சிக்கொம்பு செவலை மாடுகள். ‘ கரியர் மாமன் வூட்டு வண்டிமாதிரி தெரியுது...’ ராசோக்கியமும் பார்த்ததும் உற்சாகமாகி விட்டார். அங்காண்ட கட்டிட மறைவிலிருந்து வந்த முத்துக்கண்ணு ஆயியைப் பார்த்ததும் இருவருக்கும் தாங்கவில்லை. “ எக்கா..” பாஞ்சாலை கூப்பிட்டாள்.

இரண்டு ஆட்களோடு வெளிய வந்த கரி படாச்சி பழக்கமான குரல் கேட்டுத் திரும்பினார். “ வாடா ராசோக்கியம்..” ஆர்வமாய் கரி பாடாச்சியும் முத்துக்கண்ணு ஆயியும் கிட்ட வந்தார்கள். ஆனால் இருவருக்குள்ளும் இவர்களை பார்த்த மாத்திரத்தில் பொசுக்கென ஒரு வாட்டம். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் “ நெல்லா இருக்கிங்களா... பூமா எப்பிடி இருக்கு...” விசாரித்தார்கள்.

“ நாங்க இருக்கறது கெடக்குட்டும். தோவப்பட்டையில என்ன வீக்கம். எனுமோ தடவியிருக்கிறமாதிரி தெரியுது” அதிர்ந்தமாதிரி கேட்டார்கள்.

“ அது சும்மா... செட்டிகடையில மூட்ட எறக்கறப்ப மூட்டு நழுவிப்போச்சி. மூணு கட்டுப் போட்டாச்சி. கட்டுப்போட்ட எடத்துல லேசா வீக்கம் இருக்கும்னு தென்னமரக்குடி எண்ணெ காய்ச்சி தடவியிருக்கன். அதாலதான் வண்டியப் பூட்டக் கொள்ள இருக்குட்டுமுன்னு கெழவியக் கூட இட்டாந்தன்.” அலட்சியமாகச் சொன்னாலும் ராசோக்கியத்தை ஏறிட்டுப் பார்க்காமல் தரையை நோக்கியிருந்தது அவரின் பார்வை.

“ நீ எதுக்கு அண்ண இந்த வயசில மூட்டையும் கீட்டையும் தூக்கிக்கிட்டு...” கேட்டார்.

“ எங்கடா.. தே இந்த மாதிரி கமிட்டிக்கி வர்றமாதிரி சத்தம் கெடைச்சா, மூட்டைய சும்மா மேல நின்னு பெரட்டிவுட்டா போதும். ஓட்றது பூரா ஓட்டலு மளிகைக் கடைன்னுதான் வேல. எவன் வுடறான். நாமளே குனிஞ்சி முதுவுல தூக்கிக்கிட்டு போயி நின்னுக்கிட்டு ‘ எங்க போடறது’ன்னு கேட்டா, அவன் காதுல வாங்காம கல்லாவுல வாங்கிப் போடறதுலதான் குறியா இருப்பான். அப்பறம் கடந்து செமையோட கத்திக் கேட்டு,

கொண்டுபோயி போடுணும். அந்த மாதிரி போடும்போதுதான் சப்ப நழுவிட்டுது..” தொடர்ந்து வருத்தமாகச் சொல்லிக்கொண்டிருந்தாலும் ராசோக்கி யத்தையோ பாஞ்சாலையையோ நேரிட்டுப் பார்த்து சலாபத்தாய் பேசவில்லை. பாஞ்சாலையிடம் பேசிக்கொண்டிருந்த முத்துக்கண்ணு ஆயியும் அதே இறுக்கத்துடன்தான் இருந்தாள்.

“ இதுக்கு மேல வண்டி மாட்ட வைச்சி கிட்டு சமாளிக்க முடியில. பெசாம ரெண்டியும் செட்டா குடுத்துட்டா கூட தேவலாம்னு நெனைக்கிறன்..” கரி படையாச்சி வெறுத்து சொல்லிக்கொண்டிருந்தார்.

“ அப்பிடியாப்பட்ட இக்கட்டுலதான் நிக்க வைக்கிறமாதிரி தான், நெய்வேலிக்காரன் கொண்டாந்து நம்பள வுட்டுட்டான். வேற விதி..” விசனமாக சொல்லிக்கொண்டிருந்தவர் ஞாபகம் வந்தவராய் “ அறிவு தம்பி என்னா பண்ணுது. லாரிய எனுமோ விக்கிணும் கிக்குணும்னு கெடந்துத..” கேட்டார்.

“ வண்டிய குடுத்து ஒரு மாசத்துக்கும் மேல ஆவப்போவுது. அந்த சிகாமணியும் அதுவுமா... ரெண்டு பேரும் காண்ட்ரேட் வேலைக்கிதான் இப்ப போய்க்கிட்டு இருக்குதுவோ. ஊருக்கு ஒழைச்சது ரெண்டுக்கும் கெவுருமெண்டு காசிய வாங்கிப் பாக்கறதுக்கு பொசுப்பு இல்லாம பூட்டுது...” சப்புக் கொட்டிக் கொண்டிருந்தார்.

“ சரி, காண்ட்ரேட் வேலையா இருந்தாலும் எதோ பெறாக்கா அப்பிடி போய்ட்டு வந்தா சரிதான்...”

“ நம்புளுது அறுவத்தி அஞ்சாவது லாட்டு.. வில்லையை பத்தரமா வைச்சிக்க..” உள்ளிருந்து கிருஷ்ணமூர்த்தி வந்து டோக்கனை கொடுத்தவர் கரியரையும் முத்துக்கண்ணுவையும் ஏற இறங்கப் பார்த்தார். ராசோக்கியம் அறிமுகப்படுத்தினார். “ எங்க ஊருதான். நாங்கூட சொல்லுல கரி படாச் சின்னு..”

கரியரிடமும் பெருமையாகச் சொன்னார் “ ஒன்ன மாதிரியேதான் ஏந்தா ஏளைச்சா மணக்கொல்லையில இவுருதான் நமக்கு.”

பாஞ்சாலை தயங்கினாற்போல் கேட்டாள் “ எங்க வூட்ட பக்கம்கிக்கம் எட்டிப் பாப்பியா எக்கா. செத்தாங்களா பொழைச்சாங் களான்னு கூட எங்க புள்ளாண்டரு எட்டிப் பாக்குல..” சொல்லும் போது கண்களில் திரண்டுகொண்டு மறைத்தது கண்ணீர்.

முத்துக்கண்ணு, கரியர் இருவருக்குமே திக்கென்று போய்விட்டது. இவ்வளவு

நேரமும் ஏறெடுத்துப் பார்க்காமல் மறைத்துப் பேசியது எல்லாம் பயனில்லாமல் போய்விட்ட அதிர்வு. முத்துக்கண்ணுதான் சமாளிக்கிறமாதிரி பேசினாள். " ஆமா போயி பாத்துமட்டும் என்னா பண்ணப் போவுது. வுட்டுட்டுப் போவவேண்டியதுதான்..." பேசிக் கொண்டு இருக்கும்போதே ஏதாவது வாய் தவறி விட்டுவிடுவாள் என எச்சரிக்கையாக முகத்தை இறுக்கிக்காட்டினார் கரியர்.

சடுதியில் இதை கவனித்துவிட்ட பாஞ்சாலைக்கு சுரீர் என்றது. " என்னா எக்கா, மூஞ்ச காட்றாரு.. என்னா சேதி.." கலவரமாய்க் கேட்டாள்.

வேறு வழியில்லை. சொல்லித்தான் ஆகவேண்டிய கட்டாயம். கரியர்தான் தயக்கத்தோடு ஆரம்பித்தார் " ஒண்ணுமில்ல. ஒங்கள கூப்புடலன்னாலும் சேதியாவுது தெரிஞ்சிருக்கும்னு பாத்தம். தெரியிலங்கற மாதிரியிருந்ததுந்தான் எப்பிடிச் சொல்றதுன்னு தயங்கனம். ஒங்க புள்ளாண்டாரு முந்தா நாளு, எந்தக் கோயில்ல வைச்சி முடிச்சாருன்னு தெரியில, மாலையும் கழுத்துமா பொண்ணோட வூட்டுக்குள்ள வந்து நொழையறாரு. கூடப்போன ஒந் தம்பியையும் தம்பி பொண்டாட்டியையும் புடிச்சி அறிவழகன் சத்தம் போட்டான். அவனே அறிவில்லாம கூப்புட்டாலும் ஒரு பெத்தவங்க இல்லாம இதுலாம் சரியில்லடான்னு சண்ட போடாம, நீங்களும் தொடையத் தட்டிக்கிட்டு போறிங்களான்னதும், ஆம்படையாம் பொண்டாட்டி ரெண்டு பேருமே எங்களையே வந்தா வாங்க வல்லன்னா போங்கன்னுட்டான், வேண்டாவெறுப்பாதான் போனங்கறாங்க. பொண்ணு, கூட வேல செய்றவன் தங்கச்சியாம். பொண்ணும் வேலையில இருக்காம். அதனாலதான் புள்ளாண்டரு உம்மப்பட்டாரு போல்ருக்கு. பொண்ணுக்கு தாய்மாமன் வழியில ஏதோ சிக்கலு, திடிச்சாப்ல கல்யாணத்த வைக்கறமாதிரி பூட்டுதுன்னு கேக்கறவங்க கிட்டலாம் அவுட்டு வுட்டுக்கிட்டு இருக்கறான்..."

பாஞ்சாலைக்கு பக்கத்திலிருந்த குடோன் கட்டிடமே மேலே இடிந்து விழுகிற அதிர்ச்சி. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அப்படியே குந்திவிட்டாள். உடம்பெல்லாம் தடதடவென நடுங்குகிறது. ஆனால் ராசோக்கியம் இதுவெல்லாம் எப்போதோ எதிர்பார்த்த ஒன்று தான் என்கிறமாதிரி நின்றுகொண்டிருந்தார். " நாமதான் பெத்த புள்ளன்னு அடிச்சிக்கிட்டு கெடக்கறம். அவன் பெத்த ஆத்தா அப்பன்னு நம்பள நெனைக்கணுமில்ல.." சொல்லும்போது குரல் கரகரத்தது. கண்கள் பனித்தன.

" போய் அள்ளிக்கிட்டு வருட்டும் பாஞ்சால. நீ எதுக்கு ஒடம்ப போட்டு முறிச்சிக்கிட்டு. இருக்கற புள்ளய ஒரு நெல்ல எடத்துல குடுக்கிற வழியப்

பாரு. ஏந்திரு.” முத்துக்கண்ணு ஆயி சண்டை போட்டாள்.

மீளாத நடுக்கத்துடன் குந்தியிருந்த பாஞ்சாலையைக் கலங்கிய கண்களுடன் பார்த்துக்கொண்டிருந்த ராசோக்கியத்திற்கு திடுமென ஒரு ஞாபகம். இந்த அதிர்வான சேதியால், இடையில் இல்லாம லிருக்கிற இழுப்பு கிழுப்பு திரும்பவும் வந்து தொலைத்துவிட்டால்... “ அதான் அன்னைக்கே தெரிஞ்ச கதையாச்ச. ராவோட ராவா வுட்டுத்தொலைச்சிட்டு வூட்டுக்கு வந்துட்டம். அப்பறம் என்னா, மனசப் போட்டு கொழப்பிக்கிட்டு. ஏந்திரு, புள்ளாண்டாரு எங்க போயி, எம்மாஞ் சாப்புட்டாலும் சாப்புடுட்டும்...” பாஞ்சாலை யின் கையைப்பிடித்து உயரே தூக்கினார்.

பக்கத்தில் இன்னொரு வண்டி வந்து எள் இறக்கிக் கொண்டிருந்தது. நடப்பது எல்லாமும் உள்வாங்கியவராய் கிருஷ்ணமூர்த்தியும், “ சாக்கு மாத்தறாங்க போல்ருக்கு.. ஏந்திரிச்சி உள்ள வாங்க...” இறுக்கத்தை உடைத்து அனைவரையும் உள்ளே இட்டுக்கொண்டு போனார்.

“ நம்ப வூட்டுக்கு வர்ற விருந்தாடி அடுத்த வூட்டுக்குப் பூடாது. மொதல்ல வாளிய எடுத்துக்கிட்டுப் போயி சாப்புடுங்க..” திரும்பவும் வண்டியில் கொண்டுவந்து வைத்த சோற்றுவாளியை, பாஞ்சாலை யிடம் கொடுத்து சத்தம் போட்டார் கிருஷ்ணமூர்த்தி. அவரின் அதட்டலில் கமிட்டியின் எதிரே வேப்பமர நிழலில் குந்தியிருந்த எல்லோருமே திரும்பிப் பார்த்தார்கள்.

காலையில் கரி படாச்சி சொன்னதிலிருந்து ரெண்டு பேருக்குமே அன்னந்தண்ணி ஆகாரம் எதுவுமில்லை. கமிட்டியில் சாக்கு மாத்தி, எடை போட்டு எட்ட வர மணி பத்துக்குமேல் ஆகிவிட்டது. களத்தில் கிருஷ்ணமூர்த்தியைக் குந்தவைத்து சாப்பாடு போட்டாளே தவிர, அவள் சாப்பிடவில்லை. கிட்ட இருந்தால் சாப்பிடச் சொல்வார் என ராசோக்கியம் “ சாப்புட்டுக் கிட்டே இரு அண்ண வர்றன்...” சொல்லிவிட்டுப் போனவர் சாப்பிட்டு முடித்தபின் தான் வந்தார்.

“ செத்த வண்டியில கண்ண அசரு அண்ண.” சாப்பிட வற்புறுத்தும் அவரிடம் மறித்துச் சொல்லிவிட்டு தலையில் எள்ளுச் சிப்பமும், கையில் கேனுமாக காணம் ஆடக் கிளம்பினார். பின்னாலயே பாஞ்சாலை பரிதாபமாகப் போய்க்கொண்டிருந்தாள்.

காணம் ஆடுகிற இடத்தில் கும்பலாக இருந்தது. வரிசையில் கால் கடுக்க நின்று எள்ளைக் கொட்டப்போகிற நேரம் “ வெல்லம் எங்க...” மிஷின்காரன்

கேட்டான்.

“ மறந்துட்டங்க...” சொல்லிவிட்டு வேகுவேகுவென ஓடி வாங்கி வந்து கொடுக்கவும், கொட்டி ஓடிக்கொண்டிருந்தது. நுரை ததும்ப வழியும் எண்ணெயை, சுழன்றுகொண்டு இருக்கும் மிஷினை பார்த்துக்கொண்டே இருந்தவளுக்கு கண்ணாம்பு சுற்றுவதுபோல் இருக்கவும், வெளியில் வந்து குந்திக்கொண்டாள்.

எள் வேறு, புண்ணாக்கு வேறு தனித்தனியாய் எடுத்துக் கொண்டு கிளம்பும் போதுதான், பாஞ்சாலைக்கு பூமா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. கல், மண் இல்லாமல் நோம்பி, கழுவித் தோல் நீக்கிய சுத்தமான எள். மிஷினில் கொட்டி, வெல்லம் போட்டு ஆடுகிறபோது, இடித்தல் பதத்தில் கொஞ்சம் அள்ளி வரச் சொல்லியிருந்தாள். வெல்லமும் சேர்ந்து எண்ணெய்ச் சுவையோடு தின்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால் கல்லைப் போட்டுக் குலுக்கியதுமாதிரி மனசு கிடந்ததில் எல்லாமும் மறந்துவிட்டிருந்தது.

ஆடாமல் அசையாமல் வண்டியில் வைத்து, சரி பார்த்து “ பத்தரமா ஓட்டிக்கிட்டு போங்க அண்ண..” என்றார்.

“ போறது இருக்கட்டும். மொதல்ல நீங்க வாளிய எடுத்துக்கிட்டு போயி சாப்புட்டா தான் வண்டியப் பூட்டுவன்.” கிருஷ்ணமூர்த்தி கறாராய்ச் சொல்லிவிட்டு இறங்கி வேப்பமரத்தடியில் போய்க் குந்திவிட்டார்.

பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. ஏற்கெனவே சரியில்லாத உடம்பு. இதில் பட்டினி கிடந்து, மீதி இருக்கிற ஒரு பொட்டப் புள்ளையையும் நாளைக்கு கரையேத்துவதற்குச் சிக்கலில் கொண்டு போய் விட்டு விட்டால்... பாஞ்சாலையேதான் வாளியை எடுத்துக் கொண்டு போய் வேம்பு நிழலில் வைத்துக் குந்தினாள். ராசோக்கியமும் குந்தினார்.

மூடியில் கொஞ்சம் சோற்றை அள்ளிவைத்துக்கொண்டு, வாளியை அவரிடம் நீட்டினாள். சோற்றை வாயில் வைத்துக் கொண்டு பார்த்த இருவர் கண்களிலும் திரண்டது. “ என்னா இப்ப... முதனையாமூட்டுப் பொண்ணு விக்காத பொருளா? கெடந்துட்டுப் போவுது. மகராசானா இருக்கட்டும் போ..” அழுதுகொண்டே சொன்னாள்.

வண்டியைப் பூட்டினார் கிருஷ்ணமூர்த்தி. நடுவண்டியில் ஏறிக் குந்திக்கொண்டாள். பாஞ்சாலை, கிருஷ்ணமூர்த்தி இருவரிடமும் ராசோக்கியம் சொன்னார் “ புள்ளாண்டாரு கல்யாண சேதிய கீதிய வூட்ல இருக்கற பொட்டப்புள்ளைகிட்ட சொல்லீடாதீங்க. அது ஏதாவது

மனங்கெட்டாப்ல அழுது பறிச்சிக்கிட்டு கெடந்த துன்னா ஒண்ணும் குடும்பத்துல ஈவு பிரியாது. அது தெம்புலதான் இனிமே நாம பொழப்ப ஓட்டியாவுணும்.”

*

97

மதிய கரண்டு வருகிற நேரம். நுனிநெல் பழுக்கத் தொடங்கி யிருந்த நெற்கதிர்களைப் பார்த்துக்கொண்டே குந்தியிருந்தார் ராசோக்கியம். பொங்கல் கழித்துதான் நெல் அறுக்கிற மாதிரி யிருந்தது. ஒரு ஏக்கர் போக மீதமெல்லாம் மள்ளாட்டைதான். மண்டையைப் பிளக்கிற உச்சிவெயிலில், மள்ளாட்டைச் செடிகள் வதங்கலாய்க் கிடந்தன.

கரண்டு வந்தவுடன் சரியாய் கிட்டக்க நின்று மோட்டார் போட்டால்தான் எடுக்கும். இல்லையென்றால் ஸ்டார்ட்டர் நிக்காது. இவரைப் போலவே, அதே ட்ரான்ஸ்பார்மரில் ஊருக்கு வடக்கே இரண்டு நீர்மோட்டார்களை போட்டுவிட்டதால், பெட்டிக்கு லோடு தாங்கவில்லை. அடிக்கடி பீஸ் போய்விடுகிறது. அந்த மோட்டார்கள் எல்லாம் போடுவதற்குள், கிட்ட நின்று போட்டுக் கொள்ளவேண்டும்.

ஆனால் அதையெல்லாம் தாண்டி சில நேரங்களில் பக்கத்திலிருக்கிற கோபாலின் மேல்மோட்டார்கூட இவரின் மோட்டாருக்கு இடைஞ்சலாகத் தெரிந்தது. கோபால் முந்திக் கொண்டால் கூட இவரின் செக்கு செல்லாது. ஏற்கெனவே இவர் நீர்மோட்டார் போட்டதால், தண்ணீர் குறைந்து, பாசனப் பரப்பும் சுருங்கி காய்ச்சலில் கடந்து நிற்கிற கோபால் வேண்டுமென்றே, இங்காண்ட இடைஞ்சல் படுத்துகிற மாதிரி நிறுத்தி நிறுத்திப் போட்டுக்கொண்டிருப்பார்.

ஊருக்குள்ளும் திருடன் வீட்டில் எரிகிறமாதிரி லோ வோல்ட்டில், கம்மல் வெளிச்சந்தான். எப்போதாவது விருந் தாடியைப்போல் பெட்டியைப் பார்வையிட வரும் ஒயர்மேனைக் கேட்டால் ஒரே பதிலைத்தான் சொல்கிறான். ‘ வெறுங்கையால மொழம் போட முடியாது. மோட்ருக்கு இவ்வளவுன்னு பணத்த வசூல் பண்ணிக்கிட்டு போய், பூதாமூர்ல பாத்துக் குடுத்துட்டு வாங்க. அப்பிடி இல்லன்னா கூடிய சீக்கிரம் இருக்கிற இந்தப் பொட்டியும் மண்டயப் போட்டுடும்.’

யாரும் அது பற்றியெல்லாம் காதில் போட்டுக்கொண்டது மாதிரி தெரியவில்லை. ராசோக்கியமே மெனக்கிட்டு பார்க்கலாம் என்றாலும், பூராவும் தன் தலையிலேயே ஊர்க்காரர்கள் வைத்து விட்டால் என்ன செய்வது என்கிற பயம். ‘ நடக்கறப்ப பாத்துக்குவம்’ போய்க்கொண்டிருந்தார்.

கரண்டு வருவது தாமதப்படுவதுபோல் தெரிந்தது. நுணாவின் அருநிழலில் குந்திக்கிடந்ததில் தண்ணீர் தாகம் வேறு. வீட்டிற்குப் போய் குடித்துவிட்டு வருவதற்குள் கரண்டு வந்துவிட்டால் என்ன செய்வது எனத் தயங்கினார். பூமாவைக் கூப்பிட்டு கொண்டுவரச் சொல்லலாம் என்றாலும் தோட்டத்துக் கதவைத் தாண்டி சுத்துக் கட்டு வளப்பு வீட்டுக்குள் குரல் எட்டிக்காது. வேறு வழியில்லாமல் எழுந்து சரசரவென வீட்டுப்பக்கம் போனார்.

வீட்டுக்குள் நுழையும் போதே பார்த்தார். தெருவாசல் நடையில் குந்தி பூமா அரிசி நோம்பிக்கொண்டிருந்தாள். " என்னப்பா.." கேட்டாள்.

" சும்மா தண்ணி குடிக்க வந்தம்பா" சொல்லியபடி சுவரோரம் இருந்த செப்புக் குடத்திற்குள், தவலைசெம்பை விட்டு தண்ணீர் மொண்டு குடித்தார்.

செம்பு சத்தத்தில், உள்வாசலை ஒட்டி கிழக்கால பட்டா சாலையில் படுத்துக்கிடந்த பாஞ்சாலையிடமிருந்து மெல்ல அசைவு தெரிந்தது. எழுந்திருக்கிற மாதிரியில்லை. கமிட்டியில் கரி படாச்சியைப் பார்த்துவிட்டு வந்த நாளாய் சோர்ந்து படுப்பதும், வருந்திச் சொன்னால் மட்டும் சாப்பிடுவதுமாய் விசனத்திலேயே கிடந்த ஒடம்பு, மெல்ல ஒரு காயலாக்காரியைப் போல் ஆக்கிவிட்டது. ஏறி நெஞ்சில் மிதித்துவிட்டுப் போன மாதிரி எவரையும் எதிர்பார்க்காமல் நிகழ்ந்தேறிவிட்ட மகனின் கல்யாணம், நெருஞ்சிமுள்ளைப்போல் உள்ளே அறுவிக் கொண்டிருந்ததில், சாப்பிடுகிற எதுவும் உடம்பில் ஒட்டவில்லை. நடந்தால் கிறுகிறுவென்று தலையைச் சுற்றிக்கொண்டு போய் அடித்தது.

கடந்து விருத்தாசலம் ஜி.ஆர். டாக்டரிடம் இட்டுக்கொண்டு போய்க் காட்டினார். வேப்பங்குறிச்சியில் பழைய போராட்டங் களின் போது பார்த்ததில் ஞாபகமாய் விசாரித்தார். பின்னர் உடம்பைச் சோதித்து பழைய சீட்டுகளையெல்லாம் புரட்டிப் பார்த்துவிட்டு ' ஒடம்புல சுத்தமா சத்து இல்ல. நெல்லாச் சாப்புடுங்க. குடுக்கற டானிக்க, மாத்தர மருந்த தவறாம சாப்புடுங்க. அப்பிடிச் சாப்புடாமக் கொள்ளாம ஊர வுட்டு வந்துட்டம் பூட்டம்னு கொழப்பிக்கிட்டு கெடந்திங்கன்னா, எங்க வைத்தியம் பாத்தும் ஒண்ணும் வேலைக்காவாது. அப்பறம் ஆரம்பத்துல வந்த மாதிரி இழுப்பு கிழுப்புன்னு சிக்கல்ல கொண்டுபோயி வுட்டுடும்.'

குறைந்தபட்சம் மனதில் கிடப்பதை அக்கம்பக்கம் யாரிட மாவது சொன்னால் கூட பாரம் குறைந்து உடம்புக்கு சற்று தெம்பாக இருக்கும். ஆனால் அது மெல்ல பூமாவுக்கு கசிந்து பிறகு இவளைப் போலவே அவளும் உடம்பைப் போட்டு வருந்திக் கொண்டு விட்டால்... உள்ளுக்குள்

போட்டுப் புதைத்துக்கொண்டு முடங்கிக் கிடந்தாள்.

வெறும் செம்பைக் கீழே வைத்தவர் என்ன நினைத்தாரோ படுத்துக்கிடந்த பாஞ்சாலையைப் பார்த்து முறைத்தார் " ஒடம்பு ஒரு பக்கம்னா குடுவிக் குடுவி கெடந்துக்கிட்டு நீ படுத்துற பாடு பெரிய பாடு பாஞ்சால. ஏந்திரிச்சி குந்து. இல்ல அப்பிடி தோட்டத்துப் பக்கம் போயி பெறாக்கா பச்சைவுள பாரு..."

பாஞ்சாலை ஒன்றும் சொல்லாமல், முன்னையவிடவும் குறுக்கிக்கொண்டு படுத்தாள். வெளியே நோம்புகிற சத்தம் தற்காலிகமாய் நின்று, அங்கிருந்தபடி பூமா பேசினாள் " வுடுப்பா, அது எங்கியாவுது மொடங்கிக் கெடந்தா போவுது. அதுக்கு மொவங்காரரு மேல ஏக்கம் எடுத்துகிச்சி. ஒண்ணுமில்ல நாளைக்கே வேப்பங்குறிச்சிக்கி இட்டுக்கிட்டு போயி புள்ளாண்டாரு மொகத்த காட்டி கொண்டாந்து வுட்டாப்போதும், மொக்குன்னு ஏந்திரிச்சி போயி மள்ளாட்டக் கொல்லியில பில்லு அரிக்கும்." சொல்லிக் கொண்டிருந்தவள் கொஞ்சம் இடைவெளிவிட்டு பெருமூச்சி விட்டபடி தொடர்ந்தாள். " ஊம்... இது இங்க வெசனம் வுழுந்து போயி கெடக்கு. அங்க அந்த மகராசரு எந்தக் கோட்டையிலேர்ந்து எந்த மகாராணிய இட்டாறதுக்கு திட்டம் போட்டுக்கிட்டு குந்திக் கெடக்கறார்னு தெரியில. பாப்பும். பாத்து முடிச்சப்பறம்னாச்சும், சும்மா ஒப்புக்காவது வந்து கூப்புடமாட்டாரா..."

கல்யாணமான சேதி தெரிந்தால் என்ன பாடுபடுவாள் எனக் குழப்பிக்கொண்டே கொல்லைப் பக்கம் போக நினைத்தவர், தெருவில் ஏதோ அரவம் கேட்கவும் ஏதேச்சையாய்தான் சன்னல் பக்கம் வந்தார். தெருவில் கோபால் மகன், கைலியைத் தழையத் தழைய விட்டுக்கொண்டு, இந்தப் பக்கமாய்க் கடித்து விழுங்கிவிடுகிற பார்வையில் நடையை நோக்கிப் பார்த்தவாறு கிழக்கே போனான். ராசோக்கியத்திற்கு அவன் பார்வை என்னவோ இடறியது. ' என்னா அவனுக்கு இந்தப் பக்கமா பார்வ..' யோசனையோடு எக்கி அவன் பார்வை குவிகிற இடத்தைப் பார்த்தவருக்கு பகீரென்றது.

அரிசி நோம்பிக் கொண்டிருக்கும் பூமாவின் மீது ஈட்டியை போல் இறுத்துகிற அவன் பார்வை. அதோடு திடுமென மோட்டார் போட்ட அன்று கோபாலைப் பற்றி கலியபெருமாள் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ' பொம்னேட்டிவோ கொடம்னு அங்காண்ட எடுத்துக்கிட்டுப் பூட்டுதுன்னா அவ்வளவுதான். அப்பனும் மொவனும் துணிய உருவிக்கிட்டு வுட்டுடுவானுவோ..'

என்றுமில்லாதபடிக்கு உள்ளுக்குள் குப்பென்று தீப்பற்றியது போன்ற ஒரு கொதிப்பு. படபடப்போடு வெளியே வந்தார். பூமா அவர் வந்ததைக்கூடப் பொருட்படுத்தாமல் நோம்புவதில் மும்முரமாக இருந்தாள். கண்டிக்கிற மாதிரி சொன்னார் " ஏம்மா உள்ள சத்தர மாட்டம் அம்மாம் எடங் கெடக்கக்குள்ள எதுக்குமா தெருவுல வைச்சி கட பரப்பிக்கிட்டு... உள்ள போம்மா... இனிமே எதாருந்தாலும் அங்கியே வைச்சி முடிச்சிக்க. வெளிய கொண்டாராத.."

ஒரு நாளும் இல்லாமல் வெளியே குந்தியிருப்பது பற்றி அவர் இப்படி மூஞ்சியில் அடிப்பதுமாதிரி சொன்னது பூமாவுக்கு என்னவோ போல் இருந்தது. " ஏம்ப்பா...." தயக்கத்தோடு கேட்க நினைத்தவள், வெளியே தெருமூலை கரண்டு மரத்தில் குண்டுபல்பு மினுக்கவும் அவசரமாய் " எப்பா.. கரண்டு வந்துட்டுது.." கத்தாத குறையாய்ச் சொன்னாள். அவ்வளவுதான்.

எட்டி நாலே தாண்டுதலில் வீட்டைவிட்டு கொல்லைக்கு வந்து, மூச்சு இறைக்க இறைக்க, ஸ்டார்ட்டரை அழுத்தினார். ஸ்டார்ட்டர் அழுந்தி நின்றதே தவிர, மோட்டாரில் தண்ணீர் வருகிறமாதிரி எந்தச் சத்தமும் வரவில்லை. அவருக்குள் பட்டென்று ஒரு கலவரம் சூழ்ந்துகொண்டது. மின்சாரம் குறைவாக இருந்தால் ஸ்டார்ட்டர் நிக்காதே தவிர, அழுத்திப் பிடித்திருக்கும் வரை மோட்டார் ஓடி குழாயில் தண்ணீர் வந்துகொண்டிருக்கும். இதில் ஸ்டார்ட்டர் நிற்கிறது, ஆனால் மோட்டார் ஓடவில்லை. திரும்பத் திரும்ப அழுத்தி முயற்சித்ததும் பீஸ் போனது. அதற்குள் அங்காண்ட பக்கம் கோபால் மகன் மோட்டாரை கிளப்பிவிட்டான். " க்கும்.." திரும்பக் கிளப்பினார். இப்போது ' டுர் டுர்...' என சத்தம் வந்ததே தவிர ஸ்டார்ட்டரும் நிற்கவில்லை. ' நேத்து நெல்லா எறைச்சி நிறுத்திட்டு போன மோட்டர் தான. அப்பறம் என்னா சிக்கல் பண்ணுது?' ராசோக்கியம் பரிதாபமாக நின்றுகொண்டிருந்தார்.

" மோட்ரு காயில் பூட்டுது..." இணைப்புகளைக் கொடுத்துச் சோதித்துப் பார்த்துவிட்டுச் சொன்னார் எலக்ட்ரீசியன் முத்து. ஸ்டார்ட்டர் பெட்டியைப் பார்த்தபடி குடுவிக்கொண்டு குந்தியிருந்த பாஞ்சாலையும், கூட நின்றுகொண்டிருந்த பூமாவும் அதிர்ந்து போய்விட்டார்கள்.

ராசோக்கியம் பதட்டத்தோடு சொன்னார் " நேத்து மத்தியான கரண்டுக்கு மூணு லைன்ல எறைச்சி நிறுத்திட்டுப் போன மோட்ரு.. எப்பிடி காயில் போவுங்க.."

குளிக்கலாம் என்று வந்து நின்றிருந்த முருகன் சொன்னான் “ கரண்டு நின்னு, ஸ்டார்ட்டர் வுழாம இருந்து திரும்ப ரெண்டு லைன்ல வரும்போது ஓடிக் கூட காயில் போயிருக்கும். வயக்காட்ல நம்ப விசுவநாதன் வூட்டு மோட்ரு கூட போன வாரம் அப்பிடித் தான் ஆயிப்போச்சாம்.”

“ அது மேல ஓடற கப்புள்டு மோட்ரோட சாதா ஸ்டார்ட்டரு. நோஅவுட்டுகாயலு வேல செய்யாம, ஸ்டார்ட்டர் வுழாம வுட்டுடும். இதுலாம் நீர்மோட்ரு ஆயில் ஸ்டார்ட்டரு, லைன்ல சும்மா தென்னமட்ட ஓரசனாக்கூட பட்டுன்னு ஸ்டார்டர் வுழுந்து மோட்ரு நின்னுடும். இதுல வேற எதுவோ சிக்கலு....” சொல்லியபடி முத்து சாமான்களை எடுத்துப் பையில் வைத்துக்கொண்டிருந்தார்.

“ வேற என்னாங்க சிக்கலு. நெல்லா ஓடி நிறுத்திட்டுப் போன மோட்ரு” ராசோக்கியத்திற்கு குரல் ரொம்பவும் இறங்கி பாவமாக இருந்தது.

“ அதான் ஒண்ணும் புரியில..” சொன்ன முத்து நிமிர்ந்து காய்ந்து கிடக்கும் மள்ளாட்டைச் செடிகளையும், தலைவளைந்த நெற்பயிர்களையும் பார்த்துக்கொண்டே தொடர்ந்தார் “ சரி அத அப்பறம் பாத்துப்பும். மொதல்ல இப்பியே வண்டிய ஓட்டிக் கிட்டு போயி இருளக்குறிச்சி ராயலு ரெட்டியார் மோட்ருல கம்பம் கெடக்குது. போயி தூக்கிப் போட்டுக்கிட்டு, பைப்பு செயின் பிளாக்லாம் எடுத்துக்கிட்டு வாங்க...”

“ அப்ப மோட்ர வெளிய எடுத்துதான் ஆவுணுமா...” குளிக்க வாய்ப்பில்லை என்கிற முடிவுக்கு வந்து, வீட்டுக்குக் கிளம்பிய முருகன் கேட்டான்.

“ ஆமம்பா. கம்பத்துவுள நிமுத்தி, கையோட கையா நைட்டே கயிட்டி, நாளைக்கி விடியக்காலம் ஸ்டார் பஸ்சுல தூக்கிப்போட்டுக் கிட்டு நெல்லிக்குப்பம் போயி காயில் கட்டிக்கிட்டு வந்துதான் ஆவணும்.” சொல்லிவிட்டு, ஸ்டார்ட்டர் பெட்டியைச் சாத்தியவர், ஒரு கதவின் கீழ்பக்கத் தகரம் மட்டும் வெளியே நெளிந்தமாதிரி இருந்ததும் சற்று தேங்கினார். தகரக் கதவுகளை சாத்தி பேட்லாக்கு களை போட்ட பின்னும், அந்த நெளிந்த முனை படியாமல் தூக்கிக் கொண்டிருந்தது. சந்தேகத்தோடு அந்தத் தகர முனையைப் பிடித்து லேசாக இழுத்தார். எளிதாக கைநுழைகிறமாதிரி இடம் கிடைத்தது. நுழையும் கைக்கு நேர் ஸ்டார்ட்டர் பட்டன் தெரிந்து, அமுக்கவும் முடிந்தது.

முத்து ஆச்சரியத்தோடு சொன்னார் “ அதான ஓடி நிறுத்துன மோட்ரு காரணமில்லாம எப்பிடி காயில் போவும்ணு பாக்கறன். பொட்டி

பூட்டியிருக்கறப்ப யாரோ கைய வுட்டு ரெண்டு லைன்ல மோட்ர போட்டு வுட்டு காயில் போவ வைச்சிருக்காங்க..” சொன்ன தோடு இல்லாமல் செயல்விளக்கமாய் சந்தில் கையை விட்டு அமுக்கியும் காட்டினார்.

ராசோக்கியம் அப்படியே இடிந்து போய்க் குந்திவிட்டார். “ இந்த மாதரி ஒரு குடுத்தனக்காரன பண்ணனா, நா எப்பிடிப்பா பொழப்ப ஓட்றது. இதுலாம் நாயம் இல்லப்பா..” முருகனிடம் அழாத குறையாய் சொன்னார்.

ஏற்கெனவே மனங்கெட்டு தெப்பலங்கெட்டுப் போய் குந்தி யிருந்த பாஞ்சாலைக்கு நெஞ்சை அடைக்கிறமாதிரி ஒரு திகில். செம்பையய்யனாரிடம் முறையிடுவதுபோல் அவளும் முருகனிடம் சொன்னாள் “ இதவுட ஒங்க ஊருக்காரங்க எங்க மூணு பேரையும் உசுரோட மருந்து ஊத்திக் கொன்னுடலாம்பா... அப்பிடி என்னாப்பா இந்த ஊருக்காரங்க திங்கிற சோத்துல நாங்க மண்ணள்ளிப் போட்டுட்டம்... இந்த மாதிரி ஊட்டிய புடிக்கிறமாதிரி நெல்லா ஓடிக்கிட்டு இருந்த மோட்ர போயி இப்பிடி பண்றாங்கன்னா... நாங்க என்னா ஏசகத்துக்காப்பா இந்த ஊர்ல வந்து குடியிருக்கம்...” கண்களில் கலகலவென இறங்க இறங்கச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

முருகனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தண்ணீர் பற்றாக்குறையில் வந்த சிக்கலால் கோபாலைத் தவிர வேறு யாரும் அதைச் செய்திருக்க முடியாது என அவனுக்கும் தெரியும். ஆனால் அதைப்போய் எப்படி வெளிப்படையாய்க் கேட்க முடியும் பேச முடியும். குழப்பிக்கொண்டு நின்றிருந்தான்.

பூமா கண்ணீரோடு சொன்னாள் “ இதுலாம் ஒண்ணுஞ் சரியில்ல அண்ண. அப்பிடி இந்த ஊருக்கு நாங்க ரொம்ப எடைஞ்சலா இருக்கற மாதிரியிருந்தா சொல்லுங்க அண்ண. நாங்க ஊர வுட்டுப் போனாலும் போயிடறம்...”

முருகன் அவசரமாய் இடைமறித்துப் பேசினான். “ அட நீ வேற ஏம்மா.. எனுமோ மூட்டப்பூச்சிக்கி பயிந்துக்கிட்டு வூட்டக் கொளுத்தறமாதிரி பேசற. அப்பா வருட்டும்.. ரெட்டியாருகிட்ட சொல்லி எவன் இந்த வேலயச் செஞ்சான்னு விசாரிக்கச் சொல்லுவம்.” முத்து பக்கம் திரும்பினான். “ யாரு எவுருன்னு அப்பறம் பாத்துக்கலாம். மள்ளாட்ட சுத்தமா சருவாப் பூடும் போல்ருக்கு. மோட்ர கயிட்டி காயில் கட்ற வேலயப் பாருங்க அண்ண.” சொல்லிவிட்டு வீட்டுப் பக்கம் போனான்.

வெயில் ஏறிக்கொண்டிருந்தது. ராசோக்கியம் கிணற்று வறும்பில் குந்தி,

குனிந்து பார்த்துக்கொண்டேயிருந்ததில் தலை சுற்றுகிற மாதிரி வந்தது. பட்டென்று பின்னுக்கு நகர்ந்து குந்தினார். இரண்டு மூன்று நாளாய் அலைச்சலான அலைச்சல் அவருக்கு. கிருஷ்ணமூர்த்தி வேறு, அவரின் மகள் வீட்டிற்கு கொம்பாடிக் குப்பம் போய்விட்டதால் ஒண்டியாக மாட்டிக்கொண்டு விட்டார். கம்பத்தை ஏற்றிவந்து போட்டு, கழற்றிய மோட்டாரை முத்துவும் தானுமாய் நெல்லிக்குப்பம் கொண்டுபோய் போட்டு, மறுநாள் வேலை முடிந்ததை, பஸ்சில் ஏற்றிவந்து பண்ருட்டியில் இறக்கி பின் அங்கிருந்து ஸ்டாரை பிடித்து தண்டராகுளம் கொண்டு வந்து... பின் இறக்கி... கேபிள் ஜாயிண்டு போட்டுக்கொண்டி ருந்தார்கள். அலைச்சலும் பணச்செலவுமாய் ராசோக்கியம் நொந்து போய்விட்டார்.

பாஞ்சாலை நுணாமரத்தடியில் முடங்கிக்கிடந்தாள். வரவர அவள் உடம்பு நிலவரம் மோசமாகப் போய்க்கொண்டிருந்தது. இந்த மோட்டார் இறக்குகிற வேலை முடிந்து மள்ளாட்டைக்கு ஒரு தண்ணீர் கட்டிவிட்டு, நெல்லில் கையை வைப்பதற்குள், அவளை இட்டுக்கொண்டு வேப்பங்குறிச்சிக்கு போய்வரவேண்டும் என நினைத்தார். இந்த மோட்டார் காயில் போன விவகாரத் திலிருந்து அவருக்கும் உள்ளுக்குள் ஊரை, ஊர்மக்களை அவசரப் பட்டுப் பிரிந்து வந்துவிட்டோமோ என்கிற மாதிரி அறுவிக் கொண்டிருந்தது. குறிப்பாய் சதாசிவம். அறியாப்பையன் அவன் என்னத்தைக் கண்டான். அவன் போக்கிலேயே போகவிட்டு மெல்ல வழிக்கு கொண்டுவர முயற்சி செய்யாமல் தாமும் அவனைப் போலவே அவசரப்பட்டு பிடிவாதமாய்... இப்போது துண்டிரிக்கமாய் அவன் பிரியத்திற்கு கல்யாணம் செய்து, அப்பா அம்மாவை மதிக்காமல் செய்தான் என்று அவனுக்கும் கெட்டபெயர். எடுத்தெறிந்து பேசி வந்து விட்டது ஒரு பக்கம் இருந்தாலும் பெற்ற மகனின் திருமணத்தை கிட்ட நின்று பார்க்காமல் போய்விட்ட குற்ற உணர்ச்சி.

கொண்டுவந்த மகராசி கருப்பா சிவப்பா... அதிலும் அவன் அவசரப்பட்டு எதாவது சிக்கலைக் கொண்டுவந்து வைத்து, சிரமத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கிறானா... போய் அவனை, அவனுக்கு வந்தவளை நேர்கொண்டுப் பார்க்கவில்லையென்றாலும் சத்தாசாடையாய் விசாரித்துவிட்டு வந்ததுதான் ஆகவேண்டும் என்று உள்ளுக்குள் என்னென்னவோ ஓடிக்கொண்டிருந்தது.

தலை வெடித்துப்போகிறமாதிரி வெயில் அடிக்க ஆரம்பித்ததும், எழுந்து நுணா மரத்து நிழல் பக்கம் போனார். பக்கத்தில் கோபால் மோட்டார் இறைத்துக் கொண்டிருந்தது, சத்தம் கேட்டது. ஏதேச்சையாய்

பார்ப்பதுபோல் திரும்பிப் பார்த்தார். இரண்டு மூன்று நாளாய் இவரின் நீர்மோட்டார் ஓடாததால், அங்காண்ட மோட்டாரில் தண்ணீர் நன்றாக நீட்டி இறைத்தது. மேற்கிலிருந்து தோளில் மண்வெட்டியுடன் கோபால் மகன் வரவும் பட்டென்று திரும்பிக்கொண்டார். ஆனாலும் அன்று அரிசி நோம்பிக்கொண் டிருக்கும் பூமாவைப் பார்த்த அவன் கொத்திப் பிடுங்கிவிடுகிற பார்வை உள்ளுக்குள் கம்பியைப் பழுக்கக் காய்ச்சி இழுத்ததுபோல் ரணமாய் கொதித்துக் கொண்டேயிருந்தது.

நுணா மரத்தடியில் குந்தினார். மேலே எறும்புகள் ஊர்ந்து போவது தெரியாமல் பாஞ்சாலை முடங்கிக் கிடந்தாள். பூமா தூரத்தில் தோட்டத்துக் கதவைத் திறந்துகொண்டு தலையில் சாப்பாட்டோடு வருவது தெரிந்தது. பாவம் அவளுக்குத்தான் ஆக்கவும் புடிக்கவுமாய் பெரிய பாடு. ஆனாலும் எல்லாவற்றையும் தட்டிக்கொட்டி அவளால்தான் குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது. தலையில் சோற்றுக்குண்டானும், கையில் வாளியுமாய் வரப்பில் அவள் வருவதைப் பார்த்துக்கொண்டே குந்தியிருந்தார். வேப்பங் குறிச்சி கொல்லையில் பாவாடை சட்டையுடன் சாப்பாடு எடுத்துவரும் சின்ன பூமா ஒரு நிமிடம் அவருள் வந்து போனாள்.

பட்டென்று ஏதோ நினைவிற்கு வந்தவராய் அவளைப் பார்த்துக்கொண்டு இருக்கும் பார்வையை விட்டு திருப்பி இங்காண்ட கோபால் மோட்டார் பக்கம் பார்த்தவருக்குப் பெரும் அதிர்ச்சி. நினைத்தமாதிரியே கோபால் மகன், பூமாவைப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தவன், இவர் திரும்பியதில் சுதாரித்து தண்ணீர் குடிப்பது போல் தொட்டியை நோக்கிக் குனிந்தான்.

குதறுகிற மாதிரியான அவன் பார்வை, எதாவது சிக்கலில் கொண்டுபோய் விட்டுவிடுமோ என்கிறமாதிரி ஒரு பயம் உள்ளுக்குள் குடிகொண்டு விட்டது. ஸ்டார்ட்டர் பெட்டியின் தகரக் கதவை நீக்கி மோட்டாரை காயில் போக வைத்தவர்கள் இருக்கிற ஊரில் எதுவும் செய்யக்கூடும். அதற்கு மேலும் பூமாவை அங்கு வைத்துக்கொண்டு இருப்பது உசிதமாகப் படவில்லை. உடனடியாக ஒரு நல்ல இடமாகப் பார்த்துப் பிடித்துக்கொடுக்க பாஞ்சாலை யிடம் இதுபற்றிப் பேச வேண்டும்.

ஆனால் மேலும் மேலும் குடும்பத்தில் செலவர்னையாக இருக்கிற சூழலில் கல்யாணம் காட்சி என்று உடனடியாக முடிவு எடுக்க முடியுமா என்றும் குறுக்கே ஒரு யோசனை ஓடியது. அப்படியே எம்பளாய்சாக இல்லையென்றாலும் விவசாயம் பார்க்கிற இடமாக இருந்தாலும் பத்துப் பவுனுக்கு குறையாமல் போட்டு சின்ன வண்டியாவது வாங்கிக் கொடுக்க வேண்டும். நினைக்கவே அவருக்கு மலைப்பாக இருந்தது.

திரும்பவும் ஒருகணம் சதாசிவத்தை நினைத்துக்கொண்டார். ஒருவேளை அவன் சொல்படி கேட்டிருந்தால் பூமாவை வேலைக் கார மாப்பிள்ளைக்கே செலவில்லாமல் கொடுத்து இந்நேரம் பழைய பொண்ணு மாப்பிள்ளைகளாய் ஆகிப்போயிருக்கக்கூடும். ஆனால் அடுத்த நிமிடமே தோன்றியது. ‘ ஆமா அவங் கெடக்கறாம் போ. என்னா நம்பளால ஒரு பொண்ணயா கட்டிக்குடுக்க முடியாது. அதுக்கோசரம் இழுக்காத மாடு சக்கரத்த பாக்கறமாதிரி அசிங்கமா எடுத்துக் கெடாவிப் பேசன அவனப் போயி நெனைச்சிக்கிட்டு...’

பூமா சாப்பாட்டை இறக்கி வைத்துவிட்டு, சும்மாட்டை உதறிக் கொண்டே உச்சந்தலையில் கைவைத்துப் பார்த்துக்கொண்டாள். சோற்றுக்குண்டானின் சூடு கதகதப்பாய்த் தெரிந்தது. “ நீ போயம்மா... நாங்க சாப்புட்டுக்கறம்..” அங்கு நிற்கவைக்கப் பிடிக்காமல் வீட்டிற்கு அனுப்ப முயன்றார்.

அதற்குள் கிணற்றுக்குள்ளிருந்து முத்துவின் சத்தம் கேட்டது. “ குடிக்கறதுக்கு உள்ள கொஞ்சம் தண்ணிய அனுப்புங்க..”

அவசரமாய் கிணற்றுகிட்ட போய்ச் சொன்னார் “ சாப்பாடு வந்துட்டது. ஓரேடியா வந்து சாப்புட்டுட்டு போயி வேலயப் பாருங்களன்.”

கீழிருந்து அண்ணாந்து முத்து சத்தமாகச் சொன்னார். “ இன்னம் ஒரு கேபிள் தான் ஜாயிண்டு போடணும். ஒரேடியா போட்டுட்டு வந்துட்டா, வேல முடிஞ்சிடும். நீங்க தண்ணிய மட்டும் அனுப்புங்க.”

வாளியில் தண்ணீரைச் சாய்த்துவரச் சொல்லி, கயிற்றில் கட்டி இறக்கிவிட்டார். மோட்டார், போரில் ஓடி ஓடித் தண்ணீர் எல்லாம் வற்றிக் கீழே தட்டிவைத்த வாசல்மாதிரி கிணற்று அடி தந்தரையாய்க் கிடந்ததில், பாம்பராஞ்சில் மோதிய வாளித் தண்ணீர் சிதறித் தெறித்தது. கைக்கெட்டும் தூரத்திலேயே வாளியை வாங்கி கீழே வைத்து, தண்ணீரை மொண்டு குடித்தார்கள்.

வெற்று வாளியை மேலே இழுத்துக்கொண்டு நிமிர்ந்தார். ஒழுங்கையில் போய்க்கொண்டிருந்த கலியபெருமாள் சத்தமாகக் கேட்டார் “ மோட்ரு எறக்கற வேல முடிஞ்சிட்டுதா...”

அவர் போட்ட சத்தத்தில் பாஞ்சாலை எழுந்து குந்தினாள். இங்கிருந்தபடி சொன்னார். “ தே முடிஞ்சி போச்சி அண்ண. இன்னஞ் செத்தநேரந்தான்.”

“ இனிமேலாவது ஸ்டார்ட்டர் பொட்டிய கைய வுடாத மாதிரி நெல்லா

பின்னம் ஒரு நாதாங்கிய போடச்சொல்லி மூடி வையய்யி. அதே மாதிரி பொட்டியில இருக்கற பீஸ் கட்டையையும் கையோட கையா மூடறதுக்கு மின்ன புடுங்கிப் போட்டுட்டு பூட்டு" நின்று எச்சரிக்கை விஷயங்களை சொல்லிக்கொண்டிருந்தார்.

பட்டென்று கரகரத்த தூக்கக்குரலுடன் பாஞ்சாலைதான் பேசினாள் " வேற என்னா செய்யமுடியும், செயக்கொடி அப்பா. நாங்கதான் பாத்து பத்தரமா இருந்துக்கணும். நீங்களும் ரெட்டி யாருமாதான் சேந்து உள்ளூர்காரங்களுக்கு எடம் வுடாம, வேண்ணா போல்டேஷன் போயி கேசு குடுக்கச் சொல்றீங்க. நாங்க இனிமே போயி கேசு குடுத்து அவுங்களும் கோழிகூவாத வந்து மோட்ரு காயில் போவ வைச்சவங்கள கையும் களவுமாவா புடிச்சிடப் போறாங்க. எங்க ஊர வுட்டு இம்மாம் ராச்சியம் கடந்து நாங்க வந்துருக்கக் கூடாது. மீறி ஆத்தக் கட்டுணும் மலைய ஒடைக்கணுங்கற ஆசையில வந்துட்டம். வந்த எடத்துல பொடரியப் புடிச்சி வெளிய தள்ளி ஊர வுட்டுப் போங்கன்னு நெட்டாத கொறையா இந்த மாதிரி வேலயச் செய்றாங்க. நெல்லா இருக்குட்டும்னு ஆண்டவம் மேல பாரத்த போட்டுட்டு போவ வேண்டியதுதான்... வேற என்னா செய்ய முடியும்" சொல்லி முடிக்கும்போது தூக்கக் கரகரப்பு மறைந்து, ஆத்திரத்தில் குரல் கமறியது.

" நாங்களும் இதுக்கோசரம் இம்மாந்தூரம் மெனக்கிட்டு போல்டேஷன் போவமாட்டம்னு ஏதோ அழுவுற புள்ளைக்கி ஆறுதல் சொல்ற மாதிரிதான் சொல்றீங்கன்னும் புரியுது. நாங்க செஞ்ச பெரிய தப்பு, பயிறு பச்சன்னு எங்கியும் வெளிய வராம அங்கியே தாயோட புள்ளையாக் கெடந்து, எதாவது மந்தாரக்குப்பம் பஸ்டாண்ட பக்கம் பொரி பொட்டுக்கடல வித்தாவது பொழப்ப ஓட்டியிருக்கணும்."

ஒழுங்கையில் நின்றுகொண்டிருந்த கலியபெருமாளுக்கு, பாஞ்சாலை இப்படி மனம் வெறுத்துப் பேசியதும் என்னவோ போல் ஆகிவிட்டது. " அட நீ வேற ஏம்மா. எல்லா ஊர்லியும் ஒருத்தன் பச்சின்னு இருந்தா இது மாதிரி பள்ளம் பறிக்கிறதுக்கு நெறையப் பேரு இருப்பானுவோதான். அவனுவுளுக்கு உள்ளூர்க் காரன் வெளியூர்க்காரங்கறதுலாம் கணக்கு இல்ல. அதனால இதலாம் பெரிசுபடுத்திக்கிட்டு மனசபோட்டுக் கொழப்பிக்கிட்டு கெடக்காதீங்க. வுட்டுட்டு ஆவ வேண்டிதப் பாருங்க. மோட்ரு வேல முடிஞ்சதும் ஒடந்தடம்னு வெயில பாக்காம மள்ளாட்டைக்குத் தண்ணி கட்டுங்க. சுத்தமா சருவு ஓடிப்போயி கெடக்குதுவோ."

*

98

காலடியில் ஈரம் பட்டதும் பொசுக்கென்று புதுரெத்தம் பாய்ந்தமாதிரி சிலிர்த்துக்கொண்டன மள்ளாட்டைச் செடிகள். பார்த்துக்கொண்டு தண்ணீர்கூடவே வாய்க்காலில் பூமா நடந்து கொண்டிருந்தாள். காலடி எடுத்து வைக்கும்போது சமயத்தில் தண்ணீர் மள்ளாட்டைச் செடிகளைத் தாண்டித் தெறித்தது. பிள்ளையார் மூலை கடைசித் தொண்டியில் தண்ணீர் கட்டிக்கொண்டிருந்த ராசோக்கியம் சத்தம் போட்டார் " வாய்க்கால வுட்டு எட்ட வாம்மா... ஒடைஞ்சிடப் போவுது."

தி டு க் கி ட் டு " இல்லப்பா.." என்றபடி பாத்திகளில் இறங்கி நடந்துகொண்டிருந்தாள். காலடியில் சிக்கிய செடிகள் சாய்ந்து, ஈரமண்ணில் கிழங்குகளும் மள்ளாட்டைகளும் தெரிந்தன. முற்றலாய்த் தெரிந்த மள்ளாட்டை ஒன்றைப் பிய்த்து உரித்து வாயில் போட்டுக் கொண்டே மடைவாயில் நின்றுகொண்டிருக்கும் ராசோக்கியத்திடம் வந்தாள். வாய்க்காலில் ஓட்டோட்டமாய் ஓடி வந்த தண்ணீர் மடையில் மோதிச் சுழன்று பாத்தியினுள் நுழைந்து நிறைந்து கொண்டிருந்தது. " சரிப்பா, நா கட்றன். போய் சாப்புட்டுட்டு வாங்க.."

மோட்டாரில் தெருவு சனங்கள் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந் தார்கள். " என்னாப்பா தெருவுல தண்ணி வல்லியா. சனங்க தண்ணிக்கி அலமோதுது." கேட்டுக்கொண்டே பாத்தி நிறைந்ததை உறுதிப்படுத்தியபடி மடையை மாறினார்.

" எனுமோ மோட்ரு ஓடுலியாம்.." சொல்லிக்கொண்டே அவர் கையிலிருந்த மண்வெட்டியை வாங்கி, பாவாடையைத் தூக்கிச் செருகிக்கொண்டு அடுத்த மடை வரையில் வாய்க்காலிலிருந்த புற்களைச் செத்தினாள்.

" காய்ச்சல்ல கெடந்தது. பாஞ்சுது பாஞ்சுதுண்ணு ஓட வுட்டு கட்டிக்கிட்டு வந்துடாத. நெல்லா நாலாகடையும் பாய்ச்சி சொயிண்டு நின்னப்பறம் மடைய மாறு.." வீட்டுப்பக்கம் போனார்.

மேலே எரிக்கிற வெயில், கீழே சில்லிட்டு ஓடும் வாய்க்கால் தண்ணீர். கொலுசுகள் தண்ணீரில் பளிச்சென்று தெரிந்தன. எட்டி பாத்தியைப் பார்த்தாள். அந்தாண்டப் பக்கம் வஞ்சி உடைந்து தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. ஓடிக் கட்டினாள். இடையிடையே தெரிந்த

ஆமணக்குப் பூண்டுகளை, அருவாமூக்குச் செடிகளைப் பிடுங்கிப் போட்டபடி மடைகளை மாறிக்கொண்டிருந்தாள்.

இன்னும் நாலைந்து வாய்க்கால்கள்தான். இரண்டு நாளாய் கடுமையாய் தண்ணீர் இறைக்கிற வேலைதான். மள்ளாட்டைக்கு கட்டிமுடித்துவிட்டு நெல்லுக்குக் கட்ட வேண்டும். கட்டப்போகிற இந்தத் தண்ணீரோடு நெல்லுக்குப் போதும்.

வாய்க்காலின் கடைசிப்பாத்தியில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. மடையில் நின்றுகொண்டிருந்தவளுக்கு காலில் சுரீர் என சுடுகிறமாதிரி எரிக்கவும் குனிந்தாள். வரப்போர மடை என்பதால் கொசகொசவென செந்தலை எறும்புகள். பதறிப்போய் விட்டாள். சரசரவென முழங்கால்வரை ஏறிவிட்டவை சுரீர் சுரீர் எனச் சுட்டுக்கொண்டிருந்தன. அவசரமாய் அப்படியே பின்னுக்கு நகர்ந்து, குனிந்து நன்றாகப் பாவாடையை மேலே சுருட்டிவிட்டு, தண்ணீயை வாரி வாரி அடித்து எறும்புகளைத் துடைத்தாள். கடிபட்டு எரிந்துகொண்டிருந்த இடங்கள், தண்ணீர்பட்டு இதமாய் இருக்கவும் தண்ணீர் அடிப்பதை நிறுத்தவேயில்லை. மேலும் பாவாடையில் தொற்றிக்கொண்ட எறும்புகள், மேலே சுருட்டி விட்ட இடத்தில் கடிக்கவும் தாங்கவில்லை. வலியில் சரக்கென்று நன்றாக மேலே தள்ளிவிட்டு, தண்ணீரை வாரிஅடித்துத் துடைத்து விட்டு நிமிர்ந்தவள், அப்படியே வெடித்துச் சிதறிப்போய் விட்டாள்.

வேலிக்கும் அங்காண்ட தென்னைமர மறைவில் கோபால் மகன்... டக்கென்று ஏதும் பாராததுபோல், தென்னைமரத்து உச்சியை நோக்கிப் பார்வையைத் திருப்பி ஓட்டியபடி போய்க்கொண்டிருந் தான். பூமாவுக்கு சடசடப்பு தாங்கவில்லை. அச்சிபிச்சி எல்லாமும் நடுங்கு கிறது. அரவப்படாமல் வந்து எப்போது நின்றான் எனத் தெரிய வில்லை. உடம்பெல்லாம் செந்தலை எறும்புகள் ஏறி சன்னல் பின்னலாய் கடித்துக் கொண்டிருக்கிறமாதிரி எங்கும் சூடுகள். அதற்குமேல் அவளால் தணலில் நிற்கிற மாதிரியான கொதிப்பில் நிற்க முடியவில்லை. நிரம்பி வழிகிற பாத்தியைக்கூட மாறாமல் மடைவாயில் மண்வெட்டியைப் போட்டுவிட்டு வேகமாக வீட்டுக்குப் போகத் திரும்பினாள்.

எதிரே தூரத்தில் தோட்டத்து தகரக்கதவைத் திறந்தபடி முன்னால் ராசோக்கியம் வர, பின்னால் சின்னத்தம்பியும் தங்கப் பழமும் வந்துகொண்டிருந்தார்கள். சடுதியில் அவளுக்கு எல்லாச் சடசடப்பும் போன இடம் தெரியாமல் போய்விட்டது. “ அத்த...” தாங்கமுடியாத மகிழ்வில் சொல்லிக்கொண்டே ஓடினாள்.

ஓட்டமாய் ஓடிப் போய் தங்கப்பழத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள். “ எங்க அத்த மலரு வல்ல...”

“ அது வல்லன்னுட்டுது. நெல்லா இருக்கியாப்பா” விசாரித்தாள். பின்னால் பாஞ்சாலையும் பெருமிதமாக வந்துகொண்டிருந்தாள். அண்ணனும் அண்ணியுமாய் ஒருசேர வந்திருந்ததில் அவளுக்குப் பெரும் மகிழ்வு. அதைவிடவும் சின்னத்தம்பி குடிவாடை இல்லாமல் நிதானத்திலிருந்தது ராசோக்கியத்திற்குப் பெருத்த நிம்மதி.

தண்ணீர் பாய்கிற மடையை நோக்கி ராசோக்கியம் போகவும் பின்னாலேயே சின்னத்தம்பியும் போனார். இவர்கள் மூன்றுபேரும் நுணா நிழலுக்கு வந்தார்கள். கலியபெருமாள் மனைவி குங்குமம் தண்ணீர் மொண்டுகொண்டிருந்தாள். “ எங்க அண்ணன் அண்ணி...” கேட்காமலேயே பாஞ்சாலை அவளிடம் சொன்னாள்.

மணக்கொல்லை சூழலை, ஆடுமாடு விடுவதை, நாற்று விட்டபோது கோபால் ட்ரான்ஸ்மர் பெட்டியை நிறுத்தியதை, கடைசியில் மோட்டார் காயில் போக வைத்ததை... பாஞ்சாலை கசப்பாகச் சொல்லிக்கொண்டிருந்தாள். பூமாவுக்குள் அங்காண்ட தண்ணீர் மொள்ளப் போகும்போது கோபால் மகன் கொத்திப் பிடுங்குகிற மாதிரி பார்த்தது, சற்று முன்னர் கண்ட திகில் என வெளியே சொல்லமுடியாத வெறுப்பின் அவலங்கள் எல்லாமும் வரிசையாய் ஓடிக்கொண்டிருந்தன.

கேட்டுக்கொண்டிருந்த தங்கப்பழம் மோடாமொத்தமாய் பாஞ்சாலையிடம் சொன்னாள் “ வெளியூர்ல அதுவும் இப்பிடி தலமாட்ல தண்ணி எறைக்கற மாதிரி இருக்கறத பாக்கறப்ப பொறாமையில ஒண்ணுகெடக்க ஒண்ணுதான் சொல்லுவாங்க. நாமதான் எதியும் பெரிசி பண்ணிக்காம பொழுத ஓட்டணும். ஒரு நாலஞ்சி வருசம் போச்சினா எல்லாம் சரியாப் பூடும்..”

எல்லாமும் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர சதாசிவத்தைப் பற்றி தங்கப்பழமோ பாஞ்சாலையோ யாரும் பேசவும் இல்லை கேட்கவும் இல்லை. மலரைப் பற்றிக்கூட பூமா தான் விசாரித்தாளே தவிர ரெண்டு பேருமே அவள் பற்றி எதுவும் பேசவில்லை. கடைசி யாய்ப் பூமாதான் தங்கப்பழத்திடம் தயங்கித் தயங்கிக் கேட்டாள் “ மலருகிட்டலாம் மாமன் பேசறாரா...”

“ என்னா போதை போட்டுக்கிட்டு வந்தாலும் அது இருக்கற தெசைய பக்கம் கூட இவுரு திரும்பறது இல்ல. அதே மாதிரி அது வூட்ல இருந்தா

அளப்பறது, சண்ட வளத்தறதுன்னு கீச்சா ராமான்னு வாயத் தொறக்கறது இல்ல. அது இருக்கறததால இது வரைக்கும் ஒண்ணும் சிக்கலு இல்ல. இனிமேல்பட்டுதான் என்னா பண்ணப் போறாரோ தெரியில." தங்கப்பழம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

' என்னா இனிமேல்பட்டு..' என்கிறமாதிரி பூமாவும் பாஞ் சாலையும் சந்தேகமாய்ப் பார்த்தார்கள்.

அவர்களின் மனவோட்டத்தை வைத்து, வந்த சேதியும் இது தான் என்கிறமாதிரி தங்கப்பழமே சொன்னாள் " அதான் மலருக்கு... அங்காண்ட வடக்குத்தெருவுல நம்ப ஆனையரு வூட்டு செம்புலிங்கம் பையன் உத்தண்டின்னு மொத தெர்மல்ல காண்ட்ரேட்ல வேல செய்யறான். ஒரே பையந்தான். மூணு பொண்ணு. ரெண்ட கட்டிக் குடுத்தாச்சி. வடக்க வீரட்டிக்குப்பத்துப் பக்கம் முந்திரித்தோப்பு ஒரு ஏக்கருக்கு இருக்கும் போல்ருக்கு. சாதகமும் சரியா இருக்கு. இதுக்குமேல யார எதுபாத்து என்னா பண்ணப் போறன்னு குடுக்கறதுக்கு உம்மப்பட்டாச்சி. பூசத்துக்கு மின்னியே காரியத்த வைச்சிருவம்னு பாக்குது. அதான் சும்மா கைத்தாம்பாளமா, நாள மக்யா நாளு வைச்சிருக்கம்னு சொல்லிட்டுப் போவலாம்னு வந்தம்..."

பாஞ்சாலைக்குச் சற்றே ஆறுதலாக இருந்தது மாதிரி பட்டது. பூமாவுக்குத்தான் முகமெல்லாம் இருண்டு போய்விட்டது. மலருக்கு பக்கத்தில் அண்ணங்காரன் சதாசிவத்தை தவிர வேற யாரையும் நிறுத்தி வைத்துப் பார்க்க மனம் தாங்கவில்லை. கலங்கலை வெளிக் காட்டிக்கொள்ளாமல் கேட்டாள் " மலரு என்னா சொல்லிச்சி?"

" அது என்னா சொல்லுது. திடீர்குப்பத்து சிக்கலுமாதிரி திரும்பவும் எதாவது அப்பன் கொண்டாந்துவுட்டு பங்கப்படறதங் காட்டியும், கொஞ்சம் நெதான போக்குல இருக்கக்குள்ளியே ஒரு எடத்தத் தேடிக்குவம்னுதான் நெனைக்கிது. வேற என்னா செய்ய முடியும்?" தங்கப்பழத்தின் கண்கள் மின்னின.

சாப்பிட்டுவிட்டு வெயில் தாழக் கிளம்பினார்கள். " நாள மக்யா நாளு காலையிலேயே வாங்க.."

மலர் கரையேறிப் போகிற மகிழ்வில், ராசோக்கியம் நினைவு வந்தவராய் பூமாவிடம் சொன்னார் " எம்மா, ஓடி மலருக்கு நாலு மள்ளாட்டக் கொடி புடுங்கியாந்து குடும்மா. பச்ச மள்ளாட்ட திங்கறதுக்கு நெல்லா இருக்கும்."

தோட்டத்தை ஒட்டிய பாத்திகள், தண்ணீர் கட்டி இரண்டு நாட்கள் ஆகிவிட்டதால், உதைத்துதான் செடிகளைப் பிடுங்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு உதைக்கும் சதாசிவம் இல்லாத மலரை நினைத்து நிறைந்திருந்த கண்களின் கண்ணீர்த்துளிகள் சிதறின.

உள்வாசலை ஒட்டிய கிழக்கால பட்டாசாலையில் பூமா படுத்துக்கிடந்தாள். தங்கப்பழமும் சின்னத்தம்பியும் போனபிறகு யாருடனும் அவள் பேசவே இல்லை. பொழுதுபோய் சாப்பிடுகிற நேரமும் கடந்துவிட்டிருந்தது. அவள் மனத்தைப் புரிந்தவராய் ராசோக்கியம்தான் சொன்னார் " யாராருக்கு என்னா எழுதியிருக் கோ அதுபடிக்குதான் நடக்கும். ஏந்திரிச்சி வந்து சாப்புட்டு படும்மா. பத்து மணி கரண்டு நிக்கப் போவுது..."

கிணுக்முணுக்கென்று எதுவும் பேசாமலேயே திரும்பவும் படுத்துக்கொண்டு கிடந்ததும் பாஞ்சாலை லேசாய் சத்தம் போட்டாள் " வந்து சாப்புடு புள்ள. நானே பயிந்துகிட்டு கெடந்தன். அந்த மலரு புள்ளையே கடந்து கட்டிக்கிறதுக்கு தெளிஞ்சி தெம்பா முடிவெடுத்துருக்கு. நீ எனுமோ இன்னும் கொழப்பிக்கிட்டு கெடக்கற..."

பட்டென்று எழுந்து குந்தினாள். " இல்லம்மா... அண்ணம் பேர்ல மலருக்கு ரொம்ப உசுரும்மா" அழுதுகொண்டே சொன்னாள்.

திக்கென்றது பாஞ்சாலைக்கு. " அதான் முடிஞ்சி போச்சி. நாம்பளும் வுட்டுக்கெடாசிட்டு வந்துட்டம். அப்பறம் எதுக்கு போன கதய புளி ஊத்தி கரைச்சிக்கிட்டு.." கண்டிக்கிற மாதிரி சொன்னாள்.

" இல்லம்மா. வந்து நாலைஞ்சி மாசத்துக்கு மேல ஆவப் போவுது. எப்பிடியிருந்தாலும் அண்ணனுக்கு கொஞ்சமாச்சும் மனசு மாறியிருக்கும். நாளைக்கே அண்ணங்கிட்ட நாம் போயி பேசறம்மா. மலரு பாவம்மா.." கண்களில் தாரைதாரையாக வழிய சொல்லிக்கொண்டிருந்தாள். " ஆமம்மா. அண்ணன் அப்பிடி சும்மா சொல்லும தவிர நம்பள இல்லாம எதுவும் செய்யாதும்மா. நாளைக்கே நாம போயி பேசிப் பாப்பும்மா..." பூமா கெஞ்சினாள்.

வேறுவழியில்லாமல் தலைகுனிந்துகொண்ட பாஞ்சாலை சொன்னாள். " நீ சொல்றதுலாம் சும்மாடி. அவன் நம்பளலாம் எதுர்பாக்குல. ரெண்டு மாசத்துக்கு மேல ஆவப்போவுது அவனுக்கு கல்யாணம் ஆயி..." அழுதுகொண்டிருந்தாள்.

பூமாவுக்கு அப்படியே மூச்சே நின்றுவிட்டது. கல்லாகிப் போய்விட்டாள்.

கண்ணீரோடு பாஞ்சாலை சொல்லிக்கொண் டிருந்தாள். “ ஆமாம்மா... கமிட்டிக்கி எள்ளு எடுத்துக்கிட்டுப் போனம அப்பியே கரியரு பாத்துட்டு சொன்னாரு. எங்க ஓங்கிட்ட சொன்னா இந்த மாதிரி தெவைச்சி தெகமாறி நிப்பியேன்னு சொல்லுலம்மா...”

பூமா சுவரில் சாய்ந்து அழுதுகொண்டே குந்தியிருந்தாள். அவளையுமறியாமல் கனவில் சொல்வதுமாதிரி திரும்பத் திரும்பத் தேம்பல்களோடு சொல்லிக்கொண்டிருந்தாள். “ ஒரு பெத்த ஆத்தா அப்பனக்கூட கூப்புடாம... அம்மாம் பழிபாவமா நாம செஞ்சிட்டம்..”

“ பழிபாவம் செஞ்சமாதிரிதான் வுட்டுட்டாம். வுட்டா போறாம் போ...” பாஞ்சாலையும் மூக்கைச் சிந்தியபடி அழுதுகொண்டிருந்தாள்.

“ நாம கெடந்தா போறம். அவன் நெல்லபடியா இருக்கட்டும் வுடும்மா..” ராசோக்கியம் உடைந்த மாதிரி சொன்னார்.

படாரென்று அவர் மடியில் விழுந்து அழுகிறாள். “ அவன் வேணுங்கறவள கட்டிக்கிட்டு போவுட்டும்பா. ஒரு ஓம சொல்லுக்கு னாச்சும் அப்பன் ஆத்தா தங்கச்சின்னு நம்பளக் கூப்புடாதவன், இனிமே நமக்கு வேணவே வேணாம்பா. அவன் ஒங்களுக்கு புள்ளையே இல்லப்பா. நா மட்டுந்தாம்பா... நா மட்டுந்தான் ஒங்குளுக்குப் புள்ள.”

எல்லா அவலங்களும் சூழ்ந்துகொள்ள, குமுறிக்குமுறி அழுது கொண்டிருந்தாள்.

*

99

‘ சீர்பெற்ற உலகினில் முதனைநகர் தன்னிலே

சித்திரை ஏரிக்கரையில் வாழும்... ...

செம்பையய்யரே உன் பாதம் மலர் தூவியே

செப்பியொரு வரம் கேட்கிறேன்... ...

பார்பெற்ற உலகினில் பயிரிடும் குடியுழவர்

பொலபொலவென மழை பொழிவாய்... ...

கார்பெற்ற மேகமுடன் இடியுடன் புடைகொண்டு

கனக மின்னலு மெடுத்து... ...

கங்கு இருள் விடியும்முன் கங்கைநதி வெள்ளமாய்

கரை புரள வரமருள்வாய்... ...

அரிகரன் மைந்தனே முனிவரன் நந்தனே

முதனை வாழ் செம்பையய்யனே...’

பம்பைகள், மேளங்கள் சூழ கணீரென்று எழுகிற ஒவ்வொரு பாடலுக்கும் “ அரோகரா... அரோகரா...” எனக் கூட்டுக்குரல்கள் சரணம் சொல்ல, திரளான காவடிகள், துள்ளி நடனமிட்டபடி பின்தொடரும் மக்கள் கூட்டத்தோடு வந்து கோயில் தோப்பின் நுழைவாயில் நின்றன. பேய் பிசாசு, காத்துக்கருப்பு, பயந்த குணம் என ஏகப்பட்ட பெண்பிள்ளைகளை கொண்டுவந்து முன்னால் நிறுத்தியபடி சூழ்ந்து நிற்கும் உறவுகள், வேடிக்கை பார்ப்பவர்கள் எனக் கூட்டம் முழி பிதுங்கியது.

தலமானாய் தெரிந்த காவடிக்காரன் சாட்டையை சுழற்றினான். ‘ சளார்’ என்று ஒரு காத்துச்சேட்டையின் மேல் விழுந்த அவனின் சாட்டை அடியில், தேங்கி நின்ற மொத்தக் கூட்டமும் திடுமெனப் பயந்து பின்னுக்கு வாங்கி கப்சிப் என்று வாயடங்க, பம்பைகளின் அடிகள் மட்டும் தனித்து ஒலித்தன. கண்ணில் தெறிக்கிறமாதிரி விழுந்த அடியில் கூட்டத்தோடு நின்றிருந்த மலர் வெடுக்கென்று பூமாவின் கையை உதறிவிட்டு, பயத்தில்

புதுமெருகு மாறாத தன் கணவனின் மார்பு மீது முகம் புதைத்துக்கொண்டாள்.

நெருக்கியடித்துத் தள்ளும் கூட்டத்தில் கையுதறித் தனித்து விடப்பட்ட பூமாவுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. புதுமண சோடிகளுடன் ஏன் கோயிலுக்கு வந்தோம் என்று நின்று கொண்டிருந்தாள். மரத்தை வளைத்துப் பிடித்திருக்கும் வாழை மட்டையைப் பிரித்து எடுப்பது போல் நெஞ்சில் சாய்ந்திருந்த மலரை, கூச்சத்தோடு அவன் மெல்ல விலக்கிப் பிரித்தெடுத்தபோது திரும்பவும் சாட்டை அடி. திருவிழாக்கூட்டம் சூழ்ந்த அவ்விடத்தில் மீண்டும் அவள் நெஞ்சில் சாய்ந்துவிடாதபடி எச்சரிக்கையாய்த் தள்ளிப்பிடித்தான். திரும்பத் திரும்ப விழுகிற அடியில் அவள் நெருங்கவும், இவன் நெட்டவுமாய் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பூமாவுக்கு தலை வெட்டிக் கொண்டு போகிற மாதிரியிருந்தது. மொத்தக் கூட்டமும் கோயிலை நோக்கி நகர்த்தப்பட, கூட்டத் தோடு கூட்டமாய் இவர்களும் தள்ளப்பட்டார்கள். ஒட்டலும் உரசலுமாய் புதுமணப் பூரிப்பில் போய்க்கொண்டிருக்கும் அவர்களுடன், அதற்குமேல் தொடர்ந்து செல்ல பூமாவுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ‘ எப்படி இவர்களை விட்டு பிய்த்துக்கொள்ளலாம்’ என அவள் யோசித்துக்கொண்டு சற்றே தேங்கி நின்றாள். அதற்குள் மலரும் அவள் கணவனும் நாலைந்து தப்படிகளுக்கு மேல் நகர்ந்து போய்விட்டிருந்தார்கள்.

“ எக்கா...” கூட்ட இரைச்சலிலும் பின்னுக்குக் கேட்ட பிரியமான குரலில் பூமா திரும்பினாள். மணக்கொல்லை செயக்கொடி, அவள் அம்மாவுடன் கூட்டத்தை நீக்கிக்கொண்டு கிட்ட வந்தாள். “ வண்டி கட்டிக்கிட்டு வந்தம்க்கா... வண்டி உத்தண்டகாரங் கோயிலுகிட்ட நிக்கிது. தேங்கா வாங்கிக்கிட்டு போவலாம்னு வந்தம். வாங்கக்கா... போவும்..” கேட்காமலேயே கூப்பிட்டாள்.

அவளின் அம்மா குங்குமமும் விடவில்லை. “ வாம்மா. சாமிக்கி சோறாக்கிப் போடுது. வா, போயி படைச்சி சாப்புட்டுட்டு வரலாம்.”

இதுதான் சமயமென்று பூமாவுக்குத் தோன்றியது. கனவு களோடு போய்க்கொண்டிருக்கும் புதுமணத் தம்பதியைப் பார்த்து சற்று சத்தமாகக் கூப்பிட்டாள் “ மலரு...”

இவள் கூப்பிட்டது கேட்டுத் திரும்பியது போலில்லாமல் ஏதேச்சையாய் திரும்பி “ என்னா” என்பதுபோல் மலர் கேட்டாள்.

“ மணக்கொல்லையிலேர்ந்து எங்களுக்கு தெரிஞ்சவங்க வந்துருக்காங்க.

நீங்க போங்க... நா அவுங்க கூட போறன்.” கூட்டத் திலிருந்து எக்கி சத்தமாகச் சொன்னாள்.

மறுப்பு எதுவும் சொல்லவில்லை மலர். மாறாக அவளுக்கு முகமெல்லாமும் சந்தோஷம். “ சரி பாத்து வா..” சொல்லிவிட்டு முன்னையை விட இன்னும் கூடுதலாக இழைந்தபடி போகும் அவர்களைப் பார்த்துக்கொண்டே பூமா நின்றிருந்தாள். “ வாயெக்கா போவும்” செயக்கொடி கூப்பிட்டுக்கொண்டு போனாள்.

முதனை பூசம் என்றால் பத்து மைலுக்கு பத்து மைல் எல்லோருக்கும் ஒரே ஆர்வந்தான். சைக்கிள்களிலும் நடந்தும் வண்டி கட்டிக்கொண்டும் திரும்பின பக்கமெல்லாம் சனத்திரள். முடி எடுக்கவும், காது குத்தவும், படையல் போடவுமாக மரத்துக்கு மரம் புதருக்குப் புதர் வண்டிகள். அடுப்பு தோண்டி சமையல்கள். வாழைப்பழ வண்டிக்காரன், ஐஸ்காரன், கரும்பு, பொரிபொட்டுக் கடலைக்காரன்... எங்கும் இரைச்சல்தான்.

அடுத்தடுத்து நிறையக் காவடிகளும் தீர்த்தங்களுமாய் பம்பை மேளச் சத்தங்களுடன் வரவும் பூமாவும் செயக்கொடியும் ஒதுங்கி நின்றார்கள். தேங்காய் வாங்கிக்கொண்டு வந்த குங்குமம், “ சரி அக்கா கூட பாத்துட்டு வண்டிகிட்ட வாங்க. நாம் போயி பொங்கலு வைக்கிற வேலயப் பாக்கறன்....” சொல்லிவிட்டு பூமாவிடம் திரும்பினாள் “ அப்பா அம்மாவ பாத்தினா மறக்காம இட்டுக்கிட்டு வாப்பா..” கிளம்பினாள்.

பூமா மேற்கே திரும்பி மலர் போன இடத்தைத் தேடினாள். எட்டினவரைக்கும் கூட்டத்தில் தென்படவில்லை. அப்பால் உயரமான வட்ட ராட்டினம் மட்டும் ஆட்கள் இல்லாமல் வெறுமனே சுற்றி வந்துகொண்டிருந்தது. மலர் தம்பதி எப்படி நெருக்கமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு போவார்கள் என உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது.

பூமாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சதாசிவம் தன்னைக் கட்டிக்கொள்ளவில்லையென்றதும் மலர் முகத்தில் படிந்துகிடந்த வேதனைவரிகளை இப்போது நினைத்துப்பார்த்தால்கூட பதறும். மனசுக்குள் உயிராய் அவனை நினைத்துக்கொண்டிருந்ததை விட்டு, வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டிய நிர்பந்த சூழலில் அவள் எப்படித் தாங்குவாள், எப்படி நொறுங்கிப் போவாள் என்றெல்லாம் ராத்தூக்கம் இல்லாமல் கிடந்தாள் பூமா. அதனாலேயே தாம்பூலம் மாற்றும் நிகழ்விற்குக்கூட வதங்கிய மலரின் முகத்தைக் காண மனதில் தெம்பு இல்லாமல்தான் வரா மலேயே இருந்துவிட்டாள். இப்போது கல்யாணத்திற்கு

கூட வரச் சம்மதமில்லாமல்தான் வந்தாள். ஆனால் வந்தபிறகு மலரின் மனமாற்றத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். சதாசிவத்தைக் கட்டிக்கொள்கிற மாதிரியான ஒரு நினைவோ நிர்பந்தமோ அதனால் ஏற்பட்ட ஏமாற்றமோ எதுவுமே இல்லாமல், ஒரு புதுமணப் பெண்ணுக்குரிய ஆர்வம் மட்டுமே அவளிடமிருந்தது.

மலரைக் கட்டிக்கொண்ட உள்ளூர் மாப்பிள்ளை, அவளை விடவும் ஒருநூல் உசத்தி. மலரின் அடிமனத்தில் அடைந்துகிடந்த சதாசிவம் தந்த ஏமாற்றங்களையெல்லாம் துடைத்தெறிந்து விட்டிருந்தது அவனது வசீகரப் பார்வை. சிரிக்கையில் விழுகிற கன்னக் குழிவு. அண்ணங்காரனின் குணக்கேட்டுக்கு நிச்சயம் இவன் மேல்தான். எதுவாக இருந்தாலும் மலரின் பக்கத்தில் சதாசிவத்தை தவிர வேறு யாரையும் நிறுத்திப் பார்க்க பூமாவுக்கு கொஞ்சமும் மனசில்லைதான் என்றாலும் திருமணம் முடிந்து பூரிப்புடன் ரசித்துச் சிரித்துக்கொண்டிருந்த மலரைப் பார்க்கையில் பூமாவுக்கு மகிழ்வாகத்தானிருந்தது. அத்தைமகள் என்பதை விடவும் அவளுக்கு உயிரான தோழி. அவளின் சிரிப்பு காலாகாலத்திலும் நிலைக்க வேண்டும் என்பதுதான் பூமாவின் விருப்பமும்.

மலரின் முகமாற்றம் கண்ட மகிழ்வில்தான் பூமா மறாநாளே மணக்கொல்லைக்குக் கிளம்ப உத்தேசித்திருந்தாள். தங்கப்பழந்தான் வற்புறுத்தி பூசத்தை பார்த்துவிட்டுப் போகலாம் எனத் தங்க வைத்து விட்டாள். தங்கியதில் தப்பில்லை, ஆனால் கோயிலுக்கு அப்பா அம்மாகூட வராமல், வகைதொகை தெரியாமல் புதுமண சோடி களுடன் வந்ததுதான் தப்பாய்ப் போய்விட்டது.

“ வா யெக்கா ஏரிய பக்கம் போவும்” செயக்கொடி கூப்பிடவும் இயல்புக்கு வந்து சித்திரை ஏரியை நோக்கி கூட்டத்தில் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

சித்திரை ஏரியின் கரைகொள்ளாமல் சனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். சாமி வேல் மூழ்கும்போது இடம் கிடைக்காது என்பதற்கான முன்ஏற்பாடு. வேல் மூழ்கிய ஏரித் தண்ணீரில் குளித்து அல்லது குறைந்தபட்சம் தலையில் தெளித்துக்கொண்டால்தான் செம்பையய்யனார் கோயிலுக்கு பூசம் பார்க்க வந்ததின் பலன் கிடைத்ததாக அர்த்தம். பூமா முந்திரிக்கொட்டை பொறுக்குகிற நாட்களில் ஆள் அரவமற்றுக் கிடக்கும் உச்சிப்பொழுதின் சித்திரை ஏரியை நினைத்துக்கொண்டாள். செயக்கொடியிடம் தெற்கே கையைக் காட்டியும் சொன்னாள் “ தா இருக்கு பாருப்பா. அந்த தோப்பதான் நாங்க குத்துவைக்கி எடுத்து கொட்ட பொறுக்குனம். நானும் மலரும் இந்த ஏரியில எனுமா நீச்சலடிப்பம் தெரியுமா. அங்காண்ட

போயிதான் ஈச்சம்பழம் பறிப்பம். ஒருநாளு இப்படி பறிக்கக்குள்ளதான் ஒரு நரி...” சொல்லிக் கொண்டிருந்தாள்.

திடுமெனப் பேரிரைச்சல். மொத்தக் கூட்டமும் வேல்முழ்க வருகிற தீர்த்தக்காவடிகள்தான் எனத் திரும்பிப் பார்க்க, சாதாரண வேண்டுதல் காவடிகள் என்றதும் ஏமாற்றமாய்த் திரும்பினார்கள். பூமா சின்னவயதிலிருந்தே இங்கு அத்தை வீட்டுக்கு வந்து மலருடன் பூசம் பார்க்க வருவாள். ரொம்பவும் ஆர்ப்பாட்டமாய் சோடிக்கப் பட்ட வேலோடு தீர்த்தக்காவடிகள் ஏரியில் நடந்து போய் நின்று கொண்டதும், எல்லோரும் சேர்ந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்பார்கள். அதிக நேரம் காக்கவைக்காது கருடபகவான். ஏரியை நோக்கி அது ஒரு சுற்று வரவும் எங்கும் ஒரே “ அரோகரா.” வேலோடு சனங்களெல்லாம் மூழ்கி, கரைமேல் நிற்பவர்களுக்கும் படுகிற மாதிரி தண்ணீரை வாரி வாரி இறைப்பார்கள். பிறகு சாமி குப்பிட செம்பையய்யனார், உத்தண்டகாரன் என ஒவ்வொரு இடமாகப் போவார்கள். கும்பிடுகிற இடத்தில் எவ்வளவு கும்பலாக இருந்தாலும், மலர் சில்லாகத்திரி, உள்ளே நுழைந்து போய்வந்து உள்ளங்கையில் சிவப்பு விபூதியோடு நிற்பாள். எல்லோருக்கும் கொடுத்து வாழ்ந்து சலித்தவள் போன்று இவளுக்கும் இட்டு விடுவாள்.

பூமா, வயதுப்பிள்ளையாய் ஆன பிறகு, பாஞ்சாலை முதனைக்கு அனுப்புவதில்லை. அதோடு நிலம் எடுக்கிற பிரச்சனை வந்த பிறகு, பூமாவுக்கு பூசம் என்பதே மறந்து போய்விட்டது.

“ வேல் மொழுவறதுக்கு நேரமாவும் போல்ருக்கு. ஒங்க அம்மா வேற சொல்லிட்டுப் போச்சி. போய் வண்டிகிட்ட பாத்துட்டு வருவமா” இட்டுக்கொண்டு ஏரிமேட்டு கும்பலைவிட்டு முடி இறக்குகிற பாதை வழியாகப் போனாள் பூமா.

செம்பையய்யனார் சன்னதிக்கும் கிழக்காலப் பக்கம் வண்டியை நிப்பாட்டியிருந்தார்கள். பக்கத்தில் அடுப்பு வெட்டி சோறாக்குகிற வேலை நடந்துகொண்டிருந்தது. கோயில் முன்னால் வரிசை யிட்டிருந்த வேண்டுதல் குதிரைகளைத் தாண்டி அங்காண்ட கிட்ட போகவும் கலியபெருமாள்தான் கையைக்காட்டிச் சொன்னார் “ வாம்மா. இப்பதான் அம்மாவும் அப்பாவும் வந்துட்டு, தா பாரு கோயில பக்கம் போறாங்க.”

கை காட்டிய திசையில் அவசரமாய் திரும்பினாள். கூட்டத்தைக் கடந்து கோயில் பக்கம் ஓடிய பார்வையை, சரக்கென்று மறைத்தவாறு வந்து டி. வி.எஸ். **50**ஐ நிறுத்தினான் முருகன். “ என்னா அண்ண திடீர்னு இப்பிடி

குறுக்கால கொண்டாந்து வுட்டு பயம் காட்றீங்க” சிரித்துக்கொண்டே சொன்ன நேரம் பின்னால் வண்டியிலிருந்து இறங்கியவனைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் அப்படியே உறைந்து போய் விட்டாள். பளீரென்ற பேண்ட் சட்டையில் சிகாமணி.

காண்பது கனவா நனவா எனக் குழப்பம். கைகளில் திடுமென றெக்கைகள் முளைத்துக்கொள்ள செம்பையய்யனார் கோயில் காடெங்கும் கம்மங்கொல்லையாய் விரிந்து கிடக்க, சனங்களின் இரைச்சல் எல்லாம் குருவிச் சத்தங் களாய் திசையெங்கும் எதிரொலிக்க, எதிரே சிகாமணி. குடும்பங் களிடையே சண்டை சச்சரவு, வந்த இடத்தின் இடிபாடுகள் என எல்லாவற்றையும் மீறி மனதின் அடியாழத்தில் படிந்து கிடந்த அவனின் உருவம் நேர்கொண்டு நிற்கையில், மிதந்து கொண்டிருந்தாள் பூமா.

“ பூமா...” இடையில் நெடும்கத்தியைப் போன்று நீண்டது குரல்.

விலுக்கென்று நினைவிலிருந்து மீண்டு குரல் வந்த திசையை நோக்குகிறாள். குறுக்கே கோயிலுக்குள் நுழைகிற கூட்டத்திற்கும் அங்காண்ட பாஞ்சாலையும் ராசோக்கியமும். கூட மலர் தம்பதிகள். பட்டென்று கூடுதலாய் அவளுக்குள் வேறொரு படபடப்பு. சண்டைக்காரன் சிகாமணியை எதிர்க்க வைத்துக்கொண்டு நிற்பதை அவர்கள் கவனித்துவிட்டால்... சரசரவென, கொஞ்சம் கூட சம்மத மில்லாமல் கூட்டத்தில் புகுந்து அங்காண்ட போனாள்.

“ வாம்மா சீக்கிரம்...” கோயிலுக்குள் நுழைந்தார்கள். எள்ளளவும் கோயிலுக்குள் நுழைய அவளுக்கு விருப்பமேயில்லை. கூட்ட நெரிசலில் வாசற்படியில் நின்றபடி திரும்பிப் பார்த்தாள். பாஞ்சாலை, ராசோக்கியம் பார்வையில் பட்டுவிடாதபடி திரும்பி நின்றவனும், சொல்லி வைத்தமாதிரி தவிப்புடன் அவளைப் பார்த்தான்.

“ அரோகரா... அரோகரா...” காவடிகளுடன் ஒரு பெருங் கூட்டம் வந்து நெட்ட, உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். பூமா மனசு மட்டும் சிகாமணியை நோக்கி பின்னுக்கு ஓடிவந்து கொண்டிருந்தது. மலரும் அவளது கணவனும் ஒட்டிக்கொண்டு சாமி கும்பிட்டபோது, அவளையுமறியாமல் அவள் பக்கத்தில் சிகாமணி வந்து நின்றுகொண்ட மாதிரி ஒரு பரவசம்.

*

100

அடர்ந்த முந்திரிக்காட்டுப் பாதைதான் என்றாலும் கலிய பெருமாளின் மாடுகளுக்குப் பழக்கப்பட்ட வழிதான். தன்நடை யாகப் போய்க்கொண்டிருக்கும் அந்த வண்டியின் பின்னால் ராசோக்கியம் ஓட்டிக்கொண்டு வந்தார். வண்டிப்பாட்டையின் தேய்வடியில் புழுதியாய் நைந்து கிடந்த மண்ணில், டயர் வண்டிச் சக்கரங்கள் ஓசைப்படாமல் உருண்டுகொண்டிருந்தன. கிழக்கே முந்திரிகளின் உச்சிக்கிளை நுனிகளைத் தடவியபடி நிலா கூடவே வந்து கொண்டிருந்தது. வழிநெடுக கூடக் குந்தியிருந்த செயக்கொடி, பூசத்தில் வாங்கி வந்திருந்த பன்னிக்கரும்புகளைக் கடித்து உறிஞ்சி சக்கைகளைத் துப்பியபடி, மௌனமாகக் குந்தியிருக்கும் பூமாவை பார்த்துக்கொண்டே வந்தாள்.

வண்டி சாடிப்புகளில் விழுந்து எழுந்தபோது பக்கவாட்டு வளையங்கள் சத்தம் எழுப்பியதும், ஓர இண்டம் புதர்களில் கத்திக்கொண்டிருந்த வண்டுகள் திடுமென ஓசையடங்கின. வண்டியின் குறுக்குவசத்தில் சாய்ந்து குந்தியிருந்த பூமாவின் காதுத் தொங்கல்கள், வண்டியில் சின்னச் சின்ன அசைவுகளில் கூட ஆடி நிலா வெளிச்சத்தில் மின்னின. ஒரு தேவதை பல்லக்கில் அமர்ந்து செல்வது போன்று தோற்றம் காட்டினாள் பூமா. அவளது விழிகளில் நிலவைத் துளைத்து அங்காண்ட சென்றுகொண்டிருப்பதாய் ஒரு கூர்மை தெரிந்தது.

முன்பக்கம் குந்தியிருந்த பாஞ்சாலை, தூங்கித் தூங்கி விழுந்து கொண்டிருந்தவள், குலுங்கலற்ற மண்பாதையில் போய்க் கொண்டிருந்ததும் கடந்து படுத்துவிட்டாள். கையிலிருந்த கரும்பின் கடைசியையும் கடித்து உறிஞ்சித் துப்பிவிட்டு, பூமாவிடம் கேட்டாள் “ என்னாக்கா எதுவும் பேசாம வர்ற...”

வண்டி பூட்டியதிலிருந்து மௌனமாக வந்துகொண்டிருந்த பூமா, கடைசியில் வாயைத் திறந்தாள். வண்டியோட்டிக் கொண்டிருக்கும் அப்பாவிற்கு எட்டிவிடாத மாதிரி மெதுவாகக் கேட்டாள் “ பூசத்துல ஒங்க அண்ணங்கூட வண்டியில வந்து எறங்கனார அவுரு என்னா ஒங்களுக்குச் சொந்தமா..”

“ சொந்தம் இல்லக்கா. எங்க அண்ணங்கூட நெய்வேலியில காண்ட்ரேட்ல வேல செய்றவங்களாம். நானே இன்னைக்கித்தான் பாக்கறன்.. பேரு கூட எனுமோ சிகாமணியோ தவமணியோன்னு எங்க அண்ணஞ் சொல்லிச்சி...

ஏங்க்கா..” செயக்கொடி சந்தேகமாய்க் கேட்டாள்.

“ ஒண்ணுமில்ல.. சும்மாதான்..” திரும்பவும் பேசாமடந்தை யாகிப் போனாள். வெகுநாட்கள் கழித்து அதுவும் சொந்த ஊரை விட்டு வெகுதொலைவு வந்துவிட்ட பிறகு கோயில் தளத்தில் வைத்து சிகாமணியைப் பார்த்ததில் அவளுக்குப் பெரும் மகிழ்வு. குறுக்கும் நெடுக்குமாய் பறந்துகொண்டிருந்த குருவிகளை ரசித்தபடி மௌனமாகக் குந்தியிருந்தாள்.

“ பாத்துப்பா... முந்திரிச்சிம்பு அடிச்சிடப் போவுது...” ராசோக்கியத்தின் எச்சரிக்கையோடு வண்டி ஒரு குகையைப் போன்ற முந்திரித் தொங்கலுக்குள் நுழைந்து வெளியேறியது.

நிலாவைப் போலவே, சிகாமணி நினைவுகளும் பூமாவைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. இவ்வளவு நாள் இல்லாமல், திடுமென இப்படி... அதுவும் குறிப்பாய் பூசத்தில்... முதனையில் இருக்கிற தன்னைப் பார்க்க பூசத்தை சாக்காக வைத்து, தனக்காகவே அவன் வந்திருக்க வேண்டும். நினைக்க நினைக்க உடம்பெல்லாம் அவளுக்குப் பூரிப்பு.

முன்னே போன வண்டி பட்டென்று நிற்கவும், ராசோக்கியத்தின் மாடுகளும் தேங்கின. முன் வண்டியிலிருந்து குங்குமம் கத்தினாள். “ மானு... மானு...”

“ எங்க... எங்க...” செயக்கொடி ஆவலோடு எழவும், பூமாவும் அவசரமாய் எழுந்து நின்று பார்த்தாள்.

வேதக்கோயில் குட்டைக்கு தண்ணீர் குடிக்க வந்திருக்க வேண்டும். பட்டப்பகலாய் எரித்துக்கொண்டிருந்த நிலவு வெளிச்சத்தில் ஓடிப்பிடித்து விடுகிற தூரத்தில் ஏழெட்டு மான்கள், குறுக்கால் தாவிக் குதித்தபடி ஓடுகின்றன. பெரிய மான் ஒன்று எல்லாவற்றிற்கும் பின்னால், ஓட்டத்தின் போக்கில் திரும்பிப் பார்த்தபடி போனது, நிலவொளியில் பேரழகாய் இருந்தது.

வண்டிகள் காட்டுப் பாதையை விட்டு தார்ரோட்டுக்கு வந்து மேற்கே மணக்கொல்லையை நோக்கித் திரும்பின.

நிலா வெளிச்சத்தில் நீண்டுகிடந்த சாலையைப் பார்த்துக் கொண்டே பெருமூச்சி விட்டபடி ராசோக்கியம் சொல்லிக் கொண்டார். “ எல்லாம் அரிகெடையா ஊருக்கு கௌம்பி வந்துட்டம். அறுக்கிற நெல்லு, திங்கிற மள்ளாட்ட... ஊருக்காரனுவோ என்னா பாடுபடுத்தி வைச்சிருக்கிறானுவுளே தெரியில.” ஊரை நெருங்க நெருங்க ராசோக்கியத்திற்கு லேசான படபடப்பு தொற்றிக்கொண்டது.

வண்டி பொக்குழிகளாய்க் கிடந்த சாலையில் விழுந்து ஏறவும், விடாத வளையங்களின் சத்தத்தில் விழித்துக்கொண்ட பாஞ்சாலை எழுந்து குந்தினாள். அவளுக்கும் கொல்லைவெளியைப் பற்றிய யோசனை கவ்விக்கொண்டது. பூமாவுக்கும் மனசெல்லாம் விரவிக் கிடந்த கம்மங்கொல்லையும் குருவிகளும் மெல்ல பனி படர்ந்து விட்ட மாதிரி மங்கத்தொடங்கியிருந்தன.

வண்டி ஊருக்குள் நுழைந்தபோது அரவம் அடங்கிக் கொண்டிருந்தது. நடுத்தெருவில் நுழைந்து வீட்டுகிட்ட போகும் போதுதான் கலியபெருமாள் பார்த்தார். ஊருக்குள் விளக்குகளெல்லாம் எரிந்து கொண்டிருக்க, தெற்கே கொல்லைவெளிகளிலிருந்த மோட்டார் கொட்டாய்கள் எல்லாம் இருட்டாய்த் தெரிந்தன. பட்டென்று ராசோக்கியத்திற்கு சந்தேகம் உதைத்தது. எப்போதும் ஸ்டார்ட்டர் பெட்டியின் மேல் ஆங்கிளில் எரிந்து கொண்டிருக்கும் குண்டு பல்பு இருக்கிற இடம் தெரியாமல் கும்மிருட்டாய் கிடந்தது. “ பொட்டிகிட்டி மண்டைய போட்டுட்டுதா...?”

வண்டியை வீட்டுப்பக்கம் திரும்பியபோது, ஒழுங்கையின் இருட்டிலிருந்த கோபாலிடம் கலியபெருமாள் கேட்டார் “ என்னாடா கரண்டு இல்லியா? எல்லாம் இருளோம்னு கெடக்குது.”

அடிக்கிற மாதிரி கோபால் சொன்னார் ‘ பொட்டி பீஸ் பூட்டுது...’

“ அத போட்டா என்னாடா. ஊரையே இருட்டா போட்டு வைச்சிக்கிட்டு...”

“ இந்த இருட்டுல எவன் ஏறறது. பூத்துபூத்துன்னு நீர்மோட்ரு வைச்சி தண்ணி எறைக்கறவன் எவனாச்சும் வேணும்னா போட்டுப்பான். ஊரு அடங்கனப்பறம் வெளிச்சம் என்னாத்துக்கு...”

*

ஒன்பது

101

குடிதண்ணீருக்கு சனங்கள் பறவாய்ப் பறந்து கொண்டிருந் தார்கள். இந்த ட்ரான்ஸ்பார்மரில் ஓடிக்கொண்டிருந்த ஊர் மோட்டாருக்கும், பெட்டி மண்டையைப் போட்டதில் சிக்கல் வந்துவிட்டது. சொந்தப் பிணமாக இருந்தாலும் கால் பணம் முழத்துண்டு வாங்கிக் கொண்டுதான் சுடுகாட்டிற்குள் அனுமதிக்கும் மயான காண்ட அரிச்சந்திரன் போல ஈ. பி.காரர்கள். குடி தண்ணீருக்குத்தான் என்றாலும் வழக்கம்போல வரி சேர்த்துக் கொண்டுபோய் கொடுத்தால்தான் வேலை நடக்கும். யார் கனமாய் முடிச்சை அவிழ்ப்பது என்கிற சிக்கலில்தான் தாமதமாகிக் கொண்டிருந்தது.

சாணிசவுதியைக் கூட்டி அள்ளுவதற்காய் கட்டுத்தெருவில் கட்டிக்கிடந்த மாட்டை அவிழ்த்து கொடி போரில் கொண்டுபோய் கட்டப் போனார். தோட்டத்திலிருந்து பூமா சத்தம் போட்டாள் “ எப்பா... எப்பா... மள்ளாட்ட கொடி போர்ல கட்டாத எப்பா. அது பாட்டுக்கும் புடுங்கித் தின்னுட்டு தொட்டி தண்ணிய இழு இழுன்னு இழுக்கும். வூட்ல தண்ணியும் இல்ல. நம்ம மாடு ஏரித்தண்ணிய கடிக்க மேலயும் கீழயும் பாக்கும்.”

வைக்கோல் போரில் கட்டிவிட்டு, சாணித்தட்டை எடுப்பதற்கு தோட்டத்திற்கு வந்தார்.

வெளியே யாரோ வந்திருப்பது போன்று அரவம் கேட்டது. நடைக்கு வந்தார். வாசலில் ரெட்டியார் வீட்டுக்கு வேலை செய்கிற அரசன் நின்றுகொண்டிருந்தார். “ ஒங்கள ரெட்டியார் கூப்புட்டாரு.”

அநேகமாக ட்ரான்ஸ்ஃபார்மர் விவகாரமாகத்தான் இருக்க வேண்டும் என ஊகித்துகொண்டு “ சரி வர்றம் போப்பா..” சொல்லி விட்டு முகங் கைகால்களைக் கழுவிக்கொண்டு போகலாம் எனத் திரும்பவும் தோட்டத்துக்கு வந்தார்.

அரசன் தலைமறைந்ததை உறுதிப்படுத்திக்கொண்டு பெட்டி புகைந்த சேதி பற்றித்தான் இருக்குமென பாஞ்சாலை சொன்னாள். “ ஊர்க்காரனுவோ எல்லாங் கூடி ஓந் தலையில மொளகா அரைச்சிடப் போறானுவோ. நம்ப மோட்ரு பத்துன்னா பத்துக் குள்ள தொகைய மட்டும் குடு. வந்தாரங்குடி, வந்தாரங்குடின்னு நீனே எறக்கிக்கிட்டு, பூரா தொகையையும் ஏத்துக்கிட்டு நிக்காத.” குரல் கொஞ்சம் கடுமையாய் ராசோக்கியத்தை கறார்படுத்துவது

போன்று தெரிந்தது.

ஒன்றும் சொல்லாமல் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு போனார். எதற்கும் கலியபெருமாளை இட்டுக் கொண்டு போகலாம் என அவரின் வீட்டுப்பக்கம் பார்த்தார். வீடு சாத்திக்கிடந்தது. வழியில் ஒழுங்கைப் பக்கம் போகிறமாதிரி போர் போடுகிற கம்பங்கள், போர் செட்டுகள் ஏற்றப்பட்டு வண்டி நின்றுகொண்டிருந்தது. வண்டியிலிருந்த கிருஷ்ணமூர்த்தி, ராசோக்கியத்திடம் சொன்னார். " புதுப் பொட்டி கொண்டாறதுக்கு எவன் முடிச்சி அவுப்பான்னு கும்ப கூடிக்கிட்டு குந்தியிருக்கானுவோ. பாத்து பதமாப் பேசிட்டு வாங்க..."

" இங்க எவங்கிட்ட காசி இருக்கு, அவனுவோ ஆடற ஆட்டத்துக்கு. அது கெடக்குட்டும். இது யாருக்கு அண்ண போர் செட்டு போவுது?"

" நாஞ் சொல்லுல ஒனக்கு ரவ தண்ணிய கண்டதும் அவவனுக்குத் தாங்குல. இது அங்காண்ட புள்ளியா மூலையில மண்டரையா கெடக்குது பாரு ரெட்டி வூட்டுக் கெணறு. அதுல உள்ள பழைய போர ஆழப்படுத்தி அகலப்படுத்தி நீர்மோட்ரு போடலாம்னு வேல நடக்குது. அது எதாவது கரிக்கிற மாதிரி இருந்தா இங்காண்ட கோபாலு, மேற்க அவந் தம்பி பாலகிருஷ்ணன்னு எல்லாரும் மெனக்கிடுவானுவோ போல்ருக்கு..." கிருஷ்ணமூர்த்தி சொன்னார்.

" அப்பிடியாவது நாலா பக்கமும் நீர்மோட்ரு ஓடி, நம்ப மேல இருக்கற பொச்சரிப்பு பொறாம கொறைஞ்சா சரிதான்" சொல்லிக்கொண்டே ராசோக்கியம் ரெட்டி வீட்டுப்பக்கம் போனார்.

கலியபெருமாள் மட்டுமல்ல, எதிரே அந்தாண்ட திண்ணையில் கோபால், அவன் தம்பி கொடுவாள் மீசைக்காரன் பாலகிருஷ்ணன், தெற்குவெளி மோட்டர்காரர்கள் ராசவேலு, கணேசன் இன்னும் அறிமுகமில்லாத நாலைந்துபேர் குந்தியிருந்தார்கள். " என்னாங்க கூப்புட்டிங்களாம்.." ராசோக்கியம் கேட்டார்.

" அதாம் பொட்டி பூட்டுது. எதாவது பத்து இருவதப் பெரட்டிக் கிட்டு பூதாமூர் போயி பாத்துட்டு வந்தா தேவலாம்." சொன்னார்.

" அதுக்கு என்னாங்க... இந்தப் பொட்டியில எத்தினி ஆர்ஸ் பவரு மோட்ரு ஓடுதுன்னு கணக்கு பாத்து, அதுக்கு தகுந்தமாதிரி வசூல் பண்ணி செலவப் பாக்க வேண்டியதுதான்." குந்தாமல் நின்றபடியே சொன்னார்.

பட்டென்று அங்காண்ட குந்தியிருந்த கோபால் அடிக்கிற மாதிரி எழுந்து

சத்தம் போட்டார் “ ட்ரான்ஸ்பார்முக்கு பக்கத்துல நீர்மோட்ர வைச்சி பூரா கரண்டையும் உறிஞ்சி பொட்டிய பொவைய வைச்சிட்டு, எனுமோ ஊரு பூரா வரிக்கோல் தூக்குணுங்கற.”

“ கேக்கக்குள்ளியே எதுக்குடா இந்தக் கெம்பு கெம்பற...” ரெட்டியார் அவரை சத்தம் போட்டார். இருவரின் சத்தத்திலும் டீக்கடை பக்கம் நின்றவர்கள்கூட தெருப்பக்கம் வந்தார்கள். குங்குமம் போய் சொல்லி, பாஞ்சாலையும் பூமாவுமாக வரவும், ரெட்டிவீட்டு முன்பு லேசான கும்பல் கூடிவிட்டது. கலியபெருமாள் ராசோக் கியத்தின் கையைப் பிடித்து “ மொதல்ல குந்துங்க. பேசிப்பும்..” இழுத்தார்.

“ வாணாம் வுடுங்க..” கையைப் பிரித்துவிட்டு ரெட்டியாரை பார்த்து நிதானமாக சொன்னார் “ நா, நீர்மோட்ரு போட்ருக்கன், நீர்மோட்ரு போட்ருக்கன்னு சொன்னா... எல்லாம் சும்மாவா வந்தது. தே போர்செட்டு போவுது ஒங்களுக்கு. நாளைக்கு நீர்மோட்ரு போடறமாதிரியிருந்தா போடாம வுட்டுடுவிங்களா.. எல்லாம் அவுங்க அவுங்க வவுத்து வலிக்கு போட்டுத்தான் ஆவணும்.” பேச்சை நேரடியாக ரெட்டியார் பக்கம் திருப்பியதும் அவருக்கும் திக்கென்று போய்விட்டது.

நாளைக்கு நமக்கும் இந்தச் சிக்கலைக் கொண்டுவந்து விடுவார்கள் என்று உள்ளுக்குள் உதைக்கவும் இறங்கி வந்தார். “ சரி வுடு. நீ போயி ஒரு ஆயிரம் ரூவாய எடுத்தா. மீதிய பாத்துக்கச் சொல்லுவம்.”

“ திரும்பவும் என்னாங்க. எம்மாம் ரூவா ஆயிடும். ஏங்கிட்டியே ஆயிரம் ரூவா கேக்குறீங்க.” நியாயம் கேட்கிறமாதிரி பேசியவர் கலியபெருமாள் பக்கம் திரும்பினார் “ என்னா அண்ண.. கம்முன்னு குந்தியிருக்கீங்க...”

கலியபெருமாள் இரண்டு பக்கமும் பார்த்து என்ன சொல்வ தெனத் தெரியாமல் குழப்பத்தில் குந்தியிருந்தார். “ பாத்து இன்னும் ஒரு எடத்தச் சொல்லுங்க.” ரெட்டியாரைப் பார்த்துச் சொன்னார்.

பட்டென்று கோபால் தம்பி பாலகிருஷ்ணன் எழுந்தான். மீசை துடிக்கிறது கோபத்தில். நெட்டுகிறமாதிரி கலியபெருமாளைப் பார்த்துப் பறக்கிறான் “ என்னா இன்னம் ஒரு எடம் பாக்கச்சொல்ற. வாணாம் வுட்டுடுங்க. நாங்க பாக்கற எடத்துல பாத்துக்கறம். எனுமோ கெஞ்சுறீங்க இப்பத்தான்...”

ராசோக்கியத்துக்கும் எகிறிவிட்டது. “ சும்மா ஒங்க கொக்கு மெரட்டுலாம் ஏங்கிட்ட வுட்டுக்கிட்டு நிக்காதீங்க. ஒங்களால என்னா செய்ய முடியுமோ, எங்க பாக்க முடியுமோ போய்ப் பாருங்க. நாங்க எனுமோ முதுவுமேல

குடிச போட்டுக்கிட்டு நிக்கிறமாதிரி இந்தக் கெம்பு கெம்புறீங்க..” கோபத்தில் ராசோக்கியத்திற்கு தடதடக்கிறது. ஊரே எதிர்த்து நிக்கிறமாதிரி பாஞ்சாலைக்கும் பூமாவுக்கும் ஒரு திகில்.

பாஞ்சாலைக்கும் தாங்கவில்லை. “ ஏம்ப்பா.. இந்த ஊர்ல மாட்ட வுட்டு மேய்ச்சாங்க. திட்டுத் திட்டா மள்ளாட்டக் கொடிய அரிச்சாங்க. எரியற வூட்ல வெளக்க அமிக்கிறமாதிரி மோட்ர காயில் போவ வைச்சாங்க. இன்னம் என்னென்னமோ பண்ணனாங்க. போனாங்க. கண்டும் காணாததுக்கு தே இப்ப நீனு பாக்கற எடத்துல பாக்கறங்கற. போயி பாருங்க, நாங்க மறிக்கில. ஆனா ஆதுபாது அத்துப்போயிதான் இந்த ஊருக்கு வந்துருக்காங்க, நாம நெனைச்ச மாதிரி ஏர ஓட்டிக்கிலாம்னு மட்டும் மனசுக்குள்ள வைச்சிக்கிட்டு போவாதீங்க. அப்பேர்க்கொத்த நெய்வேலிக்காரனே லத்திய சொயிட்டுகிட்டு நின்னான். துப்பாக்கியால சுட்டுப்பொசுக் கிடறன்னான். போங்கடா தெரியும்னு பொறாங்கையால தள்ளிட்டு எதுத்து நின்ன ஊருதான் எங்க வேப்பங்குறிச்சி. இப்பியும் ஒரு சேதி சொன்னா பத்து ஊருக்கு பத்து ஊரு வந்து நின்னு பஞ்சாயத்தம் பேசற அளவுக்கு எங்ககிட்டயும் ஆளு இருக்கு. ஆனா ஊர மீறிப் போவக் கூடாது. தே வந்து இம்மாம் நாளு ஆச்சி. இன்னம் பத்துப்பொழுது போனா, தாயா புள்ளயா சரியாப் பூடும்னுதாம் பெசாம நின்னுக்கிட்டு இருக்கம். அதனால இந்தப் பறக்கறம் புடிக்கிறங்கற வேலலாம் எங்ககிட்ட வேணாம். எது நாயமோ அத மட்டும் பேசுங்க..”

நைந்து கிடக்கிற அந்த எலும்புக்கூட்டுக்குள் அப்படியொரு காட்டமான கறாரான குரல் வருமென்று எவரும் எதிர்பார்க்க வில்லை. மழை பெய்து விட்டமாதிரி ஒரே அமைதி. கூப்பிட்டாள். “ இதுக்குமேல எது நடந்தாலும் நடக்குட்டு, நீ வூட்டுக்கு வா...” பூமாவும் திகிலடைந்தமாதிரி அழுதுகொண்டே கூப்பிட்டாள் “ வாப்பா...”

“ எதுக்கும்மா இப்ப அழுவற. சும்மா வா பேச்சிக்குத்தான பேசிக்குறாங்க. வூட்டுக்குப் போங்க. வருவாரு.” சத்தம் போட்டார் கலியபெருமாள்.

நியாயம் பேசுகிறமாதிரி கோபால் அங்காண்ட திண்ணை யிலிருந்து சொன்னார். “ நாங்களும் ஊர மீறிப் போவக்கூடாதுன்னு தான் இம்மாம் நேரம் பேசிக்கிட்டு இருக்கறம். இல்லன்னா அஞ்சி ஆர்ஸ் பவர் சர்வீசுல திருட்டுத்தனமா பத்து மோட்ர வைச்சி ஓட்றதுக்கு, மேல ஒரு கால் கடுதாசிய எழுதிப்போட்டா, வந்து கூண்டோட சப்சாடா அள்ளிப்போட்டுக்கிட்டு பூடுவான். வாணான்னுதான் வுட்டு வைச்சிருக்கம்.”

ராசோக்கியத்திற்கு திக்கென அதிர்ந்தது. கலியபெருமாள் சங்கடமாக நெளிந்தார். சுத்துப்பட்டில் பெரும்பாலும் இப்படித் தான். சாதா மேல்மோட்டரை மாற்றிவிட்டு, நீர்மோட்டார் போடு பவர்கள் எல்லோருமே கூடுதல் ஆர்ஸ் பவருக்கு பணம் கட்டி அனுமதி வாங்குவதில்லை. ஐந்து, மூன்று என சர்வீஸ் வாங்கி வைத்துக் கொண்டு பத்துப் பதினைந்து இருபது எனப் போட்டுதான் எல்லோரும் ஓட்டிக் கொண்டிருப்பது. விவசாயத்திற்குதானே என்பதால் இ. பி.யிலும் இதுபற்றி, யாராவது புகார் கொடுக்காதவரை கண்டுகொள்ள மாட்டார்கள். மீறி ஏதாவது பொறாமையில் மொட்டைக் கடுதாசி எழுதி, வந்து பிடித்துவிட்டால்... ஆயிரக் கணக்கில் அபராதம். இல்லையென்றால் கம்பி எண்ண வேண்டி வந்துவிடும்.

ராசோக்கியத்திற்கு ஐந்து அனுமதியில், பத்து மோட்டார் ஓடுவது ஊரில் நிறையப் பேருக்கு லேசான உறுத்தல்தான். அதைக் கும்பலில் போட்டு உடைத்தது பற்றி எல்லோருக்கும் மகிழ்ச்சி. வக்குச்சிக்கு இல்லாமல் மாட்டவிட்ட பூரிப்பில் கோபாலும் பால கிருஷ்ணனும் நீர்மோட்டார் பற்றியெல்லாம் தெரியாத ஆளுக்கு இந்த நுணுக்கமெல்லாம் எங்கே தெரிந்திருக்கும் என தெனா வட்டாய்ப் பார்த்தார்கள்.

ராசோக்கியத்திற்கு பட்டென்று எல்லாமும் விளங்கிவிட்டது. இந்த விஷயத்தை வைத்துக்கொண்டுதான் சுற்றிவளைத்து, ட்ரான்ஸ்பார்ம் செலவை நம் தலையில் கட்டுகிறார்கள் எனப் புரிந்ததும் மெல்ல பேச ஆரம்பித்தார்.

ராசோக்கியத்தைப் பார்த்து சமாதானமாய்ப் போகிற மாதிரி கலியபெருமாள் சொன்னார். “ வேணாம் எல்லாத்தையும் வுடுங்க. போர் போட்டா அஞ்சி மூண போட்டுக்கிட்டுதானா நிப்பாங்க.. பத்து போடறமாதிரியிருந்தா போட்டுத்தான் ஆவணும். சரி ரெட்டியார் சொல்ற மாதிரி ஒரு நூறு எரநூற கொறைச்சிக் கிட்டு பணத்த எடுத்தாங்க. குடுத்து காலாகாலத்துல வேலயப் பாக்க சொல்லுவம்.”

ராசோக்கியம் நிறுத்தி நிதானமாகப் பேசினார் “ இல்ல அண்ண. இம்மாந்தூரம் வந்தப்பறம், மொத்தத்துல கணக்கப் போட்டு, ஏம் மோட்ரு பத்துக்கு எம்மாம் வருதோ அதுக்கு மேல ஒரு நயா பைசாக்கூட தரமாட்டன். நீங்க எங்க போயி பொகார் பண்ணுனாலும் பண்ணுங்க.”

ரெட்டியார் உட்பட கோபால், பாலகிருஷ்ணன் எல்லோருக்கும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. மேலும் அதிர்வூட்டுகிறமாதிரி ராசோக்கியம் கலியபெருமாளிடம் தொடர்ந்தார் “ அண்ண, ஒரு ஊர்ல வந்தாரங்குடியா

போய்த் தங்கனா எந்த வழியில என்னா சிக்கல் வரும்னு தெரிஞ்சிதான் வந்துருக்கன். அதே மாதிரி கரம்பா கெடந்த எடத்துல, கடலும் காவேரியுமா மோட்ரு எறைச்சிதுன்னா ஊர்ல என்னா பொச்சரிப்பும் பொறாமையும் இருக்கும்னு புரிஞ்சிதான் இருக்கன். நீங்க சொல்லிவுட்டிங்கள பூண்டியாங் குப்பத்து முத்து எலக்ட்ரீசியன், அவரே மெனக்கிட்டு மேல அஞ்சிக்கி கூடுதல் பணங் கட்டி, எழுதி பத்துக்கு அப்பியே அனுமதி வாங்கிக் குடுத்துட்டாரு. சந்தேகமா இருந்தா எந்த கலக்டருக்கு வேணு மின்னாலும் ரிப்போர்ட்டு பண்ணுங்க. இத வைச்சிக்கிட்டு என்ன உள்ளல்ல தள்ளி ஓட்டலாங்கற கதய வுட்டுடுங்க..”

எல்லோரும் வெலவெலத்த மாதிரி எழுந்துவிட்டார்கள். கோபாலுக்கும் பாலகிருஷ்ணனுக்கும் மூஞ்சி சுண்டிப் போய் விட்டது. ‘ வேற எதிலியாவது சிக்காமலா பூடுவான். பாத்துக்கும் வா...’ உள்ளுக்குள் கறுவியபடி போனார்கள்.

‘ இந்தப் பயலுவோ பேச்ச நம்பி, அந்த ஆளக் கூப்பிட்டுக் கேட்டது ரொம்ப தப்பா போச்ச...’ மெய்யாலுமே ரெட்டியார் வருத்தப்பட்டார்.

சற்று நேரம் கழித்து வீட்டிற்கே வந்து ராசோக்கியத்திடம் தயங்கியது மாதிரி கலியபெருமாள் பேசினார். “ அவனுவோ கெடக்கறானுவோ. எனக்கும் இந்த அஞ்சி பத்துன்னு மோட்ரு சம்பந்தமா அதிகம் புரியாம இருந்துட்டன். இல்லன்னா முன்கூட்டியே ஆளுவுள மடக்கி அனுப்பியிருப்பன். சரி, அதலாம் பெரிசி படுத்த வேணாம். நம்ப கிட்ட ஆதாரம் இருக்கக்குள்ள எதுக்கு பயப்படணும். அப்பறம் ரெட்டியார் சொன்னமாதிரி எழுநூறு எடுத்தா. இவனுவுளுக்காக குடுக்கலன்னாலும் ஏதோ இந்த சமுத்தரத்தக் காட்னார அந்த செம்பையய்யனாருக்கு குடுத்ததா இருக்கட்டும். பணத்த எடுத்துக்கிட்டு, கையோட வண்டிய பூட்டிக் கிட்டும் வா. போயி பொட்டி எடுத்தாற வேலய பாப்பும். பாவம் சனம் வேற குடிதண்ணிக்கி தெவைக்கிது.”

“ அப்பிடி சுத்தி இப்பிடி சுத்தி கடைசிய எங்க தலையிலேயே பூரா செமையும் வைச்சிட்டீங்க, செயக்கொடி அப்பா. சரி வுடுங்க. எல்லாம் தெரிஞ்ச நீங்களே செம்பையய்யனாருக்குன்னுட்டீங்க...” வலிவருத்தங்கள் மறைந்து லேசான புன்னகையில் பாஞ்சாலை சொன்னாள்.

*

102

கடைசி சுருணை வைக்கோலையும் பந்தாகச் சுருட்டி உயரே போர்மேல் தூக்கிப்போட்டார் கிருஷ்ணமூர்த்தி " அப்பிடியே காலடியில போட்டுட்டு எறங்கு."

உயரே வந்த வைக்கோல் சுருணையைக் கையிலிருந்த முட்டுக்கவையால் லாகவமாக வளைத்து வாங்கி சொன்ன மாதிரியே காலடியில் உதறிவிட்ட போரின் இரண்டு பக்கங்களையும் பார்த்தார் ராசோக்கியம். வீட்டுக்கு விழல் அடித்த மாதிரி ஒரே சீரான சரிவில் வைக்கோல் படிவு. அதே போன்று மோட்டுவளைக்கு கன்னிக் கத்தை வைத்துக் கட்டியதுமாதிரி, பொட்டுத்தண்ணீர் கூட போரில் இறங்காத பொருத்தமான தலைக்கூட்டல்.

பக்கவாட்டத்தில் ஏணியைச் சாத்தவும் மெல்ல இறங்கி ஏணி பதித்த பள்ளத்து வைக்கோலையும் தட்டி சமப்படுத்தினார். அதற்குள் கிருஷ்ணமூர்த்தி பக்கத்து வேம்பிலிருந்து நாலைந்து கொத்துகள் தழை ஒடித்துவந்து எட்டி சுற்றிலும் செருகி விட்டதும், சோடிக்கப்பட்ட அரசியம்மன் பல்லக்கு போன்று, வைக்கோல் போர் தோற்றம் காட்டியது.

இருவருமே குளிப்பதற்கு மோட்டாரை நோக்கிப் போனார்கள். நெல் அறுத்த தாளடியில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. தண்ணீருக்குப் பயந்து தழை நுனியில் ஏறியிருந்த துள்ளுப்பூச்சிகள், இவர்களின் காலடிச் சத்தத்தில் மீண்டும் தண்ணீருக்குள் குதித்து நீந்திக்கொண்டிருந்தன.

சுணை போகக் குளித்தார்கள். குளித்துக் கொண்டிருக்கும் போதே பார்த்தார். வைக்கோல் போர் தோட்டத்திலிருந்து பூமா, யாருக்கோ கைகாட்டி விடவும், அவர் மோட்டாரை நோக்கி வருவது தெரிந்தது.

கிட்ட வந்த பிறகுதான் அடையாளமே தெரிந்தது. " என்னா மூத்தவருக்கு மோட்ரு கொல்லன்னு புதுவாழ்வு வந்ததும் கண்ணுக்கு டக்குன்னு புரியமாட்டங்குது போல்ருக்கு" வேப்பங்குறிச்சி அய்யாயிரம் சொல்லிக்கொண்டே கிட்ட வந்தார்.

" வா அய்யாயிரம்.. பூச்சிலாம் எப்பிடியிருக்கு..." ஆர்வமாய் விசாரித்தவர், கிருஷ்ணமூர்த்தியிடம் சொன்னார் " எங்க ஊரு. ஆம்படையானும் பொண்டாட்டியும் கொல்ல காட்ல கூடமாட கெடந்து... இவுங்களாம் இல்லன்னா நான்லாம் வேப்பங்குறிச்சியில மின்னேத்தத்துக்கு வந்திருக்க

முடியாது.” குரலில் நன்றி ததும்பி யிருந்தது.

“ ஓடனவங்களுக்கு ஒம்பதாமெடத்துல குருவுங்கறது சரியாத் தாம் இருக்கு மூத்தவர” சாப்பிட்டு முடித்துவிட்டு குந்திய அய்யாயிரம் சொன்னார்.

“ என்னா சொல்ற அய்யாயிரம்..” சந்தேகமாய்க் கேட்டார்.

“ உண்மதாங்க. ஏதோ செரமத்த பாக்காம, வெளிய வந்து விவசாயம் பண்ணணும்னு ஒரே புடியா இருந்ததொட்டுதான், தே மனசுக்கு சந்தோஷமா மோட்ரு, ஊடு, வாசன்னு இருக்கு. அங்க கெடக்கறதுவோ பூரா மந்தாரக்குப்பம் பஸ்டாண்டுலதான் சுத்திக்கிட்டு நிக்குதுவோ. வேலைக்கிப் போறதும் நெய்வேலிக்காரன் குடுக்குற காசிய வாணம் வுட்டுக்கிட்டுமா இருக்குதுவோ.”

“ என்னா ஊடுவாச இருந்தாலும், நம்ப ஊர்ல இருந்த நிம்மதி இங்க இல்ல அய்யாயிரம். எதையாவுது சிக்கல்ல இழுத்துவுடற துக்கு, சின்ன சந்து கெடச்சா போதும்னு நிக்கிதுவோ ஊர்ல..” ஊரில் நடந்த முக்கியமான இடர்பாடுகளை சுருக்கமாக, விசனம் கவியச் சொல்லிக்கொண்டிருந்தாள் பாஞ்சாலை.

“ கொஞ்ச நாளைக்கி அப்பிடித்தான் இருக்கும். போவப் போவச் சரியாப்பூடும் வுடுங்க.” சமாதானம் சொல்லிவிட்டு கடைசி யாக விஷயத்துக்கு வந்தார், அய்யாயிரம். “ அப்பறம் பையனுக்குதான் கல்யாணம் வைச்சிருக்கு. இங்க தான் கொளஞ்சியப்பா கோயிலுல தான் கல்யாணம்.” பத்திரிக்கையை பையிலிருந்து எடுத்து வெற்றிலை பாக்கு வைத்து, எழுந்து மரியாதையாய் நீட்டினார். “ பாப்பா, ஆயி எல்லாத்தையும் நேரா இப்பிடியே... கிட்டதான, இட்டுக்கிட்டு வந்துடுங்க.”

“ பொண்ணு என்னா ஊரு” கேட்டுக்கொண்டே பத்திரிகையை பிரித்தார். மணவாளநல்லூர் எனப் போடப்பட்டது கண்டதும் அதிர்ந்த மாதிரி கேட்டார். “ என்னா இம்மாந்தூரம் கடந்து அந்த ஊர்ல போயி பொண்ணு கட்ற..”

“ நம்ப என்னா ஒங்களாட்டம் காணி பூமி வாங்கவா போறம், ஆட்டுமாட்ட வுட்டு அழிச்சிடுவாங்கன்னு பயப்படறதுக்கு. வர்றத வைச்சி பக்குவமா ஓட்டிக்க வேண்டிதான். அதோட நம்ப பூச்சி வழியில பொண்ணும் சொந்தந்தான்.”

“ பூச்சிய இட்டுக்கிட்டு வந்துருக்கலாம். வாரம் பத்து நாளு

இருக்கக்குள்ளியே கல்யாண வேலன்னு வுட்டுட்டு வந்துட்டங்கற..” பாஞ்சாலை பொய்யாய்க் கடிந்துகொண்டாள்.

“ எல்லாம் கல்யாணத்துக்கு வரும் பாத்துக்கலாம் வுடுங்க..” சொன்ன அய்யாயிரம் சற்றே தயங்கி இறங்கியதுமாதிரி ராசோக்கியத்தை பார்த்துச் சொன்னார் “ ஏங் கல்யாணத்துக்கு கெழவரு தாலி எடுத்து குடுத்தாரு. இங்க கொல்ல குடின்னு வந்துட்டதுல பாக்குல போவுலன்னு வுட்டுடாதீங்க. ஏம் பையனுக்கும் ஒங்க கையால தாலி எடுத்துக் குடுக்கணும்.”

ராசோக்கியத்திற்கு அப்படியே குன்னிப்போனமாதிரி ஒரு வலி. “ என்னா அய்யாயிரம் ஏங் கையில போயி... இந்தக் கையி பெத்த புள்ளைக்கி ஒரு மால எடுத்துப்போடக்கூட குடுப்பன இல்லாத கையி. இதுல போயி..” சொல்லிக்கொண்டே எழுந்து உள்ளே போனார்.

பாஞ்சாலைக்கு துக்கம் தொண்டையை வந்து அடைத்துக் கொண்டது. பின்னால் நின்றுகொண்டிருந்த பூமாவுக்கு கண்களில் திடுமென குளுப்பை கட்டிக்கொண்டது. பாஞ்சாலை தான் ஏற்கெனவே கேட்க வேண்டும் என நினைத்தவள், சதாசிவம் பேச்சு வந்த பிறகு கரகரத்த குரலில் கேட்டாள் “ புள்ளாண்டாரு வூட்டுப் பக்கம் கிக்கம் போனியா..”

பட்டென்று நொடியில் மாறி அடிக்காத குறையாய் பூமா கேட்டாள் “ இப்ப அதகேட்டு என்னா பண்ணப் போற. பல்லக்கு மேல ஒக்காரவைச்சி இட்டுக்கிட்டு போயி ஒங்க மின்னால தாலி கட்னான, பாசம் பொத்துகிட்டு வருது.”

பாஞ்சாலை கிணுக்முணுக் என்று அதற்குமேல் வாயைத் திறக்கவில்லை. உள்ளிருந்து ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்துவந்து அய்யாயிரத்திடம் கொடுத்துச் சொன்னார் “ இந்தா தாலி வாங்கனாலும் வாங்கிக்க. இல்ல கல்யாணச் செலவுக்குனாச்சும் வைச்சிக்க..”

“ சொன்னதும் பொசுக்குன்னு என்னா பணத்த கொண்டாந்து நீட்றீங்க. இதோட செம கழிஞ்சி போச்சின்னு வுட்டுடப் போறீங்க. அவசியம் ஆயி, பாப்பாவலாம் இட்டுக்கிட்டு கல்யாணத்துக்கு வந்துட்டு வாங்க.” தயக்கத்தோடு பணத்தை வாங்கிக் கொண்டு“ சரி வர்றாங்க..” கிளம்பினார்.

“ என்னா அதுக்குள்ள. இரு சாயந்தர பஸ்சுக்கு போவலாம். அப்பறம் நம்ப கரியரு கணேசன் ரங்கநாதுலாம் எப்பிடி இருக்காங்க. பாத்தா விசாரிச்சன்னு சொல்லு...” ராசோக்கியம் ஆர்வமாக விசாரித்தார்.

விசாரித்த பிறகு திடுமென ஞாபகம் வந்தவராய் அய்யாயிரம் சொன்னார் “

அந்தக் கூத்தாட்டக்காரரு... சிகாமணி அப்பாதான் தவுறிட்டாரு.”

“ என்னா அய்யாயிரம் சொல்ற. எங்களுக்கு ஒண்ணும் சேதி தெரியில. எனுமோ வாழ்வத் தள்ளுனாலும் தள்ளலாம் சாவத் தள்ளக் கூடாதும்பாங்க. எந்தச் சண்ட எங்கிருந்தாலும் வந்து பாத்துட்டு வந்துருப்பம்.” அதிர்ச்சியோடு பேசினார் ராசோக்கியம். அதே சமயம் பூமாவுக்கு அவரைத் தாண்டியும் பெரிய அதிர்ச்சி. ஒரு நிமிடம் பூசத்தில் பார்த்த சிகாமணியின் முகம் விரிந்து, மாலையும் கழுத்துமாய் கிடக்கிற அப்பனின் பக்கத்தில் சோகமே உருவாய் நிற்பதாய் உள்ளுக்குள் ஓடியது.

“ நீங்க வேற ஏங்க. வராத வுட்டதுதான் மேலு. வந்துருந்தா கொல மோசம். அந்த அம்மா அந்த பழைய ராகத்த வுடாம எழவு வாசல்லியே மாட்ட முட்டவுட்டு கொன்னு ஏந் தாலிய அறுத்துட்டானுவோன்னு புழுத்த நாயி குறுக்கால போவாத வாசாங்கா வுட்டுத்தள்ளுது.” அய்யாயிரம் வெறுப்பாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

“ ஆமா, நம்ப மாடு குத்திதான் அவனுக்குப் பூட்டுது. குடிச்சிக் குடிச்சி கொடலு அழுவிப்போயி போனான். நம்பளாலதான் பூட்டுதுங்கறாளா பொம்னேட்டி..” பாஞ்சாலைக்கு பொசுக்கென்று கோபம் வந்துவிட்டது.

ராசோக்கியம் திரும்பி கண்டிக்கிறமாதிரி சொன்னார் “ ஆயிரமே இருந்தாலும் உசுரு போனப்பறம் ஒருத்தவங்கள பத்தி தப்பாப் பேசக்கூடாது” சொல்லிவிட்டு அய்யாயிரம் பக்கம் திரும்பினார் “ அப்பறம்...”

“ அப்பறம் என்னா, இருந்து இருந்து பாத்துட்டு நம்ப புள்ளாண்டாரு சதாசிவமும், சின்னவர் கனகராசும் போயி கேக்கவும், எங்கூட்டுக்காரனக் கொன்னமாதிரி, என்னியும் கொல்றதுக் காடா வர்றீங்கண்ணு... கடந்து நிக்கிது. அவுங்க புள்ளாண்டாரு சிகாமணியும் ஓடி, வுடும்மான்னு மறிச்சிப் பாக்கறாரு. அதையும் மீறிட்டு மண்ணாப் பூடோ, மாக்குன்னு பூடோன்னு அது பாட்டுக்கும் மண்ண வாரி வுடுது.”

“ எம்மாம் வேண்ணாலும் வாரி வுட்டாப் போறாளாம். இப்ப என்னா நாமதான மொழங்கையோட வுட்டுக்கிட்டு அவ தலகடையில போயி விருந்து சாப்புடப் போறம். இன்னம் குடிக்காத, கூத்தியா புடிக்காத ஆம்படையானா அவளுக்குக் கெடைச் சிருந்தான்னா, அவளக் கையால புடிக்க முடியாது.” பாஞ்சாலை ஆவேசமாகச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இங்காண்ட பூமாவும் அங்காண்ட சிகாமணியும் நிற்க, நடுவில் மண்ணை

வாரிவிட்டதில் எழுந்த புழுதிப் படலம், கடக்கவே முடியாத சுவரைப்போல் எழும்பி நின்றது.

*

103

சங்கு ஊதத் தொடங்கிய அடுத்த கணமே வில்லிலிருந்து பறக்கிற அம்பைப்போல மோட்டார் சைக்கிள்களும் மிதிவண்டி களும் வெளியேற பொறுமையாகப் போகலாம் என சைக்கிளை தள்ளிக்கொண்டு அநேகமாக கடைசி ஆளாக வெளியே வந்தான் அறிவழகன். ஐந்தே ஐந்து நிமிடத்தில் மொத்தத் தொழிலாளர் களையும் வெளியேற்றிவிட்டு திரும்பவும் மூடிக்கொண்டது முதல் சுரங்கத்தின் வாயில் கதவு.

மந்தாரக்குப்பம் ரோட்டில் மதிற்சுவரோரம் ஒதுங்கி, சிகாமணிக் காகக் காத்துக்கொண்டிருந்தான். சிகாமணி ஒரு மைல் வடக்கே தள்ளி இருக்கிற முதல் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியே வரவேண்டும். இருவருக்குமே நிறுவனத்தில் நிரந்தர வேலை பொசுப்பு இல்லாதது ஒரு பக்கம் என்றாலும் இந்த காண்ட்ராக்ட் வேலைக்கு ஒன்றாக வருவதும் போவதும் பழைய வேப்பங் குறிச்சியில் இருப்பதுபோல் ஒரு ஆறுதல்.

ஆரம்பத்தில் காண்ட்ராக்ட் சூப்பர்வைசர் வேலை. அடுத்து நிலம் எடுக்கிற பிரச்சினைகளில் போராளி. அதனால் சிறைவாசி. பிறகு லாரி ஓனர் என வெகு தூரம் கடந்து வந்திருந்தும் மீண்டும் பழைய காண்ட்ராக்ட் சூப்பர்வைசர். இந்த சைக்கிளும் வேலையும்... அவனுக்குப் பிடித்ததோ இல்லையோ சம்பளம் குறைவாக இருந்தாலும், லாரியை விற்றுவிட்டு, இந்த வேலைக்கு வந்தது பற்றி செல்விக்கு சந்தோஷம். அதுவும் மகன் வள்ளலைத் தூக்கியபடி தெருவில் வந்து நின்றுகொண்டு, “ அப்பா வேலைக்கிப் போவுது. டாட்டா காட்டுப்பா..” சொல்லுகையில், பொக்கை வாயை வைத்துக்கொண்டு அது பிஞ்சுக்கையை விரிப்பதில் இவனுக்கும் கூட பூரிப்புதான்.

செல்வி வரும்போது பேபி சோப்பும், பவுடரும் வாங்கி வரச்சொல்லியிருந்தாள். மறந்துவிடாமல் வாங்கிக்கொண்டு சென்றுவிட வேண்டும். இல்லையென்றால் சிக்கல்தான். மகன் பிறந்த பிறகு அவளின் உலகம் இன்னும் விரிந்து அதிகாரம் கூடி விட்டதாய் ஒரு தோற்றம், ஒரு கறார். குறிப்பாய் குழந்தை சம்பந்தப் பட்டதில் இவனும் எதையும் தவறவிடவும் மாட்டான். தன் இஷ்டமாய் செய்யவும் மாட்டான். ஒரு தடவை கிளி பொம்மை வாங்கி வரச்சொல்லியிருந்தாள். கூடவே அழகாய் இருக்கிறதென்று பின்னால் எட்டு டயர்போட்ட ஒரு ‘ டாரஸ்’லாரி

பொம்மையும் வாங்கிப் போய்விட்டான். "ஓ(ன்) லாரி புத்தி ஒன்னோடவே இருக்கட்டும். புள்ளைக்கி வேணாம்..." பட்டும் இருக்கிறான்.

" வள்ளல்..." என்று இவன் குரலைக் கேட்டால், குப்புறக் கிடப்பவன் சக்கரமாய் சுழன்று ' தத்தக்கா பித்தக்கா' என்று தவழ்ந்து வந்து மடியில் ஏறுவான். இவன் தூக்கிக் கொஞ்சுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பாள்.

குழந்தை பிறந்த இரண்டாம் நாள்தான், வடலூர் சேவியர் ஆஸ்பத்திரிக்கு, குறள்மணி அண்ணனை மாமனார் அழைத்து வந்திருந்தார். மாமியார் மல்லிகா, துணிச்சுற்றலோடு சிரித்தபடி குழந்தையை, குறள்மணி அண்ணனிடம் கொடுத்தாள். வாங்கி மடியில் வைத்து மகிழ்ச்சியாய் கொஞ்சிக் கொண்டிருந்தார். அறிவு அந்த மகிழ்வான இனிய தருணத்தில்தான் சொன்னான். " அண்ண, ஒங்க வாயால இப்பவே பேர் வைச்சிடுங்க... திலீபன்னு..."

குறள்மணி நெகிழ்ந்து போய்விட்டார். " நல்ல பேரு, நல்ல விஷயம்ப்பா. வருங்காலத் தலைமுறைக்கு வரலாறு மறக்காம இருக்கணுமில்ல..."

அங்கிருந்த மற்றவர்கள் எவருக்கும் பெயர்க்காரணம் புரியவில்லையென்றாலும், பாட்டியாள் காசாம்புக்கு மட்டும் இன்னும் கொஞ்சம் சிக்காமல் வாயில் நுழைகிற பேராக இருந்தால் தேவலாம் என்று பட்டது.

ஆனாலும் சாதகம், முதல் எழுத்து என்று எந்த வகையிலும் காரணங்காட்டி இந்தப் பேரை மாற்றிவிட அனுமதிக்கக்கூடாது என்பதில் அறிவழகன் தீர்மானமாய் இருந்தான்.

மெதுவாகக் கட்டிலில் எழுந்து குந்திய செல்வி குறள்மணி யிடம் சொன்னாள் " கோச்சிக்காதீங்க மாமா. போன மாசத்திலியே இவன் ஒதைக்கறத வைச்சி பையனாதான் இருக்கும்னு அப்பியே ' வள்ளல் பெருமான்'னு பேர் வைச்சிட்டன். அடுத்த மாசம் வடலூர் சபையில புள்ளைய வைச்சி கும்புட்டு, அன்னதானம் குடுக்குணும்."

" ஆகா... அழகு அழகு. என்னா அருமையான பேரு..." மகிழ்ச்சி பொங்கச் சொன்னவர், தன் பாணியில் தொடர்ந்தார் " எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகட்டும்."

அறிவழகனிடம் திரும்பிச் சொன்னார் " அறிவு, இதுக்குதாம்... எந்த யோசனையிலியும் நாம மண்டயப் போட்டு கொழப்பிக் கிட்டு கெடக்கக்

கூடாது. எதாயிருந்தாலும் அதுவோ பிரியத்துக்கு வுட்டுட்டு, சொல்றதக் கேட்டுக்கணும். பாரு... நான்லாம் அப்பிடித்தான். நிம்மதியா இருக்கறன்.”

“ என்னா அண்ண இங்க நிக்கிறீங்க, ஓ.. சிகாமணிய பாக்குறீங் களா...” அவர்களாகவே கேள்வியும் கேட்டு பதிலும் சொல்லிக் கொண்டு போகிறவர்கள் நிறையப்பேர். எல்லாம் போராட்டத்தின் பயனாய் வேலைக்கு வந்தவர்கள். நன்றி விசுவாசமாய் இவனைப் பார்த்து விட்டுப் பேசாமலும் அவர்களால் போகமுடியவில்லை. ஆனாலும் தன்னைவிடப் படிப்பிலும் அனுபவத்திலும் மிகக் குறைவானவர்களாய் இருந்தபோதும் மேனி குலையாத நிரந்தரப் பணியில் இருக்கும் அவர்களின் விசாரிப்பு, நிலைகால்மேல் நிற்கும் இந்த காண்ட்ராக்ட் சூப்பர்வைசர் வேலையில் அலுத்துப் போயிருக்கிற தருணம், அவனுக்கு துக்கவிசாரிப்பு போன்றுதான் இருக்கும்.

“ சரி வா அண்ண போவும்..” இவனைப்போலவே வேச்சரலாய் வேர்த்து விறுவிறுக்க சைக்கிளை மிதித்துக்கொண்டு வந்து சிகாமணி கூப்பிடவும், போனார்கள்.

இருவரும் மந்தாரக் குப்பம் பேருந்து நிலையத்தைக் கடந்து கிழக்கே சங்க அலுவலகத்தில் போய் சைக்கிளை நிறுத்தினார்கள். வாசலில் எதிர்பார்த்தமாதிரி செம்ப படையாச்சி நின்று கொண்டிருந்தார். “ எங்கப்பா வண்டி? சைக்கிள்ல வர்ற..” அறிவழகனைப் பார்த்துக் கேட்டார்.

“ காண்ட்ராக்ட் சூப்பர்வைசர் வேலைக்கலாம் வண்டிய எடுத்துக்கிட்டு போயி கட்டுப்படியாவுமா அண்ண. அதுலாம் லாரி ஓனரோட சரி. இப்பல்லாம் சைக்கிள்தான்...” வறட்சியாய்ப் புன்னகைத்தபடி அறிவழகனும், தொடர்ந்து சிகாமணியும் உள்ளே போனார்கள். உத்தண்டராயர் உட்பட நிறையப்பேர் கட்சியில் முக்கியமானவர்கள் குந்தியிருந்தார்கள்.

“ என்னா அண்ண, திடீர்னு வரச் சொன்னிங்க. ஏதாவது முக்கியமான சேதியா...?” செம்பரிடம் சிகாமணி கேட்டான்.

செம்ப படையாச்சி ஒரு பேப்பர் நகலை அவனிடம் கொடுத்தார். “ தெற்குமேலூர் கந்தசாமி கம்பத்துலேர்ந்து வாங்கி யாந்தன்.”

வாங்கிப்படித்த சிகாமணிக்கு பட்டென முகம் மலர்ந்தது. அறிவழகனிடமும் கொடுத்தான். “ எதையும் எதிர்பாக்காத வசதி உள்ள ஆளுவோ நெனைச்சத சாதிச்சிட்டாங்கப்பா...” அறிவழகன் பிரமிப்பாக சொன்னான்.

ஏற்கெனவே நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் முதல் சுரங்கத்துக்காக எடுக்கப்பட்ட நிலங்களின் மீது கொடுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறதென்றும், நிலம் எடுக்காமலிருந்தால் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் வாழ்வாதரங்களுக்கு உதவும் எனக் கணக்கிட்டு கூடுதல் தொகை வழங்க வேண்டும் என இழப்பீட்டுத்தொகை வாங்க மறுத்த வசதி படைத்த பெருநிலக் கிழார்கள் வழக்குப் போட்டிருந்தார்கள். நெடுங்காலம் நடந்த வழக்கு அவர்கள் பக்கம் சாதகமாக வந்து ஏக்கருக்கு கூடுதலாக ஐம்பதாயிரம் வழங்க வேண்டும் என்கிற விபரங்களடங்கிய, நீதி மன்றத் தீர்ப்பின் நகல் அது.

“ இத வைச்சி நாம்பளும் கூடுதல் தொக கேக்கலாம் அண்ண..” இருவரும் ஒருவாய்ப்பட்ட மாதிரி சொன்னார்கள்.

“ அதுக்குதாம் வரச் சொன்னம்..” செம்ப படையாச்சி விஷயத்துக்கு வந்தார்.

தீர்ப்பு நகலின் அடிப்படையில் நிலம் அளித்தவர்களுக்கு கூடுதல் தொகை. மேலும் ஏற்கெனவே வேலைவாய்ப்புக்குத் தகுதியான நபர் இல்லாத பட்சத்தில் நிராகரிக்கப்பட்ட குடும்பங்களில், தற்போது பதினெட்டு வயது பூர்த்தியான நிலையில் இருப்பவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கக் கோருவது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றக் கோரி பெரிய அளவில் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும் என்கிற முடிவோடு எழுந்தார்கள்.

“ அவசியம் இத நடத்தித்தான் ஆவணும் அண்ண. நெலம் வுட்டவங்க ஒரு பக்கம் இருந்தாலும் அடுத்தது மணகதி, வீணங்கேணி பக்கம் எடுக்கற மாதிரி சேதி அடிபடுது. அவுங்களுக்கு இது ஆதரவா இருக்கும். கொஞ்சம் நேந்து நெதானமா நிர்வாகத்துல நடப்பானுவோ.” சிகாமணி சொல்லிக்கொண்டே வெளியில் வந்தான்.

“ இதலாம் சலாபத்தா, மக்களுக்குச் செய்யினும்னுதான் ஒங்களுக்கு நிர்வாகத்துல வேல குடுக்காம வுட்டுவைச்சிருக்கான்...” சிரித்துக் கொண்டே செம்பர் எழுந்தார்.

“ இங்க மாத்துக்குடியிருப்புல இருக்கறவங்க இல்லாம வெளியூர்ல இருக்கறவங்க, இதுக்கு மின்ன நெலம் வுட்டவங்க போனவங்க எல்லாத்தையும் சப்சாடா தகவல் குடுத்து ஒரு பெரிய கூட்டமா நடத்தணும். அப்பதான் மின்னமாதிரி நிர்வாகம் கொஞ்சம் யோசிக்கும். இல்லன்னா சித்தெறும்பு கடிச்சமாதிரி தொடைச்சி வுட்டுட்டுப் பூடும்.” உத்தண்டராயரும்

வெளியில் வந்தார். வாசலில் நின்றுகொண்டிருந்த அறிவழகனிடம் சொன்னார். " வர்ற எலக்ஷன்ல, அ ய் யா 234 தொகுதியிலயும் ஆள நிறுத்துவாரு போல்ருக்கு."

சங்கமாக ஆரம்பித்து கட்சியாகப் பரிணமித்தபின் எதிர் கொள்ளப் போகும் முதல் தேர்தல் என்பதால் அய்யா, யார் யார் எங்கு என அதற்கான வேலையை முன்கூட்டியே தொடங்கி விட்டிருந்தார். அதுபற்றிய பேச்சு என்றாலே எல்லோர்க்கும் ஓர் ஆர்வம். அறிவழகன் உற்சாகமாகச் சொன்னான் " அப்பிடி எல்லா எடத்துலயும் நிறுத்தனாதான் நமக்கு எங்க எங்க வாய்ப்பு இருக்கும்னு தெரிஞ்சிக்கிட்டு, அடுத்த கட்டத்துக்குப் போவலாம். அதோட தமிழகம் அளவுல நம்ப பலமும் மக்களுக்குப் புரியும்." சற்று இடைவெளி கொடுத்து மீண்டும் அவனே தொடர்ந்தான். " விருத்தாசலத்துல கூட நம்ப ஜி.ஆர்.டாக்டர நிறுத்தினா வாய்ப்புதான். ஆனா கீரன கொண்டாந்து நிறுத்தப் போறதா சேதி அடிபடுது."

" யார நிறுத்தனா என்னா அண்ண. அய்யா யார கையக் காட்றாரோ அவுங்கள ஜெயிக்க வைக்கறதுக்கு உசுரக்குடுத்து வேல செய்றதுதான், நம்ப கடம..." சிகாமணி உறுதியாய் சொல்லிக் கொண்டிருக்கும்போது உத்தண்டராயர் குறுக்கிட்டார். " அப்பறம் இந்த போராட்டத்தையும் நம்ப ஜி.ஆர். தலைமையிலதான் நடத்துணும். அவுர பாத்து முன்கூட்டியே சொல்லி வைக்கணும். சரி கெளம்புங்க... பாப்பும்."

" போவும் வா அண்ண..." அறிவழகனைக் கூப்பிட்டபடி சைக்கிளில் ஏறப்போன சிகாமணியிடம், செம்பர்தான் கேட்டார் " என்னா சிகாமணி, கேக்கலாம்னு இருந்தன் மறந்துட்டன். ஒங்க அப்பா சாவுக்கப்பறம் நேத்துதான் தெருவுபக்கம் போனன். என்னாப்பா ஒங்க அம்மாவுக்கு, அர ஒடம்புகூட இல்லாம பாவமா நிக்கிது. ரொம்ப வெசனப்பட்டு சொல்லிச்சிப்பா. பாத்து சீக்கிரம் ஒரு கல்யாணம் பண்ற வழிய பாரு."

" பாப்பும் அண்ண..." வேறெதுவும் சொல்லாமல், சைக்கிளில் ஏறினான்.

*

104

தாங்கித் தாங்கி சைக்கிளை தள்ளிக்கொண்டு நடக்கும் முத்துலிங்க ஆசாரியின் நடைக்கு ஏற்பப் பின்தங்கியபடி வந்து கொண்டிருந்தார் ராசோக்கியம். அப்படியும் ஆசாரி ஒரு போக்குக் காட்டினார் " போய்க்கிட்டியே இரன் மூத்தவர, வர்றன்."

" வாணாம் சாமி. கலியபெருமாள் அண்ணஞ் சொன்னமாதிரி ஒன்ன வுட்டா சாராயக்கடைய பக்கம் பூடுவ.." ராசோக்கியம் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே குறட்டில் குந்தியிருந்த ரெட்டி யாரைப் பார்த்துவிட்டார் ஆசாரி. பட்டென்று ராசோக்கியத்தை பார்த்து குடிப்பது பற்றிப் பேசவேண்டாம் என்கிறமாதிரி சைகை காட்டி நல்ல பிள்ளையாய் வந்தார்.

முதல்நாள் கலியபெருமாள் வீட்டில் பெஞ்சு வேலை செய்து கொண்டிருந்தபோதுதான், ஆசாரியோடு பழக்கம். வேலையில் நல்ல சுறுசுறுப்பு. எப்போதும் சிரித்த முகந்தான். ஆனால் தெளியத் தெளிய மேலே ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும்.. " கடைய போயி வெத்தல வாங்கிக்கிட்டு வர்றன்.." என்பதெல்லாம் ஒரு சாக்கு. நேரே சைக்கிளை எடுத்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்து, முந்திரித் தொங்கல் பக்கம் போய் காறி காறித் துப்பிக் கொண்டுதான் வருவார். நன்றாக நேராக நடந்து கொண்டிருந்தவர்தான். தன்னைக்கடந்த குடிபோதையில் ஒரு தடவை கம்மாக்கட்டை பள்ளத்தில் விழுந்தவர், இடதுகால் இரண்டு துண்டாய் முறிந்ததில், சிம்பு வைத்து கட்டியும், கால் சற்றே வளைந்து தாங்கலுக்கு வந்துவிட்டது.

பெஞ்சு வேலை முடிகிற அரிபிரி ஒரு பக்கம் இருந்தாலும், பொழுதுபோவதற்குள் போய் ஊற்றிக்கொள்ள வேண்டும் என்கிற அவசரம் ஆசாரிக்கு. ஏதேச்சையாய் அந்த நேரத்தில்தான் திடுமென ராசோக்கியத்திற்கு பரணைமீது கிடந்த கட்டில் கால்கள் ஞாபகத்திற்கு வந்தது.

வேப்பங்குறிச்சியில் கொல்லையில் படுப்பதற்கென கல்லங் கழியில் போட்ட கயிற்றுக்கட்டில் வைத்திருந்தார். எங்கு தூக்கிக் கொண்டு அலைவது என மாற்றுக்குடியிருப்பில் போட்டுவிட்டு வந்ததின் விளைவு, அவசரத்தில் மோட்டார்கிட்ட இரவில் வெறுந் தரையில்தான் குந்த வேண்டியிருந்தது.

புதிதாய் ஒன்று போட்டால் தேவலாம் என்று பரண் மீது ரெட்டி மறந்துவிட்டுப் போயிருந்த மரங்களில், சட்டங்களில் தேடியபோதுதான் செட்டாய் கட்டி வைத்தது ஒட்டடை படிந்து கிடந்தது. வாள் பட்டறையிலிலேயே கொடுத்து சைஸ் செய்த நிலையில் இருப்பவற்றை அப்படியே கூர் வாங்கி, கால்களில் துளையெடுத்து மாட்ட வேண்டியதுதான்.

“ நாளைக்கி காலையில பாப்பும். பொழுது பூட்டுது.” கம்பி நீட்டிவிட்ட ஆசாரியை, காலையில் வீட்டுக்குப் போய் கேட்டு, வேலை செய்யப் போயிருக்கிற செட்டி கொட்டகைக்கே போய்ப் பிடித்துவிட்டார். அப்படியும் ஆசாரி ஆரக்காட்டினார் “ சும்ம ஒத்தக் கதவுதான். கீல் பட்டய போட்டு தூக்கி, ஆட வுட்டுட்டு மத்தியானமா வர்றம் போயன்.”

மத்தியானம் என்பது சாயந்திரமாய் ஆகிவிட்டது. “ சைக்கிள நா வேண்ணா தள்ளியாருட்டுமா...” ராசோக்கியம் கேட்டார்.

“ வாணாம்... வாணாம்... நா, பெரிய பாரஸ்டரு வைச்சிருக்கார அந்த புல்லட்டே ஓட்டுவன், எனக்கு என்னா... நாந் தள்ளியாறன்...” சொன்னாலும் வேண்டா வெறுப்பாய்த்தான் வந்து கொண்டிருந்தார். பொழுது சாயச் சாய முந்திரித்தொங்கல் பக்கம் அவர் யோசனை ஓடிக்கொண்டிருந்தது.

படியில் ஏற ஆசாரி சிரமப்பட்டார். உள்ளே இட்டுக்கொண்டு போனதும், தலைசீவிக்கொண்டிருந்த பூமாவைப் பார்த்துவிட்டு ஆச்சர்யமாய் கேட்டார் “ ஒங்க பொண்ணுங்களா? அப்பிடியே அச்சி அசலா ஏம் பெரிய பொண்ணு மாதிரியே இருக்குங்க.”

பூமாவுக்கு சிரிப்பாக இருந்தது. அதே சமயம் அவரின் இயல்பான பேச்சு அவளுக்குப் பிடித்தமானதாகவும் இருந்தது. “ நெசமாலுமா சொல்றீங்க” கேட்டாள்.

“ நெசமாலுந்தாம் பாப்பா. அப்பிடியே ஒன்ன மாதிரிதான் ஏம் பெரிய பொண்ணு. ஆனா நீ எப்பிடியோ அதுக்கு வாயி காது வரைக்கும். ஆத்தாளல்லாம் சக்காளத்தி மாதிரிதான் வேல வாங்கும். அதே மாதிரி ஒஞ்சி ஒரு நிமிஷம் ஏம் மகராசி கீழ குந்தாது. கள வெட்ட ஓடும், முந்திரிக்கொட்ட பொறுக்கும். ஏங்கூட செத்த எழப்புளிய இழுன்னாலும் ஆளு மாதிரி இழுக்கும்.” ஆசாரி ஆர்வமாய்ச் சொல்லிக்கொண்டு இருந்தார்.

கால்களின் பக்கச் சட்டங்களை எடுத்து வந்து காட்டினார். உளியால் கொத்திப் பார்த்தார் ஆசாரி. எல்லாம் வைரம் பாய்ந்த காட்டு மரங்களாகத்

தெரிந்தது. “ ரெட்டியாமாரு படுக்கலாம்னு அறுத்து வைச்சிருக்காங்க. வுழுந்து பெரள்றதுக்கு ஒங்குளுக்கு பொசுப்பு இருந்துருக்கு போல்ருக்கு.” சிரித்துக்கொண்டே எழுந்தவர் சொன்னார் “ சரி எடுத்து வைய்யி. காலையில முடிச்சிடுறன்.”

ராசோக்கியத்திற்கு திக்கென்று போய்விட்டது. “ என்னா ஆசாரம், காலையிலேர்ந்து ஓஞ் சூத்தப் புடிச்சிக்கிட்டு நிக்கிறன். நீ என்னாடான்னா நாளைக்கி கெடுவு வைக்கிற. நாளைக்கி நாங்க ரெண்டு பேரும் அகித்தியமா எங்க ஊருக்குப் போய்ட்டு வருணும். மந்தாரக்குப்பத்துல நெலம் எடுத்தது சம்பந்தமா ஒரு ஆர்ப்பாட்டக் கூட்டம் வைச்சிருக்காங்க. தபால் வந்துருக்கு... எங்க வேப்பங் குறிச்சி சனங்கள பாத்துட்டு கூட்டத்துல கலந்துக்கிட்டு வரலாம்னு ஆவலமா இருந்தா...” ராசோக்கியம் குழப்பமாக இழுத்தார்.

“ அதுக்கு என்னா போய்ட்டு வாங்க. பாப்பா வூட்லதான இருக்கு. சும்மா தொடைச்சி மாட்டவேண்டிய வேலதான, நா வந்து மாட்டிக்குடுத்துட்டு போறன்...” சாதாரணமாகச் சொல்லி விட்டுப் பூமா பக்கம் திரும்பினார் “ எம்மா சித்ரா, நாளைக்கி காலையில ஒரு கலப்பக்கட்ட செத்தற வேல இருக்கு, முடிச்சிட்டு நேரா இங்க வந்துடறன். அப்பா அம்மா வேண்ணா ஊருக்கு போவுட்டும். எங்கியாவுது ஒரு சொம்பு மோரும் தா... அம்மாஞ் சோறும் வைச்சிரு. நெகாயா வந்துடறன்” கிளம்பிவிட்டார்.

ராசோக்கியத்திற்கு வேறு வகையில்லை. மீறி நாளைக்கும் விட்டாலும் ஆளைப் பிடிக்க முடியாது. “ நம்பித்தான் ஊருக்குப் போறம். செத்த வந்து மாட்டிக் குடு. பூச்சும் பொட்டுமா கொல்லியில கூச்சமத்து போட்டுக் குந்தறதுக்கு அகித்தியமா வேணும்...”

“ தண்ணி கொஞ்சம் குடு சித்ரா...” வெளியே வந்த ஆசாரி கேட்டார்.

ராசோக்கியம் கூட கவனிக்கவில்லை. தண்ணீர் மொண்டு வந்து கொடுத்தபடி பூமா கேட்டாள் “ ஒங்க பெரிய பொண்ணு பேரு சித்ராவா...”

“ ஒனக்கு எப்பிடித் தெரியும் பாப்பா...” ஆசாரி ஆச்சரியமாகக் கேட்டார்.

“ இப்பதான தண்ணி கொஞ்சம் குடு சித்ரா, நாளைக்கி காலையில வந்துடறன் சித்ரானு...” அவர் சொல்வதை போன்று சொல்லிக் காட்டினாள்.

“ அப்பிடியா. நா மின்னியே சொல்லுல. ஏம் பெரிய பொண்ணு மாதிரி இருக்கறதால மறந்து போயி கூப்புட்டுட்டன். வர்றம் பாப்பா...” சொல்லிவிட்டு வெளியே வந்தவர், “ ஒரு வயிசிப் பொட்ட புள்ளிவோ

வூட்ல இருந்தா கலகலன்னு இருக்குங்கறது சரியாத்தாங்க இருக்கு” சிரித்துக்கொண்டே ரொம்ப அனுபவப் பட்டவராய் சொன்னார்.

“ ஒங்குளுக்கு எத்தினி பசங்க...” பாஞ்சாலை வராந்தாவில் நின்றபடி கேட்டாள்.

“ எனக்கு மூணும் வயசிக்கி வந்த பொட்டப் புள்ளிவோ. வூடு மட்டுமில்ல, வூட்டுக் கூரகூட கலகலத்துப் போயிதான் நிக்கும்.”

*

105

“ ஓர் ரூவா... ஓர் ரூவா.... வெள்ரி பிஞ்சி ஓர் ரூவா..” மந்தாரக் குப்பத்தில் பேருந்து வந்து சுழன்று நிற்பதற்குள் நெருங்குகிற குரல்கள். இறங்கிக் கொண்டிருந்த பாஞ்சாலை, ராசோக்கியத்திற்கும் அதில் ஒரு குரல் மட்டும் பரிச்சயப்பட்டதாகக் கேட்கவும் திரும்பினார்கள். திகைத்துப்போய்விட்டனர். கைகளில் வெள்ளரிப் பிஞ்சுகளை ஏந்திக்கொண்டு பேருந்து சன்னல்களின் முகங்களை ஏக்கமாகப் பார்த்தபடி முத்துக்கண்ணு ஆயி.

இறங்கியவர்களை முத்துக்கண்ணு ஆயியும் ஏதேச்சையாய் பார்த்துவிட சொருக்கென ஒரு சொடுக்கம். பிஞ்சுகளை ஏந்திய கைகள் தானாகக் கீழிறங்க, மெல்ல தயங்கியபடி கிட்ட வந்தாள். ஓரமாய் சாக்குவிரிப்பில் பிஞ்சுகளை அடுக்கத் தொடங்கியிருந்த கரி படாச்சியும் பார்த்துவிட்டு வெலவெலத்தமாதிரி எழுந்தார்.

“ வாடா...” கூப்பிட்டுவிட்டு அவர் கேட்காமலேயே கரியர் சொல்லத் தொடங்கினார் “ அதான் வண்டிய வச்சிக்கிட்டு கடைக்கி கட தீவார்த்தன வாங்கற மாதிரி மூட்டயத் தூக்கிக்கிட்டு எறக்கி ஏத்த முடியில. அன்னைக்கு ஒன்ன மார்க்கெட்டுல பாத்துட்டு வந்த ஒரு வாரத்துல வண்டி மாட்ட குடுத்துட்டன். முடியிற மட்டும் கையில இருக்கற காசிக்கு வாங்கித் திம்பும், சரியில்லன்னா கடைசியில நூறு இண்ட்ரி மருந்த வாங்கிக் குடிச்சிட்டு செத்துப் போவும்னுதான் நெனைச்சம். மறுபடி கெழுவிதான் திருடவா போறம்னு இங்க இட்டாந்துது. நம்ப அறிவு பொண்ணு கட்னாப்லிய, வடலூருக்கும் அங்காண்ட மருவாய் பக்கலாம் இந்த வெள்ரிதான் சங்கமா போட்டுருக்காங்க. போயி வாங்கியாந்து இப்பிடிக் கூறு கட்டி வித்து எதோ பொழப்பு போவுது.”

ராசோக்கியத்திற்கு ஒரு நிமிடம் செவுளி மாடுகள் பூட்டிய டயர் வண்டியில், புழுதி பறக்க வேப்பங்குறிச்சி கொல்லைவெளியில் கரியர் எருவடித்துக் கொண்டிருக்கிற காட்சி ஓடியது. பெருமூச்சி விட்ட படி, எதிரே கைகளில் வெள்ளரிப் பிஞ்சுகளுடன் நிற்கும் முத்துக்கண்ணு ஆயியைத் தாண்டி தெற்கே பழைய வேப்பங்குறிச்சி இருந்த நேருக்கு ஓடியது பார்வை. மந்தாரக்கும்பம் காலனியைத் தாண்டி உயரமாய் கரி வெட்டுகிற இயந்திரம் நிமிர்ந்து தலை நீட்டியிருப்பது தெரிந்தது. அதே நேருக்கு மேற்கே மண் வெட்டு இயந்திரங்களும், மாற்றுக்குடியிருப்பிற்கு புள்ளையார் மூலைப்

பக்கமாய் மலைபோல மண்மேடும் நண்டுவாக்காலி மாதிரி மண்கொட்டும் இயந்திரமும் புழுதிப் படலத்தில் மங்கலாய்த் தெரிந்தன.

“ நம்பள எங்க கொண்டாந்து நிறுத்திட்டு சரசரன்னு எனுமா வெட்டுவேலைய நெருக்கிக்கிட்டுப் போறானுவோ பாரு” ராசோக்கியம் விசனமாகச் சொன்னார்.

“ கரிய வெட்டி, ஏத்திக்கிட்டுப் போற வேலயே நடக்குத. சண்முகா பேலசுக்கு நேரா தெக்க போற மைன்சு ரோட்டுல போயிப் பாரன், எம்மாம் லாரி நிக்குதுன்னு. அதே மாதிரி கூனங்குறிச்சிக்கி நேரா மேம்பாலம் போடற வேல முடிஞ்சி, செகண்டு தெர்மலுக்கு பெல்ட்டுல கரி போற மாதிரி ரெடியாயிட்டுது... அவனுவுளுக்கு என்னா காசியில்லன்னு தேங்கப்போறானா, இல்ல குறுக்கால காரியம் இருக்குன்னு நிறுத்தப் போறானா... அம்மாசி இருட்டுல பெருச்சாளி போறதுலாம் வழிதாங்கறமாதிரி தெடலடியா போய்க் கிட்டு இருக்கறான்.” கரியர் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே பெரியார் ஒன்று சுற்றிவந்து நிற்கவும், “ ஓர் ரூவா... வெள்ரிப் பிஞ்சு ஓர் ரூவா...” கூவிக்கொண்டே முத்துக்கண்ணு ஆயி ஓடினாள்.

“ ஊர்வலத்துக்குதான வந்தது. அறிவு தபால் அனுப்பனன்னு சொல்லிச்சி. இங்க பஸ்டாண்டுலேர்ந்து போறதுக்கு போலிசு அனுமதி குடுக்கல. அதான் அங்க சண்முகா பேலசுலேர்ந்து வைச்சிருக்காங்கன்னு காலையில சதாசிவம் சொல்லிட்டுப் போனான். எப்பிடியும் இன்னம் ஒரு மணிநேரத்துக்கு மேல ஆவும். நாங்களுந் தான் வருணும்.” சொல்லியபடி பிஞ்சுகள் கேட்ட ஒருவருக்கு ஒரு கூறு அள்ளிக் கொடுத்துவிட்டு காசை வாங்கினார்.

சதாசிவம் என அவர் வாயில் வந்ததும் உடம்பெல்லாம் சிலிர்த்தது போல் கூசியது ராசோக்கியத்திற்கு. அதேபோல் பாஞ்சாலைக் கும் குபுக்கென ஏதோ வளைத்துக்கொண்ட மாதிரி இறுக்கம். பேருந்தில் வரும்போதெல்லாம் சதாசிவத்தை, இதுவரை பார்த்தே இராத மகராசியைப் பற்றி ஓடிக்கொண்டேதான் இருந்தது. பாஞ் சாலைக்கும் சேர்த்தே கேட்பதுபோல் தயக்கமாகத்தான் கேட்டார் “ எங்க புள்ளாண்டாரு எப்பிடி இருக்காரு?”

“ கூப்புடாமக் கொள்ளாமக் கல்யாணம் பண்ணிட்டான்னு சொல்லலாம தவிர, ஒண்ணுந் தப்பு இல்ல. வேலைக்கிப் போறான் வர்றான். தே இந்தப் போராட்டம் கீராட்டம்னு நோட்டிசுலாம் குடுத்துக்கிட்டுதான் இருந்தான்...” சற்றுப் பெருமையாகச் சொல்லவும் இருவருக்கும் என்ன சொல்வதெனத் தெரியாத ஒரு உடைவு உள்ளுக்குள்.

“ எதோ ஆத்தா அப்பன் எப்பிடிக் கெடக்கறாங்கன்னு பாக்குலன்னாலும், நெல்லபடியா இருந்தா சரிதான்.” அதற்குமேல் வார்த்தையை வளர்த்தாதவராய் “ சரி போறம்... வாங்க” முத்துக் கண்ணு பேருந்திடம் ஏந்தி நிற்க, கரி படாச்சியிடம் சொல்லி விட்டு கிளம்பினார்கள்.

“ வாங்க அத்த... வாங்க மாமா...” குரல் கேட்டுத் திரும்பினார்கள். தூரத்தில் நாலைந்து பூக்கடைகள் தள்ளி தேவகி. ஏற்கெனவே வந்ததை கவனித்து, பேசி முடித்த பிறகு பார்க்கலாம் என்கிற மாதிரி சாவகாசமாக இருந்தது அவளின் கூப்பிடல். இருவருமே கிட்டப் போனார்கள். ஏறத் தொடங்கியிருந்த காலை வெயிலை மறைத்தபடி லேசாய் தலை சாய்ந்திருந்த குடைநிழலில் அவளுக்கு உடம்பு வெளுத்துப் பூத்திருந்தது. வடிவாய்ச் சீவிய தலை. மெருகு ஏறிப் பளபளப்பாய் முகம். எடுப்பான சேலைக்கட்டு. சின்னச் சின்ன அசைவுகளில்கூட டாலடிக்கும் தோடு. எல்லாமும் சேர்ந்து அவளை இளம் வயதாகக் காட்ட பாஞ்சாலை ஆச்சரியமாய்ப் பார்த்துக்கொண்டே கிட்ட நெருங்கினாள். முட்டி வரை சுருங்கி மேலேறிய பழைய புடவையும், எண்ணெய் காணாமல் செம்பட்டை பாய்ந்து சிலிர்த்துக் கொண்டிருக்கும் தலையுமாய் “ ஓம் மொவம் பண்றதுன்னு நாயமா கேளு அத்த” சண்டை முகத்தோடு வந்து பஞ்சாயத்தம் சொல்லும் தேவகியின் பழைய முகம் ஒரு கணம் உள்ளுக்குள் வந்து போனது.

“ எப்பிடி இருக்கீங்க அத்த...” பக்கத்து பூக்கடைக்காரனுட னான பேச்சு சிரிப்பின் இடையே ஒப்புக்குக் கேட்டாள். பாஞ்சாலைக்கு ஏன் கிட்ட வந்தோம் என்கிற மாதிரியிருந்தது.

ராசோக்கியந்தான் கேட்டார் “ எங்க புள்ள வடிவேலு... கூட்டத்துக்கு வல்ல...”

“ இங்கதான் நிக்க நெதானமில்லாம நின்னுக்கிட்டு இருந்துது. நேத்து அறிவு கூட வந்து சொல்லிட்டுப் போனாப்ல. அததான் கூட்டத்துக்கு தள்ளிவுடணும். யேபாரத்த வுட்டுட்டா வர்றது.” அலட்சியமாகச் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே “ பெரிப்பா... ஏம் பெரியாயி...” போதையில் கூப்பிட்டுக்கொண்டே டீக்கடை பக்கமிருந்து தள்ளாடியபடி ஓடிவந்தான் வடிவேலு.

திரும்பிய இருவருக்கும் திக்கென்று போய்விட்டது. நிற்க நிதானமில்லாத போதையில் வடிவேலு. பக்கத்தில் வந்து நின்ற டவுண் வண்டி **11** ன் மீது மோதிவிடுகிற மாதிரி தடுமாறியவனை ராசோக்கியம் பிடித்துக்கொண்டார். “

பெரிப்பா, நம்ப பூமா சாமி எப்பிடி இருக்கு பெரிப்பா. எங்களலாம் வுட்டுக்கெடாசிட்டு எங்கியோ பூட்டிய பெரிப்பா...” அழுதான்.

“ அழுவறத நிறுத்து. தே இவுங்க கூடப் போ. அங்க எனுமோ ஆர்ப்பாட்டமோ ஊர்வலமோ வைச்சிருக்காங்களாம்... இட்டுக் கிட்டுப் போங்க மாமா...” கையிலிருந்த கத்தரிக்கோலை ஆட்டி ராசோக்கியத்தைப் பார்த்து தேவகி சொல்லவும் வெறுத்துப் போய் விட்டார்.

“ சரி நீ வா...” பட்டென்று ராசோக்கியத்தின் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் பாஞ்சாலை இட்டுக்கொண்டு வந்தாள். “ என்னா ரப்பு ராங்குல பேசுது. அதுகிட்ட நின்னுக்கிட்டு...” ரோட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

“ இரண்டி... நாங்களும் வர்றம்...” சாக்கிலிருந்த பிஞ்சுகளைக் கூடையில் அள்ளி வைத்தபடி முத்துக்கண்ணு ஆயி சொல்லவும் நின்றார்கள். கூடையை எடுத்துக் கொண்டுபோய் பக்கத்து பெட்டிக் கடையில் வைத்துவிட்டு வந்தார்கள்.

கரியரும் ராசோக்கியமும் முன்னே போக பின்னால் இருவரும் பேசிக்கொண்டே போனார்கள். “ இந்த பஸ்டாண்டையே பங்கப்படுத்திக்கிட்டு இருக்கிற அந்த மாடு கிட்ட நீங்க எதுக்குப் போனிங்க. அவ நேத்திக்கி இருந்தத நெனைச்சிப் பாக்காம, என்னா தெம்மாங்குல பேசறா பாரு.” தேவகியைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தவள், திடுமென நின்று கேட்டாள் “ ஆமா, இந்தப் பூமா புள்ள எப்பிடி இருக்கு. இட்டாந்தா என்னா...”

“ எதோ இருக்கு. அண்ணம் பேர்லதான் சொல்லாமக் கொள்ளாம கல்யாணம் பண்ணிட்டான்னு ஒரே கோவம். அவம் மொகத்துல வந்து நா முழிக்கமாட்டன்னு வல்லன்னுட்டுது...” சொடுக்கமாகச் சொன்னாள்.

“ அப்பறம் நடந்து முடிஞ்சப்பறம் சரிதான்னு போவ வேண்டிதுதான். வேற என்னா பண்ண முடியும். ஆனாலும் வந்த புள்ள நெல்ல மகராசி. அவளும் அவங்கிட்ட, ஊருக்கு இட்டுக் கிட்டு போன்னுதான் சொல்லிப் பாக்கறா. அவம் முடியாதுங்கறாம் போல்ருக்கு. நா, ஒரு ஓசன சொன்னன். இந்த அய்யாயிரம் மொவங் கல்யாணத்துக்கு கொளஞ்சிப்பா கோயிலுக்கு ஓம் மாமனா மாமியா வருவாங்க. ஒங்குளுக்கும் பத்திரிக்க குடுப்பான். நைசா கல்யாணத்துக்குப் போறமாதிரி அவன இட்டுக்கிட்டு போவச் சொல்லி, போயி ரெண்டு பேரு காலையும் கெட்டியா புடிச்சிக்கடின்னு சொல்லி அனுப்பனன். அவன் கல்யாணத்துக்கே போவுலன்னுட்டாம் போல்ருக்கு,

சொல்லிட்டு அழுதா...” முத்துக்கண்ணு ஆயி ஆற்ற மாட்டாமல் சொல்லிக்கொண்டே வந்தாள்.

பாஞ்சாலை பனிக்கும் கண்களுடன் சொன்னாள் “ எனுமோ ஏம் மொவ சொல்ற மாதிரி, நாங்க அம்மாம் பாவம் செஞ்சிட்டம் அவனுக்கு.”

“ நீங்களும் அவனுக்கு மேல இருக்குறீங்க. பாவம்டி அந்தப் புள்ள. எதோ இம்மாம் நாளு கெடந்து மொழுவாம இருந்து, இது ஏழாம் மாசம். நேத்திக்குத்தான் வந்து சீர் குடுத்து இட்டுக் கிட்டுப் போனாங்க. பொய்வலி மாதிரி வலிக்குது போல்ருக்கு. நேத்து கௌம்பறப்பியே சொல்லிகிட்டு இருந்தா. அதான் அந்த ராதா பிரேமு டாக்கடரம்மா கிட்டனாச்சும் இட்டுக்கிட்டு போயி காட்டியாந்து வுட்டுட்டு வர்றன்னு காலையில ஓடனான். புதுக்குப்பம் ரவுண்டானா கிட்டதாம் வூடுன்னாங்க. கெடக்குது போன்னுட்டு, நாளப் பின்ன போயிப் பாத்துட்டு வா பாஞ்சால. வாயும் வவுறுமா இருக்கற புள்ள...” முத்துக்கண்ணு ஆயி சொல்லிக்கொண்டிருந்த நேரம் எதிரே ரேடியோ சத்தம் கேட்டது.

சண்முகா பேலஸ் எதிரே தேரும்திருநாளுமாய் சனங்கள் திரண்டிருந்தார்கள். டயர் வண்டியில் கட்டப்பட்ட மைக் செட்டில் போராட்ட அறிவிப்பில் விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

வேப்பங்குறிச்சி, தெற்கு வெள்ளூர், கூனங்குறிச்சி என எல்லாமும் கூடிப் பெருந்திரளாக நின்றுகொண்டிருந்தார்கள். ஊர்மக்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் பார்த்த பூரிப்பு பாஞ்சாலைக்கும் ராசோக்கியத்திற்கும். முதலில் கனகராசுதான் பார்த்துவிட்டு ஆவலமாய் வந்து “ வாங்க அண்ண” என்றார். பின்னாலேயே அம்புசாட்சியும் வந்து நின்றாள். இருவருமே அவர்களிடம் கீச்சா ராமா என வாயைத் திறக்கவில்லை. அவர்களே இல்லாவிட்டாலும், போய் திருமணம் செய்து கொள்கிறவன்தான் சதாசிவம். இருந்தாலும் அவர்கள் மீது கோபம் தளரவில்லை.

ரங்கநாதுவைக் கண்டதும் பட்டென்று விலகி அவரிடம் போனார்கள். அறிவழகனை, கணேசனை, பால்ராசை, செல்லப் பாங்கியை, கீரையனை, அய்யாயிரத்தை, பூச்சியைப் போய் பார்த்துப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சதாசிவம் மட்டும் கண்ணில் தென்படாதது பாஞ்சாலைக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. ‘ ஒருவேளை ஆஸ்பத்திரிக்கு போன இடத்தில் அவளுக்கு சிக்கலாக இருக்கமோ... சுக்கு பனைவெல்லாம் தட்டிப்போட்டு கஷாயம் வைத்துக் கொடுத்தால் கூட பொய்வலியாக இருந்தால்

போய்விடும். விவரமான யாராவது கிட்டக்க இருந்து கைவைத்தியமாய் செய்து கொடுத்திருப்பார்களா. பாவம் அவன், அறியாப்பையன், என்னாத்தக் கண்டான். வெறுத்து ஆத்தா அப்பனை விட்டுவிட்டு வந்து தனித்துவிட்டோமே என்று தவித்திருப்பானா...' மருமகள் முழுகாமலிருக்கிறாள் எனச் சேதி கேட்டதிலிருந்து பலவழிகளிலும் பதைத்து, மனம் சதாசிவத்தையே தேடிக்கொண்டிருந்தது.

திடுமென கூட்டத்தில் சலசலப்பு. எல்லோரும் விலகி வழி விட கார் ஒன்று வந்து நிற்கவும் ஜி.ஆர். டாக்டரும் குறள்மணியும் இறங்க செம்பர், உத்தண்டராயர், அறிவழகன், சிகாமணி எனப் போய் கும்பிட்டு வரவேற்றார்கள். சற்று பரபரப்பு ஓய்ந்து லேசாய் இடங் கிடைக்கவும் பாஞ்சாலையும் ராசோக்கியமும் ஜி.ஆர். டாக்டரை பார்த்து ஒரு கும்பிடு போட்டார்கள். அறிவழகனைப் பார்த்து குறள்மணி கேட்டார் " என்னாப்பா ஆரம்பிக்கலாமா..."

என்னாடா வாழ்க்கை இந்த நெய்வேலியாலே

இருந்த மண்ணும் போச்சுதடா நெய்வேலியாலே

அதட்டி விட்டான் ஆதண்டார் கொல்லையை

விரட்டிவிட்டான் விளாங்குளத்தை

செடுத்தான்குப்பம் நொடுத்தான்குப்பம்

கொடுத்தான் சீட்டை எடுத்தான் ஓட்டம்.

(- என்னாடா)

அத்திப்பட்டும் அம்மேரியும்

அவதிப்பட்டுப் போனதடா

மேலக்குப்பம் மூலக்குப்பம்

வேலை தேடி அலையுராண்டா

(- என்னாடா)

ஓடிப்போச்சு ஓணாங்குப்பம்

கூடப்போச்சு குறவன்குப்பம்

புதுக்குப்பம் வெள்ளையன்குப்பம்

புறப்பட்டது மந்தாரக்குப்பம்

(- என்னாடா)

சிதைந்து போச்சு செம்புளியன்குப்பம்

தாவிப்போச்சு தாண்டவன்குப்பம்

கூரப்பேட்டை கூனங்குறிச்சி

கலைஞ்சி போச்சி கைக்களகுப்பம்

(- என்னாடா)

அழிஞ்சி போச்சி அண்ணங்காரன் குப்பம்

வெளியேறிப்போச்சி வெனசடிக்குப்பம்

வாள்னாபுரம் வெண்ணக்குழி

வாழ எமக்கு என்ன வழி

(- என்னாடா)

பெருமத்தூர் ஏரிமட்டும்

பேருசொல்லி நிக்குதடா

தெற்குமேலூர் வடக்குமேலூர்

தேடிப்போனேன் கிடைக்கலடா

(- என்னாடா)

வேலுடையான் பட்டு இப்போ

வில்லுடையான் பட்டாய்போச்சு

விரட்டிவிட்டான் வேப்பங்குறிச்சி

விழித்திருந்தோன் பிழைத்துக்கொண்டான்.

(- என்னாடா)

ஊத்தாங்காலும் மங்கலமும்

ஓடிப்போச்சு நொணாக்குப்பம்

தெற்குவெள்ளூர் வடக்குவெள்ளூர்

திகைக்குதடா முதனையுந்தான்

(- என்னாடா)

தொப்புளிகுப்பம் சாணாரப்பேட்டை

துரத்தப்பட்டுப் போனதடா

எடக்குப்பம் கெங்கைகொண்டான்

இடத்தைவிட்டே ஓடிப்போனான்

(- என்னாடா)

பெரியாகுறிச்சி அசிஸ்நகர்

பீதிகொண்ட நண்டுக்குழி

இளவரசம் பட்டும் போச்சி

இடம்பெயர்ந்தான் கொம்பாடிக்குப்பத்தான்

(- என்னாடா)

கத்தாழையும் கரிவெட்டியும்

கதறிக்கொண்டு போனதடா

காப்பாங்குளம் சேப்ளாநத்தம்

கடைக்காலும் ஆடுதடா

(- என்னாடா)

சொறத்தூர் செரத்தங்குழி

சுகம் கெட்டுக் கிடக்குதடா

முத்தாண்டிக்குப்பம் மானடிக்குப்பம்

முழிக்குதடா குடிதண்ணிக்கு

(- என்னாடா)

பாட்டன் சொத்தை எடுத்துக்கிட்டான்

வீட்டை இடிச்சி துரத்திப்புட்டான்
ஆட்டமாட்ட புடிச்சிக்கிட்டு
அலைய எங்களை வச்சிப்புட்டான்

(- என்னாடா)

கோடாரியும் மண்வெட்டியும்
தோளில் தூக்கி வைத்துக்கொண்டு
தோட்ட வேலை கேட்டு இவன்
வீட்டு வேலி கட்டுறானே

(- என்னாடா)

பாழும் வயிறு பத்தி எரியுது
பாவிப்பசங்க பண்ணுறவேலை
வேலைகேட்டு தேடிப்போனா
விரட்டி விரட்டி அடிக்குறானே

(- என்னாடா)

நம்மவீட்டுக் கரியெடுத்து
நாடு நல்லா இருக்குதடா
நாம மட்டும் குடிதண்ணிக்கு
நாயப் போல அலையுறோமடா

(- என்னாடா)

கத்தி கத்திப் பயனுமில்லை
கருணை காட்ட யாருமில்லை
பக்கத்திலுள்ள ஈழத்தையும் பாரடா - அங்கே
சுதந்திரத்தை நோக்கியொரு போருடா

(- என்னாடா)

சுத்தியுள்ள ஊருக்காரன்

சூழ்ந்துகொண்டு கேள்விகேட்டால்

நிச்சயமாய் வழிபிறக்கும் பாரடா - நமக்கு

நிறுவனமும் பதில் சொல்லும் கேளடா

(- என்னாடா)

நாளை வரும் நாளையிலே

டாக்டர் அய்யா தலைமையிலே

ஆலையதன் வாசலிலே கூடிடுவோம் - அய்யா

ஆணையிட்டால் தீப்பொறியாய் மாறிடுவோம்.

(- என்னாடா)

நெய்வேலியில் பாதிக்கப்பட்ட ஊர்களையெல்லாம் ஒருங்கிணைத்து அவர்கள் படும் துயரங்களையெல்லாம் பின்னிப் பிணைத்துக் கட்டப்பட்ட பாடல். வீரசிங்கன்குப்பத்திலிருந்து வந்திருக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர் கவி வான்முட்டி எழுதி, அவரே டயர் வண்டியில் நின்றுகொண்டு பாடி வரவும் ஒரே பேரமைதி. கேட்டுக்கொண்டே கூட்டத்தில் வந்துகொண்டிருந்த வர்கள், கடைகளெங்கும் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், ஏன் பாதுகாவலுக்கு வந்துகொண்டிருந்த இந்தப் பக்கத்திய காவலர் களைக் கூட அந்தப் பாடல் ஒரு அசக்கு அசக்கி விட்டது.

மெல்ல கூட்டம் நகர்ந்து போய்க்கொண்டிருந்தது. எதாவது அசம்பாவிதம் நடந்துவிடும் என்று பாதுகாப்பாய் போக்குவரத்தை நிறுத்திவிட்டார்கள். ரோட்டிலிருந்து திரும்பி நில எடுப்பு அலுவலகம் முன் உள்ள திடலில் போய் நிற்கவும், ஜி.ஆர். டாக்டர் பேச ஆரம்பித்தார்.

தெற்குமேலூர் கம்பத்திற்கு வந்த தீர்ப்பு நகலைச் சுட்டிக் காட்டி நிலம் அளித்தவர்களுக்குக் கூடுதல் தொகை, வேலைவாய்ப்பு கொடுபடாமல் உள்ள குடும்பங்களுக்கு வேலை... சான்றாதாரங் களுடன் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

நேரமாவது தெரிந்ததும் “ சரி பாஞ்சால, வூட்ல வேற புள்ள தனியா இருக்கும். அந்த ஆசாரி வேற வந்தானா வல்லியான்னு தெரியில...” மெல்ல அரவப்படாமல் கூட்டத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

நிற்கமாட்டான் எனத் தெரிந்தும் கையைக் காட்டினார்கள். பெரியார்க்காரன் நிறுத்தியது அதிசயந்தான். ஏறினார்கள். “ விருத்தாலம் ரெண்டு குடுங்க...”

*

106

தெருவைப் பார்த்துப் பார்த்து பூமாவுக்கு கண்கள் பூத்துப் போய்விட்டன. ஆசாரியின் உளி, கொட்டாப்புளி, மழுவு என வேலை செய்துகொண்டிருந்த தச்சு சாமான்கள் எல்லாமும் வைத்த வாக்கிலியே கிடந்தன. துளைத்தும் துளைக்கப் படாததுமாகக் கட்டில் கால் ஒன்று நடையின் குறுக்குவசத்தில் கிடந்தது. எல்லா வற்றையும் பார்க்கப் பார்க்க, ஆசாரி மீது கோபம் கோபமாக வந்தது.

இத்தனைக்கும் புள்ளடித்தமாதிரி பத்து மணிக்கே வந்து விடுவதாய் அப்பாவிடம் நேற்று சொல்லிவிட்டுப் போன ஆசாரிதான். பத்தோடு பதினொன்றும் போய் பன்னிரெண்டு மணிக்காய்தான் வந்தார். வந்து குந்தி நடையில் கிடக்கிற ஒரு காலுக்குக் கூட முழுதாய்த் துளையடிக்கவில்லை. வெலவெலத்தமாதிரி எழுந்து நடுங்கும் விரல்களைப் பார்த்துக்கொண்டே சொன்னார் “ பாப்பா கூச்சுளிய வேல செய்ற எடத்துல மறந்தாப்ல வைச்சிட்டு வந்துட்டன். தே போனாப்ல வர்றன்.” போனவர் போனவர்தான்.

தெருவில் சைக்கிள் சத்தம் கேட்கவும் ஆவலமாகப் பார்த்தாள். கோபால் மகன்தான் உள்ளிருக்கும் கலர் பனியன் முழுதுமாய் தெரிகிறபடி சட்டையுடன் வெளிநாட்டுக் கைலியில் ஆச்சலாய் மிதித்துக்கொண்டு போனவன், இவளை உரித்துவிடுகிற மாதிரி பார்த்தான். இவளுக்கு பகீரென்றது. ஆசாரி சைக்கிளை எடுத்துக் கொண்டு போனபோது கூட, இதே போல் ஊசியால் ஊனுகிறமாதிரி பார்த்துக்கொண்டே கிழக்கே போனான். அவன் கடந்து போன பிறகும், அவன் பார்வை விழுந்தோடிய அவள்மேல் சுணைப்பூச்சி ஊர்வதைப் போல உறுத்திக்கொண்டிருந்தது.

திண்ணையில் குந்தினாள். கருங்கல் பாவிய சில்லிப்பு தரையில் அவளுக்குக் கண்ணை இழுத்துக்கொண்டு போனது. அப்படியே படுத்தால் தேவலாம் என்று பட்டாலும், வர்ற போற எல்லோரும் பார்க்கிறமாதிரி திண்ணையில் படுக்கக் கூசியது. தச்சுச் சாமான் களைப் போட்டுவிட்டு உள்ளே போய்ப் படுக்கவும் முடியவில்லை.

எழுந்து தெருவு பக்கம் வந்தாள். முந்திரிக்கொட்டை பொறுக்கு கிற நாளாக இருந்ததால், தெரு வெறிச்சோடிக் கிடந்தது. தெற்கே தூரத்தில் உயரமான கம்பங்களைக் கொண்ட டிரில்லர் இயந்திரத்தைக் கொண்டு போர் போடுகிற வேலை நடப்பது, கடகடவென சத்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

மேற்கில் ரெட்டியாருக்கு போட்டதில் சுமாராக இறைக்கவும் அடுத்து கோபால் தனியாகத் தரை போராக போட ஆரம்பித்துவிட்டார். நிச்சயம் ஆழமாகப் போடப்படும் இந்த போரில் கூடுதலான ஆர்ஸ் பவரில் நீர்மோட்டார் போட்டால், இந்தாண்ட இவர்கள் மோட்டாரில் தண்ணீர் குறையும். ‘ பாத்துட்டு நாம்பளும் ஆவற செலவு ஆவுட்டும்னு, பவர் டில்லர கொண்டாந்து தான் போர் போடுணும்.’ அப்பா சொல்லிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது.

கலியபெருமாள் வீட்டு வாசலில் வெயிலில் டிவிஎஸ் **50** நின்றுகொண்டிருந்தது. கூப்பிட்டாள். “ செயக்கொடி...”

“ எல்லாம் தோப்புக்குக் கொட்ட பொறுக்கப் போயிருக் குதுவோ பூமா.” வேலைக்கு அவசரமாய் கிளம்பிக்கொண்டிருந்த முருகன் உள்ளிருந்தபடி சொன்னான்.

திடுமென கிட்டக்க சைக்கிள் மணிச் சத்தம் கேக்கவும் அலண்ட மாதிரி ஒதுங்கினாள். திரும்பவும் இழைச்சலாய் ஒரு பார்வையை உதிர்த்தபடி, ஒழுங்கையில் திரும்பி கோபால் மகன் போனான். எப்பவும் கொல்லைக்குப் போக வர எனத் தெருவு வழியாய் அடிக்கடி போய்வந்து கொண்டிருப்பவன்தான். ஆனாலும் இந்த போர் செட் போடும் வேலை ஆரம்பித்ததிலிருந்து கூடுதல் நடை போட்டு, அதுவும் இன்று உக்கிரப் பார்வையை இறுத்துவது என்னவோ போல் இருந்தது.

கிழக்கிலிருந்து **33,** ஒன்னே கால் சிங்கிள் எடுத்து வந்து கொண்டிருந்தான். முருகன் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிவிட்டு வெளியே வரவும் பூமா கிளம்பினாள் “ சரி வர்றன் அண்ண...”

“ தே காட்டுக்கூடலூர் பஸ்சு வந்துபோச்சி. ஆலமரத்து முந்திரியில இன்னம் நாலைஞ்சி மரந்தான் கெடந்துது. செத்த நேரத்துல பொறுக்கிட்டு வந்துடுவாங்க.” சொல்லியபடி டிவிஎஸ் **50**ஐ தள்ளியபடி கிட்ட வந்தான்.

“ இந்த ஆசாரி வர்றன்னு சொல்லிட்டுப் போனாரு. இன்னம் ஆளக் காணம்.” சொல்லிக்கொண்டே கிட்டப்போய் கொஞ்சம் தயங்கியது மாதிரி சொன்னாள். “ நானும் சொல்லக்கூடாதுன்னு தாம் பாத்தன் அண்ண. தே செத்த மின்ன சைக்கிள்ல போனாம்பாரு அவம் பார்வையே சரியில்ல அண்ண. எப்பப் பாத்தாலும் மொறைச்சி மொறைச்சி பாத்துக்கிட்டு...” இன்னும் எல்லாவற்றையும் சொல்ல, உள்ளுக்குள் ஓடியதுதான், ஆனால் முடியவில்லை.

லேசாய் திடுக்கிட்டு, வெளியில் காட்டிக் கொள்ளாமல் முருகன் சொன்னான். “ அது கெடக்குது அறுந்தவாலு. அதும் வளப்பு அப்பிடி. சாயந்திரம் ஆனா போதைய போட்டுக்கிட்டு, அடிக்கடி விருத்தாலம்போயி சுத்திக்கிட்டு ரசிகர்மன்றம், பாலாபிஷேகம்னு... உருப்படாத பய. மின்கூட்டியே ஏங்கிட்ட சொல்லியிருந்தா கூப்புட்டு ஒரு மெரட்டு மெரட்டியிருப்பன். சரி வுடு, நாளப்பின்ன நாம் பாத்துக்கறன்.”

ஸ்டார்ட் செய்வதற்கு, பெடலின் மீது காலை எடுத்து வைத்தவன் என்ன நினைத்தானோ கூப்பிட்டான் “ பூமா...”

“ என்னா அண்ண?” சந்தேகமாய் திரும்பினாள்.

“ அன்னைக்கி பூசத்துல ஏங் கூட வந்தாம் பாரு, ஒங்க ஊரு சிகாமணி. அவன் அடிக்கடி ஒன்ன விசாரிப்பாம் பூமா...”

பூமாவுக்கு ஒரு நிமிடம் கொளுத்துகிற வெயிலெல்லாம் சடுதியில் குளிர்ந்து மழையாய்ப் பொழிகிற சிலிர்ப்பு. உடம் பெல்லாம் அப்படியே இலவம்பஞ்சைப்போல் லேசாகிப் பறக்கிறமாதிரி பரவசம். என்ன சொல்வதெனத் தெரியாதமாதிரி, திடுமென ஓர் திகைப்பு. முகமெல்லாம் மலர்ந்து புதுப்பொண்ணாய் வெட்கம் கவியும் ஒரு தலைகுனிவு.

அவள் முகமலர்ச்சியைக் கண்டு துணிந்து மேலே சொன்னான் “ முந்தா நாளு கூட ஒன்ன கேட்டான். நானும் சொல்லுணும் சொல்லுணும்னு இருக்கறது தான்... மின்ன கூட பூசத்துக்கு நீ வந்திருக்கன்னு தெரிஞ்சி ஒன்னப் பாக்கத்தான் வந்தான்.” பெடலை மிதித்தான். ஸ்டார்ட் ஆகாமல் சுற்று வாங்கியது.

மெல்ல தயக்கத்தோடு கிட்ட வந்து சொன்னாள் “ அவுரு விசாரிச்சது போனதுலாம் எங்க அப்பா அம்மாகிட்ட சொல்லிடாத அண்ண. எங்குளுக்கும் அவுங்களுக்கும் சண்ட... அவுங்க அப்பா செத்தன்னைக்கிக்கூட மண்ண வாரி வுட்டுட்டாங்களாம் அவுங்க அம்மா...”

படபடப்புடன் கூடிய தவிப்போடு சொன்ன அவளின் முகக்குறிப்பை வைத்து லேசாய் சிரித்தபடி சொன்னான் “ எனக்கு எல்லாந் தெரியும் பூமா. கவலப்படாத, கூடிய சீக்கிரம் எல்லாச் சண்டையையும் சரி பண்ணி ரெண்டு குடும்பத்தையும் ராசியாக்கி, ஒங்குளுக்கு பச்சக்கொடி காட்றமாதிரி நா ஏற்பாடு பண்றன், வுடு.” வண்டியை ஸ்டார்ட் செய்து போய்க் கொண்டிருந்தான்.

பூமா மிதந்துதான் வீடு வந்து சேர்ந்தாள். மனமெங்கும் கம்மங்கொல்லையும்

குருவிகளும் விரிந்து பறக்க திண்ணையில் குந்தினாள். உடம்பெங்கும் கம்மஞ்சோலைகள் அறுவுவதுபோல் கூச்சம். குந்தியிருக்க முடியவில்லை. எழுந்து ஆசாரியின் தச்சுச் சாமான்களை எடுத்து சாக்குப்பையில் போட்டு, உள்ளே கொண்டு போய் வைத்துவிட்டு, கதவைச் சாத்தித் தாழ் போட்டுவிட்டு வந்து படுத்தாள். கண்ணை மூடின அடுத்த கணமே, சிகாமணியும் அவளுமாய் அய்யனார் கோயில் ஆவாரஞ்செடிகளூடே ஓடிக் கொண்டிருந்தார்கள். ஆட்டமும் பாட்டுமாய் வெகுநேரம் ஓடிக் களைத்து கண் அசருகிற நேரம், கதவு தட்டுகிற சத்தம் கேட்டது.

எரிச்சலாகப் போய்விட்டது. " ஏங்க எப்பப் போனிங்க... ஒண்ணு இன்னைக்கி வல்லன்னுட்டாவது போயிருக்கணும். ஒண்ணுமில்லாம..." ஆசாரியை சத்தம் போட்டபடி வந்து கதவைத் திறந்தவளுக்கு பகீரென்றது. வெளியே இளித்தபடி கோபால் மகன் நின்றுகொண்டிருந்தான். பூமாவுக்கு சடசடவென உடம்பெல்லாம் பதற்றம். ஒரு நாளும் அவனை இவ்வளவு கிட்டக்க நின்று பார்த்தது இல்லை. தனியாய் யாருமில்லாத வீட்டில் படியேறி வந்து அப்படியே விழுங்கி விடுகிறமாதிரி பார்க்கிறான். நாவெல்லாம் சுத்தமாய் வறண்டு போக " என்னா வேணும்..." எனக் கேட்டவள் பட்டென்று சுதாரித்து " வூட்ல யாரும் இல்ல... அப்பறமா வாங்க..." சொல்லியபடி அவசரமாய்க் கதவைச் சாத்த முயன்றாள்.

" தெரிஞ்சிதான் வந்துருக்கன்." குரூரமாய்ச் சிரித்தபடி அவன் கதவை நெட்டினான். அவளுக்கு குபீரென்று தீப்பற்றியதுபோல் பயம் சூழ்ந்துகொள்ள " ஏய், எதுக்கு கதவ நெட்ற... வெளிய போடா..." உடம்பு வலுவையெல்லாம் ஒன்று கூட்டி கதவை எதிர்த்து நெட்டினாள்.

" நானும் எத்தினி நாளா பாத்துக்கிட்டு இருக்கறன். திரும்பிக் கூடப் பாக்கமாட்டங்குற" வெறிகொண்ட மாதிரி ஓங்கித் தள்ளினான். தாக்குதலைத் தாங்கித் தடுத்து நிறுத்த முடியாமல் தளர்ந்து பின் நகர்ந்தவள், தன்னை மறந்தவளாய்க் கத்துகிறாள் கதறுகிறாள் " முருகன் அண்ண... செயக்கொடி... ஓடியாங்களன் ஓடியாங்களன்..."

சுத்துக்கட்டு வளப்பு வீட்டின் உள்ளிருந்து கதறும் அவளின் குரல், எகிறி வெளியே வரமுடியாமல் சுவர்களுக்குள் அலை மோதியது. மீறி வெளியே வந்த குரலும் அரவமற்ற தெருவில் அநாதையாய்த் தேய்ந்து மடிந்தது.

தனிமையில் சிக்கிக்கொண்ட அவலம். வெகுநாள் காத்திருப் பிற்குப்பின் தருணம் பார்த்துப் பாய்ந்துவிட்ட மிருகம். கத்திக் கதறிப் போராடிய அதே கணம் இனி தப்பிக்கவே முடியாது என்கிற பேரச்சத்தில்

உடல்பலத்தையெல்லாம், இரண்டு கைகளுக்குள் கொண்டுவந்து ஓங்கி ஒரே நெட்டாய் நெட்டினாள். மிருகத்தின் மூர்க்கத்தையும் மீறி உயிராசையின் பலம் கூடியிருக்கவே, கதவுத் திறப்பின் இடைவெளி நெருங்கி நெருங்கிக் கடைசியில் ஓர் கோடாய்க் குறுகியது. திடுமென இரை எங்கு தப்பித்துபோய் விடுமோ என்கிற கிலி மிருகத்திற்கு தலைதூக்கியது. எந்தக் கணத் திலும் கதவு அடைபட்டுவிடலாம் என்கிற நிலையில், கையில் கிடைத்தது சிறு பிடி, சிம்பலில் வெளியே தலைநீட்டிய அவளின் தாவணி. வாலைப் பிடித்தாவது எலியை இழுத்துவிடலாம் என்கிற நம்பிக்கையில் எட்டிப் பிடித்தது.

அவள் உயிரைக் கட்டி நெட்டிக்கொண்டிருந்த அதே வேளை தாவணியை வளைத்துப் பிடித்துக்கொண்டு, இன்னொரு கதவைக் காலால் உதைத்து, மிருகம் விலுக்கென்று இழுத்தது. எதிர்த்து நெட்டியதோடு, தாவணிச் சுற்றல் உருவுவதற்கு வழியில்லாமல் வலுவாய் இழுபடவும், அவளோடு கதவுமாய் ஓடி அறைந்து சாத்தியது. அதேநேரம் இடுக்கில் சிக்கியது, உயரே நெட்டியபடி இருந்த கையின் விரல். பலகையில் மோதியது நெற்றி. “ அய்யய்யோ எம்மா... எம்மா...” எகிறிய கதறல் பட்டென்று அடங்கி, தாவணி தளர்ந்து கீழே இறங்கியது.

தெருவில் திடுமென சத்தம். “ எலேய் வேணாண்டா... வேணாண்டா... ஆளு இல்லாத வூட்ல நொழைஞ்சி ஏண்டா இப்பிடி அதாகுதம் பண்ற... வேணாண்டா...” சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு, கத்திக்கொண்டே தத்தித் தாவியபடி ஓடிவந்தார் ஆசாரி. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போய்விட்ட ஆத்திரத்தில் படாரென்று தாவணியை விட்டு விட்டுத் திரும்பியவன் வெறியில் ஆசாரியை ஒரு நெட்டு நெட்டு விட்டு தெருவில் இறங்கினான். எதிரே... பற்றி எரிகிற பதற்றத்தோடு குங்குமம்.

கதறலும் இரைச்சலும் கேட்டு, தோப்பிலிருந்து வந்து கொண்டிருந்த அவள்தான் முதலில் ஓடிவந்தவள். ஒதுக்கிவிட்டு அவசரமாய் விரைந்த ஆசாரியின் சைக்கிளை எட்டிப் பிடிக்கிற மாதிரி பறந்து வந்தவள், அந்தப் பயலை பார்த்ததுமே நொடியில் ஊகித்துவிட்டாள்.

“ அட்றா சாண்ட நக்கியாற... வூட்ல இருக்கிற பொட்டப் புள்ளைகிட்ட போயி... ஒன்ன...” கையிலிருந்த சொரட்டுக்கழியால் ஓங்கி வைத்து வாங்கினாள். முதல் அடியை விட, வலுவாய் வைக்கோல் போரில் விழுகிற மாதிரி இறங்கிய ரெண்டாவது அடியில் தடுமாறிச் சறுக்கியவன் சுதாரித்து வீரன்கோயில் குட்டையைப் பக்கம் ஓடி மறைந்தான்.

வெறி கொண்ட மிருகத்துடன் போராடியதின் அதிர்வில், பூமாவுக்கு உடல் நடுங்கிக்கொண்டேயிருந்தது. அலமலண்டு போயிருந்த முகத்தில் பயத்தின் ரேகைகளாய் முடிகள் தாறுமாறாய் ஒட்டிக்கிடந்தன. நெற்றியின் வீக்கத்தில் வியர்வை அரும்பித் தேங்கும் போதெல்லாம் எரிச்சலின் வலியில் முகஞ் சுருங்கிக் கோணியது. தலைக்கு மடங்கியிருந்த கைகளில் வளையல்கீறல்கள். இரத்தச் கவுச்சிக்கு ஏறிய சிற்றெறும்புகள் சீண்டும்போதெல்லாம், வலியில் விரல்கள் சொடுக்கின. கதவிடுக்கில் சிக்கிய விரலின் ஈரத்துணிச் சுற்றலையும் மீறி இரத்தக்கசிவு எட்டிப்பார்த்தது. பருந்தின் நகக்கால்களிலிருந்து மீண்ட கோழிக்குஞ்சைப்போல் கண்ணீர் வழிந்தபடி மூடிக்கிடந்த இமைகளுக்குள் திகிலடைந்த விழிகள் அங்குமிங்குமாய் அலைந்துகொண்டு கிடந்தன. காற்றில் பிய்த்தெறியப்பட்ட ஒரு பூவைப்போல் பூமா, சிதறுண்டு போய்க் கிடந்தாள்.

நலிந்த உடம்போடு பாஞ்சாலை கிடந்து கதறுகிறாள் " உத்தண்ட காரா... செம்பையய்யா... பட்டப்பகல்ல ஏம் புள்ளைக்கி வந்த கெதிய பாத்தியா. இந்த ஊர்ல அம்மாம் ஆதுபாது அத்தா பூட்டம் நாங்க. ஏன்னு கேக்க ஏம் புள்ளைக்கி நாதியில்லியா. இந்தப் பாழும் ஊர்ல வந்து பங்கப்படுணும்னு ஏம் புள்ளைக்கி தலையில எழுதியிருந்து போச்சா. அய்யய்யோ... அந்தப் படுபாவிகிட்ட தனியா மாட்டிக்கிட்டு ஏம் புள்ள எப்பிடிக் கெடந்து தவிச்சிதோ. அவங் கையில கட்ட மொளைக்கோ. அவம் வூட்ல பொணம் வுழோ." தரையைப் பிறாண்டி கோபால் வீடு இருக்கிற திசையை நோக்கி வெறுங்கைகளை நீட்டி நீட்டி வாசாங்கு விட்டாள். " சனங்களா... இது நாயமா..." வேடிக்கை பார்க்க வந்தவர்களிடமெல்லாம் கை ஏந்தி ஏந்தி நியாயம் கேட்கிறாள்.

பூமாவின் காலடியில் குந்தியிருந்த குங்குமம் அழுது கொண்டே பாஞ்சாலையின் கைகளை மறிக்கிறாள். " ஓம் புள்ளைக்கி ஒண்ணும் ஆவுல வுடு. ஏதோ தலைக்கி வந்தது தலப்பாவோட போச்சின்னு வுட்டுத் தலமொழுவிட்டு வேலயப் பாரு. அந்த கம்னேட்டிய சொரட்டுக்கழியால வைச்சி வாங்கிதான் வுட்டன். வாணாம் வுடு. செம்பையய்யனாரு பாத்து அந்த நாய்க்கி இன்னம் நெல்ல கூலியக் குடுப்பான்" தேற்றுகிறாள்.

சோர்ந்து கீழே விழுந்தும் புலம்பி அழுகிறாள். " இல்லம்மா. ஏம் புள்ள தெருவுல நடந்தா, எங்க ஊரு சனமெல்லாம் தேரு வருதுன்னு நெனைக்கிமே. இன்னைக்கித் தெவைச்சி தெகமாறிக் கெடக்குத. நாங்க யாரு சோத்துல மண்ணள்ளி வைச்சம். நாங்க இந்த ஊருக்கு வந்தது குத்தமா. சொல்லுங்க சாமிவுளா. ஒங்கள அண்டி வந்தது தப்பா...

சொல்லுங்க சனங்களா...” படுத்தவாக்கிலியே தரையில் அடித்து அடித்து அழுகிறாள்.

ஒவ்வொரு அடியின் அதிர்விற்கும், முடங்கிக் கிடந்த பூமாவின் மூடிக்கிடந்த கண்களிலிருந்து திரண்டு திரண்டு வழிந்தோடுகிறது கண்ணீர். வதங்கிக் கிடந்த வயிற்றிலிருந்து ஆத்திரம் பொங்கிப் பொங்கி வந்து தொண்டையில் சிக்கிச் சிதைந்துகொண்டே யிருந்தது. “ ஒண்ணும் ஆவுல. பெசாம இரு எக்கா...” பக்கத்தில் குந்தியிருந்த செயக்கொடியும் அவளைத் தேற்றினாள்.

தூணைப் பிடித்துக்கொண்டிருந்த ஆசாரிக்கும் கலங்கி ஓடுகிறது கண்ணீர். பாஞ்சாலையின் முன்பு குந்தி அவரும் தேற்று கிறார். “ சாமீ, அழுவாத சாமி. ஓம் புள்ளைக்கி ஒண்ணும் ஆவுல சாமீ. செத்த புத்திய நா பெசக்கு பண்ணிட்டாலும், அந்த அய்யனாரா பாத்து சரியான நேரத்துக்கு என்ன கொண்டாந்து வுட்டு ஓம் புள்ளய காபந்து பண்ண வைச்சிட்டுது சாமீ. ஓம் புள்ள மேல சின்ன நெவக்கண்ணுகூட படுல சாமீ. நீ அழுவாத சாமீ. இப்பிடி வுழுந்து பெரண்டு அழுதா, அந்த பச்சப்புள்ள மனம் பேதலிச்சிப் போவும் சாமீ.” கையைப் பிடித்துக் கெஞ்சுகிறார்.

ஆசாரிக்கும் இன்னும் அந்த படபடப்பும் பயமும் உள்ளுக்குள் ஓடிக்கொண்டேயிருந்தது. அவன் நெட்டிவிட்டு ஓடவும், திண்ணையில் தடுமாறிச் சாய்ந்தவரால் உடன் எழுந்திரிக்க முடியவில்லை. சுதாரித்து எழுந்து குங்குமமும் தானுமாய் எழுந்து கதவைத் திறக்கிறார்கள். கீழே அப்படியே பூமா சரிந்து கிடந்ததில் கதவைத் திறக்கமுடியவில்லை. மெல்ல கையை விட்டு எட்ட நகர்த்தி, திறந்து உள்ளே ஓடிச் செம்பில் தண்ணீர் மொண்டு வந்து மூஞ்சியில் வாரி வாரி அடிக்கிறார்கள். தூக்கி காலில் சாய்த்துக்கொண்டு தண்ணீரைக் குடிப்பாட்டுகிறார்கள். “ வேப்பங் குறிச்சி புள்ளய கோபால் மொவன் கெடுத்துட்டானாம்” சேதி சற்று கூடுதலாய்த் திரிந்து கோயிலில், ரெட்டியார் தெருவில் இருந்தவர்கள் எல்லாமும் ஓடிவருகிறார்கள். தண்ணீரைக் குடிப்பாட்டி, முகத்தைத் துடைத்து விட்டதும் இயல்புக்கு வந்த பூமா, திடுமென எல்லாமும் நினைவுக்கு வர குங்குமத்தை செயக்கொடியை கட்டிப்பிடித்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுகிறாள்.

தடதடவென நடுங்குகிறது ராசோக்கியத்திற்கு. பதற்றத்தில் அவருக்கு வார்த்தை வரவில்லை. “ இரு இரு ஒண்ணும் ஆவுல பொறுமையா இரு...” கலியபெருமாளின் அமர்த்தலையும் மீறி ரெட்டியாரிடம் கேட்கிறார் “ இது நாயங்களா... தனியா வூட்ல இருந்த புள்ளைகிட்ட, வூடு நொழைஞ்சி அதாகுதம் பண்ணி... அந்த ஆசாரி மட்டும் இல்லன்னா.. என்னா

நடந்துருக்கும்... ஏம் புள்ள என்னா ஆயிருக்கும்... தே, இவுரு வூட்லயும் ஒடியாந்து பாத்துருக்காங்க. கேட்டுப் பாருங்க" படபடப்போடு கேட்கிறார்.

ரெட்டியாருக்கு உடனடியாக என்ன சொல்வது என்று தெரியவில்லை. கலியபெருமாளைக் குழப்பத்தோடு பார்த்தார் " என்னா கலியபெருமா..."

" இதுல நாம என்னாங்க சொல்றது. அத்து திமிரு கொண்டு போயி நிக்கிதுவோ. அதோட அவனுவுள எதாச்சும் கூப்புட்டுக் கேக்கலாம்னு பாத்தாலும், எவம் வந்து தக்க பதுல சொல்லப் போறான்" கலியபெருமாளுக்கும் ஈவு புரியவில்லை.

பூமாவைப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் ஆத்திரத்தோடு பேசிக்கொண்டு நிற்கும் ராசோக்கியத்தைப் பார்த்து விட்டு நின்றார்கள். கிருஷ்ணமூர்த்தியும் சேதி கிடைத்து கொல்லை வெளியிலிருந்து ஓடிவந்தார். அவரைப் பார்த்ததும் கலங்கி விட்டார். " பாத்தியா அண்ண, ஒங்க ஊர்ல ஏம் புள்ள நெலமைய பாத்தியா அண்ண..." டீக்கடை பக்கமிருந்தும் சத்தம் கேட்டு வந்துவிட்டார்கள்.

கிருஷ்ணமூர்த்திக்கும் தாங்கவில்லை. ரெட்டியாரைப் பார்த்து அதட்டுகிறமாதிரி கேட்டார் " என்னாங்க, பெசாம குந்தியிருக் கீங்க. உள்ளூர்க்காரனுவோ சுட்டுடுவானுவோன்னு பயப்படுறிங் களா..." கலியபெருமாளும் ரெட்டியாரைப் பார்த்தார்.

ஆள் விட்டு கூப்பிட்டு வரச் சொல்லலாம் என்கிற முடிவுக்கு அவர் வந்தபோது, பேசிக்கொண்டிருந்த சேதி போய் அவர்களாகவே கோபாலும் பாலகிருஷ்ணனும் வந்தார்கள். தெருவில் தேங்கி நின்றவர்களிடம் ரெட்டியார்தான் கேட்டார் " என்னாடா கோபாலு, வேப்பங்குறிச்சாரு வூட்ல போயி..." முடிக்கவில்லை.

ம றி த் து " சும்மா தண்ணி குடிக்க கிடிக்க போயிருப்பான். அதுக்கு என்னாங்க..." அலட்சியமாகச் சொன்னான்.

" ஆமண்டா. அங்காண்ட கொல்லியிலேர்ந்து வந்தவனுக்கு இப்பத்தான் அதிசயமா தண்ணித்தாவம் எடுத்துப்போச்சி" கிருஷ்ணமூர்த்தி அடிக்கிறமாதிரி கேட்டார்.

" கேக்கறவன் கேக்கறான். பதில் சொல்ற மயிரான் பதில் சொல்றான். குறுக்க இருக்கற மயிரான் ஒனக்கு என்னா கோவ மயிரு வருது" பாலகிருஷ்ணன் படாரென்று தாண்டினான்.

கலியபெருமாள் எழுந்து “ இருடா. ஒண்ணும் பறக்காதீங்க. இதே காரியத்த உள்ளூர்காரங்கிட்ட செஞ்சிருந்தா ஒங்கள வுடுவானுவுளா. பாத்துப் பேசுங்கடா...” சத்தம்போட்டார்.

கோபாலுக்கு படாரென்று எகிறிவிட்டது “ அப்ப உள்ளூர்க் காரஞ் சொல்றதுலாம் ஒண்ணும் ஒங்க காதுல நொட்டுல. வந்தாரங் குடியான் சொல்றதுதான் ஒங்குளுக்கு வண்டி மேல ஏறிக்கிட்டு நிக்கிது போல்ருக்கு. நெல்லா இன்னம் ஏதாச்சும் தகவல் இருந்தா சொல்லிக்குடுங்க. நாளைக்கி ஒங்குளுக்கு ஒண்ணுன்னா அவந்தான் ஊர்லேர்ந்து பட கட்டிக்கிட்டு வந்து நிப்பாம் பாரு...”

ராசோக்கியத்திற்கும் அதற்குமேலும் அங்கு நிற்பதும் நியாயத்தை எதிர்பார்ப்பதும் தவறு என்கிறமாதிரி தெரிந்தது. ரெட்டியாருக்கும் அதுமாதிரியே தோன்ற அவரைப் பார்த்தார்.

“ ஏங்க... இது ஒண்ணும் கதைக்கி ஆவாது. நாம் போவ வேண்டிய எடத்துக்குப் போனாத்தாம் பொருத்தப்படும்...” ராசோக்கியம் வேகமாகச் சொல்லிவிட்டுத் திரும்பினார்.

“ இரு, ஒண்ணும் அவசரப்படாத. நில்லு...” கலியபெருமாள் அவசரமாய் சொல்லியபடி எழுந்து கையைப் பிடித்தார். அதற்குள் வேலிக்கு நட்ட கழியை ஆளுக்கொன்றாய்ப் பிடுங்கிக்கொண்டு கோபாலும் பாலகிருஷ்ணனும் பாய்கிறார்கள். “ டேய், எங்க போயி என்னாத்தப் புடுங்கிடுவ... ஓம் புள்ள வரச்சொல்லியிருப்பா, இவம் போயிருப்பான். ஆசாரியப் பாத்துட்டு பெரிய பத்தினி மயிரு மாதிரி சத்தம் போட்ருப்பா... சும்மா காரணமில்லாம ஒருத்தம் வூட்டுக்குள்ள நொழைஞ்சிடுவானா... ஒழுங்கா புள்ள வளக்கறதுக்கு ஓக்கித மயிரு இல்ல. பெருசா பஞ்சாயத்தம் மயிரு பொளந்துட்டு போறங்கற... போயிப் பாரன்...” தாண்டுகிறார்கள். குறுக்கே இருக்கற சனங்கள் மறிக்கிறார்கள்.

ராசோக்கியத்திற்கு கண்மண் தெரியாத கோபம். அதுவும் தன் பிள்ளை மேலேயே வாய் கூசாமல் தப்புப் பட்டம் கட்டி விட்ட ஆத்திரம். ரேகமெல்லாம் தீயில் நிற்பதாய்க் கொதிக்கிறது. இதற்குமேல் இந்த உயிரை வைத்திருந்து என்னா புண்ணியம் என்கிற மாதிரி அவருக்குத் தாண்டிவிட்டது. பிடித்திருந்த கலிய பெருமாளின் கையை உதறினார். “ ஒக்காள ஒழிவுலா... தனியா வூட்ல இருந்தா ஏமூட்டு புள்ளய தற்கொறச்ச பண்ணனது இல்லாம தகாத பட்டம் கட்டி கழியெடுத்துகிட்டாடா நிக்கிறீங்க. ஒங்கள வெட்டிச் சாய்க்கிலன்னா, எப்பன் ராசவன்னியனுக்கு நாம்

பொறக்குலடா...” பொறி பறக்கக் கத்திக்கொண்டே வீட்டை நோக்கி ஓடுகிறார்.

ராசோக்கியம் பின்னாலேயே கலிய பெருமாள் ஓடாத குறையாய் பெருநடையாய்ப் போனார். கிருஷ்ணமூர்த்தியும் ஓடினார்.

ராசோக்கியம் ஓடின வேகத்தில் வீட்டுக்குள் நுழைந்தார். நடையில் நின்றிருந்த சனங்கள் பறாச் பறாச்சென்று விலகி வழிவிட “ பாஞ்சால, அவனுவோ நம்ப புள்ள மேலேயே திருட்டுப் பட்டம் கட்றானுவோ பாஞ்சால. அவுனுவுள இதுக்கு மேல வுடக்கூடாது.” ஆவேசமாய்ப் பேசியபடி அறைக்குள் ஓடிக் கொடுவாளை எடுத்தார்.

கதறியதில் தெம்பில்லாமல் சோர்ந்து கண்ணீர் விட்டபடி கிடந்த பாஞ்சாலை திடுக்கென்று நெஞ்சில் நெருப்புப் பரவ, எழுந்து குந்தினாள். பூமாவும் பேயறைந்தமாதிரி தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

“ வேணாம் இரு... வேலைக்கிப் போயிருக்கிற முருகன் வருட்டும். பசங்கள வைச்சி நாங் கேக்கச் சொல்றன்...” சொல்லியபடி எதிரே வந்த கலிய பெருமாளையும் “ இரு அவசரப்படாத...” மறித்த கிருஷ்ணமூர்த்தியையும் மீறித் திமிறி ஒதுக்கிவிட்டு வெறியோடு வெளியே ஓடுகிறார். பின்தொடர்ந்து ஓடுகிறார்கள்.

“ வாணாங்க... வாணாங்க...” பதைக்கிறதே தவிர டக்கென்று எழுந்திரிக்க முடியவில்லை பாஞ்சாலையால்.

திடுமென பூமாவும் எழுந்து அழுதபடி ஓடுகிறாள் “ எப்பா எனக்கு ஒண்ணும் ஆவுல எப்பா... வாணாம் எப்பா... நாம இந்த ஊரை வுட்டுப் போய்டுவம், வேணாம் எப்பா...”

யாரையும் பொருட்படுத்தாமல் ராசோக்கியம் ஆவேசம் கொண்டவராய் தெருவில் இறங்கி ஓடுகிறார். படபடப்போடு கையை ஊன்றி எழுந்த பாஞ்சாலையால் நிற்க முடியவில்லை. தட்டுத் தடுமாறிச் சொல்லிக்கொண்டே ஓடுகிறாள். “ வேணாங்க... வந்து வெளைஞ்சதோட போதும். வேற எந்தச் சிக்கலும் நமக்கு வேணாங்க. நாளைக்கே தாயோட புள்ளையா நம்ப ஊரோட போயி சேந்துடுவம். நில்லுங்க... வேணாங்க...” ஏற்கெனவே நைந்த உடம்பு. அடித்துக்கொண்டு கதறியழுது கிடந்ததில் கண்ணாம்பு சுற்றுவது மாதிரி தடுமாற்றம். படியைத் தாண்டும் போதே கால் இடறியது. வாரிச் சுருட்டியபடி ஓடி படியில் இறங்கப் போகிற நேரம் நழுவிய புடவை காலில் சிக்கியது. அவ்வளவுதான் தடுமாறித் தலைக்குப்புறக் கருங்கல் படியில்

விழுந்தவள், உருண்டு சுருட்டி மடக்கிக்கொண்டு தெருவில் போய் விழுந்தாள்.

“ அய்யய்யோ... ஓடியாங்களன்...” குங்குமம் ஒரே கத்தாய்க் கத்தவும் ஓடியவர்கள் பதறியடித்துக் கொண்டு வந்தார்கள்.

“ எம்மா... எம்மா...” ஓடிவந்த பூமா, தலையை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கதறுகிறாள். “ பாஞ்சால... பாஞ்சால...” ராசோக்கியம் கன்னத்தைத் தட்டுகிறார். தோளைப் பிடித்துக் குலுக்குகிறார். கையைப் பிடித்து இழுக்கிறார். செயக்கொடி ஓடி தண்ணீர் மொண்டுவந்து கொடுக்க முகத்தில் தெளிக்கிறார்கள். அசைவோ சத்தமோ எதுவுமே இல்லை. சுவாசம் மட்டும் இழை மூச்சாய் போய்வந்து கொண்டிருந்தது.

“ எம்மா எம்மா... கண்ணத் தொறந்து பாரும்மா...” அடித்து மாய்ந்து கொள்கிறாள் பூமா. ராசோக்கியம் தெருவில் விழுந்து புரள்கிறார் “ ஏஞ் சாமி... ஏஞ் சாமி... என்ன வுட்டுப் பூடாத சாமீ...”

“ ஒண்ணும் ஆவுல. தலையில அடிபட்டதுதான் மயக்கமா இருக்கு. ஓடி வண்டியப் பூட்டியாங்க. வீராரெட்டிக்குப்பம் இட்டுக்கிட்டு போயி பாத்தா சரியாப் பூடும்.” யாரோ சொல்லவும் கிருஷ்ணமூர்த்தி தோட்டத்துப்பக்கம் மாட்டை அவிழ்க்க ஓடினார்.

சனம் ஓடுவதைப் பார்த்துவிட்டு அவசரமாய் ரெட்டியார் ஓடிவந்தார். ராசோக்கியம் அவர் காலடியில் விழுந்து கதறுகிறார் “ அய்யய்யோ ஏஞ் சாமி மூச்சிப்பேச்சி இல்லாம கெடக்குது சாமீ.”

“ எட்ட வாங்க எட்ட வாங்க...” சனங்களை ஒதுங்கச் சொன்ன கலியபெருமாள் ரெட்டியாரிடம் படபடப்போடு சொன்னார் “ தல குப்புற படியில வுழுந்துபோச்சிங்க...”

“ நம்ப பாலக்கொல்ல டிரக்கு யூரியா மூட்ட எறக்கிட்டு கௌம்பற மாதிரி நிக்கிது. ஓடி எடுத்தாரச் சொல்லு. நேரா விருத்தாலத்துக்கே போங்க... ஓடுங்க...” நிலைமை புரிந்து ரெட்டியார் அவசரப் படுத்தினார்.

அவிழ்த்த மாட்டை முளைக்குச்சியில் சுற்றிவிட்டு கிருஷ்ண மூர்த்தி ஓடவும், அதற்குள் எதிரிலேய வந்துவிட்டது. தூக்கிப் போட்டுக்கொண்டு ஓடினார்கள். குண்டும் குழியுமான ரோட்டில், குலை அறுந்து போகிற மாதிரியான குலுங்கலில் சடசடத்துப் போகிறது ட்ரக்கு. நல்லவேளையாக, தண்டாரகுளம் போகவும் வடக்கிலிருந்து திருவேங்கடம் பஸ் வரவும் சரியாக இருந்தது. நிறுத்தி ஏற்றினார்கள். அவசரத்தைப் புரிந்துகொண்டு

டிரைவர் சாத்து சாத்து என்று சாத்திக்கொண்டு போனான்.

மூணு பேர் சீட்டில் மடியில் தலையைத் தூக்கி வைத்துக் கொண்டு " எம்மா... எம்மா... கண்ணத் தொறந்து பாரும்மா..." கத்தி முறையிடுகிறாள் பூமா. கீழே நடையின் பலகையில் குந்தி கால்களைப் பிடித்துக்கொண்டு கதறுகிறார் ராசோக்கியம். " பாஞ்சால... பாஞ்சால..." பஸ்சில் இருந்தவர்கள் எல்லாமும் பதறிய படி கேட்கிறார்கள். " என்னாவாம்... என்ன ஆச்சாம்" எந்தப் பதிலும் சொல்ல முடியாமல் இடிந்து போய் நின்றார்கள். குங்குமம் மட்டும் அழுதுகொண்டே சொன்னாள் " கீழே வுழுந்துட்டாங்க..."

கண்ணாடி பேக்ட்ரி முடக்கு திரும்பி, பஸ் ஸ்டாண்டில் கூட நிறுத்தாமல் நேரே ஜி.ஆர். ஆஸ்பெட்டலில் கொண்டுபோய் நிறுத்தினான்.

அழுதுபுரண்டு தூக்கியபடி வரும் கோலம் கண்டு எல்லோரும் அவசரமாய் ஒதுங்கி வழி விடவும் பெஞ்சில் போய்க் கிடத்தினார்கள். கிடத்தும்போது கைகால்களின் அசைவு குறைந்து பட்டென்று நின்றுபோனது. உடன் சேதி உள்ளே போய் வெளியே வந்த ஜி.ஆர். டாக்டரின் கால்களில் விழுந்து ராசோக்கியம் கத்துகிறார் " சாமீ... ஏம் பாஞ்சாலய காப்பாத்து சாமீ..."

டாக்டர் அதிர்ந்து போய்விட்டார் " என்னா வேப்பங்குறிச்சார, மத்தியானம் ரெண்டு பேருமா ஆர்ப்பாட்டத்துக்கு வந்துட்டுத்தான வந்திங்க. அதுக்குள்ள என்னா ஆச்சி..."

" படிக்கல்லுல தலகுப்புற வுழுந்து போச்சிங்க..." கலியபெருமாள் சொன்னதைக் காதில் வாங்கியபடி பாஞ்சாலையின் நாடியை பிடித்துப் பார்த்தார். கண்களின் இமைகளைத் திறந்து பார்த்தார். நெஞ்சில் ஸ்டெதாஸ்கோப் வைத்தார். முகம் மாறிவிட்டது அவருக்கு. ஏமாற்றத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் திரும்பி, கூட நின்ற பையனிடம் சொன்னார் " டைரியில நெய்வேலி வெள்ளையரு புரோக்கர் செட்டு போன் நெம்பரு இருக்கும். போட்டு வேப்பங் குறிச்சி அழிவழகன ஒடனே பேசச் சொன்னன்னு சொல்லுங்க."

எல்லாரும் டாக்டரின் முகத்தையே பார்த்தார்கள். உள்ளே குமுறிக் குமுறித் தாரைதாரையாய் வழிந்து ஓடுகிறது பூமாவுக்கு. ராசோக்கியத்திடம் சொல்லமுடியாமல் திரும்பி கலியபெரு மாளிடம் சொன்னார் " முடிஞ்சிட்டுதுங்க..."

*

107

‘ விருத்தாசலம் வட்டம், புதுவேப்பங்குறிச்சியைச் (என்.எல்.சி. மாற்றுக்குடியிருப்பு) சேர்ந்த ஸி. சதாசிவம் ழிலிசி அவர்களின் தாயாரும் திரு. ஸி.ராசோக்கிய படையாட்சி அவர்களின் மனைவியு மான திருமதி பாஞ்சாலை அம்மாள் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (20.03.1991) கா லை 10.30 மணியளவில் அவரது புதுவேப்பங்குறிச்சி இல்லத்திலிருந்து புறப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

நண்பர்கள் உறவினர்கள்

புதுவேப்பங்குறிச்சி

(என். எல். சி. மாற்றுக்குடியிருப்பு).

இருபுறமும் கண்ணீர் சொரிகிறமாதிரி படங்களுடன் எழுதி சாலையோரக் கொடிக்கம்பத்தில் தட்டி சார்த்தி வைக்கப் பட்டிருந்தது. முன்னால் வந்து நின்ற ட்ராக்டரிலிருந்து முதனை சனங்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். “ பாத்து எறங்குங்க...” சின்னத்தம்பி நிதானமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். டோரை திறந்தும் திறவாததுமாக “ அத்த... எங்கள வுட்டுட்டுப் பூட்டிய அத்த....” கதறியபடி குதித்து ஓடிக்கொண்டிருந்தாள் மலர்.

“ சரி நாங்க எறங்கி எடுத்துவைக்கிறம். நீ போயி தங்கப் பழத்த கூப்புட்டுகிட்டு, மோளத்த இட்டுக்கிட்டு வாய்க்கரிசிக் கூடை தூக்கறமாதிரி ஆளுவுளோட வாங்க...” ராதா சொல்லவும் சின்னத்தம்பி இழவு வீட்டுப்பக்கம் போனார். நேற்று இரவே சேதி வந்து தங்கப்பழமும் சின்னத்தம்பியும் வந்துவிட்டார்கள். சின்னத்தம்பி மட்டும் காலையில் திரும்ப முதனை போய் மலரையும் சனங்களையும் இட்டுக்கொண்டு வந்திருந்தார்.

“ எலேய் யாராச்சும் வுடத்தெரிஞ்சவனுவோ அந்த வாணத்த எடுத்து வுடுங்களண்டா” சிவப்பிரகாசம் சொல்லவும், ராதா மகன் செல்வராசு “ வாய்க்கரிசி எடுத்துக்கிட்டுப் போவும்போது வுட்டுக் கலாம்” சொன்னான்.

வட்டமாய் நின்று அடித்துக்கொண்டிருந்த மேளங்களினூடே காற்றாய் ஓடி வீட்டுக்குள் " அத்த..." என நுழைந்தவளை " மலரு..." என்று திடுமென எகிறி வளைத்துக்கொண்டாள் பூமா. சற்றே அமர்ந்திருந்த அழுகை குபீரென்று தீயைப்போலச் சூழ்ந்து கொள்ளவும் " எங்க அம்மா என்ன வுட்டுட்டுப் பூட்டாங்க மலரு, நா இனிமே என்னா செய்வம் மலரு..." இரண்டும் கட்டிப் பிடித்துக்கொண்டு பாஞ்சாலை மேல் விழுந்து புரள்கின்றன. கூட தங்கப்பழமும் தொண்டை கட்டிப்போய் கீச்சுக்குரலில் கத்துகிறாள்.

காசாம்பு " வுடு புள்ள... அதான் நம்பள எல்லாத்தையும் வுட்டுட்டுப் பூட்டாள. அப்பறம் என்னா... நீ வேற ராத்திரியிலிருந்து பச்சத்தண்ணி கூட பல்லுல படாம அழுது அழுது..." பூமாவை சத்தம் போட்டாள்.

மலர் அடித்து ஓய்ந்த நேரம், தங்கப்பழம் அவளை இட்டுக் கொண்டு தனித்து மாரடித்தபடி வெளியே போனாள்.

பெஞ்சில் கிடத்தியிருந்த பாஞ்சாலையின் மேல் பூமா மயக்கமாய் விழுந்து கிடக்கிறாள். கும்பலிலிருந்து தனித்து சுவரில் சாய்ந்து குந்தியிருந்த இன்பவள்ளி சன்னமாய் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள் " அத்த அப்பிடி என்னா நா தப்பு செஞ்சிட்டன் அத்த. என்னை திரும்பிக்கூட பாக்காம இருந்துட்டிய அத்த. நேத்திக்கி நா இங்க இல்லாமப் பூட்டன. இருந்துருந்தா கூட்டத்துக்கு வந்த ஒங்கள வுட்ருக்க மாட்டன் அத்த. ஒங்க மூஞ்ச பாத்துருப்பன் அத்த. ஏம் வவுத்துல இருக்கற ஓம் பேரன் எங்க ஆயா யாருன்னு கேட்டா நா ஆரக் காட்டுவன் அத்த..."

நிறைமாத வயிற்றோடு மூச்சிவிடாமல் தேம்பி அழுது கொண்டிருந்த அவளை, செல்லப்பாங்கிதான் திரும்பவும் எழுந்து போய் சத்தம் போட்டாள். " தே இன்பவள்ளி... நீ பெசாம இருக்கியா என்னா புள்ள. அழுது அழுது சளி புடிச்சிக்கிட்டு அப்பறம் எதாவது சிக்கல்ல கொண்டாந்து வுட்டுறப் போற..." திரும்பி வாசலைப் பார்த்து அதட்டுகிறமாதிரி சொன்னாள் " அந்த சதாசிவம் பயலக் கூப்புடுங்க. அவன் வந்தாதான், இவ அடங்குவா.... இம்மாம் நாளு வந்து பாக்காத அத்தைதான் இனிமே வந்து பாக்கப் போறா. பெசாம வுட்டுட்டு குந்துவம்னு இல்லாம."

வெளியே சதாசிவம் வருகிறவர்களைப் பார்த்துப் பார்த்து கும்பிட்டபடி வேடிரூபமாய் நின்றுகொண்டிருந்தான். சமயங்களில் யாராவது முக்கியமானவர்கள் வருகிறபோது கண்ணீர் சிந்தினான். அறிவழகனுக்குச்

சேதி வந்து காரை எடுத்துக்கொண்டு சதாசிவத் துடன் போய் ஆஸ்பத்திரியில் நிறுத்தியதுமே, ஓடிவந்து கட்டிக் கொண்டு கதறிய பூமாவோடு சடலமாய்க் கிடந்த பாஞ்சாலையைப் பார்த்து உடைந்து அழுதான், உதைத்துக்கொண்டு மாய்ந்தான் " எம்மா நா தப்பு செஞ்சிருந்தாலும் என்ன திரும்பிப் பாக்காம வுட்டுட்டிய எம்மா. நா இனிமே என்னா செய்யப்போறன் எம்மா..."

ராசோக்கியம் இடிந்துபோய் குந்தியிருந்தார். கூடவே நிழலைப் போல் வந்துகொண்டிருந்த பாஞ்சாலை... அவள் இல்லாத எதிர்காலம்... நினைக்க நினைக்க அவருக்குக் குமுறியது. கண்களில் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. பாஞ்சாலையின் பேச்சை எந்தக் காலத்திலும் அவர் தட்டியதே இல்லை. நேற்றும்கூட எவ்வளவோ பொறுமையாக ஊரை மீறக்கூடாது என்கிற மாதிரிதான் ரெட்டி யாரிடம் நியாயம் கேட்டு சொல்லிக்கொண்டு நின்றார். கடந்து பூமாவின் மீதே கரியைப் பூசினபோதுதான் தன்னையும் மீறித் தாண்டி விட்டார். பாஞ்சாலை சொன்னதுமாதிரி நின்று அவள் பேச்சைக் கேட்டிருந்தால் நிலபுலத்தை விட்டுத் தொலைத்து விட்டாவது, இங்கு ஊரோடு வந்து சேந்திருக்கலாம். எல்லாமும் போய்விட்டது. கையிலிருந்த முட்டை நழுவி உடைந்து போய் விட்டமாதிரி நொடியில் தலைகீழாய் மாறிவிட்டது.

சரவெடிகள் படபடத்து அதிர்கின்றன. சரக்கென்று சீறிப் போய் வாணங்கள் வெடிக்கின்றன. தேர்ந்த உறுமி செட்டுக் காரர்கள் பிளந்து கட்டுகிறார்கள். வாய்க்கரிசிக் கூடைகள் முன்னே வர, மாரடித்துக்கொண்டு அழுது புலம்பியபடி தங்கப்பழம் வந்து கொண்டிருந்தாள். ஊருக்குத் தெற்கே தெரியும் மண்மேட்டை, மண்ணைச் சரமாரியாய் கொட்டிக்கொண்டிருக்கும் இயந்திரத்தைப் பார்த்தபடி பின்னால் முதனையே திரண்டு வந்துகொண்டிருந்தது.

இழவு வாசலில் நின்று அடித்துக்கொண்டிருந்த டப்பட்ட மேளக்காரர்கள் எதிரே வழிமறித்து கொண்டு அவர்களும் சேர்ந்து கொள்ள அதம் பறக்கிறது. காசுகள் குவிகின்றன. குதித்துக் கொட்டு கின்றனர்.

வாழை வடக்கீனும்...

வான் கமுகு தெற்கீனும்

யாராரு போட்டதுன்னா...

கம்பத்தம் நாட்டாம

முதன சாமியாரு போட்டது...

கும்பலாய் முதனை சனங்கள் உள்ளே வரவும் சதாசிவம் கனகராசு இருவரும் கும்பிட்டு கும்பிட்டுக்கொண்டு நின்றிருந்தார் கள். மேளக்காரர்கள் தட்டுவதை நிறுத்திவிட்டு ஒதுங்குகிறார்கள். அம்புசாட்சி, முத்துக்கண்ணு ஆயி என எதிர்மாரு அடித்தபடி வந்தார்கள். கும்பலில் வந்த சிவப்பிரகாசத்தைப் பார்த்துவிட்டார் ராசோக்கியம். திடுதிடுவென ஓடி அவர் காலடியில் விழுந்து புரள்கிறார் " அண்ண ஏங் கெதிய பாத்தியா அண்ண. நீங்க காட்டன நெல்லவழிய, ஏம் பாஞ்சால எனக்கு கோணவழியா காட்டிட்டுப் பூட்டா அண்ண..."

அதைப் பார்த்துவிட்டு சூழலை மாற்றுகிறமாதிரி ரங்கநாது அவசரமாய் அதட்டினார் " எலேய் அந்த டப்பட்ட மோளக் காரனுவுள எங்கடா வுட்டுட்டீங்க. கூப்புட்டு தட்டச் சொல்லுங்க."

" அவனுவோ வாய்க்கரிசிக் கூடை எடுத்தார திரும்பவும் பூட்டாங்க... இவுனுவுளையே தட்டச் சொல்லுவம்." கணேசன் உறுமி செட்டுக்காரர்களிடம் ஓடினான் " செத்த நேரம் இருங்க... தோள ஆத்திக்கிட்டு வர்றம்..." சிடுசிடுத்தார்கள்.

பூக்கடைக்காரர்கள் இரண்டு மூன்றுபேர் சூழ, அலுங்காமல் குலுங்காமல் தேவகி ஒரு மாலையை எடுத்துக்கொண்டு வந்தாள். பின்னால் தள்ளாட்டத்தோடு வந்த வடிவேலு நேரே உறுமி செட்டுக்காரர்களிடம் போனான். இடுப்பில் செருகியிருந்த இரண்டு அரை, பேண்டு பையிலிருந்த இரண்டு கால் என பாட்டில்களை எடுத்துப் போட்டான். " எங்க பெரியாயி வேப்பங்குறிச்சியில வாழ்ந்த வாழ்க்க, மணக்கொல்லைக்கிப் போனது வந்தது எல்லாத்தையும் பாடணும் அடிக்கணும்."

" வாழ்ந்தாம் பாட்டுதான சாமீ.... பாடிடுவம் நீங்க போங்க..." வேரில் ஈரம் பட்டதும் நொடியில் சிலிர்த்துக் கொள்கிற எள்ளுச் செடிகள் போன்று, அதிகம் பட்டைச்சரக்கில் மட்டுமே புழங்கிக் கொண்டிருந்த நிலையில் அருபொருளாய் கிடைத்த பாட்டில்களின் சுதியில் சுறுசுறுப்பானர்கள்.

பழைய வேப்பங்குறிச்சி, மண்மேடு நோக்கி கையை நீட்டி நீட்டிப் பாடுகிறார்கள். காதுச் சவ்வு பிய்ந்து போகிற மாதிரி பாடலுக்கு ஏற்ப விட்டு விட்டு அடித்து உறுமி செட்டுகள் அதம் பரப்புகின்றன.

பொறந்த மண்ணையும்தான் - அவன்

புடுங்கிக் கிட்டதால

பொழைக்க எடந் தேடி - நீங்க

போனிங்களே சீமைக்கி

போன எடத்திலியும் - நீங்க

பூரிப்பா இருப்பீங்கன்னு

சேந்த எடத்துலயும் - நீங்க

சீரா இருப்பீங்கன்னு

கனவு கண்டுருந்தம் - நாங்க

காத்து இங்க நின்னிருந்தம்.

காத்தா கரைஞ்சீங்களே - நீங்க

கெதி மோட்சம் போனீங்களே

போன எடத்துலயும் - அந்த

பூமி பொறுக்காம

பொணமாதான் வந்தீங்களே - நாங்க

பொரண்டு தவிக்கிறமே....

பொறண்டு... தவிக்கிறமே...

ஏம் பெரியாயி நாங்க - இன்னைக்கி

புடிய வுட்டு நிக்கிறமே...

... ...

... ...

அறிவழகன் சைக்கிளில் வந்து இறங்கினான். ஜி.ஆர். இடமிருந்து சேதி வந்ததிலிருந்து அவனுக்குத்தான் கடும்புடியான அலைச்சல். ஊர்களுக்கு சேதி அனுப்ப, பந்தல் போட, தட்டி எழுத, மேளத்துக்கு ஆள் விட, பூப்பாடைக்கு ஆள் அனுப்ப என ஓடிக்கொண்டேயிருந்தான்.

எப்போதும்போல் சிகாமணி கூட இருந்தால் அவனுக்கு இவ்வளவு சிரமம் இருக்காது. குடும்பங்களுக்கிடையே இருந்த சண்டை செங்கல்ராவு

சாவின்போது மண்ணை வாரிவிட்டு விட்டதில் இந்தத் திசைப் பக்கமே சிகாமணி திரும்பவில்லை. திரும்பினாலும் இங்காண்ட சிக்கல்தான். குறுக்க நெடுக்க பால்ராசு மட்டும் இல்லையென்றால், இன்னும் பெரும்பாடாய்ப் போயிருக்கும்.

உறுமி செட்டுக்காரர்கள் அடிப்பதை நிறுத்திவிட்டு அறிவழகனுக்கு மீண்டும் பழையபடியாய் ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டுத் தொடர்ந்தார்கள். குறுக்கநெடுக்க வரும்போ தெல்லாம் திரும்பத்திரும்ப இந்தக் கும்பிடுகள் அவனுக்கு உறுத்துவது போல் இருந்தது. எல்லாம் சேப்ளாநத்தத்தைச் சேர்ந்தவர்கள். செம்ப படையாட்சியைத் தேடிக்கொண்டு போகிற போது பழக்கம். ‘ மேலைக்கி நெய்வேலிக்காரன் எங்க ஊர எடுக்கறதுக்கு வந்தான்னா, நீங்கதான் எங்குளுக்கும் மின்னால நிக்கிணும்.’ உரிமையாய்ச் சொல்கிறவர்கள்.

அறிவழகன் ரங்கநாதுவிடம் வந்தான் “ எப்பா வெறுவு, ராட்டிலாம் கொண்டுபோயி அடுக்கியாச்சி...”

உள்ளிருந்து காப்பி தம்ளரோடு வெளியே வந்த அறிவழகனின் மனைவி செல்வி, ராசோக்கியத்திடம் ஊற்றிக்கொடுத்தாள். “ குடிங்கப்பா...” மறுத்தவரை ரங்கநாதுதான் அதட்டினார் “ எலேய் செத்துப்போனவங்க புள்ள இருக்கறவங்களுக்கு அடையாளம்னு வுட்டுட்டுப் போவாம... குடிடா...”

“ ஏம் பாஞ்சாலய போட்டுட்டு, ஏம் பல்லுல பச்சத் தண்ணி கூட படக்கூடாது மாமா...” பிடிவாதமாய் மறுத்து அழுது கொண்டிருந்தார்.

“ உள்ள பூமா, சதாசிவம் பொண்டாட்டி இன்பவள்ளி எல்லாத்துக்கும் குடுப்பா” அறிவழகன் செல்வியிடம் சொன்னான்.

“ குடுத்துட்டம் மாமா...” சொல்லிக்கொண்டு இருக்கும் போதே “ புள்ள அழுவுதாண்டி. ஒம்மா வரச்சொல்றா...” முத்துக் கண்ணு ஆயி சொல்லியபடி உள்ளே வந்தாள்.

“ ஓடுப்பா ஓடு... தம்பி அழுவறானாம்...” செல்வியை அனுப்பிவிட்டு முத்துக்கண்ணு ஆயியிடம் திரும்பினான் “ மாமன் வேல ஆச்சா...”

“ சாப்புடலாம்பா. ஒரு ஐம்பது பேருக்கு மேல ஆவும், ரெடியா இருக்கு... மாமந்தான் பாத்துக்கிட்டு இருக்கறாரு...” சொன்னாள். ரங்கநாதுதான் வெளியூர் சனங்கள், மேளக்காரர் களுக்கு என சாப்பாடு ஆக்க கரியரிடம் பொறுப்புக் கட்டியிருந்தார்.

ரத்னவேல் வந்து கும்பிட்டார். “ என்னா ரத்னவேலு ஓஞ் சங்கத என்னா. அப்பறம் சொல்லக்கரையில போயி நின்னுக்கிட்டு, தேனு திரவியம்னு சொல்லிக்கிட்டுருக்கக் கூடாது. இப்பியே வெள்ளப் பேப்பர்ல எழுதிக்கிட்டு, ஞாபகமா எல்லாம் வந்து சேரணும்” சொன்னார்.

“ கோடி...” ரத்னவேல் தலையைச் சொறிந்தார்.

“ கொழுந்தங் கோடி கனகராசுதான் எடுக்கணும். காசி வாங்கிட்டுப் போயி ஒரு நெல்ல பொடவையா எடுத்தாந்துடுங்க...” சொல்லிக்கொண்டு இருக்கும்போதே ஏகாலி அரசாயி வந்து கேட்டாள் “ ஒரு மொறம் இருந்தா எடுத்தாங்க. துத்தி எல பறிச்சாந்துருக்கன்.”

யாரை வீட்டுக்குள் போய் எடுத்துவரச் சொல்லலாம் என அறிவழகன் யோசித்துக்கொண்டு இருந்தான். வீட்டுக்குள்ளிருந்து சதாசிவம் பொண்டாட்டி இன்பவள்ளியை வெளியே இட்டுக் கொண்டு வந்தார்கள். பெருத்த வயிறு. வீங்கிய கால்கள். குமுத்த முகம். கைகள் கொள்ளாது போட்டிருந்த மண் வளையல்களின் ஜிகினாக்கள் வேர்வையில் ஒட்டிக் கொண்டு மின்ன மெல்ல அடியெடுத்து வைத்து வந்து நின்றாள்.

“ எதுக்குடா மாளாவெட்டி பொம்பளைய வெளியில இட்டாந்து வைச்சிக்கிட்டு நிக்கிறீங்க” சோறு ஆக்குகிற இடத்திலிருந்து அய்யாயிரத்துடன் வந்த கரி படாச்சி கேட்டார்.

“ அவுங்க அம்மா வூட்டு வாய்க்கரிசி வருதுன்னு, வெளிய வந்துது அதான்...” முத்துக்கண்ணு சொல்லவும், கரியர் எரிந்து விழுந்தார். “ ஒனக்கு அறிவே இருக்காதா... வாய்க்கரிசிக் கூடைக்கும் மின்னால வாயும் வவுறுமா இருக்கற புள்ளயப் போயி, அதுதான் சொல்லிச்சின்னு இட்டார...”

உடனே ஒதுக்கி குந்தவைத்தார்கள். உள்ளே அழுதுகொண்டு நின்ற வைரத்திடம் சொல்லி ஒரு முறத்தை எடுத்துவந்து கொடுக்கச் சொன்னான் அறிவழகன். தெருவில் வாணவேடிக்கைகளுடன் வாய்க்கரிசி வந்துகொண்டிருந்தது.

அதை ஒதுக்கிவிட்டு பூச்சி, ஊருக்குப் போயிருந்தவள் சேதி கிடைத்து அடித்து மாய்ந்துகொண்டு ஓடிவந்தாள். அவளின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் மகன் திருப்பதியும் மருமகள் பூவரசியும் பின்னால் வந்து கொண்டிருந் தார்கள்.

“ அய்யாயிரம், பூச்சி வருதுடா...” கரியர் சொல்லவும், அய்யாயிரம் பாய்ந்து

ஓடி பூச்சியைப் பிடித்துக்கொண்டு அழுகிறார். “ பூச்சி... நம்ப சாமீ பூட்டுது பூச்சி...”

வாசலில் நின்று மூச்சே அற்றுவிடுகிற மாதிரி பூச்சி எகிறி எகிறி மாரை அடித்துக் கொள்கிறாள்.

“ இந்த மண்ணு தரமேல

இந்த பூண்டு பொடுசுல்லாம்

இங்க பூத்து நிக்கையில

நீங்க பூத்து நிக்கிறது

இந்த பூமிக்கி பொறுக்குலியா...

இந்த மண்ணுதாம் புடிக்காம

நீங்க மாண்டுதாம் போனிங்களா

இந்த மக்க புடிக்காம

நீங்க மறந்துதாம் போனிங்களா...

‘ பண்ருட்டி பாடை’யை ரொம்பவும் ஆடம்பரமாய்க் கட்டிக் கொண்டிருந்தார்கள். திடுமென வந்து நின்ற காரிலிருந்து தனபாலும், பின்னால் கணக்கஞ்செட்டியுமாய் இறங்கி, கையில் ஒரு வத்தி பாக்கெட்டோடு உள்ளே போய், போன சுருக்கில் வெளியே வந்தார்கள். மேளக்காரர்கள் சூழவும், அம்பது ரூபாய் தாளைக் கொடுத்துவிட்டு கிளம்பிவிட்டார்கள்.

நெருப்பில் காய்ச்சிய முறுக்கில், நொறுக்கிக் கொண்டிருந்தன டப்பட்ட மேளங்கள்.

பால்ராசு கிட்ட வந்து அறிவழகனிடம் சொன்னான் “ மாமா... ஜி.ஆர். டாக்டர் வந்துருக்காரு மாமா...”

அறிவழகனுக்கு பட்டென்று சிகாமணிமேல் யோசனை ஓடியது. சிகாமணி இல்லாமல் கட்சி, சங்கம் என்று எங்கும் போனது கிடையாது. இழவு வாசலுக்கு வரவில்லையென்றாலும் வந்திருக்கிற டாக்டரையாவது “ வாங்க” என கூப்பிட்டுவிட்டு அங்கேயே நின்றுகொள்ளச் சொல்லிவிடலாம் என சிகாமணி வீட்டை நோக்கி ஓடினான்.

போனானே தவிர, சிகாமணி வீட்டுக்கோ அவன் அத்தை வெள்ளைச்சி வீட்டுக்கோ சேதி வைக்கவில்லையென்பதும் உறுத்திக் கொண்டிருந்தது. சொல்லி வைத்தமாதிரி இவன் தெருவிலிருந்து வாசலுக்குத் திரும்புவதைப் பார்த்துவிட்டாள் அசலாம்பு. வீட்டுக்குள்ளிருக்கும் சிகாமணிக்கு உறைக்கிறமாதிரி, ஆவலமாய் வருகிற அறிவழகனுக்குப் படுகிறமாதிரி சத்தமாகச் சொன்னாள். " பழச மறந்துட்டுப் போறதுக்கு யாரும் தோல உரிச்சிக்கிட்டு தொப்பைய மாட்டிக்கிட்டு நிக்கில. கட்சி சங்கம்னு யாரு வந்து கூப்புட்டாலும் அங்ககிங்க போவக்கூடாது. மாட்ட வுட்டு குத்தி ஏம் மாங்கல்யத்த எறக்கனானுவுள... ஏம் பாவம் அவனுவுள சும்மா வுடுமா..."

உச்சிமயிரைப் பிடித்து இழுத்தமாதிரி தேங்கியவன் ஒன்றும் சொல்லாமல் திரும்பி வந்து, பால்ராசை இட்டுக்கொண்டு போனான். ஜி.ஆர். டாக்டர், செம்ப படையாட்சி, உத்தண்டராயர் உட்பட ஏராளமான கட்சிக்காரர்கள். கட்சிக் கரை போட்ட நாடா சுற்றிய பெருத்தமாலையை எடுத்துக்கொண்டு புடை சூழப் போய் போட்டுவிட்டு வெளியே வந்தார்கள். ராசோக்கியமும் சதாசிவமும் ஜி.ஆர்.டாக்டர் முன்னால் போய் நின்றார்கள். " மனச தளரவுடாதீங்க வேப்பங்குறிச்சியார. எல்லாம் பாத்துக்கலாம்..." கட்சிக்காரர்களிடமும் திரும்பி சொன்னார். " விழுந்து தலையில அடிபட்டதால, ஏற்கெனவே வீக்கான ஒடம்புக்கும் அதுக்கும், பல்ஸ் திடீர்னு சுத்தமா கொறைஞ்சி போச்சி. அதனால வேற ஒண்ணும் செய்யமுடியில" வருத்தத்தோடு சொன்னவர் கிளம்பினார்.

அவர் கிளம்பும் முன்னே சிகாமணி வந்து நின்றான். " கௌம் பறண்டா..."

வண்டியை நகர்த்தும்போது அறிவழகனிடம் சொன்னார் " பாத்து சண்ட சாடி இல்லாம எடுங்க. நம்ப ஆளு குடிச்சிட்டு வந்து இதுமாதிரி எடத்துலதான் பெருமையக் காட்டுவான்." வண்டி நகர்ந்து போனது.

" சீக்கிரம் போயி தண்ணி மொண்டாற வேலயப் பாருங்க. அப்பறம் மொட்ட வெயில்ல மூச்சி மூச்சின்னு ஊருப் பயணம் போற மாதிரி தூக்கிக்கிட்டு போவுணும்." ரங்கநாது சலிப்புடன் அவசரப்படுத்தினார்.

கிழக்கே ஒரு மைலுக்கு மேல் போக வேண்டும். அதுவும் இரவல் சுடுகாடுதான். எல்லோருமே வாழ்வதற்கான இடத்திற்கு வசதி வாய்ப்பைக் கேட்டுப் போராடியவர்கள், இறந்த பிறகான இடத்தைக் கேட்காமல் மறந்துவிட்டது செங்கல்ராவு இறப்பின் போதுதான் இடித்தது. என்ன செய்வதென்று எவருக்கும் புரிய வில்லை. எட்டின வரைக்கும் எங்கும் முள்காடு. அதிலும் நிறுவனம் பார்த்து ஒதுக்கித் திருத்தி நிரவிக்

கொடுக்கவேண்டும். சற்று, தூரந்தான் என்றாலும் வேறுவழியில்லாமல் மந்தாரக்குப்பத்தை அணுகினார்கள். படுக்கையைப் பகிர்ந்துகொள்ள வந்ததாய்ப் பதறியவர்கள், போனால் போகிறது எனத் தயக்கத்தோடு ஒத்துக் கொண்டார்கள்.

“ போவலாமா...” ரத்னவேல் தண்ணீர் மொள்ளப் போக ஆயத்தமாய் விரித்துப்பிடிக்க துணியோடு நின்றவர் கேட்டார்.

ஆளுக்கொரு குடம், செம்பு எனக் கையில் பிடித்தபடி இன்பவள்ளி, அம்புசாட்சி, வைரம், கசப்பு, தங்கம் என வந்து நின்றார்கள். கடைசியாக வெளியே வந்த பூமா ஓயவே இல்லை. அழுது அழுது நூலாய் மெலிந்து நிற்கத் தெம்பில்லாமல் நொடிந்து போயிருந்தாள்.

எதிரே மணக்கொல்லையிலிருந்து கலியபெருமாள், கிருஷ்ணமூர்த்தி, குங்குமம், முருகன் என வரவும் பூமா பார்த்து விட்டாள். கையிலிருந்த செம்பைத் தூக்கி எறிந்துவிட்டு காற்றாய் பறந்தோடி முருகன் காலடியில் விழுந்தாள் “ அண்ண எங்க அம்மாவ பாத்தியா அண்ண. எங்க கெதிய பாத்தியா அண்ண...” புரண்டு கதறுகிறாள்.

குபுக்கென்று கோர்த்துக்கொண்ட கண்ணீரோடு, மொத்த சனமும் அதிசயமாய் முருகனைப் பார்க்கிறார்கள். “ அண்ண... அண்ண...” உரிமையாய் ஓடி இழவுக்கு வந்தவனின் காலடியில் விழுந்து கதறும் பூமாவின் குரல், சதாசிவத்திற்கு செவுளில் அறைவதுபோல் இருந்தது.

ராசோக்கியம் கலியபெருமாளை, கிருஷ்ணமூர்த்தியை, குங்குமத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறார். “ நா, காணி பூமின்னு வாங்கி வைச்சிருந்து இனிமே என்னா பண்ணப் போறன் அண்ண. ஏஞ் சாமி என்ன வுட்டுட்டுப் போய்ச் சேந்துபோச்சி அண்ண” கத்தி முறைக்கிறார். எல்லோருமே நேற்று விருத்தாசலத்திலிருந்தபடி காரில் ஏற்றிவிட்டுவிட்டு அப்படியே ஊருக்குப்போய், காலையில் கிளம்பி வந்திருந்தார்கள். “ நமக்கு குடுப்பன அவ்வளவுதான். வுட்டுட்டு வேலயப் பாரு” சமாதானப்படுத்தினார்கள்.

குங்குமம் பூமாவைத் தூக்கி நிறுத்தப் பார்க்கிறாள். பூமா உதறித் தள்ளிவிட்டு முருகனின் காலடியை விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டு அழுது களைக்கிறாள். “ செயக்கொடி அம்மா, எங்க முருகு அண்ணன் இருந்தா எங்குளுக்கு இந்த கெதி வந்துருக்காது எம்மா. ஏஞ் சாமி ஊர்ல இல்லாமப் போச்ச...”

பட்டென்று கலியபெருமாளுக்கு சின்னதாய் ஒரு திடுக்கிடல். குங்குமத்தை

சாடையாய்ப் பார்த்தார். குங்குமம் அதற்கு மேல் அவளைப் பேச விடாதவாறு வலிந்து தூக்கி தண்ணீர் மொள்ளப் போகிற சனங்களுடன் அனுப்பி வைத்தாள். முருகன் கலங்கியவனாய் உள்ளே மாலை போடப் போனான்.

விருத்தாசலத்தில் உயிர் விட்டதுமே வேப்பங்குறிச்சியிலிருந்து கார் வருவதற்குள் அழுதுகொண்டிருந்த ராசோக்கியத்தை எட்ட இட்டு வந்து கலியபெருமாள் சொன்னார் " இங்க பாப்பாவுக்கு நடந்த எடைஞ்சல பத்தி எதியும் வெளியில சொல்லி பொலம்பிக் கிட்டு நிக்காதீங்க. நமக்குத் தெரியும் ஒண்ணும் நடக்குலன்னு. ஆனா ஊரு சனங்க ஒண்ணுக்கு மூணா முடிஞ்சி வுட்டுடும். நாளைக்கி ஒருத்தன் வூட்ல வாழப்போற நம்ப புள்ளைக்கி சிக்கலாப் பூடும். பாப்பாகிட்டயும் சொல்லச் சொல்லியிருக்கறன். யாரு கேட்டாலும் இதால வுழுந்துட்டாங்க அதால வுழுந்துட்டாங்கன்னு சொல்லாம தெப்பலங்கெட்டாப்ல படியில தவுறி வுழுந்து தலையில அடிபட்டு அப்பிடியே சுருண்டு போச்சின்னு சொல்லுங்க."

கனகராசு கொழுந்தன் கோடி போடவும், பாடையில் தூக்கி வைத்துக் கட்டினார்கள். " கோயிந்தா... கோயிந்தா..." குரலெழுப்பித் தூக்கினார்கள். உறுமி செட்டு டப்பட்ட மேளம் என முன்னால் போக, தெருவு கொள்ளாமல் கூட்டம் நகரத் தொடங்கியது. வாணங்கள் சீறிக்கொண்டு உயரே பறந்தன. அதிர்வேட்டுகள் முழங்கின.

" எம்மா... எம்மா..." பூமா கத்திக்கொண்டு கூடவே வந்தாள். மறித்து இட்டுக்கொண்டு வீட்டிற்குள் போனார்கள். உள்ளேயும் அவளின் கதறல் ஓயவில்லை. கிடந்து புரள்கிறாள்.

தெருவிலிருந்து நேரே தெற்கே போய் ஓடையில் இறங்கி ஏறினால், என்.எல்.சி வாகனங்கள் போக வர அகலமான தார் ரோடு. ரோட்டுக்கும் அங்காண்ட கம்பி வேலி. வேலிக்கும் அடுத்து எட்டின தொலைவிற்குமாய் பெரும் சுரங்கம். அகண்டு ஆழ்ந்த பாதாளத்தில் புள்ளி புள்ளியாய் மனிதர்கள். பொம்மை போன்ற வாகனங்கள். மேற்கில் வெண்மலையாய் மண்மேடும் கைகால் பரப்பியபடி இயந்திரங்களும்.

சரவெடிகள் நெடுக வெடித்துக்கொண்டு போகின்றன. காசு வாங்கவும் வாழ்த்தவும் மேளங்கள் அதம் பரப்புகின்றன. பாதையை யெல்லாம் பூக்களால் நிறைத்துக்கொண்டு போகிறார்கள். ஓடையின் தரைப்பாலத்தில் இறங்கி ஏறி கிழக்கே திரும்பியதும் புலம்பிக் கொண்டே வந்த ராசோக்கியம் குமுறி வெடித்தார் " வாழ்ந்த எடத்த வுட்டுட்டு

வந்தாரங்குடியா போன மாதிரி, இன்னைக்கி எரவ சுடுகாடுன்னும் ஓந் தலையில எழுதியிருந்து போச்சே... பாஞ்சால...”

பாதையை ஒட்டி நித்தம் ஒரு மாற்றமாய் இருக்கும் சுரங்கத்தின் அசுர பிரமாண்டத்தை உள்ளூர்க்காரர்களும் அதிசயித்தபடி பார்த்துக்கொண்டே போகிறார்கள். “ தா கெழக்க அணமோட்ல கூண்டு மாதிரி தெரியுது பாரு, அது நேருக்கு அங்காண்ட கரி வெட்டுத பெரிய மிஷினு, அதுக்கு நேரா தான் நம்ப வேப்பங்குறிச்சி இருந்துது” எவரோ கையைக் காட்டவும் தெருக்களும் வீடுகளும் இருப்பதுபோல் ஆவலமாய் அந்தரத்தைப் பார்க்கிறார்கள்.

வாண வெடியில் அதிர்ந்து அலமலண்ட காக்கை ஒன்று பதட்டத்தில் திசைமாறி தெற்கே சுரங்கத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கியது, இடையில் இளைப்பாற ஏதுமில்லாத திகைப்பில் வேகவேகமாக அடித்துக்கொண்டு போனது.

பின்னால் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறார்கள். பூமா தான், மறித்தவர்களையும் மீறி “ எம்மா... எம்மா...” என்று கத்திக் கொண்டே ஓடி வருகிறாள். “ இரு புள்ள போவாத... பூமா... பூமா...” கூப்பிட்டபடி ஓடி வருகிறார்கள்.

“ இது என்னா பெரிய வம்பாப் போவுத...” சொல்லியபடி கும்பலை விட்டு திரும்பி ஓடிவந்த அறிவழகனின் பார்வையில், பாலத்திற்கும் மேற்கே ஓடையோரக் கருவைமர நிழலில் சிகாமணி. கதறியபடி ஓடிவரும் பூமாவைப் பார்த்து வெலவெலத்தபடி நிற்கும் அவனைக் கண்டதும், அறிவழகனுக்கு அதிர்ந்தது.

அதே நேரம் ஓடிவந்த வேகத்தில் தரைப்பாலத்தில் இறங்கி ஏறி விளிம்பில் தடுமாறிக் குந்தியவள், கிழக்கே கைகளை நீட்டி நீட்டிக் கதறுகிறாள். “ எம்மா... என்ன வுட்டுட்டுப் போறிய எம்மா...”

அவள் பின்னாலேயே ஓடிவந்த துடுக்கு என்ன ஏதுவென்று புரியாமல், எதற்கென்று தெரியாமல் போய்க்கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து, திரும்பி சுரங்கத்தைப் பார்த்து விடாமல் மாறிமாறிக் குரைத்தது.

“ எம்மா... என்ன வுட்டுட்டுப் போறிய எம்மா...” திரும்பத் திரும்ப கல்லையும் கரையவைத்துவிடும் அவளின் கதறல், அங்காண்ட அதலபாதாளமான சுரங்கத்தில் ஓடி அமிழ்ந்து அடையாளமற்றுப் போய்க்கொண்டிருந்தது.

*

நன்றி:

தகவல்களைத் தந்த மேலக்குப்பம் இரவிச்சந்திரன் (முன்னாள் த.அ. போ.க தொழிற் பழகுநர்). நெய்வேலி ஆதித்யா செல்வம், ராசேந்திரன்.

ஈழ ஆதரவு தெருக்கூத்துப் பாடலை இயற்றிய நாடக ஆசிரியர் கொஞ்சிக்குப்பம் தங்கராசு, பாடிக்காட்டி எழுதிக் கொடுத்த தெருக்கூத்துக் கலைஞர் பொன்னங்குப்பம் சக்கரை.

பா. ம.க-வின் ஒரு போராட்ட நிகழ்விற்காக ‘ குடிகெடுத்த நெய்வேலி’ எனும் தலைப்பில் துண்டறிக்கையாக பாடல் வெளியிட்ட (முகமறியா கவிஞர்) கவி.வான்முட்டி. பிரதி தொலைந்து பாடல் வெளிவந்த ‘ மணிமுத்தாறு’ இதழைத் தந்துதவிய தாசில்தார் குடந்தை தி.ரா. கோ.ஜெயபாலன்.

முதனை செம்பையனார் பாடல் புருதியை தந்த மேற்படி கோயில் பூசகர் (இறைவனடி சேர்ந்த) முருகேசன் பூசாரி.

எழுதுவதற்கான உகந்த சூழலை எனக்கு எப்போதும் வழங்கி வரும் துணைவியார் காசிமணி, மகன்கள் தமிழ்மதி, அறிவுமதி, இளமதி.

மேலும் என்னில் அக்கறை கொண்ட நண்பர்கள், உறவினர்கள், தமிழ்ப் படைப்பாளிகள் பேரியக்கத்தார், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக விருத்தாசலம் கிளை தொழில்நுட்பத் தொழிலாளர்கள் மற்றும் ஜெமினி படமனையினர்...

*